பார்க்கவ புராணமென்னும்
விநாயக புராண வசனம்

Q23:224
N00
83470

பார்க்கவ புராணமென்னும்

விநாயக புராணம்

வசனம்

பதி. சிதம்பர முதலியார்

வித்தியா ரத்நாகர அச்சியந்திரசாலை

1900

83470

விநாயக பூஜாரம்பம்.

இப்பால் கிருதவீரியன் விரதகாலஞ்சமீபித்ததை யுணர்ந்து தனது குலகுருவாகிய அத்திரிமகாமுனிவரை யழைத்து, அபிடேகத்திற்குரிய திரவியங்களையும், அருச்சித்தற்கேற்ற மலர்களையும், நிவேதனத்திற்குத் தக்க பதார்த்தங்களையும், தூபதீபங்கட்கு வேண்டிய பொருள்களையுந் தெரிந்து, ஏவலாளரைக் கூவி பூஜாதிரவியங்களைச் சேகரிக்குமாறு ஆக்ஞாபித்தனன். அவ்வாறே அவ்வேவலாளர்கள் அக் கட்டளையைச் சிரமேற்கொண்டு பற்பல இடங்கட்குஞ் சென்று, அவ்வவ் விடங்களிற் கிடைத்தற் கரியதும், யாவராலும் மதித்தற் கரியதும், விரும்பற்பாலதும், விலைகொடுத்துக் கொள்ளற் கேலாததுமாயுள்ள, மிக அற்புதமான திரவியங்களைக் கொண்டுவந்து நிரப்பி, அவைகளைத் தனித்தனியாக வேறுபடுத்தி, ஆராய்ந்து, பழுது பார்த்துச், சித்தப் படுத்திய பின்னர், ஓர் நவரத்தினமயமான மண்டபம் அலங்காரம் செய்து முற்றுவித்தார்கள்.

பின்னர் கிருதவீரியன் தான்குறித்திருந்த மாசிமாதம் கிருஷ்ணபக்ஷ அங்காரக சதுர்த்தசி வருதலும் அன்றுதயத்தி லெழுந்து மிக்க மனக்களிப்புடன் நீராடி, கிரமப்படி விபூதியணிந்து உருத்திராட்சம்பூண்டு நித்தியகரும முடித்து, நியமமுடையராய்ப் பரிசுத்தமான இடத்திற் சென்று, மிருத்திகை=(மண்) எடுத்துவந்து அதில், வேர்கள், செல்முதலிய செந்துக்கள், கற்கள்முதலானவைகள் இல்லாத வண்ணம் சோதித்துப் பிசைந்து, பதப்படுத்திச் சிற்பசாத்திரத்திற் கூறியவாறு விநாயகமூர்த்தியின் * திருவுருவம் அமைத்து, பொன்னினாலும் அவ்வாறே ஓர் திருவுருவம் அமைத்து வைத்துக்கொண்டு, ஆதிசைவ வேதியர்களை வரவழைத்து வேதபாராயணம் செய்யச்செய்து, அவ்வாதி சைவர்கள் மத்தியில் இருந்துகொண்டு, சிவாகம முறைப்படி சிரசாதி பாதம்வரையில் † நியாசம் செய்து ஆசமனம், பிராணாயாமம், பூதசுத்தி முதலானவைகளை நடாத்தி,

சங்கற்பம்.

ஏவங்குண விசேஷண, விசிஷ்டாயாம், சுபதிதௌ, அஸ்மாகம் சகுடும்பானாம், க்ஷேமஸ்தைர்ய, விஜய ஆயுராரோக்கிய, ஐஸ்வர்யாணாம், உத்தரோத்தராபி விருத்யர்த்தம், தர்மார்த்த காமமோக்ஷ, சதுர்வித பலபுருஷார்

---

* திருவுருவம் வெள்ளியினாலும், பசுவின்சாணம், பசுவெண்ணெய், திருவெண்ணீறு, சந்தனம், சருக்கரை, மஞ்சள் முதலியவைகளினாலும் அமைத்துப் பூசிப்பதும் உண்டு. † நியாசம்=தொடல்.

த்தஸித்யர்த்தம், ஸ்ரீ சங்கட ஹரணகணபதி ப்ரீதியார்த்தம் கல்போக்தப்ர காரேண, பூஜாங்கரிஷ்யே,

என்று சங்கற்பங் கூறி, சந்தன மரத்தா லாகிய ஓர் * வேதிகையை வைத்து அதன்மீது தண்டுலம் பரப்பி, அதன் மீது சொர்ண வத்திரம் ஒன்றை விரித்து, அதன் மீது இழை சுற்றி நீர்நிரப்பி இருக்கின்ற பொற் கும்பத்தை ஸ்தாபித்து, அதில் அத்தி, ஆல், அரசு, மா, நாவல் என்னும் பஞ்ச தளிர்களையும், சுக்தி, பொன், மரகதம், மாணிக்கம், முத்து, என்னும் பஞ்ச ரத்தினங்களையும் பெய்து, அக்கும்பத்திற்குச் சந்தனம், புட்பம், அக்ஷதைமுதலானவைகளைச் சாத்தி,

கலச பூஜை.

"கலசஸ்ய முகேவிஷ்ணு, கண்டேருத்ரஸ்மாஸ்ரத, மூலேதத்ரஸ்திதோப்ரம்ஹா, மத்யேமாத்ர கணாஸ்மிர்தா, குக்ஷௌது சாகராஸர்வே ஸப்தத்வீபாவ சுந்தரா, ருக்வேதோத யஜுர்வேத ஸாமவேத அதர்வண, அங்கைஸ்ச ஸஹிதாசாவே கலஸாம் புஸமாஸ்ரித், ஆயேந்து கணேச பூஜார்த்தம் துரித க்ஷய காரக, கங்கேச யமுனே சைவ, கோதாவரி ஸரஸ்வதி, நர்மதேசிந்து காவேரி, ஜலேஸ்மின் ஸன்னிதிங்குரு" என்று கும்பபூஜை செய்து,

அக்கும்பத்திற்கு மேற்றிசையில் யந்திரமிட்டு, முன்செய்து வைத்திருக்கும் பிருதிவிமூர்த்தியை எழுந்தருளச்செய்து, மற்றொரு வேதிகையில்சொர்ண மூர்த்தியை எழுந்தருளச் செய்து, முன்பு சேகரித்து வைத்திருக்கும் பூஜா திரவியங்களிலுள்ள குங்குமம், பச்சை கற்பூரம், புட்பம், அறுகு முதலியபற்பல சுகந்த வர்க்கங்களைக் கலந்து, முன்பு சுத்தப்படுத்தி வைத்த மணி வட்டகைகளில் நிரப்பி, மற்ற வட்டகைகளில் கங்கை முதலிய சுத்ததீர்த்தம்,அரிசி, பால், தருப்பை நுனி, மலர், வெண்கடுகு, நெல், எள்முதலிய திரவியங்களை விதிப்படி அமைத்து, அருக்கியம், பாத்தியம், ஆசனம் முதலியவைகளை மந்திர பூர்வகமாகச் செய்து காத்திற் புஷ்பமும் அக்ஷதையுங் கொண்டு,

---

த்வாரபீடபூஜை.

ஓம் பூர்வத்வாரேதவ ரஸ்ரீயைநம:
தக்ஷணத்வாரேத்வாரஸ்ரீயைநம:
பச்சிமத்வாரேத்வாரஸ்ரீயைநம
உத்தரத்வாரேத்வாரஸ்ரீயைநம:
தேஹாள்யைநம:
த்வாரசோபாயைநம:
பீடமத்யேவாஸ்து புருஷாயநம:
மஹாமண்டூகாயநம:

அதர்மாயநம:
தீப்தாயநம:
மத்யேசந்த்ரோமாஸ்திதசங்கடஹ
ரணகணபதயேநம:
ரஜஸேயநம:
தமசேயநம:
அக்கினிமண்டலாயநம:
அக்கினிமண்டலாதிபதயேநம:

காலாக்நிருத்ராயநம:
கூர்மாயநம:
வராஹாயநம:
அனந்தாயநம:
ப்ருத்திவ்யேநம:
அங்குசாயநம:
ஸப்தத்வீபேப்யோநம:
ஸப்தஸமுத்ரேப்யோநம:
கந்தாயநம:
நாளாயநம:
பத்ரேப்யோநம:
கெஸரேப்யோநம:
கர்ணிகாயைநம:
ரத்நசிம்ஹாசநாயநம:
இலட்சசமுத்ராயநம:
ஸ்வர்ணத்வீபாயநம:
ரத்நமண்டபாயநம:
கல்பவ்ருக்ஷாயநம:
காமதேனுவேநம:
க்ஞாநாயநம:
வைராக்யாயநம:
ஐஸ்வர்யாயநம:
தர்மாயநம:
அக்ஞாநாயநம:
அவைராக்யாயநம:
அநைஸ்வர்யாயநம:

வஹ்ந்யேநம:
அர்க்கமண்டலாயநம:
அர்க்கமண்டலாதிபதயே சூர்யாய
நம:
ஸோமமண்டலாயநம:
ஸோமமண்டலாதிபதயே சந்த்ரம
ஸேநம:
க்ரஹமண்டலேப்யோநம:
க்ரஹமண்டலாதிபதிப்ய ஆதித்
யாதிநவக்ரகேப்யோநம:
தன்மத்யேத்ருவமண்டலாயநம:
த்ருவமண்டலாதிபத்யே த்ருவாய
நம:
மாயாதத்வாயநம:
ஆத்மதத்வாயநம:
வித்யாதத்வாயநம:
சிவதத்வாயநம:
ஆத்மனேநம:
அந்தராத்மனேநம:
சிவாத்மனேநம:
பரமாத்மனேநம:
மத்யேருத்ராயநம:
பகவதேநம:
தேஜோவதேநம:
மத்யேவிக்னசிவேநம:
சர்வசங்கடநிவாரிணேநம:

என்று த்வாரபீட பூஜைசெய்து.

சிந்தனை.

"த்யாயேத் கஜானனம் தேவம், சப்தகாஞ்ச னஸந்நிபம், சதுர்ப்புஜம், மஹாகாயம், ஸர்வாபரண பூஷிதம், தண்டாக்ஷ மாலாபரசு, பூர்ணமோதக தாரிணம், பசாங்குச தரம் தேவம், த்யாயேத் சித்திவிநாயகம்-ஸ்ரீ சித்தி விநாயகாயநம: தியானம் ஸமர்ப்பயாமி" என்று சிந்தித்து,

ஸ்தாபனம்.

"விநாயக நமஸ்தேஸ்து, கௌரீ மலஸமுத்பவ, இமாம் க்ருதாம் மயாம் பூஜாம், க்ருஹாண கணநாயக. ஸ்ரீ கணநாயகாய நம: ஆவாஹனம் ஸமர்ப்பயாமி" என்று ஸ்தாபனஞ் செய்து,

பீடம்.

"மௌக்திசை புஷ்யராகஸ்ச, நாநாரத்ந விராஜிதம், திவ்யஸிம்ஹாஸனம் சாருப்ரீத்யர்த்தம் ப்ரதிக்ருஹ்யதாம், ஸ்ரீ விநாயகாயநம ஆஸனம் ஸமர்ப்பயாமி" என்று பீடமிட்டு,

பாத்தியம்.

கௌரீபுத்ர நமஸ்தேஸ்து, சங்கரப்ரிய நந்தன, பக்த்யாபத்ய மயாதத்தம், க்ருஹாண சுரஸத்தம், ஸ்ரீ கௌரீ புத்ராய நம பாத்யம் ஸமர்ப்பயாமி" என்று பாத்யம் கொடுத்து,

அர்க்கியம்.

"அர்க்யம் க்ருஹாண தேவேச, கணாதிபகஜானன, கந்தபுஷ்பாக்ஷதைர் யுக்தம், கங்காஜல மிதம் சுபம், ஸ்ரீகஜானனாயநம அர்க்யம் ஸமர்ப்பயாமி' என்று அர்க்யம் கொடுத்து,

ஆசமனம்.

"அநாதநாத சர்வேச கீர்வாண சுரபூஜித, நிர்மலம் கந்தஸம் யுக்தம், க்ருஹாண ஸமனம்விபோ, ஸ்ரீசர்வேசாயநம ஆச்மனம் ஸமர்ப்பயாமி' என்று ஆசமனம் கொடுத்து,

சாமாந்ய நிவேதனம்.

ததி க்ஷீரஸமாயுக்தம், மத்வாஜ்யேன ஸமன்விதம், மதுபர்க்கம் க்ருஹாணேதம், கஜவக்த்ர நமோஸ்துதே, ஸ்ரீ கஜவக்த்ராயநம, மதுபர்க்க நைவேத்யம் ஸமர்ப்பயாமி" என்று, தேன், பால், பழம் முதலியவைகளைச் சாமானியமாக நிவேதித்து,

---

அபிஷேகம்.

பஞ்சாமிர்தம்.

ஸ்நானம் பஞ்சாம்ருதேர் திவ்ய குருஷ்வசுரசத்தம், பக்த்யாத் துப்யம் மயாதத்தம், விக்னராஜ நமோஸ்துதே, ஸ்ரீ விக்னராஜாயநம பஞ்சாமிர்த ஸ்நானம் ஸமர்ப்பயாமி" என்று * பஞ்சாமிர்த வபிடேகஞ் செய்து,

பால்.

ஸுரபேயம் மகாதிவ்யம் பவித்திரம் புஷ்டிவர்த்தனம் ஸ்நாநாயதே மயாதத்தம் க்ருஹீஷ்வசுரதத்தமம் க்ஷீரஸ்நானம் ஸமர்ப்பயாமி. என்று பாலபிஷேகஞ் செய்து,

தயிர்.

மஹாஸ்வாது சமாயுக்தம் ப்ரசித்தம் மகாற்புதம் ஸ்நாநாயதே மயாதத்தம் ததிதம் ப்ரதிக்ருஹ்யதாம் ததிஸ்நானம் ஸமர்ப்பயாமி. என்று தயிர் அபிஷேகஞ் செய்து,

நெய்.

தேவர்ஷீணாம் ப்ரயம் புண்யம் பவித்ரம் புஷ்டிவர்த்தனம் ஸ்நாநாயதே மயாதத்தம் க்ருஹாணாஜ்யம் நமோஸ்துதே க்ருதஸ்நானம் ஸமர்ப்பயாமி. என்று நெய் அபிஷேகஞ் செய்து,

தேன்.

அனேக வ்ருக்ஷபுஷ்பசய குசுமோற்பூத மற்புதம் ஸ்நாநாயதே மயாதத்தம் கணேசப் சதிக்ருஹ்யதாம் மதுஸ்நானம் ஸமர்ப்பயாமி. என்று தேன் அபிஷேகஞ் செய்து,

சர்க்கரை.

இட்சிகண்ட ஸமுத்பூதா பாராஸ்வாத்ய தராசுபா சர்க்கரேயம் மயாதத்தம் ஸ்நாநார்த்தம் பாதிக்ருஹ்யதாம் சர்க்கரா ஸ்நானஞ் ஸமர்ப்பயாமி. என்று சர்க்கரை அபிஷேகஞ் செய்து,

சுத்தோதகம்.

கங்காதி ஸர்வதீர்த்தேஸ்து, ஆனீத்யைர் நிர்மலைஸ்சுபை, வாஸிதை ருதகைர்தேவ, ஸ்னபயாமி கஜானன, ஸ்ரீகஜானனாயநம, சுத்தோதக ஸ்நானம் ஸமர்ப்பயாமி" என்று கங்கைமுதலிய சுத்த சலத்தால் அபிடேகஞ்செய்து,

---

அலங்காரம்.

பீதாம்பரம்.

"ரக்தவஸ்த்ரம் த்வயம்தேவ, கௌரீபவ பவப்ரபோ, க்ருஹாணேதம் மயாதத்தம், விக்னராஜநமோஸ்துதே, ஸ்ரீ விக்னராஜாயநம வஸ்திரயுக்மம் ஸமர்ப்பயாமி' என்று நல்ல இரண்டு பீதாம்பரங்களை யுடுத்தி,

யக்ஞோபவீதம்.

"உபவீதம் ப்ரம்ம ஸூத்ரம், ப்ரம்ஹணா நிர்மிதம் புரா, நநுயக்ஞோபவீதேதம், க்ருஹாண கணநாயக-ஸ்ரீ கணநாயகாயநம யக்ஞோப வீதம்ஸமர்ப்பயாமி" என்று பூணநூல் தரித்து,

சர்வாபரணம்.

கோடிசூர்யப்ரகாதீச ரக்தவண்ணசதுர்ப்புஜ மயாஸமர்பிதானீஹா பூஷணானிக்ருஹாணபோ ஸர்வாபரணானி ஸமர்ப்பயாமி. என்று ஆபரணாலங்காரஞ் செய்து,

கந்தம்.

"சந்தன கருகர்ப்பூர, ம்ருகநாபி ஸமன்விதம், கந்தம் தாஸ்யாமி விக்னேச, ஸர்வாபீஷ்ட ப்ரதாயக-ஸ்ரீ விக்னேசாயநம கந்தஞ் ஸமர்ப்பயாமி" என்று திருமேனி முழுவதும் சந்தனத்தை அப்பி,

அக்ஷதை.

"அக்ஷதான் தவிரம் சுப்ரான், ஹரிஸ்ரிதானபி, மயாஸ மர்ப்பிதான் தேவ, க்ருஹாணத் விரதானன ஸ்ரீ ஸர்வாபீஷ்டப்ரதாயகாய நம அக்ஷதாம் ஸமர்ப்பயாமி" என்று அக்ஷதை=(மஞ்சள்-அரிசி) பொற்சுண்ணம், பூந்தாது முதலிய வற்றைச் சாத்தி,

புஷ்பம்.

"சுகந்தீனி சுபுஷ்பாணி, ஜாஜீகுந்த முகானிச, ஏகவிம்சதி புஷ்பாணி, க்ருஹாணத்வம் விநாயக, ஸ்ரீவிநாயகாயநம புஷ்பாணி பூஜையாமி" என்று உக மலர்களைச் சாத்தி,

மால்யம்.

சுகந்தீநிச மால்யானி க்ருஹாண கணநாயக விநாயக நமஸ்துப்யம், சிவ குனே நமஸ்துதே, மால்யானி சமர்ப்பயாமி. என்று மால்யம் தரித்து.

அருச்சனை. (அறுகு.)

ஒவ்வோர் மந்திரத்தின் முடிவிலும் "தூர்வாயுக்மம் பூஜையாமி" என்று சொல்லி அருச்சிக்கவேண்டும்.

ஓம் சுஜானனுயநமஃ
விக்னராஜாயநமஃ
லம்போதராயநமஃ
சிவாத்மஜாயநமஃ
வக்ரதுண்டாயநமஃ
சூர்ப்பகர்ணுயநமஃ
குஜ்பாயநமஃ!
கணேசாயநமஃ
விக்னநாசினேநமஃ
விகடாயநமஃ
வாமதேவாயநமஃ

ஓம் சர்வதேவாயநமஃ
சர்வார்த்திநாசினேநமஃ
விக்னஹர்த்ரேநமஃ
தூம்ராயநமஃ
உமாபுத்ராயநமஃ
க்ருஷ்ணபிங்களாயநமஃ
பாலசந்த்ராயநமஃ
சந்த்ரார்த்ததாரிணேநமஃ
கணாதிபாயநமஃ
சங்கரகௌரீசுனவேநமஃ

என்று இரண்டிரண்டாக இருபத்தோராறுகையெடுத்து அருசித்து,

* பஞ்சாமிர்தம்=தேன், பால்; வாழைப்பழம், சருக்கரை, நெய் இவ்வைந்தும் கலந்தது. "நல்லதில் நெய்யாடி யானிடத்தைந்தாடி நவையில்லை

அங்கபூஜை.

ஓம் கணேசாயநம=பாதௌபூஜையாமி=பாதம்.
விக்னராஜாயநம=ஜானுநீபூஜையாமி=முழந்தாள்.
ஆகுவாஹனுயநம=ஊரும்பூஜையாமி=தொடை.
ஏரம்பாயநம=கடிம்பூஜையாமி=நிதம்பம்.
தேவதேவாயநம=நாபிம்பூஜையாமி=நாபி.
லம்போதராயநம=உதரம்பூஜையாமி=வயிறு.
கணநாயகாயநம=ஹ்ருதயம்பூஜையாமி=இருதயம்.
ஸ்தூலகண்டாயநம=கண்டம்பூஜையாமி=கண்டம்.
ஸ்கந்தாக்ரஜாயநம=ஸ்கந்தௌபூஜையாமி=கழுத்தடி.
சதுர்ப்புஜாயநம=புஜௌபூஜையாமி=தோள்.
பாசஹஸ்தாயநம=ஹஸ்தான்பூஜையாமி=உள்ளங்கை.
கஜவக்திராயநம=வக்த்ரம்பூஜையாமி=நாசி அல்லது முகம்.
விக்னஹர்த்ரேநம=நேத்ரேபூஜையாமி=கண்.
சூர்ப்பகர்ணுயநம=கர்ணௌபூஜையாமி=காது.
ஏகதந்தாயநம=தந்தம்பூஜையாமி=தந்தம்.
குமாரகுருவேநம=சிரம்பூஜையாமி=சிரம்.
சர்வேஸ்வராயநம=சர்வாங்காநிபூஜையாமி=சர்வாங்கம்.
என்று அங்கபூஜைசெய்து

ஆவரணபூஜை.

ப்ரதமாவரணம்.

ஓம் கணாதிபாயநமஃ
உமாபுத்ராயநமஃ
அகநாசனுயநமஃ
ஏரம்பாயநமஃ
லம்போதராயநமஃ
கஜவக்த்ராயநமஃ
ஏகதந்தாயநமஃ

ஓம் தூமகேதவேநமஃ
பாலசந்த்ராயநமஃ
ஈசபுத்ராயநமஃ
இபவக்த்ராயநமஃ
குமாரகுருவேநமஃ
மூஷிகவாஹனுயநமஃ
சங்கடநாசனுயநமஃ

யமுதமாடி, நல்குகாரண காரிய மூறையினன்றியே நறுநெய் பாறயிராடியே, மெல்லமர் மதுவாடி யின்கழைச்சாறுடி மென்பழச்சாறுடியே விழையுமீனீராடி யாரக்குழம்பாடி விதியினமை தபனமாடி," என்றமுறைப்படி அபிடேகஞ் செய்து.

த்விதியாவரணம்.

ஓம் விக்னகணபதயேநம:	ஓம் ஏகதந்தகணபதயேநம:
விநாயககணபதயேநம:	சூரகணபதயேநம:
தீரகணபதயேநம:	சூர்ப்பகர்ன்னகணபதயேநம:
வரதகணபதயேநம:	க்ஷிப்ரப்ரசாதகணபதயேநம:
இந்த்ரகணபதயேநம:	சித்திகணபதயேநம:
லம்போதரகணபதயேநம:	

த்ருதியாவரணம்.

ஓம் ரமாயைநம:	ஓம் புஷ்பபாணாயநம:
ரமேசாயைநம:	மாயைநம:
உமாயைநம:	வராஹாயநம:
வ்ருஷாங்காயநம:	ஸதாசிவாயநம:
ரத்யைநம:	

சதுர்த்தாவரணம்.

ஓம் ஆதித்யாயநம:	ஓம் சனேஸ்வராயநம:
ஸோமாயநம:	ப்ரகஸ்பதயேநம:
அங்காரகாயநம:	ராகுக்ரஹாயநம:
புதாயநம:	கேதுக்ரகாயநம:
சுக்ராயநம:	

பஞ்சமாவரணம்.

ஓம் த்ரத்தையைநம:	ஓம் சுதாதாராயைநம:
சமர்த்தையைநம:	தராவிந்யைநம:
காந்தையைநம:	வசுமத்தையைநம:
மதத்ரவாயைநம:	

சஷ்டாவரணம்.

ஓம் இந்த்ராயநம:	ஓம் வருணாயநம:
அக்னயேநம:	வாயவேநம:
யமாயநம:	குபேராயநம:
நிருதயேநம:	ஈசானாயநம:

என்று ஆவரண பூஜைகளைச் செய்து முடித்து பின்னர்,

பத்திரார்ச்சனை.

ஓம் கணாதிபாயநம:	மாலதீபத்ரம் ஸமர்ப்பயாமி
சுமுகாயநம:	ப்ருங்கராஜபத்ரம் ஸமர்ப்பயாமி
உமாபுத்ராயநம:	வில்வபத்ரம் ஸமர்ப்பயாமி
கஜவக்த்ராயநம:	தூர்வாபத்ரம் ஸமர்ப்பயாமி
லம்போதராயநம:	பதரீபத்ரம் ஸமர்ப்பயாமி
ஹரஸூனவேநம:	துத்தூரபத்ரம் ஸமர்ப்பயாமி
குஹாக்ரஜாயநம:	துளசீபத்ரம் ஸமர்ப்பயாமி
கஜகர்ணகாயநம:	அபாமார்க்கபத்ரம் ஸமர்ப்பயாமி
ஏகதந்தாயநம:	ப்ருஹதீபத்ரம் ஸமர்ப்பயாமி
இபவக்த்ராயநம:	சமீபத்ரம் சமர்ப்பயாமி
மூஷிகவாஹனாயநம:	கரவீரபத்ரம் ஸமர்ப்பயாமி
விநாயகாயநம:	வேணுபத்ரம் ஸமர்ப்பயாமி
கபிலாயநம:	அர்க்கபத்ரம் ஸமர்ப்பயாமி
பின்னதந்தாயநம:	அர்ச்சுனபத்ரம் சமர்ப்பயாமி
பத்னிஹர்ஷாயநம:	விஷ்ணுக்ராந்தபத்ரம் ஸமர்ப்பயாமி
விஷ்ணவேநம:	தாடிமபத்ரம் ஸமர்ப்பயாமி
பாலசந்த்ராயநம:	தேவதாருபத்ரம் ஸமர்ப்பயாமி
ஹேரம்பாயநம:	மருகபத்ரம் சமர்ப்பயாமி
சுராக்ரகண்யாயநம:	ஜாஜீபத்ரம் ஸமர்ப்பயாமி
சித்திவிநாயகாயநம:	சிந்துவாரபத்ரம் ஸமர்ப்பயாமி
சங்கடநாசினேநம:	ஏகவிம்சதிபத்ராணி ஸமர்ப்பயாமி

என்று-சிறுசண்பகம்-கரசராங்கணி-வில்வம்-அறுகு-இலந்தை-ஊமத்தை-துளசி - நாயுருவி -சிறுவழுதி-வன்னி-அலரி-மூங்கில்-வெள்ளெருக்கு-மருதம்-விஷ்ணுக்கிராந்தி - மாதுளை - மந்தாரை-மருவு - சாதிமல்லி-வெண்ணொச்சில்-என்னுமிவற்றின் பத்திரங்களைக் கொண்டு அருச்சித்து,

புஷ்பார்ச்சனை.

ஓம் சுமுகாயநம:	ஜாதிபுட்பம் சமர்ப்பயாமி
ஏகதந்தாயநம:	சாமந்திபுட்பம் சமர்ப்பயாமி
கபிலாயநம:	மல்லிகாபுட்பம் சமர்ப்பயாமி

கஜகர்ணகாயநமஃ	சம்பங்கிபுட்பம் சமர்ப்பயாமி.
லம்போதராயநம:	கல்லாரபுட்பம் சமர்ப்பயாமி
விகடாயநம:	கேதகிபுட்பம் சமர்ப்பயாமி
விக்னநாசினேயநம:	வகுளபுட்பம் சமர்ப்பயாமி
விநாயகாயநம:	சதபத்ரபுட்பம் சமர்ப்பயாமி
தூமகேதுவேநம:	புந்நாகபுட்பம் சமர்ப்பயாமி
கணாத்யக்ஷாயநம:	துந்தாரபுட்பம் சமர்ப்பயாமி
பாலசந்த்ராயநம:	மாலதிபுட்பம் சமர்ப்பயாமி
பத்னிஹீனாயநமஃ	விஷ்ணுக்கிராந்தபுட்பம் சமர்ப்ப
உமாபுத்ராயநம:	கிரிகர்ணிகாபுட்பம் சமர்ப்பயாமி
கஜானனாயநம:	நாகபுட்பம் சமர்ப்பயாமி
ஈசபுத்ராயநம:	மந்தாரபுட்பம் சமர்ப்பயாமி
சர்வசித்திப்பிரதாயகாயநம:	கோவிதாரபுட்பம் சமர்ப்பயாமி
மூஷிகவாகனாயநம:	துருமோற்பலபுட்பம்சமர்ப்பயாமி
குமாரகுரவேநம:	ரக்தபுட்பம் சமர்ப்பயாமி
தீர்க்கதுண்டாயநம:	ஆர்க்கபுட்பம் சமர்ப்பயாமி
இபவக்த்ராயநம:	முனிபுட்பம் சமர்ப்பயாமி
ஸங்கடநாசினேநம:	ஏகவிம்சதிபுட்டாணி சமர்ப்பயாமி

என்று-சிறுசண்பகம்-சாமந்தி-மல்லிகை-சம்பங்கி-செங்குவளை-தாழை-மகிளம்-தாமரை-புன்னை-ஊமத்தை-முல்லை-விட்ணுக்ராந்தி-வெள்ளைக்காக்கணம்-நாகை-மந்தாரை-குரா-கோங்கு-செம்பிரத்தம்-வெள்ளெருக்கு-அகத்தி என்னுமிவற்றின் புட்பங்களைக்கொண்டு அருச்சித்து,

துவாதசநாமபூஜை.

ஓம் ஸுமுகாயநமஃ	ஓம் விக்னராஜாயநமஃ
ஏகதந்தாயநமஃ	கணாதிபாயநமஃ
கபிலாயநமஃ	தூம்கேதவேநமஃ
கஜகர்ணிகாயநமஃ	கணாத்யக்ஷாயநமஃ
லம்போதராயநமஃ	பாலசந்த்ராயநமஃ
விகடாயநமஃ	கஜானனாயநமஃ

அஷ்டோத்தரசதநாமபூஜை.

ஓம் விநாயகாயநமஃ	ப்ரம்மவித்தமாயநமஃ
விக்னராஜாயநமஃ	காலாயநமஃ
கௌரிபுத்ராயநமஃ	க்ரஸ்பத்யேநமஃ
கணேஸ்வராயநமஃ	காமினேநமஃ (௪0)
ஸ்கந்தாக்ரஜாயநமஃ	சோமசூர்யாக்கினி லோசனாயந
அவ்யயாயநமஃ	பாசாங்குசதராயநமஃ
பூதாயநமஃ	சண்டாயநமஃ
தட்சாயநமஃ	குணாதீதாயநமஃ
அத்யக்ஷாயநமஃ	நிரஞ்சனாயநமஃ
த்விஜப்பிரியாயநமஃ (௧0)	அகல்மஷாயநமஃ
அக்கினிகர்பச்சிதேநமஃ	ஸ்வயம்சித்தாயநமஃ
இந்த்ரப்ரதாயநமஃ	சித்தார்ச்சிதபதாயநமஃ
வாணிப்ரதாயநமஃ	அவ்யயாயநமஃ
ஸர்வசித்திப்ரதாயநமஃ	பீஜபூரபலாஸக்தாயநமஃ
ஸர்வதனயாயநமஃ	வரதாயநமஃ (௫0)
ஸர்வப்ரியாயநமஃ	சாஸ்வதாயநமஃ
ஸர்வாத்மகாயநமஃ	க்ருதினேநமஃ
ஸிருஷ்டிகர்த்தேநமஃ	பராயநமஃ
தேவாயநமஃ	வீதபயாயநமஃ
அநேகார்ச்சிதாயநமஃ (௨0)	கதினேநமஃ
சிவாயநமஃ	சக்ரிணேநமஃ
சுத்தாயநமஃ	இட்சுசாபத்ருதேநமஃ
புத்திப்பிரியாயநமஃ	அஜாயநமஃ
சாந்தாயநமஃ	உத்பலநராயநமஃ
ப்ரம்மசாரிணேநமஃ	ஸ்திரீதாயநமஃ (௬0)
கஜாநனாயநமஃ	ஸ்திரீபதயேநமஃ
த்வைமாத்ரேயாயநமஃ	ஸ்துதிஹர்ஷிதாயநமஃ
முனிஸ்துத்யாயநமஃ	குலாத்ரி பேத்ரேநமஃ
பக்தவிக்னவிநாசாயநம:	ஜடிலாயநமஃ
ஏகதந்தாயநமஃ	சந்த்ரசூடாயநமஃ
சதுர்ப்பாஹவேநமஃ (௩0)	காந்தாயநமஃ
சதுராயநமஃ	பாபஹாரிணேயநமஃ
சத்திஸம்புதாயநமஃ	சமாஹிதாயநமஃ
லம்போதராயநமஃ	ஆஸ்ரிதாயநமஃ
சூர்ப்பகர்ணாயநமஃ	ஹகராயநமஃ (௭0)

ஹரயேநமஃ	சௌம்யாயநமஃ
பக்தகர்மட்சிதாயநமஃ	ஸ்தூலகண்டாயநமஃ
ஓஷதிபத்யேநமஃ	அக்ரகண்யைநமஃ
அமயதாயநமஃ	தீராயநமஃ
கைவல்யாயநமஃ	வாகீசாயநமஃ
சச்சிதாநந்தவிக்ரகாயநமஃ	சித்திதாயகாயநமஃ
க்ஞானினேநமஃ	தூர்வாபில்வப்ரியாயநமஃ
தயாயுதாயநமஃ	வியக்தமூர்த்தயேநமஃ
தாந்தாயநமஃ (௮௦)	அமூர்த்தியேதநமஃ
ப்ரம்மத்வேஷவிவர்சிதாயநம:	பார்வதீசங்கரோத்ஸங் கேலனோத்ஸ
பிரம்மத்தைத்யபயதாயநமஃ	வகமானசாயநமஃ (௧௦௦)
அமரேஸ்வராயநமஃ	சங்கரோஸ்தங் கேலனோஸ்து
நாகயக்ஞோபவீதினேநமஃ	கமானஸாயநமஃ
ஸ்திரீகண்டாயநமஃ	சம்ஸ்தஜகதாதாயநமஃ
விதயேநமஃ	ஹர்ஷாயநமஃ
ராமார்ச்சிதாயநமஃ	மூஷிகவாஹனாயநமஃ
ஸ்தூலகண்டாயநமஃ	ஹ்ருஷ்டாயநமஃ
ஸ்வயங்கர்த்தேநமஃ	துஷ்டாயநமஃ
சாமகோஷப்ரியாயநமஃ (௯௦)	ப்ரஸன்னாத்மநேநமஃ
பரஸ்மைநமஃ	சர்வசித்திப்ரதாயகாயநமஃ

என்று அஷ்டோத் தரசதநாம பூஜைசெய்து.

திருவாராதனை.

தூபம்.

(வனஸ்பத்யுப் பரஸம் தூபம்-தசாங்காகருஸம் யுதம்-க்ருஹாணமங்கள திவ்யம் மயாதத்தம் விநாயக ஸ்ரீ உமாசுதாயநமஃ தூபம் சமர்ப்பயாமி.என்று தூபாராதனை செய்து,

தீபம்.

க்ருதாக்த வர்த்திசம்யுக்தம் தீபம் சர்வப்ரகாசம் க்ருஹாணேமயா தத்தம் தேசோராசே ஜபத்பதே, ஸ்ரீ ருத்ரப்ரியாயநம: தீபம் சமர்ப்பயாமி. என்று தீபாராதனை செய்து,

நைவேத்தியம்.

அன்னஸ் சதுர்விதைஸ்வாது ரஸைஷட்பி ஸமன்விதம்-பக்தியாகிவேதி தம்வேதா நைவேத்யம் ப்ரதிக்ருஹ்யதாம். மோதகான் காரிகாவிதைர் யுக்தோன் மோதகான் க்ருதபாசிதான் க்ருஹாண விக்னராசேந்த்ர சர்வகார் யார்த்த

சித்தயே ஸ்ரீவிக்ன நாசினேநம: நைவேத்யம் சமர்ப்பயாமி. என்று நைவேத்தியஞ் செய்து,

பூர்ணபலம்.

பலானீ மானிரப்யாணிஸ், காபிதர் கிதவாக்ரத - மேனமேசபலாவாப்திர் பவேசன்மவிசயன்மணி ஸ்ரீசங்கட நாசினேநம: பூர்ணபல சமர்ப்பணம் சமர்ப்பயாமி. என்று பூர்ணபலஞ் செய்து,

ஸ்தாந்தன தவிக்னேச-புஷ்டலா கிதனுகிச, பூம்யாம்ஸ் திதானிபகவன், ஸ்வீகுருஷ்வ விநாயக. ஸ்ரீ விக்னேசாயநம, ஸ்வர்ண புஷ்பம் சமர்ப்பயாமி'' என்று தக்ஷிணை வழங்கி,

தாம்பூலம்.

பூகீபல சமாயுக்தம் நாகவல்லி தளைர்யுதம் கற்பூர சூர்ணசம்யுக்தம் தாம்பூலம் ப்ரதிக்ருஹ்யதாம் ஸ்ரீசித்தி விநாயகாயநம! தாம்பூலம் சமர்ப்பயாமி. என்று தாம்பூல மிட்டு,

புஷ்பம்.

பூசாபல சம்ருத்யர்த்தம். ஸ்வர்ணபுஷ்பம் மயேஸ்வர ஸ்தாபிதம் தேன மேப்ரீத்யை பூர்ணாக் குருமனோரதான். ஸ்ரீவிக்கினேசாயநமஃ ஸ்வர்ண புஷ்பம் சமர்ப்பயாமி) என்று தாம்பூலம் ஸ்வர்ணபுஷ்பம் என்னு மிவைகளைக் கொடுத்து.

விக்னராஜ நமஸ்துப்யம் பாபக்ஞானப்ரணுசன, புனரர்க்யம் ப்ரதாஸ்யாமி, க்ருஹாண சுரசத்தம, ஸ்திரீ விக்னராஜாயநம, புனரர்க்யம் ஸமர்ப்பயாமி'' என்று அர்க்கியங் கொடுத்து,

---

ஏகாதசநாமாருச்சனை.

ஒவ்வொரு நியானத்தின் முடிவிலும் ''தூர்வாயுக்மம் ஸமர்ப்பயாமி'' என்று சொல்லவும்.

ஓம் கணாதிபாயநம:	ஓம் விநாயகாயநமஃ
உமாபுத்ராயநமஃ	ஈசபுத்ராயநம:
அகநாசினேநம:	சர்வசித்திப்ரதாயகாயநம:
ஏகதந்தாயநம:	குமாரகுரவேநம:
இபவக்த்ராயநம:	ஸர்வசங்கடநாசனாயநம:
மூஷிகவாகனாயநம:	

என்று ஏகாதசநாமங்களாற் தூர்வை யருச்சனைசெய்து,

தியானம்.

கணாதிப நமோஸ்தேஸ்து உமாபுத்ரா கஜானன ஏகதந்தே பவக்ரோதி ஞதா மூஷிகவாகன விநாயகேஸ் புத்ரோதி சர்வசித்தி ப்ரதாயக குமாரகுர வே துப்யம் சர்வ சங்கட நாசன இதயேகாதச தூர்வாயுக்ம பூஜாம் ஸமர்ப்பயாமி. என்று தியானஞ் செய்து,

---

தூர்வை யருச்சனை.

ஒவ்வொரு தியானத்தின் முடிவிலும் "தூர்வாயுக்மம் ஸமர்ப்பயாமி" என்று செபிக்கவேண்டியது.

ஓம் கணேசாயநம:
வக்ரதுண்டாயநம:
உமாபுத்ராயநம:
விக்னராஜாயநம:
கௌரிமலசமுத்பவாயநம:
ஏகதந்தாயநம:
சுத்தகுணாயநம:
மகாகாயாயநம:
சித்திதாயநம:
மகோதராயநம:
கஜவக்த்ராயநம:

ஓம் பீமாயநம:
பாசதாரிணேநம:
கரிகும்பாயநம:
விஸ்வமூர்த்தயேநம:
சித்திகணேசாயநம:
உக்ரதேஜசேலம்போதராயந:
காமதாயநம:
விக்னேஸ்வராயநம:
சிமுகாயநம:
சக்திசமயுக்தாயநம:

என்று மீட்டும் இவ்விருபத்தொரு நாமங்களாற் தூர்வை யருச்சனை செய்து.

தியானம்.

கணேசோ வக்ரதுண்டஸ்ச உமாபுத்ரஸ்த்தைவச. விக்னராஜாகாமதஸ்ஸ விக்னேஸ்வரயிதிஸ்மூர்தா சிவமுதஸ்சக்தி சம்யுக்தோ கௌரிமலஸ் மத்பவா ஏகதந்தஸ்த சுத்தகுணோ மகாகாய யிதிஸ்மூர்தா த்திஸ்சசித்திதா ப்ரோகதோ மகாதாயி திஸ்மூர்தா கஜவக்த்ரஸ்த பீமஸ்ச ததாபாசதார்யபி கரி கும்போ விஸ்வமூர்த்தி உக்ரதேஜாஸ்ததையெச லம்போதரஸ்தத்சித்தி கணே சச்சைகவிம்சதி இத்யேவிம்சதி தூர்வாயுக்மம் பூஜாம்சமர்ப்பயாமி) என்று தியானஞ் செய்து.

நைவேத்தியம்.

நாமாவிரம்ணியாணி—ஜபேதபிஸ்சபூஜயேத் கணேசாத்தஸ்ய வஸ்யந்தி சங்கடாணி மகாத்யபி மகாசங்கட தத்கோஹம் கணேசசரணம் கதம் தஸ்

மான் மனோரதம் பூர்ணம் குருவிஸ்வேஸ்ப்ரயா ததஸ்வர்ணமயம் புஷ்பம் விக்னேசாய நிவதயேத் ஸ்ரீகணேசாயநம: நைவேத்யம் சமர்ப்பயாமி. என்று நைவேத்தியஞ் செய்து,

ஆலாத்தி

கணாதிப நமஸ்தேஸ்து சத்யஞானப்ரகாசக நீராஞ்சனம் ப்ரதாஸ்யா தேஜோராஜே நமோஸ்துதே ஸ்ரீகணாதிபாயநம: உத்தரநீராஞ்சனம் சமர்ப்ப யாமி. என்று ஆலாத்தி சுத்தி,

பிரதக்ஷணம்.

யானிகானி சபாபாணி ஜன்மாந்தரக் க்ருதானிச தானிதானி விநஸ் யந்திப்ர தட்சணேபதே பாபோஹம் பாபகர்மாஹம் பாபாத்மாப பகம்பவா த்ராஹிமாம்-க்ருபயாதேவ. சரணாகதவத்ஸல அன்யதாசரணம் நாஸ்திதவமே சரணமம்மா தஸ்மாத்காருண்ய பாவேன - ரட்சரட்சகணாதிப-ஸ்ரீகணேசாயநம: ப்ரதட்சணம் சமர்ப்பயாமி. என்று ப்ரதட்சணஞ் செய்து;

நமஸ்காரம்.

நமோஸ்து தேவதேவேச பக்தானும் பயப்ரதா விக்னானாம் நாசகர்த் ரோதே-அராத்மஜநமோநம: ஸ்ரீவிக்னநாஸினேநம: நமஸ்காரம் சமர்ப்பயாமி. என்று நமஸ்காரஞ் செய்து,

பிரார்த்தனை.

வக்ரதுண்ட மகாகாய சூரியகோடிசமப்ரப அவிக்னம் குருமே தே வசர்வகார்யேஷுஸர்வேதா ஸ்ரீவக்ர துண்டாயநம: ப்ரார்த்தனம் சமர்ப்ப யாமி. என்று பிரார்த்தனைசெய்து,

அர்க்கியம்.

கணேஸ்வர நமஸ்துப்யம் சர்வசித்திப்ரதாயக சங்கஷ்டம்ஹரமேதேவ க்ருஹாணார்க்யம் நமோஸ்துதே ஸ்ரீகணேசாயநம: இதமர்க்யம் சமர்ப்ப யாமி.

க்ருஷ்ணபக்ஷ சதுர்த்த்யாந்து பூஜிதோஸி விதுதயே-க்ஷிப்ரப்ர சதா தமைதேயிக்ரு ஹாணார்க்யம் நமோஸ்துதே ஸ்ரீவிக்ன நாஸினேநம: இதமர்க் யம் சமர்ப்பயாமி

திதிநா முத்தமேதேவி கணேசப்ரிய பல்லவே சங்கஷ்டம் ஹரமேதேவி க்ருஹாணார்க்யம் நமோஸ்துதே ஸ்ரீசதுர்த்தி தேவைநம: இதமர்க்யம் சமர்ப்ப யாமி. என்று அர்க்கியங் கொடுத்து,

---

சந்திரபூஜை.

அர்க்கியம்.

க்ஷீரோதார்ண வசம்பூத-லட்சுமி பந்தோரி சாகர-க்ருஹாணார்க்யம்மயா தத்தம் ரோஹிண்யாசஸ்த்ரீ தஸ்கஸின்ரோணீஹித சாத்ராயநமஃ இதமார்க்யம் சமர்ப்பயாமி.

போமாயத் விசவர்யாய தேவராசாய சிவினே-ரோஹிணீச ஹிதாயர்பி க்ருஹணார்க்யம் நமோஸ்துதே. ரோஹிணீ சஹித சந்த்ராயநமஃ ஹிதமர்க்யம் சமர்ப்பயாமி. என்று அர்க்கியங் கொடுத்து,

நமஸ்காரம்.

ககநாம் கணைசம்நிப க்ஷீராப்தி மதனேத்பவ பாபாஸிந்தி கந்தாய சோமராஜ நமோஸ்துதே ஸ்ரீசந்த்ராயநமஃ நமஸ்காரம் சர்ப்பயாமி. என்று சந்த்ர பூசை செய்து.

ஆசாரியபூஜை.

——:o:——

மோதகாமஸ்து பலாம்ஸ்தஸ்யபரி பூர்த்தயே ஸ்ரீசற்குரவேநமஃ உபாய தானம் சமர்ப்பயாமி.

ப்ரதிமாங் குரவேதத்பா-தாசார்ய யசதட்சிணம் வஸ்த்ரம் கும்பச மாயுக்தா மாதெனமத்ரமி மம்படேந் கணேஸ்வரப்ரசாதேன மமசம் ஆமரோரதா அப்யம்சம் பரதேதேவ ப்ரதிமாம்து கஜானன இஷ்ட காமார்த்த சித்யார்த்தம் புத்ரபௌத்ரப்ரவர்த்தன சஹஜிராசதேவேச விக்னராச விநாயக தவமூர்த்திப்ரதானேனப்ரசன்னோ பவசர்வதா ஸ்ரீசற்குரவேநமஃ கலசப்ரதி மாதானம் சமர்ப்பயாமி. என்று ஆசிரிய பூசை செய்து.

விநாயக பூஜை சம்பூரணம்.

அவருக்குத் தக்கபடி தானங் கொடுத்துப் பூசை செய்த கலச முதலியவைகளையும் அவருக்களித்து வேதப் பிராமணர்கட்குப் பதினாயிரம் பசுக்களையும் அவைக்கேற்றபொருள்களையுந் தானஞ்செய்து யதாப்பிரகாரந் தனதுமனைவியாகிய சுகந்தை யென்பவள் கருப்பமுற்றுப் பத்தாந்திங்களில் ஒரு புத்திரனைப் பெற்றனள்.

அப்புத்திரனுக்குக் காலுங் கையுமில்லாமல் ஏனைய அவயவங்களெல்லாம் மிக்க அழகு வாய்ந்திருப்பக் கண்டு சுகந்தை மனங் கலங்கி ஐயோ! எனதுடங்

கிற்றுந் இப்பங்கமான பிள்ளை வரவேண்டு மென்று தூக்கித் திருந்தனள். அதை அரசன் கேள்வியுற்றுத் தானும் அப்புதல்வனை வந்து பார்த்து அதிக துயரங் கொண்டு தன்மனதைத் தானே தேற்றி, பெண்ணே! இப் புத்திரன் விநாயகப் பெருமானுடைய விரத பலத்தினு லுண்டானவ னாதலால் இவனுக் குண்டாகிய வுடற்குறையை அவ் விநாயகப் பெருமானே விலக்கி யருளுவர் நீ யொன்றற்கும் அஞ்சலையென்று தனது மனைவிக்குத் தேறுதல் சொல்லிப் பின்னர் அக்குழந்தைக்குச் சாதக கன்மாதிகளைச் செய்து, வேதப் பிராமணர் கட்கெல்லாம் இரத்தினங்களையும், பொன்னையும் மழைபோலச் சொரிந்து, கார்த்த வீரியனுக்குப் பன்னிரண்டு வருடமானபோது தேத்தாத்திரிய முனி வர் தற்செயலாய்க் கிருதவீரியனிடத்தில் வர, அவரை யவ்வரசன் எதிர் கொண்டு பணிந்து ஓராதனத்தி லிருத்தி, சுவாமீ! அடியேன் பலநாள் அரிய தவங்களைச் செய்து ஓர் புதல்வனைப் பெற்றேன். அவனோ பகைவர்கள் எள்ளி நகைக்கும் படியாகக் காலுங் கையுமில்லாதவனாய்த் தோன்றினன். யானியற்றிவந்த தவங்களில் குற்றம் யாதாயினு முண்டோ அறிந்திலேன். வெகுநாள் புத்திரனில்லாமல் வருந்தினேன். பின்னர் ஓர் புத்திரனைப் பயந் தும் என் மனக்கிலேசந் தீர்ந்தே னல்லேன். என்னசெய்குவேன்? அடியேன் மீது தேவரீர் கிருபை வைத்து அப்புதல்வனுக்கு முடம் நீங்கு முபாய மொன்றை யநுக்கிரகித்தருள வேண்டு மென்று பிரார்த்தித்தனன்.

அதற்குத் தேத்தாத்திரிய முனிவர் மனமிரங்கி, அரசனே! யாம் உனது புதல்வனைக் காணவேண்டியே இங்கு வந்தோம். ஆதலால் அவனை விரைவிற் கொண்டு வரக் கடவை யென்று சொல்ல, அவ்வாறே அப் புதல்வனைக் கொண்டு வந்து எதிரில்விட, அவனை அம்முனிபுங்கவர் பார்த்தருளி, அரசனே! நீ இப்புதல்வனைக் குறித்து யாதொரு துயரமுங் கொள்ள வேண்டியதில்லை. இவன் இவ்வுலகத்திற் கெல்லாஞ் சக்கிரேஸ்வரனா யிருப்பனென்று சொல்லி, அப்புதல்வனுக்குத் தீக்ஷை செய்து, விநாயக மூர்த்தியினுடைய ஏகாட்சர மந் திரத்தை யுபதேசித்துப் போயினர். பின்னர் கார்த்தவீரியன் தன்தந்தையாகிய கிருத வீரியனைப் பார்த்து, பிதாவே! யான் தேத்தாத்திரிய முனிவ ருபதே சித்த மந்திரத்தை யநுட்டித்து வரம்பெறுவதற்கு என்னை வனத்திற்கொண்டு போய் விடவேணு மென்று கேட்டனன். அவ்வாறே அரசன் சகல பரிசனங் களையுங் கூட்டி, அனுப்பத் தக்க வரிசையோடும் அவனை வனத்திலனுப்பினன். இப்பால் அப்புத்திரன் வனத்திலிருந்து அன்ன பானாதிகளை நீத்து, கணேச மூர்த்தியைக் கருத்தி லிருத்தி, ஐம்பொறி களையு நிக்கிரகித்து ஒப்பற்ற ஏகாட்சர மந்திரத்தை இடை விடாது தியானித்து வந்தனன். இவ்வாறு பன்னிரண்டு வருடஞ் சென்ற பின்பு, அவன் செய்து வருகின்ற தவத் திற்கு விநாயக மூர்த்தி கிருபை கூர்ந்து, அவ்விடத்திலுள்ள ஓர் தடாகத்தி னிடமாக அளவற்ற தேவர்களோடுந் தோன்றி பிரத்தியக்ஷ மாயினர். உடனே

தானெழுந்து வணங்கக் கூடாமையால், தனது மனத்தாலனந்தமுறை வணங்கினன். அதற்கு விநாயகப் பெருமான் சந்தோஷித்து, அன்பனே! நீகருதிய வரங்களைக் கேளென்று திருவாய் மலர்தலும், சுவாமீ! மூடவனுகிய எனது முகத்தை நோக்கி முற்றினுங் காத்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தனன். உடனே விநாயக மூர்த்தி அவனுக்கு இரண்டு கால்களையும் ஆயிரங் கைகளையுந் தந்து, அதற்கேற்ற வலியையுங் கொடுத்துத் தமதருக் கரந்தருளினர். பின்னர் அவ் விநாயக மூர்த்தியுடன் வந்திருந்த பிரமன் முதலிய எல்லாத் தேவர்களும் அக்கார்த்த வீரியனைப் பார்த்து, ஓ விரதசீலனே! நீ ஒரு கற்பகாலம் வரையில் ஆயுள் பெற்றிருந்து யாவர்க்கும் இதமே செய்து எதிர்த்து வருகின்ற சத்துருக்களையெல்லாம் ஐந்நூறுபாணங்களினுல்செயித்து வாழ்ந்திருக்கக்கடவை யென்று அநுக்கிரகித்தார்கள்.

இப்பால் தனக்குக் கணேச மூர்த்தி வரங்கொடுத் தகலுமுன்னமே, இரண்டு கால்களும் ஆயிரங்கைகளு முண்டாகக்கண்டு கர்த்தனுடைய கிருபையை நினைந்து நினைந்து, மனமுருகி, ஆனந்தக் கண்ணீர் சொரிந்து, முடிவற்ற அன்பினுல் அவர் கரந்தருளிய திசையைப் பலமுறை வணங்கி, சிற்ப சாத்திர விதிப்படி பொன்னினுலும், மணியினுலும் ஓராலயஞ் சமைத்து சத்திர சடாதர மூர்த்தியாகிய விநாயகப் பெருமான் தனக்குப் பவள வொளியோடு மெழுந்தருளிக் காட்சி கொடுத்தமையால், பவளத்தினுல் ஓர் மூர்த்தியைச் செய்து அம் மூர்த்தியை அவ்வாலயத்திற் றூபித்துப் பூசித்து வந்தனன். அம் மூர்த்தி பவளத்தினுற் செய்திருக்கின்றமையால் அதற்குப்பிரவாள விநாயகனென்றும், அவ்வனத்திற்குப் பிரவாள வனமென்றும் பெயர் வழங்குகின்றது. அப்பிரவாள விநாயகருடைய பெருமைகளை முழுவதும் யாவராற் பேசக்கூடும். பின்னொரு காலத்தில் ஆதிசேடன் பூபாரம் பொறுக்கும்படி அவ் வனத்தின்கண் வந்து வந்தித்தனன். அதற்கவர் கிருபை கூர்ந்து அவன் பூபாரம் பொறுக்கும்படி வரங் கொடுத்தருளினர். பின்னர் ஆதிசேடன் அவ் வனத்தின்கண் ஓர் நகரமுண்டாக்கி அதற்குத் தரணிதர நகரமென்று திருநாமமிட்டுத் தன்னை யாட்கொண்ட பிரவாள விநாயக மூர்த்திக்குத் தரணிதர விநாயகனென்று மற்றொரு திருநாமமுஞ் சாத்தினன். இராவணனும் அம் மூர்த்தியைப் பூசித்து இலங்காதி பத்தியம் பெற்றனன். பஞ்ச பாண்டவர்களும் அவரையே பூசித்துத் துரியோதனாதிகளைச் செயித்து அரசாட்சி பெற்றனர். அரசனே! இத்தன்மைத் தான சிறப்பினை வாய்ந்த சங்கட சதுர்த்தி விரதஞ் செய்த பலனிலே, ஒருநாள் விரதபலனை யாராகிலும் நமது கையில் தத்தஞ் செய்தால் இவ்விமானம் விண்ணி லெழும்பும் என்று தேவேந்திரன் சூரசேன மகாராசனுக்குச் சொல்லினன்.

கிருதவீரியன் மகப்பெறு படலம் முற்றிற்று.

இந்திரவிமானம் விண்ணெழுபடலம்.

முள்ளரை முளரிவாழ்க்கை முன்னவன் பிதிரீ ராற்றல்
விள்ளரு மொருகோட் டெந்தை விரதசீ ரிசைத்தா மற்றை
விள்ளல ருடுத்த தாரு விண்ணர சகங்கொ ணீரான்
மள்ளல்வான் விமானமேய வகைசிறி தறைது மன்றே.

சுடர்மணக் குழையுளோமொழிப் பொருளை யடக்கி யானந்த முறுஞ் சவுனகாதி முனிவர்களே! கிருதவீரிய மகாராசன் விநாயக மூர்த்தியி னுடைய சங்கட சதுர்த்தி விரதத்தை யனுட்டித்துக் கார்த்தவீரியனைப் பெற்ற காரணத்தைச் சொன்னேம். இப்பால் இந்திர விமானம் விண்ணெழு பேற்றினைச் சொல்லுவோங் கேட்பீர்களாக; அச் சூரசேன மகாராசன் தேவேந்திரனைப் பணிந்தெழுந்து, ஓ! சுரலோக சக்கிரேஸ்வரரே! அங்காரக சதுர்த்தி விரதத்தின் மகிமையையும், அறுகு வன்னிமந்தாரை இவைகளின் பெருமையினையும் அடியேற்கு அங்கை நெல்லிக் கனிபோல அறிவித்தீர். அதனை யெல்லாம் ஐயமில்லாமல் அறிந்து கொண்டேன் இத்தன்மைத்தான மேலாகிய விரதத்தை இம்மூவுலகின்கண் ஒருவருஞ் சொல்ல யான் கேட்டதில்லை. அதற்கடியேன் புரியுங்கைம்மாறென்ன விருக்கின்றது. என்று பலமுறை உபசரித்து எவ்வாறேனும் அங்காரக சதுர்த்தியை யனுட்டிக்கின்ற ஓர் விரதியைக் கண்டு பிடித்து இவ்விமானத்தை விண்ணெழுப்ப வேண்டுமென்று உத்தேசித்து அவ் விரதியைக் கண்டு பிடிக்குமாறு நாற்றிசைகளினுந் தூதுவரையேவினன். அத்தூதுவரும் அவ்வாறே சென்று வீடுகள் தோறும் விசாரித்துக் கொண்டு வருகின்றபோது மற்றொரு விமானம் ஆகாயத்தினின்று பூமியிலிறங்கக் கண்டு அதன் வரவை யறிவோமென்று அருகிற் சென்றனர். பின்னர் அவ்விமானத்துள்ளிருந்த தேவ கணங்கள் அங்கிருந்த ஓர் புலைச்சிக்குத் தெய்வ சரீரங் கொடுத்து அவளை ஆடல்பாடல் முதலியசிறப்புகளோடு அவ்விமானத்திலேற்றக் கண்டு இதென்ன அற்புதமென்று ஆச்சரியங் கொண்டவர்களாய் உடனே அவர்களைப் பணிந்தெழுந்து, ஓ கணநாதர்களே! இவள் இப்பிறவியிற் புலைச்சியாயிருந்தனள். எவ்வளவேனுந் தருமமென்றதைச் செய்தறியாள். முற் பிறவியில் யாதேனுஞ் செய்திருக்கின்றனளோ அதனை யறிந்திலேம். அறிய தவத்தர்கட்குங் கிடைத்தற் கருமையதாகிய இத்தெய்வ விமானத்தை இவளுக்குத் தந்தீர்களாதலால், இவளது புண்ணிய பலனை இன்னதென்று அடியேங்கட்குத் தெரிவித்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதற்குத் தேவகணங்க ளிசைந்து சொல்லுவார். வங்காள தேயத்தில் அரசாட்சி செய்து வந்த சாரங்கதரனென்னும் ஓரரசனிருந்தான். அவனுக்குச் சுந்தரியென்கின்ற ஒரு புதல்வி யிருந்தனள். அவள் சித்திர னென்னும் அரசகுமார

னுக்கு மனைவியாயிருந்தனள். ஆயினும், அவளது இசைக் கியானத்தினாலும், வெருண்ட பார்வையினாலும், உருவ லட்சணத்தினாலும், தேவர்களாயினும் அவளுக் கெதிர்ப்படுவோர்களாயின் உடனே மயங்காமற் செல்கின்றதில்லை. இவளுங் கற்பென்பதைக் கனவின்கண்ணு மறியாளாகி இல்லறவொழுக்கத்தை நீந்து, தன்னை விழைந்தோரை யெல்லாந் தானும் விழைந்து, வருணாச்சிரம முதலியவைகளைத் துறந்து கலந்திருந்தனள். அதை அக்கினி சாட்சியாய் விவாகஞ் செய்த அவள் கணவன் அறிந்து, அறிவற்றவளே! எனது குலத்தைக் கெடுப்பதற்காகவா எனக்கு வந்து சேர்ந்தனை? இனி இல்லைவிடுத்து வெளியிற் செல்லுவையெனில், உன் தசையை உனக்கே இரையாக்குவனென்று கோபித்து அவ்வில்லிற் காவலில் வைத்தனன். அவ்வாறே சிலநாள் அடங்கி யிருப்பவள்போலிருந்து மனதிற் கபடங்கொண்டு தனது கணவன் நித்திரைசெய்யுஞ் சமயத்தில் வாளைக்கொண்டு அவனுயிரை மாய்த்துப் பரபுருடனிடத்திற் போய்ச் சுகித்திருந்தனள். அதைக்காவலாளர்க ளறிந்து சித்திரராசனைக் கொலைசெய்தவள் இவளேயென்று தீர்மானித்து, அவள் கைகளைக் கட்டி, யிழுத்துக்கொண்டுசென்று, அரசனுத்தரவின்படி யவளைச் சேதித்தனர். உடனே அவளை யமதூதர்கொண்டுபோய் அளவற்றகாலங் கொடிய நரகங்களிற் செலுத்தி, வதைசெய்து, பின்னர் இந்நகரத்திலுள்ள சேரியிலே புலைச்சியாய்ப் பிறக்கும்படி விதித்தார்கள். இவள் முன்ஜனன முழுவதும் பாவமே செய்தனளல்லாமல் ஓர் தினையளவும் புண்ணியஞ்செய்ததில்லை. இச்சனனத்தில் இதுகாறும் ஒரு புண்ணியமுஞ் செய்தறியாள். இவள் இத்தன்மைத்தான மகாபாதகியாயிருந்தபோதினும், இன்றுதயகாலத்திற் கள்ளருந்திப் பகலெல்லாம் அதிகவெறியினால் தலையெடுக்கமாட்டாது கிடந்து பொழுதுபோனபின்பு சிறிதுவெறிநீங்கிப் பசியதிகரிக்க, அதனால் இரைதேடி ஓர் வீட்டினருகிற் சென்றனள். அவ்வாறு செல்லுகையில் இத்தினம் விநாயக சதுர்த்தி யாதலால் அச்சதுர்த்தி விரதத்தை யவ் வீட்டிலுள்ளோர்கள் அநுட்டித்துக் கணேசமூர்த்திக்கு நிவேதித்த பதார்த்தங்களிற் றூர்கள் புளித்து மிகுந்த சேடத்தைத் தெருவிற் கொண்டுவந்து வீசினார்கள். உடனே இப் புலைச்சியானவள் அதனையெடுத்துத் தனது பசிதீரப்புசித்தனள். மேலுமவ் வீட்டிலுள்ளோர்கள் கணபதி! கணபதி! கணபதி! யென்று துதிசெய்தார்கள். அதனைக்கேட்ட தானுங் கணபதி! கணபதி! கணபதி! யென்று முக்காற்கூறினள். இவள் சங்கடசதுர்த்தியிற் றமது திருநாமத்தைச் சொன்னாளென்று விநாயகமூர்த்திக்குக் கிருபைசுரந்து இவளை அன்புடன் கொண்டுவருமாறு எங்களுக் காக்கியாபித்தனர். அவ்வாறே யாங்கள்வந்து இவளுக்குத் தெய்வசரீரந்தந்து விமானத்தி லேற்றினோம். இதுதான் புலைச்சியை விடுபுகச் செய்தகாரணமென்று தேவகணங்கள்கூற, அதைக்கேட்டதூதர்கள் மீட்டும் அவர்களைத் தொழுதெழுந்து, ஓகணத்தலைவர்களே! இந்திரன் ஆகாயத்திற் செல்கின்றபோது ஓர் கோயாளியினுடைய பார்வையால் அவனுடைய விமானங் கதிகுப்பி இப் பட்டணத்தி லிறங்கியது, அஃது மீட்

டும் ஆகாயத்தி லெழும்பும்படியாக நீங்கள் காட்சிகொடுத்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதற்குத் தேவகணங்களிசையாமல், எமது கர்த்தாவினது கட்டளையாதோ அதனை யாங்கள் செய்துவருவதேயன்றி எங்கள் சுதாவில் மற்றொருகாரியமுஞ் செய்யோமென்று சொல்லித் திடீலென்றெழுந்து ஆகாயமார்க்கமாக விமானத்தைச் செலுத்திக்கொண்டு போனார்கள்.

இப்பால் சிறகுற்றெழுந்த மலைபோல் ஆகாயவீதியைக் கிழித்துச் செல்கின்ற அவ் விமானத்தில் புலைச்சீரமொழிந்து, தெய்வசரீரம் பெற்றிருக்கின்றவளது பார்வையானது இந்திரனுடைய விமானத்தின்மீது பட்டன. உடனே ஆண்டவனுடைய திருக்கண்ணோக்கத்தால் ஆணவமலத்தினின்று மெழுந்தவர்கள்போல அவ் விமானமும் எழும்பி ஆகாயமார்க்கத்திற் சென்றது. பின்னர் அத் தூதர்கள் தங்க ளரசனிடத்திற் சென்று பணிந்தெழுந்து ஆகாயத்திலிருந்து மற்றொரு விமானம் வந்ததையும், அதுமீட்டுந் தனதுகதியிற்சென்றதையும், அதனால் இந்திரவிமானம் விண்ணிலெழுந்ததையும் விவரமாகச்சொல்ல, அவையனைத்தையும் சூரசேனமகாராசன்கேட்டு அவ் விரண்டு விமானத்தையுஞ் சாஷ்டாங்கமாகத் தொழுதெழுந்து, பிறவித்தரித்திரனுக்குப் பெரும்பாக்கியங் கிடைத்ததுபோல ஆனந்தமுற்றுத் தனது அரண்மனையிற் சென்று விநாயகப் பெருமான் பெருங்கருணையை நினைந்து நினைந்தும், அவனடியாரது பெருமையை உள்ளுறமகிழ்ந்து மிருந்தனன்.

இந்திரவிமானம் விண்ணெழு படலம் முற்றிற்று.

சூரசேனன் முத்திப் படலம்.

என்றுமலர்த் தவிசாளி யிறைஞ்சியசீர் வியாதமுனிக்
கன்றுபுவி விமானத்தோ டடுத்தமக வான்மீட்டு
மொன்றுவிசும் பெழுமளவு முற்றபல கதைமுழுதுந்
தொன்றுதொடு முறையாகச் சுவையமிழ்த மெனவிரித்தான்.

வேதாகமாந்தமாக விளங்கும் மகாவாக்கியார்த்தமாகிய தேனையுண்டு, சதாநிஷ்டானந்தமாகிய போகத்தை யநுபவிக்கும் மஹாத்துமாக்களே! முன்னர் சித்திமுத்தியாதிகளை விளைவித்துச் சகலமுந் தன்மயமாக விளங்கும் பிரணவ சொரூபராகிய நமது விநாயகப் பெருமான் டரியாகருடைய குறிப்பின் வழியே சொல்லத்தக்க காருண்யராதலால், அங்ஙனமே இந்திரனுக் குவந்தமையையுஞ், சங்கடசதுர்த்தியினது போற்றலையுங் கூறினோம். இப்பால் இந்திர

ளும் நீவிரதானும், கணேசமூர்த்தியினது திருவருட்பேறே தனது செயலெல்லாமெனத்தெளிந் தனுட்டித்துவந்த சூரசேனன் முத்திப் பேற்றினைக் கூறுவோம் கேட்பீர்களாகவென பிதிர்தேவனுக்கு அடுக்கிதழ் முளரிவாழ்க்கைச் சதுமுகன் கூறுவதாயினன்:—

ஓ, பிதிர்தேவனே! சூரசேன மகாராசன் தமக்கு இந்திரனிடத்துச் சனித்த பேருணர்வினாலும், விநாயகவிரத மேன்மையைக் கேட்ட முன்னை வினைசம்பவத்தாலும், கணநாயகரைப் பூசித்தபுண்ணியத்தாலும், அன்பூற்றெடுக்கவூறிய வுள்ளஞ் சிவசொரூபமேயாயினன். அக்கால் தங்குலக்குருபரனாகிய வசிட்டர் வந்தனர். வருதலும் சூரசேனன் பேருவகையோடும்வழிபாடுசெய்து தங்குறைபாடனைத்து முறைகூறி யவரைப்பேராதரவாகக் கொண்டு மாசிமாதம் அமரபட்சத்தில் வருகின்ற அங்காரக சதுர்த்தியில், கணேசமூர்த்தியை மனதிற் றியானித்து, வேதாகம முறைமைப்படி விரதமநுட்டித்து, மாதமாதம் வருகின்ற சதுர்த்திதோறும் இடைவிடாது பூசித்து வாழ்கின்றகாலையில், விநாயக மூர்த்தியினுடைய பெருங்கருணையால் தேவகணங்கள் ஓர் விமானத்தைக் கொண்டுவந்து அவ் வரசனெதிரி லிறக்கினார்கள். உடனே அரசன் ஆனந்தங்கொண்டு ஒருசேரவென்று அவ் விமானத் தருகில் வந்து மும்முறை வலஞ்செய்து சாஷ்டாங்கமாகப் பணிந்து நின்றனன். அவனைத் தேவகணங்கள் நோக்கி, அரசனே! உன்னை யழைத்துவருமாறு கணேசமூர்த்தி எங்கட்காக்கியாபித்திருக்கின்றா ராதலால் விரைவில் இவ் விமானத்தின்மீ தெழுந்தருள வேண்டுமென்று சொன்னார்கள். அதனையரசன் செவிக் கமுதாகக் கேட்டு, ஓ கணநாதர்களே! இவ் வூரிலுள்ளோர் யாவரும் ஒரு கணப்போதேனும் நம்மைவிட்டுப் பிரிந்திருக்க மாட்டார்கள் ஆதலால் அவர்கள் யாவத்திரளையும், என்னோடுகூட அழைத்துக்கொண்டு போகவேண்டுமென்று இரந்தனன். அதற்கு உனதிட்டப்படியே செய்யலாமென்று விடை கொடுத்தனர். உடனே அந்நகரிலுள்ளவர்களெல்லாம் அவ்விமானத்தின்கணேறினர். சூரசேன மகாராசன் தனது சுற்றத்தினர் முதலிய சகல பரிசனங்களோடு மேறினன். முன்னர் நகரத்தார் ஏறியபோது தொழுநோய் கொண்டிருக்கின்ற ஓர் வணிகனு மேறினன். அவ்வணிகன் மகாபாவியாதலால் அவ்விமானம்பூமியைவிட் டெழாமல் முன்னர் இந்திரவிமானம் எவ்வாறழுந்தி யிருந்ததோ அவ்வாறிருந்தது. அதன் காரணத்தைக் கணநாதர்களுணர்ந்து, அரசனே! இவ்விமானத்திலேறி யிருக்கின்ற சனங்களிற் குட்ட நோய் கொண்ட ஒரு வணிகன் இருக்கின்றான் அதனால் இவ்விமானஞ் சற்றும் எழவில்லை. என்று கூற சூரசேனன் கணநாதர்களை நோக்கி யாது காரணம் விபரமாகச் சொல்லி யருளவேண்டு மென்ன! கணநாதர் கூறுவ தாயினர்: அரசனே அவ்வணிகன் முற்பிறவியிற் பெரும் பாதகஞ் செய்தவனாதலால் இப்பிறவியில் இக்குட்ட நோய்க்கு இரையாயிருக்கின்றனன் அவனதுவரலாற்றைச் சொல்லுவோங் கேட்பாயாக.

கவுட தேயத்திலே தவசீல னென்றொரு வேதியரிருந்தார். அவருக்குச் சானகி யென்னுமொரு மனைவி யிருந்தனள். இவ்விருவருஞ் சுகித்து வாழ்கின்றகாலையில் இவர்கட்கு ஓர் புத்திரனுண்டாயினன். அப்புத்திரனுக்குச் சாதகம் பார்த்துப் புதனென்னும் நாமமிட்டனர். அவனும் அப்பெயருக்கேற்றபடி வீறி வளர்ந்து வேதங்களை யோதிக் கலைகளை யாராய்ந்து அறிஞர்க ளெல்லாம் புகழத்தக்க அறிஞனாயினன். இப்பா லவன் மணப்பருவமுற்றகாலையில் அவன் தாய் தந்தையர் தங்கள் வருணத்திற் கேற்ற குலங் கோத்திர முதலானவைகளை விசாரித்துக் கை-கால்-உதடு-நா-தோள்-தனம்-முதலிய எல்லா அவயவங்களினுந் தெய்வஸ்திரீகளையும் ஒப்பிடக் கூடாத வனப்பினை வாய்ந்த சாவித்திரி யென்பவளை விவாகஞ் செய்து வைத்தார்கள். அவளோடு அப்புதனென்பவன் கூடி வாழ்கின்ற நாளையில், மதியினை வயத்தனுப் பரத்தையிடஞ் சென்று பரிவுற்றிருந்து கள்வெறி கொண்டவன் போல மதிமயங்கி அவளிடத்திற்றானே புசித்தலையுஞ் செய்திருந்தனன். அவ னிவ்வாறிருக்க அவன் தாய்தந்தைய ரவனைக் காணாதுவருந்தி வெளியிற் சென்று தேடுவதற்குத் தமது விருத்தாப்பிய திசையினால் கூடாதவர்களாகி, ஆகாரநித்திரை யின்றி, ஏக்கமுற் றிருந்து, சின்னாள் சென்ற பின்பு இன்னு நமது புதல்வனம் வரக் காணோமே எங்கு எவ்வாறாயினனோவென்று திகைத்து, ஓர்நாள் அவன் தந்தையாகிய தவசீலர் தடியூன்றிக் கொண்டு மெல்ல மெல்ல வீதியின் வழியாய் நடந்து தேடிக் கொண்டு செல்லுகையில் எதிரில் வீமனென்பவன் வரக்கண்டு அவனைத் தமது குமாரனைக் குறித்து விசாரித்தனர். அவன் உமது குமாரன் வேசையாசையில் மூழ்கி யிருக்கின்றன னென்று சொல்ல அது கேட்டவுடன் மனமழுங்கிப் பின்னும் புத்திர சோபம் விடாமையால் அவ்வேசை யிருப்பிடத்திற்குத் தள்ளாடிச் சென்று அவள்வீட்டின் தலைவாயிலில் நின்று தனது புதல்வனைக் கூவி, மைந்தனே! பொய்யை மெய்யாகக் கொண்டிருக்கின்ற வேசையர் மையலில் விழலாமா? நின்னைப் போன்ற அறிஞர்களும் இவ்வுலகின்கணுண்டா? நல்லொழுக்கங்களை யெல்லாங் கைவிட்டனை, நான்மறை யோதுதலுந் தவிர்த்தனை, அழகு வாய்ந்த குலஸ்திரீயை மறந்தனை, நமது வருணாசிரமத்தினுக் கேற்ற எல்லாச் சன்மார்க்கங்களையு மொழித்தனை, ஆயினும் உன்னை அருமையா யீன்றெடுத்த எங்களையும் விட்டிருக்கலாமா? அப்பா உனது மனம் மரமோ? கல்லோ? இரும்போ? பேதை மனத்தையுடைய ஸ்திரீகளும் வயதின் மூத்தவர்களை விட்டுப் பிரிதல் தருமமல்ல வென்று அவர்கள் சமீபத்திற்றானே காத்திருப்பார்கள். சகலநூல்களையும் உணர்ந்த நீ இவ்விருத்தாப்பிய காலத்தில் எங்களை விட்டிருப்பது தருமமா? இனியேனும் வீட்டில் வந்திரு வென்று இவ்வாறு அனந்த முறை மிகுந்த பரிவோடுங் கேட்டுக் கொண்டனர். அதற்கப் பாதகன் கோதித் தெழுந்து எனக்குப் புத்தி கூறவா இங்கு வந்தனை? யென்று கோபித்துத் தனது உரங்கொண்ட மட்டும் அவர் தாடையி லறைந்தனன். உடனே அவர் சுபாவத்திற்றானே விருத்தாப்பிய

திசையை யுண்டா யிருந்த தன்றிப் புத்திர சோகத்தினாலும், க்ஷேமமான புசிப்பில்லாமையினாலும், வாடியிருந்தமையால் அவனிறந்ததைத் தாளமாட்டாது ஒருசார்புமின்றி இறந்தனர். பின்னர் அக்கொடும்பாவி இதுதானுனக்குச் சரியான தண்டனை என்று கூறி யாவர்க்குந் தெரியாதபடி நிலத்தைக் கீறி அவளை யடக்கஞ் செய்தனன்.

இப்பால் அப்பாவி அவரது பொருளையெல்லாங் கொண்டுவந்து வேசைக் களிப்போமென்று நினைத்து தனது வீட்டிற்குச் செல்ல, அவன் தாயானவள் அவனைக் கண்டு நல்ல வரவென்று தழுவிக் கொண்டு, அப்பா! நீ இது காறும் எங்கு போயிருந்தனை? போகின்றபோது இங்கு போகின்றேனென்று சொல்லி விட்டுப் போனால் உனது வாய்முத்தஞ் சிந்திப்போமோ? உன்றந்தை உன்னைக் காணாது ஆகார நித்திரை யற்று இரவும் பகலும் ஏக்கங் கொண்டு தனது தள்ளாமையோடும் உன்னைத் தேடிக் கொண்டு சென்றாரே? அவரெங் குற்றாரோ தெரியவில்லையே? நீயவரை விரைவிற் கண்டு பிடித்து அழைத்து வாவென்று சொல்லினள். அதனை அப்பாதகன் கேட்டு ஆ! ஆ! நன்று யிருக்கின்றது போனவனை யழைத்துக் கொண்டு வருவதற்கா யானிங்கு வந்தனனென்று கோபித்து நமனைப் போல ஒரு தடிகொண்டு மொத்தினன். அதனால் அவளுயிரிழந்து விழ அவ்விடத்திற்றானே ஓர் குப்பையைக்கீறி அவளைப் புதைத்து விட்டனன்.

அதனை யவன்மனைவிகண்டு ஆ! என்னகாரியஞ் செய்தனை? என்னகாரியஞ் செய்தனை? யென்று இலேசித்து, ஐயோ என்றவர்களையுங் கொல்வாருண்டோ? பழிபாவமென்றும் பார்த்திலையே? பரத்தைய ரின்பமே பெரிதாகப் பாவித்தனையே? இதனை அரசனறிந்தால் இப்போதே கழுத்தரியுந் தண்டனை செய்வானே! நீ அத் தண்டனையிற் பட்டு இறப்பையாயின் அப்பரத்தை யின்பத்தைத் தான் எவ்வாறு அநுபவிக்கவல்லை? யாவரும் அஞ்சத்தக்க கொடுங் காரியத்தை யல்லவோ செய்தனை? ஐயையோ! இதற்கென்னசெய்வேன்! என்று துக்கித்துப் பின்னும் அவனைநோக்கிச் சொல்லுவாள்: இனி நீ கடைத்தேறிச் சுகத்தை யநுபவிக்கும்படியான மார்க்கத்தினைச் சொல்லுகிறேன்: அதை இனிமேலாயினுங் கேள் உனக்கு வேசையர்மீதிருந்த ஆசையிலே வீட்டிலுள்ள பாக்கியங்களை யெல்லா மழித்தனை? வயதுமுதிர்ந்த தாய்தந்தையரையு மிழந்தனை? இருக்கிறவீடு இன்றைக்கோ நாளைக்கோ நம்மைவிட்டு ஒழியப்போகின்றது, இனிமேல் நாம் காட்டிற்போய்ப் பிழைக்கநேருமோ அல்லது நாட்டிற் போ யிரக்கநேருமோ, இவையனைத்தையும் நீ எவ்வளவும் யோசித்தனையில்லை இவன் வேசையராசை கொண்டவனென்று அரசனறிவானாயின் உடனே தண்டனைவிதிப்பன் பின்னரத் தண்டனையை நீக்கிக்கொள்ளுமாறு பொருட்பிணை யொத்த பொருளிருந்தாலும் அவையனைத்தும் பொய்மை யுடையவர் புகழ் போன்று நாசமாகும். இவ்வாறு திரவியங்களழிந்தபின்பு அவ் வேசை அவனை

நாயினுங் கடையாக நினைத்துத் தனது குற்றேவலுக் காளாக்கி வைப்பளன்றி, முன்போல இன்பந்தருவளோ? வேசையரின்ப மநுபவித்தலினால் சிலநாளைக்குள் உடலையும் உயிரையும் வாட்டும்படியான தீராநோய்வந்து சேரும். விவேகிகள் வெறுக்கத்தக்க குற்றங்களெல்லாம் இப்போது வந்ததுபோல் வரும். அகத்தன் பில்லாதவர்களைக் கூடும் நின்போல்வார்க்கு அன்னந்தான் கிடைக்குமோ? இளமையினாலும், அழகினாலும், கற்பினாலும், கலப்பான உள்ளத்தினாலும், எனக்கொப்பான ஸ்திரீகளு முண்டோ? நீ தளர்வுறாத வண்ணம் அளவற்றபோகங்களை அப்பரத்தையர்போல வுனக்களிப்பேன். நீஎன்னிடத்திற்றானே சதாகாலமும் இன்புற்றிருக்கலாய்; மேலும் கூடுவதற்கு விலக்காகச் சொல்லியிருக்கின்ற ஆனிமுதலிய நான்குதிங்களினும், அட்டமி முதலிய பஞ்சபருவங்களினும் திங்கடோறுந், தீண்டுதற்குக்கூடாதமூன்று நாள்களினும், மற்றெந்தக் காலங்களினும் நீ புணர வேண்டுமென் றிச்சை கொள்ளில் உன திச்சையின் வண்ணம்* யானிசைவேனேயன்றி அதை மறுக்கவல்லனோ? நீ என்னிடத்திலெவ்வாறிருக்கினும் பழிபாவங்களில்லை; அதனால் கீர்த்தியுமுண்டு. மற்றொருவர் தலைவாயிலை மிதிக்கின் எல்லாப் பழிபாவங்களும் உடனே யுண்டு; ஆதலாலிவையனைத்தையுந் தீர்க்காலோசனை செய்து இனியேனுங் கடைத்தேறுமார்க்கத்தைக் கடைப்பிடியாகக் கொள்ளுவையென்று சொல்லவும், அதுகாறும் அப் பாதகன் உள்ளே அடங்காத கோபத்தீயை யடக்கி வைத்துக்கொண்டு, மேலுக்கு உடன்பட்டுக் கேட்பவன்போல விருந்து, பின்பு நமனைப்போல வெழுந்து, மெல்லமெல்ல எனக்கா புத்திசொல்ல வந்தனை? யென்று பூமியில் விழும்படி அவளைத்தள்ளி உதைத்துக் கொன்றனன். பின்னர் அப் பாதகன் இக் காரணத்தை அரசனறியின் வருத்துவனென்று பயந்து வீட்டிலுள்ள ஆபரண முதலிய எல்லாப்பொருள்களையு மெடுத்துக்கொண்டு அன்றிரவிற்றானே அந் நகரத்தை விட்டு நீங்கிப் பரத்தையை யழைத்துக்கொண்டு முனிவர்கள் வாசஞ்செய்கின்ற ஓர் வனத்தை நோக்கிச் சென்றனன்.

அவ் வனத்தில் தாலவனமுனிவர் வசிக்கின்ற ஆசிரமத்தின் வழியாகச் சென்று அம் முனிவர் ஸ்நானஞ்செய்யச் சென்ற சமயத்தில் உள்ளே நுழைந்து அவர் பத்தினியாகிய சுலபை யென்பவளைக் கைப்பிடித்தனன். உடனே அவள் அதிக கோபங்கொண்டு அவன்கையை யுதறி யெறிந்து, விழிகளில் தீப்பொறி யெழும்பும்படியாகச் சீறி, அடா தூர்த்தனே! எனது பெயரில் மாத்திரம் சுலபையேயன்றி, உனக்கு யான்சுலபையா? உனது காமப் பருவத்தினாலும், காயதிடத்தினாலும், வேளையொத்த பேரழகினாலு மல்லவா மாதரின்பத்தை மறந்தாற்று லனுபவிக் கின்றனை? இனி யவ் வின்பத்தை மறந்தும் அநுபவிக்காத வண்ணம் ஊனொழுகின்ற குட்டநோ யுனக்குண்டாகக் கடவதென்று சபித்தனள். அவ்வாறு சபித்தலும் அவன் அங்குவைத்த அடிவாங்குதற்கு முன்னமே அழகுவாய்ந்த மேனியெல்லாங் கருகருத்துக் கை, கண்முழு

வதும் இரணமாகிச் சீயுஞ், செந்நீரும் பெருகி, முகம் வேறுபட்டு பார்த்தவர்கள் பயமுறும்படியான விகார ரூபத்துடனே அவ்வாசிரமத்தினின்றும் வெளிப்பட்டுப் பாத்தை யிடத்தில் வந்தனன். அவள் அவனைக் காண்டலும் அருவருப்புற்றவளாகி யொழிந்தனள். பின்னர் அப்பாதகன் பாதுகாப்பவரில்லாமல் அக்காட்டிற்றனே அலைந்து திரிந்து இறந்தனன்.

உடனே அவனை யமதூதர் கட்டி யழைத்துக் கொண்டு சென்று தங்களரசனெதிரிலே விட, அவன் இப்பாதகன் குற்றம் நீங்கு மளவும் கொடியநரகங்களிற் போட்டு வதை செய்யக் கடவீர்களென்று ஆக்கியாபித்தனன். அக்கட்டளையின்படி அத்தூதர்கள் அவனைப் படுத்திய பாட்டை ஹா ஹா! யாவர் சொல்ல வல்லவர்கள்? பின்னர் அவனை எல்லா நரகங்களிலுந் தப்ப விடாமல் வதை செய்து பூமியிற் பிறக்கும்படி விடுத்தார்கள். அதனை அவனனுபவித்துமிருந்த பாபச் சேடத்தினாலும், சுலபை யிட்ட சாப வெச்சத்தினாலும், இப்பிறவியினுங் குட்ட நோயினை யநுபவித்தனன். அரசனே பாவங்களென்பனவற்றிற் பயமில்லாது செல்வமனுபவிய அவ்வணிகனைப் பிறன்கடை நிற்பாரைப் பேணு தொழிப்பதுபோல, ஒழித்து வருவை யெனில் இவ்விமானம் விண்ணிலெழும்பு மென்று தேவகணங்கள் கூற, சூரசேன மகாராசன் ஈதனைத்தும் உண்மையே யென்று நிச்சயித்து, மீட்டும் அவர்களைப் பணிந்தெழுந்து என்னையாட்கொள்ள வந்த மகாநுபாவர்களே! அவ்வணிகன் வரலாறிவ்வாறாயினும் அவனுக்குக் குட்டநோ யுண்டாவதற் கேதுவாயிருந்த பாவங்களைத் தீர்த்துச் சுத்த பவித்திரனாக்கி எம்மோடு அவனையுங் கூடவழைத்துக் கொண்டுபோகும்படியான உபாயத்தையே தேடவேண்டு மென்று பிரார்த்தித்தனன்.

அதற்குத் தேவகணங்க ளிசைந்து அக்குட்ட வணிகனை அருகி லழைத்து, அவன்மீது தமது கிருபா நோக்கத்தைப் பரப்பி, அவனது பாவங்களனைத்தும் பாறும் படியாகக் கணபதி யென்னுந் திருமந்திரத்தை மூன்று தரம் அவன் செவியில் உபதேசித்தனர். உடனே அவன் குட்ட சரீரத்தினின்று மகன்று தெய்வ சரீரம் பெற்றுச் சுத்த பவித்திரனாயினன். பலர் நடுவில் வீழ்ந்த பாம்புஞ் சாகாதென்கின்ற மூதுரையின்படி பலபேருடன் கூடியேறிய பாதகன்மீட்டும் பூமியிற் பிறந்து வருந்தாமல் நற்கதியை யடைந்தனன்.

பின்னர் சூரசேன மகாராசன் தனது நகரத்தினர் முதலாயினோர் புடைசூழும்படி விமானத்தோடு மெழுந்து ஆகாய வெளியெல்லாங் கடந்து, விநாயக லோகம் போய்ச் சேர்ந்து அனந்த காலம் அளவற்ற போக பாக்கியங்களையநுபவித்து, முடிவில் சகல தத்துவ காரணராகிய கணேச மூர்த்தியினுடைய திவ்விய சரணாரவிந்த நிழலை யடைந்து அபிரமேந்திரர்களாலு மளவிடக் கூடாத பேரின்ப சாகரத்தில் மூழ்கி யிருந்தனன்.

சூரசேனன் முத்திப்படலம் முற்றிற்று.

பரசுராமன் வரம்பெறு படலம்.

தெவ்வரை வணக்குஞ் சூர சேனனென் னரச னுற்றி
யவ்வுல கடைந்த வாய்மை யறைந்தனன் பரசு ராமன்
கவ்விய வன்பினுற்றுங் காதையுங் கேட்க வென்று
வவ்விய வியாதன் கேட்ப மலரணைக் கிழவன் சொல்வான்.

ஓ சவுனகாதி முனிவர்களே! விநாயக மூர்த்தியினுடைய சங்கடசதுர்த்தி விரதத்தைச் சூரசேன மகாராசனநுட்டித்து தன் னினத்தினருடன் முத்தியடைந்த வரலாற்றினைச் சொன்னோம். இப்பால் பரசுராமன் வரம்பெறு திறத்தினைச் சொல்லுவோங் கேட்பீர்களாக. முன்னர் பவள வனத்தில் பவளத்தினால் ஓர் விநாயக மூர்த்தியைப் பிரதிட்டை செய்து பூசித்து வந்த கார்த்தவீரியனானவன் பின்னர் தனது தந்தையாகிய கிருதவீரியனிடத்தில் வந்து பணிந்தனன். அதற்குக் கிருதவீரியன் களிப்பெய்தி, பல ஆசீர் வசனங்களைக் கூறி, தனது குமாரன் விநாயக மூர்த்தியினுடைய பெருங் கருணையால் இரண்டு கால்களையும், ஆயிரம் கைகளையும், ஐந்நூறு பாணங்களையும் பெற்றுவந்தமையை நினைந்து நினைந்து மனமகிழ்ந்து தனதாசுரிமையை யவன்பாலொப்பிவித்து, விநாயக மூர்த்தியினுடைய திருவருளையே துணையாகக் கொண்டு அவரது திருவடித் தாமரைகளைச் சதாகாலமும் இடைவிடாது தியானித்து வந்தனன். அதற்குத் தம்மைச் சரண மடைந்தோர்கள் ஆண்பாலராயினும், பெண்பாலராயினும் அவர்கட்கு இமைக்குமுன் எண்ணியவரங்களை யளிக்கத்தக்க விநாயகப் பெருமான் கிருபைகூர்ந்து அவனைத் தம்மிடத்தி லழைத்துவருமாறு தேவகணங்களை யேவ, அவர்கள் ஆகாயமார்க்கமாக ஓர் தெய்வவிமானங் கொண்டுவர, உடனே கிருதவீரியன் தன் மனைவியாகிய சுகந்தை யென்பவளோடும் மற்றைப் பரிசனங்களோடுந் தெய்வரூபம்பெற்று அவ் விமானத்திலேறி அகண்டபரிபூரண சச்சிதானந்த ஸ்வரூபியாகிய கணேசலோகம்போய்ச் சேர்ந்து மனவாக்குக் காயங்கட்கு மெட்டாதற்கரிய பேரின்ப சாகரத்தின் மூழ்கினன்.

இப்பால் கார்த்தவீரியன் அரசர்களெல்லாங் கொண்டாடத்தக்க பராக்கிரமத்தோடு உலகமுழுவதையுந் தனதாஞ்ஞாசக்கரத்து ளடக்கி, அடங்காதவரையெல்லாம் ஐந்நூறு பாணங்களால் விசயம்பேற்றி, இந்திரனுங் கண்டு நடுங்கும்படி யாகவும், கவிவாணர்களெல்லாம் புகழும்படி யாகவும், அளவற்ற போகங்களோடும் அரசாட்சிசெய்து தேவர்களெல்லாம் ஏவல்கேட்கும்படி வாழ்ந்திருந்தனன். அவ னிவ்வாறிருக்கும் நாளையில், பொழில்களாலும் பொய்கைகளாலுஞ் சூழப்பட்டிருக்கின்ற சையவனாச்சாரலில் ஐம்பொறிகளையும் நிக்கிர

சித்து, அரியதவங்களைச் செய்துகொண்டிருந்த சமதக்கினியென்னும் ஒருமுனி புங்கவ ரிருந்தனர். அவருக்குக் கற்பில் தன்னோ டொப்பாரு மிக்காருமில்லாத பெருமையினைவாய்ந்த ரேணுகையென்னும் ஓர் மனைவியிருந்தனள். இவர்கட்கு பிருகுமுனிவர் சாபத்தினால் மகாவிஷ்ணுவே பிள்ளையாகப்பிறந்து பரசிராமனென்னும் பெயரைவகித்துத் தனது தாய்தந்தையரிடத்தில் இவனின்மிக்காரொருவருமில்லை யென்று சொல்லும்படி மெய்யன்புவைத்துச் சகலமுனிவர்களும் கொண்டாடத்தக்கதாக அவர்கட்குப் பணிசெய்து வாழ்கின்ற நாளையில், அவன் ஓர்நாள் நைமிசாரணியத்திற்குச் சென்றிருந்தனன். அச்சமயத்தில் கார்த்தவீரியனென்பவன் * பலபடைகளோடும் பரிசனங்களோடு மெழுந்து காட்டிற்சென்று வேட்டையாடுவோன் கருதி சையவரைச்சாரலை யடுத்து, அவ்வனங்களிற் சென்று, அவ்விடங்களிலுள்ள துட்ட மிருகங்களை யெல்லாங் கொலைசெய்து திரும்பி வருகையில், தனக்கெதிராக வோர் தபோவனந் தோற்றக் கண்டு, அவ்வனம் யாவரை யுடையதென்று விசாரித்து, சமதக்கினி முனிவருடைய ஆசிரமமென்று தெரிந்துகொண்டு, ஆயுதபாணிகளோடிருக்கின்ற தனது சேனைகளையெல்லாம் அவ்விடத்திற்றானே நிறுத்தித் தனது மந்திரியர் நால்வரோடும் அவ்வாசிரமத்தில் நுழைந்து சமதக்கினிமுனிவரைச் சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து, சுவாமீ! தேவரீரை இங்கு பரமசிவத்தைப்போலக் கண்டு தரிசிக்கப்பெற்ற பேற்றினால் அடியேன் சுத்தபவித்திரனாயினேன். எல்லா நன்மைகளும் அடியேற்குண்டாயினவென்று துதித்தனன். உடனே அம்முனிவர் அவனுக்காதனங்கொடுத்து, அரசனே! நீயார்? இவ்விடத்திற்கு வந்தகாரணம் யாது? என்றுவினவ, சுவாமீ! அடியேன் கார்த்தவீரியன், யான் வனத்தில் மிருகவேட்டையாடி வரும்போது முன்செய்த தபோபலத்தினால் எனக்கெதிரே தேவரீர் ஆசிரமந் தோற்றக்கண்டதன்றி, இங்குவந்து தேவரீர் சினேகமுங் கிடைக்கப்பெற்றேன். இனி இதைவிட மேலான பாக்கியம் யாதென்றனன். அதற்கு முனிபுங்கவர் மனமகிழ்ந்து, அரசனே! இதுகாறும் நினது புகழுடைமைப் பலகால் கேள்வியுற்றிருந்தனன். இப்போது நினது அழகுடைமையுங் காணப்பெற்றேன். நின்வரவினால் என்மனமானது மதுபானஞ்செய்தவனையொத்து மகிழ்ச்சியடைந்திருக்கின்றது. சூரியன் உச்சியில்வந்தனன். நீயும் வேட்டையாடி மிகவும் இளைப்புற்றிருக்கின்றமையால் இவ்விடத்திற்றானே அமுதுகொண்டு சாவகாசமாய் நகரத்திற்குச் செல்லலாமென்று சொல்லினர்.

அதைக் கார்த்தவீரியன்கேட்டு, சுவாமீ! தேவரீர் யொத்தவர்களிடத்தில் அன்னமோ நீரேனும் அருந்திச் செல்லுவது தபோபலந்தரும். யானே ஒருவனும் வந்தவனல்லன், என்னுடனே அளவற்றபேர் வந்திருக்கின்றனர். எனது நகரமும் இதற்கு நெடுந்தூரமன்று, ஆதலால் சுவாமிகள் கிருபையோடும்

* பலபடைகளாவன: மூலப்படை, கூலிப்படை, துணைப்படை, கைப்படை முதலியன.

விடைகொடுத் தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனன். அதற்குப் பொன்னுலகத்தையும் இம் மண்ணுலகத்தில் வரவழைக்கத்தக்க வல்லபத்தை யுடைய அம்முனிபுங்கவர் புன்னகை கொண்டு, அரசனே! நினது சேனைகட்காக யாதொரு சிந்தனையுஞ் செய்யவேண்டுவ தில்லை. உன்னோடு வந்தவர்கள் எத்தனைபேராயினும் அவர்கட்கெல்லாம் அமுதுபடைப்போம். இதனருகிற் காநதியென்னும் ஓர்நதியிருக்கின்றது நீங்கள் யாவரும் அந்த நதிக்கரையைச் சேர்ந்து சிறிதுநேரம் இளைப்பாறிக்கொண் டிருக்கலாமென்று சொல்லி விடைகொடுத்து, தமது பத்தினியாகிய ரேணுகையைக் கூவி, இத்தினம் அரசன் விருந்துண்ண வருகின்றா னென்று அறிவித்து, காமதேனுவைத் தியானித்தனர். உடனே அந்தக் காமதேனுவும் வந்தது. அதனைச் சமதக்கினி முனிவரும், ரேணுகை தேவியும் பணிந்து, பூசைசெய்து, அதன்பால் தங்கள் விழைவை விண்ணப்பஞ் செய்துகொள்ள, அஃது உடனே அவ்விடத்தில் விண்ணுலகமுங் கண்டு நாணத்தக்க ஒரு நகரம் உண்டாக்கி, அதில் நவரத்தின மயமாயிராநின்ற மாட மாளிகைகள், கூட கோபுரங்கள் முதலான சிறப்புகளை நிருமித்து அறுசுவைகளோடுங் கூடிய * நால்வகை உண்டிகளையும், தாசர் தாசிகளையும், அறைகடோறும் அளவற்ற பொற்பாத்திரங்களையும் அமைத்து அம்முனிபுங்கவருக் கறிவித்தது. அவை யனைத்தையும் அச் சமதக்கினி முனிவர் கண்டு சந்தோஷித்து அரசனை யழைத்து வருமாறு ஏவலாளர்களுக் காக்கியாபிக்க, அவர்க ளவ்வாறே சென்று அரசனை யழைத்தனர், உடனே அரசன் தனது பரிசனங்களோடு மெழுந்து வருகையில் நூதனமாக ஓர் நகர மிருப்பக் கண்டு, ஈதென்ன அற்புத மென்று ஆச்சரியங் கொண்டு, அந்நகரத்து வீதியின் வழியாக நடந்து, அவ் வீதிக ளெல்லாம் ஓர்பால் † பஞ்ச கருவிகள் முழக்கமும், ஓர்பால் ‡ பரத நாட்டிய முழக்கமும், ஓர்பால் சங்கீதப் பிரசங்கமுழக்கமும், ஓர்பால் ¶ சத்த சுரங்களின் முழக்கமுமாக விருக்கக் கண்டு, முனிவர் ஆசிரமத்தி னருகில் வந்து, அவ்வாசிரமத்தில் இதுகாறும் தான் எவ்விடத்துங்

* நால்வகை உண்டிகளாவன: உண்ணல், தின்னல், நக்கல், பருகல் என்பன. (உ-ம்) சோறு முதலியவை உண்ணல், கறி முதலியவை தின்னல், தேன் முதலியவை நக்கல், பால்முதலியவை பருகல். இதனை முறையே விழுங்கல், மெல்லல், நக்கல், குடித்தல். என்பர்.

† பஞ்சகருவிகளாவன: தோற்கருவி, துளைக் கருவி, நரம்புக் கருவி, கஞ்சக் கருவி, என்பன.

‡ பரத நாட்டிய மாவன:-ப-பதம், ர-ராகம், த-தாளம், நாட்டியம்-நடனம் என்பர்.

¶ சத்தசுரங்களாவன: குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன. இஃது மிடற்றாற் குரலும், நாவினாற் றத்தமும், அண்ணத்தாற் கைக்கிளையும், சிரத்தால் உழையும், நெற்றியால் இளியும், நெஞ்சால் விளரியும், மூக்காற் றாரமும் பிறக்கும். இவையே ஏழ்சுரமெனவும், வீணையில் ஏழ்சுரம் பெனவும் கூறும் இசையிலக்கண வகைய தென்ப.

கண்டிராத அளவற்ற விசித்திரங்களோடு நாவிற் சலமூறும்படி உண்டாகின்ற அறுசுவை பதார்த்தங்களினுடைய பரிமளங்கள் நாற்றிசைகளினும் வீசக்கண்டு ஈதென்ன விபரீத மென்று மதிமயங்கி, அவையனைத்தையும் தன்னாற் கண்டறியக் கூடாதவனாகி, உள்ளே நுழைந்து, சமதக்கினி முனிவருடைய பாதங்களிற் சாஷ்டாங்கமாக வணங்கி, அவரது உத்தரவின்படி தனது பரிசனங்களோடிருந்து, போஜனஞ் செய்து கையலம்பி, உண்ட இளைப்பாறிய பின்னர் மீட்டுஞ் சமதக்கினி முனிவரை யடைந்து, சுவாமி! நான் முன்னர்வந்தபோது இவ்வாசிரமங் காடாக விருந்ததே? யான் ஆற்றிற் சென்று திரும்பி வருவதற்கு முன் அளவற்ற மாட்சிமையோடு நகரமாயிற்றே? அன்றியுந் தேடக் கிடையாத திரவியங்க ளெல்லாம் எங்கும் நிறைந் திருக்கின்றதே? ஒருவனுக் கொருத்தி நின்று உபசரிப்பதுபோல அவ்வவர்களுக்கு அவ்வவ ரிச்சைப்படி அமுதூட்டத் தக்க பரிசாரகர் அளவற்றபேர்க ளிருக்கின்றார்களே இவை யனைத்தும் ஓர் * நிமைப்போதில் எவ்வாறு உண்டாயினவோ? மாயாவிசித்திரமோ? அல்லது தேவரீருடைய தவமகிமையோ? இவ் வற்புதத்தை அடியேற் குணர்த்தி யருளவேண்டு மென்று கேட்டுக்கொண்டனன்.

அதற் கம்முனிபுங்கவர் புன்னகை செய்து, அரசனே! இவை யனைத்தும் மாயா விசித்திரமென் றெண்ணற்க. நமது தவ மகிமையினால் இவ்வளவுங் காமதேனுவைக் கொண்டு நடாத்தி யிருக்கின்றனமென் றறியக்கடவை யென்றனர். அதனை யரசன் கேட்டதும் † நெட்டுயிர்ப் பெறிந்து, மனதிற் பொறாமை கொண்டு, எவ்விதத்திலேனும் அக் காமதேனுவை நாம் கைக்கொள்ள வேண்டு மென்று நினைத்தவனாய், உடனே முனிவரைப்பார்த்து, பசிக்குக் காய், கனி முதலியவைகளை யருந்திச் சரீரத்தை யொடுக்கி, வனத்திற் றவஞ்செய்து கொண்டிருக்கின்ற தேவரீருக்கு அக்காமதேனுவினால் யாதொரு பயனுமில்லை. எல்லா வுலகங்கட்கும் ஏகசக்கிரேஸ்வரனா யிருக்கின்ற எனக்கு அக் காமதேனுவைக் கொடுத்தீராகில் அஃது அநேக காரியங்களுக்கு உபயோகமாகும் மேலும் அக் காமதேனு என்னிடத்தி லிருப்பது நியாயமாகவு மிருக்கின்றது. ஆதலால் எனக்கு நீர் அதனைத் தயவுசெய்து கொடுத்தருளல் வேண்டும். கொடாவிட்டால் பின்னர் பலாத்காரமாய்க் கொண்டு போவேனென்று சொன்னான். அதைக்கேட்ட முனிபுங்கவர் மிகுந்த கோபத்தோடும், பெரு மூச்செறிந்து, அரசனே! (பிச்சைக்கு வந்தவன் பெண்பிடித்ததுபோல) நீ நினைத்த காரியம் மிகநன்று, ஆ! ஆ! எல்லாவுலகத்தையும், ஏக சக்கரத்தினா லாளுகின்ற ‡ மன்னவர்களுக் குணர்த்திய நீதி நூல்களில் அன்

* நிமைப்போது - இமைப்பொழுது. இஃது ஓர் மாத்திரைகாலமென்ப. அன்றி கண்ணொடிப் பொழுது, அல்லது கண்ணொடிப் பொழுது எனவுங் கூறுவர். † நெடு உயிர்ப்பு-பெருமூச்சு,

‡ மன்னர்க் குணர்த்திய நீதிநூல்-மனுவாதி வசிட்டாந்த மாகிய தரும நூல் பதினெட்டு மென்ப.

னிவருடைய பொருளை யபகரிக்குமாறு கூறி யிருக்கின்றனையோ? நின்னைக் கல்வியிற் சிறந்தவனென்றும் மநுநீதி தவறாதவனென்றும், ஒழுக்க முதலிய நன்னடைகளை யுடையவனென்றுங் கருதியிருந்தனன். நீ இராப்போதிலுற்ற நீழலைப்போல அற்ப குணத்தை யுடையவனாயினை? ஆயினும், எனது வசமாயிருக்கின்ற அக் காமதேனுவை நினது வசமாக்கிக் கொள்ள நெறியுண்டா யிருக்குமாயின் அதைக்குறித் தென்னைக் கேட்பதென்னை? தாமத மில்லாமல் நின்வசமாக்கிக் கொள்ளலா மென்று சொல்லினர். அதை அவ்வஞ்ச நினைவைக் கொண்ட அரசன் கேட்டு உடனே தனது பரிசனங்கட்குக் கண் சைகை காட்டினான். அதை அப்பரிசனங்கள் கண்டு காமதேனுவி னருகிற் சென்றார்கள். அதனால் அரசன் சமதக்கினி முனிவருக்குப் பகையாயினா னென்று காமதேனு வறிந்து கொண்டு, மிகுந்த கோபத்தினால் நெட்டுயிர்ப் பெறிந்தது. அந்த உயிர்ப்பினால் அருகில் வந்த எல்லாச் சனங்களுஞ் சுருண்டு மாய்ந்து போயினர். அதைக் கண்ட கார்த்தவீரியன் மிகுந்த கோபாவேசங் கொண்டு மீளவும் நால் வகைச் சேனைகளை வரவழைத்து அதன் பேரி லேவினன். அவைகளைக் காமதேனு கண்டு தனது மயிரைச் சிலிர்க்க, உடனே ஒவ்வொரு மயிரில் நின்றும் அளவற்ற வீரர்கள் சர்வாயுத பாணிகளா யுதித்தனர். இரத கஜ துரக பதாதிகளு முண்டாயின. பின்னர், இரண்டு சேனைகளுங் கலந்து போர் செய்து வருகையில் காமதேனுவின் சேனைகள் அரசனுடைய சேனைகளை யெல்லாங் கொன்று எங்கும் உதிரவெள்ளம் ஓடும்படியாகச் செய்தன. அதில் எஞ்சி நின்ற சேனைகள் மீட்டு மெதிர்ப்பதற் கஞ்சி யோட, அதனை அரசன் கண்டு நமக்குத் தோல்வி வரலாகுமா வென்று அச்சேனைகட்குக் கையமர்த்தி, ஊழிக் காலத்திலுண்டாகின்ற பேரொலியைப் போலச் சங்கநாதஞ்செய்தான். அதனால் மலைகள் சமுத்திரங்கள் முதலானவைக ளெல்லாங் கலங்கிச் சகமெல்லாந் தாழியிட்ட தயிர்போலத் தளர்ந்தன. இவ்வாறு சகமெல்லாந் தளர்ந்துங் காமதேனுவினுடைய சேனைகள் சிறிதுந்தளரா திருக்கின்றதை அரசன்பார்த்து, நமது வெற்றி நன்றா யிருக்கின்ற தென்று நகைத்து மிகுந்த கோபாவேசங் கொண்டு, கரத்தில் வில்லையெடுத்து, ஒவ்வொரு எல்லைக்கு ஐந்நூறு ஐந்நூறு பாணங்களைப் பிரயோகித்தான். அப் பாணங்கள் ஊழிக் காலத்தி லுண்டாகின்ற மேகங்களை யெல்லாங் கலங்கச்செய்ய வல்லவைகளா யிருந்தும், அவைகளை அக் காமதேனுவின் சேனைகள் ஒதுக்கி, அரசன்மீது அளவற்ற பாணவருஷங்களைப் பொழிந்தார்கள். இவ்வாறு தனது படைகளை நாசஞ் செய்ததன்றித் தன்மீதும் அளவற்ற பாணங்களை ஏவியதனால் கார்த்தவீரியனுக்குப் பலங் குன்றி, இனி எவ்விதத்தினும் அம் முனிவரைக் கொல்லவேண்டு மென்று தன் மனதில் வயிராக்கியங்கொண்டு, ஓடிப்போயினன். அக் காமதேனுவும் அரசன் இனித் திரும்பா னென்று நிச்சயித்துக்கொண்டு, சமதக்கினி முனிவ ரிடத்தில் விடை பெற்றுத் தனது சேனைகளோடுஞ் சொர்க்கலோகம் போய்ச் சேர்ந்தது. பின்னர் சமதக்கினி முனிவர் முன்போலவே பஞ்சாட்சரத்தைச் செபஞ் செய்

துகொண்டு தவத்தி லிருந்தனர். இவ்வாறு சிலநாள் செல்ல, ஓர்நாள் கார்த்தவீரியனென்பவன் அம் முனிவருங்கவர் தவத்தி லிருக்கின்ற சமயத்தில் அவரருகிற் சென்று ஓர் வாளினால் அவருயிரை மாய்த்துவிட்டனன்.

அதை யம்முனிவர் பத்தினியாகிய ரேணுகை கண்டு, அடடா! துரோகி! உண்டவீட்டிற்கு இரண்டகஞ் செய்வோருள் உனக்கொப்பாரும் பாவி எவ்விடத்தேனுமுண்டோ? உனது குலமெல்லாம் நாசமாகும்படியான வகையைத் தேடிக்கொண்டனையே? இந்த அநியாயம் நீதிநெறி அரசர்கட்கேனு மடுக்குமோ? தவஞ்செய்வோரைக் கொல்வதோ தரணிவேந்தர்களுடைய முறைமையென்று சொல்ல, அவள்மீதும் இருபத்தோரம்புகளை ஏவினன். பின்னர் அவள் அவைகளைச் சகிக்கமாட்டாது கண்களில் நீர்த்தாரை பெருகும்படியாகச் சோர்ந்து பூமியில் வீழ்ந்து தனது காதலரைத் தியானஞ் செய்துகொண்டு நைமிசவனத்திற்குச் சென்ற தனது புத்திரனாகிய ராமன் வருமளவும் உயிர் வைத்திருந்தனள். அவனும் நற்செயலராய் அவ்விடத்தைவிட்டு நீங்கித் தனது ஆசிரமத்திற்கு வந்தனன். அப்போது அவ்வாசிரமமானது அன்னபானமில்லாத வூரைப் போலவும், மகமேருவில்லாத உலகம்போலவும், இந்திரனில்லாத வசந்தமண்டபத்தைப் போலவு மிருந்ததன்றி, வேதகோஷ்ட மில்லாமலும், வேள்விப்புகை எழாமலும், தனது தந்தையைச் சதாகாலமுந் தொழுதுசெல்கின்ற சீடர் கூட்டம் நெருங்காமலும், புல்லிலன் றிருக்கக்கண்டு, என்ன துன்பங்கள் நேர்ந்தனவோ வென்கின்ற மனவருத்தத்தோடு உள்ளேநுழைந்து தந்தை வாளினால் உயிர் நீங்கியிருப்பதையும், தனது தாய் அம்புகள் பாய்ப்பட்டுச் சோர்ந்து வீழ்ந்திருப்பதையும் கண்டு இவர்களை இவ்வாறாக்கினார் யாவரென்று நினைந்து நினைந்து, அழுதழுது, புழுதிகள் உடலெங்கு மூடும்படியாகப் பூமியில் விழுந்து, புரண்டு, மூர்ச்சையாகி, எழுதப்பட்ட சித்திரம்போலச் சிறிதுநேர மசைவற்றிருந்து, பின்னர் தெளிந்தெழுந்து, அவர்கள் திருவடிகளைப் பலமுறை தொழுது, துக்கசாகரத்தில் மூழ்கி, ஐயோ! இந்திரன் முதலாயினோரும் இறைஞ்சி வழிபடத்தக்க உங்கள் தவமகிமையும், கற்பின் பெருமையும் இவ்வாறு உங்களுயிர் பிரியுமாறு எங்ஙனமொளித்தனவோவென்று அலறிச் சிறிது உயிர் தாங்கிக் கண்களில் நீரைக் கவிழ்த்துக்கொண்டிருக்கின்ற தாயினருகில் வந்து அவள் சிரத்தைத் தனது துடையின்மீது வைத்து, என்னை யருமையாயீன்றெடுத்த அன்னையே! உங்கட்கு யாதுகாரணத்தால் இவ் வபாயந்நேர்ந்ததோ? அதனை எனக்குச் சொல்லவேண்டுமென்று புலம்பித் தனது கையினால் தடவ, அதை அழகில் இலக்குமியை வென்றவளாகிய ரேணுகைகேட்டுச் சிறிது தெளிவுற்று, மைந்தனே! இவ்வுலகத்திற் கரசனாகிய கார்த்தவீரியன் வேட்டையாடி வருகையில் நம் ஆசிரமத்தை நோக்கிவர அவனுக்குக் காமதேனுவினால் சகல சிறப்போடும் யாங்கள் விருந்தூட்டப் பின்னரவன் அக் காமதேனுவைக் கைக்கொள்ளுமாறு அதனோடு யுத்தஞ்செய்து தோல்வியுற்றனன். அதனால் எங்களை

எவ்விதத்தேனுங் கொல்லவேண்டுமென்கிற வெஞ்சினத்தால் சமயம்பார்த்துக் கொன்றுவிட்டுச் சென்றனன். இக் காரணத்தை யுனக் கறிவிக்கும் நிமித்தமே இதுகாறும் எனது உயிரைத் தாங்கியிருந்தனன். அப் பாதகன் எனதுடலில் இருபத்தோரம்புகளை யெய்தானாதலால் அவன் வம்சத்தில் முடிசூடு மன்னர்களை யேழேழ் தலைமுறைவரையிற் சாடி, அவர் சரீரங்களைச் சத்த பூமிகளினும் புரளும்படி வீசி எறிந்து, அந்தணர் குலத்தைத் தெய்வகுலமென்று சொல்லுமாறு விருத்திசெய்பக்கடவை. எங்கட்கு நிறைவேற்றவேண்டிய கிரியைகளைத் தேத்தாத்திரிய முனிவரால் செய்து நிறைவேற்றக்கடவை. யானுன்னைக் காண்டலும், புத்திரமுகங்கண்டவளுக் கொப்பாயினேன். இனி யெனது காதலர் மாட்டுச் செல்லுகின்றேனென்று விடைகொடுத்து உயிர்பிரிந்தனள்.

இவ்வாறு ரேணுகை உள்ளமுடைந்து கூறியவசனங்கள் பரசிராமன் செவியிலேறலும், அள்ளியெழுந்த தழற்கொழுந்துக் கொப்பாகிய கோபமானது தலைக்கேறி வெளுத்த விழிகள் சிவக்கும்படியாகச் சினந்து, எல்லா வுலகத்தையும் எடுத்து விழுங்கி விடுவான்போலத் துள்ளி அரசன் அந்தணரைக் கொன்றானென்று சொல்லுஞ் சிறுமைமாறவும், அந்தணரே தவத்திற் சிறந்தவரென்று சொல்லும் பெருமை மீறவும், இனி நமது தாய்தந்தையரை யமனைப்போலிருந்து கொன்ற மகாபாதகனுடைய குலமாத்திரமேயன்றி, அரசர்களென்று சொல்லப்படுகின்ற எல்லாக் குலங்களையும் வேருடன் கெல்லிக் கொல்லுவேனென்று சபதங்கொண்டு, அடுத்த வனத்தில் அரிய தவஞ்செய்துகொண்டிருக்கின்ற தேத்தாத்திரிய முனிவரை யடைந்து நடந்த காரியங்களனைத்தையும் அவருக்கறிவித்து, பின்னர் அவரைத் தமதாசிரமத்தி லழைத்துவந்து அவரால் தனது தாய்தந்தையர்களுக்கு நிறைவேற்றவேண்டிய நித்தியக் கிரியைகளைப் பிரதிதினம் வேதாகம முறைமைப்படி நிறைவேற்றி வருகையில், ஓர்நாளிரவில் தான் நித்திரை செய்யுங்காலத்தில் தன்மீதோர் புலிவந்துபாயத் தொப்பெனக்கண்டு வாய்குழறி, தேகம் நடுநடுங்கி, அம்மா! அம்மா! என்று கூவி விழித்துக் கொண்டனன். அக் கூக்குரலை அவன் தாயாகிய ரேணுகை கேட்டுத் தன்னை யிடையிலழைத்த காரணத்தால் இருண்டு சுருண்டு நெய்த்தாற் பசந்து தேனொழுகுகின்ற மலர்களை யணிந்திருக்கின்ற கூந்தலும், ஒள்ளிய நுதலும், சுடர்விட்டெரிக்குங் குண்டலங்களை யணிந்த செவியும், வேலினை யொத்த நாசியும், பவளம்போன்று சிவந்த விழியும், குமிழம் புட்பத்தினை யொத்த நாசியும் தோன்றும்படியாக அவனெதிரிற் றனது முகத்தை மாத்திரம் ஆகாயவெளியிற் காட்டி யிருந்தனள். அதனைத் தேத்தாத்திரிய முனிவருங்கண்டு, அன்பிற் சிறந்த இராமனே! உனது தாயைப் பதின்மூன்றாந் தினத்தி லழையாது மத்தியி லழைத்தனை யாதலால் தனது முகத்தை மாத்திரம் ஆகாயவெளியிற் காட்டினள். ஆயினுங் குற்றமில்லை. இனி நடத்தவேண்டிய கருமங்களையுஞ் செப்பமாய் நடாத்துவையாயின் மற்ற அவையவங்களுஞ் சரியாகி இப் பூவுல

னில் மதசம்பந்தப்பட்ட எல்லாமனிதர்களுந் தொழுதற்குரிய தேவதையாக வாழ்குவளென்றுகூற, அவ்வாறே இராமன் மற்றைய நாட்களின் கிரியைகளைக் குறைவில்லாமற் செய்து முடித்தனன். பின்னர் தனது தந்தையாகிய ஜமதக்கினிமுனிவர் பிரமனுலகம்போய்ச் சேர்ந்தனர். இரேணுகை யானவள் தனது வடிவ முழுவதும் அடைந்து உலகமெல்லாம் வணங்கும் படியாகத் தெய்வத் தன்மையை யடைந்தனள். தேத்தாத்திரியர் தம தாசிரமத்திற் கெழுந்தருளினர்.

இப்பால் அரசகுலங்களை அடியுடன் களையச் சபதங்கொண் டிருக்கின்ற இராமன் ஒருநாள் தனது அன்னையை வருமாறு தியானிக்க; அவ்வாறே அவள் வந்து, மைந்தனே! நீ நினைத்தகாரிய மறிந்துகொண்டனன். அதனை முடிக்கும் வகையினைச் சொல்லக்கேள்: நீ இந்த நிமிடத்தில் கைலாயவரையை யடுத்து அரவையுஞ் சந்திரனையுமிலைந்த சடாமகுடத்தினை யுடைய சிவபெருமானைப் பணிந்து அவர் பேரருளைப்பெற்று உன்னிஷ்டத்தை இடையூறின்றி நிறைவேற்றக் கடவையென்று சொல்லி யகன்றனள். அச் சொல்லை இராமன் சிரமேற் கொண்டு உடனே கைலாயவரையிற் சென்று சிவபெருமானுடைய திருவடிகளைப் பலமுறை பணிந்து துதிசெய்ய, அதற்குக் கர்த்தன் கிருபை கூர்ந்து அவன்மீது தமது கடைக்கண்சாத்திச் சடாக்கரமந்திரத்தை ஆகமமுறைமைப் படி அவனுக் குபதேசித்து, இராம தத்துவகாரண மாகியும், தத்துவ சொருப மாகியும், தத்துவ முதலாகியும், தத்துவ முடிவாகியும் இருந்து பிரமன் முதலிய எங்கள் மூவருக்கும் முத்தொழி லளித்தவர் விநாயகப் பெருமானேயாம். அவரை நின்மனதிற் றியானித்து அவருக்குரிய இம் மகாமந்திரத்தை இடைவிடாது செபித்து வருவையேயனில், நீகருதிவந்த கோரிக்கை விரைவில் நிறைவேறுமென்று திருவாய்மலர்ந்தனர். அதனை இராமன் செவிக்கமுதாகக்கேட்டு, மீட்டுந் தொழுதெழுந்து விடைபெற்று இம்மையிற்றானே எல்லா நன்மைகளையுந் தரத்தக்க மயூரேசமென்கின்ற தலத்தையடைந்து விநாயகமூர்த்தியினுடைய திருவடித்தாமரைகளைப் பூசனைசெய்து பேரன்பினோடுஞ்சடாக்கரமந்திரத்தை முறைமைப்படி தியானித்து,ஐம்புலன்களையும் அடக்கி அரியதவஞ் செய்துகொண்டிருந்தனன். அத் தலத்திற்கு விநாயகக் கடவுள் கிருபைகூர்ந்து பாச, தாமரைமலர், ஒற்றைக்கொம்பு, மோதகம் என்னு மிவைகளை யேந்திய நான்கு திருக்கரங்களோடு, பூமாலையினை யேந்திய துதிக் கரமும் விளங்க அவனெதிரிற் பிரத்தியட்சமாயினர். உடனே தேவர்க ளெல்லாஞ் ஜய ஜய வென்று போற்றி புட்பவருடம் பொழிந்தார்கள். பின்னர் இராமன் சுவாமியைக்கண்ட வுடன் திடுக்கிட் டெழுந்து, விழிகளில் ஆனந்த பாஷ்ப முண்டாக, அன்பு அகத்தை யுருக்க, உரைகள் தடுமாற்றங் கொள்ள, உடலெங்கும் உரோமாஞ்சிதம் பூப்ப, ஆன்மாக்களை ஆணவ விருளினின்று மெடுத்து ஆட்கொள்ள வல்ல கணேசரது திருவடித் தாமரைகளை வணங்கி அனந்தமுறை வலம்வந்து தேன்

மாரி பெய்தாலென்ன அளவற்ற வேதாகமங்களினுற் றுதிசெய்து நின்றனன். அதற்கு விநாயகக் கடவுள் சந்தோஷித்து, அன்பனே! உனக்கு வேண்டிய வரங்களைக் கேளென்று திருவாய் மலர்ந்தருள, இராமன் மீட்டுந் தொழுதெழுந்து, சுவாமி! எனது குரவர்களைக் கொன்ற கார்த்தவீரியனுடைய குலமேயன்றி அரசர் குலமென்று சொல்லப் படுகின்ற யாவரையுங் களைந்து வெற்றி கொள்ளுமாறு அடியேற்குக் கிருபை புரிய வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்து கொண்டனன். அவ்வாறே கணேச மூர்த்தி திருவருள் பாலித்து மாறுதவலியும்,மழுவாயுதமுந்தந்து, என்றுஞ் சிரஞ்சீவியா யிருக்கும்படி வரங் கொடுத்து, அவனுக்குப் பரசுராமனென்னுந் திரு நாமமு மளித்து, உன்னடியரா யிருக்கின்ற பேர்கள் மிக்கபிழைகள் செய்தாலும் அவைகளைப்பொறுத்து ஆட்கொள்ளுக வென்று திருவாய் மலர்ந்து கரந்தருளினர். இப்பால் பரசுராமன் கார்த்தவீரியன் முதலாயுள்ள அரசர் குலங்களை யெல்லாம்அதஞ்செய்து அவர்க ளாண்டு கொண்டிருந்த உலகங்களை அந்தணர்கட் களித்துத் தான் கொண்டிருந்த சபதத்தை நிறைவேற்றிச் சொல்லுதற்கரிய பெருந் தவங்களைச் செய்து கொண்டு என்றுஞ் சிரஞ்சீவியாக உலகத்தின்கண் வசித்திருக்கின்றனன்.

பரசுராமன் வரம்பெறு படலம் முற்றிற்று.

இராவணன் பூசித்தபடலம்.

அங்கா ரகநற் சதுர்த்தியொடு மறுகு சமிமந் தாரமுமெய்த்
தங்கா தரவி னனுட்டித்தோர் தமையும் விளங்கத் தெருந்தனையால்
கங்கா சுகவிற் படைச்சோம காந்தா வின்னுஞ் சிலகாதை
யிங்கா தரவிற் கேட்டியென வியம்பும் பிருகு மாதவனே.

திருவருட் செல்வராகிய முனிவர்களே! சமதக்கினி முனிவர் புத்திரனாகிய பரசுராமன் விநாயக மூர்த்தியை யநுட்டித்து முடிவற்ற வரங்களைப் பெற்ற முறைமையைச் சொன்னோம். இப்பால் இராவணன் உபாசித்த திறத்தினைச் சொல்லுவோம் கேட்பீர்களாக.

முன்னொரு காலத்தில் இலங்கைக் கரசனாகிய இராவணனென [illegible] காய முகட்டையளாவிய வெள்ளியங் கிரியை யடுத்து, அதனிலோர் சாரி [illegible] அரிய தவத்தினைச் செய்து கொண்டிருக்க, கொன்றையும், அறுகையும் புனைந்தசடா மகுடத்தினையுடைய சிவபெருமான் அதற்குக் கிருபைகூர்ந்து, அவனெதிரிற் பிரத்தியட்ச மாயினர். உடனே இராவணன் விரைந்தெழுந்து அடிப்பாடி அனந்தமுறை வலம்வந்து சயசயவென்று வேதாகமங்களாற் றுதிசெய்து,விழு

களிற் றூற்றெடுத்ததுபோல ஆனந்தக்கண்ணீர் சொரிந்து, உடலெங்கும் புளகாங்கித முற்று, நெக்கு விட்டு, நெஞ்ச முருகி, கரங்களைச் சிரமீது கூப்பி நின்றனன். அதனைக் கர்த்தர் கண்டு, உனக்கு வேண்டுவனகேள் தருகின்றோமென்று திருவாய் மலர்தலும், இராவணன் மீட்டுந் தொழுதெழுந்து, சுவாமீ! சொர்க்க முதலிய எல்லா வுலகங்களு மழியுங் காலத்திலும் இலங்காபுரி மாத்திரம் அழியாது நிலை பெற்றிருக்க வரந்தர வேண்டு மென்று பிரார்த்தித்தனன். அதற்குக் கர்த்தன் அவ்வாறே கிருபை கூர்ந்து ஓர் சிவலிங்கத்தையவன் கரத்திற் றந்து, இராவணனே! இவ்விலிங்கத்தை உனது இலங்கைப் பதியிற் பிரதிட்டை செய்து பத்தியோடு பூசித்து வாகடவை. அன்றியும் அதனை அப்பதிக்குக் கொண்டு செல்கின்ற போது சித்த சுத்தியோடு வாகனத்தின் மீதேறாது செல்லவேண்டும். அவ்வாறு செல்லும்போது வழியிற்பூமியின்கண் வைப்பை யெனில் மீட்டும் உன்கையில் அகப்படா தழுந்தும். இதனை நன்றாய்க் கவனிக்கக் கடவையென்று திருவாய் மலர்ந்து கரந்தருளினர். பின்னர் இராவணன் பெருமகிழ்ச்சிகொண்டு சிவபிரா னளித்தருளிய சிவலிங்கத்தைப் பயபக்தியோடுங் கரத்திலேந்தி அளவற்ற காடுகளையும் மலைகளையுங் கடந்து கடல்மத்தியிலிருக்கின்ற தனது இலங்காபுரியை நோக்கிச் செல்லுகையில் இக்காரணத்தை தேவேந்திரனறிந்து, ஐயோ! இராவணன் அச் சிவலிங்கத்தை இலங்கையில் வைத்துப் பூசிப்பானாயின் எக்காலத்திலும் அவன் அழியானே! இனி இதற்கென்னசெய்ய வல்லோமென்று பயந்து முப்பத்து முக்கோடி தேவர்களுந் தன்னைப் புடைசூழ்ந்துவரக் கயிலையங்கிரியை யடைந்து அங்கெழுந்தருளி யிருக்கின்ற விநாயகப் பெருமானுடைய திருவடிகளைப் பணிந்தெழுந்து தெய்வகங்கையா லவருக் கபிடேகமாட்டி கற்பக மலர்களைக்கொண் டருச்சித்து அமுதத்தை நிவேதனஞ்செய்து சோடசவுபசாரங்களோடும் பூசித்தனன். அதற்கு விநாயகப் பெருமான் கிருபைகூர்ந்து இந்திரனே, நீ யாது வேண்டிவந்தனை யென்றுவினவ, இந்திரன் மீட்டுந் தொழுதெழுந்து, சுவாமீ! இராவணன் சிவபெருமா னிடத்தி லிருந்து ஓர் லிங்கம் பெற்று அதனைத் தனது இலங்கை நகரில்வைத்துப் பூசிக்கச் செல்கின்றனன், அவ்வாறே வைத்துப் பூசிப்பானாயின் அவனுக்கு எக்காலத்து மரணமில்லையாம். ஆகவே தேவர்குலங்களை விருத்தியெய்தவொட்டாது நாசமாக்குவான் ஆதலால் அவன் அப்பதியைச் சேருமுன்னமே ஓரிடையூறு அவனுக்குண்டாக்கி யாங்களோர் துன்பமடையா வண்ணந் தேவரீர் காத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனன்.

அதற்குக் கணேசமூர்த்தி யிசைந்து உடனே வருணனைக்கூவி நீ இராவணன்வயிற்றில் நீர்சுரப்பிக்கக் கடவையென்று ஏவினர். அவனும் அவ்வாறே அவன்வயிற்றில் நீர் சுரப்பிக்கக் கணேசமூர்த்தி யானவர் ஓர் பிராமணப் பிள்ளை வடிவங்கொண்டு, தமது திருவடிகளை நிலமகள் சுமக்கும்படியாக நடந்து இராவணனெதிரில் வந்தனர். அச்சமயத்தில் இராவணன் சலபாதையைச் சகிக்கமாட்டாது சிவபிரானருளிய கடப்பாட்டை யெண்ணி யெண்ணித் தன்னெதிரில் வருகின்ற பிராமணப்பிள்ளையைநோக்கிப் பின்னுங் காரியத்தை யறியாதவனாய் அப் பிள்ளையோடு இனியவார்த்தைகளாடி, அப்பா! எனக்குச் சலபாதை மேலிட் டிருக்கின்றது, ஊரோ நெடுந்தூரத்தி லிருக்கின்றது; எதிரில் யாவரையுங்காணேன் ஆதலால் நீஎன்மீது கிருபைசெய்து யான் ஜலஸ்பரிசஞ்செய்து வருமளவும் இச் சிவலிங்கத்தை உனது கரத்திற்றாங்கி யிருக்க வேண்டுமென்று பிரார்த்தித்தனன். அதற்கு அந்தணச்சிறுவனை யொத்தெழுந்தருளிய கணேசமூர்த்தி சொல்லுவார், ஐயா! யானோ பிள்ளைப்பருவ முடையேன், எனக்கோ இச் சிவலிங்கத்தைத் தாங்கத்தக்க வலியில்லை, நீயோ அதனை என்னிடத்திற் பலாத்காரமாய்த் தருகின்றனை, இவ்வித வாபத்து வேளையில் அதனைத் தாங்கவேண்டுவதே ஒருவனுக்குத் தகைமையாயினும், யான் மிகவும் சிறியனாயிருத்தலால் உன்னை முக்காற் கூப்பிடுவேன்; அதற்குள் வந்து அதனைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்; பெறாமற்போவை யெனில் உடனே நிலத்தில் வைத்துவிடுவேனென்று திருவாய் மலர்ந்தனர். அவையனைத்தையும் இராவணன்கேட்டு அப்படியே ஆகவென்று அவர்கரத்தில் அச் சிவலிங்கத்தைக் கொடுத்து ஜலஸ்பரிசத்திற்குச்செல்ல அவன் வருதற்கு முன்னம் மூன்றுதரங்கூவி அதனை நிலத்தில் வைத்துவிட்டனர். பின்னர் இராவணன் விரைவிலோடிவந்து தனது மலைபோன்ற இருபது கரங்களினாலும் அதனைக் கெல்லியெடுக்க அஃது முன்னொருகாலத்தில் திருமால் வராகரூபமாய்ச் சென்று தேடியுங் காண்டற் கருமையனவாயிருந்த சிவபெருமானுடைய திருவடிகளைப்போல ஊடுருவி கற்பின்மகளி ருள்ளத்தைப்போல அவன் கரங்களிற் சிக்காதிருந்தது. அதனைக் கொல்லுந்தோறும் அவன் கரங்கள் ஏறும்படி நிலமும் நயப்பெய்தா திருந்தது. அதனால் இராவணன் மனவருத்தமுற்று மீட்டுந் தனது கரங்களை வலியுடன்பாய்ச்சி யிழுக்க அப்போ தச் சிவலிங்கம் பசுவின் காதுபோற் குழைந்து பிரகாசித்தது. அக் காரணத்தால் விண்ணுலகர் மண்ணுலகர் முதலிய யாவரும் அப்பதியைக் * கோகர்ணமென்று சொல்லுவார்கள். பின்னர் இராவணன் தன்னாற் கூடியவரையில் முயன்றும் அச் சிவலிங்கந் தன்கரத்திற் சிக்காதிருந்தமையால், அம்மம்ம இஃது மகா பலமுள்ளதென்று வியந்தனன். அதனா லச் சிவலிங்கம் மாபலலிங்கமென்னும் பெயர் பெற்றது. இப்பால் இராவணன் அச் சிவலிங்கத்தை நிலத்தில்வைத்த பிரா

* கோகர்ணம்=கோ-பசு, கர்ணம்-காது. பசுவின் காதைப்போலக் குழைவுபட்ட சிவலிங்கமுள்ளதாகலின் அச் சேத்திரத்திற்கும் கோகர்ணமெனப் பெயர் வழங்கப் பெற்றன. இஃது துளுவநாட்டிலுள்ள சிவக்ஷேத்திரங்களுள் தேவாரம்பெற்ற திருத்தலம். சுவாமிபெயர் - மகாபலேசுவரர், அம்மையார் பெயர்-பெரியநாயகி. இச் சிவலிங்கபிரதிட்டை விநாயகரால் செய்தமையான் விநாயக லிங்கமெனவும், மகாபல லிங்கமெனவும், கோகர்ண லிங்கமெனவுங் கூறுவ. அத் தலவிநாயகர்பெயர் விப்பிரவிநாயகர் என்ப.

மணப் பிள்ளையின்மீது கோபங்கொண்டு தனது கையால் அவர் சிரத்திலோங்கிக் குட்டினான்.

உடனே கணேசமூர்த்தி யானவர் அப் பிராமணப்பிள்ளை வடிவத்தை மாற்றித் தமது விசுவரூபத்தைக் கொண்டு அவ் விராவணனைத் துதிக்கரத்தினாலெடுத்து அவன் சிரமானது அண்ட முகட்டில் முட்டும்படி மேலேயெறிந்தும், மீட்டுந் தமது திருவடிகளால் அவன் பாதாளலோகத்தி லழுந்தும்படி நிலத்தில்விழத் தள்ளியும், இவ்வாறு பந்தாடுவதுபோல அவன் சரீரத்துள்ள என்புகளெல்லாம் நெக்குவிடும்படி ஆடினார். அதனை இராவணன் சகிக்கமாட்டாது கூக்குரலிட்டு,

பொய்தவி ரடியார் செய்யும் புன்மையும் பொறுப்பா யோலங்
கைதவ மனத்தார் செய்யுங் கடப்பாடு வெறுப்பா யோலஞ்
செய்தவென் பிழையுங் காத்துந் திருவருள் செறிப்பா யோலம்
வெய்தருள் புரியா யாகின் விளிகுவே னோல மென்றான்.

பொய்தவிர்ந்த அடியவர்கள் செய்யும் புன்மையினைப் பொறுப்பவனே! அபயம். கைதவ முடையோர்கள் செய்யும் கடப்பாடை யெல்லாம் வெறுப்பவனே! அபயம். வேண்டி வந்தித்தோர்கட்கு விக்கினங் கெடுப்பவனே! அபயம். வேண்டி வந்தியாதவர்கட்கு விக்கினங் கொடுப்பவனே! அபயம். என்று இவ்வாறு அனந்த முறை ஓலமிட்டு சுவாமீ! அடியேன் செய்த பிழைகளை மன்னித்துக் காத்தருளவேண்டும். அடியேன்மீது சுவாமிகள் கிருபாநோக்கஞ் செலுத்தியாளாவிட்டால் இனி யான் நாச மடைவேன். அப்படி யாகாமுன்னம் அடியேற்கு உயிர்ப் பிச்சை தந்தருள வேண்டும். என்று துதிசெய்தனன். அதற்கு விநாயகக் கடவுள் மனமிரங்கி அவன் இவ்வாறு பிழைத்திருக்கும் வண்ணந் தமது கடைக்கண் பார்வையினை அவன்மீது செலுத்தி நிலத்தில் விட்டனர். பின்னர் இராவணன் பரிமள மிகுந்த புட்பங்களால் அவர் திருவடிகளை யருச்சித்து அனந்த முறை வேதாகமங்களால் துதிசெய்து பூசித்தனன். அதற்குக் கணேச மூர்த்தி கிருபை கூர்ந்து, இராவணனே! உனது கையால் நமது முடியில் எவ்வாறு முன்னங் குட்டினையோ அவ்வாறு உன் முடியில் குட்டிக்கொள்ளுக வெனக் கட்டளையிட, உடனே தனதுமுடியில் உதிரமொழுகும்படியாகக் குட்டிக்கொண்டனன். அதனைக் கணேசமூர்த்தி கண்டு யாவரேனும் இவ்வாறு நம்மைக் கண்டவுடன் குட்டிக்கொள்வார்களாயின் அவர்கட்கு எல்லாத் துன்பங்களையும் ஒழித்தருளுவோ மென்று திருவாய்மலர்ந்து அவனுக்கு வேண்டிய பல வரங்களைத் தந்து தமது திருவுருவைக் கரந்தருளினர். பின்னர் இராவணன் அவ் வரங்களைச் சிரமேற்கொண்டு தனது இலங்கைப் பதியை யடைந்து இன்புற் றிருந்தனன்.

இராவணன் பூசித்த படலம் முற்றிற்று.

அகத்தியர் பூசித்த படலம்.

அராவணி சடையெம் மண்ண லருளிய வரங்கள் கொண்டே
யிராவண னிலங்கை யெய்தி யின்புற வாழ்ந்தா னிப்பா
விராவணக் கடலை யுண்ட விருடிபூ சித்த வாறும்
பிராவண வுரைப்பக் கேட்டி யெனச்சொலும் பதுமச் செல்வன்.

வேதாகம மென்னுஞ் செம்பொருட் சிரத்தைச் சித்தாந்தமாகக் கொண்டு சைவமென்னுந் தவக்குகையிற் சரிப்பவராகிய ஓ, ஓ சவுனகாதி முனிவர்களே! இராவணன் விநாயக மூர்த்தியை அனுட்டித்து வரம் பெற்ற வரலாற்றினைச் சொன்னோம். இப்பால் இந்திரன் வரம்பெறு பேற்றினையும், அகத்திய மகா முனிவரர் வந்தித்த திறத்தினையுஞ் சொல்லுவோங் கேட்பீர்களாக. என்றுப் பிதிர்தேவனை நோக்கிப் பிரமதேவன் அனந்த கருணையோடும், சிவானந்தசாகரத்துள் மூழ்கினவனாய், பூதாதி தத்துவப் பகுதிக ளெல்லாம் பரவசமாகிக் கூறுவதாயினான்.

இந்திரன் உபாசனை.

பிதிர்தேவனே! முன்னம் கைலாசபதியாகிய சிவபெருமானிடத்தில் அளவற்ற வரங்களைப் பெற்று ஆயிரத்தெட்டண்டங்களையு மாண்டுவந்த * சூரபதுமனால், தேவேந்திரன் தனது பத்தினியாகிய இந்திராணியோடும் விண்ணுலகத்தை விடுத்து, இம் மண்ணுலகத்தில் அளவற்ற மகிமையுற் றிருக்கின்ற † சீகாழிப் பதியை யடைந்து, சிவபெருமானை யருச்சிப்பதற்காக ஓர் நந்தனவனம் வைத்து, அதினின்றும் பிரதிதினம் பத்திர புட்பங்களைக் கொய்து, அருச்சித்து வாழ்ந்திருக்கின்ற நாளையில், அச் சூரபதுமனுடைய ஆக்ஞையினால் மேகங்கள் சிறிதும் மழைபெய்யாமல் மாற, அதனால் அந்த நந்தனவனமானது

---

* சூரபதுமன்: சூரன், பதுமன் என்னு மிருவ ரேகோற்பவ மாய ஓர் அசுர னென்ப. பிரதமபுராணம்.

† இஃது, சீ-சிவத்தியும், காழி-காளி யென்னும் ஓர் பாம்பும் பூசிக்கப்பட்டதாகலின் சீகாழியெனப் பெயர்பெற்றன. பின்னர் வழிபாட்டானே பிரமபுரம், வேணுபுரம், புகலி, பூந்தாராய், வெங்குருகு, தோணிபுரம், சிரபுரம், புறவம், சண்பை, காழி, கொச்சைவயம், கழுமல மென்னும் பன்னிரு திருநாமங்களையு மேற்றன. இத்தலம் சோழநாட்டி லுள்ள ௧௯௰ சிவத்தலங்களுள் காவிரியாற்றின் வடகரைப்பெற்ற சிவத்தலம் ௬௩-ல் ஒன்று. இதில் ஸ்ரீஞானசம்பந்த சுவாமிகளும், கணநாதநாயனாரும் அவதாரம். மேற்படி சுவாமிகளுக்குச் சிவபெருமானேவலால் உமையம்மையார் பொன்வள்ளத்தில் திருமுலைப்பால் கொடுத்தருளியது. அன்றி சமயகுரவர் மூவராலும் ௭௧-தேவாரத்திருப்பதிகங்களைப் பாடப் பெற்றன. சுவாமிபெயர் பிரமபுரீசுவரர், அம்மையார் பெயர் திருநிலைநாயகி.

வாடி யுத்தகளம்போ லாயது. பின்னர் இந்திரன் அதனைக் காணுந்தோறும் வருந்தி, இதற் கினி என்னசெய்வ வல்லோ மென்று ஏங்கித் துயருற் றிருக்கின்ற சமயத்தில், சிவபிரானுடைய கிருபையினால் "இந்திரனே! வருந்தற்க, நினது நந்தனவனத்திற்கு ஓர் நதி வந்து பாயும்; அஞ்சாது பூசை செய்யக் கடவை;" என்று அசரீரியாக ஆகாயத்தின்கண் ஓர் திருவாக் குண்டானது. அதனை இந்திரன் கேட்டு மனம் மகிழ்வுற் றிருக்கின்றபோது, அவனிடத்திற்குத் தற்செயலாய் நாரதமுனிவர்வர, அவரை இந்திரன் பணிந்தெழுந்து, சுவாமீ! சூரபதுமன் செய்யுங் கொடுமைக் கஞ்சி மிகவு மனக்கவலையோடு மிப்பதியில்லை தொளித்திருக் கின்றமையால், அக்கவலை தீரும் வண்ணம் சாதனாத் சிவபிரானுடைய திருவடிகளை யருச்சிப்பதற்கு ஓர் நந்தனவனம் வைத்தேன். அஃது மழை யில்லாமல் வாடிப்போன தன்றி, அதிலுள்ள மலர், தளிர், அரும்பு முதலானவைகள் கலைவினை நீங்கிய கற்பின் மகளிரைப் போலாயின. ஆதலால் இனி அதற்குச் சகாயமாயத்தக்க உபாயத்தினை யுணர்த்தி யருள வேண்டு மென்று பிரார்த்திக்க, நாரத முனிவர் மனமிரங்கி, இந்திரனே! கைலாய வரையிலிருந்த காவேரி நதியை, முன்னர் சிவபிரான் அகத்திய முனிவருக் களித்திருக்கின்றனர். அதனை யம்முனிவர் தமது கமண்டலத்தி லடைத்துச் சையவரைச் சாரலில் வந்திருக்கின்றனர். அந்நதி பெருகிவருமாயின், உனது நந்தன வனம் பிழைக்கும். அது பாயும்படி செய்யவல்லவர் சர்வகாரணராகிய விநாயகக் கடவுளேயாகும். ஆதலால் அவரைவிரைவில்வழிபடக் கடவை யென்று சொல்லிச் சென்றனர். இப்பால் இந்திரனானவன், நாயினுஞ் சிறந்த தயாநிதியாகிய விநாயக மூர்த்தியைப் பூசித்து, அவரது திருவடித் தாமரைகளை அனந்த முறை வேதாகமங்களாற் றுதிசெய்து நிற்க, அதற்குக் கணேச மூர்த்தி கிருபை சுரந்து ஓ * வலாரியே! நீ யாதுவேண்டி வந்தனை யென்று திருவாய் மலர்தலும், இந்திரன் தொழுதெழுந்து, சுவாமீ! அடியேன் சிவபிரானைப் பூசிக்குமாறு நந்தனவனம் வைத்தேன், அஃதுமழை யில்லாமல் வாடுகின்றது, அகத்திய முனிவர் சையவரைச் சாரலில் வந்திருக்கின்றனர், அவர் தமது † கமண்டலத்தி லடைத்து வைத்திருக்கின்ற காவேரி நதியை உலகமெல்லாம் போற்றும் படியாக இங்கு பெருகி வரச் செய்தருள வேண்டு மென்று பிரார்த்தித்தனன். அதற்குக் கணேச மூர்த்தி அவ்வாறே செய்வோ மென்று திருவாய் மலர்ந்து, அவனுக்கு விடைகொடுத்து, உடனே காகவடிவங் கொண்டு சையவரைச் சாரலை யடைந்து, அகத்தியமுனிவருடைய கமண்டலத்தின் மீதேறி யுட்கார்ந்தனர். அதை அம் முனிவர் கண்டு இனி வரும் விளைவை யோசியாது தமது கையாலோட்ட, உடனே அக்கமண்டல நீரைக் கவிழ்த்து அக்காக வடிவத்தினின்றும் மாறிப் பிராமணப்பிள்ளை வடி

* வலாசுரன் என்னும் ஓர் சுரனை வென்றமையான் இந்திரன் (வலன்-வலாசுரனை, அரி-சம்மரித்தோன்.) வலாரியெனப் பெயர் பெற்றன னென்ப

† கமண்டலம்-கரகம். இஃதோர் சிறிய பாத்திர மென்ப.

வங்கொண்டு நின்றனர். அவ்வாறு நிற்பவரை அகத்திய முனிவர் பார்த்து இவன் முன்னங் காகவடிவங்கொண்டு நமதுகரகநீரைக் கவிழ்த்து இப்போது பிராமணப்பிள்ளை வடிவாகி நிற்கின்றனதலால்,இவன் அநுமானோ?பிரமனோ? வென்று சந்தேகித்து இவன் திறத்தை முழுவது மறிவோமென் றெண்ணி அவரைக் குட்டுமாறு தமது விரல்களை மடித்து ஓங்கிக் கொண்டு அவரருகிற் சென்றனர். அதற்கு விநாயகமூர்த்தி பயந்தவர்போலே வோடி, அவரைப்பிடிப்பதற்கு அகத்தியர் பின்பற்றி யோடினர்.

இப்பால் விநாயக மூர்த்தி அம்முனிவருக்கு அகப்படுவார் போலக் கிட்டியும், பின்னர் அகப்படாமல் அளவற்ற தூரத்திலே எட்டியும் இவ்வாறு அம்முனிவர் தம்மைத் தொடர்ந்து வருந்தோறும் விட்டுவிட் டகன்று, உலக மெல்லாந் திரிந்து ஓட்டங் காட்ட, அதனால் அகத்திய முனிவர் தமதுள்ளமுங்கால்களுந் தளர் வெய்தினர். அதனைக் கணேச மூர்த்தி யறிந்து, பிராமணப் பிள்ளை வடிவத்தைமாற்றி,யானைமுகத்தோடும்அவரெதிரிற்பிரத்தியட்சமாகின்றனர். அவரைக் கண்டவுடன் அகத்திய முனிவர் திகைத்து, அன்பும் அச்சமுங் கொண்டு, சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து, முன்னங் குட்டுதற்கு ஓங்கிய கரத்தினால் தமது சிரத்தில் உதிரம் குழம்பும்படியாகக்குட்டிக்கொண்டனர். இவ் வன்புக்கு விநாயக மூர்த்தி கிருபை சுரந்து, ஓ தமிழ் முனியே! நீ செய்யுஞ் செய்கைக்கு மெச்சினோம். இனி யதனை நிறுத்தி உனக்கு வேண்டிய வரங்களைக் கேளென்று திருவாய் மலர்ந்தனர். அகத்திய முனிவர் தொழுதெழுந்து, சுவாமீ! சகளமாகியும், நிட்களமாகியும் சிருட்டி திதி, சங்காரமென்னு முத்தொழிலினை நடாத்த மும்மூர்த்திகளாகியும், அம் மும்மூர்த்திகளுக்கு மூலகாரணராகியு மிருக்கின்ற தேவரீர் திருவிளையாடல்கள் என்னாலறியப் படுவனவோ? சிவபெருமானும் பெற்று கமண்டலத்தி லடைத்து வைத்திருந்த காவிரிநீரைச் சிறிதுமில்லாதபடி தேவரீர் கவிழ்த்து விட்டது யாது காரணங் கொண்டோ அறிகிலேன். அடியேன் சிவபிரா னுத்தரவின்படி இப்போது பொதிய மலைக்குச் செல்கின்றேன்; அங்கு [illegible]
அக் காவிரி நதியைக் கடாட்சித் தருள வேண்டு மென்று பிரார்த்தித்தனர். அதற்கு விநாயகமூர்த்தி, மனமிரங்கி, ஓ குறுமுனியே! இந்திரன் சிவபிரானுக்கு அருச்சனை செய்யுமாறு ஓர் நந்தனவனம் வைத்தனன். அஃது மழையின்றி வாடுவதால் அதனைக் காப்பாற்றவேண்டி உனது கமண்டல நீரைக் கவிழ்த்தனம். இனி உனது கமண்டலத்தையும் நிரப்பித்துத் தருகின்றோமென்று திருவாய் மலர்ந்து, மிக்கவிரைவோடுசென்று பாய்கின்ற அக் காவிரியின் சலத்தைத் தமது கரத்தினாலள்ளி அக் கமண்டலத்தில் வழியும்படியாக விடுத்துக் கொடுத்து, பின்னும் அளவற்ற வரங்களையுந் தந்து காத்தருளினார். இப்பால் அகத்தியர் கணேச மூர்த்தி யளித்தருளிய தீர்த்தத்தைக் கையேற்றுப்பொதிய மலைக் கெழுந்தருளினர். விநாயக மூர்த்தியினுடைய பெருங் கருணையால் அக்

காவேரி நதியானது புறப்பட்டு தேவேந்திரனுடைய நந்தனவனத்திற் பாய்ந்து கடலிற்போய்ச் சேர்ந்தது.

இவ்வாறு விநாயகப்பெருமானைவலா லுண்டான அக்காவிரி நதியானது இற்றை வரையில் அந்தந்தக் காலந்தோறும் முறைவழாது உண்டாகி வருமாயின் அவரது சரணாரவிந்தங்களை யடுத்த அடியார்களுக்கு எக்காலத்தும் அவர் திருவருள் குறையுமோ? குறையாது.

அகத்தியர் பூசித்த படலம் முற்றிற்று.

காசிபர்முதலியோர்

அனுட்டித்தபடலம்.

குறிய மாதவன் பூசித்த செயல்குறித் துரைத்தா
னெறியி னீடிய காசிப னிகழ்தர வுயிர்த்த
மறித ராதமெய் யன்புடை யாரொலாம் வழுத்தும்
செறிவுந் தேவொன வியாதனுக் குரைக்குந்தே மலரோன்.

உத்தம வைதிக சைவம்போ லழகுற்ற,'செந்தமிழெனச் சிறந்து, திருவைந் தெழுத்திகழுஞ் சவுனகாதி முனிவர்களே! முன்னம் விநாயக மூர்த்தியை இந்திரன் பூசித்து காவிரி நதியினைப் பெற்ற பேற்றினையும், அகத்திய முனிவர் வந்தித்து அளவற்ற வரங்களைப் பெற்ற வரலாற்றினையுஞ் சொன்னேம். இப்பால் காசிபர் முதலாயினோர் உபாசித்த திறத்தினைச் சொல்லுவோங் கேட்பீர்களாக.

முன்னொரு பிரளய முடிவில், பிரமனானவன் தன் மனத்தால் எழுபுதல்வரை யுண்டாக்கினன். அவருள் காசிப முனிவர் அறிவும், மேன்மையு முள்ளவராகி யிருந்தனர். அதனாலவருக்குப் பிரமன் ஏகாட்சர மந்திரத்தை உபதேசஞ்செய்து அதனைச் செபிக்கு முறைமையினையுந் தெளிவு படச் செய்து மைந்தனே! நீ ஐம்பொறிகளையு மடக்கி, கணேச மூர்த்தியினுடைய திருவடிகளில் மனதை நிறுத்தி, நாம் உபதேசித்த அவரது ஏகாட்சர மந்திரத்தைச் செபித்து, தவஞ்செய்து, அவர் திருவருளால் சகல வான்மாக்களையுஞ் சிருட்டி செய்யக் கடவையென் றனுப்பினன். அவ்வாறே காசிபர் சென்று தேவவருடம் ஆயிர வருடம் வரையிற் றவஞ்செய்து கொண்டிருந்தனர். அதற்குக்

கணேச மூர்த்தி கிருபை கூர்ந்து, * அங்குசம், † பாசம், தாமரை மலர், ஒற்றைக்கோடு என்னு மிவைகளைத் தாங்கி யிருக்கின்றநான்கு திருக்கரங்களோடு, மார்பில் முத்தாரமும் ‡ மும்மதம் பொழிகின்ற யானையினது முகமும், துதிக்காமும், முடியில் இரத்தகிரீடமும், அதன்மீது மூன்றும் பிறைச் சந்திரனும், செவியிற் குழைகளும் விளங்க மூஷிக வாகன மூர்ந்து, அளவற்ற சூரியர்களை அழியச் செய்ய வல்ல பிரகாசத்தோடு அவரெதிரிற் பிரத்தியட்ச மாயினர். உடனே காசிபர் விரைந் தெழுந்து அனந்தமுறை வலம் வந்து மிக்கவுள்ளன்பினோடு துதிசெய்து, விழிகளில் ஊற்றெடுத்ததுபோல நீர்த் தாரைகளைச் சொரிந்து, அளவளாவிய அற்புதத்தோடும் ஆனந்தக் கூத்தாடி, இருகாங்களையுஞ் சிரமேற் கூப்பி நின்றனர். அதனை விநாயக மூர்த்தி கண்டு, காசிபனே! உனக்கு வேண்டிய வரங்களைக் கேள் தருகின்றோ மென்று திருவாய் மலர்ந்தருள, சுவாமீ! உலகத்தில் அடியேன் உயிர்த் தொகைகளைச் சிருட்டி செய்யுமாறு வரங் கொடுத்து, தேவரீர் கசியபந்த னென்னும் பெயரோடு எனக்குப் புத்திரராகி வரவேண்டுமென்று பிரார்த்திக்க, அதற்கவ்வாறே கிருபைசுரந்து தமது அடியவருள்ளக் கோயிலை யடைந்தனர்.

இப்பால் காசிபர் தமது ஆசிரமத்திற்குச் சென்று தமது பத்தினியர் பதின்மரோடுங் கூடிச் சுகித்திருக்குங் காலையில் அவர்கள் கருப்பத்தினின்று தேவர் முதலிய அளவற்ற ¶ சராசரங்கள் உண்டாயின. அவர்கட்குக் காசிபர் விநாயக மூர்த்தியினுடைய திருமந்திரங்களைச் சோதித் தெடுத்து, ஒன்று, நான்கு, ஐந்து, எட்டு, பன்னிரண்டு, பதினாறு, பத்தொன்பது! என்னுமெழுத்துக்களையுள்ள மந்திரங்களை முறைமைப்படி உபதேசித்தனர். பின்னர் அவர்கள் யாவரும் ஒவ்வொரு மந்திரங்களை முறைமைப்படி உபதேசித்தனர். பின்னர் அவர்கள் யாவரும் ஒவ்வொரு மந்திரங்களைக் கடைப்பிடித்து விநாயக மூர்த்தியை வேறுவேறாகத் தங்களுள்ளத்திற் றியானஞ் செய்து தேவவருடத்தில் ஆயிர வருடந் தவஞ் செய்தனர். அதற்குக் கணேச மூர்த்தி கிருபை சுரந்து அவர்கள் தம்மை எவ்வாறு தியானித்தார்களோ அவ்வாறே சிலர் முன் சிங்கவாகனத்தின் மீதும், சிலர் முன் மயில் வாகனத்தின் மீதும், சிலர் முன் பெருச்சாளி வாகனத்தின் மீதும், சிலர் முன் மான் வாகனத்தின் மீதும், சிலர் முன் சூரியப்பிரகாசம் போலவும், சிலர் முன் சந்திரப் பிரகாசம் போலவும், சிலர் முன் மேக நிறம் போலவும், சிலர் முன் இரண்டு கைகளோடும்,

* அங்குசம்-யானை சிரத்திற் கொத்தும் ஓர்வகைப் படை.
† பாசம்-கயிறு.
‡ மும்மதம்-கன்ன மதம், கபோல மதம், பீஜ மத மென்ப.
¶ சராசரம்=சரம், அசரம். சரம்-அசைவுள்ளன. அவை, நடத்தல், பறத்தல் முதலிய ஜீவர்கள். அசரம்-அசைவற்றன. அவைகள் மண் மரம் முதலியன.

சிலர் முன் நான்கு கைகளோடும், சிலர் முன் ஆறு கைகளோடும், சிலர் முன் எட்டு கைகளோடும், சிலர் முன் பத்து கைகளோடும், சிலர் முன் பன்னிரண்டு கைகளோடும், சிலர் முன் பதினெட்டு கைகளோடும், சிலர் முன் ஆயிரங் கைகளோடும், சிலர் முன் வால பருவ முற்றும், சிலர் முன் தருண பருவமுற்றும், சிலர் முன் குமாரபருவ முற்றும், சிலர்முன் விருத்த பருவ முற்றும் இவ்வாறு பற்பல விதமாக வுருவங்கொண்டு, யாவருக்கும் பிரத்தியட்ச மாயினர். உடனே அவர்கள் திடுக்கிட்டெழுந்து, சிலர் ஏகாங்கமாகவும், சிலர் திரியாங்கமாகவும், சிலர் பஞ்சாங்கமாகவும், சிலர் அட்டாங்க மாகவும், விழுந்து நமஸ்கரித்து, சூரியனைக்கண்ட கமலம்போல யாவரும் முகமலர்ந்து, விழிகளில் நீர்த்தாரைகள் பெருகி, ஆனந்த பரவசங்கொண்டு துதிசெய்வதாயினர்.

தோத்திராஷ்டகம்.

பந்தமகற்று மனந்த குணப் பரப்பு மெவன்பா லுதிக்குமோ
வெந்த வுலகு மெவனிடத்தி லின்டி யிருந்து காக்குமோ
சந்த மறையா கமக்கலைக ளனைத்து மெவன்பாற் றிகவருமோ
வந்த விறையாங் கணபதியை யன்புகூரத் தொழுகின்றாம்.

உலக முழுது நீக்கமற வொன்றாய் நிற்கும் பொருளெவனவ்
வுலகிற் பிறக்கும் விகாரங்க ளுறாதமேலா மொளியாவ
னுலகம் புரியும் வினைப்பயனை யூட்டுங்களைக ணெவனந்த
வுலக முதலைக் கணபதியை யுவந்துசரண மடைகின்றாம்.

இடர்கண் முழுது மெவனருளா லெரிவீழ்பஞ்சி யெனமாயுந்
தொடரு முயிர்க ளெவனருளாற் சார்வாம்பதியு முறச்செய்யுங்
கடவுண் முதலோர்க் கூறின்றி கருமமெவனா னமுடிவுறுமத்
தடவு மருப்புக் கணபதிபொற் சரணஞ் சரண மடைகின்றாம்.

மூர்த்தியாகித் தலமாகி மூழ்நீர் கங்கை முதலான
தீர்த்த மாகி யறிந்தறியாத் திறத்தினுமுயிர்க்குல
மூர்த்தி யாரு மறியாமை யகற்றி யறிவிப் பானெவனப்
போர்த்த கருணைக் கணபதியைப் புகழ்ந்து சரண மடைகின்றாம்.

செய்யும் வினையின் முதல்யாவன் செய்யப் படும் பொருள்யாவ
னையமின்றி யுளதாகு மந்தக் கருமப் பயன்யாவ
னுய்யும் வினையின் பயன்விளைவி னூட்டிவிடுப்பா னெவனந்தப்
பொய்யில் லிறையைக் கணபதியைப் புகழ்ந்து சரண மடைகின்றாம்.

வேத மளந்து மறிவரிய விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடியி னடமிடும் விமலன் யாவன் விளங்குபா

நாத முடிவில் வீற்றிருக்கு நாதனெவனென் குணனெவனப்
போத முதலைக் கணபதியைப் புகழ்ந்து சரண மடைகின்றாம்.

மண்ணின் ஞரைங் குணமாகி வதிவா னெவனீ ரிடைநான்காய்
நண்ணி யமர்வா னெவன்றீயின் மூன்றாய் நவில்வா னெவன்வளியி
னொன்று மிரண்டு குணமாகி யிசைவா னெவன்வா னிடையொன்று
மன்ன னெவனைக் கணபதியை யன்பிற் சரண மடைகின்றாம்.

பாச வறிவிற் பசுவறிவிற் பற்றற் கரிய பரன்யாவன்
பாச வறிவும் பசுவறிவும் பயிலப் பணிக்கு மரன்யாவன்
பாச வறிவும் பசுவறிவும் பாற்றி மேலா மறிவான
தேச னெவனைக் கணபதியைத் திகழச் சரண மடைகின்றாம்.

இவ்வாறு தோத்திரஞ்செய்து, சுவாமி! அடியேங்கள் குலம், பிறப்பு, உயிர், குணம், கருமம், தவம், தானம், விரதம், கலை முதலான யாவும் பங்கமுறாவண்ணம் பரிசுத்தமாயின. இனி அடியேங்கள் கிருதார்த்தர்களாகும்படி கிருபைசெய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதற்கு விநாயக மூர்த்தி சந்தோஷித்து அவ்வவர்கட்கு அளவற்ற வரங்களைத்தந்து,

இந்த நமது தோத்திரத்தை யாவன் மூன்று தினமும்மைச்
சந்தி களிற்றோத் திரஞ்செயினுஞ் சகல கரும சித்திபெறுஞ்
சிந்தை மகிழச் சுகம்பெறுமெண் டினமுச் சரிக்கின் சதுர்த்தியினைப்
பந்த மகல வோரெண்காற் படிக்கி லட்ட சித்தியுறும்.

திங்க ளிரண்டு தினந்தோறுந் திகழ வொருபான் முறையோதிற்
றங்கு மரச வசியமாந் தயங்க விருபத் தொருமுறைமை
பொங்கு முழுவ லாற்கிளப்பிற் பொருவி னைசுவரி யக்கல்வி
துங்க வெறுக்கை முதற்பலவுந் தோன்று மெனச்செப் பினர்மறைந்தார்.

அன்பர்களே! நீங்கள்செய்த தோத்திரங்களை யாவரேனும் மூன்றுதினம் * மூன்று சந்திகளினுந் துதிசெய்வார்களாயின், அவர்கட்குச் சகல கருமங்களுஞ் சித்தியாகும், எட்டுதினந் துதிசெய்தால் சிந்தைமகிழச் சுகமெய்துவர். சதுர்த்தி விரதத்தில் எட்டுதரந் துதிசெய்தால் † அட்டமாசித்திகளுங் கைகூடும். இரண்டுமாதம் நித்தியப்படி ஒருதரந்துதிசெய்தால் இராசவசியமுண்டாகும். அவ்வாறு இருபத்தொருமுறை துதிசெய்தால்தனந்தானியமுதலிய ‡ அஷ்

---

* மூன்று சந்தி-காலை, மத்தியானம், சாயந்திரம்.

† அட்டமாசித்தி யென்பதனை (மதுரைத்) திருவிளையாடற் புராணத்துள் எல்லாம் வல்ல சித்தரான படலத்துட்காண்க.

‡ அஷ்டைசுவரியமாவன: இராசாங்கம், மக்கள், சுற்றம், பொன், மணி, நெல், வாகனம், அடிமை என்பன.

டஐசுவரியமு முண்டாகும். என்று திருவாய் மலர்ந்து தமது திருவுருவைக் கரந்தருளினர்.

இப்பால் தேவர்கள் முதலிய யாவரும் மிக்க வுள்ளன்பினோடும் வெவ் வேறே ஆலயங்கள் சமைத்து, அவைகளில் தாம் விநாயக மூர்த்தியை எவ்வாறு தரிசித்தார்களோ அவ்வாறுய திருவுருவைக் கொண்டு பிரதிட்டைசெய்து, வேதாகம முறைமைப்படி பூசித்து, தேவர்கள் சுமுகரென்றும், முனிவர்கள் ஏகதந்தரென்றும், கந்திருவருங் கிம்புருடரும் கபிலரென்றும், சாரணருஞ் சித்தரும் கஜானனரென்றும், மனிதர்கள் இலம்போதரரென்றும், மிருகங்கள் விகடரென்றும், பட்சிகளும் மரங்களும் விக்கினராசரென்றும், சூரியன் முதலிய நவக்கிரகங்கள் கணநாயக ரென்றும், அட்ட ¶ திக்குப் பாலகர் தூமகேதுவென்றும், நதிகளுந் தீர்த்தங்களும் கணாத்தியட்ச ரென்றும், பயிர்முதல் கிருமி § கீடங்கள் யாவும் பாலசந்திரரென்றும், மற்றுமீவசெந்துக்களெல்லாம் கஜானன ரென்றும் பெயரிட்டு அளவற்ற தோத்திரங்கள் செய்து பணிந்து மிக்கமகிழ்ச்சியோடும் அவ்வவர்கள் பதவிகளிற் சென்று வாழ்ந்திருந்தார்கள்.

ஓ சவுனகாதி முனிவர்களே! இந்தப் பன்னிரண்டு நாமமும் முன்னர் ஆழியைக் கடைந்து அமுதெடுத்தது போலச் சகத்திர நாமங்களி னின்றும் அவர்கள் ஆராய்ந் தெடுத்த தாகும். அந்த சகத்திர நாமங்களைத் தோத்திரஞ் செய்தவரு குண்டாகும் பயனை இப்பன்னிரண்டு நாமங்களே தரவல்லதாயின், இவைகளின் பெருமையை விரித்துச் சொல்ல வேண்டுமோ? இப்பன்னிரண்டு நாமங்களால் யாவரும் விநாயக மூர்த்தியைப் பூசித்து அருச்சிப்பார்கள். மேலும் இவைகள் எல்லாப் பயனையும் எளிதிற் றரத்தக்கதாதலால், சைவர்களே யன்றி, ஏனைய சவுரவர் சாக்தர் வைணவர் முதலிய சகலமதத்தர்களும் ஓதிப் பயன் பெறுவார்கள். விநாயகரைப் பூசனை செய்யாதவர்கள் எவரு மில்லை. மேலும் அத் திருநாமங்களைப் பிரதிதினம் விடியற் காலத்திற் சொன்ன பேர்கள் கோடியாகம், கோடி தவம், கோடி தருமம், கோடி தீர்த்தம், கோடிஸ்தலம், கோடிமூர்த்தி, கோடி துலாபாரதானம், கோடி கன்னிகாதானம் கோடி கஜதானம், கோடி கிருச்சிர தானம் என்னு மிவைகளால் வரும்பயன்கள் யாவோ அவைக்குக் கோடிபங்கு அதிகமான பயன்களைப் பெறுவார்கள்.

காசிபர் முதலினோ ரனுட்டித்த படலம்

முற்றிற்று.

¶ திக்குப்பாலகர்-இந்திரன், அக்னி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்ப.

§ கீடம்-வண்டு, கிருமி புழு.

உ

சிவமயம்.

கணபதிதுணை.

—:o:—

காசிபர்முதலாயினோ ரனுட்டித்த

சகத்திரநாமப் படலம்.

ஈது சுரர்கள் முதலானோ ரெவரும் பூசை புரிந்தபடி
கோதி லாதா யறிகென்னக் கூறுங் கமலன் முகநோக்கி
யாது பெயரா யிரமவற்றின் பயன்யா திவையு முறையென்னப்
போதி விருந்தோன் வியாதமுனி புந்திமகிழத் தெருட்டுவான்.

அறிவென்னும் பெருங்குன்றேறி, அஞ்ஞானந்தகாரத்தை யறவகன்ற சவுனகாதி மகாமுனிவர்களே! நீங்கள் விரும்பியபடி காசிபர் முதலியோர் அனுட்டித்த பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரக்கடவுளுக் குரித்தான சகத்திர நாமங்களோடு, அனுதி பாத்துவ நாமம் இருபத்து நான்கையும், சேர்த்துச் சொல்லுவோம் கேட்பீர்களாக.

தியானம்.

அஸ்யஸ்ரீ மகா கணபதி சஹஸ்ர நாம ஸ்தோத்ர மந்த்ரஸ்யா கணேச முனிருஷ்யாம் மஹா கணபதி தேவதா, அநுஷ்டுப் சந்தா, ஹம் படு பீஜம் துண்டம் ஸக்தி ஸ்வாஹா.—கீலகம் ஸகல ஸங்கட நிவாரணார்த்தே மம மஹா கணபதிப்ரசாத சித்யர்த்தே ஜப விநியோக பவ ஸஞ்சித பாபௌக வித்வம்ஸன விலக்ஷணம் விக்நாந்த காரபாஸ் வந்தம் விக்னராஜ மஹாம் பஜே, ஏகதந்தம், சூர்ப்பகர்ணம், கஜவக்த்ரம், சதுர்ப்புஜம், பாஸாங்குஸதரம், தேவம் த்யாயேத் சித்தி விநாயகம் உத்தமம் கணநாதஸ்ய வ்ரதம் ஸம்பத்கரம் சுபம். பக்தாபீஷ்ட ப்ரதந்தஸ்மாத்யா யேத்தம் விக்னநாயகம்.

ஸகஸ்திரநாமார்ச்சனை.

—∘∘∘—

ஓம் கணேசாயநமஃ
கணக்ரீடாயநமஃ
கணநாதாயநமஃ
கணபதயேநமஃ
ஓம் ஏகதம்ஷ்ட்ராயநமஃ
வக்ரதுண்டாயநமஃ
கஜவக்த்ராயநமஃ
மஹோதராயநமஃ

ஓம் லம்போதராயநம:
தாம்ரவர்ணாயநம:
விகடாயநம:
விக்னநாதாயநம:
சுமுகாயநம:
துர்முகாயநம:
புத்தாயநம:
விக்னராஜாயநம:
கஜானனாயநம:
பீமாயநம:
ப்ரமோதாயநம:
ஆமோதாயநம:
சுராநந்தாயநம:
மதோத்கடாயநம:
ஹேரம்பாயநம:
சம்புவேநம:
சம்பராயநம:
லம்பகர்ணாயநம:
மஹாபலாயநம:
நந்தனாயநம:
அலம்படாயநம:
தனஞ்சயாயநம:
மேகநாதாயநம:
அகநாசனாயநம:
விநாயகாயநம:
விரூபாக்ஷாயநம:
வீராயநம:
சூராயநம:
கணாத்யக்ஷாயநம:
வரப்ரதாயநம:
ஸித்திபுத்திப்ரப்ரசாதனாயநம:
மகாகணபதயேநம:
ருத்ரப்ரியாயநம:
பீமாயநம:
உமாபுத்ராயநம:
ஈசானபுத்ராயநம:
குமாரகுருவேநம:

ஓம் மூஷிகவாஹனாயநம:
ஸித்திப்ரியாயநம:
ஸித்திபதயேநம:
ஸித்தாயநம:
ஸித்திவிநாயகாயநம:
சாகலாயநம:
ஸிம்மவாஹனாயநம:
மோஹினீப்ரியாயநம:
அவிக்னத்வகராயநம:
ஜயாயநம:
துர்ஜயாயநம:
அதுர்ஜயாயநம:
கண்டராஜபுத்ராயநம:
விஸ்வகர்த்ராயநம:
விஸ்வவந்த்யாயநம:
விஸ்வமுகாயநம:
கவிருஷபாயநம:
கவயேநம:
துளிக்ரீணியேநம:
பிரம்மண்யாயநம:
பிரம்மஸ்பதயேநம:
கூஷ்மாண்டஸாமஸம்பூதாயந
கிதிபதயேநம:
பூபதயேநம:
புவனபதயேநம:
பூதபதயேநம:
அவ்வியாயநம:
ஆமித்ராயநம:
சம்மிதாயநம:
பூஷதந்தபிதேநம:
கிதப்ரியாயநம:
பதிப்ரியாயநம:
பாதகத்தியார்ச்சிதக்ஷித்யேநம:
ஜேஷ்டராஜாயநம:
இரண்யபுராந்தஸ்தாயநம:
ப்ரசமாயநம:
கராஹதத்வம்ஸாத்ருவேநம:

ஓம் ஸித்ராங்காயநம:
உமாங்ககேளிகுதுகினேநம
சுமதாகுலபாலகாயநம
நாதபின்னமகாம்பராயநம
துர்சொப்பனநாசனாயநம
நாதப்ரதிஷ்டிதாயநம
சத்தியோஜாதாயநம
வரதாயநம
சண்டவினேநம
விப்ராஜநூபுராயநம
ஆரிண்யேநம
க்ரீடினேநம
குணினேநம
ஸ்வர்ணமூஞ்ஜிமேகலினேநம
பீதாம்பராயநம
கண்டதாராயநம
வைமுக்யஹத்தைத்யஸ்ரீயேநம
கஜகர்ணாயநம
விஜயாயநம
விற்புஜாயநம
ஸ்வரூபாயநம
சூர்யமண்டலமத்யகாயநம
சமனாயநம
சுரபீஹிர்தேநம
வனமாலிமதாபக்னேநம
பத்ரேநம
பாலசந்த்ராயநம
கண்டவைசாகஸமஸ்திதாயநம
புருஷாயநம
சலிலாயநம
கணிராஜாயநம
ஸ்வர்ணநேத்ராதிஷாயாயநம
தீபகாயநம
யோகாதிப்ராயநம
வாகரோஸராயநம
நிராஞ்சனாயநம
ஸ்திராயநம:

ஓம் சுகர்ணாயநம:
சுபானனாயநம
உமாங்கமலஜாயநம
ஸர்வாத்மனேநம
தேவதாதாயநம
கௌரிதேஜோபுவேநம
ஸர்வதேவாத்மனேநம
கௌரிசுகாவஹாயநம
தர்மாயநம
தேவதேவேஸ்வராயநம
சிவாக்ரோசஹாரிணேநம
விபசித்தேநம
மிர்த்துஞ்சயாயநம
தாமஹஸ்த்ராயநம
மகாநாதாயநம
தைத்யவிமர்த்தனாயநம
ப்ரம்மமூர்த்தயேநம
ஜகஜ்ஜென்மனேநம
கருக்ருத்னேநம
ப்ராஜ்ஞாயநம
ஸித்தராயநம
சம்புகோபகாஸ்ய பயப்ரதாயநம
கீர்தாயநம
தர்ப்பிஷ்டாயநம
மிருகபதித்துவஜாயநம
ஓமாயநம
சம்புபக்திரோற்பவாயநம
மர்த்யகாயாயநம
இச்சாசக்திபவாயநம
வரஹவதனாயநம
வாணிநாவாயநம
சம்புதேஜஸேநம
வ்யாக்ரசிராம்பராயநம
சமப்ரதாயநம
ஸ்பர்த்தநிற்பராயநம
காபிலாயநம
ப்ரம்மாண்ட கும்பசித்தோமாபா
லாயநம:

ஓம் பலினே நமஃ
க்ரகட்குர்த்தசனாய நம
கணகாய நம
சேதனாய நம
கிரிவருக்ஷமனே நம
மந்த்ராய நம
லயோன்மேஷநிமேஷாஷிணியாக்
கசோமதிருக்ககே நம
வன்னிதாமாய நம
ப்ரம்மவித்யாமதோதகாய நம
ஸர்பாங்குளிகாய நம
ப்ரதாபினே நம
சக்திசிரோருஹாய நம
ஸ்ருஷ்டிலிங்காய நம
இருதயாலஸ்திச்சலாய நம
ப்ரம்மதிசாய நம
இருதயபத்ம கர்ணிகாசாலாய நம
தாம்பிகாய நம
ப்ரதமாய நம
குலாசலாஞ்ச சோமாங்ககண்டா
ய நம
பீனவக்ஷாய நம
வாசவநாசிகாய நம
கூடாய நம
யலஸ்வாய நம
ப்ருமத்யஸம்ஸ்திதாய நம
பீனஸ்கந்தாய நம
பூஷிதாசனாய நம
வியத்கேளிசரோவராய நம
ப்ருத்விகற்கடியாய நம
தாரகாரகாய நம
ப்ரசாவாரிதிவாரிதாய நம
கல்பத்ருமவனஸ்ரயாய நம
அதினதபுஜாய நம
யந்த்ரே நம
துங்கசவ்யதந்தாய நமஃ

ஓம் லிபிபத்மாசனாய நமஃ
ரத்னமண்டபமத்யஸ்தாய நம
தீவ்ராய நம
ரத்னசிங்காதனஸ்திதாய நம
தாராய நம
சர்பகோடீரகடகாய நம
பேர்கதாய நம
சிந்தாமணித்விபதயே நம
ருத்ரசிரோதராய நம
சர்பஹாராய நம
சர்பதத்யானிகளாய நம
சர்வலக்ஷணலக்ஷிதாய நம
கம்புகண்டாய நம
சர்பக்ரைவேயபாசராய நம
ஸ்வேதாய நம
சர்வாவயசம்பூர்ணாய நம
த்ரிதாலயாய நம
சர்ப்யக்ஞோபவீதாய நம
கடீசூத்ராய நம
சர்வாபரணபூஷணாட்டியாய நம
மஞ்சரியே நம
சர்வமங்களமாங்கல்யாய நம
லம்போஷ்டாய நம
ஜகாமகாயனிபீடாய நம
லம்பநாசிகாய நம
சர்வகாரணகாரணாய நம
மகானுஜாய நம
சர்வசோபாசமன்விதாய நம
ப்ரஹம்யபுஜாய நம
சர்வசத்யம்புஜாயநாய நம
கதாதராய நம
சாரங்கினே நம
உன்னதப்ரமதாய நம
பீஜபூரிணே நம
சர்வதேவகாராய நம
சிரோத்ருதபதாய நமஃ

ஓம் சுதந்த்ரவே நமஃ
சமோதகாய நம
நக்தாநக்திதபிடல்லியே நம
ஸ்வேதாம்பரத்ராய நம
அக்னிவர்மதாய நம
சுவாலினிமௌலிலாளிதாய நம
பில்வப்ருதே நம
ஸ்வேதமால்யாவிபூஷணாய நம
ரங்குசாய நம
சூர்ப்பகர்ணாய நம
அஸ்தநேத்ரியாய நம
பாசினே நம
ஸ்வேதாதபத்ரருசிராய நம
சித்தேசாய நம
சுக்லாங்காய நம
ஸ்தம்பஆகாரகும்பாக்ராய நம
ஸ்வேதசாமரவீஜிதாய நம
த்ருதோத்பலாய நம
சூதகலிகாத்ருதே நம
கிரீடமஸ்தகாய நம
சூலினே நம
பூஸ்வதந்தப்ருதுவே நம
லோகசுபகாய நம
ரத்னமௌலினே நம
தந்துவர்த்தனாய நம
சேலினே நம
இட்சுசாபதராய நம
கல்பவல்லிதராய நம
தீவ்ரசன்யாய நம
நிம்மசரணாய நம
சுவாலாமாலினே நம
பூரணரத்னவிருக்ஷகாய நம
வசினே நம
ஏகராய நம
க்ஞானமுத்ரையாய நம
விதிகாவலினே நம
மஹீவாரஹவாமாங்காய நமஃ

ஓம் ஸ்வர்ணகண்டினே நமஃ
வசுதாராமதாய நம
ப்ருசுபாங்கதாய நமஃ
கம்புகந்தராய நம
சக்ரபாணியே நம
ரமாரமேசபூர்வாங்காய நம
சரோஜத்ருஜே நம
ரதிகந்தர்ப்பபச்சிமாய நம
தட்சணே மாமசேஸ்வராய நம
விகிரத்தாகவே நம
சமர்த்திதமம்காவ்ரதயே நம
பூர்ணபாத்ரிணே நம
அட்சமலாதராய நம
குடாராய நம
புஷ்கரஸ்தாய நம
ஆமோதாமோதசனாய நம
கதலிகாஸ்ரயாய நம
விக்னமத்யாஸ்ருதபாதாய நம
வருணப்ரயாய நம
விலாகினீக்ருதோல்லாசாய நம
சுமங்களாய நம
தத்தசௌமுக்யசுமுகாய நம
ப்ரவர்த்தனாய நம
காஸ்தாம்பிரபலாய நம
மகாசங்கநிதிப்ரபுவே நம
நித்யாய நம
சோசிதகேய கிவ்ருதாஸ்ரயாய நம
க்ருதசௌமுகதுர்முகாய நம
சௌண்டினே நம
மதனுவத்யாஸ்ருதாங்காய நம
ஈசானமூர்த்தாய நம
வஜாரியஸ்த்ரபரிவாராய நம
பதயே நம
நித்யவதம்சிதாய நம
க்ஞானினே நம
இச்சாதாரநிஷேவிதாய நம
யக்ஞியக்ரயாதாராய நம

ஓம் லளிதாயநமஃ
காமாயநம
ப்ரிஜயாயநம
விஜயாவகாயநம
அஜாயநம
விகியாயநம
காந்தயேநம
ஜயாயநம
அஜயார்ச்சிதபதாம்புஜாயநம
காமினீபாலகாயநம
தைத்ரேந்த்ரசித்யேநம
கணசண்டஸ்மாஸ்ரியாயநம
பவனார்சனாயநம
காமினீகேளிலாலிதாயநம
வலிதாஸ்தயாயநம
கௌரீநந்தனாயநம
பிரஹஸ்பத்மஹிப்ரபுவேநம
வாமாராமாஜயேஷ்டா மனோரமா
யநம
வீதசோகாயநம
வாசஸ்திதாயநம
வாகீஸ்வராயநம
ஸ்ரீகேதனாயநம
ஸர்வஸத்குருஸம்ஸேவ்யாயநம
கணநாயகாய்நம
ஸவுந்தர்யமண்டிதாயநம
ஐராவதாதிஸர்வாரணாயநம
அனந்தானந்தசுகதாயநம
ஸரஸ்வதியாஸ்ரயாயநம
நளினகாமுகாயநம
ஸர்வகாளிகஸம்சித்தயேநம
குருகுத்பபதாயநம
ஸதோதித்ரமதத்ரவாயநம
அஸ்த்ரேஸர்வப்ருதேநம
அனபாயாயநம
உம் பீஜோத்துங்கசக்திமதேநம
ஹாரமுக்தீநபதாம்புஜாயநமஃ

ஓம் நாதாயநமஃ
விக்னவிர்தேநம
திவ்யாஸ்த்ராயநம
நம்த்வசுமதிமௌளினேநம
கணேசாயநம
திவ்யாயநம
பாதாயநம
மதகூர்ணிதலோசனாயநம
அசுமங்களாயநம
சுபகாஸம்ஸ்ரிதாயநம
சுப்ரமோதப்ரமோதனாயநம
த்ராவிணீசக்திஸம்வ்ரதாயநம
ப்ரத்யுக்ரபவனாயநம
நிகம்பராயநம
விஸ்வாதிபீஜஸ்சகதசுவாகாசக்
தி சகிலகாயநம
உச்சிஷ்டோஸ் சிஷ்ட கணகாய
நம
அமூர்தசந்த்ரமௌல்யாயநம
அனுவிலாயநம
அச்சுதாயநம
அப்ரதர்க்யாயநம
அமுக்தவக்ஷாயநம
அக்ஷயாயநம
அமூர்தாங்கிக்ருதாவசாயநம
அஜாப்யாயநம
அகோராயநம
அநாமயோமயாயநம
அநார்த்தயாயநம
அக்ரகாராயநம
அமிதமானஸாயநம
அனந்தத்ருஷ்டயேநம
அத்விதாயநம
அமேயசித்தயேநம
அவ்யக்ராயநம
அபேயாயநம
அமிர்தபானாயநமஃ

ஓம் அவிதாமாக்னிபலக்னாயநமஃ
அவ்யக்தலக்ஷணாயநம
அனனப்ரசித்தயேநம
ஆதாராதேயவர்சிதாயநம
அஜாப்யாயநம
ஆகுமகாரதாயநம
இடாயாமாடநம
இடாதாமாயநம
ஆதாரபீடாயநம
இந்துமண்டலமத்யகாயநம
அப்ரதிஹதாயநம
இந்தீவரதளஸ்யாமாயநம
ஆசாராயநம
இகமுத்ராவிவர்ஜிதாயநம
அப்ரமேயாயநம
இந்ரகோபஸ்மானாயநம
ஆசாரபூரகாயநம
இட்சுசாகரமத்யஸ்தாயநம
ஆகுகேதனாயநம
இந்துசாயைசிபத்வைதியேநம
இட்சுபாணவிலாசனாயநம
உடுபமௌளினேநம
ஈஷணைத்ரயகல்பாந்தாயநம
உத்துங்காயநம
இட்சுசாபாதிரேகஸ்ரீயேநம
உக்ராயநம
இந்த்ரநீலசியத்விதியேநம
உபேந்த்ராயநம
இட்சுவாகுவிக்னவித்வம்சினேநம
இச்சிதார்த்தப்ரதாயகாயநம
ஊர்ச்சுஸ்வதேநம
இட்சுசாரப்ரியாயநம
உன்னதானனாயநம
இந்திராஸ்ரியாயநம
உத்தாரகப்ரபுவேநம
ஈசானாயநம
உதாரஸ்ரிதசாக்ரஸ்யேநமஃ

ஓம் ருக்யசுர்ஸ்யாமநயனாயநமஃ
ஊஷணமலதாயநம
ஈசானப்ரயாயநம
உஹாமோஹவிவர்ஜிதாயநம
ருத்திபுத்திசமர்யகாயநம
ஓஷதிபதயேநம
ஈசான்யமௌளியேநம
லுப்தசத்திசுரத்விஷேநம
ருசார்ச்சிதைகசுலபாயநம
ஓஜஸ்பானாயநம
ஈசான்யவராயநம
ருணத்ரயவிமோசகாயநம
ஏகபாக்ருதாமநாயநம
ஓங்காராயநம
ஐஸ்வர்யநிதயேநம
லுப்தவிக்னசுபக்தாயநம
ஔதார்யநிதயேநம
ஔதத்யதைர்யாயநம
ஐஸ்வர்யாயநம
லூதாவிஸ்போடநாசனாயநம
ஔன்னத்யநிஷபதயேநம
ஒங்காரவாச்யாயநம
ஐயிகாமுஷ்மிகப்ரியாயநம
அங்குசாயநம
அங்குசாசுரநாசகாயநம
லுப்தஸ்ரீலுப்தாயநம
ஐராவதசமோனமேஷாயநம
ஐராவதநிபானனாயநம
ஏகாரபீடமத்யாயநம
எசிதாகிலதைத்யஸ்ரீயேநம
ஏசிதாகில்சம்ஸ்திதாயநம
அங்குசாசுரஸம்ஸ்திதாயநம
ஸ்ஸமஸ்தவிஸற் கபுத்பரிகிர்
தாயநம
சர்மகர்த்தாயநம
கமண்டலுதராயநம
கல்பாயநமஃ

ஓம் கபர்த்தினேநம:
கலாபானனாயநம
காருண்யதேஹாயநம
கர்மசாக்ஷியேநம
கபிலாயநம
கதகாயநம
கூஷ்மாண்டகணநாயகாயநம
கஷ்டச்ருத்ப்ரீதாயநம
கர்மாகர்மபலப்ரதாயநம
கட்வாங்காயநம
கல்வாடஸ்ருங்கநிலயாயநம
கண்டப்ரியாயநம
கர்வாயநம
கதாஹஸ்தாயநம
கவிர்மலாயநம
கருணாலியாயநம
கதம்பகோலகுலதாயநம
கட்கினேயநம
கலாநிதயேநம
கச்யபத்யாயநம
சுதார்ணவாயநம
குருகம்பாயநம
தனுஷ்டிபாயநம
கீர்வாணபூர்வகாயநம
தேப்யாயநம
கீதாயநம
கத்யாயநம
குஹ்யாகமநிருபிதாயநம
கண்டாயநம
கஹனாந்தாயநம
குரோர்குருவேநம
குடாசயாயநம
கர்ஜனேநம
குஹ்யசாரதாயநம
குடாப்திஸ்தாயநம
கடகும்பாயநம
ககாராகாரண்டப்ருதேயநம:

ஓம் கர்கரிகாமாலினேநம:
ஙகாராயநம
கடோதராயநம
காநநாதப்ரியாயநம
ஙகாரவாச்யாயநம
சண்டாயநம
சந்தோதல்லியட்சியாயநம
சந்த்ராயநம
ஜலத்கண்டோல்லாசத் தாரிணே
நம
ஜகதீசாயநம
சண்டேஸ்வராயநம
சரவணாலலாயநம
சந்தோமயாயநம
சாரசாரவித்ரேநம
சிந்தாமணயேநம
ஜகத்யோனயேநம
சண்டசண்டாயநம
சந்த்ரவிக்ரஹாயநம
ஜகத்சாட்சிணேநம
ஜங்காரிப்ரமகுலாயநம
ஜனப்ரபவேநம
சண்டேசவிக்ரமாயநம
சிம்மாசித்தயேநம
ஜகன்மயாயநம
ஜேப்யாயநம
ஜேப்பாணுயநம
ஜபாயநம
டங்காரவாச்யாயநம
டுண்டிவிநாயகாயநம
ஞகாரவாச்யாயநம
வாணிசகாயநம
டங்காராயநம
வீணாகானப்ரமோதாயநம
டிண்டிமுண்டாயநம
டக்காநிநாதமுதிதாயநம
டங்காரகுலதாபுரபாயநம:

ஓம் டைகாயநம:
டாமராயநம
டாகினீசாயநம
டம்பாயநம
டங்காரபல்லவகத்தஸ்திதஸர்வமந்
த்ரசுசித்திதாயநம
டிண்டிமப்ரியாயநம
தாரகாந்தரஸம்ஸ்தானாயநம
தண்டப்ரதேயநம
தத்வாணும்ப்ரக்ரதயேநம
தத்வாயநம
ஸ்தாணவேநம
தாரகாந்தாயநம
ஸ்தாணுப்ரியாயநம
தாத்ரேநம
தக்ஷயக்ஞப்ரசமனாயநம
தனப்ரதவேநம
தாரகாயநம
தானந்தமோதயாயநம
தயாவரதேநம
தைத்யவாரணதாரணாயநம
திவ்யவிபவாயநம
ஸ்தாவரஜங்கமாயநம
தண்டதாயகாயநம
தனதாயநம
தந்தம்ரபின்னேபமுந்ராயநம
தான்யபதயேநம
த்யானினேநம
தத்வபதநிரூபிதாயநம
தாதாயநம
தம்ஷ்ட்ராலக்னத்விபகடாயநம
த்யாயாயநம
த்யானபராயணாயநம
தரணீந்த்ராயநம
நாதப்ரியாயநம
த்யாதிப்ரம்ஹாண்டமேகலாயநம
நந்தாயநம:

ஓம் நாதாயநம:
த்யானகாலஸ்வரூபாயநம
நிர்மலாயநம
நிஷ்களாயநம
தேவாரிதஞ்சாயநம
நாதமத்யப்ரதிஷ்டாயநம
த்யானைகப்ரகடாயநம
நித்யாநித்யாயநம
த்யானப்ருதேநம
நிராமயாயநம
தமசித்யாயநம
பரமவ்யோமனேநம
பத்மப்ரஸன்னவதனாயநம
பராநந்தாயநம
ப்ரமாணப்ரத்யாநிதாயநம
ப்ரமாத்மனேநம
ப்ரணதாக்ஞானநாசனாயநம
பராபராயநம
ப்ரணதார்த்திநிவாரணாயநம
ப்ரம்ஹணேநம
பரமபதாயநம
புராணபுருஷோத்தமாயநம
பக்காயநம
பசுபாசவிமோசனாயநம
பணிபதிகுண்டலினேநம
பரந்தாமனேநம
பசுபதயேநம
பூர்ணானந்தாயநம
பராஜிதநக்ஷிபுக்ஷினாயநம
பணிப்ரியாயநம
ப்ரம்ஹார்ச்சிதபதாயநம
பணிஹஸ்தாயநம
அவ்யாயநம
பீதாயநம
பாலகேளிகுதூஹலினேநம:
பாவகாயநம
ப்ரம்ஹபராயநம:

ஓம் புருஷஜபமத்தலட்மீகாயநமஃ
ப்ரம்ஹவித்ப்ரியாயநம
பகவத்பக்திஸுலபாயநம
ப்ரம்ஹண்யாயநம
பூதாலயநம
போகதாதாயநம
ப்ரகஸ்பதயேநம
பூதிவர்த்தனாயநம
பத்ராயநமஃ
ப்ரம்ஹசாரிணேநமஃ
ப்ரூமத்யகோசராயநம
ப்ரஹத்தனாயநம
பூதிதாயநம
போதமூர்த்தயேநம
மஹாபலாயநம
யக்ஞாயநம
யக்ஞபதயேநம
யக்ஞகோவத்லயேநம
மந்த்ராயநம
மேகலாதீஸ்வராயநம
யாஜகாயநம
மகாவீர்யாயநம
மதிரெட்சனாயநம
மந்தகதிமாயநம
மதமத்தாயநம
யக்ஞபலப்ரதாயநம
யஸஸ்கராயநம
மகாப்ராணாயநம
யோககெம்யாயநம
நிரஜாயநம
மந்த்ரபதயேநம
யாஜகப்ரியாயநம
ரஸப்ரியாயநம
மகானாயநம
ராவணார்ச்சிதாயநம
ரஞ்சகாயநம
மந்த்ரிணேநம

ஓம் மதோன்மதாயநமஃ
ராஜ்யசுகப்ரதாயநம
லக்ணஸம்பூரிதாயநம
வரேண்யாயநம
வந்த்யாயநம
ராஜ்யரட்சாகராயநம
ரத்னகர்ப்பாயநம
லட்சிணேநம
ரம்யாயநமஃ
வன்னிவதநாயநமஃ
வஜ்ரிணேநம
லட்மெப்ரியாயநம
வேதாந்தகோசராயநம
லட்மீபதயேநம
விஸ்வதோமுகாயநம
விஸ்வசட்சுஷேநம
லாபக்ருஷ்ணபவிஸ்ருதாயநம
விபவேநம
விதாத்ரேநம
லட்சயாயநம
லாஸ்யப்ரியாயநம
வஜ்ரநேத்ரேநம
லட்சஸ்தாயநம
வாஸ்யபராயநம
வாமதேவாயநம
சத்திகணேஸ்வராயநம
வஜ்ரநிவாரணாயநம
ஸம்ஸாரவைத்யாயநம
விகர்த்தாயநம
விஸ்வேஸ்வராயநம
ஸத்யஸங்கல்பாயநம
வஹ்நிரீதமகாகும்பாயநம
சம்புசத்திகணேஸ்வராயநம
விஸ்வாதாராயநம
சுபிணேநம
அஸ்திருலதிசாயநம
விவஸ்வதாரகாயநம

ஓம் அவனாயநமஃ
ஸதஸத்வியக்திகாரணாயநம
அஸ்த்துதாயநம
ஷடாதாராயநம
ஸ்வஸம்வேத்யாயநம
அம்லாயநம
அநப்ரியாயநம
அவ்யகவ்யபுத்ராயநம
அவ்யாயநம
ஸர்வ்பேக்ஷாபேக்ஷஜாயநம
ஸ்வதந்த்ராயநம,
ஷஷ்டி ருதுகுசமஸ்ராவிணே ந
சுலட்சணாயநம
ஸர்வக்ஞாயநம
ஸ்ருஷ்டிஸ்திதிலயக்ரீடாயநம
ஷடாட்சராயநம
இர்லோகமந்த்ரமத்யாயநம
ஸர்வஸக்திப்ருதேநம
சரபஞ்சனபேதனாயநம
சமப்ராகாயநம
க்ஷமர்பாபாயணாயநம
ஸர்வாஹஸ்யகராயநம
க்ஷேத்ரபர்த்ரேநம
ஸமுத்ரமதநாயநம
க்ஷிப்ரக்ஷேமகராயநம
புத்திமுக்திபலப்ரதாயநம
க்ஷேத்ராதிபாயநம
புட்பகவிமானி மதத்வம்சிணே நம
விபவதனாயநம
புத்ரபௌத்ரதராயநம
ஸ்ரீசோஹாரிணேநம
க்ஷோணிஸரத்ருமாயநம
துக்கிணேநம
ஸௌபாக்யவர்த்தனாயநம
க்ஷேமானந்தாயநம
அபிரூப்யகராயநம
ஸாமமானதாயநமஃ

ஓம் ஸ்ரீப்ரதாயநமஃ
ஹரிஷாயநம
வித்யாப்ரதாயநம
தர்மப்ரதாயநம
வீரவீராயநம
விஜயப்ரதாயநம
கர்ப்பதோஷகாயநம
பந்தமோட்சாயநம
தௌர்ப்பாக்யநாசனாயநம
பாபசாரசமனாயநம
சகிணேநம
ரவயேநம
கவயேநம
சிவாயநம
புதாயநம
பௌமாயநம
மந்தாயநம
ராகவேநம
துஷ்டசித்தப்ரசாதனாயநம
முக்யாயநம
மந்த்ர தந்த்ரப்ரதிவாதிமுகஸ்தம்
பாயநம
வர்ஷாயநம
மகாலயாயநம
கல்பாயநம
யுகாயநம
அயனாயநம
மாஸாயநம
சந்த்யாயநம
திவாயநம
நக்தாயநம
அகர்நிதாயநம
பட்சாயநம
ராஸியேநம
தாராயநம
வாராயநம
திதியேநமஃ

ஓம் யோகாயநமஃ
கரணாயநம
லக்னாயநம
ஹோராயநம
அம்சகாயநம
பாதாயநம
முகூர்த்தாயநம
களாயநம
காஷ்டாயநம
தத்பராட்சணாயநம
களஸ்ருதயேநம
நிமேஷாயநம
மேரவேநம
த்ருவாயநம
சப்தருஷியேநம
காலச்சக்ராயநம
விஸ்வஸ்தாவரஜங்கமாயநம
ஸ்ருஷ்டயேநம
ஸ்திதயேநம
சங்காரயேநம
புவேநம
அக்னியேநம
ம்ருதேநம
வியோமனேநம
காலாயநம
அஹங்க்ருதயேநம
ப்ரக்ருதயேநம
பும்ஸேநம
ப்ரம்மணேநம
விஷ்ணவேநம
ருத்ராயநம
சிவாயநம
ஈசாயநம
சக்தயேநம
நாதவேநம
விந்தவேநம
சதாசிவாயநமஃ

ஓம் த்ரிதசாயநமஃ
பித்ராயநம
இத்தேப்யோநம
யட்சாயநம
ரட்சஸேநம
கின்னராயநம
ஸாத்யாயநம
வித்யாதராயநம
பூதாயநம
மனுஷ்யாயநம
பசுப்யோநம
ககாயநம
ஸமுத்ராயநம
சைலாயநம
ஸரித்ப்யோநம
பவோத்பவாயநம
பூதபவ்யாயநம
பாதஞ்சலாயநம
சாங்க்யாயநம
யோகாயநம
புராணாயநம
ஸ்ருதயேநம
ஸ்மிர்தயேநம
வேதாங்கேப்யோநம
ஸதாசாராயநம
மீமாம்ஸாயநம
ந்யாயவிஸ்தாராயநம
ஆயுர்வேதாயநம
தனுர்வேதாயநம
கந்தர்வாயநம
காவ்யாயநம
நாடகாயநம
வைகானஸாயநம
பாகவதாயநம
மானுஷாயநம
பாஞ்சராத்ராயநம
ஆருகதாயநமஃ

ஓம் சைனாயநமஃ
பாலவைரவாயநம
காளாமுகாயநம
சாக்தாயநம
சௌராயநம
சைவாயநம
பாசுபதாயநம
பௌத்தாயநம
வைநாயகாயநம
ஸதஸத்வ்யக்தாயநம
அவ்யக்தாயநம
ஸசேதனாயநம
அசேதனாயநம
பந்தாயநம
மோட்சாயநம
போகாயநம
யோகாயநம
சத்யாயநம
அணவேநம
மஹதேநம
ஸ்வஸ்தயேநம
உம்படுவேநம
ஸ்வதாயநம
ஸ்வாகாயநம
சௌஷ்டேநம
வஷ்டேநம
வவ்ஷ்டேநம
நமோநம
க்ஞானாயநம
விக்ஞானாயநம
ஏகாயநம
போதனுபோதனாயநம
ஆனந்தாயநம
ஏகாட்சரமந்த்ராதாராயநம
ஏகவீராயநம
ஏகாட்சரபராயணாயநம
ஏககர்த்தயேநமஃ

ஓம் ஏகானேகஸ்வருபத்ருதேநமஃ
த்விருபாயநம
த்விமுகேஷாபகாயநம
த்விரதாயநம
த்விவரட்சகாயநம
த்வைமாதுராயநம
த்விவதனாயநம
த்வயாதிகாயநம
த்வந்தவஹீனாயநம
த்ரிதாமாக்த்ரிகாயநம
த்ரிகுணாத்மனேநம
த்ரிலோகாதிசக்த்ராயநம
த்ரீதாயநம
த்ரிலோசனாயநம
த்ரிவர்க்கபலதாயகாயநம
சதுர்விதவசோவ்ருத்தி பரிவ்ருத்தி
ப்ரவத்தகாயநம
சதுராத்மனேநம
சதுர்ப்பாகவேநம
சதுர்த்தந்தாயநம
சதுர்வர்ணமயோபாயநம
சதுர்த்திஸம்பவாயநம
சதுர்வர்ணாஸ்ரமாஸ்ராயநம
சதுர்முகாயநம
சதுர்த்திபூஜனப்ரீத்யாயநம
சதுர்ப்பாதவிருபாயநம
சதுர்வித்யவியமோட்சவரப்ரதா
காயநம
பஞ்சகராயநம
பஞ்சாட்சராத்மாயநம
பஞ்சதாலாயநம
பஞ்சவர்ணாயநம
பஞ்சப்ராணகமாத்ராயநம
பஞ்சபாணாயநம
பஞ்சபாணநிவாரிதாயநம
பஞ்சக்ருத்யாயநம
பஞ்சாட்சரபராயணாயநமஃ

ஓம் பஞ்சசிவாத்மகாயநம:
பஞ்சபத்மமயஸ்பூர்த்தயேநம
பஞ்சபட்சப்ரியாயநம
பஞ்சாஸ்யாயநம
பஞ்சாதாராயநம
ஷடாங்கத்வாந்தவித்வம்ஸினேநம
ஷடங்குலிமகாஇர்தயாயநம
ஷட்கோணபீடாயநம
ஷட்குணாயநம
ஷட்வைரிவர்க்கவித்வம்ஸினேநம
ஷட்கர்மிணேநம
ஷட்சக்ரப்ரிவாரிதாயநம
ஷட்க்ரத்திபேதகாயகாயநம
ஷண்முகப்ராதாயநம
ஷடூர்மிபயநாசனாயநம
ஷட்கர்மநிரதாயநம
ஷட்ராஸ்ரயாயநம
ஷட்சக்ரதாமனேநம
ஸத்குணாயநம
ஷண்முகாயநம
ஸப்தபாதாளசரணாயநம
ஸப்தத்வீபோருமண்டலாயநம
ஸப்தரிஷிகணவந்திதாயநம
ஸப்தஹோதவேநம
ஸப்தசக்திவராப்ரதாயநம
ஸப்தசராஸ்ரயாயநம
ஸப்தாப்திகேளிகாஸாராயநம
ஸப்தகிரியாயநம
ஸப்தசந்தோநிதயேநம
ஸப்தஸ்வர்லோகமகுடாயநம
ஸப்தசந்தாமோகவாயநம
ஸப்தசுராயநம
ஸப்தமாத்ருநிஷேவிதாயநம
ஸப்தமாத்ருசக்ரோமுகப்ரபவேந
ஸப்தாங்காராஜ்யசுகதாயநம
அஷ்டைஸ்வர்யவிவர்த்திதாயநம
அஷ்டசாதிஸமானபூதயேநம:

ஓம் அஷ்டாங்கயோகபலப்ரதேநம:
அஷ்டமூர்த்திதேயமூர்த்தயேந
அஷ்டபத்ராம்புஜாஸ்ரயாயநம
அஷ்டப்ரகிர்திகாரணாயநம
நாராயணஸ்துதியாயநம
நவார்தமகாகாதாயநம
நவநாதஸமாத்யாயிநேநம
நவநாதவிபூதிதாயநம
நவரத்னவிசித்ராங்காயநம
நவத்வாரநிஷேவிதாயநம
நவசக்திசிவோத்ருதாயநம
நவத்வாரபுராவர்த்தாயநம
நவநித்யானுவாசிதாயநம
நவதுர்க்காநிஷேவிதாயநம
தசாஸ்யாத்யேபவிக்ரகாயநம
தசப்ராணாயநம
தசாட்சரமகாமந்த்ராயநம
தசாத்மகாயநம
தசாஸ்யாயநம
தசதிக்பதிவந்திதாயநம
தசபுஜாயநம
தசேந்த்ரயநியாமகாயநம
ஏகாதசாதிபிருத்ரோஸ்துதேநம
ஏகாதசாட்சராயநம [டாயநம
த்வாதசோர்த்தண்ட தோர்த்தண்
த்வாதசாந்தநிகேதனாயநம
த்வாதசாதித்யதேஜஸாயநம
த்வாதசத்வாதசஷ்டாதி தோர்த்
தண்டாஸ்த்ரநிகேதனாயநம
த்ரயோதசாபிதா பினாகுவிஸ்வ
தைவாதிதைவதாயநம
சதுர்த்தசேந்திரவரதாயநம
சதுர்த்தசசகத்பதேநம
சதுர்த்தசஜகதன்யேநம
சதுர்த்தசமனுத்துத்யாயநம
சதுர்த்தசேந்த்ராயநம
சதுர்த்தசாகடிம்வ்யாப்யாயநம:

ஓம் ஸாமபஞ்சதசேபஞ்சதச்சேவதவழுளும்
சுதிர்மலாயநம:
ஷோடசெந்துகளாத்மகாயநம
ஷோடசெந்துகளாவாசாயநம
ஷோடசாதாரநிலயாயநம
ஷோடசஸ்வரமாத்ருகாயநம
ஸாசப்த சிஸப்த தசிசஸப்த தசா
க்ஷராயநம
அஷ்டாதசௌஷதீஸ்ருஷ்டயேந
அஷ்டாதசாதிபதயேநம
அஷ்டாதசபுராணக்ருதயே
அஷ்டாதசவிஜாதிக்ருதேநம
அஷ்டாதசலிபிக்ருதேநம
அஷ்டாதசவிதஸ்மிர்தவேநம
ஏகவிம்ஸத்புமேஸநம
ஏகவிம்ஸத்யங்குளிபல்லவாயநம
சதுர்விம்சதிதத்வாத்மனேநம
பஞ்சவிம்சாக்யபுருஷாயநம
ஸப்தவிம்சதியோகாயநம
ஸப்தவிம்ஸதிதாரேயாயநம
த்வாத்ரிம்ஸத்பைரவாதீசாயநம
சதுர்த்ரிம்சன்மகாஹிர்தேநம
சதுர்த்ரிம்ஸதத்வஸம்பூதயேநம
அஷ்டத்ரிம்சத்கலாதனவேநம
ஷண்வேகோன்பஞ்சாசன் மருத்வற்
கநிற்களாயநம
பஞ்சாதசக்ரஸ்சேணி பஞ்சயநம
சதுருத்ர வந்தித சச்சிதானந்தாய
பஞ்சாசத்விஷ்ணுசத்திசாயநம
பஞ்சாசன்மாத்ருகாலயாயநம
த்விபஞ்சாசதுத்தவிபஸ்ரேணித்ரி
ஸத்யாட்சரஸம்ஸ்ரயாயநம
சதுஷ்ஷஷ்டி மஹாசித்த யோகி
னிப்ருந்தவந்திதாயநம
சதுஷ்ஷஷ்டி யருந்ததிருக சது
ஷ்ஷஷ்டி கலாநிதிப் பிரபுவே
அஷ்டஷஷ்டிமஹாதீர்த்தகேநம

சதத்ருதிபவயேநம:
சத்தாரவராயுதாயநம
சதபத்ராயதேட்சணாயநம
சதானீகாயநம
சதமகாயநம
ஸஹஸ்த்ரபத்ரநிலயாயநம
ஸஹஸ்த்ரபணிபூஷணாயநம
ஸஹஸ்த்ரபாதயேநம
ஸஹஸ்த்ராட்சாயநம
ஸஹஸ்த்ரகமசம்ஸ்துத்யநம
ஸஹஸ்த்ராட்ச புருகூத மலாயக
னேநம
தசசஸ்த்ர பணிப்ருத் பணிராஜக்
ருதாசனப்ரியவரசனாயநம
அஷ்டாசீதி சஹஸ்த்ரஹாரிஷியே
கம
கனைர்தோத்ரபாதாயநம
லட்சாதாரப்ரியாயநம
லட்சாதாரமனோமயாயநம
சதுர்லட்சஜபப்ரீதாயநம
சதுர்லட்சப்ரகாசாயநம
சதுர சிஇலட்சாணாம் சீவானும்
தேஹசம்ஸ்திதாயநம
கோடிசூர்யப்ரதிகாசாயநம
கோடிசந்த்ராம்சுநிர்மலாயநம
சிவாத்பவாத்யஷ்டகோடிவைநா
யகதாரந்தரமஹாதேவாயநம
சப்தகோடிமஹாமந்த்ர மந்த்ரித
வயவத்ருதிமனதிதாயநம
த்ரியஸ்த்ரிம்சத்கோடிஸுரஸ்ரேணி
பிரண தபதாம்புஜ வாஸ்ரேஷ்
தாயநம
அனந்தசக்திசிவத்பாதாயநம
அனந்ததேவதாசேவ்யாயநம
அனந்தஸ்ரீயனந்தாயநம
அனந்தமுனிசம்ஸ்திதாயநம
அனந்தசம்ஸ்துதாயநம

ஓம் அனந்தகாமார்த்தகாயநம
அனந்தலோக்யாயநம
அனந்தவானந்தபாராயநம
சதுர்வேதமந்த்ராத்மனேநம

ஓம் ஷண்வைத்யதிப்ரபவேநம
சதாநந்தாயநம
அனந்தவானந்தபாராயநம
அனந்தவானந்தசுகாயநம

சகஸ்திர நாமார்ச்சனை முற்றிற்று.

தியானப்ரயோசனம்.

மகா சைவ தவ விரதிகளாகிய முனிவர்களே! யாம் கூறிய விநாயக திரு நாம விலக்கத்தைக் கேட்டீர்களல்லவா, இந்தஆயிரத்து இருபத்துநான்கு திரு நாமங்களைபாவரேனும் ஆசாரமேற நியமத்தோடு விடியற்காலையில் துதிசெய் வார்களாயின், அவர்கள் இம்மை, மறுமைப்பயன்களை அக்கைநெல்லிக்கனிபோல வடைவார்கள். அன்றியும் ஆயுள், ஆரோக்கியம், ஐசுவரியம், தைரியம், சௌரியம், கீர்த்தி, மேன்மை, தெளிவு, காந்தி, சௌபாக்கியம், தாட்சணியம், தயை, பொறுமை, சத்தி, நீதி, பிரமதேயசு, உதாரம், காம்பீரியம், குலம், சீலம், சபாபாண்டித்யம், சபாபூசிதம், ஸ்தவுத்தியம், வீரியம், ஞானம், விஞ்ஞானம் முதலானவைகளோடு, தருமமுதலிய நான்கு புருஷார்த்தங்களையும் அத்தினமே அடைவார்கள், இராஜர், அவர்பத்தினியர், அவர்புதல்வர், அவர்மந்திரியர் முதலாயினோர் வசியமாவர். இடாகினி, சாகினி, பூதம், வேதாளமுதலிய துட்டகிரகங்களெல்லாந் தொலையும். பகை, நிக்கிரகம், கலகம், துர்க்கருமம், கொலையாதி பாதகம், இடர், வறுமை முதலிய யாவும் எரியில் வீழ்பஞ்சு போல மாய்ந்து போம். உலகாகருஷி, அட்டமாசித்தி, திரிகாலஞானம், வாய்மை, ஒழுக்கம், கொடை, கல்வி முதலானவைகள் எக்காலத்துங் கூடி நிற்கும். குட்டம், அதிகுசிகம், சுகந்தரம், பிரமேகம், க்ஷயம், குன்மம், விக்கல், அச்சரம், காசம், சுவாசம், அசனக்கடுப்பு, மகோதரம், சூலை, அவமிசர மூலம், பித்தம், கண்டமாலை, இட்சம், கபம், சோகை, அரோசிகம், வாத ஜன்னி, விஷம் முதலான எல்லா நோய்களும் நீங்கும்.

மேலும் சூத்திரர், பெண்டிர், பதிதர், இவர்கள் உச்சரிப்பார்களாயின் உடனே பரிசுத்தராகி, மிகுந்த சுகத்தைப் பெறுவார்கள்.

இஷ்டகாமியார்த்தத்தை வேண்டிய பேர்கள் உச்சரித்தால் இம்மையிற் சகல அரிட்டங்களும் நீங்கி, மறுமையில் சூரியலோக முதலான சகல லோகங்களினுடைய போக பாக்கியங்களை அநுபவித்து, மேலான சிவலோகத்தை யடைந்து நந்தி சேச்சுரர் முதலான கணத் தலைவர்கள் ஆச்சரியங் கொள்ளும்

படி சிவபிரானும், உமாதேவியாரும் தம்மைத் தமது புத்திரரைப் போலப் பாதுகாக்க நெடுநாள் அவ்விடத்திற்றானே வாழ்ந்திருந்து பின்னர் விநாயக மூர்த்தியினுடைய பெருங்கருணையால், மீட்டும் பூவுலகத்தில் வந்து, சகல போகபாக்கியங்களையுங் குறைவின்றி யநுபவித்து, அளவற்ற திருப்பணிகளைச் செய்து, ஞானசூரியராகி, சிவத்தில் அயிக்யமாவார்கள்.

கருமபோகத்தை வெறுத்தவர்க ளுச்சரித்தால்: பாசபந்தங்களி னின்றும் நீங்கிப் பரமானந்தசாகரத்தில் மூழ்குவார்கள்.

விநாயக மூர்த்தியினுடைய சதுர்த்தசி தினத்திலே அவரைப் பூசனை செய்து உச்சரித்தால் மேற்கூறிய மேலான பயன்களில் நூறுமடங்கு அதிகமான பயன்களைப் பெறுவார்கள். அன்றியும், அவற்றைத் தாமே உச்சரித்தல், ஒருவரை உச்சரிப்பித்தல், கேட்டல், கேட்பித்தல், எழுதல், எழுது வித்தல், அருச்சித்தல், அருச்சிப் பித்தல், செபித்தல், செபிப்பித்தல் முதலிய இவைகளில் ஒன்றினைச் செய்தாலும் இவைகளைச் செய்கின்ற பேர்களை அவ் வுச்சரித்தன் முதலியவைகளாற் பாராட்டினாலும். மேற்கூறிய மேலான பயனை எளிதிலடைவார்கள்.

தினந்தோறும் மூன்றுகாலங்களினு முச்சரிக்கமாட்டாதவர்கள், ஒருக்காலேனும் உச்சரித்தல் வேண்டும். அவ்வாறு நித்தம் ஒருக்காலேனும் உச்சரிக்க, மாட்டாதவர்கள், சதுர்த்தி திதிதோறுமாயினும், உச்சரித்தல்வேண்டும். அதற்குஞ் சக்தியில்லாதவன் பிறனொருவனுக்குப் பொருள்கொடுத்தேனும் உச்சரிப்பித்தல் வேண்டும். பொருளு மில்லாதவனாயின், அவனுக்கு அச் சகத்திரநாமங்களினும் மேலானதாய் இருபத்தொரு திருநாமங்க ளுண்டு. அவைகள்.

கணபதியே ரம்பன்மோ கன்றரணி தரனே
கலாதரனே கசியபம் தன்விநா யகன்மா
கணபதிக்ஷிப் பிரப்பிரசா தனஞசா பூர
கன்வரதன் செயனமுத மந்திரனே யிலக்க
கணபதியே வாச்சிகதன் பீஜவிநா யகன்மங்
கலவிநா யகனுடெண்டி விநாயகனே பிரிய
கணபதியே சித்திவிநா யகன்சிந்தா மணியே
காமர்மகோற் கடனென்னக் கரைந்தவிவை யவையாம்.

கணபதி, ஏரம்பன், மோகன், தரணிதரன், கலாதரன், கசியபந்தன் மஹாகணபதி, க்ஷிப்பிரப்பிரசாதனன், ஆசாரபூரகன், வரதன், ஜயன், அமுத மந்திரன், இலக்ககணபதி, வாச்சிகதன், பீஜவிநாயகன், மங்கலவிநாயகன், உடெண்டிவிநாயகன், பிரியகணபதி, சித்திவிநாயகன், சிந்தாமணி விநாயகன், மஹோற்கடன் என்னு மிவைகளாகும்.

இவைகளையேனும், முன்னர்தேவர்முதலியோரால் வெவ்வேறெடுத்து கூறப்பட் டிருக்கின்ற பன்னிரண்டு மகாமந்திரங்களையேனும், உச்சரித்தல்

வேண்டும். இவற்றுளொன்றைத் தினந்தோறும் உச்சரித்தோர்களுக்குச் சகத்திராமங்களை யுச்சரித்த பயன்களுண்டாகும். அவ் விரண்டையும் அவ்வாறு உச்சரித்தோர்களுக்கு, அப் பயன்கள் எண்மடங்கு அதிகமாகிவளரும். பிணி முதலிய வேறுக்களால் அவ்வாறு உச்சரிக்க மாட்டாதவர்கள் அம் முப்பத்து மூன்று மந்திரங்களில் ஒரு மந்திரத்தையேனும் உச்சரித்தல் வேண்டும். விரத நியமத்தோடு மேற்கூறிய சகத்திரநாமங்களை விநாயக சதுர்த்தியிற் றொடங்கி நான்குமாதவரையில் உச்சரித்தோர்களுக்குச்சென்ற சனனங்கள் இருபத்தொன்றினும், இந்த சனனத்தினும், மேல்வருஞ் சனனத்தினும் தாங்கள் பற்றற்குரிய எல்லாப் பாவங்களையும் விநாயகமூர்த்தி விலக்கி, நினைத்த நன்மைகளனைத்தையும் நினைத்தவண்ணம் அளித்து, மறுமையிற் சிவலோகத்தில் கணத்தலைமை பூண்டிருக்கத்தக்க பதவியைக் கொடுத்தருளுவர்.

என்று முன்னம் பிரமதேவன் வேதவல்லி படர்தற்கோர் கொழுகொம்பினையொத்த மகா மகத்வமிக்க வியாசபகவானுக்குக் கூறினர். ஆதலால் பெருந்தவப்பேற்று லிலாண்ட காரணர்த்தராயுள்ள எமதுதயாவிக்ரமராகிய விநாயகப் பெருமானது திவ்ய சரித்ராமுர்தத்தைச் செவிவாய்த்தேக்கிச் சிவசாயுச்யார்த்தராகியுள்ள ஓ சோமகாந்தமகாராசனே! சித்தபூர்வகமாகச் சிந்திக்கக் கடவை. என பிருகுமகாமுனிவர் திருவாய்மலர்ந்து ஸ்ரீ பார்க்கவபுராண பிரதமகாண்டத்தைப் பூர்த்திசெய்து ஆசிகூறி யிருந்தனர்.

சயம். சயம். சயம்.

சகத்திரநாமப்படலம் முற்றிற்று.

அருளிறைவணக்கம்.

தேவர்தொழுதெழுங்கருணைச் செல்வனேபோற்றி
சிறந்தொளிருமக்கள சொருபனேபோற்றி
யோவறுசித்திகளனைத்து முதவுவோய்போற்றி
யொலிகெழுமின்னிணியாத சாலநுபுரங்கள்
மேவியொளிர்சரணனே போற்றிமததாரை
விரவியநின்கபோலனேபோற்றிநினதருளின்
பாவமொடு பலபிணியும் பம்புவறுமைகளும்
பலவானவிடர்களையும்பாற்றுகவின்புறவே.

முதலாவது

உபாசனாகாண்டம்

முற்றிற்று.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

பார்க்கவ புராண மென்னும்

விநாயகபுராண வசனம்.

இரண்டாவது

இலீலாகாண்டம்.

காப்பு.

பூத்தமலர்த் தவிசிறைவின் டரனமர ரிலமாதி
புகலறிதா யாற்றமறை யனந்த மின்னு
மேத்தவள ரமலமடைந் தாரையுனு மருட்கடலே
பிறம்பார்பூத் தபூதமா யனைத்தா யோங்கி
நாத்திகமா யருளாலே மடமைகொளக் கசமுகமு
நால்வாயு மதிநதியு முடித்தி மன்னோர்க்
காத்தழைத்த கடவுளிரும் பூப்பதமெ னுப்போது
கதித்துநலங் கைத்தருமா றிசைத்து மன்றே.

வேத ஆகமாந்தமாக விளங்கும் உத்தம வைதிக சைவம்போ லென்றும் நிலைபெற்றுத் தழைத்து, செந்தமிழெனப் பரந்து, சிவனடியார் உள்ளம்போல் காய்த்துப் பூத்து ஆனந்த மயமாய், ஸ்ரீ பஞ்சாக்ஷரம்போல் வேண்டுவோர் வேண்டியவண்ணம் விருப்பகல்கி, பிரணவ சொருபம்போல் பேரின்பபோகத்தைக் கொடுப்பனவாகிய நைமிசாரண்ணியத்தில் சௌனக மகா முனிவராற் செய்துவரும் யாகம் இன்னும் முடிவுபெறுமையால், சௌனகாதி முனிவர்களெல்லாம், மகா தவசிரேஷ்டராகிய சூத மகாபுராணிகரை நோக்கி, ஐயனே! கவலைக் கடலுக்கோர் கட்டுமரம்போலும், வறிஞனுக்குற்ற பொற்குவியலைப் போலும் எங்கள் முன்னை தவத்தாற் கிடைத்த கிருபா நிதியே! தேவரீரது திருவாக்காகிய அமுத முண்ட விசேடத்தால் சாதுசங்கம், சாத்திரமுதிர்ச்சி, முதலிய சிவஞானசித்திகளை யெல்லாம் எளிதிற் பெற்றனம். அன்னம் இது காறும் விநாயகப் பிரபாவத்தைக் கூறிவந்தீர்களன்றே அம்மான்மிய மின்னுமுண்டாயின் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று பிரார்த்திக்கச் சூத மகாபுராணிகர் கூறுவதாயினர்,

முதலாவது

வக்கிரதுண்ட விநாயகர்

திருவவதாரப் படலம்.

இங்கணும் பனிநீர்க் கங்கையு மணிந்த
செஞ்சடை விநாயகப் பெருமான்
பொங்கருள் வழங்குங் காதைக ளின்னும்
புகலென வியாதனை யிரப்பக்
கொங்குமிழ்ந் தலர்ந்த முள்ளரைக் கமலக்
குடிபுகுங் குண்டிகைக் கரத்தோன்
தங்கிய விறைவன் றிருவிளையாட
றனைமுறை சாற்றுதல் வலித்தான்.

சைவ தவ நெறி தழைக்கத் தழைத்த ஓ சௌனகாதி மகா முனிசிரேஷ்டர்களே! நன்று வினவினீர்கள், யானுங் கிருதார்த்தனானேன். சித்தசாந்தமாகக் கேட்டுச் சிந்திப்பீர்களாக. எமது ஆசாரியராகிய ஸ்ரீ வேதவியாசர் பின்னும் மலர்மகள்வாழும் நாவினராகிய சதுர்முகக்கடவுளை வணங்கி ஒநான மூர்த்தியே! மதிமுடி முடித்த செவ்விய சடாமகுடத்தினை யுடைய எமது தயாபரனாகிய விநாயகக் கடவுள், அடியார் குறிப்பி னெறியே நடத்திய திருவிளையாட்டைக் கிருபைசெய்தீர் அதுபோல இன்னும் அவரது லீலாவைபவங்களை சொல்லியருளவேண்டு மென்று பிரார்த்திக்க, பிரமதேவன் சொல்லிவந்தனர். அதை யாம் தெரிந்தவண்ணம் உங்களுக்குக் கூறுகின்றோம். அதாவது:

மும்மதங்களைப் பொழிகின்ற யானைமுகத்தினையுடைய விநாயகக்கடவுள், யுகங்கடோறும் அடியார் அன்பின்வழியே கிருபைபுரிவான்கருதி வேறுவேறு திருவுருத்தாங்கி பிராதுர்ப்பாவ மெய்தி துஷ்டர்களாகிய மூவகை யான்மாக்களையும் இரட்சித்தருளிய திருவிளையாடல் அனந்தமாகும் அளவிடுதற்காகாது. ஆயினும் அகிலாண்டராஜேஸ்வரியாகிய சாக்ஷாத் உமையம்மையார் மணாளராகிய இறைவர், முன்னர் கூரிய வேலாயுதத்தினையுடைய சிவசண்முகக் கடவுளுக்குப் பன்னிரண்டு திருவிளையாடலைக் கூறியிருக்கின்றனர். அவைகளைமாத்திரம் முறையாக் சொல்லுகின்றேன். அவை வக்ரதுண்டர், சிந்தாமணி விநாயகர், கசானனர், விக்னராசர், மயூரேசர், பாலசந்திரர், தூமிரகேது, கணேசர், கணபதி, மகோற்கடர், துண்டிவிநாயகர், வல்லபைவிநாயகர் என்பனவாம் இவைகளின்றும் அனந்தமாக விரிவுபட்டுள்ளன. ஆயினும் இவையே முக்கியமாகும். இதனுள் வக்கிரதுண்ட விநாயகர் திருவவதாரமும், அவராற் செய்த வைபவங்களும் உபாசனா காண்டம் பிரதமத்தில் மூவர் வரம்பெறு படலத்திற் சொல்லியிருக்கின்றோம் இனிச் சிந்தாமணி விநாயகர் திருவிளையாடலைச் சொல்லுவோம் சித்த சாந்தமாகக் கேட்பீர்களாக.

இரண்டாவது

சிந்தாமணி விநாயகர்

திருவவதாரப் படலம்.

அக்கர வணிசடை யிறையன சவுனக முனிவீர்காள்
வக்கிர துண்ட ரருட்கதை சிறிதுரை வித்தாமே
மிக்கிறை பயமொழி தவநெறி கபிலற் கருள்வானோர்
தக்கவி வையிறை சிந்தாமணி பரனருள் கதைகேளீர்.

மகாஞான விரதர்களாகிய சவுனகாதி முனிவர்களே! முன்னொரு காலத்தில் தருமமுதலிய நால்வகைப் பொருள்களு நிறைந்த தமிழ்வள நாட்டில், உலகமெங்கணுந் தனதரசாட்சியைச் செலுத்திவந்த அபிசித்தென்னும் பெயரினையுடைய ஓரரசனிருந்தான். அவன் தனது மனைவியாகிய குணவதியென்பவளோடு அளவளாவி வாழ்வுற்றிருக்கின்ற நாளையில், தனக்கு நெடுநாள் புத்திரப்பேறில்லாமல் மனவருத்தங் கொண்டு, அரசாட்சியை அமைச்சர் வசம் ஒப்புவித்து, தனது மனைவியோடும் வனத்தை நோக்கிச் சென்றனன். அப்போது அவ்வனத்தில் ஓராசிரமந் தோற்றக்கண்டு, அதனுள்ளே நுழைந்து, உலகமுழுவதுஞ் செய்த மாதவங்க ளெல்லாம் ஓர் வடிவங்கொண் டிருந்தாற்போல, விபூதியும் * உருத்திராக்க மாலிகையு மணிந்து வெழுந்தருளி யிருக்கின்ற வைசம்பாயன முனிவரைக் கண்டு, அடியற்ற மரம்போல நிலத்தில் வீழ்ந்து, பணிந்து, மீட்டெழாம லிருந்தனன். அவ்வாறிருப்பவனை, அம்முனிவர் மிகுந்த கிருபையோடும் பார்த்தருளி, அரசனே! எழுந்திரு, நீயார்? நீ இவ்விடத்திற்கு வந்தகாரணம் யாதென்று வினவினர். அதற்கு அவ்வரசன் ஒன்றும் பேசாமலும் எழாமலு மிருந்தனன். அதனை அம்முனி † புங்கவர் கண்டு, தமது ஞான நோக்கத்தி னாலே அவ் வரசனுடைய கருத்தை யறிந்து, உனக்கு மகா பராக்கிரம சாலியாகிய புத்திரனுண்டாகக் கடவதென்று ஆசீர்வதித்தனர். அதனைக் கேட்டவுடன் தரித்திரனுக்கு தனங் கிடைத்தது போல, அரசன் பெருமகிழ்ச்சி கொண்டெழுந்து, இரு கரங்களையுங் கூப்பி, முனிபுங்கவருக் கெதிராக நின்று, சுவாமீ! அடியேன் கற்குந்தோறுங் கரும்பென ருசிக்கவல்ல தமிழ்வள நாட்டரசன்,எனது பெயரை அபிசித்தெனச் சொல்லுவது, யான் நெடுநாள் புத்திரப் பேறில்லாமையால் மனம் வருந்தி, தேவரீருடைய திவ்யசரணாரவிந்தங்களை யடைந்தேன், கடவுளர் வாக்கு பொய்த்தாலுங் கனவிலுந் தவத்தர் வாக்குப் பொய்க்காதாதலால், தேவரீர் அடியேனுக்குப் புத்திரனுண்டாகக் கடவதென்று ஆசீர்வதித்த

* உருத்திரன்-சிவன், அக்கம்-கண். உருத்திரரது விழியினின் றுண்டாயதாதலின் உருத்திராக்க மெனப் பெற்றன. (சிந்தாமணியாற்றிற் பாக்கக்காண்க.) † புங்கவர்-தேவர்.

படி அடியேற்குச் சித்திக்கு மார்க்கத்தினையும், அநுக்கிரகித் தருள வேண்டு
மென்று பிரார்த்தித்தனன். அதற்கு வைசம்பாயன முனிவர் மனதிரங்கிப்
பரம சிவத்தினுடைய பஞ்சாக்கரத்தை அவனுக் குபதேசித்து, அரசனே! சமு
த்திர நதி சங்கமத்திற்கு மேற்புரத்தில் ஒரு வனமுந் தடாகமுமிருக்கின்றன.
அங்கு நீ சென்று உனது பத்தினியைப் பணிசெய்யக் கட்டளையிட்டு. நானாங்கு
மாதம் வரையில் இம் மந்திரத்தைச் செபஞ்செய்து, முடிவில் அதற் கேற்ற
தருப்பண ஓமாதிகளை நிறை வேற்றி, யதாப்பிரகாரம் உனது ராச்சியத்திற்
குச் செல்லுவை யெனில் சிறிது காலைக்குள் பரமசிவ கடாக்ஷத்தினாலே
உனக்கு நல்ல புத்திரனுண்டாகுவனென்று திருவாய் மலர்ந்து அவனைத் தவத்
திற்குச் செல்லுமாறு விடை கொடுத்தனர்.

அவை யனைத்தையும் அரசன்செவிக் கமுதாகப் * பூரித்து, மீட்டுமவரைப்
பணிந் தெழுந்து விடை பெற்று, தனது மனைவியாகிய குணவதியுடனே வழிக்
கொண்டு முனிபுங்கவர் கூறி யருளிய வனத்தின்கணுள்ள தடாகக் கரையை
யடைந்தனன். அங்கு, அதற்கு முன்னமே சரஸ்வதி யேவல் செய்யப் பிரம
தேவன் தவத்தி லிருப்பதைக் கண்டு, அவர்களை யனந்த முறை பணிந்தெழு
ந்து மறுநாள் முதல் தனது பத்தினியைப் பணி செய்து வரக் கட்டளை யிட்
டுத் தவ நியமத்துடனே தாமொரு பக்கத்திலிருந்து, அரிய பஞ்சாக்கர மந்தி
ரத்தைச் செபஞ் செய்து வந்தனன். குணவதியும் சரஸ்வதியும் பணிசெய்யும்
வேளைபோக, மற்ற வேளையில் இருவரும் ஒன்றாகக் கூடிச் சென்று காய் கனி
முதலிய வருக்கங்களைச் சேகரித்து வந்து தங்கள் தங்கள் நாயகருக்குக் கொடு
த்து வந்தனர். இவ்வாறிருக்கும் காலையில், ஒருநாள் சரஸ்பதி காமலாகிரி
கொண்டு முறுவலரும்பவும், தனங்கள் விம்மவும், கூந்தல்சோரவும், மேகலை
நெகிழவுமாக ஞெரேலென்று தனது காதலன் மடியிற் சென்று இருந்தனள்
உடனே பிரமன் தவத்தினின்று நீங்கி, தனது புத்தியை யெல்லாம் மன்மத
சாக்கட் கிரையாக்கி, உடல் முழுவதும் மயிர்க்குச் செறியும்படியாகக் காமலா
கிரியைத் தலைக் கொண்டு, தனது மடித்தலத் திருப்பவள் இன்னளென்று
தெரிந்து கொள்ளாமல் மயங்கி, இவள் உரோகணியோ, இந்திராணியோ
இரதியோ மோகினியோ, இலக்குமியோ, திலோர்த்தமையோ, அரம்பையோ,
ஊர்வசியோ, அல்லது மகா விஷ்ணுவினுடைய மாய்கைதானோ வென்றை
யுற்று, அவளது முகத்தையும் ஏனைய அவயவங்களையும் நன்றாகப் பார்த்துப்
பின்னர் இவள் நமது காதலியேயென்று தெளிவுற்று, உடனே அவளது
செவ்விதழூறலைப் பருகுமாறு தனது நான்கு வாய்களும், யான் முன்னம்
யான் முன்ன மென்று ஆர்வமோ டெழுந்து சத்திக்கவும், அவளதுகொங்கை,
நுதல், கூந்தல், அல்குல், முதலிய தானங்களைத் தடவுமாறு தனது எழுகை
கள் எழாநிற்கவும், மற்றொரு கையால் அவளைத் தழுவுமாறு தனது அரையி
லுடுத்தி யிருக்கின்ற கலையை நெகிழ்த் தெறிந்தனன். அதனைச் சரஸ்வதிநோக்

* பூரித்தல்-உட்கொளல்.

கித் தவஞ் செய்வோரைக் கலைத்துக் கூடுவது மகா பாதக மென்று ஞெரே
லென்று அவன் மடியினின்றும் அப்பா லகன்று, முன்னர் தனது மனத்தின்க
ணுண்டான காம லாகிரியைத் தணித்துக் கொண்டு, சுவாமீ! அவசரப் பட
வேண்டாம், அரையில் வத்திர முடித்தி மானத்தைக் காத்தருள வேண்டு
மென்று சொல்லினள். அதற்குப் பிரமன், பெண்ணே! நீ கூறியபடி பின்ன
ருடுத்திக் கொள்ளுவேன், இப்போது எனதுயிர் நீங்குவதன் முன் எனக்குச்
சுகந்தர வேண்டு மென்று கேட்டனன். அதற்குச் சரஸ்வதி சொல்லுவாள்,
சுவாமீ! நாம் இங்கு வந்திருப்பது பழைய பாவ வசத்தினா லல்லாமல் வேறி
ல்லை. அப்பாவங்கள் தொலையுமாறு தவஞ் செய்வதை விட்டு இத் தன்மைத்தா
கிய அற்ப காரியத்துக் குடன் படுவீராயின், தேவரீருடைய கல்வியும், அறிவும்,
உறுதியும், என்னாகா நிற்கும்? நீர் செய்து வந்த தவந்தான் எவ்வாறு சித்திக்
கும்? அத்தவசித்தி வேண்டாமெனினும், அத் தவத்தினுட்பட்ட காலகாலரா
கிய சிவபெருமான் எவ்விதத்தினுஞ் சகித்துவிடுவர்? ஆதலால், தேவரீர்செய்து
வந்த தவமானது நிறைவேறும் வரையில் நீர் எனக்குத் தந்தையும், நானுமக்
குப் புத்திரியுமாகுமென் றிவ்வாறு சபதங்கூறி, அனந்த இனிய வார்த்தைகளி
னும் பலவாறு அவன் மனதைத் தேற்றினள். அப்படியும் பிரமன் மனந்தெரு
ளல் விடத்தலைக் கேறினவன்போலக் காமவிகாரந் தலைக்கொண்டு வலுவிற்
புணருமாறு அவளை வலிந்தனன். உடனே சரஸ்வதி அவனிடத்தி னின்றுந்
தப்பியோடி மற்றொரு பக்கத்திற் றேவர்களோடுங் கூடித் தவஞ் செய்திருக்
கின்ற இந்திரனிடத்திற் சென்று நின்றனள். பிரமனும் அவளைப் பின்றொடர்
ந்து சென்றனன்.

இவ் விருவரையும் இந்திரன் பார்த்து ஏதோ வோரதிசய மிருக்கின்ற
தென வெண்ணி, பிரமனுக்கு ஓராதனந் தந்து பாதபூசை முதலியவைகளையும்
நடத்தி, ஒருபாரிசமாக நின்று மிக்க நாணத்துடனே கூடியிருக்கின்ற சரஸ்
வதி முகத்தையும், ஒளிமழுங்கி யிருக்கின்ற பிரமன் முகத்தையும் பார்த்து,
தங்களிருவரும் இங்ஙனம் வருவதற்கான காரண மென்னவென்று கேட்
டனன். அதற்கவர்கள் ஒன்றுஞ் சொல்லாமலிருந்தனர்.

தாமரைக் கிழவ னொன்றுஞ் சாற்றில னிருப்பநின்ற
ஏமரு மமரர்தம்மு ளியம்புவார் தவமேற் கொண்டு
சேமவுண் டிகளிற் பன்னாண் மிக்கிடு மியோகத்தார்க்கும்
காமவெங் கடலைச் சற்றுங் கடப்பது கூடாதென்றார்.

பின்ன ரங்கிருந்த தேவர்கள் ஆகாரமுதலியவைகளை நீத்து அளவற்றநாள்
அரிய தவத்திலிருக்கின்ற யோகியராயினும், காமக்கடலை நீந்துவது மகாகஷ்
டம் என்று ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டனர். அதனைக்கேட்ட பிரமன்
உடனே அதிக வேகத்தோடும் எழுந்தனன். அப்போது அவன் வீரியமானது
வெளிப்பட்டது. பின்னர் பிரமன், முன்னர் தவஞ்செய்துகொண்டிருந்த தடா

கத்தை யடைந்து ஸ்னானஞ்செய்து, சுத்தபவித்திரனாகி, யதாப்பிரகாரந் தன திருப்பிடத்தை நோக்கிச் சென்றனன். இப்பால் பௌரணைவர, அத்தினத்தில் அப் பிரமனோடு தவஞ்செய்து கொண்டிருந்த அபிசிந்து மகாராசனும், அவன் பத்தினி குணவதியும், சமுத்திரஸ்னானஞ் செய்து மீண்டு வருகையில், குணவதிக்குத் தாகமேலிட்டு விரைவிற் றடாகத்தினை யடைந்து தண்ணீருண்டனள். அத் தண்ணீரோடு பிரமதேவனுடைய வீரியமானது அவளது கருப்பத்திற்சென்று கருவாயிற்று. பின்னர் அரசன் வைசம்பாயனமுனிவர் செபஞ்செய்யுமாறு அநுக்கிரகித்தருளிய நான்குதிங்களு மானவுடன், வேதாகம முறைமைப்படி தருப்பணாதிகளை முடித்துத் தனது மனைவியோடு முன்போல நகரத்தைச் சேர்ந்து, தேவர்கடனாதிகளைப் பேரன்பினோடு நிறைவேற்றி வந்தனன். பத்தாந்திங்களில் குணவதி ஒரு புத்திரனைப் பயந்தனள். அப் புத்திரனுக்கு அரசன் சாதகன்மாதிகளைக் கிரமப்படி முடித்துச் சூதகநீங்கியவுடன் சோதிடர் முதலாயினோரை வரவழைத்து நமது புத்திரனுக்கு என்னென்று நாமகரணஞ் செய்யவேண்டியதென வினவினன். அதற்கு அவர்கள் அப் புத்திரனுடைய திதியாதி நிலைகளை யாராய்ந்து இவன் தேவர்களாலும் பூசிதஞ் செய்யத்தக்கவனென்று தமக்குட் டீர்மானித்து, கணனென்று நாமகரணம் வைக்கச் சொல்லினர். அரசன் அவ்வாறே அவனுக்கு நாமகரணஞ் செய்தனன்.

இப்பால் கணனென்பவன், நாளுக்குநாள் வீறிவளர்ந்து நீண்டவுருவும், மேகநிறமும், பருத்தவிழியும், அகன்றமார்பு முடையவனாகி, இவன் வேறொரு பர்வதராசனென்று சொல்லும்படியாக வீதியில் விளையாடிக் கொண்டிருக்கின்ற பருவத்திற்றானே அரைக்கணத்தில் அளவற்ற யோசனைதூரஞ் சென்று திரும்புவானாகி, ஒருநாள் சந்திரன் கீழ்த்திசையி னின்றும் உதயமாகி ஆகாய மார்க்கமாக வரக்கண்டவன் விரைவிலெழுந்து அவன் கரங்களைச் சேரப்பிடித்துப் பின்னர் தொழுது வணங்கி, அவன் நல்லவார்த்தைகள்பேசிக் கெஞ்சவிடுத்திட்டனன். மற்றொருநாள் ஒரு யானையானது மும்மதங்களையுஞ் சலசலவென்று பொழிந்து மிகுந்த கோபத்தோடுங் கட்டுத்தறியை முறித்துப் பாகர்களை யெல்லாம் அடர்த்துத் துதிக்கை கொம்பு வால் இவைகளினும் படைவீரர்களை யெல்லாங் கொன்று அந் நகரத்தினது வாயிலை யடைந்துகொண்டிருக்க, அந் நகரத்தார் மிக்க கிலேசத்தை யடைந்து, இந்த மதயானை முன்னொரு காலத்தில் சர்வசங்கார மூர்த்தியாகிய சிவபெருமான் உரித்தருளிய மதயானையோ? அல்லது ஆலவாயழியுமாறு அமணர்களாலேவப்பட்ட மதயானையோவென்று கலங்கி, ஆரவாரிக்க, அதை அக் கணனென்பவன் கேட்டு அந்த யானை யருகிற்சென்று, அதன்கதுப்பில் விரிம்படியாகப் புடைத்து மத்தகத்தைக் கிழித்தனன்.

உடனே அதினுடைய கதுப்பினும் மத்தகத்தினும் உதிரப்பிரவாக முண்டாகி அப்பிரவாகமும் மதநீரும் ஒன்றுபட்டு நிலவிரியின்மீது இந்திரவில்லிருந்

ததுபோல விளங்க அந்தயானை யிறந்துவிழுந்தது, இவ்வாறு அளவற்ற அற்புதமான விளையாட்டுகளை நடாத்திவருகின்ற அக்கணனென்பவன், வயதிற்சிறியவனாயினும் வலியில் எவ்வாறு பெரியவனாயினனோ அவ்வாறே தருமம், தானம், ஒழுக்கம், ஆசாரம், விருந்தோம்பல், சிவபூசை, சிவஞானம், சீலமுதலாகிய நற்குணங்களினும் பெரியவனாகி ஒருநாள் தனது தந்தையைப் பணிந்து விடைபெற்று வனத்திற் சென்று ஓர்தடாகக்கரையி லிருந்து, நித்தலும் விபூதி உருத்திராக்கம் முதலியவைகளை யணிந்து, தாமரை மலரினாலும், உன்மத்த மலரினாலும் சிவபிரானை வழிபட்டுக் கந்தமூல பலாதிகளை நிவேதித்து, அவரது பஞ்சாக்கரத்தைச் செபித்துக்கொண்டு ஆயிர வருடம் வரையில் தவத்தி லிருந்து, பின்னர் ஒற்றைக் காலில் நின்று ஜல பானத்தோடு முப்பது வருடம் வரையினும் வாயுபட்சணத்தோடும், பத்து வருடம் வரையினும் நிராகாரத்தோடும், பத்து வருடம் வரையினும் உக்ரமாகிய தவத்தைச் செய்தனன்.

இப்பால், அவன் தவஞ்செய்கின்ற இடத்தில் தென்றற் காற்றே யன்றி ஏனைய காற்றுகள் வீசினதில்லை. சூரியன் வேகமாய்க் காய்ந்ததில்லை. மழை அதிகமாய்ப் பெய்தது இல்லை. மிருகங்களும், பறவைகளும் ஒன்றைக் கொன்று பகையாடினதில்லை. அவன் செய்துவருகின்ற உக்ரமான தவத்தி னின்றும் அனலுண்டாகி அவ்வனல் தெய்வலோக மெங்கும்பரந்து தகித்தது. அதைத் தேவர்கள் சகிக்கமாட்டாது இவன் சுவர்க்காதி போகங்களில் யாதுவேண்டித் தவஞ்செய்கின்றனனோ வென்று பயந்து, யாவரும் ஒன்றாகச் சேர்ந்து, ஆகாய மார்க்கமாய்க் கயிலாய பர்வதத்தை யடைந்து, சிவ பெருமானைப் பணிந்து எழுந்து அளவற்ற வேத ஆகமங்களினால் துதி செய்து, சுவாமீ! ஒருவன் வனத்தில் விபூதி உருத்திராக்கம் முதலியவைகளை யணிந்த கோலத்தோடு கையில் செபமாலையினை யேந்தி ஒற்றைக் காலில் நின்று பஞ்சாக்ஷரத்தினால் தேவரீரைத் தியானஞ் செய்துகொண்டு, உக்ரமான தவத்தி லிருக்கின்றனன். அவனிடத்தினின்றும் ஓர் தவாக்கினிபிறந்து சொர்க்க லோக மெங்கும் பரவி, எங்களெல்லாம் வெதுப்புகின்றது. அதனால் யாங்கள் அனைவரும் தேவரீர் சரணாவிந்தங்களை யடுத்தனம். இனி அடியேங்களுக்கு யாதொரு துன்பமும் வாவொட்டாமல் காத்தருளவேண்டு மென்று பிரார்த்தித்தார்கள். அதற்குச் சிவபெருமான் கிருபைகூர்ந்து அவர்கட்கு அஞ்சவேண்டாமென்று அபயாஸ்தந்தந்து இடபவாகனத்தின் மீது பார்வதி தேவியாரோடும் எழுந்தருளி, ஐம்பொறிகளையும் நிக்ரகித்து, அரிய தவத்தினைச் செய்துகொண் டிருக்கின்ற கணனுக்கு எதிரில் பிரத்தியட்ச மாயினர். உடனே கணனானவன் மேகத்தைக் கண்ட மயில்போல வெழுந்து தனது வருத்தமெல்லாம் வீழும்படியாகக் கர்த்தனுடைய திருவடிகளிற் பலமுறை வீழ்ந்து நமஸ்கரித்து கைகொட்டி ஆனந்தக் கூத்தாடி மும்முறை வலம்வந்து கண்கணீரைக் கவிழ்ப்ப, உரை தடுமாற்றங் கொள்ள, உடலெங்கும் உரோமாஞ்சிதம் பூப்ப, அகத்துள் அன்பு பொங்க, மிக்க வணக்கத்தோடும் எதிர்நின்று, ஓ பரம்பொருளே! இராசதம் சாத்வீகம்

தாமதமென்கிற முக்குணங்களினின்று சகல சீவராசிகளையும் படைத்துங் காத்துங் துடைத்து மிராநின்ற கர்த்தர் தேவரீரே யாதலால் இங்கு அடியே னுய்யுமாறு திருவருள் சுரக்கவேண்டுமென்று துதிசெய்தனன். அதற்குச் சிவபிரான் கிருபைகூர்ந்து, அன்பனே! நீ கருதியவரங்களைக்கேள் தருகிறோமென்று திருவாய் மலர்ந்தனர்.

உடனே கணனானவன் மீட்டுந் தொழுதெழுந்து இருகரங்களையுஞ் சிரமேற்கூப்பி, சுவாமீ! தேவரீருடைய திவ்ய சரணாரவிந்தங்களில் எக்காலத்தும் மாறாத பத்தியும் மேலான பாக்கியமும் அடியேற் கருளவேண்டு மென்று பிரார்த்தித்தனன். அவ்வாறே சிவபிரான் தமது திருவடிகளில் பத்தியும் மூவுலகத்தையும் ஆளத்தக்கஅரசாட்சியும் பிரமேந்திராதி தேவர்களாலும் அழிவுறாத ஆயுளும் பின்னும் அளவற்ற வரங்களையும் அவனுக்குத்தந்து தமது திருக்கைலைக் கெழுந்தருளினர். கணனானவன் தனதகாரத்தை யடைந்து தன்னையீன்ற தாய்தந்தையருடைய பாதங்களைப் பணிந்தெழுந்து தனக்குப் பரமசிவங் கொடுத்தருளிய வரங்களனைத்தையும் அவர்களிடத்திற்கூறிச் சந்தோஷ முற்றிருந்தனன். பின்னர் அவன் தந்தையாகிய அபிசித்து மகாராசன் அவனுக்கு விவாகஞ்செய்து சிலகாலஞ் சென்றபின்பு அவனுக்குப் பட்டாபிஷேகஞ்செய்வித்துத் தனதரசிருக்கையையும் அவன்பா லொப்புவித்துத் தான் தனது மனைவியோடு பிரதிதினம் சிவபெருமானைப் பூசித்து அரியதவத்தினால் ஆனந்தக் களிப்பில் மூழ்கியிருந்தனன். இப்பால் கணராசன் தனது தந்தைகொடுத்த வுலகத்தைத் தன்வசமாக்கி அன்னியதேசங்களையுங் கைக்கொள்ள வேண்டுமென்று கருதி விகவித்து-பிரமதன்-கிரக்தன்-விதந்து என்கின்ற நான்கு மந்திரிகளையுந் தனது புத்திரர்களாகிய சூலபாணி-சுலபன் என்கிற இருவர்களையுஞ் சர்வாயுதபாணியராய் அளவற்ற சேனைகளோடுவரக் கட்டளையிட்டு நாற்புறத்தும் நூற்றைம்பது நூற்றைம்பது யோசனைதூரம் பரவியிருக்கின்ற சதுரங்க சேனைகளோடு யமனும் அஞ்சிக் கண்புதைக்கும்படியாகத் தான்புறப்பட்டு எதிர்த்து வந்தவர்களையெல்லாஞ் சங்கரித்துப் பணிந்து வந்தவர்களிடத்திற் பகுதிவாங்கிப் பூவுலகத்திலுள்ள சகலராச்சியங்களையுந் தன்வசப்படுத்தி உடனே சொர்க்கலோகத்திற் சென்று கற்பகவனத்தி லிருக்கின்ற தேவேந்திரனுடைய உச்சைசிரமென்கிற குதிரையைப் பிடித்து அதன்மீது தான் ஆரோகணித்தனன். அதனைத் தேவேந்திரன் றனது தூதர்களா லறிந்து, மிக கோபா வேசத்துடனெழுந்து, வச்சிராயுதத்தைத் தாங்கி, வெள்ளை யானையின்மீ தாரோகணித்து சீண்டதுவசங்களோடும் படியான தனது அரண்மனை வாயிலினின்றும் வெளிப்பட்டனன். உடனே யெல்லாத் தேவர்களுஞ் சர்வாயுத பாணிகளாய் நெருங்கினார்கள். நாற் புறங்களினும் இரண பேரிகைகள் முழங்கின. ஆகாய வெளியெங்கும் வெற்றித் துவசங்கள் ஆர்த்தன. வீரர்கள் கரங்களிலெல்லாம் எஃகாயுதங்கள் பிரகாசித்தன. பீலிக் குஞ்சங்களும், வெண்பட்டுக் குடைகளும் எங்கு நிறைந்தன. இவ்வித வாடம்பரங்களுடன் தேவ சேனைகளெல்லாஞ் சந்த சாமரங்க

லைப்போல ஆர்ப்பரித்துவர தேவேந்திரன் றனது நகரத்தைக் கடந்து வந்து மிக்க பராக்கிரமத்தோடு கரத்தில் வில்லேந்தித் தனது குதிரைமீ தாரோகணித்திருக்கின்ற கணராசனையும் அவன் சேனைகளையுங் கண்டனன். அப்போது இவ்வீரனோடு யுத்தஞ் செய்து வெற்றிப் பெறுவது மிகவுங் கடினமாதலால், இவனை இனிய வார்த்தைகளாற் சம்மதப் படுத்துவதே சரியானதென்று தனக்குள் ளாலோசித்தவனாய், ஓ குணவதி குமாரனே! ஓ குணக் குன்றமே! கணனென்னும் பெயருக்கேற்ப நன்கு மதிக்கப் படுங் காட்சியோய்! எனது குதிரையை விட்டுவிடும் என்று கேட்டனன். அதற்குக் கணராசன் நகைசெய்து; இந்திரனே! உனது ஐராவத முதலியனவும், எனது வயமாகத் தக்கனவே யென்று சொல்ல, அதனைக் கேட்டதும், இந்திரன் கோபங்கொண்டு, தனது சேனையைத் தூண்டி, யுத்தஞ் செய்வதற் காரம்பித்தனன். அதனைக் கணராசனால் வெறுத்துத் தள்ளப் பட்டிருந்த சேனாதிபதிக்குள் ஒரு வீரன் கண்டு தேவசேனைகளோடு மெதிர்த்து, நாசஞ் செய்து, யாவரும் பின்னிட்டோடும்படியாக முடுக்கினன். இவ்வாறு ஒரே சேனாதிபதிக்கு அளவற்றவிம்மிதங்களோடும் வந்த தேவசேனைகளெல்லாம் பின்னிட்டோடவும் இந்திரன் மிகவு மானமுங் கோபமுங்கொண்டு தனது ஐராவதத்தைக் கணராசனருகிற் செலுத்திக் குலிசாயுதத்தால் அவன் மார்பிற் றாக்கினன். உடனே கணராசன் மூர்ச்சையாகி மீட்டுந் தெளிந்தெழுந்து குதிரையை இந்திரனருகிற் றூண்டித் தனது வாளினால் அவன் குலிசப்படையைக் கீழேவிழத்தள்ளினன். அதனால் இந்திரன் இளைப்புற்றிருக்கின்றமையை அவன்றூ ஐராவதங்கண்டு மிகுந்த சீற்றத்தோடும் போர்செய்ய, அதனையுங் கணராசன் அடித்து ஓர் நொடிப்போதில் நிலத்தில் விழத்தள்ளினன். இப்பால் இந்திரனுங் கணராசனுங் கைகலந்து மல்லயுத்தஞ் செய்வதானார்கள். அப்போது கணராசனிவன் டலபேய்க் கூட்டங்கள் தனது வெற்றியைக்கூறிக் கைதட்டும்படியாக இவ்விப் பானையில் முகந்த நீரைப்போல, இந்திரனுடைய முடியில் உதிரவெள்ளம் பெருகும்படி குட்டினான். அதனா லவ்விந்திரன் சோபித்து வீழ்ந்து பின்னர் தெளிந்தெழுந்து மானமானது உள்ளத்தில் வாதிக்கும்படியாக வாட்டங்கொண்ட முகத்தோடுஞ் சிரங்கவிழ்ந்து நாணமுற் றிருந்தனன். அதனைக் கணராசன் கண்டு, இந்திரனே! இனியொன்றற்கும் அஞ்சற்க. யாமுனக்கு விண்ணுல காட்சியை இத்தினந்தந்தோம். எமக்குள்ள அரசாட்சிகளுள் அளவற்ற வளங்கள் மலிந்திருக்கின்றன. ஆதலால் இவ் விண்ணுலக வளங்களை யாம் வேண்டிலம். இனி நமது ஆணைக்குள் நடந்துகொள்ளக்கடவை. அதினின்று மாறுவையாயின் உடனே தண்டனைக்குள் ளாகுவை யென்றுசொல்லி மற்ற லோகங்களையுஞ் செயங்கொள்ளுமாறு அவ்விடத்தினின்றும் வெளிக்கொண்டனன்.

அக் காரணத்தை விண்டு பிரமனாதியர் கண்டு, இனி நமக்கு யாது சம்பவிக்க விருக்கின்றதோவென்று பயந்து, யாவரும் மிகுந்த வணக்கத்துடன்

கணராசனை யெதிர்கொண்டு அளவற்ற கையுறைகளைத்தந்து இனிய வார்த்தைகளாடிவணங்கிச் சென்றனர். அதற்குக்கணராசன் மனமகிழ்ந்து யாவருக்குந் தனது கிருபையை வழங்கி அவ்வவர்களுடைய உலகங்களிற் றனது முத்திரைமோதிரச் சவடை வழங்கும்படிசெய்து பூவுலகத்திற்கு வந்து தனது தாய்தந்தையர்களைப் பணிந்தெழுந்து தேவர்களாற் றரப்பெற்ற பலகையுறைகளை அவர்களெதிரில் வைத்து அவ்வவர்களைச் செயித்துவந்த திறங்களைத்தையுஞ் சொல்லி வேதமுறைமையினின்றும் வழாதபடி நீதியினைச் செலுத்தி உம்பர்களுக்கன்றி உலப்பெய்தத்தக்க பலதருமாதிகளை யிடைவிடாதியற்றி அழகிற் சிறந்த அனேகமாதர்களை மணஞ்செய்து செங்கோல் களிப்பென்னுங் கடலுண் மூழ்கி வாழ்ந்திருந்தனன். இவ்வாறிருக்குங்காலையில் ஒருநாள் வனத்தின்கணுள்ள சிலவேடர்கள் கணராசன் சமுகத்தில் வந்து பணிந்தெழுந்து அடியேங்களுடைய கூழுங் குடியுங் கெடாதபடி வளர்த்து வருகின்ற குரிசிலே! வனத்தின்கண் பலவகைப்பட்ட மிருகவர்க்கங்கள் மிகுந்து அவ்விடத்துள்ள பயிர்களையெல்லாம் நாசஞ்செய்து வருகின்றனவென்று முறையிட்டார்கள். அதனைக் கணராசன்கேட்டு, வேட்டையாடுவான் செல்ல வெத்தனித்து, மந்திரிகளைக் கொண்டு சிலசேனைகளோடு நாய் வேட்டைக்காரர் வலைஞர் முதலியோரை வரவழைத்துத் தான் நீலவத்திரமுடுத்தி, யிடையில் நீலக்கச்சினை வீக்கி, நீலநிறத்தாலாகிய முன்கை தோற்கட்டினை யணிந்து, நீலப் போர்வையைப் போர்த்து, நீலத்தோய்ந்த தலைச்சுற்றினை யணிந்து, சுற்றிலும் நீலமணிக்குடை நிழல்செய்யும்படியாகக் கரத்தில் நீலவில்லேந்தி, நீலப்பரிமீ தாரோகணித்துப் பூவுலகை நோக்கிச்செல்லும் யமனைப்போல, வனத்தை நோக்கிச் செல்லுவதாயினன்.

இவ்வாறு கணராசன் செல்லுகையில் முன்னதாக நான்கு ஏவலாளர்கள் நான்கு திசைகளினு மோடி, மிருகங்களெல்லாங் கூட்டங்கொண்டிருக்கின்றவிடங்களை யறிந்துவந்துகூற மன்னர்களெல்லாம் அவ்வவ் விடங்களிற் கவண்களை யெறிந்து, எங்கும் வலைவிட்டார்கள். வேடர்களெல்லாம் ஞாளிக்கூட்டங்களை யேவிப் பம்பைகொட்டினார்கள். மறவர்களெல்லாம் பற்பலபுதர்களோடுஞ் சென்று குறைத்து வெட்டினார்கள். படைவீரர்களெல்லாம் வில்லை வளைத்து வேட்டையாடினார்கள். சிங்கங்கள், யாளிகள், வராகங்கள், முட்பன்றிகள், யானைகள், ஒட்டகங்கள், காட்டானைகள், மான்கள், முயல்கள், மரைகள், புலிகள் முதலாயுள்ள யாவுந் தங்கடங்களிடங்களையகன்றுவனமெங்கனும் பாய்ந்துலாவின. அவற்றுட் சில மிருகங்கள் மன்னர்களோ டெதிர்த்து யுத்தஞ் செய்து மாய்ந்தன. சில மிருகங்கள் ஒன்றோடொன்று அடர்த்து மடிந்தன. சில மிருகங்கள் வலையின்கண் அகப்பட் டிறந்தன. சில மிருகங்கள் ஞாளிகளின் வாயிலகப்பட்டு மரித்தன.

இவ்வாறு கணராசனானவன் றனது படைவீரர், மறவர், வலைஞர் முதலாயினோரைக் கொண்டும், ஞாளிக் கூட்டங்களைக் கொண்டும், பலவகைப்பட்ட

காடுகளினுஞ் சென்று வேட்டையாடி யாளி முதலிய மிருகங்களை யெல்லாங் கொன்று திரும்பி வருங்காலையில், தனக்கு மிகவுந் தாகம் மேலிட அதனால் வழிதப்பி, இருவிழிகளும் பஞ்சடையும்படியாக அமைச்சர் முதலிய சேனைகளோடு இருண்ட காட்டினுள்ளே புகுந்து சென்றனன். அப்போ தவ்விடத்தில் தெய்வலோகத்தினை நிகர்த்த ஓர் வனந் தோற்றக் கண்டு, அதனுள் சேனைகளோடு நுழைந்து மல்லிகை, முல்லை முதலிய புட்பச் செடிகளெல்லாம் படர்ந்து, தென்றற் காற்றினால் எங்கும் பரிமளத்தை வீசாநின்ற ஓர் சோலையையடுத்து, அங்கு பெரியோர்களது உள்ளத்தைப்போலத் தெளிந்த தண்ணீரையுடைய ஓர் நதியைக் கண்டு, அந்நதியின்கண் மிகுந்த ஆவலோடும் ஸ்நானஞ் செய்து, சிறிது தளர்வொழிந்து, அவ்விடத்துள்ள கந்தமூல பலாதிகளை உழையர்கள் சேகரித்துக் கொடுக்க வாங்கிப் புசித்து, தாகசாந்தியுஞ் செய்து பசியையும் இளைப்பையுஞ் சிறிதாற்றித் தன்மீது தென்றற் காற்று வீசும்படியாக ஓர் மரத்து நீழலில் உட்கார்ந் திருந்தனன். இவ்வாறு கணராசன் இளைப்பாறிக் கொண்டிருக்கின்ற சமயத்தில், அவ்வனத்தில் வாசஞ்செய்கின்ற கபில மகாமுனிவருடைய சீடர்களிலொருவர் அங்குள்ள நதியில் ஸ்நானஞ்செய்யச்சென்றனர். அப்போது அவர் அந்நதிக் கரையிலுள்ள அரசனையும் அவன்சேனைகளையும் கண்டு, அதனைத் தனது குரவராகிய கபில முனிவருக்குத் தெரிவித்தனர். உடனே கபிலமுனிவர் அவ்வரசனை இங்ஙனம் அழைத்துவரக் கடவை என்று கட்டளையிட, அவ்வாறே அச் சீடர் கணராச னிடத்திற் செல்ல, அவரை அவ்வரசன் கண்டு வணங்கித் தாங்கள் இங்கு வந்த காரியத்தைத் தெரிவிக்கவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்துகொண்டனன். அதற்கு அச்சீடர் அரசனே! நீர் இங்ஙனம் வந்திருக்குஞ் செய்தியை எனது ஆசிரியராகிய கபில முனிவர் தெரிந்து உம்மைத் தமதிடம் அழைத்து வருமாறு ஆக்கியாபித் தனுப்ப வந்தனன் என்றனர். அதற் கரசன் மிகுந்த சந்தோஷங்கொண்டு, அம்முனிபுங்கவனது ஆசிரமத்திற்குச் சென்று இருட்பகையாகிய சூரியனைப் போன்று பிரகாசிக்குஞ் சிந்தாமணியை மார்பின்கண் தரித்திருக்கின்ற கபில முனிவருடைய திருவடிகளைப் பேரன்பினோடு பணிந் தெழுந்து நின்றனன். அவனை அம் முனிபுங்கவர் கிருபையோடும் பார்த்தருளி ஓராதனத்தி லவனை யிருக்கச் செய்து அரசனே! நீயார்? இங்கு யாதுகாரணம்பற்றி வந்தனை? என்று வினவ, அதற்குக் கணராசன் சொல்லுவான்: சுவாமீ! எனது நாமம் கணன் என்று சொல்லுவார்கள். யான் வனத்தின்கண் வேட்டையாடித் திரும்புங் காலையில் மிக்க இளைப்பினால் வழிதப்பி இவ்விடத்திலணுகி திவ்விய நதியில் ஸ்நானஞ் செய்து கந்தமூல பலாதிகளைப் புசித்து, இளைப்பாறிப் பூர்வஞ் செய்திருக்கின்ற புண்ணிய பலத்தினால் கிருபைக் கடலாகிய தேவரீருடைய திவ்விய சரணாரவிந்தங்களைத் தரிசிக்கப் பெற்றேனென்று சொல்லினன். அதனை முனிபுங்கவர் கேட்டுச் சந்தோஷித்து அரசனே! இவ் வாசிரமத்திற்கு வந்தபேர்கள் பசியுடன் சென்றதில்லை. யாதலால் நீயும் போசனஞ் செய்து பின்னருனது பட்டணத்

னைச் சேரலா மென்று இசைவித்து, அவனை சேனைகளோடு வரவழைத்து தந் தவமகிமையை யாவருந் தெரியும்படி மார்பிலணிந்திருந்த சிந்தாமணியை கரத்திலெடுத்து ஓராதனத்தில் வைத்துப் பூசைசெய்து இங்கு வந்திருக்கிற யாவருக்கும் விருந்திடவேண்டுமென்று பிரார்த்தித்தனர். அதன்பேரில் அச் சிந்தாமணியானது அழகு பொருந்திய வோர் நகரமுண்டாக்கி, அதில் அளவற்ற மாளிகைகள், கூட கோபுரங்கள் முதலியவைகளை நிருமித்து, அநேக பரிசாரர்களையும், அளவற்ற தங்கப் பாத்திரங்களையுந், சகலவித போசனவர்க்கங்களையுஞ் சிருட்டித்து, அரசனுக்கும் அவன் சேனைகட்கும் விருந்திட்டது. அவ்வற்புதத்தைக் காணுந் தோறும் அரசன் பெரு மகிழ்ச்சி யடைந்து, போசனாதிகளை முடித்து, மீட்டும் முனிபுங்கவரைக் கண்டு பணிந்து, சுவாமீ! தேவரீர் சிருட்டி முதலிய தொழில்களைவேண்டினும் இமைக்கு முன்செய்து, நிறைவேற்றவல்ல மகா தவமகிமையை யுடையவராதலால், ஈகையிற் சிறந்த சிந்தாமணியைத் தேவரீர் வைப்பது யாதுக்கு? எனது தந்தைக் கொப்பாகிய தேவரீரடியேனைத் தமது புத்திரனாகப் பாவித்து, அச் சிந்தாமணியை அடியேற்குக் கொடுத்தருளல் வேண்டுமென்று பிரார்த்தித்தனன். அதனை அம்முனிபுங்கவர் கேட்டு அரசனே! இச் சிந்தாமணியானது எனது உயிரினுஞ் சிறந்ததாகும். ஆதலால் ஈதொழிய நீயாது வேண்டினுந் தருவோமென்று சொல்லினர். அதற்கவ்வரசன் அச் சிந்தாமணியின் மீது வைத்த ஆசையினால் சம்மதியாது மனதில் விரோதங் கொண்டு முன்னம் பிரமவிடத்தினின்றும் பகற் போதில் வெளிப்பட்ட வீரியமானது பின்னரப் பகற் போதிற்றானே வயிற்றிற் றங்கிக் கருவாகிப் பிறந்த பழுதினால், அவன் ராசகுலத்திற் பிறந்தும், இராட்சச குணமேலிட்டுத் தனது அற்ப புத்தியினால் அச் சிந்தாமணியை அம் முனிபுங்கவரிடத்தினின்றும் பலாத்காரமாய்ப் பறித்துக்கொண்டனன். அதனால் முனிபுங்கவர் கோபங்கொண்டு, அடாமூடனே! மூவுலகத்தின் கண்ணும் அரசாட்சியைச் செலுத்துகின்ற நீ எனது பொருளைப் பறித்துத் துன்பமுறச் செய்தனை யல்லவா? விரைவில் கடவுளானவர் உலகத்தின் கண் ணவதரித்து, உன்னை நாசப்படுத்தவேண்டும். பதிதனே! இனி என்முன்னர் நிற்பையாயின் உன்னைச் சபித்து நீறாக்கிவிடுவேனாதலால் விரைவில் உனதிருப்பிடஞ் சேரக்கடவையென்று சொல்லினர். அதற்குக் கணராசன் பயமுற்றானாயினும், அச் சிந்தாமணியை மீட்டுக் கொடுப்பதற்கு மனமில்லாதவனாய் மிக்க ஆவலோடுங்கொண்டு தனது நகரைச் சேர்ந்து, தான் வனத்தில் வேட்டைக்குச் சென்றது முதல் நடந்த விசேஷங்களை எல்லாந் தனது தந்தையிடத்திற் கூறி, தான் கவர்ந்து வந்த சிந்தாமணியைக் கொண்டு பலவித விநோதங்களைக் காட்டிப் பற்பல விடர்களையுந் தீர்த்து அளவற்ற சித்திகளோடு மூவுலகத்திலுந் தனது அரசாட்சியை நடாத்தி வந்தனன்.

இப்பால் கபிலமகா முனிவர் ஜீவ ரத்தினத்தை யிழந்த நாகம் போலத் தமது சிந்தாமணியை யிழந்த காரணத்தை நினைக்குந் தோறும் நெட்டுயிர்த்து

நீங்காத துயரத்திற் குள்ளாகி, ஆகார முதலியவைகளை நீத்து நமக்குத்துரோகஞ் செய்த மகா பாவியை எவ்வாறழிக்க வல்லோ மென்று யோசித்து விரைவில் அவனுக்குக் கேடு சம்பவிக்க வேண்டு மென்று அகோர தவத்தினைச்செய்தனர். இவ்வாறு அளவற்ற நாள் மிகுந்த பத்தியோடுந் தவஞ் செய்து கொண்டிருக்கையில், விஷ்ணுவினுடைய மாயையானது நாற்றிசைகளினு மேல்கீழாகி எங்கும் அக்கினிச் சுவாலையாய் மூடி அவரது கண்ணுக்குக் காணும் படியாக நின்றது. அதை அம் முனிபுங்கவர் கண்டு, ஈதென்ன விபரீத மென்று பயந்தனர். அப்போது அஃது அம் முனிபுங்கவரைக்கூவி யான் மாயாசத்தி; எனது பெயர் சாருகாசினி; உமக்குத் துன்பமளித்த கணனென்பவன் சிவ பெருமானுடைய வரத்தினால் திரி மூர்த்திகளாலும் அழிவுறாத மேன்மை பெற்றிருக்கின்றான். மூன்று தொழிலுக்கும் நாயகராகிய விநாயக மூர்த்தி திருவுருக்கொண்டு வருவாரெனில், அந் நிமிஷத்தில் அக் கணனுக்கு அழிவுண்டாகுமாதலால், அவ்விநாயகரை நோக்கித் தவஞ் செய்யக் கடவை யென்று சொல்லியது.

அவை யனைத்தையும் முனிவர் கேட்டு, அம்மா! யான் அவரை நோக்கித் தவத்தைச் செய்யவேண்டிய முறைமையினையுந் தெருட்ட வேண்டு மென்று பிரார்த்தித்தனர். அதற்கச்சாருகாசினி, அம்முனிவரை நோக்கி, ஓ தவசிரேஷ்டரே! முன்னர் யான் கூறிய திருப்பெயரே மந்திரமாகக் கொண்டு, அதன் முதலினுங் கடையிலும் ஓங்கார பல்லவத்தையும், நமோ நகத்தையுஞ் சேர்த்துப் பதினெட்டு லட்சம் உரு செபம் பண்ணி, ஓமம் வளர்த்தித் தருப்பணம், பிராமண போசன முதலான வைகளையுஞ் செய்தால், அவ்வோம குண்டத்தினின்று விநாயக மூர்த்தி யானவர் மோதகம், தாமரை மலர், மழுவாயுதம், பூமாலை யென்னு மிவைகளை யேந்திய நான்கு திருக் கரங்களுடனே அனந்த ஆபரணங்களையுந் தரித்துக் கொண்டு, பிரகாசமுற்ற திரு மேனியோடு சிங்க வாகன மூர்ந்து, சித்தி புத்தி சமேதராய் வந்தருளுவ ரென்று சொல்லி மறைந்து போயினள். அவை யனைத்தையுங் கபில முனிவர் செவி குளிரக் கேட்டுத் தாமிழந்த சிந்தாமணியை அப்போதே அடைந்தவர் போல ஆனந்த முற் றெழுந்து துள்ளி, முன்னிருந்த துயரங்க ளனைத்தையும் போக்கி, விநாயக மூர்த்தியி னுடைய திரு மந்திரத்தை முறைமைப்படி செபஞ் செய்து, ஓமந் தருப்பண முதலான கிரியாதிகளை யெல்லாம் நடாத்தி பூஜை முடிந்தவுடன், அவ் வோமகுண்டத்தினின்று இரத்தினகிரீடம், குண்டலம், தோளணி, முத்துவடமுதலிய ஆபரணங்களோடு தேசார்ந்து, வனப்பெய்தி யிருக்கின்ற திருவுருவமும், கருணைபொழிகின்ற திருநேத்திரங்களும், மோதகம் முதலியவைகளை யேந்தியிருக்கின்ற நான்கு கரங்களும், எனது கற்போன்ற மனத்தினைக் கரைக்கவல்ல சேவடிகளும் விளங்க, சித்திபுத்திகள் சமேதராகச் சிங்கவாகன மூர்ந்து விநாயகக்கடவு ளெழுந்தருளினர். அவ் வற்புததரிசனத்தைக் கபிலமுனிவர் கண்குளிரப் பார்த்து சாருகாசினி சொன்ன தனைத்துந்

சத்தியமென்று பலமுறை பத்தியுடனே சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து, உள்ளமுருகி, உரோமஞ் சிலிர்த்து, இருகரங்களையுஞ் சிரமேற் கூப்பி, ஐயனே! அடியேன் குலமுதலிய யாவுஞ் சுத்த பவித்திர மாயின இனி சுவாமிகளுடைய திருவடிகளில் அடியேற்கு மாறாத பத்தியை யளித்து, அந்திய காலத்தில் உயர்ந்த முத்தியையு மளித்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தனர். அதற்கு விநாயகமூர்த்தி கிருபைசுரந்து, கபிலமுனியே! என்னிறந்த பவங்கடோறுஞ் செய்துவந்த தவங்களினாலடையும் பயன்களையெல்லாம் நமது கிருபையினால் இச் சனனத்திற்றானே ஓர்நொடிப்போதி லடைந்தனை, யா மிவ்வுலகத்தின்கணுள்ள தேவர்கள், முனிவர்கள், பெரியோர்கள் முதலியோருடைய மலபந்தங்களை யொழிக்கவும், வேதாகமங்களிற் கூறிய யாகாதி சற்கருமங்க ளெல்லாம் மென்மேலும் வளர்ந்தோங்கவும், உனக்குத் துன்பத்தினைவிளைத்த கணனென்னு மரக்கன் மாளவும், சகல வுயிர்களுக்கும் நன்மையைச் செய்யவுமாக உனது மனையின்கண் யாம் அவதாரஞ் செய்தனம். இப்பொழுதே அக் கணனென்பவனுடலை நாய், நரி, கழுகுமுதலானவைகட் கிரையாக்கி ஒப்பற்ற சிந்தாமணியை உனது கரத்திற் றருகின்றேமென்று திருவாய் மலர்ந்தனர். அவையனைத்தையுங் கபிலமுனிவர் கேட்டுச் சந்தோஷமாயினர்.

இங் கிவ்வாறாக, அத்தினமிரவில் கணராசன் நித்திரை செய்கின்றபோது கனவுகண்டு விழித்து அக் கனவினை யறிவிக்குமாறு, ஒற்றரால் தனது தந்தையையும், அமைச்சரையும், புத்திரர்களையும் வரவழைக்க, அவ்வாறே அவர்கள் நித்திரைவிட் டெழுந்து கண்துடைத்துக்கொண்டே வந்து அரசனது சமீபத்திற் போயினர். அப்போது அரசன் தனது கனவினாலுண்டான துயரத்தினாற் றலையிறக்கி வந்தவர்களைப் பாராமலும், அவர்களோடு வார்த்தை யாடாமலும் முகவொளி மழுங்கி யிருந்தனன். அக் குறிப்பினை அவர்களறிந்து, தாங்களும் அவனைப்போல மவுனமா யிருந்தார்கள். அவருள் அவ் வரசனுடைய தந்தையாகிய அபிசித்து மகாராசனானவன், ஈதென்ன காரணமென்று சந்தேகித்துத் தனது புத்திரனைநோக்கி மைந்தனே, இவ்வாறு உனது முகாரவிந்தமானது வாடவும், எம்மையிங்கழைப்பித்து ஒன்றும்பேசாது மௌனமாகவிருக்கவுஞ்செய்த பெருந்துயரினுக்குக் காரணம் யாதென்று வினவினன். அதற்குக் கணராசன் ஒன்றும் பேசாதிருந்தனன். பின்னர் விபசித்துமுதலிய அமைச்சர்கள் அவ் வரசனைப் பார்த்து ஓ சகலபுவன சக்கிரேஸ்வரா! தேவரீர் தந்தைவினவிய கேள்விக்கு மறுமொழி கூறாமலிருக்கின்ற காரணம் யாதென்று கேட்டார்கள். அதற்கும் வாய்திறந்திலன். இப்பாலவன் தந்தை மிகவுங் கிலேசங்கொண்டு இதற்கென்ன செய்ய வல்லோமென்றெண்ணி, புத்திரனருகிற் சென்று இனியசொற்களினால் இதனைச் சொல்லுவ தாயினன். மைந்தனே! தேவர்கள் முதலிய யாவரையும் நினைக்குமுன்னமே வென்று வெற்றிகொள்ள வல்ல பராக்கிரம சாலியாகிய உனக்கு இத்தனை சிந்தாகுலம் வருவதற்குக்

காரணமென்ன? அதனை மறைத்துவைத் திருப்பதினா லாகுங்காரியம் யாது? வரத்தக்கதெல்லாம் வந்தேதீரும். ஏதுவரினுந் தரையாளும் வேந்தர்கள் தயிரியம் விடப்போமா? திரிலோகங்களையுந் திறைதரவென்ற நீயே இவ்வாறு அதைரியங்கொண் டிருப்பையேல் மற்றோர் என்னபாடுபடார்? நீ இவ்வாறிருப்பது சத்துருக்களுக்கும் பலமுண்டாக்கும், ஆதலால் உனது மனத்தின்கணுள்ள துயரத்தை வெளியிட்டுச் சொல்லுகவென்று கேட்டனன். அதற்குமேல் கணராசன் நெடிதுயிர்த்து, என்னருமைத் தந்தையே! இனி எனக்கு இப் பிரபஞ்சவாழ்க்கை கூடிவராதபடி கனவுகண்டேன். அதனால் இவ்வித துயரங்கள் எனக்கு நேர்ந்தன. அதனை விவரமாகச் சொல்லுவேன் கேட்பீராக: எனது கனவின்கண் கபிலமுனிவர் அளவிறந்த சேனைகளோடும் வெளிக்கொண்டு வந்ததாகவும், அவரோடு பற்பல ஆயுதங்களை யேந்திய நான்குகரத்தினையுடைய ஒருவன் ஊழித்தீயினை யொப்பவந்து எமது சேனைகளனைத்தையும் விழுங்கின தாகவும், பின்னரவன் ஒருமழுவாயுதத்தினை என்மீதுவிட அது வந்து எனதுசிரத்தை யறுத்துத்தள்ளியதாகவுங் கனவுகண்டு விழித்தேன். அக் கனவே எனது தைரியத்தையும், பராக்கிரமத்தையும், தேஜசையு மழித்தது. அதனை நினைக்குந்தோறும் என்சரீரம் நடுங்குகின்றது. யான்பெற்றமேலானவரங்களனைத்தையும் இழிவுபெறச் செய்தது. இனி என்னசெய்வேன் இக்கனவை யறிவிக்கும் நிமித்தமே மங்கையர் மனம்போன்று இருண்ட இவ்விரவில் உங்களையெல்லாம் வரச்செய்தே னென்றனன்.

இவை யனைத்தையும் பிரமத னென்னு மமைச்சன் கேட்டு, ஓ சார்வபௌமா! தேவரீர் இக்கனவினைக் கருதி கிலேசப்படுவது மிகநன்று மிகநன்று! சகல லோகங்களும் நடுங்கி ஒடுங்கும்படியாக யுத்தஞ்செய்து வெற்றிகொண்ட சக்கிரேஸ்பரராகிய உமக்கும் ஓர் அச்சம் உண்டாயதென்று சொல்லத் தகுமோ வென்றனன்.

கிரந்த னெனுமந் திரிகேட்டுக் களப்பா லிலத்தி னுட்கிடந்த
உரந்தங் கியவித் தறல்கலப்பி னுடனே முளைத்து மரமாகும்
பரந்த கருத்தா லொருவர்புரி பாவ வினையும் புண்ணியமும்
கரந்து பயனுங் காலத்துக் கதித்துப் பெரிதாய்த் தடித்திடுமே.

அதனைக் கிரந்த னென்னும் அமைச்சன் கேட்டு, ஓ பிரமதனே! நீர் என்னவார்த்தை யாடினீர், நிலத்திற் கிடக்கும் வித்தானது சலத்தோடு கூடினால் உடனே முளைத்து மரமாகும். அதுபோல ஒருவர் செய்த பாவ புண்ணியங்களும் பயனுங் காலத்து அவைகள் கதித்துப் பெரிதாய்த் தடிக்கும். சரீரத்தை வெறுத்துச் சுகத்தை யொழித்துப் பலதவங்களில் முயன்று வல்வினைகளனைத்தையும் வாட்டவல்ல பெரியோர்கள் ஒன்றைச் சொல்லுவார்களாயின் அச்சொல்லினால் மேல்விளையத்தக்கது விளைந்திடுமே யல்லது வீணிற் போகாது.

நமது வேந்தரோ முன்னங் கபிலமுனிவருடைய சிந்தாமணியையொருகாரணமுமில்லாமல் பறித்துக் கொண்டனர். அந் நடத்தையைப்போல் எங்குங் கண்டதுமில்லை. கேட்டதுமில்லை. அதனால் அந்த முனிபுங்கவருக்கு மனக்கொதிப்புண்டாகி உடனே சபித்தனர். அச் சாபந்தான் இதுகாறும் முளையைப்போலிருந்து நாளுக்குநாள் விருத்தியாகி, இப்போது பலித்து வருவதுபோ லிருக்கின்ற தென்றனன். இவை யனைத்தையும் அவனருகிலிருந்து கேட்டிருந்த விசுவசித்து என்னும் அமைச்சன் மிகவும் மனம் கொதிப்புற்று அக் கிரந்த னென்னு மமைச்சனை உறுத்துப் பார்த்து, ஐயா! நீர் நம தமைச்சரிமைக் கேற்ற வார்த்தைகளைப் பேசினீரல்லீர்.

தங்கு மவைக்கேற் றவையறிந்து சாற்றான் சாமி காரியங்கள்
அங்க ணறியான் பிறரையுயர் வாகப் புகழான் கோளுரைப்பான்
சிங்க வருந்தன் கேடறியான் சிறப்பத் தன்னைத் தான்புகழ்வான்
இங்க னுரைத்தோர் பயம்வீணே யென்றங் கவனைத் தடுத்துரைப்பான்.

ஓர் சபையின்கண் அறிந்து பேசாதவர்களும், சாமி காரியங்களை யறியாதவர்களும், பிறரைப் புகழ்கின்றவர்களும், கோளுரைக்கின்றவர்களும், தமக்கு வருங் கேட்டை யறியாதவர்களும், தம்மைத்தாம் புகழ்கின்றவர்களு மாகிய இவர்களெல்லாம் வீணைச் சபித்தவர்களே யன்றி, ஒரு காலத்திலும் யோக்கியர்களாகாரென்று சொல்லினன். இவ்வாறு பிரமதன் கிரந்தன், விசுவசித்து என்னு மமைச்சர் மூவரும் பேசிய வார்த்தைக ளனைத்தையும் விதர்க்குவென்னு மமைச்சன் கேட்டிருந்து உடனே அரசனைப் பார்த்து, ஓ மண்டலேஸ்வரா! யாவர் யாது சொல்லினுஞ் சொல்லுக. யான் தேவரீருக்கு இதமேபேச வல்லேன். அதையே கனமாகக் கொள்ளல் வேண்டும். தேவரீர் வலிமையிற் சிறந்தவர். இந்திரன் முதலிய தேவர்களை யெல்லாஞ் செயித்தவர். தீரத்திற் சிறந்த சேனைகளை அளவற்றதாக வுடையவர். எத் திக்கினுஞ் சத்துருக்க ளில்லாதவர். சிவபிரானாற் சாகா வரம் பெற்றவர். இப்படி எல்லா விதத்தினும் பராக்கிரமத்தினையே யுடைய தேவரீரை யழிக்க வல்லோர்கள் திரிலோகங்களினுமிரார்கள். தேவரீருக்கு முடிவு நேருமென்று எக்காலத்தும் நினைக்க வேண்டாம். தேவரீர் கொண்டிருக்கின்ற சிந்தா குலத்தை விடுத்து, கபில முனிவரைக் கொல்வதற்கான உபாயம் யாதோ அதனை விரைவிற் றேடவேண்டு மென்று சொல்லினன். ஊழின் வசத்தாற் கெடுங் காலத்துக் கெட்ட மதியே நல்லமதியாகத் தோன்று மென்னு மேலோர் வாக்கியத்தின்படி, கணராசனானவன் விதர்க்கு சொன்ன வார்த்தை யினையே மேலாக மதித்து ஊழின் வசத்தாலழிவுகாலம் நேரிட்டவனாகி ஓர் நொடிப்போதில் கபில முனிவர்மீது படையெடுக்குமாறு தனது சேனாபதிகளுக் காக்கியாபித்தனன்.

அதையவன் றந்தையாகிய அபிசித்து மகாராசன் கேட்டு, விழிகள் சிவப்பேறத் தனது புத்திரனைப் பார்த்து, ஓ மைந்தனே! நீ யென்னகாரியஞ் செய்

கின்றனை? தேவர்கள் முனிவர்கள் முதலியயாவருக்கும் மிகுந்த பகையாயினை? அதற் கேற்றபடி பொல்லாத கனவுங் கண்டனை? அது ஒருகாலத்தும் பொய்க்காது, நல்ல கனவினால் நன்மையே வரும். தீய கனவினால் தீமையே வரும். நீ இப்போது தவத்திற் சிறந்த கபில முனிவர் மீது படை யெடுத்துச் செல்லுவது யுக்தமன்று. அமைச்சர், சேனாபதியர் முதலியவர்களோடு அளவற்ற படைகள் கடல்போல விருக்கினும் பெரியோர்களைச் செயிப்பது மிகவும் அரிதாதலால், இனி நீ பிழைக்கும் வகையினைச் சொல்லக்கேள்: இந் நிமிஷத்தில் முன்னர் அவரிடத்தி னின்றும் பறித்து வந்த சிந்தாமணியை மீட்டும் முன்னதாக அவரிடத்திற்குக் கொடுத்தனுப்பிப் பின்னர் நீ அவருக்குக் கோபம்வராதபடி சென்று பணிந்து தோத்திரஞ் செய்து, உன்மீ திருக்கின்ற பிழையினைத் தீர்த்துக் கொள்ளக் கடவை யென்று சொல்லினன். அவை யனைத்தையுங் கல்லை யொத்த உள்ளத்தினனாகிய கணராசன் கேட்டு, எந்தாய்! தேவரீர் அரசாட்சிக்குள் யாவிருக்கினும் தேவரீர் சொல்லும் வார்த்தைகள் உடன் படத்தக்கதன்று. சிறியோர்களாயினோர் மானங் கெடாத காரியங்களை யெடுத்துக் கூறினும், மானத்தைக் காக்க வேண்டினோர் அவைகளைத் தழுவிக் கொள்ளுதல் வேண்டும். பெரியோர்க ளாயினோர் மிகவும் பிரியமாக மனங் கெடும்படியான காரியத்தைச் சொல்லினும், அச் சொல்லுக்கே கேடுவருமென்று சொல்லி தனது தந்தைசொல்லிய வார்த்தைகளை மறுத்துப் படை யெடுத்தனன். இவ்வாறு கணராசன் படையெடுத்ததை இந்திரன் முதலிய தேவர்களறிந்து, இவன் நமதுலகத்தை நோக்கியோ படையெடுத்து வருவதென்று நடுங்கினார்கள். மற்ற திசைக்காவலர்கள், நாகேந்திரர் முதலிய யாவரும் அவ்வாறே நடுங்கினார்கள். இப்படி யாவரும் நடுங்கும்படியாகக் கணராசன் பதினொரு அக்குரோணி சேனைகளுடனே வெளிப்பட்டுக் கபிலமகாமுனிவருடைய ஆசிரமத்திற்கு வந்தான். அச் சமயத்தில் அம் முனிபுங்கவர், தீர்த்தமாடி விபூதி உருத்திராக்க முதலியவைகளை யணிந்துகொண்டு விநாயக மூர்த்திக்குப் பள்ளியெழுச்சித் திருப்பூசையை நடாத்திக்கொண் டிருந்தனர். அப்போது அவர் சீடர்களுட் சிலர் கணராசன் படையெடுத்து வந்ததைப் பார்த்து ஓடிவந்து சுவாமி! முன்னர் தேவரீரிடத்தினின்றுஞ் சிந்தாமணியைப் பறித்துக்கொண்டு சென்றபாதகன் இப்போது தனது படைகளோடும் வந்திருக்கின்றனன், இனி அவனுக்கு நல்ல வாழ்க்கையில்லை. சுவாமிகள் விரைவிலவனைக் கொல்லுமுபாயத்தைத் தேடவேண்டுமென்று சொல்லிக் கொண்டனர். அத் தருணத்தில் கணராசன் முன்செய்திருக்கின்ற தவப்பேற்றினாலே, அவ் வாசிரமத்தின்கண் அவதரித்திருக்கின்ற விநாயகமூர்த்தியைக் கண்டனன்.

அப்போது அவ் விநாயக மூர்த்தியைக் கபிலமுனிவர் எதிர்நின்று பூசிப்பதையும், சித்திபுத்திக ளிருவருஞ் சுவாமியினுடைய இருபக்கங்களி லிருப்பதையும், தான் கனவின்கண் எவ்வாறு கண்டானோ அவ்வாறே சகல ரூபங்

களுந் தோன்றும்படியாகக் கண்டு இவனுடைய படையினால் நமது மாயவுருவம் மாயாமலிராதென்று மனந் துணிந்தனன். இப்பால் விநாயக மூர்த்திக்கு சகஸ்திர நாமங்களால் பரிமளமிருந்த புட்பங்களைக் கொண்டு அருச்சனை செய்திருக்கின்ற கபிலமுனிவர் கஜராசன் வந்திருக்கின்றதைப் பார்த்துத் தமது பூசையினைக் குறைவற நிறைவேற்றிப், பலமுறை சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து வேதாகமங்களினாலே தோத்திரஞ் செய்து, சுவாமீ! தேவர்கள் முனிவர்கள் முதலியோர்க்கு எள்ளளவுமின்றி தீங்குசெய்து வருகின்ற கஜனென்னு மசுரன் இங்ஙனம் வந்திருக்கின்றனன். அப் பாதகன் அடியேற்கு யாதொரு தீங்கினையுஞ் செய்யாதபடி காத்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தனர். உடனே விநாயகமூர்த்தி யானவர் கோபித்தெழுந்த விடத்திலுக் கொப்பாகிய சத்துருக்களை யெல்லாம் அடக்கவுண்டு ஏப்பமிடும்படியாகத் தமது சிங்கவாகனத்தை ஊர்ந்தருளக் கருதினர். அம்மாத்திரத்தில் சகல சத்திகளையும் படைத்தளித் தழிக்கவல்ல பராக்கிரமத்தோடு அவர்க்கருகி லிருக்கின்ற சித்திதேவியார் மதித்து, மிக்க பத்தியோடும் பணிந்தெழுந்து, சுவாமீ! அடர்த்துவந்த சத்துருக்களுக்கு அடியாளிருக்கத் தேவரீர் சென்று யுத்தஞ்செய்ய வேண்டுமோ? தேவரீருடைய கிருபாநோக்கத்தை மாத்திரஞ் சிறிது பாலித்தருளினால் நெருங்கிவந்த சேனைகளையெல்லாம் இமைப்பொழுதில் வென்று, மீட்டுந் தேவரீர் திருவடி நீழற்கண்வந்து சேருவேனென்று சொல்லினர். அதனை விநாயகமூர்த்தி கேட்டருளி அவ்வாறேசென்று செயித்து வருமாறு உத்தரவு செய்து, அவ் வம்மனுடைய கரதலத்திற் பிரவேசித் தருளினர்.

கேட்டீர்களோ சவுனகாதி முனிவர்களே! சுத்த சாட்குண்ணிய மூர்த்தியாகிய விநாயகப் பெருமானுடைய இளைஞனென்னுஞ் சுப்பிரமணிய தேவரது அன்பராயிராநின்ற அகத்தியமுனிவர் கரத்திற்குச் சத்தசாகரங்களும் ஆசமன நீராயிருக்குமெனில், அப் பெருமானுடைய தேவியார் கரத்திற்கு ஊழிக்காலத்தி லுண்டாகின்ற வேலையும், உருத்தெழுந்துவந்த சேனைகளும், அள்ளவும் போதுமோ!

இப்பால் விநாயகப் பெருமான் விடைகொடுத்தவுடன் சித்திதேவி மிக்க மனக்களிப்புற்று யுத்தத்திற்குச் செல்ல சேனையென்ப தொன்றேனு மின்றித் தனிமையாய் யுத்தத்திற்கு வருகின்ற செயலினைக் கஜராசன் பார்த்து, ஓர் பெண்பால் நம்மோடு யுத்தஞ்செய்ய வருவது வெகுசேர்த்தி! வெகுசேர்த்தி! யென்று கோபித்து, அளவற்ற வீரர்களோடுங் கரத்தில் வாளினை யேந்தியெழுந்தனன். அதனை யவன் புத்திரர்களாகிய சுலபனுஞ், சூலபாணியுந் தெரிந்து உடனே அவனைப் பணிந்தெழுந்து எந்தையே! இவ் வுலகின்கண் எங்கட் கொப்பான வீரர்கள் எங்கணு மில்லை. எங்களை அவளோடு யுத்தஞ்செய்யுமாறு கட்டளை யிட்டால் ஓர்நொடிப்போதில் அவளையும், அவளைச் சேர்ந்தவர்களையும் அழித்துத் திரும்புவோமென்று சொன்னார்கள். அப்படி சொல்லிய புத்திரர்

களையும் மற்ற வீரர்களையுங் கஜராசன் பார்த்து, யானிருக்கநுந் தேவர் முதலியோருங் கண்டஞ்சத்தக்க பராக்கிரமத்தோ டிருக்கின்றனன். ஆதலால் அதற்கொரு குறைவில்லாதபடி இப்போது வந்திருக்கின்ற சத்துருக்களைச் செயித்து வருவதானால் அவ்வாறே போய்வாருங்கள். செயமற்றுத் தோல்வியுறுவீர்களாயின் மீட்டும் என் எதிரில் வாராதொழியக் கடவீர்க ளென்று சொல்லி விடைகொடுத்தனன். பின்னர் புத்திரர்களும், மற்ற வீரர்களும் சகல சேனைகளோடுந் திரண்டு எழுந்து ஆர்ப்பரித்து வந்தனர். அதனைச் சித்தி தேவியார் கண்டு, இமைப்போதில் அளவற்ற சேனைகளைச் சிருட்டித்தனள். அவர்களுட் சிலர் பத்து கரங்களோடும், சிலர் ஐந்து கரங்களோடும், சிலர் மூன்று கால்களோடும், சிலர் நான்கு கால்களோடும், சிலர் ஆறு கால்களோடும், சிலர் எட்டு கால்களோடும், சிலர் நான்கு முகத்தோடும், சிலர் ஐந்து முகத்தோடும், சிலர் பன்னிரண்டு முகத்தோடும், சிலர் மூன்று கண்களோடும், சிலர் ஏழு கண்களோடும், சிலர் மேருவையொத்த புஜபல பராக்கிரமத்தோடும் உதித்து வாள், வில், கப்பணம், வச்சிராயுதம், மழுவாயுத முதலிய ஆயுதங்களை யேந்தித் தங்களைப் படைத்தருளிய சித்திதேவியாரது திருவடிகளிற் பணிந்து, விடைபெற்று இரதம், கஜம், துரகம் முதலிய வாகனங்களி லேறிக்கொண்டு ரணபேரி, ஜெயபேரி முதலியவைகளைச் சத்தசாகரங்களும் அஞ்சத்தக்கதாக முழக்கிக் குடை, கொடி, ஆலவட்டம் முதலிய சின்னங்கள் பல மறுங்கிலும் அடர்ந்து வரும்படியாக ஆர்ப்பரித்து நெருங்கினார்கள். அவர்களைக் கஜராஜனுடைய சேனைகள் கண்டு, முன்னர் நமதெதிரில் ஒரு துணையு மின்றித் தனியாக வந்தவிவள், ஓர் நொடிப்போதில் ஒவ்வோ ருலகத்தினை ஒவ்வொருவயிற்று ளடக்க வல்ல அளவற்ற பூதகணங்களைச் சிருட்டித்து, அவைகட் கெல்லாம் எண்ணிறந்த படைத் துணைகளையும் உண்டாக்கினள். இவளோடு யுத்தஞ்செய்து ஜெயமடைந்தாலும், அல்லது யுத்தகளத்திற்றானே வீழ்ந் திறந்தாலும் அஃது நமக்குக் கீர்த்தியே யென்று துணிவுற்றுத் தமது சேனைகளெல்லாஞ் சிரமப்படி வருத்து, விக்கவித் தென்பவன் நாற்பதனோடும், விதந்து வென்பவன் மேருபுயனோடும், கிரந்த னென்பவன் முக்கணனோடும், பிரமத னென்பவன் அறுபதனோடும், சூலபாணி யென்பவன் பன்னிரு முகனோடும், சுலப னென்பவன் சித்தியம்மையோடும் எதிர்த்து யுத்தஞ் செய்தார்கள். இவர்களன்றி இருதிறப் படைகளிலு முள்ள ஏனைய வீரர்கள் யாவரும் ஒருவரை யொருவர் இனமறிந் தெதிர்த்துப் போர்செய்தார்கள்.

இவ்வாறு சகல சேனைகளுங் கைகலந்து போர் விளைக்கையில், அளவற்ற யானைகளும், புரவிகளும் இறந்துவீழ்ந்தன. எண்ணிறந்த இரதங்கள் முறிந்தொடிந்தன. சிலர் உயிர்கள் விண் குடியேறின. சிலர் உடல்கள் வாளினால் தைக்கப்பட்டுச் சோனைமழை போல அவைகளி னின்றும் பெருகிய உதிரமானது நதியாகச் சென்று கடலிற் பாய்ந்தது. குடல்கள், நரல்கள், உறுப்புகள்,

குருதிகள், தோல்கள், மூளைகள், கொழுப்புகள், நிணங்கள், உரோமங்கள் முதலியவைகளெல்லாம் வேறு வேறாக நெருங்க நின்ற அச்செருக்களம் எவ்வாறிருந்ததென்னில்: இவைகளனைத்துங் கூடி ஒன்றுபட நின்ற அற்ப வுடலை ஓர் பொருளாக அகத்தில் மதிக்கின்றோர் யாவர்? அவர்களை இவ் வுடலின் மாட்சி இவ்வகைத்தே யெனக் காட்டி அமைவித்ததுபோ லிருந்தது.

இப்பால் சித்திதேவியி னுடைய சேனைகளுங், கணராசனுடைய சேனைகளும் வலியோடும், வஞ்சினத்தோடும் முறைமைப்படி படைகளனைத்தையுந் தூண்டிப் போர் செய்துவருகையில், சித்திதேவியி னுடைய சேனைகட்குச் சிறிது வலி குன்றியது. அதனைத் தேவி கண்டு, உடனே யாவரும் அதிசய முறும்படியாக அதிக உக்கிரத்தோடும் ஓர் வீரனைச் சிருட்டித்தனள். அவ் வீரன் இலக்கம் வாளிகளோடும், இலக்கம் வில்லுகளோடும், இலக்கம் கேடயங்களோடும், இலக்கங் கரவாள்களொடும் உதித்து, ஏனைய படைகளுள் ஒவ்வொன்றுக்கு இலக்கம் இலக்கமாக வேந்திய இலக்கம் வீரர்களை ஓர் கொடிப்பொழுதில் சங்கரிக்கத் தக்க திறத்தோடும், இலக்கனென்னும் பெயரினை வகித்து, கணராஜனுடைய சேனா சமுத்திரங்களிற் புகுந்து, தான் ஒருவனே சத்துருக்களாற் றூண்டப்பட்டு எதிர்க்கும் படைகள் யாதோ அந்தப் படைகட்கெல்லாம் அந்தந்தவாறே படைகளைத் தூண்ட, மாற்றலர்கள் வேறு வேறு இலக்கமிலக்கமாகக் கூடிச் சுற்றிவளைந்து போர்செய்ய, அவ்வவர்கண்மீது அளவற்ற பாணங்களை மேகம்போலச் சொரிந்து கணராஜன் கொண்டிருக்கின்ற இறுமாப் பழியும்படியாகச் சகல சேனைகளையும் ஓர் கணப்பொழுதில் மடித்து, அவ் வரசனுடைய அமைச்சர்களெல்லாம் பின்னிட்டோடும்படியாக முடுக்கி, அவனுடைய புத்திரர் இருவரையும் அவ்வவர்கள் இரதத்தோடு கைப்பிடியாகப் பிடித்து, விநாயகமூர்த்தி சந்நிதானத்திற் கொண்டுவந்து விட்டு, விண்ணுலகமும் மண்ணுலகமும் பணியத்தக்க அவரடி பாத பதுமங்களைப் பலமுறையும் பணிந்தெழுந்து சுவாமீ! இவர்கள் கணராச னுடைய குமாரர்கள், தேவரீர் சரணாரவிந்தங்களிற் றஞ்சமடைந்தனர். தேவரீர் திருவருளை யெதிர்த்து வந்தவர்களெல்லா மிறந்தனர். சிலர் பயந் தோடிப்போயினர். கணராசன் மாத்திரம் எம்மோடு வந்து எதிர்த்தவ னல்லன். சுவாமிகளுடைய திருவருளினமைந்த திருக்கரத்தினால் இறக்கின்றோர்கள் யாவராயினும் அவர்களெல்லாம் முத்திப் பெற்றிருக்கின்றமையால், அவ்வரசனையும் சுவாமிகளே சங்கரித்து முத்தி கொடுத்தருளல் வேண்டும். சூலபாணியென்றுஞ், சுலபனென்றுஞ் சொல்லாநின்ற இவர்கள் மகா சத்த வீரர்கள். இவர்கள் என்னோடு நெடுநேரம் அளவற்ற யுத்தங்களைச் செய்து முடிவில் எனது காத்தி கைப்பட்டுக் கொண்டனர். ஓ குணக்குன்றமே! இவர்களிடத்தில் சீலமுடையோ ராதலால் இவர்கட்கு அக் கணராசனுடைய அரசாட்சியைக் கொடுத்துக் காத்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தனன். அவ்வாறே விநாயகமூர்த்தி அவர்களிடத்திற் கிருபையுற் றிருந்தனர்.

இப்பால் போர்க்களத்தில் நின்றும் ஓடிப்போன மந்திரித் தலைவர்களெல்லாங் கணராசனை யடைந்தனர். அவருள் சூட்சும புத்தியினையுடைய சிரத்தனென்பவன் அரசனெதிரிற் சென்று, தேவரீர் குமாரர்கள் இருவரும் யுத்தஞ் செய்யச் சென்றார்களே அவர்கள் செய்த காரியம் யாதெனத் தெரியுமோ வென்று கேட்டுக் கொண்டிருக்கின்ற சமயத்தில், ஒரு தூதுவனோடி வந்து, உடல் வெயர்க்கவும், முகம் வாடவுமாக அரசனெதிரில் நின்று, இரு விழிகளினும் நீரைச் சொரிந்து, அண்ணலே! தேவரீர் குமாரர்கள் சதுரங்க சேனைகளோடுஞ் சென்று, கபில முனிவருடைய சேனைகளெல்லாஞ் சின்னபின்னமாக வாட்டி வருகின்ற தருணத்தில் ஒரு வீரன் அளவற்ற கரங்களோடு முளைத்து அந்தந்தக் கரங்கடோறும் அளவற்ற ஆயுதங்களை யேந்தி, யுத்த களத்திலுள்ள நமது சேனைகளெல்லாம் நடுங்கி யொடுங்கும்படியாக வந்து நின்றனன். இவ்வாறு அவன் வந்ததைக் கண்டனனன்றி அவன் யுத்தஞ் செய்யக் கண்டிலன். பின்னர் ஓர் கொடிப்பொழுதில் எல்லாச் சேனைகளும் பூமியின்கண் பிணம்பிணமாய் விழக்கண்டனன். அவன் பராக்கிரமத்தை என்னென்று பேசவல்லேன்; இம் மந்திரத்தலைவர்கள் எதிர்த்துப் படையெடுப்பதற்கு முன்னே அவ் வீரன் இவர்கள்பேரில் ஒவ்வொரு பாணங்களை யேவி இவர்களுடைய சாமார்த்தியங்களை யெல்லா மழித்தனன். உடனே இவர்கள் அவனோடு கிடைத்து யுத்தஞ் செய்வதற்கஞ்சி ஓடிவந்து விட்டனர். சிறிதுநேரமேனு மிருந்து போர்செய்கின்ற பெருந் திறத்தினராகிய தேவரீர் குமாரர்களை, அவ்வீரன் தேரோடும் வளைத்துக் கைப்பிடியாகப் பிடித்துக்கொண்டு போய்த் தனது படைவீட்டில் வைத்திருந்தனன். பின்னரவர்கள் எவ்வாறாயினரோ அதனை யறிந்திலனென்று சொல்லினன். அச் சொல்லானது தனது செவியில் நுழைவதன்முன் மலைபோலத் தேரினின்றும் பூமியின்கண் வீழ்ந்து, புரண்டு புரண்டு, அழுது அழுது, (மதம் பொழிகின்ற யானைகளையெல்லாங் கொல்லத் தக்க சிங்கமானது தனது குட்டிகளைச் சரபப்பட்சி கொண்டுபோக வருந்தப் பரிவதுபோல) அறிவழிந்து, மூர்ச்சை யுற்றுப், பின்ன ரருகிருந்தவர்கள் தெளிவிக்கத் தெளிந்து, ஓ என்னருமைச் செல்வனாகிய சூலபாணியே! ஓ பராக்கிரம சாலியாகிய சுலபனே? ஓ எனது புத்திர சோபத்தினைத் தீர்த்த பெருமான்களே! ஓயென் மனதுக்குத் தெவிட்டாத இன்பத்தைத் தரும் அமுதத்தைப் போன்ற புத்திர சிகாமணிகளே! உங்களை மலைபோல வெண்ணி யிருந்த வென்னை இவ்விதத் துக்க சாகரத்து ளழுத்தி நீங்கி விடலாமோ? விரைவில் ஓடிவந்து எனக்கோர் தைரியத்தைச் சொல்லீர்களோ? மன்மதனை யொத்த சுந்தரமும், வீர சிங்கத்திலும் மேம்பட்ட வல்லமையும், கல்வித் திறங்களும், சாத்திர சம்பத்துகளும் பெற்று, வில்வித்தை முதலிய பராக்கிரமங்களில் மிகுந்து, சகல லோகங்களையும் திக்குவிஜயஞ் செய்து, தேவர் தானவர் முதலியோர்களை எல்லாம்வென்று, அளவற்ற கீர்த்திகளை எனக் குண்டாகச் செய்த நீங்கள் இன்று ஒருவன் கையிலகப்பட்டீர்களே! புஜபல பராக்கிரம சாலிகளாகிய உங்களை யொருவன்

பிடித்துச் சென்ற செதியைக் கேட்டவுடன் இந்தப்பாழ்த்த வுயிர் நீங்காமல் இன்னமும் வருந்தித் தாபித்திருக்கின்றதே! ஆயினும், எனது ஊக்கம், தேயசு, ஒளி, ஆண்மை, வீரம், குலம், அரசாட்சி முதலியயாவும் இன்றுடனிறந்து போனதால் யான் செத்தவனைப்போலாயினேன். ஓ குமாரர்களே! உங்களுக்கு வந்த விபத்தை நினைக்குந்தோறும் என்மனஞ் சோர்வுறுகின்றதே! ஒருவராற்றானும் பிழைபெற்றிருக்கப் படவில்லையே! ஐயையோ! இனி என்ன செய்யக்கடவேன்! இனி என்னசெய்யக் கடவேன்! என்று இவ்வாறு புலம்பி வருந்தும் அரசனை மந்திரித்தலைவர்கள் நோக்கி, இராஜாதிராசனே! உயிர் போவதாயினும் விவேகமுள்ளபேர் மலைபோலசைவற்றிருப்பார்களேயன்றி, ஆயாசமுறார்கள். உனதருமைச் செல்வராகிய மைந்தர்கள் இவ் விருவரே யென்று யாவரும் சொல்லிப் புகழும்படி சமராடி அளவற்ற கவந்தங்களாடும் படிபகைவருடைய சேனையின்கணுள்ள வீரர்களை யெல்லாங் கொன்று, அவர்களுயிரைப் பானஞ்செய்து வந்தனர். பின்னர் ஏதோ ஒரு கன்மவசத்தினால் அவ் விலக்கன் கரத்தில் அகப்பட்டுக் கொண்டனர். சுத்தவீரராயிருக்கின்ற தேவரீரே அக் காரணத்தை நினைந்து கண்பிசைந்து சரீர மெலிவெய்தப் புலம்பினால் இனி என்ன காரியங்கள் நடக்கும்? நாமெல்லோரு மொருமுகமாய்ச் சென்று, அவ் விலக்கனையும் அவன் சார்வுற்றிருக்குங் கபிலமுனிவனையுங் கொன்றுவிடுவோம். ஒருவேளை தேவரீர் குமாரர்கள் உயிரோடிருப்பாராயின், உடனே அழைத்துக்கொண்டு வருவோமென்று சொல்லினர்.

❖

அவை யனைத்தையுங் கணராசன் கேட்டுச், சிறிது மனந்தேறித் தான் இரதத்தின்மீதும், மந்திரித்தலைவர்கள் மதயானைகளின்மீதும், ஆரோகணித்து, முன்னம் போர்க்களத்தினின்றுந் தப்பிப் பிழைத்திருக்கின்ற சேனைகளெல்லாந் தம்மைப் புடைசூழ்ந்துவர, இலக்கவீரன் எங்ஙனமிருக்கின்றனனென்று தேடிக்கொண்டு விநாயகமூர்த்தி எழுந்தருளியிருக்கின்ற விடத்திற்சென்று, மலக்குறும்புகளை யகன்ற, யோகீஸ்வரர்களுக்குங் கிடைத்தற்கரிய அவரது திருமேனியை முன்செய்த தவப்பயத்தினாற் கண்டனராகி, சித்திதேவி இடப்புறத்திலும், புத்திதேவி வலப்புறத்திலும் வீற்றிருக்கச் சிங்காசனத்தினை யூர்ந்து, மோதகத்தை யேந்திய திருக்கரத்தினோடிருக்கின்ற காட்சியைப் பலமுறை தரிசித்து, இதுகாறும் இவ்விதத்தினைப்போல எவரையுங் கண்டதில்லையென்று அதிசயித்தார்கள். அப்போது விநாயகப் பெருமான் முன்னர் துதிசெய்து கொண்டிருந்த கபிலமுனிவரைக் கணராசன் பார்த்து கதிரவன் முன்னிருக்குங் காந்தமானது கனலைக் கக்குமாறுபோலச் சினக்கனலை இடைவிடாது கொட்டுமுகத்தினனாய், ஓ கபிலா! கருடனை நாகங்கள் கூடிக் கொல்லுவதுண்டோ, என்னை வெல்லுவதற்கு நீ இப்பருடனைத் தாபித்தனை? இவனை எனது இரைக்குப் பாத்திரனாகும்படி விடக்கடவை. விடாமற் போவையேல் அழலைக்கக்காநின்ற ஒரே கணையினால் உன்னையும், உனக்குச்

சார்வாகவிருக்கின்ற இவனையும் ஓர் கணப்போதிற் கொன்றுவிடுவேன். இவ்வுலகின்கணுள்ள இருடிகளாயினோர் கருணையே வடிவமாகிக் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் என்னும் அறுவகைக் குற்றங்களையுங் கடிந்து ஆண்டவனுடைய திருவடிகளை யடைவார்கள். இக் குணங்கட்கெல்லா மாறாகப் பெரும்பாலும் பொருளினையே இச்சித்திருக்கின்ற நீ எவ்வகையாய் இருடியாயினையோ அறிந்திலன்? என்னை எதிர்த்துவந்த பகைவர்கள் எத்தன்மைத்தான பராக்கிரமசாலிகளே யாயினும் அவர்களுக் கெல்லாம் அரிட்டமே செய்யும்படியாகத் தோன்றியிருக்கின்றனன். இத்தன்மைத்தாகிய எனக்கு ஓரரிட்டமேனுஞ்செய்ய வுங்களாலாகுமா? உங்களாலே நீங்கள் கெட்டீர்கள். இனியாகிலும் மேற்சொன்னபடி நடந்துக்கொள்ளக் கடவையென்று சொல்லினன்.

இவை யனைத்தையுங் கபிலமுனிவர் கேட்டுக் கண்களினனற்பொறி எழும்படியாகக் கோபித்து, அடா உண்டவீட்டிற் கிரண்டகஞ்செய்யவல்ல துரோகி! கடல்போன்ற பாவங்கட்கெல்லாம் நீயுறைவிடமாயினை? தேவர்கள் முதலாயினோரை யெல்லாந் தாழ்த்திப், பன்றியைப் போல மையலென்னுஞ் சேற்றில் மயங்கி, வீழ்ந்து கிடக்கின்றனை உன்னைக் கொல்லுவதற்கு மனோவாக்குக் காயங்களினாலும் அறிதற்கரிய பரம் பொருளே விநாயக மூர்த்தியாக வந்து அவதரித் திருக்கின்றனர். குரைக்கின்ற நாய் கடிக்க வறியாதெனச் சொல்லுவார்கள்; அதுபோல நீயுங் கடைவாய் நுரைக்கும்படி கற்றதெல்லாம் மொழிகின்றனை. இனி உதிர வெள்ளந் திரைகொண்டு மோதும் படியாக உனது சேனைகளனைத்தும் நாசமாகிக் கடல்போன்ற பேரொலியோடு உனது மனைவிய ரெல்லாங் கூக்குரலிட்டழும்படி இறக்கப் போகின்றனை, ஆதலால் நீ இப்போது கவிழுஞ் சமயத்துற்ற கப்ப லோட்டம் போலவும், அவியுஞ் சமயத்துற்ற விளக்கொளி போலவுந் துள்ளுகின்றனை? இனியேனும் ஆதித்தவனை ஆட்கொள்ள வல்ல விநாயக மூர்த்தியினுடைய திருவடிகளிற் சரணாகதி யடைந்து உய்யக் கடவை யென்றனர். இவை யனைத்தையுங் கணராசன் கேட்டு, வடவாக்கினியைப் போலக் கொதித்தெழுந்து பர்வதங்களையும் உருவிப்பாய வல்ல தனது வில்லினை யெடுத்து வளைத்து விழிகளினின்றும் அனற்பொறி எழும்படியாகச் சீறி விநாயகப் பெருமானுடைய ஒப்பற்றதிருநுதலில் ஓர் கணையும், இரண்டு புயங்களில் இரண்டு கணையும், தாமரை மலரையொத்த இரண்டு திருவடிகளில் இரண்டு கணையும் விடுத்தனன். அவைகள் அவன் குறித்து விட்ட விடத்திற் றப்பாமற் சென்று கீறியின. பின்னர் விநாயகப் பெருமான் இருந்த ஆசனத்தினின்று மெழாமல் தமது கரத்திலேந்திய மழுவாயுதத்தினைப் பார்த்து நீ தேவர்கள் முனிவர்கள் முதலாயினோரை வருத்துகின்ற இப்பாதகன் சிரத்தினைக் கடிந்து மீளக்கடவை எனப் பணித்து விட்டனர். அம் மாத்திரத்தில் மழுவாயுதமானது கோடி சூரியோதயம் போலப்பிரகாசித்துப் பிரசண்ட மாருதம்போல வெழுந்து ஆலகால விடத்தினைப்போலச்

சிறிவர, அதனாற் பன்னிரண்டு சூரியர்களுங் கரிந்தார்கள். எட்டுத் திசைகளுஞ் சோதி மயமாயின. அட்ட குலாசலங்களும் எரிந்துபோயின. பூமிகளெல்லாம் வெடித்தன. கடல் முழுவதும் வறண்டு விட்டது. அண்ட கடாகங்க ளெல்லாம் நொறுங்கின. உலகங்கள் எல்லாம் முழுவதும் நீறு பொழிந்து விட்டன. இவ்வாறு விநாயகப் பெருமான் விடுத்தருளிய அம் மழுவாயுதமானது சகல லோகங்களிலுஞ் சென்றுலாவி, யாவரும் பயப் பிராந்தி கொள்ளும் படியாக அளவற்ற உற்பாதங்களை விளைத்து, மகா பராக்கிரம சாலியாகிய கணராசனுடைய முடியை யறுத்து நிலத்தில் வீழ்த்தி, யிட்டும் உலகத்தை யெல்லாம் பழயபடி படைத்து, தெய்வ கங்கையிற் சென்று ஸ்நானஞ் செய்து வந்து தீனசரண்யராகிய விநாயகப் பெருமானுடைய திருக்கரத்தில் யதாப் பிரகாரஞ் சேர்ந்திருந்தது. உடனே தேவர்களெல்லாம் புஷ்ப வருஷதஞ் சொரிந்தார்கள்.

ஓ சவுனகாதி முனிவர்களே! முன்னொரு காலத்தில் மகா விஷ்ணுவின் புத்திரனாகிய மன்மதனானவன் இவ்விநாயகப் பெருமானுடைய தந்தையாகிய சிவபிரான் மீது மலர் வடிவாகிய பஞ்ச பாணங்களை யேவி யிறந்தனன். இப்போது, பிரமன் புத்திரனாகிய கணராசனானவன் எமது தந்தையாகிய விநாயகப் பெருமான்மீது அழல் வடிவாகிய பஞ்ச பாணங்களை யேவி யிறந்தனன். இவர்களெய்த அப் பஞ்ச பாணங்களையும் யோசிக்கு மிடத்து, அவைகள் தங்களைக் கொல்ல வந்த அறப்பகையாகிய பஞ்சமா பாதகங்களைப் போலும். இப்பால் தேவர்களெல்லாம் உவந்து உறங்கும் படியாக ஓங்கி யிருந்த கணராசனுடைய ஆக்கினை யனைத்தும் ஓர் நொடியளவிற் புலர்ந்து நீக்குமாறு எழுந்தருளிவந்த புண்ணிய மூர்த்தியாகிய விநாயகப் பெருமானது திருவடிகளைப் பணிய வருவான் போலச், சூரியனானவன் தனது பகையாகிய இருட் கூட்டங்களை யெல்லாங் களைந்து கீழ்த்திசைக் கடலி லுதயமாயினன். கணராசனும் அவன் சேனைகளும் ஒருமுகூர்த்த வேளையில் மடிந்து நாசமாயினதைக் கேட்ட யாவரும் ஆச்சரிய மடைந்தார்கள். விநாயகப் பெருமான் ஏவிய மழுவாயுதமானது கணராசனது உயிரை வாங்குங் காலத்துப் பயந்தோடிய அமைச்சர் முதலிய யாவரும் அவன் தந்தையாகிய அபிசித்து மகாராசனிடத்தில் அடைந்தனர். பின்னரவ் வபிசித்து மகாராசன், தனது குமாரன் படையெடுத்துச் சென்றது முதல் அவன் இறந்த வரையில் நடந்த சரித்திரங்களை யெல்லாம் அமைச்சர் சொல்லக் கேட்டுத் தனது சுற்றத்தினரோடுஞ் சூழ்ந்து பிரலாபித்து, ஓவென்றலறி, மதிமருண்டு, புத்திரசோக மென்கின்ற வாயுமோதப்பட்டுப், பெருமூச்செறிந்து, சரீர முழுவதுங் காந்தி, விழிகளில் நீர்ப் பசுமையுற்று, உதிரம் பெருக வெயர்த்து, கடுநடுங்கி, பிராணன் நிலைபெறாமல் அலைந்து, ஓர் மதக்களிற்றினை யொத்த குமாரனே! எதிர்த்து வந்த சத்துருக்களுக் குயமனைப் போன்றவனே! மதித்து வந்தோர்களை மகாவிஷ்ணுவைப் போலக் காக்கும் தீரனே! மகமேருகிரியையொத்து பிரகாசிக்கும் கீர்த்திப்பிரதாபனே!

உனது சரீரமானது நரிகளாலும், கழுகுகளாலும், புரட்டியிடப்பட்டதே? ஓ எனதரிய தவத்திற்றோன்றிய புதல்வனே! நீ என்குலத்தை ஆலமரத்தின் கீழ் விழுதுபோல் ஆதரிப்பையென் றிருந்தேனே? ஆ! ஆ! என்ன காரியஞ்செய்தனை? என்னகாரியஞ் செய்தனை? ஐயையோ! தவத்திற்சிறந்த தாபதர்களையும் பகைக்கலாகுமோ? நீ இவ்வுலகில் என் கண்ணெதிரில் வீழ்ந்து எனது நெஞ்சை உருகவைத்தனையே? முன்னே இதமுடைப்பச் சொன்னோர்களுடைய சொற்களைச் சிறிதுங் கேளாது பின்னே அகிதமுடைப்பச் சொன்னோர்களுடைய வார்த்தைகளையே துணையாகக் கொண்டு சென்று சத்துருக்களெல்லாம் நகைக்கும்படியாக ஓர் கணப்போதி லிறந்தனையே? யென்று புலம்பியிருக்கின்ற அபிசித்து மகாராசனைக் கோத்தனென்னும் மந்திரி நெருங்கி, எமதிறைவனே! யான்கூறும் வசனங்களைத் தயைசெய்து கேட்டருள்க. தேவரீர் இவ்வாறு விம்மி விம்மி யழுவது பழுதாகும். இவ்வுலகத்தில் உற்றவர்களழுகின்ற கண்ணீரானது செத்தவர்கள் முகத்தில் வீழ்வது உண்மையே யாயினும், அநித்திய மெய்தி உடலைக் கருதி அவலித் திருப்பதி லென்னபயன். இனி இறந்தோர்க்கு நடத்தவேண்டிய கருமாதிகளை இனிது முடிப்பதேமாண்பென்று அவனது கண்ணீரைத் துடைத்து அவனையும் அவன் சுற்றத்தினரையும் அழைத்துக்கொண்டு சென்று, போர்க்களத்தையடைந்து, அங்கு அவன் புதல்வன் வீழ்ந்துகிடக்கின்றதைக் காண்பித்தனன். அதை அபிசித்துமகாராசன் கண்டவுடன், கதறிக் கலங்கிச் சோபித்து மேல் வீழ்ந்து சிரம் வேறு, உடல் வேறாக விருக்கின்ற கோலத்தைக் காணுந்தோறும் பதைபதைத்து, நிலத்தில் வீழ்ந்து புரண்டு, சர்ப்பத்தைப் போலப் பெருமூச்செறிந்து, அப்பனே! சத்துருக்களிடத்தி லிருக்கின்ற கோபமானது இன்னமும் உனது திருமுகமண்டலத்தில் மாறவில்லையே? உனது சிறந்த மானமும், வீரமும், வலியும் எங்ஙனஞ்சென் றொளித்தனவோ? உன்னையொத்த சவுரியவான்களை இனி எங்ஙனங் காணப்போகின்றேன்? ஐயையோ! அடங்கிய அரசர்களெல்லாம் அடிகளை வருடவுந், தேவர்களெல்லாம் வீணைவாசிக்கவுமாகப் பஞ்சணை யமளியிற் பள்ளிகொண்டவனாகிய வுனக்கு இச் செங்களத்திற் பள்ளிகொள்ளநேரிட்டதே? அரம்பாஸ்திரீகள் எதிரெதிர்நின்று ஆடும்படியான நினது சமுகத்தில் இப்போது பேய்கள்கூடி அவ்வாறு கூத்தாடுகின்றனவே, குளிர்ந்த சாந்தாற்றிகளால் வீசப்பட்டிருந்த உனது சரீரமானது இப்போது கழுகின் சிறகினால் வீசப்பட் டிருக்கின்றதே? புட்ப விதான நீழலினும், இரதத்தின் கவிகை நீழலினும் தங்கி யிருந்த நினது வடிவமானது இப்போது பருந்தின் சிறகா லுண்டான நீழலில் வதிகின்றதே? சிறந்த கவரிமானுடையவாலினை விரட்டாநின்ற நினதுமருங்குல்கள் இப்போது நரி, நாய் முதலியவைகளின் வால்களா லிரட்ட நின்றனவே? பரிமளமிகுந்த சந்தனாதிகளைத் திமிர்ந்திராநின்ற நினது மார்பானது இப்போது புலவினை வீசும் உதிரங்கள் பூசவிருக்கின்றதே? காம்பு களைந்த மல்லிகை, முல்லை யாதிகளாற் செய்த மெல்லிய அமளியின்மீது பள்ளிகொள்ளும் நினது வடிவமானது இப்போது

பருக்கைக் கற்கள் நெருங்கிய போர்க்களத்தைப் பொறுக்கின்றதே? பேரிகை, குடமுழா, துந்துமை, முரசு முதலிய வாத்திய வோசைக ளெல்லாம் நாய், நரி, பேய், புள் முதலியவைகளின் ஓசைக ளாயினவே? என்றிவ்வாறு தனது புத்திர னுடைய பிரதாபத்தை யெல்லாஞ் சொல்லிச் சொல்லித் துக்கித்து, பிணக் குவைகளின் மத்தியில் வீழ்ந்திருக்கின்ற புத்திரனை யெடுத்துச் சந்தனக் கட்டைகளையும், அகிற் கட்டைகளையும் பரப்பி அதன்மீது அவனை வளர்த்தி மங்கையர்களாற் சூடும் மலர் மாலையினை யுடையோனுக்குத் தனது ஊழின் வசத்தால் அழன்மாலையைச் சூட்டி, அவ்வழலை நாற்புறங்களினும் மூட்டி, இதுகாறுங் கணராசனுடைய பராக்கிரமத்தினுக் கஞ்சி யிருந்த தேவர்கள் முதலாயினோர் கொண்ட வயிற்றெரிவை யெல்லா மாற்றி, நமதருமைப் புதல்வனாசை இன்றொடொழிந்ததே யென்னும் வயிற்றெரிவோடுந் தனது அரண்மனையிற் சென்று மறுதினம் மந்திரிகளை வரவழைத்து முன்னர் தனது புத்திரன் கவர்ந்து வந்த சிந்தாமணியைக் கைக்கொண்டு கபிலமுனிவருடைய ஆச்சிரமத்தினை யடைந்து, சித்திபுத்தி சமேதரா யெழுந்தருளி யிராநின்ற விநாயகப் பெருமானுடைய திருவடி முன்பு அச் சிந்தாமணியினை வைத்து அங்கிருப்பவ ரெல்லா மதிசயமுறப் பலமுறை தீர்க்க தண்டஞ் செய்து, அக்கடவுளை வழிபட்ட கபில முனிவரையுஞ் சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து மீட்டும்.

விநாயக மூர்த்தி சந்நிதியின் முன்னர் வந்து நின்றாகிய தொண்டர்களுக் கமைத்த வினைகளைப் போக்கிப் பாது காத்தருளும் பக்த வத்சலனே! பாசபந்தங்களைக் களைந்து நன்னெறிகளை யநுட்டித்து வரும் மகாத்துமாக்களுக் கிருப்பிடமாகிய ஞானநாயகனே! விண்ணுலகிற் சிறந்திருக்கும் வானவருக்குத் தலைமை பெற்றிருக்கின்ற தேவதேவோத்தமனே! அஞ்ஞான விருளைப் போக்கிப் பேரானந்தத்தைப் பெறச் செய்யவல்ல பரஞ்சுடரே! வேதாகமங்கள் முதலியவற்று லெண்ணி யளவிடுதற்கரிய கர்த்தனே! சராசரப் பிரபஞ்சங்களனைத்தையும் படைத்து, அவைகட்குரிய வினைப் போகங்களை யூட்டி யாடும் பரவஸ்துவே! தேவர்களிற் சிரேஷ்டமாக விளங்குந் திரிமூர்த்திகளில் முதன்மை பெற்றிருக்கின்ற சிவபிரான் பெற்றருளிய கடவுளே! சிருட்டி திதிசங்கார மென்னு முத்தொழில்களை நடாத்திவரு மும்மூர்த்திகளுக்கும் முதன்மையாக விருக்கின்ற விநாயகக் கடவுளே! எல்லாவுயிர்களுந் தேவரீர் வயத்தனென் றறியமாட்டாத அற்பகுணத்தினாற் கணனென்பவன் அவமானத்திற் கஞ்சி சத்துருவைப்போல வந்து தேவரீருடைய மழுவாயுதத்தா லிறந்து மேலான கதியினையடைந்தனன்.

அலகி னெடும்புண் ணியவயத்தா லெய்ப்ப வுயர்மா னிடப்பிறவி
குலவு மதனைப் பெற்றவர்நின் குரைபூங் கழற்றாள் வணங்காரேல்
பலனென் பெறுவர் பன்னவரும் பரமா நினைச்சூழ்ந் திலராயின்
கலதி யுடைய ராய்க்கீழாய்க் கவிழ்வ ரிதுசத் தியமாமே.

தருதா ரணையே தியானமே சமாதி யெயின் நிலைமருவி
வருமா தவர்க ளிருதயத்தின் வயங்கா நின்ற பரம்பொருளே
ஒருவா விருவர்க் கறியாதாய் மூவ ராயு மொளிர்பவனே
பெருநான் மறைக்கு மெட்டாத பெருமான் பேரா னந்தமே.

சரியை கிரியை வளர்யோகந் தக்க ஞான மெனநின்றே
உரிய பணிக ளியற்றுநருக் குவப்புற் றவ்வப் பயன்களையே
விரிய வுதவும் பெருங்கருணை விமலா நீயிங் கவதரித்துத்
தெரிய வெதிர்நின் றனையதனாற் றேவா நின்னைச் சரணடைந்தேன்.

சுவாமீ! அளவற்ற புண்ணியங்களினா லபிப்பது உயர்ந்த மானிடப் பிறவி அதனைப் பெற்றபேர்கள் தேவரீர் திருவடிகளில் வணங்காராயின் என்னபயனை யடையப் போகின்றனர். சிறந்த தேவர்களே யாயினுந் தேவரீரைச் சரணடையாராயின், உடனே அவர்கட்குக் கலதி யுண்டாகும். அதனால் அவர்கட்கு இழிந்த யோனிகள் தோறும் பிறக்கநேரிய வரும். இஃது வேதாகமங்களிற் கூறி யிருக்கின்ற சத்தியமன்றோ? தாரணை, தியானம், சமாதி யென்னும் இவைகளை மருவி யிருக்கின்ற மாதவத்தவர்களது உள்ளத்தின்கண் பிரகாசிக்கும் பரம்பொருளே! பிரமனும் விண்டுவினுங் காண்டற் கரிய தெய்வமே! திரிமூர்த்தி சொரூபமா யிருக்கின்ற கடவுளே! நான் மறைகட்கு மெட்டாத எனது பேரானந்த சொரூபமா யிருக்கின்ற பெருமானே! சரியை, கிரியை, யோக, ஞானமென்னு நான்கியல்பின் கண்ணு மிருந்து பணிசெய்யு மன்பினர்க்கு அதனதன் பயன்களை விரியவுதவும் பெருங் கருணையினை யுடைய விமலனே! தேவரீர் இவ்வாசிரமத்தி லவதரித்து அடியேங்கள் காணுமாறெதிர் நின்றீராதலால், தேவரீர் பாதபதுமங்களில் அடியேன் சரணடைந்தேன். இஃதன்றிப் பிறவிகடோறுஞ்செய்து முற்றிய தபோபலத்தினால் முன்னமே தேவரீரது திவ்விய சரணாரவிந்தங்களை யடுத்து அருள் பெற்ற சுபலனையுங், குலபாலினியையும் வருண லொழுக்கங்களி னின்றும் வழாத வண்ணமருளிக் கணராசனுடைய அரசுரிமையை அவர்கள் பால் ஒப்புவித்து எண்ணித் துணியுங் காரியங்களில் தனக்கொருவர் நிகரில்லாதவனாகிய கிரந்தனை மாத்திரம் அவர்கட்கு அமைச்சனாக்கி அடியேனை இவ்வுடற் பற்றினின்றும் நீக்கி உயர்ந்த ஞான வைராக்கியச் செல்வத்தினை யளித் தருளல் வேண்டும். இதுதான் எனது கருத்தாகும். இப்பால் தேவரீரது கிருபை எவ்வாறோ வென்று விண்ணப்பஞ் செய்தனன்.

இவ்வாறு சத்தியசந்தனாகிய அபிசித்து மகாராசன் கூறிய அனைத்தையும் விநாயகப் பெருமான் கேட்டு சந்தோஷித்துத் தம்மைச் சரணடைந் திருந்த கணராசன் புதல்வர்கட்கு அவ்வாறே கிருபைசெய்து விடுத்து, அவ் வரசன் கொணர்ந்துவந்த சிந்தாமணியை யெடுத்துக் கபில முனிவர் கையில் கொடுத்த

ருளினர். பின்னர் கபில முனிவ ரானவர் விநாயகப் பெருமானைத் தொழுது
எழுந்து, அச் சிந்தாமணியை அவர் திருவடியின்கண் வைத்து, சுவாமீ! தேவ
ரீர் எல்லா வுயிர்களும் உய்யும்படி இங்ஙனம் அவதரித்து, சிந்தாமணியைக்
கவர்ந்த கணராசனைச் சங்கரித்து, அதனை மீட்டும் எனக் களித்தமையால், இத்
தினமுதல் யாவரும் தங்கள் வினைகள் பொடிபடும்படியாகத் தேவரீரைச் சிந்
தாமணி விநாயக ரென்று துதித்தல் வேண்டும். இச் சிந்தாமணியைத் தேவரீ
ரது திருமேனியிற் றரித்தருளல் வேண்டுமென்று பிரார்த்தித்தனர். அபிசித்து
மகாராசனும் பணிந் தெழுந்து, கபில முனிவருடைய உள்ளங் களிகூரும்படி
யாக சுவாமிகள் அதனை அவ்வாறே தரித்தருள வேண்டு மென்று இரந்தனன்
பின்னர் விநாயகப் பெருமா னதனை வாங்கி, யாவருங் கண்டு தரிசிக்கும்படியா
கத் தமது கண்டத்தி லணிந்தருளினர். அன்பர்கள் கொடுக்கும், உடல் பொரு
ளாவி யனைத்தையுங் கைக்கொண்டு இன்ப மளிக்கவல்ல விநாயகப் பெருமானு
னவர் கபில முனிவராற் றந்த சிந்தாமணியைத் தமது கண்டத்திற் றரித்தரு
ளின மாத்திரத்தில், தேவர்கள் மலர்மாரி சொரிந்தார்கள். அந்தர துந்துபி
யைந்து முழங்கின. சிந்தாமணியைத் தரித்த காரணத்தாற் சிந்தாமணி விநாய
கர் என்றும், கபில முனிவர் ஆசிரமத்தி லவதரித்த காரணத்தாற் கபில விநா
யக ரென்றும், மலர்ந்த முகத்தோ டெழுந்தருளிய காரணத்தால் சுமுகவிநா
யக ரென்றும் திருநாமஞ் சாத்தினர். இப்பால் அபிசித்து மகாராசன் விநாய
கப் பெருமானுடைய கிருபையினைப்பெற்று விடைகொண்டு, தனது பட்டணத்
திற் சென்று, பவுத்திரர்க ளாகிய குலமணிக்குஞ் சுலபனுக்குங் கணராசனு
டைய ராச்சியங்களைப் பகுத்து கொடுத்து, விண்ணுலகரும், மண்ணுலகரும்
போற்றும்படியாக மனு நீதி முறைமைப்படி செங்கோல் செலுத்துவித்துத்,
தான் சதாகாலமும் விநாயகப் பெருமானைத் தியானஞ் செய்து, ஞானவைராக்
கியம் முதலிய செல்வங்களைப் பெற்று வாழ்ந் திருந்தனன்.

பின்னர் கபில நிறம், கருமை நிறம், பசுமை நிறம், வெண்மை நிறம்,
மஞ்சள் நிறம் என்று சொல்லுகின்ற ஐவகை நிறங்களோடு (காமதேனு வான
து தனது கன்றினுக் கிரங்குமாறு போல) எல்லாவுயிர்கட்கும் இனிமைபுரிந்து
ஆட்கொள்ள வெழுந்தருளிய கபில விநாயக மூர்த்தியானவர் குற்றமற்ற மகா
தவத்தினை யுடைய கபில முனிவருக்கு அளவற்ற வரங்களைக் கொடுத்தருளி
தமதுருக் கரந்தனர்.

இப்பால் அம்முனிவரும் உடனே அக் கடவுளைத் தமது தியானத்தினுற்
பிணித்துக்கொண்டனர். இவ்வாறு கபில முனிவர் தமது ஆசிரமத்தில் வளர்த்
திய வேள்விக் குண்டத்தி னின்றும் எல்லா வுயிர்கட்கும் இன்ப மெய்தும்படி
யாக விநாயகமூர்த்தி அவதரித்தமையால், அப்போ தவர்க் குண்டான மூன்று
திருநாமங்களை யாவரேனும் இடைவிடாது உச்சரித்து வருவார்களாயின் அவர்
கள் இடர், பிணி, பாவம் முதலானவைகளி னின்று நீங்கிச், சகல போக பாக்

கியங்களோடும் வாழ்ந்திருந்து அந்திய காலத்தில் தேவர்களா யவதரித்து பின்
னர் மேலான மோட்ச சாம்பிராச்சியத்தினையும் அடைவார்கள். அத் திருநா
மங்க ளுண்டானதற்குக் காரணமா யிருந்த இச் சரித்திரத்தை அன்போடு
கேட்டவர்களும், படித்தவர்களும் அந்த மேலானபயன்களையே யடைவார்கள்.
என்று சூத புராணிகர் சவுனகாதி முனிவர்கட்குக் கூறினர்.

இப்பால் அச் சவுனகாதி முனிவர்கள் சூத மகாபுராணிகரைப் பணிந்
தெழுந்து சுவாமீ! வேதங்களாலு மறிதற்கரிய கணேச மூர்த்தியினது திரு
வடிகளைப் பெற்றிருக்கின்ற அக் கபில முனிவருடைய குணாதி சயங்களையும்,
அவருக்குந் தெய்வ லோகத்திலிருக்கும் அச் சிந்தாமணி வந்த வரலாற்றினை
யுந் திருவாய் மலர்ந்தருள வேண்டு மென்று கேட்டார்கள்.

அதற்குச் சூதபுராணிக ரிசைந்து, ஓ சவுனகாதி முனிவர்களே! கபில
மகா முனிவருடைய குணாதி சயங்களைச் சொல்லுமிடத்து, அவர் ஐம்பொறிக
ளையுந் தன் வயமாக்கிய புனிதர்; தவங்கட் கெல்லாம் உறைவிடமாக விருக்கி
ன்ற செல்வர்; நிதமும் முத்தீக்களை நெறிவழாமல் வளர்த்து எல்லா வுயிர்கட்
கும் ஒரிடையூறுமில்லாதபடி கிருபையாகியகொடையை வழங்கும்வாதர்;தமது
யோகத்தினால் அரிய பரம்பொருளை வேண்டும்போ தெல்லாம் தன்வயமாக்கு
மியல்பினர்; திரிலோகங்களையுந் தமதிச்சைவழி ஆக்கவும் அளிக்கவும் அழிக்க
வும் வல்ல திறத்தர்; மகா தவசிரேஷ்டர்கட் கெல்லாந் தலைநம்போற் சிறந்த
மாதவர்;அவருடைய பெருமையை அளவிட்டுரைக்க யாவராலாகும்? அவருக்கு
அருமையாகிய அச்சிந்தாமணி வந்த வரலாற்றினையுங் கேட்பீர்களாக:முன்னொ
ருகாலத்தில் தேவேந்திரனானவன் பூவுலகத்திலுள்ள அதிசயங்களைப் பார்க்க
வந்து, மீட்டுந் தேவலோகத்தை நோக்கிச் செல்லுகின்றபோது, பசியுந் தாகமு
மேலிட்டவனாகி, அக் கபிலமகாமுனிவர் வசித்திருந்த ஆசிரமத்தில்வர, அவ்
வாசிரமத்தில் ஓர்பால் வானம்பாடி, அன்னம், அன்றில், பெருநாரை, கருந்
தாரா, சக்கரவாகம், கொக்கு முதலான பறவைகளும், நானாவிதப் புட்பங்கள்
முதலியன நிறைந்திருக்கின்ற தடாகங்களும், ஓர்பால் சந்தனம், தேக்கு,
அகில், அசோகு, நாகம், வேங்கை, நாளிகேரம், பூகதம், இலவங்கம், தேவ
தாரம், சிற்றேலம், குங்குமம், தமரத்தை, வெண்ணொச்சில், அரசு முதலிய
வருக்கங்கள் மலிந்திருக்கின்ற சோலைகளும், ஓர்பால் முல்லை, மல்லிகை, இரு
வாட்சி, குருக்கத்தி, சிறுசண்பகம், வில்வம்,நந்தியாவர்த்தம்,பாதிரி, வெட்சி,
கோங்கு, துளசி, கூவிளம், அலரி, கொன்றை, குருந்தம், சண்பகம் முதலிய
புட்பச் செடிகள் நிறைந்திருக்கின்ற நந்தனவனங்களும், ஓர்பால் வெள்ளாம்
பல், செவ்வாம்பல், வெள்ளுற்பலம், நீலோற்பலம், வெண்டாமரை, செந்தா
மரை, நெய்தல், அநிச்சம் முதலிய புட்பங்களைத் தழுவியிருக்கின்ற சிறந்த
ஓடைகளும், ஓர்பால் மிளகு, கோட்டம், அகில், தக்கோலம், குங்குமம்,

இருல், தேன், அரக்கு, மயிர்ப்பீலி, காவிமுதலிய மலைபடு திரவியங்களையும், வனம்படு திரவியங்களையும் அலைத்துவருகின்ற நதிகளும். ஓர்பால் ஒன்றைக் கொன்று பகைவயிரமில்லாமல் மாதவர்கள் செய்யும் முழக்கினைப்போலச் சிங்கம் யாளி யானை முதலிய மிருகவர்க்கங்கள் முழக்கஞ் செய்துக்கொண் டிருக்கின்றபொதும்பர்களும், ஓர்பால் வேதாகம புராணங்கள் விசாரிப்போர்களுடைய ஓசையும், ஓர்பால் விச்சாதரர் கின்னரர், முதலியோர் வாசிக்கும் வீணாகானத்தி னோசையும், ஓர்பால் கிளி, குயில், நாகணவாய் முதலியவைகள் பாடுங் கீதவோசையும், இன்னும் இத்தன்மைத்தான பெருமிதங்கள் அளவற்றனவாக விருப்பக்கண்டு உள்ளங் குளிர்ந்து தனது குதிரையைவிட்டு நிலத்தி லிறங்கி களங்கரகிதமா யிராநின்ற நதியில் மிகுந்த ஆவலோடும் ஸ்நானஞ்செய்து தன்னோடிருந்து எல்லாத் தேவர்களையும் அவ்வாற்றின்கண்ணே யிருத்தித் தான் தனியே புறப்பட்டுச் சுற்றினு மாணாக்கர்கள் புடைசூழுமாறு தவத்தின்கண் வீற்றிருக்கின்ற கபிலமகாமுனிவரை யடுத்து, அவரது பாதபதுமங்களிற் சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து, மிக்க பெருவகையோடு தனது கைகளைக் கூப்பி மெய்கொட்டி நின்றனன். அதனைக் கபிலமுனிவர் தமது யோகத்தினு லறிந்து விழித்துத் தனியாயிருக்கின்ற இந்திரனைப் பார்த்து, ஓ சுரலோக சக்கிரேஸ்வரனே! நீ உனது பொன்னகரை விடுத்து இங்ஙனம் வந்தகாரியம் என்னென்று வினவினர்.

இந்திர னேதுவா னிறைவ வீசனைச்
சுந்தர வரியையா லயத்தைத் தோமிலா
அந்தணர் தமை யச்சுவத் தமங்கியை
முந்துறக் கண்டு தாழாது முன்னினேன்.

உயர்ந்தவ ராயினு மொருவ மற்றவன்
வயந்தரு பெருந்திரு மாயு மென்றுநூல்
இயம்பலின் முனிவர ரெழில்கொள் பாதங்கள்
நயந்தகப் போற்றநா னிலத்தில் வந்தனன்.

அதற்குத் தேவேந்திரன் முகமலர்ந்து, சுவாமி! சிவபிரானை, மகாவிஷ்ணுவை, தேவாலயத்தை, பெரியோர்களை, அரச விருக்கத்தை, அக்கினியை யாவரேனுங் கண்டபோது தொழாது செல்வாராயின் அவர்கள் எவ்வாற்றானும் உயர்ந்தவர்களாயினும் உடனே செல்வங்களனைத்துங் குன்றி இழிந்தோர்களாவரென்று வேதாகமங்களிற் கூறியிருக்கின்றமையால், தவத்திற் சிறந்த முனிவர்களை எல்லாங் கண்டு தரிசிக்க இப் பூதலத்தின்க ணிறங்கிய யான், தேவரீருடைய பாதபதுமங்களையுந் தரிசிக்குமாறு வந்தனன். அடியேன் வந்த காரியங்களு முடிவெய்தின. தேவரீரைத் தரிசித்த மகிமையினால் அடியேன் கொண்டிருந்த பசியுந் தாகமும் ஒருங்கே நீங்கின; இனியான் அமராபதிக்குச்

செல்ல விடைகொடுத் தருளவேண்டு மென்றனன். அதனைக் கபிலமுனிவர் கிருபையோடுங் கேட்டு ஓ வலாரியே! கதிரவனோ உச்சியில் வந்து விட்டனன். இதுகாறும் இவ் வாசிரமத்தில் வந்தவர்களை இளைப்போடு வேறோரிடத்திற் செல்லவிட்டதில்லை. யாகாதிகளைச் செய்கின்றபோர்கள் வரவேண்டுமென்று பிரார்த்திக்கத்தக்க நீ இப்போது ஏதோ ஒரு புண்ணியபலத்தினால் இங்கு வலுவில் வந்தனை. இங்ஙனஞ் சிறிதுநேரமிருந்து யான் தருவது வெறுஞ்சலமாயினும் அதனைக் கைக்கொள்ளல்வேண்டுமென்று சொல்லித் தேவேந்திரனை அங்ஙனே நிறுத்தி, அவனோடுவந்த தேவர்களை எல்லா மழைத்து வருமாறு தமது சீடர்களை ஏவினர். உடனே அவர்களோடி நதிக்கரையிற் றங்கியிருந்த தேவர்களை எல்லா மழைக்க, அவர்கள் விரைவி லெழுந்து வந்து கபிலமுனிவருடைய திருவடிகளைப் பணிந்தார்கள். இப்பால் கபிலமுனிவர் சர்ப்பாபரணங்களைத் தரித்த சிவபிரானைத் தியானிக்க அவரது திருவருளால் ஓர்நொடிப்போதில் பலவகைப்பட்ட தேவவுணவுக ளெல்லாஞ் சிறக்க உண்டாயின. அவைகளையெல்லாம் இந்திரன் மற்றைத் தேவர்களோடு முண்டு இதுகாறுந் தனது சொர்க்க லோகத்தினு முண்டறியாத மிகுந்த சுவையுள்ள அவ் வுணவுகளின் குணாதிசயங்களைப் பலமுறைகொண்டாடி அம் முனிவரது மகத்துவத்தை நினைந்து நினைந்து ஆச்சரியங் கொண்டவனாய், தவத்தினுங் குணத்தினுஞ் சிறந்த இவருக்கு நாமொரு பிரீதிசெய்ய வேண்டுமென்று நினைத்து உடனே வாயுதேவனைக்கூவி முன்னர் மகாவிஷ்ணு கொடுத்தருளிய சிந்தாமணியானது நமது பொக்கசத்தி லிருக்கின்றது, அதனை நீ விரைவி லெடுத்துக் கொண்டு வருவையெனக் கட்டளையிட, அதற்கு வாயுதேவ னிசைந்து தனது வேகத்தோடு மனோவேகமும் ஒன்றுபடச்சென்று அதனை அப் பொக்கசத்தி னின்று மெடுத்து வந்து தேவேந்திரன் கரத்திற் கொடுத்தனன். அதனை தேவேந்திரன் கையேற்றுக் கபில முனிவருடைய திருவடிகளில் வைத்துப் பலமுறை சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து அவரது திருவருளைக் குறைவறப் பெற்று விடைகொண்டு தனது சொர்க்கலோகத்தை யடைந்தனன். பின்னர் அச் சிந்தாமணியைக் கபிலமுனிவர் தமது கரத்தி லணிந்து கொண்டனர். தம்மைக் கருதினோர்களை அளத்தற்ற துரும்புபோலாக்கவல்ல சிவபிரானை உள்ளத்திற் பதிப்பவர்கட்குக் கிடையாத பொருள் யாதிருக்கின்றது.

சிந்தாமணி விநாயகர் திருவவதாரப் படலம்

முற்றிற்று.

மூன்றாவது

கஜானனவிநாயகர்

திருவவதாரப் படலம்.

இரண்டெ னப்படுமவ தார மேத்தினும்
குரண்டவெள் ளிறகொடு கோலக் கங்கையும்
திரண்டசெஞ் சடையணி தேவை யுன்னுவோய்
முரண்டப வழியென முடித்து மேற்சொல்வான்.

திருமாலு நான்முகனு மறைகளுநோ தெற்கரிய தேவ ரான, பெருவாய்மை விநாயகனு லகிலுயிர் வருத்தமெலாம் பேணா வுள்ளத், தொருவாத கருணைகொடு சுவேச்சையினாற் கெசானனரா யுற்றுப் பேரும், வெருவாத கெசானனனென் றுயர்வாகக் கொண்டருண்மெய்ம் மூர்த்தி தன்னை.

மங்காமற் பலவுலகுந் தரிப்பிக்குந் தாரகத்தை மதத்தைத் துட்ட
சங்கார காரகத்தைத் தரணியா ரந்தவிர்ப்ப தனைக்கன் மங்கள்
பொங்காரவத் தெவ்விடத்து நிறுவுவதைப் பத்தருக்கு போக வீடு
சிங்காம லருளுவதைச் சாதுக்க டமைப்புரக்குஞ் செல்வ வாழ்வை.

பெரிதான விக்கினங்க ளனைத்தினையுங் கெடுப்பதனைப் பேசப் பேச, உரிதாரு மூன்றான வவதாரந் தனையினுநா னுரைக்க லுற்றேன், அரிதானென் றுலகமெலா மெடுத்தேத்தும் வியாதமுனி யகம்வின் ளாது, தெரிதாக முடையவர்க ளொருவர்கொணர்ந் தருணறுநீர் தெவ்வு மாபோல்.

ஓ சவுனகாதி முனிவர்களே! அரிபிரமேந்திராதியராலு மறிதற் கரிய பரம்பொருளாயும், பல வுலகங்களையும் மங்காமற் றரிப்பிக்கவல்ல தாரகமாயும், ஆன்மாக்களுடைய மும்மலக்கட்டும் மும்மதங்களைப் பொழியும் மூர்த்தியாயும், துட்டர்களை யெல்லாஞ் சங்கரிக்கும் படியான காரகமாயும், வேதாகம புராணங்க ளோதுமாறு தரணியாரகந் தவிர்க்கவல்ல சயம்புவாயும், எல்லா வுயிர்கட்கும் நன்மங்களை யூட்டிப் பிழைப்பிக்குங் கருணாநிதியாயும், பத்தராயினோர்க்கு இம்மையிற் போகமும் மறுமையில் வீட்டையுமளித் தருளுகின்ற கர்த்தவ்விய மாயும், சாதுக்களாயினோரை யளித்துப் புரந்தருளுகின்ற செல்வமாயும், பெரிதான விக்கினங்களை யெல்லாங் கெடுத்து இட்டசித் தருளுகின்ற பெருவாழ்வாயு மிராநின்ற விநாயக மூர்த்தியானவர்! கபில முனிவருடைய சிந்தாமணியைக் கவர்ந்த கணாசுரனை வெல்லுமாறும் அவராசிரமத்தி லவதரித்ததும், அதை மீட்டுமவர்க் களித்ததும், அதனால் கபில விநாயகர், சிந்தாமணி விநாயகர், சுமுக விநாயக ரென்னும் இம் மூன்று திருநாமங்களைப் பெற்றதும், அக் கபில முனிவருடைய குணாதிசயங்களும், அவர்க்கு அச்சிந்தாமணி கிடைத்த வரலாறுஞ் சொன்னோம். இப்பால் அவ்விநாயக மூர்த்தியானவர் உயிர்களது வருத்த மெல்லாம் ஒழியுமாறு தமது பெருங் கருணையோடு சுவேச்சையினாற் கஜானனாவதாரஞ் செய்தருளிய திருவிளையாடலைச் சொல்லுவோங் கேட்பீர்களாக.

முன்னொரு கற்பத்திற் பிரமதேவனானவன் சத்திய லோகத்தில் வீற்றிருக்கின்றபோது கொட்டாவி விட்டனன். அதினின்றும் ஓர் புருடனுதித்தனன். உடனே சொர்க்க மத்திய பாதலமென்னும் மூவுலகங்களிலும் இரத்த மாரி சொரிந்தது. அப் புருடன் செம்பரத்தம் பூவினை நிகர்த்த நிறத்தினையும், பத்துத்திசைகளினுஞ் சென்று வீசும்படியான இயற்கைமணம் வாய்ந்தவடிவத்தினையும், விண்ணளவி லோங்கிப் பரித்திருக்கின்ற மெய்யினையும், பஞ்ச புட்ப பாணங்களைக் கரத்திலேந்திய மன்மதனை யொத்த அழகினையும், யாவருஞ் சிரம்பனென்று சொல்லும்படி வாய்ந்த பத்து சிரத்தினையும் உடையவனாகி எதிர் நிற்க, அவனை அப்பிரமதேவனோக்கி நீயாரென்று வினவினன். அதற்குச் சிரம்பன் தனதுள்ளச் செருக்கினை மீக்கொண்டு யான் நினது வாண்முகத்தினின்றும் உதித்தமையால் உனக்கு மகனாகும். அறிவிலார்களைப்போல வொன்றும் அறியான் போன்று கேட்டது அதிசயமாயிருக்கின்றது. இனி யான் வசித்தற்கு இடமும் பெயருஞ் சொல்ல வேண்டுமென்று கேட்டனன். அதற்குப் பிரமன் அன்பு மச்சமுங் கொண்டு, மைந்தனே! நீ சிந்தூர நிறத்தினன்றி யிருத்தலினால் நினக்குச் சிந்தூரனென்னும் பெயருண்டாகுக. திரிலோகங்களினுஞ்சென்று நினக்கினியதலத்தினைக் கொள்ளுக. உலகமனைத்தும் நினது வசமாகுக. விண்டு முதலிய தேவர்களாலும் உனக்கு எக்காலத்தும் யாதொரு அச்சமும் இன்றாக. நீ கோபங் கொண்டு யாவரையேனும் நினது கரத்தாற் றழுவுவையாயின் உடனே அவர்களுடலம் நீறாகுக. தேவர்களால் விடுகின்ற அத்திர சத்திரங்களாலும் உனக்கு இறுதியேலாதாக. இவையனைத்தையும் உனக்கு யான் புத்திர வாஞ்சையினாற் கொடுத்த வரமாகக்கொள்ளுக. என்று பிரமதேவன் கூற அவ்வரமனைத்தையுஞ் சிந்தூரன் கைக்கொண்டு, எந்தையே! தவம், தானம், விரதம், வேள்வி, கருமம் முதலியவைக ளொன்று மில்லாத வெனக்கு எல்லா வரங்களையும் எளிதிற் றந்தனையே! யென்று மகிழ்ந்து விடை கொண்டு, பூவுலகத்தினை நோக்கிச் செல்லுகின்றவன், நமது பிதாவானவர் தவஞ் சாதனைகளில் ஒன்றையுஞ் செய்யாத நமக்கு அனந்த வரங்களை யளித்தனரே, அவைக ளனைத்தும் பொய்யோ? மெய்யோ வென்று ஐயமுற்று, அவைகளைச் சோதிக்க வேண்டும் என்று நிச்சயங் கொண்டு மீட்டும், பிரமதேவ னிடத்தில் வந்து சத்த சாகரங்கள் தளும்பவும், அண்ட கடாகங்கள் பிளக்கவும், திரிலோகங்களும் நடுங்கவும்,

உடுக்க ளனைத்தும் உதிரவும், கற்பங்க ளெல்லாங் கலங்கவும், பறவைகள் யாவும் மாயவும், விருட்சங்கள் யாவும் வீழவுமான ஆரவாரத்துடனே அட்டகாசஞ் செய்து, அப் பிரமதேவனைத் தனது கரத்தாற் றழுவிப் பிடிக்க நேர்ந்தனன். அதற்குப் பிரமதேவன் அஞ்சி, அடா மூடனே! நீ இத்தன்மைத் தான துட்டனென் றறியாது புத்திர வாஞ்சையினால் வீணே அனந்த வரங்களை உனக்குக் கொடுத்துவிட்டேன். அப்படிக் கொடுத்த என்னையே தழுவிக் கொல்ல வந்தனை யல்லவா? இனி உன்னைக் கொல்ல விநாயக மூர்த்தி அவதரிந் தருளுவ ரென்று சபித்தனன். அதைக் கேட்ட சிந்தூரன் மிகுந்த கோபங் கொண்டு மீளவும், ஒரு அட்டகாசஞ் செய்தான். அதனைப் பிரமதேவன் கண்டு நடுங்கி, அலறிப் பெருமூச்செறிந்து அவ்விடத்தினின்று மோடி, வைகுந்தத்தில் ஆதிசேடன்மீது பள்ளிகொண் டிருக்கின்ற விண்டுவினை யடைந்து, கண்களில் நீர் சொரியும்படியாக அவரது பாத பதுமங்களில் வீழ்ந்து பணிந்தனன்.

உடனே விண்டுவானவர் அப் பிரமதேவனுக்கு ஓர் ஆசனந் தந்து இருக்கச்செய்து, ஓ சதுர்முகனே! உனக்கு இவ்வாறு நெஞ்சு துடிக்கவும், நெட்டுயிர்ப் பெய்தவும், சரீரம் நடுங்கவும், முகாரவிந்தம் வாடவுமான தீங்கு யாது நேர்ந்ததென்று கேட்க, ஐயனே! யான் கொட்டாவி விட்டேன்; அதினின்றும் ஓர் புருட னுதித்தனன். அவனை எனது புத்திரனென் றெண்ணி அளவற்ற வரங்களைக் கொடுத்தேன். அவ னவைகளைக் கைக்கொண்டு சென்று மீட்டும், என்னையே கொல்லவந்து மிகுந்த துன்பங்களைச் செய்தனன். என்ன செய்வேன்! அப் பாதக னெதிரில் நிற்க வஞ்சி இங்ஙனம் ஓடிவந்தேன். தேவரீர் அவனை எவ்விதத்தி லாகிலுஞ் சங்கரித்து என்னைப் பாதுகாத்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தனன். அவை யனைத்தையுந் திருமால் கேட்டுத் துயர மெய்தி "ஆய்ந்தோய்ந்து செய்யாதான் காரியந் தான்சாகக் கெடுதரும்" என மேலோர் சொல்லும் வாக்கியத்திற் கிலக்கியமாகச் சிறிதேனும் அவன் குணாதிசயங்களை ஆராயாது வரங்களைக் கொடுத்துவிட்டனை. இனி உன்னாலும் நம்மாலும் அவன் அழிபவனன்று. கன்ம வயத்தால் வருங்கலக்கங்களை யாவர் விலக்கவல்லவர்கள்? அந்தோ! தேவர்களனைவோர்க்குந் துன்பத்தினை விளைத்துவிட்டனை. வேத ஆகம நெறிக ளனைத்துங் கெடச்செய்தனை. நம்போலிகட் கெல்லாம் மிகுந்த தாழ்வினை யுண்டாக்கினை. சகல துட்டர்களையும் நாசஞ் செய்வதற்குச் சிவபிரானே யன்றி மற் றெனையோராலும் முடிவதன்று. என்று இவ்வாறு இருவரும் வார்த்தையாடிக்கொண் டிருக்கின்ற சமயத்தில் தொலையாமல் வல்வினை தொடர்ந்து வருமாறுபோல, அச் சிந்தூரன் அப்பிரமனையே தேடிவந்து, அவன் விண்டுவினோடுவசனித் திருக்கின்றமையைக் கண்டனன். பின்னர் அவ் விண்டுவை அப்பாதகன் நோக்கி, ஓ மகாமாயனே! நீ என்னோடு யுத்தஞ்செய்ய வாராமற் போவையெனில், உன்னையும் உன்னை யடுத்திருக்கின்ற இவனையும் இந் நிமிடத்திற் சாம்பராக்கிவிடுவே னென்றனன். அதனைக் கேட்

டலும் விண்டுவுக்கு மனம் நடுங்கி, அந் நடுக்கத்தை வெளியிற் றோன்றாதபடி தம்முள் மறைத்துக்கொண்டு, இவனை வணக்கத்தோடு நல்வார்த்தைகளாடி தப்பித்துக்கொள்ள வேண்டுமென்று நிச்சயித்து, மிகுந்த விநயத்துடனே அவன் முகத்தை நோக்கி, ஓ சுத்தவீரனே! மலையோடு மலை யுத்தஞ் செய்தால் மானமும் புகழு முண்டாகும். அம்மலை புனலோடு யுத்தஞ் செய்தால் பராக்கிரம முண்டோ? யானோ ஆலிலையில் ஒன்றிக்கொண் டிருக்கின்ற நொய்மையன். இஃதன்றிச் சாத்துவீகத் தொழிலினால் காவற்றலைமை பூண்டிருக்கின்றவன். இப் பிரமனோ வென்றால், வண்டேறத்தாங்காத பூவில் வசித்துக்கொண் டிருக்கிறஎளியன். இதல்லாமல் சாத்திரங்களைக் கூறிஉலகங்களை யுண்டாக்கும் ஒரே தொழிலினைக் கற்றவன். ஆதலால் யாங்க ளிருவரும் உன்னோடு யுத்தஞ் செய்யமாட்டோம். நீயோ எல்லாரையும் வெல்லத்தக்க பராக்கிரமசாலி. உன்னோடு யுத்தஞ்செய்வதற்கு உலகமனைத்தையுஞ் சங்கரிக்குந் தொழிலினையுடைய வொருவனிருக்கின்றான். அவனோ மகா பலத்தை யுடையவன். இதுகாறும் அளவற்ற பேரை அதஞ் செய்திருக்கின்றான். யாங்களிருவருங் கர்விக்கின்றபோதெல்லாம் அவன் வந்து எங்களாண்மைகளை யடக்கி யிருக்கின்றனன். மலைகளுக்கெல்லாம் மேலான மகமேருவை அவன் கரத்தில் வில்லாகப்பிடித் திருக்கின்றான். பர்வதங்க ளனைத்தும் ஒன்றாய்த் திரண்டதற் கொப்பான புஜபல பராக்கிரமத்தை யுடையவன்; அவனுடைய பத்தினியோ மலைகள் யாவுக்கும் அரசனாகிய இமாசலராசன் புதல்வி. அவன் வீற்றிருக்குமிடமோ வெள்ளிமலை, இன்னும் இத்தன்மைத்தான அளவற்ற பெருமிதங்களினால் அவன் யாவருக்கு மிறைவனாகி யிருக்கின்றனன். ஆதலால் அவனோடு நீ எதிர்த்து யுத்தஞ் செய்து உனது பராக்கிரமங்களைச் செலுத்துவையாயின் அதனால் உனக்கு மானமும், புகழுமுண்டாவதன்றி. எல்லாவுலகமும் உனது கீர்த்தியைப் பாராட்டும்: அவ்வாறின்றி ஆலிலைக்கும் அரவிந்தத்திற்கும் இலக்கான குறைந்த வலிமையையுடைய எங்களோடு நீஎதிர்ப்பது மிகவும் எளிமை யென்று சொல்லினர்.

அவை யனைத்தையுஞ் சிந்தூரன் கேட்டுச் சிவபிரானையே யுத்தஞ் செய்வதற்கு லட்சியமாக்கி, விண்டுவின் சொல்லாகிய மதுவினைப் பானஞ் செய்து, வெறி கொண்டவனைப் போலக் குதித்து, ஊழிக்காலத்தி லுண்டாகின்ற இடியேற்றினை யொப்ப வார்ப்பரித்துக், கைலாய கிரியை நோக்கிப் பாய்ந்தனன். அப்பால் விண்டுவும் பிரமனும் அவன் செய்த கோலாகலத்திற் கஞ்சித் தமது செவிகளைப் பொத்திக் கொண்டு, மண்ணிற் செய்த மாவைப் போலவும், மரத்திற்செய்த பிரதிமை போலவும், அசைவற்று நின்றார்கள். தேவர்களெல்லாம் அறிவற்று வீழ்ந்தார்கள். மற்றைய சீவராசிக ளனைத்தும் எவ்வாறாயினவோ? அதனை யாவராலுஞ் சொல்லி முடிவதன்று. இவ்வாறு கயிலையை நோக்கிப் பாய்ந்து வந்த சிந்தூரனைச் சிவபிரான் யோகத்தி லிருந்தமையால் அவன் வ

தனை அறிந்திலர். அவருக் கருகிருந்த சிவகணங்களிற் சிலர் அவ் வவுணனைக் கண்ட மாத்திரத்தில் பயந்து சோர்ந்தார்கள். சிலர் நெடுமூச் செறிந்து ஓடிப் பதுங்கினார்கள். உமாதேவியாரும் அவனைக் கண்டதும் மனங்குழைந்து பயந்தனள். சிவபிரானை யுத்தத்திற்கு வருமாறு * அறைகூவிய சிந்தூரன் பின்னர் உமாதேவியைப் பார்த்து, அழகில் இவளின் மிகுந்தவர் ஒருவரையுங் காணேனாதலால், எவ்விதத்திலேனும் இவளைக் கொண்டுபோக வேண்டுமென்று நினைத்து, அம்மனுக்கு நேராக வந்தனன். அவன் வரவைக் கண்ட உமாதேவியார் நடுங்கிப் புலியைக்கண்ட கிளிபோலப் பயந்து, அருகிலிருந்த தமது நாயகரை நோக்கி, சுவாமீ! முனிவர்கள் தேவர்கள் முதலாயினோர் உருகிய உள்ளத்தோடும் வழிபாடு செய்ய அவர்கட்குத் தருமாதி நாற்பொருள் களையுமுதவவல்ல தேவரீருக்கு நீண்டதியானத்தி லிருக்கும் படியானபொருள் வேறில்லையே? இனி செய்யாமற் செய்கின்ற இத்தியானத்தை விடுத்து, முன்னர் தேவரீருக்குப் பிழையினைச் செய்தவர்களை யெல்லாங் கண்ணாலும், நகையாலும், உகிராலும், காலாலுங் கடந்து ஜயங்கொண்ட பராக்கிரமத்தினை இப்போது என்னைத் துன்பஞ் செய்ய அஞ்சாது வருகின்ற மேலானவலியினையுடைய இப்பாதக னிடத்துங் காட்டி யருளல் வேண்டுமென்று பிரார்த்தித்தனர். அதைக் கேட்டதுஞ் சிவபிரான் விழித்தருளி, உடனே வேங்கையாதனத்தை விட்டெழுந்து, கரத்திற் றடியுஞ், சூலமுமேந்தி மகா உக்கிரத்தோடும் அவனெதிரிற் சென்றனர். அவனுஞ் சுவாமியை நெருக்குவே னென்று தனது கையாலவரைத் தழுவப் போயினன். அச்சமயத்தில் அவ்விருவர் மத்தியினும் இமைக்குமுன் விநாயகப் பெருமான் பிராமண வடிவங் கொண்டு மிகுந்த பிரகாசத்தோடும் வந்து நின்று சிவபிரானையுஞ் சிந்தூரனையும் பார்த்து, நீங்களிப்போது ஒருவரை யொருவர் தழுவிப் பிடித்தலைவிட்டு, உங்கள் பராக்கிரமத்தை அஸ்திர சஸ்திரங்களினால் யுத்தஞ் செய்துக் காட்டுங்கள் பார்ப்போமென்று அவர்கள் மத்தியில் தமது பாசாயுதத்தினை நாட்டி ஒருபாரிசத்தில் நின்று பார்த்துக் கொண்டிருந்தனர். அந்தணர் வடிவாய் வந்த விநாயகப் பெருமான் கூறிய வார்த்தைகட்கு இருவருஞ் சம்மதித்து, அஸ்திர சஸ்திரங்களால் நெடுநேரம் யுத்தஞ் செய்தார்கள். பின்னர் சிந்தூரன் அதனை விடுத்து, இவ்வாறு நீடித்து யுத்தஞ் செய்வதில் செயமடைவது அரிதென்று நினைத்து, சிவபிரானைத் தனது கையினுந் தழுவச் சென்றனன். அத்தருணத்தில் இருவர் மத்தியினும் நாட்டியிருந்த பாசானது எழும்பிச் சிந்தூரன்மீது தாக்கித் தடுத்தது. அத்தடையைத் தடுத்துக் கொண்டு செல்லமாட்டாது மீட்டுந் திரும்பிய சிந்தூரனைப் பிராமண வடிவமாய் வந்த விநாயகப் பெருமான் பார்த்து, இனி நீ காலகாலராகிய சிவபிரானுடைய சூலாயுதத்தினால் இறுகுவை. அமரர் முதலியோரை ஆலபோசனஞ் செய்து ஆட்கொண் டருளிய இருபா

* அறைகூவல்-போருக்கழைத்தல்.

மூர்த்தியையும் பகைக்கலாமோ? திரிலோகங்களினும் அவரைப் பகைத்துவாழ்ந்தவர்கள் யாவரிருக்கின்றனர்? இனி தப்பி ஓடிப்போகும் வகையைத் தேடக் கடவை யென்று திருவாய் மலர்ந்தனர். அதற்குமேல் சிந்தூரன் பயந்து இனி யாமிங்கு நீடித்திருந்தால் இறுதி நேருவதற் கையமில்லை. ஆதலால் இவ்வந்தணன் கூறிய சொல்லே உறுதியாகுமென்று மனத்தின்க ணிச்சயித்து, உடனே அவ்விடத்தினின்று நீங்கிப் பூவுலகத்திற் சென்றனன். பின்னர் சிவபிரான் யுத்தத்தை நிறுத்திச் சந்தோஷமுற் றிருந்தனர்.

இப்பால் உமாதேவியார் அந்தணராய் வந்த விநாயக மூர்த்தியைப் பார்த்து, ஐயா எதிர்த்துவந்த சத்துருவை எளிதிற் றொலைவித்த நீ யாவென்று கேட்டனர். அதற் கவர் வாய்மொழியா லுத்தரங் கூறுது தாம் எடுத்திருந்த பிராமண வடிவத்தை மாற்றி, இருமருங்கினுஞ் சித்தி புத்திகளோடும் நான்குத் திருக்கரங்களோடும், சிங்கவாகன மூர்ந்து தமது சுரூபத்தைக் காட்டியருளி, ஓ புவன காரணியே! உன்னைப் பிடிக்க அதி வேகத்துடனே வந்து சென்ற சிந்தூரனைச் சங்கரிப்பதற்கு யாம் உனது உதரத்தின்கண் அவதரிப்போம். இதனை மறக்கற்க. இனியாவர்க்கும் அஞ்சற்க. என்று சில இனிய வார்த்தைகளை யாடிக் காத்தருளினர். அதை உமாதேவியார் கேட்டுச் சந்தோஷமா யிருந்தனர்.

இப்பால் முன்னம் பூலோகத்தை நோக்கிச்சென்ற சிந்தூரனால் அளவற்ற சோலைகள், கால்கள், ஆறுகள், வனங்கள், நகரங்கள், காடுகள் முதலாயினவைகளோடு, அளவிறந்த வீரர்கள், வேதியர்கள், பெரியோர்கள் முதலாயினோரெல்லாந் தழுவப்பட்டு, சர்வசங்கார காலத்தைப்போல எங்கும் நீறாயின. வேதவொழுக்கங்கள், தவங்கள், தானங்கள், மகங்கள், தருமங்கள்முதலியவைக ளெல்லாஞ் செய்வாரின்றி, இந்திரன்முதலிய தேவர்கட்கு அவிர்பாக முதலானவைகள் கிடையாமல் மிகுந்த பசியினால் வாடித் துயரமுற்றார்கள். பூவுலகமுழுவதும் பாழ்படுத்திய அப் பாதகன் மீட்டும் வானுலகத்தையும் பாழ்செய்ய வந்தனன். அதைத் தேவர்களறிந்து பயந்து, யாவரும் பிரமதேவனிடத்திற் சென்று பணிந்து முறையிட்டார்கள். அதைக்கேட்ட பிரமதேவன் தானுந் துயரத்து ளழுந்தி, இனி இதற்கென்ன செய்யக் கடவோமென்று மனங்கலங்கி, பின்னர் ஒருவாறுதேறி எல்லாத் தேவர்களோடும் விநாயக மூர்த்தியைத் துதிசெய்வ தாயினன்.

யாவ னொருவ னயனெடுமா லகிலாண் டமுமீன் றெடுக்கின்றான்
யாவ னொருவன் குணமாயு மியம்பு மூவ ருருவாயு
மேவு குணநீ தனுமாயும் விளங்கா நின்ற னத்தகைய
தேவன் கமலத் தாளிணைக்குச் சிறியேம் வணக்கஞ் செய்கின்றாம்.

பூத மைந்து மிருசுடரும் புகழ்சேர் துறக்க மெண்டிசைவெற்
போது நதியும் யசுரியக்க ருரக ராக்கர் மனிதர்கள்கோக்

காதி விருகங் களைந்தெசந்துக் கருதா ஞரூ தமுமூவே
ழாத வில்லத வழிதலைவ னருளா லவற்குப் பணிகின்றும்.

உலக முழுதுந் தனதாரத் துறைவித் திருக்கின் றான்யாவ
னிலகு மறுநி சித்தாந்த மாகி யிருக்கின் றான்யாவ
னுலவில் பலவே றுமுருவ முடையான் யாவன் மலமணுகா
வலகி லறிவன் யாவனவ னடித்தா மரைக்குப் பணிகின்றும்.

யாவ னொருவ னடியாரை யெய்த்த விடத்திற் புரக்கின்றான்
யாவ னொருவன் றமித்தியரா லினைவா னவரை யுறிக்கின்றான்
யாவ னொருவன் வழிபடுவா ரிடருக் கிடரைப் புரிகின்றான்
யாவ னிகரி லாவிறைவ னவன்பொற் றாள்கள் பணிகின்றும்.

இவ்வாறு பலமுறை தோத்திரங்கள் செய்து சகல சீவராசிகட்கும் ஆதாரபூதமா யிருக்கின்ற கர்த்தனே! வேதவொழுக்கம், தருமம், தான முதலானவைகளெல்லாங் கெடுமாறும், சிறியேங்கள் பல விடர்களுள் வீழுமாறும், இடை விடாது தீங்கு செய்து வருகின்ற கொடும் பாவியாகிய சிந்தூரனென்பவன் எந்த விதத்தாற் றேவரீருடைய திருவருளாற் றிருமித்திடப் பட்டனனோ அறிகின்றிலேம், ஓ தேவேசா! ஓ மகாதேவா! தேவரீரைத் தீனரட்சகரென்று எல்லா வுயிர்களுந் துதி செய்கின்றதால், பாதகங்களனைத்துமோர் வடிவமாகி வருகின்ற சிந்தூரனைச் சங்கரித்து அடியேங்களைத் துன்பமணுக வொட்டாமற் காத்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதற்கு விநாயக மூர்த்தி கிருபை கூர்ந்து அவர்களெதிரிற் பிரத்தியட்சமாகி, மிக்க அயரத்தோடும் பணிந்தழுது தமக்கெதிரில் நிற்கின்ற தீனர்கண் மீது தமது கிருபாநோக்கத்தினைப் பரப்பி, தேவர்களே! நீங்கள் செய்த தோத்திரங்கட்கு மனமுவந்தோம். அத்தோத்திரங்களை யாவரேனும் நமது சந்நிதியிற் சொல்லுவார்களாயின், அவர்களது நோய், வறுமை, இடர், அல்லல் முதலிய துன்பங்களனைத்தையு மறுத்து, அவ்வவர்கள் கோரிய இட்டகாமியார்த்தங்களைக் கொடுப்போம். பிரதிதினந் துதிப்போர்கட்கு எக்காலத்துந் துன்பமென்ப தணுகாது யாம் உமாதேவி வயிற்றிற் புத்திரனாக அவதரித்து உமக்கு துன்பத்தினை விளைத்து வருஞ் சிந்தூரனை சங்கரித்து, மீட்டும் பழையபடி திரிலோகங்களையு மளித்து ரட்சிப்போமென்று திருவாய் மலர்ந்து, தமது திருவுருவைக் கரந்தருளினர்.

இவ்வாறு அண்டாண்ட புவனங்களாய், மற்றப்பொருள்களனைத்துமாய் எல்லா வுயிர்கட்கும் உயிராய், காரணபூதமாய், பிறவுள்ளனவுமாகி, அவற்றிற்குக் காட்சியா யளவுபடாமல் விளங்குந் தேவ தேவோத்தம ராகிய எமது விநாயகக் கடவுள் திருவாய் மலர்ந்துத் தமதுருக் கரந்தருளினர். உடனே உமாதேவி யுதரத்திற் கருவாயினர். அக்குறிப்பை அத்தேவியாரறிந்து சிவபி

ரானைத் தொழுதெழுந்து, சுவாமீ! அடியாள் வயிற்றிற் கருப்பந் தரித்திருக்கின்றமையால், அவ்வூட்டினைத் தணியும்படியாகக் குளிர்ச்சி யோடுங் கூடி வாசனை வீசுகின்ற பல விருக்கங்களை யுடைய நிழலும், அனந்த வளங்களையுடைத்தா யிருக்கின்ற புனிதமுள்ள நதிகளு மெங்கே யிருக்கின்றனவோ அங்கே அடியாளைச் சேர்க்க வேண்டுமென்று பிரார்த்திக்க, அதைச் சிவபெருமான் கேட்டு உடனே ரிஷபவாகனத்தின் மீது தானுந் தேவியுமாக ஆரோகணித்து அளவற்ற தேவர்கள் புடைசூழ்ந்து வரும்படியாகப் பூவுலகத்தி லிழிந்து, சோதிமரம், அசோகு, கடம்பு, குசம், நாகம், வாழை, புன்னை, குருந்து, தேக்கு, ஆரம், அகில், குங்குமம், வேங்கை, சண்பகம், சாளம், வன்னி, பலாசு, அரசு, அத்தி, இலவங்கம், நரந்தம், புன்னை, பாடலம், மந்தாரம், முருக்கு, கொன்றை, தாதகி, வஞ்சி, கூதளம், குரவு, கோங்கு, மரா, தேற்று வெள்ளில், நெல்லி, வருக்கை, இலவு, தான்றி, வகுளம், நெய்தல், முன்னம், வில்வம், மாதளை, வெட்பாலை, குறிஞ்சி, வெட்சி, நொச்சி, கற்பூரவாழை, கமுகு, தெங்கு, நிரந்து, மயிலை, மாதவி, மல்லிகை, மௌவல், முல்லை, பித்திகை, ஏலம், முதலாயுள்ள விருக்க சாதிகளும், கருங்குவளை, ஆம்பல், கமலம், உற்பலம், அனிச்சமுதலிய புட்பங்கள், மலர்ந்து அன்னமுதலிய பட்சிகள் நிறைந்து விளங்குகின்ற அளவற்ற பொய்கைகளும், ஒப்பற்ற வளங்களோடு மலிந்து வெள்ளிய திரைகளைப் பரப்பி நுரைத்து விளங்குகின்ற அனந்தம் பொய்கைகளும், கொண்டல்களனைத்தும்வந்து மேய்தலைச் செய்யத்தக்க சிறந்தநதிகளும், சந்திரகாந்தம், பளிங்கு முதலியவைகளாற் கட்டப்பட்டிருக்கின்ற அளவற்ற உப்பரிகைகள் நிறைந்த வீடுகளும், குயில், புறா, கிளி, பூவை, மயில், கின்னரம், வண்டு முதலியன்வைகள் உலாவிப் பலவகைப்பட்ட கீதங்களைப் பயில்கின்ற வெண்மணற் குன்றுகளும், சிங்கம், புலி, கரடி, யானை, முதலியவைகள் உல்லாசமாய் உலாவுதல் செய்கின்ற அனந்தம் பொதும்பர்களும், இன்னும் இத்தன்மைத்தான எண்ணற்ற வளங்களை வாய்ந்த பரியிலி என்னும் வனத்தினை யடைந்து, அரிசந்தனம், கற்பகம், சந்தானம், பாரிசாதம், மந்தாரமென்னும் ஐவகைத்தருக்கள் அளவற்றனவாக நெருங்கவும் பதுமநிதி, சங்கநிதி என்னும் இருவகை நிதிகள் ஆயிரமாயிரமாக நிறைந்த பலபொய்கைகள் புடைசூழவுமாக வச்சிரம், கோமேதகம், புட்பராகமுதலியநவரத்நங்களைக்கொண்டு சிந்தாமணியிறுல் அழகுபொருந்தச் சமைத்திருக்கின்ற மண்டபத்தில் தாமுந் தமது தேவியும் இடபவாகனத்தினின்று மிறங்கி யமர்ந்தருளினர். இவ்வாறு அச் சோலையின்க ணிறைந்த புட்பங்களின் பரிமளங்களோடு கூடிவருகின்ற சிறுதென்றலானது தமது திருமேனியிற் படும்படியாக அம் மண்டபத்தி னடுவில் வீற்றிருக்கின்ற அம்மை யப்பருடைய சந்நிதானத்தின் முன்னர் சிலர் சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்தார்கள். சிலர் ஆனந்தக் கூத்தாடினார்கள். சிலர் பாடல்களினாற் றுதித்தார்கள். சிலர் நான்கு கைகூப்பி எதிர்நின்றார்கள். சிலர் பணிவிடைகளை நடாத்தி வந்தார்கள். மருங்கினுஞ் சூழ்ந்திருந்தார்கள்.

இவ்வித வைபவங்களோடு வீற்றிருக்கின்ற காலத்தில் சிலநாள் சிவபெருமான் யோகத்தி லிருந்தனர். உமாதேவியார் தமது பாங்கியரோடு நடந்து சென்று வெண்மணற் குன்றுகளி லேறியும், பளிங்கு உப்பரிகைகளி லுலாவியும், மரநிழல்களி லிருந்தும், மலைகளின்மீதி லிவர்ந்தும், பொய்கைகள் ஓடைகள் நதிகள் முதலான இடங்களை யடைந்தும், மிகுந்த இன்பத்தோடு தமக்கிஷ்டமானபடி விளையாடல் செய்திருந்தனர். இப்படி யிருக்குங்காலையில் ஒருநாள் சந்திரசடாதர மூர்த்திக்கு அன்பனாகிய கயமுகா சுரனென்பவன் அங்குவந்து, சிந்தாமணியாற் சமைத்திருக்கின்ற விசித்திரமான மண்டபத்தினை யடுத்து, அதனைத் தனது கொம்பினால் முட்டியெடுத்து நிலத்தில் விழத்தள்ளினான்.

என்று சூதபுராணிகர் சொல்லலும் சவுனகாதி முனிவர்கள் தொழுது, சுவாமீ! சிவபிரானுக்கு அன்பனா யிருக்கின்றவன் கயமுகத்தை யுடைய ராட்சசனானதற்குக் காரணமென்ன? அன்றியும் அவன் அன்பனா யிருக்கின் கயவரைப் போலச் சிவபிரானைச் சற்றுமறியாமல் அவரெழுந்தருளி யிருக்கின்ற மண்டபத்தை முட்டி நிலத்தில் வீழ்த்த வேண்டிய தென்னை? அந்த வரலாற்றினையுஞ் சொல்லியருளல் வேண்டுமென்று கேட்டார்கள். அதற்குச் சூதபுராணிகரிசைந்து, ஓ சவுனகாதி முனிவர்களே! முன்னொரு யுகத்தில் மயேச்சுரனென்னும் ஓரரசனிருந்தான். அவன் நான்கு வேதங்களையு மோதி வல்லுற நிச்சயந் தெரிந்து பதினெண் புராணங்களையும் வழுவறக்கேட்டு தருமசாத்திரங்களையறிந்து நடாத்தி விபூதிஉருத்திராக்க முதலியவைகளை யணிந்து திரிகாலங்களினுஞ் சிவபூசையில் வழாது முப்பத்திரண்டு லட்சணங்களையுங் குறைவற வாய்ந்து மலபாசங்களைத் துறந்து மெய்ஞ்ஞானச் செல்வத்தினி லோங்கி, அஷ்ட ஐசுவரியங்களோடு மநுநீதி முறைமைப்படி உலக முழுவதுந் தனதரசாட்சியினைச் செலுத்திக் குறைவற வாழ்கின்ற நாளையில், ஓர்நாள் பிரகஸ்பதிதேவர் அவ் வரசனிடத்திற் செல்ல, அவ் வரசன் அவரை எதிர்கொண்டு சென்று அழைத்து வந்து விசித்திரமான ஓ ராதனத்தின்க ணிருக்க வைத்து, அர்க்கிய பாத்திய ஆசமனாதிகளைக் கொண்டு பூசித்து, சாஷ்டாங்க மாகப் பணிந்தெழுந்து, மிக்க பத்தியோடு பலமுறை தோத்திரஞ்செய்து நின்றனன். பிரகஸ்பதி தேவர் அவன் செய்த வழிபாட்டிற்கு மனமுவந்து, அரசனே! யாம் உனது ஆண்மையையும், புகழையும், நீதியையும், ஊக்கத்தையும், பண்பினையும், பலவாறு கேள்வியுற்று உன்னைக் கண்டுபோமாறு இங்குவந்தனம். ஆனால், இதுகாறுங் கேட்டதைவிட இப்போது உனது குணாதி சயங்களை நேரிற் காணுமிடத்து என்மனத்து அதிகமாக விருக்கின்றன. நமது பாதங்களி லன்போடு வணங்கிய உனது சிரமானது முனிவர்கள் தேவர்கள் பெரியோர்கள் முதலியோரால் வணங்கப் படுகவென் றநுக்கிரகித்தனர். அதை அவ்வரசன் கேட்டவுடன் அளவற்ற மகிழ்ச்சி கொண்டு, சுவாமீ! தேவரீர்

கொடுத்தருளிய திருவாக்கு எப்போது அடியேற்குப் பலித்திடுமென்று கேட்டனன். அதற்குப் பிரகஸ்பதி தேவர் சொல்லுவார்: அரசனே! நீ எப்போது யானையிடத்தி லுற்பத்தி யாகின்றனையோ அப்போது நமது வாக்கு பழுதில்லாது பலிக்கும். இதுவேயன்றி உடனே நீ சிவானுக்கிரகத்தினால் முத்தியுமடைவை. யென்று சொல்லி எழுந்து போயினர். பின்னர் ஓர் காலத்தில் மயேச்சுராசன் தனது நாடுகளை யெல்லாங் காத்தற் பொருட்டு அளவற்ற சேனைகளோடும் பட்டணத்தினின்றும் வெளிக்கொண்டு வழியிற்செல்லுகின்ற போது, அவனுக்கெதிரே நாரத முனிவர் வந்தனர். அப்போது முன்னர் அவ் வரசனுக்குப் பிரகஸ்பதி தேவர் கொடுத்தருளிய வாக்கு பலிக்குங்காலஞ் சமீபித்ததினாலோ? அல்லது அவனைப் புடைசூழ்ந்து அளவற்ற சேனைகள் நெருங்கிப் போனதினால் தனது பார்வை படாமற் போனதினாலோ, நாரதமுனிவருக்கு அவ்வரசன் வந்தனை முதலிய வழிபாடுகளைச் செய்யாமற் சென்றான். அதனால் அம்முனிவருக்கு மிகுந்த கோபமுண்டாகி, ஓ அரசனே! நீ காட்டிற் சஞ்சரிக்கின்ற யானைபோல என்னை வணங்காது செல்கின்றனை யாதலால், இத்தச்சனன மொழிந்த பின்பு யானைக் குழாத்தினுள் யானை முகனாகப் பிறந்து, கயமுகாசுர னென்னும் நாமத்தினைக் கைக்கொண்டு சிலகாலத்தின் பின்னர் சிவபெருமான் கரத்தினால் உனது சென்னி அறுபட்டு, மீட்டு மவருடைய திருவடியினாலே கயிலாயத்தின்கண் மேன்மை பெற்றிருப்பாயென்று சொல்லிச்சென்றனர். இவ்வார்த்தைக ளனைத்தும் நீதியிற் சிறந்த மஹேச்சுராசன் செவியிலேறலும், ஆ! ஆ! என்ன அற்புதம் அற்புதமென்று சந்தோஷித்து, முன்னம் பிரகஸ்பதி தேவர் சொல்லிய வாறும், இப்போது நாரத முனிவர் கூறிய செய்தியும் ஒத்துவந்த தல்லவா வென்று ஆச்சரிய முற்றுப் பின்னும் அளவற்றநாள் அந்தச் சரீரத்துடன் அரசனாக வாழ்ந்திருந்து தனது ஆயுள் முடிந்த பின்பு பரியலிவனத்தில் வாசமாயிருந்த யானையின்பால் யானை முகனாகப் பிறந்து, கயமுகாசுரனென்னும் பெயரை வகித்து பூர்வக்ஞானமுஞ் சிவ பத்தியு முடையவனாய் அளவற்ற நாளிருந்து, முற்சனனத்தில் தனக்குப் பிரகஸ்பதி தேவரும் நாரத முனிவருஞ் சொல்லியதையும் அச்சொல்லின்படி மறுசனனத்தி லடைந்ததையும்யோசித்து, தன்னையாட்கொள்ள வல்லசாமியையுந் தியானித்து வந்து, சிவபிரா னெழுந்தருளி யிருந்த மண்டபத்தைத்தனது கோட்டினால் முட்டித் தள்ளினன்.

ஓ சவுனகாதி முனிவர்களே! இனி அவன் சிரமானது முன்னம் பிரகஸ்பதி தேவர் கூறியபடி முனிவர்கள் தேவர்கள் பெரியோர்கள் முதலியோராற் பணியத்தக்க மேன்மையைப் பெற்றிருந்த வரலாற்றினையுஞ் சொல்லுவோங் கேட்பீராக. இவ்வாறுகயமுகாசுரனானவன் அன்பர்க்கெளியராகிய சிவபிரான் அமர்ந்திருந்த மண்டபத்தை இரக்கமில்லாதவனைப் போலத்தள்ளுதலும் அங்கிருந்த தேவர்கள் முதலியோ ரெல்லாம் பயந்தார்கள். உல்லாசமாய்ச்சென்று உலாவல் செய்திருந்த உமாதேவியார் தமதுபாங்கியரோடும் வந்து யோகத்தி

லிருந்த கர்த்தருக்கு அதனையறிவித்தனர். உடனே சிவபிரானுக்குக்கோபமுண்டாகி அவ்வசுரன்மீது தமது சூலாயுதத்தை விடுத்தனர். அச்சூலமானது அவனுடல் முழுவதும் நெருங்கிப்பாய, அதனாலவன் சோர்வுற்றுச் சிவாயநமவென்று சொல்லி நிலத்தில் வீழ்ந்தனன். இவ்வாறு கயமுகாசுரனானவன். சோர்ந்து நிலத்தில் வீழ்ந்தபோது சொல்லிய மந்திரமானது சிவபிரான் செவியிலேறலும் உடனே அவருக்கு அவன்மீது கிருபை யுண்டாகி, அச்சோ! கயமுகாசுரன் நம்மைத் தியானிக்கு முள்ளத்தை யுடையவனென் றறியாமல்மண்டபத்தைத் தள்ளினனெனக் கொன்றோமே யென்று மனமிரங்கி, அவன் முகத்தை ஆவலோடும் பார்த்தருளி, அன்பனே! உனக்கு வேண்டிய வரங்களைக் கேள் தருவோ மென்று திருவாய் மலர்ந்தனர். அதைப் பூர்வஞானத்தினையுடைய கயமுகாசுரன் கேட்டதுஞ் சிவபிரானைப் பணிந்தெழுந்து, ஓ கிருபாமூர்த்தியே! தேவரீர் அடியேற்கு அழியாத முத்தியினைக் கொடுத்தருளல் வேண்டும். முற்சனனத்தில் அடியேனுக்குப் பிரகஸ்பதி தேவரும், நாரதமுனிவரு[illegible]றிய வாக்கின்படி இச் சனனத்தில் சம்பவித்ததன்றி வேறில்லை. அதனால் அடியேற்குத் தேவரீருடைய திருக்கரத்தினா லடிபடவுந் தேவரீருடைய பாதபதுமங்களைச் சேவிக்கவுங் கிடைத்ததென்று சொல்லினன். அதனைச் சிவபிரான்கேட்டு அவனுக்குச் சாருப முத்தியினைக் கொடுத்து, அவனது பசிய தோலினையுஞ், சிரத்தினையும் உயிரைப்போலக் கைக்கொண்டு தோலினைத் தமது அரையிலுடுத்திச் சிரசைப் பந்த வாஞ்சையினாலோர் பால் வைத்திருந்தனர். அக்கயமுகாசுரனுடைய தோலைச் சிவபிரான் தரித்தருளியதாலே அது முதல் அவருக்குக் கிருத்திவாசனென்னுந் திருநாமம் வழங்கிவருகின்றது. அத்திருநாமத்தை யாவரேனும் உச்சரித்தால் அஃது வருத்த முறுத்துகின்ற சமுசார வாஞ்சையென்னும் பெரும்பிணிக்கு மருந்தாகி மெய்ஞ்ஞான மயமாகிய வீட்டைக் கொடுத்தருளும்.

இப்பால் சத்துருவைப் போல வந்து கயமுகாசுரன் விழத் தள்ளிய மண்டபத்தைக் கணங்கள் யாவருங்கூடி எடுத்து முன்போலவே நிறுத்தி வைத்தார்கள். சிவபிரானும் உமாதேவியும் மனமகிழ்ந்து பழையபடி திருவிளையாடல் செய்துகொண் டிருந்தார்கள். இவ்வாறு சுவாமியும், அம்மனும் வனத்தி லிருக்குமளவில் சிந்தூரனானவன். எல்லாவுலகங்களினுஞ் சென்றுலாவி எதிர்த்து வந்தவர்களை யெல்லாந் தழுவி நெருக்கி, மீட்டுந் தனது அரண்மனையில் வந்து கொலுமண்டபத்தில் வீற்றிருந்து மனதில் மிருந்த கர்வங்கொண்டு, பிரமன் விண்டு உருத்திரன் என்னு மூவர்களும் நமக்குப் புறந்தந்து இரண்மா யொழிந்தார்கள். இந்திரனாதிய தேவர்கள், அரக்கர்கள், தைத்தியர்கள் முதலியோ ரெல்லாம் நம்மைக் கண்டவுட னோடிப் பதுங்கினார்கள். ஏனையவீரர்கள் யாவரும் நமது கரத்தா லழிந்தார்கள். உலகமனைத்தும் பஞ்சுக் கொப்பாகவும், நாம் அழலுக் கொப்பாகவு மிருக்கின்றோம். என்று சொல்லிக்கொண் டிருந்தனன். அப்போது நற்செயலாய் அவனுக்குக் கேழ்க்

கும்படியாக ஒருஆகாயவாக் குண்டாகி, ஓ சிந்தூரா! தன்னைத்தானே வீணிற் புகழ்ந்துகொள்ளுவோனுக்கு உடனே அழிவுவரும். உனக்கு அழிவுகாலம் சேர்ந்ததனால் உன்னை நீயே புகழ்ந்து கொள்ளுகின்றனை. நிலையில்லாத வுடலை நிலையாகக்கருதி ஏன் கர்வத்தினைப் பேசுகின்றாய்? உன்னைக் கொல்லுவதற்கு உமாதேவியுதரத்தில் ஒன்றான விநாயகமூர்த்தி கருவாகி வளர்கின்றனர். இன்னுஞ் சின்னாளையுள் உனது பெயருமில்லாமல் முடிந்து போவாய்? என்று சொல்லி அடங்கியது. அவையனைத்தையும் சிந்தூரன் கேட்டு மனங்கலங்கி, சாவுசேர்ந்தால் எப்படியென்று அயர்ந்துகொண்டு, இவ்வார்த்தைகளைப் பேசினவன்யாவன்? இங்கிவிடத்திற் பிடித்து அடிக்கக்கடவீர்களென்று சொல்லிச்சில தூதுவரை யேவினன். அவர்கள் அவ்வாக்கினையைக் கடக்கமாட்டாமல் எவ்விடங்களினும்ஓடித் தேடிப்பார்த்து ஒருவரையுங்காணாமல் மீண்டுவந்து விட்டார்கள். இப்பால் சிந்தூரனானவன் நம்மைக்கொல்ல வளர்கின்றகருவை இப்போதே அறுத்து ஈஸ்வரியைத் துயரப்படுத்த வேண்டுமென்று நினைத்தவனாய், உடனே தானிருந்த சபையைவிட் டெழுந்து கயிலாயவரையிற் போய்த் தேடிக் காணாதவனாகி, அவ்விடங்களிலுள்ள மலைகள் திசைகள் முதலிய தெல்லாந் தேடிச் சென்றனன். பின்னர் ஈஸ்வரியை எங்குங்காணாமல் மீட்டும் பூலோகத்திற்கு வந்து வனங்கள் தோறுந் தேடிக்கொண்டு செல்லுகையில் தேவர்கள் முனிவர்கள் முதலியோர் வசித்திருக்கும் பரியலிகானகத்துள் நுழைந்து அதன் மத்தியிலிருக்கும் பூங்காவில் உமாதேவியார் வீற்றிருக்கக் கண்டு, சிவபிரான் யோகத்தி லிருக்கவும், உமாதேவியார் அயர்ந்து நித்திரை செய்திருக்கவுமான காலம்பார்த்து இதுவே நலல சமயமென்று நிச்சயித்து உடனே வாயுருவ மெடுத்து உலகமாதாவாகிய உமாதேவியார் உதரத்திற் பிரவேசித்து, அங்கு நின்மல ஸ்வரூபமாயிருந்து வளர்கின்ற கருவைச் சேதித்து, சிரசை வெளியிற் கொணர்ந்துவந்து விந்தவரையினை யடைந்து, அவ்விடத்துள்ள நருமதை நதியின் பக்கத்திலே வைத்துவிட்டு மீட்டுந் தனது அரண்மனையிற் போய்ச் சேர்ந்தனன். அண்டர்பிரானாகிய விநாயகப் பெருமானது சிரம் விழுந்தவிடம் பெரியபள்ள மாயிற்று. அப் பள்ளத்தை யாவருங் கணேச குண்டமென்று சொல்லு வார்கள். அச் சிரத்தி னின்றும் பெருகிய வுதிரமானது ஆறுபோடிய படியால் அஃது சோணநதி யென்னும் பெயரினால் வழங்கி வருகின்றது. கணேச குண்டத்திற்குச் சமீபத்தி லிருக்கின்ற சிலைகளனைத்தும் அக் குண்டத்திற் சரிந்து வீழ்ந்து கணேச மூர்த்தியினுடைய திருவுருவத்தை யடைந்து உலக முழுவதும் பூசிக்கத் தக்க அளவற்ற பயன்களைக் கொடுத்துக் கொண் டிருக்கின்றன. ஆதலால் அந்தச் சுயம்பு மூர்த்திகளை யெடுத்து யாவரேனும் வேதாகம முறைமைப்படி பூசித்து வருவார்க ளாயின் அவர்கட்கு தரும முதலிய நான்கு புருஷார்த்தங்களுங் கிடைக்கும். சிந்தூரன் வந்து செய்த இக் கொடிய செயல் அச்சிந்தூரனுக்குக் கருவாகி வளர்ந்த விநாயக மூர்த்திக்குந் தெரியுமே யன்றி, உமாதேவியாரும்

அறியார். சிவபிரான் முதலிய யாவரும் அறியார்கள். இத்தன்மைத்தாகிய கொ
டுந்தொழிலை நடப்பித்துக்கொண்ட விநாயக மூர்த்தி யானவர் சிரம்போயுங்
கருவினுள்ளும் முற்றும்படியாகவே வளர்ந்தனர்.

இப்பால் உமாதேவியாருக்கு ஒன்பது திங்களுமாகப் பத்தாந் திங்களில்
சிவபிரா னவரைப் பார்த்து, பெண்ணே! உனது வயிற்றிற் கருப்பம் நிரம்பிய
படியால், இனி யாம் கயிலைக்குச் செல்லவேண்டு மெனச் சொல்லி உடனே
அவரை ரிஷப வாகனத்திற்கொண் டெழுந்தருளினர். யோகத்தி விருப்போர்
களுக்கு யோகியாயும், போகத்தி விருப்போர்களுக்குப் போகியாயு மிருந்து
அனுக்கிரகஞ் செய்ய வல்ல சிவபிரான், பறியலி வனத்தைவிடுத்துத் தமது கயி
லாய வரையையடைந்த பின்னர், உமாதேவியார் உலகத்தாரைப்போல நடந்து
மாது இச்சையுற்று, ஆதி மத்தி யந்த ரகிதமாய், அரூபி வஸ்துவாய், சகல
பிராணிக ளிடத்துங் காரண பூதமாகப் பொருந்தி, என்னையுமோர் பொருளா
கக் கொண்டு, நடித்துக் களித்திருக்கும் மூலகாரணக் கடவுளாகிய விநாயக
மூர்த்தியைப் பிரசவித்தனர். உடனே அவ்விநாயக மூர்த்தியானவர் ஞானசத்தி
யுத்தராய், அட்டமா சித்திகளையுந் தரித்தவராய், சித்தி புத்திகள் சமேதராய்,
சிங்கவாகன ரூடராய், பத்துத் திருக்கரங்களோடும், ஆயுதங்களோடும், அவத
ரித்தருள. அவ் வவதாரக் கோலத்தை உமாதேவியார் கண்டு முன்ன மருளிய
படியே வந்து அவதரித்தனரென்று மன மகிழ்ந்தனர். பின்னர் விநாயக மூர்த்
தியானவர் தம்மையீன்ற உமாதேவியாரை நோக்கி, அன்னையே! உமக்கு யாம்
அன்று சொன்னபடியே கொடுமையின் மிகுத்த சிந்துரனைக் கொல்லவும் பத்
தசனங்களாகிய தேவர்கள் முனிவர்கள் முதலியோர் படுந் துன்பத்தினை நீக்க
வும், உமக்குப் பணிசெய்து ஆனந்தமாக்கி வைக்கவுமாக உமது கருப்பத்தி
னின்றும் அவதரித்தோம். என்று திருவாய்மலர்ந்து தமது திருவுருவைக் கரந்
தருளினர்.

இப்பால் உடனே உமாதேவியார் திகைத்து மயங்கினர். மீட்டும் விநாயக
மூர்த்தி சிரமில்லாத குழந்தையாய் வந்திருந்தனர். அதனைக்கண்ட உமாதேவி
யார் ஆவிசோர்ந்து நிலமிசை வீழ்ந்து நெட்டுயிர்த்து, அவசமாகி நேத்திரங்க
ளால் இதனைப் பாவியேன் பார்க்கப்படுவதோவென்று பதைபதைத்து, ஐயோ!
எனது புத்திரனை யாரோ எடுத்துக்கொண்டு சென்று சிரத்தினைச் சேதித்து
விட்டு என் முன்னே கொண்டுவந்து வைத்தார்களே! நான் எல்லாவிதத்திலும்
பாக்கியவதியா யிருந்தும் புத்திர சம்பத்திலே எளியவ ளாயினேனே! இப்
போது எனது கண்முன்ன ரெழுந்தருளி யிருந்த விநாயக மூர்த்தி எங்ஙன
மேனு மொளித்துச் சென்றனரோ? அல்லது சொப்பனமோ? மாய்கையோ!
மற்றியாதோ? எனது அருமைப் புதல்வனுக்கு இவ்வாறு சம்பவிக்கலாமோ
வென்று புலம்பி, அன்று எதிர்த்துவந்த சிந்துரனும் நீறாகிப்போனனாயின்
இன்று இத்தன்மைத்தான சம்பவத்தை யாம் பார்க்கவேண்டுவ தில்லையே?
சுவாமீ! அச் சிந்தூரனை அன்று ஏன் விலக்கினீ ரென்று சொல்லித் தேம்பித்

தேம்பி யழுதனர். இவ்வாறு உலக மாதா அந்தப்புரத்தி லிருந்து துயரப்படுவ
தைத் திருவோலக்கத்தி லெழுந்தருளி யிருந்த சிவபிரா னறிந்து சரேலென்று
எழுந்து உமாதேவியா ரிடத்தில் வந்து நடந்த செய்திக ளனைத்தையும், வின
வியறிந்து, முழுதுந் தேர்ந்த முதல்வராகிய முக்கண் மூர்த்தியானவர் இப்
போது முடிந்ததையும், இனி முடியப்போகின்றதையும் இன்ன இன்ன படி
யென் றறிந்திருந்தும், அவைகளைத் தமக்குள் மறைத்துக்கொண்டு, திருமேனி
யிற் பழுதுகாட்டி யருளிய தமது புதல்வரது மகிமையை உலகத்தா ரறிந்து
கடைத்தேறுமாறு காட்டும்படி நினைத்தவராய், அகத்திலுள்ள மகிழ்ச்சியை
அயலா ரறியாத வண்ணம் மறைத்தும், உலகத்தவரைப்போல மிருந்த முக
வாட்டத்துடனே தமது புத்திரனைக் கரத்தி லெடுத்துத் துடையின்மீது வைத்
துக்கொண் டிருந்தனர். அக் குறிப்பை நந்திதேவ ரறிந்து சிவபிரானைப் பணித்
தெழுந்து விடைபெற்றுப் பிரமன், விண்டு, தேவேந்திரன் முதலியோருக்கும்
இவ் வற்புதத்தை யறிவித்து அழைத்து வருமாறு சென்றனர். இந்திரன் முத
லாயினோர் நந்திதேவர் வரவை யறிந்து, உடனே அவரை எதிர்கொண்டு வந்து
பணிந்து ஓர் ஆதனத்தி லிருத்திப் பூசித்து, சுவாமீ! தேவரீர் இங்ஙன மெழுந்
தருளிய காரணத்தைத் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தார்
கள் அவர்களை நந்திதேவர் பார்த்து ஓ தேவர்களே! கயிலாயத்தில் உமாதேவி
யார் திருவயிற்றில் ஓர் திவ்வியமான குழந்தை சிரமில்லாமற் பிறந்தது. அதை
சிவபிரான் கண்டு ஒருவாறு யிருக்கின்றனர். ஆதலால் நீங்கள் அங்கு வரவே
ணுமெனச் சொல்லினர். அதை விண்டுமுதலினோர் கேட்டலும் இரக்கமுற்று
முன்னர் தாங்கள் அனைவருந் தோத்திரஞ் செய்தபோது பிரத்தியட்சமாகி
வரங்கொடுத் தருளிய விநாயக மூர்த்தியே அவ்வாறு அவதரித்தனரென்று
தெரிந்து கொள்ளாமல் அவ்வவர்களுடைய வாகனங்களி லேறிச்சென்று கயி
லாயவரையை யடைந்தார்கள்.

அப்போது நந்திதேவர் முன்னதாகச் சென்று விண்டு முதலாயினோர்
வரவை சிவபிரானுக் கறிவிக்க, அவர் தமது புத்திரனை அந்தப் புரத்தில்
லிருத்தி மீட்டுத் திருவோலக்க மண்டபத்தி லெழுந்தருளினர். உடனே விண்டு
வாதி தேவர்கள் முறைமையாகப் பணிந்தெழுந்தார்கள். பின்னர் இந்திரன
வன் பிரமன் முகத்தை நோக்கி உலகமாதாவாகிய பரமேஸ்வரி யீன்றருளிய
குழந்தையை இங்ஙனம் வருவிக்க வேண்டு மென்று சொல்ல, அவ்வாறே பிர
மன் வரவழைத்தனன். அப்போது அக் குழந்தையைச் சிலதேவர்கள் பார்த்து
இப் பங்கமுற்ற பிள்ளையைக் கொண்டுபோய்க் கடலிற் போடுங்களென்று
சொல்ல, அவர்களைப் பிரமன் விழிகளி லனற்பொறி பறக்கும்படியாகப் பார்த்
துக் கோபித்தனன். அதற்குத் தேவர்களெல்லாம் ஒடுங்கி அச்சங் கொண்டார்
கள். பின்னர் பிரமன் தனக்குள் நடுக்கங் கொண்டு, இக்குழந்தை அந்தரியாமி
யாயிருக்கின்ற சர்வேஸ்வரனே! யென்று நிச்சயித்து, ஓ கிருபா மூர்த்தியே!
அநாதிசித்தராய், உலோகங்களை யெல்லாம் உண்டாக்கவல்ல கருத்தாவாய்,

அடியேங்களுடைய பாவங்க ளனைத்தையு மொழித்து இடர்களைப் பொடிபடுத்த வல்லஇறைவராய், ஏகானேக சொரூபராய், மனோவாக்குகளுக்கு எட்டாத வத்துவாயிருக்கின்ற தேவரீர், இவ்வாறு சிரமில்லாது இங்ஙன மவதரித்திருக்கின்ற காரணமென்ன? அவ் விரகசியத்தைக் கவலைக்கடலில் மூழ்கி மயக்க முற்றழுகின்ற அடியேங்கட்கு வெளிப்படுத்தித் தெளிவித்தருளல் வேண்டு மென்று பிரார்த்தித்தனன். அதனை விண்டுகேட்டு பிரணவமந்திரசொரூபியா யிராநின்ற விநாயகமூர்த்தியினது மகிமையைச் சிறிதுமறியாதவராகி, ஓவாணி கேள்வனே! சரீரத்திற் குண்டான உறுப்புக்களில் பிரதான உறுப்பாயிருப்பது சிரம். அச் சிரமில்லாமல் பிறந்த குழந்தைகள் எவ்வுலகத்திலேனும் பிழைத்ததுண்டோ வென்றனர். அதைப் பிரமன் கேட்டவுடன் கோபித்து, நீர் எவ்விதத்தால் நகாதவார்த்தைகளை மற்றைத் தேவர்களைப்போலப் பேசினீ ரென்று அவர் வாயினை யடக்கி, ஓ அமராய்மௌலியே! ஆணவ மலத்தி லழுந்தித் தீராத மயக்கத்தினை யுடைய சிறியோர்களாகிய நம்மைப்போல உடற் கருவிகள் கூடாத காலத்தில் அறியுந் தன்மை யில்லாத அறிவினை யுடையவர். இவர் எங்கும் பரிபூரண வடிவாய், அனைத்தையும் ஒருமிக்க வறியும் பெருமானாகும். முன்னஞ் சிவபெருமா னுடைய வில்லுக்கு நீர் நாணாயிருந்த காலத்தில் இந்திரன் முதலிய தேவர்க ளெல்லாஞ் சிதலாய் வந்து அந்த நாணை அறுத்தனர். அப்போது அந்த நாணாயிருந்த நீர் உம்முடைய சிரம் அறுபட இறந்து போனீரோ அதுபோலவும், உலகத்தில் தலையிழந்தவர்கள் உயிர் தரித்து வாழார் என்பது போலவும், சகலலோகங்களையுந் தோற்றுவித் தழிக்கவல்ல இச் சுயம் பிரகாச மூர்த்தியினைச் சொல்லப்போமோ? பரந்த வுலகமனைத்தினையுந் தமது இரண்டு மாயையினைக்கொண்டு சகல தத்துவங்களும் பொருந்தத் தோற்றுவித்து, உயிர்களது அஞ்ஞான விருளைப் போக்குவிக்கத் தனுகரணாதிகளைக் கொடுத்து இரட்சித்து உயிர்தோறும் உள்ளுக்குள்ளே அந்தரியாமியா யிருந்து அறிவு விளங்கவைத்துத் தாயினைப்போல வளர்த்துவருந் தயாபர மூர்த்தியினுடைய திருவுருவில் ஓர் உருவமில்லாவிடில் அவர்க்கென்னகுறை? உருவம் வேண்டு மென்றும், வேண்டா மென்றும் வருகின்ற இரண்டு வழும் இவர்க்கில்லை. தம்மை அனுசரித்தோர்க்குச் சகல அரிட்டங்களையும் போக்கவல்ல இவரியல்பைத் தேவர்களு மறியார்கள். அத் தேவர்களெல்லாந் தொழத் தலைமை பெற்றிருக்கின்ற நீரு மறிந்திலீர். ஆசானுடைய அருமையை அபக்குவர்களறிவார்களோ வென்று சொல்லினன். அவையனைத்தையுஞ் சர்வஞ்ஞமூர்த்தியாகிய விநாயகக் கடவுளானவர் செவியில்லாமலே கேட்டுச் சந்தோஷித்து, வாயில்லாமலே இதனை விளம்புவதாயினர்.

ஓ இரணியகருப்பனே! பூருவத்தில் யாம் சிருட்டித்தொழிலை உனக்குத் தந்தபோது ஓர் சலப்பிரவாகத்தில் உன்னால் யாம் எவ்வாறு காணப்பட்டோமோ அவ்வாறே இப்போது ஈஸ்வரியினிடத்தில் உன்னால் காணப் பட்டோம். ஆனால் சிரமில்லாமற் காணப்பட்டதற்குக் காரணம் யாதெனில், அதனையுஞ்

சொல்லுவோங்கேள். எப்போதுந் தீமைகளை விளைத்து வருகின்ற சிந்துரனைக் கொல்லவும், உங்கட்கு அவன்செய்து வருகின்ற அரிட்டங்களை நீக்கவும், வேதாகம நெறிகளை விருத்தி யாக்கவும், உமாதேவிக்குப் பணிபுரியவும் பிரமனது வரத்தின் கீர்த்தி பொய்க்காதிருக்கவும் பால் தினையாதிகளின்றி இங்கு தோன்றினம். என்று விநாயகமூர்த்தி திருவாய்மலர்ந்தருளலும், அதனைப் பிரகஸ்பதிதேவர்கேட்டு, சுவாமி! தேவரீர் திரிலோகங்களையுங் காத்தருளவேண்டி அவதரித்ததாயின் தேவரீருடைய திவ்யசொரூபத்தை யாவருந்தரிசிக்கும்படியாகக்காட்டி, அடியேங்கள் மனதிலிருக்கின்ற மயக்கத்தைத்தீர்த்து மகிழ்ச்சியை விளைவித் தருள வேண்டு மென்றனர். அதற்கு விநாயக மூர்த்தி சந்தோஷித்து, ஓ தேவகுருவே! முன்பு மயேச்சுர னென்னு மரசன் உன்னை மிகுந்த பத்தியுடனே பணிந்தபோது நீ அவன் தலைக்குக் கொடுத்த வரத்தினால் பின்பு அவன் கஜமுகா சுரனாகப் பிறந்து, சிவபிரானுடைய சூலாயுதத்தினா லறுபட்டுச் சாருபபதவியைப் பெற்றிருக்கின்றனன். அவன் சிரமானது அக்கடவுளாலயத் தோர்பால்வைக்கப் பட்டிருக்கின்றது. அன்றியும், அஃது நீண்ட துதிக்கையினோடு மிக்க அழகாயிருக்கின்றது. நமது திருமேனியைப் பார்த்து இது என்ன வென்று உங்கள் மனதில் எண்ணுகின்ற எண்ணங்க ளெல்லாந் தீருவதற்கு, அந்தச் சிரத்தை நமது சரீரத்திற் கலக்கச் செய்வதே கருமம். அதற்கு மிக்கது வேறொன்றில்லை யென்றனர். அதைப் பிரகஸ்பதி தேவர் கேட்டு, ஓ திரிகாலங்களையு மறியவல்ல கடவுளே! தெளிந்த அறிவினையுடைய மயேச்சுர ராசன் பொருட்டு அடியேன் கூறிய வார்த்தையானது இங்கு யாவருமறியுமாறு தேவரீராற் றிருவாய் மலர்ந் தருளுவதாயதே! விஸ்வரூபியாயும், விஸ்வேசுரராயும், பத்தர்களுடைய விடர்களை நீக்கவல்ல பரம்பொருளாயுமிருக்கின்ற தேவரீருடைய சுயம்பிரகாச சொரூபத்தை அடியேன் காணும்படியான அறிவில்லாதவனாயினேன். என்று இவ்வாறு பலமுறை மிகுந்த உருக்கத்தோடுந் துதிசெய்துக்கொண் டிருந்தனர். அச்சமயத்தில் நாரதமுனிவர் விநாயக மூர்த்தியைப் பணிந் தெழுந்து, ஓ சிற்பரானந்த மூர்த்தியே சித்தியானந்த, நிரூப, நின்மல, நிரந்தர, நிராகார, நிஷ்கர்ம, நிர்ச்சங்க, நிர்விகார, நிர்க்குண, நிஷ்கிரிய, நிர்விகற்ப, நிரஞ்சன, நிராலம்ப, நிரதிசயானந்த முதலிய அளவற்ற குணாதிசயங்களை வாய்ந்த தேவரீர் இவ்வுலக மனைத்தினையும் யானை முகங் கொண்டு காத்தருளும் பொருட்டுத் திருவுளஞ் செய்திருந்த கிருபையோடும் உமாதேவியினிடமாக அவதரித்தது மெய்யேயாகும். ஆயினுந் தேவரீர் சிரமானது இடையி லொழிந்ததாகக் காணப் பட்டிருக்கின்றமையால் அஃது யாவரா லொழிக்கப் பட்டதோ அதனைத் திருவாய் மலர்ந்து, அடியேங்கட் குண்டாகிய சந்தேகத்தினைத் தெளிவித் தருள வேண்டு மென்று பிரார்த்தித்தனர். அதற்கு விநாயக மூர்த்தி கிருபை கூர்ந்து, ஓதேவமுனியே! நாம் பரமேஸ்வரி வயிற்றிற் சூலாயிருந்த எட்டாந் திங்களில், முன்னம் பிரகஸ்பதி தேவன், மயேசுரராசன் வழியிற் சென்றபோது உனக்கு வந்தனை

செய்ய வில்லை யென்று கொடுத்த சாபமானது சரியாதற் பொருட்டும் நமது சரீரத்தினை விட்டு நீங்கிய சிரமானது விழுந்த விடத்திலிருக்கின்ற சிலைகளனைத் தும் நமது சொரூபத்தினை யடையும் பொருட்டும், அவைகளை யெடுத்துப் பூசித்து வருகின்ற ஆன்மாக்களுக்கு வேண்டிய வரங்களைக் கொடுத்தற் பொருட்டும், மனிதர்-நாகர்-தேவர்-முதலியோரால் அழிவுபெறாத வலியினை வாய்ந்த சிந்தூரனைச் சங்கரித்தற் பொருட்டும், யாம் யானை வதனத்தை யடைதற் பொருட்டுந் திருவுளங் கொண்டு; இந்த மகா திவ்விய சரீரத்திலிருந்த நமது சிரமானது நீங்குமாறு யாம் கருவாகி வளர்கின்ற சேதியைச் சிந்தூரனுக்கு ஆகாய வாக்கினு லறிவித்தனம். அவன் உடனே தனது உருவத்தை மறைத்து மாய ரூபங் கொண்டு வந்து ஈஸ்வரியி னுதரத்துட் புகுந்து கருவாயிருந்த சிரத்தை யறுத்துக் கொண்டு சென்றனன். இப்போது யாம் கசமுகத்தைத் தரித்துக் கொண்டு அச்சிந்தூரனைச் சங்காரஞ் செய்தருளுவ மென்று திருவாய் மலர்ந்தனர்.

அவை யனைத்தையும் நாரத முனிவர் கேட்டு மிகுந்த வகையோடு மீட்டும் பணிந்தெழுந்து, சுவாமீ! அந்த யானையின் சிரமானது அடியேங்கள் சிரத்தினுற் றாங்கத் தக்கதன்று, அதைக் கொண்டு வந்து தேவரீர் திருமேனியிற் சேர்க்கத்தக்க வல்லபமும் அடியேங்கட் கில்லை. ஆக்கல்-காத்தல்-அழித்தல்-என்னு முத்தொழிலுக்கு முதன்மையா யிருக்கின்ற தேவரீரே அதனை வரச் செய்து தரித்தருள வேண்டு மென்று சொல்லினர். அச்சொல் நிறை வேறுவதற்கு விநாயக மூர்த்தியானவர் மயேசுரனென்கிற யானையின் சிரசையாவருங் கண்டு தரிசிக்கும்படியாக வரச்செய்து தமது திருமேனியிற் சேர்த்துக் கொண்டு மகர குண்டலம்-கிரீடம்-முத்துமாலை-பொற்கொடி முதலிய ஆபரணங்களோடு நான்கு புயங்களும் மூன்று விழிகளும் விளங்கும்படி இடப்பாகத்திற் சித்தியும் வலப்பாகத்தில் புத்தியுமாகத் தரிசனந்தந்தனர். இவ்வாறு தரிசனந் தந்தருளிய விநாயக மூர்த்தியைத் தேவர்கள் முதலிய யாவருங் கண்டு பிணி முழுவது மொழிந்து பேரின்பக் கடலி லாழ்ந்தார்கள்.

மீட்டும் பிரமனாதி தேவர்களு முனிவர்களும் விநாயக மூர்த்தியினுடைய திருவடிகளில் முறைமையோடு தாழ்ந்தெழுந்து இருகரங்களையுஞ் சிரமேற் கூப்பினின்று, பரப்பிரம சொரூபமாக விளங்குங் கர்த்தனே போற்றி; திரிமூர்த்திகள் முதலிய சகலருக்கு மூலகாரணக் கடவுளாக விருக்கின்ற பரம் பொருளே போற்றி; ஞானசத்தி கிரியா சத்தி சொரூபமாய் அகிலாண்டமெல்லா மதிட்டித்து விளங்கும் சாக்ஷாத் சித்திபுத்திக ளிருமருங்கினும் பொருந்த வைத்து சராசரப் பிரபஞ்சங்கள் விருத்தி யடையச் செய்தருளும் தயாநிதியே போற்றி, யான் எனது என்னும் அகங்காரச் செருக்கிற்பட்டு, உலகத்தை வாட்டிவரும் அசுரர்களைச் சங்கரிக்க வல்ல தேவ தேவோத்தமனே போற்றி, எம்மை யொத்தவழித் தொண்டர்கட்கு நாதனாக விருந்து தடுத்தாண்டு ரட்சிக்

கும் பக்தவற்சலனே போற்றி, சோமசூரியாக்கினியைத் திரிநேத்திரங்களாகக் கொண்டிருக்கும் ஆதி தேவனே போற்றி, பிறப்பிலியாய்ச் சலனமற்று எக்காலத்தும் விளங்கும் பெருமையினை வாய்ந்த தாணுவே போற்றி, எல்லாப் பொருள்கட்கும் முதன்மையாகிய பொருள் யாதோ அதற் கதிபப் பொருளே போற்றி, எறும்பு முதல் யானை யீறாகச் சொல்லும் எண்பத்துநான்கு லட்சஞ் சீவபேதங்க ளிடத்தும் அருன்மாவாகப் பொருந்தி' ஆட்டி யூட்டி யுறக்கும் சகல லோக நாயகனே போற்றி, வேத ஆகம முதலிய சாத்திரங்களின் முடியில் நின்று நிருத்தஞ் செய்யும் அண்ணலே போற்றி, உலகங்களில் வாசஞ் செய்யும் பிராணிகள் எத்தகைய ராயினும் அவ்வவர்கள் வழிபடும் அந்தந்தத் தெய்வங்களாக விளங்கி அவர்கள் மனோபீஷ்டங்களைக் கடாட்சித்தருளுங் காரணவஸ்துவே போற்றி, மெய்ப்பத்தியினால் தேவரீரை ஆராதித்துத் தெரிசிக்கப் பெற்ற புண்யவான்களுக்கு இம்மையில் அளவற்ற போக பாக்கியங்களை யனுபவிக்கச் செய்து மறுமையில் மோட்ச சாம்பிராச்சியத்தினையுந் தயைசெய்தருளும் அடிகளே போற்றி, வேதாகம புராணங்களை யுண்டுபண்ணி அவற்றினை அன்புடன் பதக்கிரமமாய்ப் பாராயணஞ் செய்துவரும் மேன்மைபெற்றவர்களுக்கு மேலான பதவிகளைத் தகுதியாக அனுக்கிரகஞ் செய்துவருஞ் சர்வக்ஞனே போற்றி, முப்பத்தாறு தத்துவங்களுக்கும் மேலாக விளங்கி நடிக்குந் தற்பர மூர்த்தியே போற்றி.

என்று இவ்வாறு அனந்தமுறை ஒருமைப்பட்ட மனதோடு தோத்திரஞ் செய்து, ஓ சகல சீவராசிகளும் பிழைக்கும்படி எழுந்தருளிய நாதனே! தேவரீர் கஜானன னென்னுந் திருநாமத்தினைக் கொள்ளல் வேண்டும். மனிதர்கள் தேவர்கள் முதலியோரெல்லாம் அவ்வவர்கள் செய்யுஞ் சற்கருமங்கடோறும் தேவரீருக்கு வழிபாடுசெய்ய அவ்வவ் வழிபாடுகளிற் சுவாமிக ளெழுந்தருளிக் கிருபை புரியவேண்டு மென்று பிரார்த்தித்தார்கள். அப்போது சிவபிரானும் உமாதேவியும் துக்கத்தி னின்று நீங்கிச் சந்தோஷ மடைந்து, சித்தியைக் கொடுப்பவரும் முத்தியைக் கொடுப்பவரும் இவ்விக்கின நாசர், விக்கின நாயக ரென்று சொல்லி ஒப்புதற்கரிய தமது குமாரருடைய மேன்மையான குணங்களைப் பார்த்து உவகைபூத்தார்கள். பின்னர் விநாயக மூர்த்தியானவர் தமதழகினால் உலக மனைத்தும் விகட னென்னுந் திருநாமத்தாற் றுதிக்கப்பட்டனர். உடனே உமாதேவியார் அவருக்கு நீராஞ்சன முதலியவைகளைச் சுழற்றிப் பணிசெய்துவரச், சிவபிரான் யாவரும் விழுப்பமெய்தும்படி அளவற்ற மகிழ்வோடு பூசனை செய்தனர். இந்திரன் பிரமன் விண்டு முதலிய தேவர்களும், முனிவர்களும் விநாயகமூர்த்தியி னிடத்தில் அளவற்ற வரங்களைப் பெற்றுத் தத்த மிடங்களிற் போய்ச் சேர்ந்தார்கள்.

சவுனகாதி முனிவர்களே! இவ்வாறு விநாயக மூர்த்தி திருவவதாரஞ் செய்தருளிய தினம் ஆவணிமாதம் பூருவபட்ச சதுர்த்தி யாதலால், அந்தச்

சதுர்த்தி தினத்தில் விநாயகரைப் பூசை செய்வோர்கள் அடையும் பயனை யார் அளவிட்டுச் சொல்ல வல்லவர்கள். மேலும் அந்த ஆவணிமாதச் சதுர்த்தியா னது உலக மனைத்தும் பூசிக்கப்பெற்ற இறைவராகிய சிவபிரானை பூசித்த நாள் ஆதலானும், விநாயகப் பெருமான் திருவவதாரஞ் செய்த மேன்மையை யுடைய தாதலாலும், அஃது வருடந்தோறும் அவரைப் பூசிப்பதற்கு முக்கிய மாக விருக்கின்றது. யாரும் விகடமென்று சொல்லத்தக்க பேரழகினைவாய்ந்த கஜானன விநாயகர் இவ்வா றிருக்க, நாரத முனிவர் பூலோகத்தி லிருக்கின்ற சிந்தூர னிடத்திற் சென்று அவனால் வந்தனம் முதலிய வழிபாடுகளைச் செய் யப்பெற்று அவன் தந்த ஓர் ஆசனத்தி லிருந்து, உன்னையொத்த பராக்கிரம சாலிகள் மூவுலகத்தினு மில்லை யென்று சொல்லினர். அதைச் சிந்தூரன் கேட் டுச் சந்தோஷித்து நாரத முனிவரது மலர்ந்தமுகத்தை நோக்கி, சுவாமீ! இது காறு மில்லாததாயும், அருமையானதாயும், அற்புத முற்றதாயு மிருக்கின்ற சரி தம் யாதேனுமுண்டாயின் அதனை அடியேற்குச் சொல்லியருளவேண்டு மென் றனன். அதற்கு நாரத முனிவர் மகிழ்ந்து, ஓ சமஸ்த வுலகினையும் வென்ற வீர னே! நாம் எவ்விடங்களினுஞ் சுபாவமாய்த் திரிகின்றோம். அவ்வாறே உம்மி டத்திற்கும் வந்தனம். உன்னால் நமக்கு வேண்டுவது யாதொன்றுமில்லை. இது காறு மில்லாத திவ்வியமான சரித்திரமொன்றுண்டு அதனைச்சொல்லுவோம் கேட்பாயாக: கயிலாயத்தில் உமாதேவியா ருடைய வயிற்றில் சிர மில்லாமல் ஒரு திவ்வியமான குழந்தை உற்பவித்தது. அதற்கு முன் சிவபிரான் யானை யின் சிரமொன்றை உருவகித்து ஓர்பக்கல் வைத்திருந்தனர், அச்சிரத்தை அக் குழந்தையானது தனதாய் தூபரம் நீக்குமாறு தானே வரும்படிசெய்து சி ரத்திற் றரித்துக் கொண்டது. மேலும் அக்குழந்தையோ மிக்க வலியினை யுடையது. உயர்ந்த அறிவினை யுடையது. அக்குழந்தைக்கு நிகர் யாரையுங் காணோம். அஃது முதலிற் * கவந்தமாய்ப் பிறந்தது யாது காரணத்தினாலோ அறிகின்றிலம். பின்னர் அதுவே யானை முகத்தினைத் தரித்துக்கொண் டிருக் கின்றதென்றனர். இவை யனைத்தையுஞ் சிந்தூரன் கேட்டவுடன் அயர்ந்து மூர்ச்சையாகிப் பூமியில் வீழ்ந்து, மீட்டுந் தெளிந்தெழுந்து, உள்ளந் தளர் வெய்தித் துக்கித்து, முன்னம் நமக்கு ஆகாசவாக்கொன்று உண்டாயிருந்தபடி அவனை நமக்குப் பகைவனென்று நிச்சயித்து, ஓ மகதிமுனியே! அக் † கஜா னன முகத்தையுடைய மைந்தனை எவ்விதத்திலேனும் யான் கொல்லவேண்டும் கொல்லாது விடுத்தால் அவன் என்னைக் கொல்லுவான். இது சத்தியம் இத் தினமே அவனிருக்கு மிடத்திற் சென்று அவன் தந்தையாகிய பரமசிவன் அவ னை எவ்விதத்திற் பாதுகாத்து வைத்திருந்தாலும், பற்றி இழுத்துக் கொண்டு வந்து கொன்று பத்துத் திசைகளினும் எனது பராக்கிரமத்தை நாட்டிவைப்

* கவந்தம்-தலையற்ற உடம்பு.

† கஜானனர்=(கஜம்-யானை, ஆனனம்-முகம்) யானைமுகமுடையவர்.

பேனென்று சொல்லினன். அதனை நாரதமுனிவர் கேட்டு முகமலர்ச்சி கொள் ளத் தானும் முகமலர்ச்சிகொண்டு மிகுந்த ஊக்கத்தோடும் யுத்தத்திற் செழுந் தனன். அப்போது நாரதமுனிவர் அவனை நோக்கி, ஓ புனிதனே! நாம் உனக் கு இதுசொல்ல இங்கு வந்தனம். நீயோ பிரமதேவனுடைய முகத்திற் பிறந்து அதனால் அளவற்ற மேலான வரங்களைப் பெற்று இதுகாறும் ஓர் வருத்தமின்றி வாழ்ந்திருக்கின்றனை. மேலும் அப் பிரமதேவனும் உன்னைக் கண்டவுடன் அஞ்சிப் பதுங்கும்படியாகச் செய்தனை. இத் தன்மைத்தான வல் லபத்தை யுடைய உனக்கு நாமுரைப்பதென்ன விருக்கின்றதென்று நயங் கூறி அவ்விடத்தி னின்று மகன்று கைலாயவரையை யடைந்து உமாதேவியா ரெதி ரில் நின்று, ஓ சகத்ரட்சகியே! தேவரீர் குமாரனைக் கொல்லும்படியாகச் சிந் தூர னென்பவன் இதோ வந்துவிட்டனனென்று சொல்லிப் போயினர்.

இவ்வாறு நாரத முனிவர் சொல்லி அகல்வதன் முன்னர் அழலைச் சொரியும்படியான விழிகளை யுடைய சிந்தூரனென்பவன் கயிலைக்கு வந்து விண் ணுலகம் மண்ணுலகம் எல்லாம் நடுக்கும்படி ஊழிக்காலத்தி லுண்டாகின்ற இடிபேற்றினை யொப்பக் கர்ச்சித்து, குரூரமான சொற்களைக்கொண்டு, எனக் குப் பகைவனாக இங்கு உதித்திருக்கின்றவன் எவனோ அவன் என்னெதிரில் வரக்கடவன்? யானைமுகத்தோடு கூடியிருக்கின்ற அவனைக் கொல்லுவதற்கு யான் ராஜகண்டீரவத்தைப்போல வந்திருக்கின்றேன். விண்டு பிரமன் முத லிய தேவர்களில் ஒருவரேனும் என்னெதிரில் நின்று எதிர்த்தவர்களில்லை. சராசரங்களை யெல்லாம் ஓர் நிமைப்போதில் சாம்பராக்கி யிருக்கின்றேனென் று சொல்லி ஆர்ப்பரித்தனன். இவ்வாறு ஆர்ப்பரித்து அறைகூவி யிருக்கின்ற சிந்தூரன் முன்னே யானைமுகத்தினை யுடைய விநாயகமூர்த்தி யெழுந்தருளி, அடா துட்டனே! உன்னைக் கொல்லத்தக்க மகா பராக்கிரமத்தினை யுடைய வீரன் யாமே? நம்மை விண்டு பிரமனாதியரைப்போல நினையற்க. நம்மை யெதிர்த்த தேவர்கள், அவுணர்கள், அரக்கர்கள் முதலாயினோரை யெல்லாம் அப்போதைக் கப்போது வந்து சங்கரித் திருக்கின்றனம். வருணம் நான்கினை யுங் காய்ந்தனம். நதிகள் முதலானவைகளை யொழித்தனம். மலைகள் முத லானவைகளை யழித்தனம். பிரபஞ்சங்களை யெல்லாம் ஆக்கலும், அழித்தலும் நமது செய்கையே யல்லாமல் வேறாய் நினையற்க. உன்னால் மாய்க்கக்கூடாத சகத்தினை யெல்லாம் யாம் மாய்ப்போம். உன்னால் மாய்த்திருக்கின்ற சகத்தை யெல்லாம் உனது கண்ணெதிரிற்றானே சிருட்டிப்போம். தேவர்கள் முதலாயி னோர்க்கும் பறவையைப்போன்ற நின்னையும்அவ்வாறேஅழித்துவிடுவேம். அதை இப்போது நீ காணக்கடவை யென்றனர்.

அவை யனைத்தையும் பராக்கிரமத்திற் சிறந்த சிந்தூரன்கேட்டு, இவனே நமக்குப் பகைவனென்று தன்மனதில் நிச்சயித்தும் அவரைச் சிறுகுழந்தை யென்றே அவமதித்து, ஓ பிள்ளாய்! நீயேன் வீணிலென்னைப் பகைத்து மாள

வேண்டும்? ஐயோ! உன்னைப்பார்த்தால் எனக்குக்கொல்ல சம்மதமில்லை. எங்குமில்லாத பேரழகைப்படைத்திருக்கின்றனை. நீ யுன்றாயிடத்திற்சென்றுமுலைப்பாலுண்டு அவள் கண்களிக்கும்படியாக முன்றிலில் விளையாடிச் செல்லுக. வென்று இழிச்சொல்கூறி நகைத்தனன். அதை விநாயகமூர்த்திகேட்டு, அடா சுத்தமூடசிரோமணியே! கனத்த இருட்கூட்டங்களை ஓர்சிறியதிரியினை வாய்ந்த தீபங்கொல்லும். அண்டமுகட்டை யுறுஞ்சம்படியான பெரிய பர்வதங்களை ஓர் சிற்றுளி பிளக்கும். மும்மதங்களையும் பொழிகின்ற யானைக் குழாங்களை ஓர் சிறிய அங்குச மடக்கும். நம்மைச் சிறுகுழந்தையென் றவமதித்துக் கூறினை. யாம் யமனைப்போல வந்து உன்னைக்கொல்லத்தக்க காலையென்றறிந்திலைபோலும், என்றுசொல்லி உடனே தமது சிரமானது அண்ட கோளங்களை எட்டும்படியாக நீண்டு, பெரிய பர்வதங்களுக்குச் சமானமான புசங்களோடு, சிரம், விழி, செவி, முகம், கரம், பாத முதலிய உறுப்புகளனைத்தும் ஆயிர மாயிரமாக விளங்க விஸ்வ ரூபங் கொண்டு, சொர்க்காதி உலகங்களனைத்தும் ஓர் நொடிப்போதில் தமக்குள்ளே யொடுக்கினர். அவ்வற்புதத்தைச் சிந்தூரன் பார்த்து, சிங்கத்தைக் கண்ட யானைபோலவும், பயந்து நடுங்கினன். அதனைச் சத்துச் சித்தானந்த சொரூபராய் விளங்கிய விநாயகக் கடவுள் நோக்கி, ஓ பேதாய்! சகல லோகங்களும் நமக்குள் ஒடுங்கியதைக் கண்டனை. மீட்டும் அவைகளை வெளிப்படுத்துவதுங் காண்பாயாக வென்று திருவாய் மலர்ந்து தமது முகத்தில் அந்தணரையும், புசத்தில் அரசரையும், முழந்தாளில் வணிகரையும், பாதத்தில் சூத்திரரையும், விழியிற் சூரியனையும், இதயத்தில் சந்திரனையும், நாசியில் அக்கினியையும், உந்தியில் ஆகாயத்தையும், முடியில் விண்ணுலகையும், அடியில் மண்ணுலகையும், செவியில் திக்குகளையும் ஏனைய திருவுருவங்களில் கடல்கள் மலைகள் நதிகள் முதலிய யாவையு முண்டாக்கி; இவை யனைத்தையுங் கண்டு நடுக்கமுற் றிருக்கின்ற சிந்தூரனைப்பார்த்து நகைத்து,முன்னர் நம்மிடத்திலொடுங்கிய உலகங்களை யெல்லாம் மீட்டும் நாமே உண்டாக்கி,இதைக் கண்டனை யல்லவாவென்று திருவாய்மலர்ந்து, ஒரேலென்று நீண்ட துதிக்கரத்தினால் அச்சிந்தூரனை வாரியெடுத்துக் குழைத்துத் தமது மத்தகத்தில் மகிழ்வோடு பூசிக்கொண்டனர்.

இப்பால் திசைகள்தோறுஞ் சென்று கமழும் படியான பரிமளத்தினை வாய்ந்த சிந்தூரனுடைய சரீரமானது ஐங்கரக் கடவுளாகிய விநாயக மூர்த்தியினது மத்தகத்திற்குச் சாந்தாயினது. அவனுயிரானது அக்கடவுளுடைய திருவடிகளை யடைந்து பேரானந்த மெய்தியது. உடனே ஆகாயத்தில் பஞ்சகருவிகளு முழங்கின. தேவர்கள் புட்ப வருடஞ் சொரிந்தார்கள் கந்திருவர் கானம் பாடினார்கள். முனிவர்கள் வேத மோதினார்கள். ஞான வித்தகராகிய விநாயகக் கடவுள் பழையபடி குழந்தை யுருவா யமர்ந் தருளினர். உலக மனைத்தும் பேரானந்த வாரியிற் றிளைத்தன. உருத்திரன் விண்டு பிரமனாதிய தேவ

ர்களெல்லாம் அவ்விடத்தில் வந்து மிகுந்த பத்தியோடு விநாயக மூர்த்தியினுடைய திருவடிகளிற் பூசித்தார்கள். கொன்றைப் பூமாலையினை யணிந்த சிவபிரான் அத்தேவர்கள் வேண்டுதலின்பேரில் கஜானன மூர்த்தியினை யாவரினும் மேன்மை பெற்றிருக்கும்படி வைத்தனர். பின்னர் பிரமதேவன் தனது கரத்திலிருக்கின்ற கமண்டல தீர்த்தத்தால் விநாயக மூர்த்திக்குப் பாத்தியமுதலியவைகளைச் செய்து பூசித்து, கரத்திற் செந்தாமரைப் பூவினைக் கொடுத்தனன். அவ்வாறே வருணன் பூசித்து மிகுந்த வல்லபத்தையுடைய பாசத்தைக் கொடுத்தனன். தேவேந்திரனானவன் தனது கற்பக வனத்திற் பூத்த செந்தாமரைமலரினாலுஞ் செங்குவளைமலரினாலுங் கட்டப்பட்டிருக்கின்ற பூமாலையைத் தரித்துப் பூசித்து நிருத்த கீதவாத்தியங்களைச் செய்வித்து மகிழ்ந்தனன். சிவபிரான் சூலாயுதத்தைக் கொடுத்தருளினர். மற்று முள்ளவர்க ளனைவரும் வேறுவேறு பூசித்து அவ்வவர்கள் கையிலகப்பட்ட பொருள்களைக் கொடுத்துத் தீர்க்க தண்டஞ் செய்தார்கள். இவ்வாறு யாவராலும் பூசிக்கப் பெற்ற கஜானன மூர்த்தியானவர் பின்னர் அங்கிருந்தபடி மறைந்தருளினர்.

இச்சரித்திரத்தைக் கருப்ப முற்ற ஸ்திரீகள் ஈனமாட்டாது வாதனைபடுங்காலத்தில் அவர்கட்குச் சொன்னால் உடனே வருத்த மனைத்தும் நீங்கிப் பிள்ளையைப் பெறுவார்கள். அக்குழந்தையும் நற்குண நற் செய்கைகளோடு தளர்வின்றி வளரும். யாவரேனும் யாத்திரை செய்யுங் காலத்தில் இதனைச் சொல்லிக் கொண்டு சென்றால் சென்ற விடத்திற் செயம் பெறுவார்கள். அரசர் முதலாயினோரை வெல்ல வேண்டி அவர்கள் சபையிற் செல்லுவோன் இதனைப் பக்தியோடு துதிசெய்து செல்லுவானாயின் அவன் யாவராலும் தோல்வியுறாது வெற்றி பெற்று மீளுவன்.

கெஜானன விநாயகர் திருவவதாரப் படலம்

முற்றிற்று.

நான்காவது

விக்கின விநாயகர்

திருவவதாரப் படலம்.

கருவினை மயக்கந் தீர்க்குங் கசானன ரவதா ரத்தோ
டருள்வினை யாடல் சொற்று மருந்தவ வியாத வையம்
வெருளிடர் முழுதுந் தீர்க்கும் விக்கின ராச ரென்னுந்
திருவவ தாரங் கேளா யெனத்திசை முகன்சொல் வானால்.

மகா மகத்வ முற்ற நைமி சாரண்ய வாசிகளாகிய சவுனகாதி முனிவர்களே! விநாயக மூர்த்தி கஜானன திருவவதாரங் கொண்டு பிரமதேவன் கொட்டாவியி னின்று முதித்த சிந்தூரனைக் கொன்று, தேவர்கள் முதலாயினோரைக் காத்தருளிய திருவிளையாடலைச் சொன்னோம். இப்பால் விக்கினராசர் திருவவதாரங் கொண்டு செய்தருளிய திருவிளையாடலைச் சொல்லுவோங் கேட்பீர்களாக.

வெள்ளியங் கிரிக்குத் தலைவராகிய சிவபெருமான் தமது திருமேனி முழுவதுந் திருவெண்ணீற்றினை யணிந்திருப்பதுபோல எக்காலத்திலுஞ் சத்தமேகங்களுக்கும் இருப்பிடமாய்; அளவிடற்கரிய பனிப் படலங்களால் எங்கும் மூடப்பட் டிருக்கின்றது இமயமலை. அம்மலையிற் றவத்தர்கட் கெல்லாந் தலைவர் தம் போலச் சகலவிதங்களினுஞ் சீர்த்திபெற்ற வுள்ளத்தோடு தத்துவ மனைத்தினையு முணர்ந்து, அவத்தைகளினின்று நீங்கிய மெய்யறிவினால் வேதாகமங்களை யபேட்சித்து வருகின்ற பக்குவர்கட்கு அவைகளைப் போதித்து, அவர்களை அவக்கடலினின்று மெடுத்துப் பாதுகாக்க வல்லவராய், * அகப்பற்றுப் புறப்பற்றென்னு மிரண்டினையுந் துறந்தவராய்; பிரமம், தெய்வம், பூதம், பிதிர், மானுடம் † என்கின்ற ஐவகை வேள்வியையும் பிரதிதின மியற்றும் இயல்பராய், சிவபெருமானுடைய திருவடிகளையன்றி வேறொன்றினைச் சிந்தை

* அகப்பற்று, புறப்பற்று என்பன: உயிர்களுக்கு மாயையி னுண்டாகிய தனு கரண புவன போகங்கள் நான்கினுள், தனு கரணங்களை யான் என மதித்தலே அகப்பற்றெனவும், புவன போகங்களை எனது என்று அபிமானித்தலே புறப்பற்றெனவுங் கூறுவ. இவற்றுள்: தனுவென்பது-தேகத்தை, கரணமென்றது-அந்தக்கரணம்புறக்கரணங்களை. புவனமென்றது-பூதாதிபிரபஞ்சத்தை. போகமென்றது-சந்தாதி விடயங்களை. அன்றியுங் கரணங்கள் தனுவுக்கு அபேதமாயும், புவனங்கள் போகத்திற்கு அபேதமாயுநிற்கையால், தேகபோகமென் றிரண்டாகவுஞ் சொல்லப்படும்

செய்யாதவராய், சபானுக்கிரக சாமார்த்தியத்தை யுடையவராய் விளங்கிய சவுபரி யென்றுமொரு முனிபுங்கவரிருந்தார். அவர் குற்ற மற்ற கற்பினும், வனப்பினுந் தனக் கொருவர் நிகரில்லாத பெருமையினை வாய்ந்த மனோமயை யென்னுமனைவி பணிசெய்ய வாழ்ந்திருக்குங் காலையில், ஓர்நாள் அம்முனி புங்கவர் நதியில் ஸ்நானஞ் செய்யச் சென்றனர். அவர் மனைவியானவள் ஆசிரமத்திற் பணிசெய்திருந்தனள். அச் சமயத்தில் கருணை நாயகராகிய விநாயகக் கடவுளுடைய திருவடிகட் கிடைவிடாது பூசனை செய்து வருபவனும், ஆகாய மார்க்கத்திற் சஞ்சரித்துக் கொண்டிருந்த கிரவுஞ்ச னென்னும் ஓர் கந்தருவ ராசன், அவ்விருடி பத்தினியைப் பார்த்தனன். உடனே சூத்திரக் கயிறற்று வீழ்ந்தாற் போல ஆகாயத்தினின்று மிறங்கி அவ்வாசிரமத்தில் வந்து, தன்னை முடுக்கியவிரகத்தினால் அவ்விருடி பத்தினியை முன்னதாயொன்றுங் கேளாது, கரம்பற்றினன். இவ்வாறுபற்றலும் அவ்விருடி பத்தினியானவள் பூனைவாயிற் பட்ட கிளியைப்போல நடுநடுங்கி, மனந்தளர்ந்து, தனது கற்பின் வலியால் அவனை யானைமேலெழுஞ் சிங்கத்தைப் போலச் சீறி, தனதுள்ளத்திற் கொதித்தெழுகின்ற கோபத்தினாலவனைப் பார்த்து, அடா பாவி! எனதுபிராணநாயகரில்லாத சமயம் பார்த்து என்னைக் கைப்பற்றிக் கலைக்கிழுக்கின்றனை. இனி என் கரத்தை விடாமற் போவையெனில் உன்னை இக்கிமிடத்தில் நீறாக்கி விடுவேனென்று சொல்லினள். அத் தருணத்தில் ஸ்நானஞ் செய்யச் சென்றிருந்த சவுபரி முனிவர் மீட்டும் ஆசிரமத்திற்கு வந்து, தமது பத்தினியினுடைய கரத்தைக் கிரவுஞ்சன் பிடித்திழுப்பதைப் பார்த்து, கண்களில் அனற் பொறியெழும்பவும் இதழ்கள் துடிக்கவும் புருவங்கள் நெறியவுமாகக் கோபித்து, அடா மூர்க்கனே! உபசாரமுஞ் செய்யாத இவளை நீ கரம்பற்றி இழுக்க வேண்டுங் காரணமென்ன? இவ்வாறு கிரோதுவாய் அவளது கரத்தைப்பற்றிய குற்றத்தினால் நீ இனி மண்பறித்து வளையிலொளிக்கின்ற மூஷிகமாகக் கடவதென்று சபித்தனர். உடனே அக் கந்தருவராசன் பயந்து, சுவாமீ! அடியேன் கிரவுஞ்ச னென்னு மரசன்; யான் ஆகாயத்திற் செல்லுகின்றபோது இவரழகைக்கண்டு மோகித்துவந்து கரம்பற்றினேன். அதுவன்றி யான்பாதகஞ் செய்தறியேன். அடியேன் இவர் கரம்பற்றிய பிழையினைப் பொறுத்துத் தேவரீர் அடியேற்குக் கொடுத்த சாபத்தினை நீக்கியருளல் வேண்டும், அடியேன் தேவரீரைச் சரணமடைந்தேன். இனி அடியேற்குத் தேவரீரையன்றி வேறு துணையில்லை என்று பிரார்த்தித்தனன். அதற்கு விருப்பும் வெறுப்பு மற்ற சவுபரி முனிவர் மனமிரங்கி, ஓ கிரவுஞ்சனே! நெருப்பினுடைய சூடு குளிர்ந்தாலும் நீரினுடைய குளிர்ச்சி வெம்மையானாலும், நமது வாக்கு ஒருகாலத்தும் பொய்ப்பதில்லை. நீதகாத காரியத்திற் குடம்பட்டையாயினும் உடனே நம்மைச் சர

இவற்றுள் வேதமோதல் பிரமயாகம். ஓமம் வளர்த்தல் தெய்வயாகம். பலியீதல் பூதயாகம். தருப்பணமுடித்தல் பிதிர்யாகம். இரப்போர்க்கு உணவு முதலிய வீதலே மனுடயாகம்.

ணடைந்தனை யாதலால், உனக்கு யாம் கிருபையோடு சாபத்தீர்வு சொல்லுகின்றோம் கேள், திருமாலை இடபமாக வூர்ந்தருளிய சிவபிரானுடைய குமாரராகிய விநாயக மூர்த்தியானவர் இன்னுஞ் சிலநாளில் பராசரமுனிவருடைய கிருகத்தில் அவதரித்தருளுவர். அப்போது நீ அவருக்கு வாகனமாகி, விஷ்ணுவாதி தேவர்கட்குங் கிடைத்தற்கரிய பாக்கியத்தைப் பெற்று யாவரும் வந்து பணியும்படியான முதன்மையோடு முத்தியையும் பெறுவை. போவென்று அநுக்கிரகஞ் செய்தருளினர். அப்பால் மேருகிரியைப்போல மற்றொரு மேருகிரி உண்டானதென்று சொல்லும்படியாக அக்கிரவுஞ்சன் ஒரு மூஷிகமாகி உலகமெங்குந் திரிந்துக்கொண் டிருந்தனன்.

இவன் சரிதமிவ்வாறாக, இந்திரனானவன் தனது சுவர்க்கலோகத்தில் அரசியற்றி வருகின்ற காலையில், ஓர்நாள் நாரதமுனிவர் அவனிடத்திற்கு வருவாராயினர். அவர்வரவை இந்திரன் தூரத்தே யறிந்து, உடனே தனது சிம்மாதனத்தை விட்டிறங்கி அளவற்ற தேவர்கள் தன்னைப் புடைசூழ்ந்துவர அவரை எதிர்கொண்டுபோ யழைத்து வந்து, ஓர் சிறந்த ஆதனத்தி லிருக்கவைத்து மிக்க பேரன்பினோடுந் துதித்துப் பூசனை செய்தனன். அவன் செய்த பூசைக்குந் தோத்திரங்கட்கும் நாரத முனிவர் மனமகிழ்ந்து, ஓதேவராசனே! பூலோகத்தில் ஓர் புதுமையைக் கண்டு இங்கு வந்தனம். அப் புதுமையைச் சொல்லுமிடத்து உனக்குந் தேவர்கட்கும் நன்மை பயப்பதாகவே யிருக்கும். அஃது யாதெனில் இமயகிரிக்கும் விந்தகிரிக்கும் மத்தியில் ஏமவதி யென்னும் ஒரு நகரமிருக்கின்றது. அந்நகரத்திற் கரசன், அபிநந்தனனென்னும் பெயரினையுடையவன். அவன் இப்போது ஓர்பெரிய யாகத்தினைச் செய்யத் தொடங்கினன். அந்த யாகத்திற்கு உன்னை வரிக்காது உனது சொர்க்காதி போகங்கள் தனக்குக் கிடைக்கவேண்டு மென்று குறித்திருக்கின்றனன். மேலும் அந்த யாகத்திற்கு இருதுக்கள் வந்திருக்கின்றார்கள். இச்சமயத்தில் அவ்வரசனைச் செயிக்காமற் போவையெனில், அவன் செய்யத் தொடங்கிய யாகத்தின் முதலினாலேயே உனது பதவியை இழந்துபோவை. அதனால் உனக்குச் சகல இடர்களும் உண்டாகுமாதலால், விரைவில் அதற்கேற்றபடி முயலக் கடவை யென்று சொல்லி நாரதமுனிவர் எழுந்தருளிப் போயினர். பின்னர் இந்திரன் இதற்கென் செய்ய வல்லோ மென்று மாலோசனையிற் றலைப்பட்டவனாகி, அவ்வைதிகர் செய்துவரும் பலகருமங்களிலும் முதலில் நமக்குஞ், சந்திரனுக்கும், பிரமதேவனுக்கும் அவிர்ப்பாகங் கொடுக்கவேண்டு மென்று வேதத்திலும், சுருதியிலும், ஸ்மிருதியிலும், சவுதத்திலும், ஸ்மார்த்தத்திலும் விதித்திருக்க, இதனையும் அவ்வாறே யாவரும் கொடுத்துவர, இப்போது அம்முறைமையினின்றுந் தப்பி யாகஞ் செய்து வருகின்ற அபிநந்தன ராசனைச் சங்கரிக்கத் தக்கவன் உலக மனைத்தையுங் கலக்கி யழிக்கத்தக்க காலரூபியே யல்லாமல் வேறொருவ ரில்லையென்று தன்மனதில் நிச்சயஞ் செய்தனன். இவ்வாறு

நிச்சயிக்குமுன் அக் காலரூபி யென்போன், அவ் விந்திரனுக் கெதிரில் வந்து நின்றான். அவனை இந்திரன் சிறக்கப் பார்த்து, ஓ காலரூபியே! நீ இச்சமயத்தில் அளவற்ற ரூபங்களோடும் பூலோகத்திற் சென்று அபிநந்தன ராசனை யழித்து அவன் செய்கின்ற யாகத்திற்கும், மற்று முன்னோர்களாற் செய்து வருகின்ற யாகங்கட்கும் பலவிக்கினங்களை நடாத்தி அழித்துவிடக் கடவை. என்று சொல்லி யனுப்பினன். உடனே காலரூபியானவன் தனது புருவங்களை நெறித்துக் கோபித்து, அளவற்ற விக்கின ரூபங்களைக் கொண்டு பூவுலகத்திற் சென்று அபிநந்த ராசனுடைய யாகசாலையில் மிகுந்த கோரத்தினோடும் பிரவேசித்து, அவனையும் அவன் யாகத்திற்கு வந்திருக்கின்ற இருதுக்களையும் நாசஞ்செய்து, மற்றையோரை எல்லாந் தன்னைத் தெண்டனிட் டோடும்படி யாக முடுக்கி, அவிற் பாகத்திற்குச் சேகரித்திருந்த பொருள்களை யெல்லாம் அள்ளியுண்டு, ஓமகுண்டத்தை யிடித்துத் தள்ளி அதிற் புழுதிகளை நிரப்பிவித்து, யாகசாலை முழுமையுந் தூளாக்கி, பலபண்டங்களை யமைத்து வைத்திருந்த பாத்திரங்களை எல்லாம் உடைத் தெரிந்து, அவ்விடத்தினின்று நீங்கித் திக்கூட்டங்கள் எழுந்து செல்லுவதுபோலத் திசைகடோறுஞ் சென்று ஆங்காங்கு செய்து வருகின்ற யாகங்களை எல்லா மழித்து அந்த யாகத்தலைவர்களையும் நாசமாக்கி எவ்விடங்களினுந் துன்பங்களையே விளைத்துச், சிலரை அருவமாய்ச்சென்று தாக்கியும், சிலரை உருவமாய்ச்சென்று ஒழித்தும், ஓர்நொடிப்போதில் திசை முழுவதுஞ் சுழன்றும், வேதாகம நெறிகளையெல்லாம் பேதிக்கச் செய்தும், இவ்விதமான விக்கினங்களை நாடோறுஞ் செய்து வந்தனன். இவ்வாறு காலரூபி செய்து வருகின்ற துன்பங்களினாலே அளவற்ற முனிவர்கள் ஓரிடத்தில் ஒன்றாகக்கூடி, சகல சீவராசிகளையும் ஆக்கவும் அழிக்கவும் வல்ல தயாபர மூர்த்தியைத் துதிசெய்வ தானார்கள்.

எண்ணிலா ருயிர்களி னிதய பங்கய
கண்ணுறா யவ்வுயிர் கவிற்று கனமத்தி
னண்ணுசான் றாகிய வமல வெங்கள்பாற்
றிண்ணிய விக்கினந் தீர்த்தல் வேண்டுமே.

பல்வகைப் பூதமும் படைக்கும் பண்ணவ
நில்வகை யனைத்தையு நிறுத்துயிர்க்குணை
கொல்வகை செய்தருள் கூடுங் கொற்றவ
புல்வகை விக்கினம் புரட்டல் வேண்டுமே.

அங்கமே யுபாங்கமென் றவற்றி னோடுறத்
துங்கநான் மறைகளுஞ் சுவசமாகிய
வங்கண வடியரே மாவி னுங்கிடப்
பொங்கிய விக்கினம் போக்கல் வேண்டுமே.

இவ்வாறு பலமுறை துதிசெய்து, எத்தகையோராலும் யாசிக்கப்படு மிறைவனே! சகல லோகங்களுங் கைக்கும்படியாக இடைவிடாது விக்கினங்களைச் செய்து வருகின்ற காலரூபியினால் அடியேங்கள் பயமடைந் திருக்கின்றனம். இனி அடியேங்களை அவன் செய்துவரும் விக்கினங்களி னின்று மெடுத்துக் காத்தருளல் வேண்டும். அடியேங்கள் சக்தியற்றவர்களாய், ஆதாரமற்றவர்களாய், நித்திய நைமித்திய கருமங்களில் ஈனராய், இயல்பான ஒழுக்கங்களில் வேறுபட்டவர்களாய், மயக்கங் கொண்ட மனத்தினை யுடையவர்களாய், எல்லாப் போகங்களையு மிழந்து, தேவரீருடைய சரணாரவிந்தங்களில் அடைக்கலம் புகுந்தோம். ஓ சங்கரா! ஓ சயம்புவே! ஓ தற்பரா! வென்று பலமுறை பிரார்த்தித்தார்கள். அதற்கு விஸ்வரூபியாகியும் வியாபகராகியு மிருக்கின்ற விநாயகப் பெருமான் கிருபை சுரந்து அம் முனிவர்கட் கெதிரில் அதிரிசிய வடிவமா யெழுந்தருளி, ஓ தபோதனர்களே! உங்கள் மனதிலிருக்கும் வேதனைகளையும், பயங்களையும் ஒழிமின்கள். இனியாவரையுந் துன்பஞ்செய்து வருகின்ற விக்கினனை அடக்கவும், வேதாகம நெறிகளைத் தப்பாது வளர்க்கவும், அடியார்களும் சாதுக்களும் வேண்டியவைகளை அருள் செய்யவும், மூவுலகங்களையுங் காத்து இரட்சிக்கவுமாக யாம் அளவற்ற தவங்களைச் செய்திருக்கின்ற வரேணிய ராசனுடைய கிருகத்தில் அவதரிக்கப்போகின்றனமென்று திருவாய் மலர்ந் தருளினர். அத் திருவாக்கினை யெல்லா முனிவர்களுஞ் செவிக் கமுதாகக் கொண்டு விநாயக மூர்த்தியினுடைய திருவுருவைக் கண்களாற் காணாதவர்களாயினும், இஃது சுவாமிகளுடைய திருவாக்கே என்று மிருந்த ஆனந்தத்தினை யுடையவர்களாகி, அப்போதே சகல விக்கினங்களையு மொழித்தவர்போல, விநாயக மூர்த்தியினுடைய திருவருளையே கடைப்பிடித் திருந்தார்கள்.

இவர்கள்சரித மிவ்வாறாக, பூர்வத்திற்றானே பெரிய தவங்களைச் செய்து நிறைவேற்றினவனும், தேவர்களும் வழிபடத்தக்க யோக்கியனும், திசைகளனைத்திலுஞ் செல்லும்படியான கீர்த்தியை யுடையவனும், வரேணியனென்னும் பெயரினை யுடைய ஓரரச னிருந்தான். அவனுக்குப் புட்பகை யென்னும் ஓர் மனைவி யிருந்தனள். இவர்கள் வெகுகாலம் ஒரு புத்திரப்பேற்றினை வேண்டி அளவற்ற தருமங்களையுந் தானங்களையும் இடைவிடாது செய்துகொண்டு வந்தார்கள். பின்னர் விநாயகப் பெருமானுடைய கிருபையினால் புட்பகை வயிற்றிற் கருவுண்டாகிப் பத்தாந்திங்களிற் கருப்பயாதனை கொண்டு ஓர் புதல்வனைப் பெற்றனள். அப் புதல்வனை விநாயக மூர்த்தியானவர் அங்கிருந்தோர்க ளறியாத வண்ணம் மறைத்துத் தாமே யொரு குழந்தையாகி யிருந்தனர். அக் குழந்தை யிருந்த அழகும், யானை வதனமும், மழுமுதலிய ஆயுதங்களை யேந்திய நான்கு திருக்கரங்களும், நீண்ட துதிக்கரமும், பெருத்தவயிறும் விளங்க விருக்கின்றதை அங்கிருந்தவர்கள் பார்த்துப் பயந்து ஓடிப் போனார்கள். புட்பகை மாத்திரம் அவ் வறையினின்றும் அப்பாற்போகக் கூடாதவளாய் மயங்கி

பிரசவித்த வேதனையினும் பதின்மடங்கு அதிகமான வேதனையைப் பொருந்தினவளாய், ஐயோ! புத்திரப்பேறுவேண்டி அளவற்ற பெருந்தவங்களனைத்தையுஞ் செய்து முடித்தோமே? அப்படிச் செய்த வெமக்குப் புத்திரப்பேறு கிடைத்தும் மீட்டுந் தள்ளிவிடத் தக்கதாய் தெய்வங் கொடுத்ததே? இதற்கினிச் செய்யத்தக்க தென்ன விருக்கின்ற தென்று சொல்லிக் கூக்குரலிட் டழுதுக் கொண் டிருந்தனள். அவ் வழுகையோசையை வரேணியராசன் கேட்டுவந்து, அண்டங்களை யெல்லாம் அணுவாகவும், அணுக்களை யெல்லாம் அண்டங்களாகவுஞ் செய்யவல்ல விநாயக மூர்த்தியை எதிரி லிருக்கக்கண்டு இப் பிள்ளையால் நமக்கு இடர்வருமென்று நடுங்கி உடனே சில வீரர்களைக்கூவி இப் பிள்ளையை இவ் விரவிற்றானே கொண்டுபோய் மடுக்கரையில் வைத்து வாருங்களென்று கட்டளை யிட்டனன். அக் கட்டளையை அவ் வீரர்கள் தடுக்கக் கூடாதவர்களாகி உடனே அக் குழந்தையை யெடுத்துக்கொண்டு சென்று பராசுவ முனிவரது ஆசிரமத்திற்குச் சமீபத்தி லிருக்கின்ற மடுக்கரையிற் சிலதழைகளை முறித்துப் போட்டு அதன்மீது அக் குழந்தையை வளர்த்தி மீட்டுந் தம தரசனிடத்திற் போய்ச் சேர்ந்தார்கள்.

ஓ சவுனகாதி முனிவர்களே! இவ்வாறு வேதங்களி னுச்சியினும், மாதவத்தர்களினுடைய உள்ளத்தினும், பிரமனாதியருடைய மனத்தினும், காணுதற்குமரிய விநாயகக் கடவுளைத் தங்கள் மார்போடணைத்து [illegible] அவ்வீரர்களுந் தழைகளுஞ் செய்த தவந் தானம் யாதோ அதனை யறிகின்றிலேம்.

கருணை நாயகன் குருவெனக் கடைக்கணித் தருளி
வருவ னாயினும் பருவமில் லார்மரு வார்கள்
பொருவி லாதவன் புத்திர னாய்மனைப் பிறந்துந்
தெருளி லாமையின் வரேணியன் றிரவிட் டனனே.

கருணை நாயகராகிய கடவுளே ஆசிரியவடிவங்கொண்டு கிருபைபுரிய வருவராயினும், பரிபக்குவ மில்லாதவர்கள் அக்கிருபைக்குப் பாத்திரராகார்கள். அதுபோலத் தம்மோடொப்பாரு மிக்காருமில்லாத விநாயக மூர்த்தியே தனக்குச் சிறந்த புத்திரனாக வந்து அவதரித்தும் அப் புத்திரனை ஞானமில்லாமையால் வரேணியராசன் கைவிட்டவனாயினான். ஒப்பற்ற விநாயக மூர்த்தியைத் தாங்கப் பெற்ற மகா தவத்தினையுடைய அம் மடுக்கரையானது கபில முனிவருடைய ஆசிரமத்தையுங், கைலாய வரையையும் ஒக்குமேயன்றி, பிரமன் வாழ்கின்ற சத்திய லோகமுந் திருமால் கண்படுகின்ற க்ஷீராப்தியும் அதற்கு நிகரல்ல. அம்மடுக் கரையில் பசிய தழைகளின்மீது விநாயகப் பெருமானெழுந்தருளி யிருக்குங் காட்சி எவ்வாறிருந்ததெனில், மரகதத்தில் விளங்கும் மாணிக்கத்தினைப் போன்றும், கேசவன் மார்பகத் திருக்குங் கவுத்துவ மணியைப் போன்றும், கருங்கட லுச்சியினுதிக்குங் கதிரவனைப் போன்று மிருந்த

தன்றி; உமாதேவியினுடைய திருமார்பில் விளையாட் டயர்தலைப்போன்று மிருந்தது. யானை-புலி-சிங்கமுதலிய கொடிய மிருகவர்க்கங்க ளெல்லாம் விநாயக மூர்த்தியினுடைய திருமேனியைக்கண்ட மாத்திரத்தில் மலங்களினின்று நீங்கி, மெய்யறி வுதித்து, ஓர்நிமை யளவும் அவ்விடத்தை விட்டு நீங்காமல் ஊணுறக்க முதலியவைகளையுந் துறந்து பாதுகாத்திருந்தன. அப்போது எம்பிரானாகிய விநாயக மூர்த்தியானவர் தமது திருமேனியினொளியைச் சிறிதெழுப்ப, அதனால் கோடிசூரியர்கள் ஒன்றாய் உதயஞ் செய்தது போலத் திரிலோகங்களிலும் பிரகாச மேலிட்டது. உடனே தேவர்கள் முதலாயினோர்களெல்லாம் அதிசய மாகும்படி இருள் நீங்கியது. சந்த சாகரங்களுஞ் சத்திக்காம லிருந்தன. இரவு நீங்கிய தென்று கருதி அளவற்ற மிருகங்கள் இரை தேடுமாறு தத்த மிடங்களை யடைந்தன. சோலைகடோறு முறங்கி யிருந்த பறவைக் கூட்டங்க ளெல்லாந் திசைகடோறுமெழுந்து பறந்து போயின. சந்திரனொளியும் உடுக்களினொளியு மழுங்கி விட்டன. தெளிந்த நீரிலிருந்த குமுதங்க ளனைத்து மிதழ் மூடிக்கொண்டன. தங்கள் தங்கள் தலைவியரோடும் புணர்ந்திருந்த ஆடவரெல்லா மெழுந்து நித்திய நியமாதிகளைச் செய்வதானார்கள். இப்பால் அரிய தவத்தினால் பராசுவ முனிவர் தமது அமளியை விட்டெழுந்து யாம் சந்திசெய்யுங் காலந்தப்பிப் போயதே யென்று பதறிக் கரத்தில் [illegible] அதி தீவிரத்தோடும் மடுக்கரையை நோக்கிச் செல்லுவார், அங்கு பசியதழைகளின்மீது படுத்துப் பிரகாசித்துக்கொண்டிருந்த ஜகத்காரணராகிய விநாயகமூர்த்தியைக் கண்டார். உடனே ஆனந்த பரவசங் கொண்டாடினார். நகைத்தார். திகைத்தார். உடல் முழுவது முரோமாஞ்சிதம் பூத்தார். இருவிழிகளினும் ஆனந்த பாஷ்பஞ் சொரிந்தார். அருகில் வந்து குழந்தையினுடைய அவயவங்களை யெல்லாம் பார்த்துப் பார்த்து மிகுந்த மனமகிழ்ச்சி யாயினர். இவ்வாறு பராசுவ முனிவர் களிப்பென்னுங் கடலிற் கரைகாண மாட்டாதவராகி, யாம் செய்த தவப்பயனா லன்றோ நான்கு வேதங்கட்கு மெட்டாத வித்தகராகிய விநாயக மூர்த்தியே நமக்குக் கிருபை செய்யும்பொருட்டு இங்ஙனமெழுந்தருளினர். அந்தோ! இம் மூர்த்தியினுடைய மகிமையை யறியாதவர்கள் யாரோ இவரை இங்கே கொண்டுவந்து வைத்துவிட்டார்களே. தரிசித்தவுடன் மனமாதி மூன்றற்குஞ் சுகத்தை விளைவிக்கவல்ல இவரை யீன்றவர்கள் இங்ஙனம் விட்டுச் சென்றது நாம்முன் செய்திருக்கின்ற தவப்பயனே யன்றி வேறில்லை. இவ்வொப்பற்ற மூர்த்தியை யீன்றவர்கட்கு நிகரான பேர்கள் திரிலோகங்களினு மிரார்கள். அப்புண்ணிய சீலர்களே தவம்-தானம்-விரதம்-தருமம் முதலிய ஒழுக்கங்க ளனைத்தையுங் குறைவற முடித்தவர்கள். என்றிவ்வாறு அனந்த மாகப் புகழ்ந்து அக் குழந்தையாகிய விநாயக மூர்த்தியைக் கரத்தி லேந்தித் தமது ஆச்சிரமத்திற்கு மீண்டனர். அச்சமயத்தில் அருணனானவன் நமக்கு முன்னே இருளினை நலியச் செய்தவன் யாவனோ அவன் திருவடிகளைத்தொழுது உய்வோமென் றெண்ணி

வருவான்போலக் கீழ்த்திசைக்கடலி னுதய மாயினன். அதைத் தமது ஆச்சிரமத்தினை நோக்கிச் சென்ற பராசுவ முனிவர் கண்டு மயங்கி, இதற்கு முன்னருண்டான ஒளி இக் குழந்தையினது திருமேனியி னுண்டான வொளியே யன்றி வேறல்லவென்று மீட்டுந் தெளிந்து, இதுகாறும் யாம் செய்து வந்த தவப் பயனே யன்றி விசேஷமான பயன்களையும், பழம் நழுவிப் பாலில் வீழ்ந்ததுபோல இம் மூர்த்தியாற் கிடைக்கப் பெற்றோ மென்று மனமகிழ்ந்து, விரைவிற் றமதாச்சிரமத்தினை யடைந்து, தமது பத்தினியாகிய வீரியவற்சலையைக் கூவி, பெண்ணே! வருத்தமின்றி யாம்பெற்ற இக் குழந்தையை வாங்கிக்கொள்ளுகவென்று பரிவோடுஞ் சொல்லினர். கற்பிற்சிறந்த வீரியவற்சலையும், உடனே முன்றிலின்கண் வந்து அப் புத்திரனுடைய திவ்விய வடிவங்களைப் பார்த்தலும் அற்புதங் கொண்டவளாய் முகமலர்ந்து, தனங்கள் விம்மவும், தோள்கள் பதறவும், கண்கள் துடிக்கவுமாகத் தனது காதலரைவணங்கி, எனதருமைத் துணைவரே! தேவரீர் இந்த திவ்வியமான குழந்தையை எங்ஙனமிருந்து கொண்டுவந்தீர்? யானைவதனத்தை யுடைய இக் குழந்தையின் திருவுருவம் விநாயகமூர்த்தியினுடைய திருவுருவத்தைப்போல விருக்கின்றதால் இதுவே சகல பாக்கியங்களையுங் கொடுப்பதற்குக் காரணமான வுருவம். இதுவே மகத்தான தவங்களினால் வரும்பயன். இதுவே யோகாதிகளால் தியானிக்கப் படுகின்றவஸ்து. இதுவே எல்லாச் சோதிகளையும் உண்டாக்குவதற்கு மூலகாரணம். இதுவே வேதாகமபுராணங்களில் கூறப்பட்டிருக்கின்ற பொருள். இதுவே பரப்பிரமமென்று சொல்லப் படுகின்ற நித்தியம். என்று அனந்தமுறை துதிசெய்து தனது கரத்தி லேந்திக் கொண்டனள். இவ்வாறு மிகுந்த மனமகிழ்ச்சியோடும் வீரிய வற்சலையானவள் அக் குழந்தையைக் கரத்தி லேந்திய மாத்திரத்தில் தனது தனங்களில் அமுதஞ் சுரந்து வழிய, அவ் வமுதத்தை அக் குழந்தைக்கு ஊட்டி அளவற்ற அன்போடும் வளர்த்து வந்தனள். புத்திரப்பேறு வேண்டி அளவற்றநாள் அரிய தவங்களைச் செய்து நிறைவேற்றிய புட்பகை யானவள் அக் குழந்தையை விரும்பாது துறந்திருக்கச் சிறிதும் வேண்டாதிருந்த வீரிய வற்சலை யானவள் அதனையெடுத்து வளர்க்கப் பெற்றனளெனில், அவளது புண்ணியத் திறத்தை யார் அளவிடவல்லவர்கள்?

இவ்வாறு குணங்குறி கடந்த கொள்கையராகிய விநாயகப் பெருமான் பராசுவ முனிவர் ஆச்சிரமத்தில் நாளுக்குநாள் வளர்பிறையைப் போல வளர்ந்து வருகின்ற நாளையில், முன்னர் சவுபரி முனிவருடைய சாபத்தினைப் பெற்ற கிரவுஞ்ச னென்னு மூடிகமானது ஒருநாள் அம் முனிபுங்கவருடைய ஆச்சிரமத்தி னருகில்வந்து மலைகளை யகழ்ந்திச் சாய்த்தும், சுவர்களைக் கெல்லித் தள்ளியும், மரங்களைக் கிண்டி வீழ்த்தியும், வேதிகை குண்ட முதலானவைகளைத் தோண்டிப் பறித்தும், அறைகளிலுள்ள வஸ்திரங்களையும் புத்தகங்களையும் கடித்தும், பாழாக்கிக் கொண்டுவர, அவ் வுபத்திரவங்களைப் பராசுவ முனி

வராற் சபிக்கக்கூடாமல் அதற்கென்ன செய்வோமென்று மனதிற் கவலைகொண்டனர். அக் கவலையை விநாயகப்பெருமா னறிந்து, தமது கரத்திலுள்ள அம் மூஷிகத்தைப் புடைத்து அதனது கொடுஞ்செய்கைகளை யடக்குவோ மென்று கூறி அம் முனிவருடைய கவலையை யொழித்து, உடனே அம் மூஷிகத்தின் மீது தனது பாசத்தை யேவினர். அப் பாசமானது அம்மூஷிகங் காண்டலும், பூமியைக்கிழித்துக்கொண்டு போய்ப் பாதலலோகமேழினையும் அழித்து மீட்டு மேலெழும்பிவந்து, சொர்க்கலோகம் உருத்திர லோகம் அக்கினி லோகமுதலானவைகளை யலைத்துக் கொண்டு சிவலோக பரியந்தஞ் சென்றது. அது சென்ற விடங்களி னெல்லாம் வினையைப்போல அப்பாசமுங் கூடச் சென்று, அம் மூஷிகத்தினுடைய பராக்கிரமங்களெல்லா மொடுங்கும் படியாகப் பிடித்துக்கட்டி விநாயக மூர்த்திக் கெதிராகக் கொண்டு வந்து நிறுத்தி வணங்கியது. அப்போது அம் மூஷிகமானது விநாயக மூர்த்தியினுடைய திருமுகத்திற்கு நேராகத் தனது தலையை யெடுத்துப் பார்த்து, ஓ சர்வஞ்ஞ மூர்த்தியே! அடியேனைக் கொடியனென் றெண்ணி வதைசெய்ய வேண்டாம். தேவரீரைச் சரணடைந்த அடியேன் சரித்திரத்தைச் சிறிது கேட்டருள்க. அடியேன் முன்னர் கந்தருவ ராசனாக விருந்தேன். எனது பெயரைக் கிரவுஞ்சனென்றுசொல்லுவார்கள். ஓர்நாள் சவுபரி முனிவருடைய பத்தினியாகிய மனோரமையை யென்பவள் அழகினைக் கண்டு மோகித்தேன். அதற்கு அம்முனிபுங்கவர் அடியேன் மீது கோபித்து மூஷிகமாகச் சபித்தனர். அப்பால் யானவரைச் சரணடைந்தேன். அதனாலவருக்கு அடியேன் மீது கிருபை சுரந்து, இனி நீ தவத்திற் பெருமானாகிய பராசவ முனிவராசிரமத்தில் அவதரிக்கப்போகின்ற விநாயக மூர்த்திக்கு வாகனமாகி எல்லா மேன்மைகளையும் பெறுவை, யென்று அநுக்கிரகித் தருளினர். அவ் வநுக்கிரகத்தின்படியே அப்போது தேவரீரைச்சரணடைந்தேன். ஆதலால் தேவரீரடியேனை முற்றினுங் காத்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தது. அவையனைத்தையும் விநாயக மூர்த்தி கேட்டருளி, ஓ வலியிற் சிறந்த ஆகுவே! யாம் உனது சரித்திரத்தை இதற்கு முன்னமே யறிவோமாதலால் இப்போது உன்னைக் கொல்லாமற் பிடித்துக்கட்டிக் கொண்டு வரும்படியாகவே நமது பாசத்தை விடுத்தோம். இனி யாதொன்றற்கும் அஞ்சற்க. இத்தினமுதல் நமக்குமிக்க மேன்மையோடும் வாகனமாக இருக்கக் கடவை யென்று திருவாய் மலர்ந்து, உடனே அதன் முதுகில் தாம் ஆரோகணித்து, அதனைத் திக்கனைத்துஞ் செலுத்தி விளையாடி ஒன்றனைக் கணத்துள் மீட்டுத் திரும்பிவந்தனர்.

இவ்வாறு விநாயகக் கடவுள் பிள்ளைப்பருவத்திற்றானே பெரிதான வலியினை யுடைய மூஷிகத்தை யடக்கித்தமக்கு வாகனமாகக் கொண்டருளியவிநாயக மூர்த்தியைப் பராசவமுனிவர் பணிந்து, பள்ளங்கண்டு பாய்கின்ற புனல்போலத்தமது பேரன்பினைப்பாய்ச்சி ஒருபாரிசமாய் நின்று, ஓ லோகநாயகனே!

கொடுஞ் செய்கைகளிற் சிறந்த பராக்கிரம சாலியாகிய காலரூபி யென்னும் ஓர்விக்கினனால் சகல புவனங்களுங் கலங்கி நடுங்குகின்றன. அவனைச் சுவாமிகள் சங்கரித்துஉலகங்களில் வேதாகம நெறிகளை விருத்திசெய் தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனர். அதற்கவ்வாறே செய்தருளுவமென்று விநாயகமூர்த்தி கிருபைசுரந்தனர்.

இச்சரித மிவ்வாறாக, உலகத்தில் நித்திய நைமித்தியங்கள் காமியங்கள் என்று சொல்லப்படுகின்ற யாகமுதலானவைகளை நடக்கவொட்டாமல் யாவரையுஞ் சதாகாலமும் உபத்திரவப்படுத்தி வருகின்ற காலரூபி யென்னும் விக்கினனால் வசிட்டாதி முனிபுங்கவர்கள் யாகாதிகளைச் செய்யாதவிட அதனால் இந்திரன் முதலான தேவர்கள் அவிர்ப்பாகங் கிடையாமல் வறியராகி, பின்னர் அம் முனிவர்களுந் தேவர்களும் ஒன்றாகக்கூடி பிரமதேவ னிடத்திற் சென்று பணிந்து, சுவாமீ! சொல்லவுஞ் சகியாத கொடுமையினை விளைத்து வருகின்ற விக்கினனைக் கொல்லுமாறு அடியேங்கட்கு ஒருபாயஞ் சொல்லி யருளல் வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதற்குப் பிரமதேவன் சொல்லுவான்: அன்பர்களே! அநாதியாகிய அமலானந்த அறிவரு யிருக்கின்ற சோதிவடிவான விநாயகமூர்த்தியானவர் சகல லோகங்களையுங் காத்தற் பொருட்டு பராசவ முனிவருடைய ஆசிரமத்தில் அவதரித்திருக்கின்றனர். அக் கடவுளை நீங்கள் யாவருஞ்சென்று சரணடைந்து பூசித்து, உங்கள் துன்பங்களை யெல்லாம் போக்கி இன்பங்களை அடைவீர்களென்று சொல்லினன். அச்சொல்லை இந்திரன் முதலிய தேவர்களும் வசிட்டாதி முனிபுங்கவர்களுஞ் செவிகுளிரக் கேட்டு, ஆனந்தமாகி மீண்டு, பூவுலகத்தில் பராசவ முனிவருடைய ஆசிரமத்திற்கு வந்தார்கள். உடனே பராசவமுனிவர் வந்தவர்கட்கெல்லாந் தனித்தனி ஆசனந்தந்து இருக்கச் செய்து பின்னர் மிகுந்த பெருவகையோடும் அவர்களைப் பார்த்து, ஓ தவசீலர்களே! உங்கள் வரவினால் அடியேன் குலம், தவம், முதலியயாவுஞ் சுத்த பவித்திர மடைந்தனவென்று முகமன்கூறி, உபசரித்தனர். பின்னர் தேவர்களும் முனிவர்களும் அப் பராசவ முனிவரைப் பலவாறு புகழ்ந்து துதிசெய்து, அடியேங்களை யெல்லாம் பாவைபோல இடை விடாது ஆட்டுவித்தருளா நின்ற ஒன்றான முக்கண் மூர்த்தியே தேவரீருக்குத் திருக்குமாரனாக அவதரித்திருக்கின்றமையால், அம்மூர்த்தியைத் தரிசித்துப் பூசிக்குமாறும், தேவரீருடைய பாத பதுமங்களைத் தரிசிக்குமாறும் யாங்க ளனைவரும் இங்கு வந்தனம். முன்னதாகத் தேவரீருடைய தரிசனத்தைக் கிடைக்கப் பெற்றோம். இனி எமது கர்த்தருடைய தரிசனத்திற் கெதிர் பார்க்கின்றனமென்று சொன்னார்கள். இவ்வாறு சொல்லலும் விநாயக மூர்த்தி கிருபை சுரந்து அவர்க ளெதிரில் மூஷிகவாகனத்தின் மீது எழுந்தருளி வந்தனர். உடனே யாவரும் பயந்தெழுந்து பத்தியோடு பலமுறை பணிந்து, ஓ சகல புவனாதார சொரூபியே! அடியேங்கள் விக்கினஞ் செய்து வருகின்ற இடையூறுகளால்

மெலிந்து பிரம தேவரிடத்திற் சென்றோம்; அவர் எங்கள் வரவை யோசித்து தேவரீருடைய சன்னிதானத்திற் போகும்படி விடை கொடுத்தனுப்பினர். அவ்வாறே அடியேங்கள் தேவரீருடைய திவ்விய சரணாரவிந்தங்களை யடுத்தோம். இனி அடியேங்கள் படுகின்ற துன்பப்பாட்டினை நீக்கியருளல் வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள்.

அதற்கு விநாயகமூர்த்தி அருள் சுரந்து, இனி நீங்கள் யாதொன்றற்கும் அஞ்ச வேண்டா மென்று அபயங் கொடுத்து, அவர்களை யெல்லாந் தம்மைப் புடை சூழ்ந்து வருமாறு உத்தரவு செய்து, தாம் தமது மூஷிக வாகனத்தைச் செலுத்திக் கொண்டு விக்கினனிருக்கு மிடத்திற் சென்று, தம்மோடு வருகின்ற தேவர்களையும் முனிவர்களையும் பார்த்து, ஓ நீவிர்களே! நமது வீரத்தைப் பாருங்களென்று தமது கரத்திலேந்தி யிருக்கின்ற அங்குசத்தை யெடுத்து, நீ இவ் விடத்திற் சென்று பராக்கிரமத்திற் சிறந்த விக்கினனைப் பிடித்துக் கொண்டு வரக்கடவை யென்று கட்டளை யிட்டு ஏவினர். உடனே அவ்வங்குசமானது சகலபுவனங்களும் அதிரும் படியாகச் சென்று, விக்கினனைச் சூழ்ந்து வளைத்திழுத்துக் கொண்டுவந்து விநாயகப் பெருமான் முன்னர் விட்டது. அவ்விக்கினன் ஆகாயத்தை யளாவிய சடை முடியும், கடைவாயிற் பிறக்கு நீகரான கோரைப் பற்களும், சகல ஜீவராசிகளும் நடுங்கும் படியான ஏனைய வடிவங்களும் விளங்க, தேவர்கள் முனிவர்களுடைய எண்ணங்களை யெல்லாம் நாசஞ் செய்யவல்ல தனது பராக்கிரமத்தோடும் விநாயக மூர்த்திக் கெதிராக நின்றான். இவ்வாறு நிற்பவனை விநாயக மூர்த்தி தமது மூஷிக வாகனத்தின் மீது இருந்த படியே செறித்துப் பார்க்க, அப் பார்வையால் விக்கினன் பயந்து, இவன் நம்மை இலேசாய் விடுவானல்லன். இவனுடைய வல்லபமெல்லாம் அடியோடு அடங்கிக் கெடும்படி யுத்தஞ்செய்ய வேண்டுமென்று தன துருவத்தை மறைத்து யுகமுடிவி லுண்டாகின்ற பிரளயத்தினைப் போலச் சலவடிவங் கொண்டு, அலைகளாலீசி, நாற்றிசைகளினும் பெருகிப், பரந்து பூலோக முழுவதும் மூழ்கிப்போம்படியாக நிறைந்து, இந்திரலோகம்-பிரமலோகம்-விண்டுலோகம் முதலிய லோகங்க ளெல்லாங் கவிழ்ந்து போம்படியாக மேலோங்கினன். அதைத் தேவர்களெல்லாங் கண்டு பயந்தார்கள். முனிவர்க ளெல்லாம் இனி நமக்குப் போக்கிட மெங்கே யிருக்கின்றதென்று வாடினார்கள். இவ்வாறு விக்கினன் சலப்பிரவாகமா யிருக்குஞ் செயலினை விநாயக மூர்த்தி கண்டு, இவன் சாமார்த்தியம் இதுவாவென்று புன்னகை செய்து அச் சலப்பெருக்கை யெல்லாம் பானம் பண்ணும்படியாகத் தமது மனத்தி லெண்ணி, ஒருகரத்தை நீட்டினர். அதை விக்கினனறிந்து தப்பித்துக்கொள்ள வேண்டுமென்று நினைத்தவனாய், உடனே அச் சலவடிவினின்று மாறி ஓர் காக வடிவங் கொண்டு, ஓர் மரத்தின்மீது நின்று, பர்வதங்க ளெல்லாம் பொடிபடும்படி யாகவும், சத்த சாகரங்களும் வறண்டுபோம்படி யாகவும், தனது

சிறகினை விரித்தடித்துக்கொண்டு திக்கு யானைகளின் மத்தகங்க ளெல்லாம் பிளக்கும்படி யாகவும், சூரியன்-சந்திரன் - உடுக்கள் - சுவர்க்கலோக முதலியவைகள் உதிரும்படி யாகவும், பேரொலிசெய்து சகல புவனங்களுஞ் செவிடடையச் செய்தனன். அப்போது விநாயகமூர்த்தி தமது கரத்திலிருந்த தாமரை மலரை யவன்மீது விட்டனர். அதை யவ் விக்கினன் கண்டவுடன் அக் காக வடிவினின்றுமாறி ஊழிக்காலத்தி லுண்டாகின்ற வடவா முகாக்கினியைப் போல வடிவங்கொண்டு, மண்ணுலகம்-விண்ணுலகம்-சமுத்திரம் - பர்வதம் முதலானவைக ளெல்லாம் நீறாகும்படி எரித்தான். அப்போது விநாயகமூர்த்தி மழைவடிவாகிப் பொழிந்து அவ் வக்கினியை யவித்தனர். அப்பால் விக்கினன் பிரளயகாலத்தி லுண்டாகின்ற சண்டமாருதமும் மழையுமாக வடிவெடுத்துச் சுழன்று சொரிந்தனன். அப்போது விநாயகக் கடவுள், மேகங்களையேவி அம் மழையை யுறிஞ்சி விடச்செய்து பின்னர் அளவற்ற பர்வதங்களாகத் தாமே யுருக் கொண்டு அச்சண்ட மாருதத்தினையும் வீசவொட்டாமல் நிறுத்தினர். அதற்குமேல் விக்கினன் அனந்தமான வச்சிராயுதங்களின் வடிவங் கொண்டு, இந்திரனுடைய வச்சிராயுதமும் இடிபட்டது போலப் பொடிபட்டுப் போகும்படி பாய்ந்து விநாயக மூர்த்தி கொண்டிருக்கின்ற மலை வடிவங்க ளெல்லாஞ் சிறிய பரமாணுக்களாகும் படியாக வெதிர்த்து யுத்தஞ் செய்தனன். அப்போது விநாயக மூர்த்தி அம்மலை வடிவங்களினின்று ஓர் வேலாயுதத்தை நூதனமாய்ச் சிருட்டித்து, நீ சென்று விக்கினனுடைய உயிரை வாங்கிவரக் கடவை யென்று ஏவினர். உடனே அவ்வேலாயுத மானது சூரியனொளியு மழுங்கும் படியாக அட்ட திசைகளினும் பிரகாசித்து வாயுவேகமுந் தனக்குப் பிற்படச் சென்று வச்சிராயுதங்களைப் போல வடிவெடுத் திருக்கின்ற விக்கினனோடு அளவற்றயுத்தங்களை நடாத்தியது. அதற்குமேல் அவ்விக்கினன் வேலாயுதத்தோடு எதிர்க்க நிர்வாக மில்லாமற் பயந்து, வச்சிராயுத வடிவத்தி னின்று மாறித் தனது சுயரூபத்தினைக் கொண்டு வந்து விநாயக மூர்த்தியினுடைய திருவடிகளிற் பணிந்தெழுந்து, மிகுந்த சாந்தத்தோடு இரு கரங்களையுஞ் சிரமேற் கூப்பி, ஓ சர்வவல்லமையுள்ள கடவுளே! அடியேன் தேவரீரைச் சரணடைந்தேன். சுவாமிகள் விட்ட வேலாயுதம் அடியேனைச் சங்கரிக்க வொட்டாமற் காப்பாற்றி யருளல் வேண்டுமென்று மீட்டும் பணிந்தனன். அதற்கு விநாயக மூர்த்தியானவர் தமது கோபத்தினை மாற்றிக் கிருபை சுரந்து வேலாயுதத்தினை மீண்டுஞ் சும்மா வரும்படி கட்டளை யிட்டனர். அதற்குமேல் விக்கினன் பயமகன்று விநாயக மூர்த்தியினுடைய சமீபத்தில் வந்து துதிசெய்து,

குறிகுணங் கடந்த புராணமுத் தொழிலுங் குயிற்றிநின் காரணமுதலே
யறிவினை யிழந்து மிகுந்த மோகத்தா லடிகளோ டமரெதிர்ந்திழைத்த
வெறிய னென்றனையு மடியரோ டொன்றாய் விரவுற வாண்டருள் புரிக
செறிதரும் பிரம சொருபனே யெங்குந் திகழ்நிரா காரனே யென்றான்.

ஓ கிருபா மூர்த்தியே! ஓ குறி குணங்கடந்த பூரணா! ஓ முத்தொழிற்குங் காரணமாகிய முதலே! அடியேன் அறிவில்லாமையினால் தேவரீர்க்குச் செய்த அபராதத்தினைப் பொறுத்தருளல் வேண்டும் முன்னர் அடியேனைத் தேவேந்திரன் கூவி யேவினான். உடனே அடியேன் அளவற்ற விக்கின வடிவங்களைக் கொண்டு சகலலோகங்களையுந் துன்பப் படுத்தினேன். அன்றியும், வெறி கொண்டவனைப்போல சுவாமிகளோடு மெதிர்த்து யுத்தஞ் செய்வதாயினேன். இனி அடியேனைச் சுவாமிகளுடைய அடியார்களுள் ஒருவனாக்கும்படி கிருபை செய்து ஆதரித் தருளல் வேண்டு மென்று பிரார்த்தித்தான்.

அதற்கு இவ்வுலகத்தில் அளவற்ற கொடுமைகளைச் செய்தோர்களாயினும் ஒருக்கால் தம்மையடைந்து சரண்புகுவாராயின் அவர்களை விடாமற் காத்தருள்வதே விருதாகக் கொண்டிருக்கின்ற விநாயக மூர்த்தி கடைக்கணித்து, திரிலோகங்களிலும் அளவற்ற கொடுமைகளை நடாத்தி வந்தும், பின்னர் தம்மை யடைக்கலமாகப் புகுந்து விக்கினனுக்குப் பயமகற்றி,

புரிந்தநின் கொடுமைத் திறத்தினை நோக்கிப் பொங்கிய வெகுளியா னின்னை
யரிந்திட நினைத்தா மடைக்கலம் புகுந்தா யாதலினளித்திடப் பட்டாய்
விரிந்தவை யகத்தி லினியெமக் குவகை மேவிட நன்மொழி விளைத்தி
பரிந்தெமை நினைப்பார் பணிகுவார் புகழ்வார் பாலொருகாலுநண் ணுறி

வணங்குதல் புரியார் புகழ்தரார் நினையார் மலிந்த நஞ்சரித் திரங் கேளார்
குணங்கொளு மடியார்க் கிடர்களைப் புரிவார் குற்றமுங் கூறுவா ரவரோ
டிணங்குறு வார்க ளிவர்முத லான விழுதையர் தமக்கெலா மென்று
மணங்குசெய் தவர்பாற் பலவுரு வாகி யரசுவீற் றிருமதி கண்டாய்.

ஓ காலரூபியே! நீ இதுகாறுஞ் செய்து வந்த கொடுமையினால் உன்னைச் சங்கரிப்பதற்கே நினைத்தோம். நீ இப்போது நம்மைச் சரணடைந்தனை யாதலால் உன்னை உயிரோடு விடுத்தனம். இனி நமக்கு உவகை யுண்டாகும் படியாக நடந்து கொள்ளுக. நம்மைத் தியானிக்கிறவர்களிடத்திலும், பணிகின்றவர்களிடத்திலுந், துதிசெய்கின்றவர்க ளிடத்திலும், ஓர்போதும் நெருங்கற்க. நம்மை வணங்காதவர்கள்-துதியாதவர்கள்-நினையாதவர்கள்-நமது சரித்திரங்களைக் கேளாதவர்கள்-நமது அடியார்கட்கு அபசாரஞ் செய்கின்றவர்கள்-அவர்களோடு பழகுகின்றவர்கள்-அவர்களுடன் கூடுகின்றவர்கள்-இன்னும் இத்தன்மைத்தான அயோக்கியங்களை யுடையவர்கள் யாவரே யாயினும் அவர்களிடத்தில் நீ என்றைக்கும் அநேக வடிவங்களாய்நின்று துன்பஞ்செய்து உனது அதிகாரத்தைச் செலுத்துக. இப்போது யாம் கூறிய முறைமைகளிற் றப்பாது நடந்து கொள்வையாயின் நீ உயிருடன் பிழைத்தனை. இல்லையேல் உடனே மாய்ந்தனை. இதை யறிந்து புத்தியோடு நடந்து கொள்ளுக வென்று வரங் கொடுத்தனர்.

இப்பால் அவ்வர மனைத்தையுஞ் சிரமேற் கொண்ட விக்கினன் மீட்டும் பணிந்தெழுந்து சுவாமீ அடியேன் ஒருகாலத்துந் தேவரீருடைய கட்டளையைக் கடந்து நடவேன்; அடியேனுடைய நாமத்தையுந் தேவரீருடைய திருநாமத்தோடு தரித்தருளல் வேண்டுமென்று பிரார்த்தித்தான். அதற்கு விநாயக மூர்த்தி சந்தோஷித்து, இது முதல் யாவரும் முன்னே உனது பெயர் வரும்படியாக நம்மை விக்கினராச விநாயகனென்று துதிசெய்யக் கடவர். அவ்வாறு நம்மைத் துதி செய்வோர்களை நீ எக்காலத்திலும் அணுகாதிருக்க வென்று திருவாய் மலர்ந்தனர். அதன் மீது விக்கினன் பெருமகிழ்ச்சி யுற்றவனாகி விநாயக மூர்த்தியை அன்போடு பூசித்து விடை பெற்று, அவரிட்டருளிய கட்டளையின்படி துன்மார்க்கர்களை தேடிச்சென்று அவர்களிடத்தில் வாசமாயினான். தேவர்கள் பூமாரி பெய்தார்கள். தேவமாதர்கள் விநாயக மூர்த்தியைப் பூசித்தார்கள். இச்சரித்திரங்களை எல்லாம் வரேணியராசன் கேட்டு மிகுந்த ஆனந்தத்தோடு தனது மனைவியாகிய புட்பகையுடனே வந்து சுவாமியைப் பலமுறை பணிந்து பூசித்து, வேண்டிய வரங்களைப் பெற்றுச் சென்றனன். முனிவர்கள் தேவர்கள் முதலாயினோரும் சுவாமியைப் பணிந்து பூசித்து சகல இஷ்டகாமியார்த்தங்களையும் பெற்றுத் தத்தமிடங்களிற் சேர்ந்தார்கள். இப்பால் விக்கினராசர், மீட்டும் பராசுவ முனிவருடைய ஆசிரமத்திற்கு வந்து அம்முனிவருக்குந் தம்மைத்தாய்போல வளர்த்து வந்த அவர் பத்தினிக்குந் தமது பெருங் கருணையினால் அளவற்ற வரங்களைத் தந்து, அவர்களிடத்தினின்றும் விடை பெற்றுச் சிவ புரத்திலிருக்கின்ற தமதுலகத்தைச் சேர்ந்து வீற்றிருந் தருளினர்.

விக்கின விநாயகர் திருவவதாரப் படலம்

முற்றிற்று.

ஐந்தாவது

மயூரேச விநாயகர்

திருவவதாரப் படலம்.

கொக்கின திறகு மலைந்தவர் குமர னாகிய விநாயக ருலகில்
விக்கின ராச ராகிய முறைமை விரித்தனம் வியாதமா தவனே
விக்கின ராச ராகிய வாறே வியன்மயூ ரேசரா யுலகிற்
புக்கின வசுரர் தமைத்தெறுங் கதையும் போற்றெனப் புகலுவா
[ன் பிரமன்.

மகா தவேந்திரராகிய சவுனகாதி முனிவர்களே! விநாயக மூர்த்தி, விக்கினராசர் திருவவதாரங் கொண்டு கிரவுஞ்ச னென்னும் அசுரனாகிய மூடிகத்தை வாகனமா யூர்ந்தருளி, காலரூபி யென்னும் விக்கினனை யழித்து, உலகங்களைக் காத்தருளிய திருவிளையாடலைச் சொன்னோம். இப்பால் மயூரேசர் திருவவதாரங் கொண்டு செய்தருளிய திருவிளையாடலைச் சொல்லுவோங்கேட்பீராக.

முன்னொரு கற்பத்தில் பிரம தேவனானவன் சிவபெருமானுடைய அநுக்கிரகத்தினால் விஷ்ணுவினுடைய நாபிக் கமலத்தி லுதித்து, வேதாகம புராணங்களை எல்லாஞ் சிவபிரான் திருவாய் மலர்ந்தருளக் கேட்டு, அம்முறையின்படி சகல லோகங்களையுஞ் சிருட்டி செய்து, அவ் வேதாகம புராணங்கள் எழுதப் பட்டிருக்கின்ற புத்தகங்களை நாடோறும் பூசை செய்து வந்தனன். அப் பிரமனது சிருட்டியிலுண்டான தேவர்களும், அசுரர்களும் ஒரு காலத்தில் விரோதங் கொண்டு, நெடுநாள் மலைந்து யுத்தஞ் செய்தார்கள் பின்னர் தேவர்களெல்லாம் அசுரர்களோடு எதிர்த்து யுத்தஞ் செய்யச் சக்தியற்றவர்களாய்த் தங்களுள்ளத்தில் ஓர் சூழ்ச்சியை யாலோசித்து, வேத மந்திரங்களைப் படைகளாக்கி, அப்படைகளைப் பிரமாஸ்திரத்தோடுங் கூட்டி அவர்கள் மீது பிரயோகித்தார்கள். அதனால் அவ்வசுரர்கள் வலியற்றவர்களாகி மானத்தையும் ஆயுதங்களையு மிழந்து போர்க்களத்தினின்றும் ஓடி, அபசயத்தினால் மிகவும் வாட்டமுற்றுத் தங்களுக்கு எப்பொழுதும் அடையருத சத்துருக்களான தேவர்களை எக்காலத்திற் செயிக்கும்படி நேருமென்று உள்ளத்தில் வெஞ்சினங் கொண்டிருந்தார்கள். இவ்வாறு சிலநாள் கழிந்த பின்பு ஓ ரவுணன் சங்கினைப் போல வடிவுடையவனாய், மிகுந்த பராக்கிரம சாலியாய், அளவற்ற வரங்களைப் பெற்றவனாய், சங்காசுர னென்னும் பெயரினனாய் விளங்கி யிருந்தனன். அவனுக்கிளையனாகிய கமலாசுர னென்பவன் தான் பெற்றிருக்கின்ற பராக்கிரமத்திலும் வரத்திலுந் தன் தமையனைவிடப் பதின்மடங் கதிகமுள்ளவனாகி, எல்லா மாயைகளினுஞ் சாமர்த்தியனாகி யிருந்தனன். அவ னெவ்வாறிருந்தும் தன்

தமையனுடைய கட்டளையைக் கடந்து ஓர் காரியமுஞ் செய்வா னல்லன், இவர்க ளிருவரும் உடலும் உயிரும்போல மருவி யிருந்தார்கள். அவர்களை முன்னந் தேவர்களால் அபசெயப் பட்டிருந்த அசுரர்களெல்லா மடைக்கலம் புகுந்து, ஓ மித்திரர்களே! நீங்களும் யாங்களும் ஒருகுலத்தினரன்றோ? எங்கட்குண்டான இழிவுந் துயரமும் உங்கட் கில்லையோ? முன்னர் தேவர்கள் எங்களோடு யுத்தஞ்செய்து நலியச் செய்தார்களாதலால், அவர்களை நீங்கள் எவ்விதத்தி லேனும் வெல்லல் வேண்டும். அவர்கட்கு வேதமந்திரங்களே ஆயுதங்களாக விருக்கின்றன. அவ் வேதபுத்தகமோ பிரமதேவனிடத்தி லிருக்கின்றது. அதைமாத்திரம் முன்னே அபகரிக்க வேண்டு மென்று முறையிட்டார்கள். அவை யனைத்தையுஞ் சங்காசுரன் கேட்டு உடனே தனது தம்பியாகிய கமலாசுரனைப் பார்த்து, நீ இத்தினம் அப் புத்தகத்தை இங்கே வரும்படி செய்யக் கடவை யென்று ஆக்கியாபித்தான். அம் மாத்திரத்தில் கமலாசுரனெழுந்து தனது மாயையினால் அருபியாகி பிரமனிருக்கு மிடத்திற் சென்றனன். அப்போது அப் பிரமன் வேதபுத்தகத்தைத் தனக் கெதிரே வைத்துக்கொண்டு சிவத்தியானத்தினால் யோகநித்திரை செய்துகொண் டிருந்தனன். அச் சமயத்தில் அப் பாதகன் அவ் வேதபுத்தகத்தைக் கைக்கொண்டு வந்து தனது தமையன் முன்னர் வைத்தனன். அவன் அப் புத்தகத்தைக் கொண்டு போய்க் கடலி லொளித்து வைத்துக் காவல் செய்தான். வேதமுழுவதுங் காவலி லகப்பட்டுக் கொண்டமையால் மூவுலகங்களிலும் அவ் வேதநெறிகள் வழக்கமில்லாமல் யாவருக்கும் வறுமைகளும், இடர்களும், நோய்களும், மிகுதி, வருணாச்சிரமாதி நியதிகளெல்லாம் மாறுபட்டு, பாவச்செய்கைகள் மிகுதியா யுண்டாயின.

பின்னர் பிரமன் நெடுநாள் சென்று யோக நித்திரையைவிட்டு கண்களை விழித்தான். அப்போது தனக்கெதிரில் வைத்திருந்த வேதபுத்தகத்தைக் காணாதவனாகி மிக்க துயரத்தினை யடைந்து, பின்னர் அதுசென்ற வரலாற்றினைத் தனது ஞானநோக்கினால் அறிந்து கொண்டு, அந்தோ! முன்னர் சிவபிரான் நம்மீது கிருபை கூர்ந்து அருளிச்செய்த வேதபுத்தகமே போய்விட்டால் இனி நமக்கு என்ன செயலிருக்கின்றது? இனி நமதுயிரைக் காத்து என்னபயன்? இனி நமது சிருட்டித்தொழில்தான் எவ்வாறு நடக்கும்? இனி நமது கடப்பாடு என்னாகும்? நமது விழிகள் ஒழியவிருப்பினும் மறைகளொழிய விருக்கும்படி வாய்த்ததே யென்று மனம் வருந்தி, உடனே திருப்பாற் கடலிற் பள்ளி கொண்டிருக்கின்ற விஷ்ணுவி னிடத்திற் சென்றனன். அப்போது விஷ்ணுவானவர் தமது யோகநித்திரையி னின்று நீங்கா திருப்பக் கண்டு, பின்னர் கைலாயமலையை நோக்கிச் சென்று அடியார்களுடைய மலபாசங்களை யொழித்தாள வல்ல சிவபிரானுடைய திருவடிகளிற் சாஷ்டாங்கமாக வணங்கிப் பலமுறை துதிசெய்து நின்றனன். அவ்வாறு நிற்பவனைச் சிவபிரான் பார்த்தருளி, ஓ வாணிகேள்வனே! நீ இக்கணம் வந்தகாரியம் யாதென்று வினவினர். அதற்

க்குப் பிரமன் சொல்லுவான் சுவாமீ! யான் தேவரீரைத் தியானஞ்செய்து கொண்டு யோகநித்திரையி லிருக்கின்ற சமயம் பார்த்து என் முன்னர் வைத்திருந்த வேதபுத்தகங்களை யெல்லாம் சங்காசுரன் கொண்டுபோய்க் கடலுக்குள்ளே வைத்துக் காவல்செய் திருக்கின்றனன். அக் கடலிற் பள்ளிகொண் டிருக்கின்ற திருமாலிடத்திற்குச் சென்றேன். அவர் தமது யோகநித்திரையில் நின்று நீங்காதிருக்கின்றனர். ஆதலின் உடனே தேவரீரிடத்திற்கு வந்தேன். இதுவே எனது வரவின் காரணமாகும். இனித் தேவரீர் அவ் வசுரனைச் சங்கரித்து அவ் வேதபுத்தகத்தைக் கைக்கொண்டு முனிவர்கள் தேவர்கள் முதலாயினோர் படுகின்ற துன்பப் பாட்டினை நீக்கி, அடியேனைக் காத்தருளல் வேண்டு மென்று பிரார்த்தித்தனன், அவை யனைத்தையுஞ் சிவபிரான் கேட்டு, ஓ பிரமதேவனே! திருப்பாற் கடலிற் பள்ளிகொண் டிருக்கின்ற கேசவன் இன்னுஞ் சிலதினத்தில் தனது நித்திரையைவிட் டெழுந்திருப்பன். உடனே அச்சங்காசுரனைக்கொன்று வேதபுத்தகங்களை யாவருக்கு முதவுவனென்று திருவாய் மலர்ந்தனர். அவ்வார்த்தையைக் கேட்டவுடன் பிரமன் பூமியில் வீழ்ந்து மூர்ச்சையாகிச் சிறிதுநேர மசைவற்றிருந்து, மீட்டுந் தெளிந்து சிவபிரானைப் பலமுறை பணிந் தெழுந்து, ஓ சகல லோகநாயகனே! பாற்கடலில் நித்திரை செய்கின்றவர் விழிப்ப தெக்காலம்? சங்காசுர னழிவதெக்காலம்? யான் வேதபுத்தகத்தைப் பெறுவதெக்காலம்? முனிவர்கள்தேவர்கள் முதலாயினோர் துயர நீங்குவ தெக்காலம்? நால்வகை வருணத்தாரும் அவ் வவர்கட்குக் கூறிய கருமநெறியே நடப்ப தெக்காலம்? சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய அவ் வேதங்களைத் தினந்தோறும் பூசித்து வருகின்ற நியமத்தி னின்றுந் தப்பிய எளியேனுடைய கவலை நீங்குவ தெக்காலம்? இவை யனைத்தும் சுவாமிகள் திருவுளத்திற்கு விளக்கமா யிருந்தும் வாய்விட்டழுங் குழந்தைக்கு வாழைக் கனியினைக் காட்டுமாறுபோல அடியேற்கு ஓர் திருப்திசொல்லி யனுப்பி விடலாமென்று நினைத்தோ தேவரீர் இவ்வாறு திருவாய் மலர்ந்தருளியதென்று மனமயங்கிப் பயந்து அழுதனன். அவ்வாறு அழுது நிற்பவனைச் சிவபெருமான் புன்னகையோடும் பார்த்தருளி அவன்மீது தமது கிருபாநோக்கத்தினைச் செலுத்தி பிரமனே! இனி நீ ஒன்றற்கும் அஞ்சற்க. யாம் சொல்லுவதை ஞாபகத்தோடுங் கேட்டிடுக. நீ முற்கூறிய சங்காசுரனையன்றி அவனுக்கிளைய கமலாசுரன் என்பவன் ஒருவனிருக்கின்றான். அவனே சகல லோகங்களையு முன்னைத்தக்க பராக்கிரமத்தை யுடையவன். தனது மாயையினாலும், வரத்தினாலும், முனிவர்கள் தேவர்கள் பெரியோர்கள் முதலாயினோரைப் பகைத்துத் துன்பஞ் செய்யத்தக்க கொடியவன். அழலுக்கு மிஞ்சிய கோபத்தை யுடையவன். அவனைக் கொல்லுவதற்கு ஆயிரம் உருத்திரர்கள் ஒருங்கேகூடினாலும், பதினாயிரம் விண்டுக்கள் ஒருமிக்கச் சேர்ந்தாலும், இலட்சம் பிரமதேவர்கள் ஒன்றாய் விரோதித்தாலும் ஒருகாலத்தும் அவனைக் கொல்ல மாட்டார்கள் அவன் உயிரோடிருக்கின்றவரையில் அவன் தமையனான சங்காசுரனை வெல்லு

வதற்கு விண்டுவினா லாவதன்று. ஆதலால் அடுத்தோர்களுக்குச் சகல விடர்களையும் போக்கி ஆதரிக்க வல்லவர் விக்கினராசராகும். நீயவரிடத்திற்சென்று சரணடைவையாயின் இப்போதே உலகமுழுவதும் வேதாகமபுராணங்களைவழங்கியருளுவர். எதிர்த்து யுத்தஞ்செய்துவருகின்ற பராக்கிரமத்தினையுடைய கமலாசுரனையுஞ் சங்கரிப்பர். சகல லோகத்திற்கும் இன்பத்தைக் கொடுப்பவர். பின்னர் கேசவன் சங்காசுரனைக் கொன்று, நீ பிரதிதினம் நியமத்தோடு பூசித்துவந்த வேதபுத்தகங்களைக் கொண்டுவந்து உனக்குக் கொடுத்திடுவன். இனி யுனது துயரத்தை விட்டுவிடக் கடவையென்று திருவாய் மலர்ந்தனர்.

இவ்வாறு சிவபிரான் சொல்லாகிய அமிர்தத்தைப் பிரமன் பானஞ் செய்தவனாய் மிகுந்த ஆனந்தக் களிப்போடுந் தனது லோகத்திற் சென்று பதுமாசனத்தி லிருந்து, விக்கின ராஜருடைய திருவுருவத்தை மனதிற் றியானித்து, அவரது ஏகாட்சர மந்திரத்தைச் செபஞ்செய்து கொண்டு யோகத்தி லிருந்தனன். அந்த யோகத்திற்கு விநாயகமூர்த்தி கிருபை கூர்ந்து, பரசு - கமலம் - பாசம்-அங்குச மென்னும் இவைகளைத் தாங்கி யிருக்கின்ற நான்கு திருக்கரங்களோடும் திரிநேத்திரங்கள் விளங்கும்படியாக இருமருங்கினுஞ் சித்திபுத்திகள் சமேதராய்ச் சிங்கவாகன மூர்ந்து பிரத்தியட்ச மாயினர். உடனே பிரமன் விழித்தெழுந்து மனமுருகி ஆனந்தக் கண்ணீர் சொரிந்து, அடியற்ற மரம்போலச் சாஷ்டாங்கமாக விழுந்து மீட்டெழாதபடி பூமியிற் கிடந்தனன். அவ்வாறு கிடப்பவனை விநாயக மூர்த்தி கிருபையோடும் பார்த்து,தமது திருக்கரத்தால் அவன் கரத்தைப் பிடித்தெழுப்பி, பிரமனே! வேதாகம புராணங்களென்று சொல்லப் படுகின்ற அம் மூன்றும் நமது முகத்தில் மூன்று கண்களாக விருந்து பிரகாசிக்கின்றன. அவைகளை நீ இறந்துபோய்விட்டதாக நினையற்க. அவைகளைக் குறித்து இனி யாதொரு துயரமுங் கொள்ளற்க. யாம் அவைகளைப் பழையபடி லோகங்களிற் பிரகாசிக்கச் செய்குவம். தேவர்கள் முனிவர்கள் மனிதர்கள் முதலாயினோருடைய துயரம் நீங்குமாறு இப்போதே யாம் பூலோகத்திற் சென்று கமலாசுரனைச் சங்கரிப்போம். பின்னர் கேசவன் தனது நித்திரையினின்று மெழுந்தவுடன் நமது கிருபையினால் அவன் தமையனாகிய சங்காசுரனைக் கொல்லுவன். ஆதலால் இனி உனது கவலைகளை யொழித்து சந்தோஷமா யிருக்கக் கடவையென்று திருவாய் மலர்ந்து, உடனே விநாயக மூர்த்தியானவர் பிராமண வடிவங்கொண்டு வேதாகம புராணங்களை யெழுதியிருக்கின்ற ஓர் புத்தகத்தை யுண்டாக்கி, அவைகளைத் தமது தோளின்மீதேற்றிச் சீடர்கள் ஆயிரம்பேர் தம்மைப் புடைசூழ்ந்து வரும்படி அளவற்ற சூரியர்கள் ஏககாலத்தி லுதயஞ் செய்ததுபோல ஆகாயத்தி னின்றும் பூலோகத்தி லிறங்கி வந்தனர். அவ் வரவை சுந்தர ஆசிரமத்தில் வசித்திருக்கின்ற முனிவர் சமூகங்க ளறிந்து அளவற்ற அந்தணர்களுடைய பிரகாசந் தோற்றக் கண்டு, இப் பிரகாசம் எங்ஙனம் முதித்து இங்ஙனம் வருகின்றதென்று இமையா நாட்டத்தினராய்ப் பார்த்துக்கொண் டிருந்தார்கள். பின்னர் அந்தணராய்

எழுந்தருளிய விநாயகமூர்த்தி யானவர் தமது திருக்கூட்டத் தோடும் அவ் வாசிரமத்தை யடைந்தனர். உடனே ஸ்நானம்-சந்தி-செபம்-ஓமம்-வேதாத்தியயனம்-தேவபூசை-அதிதிபூசை-வைச்சுவதேயம் என்று சொல்லப்பட்ட நித்திய கருமங்களெட்டினையுந் துறந்து, பல இடையூறுகளினுந், துயரத்திலு மூழ்கியிருந்த முனிவர்களெல்லாம் உய்ந்தோம். உய்ந்தோமென்று கூத்தாடி, வெய்யிலால் வாட்டமுற் றிருந்த பயிர்களெல்லா மழைபொழியக் கண்டது போல மனமகிழ்ந்து, சீடர் கூட்டத்தோடு மெழுந்தருளி வந்த அந்தணர் பெருமானுடைய திருவடிகளில் பலமுறை சாஷ்டாங்கமாக வணங்கி, ஆனந்த பரவசங் கொண்டு, கைக்கொட்டி குப்பிட்டு இதனைச் சொல்லுவ தாயினார்கள். ஓ அடியேங்கள் தவத்தின்பேறாக வெழுந்தருளிய வேத வித்தகரே! நாடோறும் இடையூறுகள் செய்து வருகின்ற கமலாசுரனால் அடியேங்கள் பல சடங்களிலுழன்று ஆசார முதலியவைகளை யிழந்து மாசினையடைந்திருந்தோம். இன்று தேவரீரைக் காணத்தக்கபேறு அடியேங்கட்குக் கிடைத்ததினாலே இப்போதே அவ்விடையூறுக ளனைத்தையும் நீங்கிச் சகல பாக்கியங்களையும் பெற்றோம். பூருவத்தி லடியேங்கள் பெரிதான தவங்களைச் செய்திருந்த படியால் இச்சனனத்தில் தேவரீரைக் காணும்படியான சம்பந்தம் கிடைத்தது. அடியேங்கள் எளிதில் கடைத்தேறுமாறு இங்ஙன மெழுந்தருளிய தேவரீர் பூர்வம் வசித்திருந்தலம்யாது? இப்போது இங்ஙனங் கிருபையோடு மெழுந்தருளிய காரணமென்ன? அதனை அடியேங்கட்குத் திருவாய் மலர்ந்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள்.

அதற்கு அந்தண வடிவங் கொண்டெழுந்தருளிய விநாயக மூர்த்தியானவர் கிருபை கூர்ந்து, ஓ தவத்தோர்களே! உலகத்தில் அவ்வியகவ்வியங்கள் சிறிது மில்லாது நித்திய நைமித்திய முதலிய கருமங்கள் நின்றிருப்பதை யாமறிந்து, வேத முதலான சகல நூல்களும் எழுதப்பட்டிருக்கின்ற புத்தகங்களைக் கொண்டு வந்தோம். இவைகளை நீங்கள் வைத்துக்கொண்டு சகலகிரியைகளையு முன்போலவே செய்து கொள்ளக் கடவீர்கள். நமது நாமத்தை மல்லாலவென்று சகல சாத்திரங்களுங் கூறும். மூவுலகத்தாரும் அப்பெயரே இயம்புவார்கள். நமக்கு இவ்விடத்தில் ஓரிருக்கை தந்து, உங்கள் கவலைகளனைத்தையும் நீங்கிப் பேரின்பமுற் றிருப்பீர்களென்று திருவாய் மலர்ந்தனர். அதைக் கவுதமர் முதலிய முனிபுங்கவர்கள் கேட்டு மனமகிழ்ந்து, நாம் அளவற்ற தவங்களினால் பிரார்த்தித்துப் பெறத்தக்க வரம் யாதோ, அதனை இவ்வந்தணர் பெருமானே கொடுத்தருளினரென்று ஆனந்த முற்று, அவர் வசித்திருப்பதற்கேற்ற ஓர் விடுதியைத் தெரிந்து கொடுத்து, சகல துயரங்களினின்று நீங்கினவர்களாய்ச் சிலர் பூர்வத்தில் வேதாகம புராணங்களை யுண்டாக்கிய பரம்பொருளே யிவரென்று துதிசெய்தார்கள் சிலர் அவைகளை அடியேங்கட்குத் தேவரீர் திருவாய் மலர்ந்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். சிலர் அவரால் நான்கு வேதங்களையுங் கிரமமாகச் சொல்லக் கேட்டு ஆனந்தித்தார்கள். சிலர் அவ்

வேதங்களினுடைய உண்மைப் பொருள்களைக் கேட்டுச் சந்தேகநிவிர்த்திசெய்துக் கொண்டார்கள். சிலர் சாத்திர விசாரணையினால் திரிபதார்த்தங்களினுடைய நிச்சயந் தெரிந்து கொண்டார்கள். சிலர் புராணங்களை யெல்லாம் ஆதியோடந்தமாக வினவிப் பேரின்ப மடைந்தார்கள். சிலர் தாங்கள் கேட்டவாறு மற்றையவர்க்கும் போதனை செய்துக் கொண்டிருந்தார்கள்.

இவ்வாறு அவ்வாசிரமத்தி லிருந்த முனிவர்களெல்லாம் மல்லாலருடைய திருவடிகளைத் தினந்தோறும் பணிந்து அவரால் வேத முதலான சகல நூல்களையும் வரன் முறையாகக் கேட்டுத் தெரிந்து கொண்டு அவைகளைத் தங்கடங்களுடைய சீடர்கட்குத் தாங்களே ஓதுவித்து, அவர்களால் உலக முழுவதும் அவைகளைப் பரவச் செய்து யாவருஞ் சகல கருமங்களையும் நாடோறும் பூர்த்தியாகச் செய்துக் கொண்டு சந்தோஷமா யிருந்தார்கள். இப்பால் பிரமனானவன் முன்னர் சிவபெருமான் தனக்கருளிச் செய்த வேதநூலைப் பிரதிதினம் பூசித்தற்கு உண்டாகிய இடையூற்றினை இன்னும் நீக்கிக் கொள்ளாத சிறிய கவலையை யுடையவனாயினும், அவ்வேத நெறிகள் எங்குஞ் செழித்தோங்கி நடந்து வருவதினால் தான் பேரானந்த முற்றுச் சதாகாலமும் விநாயக மூர்த்தியைத் தியானஞ் செய்து வந்தனன். இவ்வாறு வேதாகம புராணங்கள் உலகமெங்கும் பரவிப் பிரகாசமுற் றிருப்பதை உய்யும் வகையுணராத கமலாசுரனறிந்து தனது தமையனாகிய சங்காசுரனை யடைந்து, அண்ணலே! யாம்வேத முதலானவைகளை யெல்லாம் அபகரித்தும் வீணாயிற்று; அஃதெவ்வாறெனில், சுந்தர ஆசிரமத்தில் ஓரந்தணன் அவைகளைக் கொணர்ந்து வந்தான். அதனால் இரவியைக் கண்ட இருளைப்போல அழிந்த வருணாச்சிரம தருமங்கள் குறைவில்லாமல் நிறைவேறி வருகின்றன. அவ்வவர்கள் யாகாதி விரதங்களைச் செய்து அவிர்ப்பாகந் தந்து வருவதினால், தேவர்களெல்லாம் அவ்வவிற் பாகங்களை யேற்றுப் பூரித்திருக்கின்றார்கள். இனி அத்தேவர்களும் விரதியரும் நம்மை என்னமாய் மதிப்பார்கள்; இவ் வுலகத்துள்ளோர்கள்தான் என்னமாய் மதிப்பார்கள்? சிறியோர்களுங்கண்டு நகைக்கும்படியான பழிப்பினுக்காளாயினோம். ஓர்காரியத்தைத் திண்ணமோடு செய்யாதிருப்பதே பெருமை அப்படிச் செய்தும் அதிற் பிழைசேருமாயின் அதற்கு மிக்க சிறுமை வேறென்னவிருக்கின்றதென்று துயரமுற்றுச் சொன்னான். அதனைச் சங்காசுரன் கேட்டு, மெய்குலுங்க நகைத்து உள்ளம் பதைக்கும் படியாக இருவிழிகளையும் வெருட்டி தம்பி! நீ ஏன்வீணில் மயங்குகின்றனை; மிகுந்த வயிரமான பதார்த்தங்களைச் சேதித்த நீ ஓராயுதத்திற்கு இளம்புல்லைச் சேதிப்பதும் அரிதோ? இந்திரன் - பிரமன் - விண்டு முதலாயினோரும் நமக்கு நிகராக மாட்டார்களே! மனைகடோறுஞ் சென்று பிச்சையேற்கின்ற ஓரந்தணனோ நமக்கு நிகராகுவன்? நீ விரைவில் அவனைக் கொன்று அவன் வைத்திருக்கின்ற வேதநூல்களைக் கைக்கொள்ளுக வென்று விடைகொடுத்தனன். உடனே கமலாசுரன் காட்டை நோக்கிச் செல்லுங் கடுங்கனலைப்போல வெழுந்து வேவுகாரர்களை யழைத்து நமது சதுரங்க

சேனைகளும் யுத்தத்திற் காயத்தமா யிருக்கும்படி வள்ளுவனைக் கொண்டு முரசறையக் கடவீரென் றாக்கியாபித்தனன். அவ்வாறே அவ் வியவர்கள் வள்ளுவனைக் கொண்டு முரசறைவித்ததும், சங்காசுரனுடைய அரண்மனை வாயிலுக்கு முன் அளவற்ற வீரர்கள் இரதகஜ துரகபதாதிகளாய் வந்து சேர்ந்தார்கள். அதற்குமேல் கமலாசுரனானவன் ஸ்நானபான முதலியவைகளைச் செய்து ஆடையாபரணாதிகளைத் தரித்துக் கொன்றை தும்பை மாலையினைச் சூடி அரமனைவாயிலில் நின்று யுத்தசன்னத்தனாய் வெளிக்கொண்டு தனது சேனாசமுகத்தில்வந்து அந்தந்த வீரர்கட்கேற்ற பின்னும் அளவற்ற ரதங்களையும்-கஜங்களையும் - பரிகளையும் - படைகளையும் உதவிசெய்து தானுங் குதிரைமீ தாரோகணித்து, வெற்றிச்சங்கம் - பேரிகை முதலானவைகள் சத்திக்கவும், மங்கள கீதங்கள் முழங்கவும், மாகதர் விருதெடுத்துக் கூறவும், குடை-கொடி-குஞ்ச முதலானவைகள் இருமருங்கினும் நெருங்கவும், தூதர்கள் முன்னதாய் ஓடவுமாக யுகாந்தவெள்ளத்தி லெழுகின்ற வடவா முகாக்கினியைப் போலச் சகல சேனா சமுத்திரங்களுந் தன்னைப் புடைசூழ்ந்து வரும்படி சுந்தர ஆசிரமத்தை நோக்கிச் சென்றனன். அப்போது அவ் வாசிரமத்துள்ள முனிவர்கட்கெல்லாங் கேட்கும்படி ஒரு ஆகாயவாக்கானது உங்களையும் மல்லாலரையு நெருங்கிப் போர்செய்ய அதிக வுக்கிரத்தோடு கமலாசுரன் வருகின்றான் சாக்கிரதையாயிருங்கள் என்றுண்டாயது. அவ் வாக்கினைக் கேட்ட மாத்திரத்தில் முனிவர்களெல்லாம் பயந்து மல்லாலரிடத்திற் போய்ப்புடைசூழ்ந்து பலமுறை பணிந்தெழுந்து கைகூப்பி, சுவாமி! எவ்வளவேனும் இரக்கமில்லாமல் சகல லோகங்களிலும் துன்பஞ் செய்துவருகின்ற கமலாசுரனென்பவன் ஆலகால விடத்தினைப்போல அடியேங்களை யெல்லாங் கவளமாகக் கொள்ளும் பொருட்டுச் சதுரங்க சேனைகளோடும் வெளிப்பட்டு வருகின்றனன்; அப்பாதகனால் அடியேங்கட் குண்டான பயங்கரத்தை யாவர்நீக்க வல்லர்கள்; இனி அடியேங்கள் யாவரைச் சரணடைவோம்; எங்ஙனமேனுந் தப்பி ஓடிச் செல்லுவதற்கும் ஓர் வழியையுங் காணேம், ஐயோ? இதற்கென்ன செய்ய வல்லோம்! அக்கமலாசுரனைச் சங்கரிக்கத் தக்கவர்கள் யாவரிருக்கின்றார்க ளென்று சொல்லிவிழிகளில் நீர்சிந்தும் படியாக யாவரும் மனம்நொந்து புலம்பினார்கள். இவ்வாறு பயந்து புலம்புகின்ற முனிவர்களை மல்லாலராக வந்த விநாயகப் பெருமான் கிருபையோடும் பார்த்து, ஓ தவசீலர்களே! நீங்கள் அக் கமலாசுரன் வரவைக் குறித்து யாதொரு கவலையுங் கொள்ளவேண்டாம். அவன் அவ்வளவு வலிமையுள்ளவனென்று நினைக்க வேண்டாம். நீங்கள் யாவரும் என்பின்னே வந்திருக்கக் கடவீர்கள் ஓர் நாகமிருக்கு மிடத்தில் அளவற்ற எலிக்கூட்டங்கள் கடல்போல நெருங்கி வந்தாலும் அந்நாகத்தை வெல்லமாட்டா, இனி என்னை ஓரேழைப் பிராமணனென் றெண்ணாதீர்கள்; எனது பராக்கிரமத்தை நீங்களே பார்மின்க ளென்று சொல்லி நினைத்தனர். உடனே தமது மாயையினால் அளவற்ற சேனைகள் ஆயுதபாணிகளாயும் வீர கண்டா மணியைத்

தரித்த கால்களை யுடையவர்களாயும் தமது காற்றுகளினால் கடல்களை எல்லாந் தூக்கவல்ல பெருக்கூட்டத்தினராயும் அண்ட கடாகங்களை எல்லாம் பொடி செய்யத்தக்க ஆண்மையினும் பராக்கிரமத்தினும் மிகுந்தவர்களாயும் உண்டானார்கள். அளவற்ற வாத்தியங்கள் முழங்கின; குடை கொடி முதலிய சின்னங்கள் எத்திசைகளினும் நெருங்கின; எங்கெங்கும்விருதுகள்பாடினார்கள் அச்சேனா சமுத்திரங்களி லுண்டான ஓசையானது பிரளய காலத்தி லுண்டாகுங் கடலொலியினு மிகுத்துச் சத்தித்தது. இச் சேனைகளே யன்றி வேறுவேறான அளவற்ற வடிவங்களோடு அத்திர சஸ்திர முதலிய ஆயுதங்களைத்தாங்கி யிருக்கின்ற நால்வகைச் சேனைகளும் எண்ணிறந்தனவாக உண்டாயின. பின்னரிச் சேனைகள் யாவுந் தங்களைப் படைத்தருளிய சுவாமியைப் பணிந்தெழுந்து கைகூப்பி கர்த்தனே! அடியேங்களா லாகவேண்டிய பணிகளை ஆக்கியாபித் தருளவேண்டுமென்று பிரார்த்தித்தன. இவ் வதிசயங்களை யெல்லாம் சுவாமியைப் புடை சூழ்ந்திருந்த முனிபுங்கவர்கள் கண்டு, பலமுறை வேதாகமங்களாற் றுதி செய்தார்கள். இவ்வாறு நூதனமாயுண்டான சேனைகளும்-முனிவர்களுந்துதி செய்திருக்கின்ற சமயத்தில் மல்லாலராக வெழுந்தருளியிருந்த விநாயகமூர்த்தியானவர் அவ்வுருவத்தினின்று மாறிப், பத்து திருக்கரங்களும், அவையுள்ள வலது கரங்களில் தாமரை மலர்-பாசம்-பரசு-அங்குசம்-தண்டம்-சக்கரம்-டமருகம்-சாமரம் என்னுமிவ் வைகளையுந் தரித்தவராய், பருத்து நீண்ட திருமேனியை யுடையவராய், சந்திரனைத் தரித்த கிரீடம் மூன்று கண்களும் அளவற்ற வாபரணங்களுந் தரித்தவராய், வீரகண்டாமணியைத் தரித்த திருவடிகளை யுடையவராய் எழுந்தருளினர். அவ்வற்புதத்தைத் தேவர்கள் முனிவர்கள் முதலாயினோர் கண்டு ஆனந்த மடைந்தார்கள். இவ்வாறு விநாயக மூர்த்தி செய்தருளிய திரு விளையாடல்களை யெல்லாம் முன்னர் கமலாசுரனிடத்தினின்றும் ஓடிவந்த தூதர்களில் அதனென்றும் ஒருவன் கண்டு, உடனே அவ் வசுரனிடத்திற் சென்று பணிந்தெழுந்து, ஆண்டவனே! சுந்தர ஆசிரமத்திலிருந்த மல்லாலனென்னும் மந்தணன் ஓர் நொடிப்போதில் நால்வகைச் சேனைகளோடு அளவற்ற வீரர்களை யுண்டாக்கித் தானுஞ் சர்வாயுத பாணியாய் யுத்தத்திற் காயத்தப் பட்டிருக்கின்றனன். அவனைவெல்லவல்லவர்கள் எவ்வுலகங்களினுமிரார்கள். அவன்உண்டாக்கிய சேனைகட்குள்மிகவுமிளைத்தவனாயிருக்கிற ஒருவன் தாக்குவனாயின் நமது சேனைகள்யாவும் மடியும்போதும், இப்போது அவன் உண்டாக்கி யிருக்கின்ற சேனைகள் ஒருவேளை தேவரீர் ஆயுதவல்லமைத்தா லிளைக்கினும் உடனே மீட்டும் அளவற்ற சேனைகளை யுண்டாக்கி யுத்தஞ் செய்யத் தக்க வல்லமை யுடையவன். ஆதலால் இவைகளை யெல்லாந் தேவரீர் தீர்க்காலோசனை செய்தருள வேண்டுமென்று சொன்னான். இவ்வாறு உள்ளவிதத்தை யெல்லாம் உரிமையோடு தூதுவன் சொல்லியும் அவைகளைக் கமலாசுரன் சிறிதும் யோசியாது, அழிவு காலத்துக் கேற்ற புத்தியினையே மிக்கொண்டு தனது பராக்கிரமத்தினையே பெரிதாக மதித்து, ஓ வித்த

கனே! இதுகாறும் இந்திரன்-பிரமன்-விஷ்ணு-உருத்திரன் முதலிய யாவரும் என்னெதிரில் நின்றவரல்லர்; இப்போது முட்டி யெதிர்க்கும் இராக்ஷதனன்றோ எனக்கு வீரனானவன்; அவனை ஓர் அக்கினி அஸ்திரத்தினாற் சங்கரித்து விடுகின்றேன் பாரென்று சொல்லிக் கண்கள் சிவந்து அழலைச் சொரியும் படியான கோபத்தோடு உலகத்தை யெல்லா மெடுத்து விழுங்கி விடுவான்போலத் தன் விந் தனது குதிரையை விரைவில் நடாத்தினன். உடனே அவன் சேனைத் தலைவர்க ளெல்லாம் அவனைப் பணிந் தெழுந்து தமது நால்வகைச் சேனைகளோடு முன்னே நடந்தார்கள். பின்னர் மல்லாசுரனுடைய சேனைகளும் பாவத்தோடு புண்ணிய மெதிர்த்தது போலக் கமலாசுரன் சேனைகளோ டெதிர்த்து இரத வீரர்களோடு இரத வீரர்களும், யானை வீரர்களோடு யானை வீரர்களும், குதிரை வீரர்களோடு குதிரை வீரர்களும், வாள்வீரர்களோடு வாள்வீரர்களும், கதைவீரர்களோடு கதைவீரர்களும், வில்வீரர்களோடு வில்வீரர்களுமாக நெருங்கிப் போர்செய்தார்களும், வேல்வீரர்களோடு வேல்வீரர்கள். அவருள் சிலவீரர்கள் பறவைபோலப் [illegible] மிருக்கின்ற தமது இரதங்களைச் சிறகுற்றெழுந்த மலைகளைப்போலவும், உலகைவாட்டுமுகைக்குங் கபவனைப்போலவும், பகைவர்களுடைய இரதங்களோடு பொருது வித்து மண்டில மிட்டார்கள். சிலவீரர்கள் மலைமுழைகளி னின்றும் வெளிப்பட்ட பறவைகள் அங்குமிங்குமாகப் பறந்து இரைதேடுதல்போல ஒருவர்படைகள் ஒருவர் இரதத்தில் நுழையும் படியாகத் தாண்டி ஆர்ப் பரித்தார்கள். சில வீரர்கள் மலையின்கணுள்ள விருக்ஷங்கள் யாவு மழையினாலிற்று வீழ்வது போலப் பகைவருடைய இரதங்களின் மீது தமது படைகளைப் பொழிந்து, கொடி-கொடிஞ்சி முதலிய உறுப்புகளை நிலத்தில் வீழ்த்தினார்கள். சிலவீரர்கள் தம்மோடு போராட வேண்டினோருடைய இரதத்தைக் குறுகும்போது இடையில் அளவற்ற பிணங்கள் வீழ்ந்து தங்க ளிரதங்க ளிடரும்படிச்செய்ய மனம் நொந்து, பின்னர் வேறொரு இரத வீரர்களை யழைப்ப மகிழ்ந்து போர் செய்தார்கள். சில வீரர்கள் ஒருவரை யொருவ ரெதிர்த்துக் குதிரைகளையும்-பாகர்களையும்-படைகளையு மிழந்து தம்முடலைத் தேரின்மீதும், உயிரை வானின் மீதும் கூட்டினார்கள். சில வீரர்கள் பன்னிரு கோடி சூரியர்களுந் தமக்குள் பகை கொண்டு யுத்தஞ் செய்வது போலத், தமது இரதங்களை ஆகாய மார்க்கத்திற் செலுத்தி ஒருவரோ டொருவர் நெடு மொழி கூறிப் போர் செய்தார்கள். சில வீரர்கள் அந்தர மார்க்கமாகப் பறந்து யுத்தஞ்செய்து தமது வலியும் உயிருங்குன்றும்படியாகப் பூமியில் விழுந்து அங்குள்ள யானை முதலியவைகளையுங் கொன்று உயிர் விடுத்தார்கள். சிலவீரர்கள் தமது தேர்கள் முறிந்துபோக உடனே சேமத் தேர்களில் சிங்கவேற்றினைப்போலப் பாய்ந்தேறிப் போராடினார்கள். சில வீரர்கள் பகைவர்கள் விடுகின்ற படைகளால் உடல்கள் பிளக்கப் பட்டு உதிர வெள்ள மானது தமது தேர்களின் மீது பெருகியோடும் படியாகக் கிடக்க அத்தேர்கள் அருவி பாய்கின்ற மலைகளைப் போலப் பிரகாசித்தன. சிலவீரர்கள் யானை வீரர்கள் செய்த

போரினால் தமது பரிபூட்டிய இரதங்களிற்றானே உயிரை விடுத்து அரம்பை மாதர்களுடைய அல்குலென்னுந் தேரிலுவர்ந்து அவர்கள் கொங்கை யாகிய யானைகளை இரண்டு கரங்களினாலும் வளைத்துப் போர்செய்தார்கள். சிலவீரர்கள் இடியை யொத்துச் சத்திக்கும் பெருங் குரலினாலும், மழையைப்போன்று பொழியு மதத்தினாலும், மின்னலைப் போலப் பிரகாசிக்கும் படைகளினாலும், மேகங்களை யொத்து விளங்குந் தமது யானைகளின்மீது அம்மேகத்தை வாகன மாகவுடைய இந்திரனைப் போலவிளங்கி யுத்தஞ் செய்தார்கள். சில வீரர்கள்தமது யானைகளால் பகைவருடைய யானைகளைத் தண்டத்தினாலுஞ் சங்கிலிகளினாலும் புடைப்பித்து, நீண்ட கோடுகளினால் அவைகளினுடலம்பிளவு படும்படியாக முட்டிப், பலபடைகளைக் கொண்டு அப்பகைவருடைய உயிரைமாய்த்தார்கள். சிலவீரர்கள் ஓடுகின்ற இரதங்களோடு தமது யானைகளையோட்டி வரைசிறகரிந் தோனாகியதேவேந்திரனைப் போல, அவ்விரதங்களைமுறித்துச் சாடினார்கள். சில வீரர்கள் பகைவருடைய தேரை முட்டி யெடுக்கும்படி தமது யானைகளையேவ, அவைகளவ்வாறே முட்டியும் எடுக்க வலியின்றி முன்னொருபோது கைலாய வரையை யெடுத்த அசுரனைப்போல ஓலமிட்டு முழங்கின. சிலவீரர்கள்குதிரை வீரர்கள் செய்தபோரினால் தமது உயிரையும் யானையையும் விடுத்து அரம்பையராகுதனங்களாகிய இருகோட்டு யானைகளைமித்தலும் அணைந்துவாழ்வுள்ளனர். சில வீரர்கள் பகைவரைக் கொன்றல்லது மீளக் கூடா தென்னும் வெஞ்சினத்தை மேற்கொண்டு காற்றேறும் செல்லும் அக்கினியைப் போலத் தமது குதிரைகளோடுஞ் சென்று கடல்போன்று விளங்குஞ் செருக்களத்தைத் திரைபோன்று விளங்கித் துழாவினார்கள். சில வீரர்கள் தமது குதிரைகளைப் பகைவர் குதிரைகளின்மீது பாயும்படிவிடுக்க, அவைகளவ்வாறேபாய்ந்து கொன்று உடனே தமது தாளினால் நிலத்தினின்று மெழுந்து ஆகாயத்திற் சென்று சூரியனுடைய குதிரைகளோடுஞ் சமர்செய்தன. சில வீரர்கள் பகைவருடைய இரதங்களையும், யானைகளையுங், குதிரைகளையு மதஞ்செய்து அவர்கள் விடுத்த வாளியினால் முடிவில் நிலத்தில் வீழ்ந்து தேவ மாதர்களுடைய நயன மென்னும் வாளியினால் மன்மதன் செய்யுஞ் சமரை வென்றார்கள். இவ்வாறு இரத வீரர்களும் யானை வீரர்களுங் குதிரை வீரர்களும் ஒருவரை யொருவ ரெதிர்த்து யுத்தஞ் செய்திருக்கப் பதாதியா யிருக்கின்ற சேனைகளுட் சிலர் இளையோர்-முதியோர்-இடியுண்டோர்-பெண்டன்மை பூண்டோர்-என்னு மிவர்களையுங்கரி முதலியவைகளையு மெதிர்ப்பதை விட்டுத், தம்மையொத்த படை வீரர்களோடு யுத்தஞ் செய்தார்கள். சிலர் தமதுருவங்களைக் கேடகங்களினால் மறைத்துக் கரத்தில் வாளினையேந்தி ஒருவரை யொருவர் இடசாரி வலசாரியாகச் சுழன்று முடி-தோள்-மார்பு-இடை-தொடைமுதலிய உறுப்புகளைக் குறிபார்த்து வெட்டினார்கள். சிலர் தமது வில்லுகளைக் குனிய வளைத்து அளவற்ற சரமாரிகளை ஒருவர்மீ தொருவர் தூண்டி, மறைந்து போர் செய்வோருடைய வில்லுகளையும் தூணிகளையுங் கீழே விழத்தள்ளி மலைபோன்ற தோள்களையும் மூடி

களையும் அறுத் தெறிந்தார்கள். சிலர் பகைவருடைய சிரத்தினும் மார்பினுந் தோளினும் நிணம்-மூளை-தசை முதலியவைகள் சிதறும்படியாகத் தண்டாயுதங்களைக் கொண்டு தாக்கினார்கள். சிலர் கதை-தோமரம்-பிண்டி-பாலம்-முசலம்-கப்பணம்-எழு-மழு-சூலம்-குந்தம்-முதலிய படைகளை ஒருவர்மீ தொருவர் மாறி மாறி விடுத்துப் போர் செய்தார்கள். சிலர் வீர சொர்க்கத்தினையே முக்கியமாகக் கோரினவர்களாய்த் தமது படைகள் முழுவது மிழந்தும் மெய்யிற்றைக்கி யிருக்கின்ற படைகளைப் பறித்தும் பகைவர்களை யோட்டினார்கள். சிலர் தகரோடு தகர் தாக்குவது போல, முகங்களோடு முகங்களைத்தாக்கி ஒருவரை யொருவர் இறுகத்தழுவி நிலத்தில் வீழ்ந்தார்கள். சிலர் கைகளைக் கைகளினாலுங் கால்களைக் கால்களினாலும் பின்னி ஒருவரை யொருவர் உள்ள முடலும் நடுக்கும் படியாக அதட்டினார்கள். சிலர் முட்டிகளில் முறை முறையாகக் குத்தி ஜய வுச்சாகத்தோடு ஒருவர்க் கொருவர் உயிர்விலை கூறிப் புடைத்தார்கள். சிலர் தமது விழிகளி லனற்பொறி எழும்படி உறுத்து நோக்கித் தோள்களை மாறி மாறித் தட்டி ஒருவர்மீ தொருவர் பற்களைப் பதியும்படியாக ஊன்றி, நுனிநாவைக்கடித்து நிற்போருடைய தாள்களைத்தாவி நிலத்திலறைந்தார்கள். சிலர் பகைவருடைய கன்னங்களில் சிவப் பெய்தும்படியாகப் புடைத்து, தலைகளை முறுக்கி யெறிந்து கால்களி லணிந்திருக்கும் வீரகண்டாமணியைப் பறித்து வாயில் வைத்துக் கடித்தார்கள். அளவற்ற வீரர்கள், பகைவர் விடுக்கின்ற வாள்களினாலும்-வேல்களினாலுங்-கால்-கை-முதலிய உறுப்புக்களை யிழந்து மடல்க ளொழிந்த பனைகள்போல ஏங்கி நின்றார்கள். அளவற்ற வீரர்கள் தமது சிரங்களையிழந்து கவந்தமாகியும் மானமொழியாதவர்களாய் யாளி போலெதிர்த்து வருஞ் சத்துருக்களை வாளினால் வெட்டி யெறிந்து நடனமிடுவார்கள் அளவற்ற வீரர்கள் முன்னர் தழைத்தோங்கி யிருக்கு முருக்கையும், பலாசையும், இலவையும் போலச் சமர்க் களத்தி னின்று, பின்னர் அவ்விருக்கங்களினின்று வீழ்கின்ற பூவையும் கனியையும்போல உதிரமயமானார்கள்.

இவ்வாறு இருதிறப் படைகளும் ஒன்றோடொன் றெதிர்த்து அகோரமான யுத்தங்களை விளைக்கும்போது, அளவற்ற பிணங்கள் அச் சமர்க்களத்தில் மலைமலையாகக் குவிந்தன. அம் மலைகளி னின்றும் பெருகிய வுதிரவெள்ளமானது பலகுமிழிகளோடுந் திரைகளை வீசிக்கொண்டு சென்று கடலிற் பாய்ந்தது. அவ் வுதிரவெள்ளத்தி லாழ்ந்து மிதக்கின்ற இரதங்க ளெல்லாங் கப்பல்களைப் போலவும், யானைகளெல்லாம் மலைகளைப் போலவும், குதிரைக ளெல்லாம் நீர்நாய்களைப் போலவும், கைகால் முதலிய உறுப்புகளெல்லாந் தாமரை மலர்போலவும், வெளுத்த நிணங்களெல்லாம் நுரைகளைப் போலவும், நீண்ட குடல்க ளெல்லாம் பாசிகளைப் போலவும் விளங்கின.

சிலபேய்கள் அவ் வுதிரவெள்ளத்தில் மிதக்கும் கேடகங்களைத் தெப்பமாகக் கொண்டேறி, ஈட்டிகளைக் கோல்களாகக் கொண்டு செலுத்திக், குடல்

களை மாலையாகத் தரித்து, யானையின் கோடுகளை கொட்டிக்கொண்டு விளையாடல் செய்தார்கள். சிலபேர்கள் யானைகளினுடைய விலாவெலும்புகளை வில்லாகவும், நரம்புகளை நாணாகவும், வீரர்களுடைய முதுகெலும்பினை அம்புகளாகவுங் கொண்டு ஒருவரோ டொருவர் விளையாட்டாகச் சமர்செய்தார்கள். சிலபேய்கள் முன்றிலகன்றறியாத முதுமைப் பேய்களுக்கு மூளைச்சோற்றினையுந் தசைமுதலிய உபகரணங்களையும் யானையின் செவிகளில் நிரப்பி வைத்து, அவைகளின் குடர்களினால் இறுகக்கட்டி, துதிக்கரங்களில் உதிரங்களை நிரப்பித் தோளிலிட்டுக் கொண்டு சென்று விருந்தூட்டின. சிலபேய்கள் பந்தலிட்டாற்போலப் பறந்திருக்கின்ற பருந்துகளுடைய நிழலில் உதிரங்களை தெளித்துத், துவசங்கள், யானைகளின சரீரங்களால் நாற்றிசைகளினும் வேலிகோலிப், பிணங்களாகிய தவிசுகளில் வீற்றிருக்க, அவைகட் கெதிரில் சிலபேய்கள் தோத்திரஞ் செய்தும், சிலபேய்கள் * துணங்கை கொட்டியு மிருந்தன. இவ் விதமாகப் போர்க்களமானது சிறப்பெய்தி யிருக்குஞ் சமயத்தில், மாறுபாடு மறியாத மல்லால மூர்த்தியினுடைய சேனைகள் கமலாசுரனுடைய சேனைகளையெல்லாம் வெந்நிட் டோடும்படியாகச் செய்ய, அதனைக் கண்ட கமலாசுரன் தனது சேனைகளைக் கையமர்த்தி, † மல்லகதி-மயூரகதி-வியாக்ரகதி-வானரகதி-விடபகதி என்னும் ஐவகை நடையினையும் வாய்ந்த தனது குதிரையின்மீது நின்று, இடியேற்றினைப் போலச் சத்தித்து உலகங்களை யழிக்க வெழுந்த வடவா முகாக்கினியின்மீது நெய்க்கடல் பெருகுமாறுபோலக் கோபித்துச் சீறினன். அச் சீற்றத்தைக் கண்டமாத்திரத்தில் சிலர் நடுங்கியும், சிலர் மெய் மறந்தும், சிலர் ஓடியும், சிலர் ஊக்கமிழந்தும் போனார்கள். பின்னர் கமலாசுரன் தன் குதிரையை இடசாரி வலசாரியாக வோட்டி, மல்லால மூர்த்தியினுடைய சேனாசமூகங்களிற் புகுந்து, தலைக ளுருளவும், உதிரம் பெருகவும், குடர்க ளலையவுமாக அளவற்ற வீரர்களைச் சின்னபின்னமாக வாட்டி, பீடும் எமது கர்த்தனெதிரில் வந்துநின்று நாகப்படையை யெடுத்துத் தனது குலகுருவாகிய சுக்கிரனா லுபதேசிக்கப்பெற்ற மந்திரத்தை நூறுதரம் உருசெபித்து அதிவேகத்தோடு விட்டனன். அப்படை வெளிப்பட்ட மாத்திரத்தில் தேவர்கள் முதலிய சகலரும் விழிகள்கூசி மருண்டு விஷமுண்டவரைப் போலக் கலக்கும்படி ஒன்றனந்தமாகச் சொலித்துக்கொண்டு சர்ப்பாபரணத்தைத் தரித்த மல்லால மூர்த்தியினுடைய படைகளோ டெதிர்த்து தனது வேகமுள்ள உயிர்ப்பினாலும், வெப்பமாகிய விடத்தினாலும் விஷமிருக்கின்ற பற்களினாலும், அஞ்ச விழிக்கின்ற பார்வையினாலும், பேரொலிசெய்கின்ற குரலினாலும், அளவற்ற சேனைகளை அதப்பட வாட்டுகின்றது. அதன்செயலை முக்கண் மூர்த்தியாகிய மல்லாலர் பார்த்துப் புன்னகைசெய்து தமதுதிருக்கரத்தி

* துணங்கை-இருகையு முடக்கி விலாப்புற மொத்தியாடல். † இக்கதி ஐந்தையும் துரகதி யென்ப.

விருக்கின்ற சக்கரப்படையை விடுத்தனர். அஃது ஆயிரமாயிரமாக வருக் கொண்டு கமலாசுரனுடைய படைகளையெல்லாந் துகள்படுத்தி, ஓர் நிமைப் போதில் நாகப்படையை யறுத்தெறிந்து, கர்த்தருடைய திருக்கரத்தில் மீண்டது. பின்னர் கமலாசுரன் தேவர்களுங்கண்டு நடுங்கத் தக்கதாகத் தண்டாயுதத்தை யெடுத்துத் தாக்கினன். அதற்கு எமது கர்த்தர் இவன் வலிமையெல்லையைக் காணுது மென்று நாமுமொரு தண்டாயுதத்தைத் தாக்கி, நெடுநேரம் அவனோடு சமராடினர். உடனே அவ்வசுரன் மல்லாலருடைய மார்பின்மீது ஓர் கதாயுதத்தை யேவினன். அதை எமது கர்த்தர் கண்டு நகை செய்து அவ்வுணன் மெய்முழுதும் வெயர்த்து நடுங்கும் படியாக அதனைத் தமது கதாயுதத்தை விடுத்துத் துகள் படச்செய்தனர். பின்னர் கமலாசுரன் விஷ்ணுவின் சக்கரமும் வாய்புழைத் தேவல் செய்யத்தக்க தனது சக்கராயுதத்தை விதிப்படி சோடசவுபசாரங்களுடன் பூசித்துச் சுழற்றிச் சிவகுமாரனைக் கண்டித்து வருவதாக வேண்டி வேகமாய்ச் செலுத்தினன். அஃது அவ்வாறே நாற்றிசைகளினுஞ் சொலிப் பெய்த அளவற்ற தீப்பொறிகளை யிறைத்துப் பற்பல அற்புத விதங்களைப் படைத்துச் சொல்லப்படாத வற்புதங்களைக் காட்டிப் பிரசண்ட மாருதமும் பயந்தொளிக்கும்படி வேகங்கொண்டு சீறிவர, அதனை விநாயக மூர்த்தியினுடைய திருக்கரத்தி லிருந்த சக்கரமானது ஒரு கணமாய் விழுங்கி விட்டது. இப்பால் விண்ணவர்கள் ஆண்மையை யடக்க வல்ல அவுணனானவன் வடவைக் கனலைத் திரட்டி வடித்து வைத்தாற்போல விளங்குந் தனது சத்திப் படையை விடுத்தனன். அதனைத் தானவராண்மையை யடக்க வல்ல எமதையனானவர் தமது அங்குசப்படையினால் துணிசெய்தனர். உடனே கமலாசுரனானவன் விழிகளிலனற்பொறி பறக்கக் கோபித்துத் தனது மழுப் படையை அதிக விசையோடுஞ் செலுத்தினன். அஃது கடலிலெழுந்த விடத்தைப் போலச்சீறி அடர்ந்து வருதலும் மல்லால மூர்த்தியானவர் தமது மழுப் படையினைக் கொண்டு அதனைக் கண்டித்தனர். பின்னர் அவுண பாதகன் பாசத்தை யெடுத்து விடுத்தனன். அதனையும் எமது கர்த்தரானவர் பல துண்டங்களாக வரிந்து எறிந்தனர். இவ்வாறு தனக் கருமையாகக் கிடைத்திருந்த படைகளெல்லாம் விநாயகப் பெருமானு லழிந்துபோன அபசயத்தைக் கண்ட கமலாசுரன் என்செய்வன் செருக்கற்றுப் பெருமூச்செறிந்து மானமுங் கோபமு மனதைப் பாதிக்கச் சர்ப்பத்தைப் போலச் சீறி, இனி இவனைத் தெய்வப் படைகளா லதஞ் செய்ய வேண்டுமென்று யோசித்தவனாய் வருணாஸ்திரத்தை யெடுத்து தூபதீப நைவேத்திய முதலிய உபசாரங்களைச் செய்து, நீ போய் மல்லாலனையும் அவன்சேனைகளையும் நாசஞ்செய்து மீளக்கடவை யென்று மந்திர பூர்வகமாகப் பிரயோகித்தனன். அந்தப் பாணமானது வெளிப்பட்டவுடன் சர்வசங்கார காலத்திற் பரமசிவ கடாட்சத்தால் உலகங்களை யழிக்க சத்த சாகரங்களையும் உடைத்துக் கொண்டெழும் பெரும்புறக்கடலைப்போலச் சலப் பெருக்கை யுண்டாக்கி அலைகளைப் பெருக்கி இடிகளை யொத்ததிர்ந்து புர

ண்டு அதிவேகமாய் வருவதைத் தேவாதிதேவராகிய மல்லாலர்கண்டு பிரளய வெள்ளத்தைச் சுவற்றுந் திட்சண்ணியமுள்ள அக்கினியாஸ்திரத்தை யெடுத்து விட்டனர். அந்த விட்டமாத்திரத்தில் வானத்தி லெழுந்து பகபகவென்று நகைத்து கொண்டல் கொண்டலாய்ப் புகையைப் பெருக்கிச் சுவாலைகளைவீசி அனற்பொறிகளைக் கக்கி உலகங்களை மூடியிருந்த சலத்தை நிமைப்போதில் வறள உண்டுவிட்டது. அதைக்கண்ட கமலாசுரனானவன் ரவுத்ராகாரமாகக் கோபித்துத், துரிதமாய் வாயுவாஸ்திரத்தை யெடுத்துப் பிரயோகித்தான். அது வில்லிலிருந்து வெளிப்பட்டவுடன் ஊழிக்காலத்தில் மோதும் பிரசண்ட வாயுவைப் பெருக்கிச், சுழற்காற்றைப்போல எங்குஞ்சீறி, அக்கினிப் படையினுடைய வலிமையை யடக்கியிருக்க, அதை மல்லால மூர்த்தி கண்டு விரைவில் நாகாஸ்திரத்தை யெடுத்துப் பிரயோகித்தனர். உடனே அஃது தேவர்களும் மயங்க உலகத்தை விளக்குஞ் சூரியனுந் தியங்கிவாடும்படி மேலிட்டு விசாலமாகிய படங்களை விரித்து விஷங்களைக் கக்கும் பலகோடி சர்ப்பங்களை யுண்டாக்கி ஆலகால விஷமூச்சுச்சீறி வாயுவின் பெருக்கினைக் கிரசித்து, விஷச்சுவாலைகள் பெருகப் பெருமூச்செறிந்து வருவதைக் கமலாசுரன் கண்டு கருடாஸ்திரத்தை யெடுத்து அபிமந்திரித்து அதிவேகத்தோடும் பிரயோகித்தான். அந்த திவ்விய பாணமானது வானத்தி லெழும்பி சங்கோபசங்கமாய் கருடவுருவங்களைக் கொண்டு விசாலமாகிய சிவந்த சிறகுகளை விரித்து ஆர்ப்பாட்டங்களோடு போய்ச் சர்ப்பக் கூட்டங்களை மடக்கிக் கால்களி லிருக்கின்ற கூரிய நகங்களினுற் பிளந்து கொன்றும், மூக்கினுற் கொத்தி வாட்டியும், சிறகடியினுல் மாய்த்தும், திசையெங்கணுஞ் சாடியும், கோபமடங்காமல் பகைவரைத்தேடி மேலிட்டுவர, அதனை எமதையன் கண்டமாத்திரத்தில் தமது ரிஷபாஸ்திரத்தினை யெடுத்துப் பிரயோகித்தனர். உடனே அப்பாணமானது வலிய கால்களையும் வச்சிரத்தை யொத்துக் காட்டும் நீண்ட கொம்புகளையுங் கொண்டு பெருமூச்சுவிட்டு அண்டகோளகையு மதிர்ந்து நடுங்கும்படி கர்ச்சித்து வெண்டயங்கள் கலீர்கலீரென்று சத்திக்கப் பாதங்களைப் பெயர்த்து வைத்து, கருடாஸ்திரத்தின் வலிமையுஞ் செய்கைகளையும் நிமைப்போதி லடக்கிச் சத்துருவைச் சின்னபின்னப்படக் கண்டிப்பே னென்று உறுத்து வருவதைக் கமலாசுரன் கண்டு, விரைவில் ஏமாஸ்திரத்தை எடுத்து மந்திரபூர்வகமாக வில்லிற் பூட்டிப் பிரயோகித்தனன். அந்தப் படையானது அதிகமகிமைகளோடும் ஆர்ப்பரித்து நந்திப்படையோடு மெதிர்க்க வலியற்று மயங்கி நாசமாகிப் போயது. ரிஷபாஸ்திரம் முன்னினு மதிகமான உற்பாதங்களைக் காட்டிச் சமீபித்து வரும்போது கமலாசுரன் அதனுடைய வலிமையும், வேகத்தையும் நிதானித்து நறநறெனப் பற்களைக் கடித்து, உதட்டை மடக்கி, விழிகளில் தீப்பொறி சிதற மீசை படபடவெனக் கோபித்துப், பிரமாஸ்திரத்தை யெடுத்துப் பூசித்து வில்லிற் பூட்டி ஆகர்ணாந்த பரியந்த மிழுத்துச் செலுத்தினன். அப்பாணமானது உடனே வானத்திற் சென்று வடவாக்கினியைப்போ

லச் சீறிக் கொக்கரித்துக், கலகலென நகைத்துக் கணக்கிறந்த திவ்விய பாண கோடிகளைப் படைத்துப் பிரசண்ட மாருதத்தைப் பெருக்கி உலகங்களைத் துன் திடுக்கிட்டு நடுங்கும்படி ஆர்ப்பாட்டங்களைச் செய்து அதிக வேகத்தோடு வந்து சிவபிரானுக்கு வாகனமாகிய நந்திப் படையைக் கண்டவுடன் பயந்து, கரங்களைக் கூப்பித் தொழுது பிழைத்தோம், பிழைத்தோமென்று கூவிக் கொண்டு திரும்பியது. அதைக் கமலாசுரன் கண்டு காலாந்தகனைப்போலக் கோபித்து உடனே நரசிம்மாஸ்திரத்தை யெடுத்துச் சோடச வுபசாரங்களோடும் பூசித்துப் பிரயோகஞ் செய்தான். அது வெளிப்பட்ட மாத்திரத்தில் அளவற்ற மாய்கைகளை விளைத்து எங்கும் இருள் மயமாக மூடி அதிக உக்கிரத்துடன் சர்ப்பத்தைப்போலச் சீறிவந்து நந்திப் படையோ டெதிர்த்து அளவற்ற யுத்தங்களைச் செய்து நிற்க, எம்மையனாகிய மல்லாலமூர்த்தி அதுகண்டு, சரபத்தின் வடிவாகிய வீரபத்திராஸ்திரத்தை யெடுத்துப் பிரயோகித்தனர். உடனே அத்திவ்வியாஸ்திரமானது வானத்தெழுந்து சீறி, வடவைக் கனலும் ஆலகாலமும் நடுங்கி அஞ்சுந்தக்கதாகக் கொதித்து அதிக வேகமாய் வந்து நந்திப்படையுடன் போராடுகின்ற நரசிம்மாஸ்திரத்தை மடக்கிக் கொண்டு, அதன் வீறுப்பை முற்றிலுமடக்கித் துரத்தி விட்டது. இவ்விதங்களாகத் தான் செலுத்திய தெய்வப்படைகளனைத்தும் பிரயோசனப் படாமல் பின்னிடுவதையும் மல்லாலர் படைவீறி யிருப்பதையுங் கமலாசுரன்கண்டு திடுக்கிட்டு நிமைப்போதிற் சராசரப் பிரபஞ்சங்களை வாட்டிச் சாம்பராக்க வல்ல பாசுபதாஸ்திரத்தை யெடுத்து திருமஞ்சன தூப தீப முதலிய சோடச வுபசாரங்களையும் நடாத்திப், பத்தி பூர்வகமாகத் துதித்து, வில்லிற் பூட்டி, வட்டாகாரமாக வளைத்துப் பிரயோகித்தனன். அதை மல்லால மூர்த்தி கண்ட மாத்திரத்தில், இதற்கு வீரபத்திரப் படை எதிர் நிற்க மாட்டாதென்று நிதானித்தவராய், தம்மிடத்திலிருக்கின்ற பாசுபதாஸ்திரத்தை யெடுத்து மானத பூசையினால் பல வுபசாரங்களையும் நிறைவேற்றி அச்சத்துரு விடுத்த பாணத்தினால் உலகங்கட்கு யாதொரு துன்பமும் நேராதபடி பாதுகாப்பதுவுமன்றி அவன் விட்ட படையையு மாற்றித் திரும்புவை யென்று சொல்லி மந்திர பூர்வகமாகப் பிரயோகித்தனர். உடனே அப்பாசுபதாஸ்திர மானது பலமகிமைகளோடு அதி வேகத்துடன் சென்றெதிர்த்துப் பிரசண்ட மாருதத்தை ஒரு புறத்திலெழுப்பியும், வடவா முகாக்கினியை யொருபுறத்தி லெழுப்பியும், ஆலகால விடத்தை யொரு புறத்திற் பெருக்கியும், தாபாக்கினியையும் புகைப் படலங்களையும் ஒரு புறத்தி லுண்டு பண்ணியும், பூதபசாசடாகினி முதலிய வருக்கங்களை ஒரு புறத்திற் சிருட்டித்தும், தோமரம் — பிண்டி-பாலம்-கப்பணம்-முசலம்-சக்கரம்-எழு-மழு-தண்டம்-ஈட்டி-எறி - வேல்-முசண்டி-கவண்-நாஞ்சில் - இருப்புலக்கை-முத்தலைச்சூலம்-வச்சிரம்-வேல்-வாள் முதலிய ஆயுதங்களை ஒன்றனைத்தமாக வீசியும், மேருமுதலிய அட்ட குலாசலங்கள் பிளக்கவும், நட்சத்திர ராசிகள் நெற்பொரிகளைப்போல வுதிரவும், சூரியன் இரதமும் சந்திரன்விமா

னமும் பங்கப் பட்டுச் சிதறவும், திசை யானைகள் தாவரிக்க மாட்டாது வால்களைத்தூக்கி வீறிட்டோடவும், வடவனலும் வெப்பத்தினை யடக்கிப் பதுங்கவும், கீழுலக வடுக்குகளும் மேலுலக வடுக்குகளுங் கலந்து மாறுபடவும், சகல சராசரங்களுந் திடுக்கிட்டு மயங்கவும், வானத்தில் வேடிக்கைப் பார்த்திருந்த தேவர்களும் முனிவர்களுந் திகைத்துப்பயந்து திசைதப்பி யோடவும், பூமியைத் தாங்கி நின்ற கூர்மமுஞ் சேடனும் நொறுங்கி வாடவும், சத்தமேகங்களுங் கலங்கிக் காற்றிற் பஞ்சை யொப்பப் பறக்கவுமான இவ்வித வுற்பாதங்களை விளைத்தும், அவுணர்கோன் விட்ட பாசுபதத்தை அதோகதிப் படுத்தித் தானவர்க ளொழிய ஏனைய தேவர் முதலிய சராசரங்களை நூதனமாகப் படைத்துப் பாதுகாத்து மீட்டுந் தயாபரமூர்த்தியாகிய மல்லாலருடைய திருக்கரத்தில் வந்து சேர்ந்தது. ரிஷபாஸ்திரமும் அவ்வாறே மீண்டு கர்த்தனை யடைந்தது.

இப்பால் கமலாசுரனானவன், தான் செலுத்திய பாணம் வியர்த்தமாகத் திரும்பியவுடன் திகைத்துத் தன்னைச் சமுத்திரம்போலச் சூழ்ந்திருந்த இரத கஜ துரகபதாதிகளைக் காணாதவனா யேங்கி, இதனை யோசிப்பதாயினன்: கணப்போதிற் சராசரப் பிரபஞ்சங்களைத் தகித்துச் சாம்பராக்கவல்ல படைகட் கரசாகிய பாசுபதாஸ்திரத்தைப் பிரயோகித்தனம். அஃது பகைவரைச் சயங்கொள்ளாமல் அபலமாகத் திரும்பி வந்துவிட்டது? இனிச் செலுத்துவதற்கும் அதனிலுஞ் சிறந்தபாணமென்ன விருக்கின்றது, பெருந்துவந்தசேனைகளனைத்தையும் மாளக் கொடுத்து எனொண்டா ரெவருமின்றி ஏகாங்கியா யிருக்கின்றனம். பகைவனோ சகல சேனைகளோடும் வீறி யிருக்கின்றனன். அவன் நம்மை விட்டு நீங்குந்திறத்த னல்லன். ஆதலால் அவனுக்கு முன்னமே நாம் ஓடிப் பதுங்குவது உத்தம மென்று நினைத்து தனது மாயையினால் யாவருங் காணாதபடி அப் போர்க்களத்தி னின்று மறைந்தனன். உடனே மல்லால மூர்த்தி அக் கமலாசுரன் மறைந்துபோனதையறிந்து இனி அவன் வரும்போது இங்ஙனம் எய்துவோ மென்று திருவுளங்கொண்டு சகல முனிவர்களும் வசித்திருக்கின்ற சுந்தர ஆசிரமத்தை யடைந்தனன். அப்போது மல்லாலருடைய அட்டமூர்த்தத்தில் ஒருவனாகிய சூரியனானவன் கொடிய அவுணர்களால் செய்யப்பட்ட போரி லுண்டான ஆருசத்தை நீக்கிக்கொள்ளுவான்போலத் தனது வானாகிய வீதியைக் கடந்து சிவபிரானுடைய திருமேனிபோலச் சிவந்து பிரகாசிக்கின்ற மேற்றிசைக் கடலில் மூழ்கிக் குளித்தனன். உடனே மாலைக்காலமானது கரியின் பாகம் போன்றுங் கறுத்த புகைபோன்றும் இருண்ட புவன மெங்கும் பரவியது. அஃது எப்படிக் கிருந்ததென்னில்: கொடிய பாதகராகிய அவுணர்களின் வடிவங்களையும், அவர்களுக் குண்டாகின்ற மாயைகளையும் அவர்கள் செய்துவருகின்ற பாவங்களையும் ஒத்திருந்தது.

இப்பால் போர்முகத்தில் நின்றும் அபசயமடைந்து சென்ற கமலாசுரன் கடலின் மத்தியில் வாழ்கின்ற தன் தமையனான சங்காசுர னிடத்திற் சென்று

பணிந்து நிற்க, அவனை அச் சங்காசுரன் பார்த்துச் சொல்லுவானினாய்! இன்று காலையில் இங்கனமிருந்து சென்றபோது உண்டாயிருந்தவலிமை சக்தியை இப்போது காணவில்லையே? ஆலைவாயிற்பட்ட கரும்புபோல உனது சரீர மெல்லாம் நொறுங்கவந்ததனை? வீரத்திற் சிறந்த சேனைகளையெல்லாம் பின்னிட்டோடச் செய்ததனை? பகைவருக்குப் புறங்கொடுத்து வந்தால் வீரர்களாயினோர்க்கு ஆண்மை யுண்டாகுமோ? யாவராலாகா திருக்கத்தக்க பலமான சரீரத்தினையும், வரத்தினையுமுடைய நீயே ஒருத்தனன் செய்யும் போருக்கு அஞ்சி இளைத்தனை யென்றால் உலகஞ் சிரியாதோ? மகா பராக்கிரமசாலியாகிய உனது சரீரத்தில் நின்று இரத்தத் திவலைகளினால் ஒவ்வொரு திவலைக்கும் உன்னையொத்த வீரர் அளவற்றபேர் உண்டாகும்படியான மகத்துவத்தை நீ பெற்றிருக்க, உன்னைக் கொல்லவல்லவர் எந்த வுலகத்தி லிருக்கின்றார்கள்? உனது புத்திமயக்கத்தால் உன்னுடைய விக்கிரமம் உனக்கே தெரியவில்லை. நீ பெற்றிருக்கின்ற வரங்களை யான் பெற்றிருப்பேனாயின் எதிர்த்த சத்துருவை உயிரோடுவிட்டு, மீட்டுந் திரும்புவனோ? இம்மட்டிலேனும் உனது கவலையை யொழித்து இத்தினம் இறந்துவிட்ட சேனைகள்போக மற்ற சேனைகளையும் இங்கிருக்கின்ற சேனையும் நாளைய விடியற்காலையி லழைத்துக்கொண்டு யுத்தத்திற்குப் போகக்கடவை யென்று சொல்லினான். அவை யனைத்தையும் கமலாசுரன் கேட்டு மீட்டுந் தமையனைப் பணிந்தெழுந்து, அண்ணலே! தேவரீர் இட்டருளிய கட்டளைப்படி உதய காலையில் யுத்தத்திற்குச் செல்லுகின்றேனென்று சொல்லி விடைபெற்று அன்றிரவு முழுவதும் நித்திரையின்றி எப்போது அருணோதய மாகுமென்று எதிர்பார்த்திருந்தனன்.

இப்பால் சுந்தர ஆசிரமத்திலிருக்கின்ற முனிவர்களெல்லாம் யுத்தத்திற்குச் சென்ற நமது கிருபாமூர்த்தி எப்போது வந்தருளுவரென்று மாலைக் காலத்தில் தங்கள் நங்கள் காதலர் வரவை நோக்கியிருக்கின்ற மகளிரைப் போலச் செருக்களத் திசையினையே நோக்கி எதிர்பார்த் திருந்தார்கள். உடனே விநாயகமூர்த்தி அச் செருக்களத்தை விட்டு வந்தனர். பின்னர் முனிவர்களெல்லாம் அவரைப் பெருவகையோடும் பணிந்து நின்றார்கள். அப்போது விநாயகமூர்த்தி கௌதமர் முதலிய முனிவர்களை அன்போடு பார்த்து ஓர் நொடிப்போதில் எல்லா வுலகங்களையும் நீற்ற வல்ல தமது மகத்துவத்தைத் தமக்குள்ளே மறைத்து, அம் முனிவர்களுடைய மனதைச் சோதிக்கவேண்டி, ஓ தவபூபதிகளே! நம்மை எதிர்த்துவந்த கமலாசுரனுடைய வன்மைகளை யாவரும் பார்த்தீர்களல்லவா? நாம் செய்துவந்த யுத்தங்களுக்கெல்லாம் சிறிதேனும் பின்னிடையாமல் சமயுத்தஞ்செய்து நமது சேனைகளை யெல்லாம் மாய்த்தான். அவனைப்போன்ற சுத்தவீரன் திரிலோகங்களிலுமில்லையென்று திருவாய்மலர்ந்தனர். அதைக் கௌதம முனிவர் கேட்டுப் பணிந்தெழுந்து, சுவாமி! சேனைகளெல்லாம் மடிந்துபோயின வென்று ஏனைய தேவர்களைப்

போலத் தேவரீர் திருவாய்மலர்ந்தருளுவ தெற்றினுக்கு? முன்னுந் தேவரீருடைய கிருபையினால் யாவருங் கண்டு சந்தோஷ மெய்தும்படியாகச் சகல சேனைகளு முண்டாயின. மீட்டும் அவ்வாறே தேவரீரிடத்தில் யாவும் ஐக்கியமாயின. சுவாமிகள் திருவுளங்கொண்டால் இன்னும் வேண்டிய சேனைகள் ஓர் நொடிப்போதி லுண்டாகாவோ? அப்படி யல்லவெனில், தேவரீர் அடியேனிடத்திற் கிருபைவைத்து கட்டளையிட்டருளினால் இன்று மாய்ந்த சேனைகளனைத்தையும் எழுப்பி இன்னும் அளவற்ற சேனைகளையும் நூதனமாக உண்டாக்க வல்லேன் என்றுசொல்லினர். அதை விநாயகமூர்த்தி கேட்டருளிப் புன்னகைசெய்து, ஓ தவமுனியே! நீ உள்ளதையே கூறினை. நாம் நமது பராக்கிரமம் முதலியவைகளை இந்த உலகத்திலுள்ளோர் யாவரும் பார்க்கும்படியாக வுண்டாக்கினோம். அகத்தியன் காசிபன் முதலாயுள்ள சிறந்த இருடியர்கட்கும், உனக்கும் நமது கிருபையினால் ஆக்கல் முதலிய தொழில்களைச் செய்யத்தக்க வல்லபங்க ளுண்டாயிருக்கின்றன. ஆயினும், ஏகனென்று சொல்லப்படுகின்றயாமே முன்னம் மூர்ச்சித்திருக்கின்ற நமது சேனைகளை யெழுப்பிக்கொண்டு மூவுலகத்தாருந் துதிசெய்யும்படியாக மீட்டும் யுத்தகளத்திற் சென்று அக் காகமுங் களிப்புறும்படி அக் கமலாசுரனைச் சங்கரித்திடுவோமென்று அங்கிருக்கின்ற முனிவர்கட்கெல்லாந் திருவாய் மலர்ந்து, அமிர்தசஞ்சீவி யென்னும் மந்திரத்தை உச்சரித்து, தமது திருக்கரத்தால் சலத்தை மாய்ந்து கிடக்கின்ற சேனைகள்மீது தெளித்து எழுந்திருக்கச் செய்து பின்னும் அளவற்ற சேனைகளை நூதனமாக வுண்டாக்கி, மீட்டும் அம் முனிவர்களைப் பார்த்து, அன்பர்களே! இப்போது முன்னிலும் அதிகமான சேனைகளை யுண்டாக்கி யிருக்கின்றனம். இனி அக் கமலாசுரனைச் சங்கரிப்பதற்கு ஒருபாயஞ் சொன்மின்களென்று கேட்டருளினர். அதற் கம்முனிவர்கள் சகலமுந் தெரியவல்ல சுவாமிகட்குச் சிறியேங்கள் யாது தெரிந்து சொல்லவல்லோமென்றார்கள். அவர்களுள் காசியபரென்னும் முனிபுங்கவர் விநாயகமூர்த்தியைப் பணிந்தெழுந்து சுவாமீ! தேவரீருடைய பெருங் கருணையினால் அடியேங்கள் திரிகால ஞானங்களை யறிந்திருக்கின்றமையானும்; அடியேங்களைத் தேவரீரே நோக்கி ஒருபாயஞ் சொன்மின்களென்று கேட்டருளிய தானும், நாயேங்கள் செய்துகொள்ளும் விண்ணப்பத்திற்குச் செவிகொடுத் தருள வேண்டும். அஃது யாதெனில்: கொடிய பாதகனான கமலாசுரன் நாளையதினம் யுத்தத்திற்கு வருவான். அவனைச் சங்கரிப்பதற்குச் சுவாமிகள் ஓர் வாகனத்தை யூர்ந்தருளல் வேண்டுமாதலால் இத்தினந் தேவரீர் சாங்கோபாங்கத்துடனே ஒரு வேள்வி செய்தால், அவ் வேள்வியி னின்று மலைபோல ஒருமயிலுண்டாகும்; அம் மயிலின் மீது சுவாமிகள் ஆரோகணித்து யுத்தகளத்திற் சென்று அவ் வசுரனைச் சங்கரிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தனர். இவ்வாறு காசிப முனிவர் கூறியதை விநாயகப் பெருமான் கிருபையோடுங் கேட்டு, ஓ தவசீலனே! உனது கருத்தின் வண்ணமே யிசைகின்றனம், நமதுள்ளமும் ஒன்றுதலால்,

ரோம். வேள்வி செய்வதற்கு வேண்டிய பதார்த்தங்களை யாவருஞ் சேகரித்து நடத்தற்குரிய திருப்பணிகளை விரைவில் நடாத்தக் கடவீர்களென்று கட்டளை யிட்டருளினர். உடனே சிலர் சாத்திர விதிப்படி வேள்வி மண்டபத்தைச் சமைத்தார்கள். சிலர் குண்ட மண்டலாதிகளைச் செய்தார்கள். சிலர் வேள்விக் குரிய பொருள்களைச் சேகரித்து வைத்தார்கள். சிலர் பற்பல திருப்பணிகளை நிறைவேற்றி யிருந்தார்கள். அப்போது அண்டர்பெருமானாகிய விநாயகமூர்த்தி யானவர், வேள்வித்தீயை வளர்க்கத் திருவுளங் கொண்டவராய்த் தமது தேவி யராகிய சித்திபுத்திகளை நினைக்க, அவர்கள் உடனேவந்து கர்த்தனுடைய இரு பாரிசங்களினும் அமர்ந்திருந்தார்கள். பின்னர் விநாயகப் பெருமான் அத் தேவியரோடு மெழுந்தருளித் தீர்த்தமாடி ஞானதீக்கை முதலியவைகளை நிறை வேற்றி வேள்வியும், அவ் வேள்விக்குத் தலைமையான கடவுளும் அவ் வேள்வி யால் வரும்பயனும் அப் பயனை யளிக்கவல்ல முதல்வனுந் தாமேயென்று உல கத்தினர் அறியுமாறு வேதாகம முறைமைப்படி அவ் வேள்வித்தீயை வளர்த்தி, அவிர்ப்பாகம் முதலியவைகளைக்கொடுத்துப் பூரணாகுதியுஞ்செய்து முடித்தனர்; உடனே அவ்வேள்விக் குண்டத்தினின்று நீண்டகலாபத்தோடு ஒருபெரியமயி லுண்டாகிச் சந்திரனும் உடுக்கூட்டங்களு மறைந்திடும்படியாகவுந் திக்குயானைக ளெட்டுமஞ்சி நடுங்கும்படியாகவும் கூகாவென்று கூவிச் சத்தித்தது. பாதல லோகத்தில் வாழ்கின்ற நாகராசர்களும், சுவர்க்க லோகத்தில் வாழ்கின்ற ராகு கேதுக்களும் அக் கூக்குரலைக் கேட்டு நடுக்குற்று மீட்டும், இம் மயில் சகல லோகங்கட்கு முண்டாயிருக்கின்ற ஆபத்துக்களை விலக்கி ஆட்கொள்ளும் பொருட்டு எழுந்தருளிய விநாயக மூர்த்திக்கு வாகனமாகப் போகின்றமை யால், நமக்கு யாதொரு தீங்கினையுஞ் செய்யாதெனத் தெளிந்து சந்தோஷ மடைந்தார்கள். பின்னர் அம்மயிலானது தனது அடிகளைப் பூமியிலே பெயர்த்து மாறிமாறி வைக்குந்தோறும் அப் பூமியைத் தாங்கிநின்ற ஆதிசேடனுடைய பணாமகுடங்க ளெல்லாம் நெரியவும், சத்தசாகரங்களுந் தத்தங் கரைபுரளவும், அட்ட குலாசலங்கள் அதிரவும், தனது கலாபத்தை விரித்து ஆடிக்கொண் டிருக்கையில், விநாயக மூர்த்தியானவர் யாவருஞ் சயசயவென்று போற்றும் படியாக அம் மயிலை வாகனமாக ஊர்ந்தருளினர். உடனே ஆகாயத்தில் பஞ்ச கருவிகளும் முழங்கின. தேவர்கள்சொரிந்த புட்பவருடத்தினாற் பூமியெங்கணு மிடமில்லாமல் மறைந்தது. முனிவர்க ளெல்லாம் விநாயக மூர்த்தியை மயூ ரேச ரென்று துதிசெய்தார்கள். சுவாமியும் அம் முனிவர்கள்மீது தமது பரி பூரண கடாட்சத்தினை வைத்தருளினர்.

ஓ சவுனகாதி முனிவர்களே! இந்த மயூரேச ரென்னுந் திருநாமத்தை யாவரேனும் அன்போடு துதிசெய்வார்களாயின், அவர்கள் இம்மையில் சகல விடையூறுகளினின்று நீங்கி மேலான செல்வத்தைப் பெற்று கற்பகத் தரு வைப்போல வரையாது வழங்கி, வேதசாஸ்திர சம்பத்தோடு அளவற்றகாலம்

வாழ்ந்திருந்து மறுமையில் ஜன்மசாபல்லிய மாகிய மோட்ச சாம்ப்ராச்சியத் தினை யடைவார்கள்.

இப்பால், விநாயகமூர்த்தி மயூரேசராய்த் திருவவதாரங் கொண்டருளிய காட்சியைத் தரிசிக்க வருவான்போலச் சூரியன் தனது தேரினைச் செலுத்திக் கொண்டு கீழ்க்கடலி லுதயமாயினன். உடனே முன்னைபோலக் கணித்தற் கரிய சேனைகளோடு கமலாசுரன் யுத்தகளத்திற்கு வந்தனன். அவன் வரவை மயூரேசர் தெரிந்துகொண்டு தேவர் முனிவர் முதலாயினோர்க்குச் சுகத்தைக் கொடுக்குமாறுங், கமலாசுர னுடைய மதத்தைப் போக்கி முத்தி கொடுக்குமா றுந் திருவுளங்கொண்டு தமது மயில்வாகனத்தோடு போர்க்களத்திற் கெழுந்த ருளினர். அச்சமயத்தில் புத்திதேவியார் விநாயகனைப் பணிந்து சுவாமீ! இச் சூரியுதயமானது கண்ணடியினின்று உருளுமுன்னம் அடியேன் சென்று மாற்ற னுடைய சேனைகளையெல்லா முருட்டி வெற்றிபெற்று வருவேன். தேவரீர் அடி யாள்மீது கிருபைபுரிந்து விடைகொடுத்தருள வேண்டுமென்று பிரார்த்தித்த னர். அதற்கு மயூரேச ரிசைந்து அத் தேவிக்கு நால்வகைப் படைகளுஞ் சகல சித்திகளு முண்டாகத்தக்க வல்லபத்தை யளித்து யுத்தத்திற்குச் செல்லுமாறு விடைகொடுத்து அவ் வாறிய சுத்தா ஆசிரமத்திற்குனே முனிவர் முதலிய யாவரும் பணிந்து போற்றுமாறு வீற்றிருந்தனர். இப்பால் புத்தி தேவியார் தமது பாங்கியரோடு விமானத்தின்மே லாரோகணித்துச் சகல சேனைகளுங் கடல்போலப் புடை சூழ்ந்து வரவும், பேரிகை முதலிய வாச்சியங்கள் மேக கர்ச்சனையைப் போல முழங்கவும், கொடி குடை முதலிய சின்னங்கள் சுற் றுப்புறங்களினும் நெருங்கவுமாக வெற்றிவென்ற யுத்தகளத்தில் வந்து நின்றனர். அவர் வரவைக்கண்ட தூதர்கள் முன்னதாயோடிக் கமலாசுரனைப் பணிந் தெழுந்து, ஆண்டவனே! இத்தினம் மல்லாலனுடைய பத்தினி யுத்தஞ்செய்ய வந்திருக்கின்றனள்; அவளைப் பெண் பிள்ளை யென்று தேவரீர் நினைக்க வேண் டாம்; அவள் சகல லோகங்களையும் ஆக்கவும் அழிக்கவும் வல்லவளென்று சொன்னார்கள். அதைக் கேட்டதுங் கமலாசுரன் விரைந்து வந்து புத்தி தேவி யாருடைய சேனைகளது மாண்பினையும், அவரது வீர பராக்கிரமத்தினையும், எங்குங் கண்டறியாத அவரது வனப்பினையும் பார்த்து மிக்க மகிழ்ச்சி யடைந் தவனாகித் தனது சேனைகளையெல்லாம் அணிவகுத்து யுத்தஞ் செய்ய விட்ட னன். இப்பால் புத்தி தேவியார் கமலாசுரனைச் சூழ்ந்திருக்கின்ற வீராதிவீரர் களுடைய ஆண்மைகளை நோக்கி அச்சமயத்தில் அண்ட கோடிகளையும் அழிக் கத்தக்க பராக்கிரமத்தில் மிகுந்தவர்களாயும் சத்துருக்கள் கண்டு நடுங்கும் படியான கோரரூபத்தை யுடையவர்களாயு மிருக்கின்ற அளவற்ற வீரர்களை யுண்டாக்கி யுத்தத்திற்கு விடுத்தனர். அவ்வாறே அவ்வீரர்கள் யுத்தத்திற்குச் சென்றபோது கமலாசுரனுடைய சேனைகளெல்லாஞ் சகல வாயுதங்களோடும் வந்திருப்பதைக் கண்டு நாமும் ஆயுதந் தரிக்க வேண்டுமல்லவாவென்று சொ ல்லித் தங்கடங்கள் சரீரங்களி லுள்ள உறுப்புகளைத்தானே ஆயுதங்களாகக்

கொண்டு யுத்தஞ் செய்யத் தொடங்கினார்கள். அப்போது கமலாசுரனுடைய சேனைகளுள் அனேக பர்வதங்கள் மீது அனேக பர்வத ராசர்கள் வருவது போல சில அவுண வீரர்கள் அளவற்ற தேர்களினும் யானைகளினும் ஏறி வந்தெதிர்த்தார்கள். அனேக சமுத்திரங்களின் மீது அனேக வடவா முகாக்கினி வருவது போலச் சில அவுண வீரர்கள் அளவற்ற குதிரைகளின் மீதேறி வந்து அனேக ஆலகால விடங்கள் அனேக ரூபங் கொண்டு வருவது போலச் சில அவுணவீரர்கள் அளவற்ற படைகளோடும் வந்தெதிர்த்தார்கள். இவ்வாறுசென்ற அவுண வீரர்களைப் புத்திதேவி படைத்தருளிய பூத வீரர்கள் தங்கள் தங்கள் முடிகளினாலும், அனலைச்சொரிகின்ற விழிகளினாலும், கைப்பிடிகளினாலும், நகங்களினாலும், நீண்ட பற்களினாலும், கால்களினாலும், தொடைகளினாலும், மார்புகளினாலும், புசங்களினாலும், மற்றுமுள்ள அவயவங்களினாலுந் தாக்கிப் பகைவர்கள் விடுகின்ற பாணங்கள் தங்கள் சரீரத்தில் வந்து தைக்கு முன்னமே அவைகளைக் கைகளினாற் பிடித்துச் சிலர் அப் பகைவர்கள் மீதே விடுத்தும், சிலர் நகையின்கண் ணெதிர்த்தும், சிலர் வாயிலிட்டு மென்றும், சிலர் ஆகாரஞ் செய்தும், ஆனந்தக் கூத்தாடியும், சிலர்யானைகளைப்பிடித்து யானைகள் மீதே தாக்கி அவைகள் மத்தகங்களைப் பிளந்தும், சிலர்தேர்களைத் தாக்கித்தேர்கள் மீதே தாக்கி அவைகளை முறித்தும், சிலர் குதிரைகளை யெடுத்துக் குதிரைகள் மீதே தாக்கி அவைகளைக் கொன்றும், சிலர் பதாதிவீரர்களை வாரிப்பதாதி வீரர்கள் மீதே தாக்கி அவர்களை வதைத்தும், சிலர் எதிர்த்து வந்த அவுணர்களை வாரி ஆகாயத்தி லெறிந்தும், சிலர் தரையிலே மோதிக் கொன்றும், சிலர் கால்களினால் மிதித்துத் தேய்த்தும், சிலர் தலைகளைத் திருகிக் கோத்து மாலை மாலையாகத் தரித்தும், சிலர் உதிர மொழுகும் படியாகப் பிழிந்தும், சிலர் ஒரு கைத்தால் யானைகள் பிளிறும்படியாகப் புடைத்தும், மற்றொருகரத்தாற் கொம்புகளைப் பிடுங்கி எதிர்த்தவர்களைக் குத்தியும், யுத்தஞ் செய்கின்ற போது கமலாசுரனுடைய சேனைகட்குஞ் சேனைத் தலைவர்கட்குங் கோபமுண்டாகி கொடையிடிபோலக் கர்ச்சித்து எழுப்பு-வாள்-கதை-சிலை முதலிய ஆயுதங்களை ஒன்றனந்தமாகவீசி ஓர் கொடிப்பொழுதில் புத்திதேவியினுடைய சேனைகளை யெல்லாஞ் சின்னபின்னப்பட வாட்டினார்கள்.

இவ்வாறு இருதிறப் படைகளுங் கலந்து போர்செய்தலினால் அளவற்ற பிணங்கள் மலைமலையாகக் குவிந்தன. அவைகளி னின்றும் பெருகிய உதிரமானது வெள்ளமா யோடிக் கடலிற் பாய்ந்தது. அச் சமயத்தில் பூதசேனைகள் அவுணசேனைகட் கஞ்சி முறிந்து ஓடிப்போக, அதைப் புத்திதேவியார் கண்டு விழிகள் கொவ்வைக் கனியை யொத்துச் சிவப்பெய்தக் கோபித்தனர். அக் கோபத்தி னின்றும் ஓர்வீரன் ஆகாயத்தை முட்டத்தக்க உயரமும், பர்வதங்கட் கிணையான புசபல பராக்கிரமமும், உலகங்களை யெல்லாம் கணக் கொள்ளவல்ல கோபமு முடையவனும் அண்ட ரண்டங்களையும் பொடிபடுத்த வல்ல பல ஆயுதங்களோடும் உற்பவித்து புத்திதேவியி னுடைய திருவடிக் கமலங்

களைப் பணிந் தெழுந்து அன்னையே! அடியேனுடைய தந்தை யார்? அவர் எங்ஙன மிருக்கின்றனர். அதனை அடியேற்குத் திருவாய் மலர்ந்தருள வேண்டு மென்று கேட்டுக் கொண்டனன். அதற்குப் புத்திதேவியார் மகிழ்ந்து மைந்தனே! இதற்குச் சமீபத்தில் அளவற்ற முனிபுங்கவர்கள் வாசஞ் செய்கின்ற சுந்தர ஆசிரம மென்றொரு ஆசிரம மிருக்கின்றது; அவ் வாசிரமத்தில் உனது தந்தை தேவர்களும் முனிவர்களும் பணிசெய்துவரக் கீழ்த்திசையில் ஓர்பெரிய மயிலின்மீது எழுந்தருளி யிருக்கின்றனர். அவர் பத்துகரங்களையும், அக் கரங்கள் தோறும் ஆயுதங்களையுந் தரித்திருக்கின்றனர்; அவரது வலப்பக்கத்தில் சகல சத்திகளையும் படைக்கவல்ல சித்திதேவி வீற்றிருக்கின்றனள். என்று திருவாய் மலர்ந்தருள, உடனே அவ் வீரன் சுந்தர ஆசிரமத்தை யடைந்து தனது தந்தையினுடைய திருவடிகளில் அடியற்ற மரம்போலச் சாஷ்டாங்கமாக விழுந்து எழாதிருந்தனன். அவன்மீது மயூரேசர் தமது அருட்பார்வையைப் பரப்பித் தம்மைச் சூழ்ந்திருக்கின்ற முனிபுங்கவர்கட்கு இதனைத் தெரிவிப்ப தாயினர்; ஓ தவசீலர்களே! இவன் நமக்குப் புத்திரனானவன், இவனால் உங்கட்கு எல்லா இலாபங்களுங் கிடைக்கு மாதலால் இவனுக்கு எந்தும் எக்காலத்தும் இலாபனென்னும் பெயர் வழங்கக் கடவதென்று திருவாய் மலர்ந்தனர். உடனே சகலமுனிவர்களும் அவ்வீரனை இலாபனென்று துதித்துப்பணிந்தார்கள். பின்னர்மயூரேசரானவர்தமதுதிருவடிகளில் வீழ்ந்திருக்கின்ற குமாரனைத்தழுவி எடுத்து, யுத்தத்திற்குப் போகும்படி கடாட்சித்தனர். அக் கடாட்சத்தைஇலாபன்சிரமேற்கொண்டு சமர்க்களத்தைநோக்கிச்சென்றனன். அவன் சென்ற ஊக்கத்திற்கு மயூரேசர் மன மகிழ்ந்து, இவனது பராக்கிரமத்தினைக் காண்போ மென்று தாமும் அவன் பின்னாகவே சென்றனர். அப்போது ஐம்பத்தாறாயிரம் படைத்தலைவர்கள் புடைசூழ்ந்துவரும்படியாக அளவற்ற சேனா சமுத்திரங்களின் மத்தியில் ஜய வுற்சாகத்துடன் வருகின்ற இலாபனைக் கமலாசுரன் கண்டு, ஓ பிள்ளாய்! நீயேன் வீணிற் பிராணனைக் கொடுக்க இங்கு வந்தனை? உன்னை இப்போதே விட்டுவிடுகிறேன்; நீ கொண்டிருக்கின்ற அற்புத்தியைவிடுத்து வந்தவிடத்திற் போய்ச் சேரக்கடவையென்று சொல்லினன். அவன் அவ்வார்த்தையைச் சொல்லி முடிக்குமுன் இலாபனானவன் அவ் வசுரனுடைய சேனைகளிற் புகுந்து, புருவம் நெற்றியிலேறக் கோபித்து, அதிக வேகமாக வில்லை வளைத்து, அளவற்ற பாணங்களைச் சுழன்று சுழன்று ஒன்றனந்தமாகச் சொரிந்து ஆர்ப்பரித்தனன். அவன்விட்ட பாணங்களினாலே அநேக இரதங்களுங், கஜங்களுந், துரகங்களும், பதாதிகளும் முறிந்து மடிந்து சிதைந்து மாய்ந்தன. அநேக வீரர்கள் கரம்-சிரம்-புயம் - மார்பு முதலியவைகள் நசித்து குடர்களும் நிணங்களும் பீறிடும்படியாக வீழ்ந்தார்கள். அவுண வீரர்கள் விடுகின்ற பாணங்களை, லாபன் விடுகின்ற பாணங்கள் தடுப்பதினால் சிலது முறிந்தும், பூமியில் வீழ்ந்தும், சிலது அப் பூமியைப் பிளந்து கொண்டு நாகலோகத்திற் பாய்ந்தும், சிலது திக்காலொன்றோடி யொளித்துப் போயின.

பின்னுந் தேவர்களெல்லாங்கண்டு சந்தோஷ மடையும்படியாக இலாபன் விடு
கின்ற பாணங்கள் அவுண வீரர்களுடைய தலைகள்-புசங்கள்-கைகள்-கால்கள்
முதலானவைகளைத் துண்டந் துண்டமாக அறுத்து மேருமுதலிய மலைகளி
லுஞ் சமுத்திரங் களிலுஞ் சூரியலோகஞ் சந்திரலோக முதலிய உலகங்களி
லும் போய் விழும்படியாக எறிவதன்றி, அவ் வீரர்களுடைய மனைவியருந் தத்
தங் கணவர்களோடு அரம்பை மாதர்களாகச் சென்று வசிக்கும்படியாக அவ்
வவர்கள் வீட்டில் அவ்வவர்களுடைய பெயர்களை எழுதியிருக்கின்ற முத்திரை
மோதிரங்களோடு கரங்களையும், தலைகளையும் கொண்டுபோய் வீசின.

இவ்வாறு விநாயக மூர்த்தி குமாரனால் விடுகின்ற பாணமானது அளவற்
ற அவுணர்களைச் சின்னபின்னப்பட வாட்டி,பிணம்-தசை-மூளை-குடர் முதலா
னவைகளை இடைவிடாது சொரிகின்றமையால், மலைகளி லிருக்கின்ற அலகை-
புலி-சிங்கம்-யாளி முதலியவைகளும்,வனங்களி லிருக்கிற நாய்-நரி-கழுகு-காக்
கை முதலியவைகளும் அச் சமர்க்களத்தைச் சூழ்ந்து விருந்துண்ண வந்தன.
அப்போது அவுண சேனைகளில் அளவற்ற பேர்கள் மாய்ந்தும், அளவற்றபேர்
கள் ஓடிப்பதுங்கியும் ரணக்களத்தில் ஒருவருமில்லா திருப்பதைக் கமலாசுரன்
கண்டு, வடவாமுகாக்கினியைப் போலக் கொதித்துப், புத்திதேவியா ருடைய
குமாரனை எதிர்க்க வந்தான். அவனை அக் குமாரன் பார்த்துக் குறுநக நகை
த்து எனது பராக்கிரம முழுவதும் நீ தெரிந்துகொண்டனை யில்லை. உன்னை
வலியனென் றெண்ணி உன்னோ டெதிர்க்காது விட்டிருக்கின்றே னென்று
நினைக்க வேண்டாம். எனது தந்தையின் கரத்தால் நீ மாளவேண்டுவதைக்
கருதி உன்னை மீதியாய் விட்டுவைத்தேனே யன்றி வேறில்லை. இன்றோ நாளை
யோ அவரது தெய்வப் படையால் சரீரமாயப் போகின்றது. அதற்குமுன் என்
னோடு யுத்தஞ் செய்வதற்கு உனக்கு வலியுண்டாயின் வந்து யுத்தஞ்செய் யென்
று சொல்லினன். அதைக் கமலாசுரன் கேட்டு இவனை எந்த அஸ்திரசஸ்திரங்
களினாலும் வெல்லவுங் கொல்லவும் அரிதென்று நினைத்து மோகனாஸ்திரத்
தை யெடுத்து வில்லிற் பூட்டி. மந்திர பூர்வகமாகப் பிரயோகித்தான். அது
வெளிப்பட்டவுடன் இலாபன் ஒருவனைத்தவிர ஏனைய படைவீரர்களை யெல்
லாம் புகையைப்போலப் பரவி அறிவையழித்துச் சோர்வுபெறச் செய்ய, அத
னால் ஆலகாலம் வெளிப்பட்ட காலத்தில் சகல பிராணிகளும் மெய்மறந்து
வாடினதற் கொப்பாகவும், யுகாந்தமுடிவில் ஆன்மகோடிக ளெல்லாம் மகா
சுழுத்தியி லழுந்தி நித்திரை செய்வதற் கொப்பவும், யாவரும் விஷப்பரிசம்
பட்டுச் சோர்பவரைப் போல விழிகள் சொருகவிட்டு, மதிமருண்டு பிரேதங்
களை யொப்பக் கிடந்தார்கள். அப்போது விநாயக மூர்த்தி தமது குமார
னுடைய அன்பைச் சோதிக்க வேண்டி கமலாசுரன் விட்ட மோகனாஸ்திரத்தி
னால் தாமும் உணர்ச்சி யற்றவரைப்போல ஓர் திருவிளையாடல் கொண்டு நித்
திரை செய்வதாயினர். அதை இலாபன் சிறிதுமறியாதவனாய்க் கமலாசுரனோடு

யுத்தமுகத்திலேயே யிருந்தனன். அச் சமயத்தில் கமலாசுர னனவன் தான்
விடுத்த மோகனாஸ்திரத்தினால் இலாபனுடைய பெருஞ் சேனைகளனைத்து
மாய்ந்தும் அவ் வொருவன் மாத்திரம் அவ் வஸ்திரத்திற் கழியாதிருப்பதைக்
கண்டு, ஆச்சரியமாகி இப்போது இவன்தனியே இருப்பதினால் இவனோடு யுத்
தஞ் செய்து வெல்வதற்கு இதுதான் தக்கவேளையென்று தனக்குள் நிச்சயித்து
ஏகமுகத்தில் அளவற்ற பாணங்களைப் பிரயோகித்தான். அவையனைத்தையும்
இலாபன் தனது பாணங்களா லறுத்தெறிந்து அவ் வவுணனுடைய மார்பிலுந்
தோளிலுந், தொடையிலுங், காலிலும் அநேக பாணங்களைக் குறிபார்த்துப் பிர
யோகித்தனன். இவ்வாறு அவ் விரண்டு வீரர்களும் ஒருவருக் கொருவர் பின்
கொடாமல் வேல்-தோமரம்-பிண்டி-பாலம் முதலாகிய ஆயுதங்களைவிடுவதும்,
அவைகள் தம்மேல் வராதபடி தடுப்பது மாகிய அளவற்ற சமர்களை ஓயாமற்
செய்து, பின்னர் ஆகாயமார்க்கமாகச் சென்று சமராடியும், பாதல லோகத்
திற் சென்று சமராடியும், சமுத்திரங்களிற்பாய்ந்து சமராடியும், அட்டதிசை
களிலுஞ் சென்று சமராடியும், தங்கள் தங்கள் பராக்கிரமங்களைக் கூறிச் சம
ராடியும், தேவதாஸ்திரங்களை விடுத்தும் சமராடியும் இப்படி அனந்தவிதமாக
ஆயுமாள் வரையில் இரவும் பகலும் ஓயாமல் யுத்தஞ் செய்தனர். அப்போது
கமலாசுரன் மாத்திரங் கைகள்நொந்துங், கால்கள் தடுமாறியுஞ், சரீரமுழு
வதும் சோர்ந்தும் இனி இவ்விடத்தைவிட்டு நீங்கி இதுபோது யமனை யுத்தத்
திற்கு வரவேண்டுமென்று யோசித் துடனே புறங்கொடுத்து ஒளித்துக்கொண்
டனன்.

இப்பால் இலாபனனவன்,புறங்கொடுத்து ஒளித்துப்போன புல்லியன் மீட்
டும் இச் சமர்க்களத்து வருவானாயின் அவனுடைய வீரத்தையும், உயிரையும்,
வாங்குவோமென்றெண்ணிச் சமர்க்களத்தைவிட்டுநீங்கி, முன்பு மோகனாஸ்திர
த்தினாலே உறங்கி வீழ்ந்து கிடக்கின்ற தனது சேனைகளோடுங்கூட மற்றொரு
பக்கத்தில் தனது தந்தையாகிய விநாயகமூர்த்தியும் முனிவர்களுடனே உறங்கி
யிருக்கின்றதைக் கண்டு ஆ, ஆ! இதென்ன ஆச்சரியம்? எல்லா வுயிர்கட்கும்
மயக்கத்தை நீக்கி மதியை யளிக்கத்தக்க உலகநாயகரும் மற்றையர்களைப்
போல அவுணாதகன் விட்ட மோகனாஸ்திரத்தினால் மயங்கி வீழ்ந்துகிடக்
கின்றனரோ வென்று யோசித்து, ஆயினும் இதற்கு மருந்து நம்மிடத்தி லிருப்
பதால் வருந்தவேண்டுவ தில்லையென்று மீட்டும் விருந்துகண்டவன்போல
மனந் தேறி சலத்தை யள்ளி விநாயக மூர்த்தியினுடைய திருநாமத்தை நூற்
றெட்டு உரு செபித்து உறங்கிக் கிடக்கின்றவர்களின் மீது தெளித்து அம்மகா
மந்திரத்தை யாவர் செவிகளினும் விழும்படிச் சொல்லினன். இவ் விரண்டு
உபாயத்தால் விநாயகமூர்த்தி தவிர, ஏனைய முனிவர்களும் வீரர்களும் உறங்கி
விழித்தவர்போல வெழுந்தார்கள். உடனே யாவரையும் மயக்குவித்த மோக
னாஸ்திரமும் வலிகுன்றி ஓடிப்போயது. இதனை இலாபன் கண்டவுடனும் ஆச்
சரியங் கொண்டு அம்முனிவர்களை நோக்கிச் சொல்லுவான்: தபோதனர்களே!

மது பெருமான் உறங்கி யிருப்பதற்குக் காரணம் மோகனாஸ்திரத்தினாலன்றென்னுவோ மெனில், அந்த அஸ்திரம் நசிந்து ஓடிப்போயும் இன்னும் சுவாமிகள் எனது மனஞ் சந்தோஷிக்கும் படியாக விழிக்க வில்லை. ஆதலால் இம் மோகம் அவுணன் விட்ட அஸ்திரத்தினால் வந்ததன்று. ஏனையோரைப் போல சுபாவத்தில் அவருக்கு மோகமுண்டோ வெனில் சிறிது மில்லை. ஏதோ என் விடத்தில் குற்ற மிருப்பதால் சுவாமிகள் இப்படி யிருக்கின்றனர். மேலும் அம் மோகனாஸ்திரமானது என்னையே நெருங்குதற்கு அஞ்சுமாயின், என்னை யீன்ற தா[illegible] நிதியையுஞ் சேரவல்லதோ? தமக்குத்தாமே அவ்வஸ்திரத்தினால் மோகமுற்றவரைப்போல இந்த ஆறுநாள் வரையில் ஒரே நிலையாக நித்திரை செய்து கொண்டிருந்தால் அதனை நாமென்னென்று சொல்லுவோம். அவரது கடைக்கண் பார்வையி லுண்டான கிருபையைக் கொண்டு யான் அவுணர் கோன் விட்ட மோகனாஸ்திரத்தை அதஞ் செய்தேன். பின்னர் அப்பாதகனை யும் பின்னிட்டோடப் பண்ணினேன். இதல்லாமல் சுவாமிகளுடைய திருநாமங்களி லொன்றினால் உங்களையும் நமது சேனைகளையும் பற்றியிருந்த மோகங்களைப் பஞ்சு பஞ்சாகப் பறக்கச் செய்தேன். இப்படிக்கெல்லாம் யான்செய்திருக்கச் சகல லோகங்களையும் ஈன்றளித் தழிக்க வல்ல எனது தந்தை [illegible]னைப் போல விருப்பது ஓர் திருவிளையாட்டே யன்றி வேறல்ல. அதையும் உங்கட்குத் தெரியச் செய்கின்றேன் பார்மின்களென்று ஒருபாயத்தினை சிந்தித்து, தனது சரீரத்தை மாய்க்கத் துணிந்து அங்கிருந்த வீரர்கட்கு அக்கினியை வளர்க்கும்படி கட்டளை யிட்டான். அவர்களும் அவ்வாறே வளர்த்தினார்கள்.

பின்னர் இலாபனானவன் தனது தந்தையாகிய விநாயக மூர்த்தியைத் தியானித்து, அவரது திருநாமத்தை அனந்தமுறை உச்சரித்து, அவ்வக்கினியை மும்முறை வலம் வந்து அதிற்பாய நெருங்கினன். அப்போது விசித்திரமான உறக்கத்தினைக் கொண்டிருந்த விநாயக மூர்த்தியானவர் அவ் வஞ்சகத்தை விடுத்துத் தமது புத்திரனுடைய பத்திக்கு மனமகிழ்ந்து அக்கினியில் விழாதே யென்று கையைப்பிடித்துத் தமது மலர்ந்த திருமுகத்தோடும் இலாபனைப்பார்த்து, மைந்தனே! உனது மனத்தினைச் சோதிக்கவேண்டி யாமிவ்வா றிருந்தனம். இனி உனக்கு வேண்டிய வரங்களைக் கேளென்று திருவாய் மலர்ந்தனர். அதைக் கேட்டவு மிலாபன் ஆனந்த பரவசனாகி பலமுறை பணிந்தெழுந்து, ஐயனே! தேவரீரை அடியேன் மனத்தினாலுங் கண்ணினாலுஞ் சதாகாலமும் தரிசித்துக் கொண்டிருக்கத் தக்க வரத்தைக் கிருபை செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தான். அவ்வாறே சுவாமி கிருபைசெய்து மற்றைச்சேனைத் தலைவர்கட்குந் தமது திருவருட் பார்வை காட்டி, அவ்வவர்கட்குப் பல வரங்களையுங் கொடுத்தருளினர். உடனே ஆகாயத்தில் பஞ்ச வாத்தியங்களும் முழங்கின. தேவர்கள் பூமழை பொழிந்தார்கள் எங்கும் மந்த மாருதம் வீசியது. [illegible] சுவாமியைப் பலமுறை கொண்டாடினார்கள்.

விநாயகப் பெருமானுடைய செயலிவ்வாறாக, முன்னர் இலாபனோடு யுத்தஞ் செய்து புறங்காட்டியோடி ஒளித்துக் கொண்ட கமலாசுரனென்பவன், பின்னர் தனது வீரர்களோடு நால்வகை யுணவுகளையு முண்டு, தாகசாந்தி செய்து, சரீர வருத்தம் நீங்கித், தனது சதுரங்க சேனைகளையும் பூமிநெளியும்படியாகக் கூட்டிக் கொண்டு மீட்டும் யுத்தகளத்திற்கு வந்தனன். உடனே கரை புரண்டு வருகின்ற அவ்வவுண சேனைகளாகிய கடலைநீருக்கும்படி கதித்தெழுந்து வந்த வடவா முகாக்கினியைப் போல விநாயக மூர்த்தி யானவர் தும்பைமாலை சூடிக்கொண்டு மரகத மலையிற் பூத்த மாணிக்கக் குன்றுபோலப் பர்வதாகிருதியாய்ப் பார்த்திருக்கின்ற நீலமயிலின்மீ தாரோகணித்து, அம்மலையினுதித்த சந்திரனைப் போலச் சிலர் வெண்டாளக் குடை பிடிக்கவும், அம்மலையினின்றும் பாய்கின்ற அருவியைப் போலச் சிலர் வெண்சாமரங்களை வீசவும், அவ்வருவியி னொலியைப்போலச் சிலர் பலவிருதுகளையு முழக்கவுமாக இரணபேரி, சயபேரி, வெற்றிச் சங்கம் முதலிய வாத்தியங்களோடு, அளவற்ற சேனாசமுத்திரங்கள் சூழ்ந்துவர யுத்தகளத்தி லெழுந்தருளினர். அக் காட்சியைக் கமலாசுரன் கண்டு வடவா முகாக்கினியைப் போலவும் ஆலகால விஷத்துக் கொப்பாகவுஞ் சீறி, கறகறெனப் பற்களைக் கடித்து, அனலெழ நகைத்து ஓ குருவிமேல் வந்த காளாய்! அண்ட கடாகங்களையும் பிளக்கத்தக்க புசபல பராக்கிரமத்தினையுடைய என்னோடு பறவைமேலேறியா யுத்தஞ் செய்து செயிக்கப் போகின்றனை? முன்பு யுத்தஞ் செய்தவர்களை யெல்லாம் ஒரு மோகனாஸ்திரத்தை விட்டு அடக்கிக் கட்டி வீழ்த்தினேன். அளவற்ற பேரைச் சின்னபின்னப்பட வாட்டினேன். உன்னையும் யானொருவனே எனது கையிலிருக்கின்ற பாணத்தினாற் பிளப்பேன். அல்லது தேவர்களெல்லாங் கண்டு சோரும்படியாக நீறாக்கி விடுவேன். நீ இதுகாறும் எனது சாமர்த்தியத்தை யறிந்தனையில்லைபோற் காணுகின்றது. உனக்கு ஊக்க முண்டாயின் விரைவில் என்னோடு யுத்தஞ் செய்ய வருவா யென்றனன். இவ்வாறு மதங்கொண்டு பேசுகின்ற கமலாசுரனை விநாயக மூர்த்தி கண்டு அடா மூட சிரோமணி! நாம் தேவர்களையும் முனிவர்களையுங் காக்கு நிமித்தம் ஓர் திருவிளை யாடலாக அவதாரஞ் செய்த காரியங்களை நீ சிறிதும் அறிந்ததா யில்லை. முன்னர் உன்னைப்போலிருந்த அனந்தந் துட்டர்களை சங்கரித் திருக்கின்றனம். மேலும் யுகங்கள் தோறும் வக்கிர துண்ட னென்றும், சுமுக னென்றும், கஜானன னென்றும், விக்கின ராஜனென்றும் இவை முதலிய அளவற்ற நாமங்களோடு அநேகஅவதாரஞ் செய்திருக்கின்றோம்; அப்படிஅவதாரங்கள் செய்ததுபோலவேஇப்போதும் உன்னைச் சங்கரிப்பதற்கு மயூரேசராக அவதாரஞ் செய்தனம். நீ முதல் நாட்செய்த யுத்தத்திலேயே பின்னிட்டுப் போயினை; இத்தினம் நமது புத்திரனால் அடிபட்டு ஓடிப்போய் மீட்டும் வந்தாய்; இப்படிப் பட்ட அற்பனாகிய உனக்கு வாயேன்? வீரமேன்? இன்னமும் நமது நிர்வாகத்தைப் பார்க்கக் கடவை யென்று சொல்லிச் சீறித் தமது மயில் வாகனத்தோடும் போய் அவ

ளைத் தண்டாயுதத்தினு லடித்தனர். அவன் தனது குதிரையின்மீ திருந்த வண்ணமே இருப்புலக்கையைக் கொண்டு சுவாமியினது மார்பிற் றாக்கினான். உடனே அவ்விருப்புலக்கையானது பொடி பொடியாய் நறுங்கிப் போயது. அதை மந்தர கிரியைப் போன்ற புயத்தினை யுடைய கமலாசுரன் கண்டு அதிசயித்தனன். பின்னர் விநாயகமூர்த்தி, அவன் மார்பைப் பிளக்கும்படி தோமரத்தை யெடுத்து விட்டனர். அதை அவுணன் தனது கேடகத்தினாலும் படைகளினாலுந் தடுத்தனன். உடனே விநாயக மூர்த்தி அவன்மீது சூலாயுதத்தை விட்டனர். அவனும் சுவாமிபேரில் சூலாயுதத்தை விட்டான். இவ்வாறு இருவரும் பற்பல ஆயுதங்களைக் கொண்டு நெடுநேரம் யுத்தஞ் செய்து கொண்டிருக்கையில், விநாயக மூர்த்தியானவர் இமைக்குமுன் எண்ணற்ற பாணங்களை யெடுத்து கமலாசுரனுடைய சேனைகளின்மீது சோனை மழைபோற் சொரிந்தனர். அத்திவ்விய பாணங்கள் ஒன்றனந்தமாகப் பெருகி அக்கினியைக் கக்கிக்கொண்டு அவன் சேனைகளை யெல்லாஞ் சின்னாபின்னப்பட வாட்டின; அப்போது கமலாசுரன் தமது சேனைகளனைத்து மடிந்துபோய் விட்டதைப் பார்த்து மனம் பொறாதவனாகி, யானைக் கூட்டத்துள் சிங்கவேறு புகுந்தாற் போல விநாயக மூர்த்தியினுடைய சேனைகளிற் புகுந்து, தனது வாளாயுதத்தை நாற்புறத்தும் வீர்வீரென்று வீசியும், கதை-தடி-வளை-மழு முதலிய படைகளை யெறிந்தும், நீண்ட சூலாயுதத்தை விடுத்தும், அநேகரைப் படுத்தினன். அப்போது விநாயக மூர்த்தியினுடைய சேனைகளிற் சிலர் தலைகள் பிளந்தும், சிலர் கைகள் முறிந்தும், சிலர் தொடைகள் மடிந்தும், சிலர் இடைகளொடிந்தும், சிலர் கால்களறுந்தும், சிலர் குடல்கள் சரிந்தும், சிலர் மூளைகள் சிதறியும், சிலர் பற்களுதிர்ந்தும், சிலர் கவந்தங்களாடியும், சிலர் கவந்தங்கள் வோடியும், இவ்வாறு ரணக்கள மெங்கும் விழுந்தும், இறந்தும், களைத்தும், வருந்தினர். அப்போது உதிரமானது பிரவாகமாயோடும் நதியைப் போல இரைச்சலிட்டு பெருகியது. அச்சமர்க்கள மெங்குங் கழுகுகள் - கூளிகள் நாய்கள்-நரிகள்-பேய்கள் முதலிய செந்துக்கள் கூட்டங்கூட்டமாய் வந்து பிணங்களைப் பிடுங்கித் தின்னுவதுங் கூவுவதும் ஊளையிடுவதுங் கூத்தாடுவதுமாயின.

இவ்வாறு கமலாசுரன் அகோரமான யுத்தத்தினை விளைத்து வருவதை இறைவன் பார்த்து, மனஞ்சகியாதவனாய், மற்றொரு சிங்கவேறு சீறிப்பாய்வது போல வெழுந்து தனது ஒரே கரத்தால் கமலாசுரனுடைய குதிரையை முகத்திற் குத்தினன். அக்குத்தினால் அக்குதிரை விழுந்திறந்தது. இப்பால் கமலாசுரனானவன் தனது குதிரை யிறந்ததனாலும், எல்லா ஜுட்டங்களும் ஒடுங்கினவனாகி இனி என்ன செய்வோமென் றெண்ணமுற்று மாயவித்தையினாற் றனது உடலத்தை ஒருவர் கண்ணுக்குந் தோற்ற வொட்டாமல் மறைத்து ஆகாயமார்க்கத்தி லெழும்பி சுக்கிர னுபதேசித்த மந்திரங்களை உச்சரித்து மிருந்த வல்லமையோடும் அந்தரத்திலிருந்த வண்ணமே விநாயக மூர்த்தியினுடைய சேனைக

ளின்மீது விஷத்தை யொத்த தீட்சண்ய முள்ள பாணங்களைக் கோடி கோடியாகச் சொரிந்தனன். அவன் சொரிந்த பாணங்களெல்லாம் ஆகாய மெங்கும் பரவிவிழுவதினால் கார்காலத்திற் சொரிகின்ற சோனை மாரியைப்போல எங்குமிருள் மூடிக் கொண்டது. அப்போது சுவாமியினுடைய சேனைகள் பயந்தும்-இறந்தும் - உருகியும் - ஒடியும் - அல்லோல கல்லோலப் பட்டுப் போயின. அதனை எமதிறைவன் பார்த்து மிகுந்த கோபங் கொண்டு, அடா புத்திகெட்டவனே! எதிரில் நின்று. யுத்தஞ் செய்வதற்கு நிர்வாக மில்லா விட்டால் ஆகாயத்தில் மறைந்தா யுத்தஞ் செய்கிறது? இந் நிமிடத்தில் உன்னை மூன்று துண்டாக்கி வெற்றிமாலை சூடுகின்றேன் பாரென்று தமது திருக்கரத்தி லிருக்கின்ற பாசத்தை விட்டனர். அப்பாசமானது சூரியனுடைய காந்திக்கு மேலான பிரகாசத்துடனே சென்று அவ் வவுணனுடைய மந்திர வல்லமையினையும் மாயையினையு மழித்து, ஆகாயத்தில் நின்றவனைக் கட்டி கொண்டு வந்து மயில்வாகன ரூடராயிருக்கின்ற விநாயக மூர்த்திக்கெதிரே விட்டது. அப்போது சகலவல்லமையுமுடைய விநாயகக்கடவுள் கமலாசுரனைப் பார்த்து அடா துஷ்டப் பயலே! வீரத்தை யுடையோர்க்கு ஒருவேளை வலிகுன்றினாலும், அந்த யுத்தத்திலேயே தங்க ளுயிரை விடுவார்கள்; நீ அப்படி யின்றி பேடியைப்போல மறைந்து யுத்தஞ் செய்தனை? இனியேனுந் துன்பமில்லாமல் பிழைக்க வேண்டுமாயின் நம்மைச் சரணடையக் கடவை யென்று திருவாய் மலர்ந்தனர். அச்சொல் அவன்காதில் விழுவதன்முன் வடவானலத்தைப் போலக் கொதித்துத் தண்டாயுதத்தைச் சுழற்றி மயூரேசருடைய திருமார்பி லெறிந்தனன். அதை சுவாமி தமது கரத்திலிருந்த தண்டத்தினாற் றாக்கிப் பொடி செய்து, பின்னர் அதையே அப்பாதகனுடைய மார்பு பிளக்கும்படி வீசினர். உடனே அவன் மார்புபிளந்து மலையருவிபோல உதிரம் பெருகி வெளிப்பட்டுத் தாரை தாரையாய் வழிந்து பூமியெங்கணும் பாய்ந்து தேங்கியது. அப்போதவ் வுதிரத்திலிருந்து ஒவ்வொரு திவலைக்கும் அவனுக்கிணையான வீரர்கள் அளவற்றபே ருண்டாகி மலைகளைப்போல உயர்ந்த வடிவமும், மலைகளுக்குச் சரியான புசபல பராக்கிரமும் மலைகளை யொத்த வயிரத்தினையுடைய நெஞ்சும், மலைகளிற் படருங்கரிய மேகவரிசையினைப் பொருவு மார்பும், மலைகளினின்று வீழ்கின்ற வெள்ளருவிகட்குச் சமானமான தும்பை மாலைகளையும் உடையவர்களாய் வனத்தில் வசிக்கின்ற சிங்கம்-புலி-சரபம்-சார்த்தூலம் முதலிய விலங்கு பறவைகளைப்போல அநேக விதமான பாணங்களை யேந்தி மேக கர்ச்சனையைப் போல வார்ப்பரித்து, யாவருங் கடலைப்போல சுவாமியை வளைத்துக் கொண்டு வடவா முகாக்கினிக் கிணையான கோபத்தோடு அலைகளைப் போல நிரை நிரையாய் அளவற்ற பாணங்களைப் பிரயோகித்தார்கள். அவ்வற்புதத்தைத் தேவர்களும் முனிவர்களுங் கண்டு பயந்து இனி என்ன செய்வோம்; ஒரு கமலாசுரன் செய்யுந் துன்பங்களைச் சகிக்க மாட்டாமல் இருக்கின்றோமே! இப்போது அவனையொத்த அசுரர்கள் அளவற்றபே ருண்டானார்

கனே? இன்னும் உண்டாவார்கள் போலிருக்கின்றதே? ஐயோ நாம் எவ்விதத் தாற் பிழைக்கப் போகின்றோமென்று நடுநடுங்கினார்கள். பிரமன் - விஷ்டு- இந்திரன் முதலாயினோர் ஓடி மகமேரு கிரியில் ஒளித்துக் கொண்டார்கள். சிவபிரான் மாத்திரம் கமலாசுரனுடைய மாயையை யழிப்பதோ மயூரேச ருக்கு அரிதென்று முகமலர்ச்சி கொண்டிருந்தனர்.

இப்பால் விநாயக மூர்த்தி யானவர், தேவர்கள் முதலினோர் படுகின்ற கலக்கங்களைக் கண்டு, பாவமே பலவடிவங்களோடு வந்தாற் போலத் தம்மைச் சூழ்ந்து கொண்டு ஆயுதங்களைச் சொரிகின்ற அவுண வீரர்களின்மீது வாயு வேக மனோவேகத்தினும் விரைவாய்ப் போகும்படி தமது மயில்வாகனத்தை முடுக்கி யருளினர். அம் மாத்திரத்தில் அம் மயிலானது சுவாமியைத் தாங்கிய வண்ணமே கொள்ளிவட்டம் போலவும், கறங்கு மோலை போலவும், குலால சக்கரம் போலவும், சூறைக்காற்று போலவும், சுழல்வண்டு போலவும், நீர் சுழி போலவும், அட்டகுல பர்வதங்கள் வரையில் நொடிக்கு முன்னே தெள் ளியோருடைய உள்ளமே திரண்டதுபோலக் கலாவி, அனந்தமுறை வட்ட மிட்டது. அவ்வாறு வட்டமிட்டபோது அம்மயிலின் சிறகிலுண்டான காற்றி னால் சகலலோகங்களும் நடுங்கின. திக்குயானைகளனைத்தும் வீறிட்டது. மேரு முதலிய பர்வதங்களெல்லா மசைந்தன. சத்த சாகரங்களுங் கலங்கின. நாக லோகத்தின ரெல்லாம் பயப் பிராந்தி கொண்டார்கள். அவுண வீரர்களெல் லாம் உள்ளமும் ஊக்கமும் உடைந்து வருந்தினார்கள். இவ்வாறு அம்மயிலா னது வட்டமிட்டுச் செல்லுந்தோறும் அதன் மீதிருக்கின்ற எமது கர்த்தரான வர் தமது இரண்டு திருக்கரங்களினால் வில்லை வளைத்து அமோகமான பாண வருஷங்களைச் சொரிந்தும், மற்ற எட்டு திருக்கரங்களால் சூலமுதலாகிய ஆயு தங்களை விடுத்தும், அவுண வீரர்களை எல்லாம் பிளந்து பிளந்து சின்னா பின் னப்பட வாட்டினர். அவ்வவுண வீரர்களுடைய சரீரத்தில் சுவாமி விட்ட பாணங்கள் பாய்ந்து பெருகிய வுதிரங்களினின்று நல்லோர்கள் நன்னெறியிற் செலுத்தும் ஓர் பொருளானது பின்னர் எல்லைபற்றப் பலவாய் வருமென் னும் வாக்கியத்தின்படி மீட்டும் ஒவ்வொரு துளிக்கு அவர்களைப்போல அள வற்ற வீரர்களுண்டானார்கள். அவர்களையும் எமது கர்த்தர் அளவற்ற பாணங் களை விடுத்து நாசஞ் செய்ய, அவ்வாறு நாசஞ் செய்யுந்தோறும் அவ்வவர்க ளுடைய வுதிரங்களில் நின்று மேலுமேலும் எண்ணக்கூடாத வீரர்கள் உண்டாகிக் கொண்டே யிருந்தார்கள். இப்படி யுண்டாவதை இலாபன் கண்டு தனது தாயாராகிய சித்தி புத்திகளைத் தியானித்தனன். உடனே அவர்கள் தமது புத்திரனுடைய கருத்தை யறிந்து யுத்த களத்திற்குவந்து தீனரட்சகராகிய விநாயக மூர்த்தி மயில்வாகன ரூடராய் யுத்தஞ் செய்கின்ற பெருமையையுங் கமலாசுரன் பெற்றிருக்கின்ற வரத்தின் மகிமையையுங் கண்டு அதிசயித்து, அங்கியிடத்தில் ஒன்பதுகோடி பூத வீரர்களை யுண்டாக்கி அவுண வீரர்கள்மீது விட்டனர். ஒவ்வொரு அண்டங்களை ஒவ்வொரு வயிற்று

பூத வீரர்கள் அவுண வீரர்களுடைய கூட்டத்துட் புகுந்து பூமியில் விழாதபடியெடுத்து யானையானது விளாங்கனியை ல விழுங்கியும், வீழ்ந்திருக்கின்ற, உதிரங்களை யெல்லாம் , இப்படி எல்லா வீரர்களையும் வயிறாரவுண்டு ஆனந்தமாகிச் னார்கள். சிலபூதர்கள் ஆர்ப்பரித்தார்கள். சிலபூதர்கள் இன் ண்டோவெனத் தேடினார்கள். இவ்வாறு உதிரங்களினின் அவுண வீரர்களை யெல்லாம் பூத வீரர்கள் வயிறாரவுண்ட களத்தில் கமலாசுரன் தனக்கு ஏனென்பாருமின்றி ஏகனா இருந்த தெனில்: பூர்வஞ் செய்த தபோபலத்தினால் செல் ர்கள் தருமநெறியே நிற்பார்களாயின் அச் செல்வத்தோடு கள்; அந்நெறியில் நில்லாமல் அதர்ம நெறியில் நிற்பார்களா ல செல்வங்களுங் குன்றி உள்ள மழிவரென்று சொல்லும் சாட்சியாக விருந்தது.

ணவ முதலிய மும்மலங்களு மொழிந்தவன் மெய்ஞ்ஞான க்க பருவனைப்போல கமலாசுரனனவன், தனது நால் மொழிந்து தான் பெற்றிருந்த தொல்லை வரமுஞ் சமீபித் றி இதனை யோசிப்பதாயினன். நாம் இவனைக் குருவிமீ ன்று அவமதித்தோம். பின்னர் இவன் நம்மோடு அனே செய்தது மல்லாமல், நமது வரத்தையு மழித்தான். நமது ான். எங்கும் பரவி யிருக்கின்ற நமது கீர்த்தியையு மழித் இவன் மஹா பராக்கிரமசாலியாக விருக்க வேண்டும்; பி ஓடலா மென்றால் எவ்விதத்திலும் நம்மைக் கொல்லா று நினைத்து தனக்குத்தானே சிறிது தேற்றங் கொண்டு ாத்து அளவற்ற பாணங்களை ஒரே முகமாக விநாயக மூர்த் யாகித்தான். அப் பாணங்களை யெல்லாம் எமதையன் ஓர் பொடி படுத்தித் தமது சூலாயுதத்தால் அவன் கழுத்திலொரு ாரு குத்தும் இடுப்பிலொரு குத்துமாகக் குத்தினர். இம் அக் கமலாசுரன் ஆகாயத்தை யளாவிய மலைகளைப்போல வடக்கே இமயவரைச் சாரலுக்கும் தெற்கே கிருஷ்ண நதி ாகப் பெரும்புறக் கடலோசையைப் போலக் கதறி, நாய் நரி வைகட்கோர் பெரு விருந்தாக விழுந்து இறந்தான். அவ டந் தரித்த வலி பொருந்திய தலைத் துண்டமானது இராஜ ம், பேரழகினை வாய்ந்த அவன் உடல் துண்டமானது பிர ஆபாரனாதிகள் சொலிக்கின்ற அவன் அடித்துண்டமானது விழுந்தன. அவனுடைய பெருமைபொருந்திய உயிரானது னுடைய திருவடிகளில் ஐக்கியமாயது.

ஓ சவுனகாதி முனிவர்களே! சர்வ ஜீவ தயாபரராகிய விநாயக மூர்த்தி யானவர், இவனின் மிக்க பாதகன் ஒருவனும் இல்லை, என்று சகப்பிரசித்தியா யிருந்த கமலாசுரன் வழங்கிய படைகளை அருச்சனை மலராகவும், அவன் மன தினுற் கூறிய மொழிகளை மந்திரமாகவும், அவன் செய்த சமர்த்தொழிலைத் திருப்பணியாகவுங் கொண்டு அவனுக்கு முத்தியுங் கொடுத்தன ரென்றால், எம் போலியர் செய்யுங் குற்றங்களைக் குணமாகக் கொண்டு இரட்சிப்பதும் அவ ருக்கு அரிதோ?

இப்பால் பூதவீரர்க ளெல்லாம் விநாயக மூர்த்தியி னுடைய சந்நிதானத் திற்கு எதிரில் நின்று குரவைக்கூத் தாடினார்கள். அலகைக் கூட்டங்க ளெல் லாம் பல குடர்மாலைகளைச் சூடிக்கொண்டு சுவாமியின் பின்புறமாக நின்று துணங்கைக் கொட்டிக் கூத்தாடின. ஆகாயத்தில் ஐவகைத் துந்துபிகளும் முழங்கின. முனிவர்களெல்லாம் வேதபாராயணத்தோடு வந்து பணிந்தார்கள். தேவர்கள் கற்பக மலர்களைப் பொழிந்தார்கள். மூவுலகத்தாரும் சகல ஆபத்து களும் இன்றுட னொழிந்தன வென்று சந்தோஷித்தார்கள். விஷ்ணு முதலிய தேவர்கள் மிகுந்த பத்தியோடு வந்து பலமுறை பணிந்தார்கள்.

பின்னர் பிரமதேவன் தனது கமண்டல தீர்த்தத்தினாலும், பற்பல திர வியங்களினாலும் பூசித்தனன். அப்போது அவனுடைய கமண்டலஞ் சாய்ந்து அதிலுள்ள தீர்த்தமெல்லாம் ஒழுகிப்போயது. உடனே பிரமதேவன் அந்தீர்த் தத்தை யெடுத்து மீட்டும் கமண்டலத்தில் நிரப்ப முயன்றனன். அதை விநா யக மூர்த்தி தமித்து தமது திருக்கரத்தால் அத் தீர்த்தத்திற் சிறிது அள்ளிக் கமண்டலத்தில் விட்டு நிரப்பிக் கொடுத்தனர். அதற்குப் பிரமன் ஆச்சரியங் கொண்டு மிகுந்த அன்போடு பலமுறைபணிந்து துதிசெய்தனன். கமண்டலத் தில் நின்றும் பூமியில் வீழ்ந்த தீர்த்தமானது எங்கும் பெருகிப் பெரிய நதியா கச் சென்று கடலிற் பாய்ந்தது. அந் நதியில் சவுனகர் முதலிய முனிவர்க ளெல்லாம் ஸ்நானஞ்செய்து தருப்பணம் முதலானவைகளை நிறைவேற்றி, மிகுந்த பேரன்பினால் விநாயக மூர்த்தியைப் பூசித்தார்கள். பின்னர் விநாயகப் பெருமான் அவ்வவர்கள் வேண்டிய வரங்களைக் கொடுத்து அம் முனிவர்களை யுந் தேவர்களையும் பார்த்து இக்ஷேத்திரம் நமக் கிஷ்டமா யிருத்தலினாலே நாம் எக்காலத்தும் இவ்விடத்திற் பிரியாமல் வசித்திருப்போம். எல்லா நதிகளினும் இஃது மேலான மகிமையை யுடையது. இதில் ஸ்நானஞ்செய்தபேர் இம்மை யில் இராசயோகம்பெற்று மறுமையில் விஷ்ணு முதலாயினோ ருடைய பதவி களை யடைந்து முடிவில் முத்தியையு மடைவார்கள். மாபாவியினும், கொடியா யினும் இந் நதியில் ஸ்நானஞ்செய்தால் அவரும் மேலான கதியை யடைவரென்று திரு வாய்மலர்ந்தனர். அதற்குமேல் பிரமன் அந் நதியின் தீரத்தில் ஓர் ஆலயஞ் சமைத்தனன். அவ் வாலயத்தில் சகல தேவர்களும் முனிவர்களும் போற்றும் படியாக எனது கர்த்தர் மூலட்டான மூர்த்தியா யெழுந்தருளினர். அவ் வால

யத்தின் கீழ்த்திசையில் விஷ்ணுவானவர் இலக்குமியோடு வீற்றிருந்தனர். அவர் களுக் கெதிரில் ஆசிரியா தேவி வீற்றிருந்தனள், ஈசானியதிசையில் சிவபிரான் உமாதேவியோடு மெழுந்தருளினர். அவர்களுக் கெதிரில் விரசைதேவி வீற்றி ருந்தனள். மேற்குத் திசையில் மன்மதன் இரதியோடு வீற்றிருந்தனன். அவர் களுக் கெதிரில் மாற்சாலதா திசைதேவி வீற்றிருந்தனள். வடக்குத் திசையில் வராகரூபி பூமிதேவியோடு வீற்றிருந்தனன். அவர்களுக் கெதிரில் முத்திதேவி வீற்றிருந்தனள். ஆதலால், யாவரேனும் முற்கூறிய கமண்டல நதியில் முன்ன ரொருமுறை ஸ்நானஞ்செய்து அரிபிரமேந்திராதியர்க்கெல்லாம் தலைமையான மயூரேசனைத் தரிசித்து, மீட்டும் ஒருமுறை ஸ்நானஞ்செய்து கிழக்காதி திசை களி லுள்ள அவ்வா தேவர்களை முறைமைப்படி பூசித்துப் பின்னர் விமலனைப் பூசிக்க வேண்டியது முறைமையாகும். இந்த முறைமைப்படி யாவரேனும் ஒருநாள் முழுவதும் உபவாசமிருந்து நான்கு காலமும் பூசித்தால் அவர்கள் தரித்திரங்க ளொழிந்து இராச யோகத்தை யடைவார்கள், வல்லமை யில்லாத வர்க ளாயினுஞ் சத்துருக்களைச் செயிப்பார்கள். சந்தான மில்லாதவர்க ளாயின் உடனே எல்லாப் பிணிகளும் நீங்கிச் சுகமனுபவிப்பார்கள். மூடர்களாயின், பின்னர் கீர்த்தியையுந் தேஜசையும் அடைவார்கள். கடைத்தேற வேண்டினோ ருக்கு மயூரேச ரெழுந்தருளி யிருக்கின்ற அந்த தலத்திற்கு மேலாகிய தலம் மூவுலகத்திலு மில்லை, கமலாசுரனுடைய சரீரமானது மூன்று பிரிவாய்ப் பூமி யில் வீழ்ந்த காரணத்தினால் அந்தத் தலத்தைத் திரிசக்தி க்ஷேத்திர மென்று சொல்லுவார்கள், சகல ஆன்மகோடிகளும் பூசித்துக் கதியடையும்பொருட்டு அத்தலத்திற் கினியான இராஜசதனந்த நகரத்திலும், பிரவாள நகரத்திலும் விநாயக மூர்த்தி யெழுந்தருளி யிருக்கின்றனர்.

இக் கதையை யாவரேனும் பத்தியோடு கேட்பினும், எழுதினும், படிக்கி னும், படிப்போர்க்குப் பொருள் கொடுப்பினும் அவர்கள் இம்மையிற் சகல பாக்கியங்களையும் அனுபவித்து மறுமையிற் தேவர்களாய் அளவற்ற போக பாக்கியங்களை யடைந்து நெடுநாள் வாழ்ந்திருந்து அந்தியகாலத்தில் மலபாசங் களினின்று நீங்கிச் சர்வானுக்கிரக தயாபரராகிய விநாயகக் கடவுளின் திருவடி களை யடைவார்கள்.

முற்றிய

மயூரேச விநாயகர் திருவவதாரப் படலம்

முற்றிற்று.

பிந்திய

மயூரேச விநாயகர்

திருவவதாரப் படலம்.

வருமயூரேசர் திருவவதாரம் வகுத்தன மற்றுமோ ருகத்திற், கருணையங் கடவுள் சிந்துவையிருப்பக் கவுரியாந் திருவவதாரவுருவுகொண் டொருகு கலாபமாமயிலே லூர்ந்தனரத்தகு கதையுந், தெருளுற வுரைத்துங் கேட்டியாலென்று திசைமுகன் வியாதனுக் குரைப்பான்.

ஓ சவுனகாதி முனிவர்களே! விநாயக மூர்த்தி யானவர் கமலாசுரனை வெல்லுவதற்கு மயூரேசராய்த் திருவவதாரங் கொண்டு செய்தருளிய திருவிளையாடல் இது. அவ் விநாயகமூர்த்தியே சிந்துவென்னும் அசுரனை வெல்லுவதற்கு மற்றொரு யுகத்தில் உமாதேவியினிடமாக வுதித்து மயூரேசரென்னுந் திருநாமத்தினைப் பெற்று செய்தருளிய திருவிளையாட லொன்றுண்டு; அதையுஞ் சொல்லுவோங் கேட்பீர்களாக.

மைதல தேயத்திலே கண்டகநகரமென்னு மோர் பட்டண முண்டு. அப் பட்டணத்தில் திருமாலுக் கொப்பானவனும் ஏகசக்கிராதி பதியாய் நீதிசாத்திர முறைமைப்படி அரசு செலுத்திவந்த சக்கிரபாணியென்னும் ஓரரசனிருந்தான். அவன் தனது மனைவியாகிய உக்கிரை யென்பவளோடும் தர்மாபுத்தி, சாம்பன் என்னும் இரண்டு மந்திரிகளோடும் வாழ்ந்திருக்கின்ற காலையில், நெடுநாள் தனக்கு ஓர் புத்திரப்பேறில்லாமல் மிகுந்த கிலேசத்தை யடைந்து தவம், தானம், தருமம், விரதம், வேள்வி முதலானவைகளை அளவற்றனவாகச் செய்து வந்தான். பின்னர் புத்திரர்கள் பிறந்தும் பூமியில் வீழ்ந்தமாத்திரத்தில் இறந்துகொண்டே யிருந்தார்கள்.

அதனால் அரசன் முன்னிலும் அதிக கிலேசத்தை யடைந்து தனது நகரத்திலுள்ள பெரியோர்களை யழைத்துவைத்து மந்திரிகளைப் பார்த்து இதனைச் சொல்லுவ தாயினான். அமைச்சர்களே! புத்திரப்பே றில்லாதார்க்கு நற்கதி இடையாதென்று சாத்திரங்களெல்லா முரைத்தலால், மிகுந்த பத்தியினாற் பல தெய்வங்களை வழிபட்டேன். வேதாகம விதியோடு பலதானங்களைச் செய்தேன். அளவற்ற தருமங்களை அன்போடியற்றினேன். மாசற்ற வேள்விகளை மனக்களராமல் முடித்தேன். இத் தன்மையவான பல நல்லொழுக்கங்களை நிறைவேற்றிப் புத்திரர்களைப் பயக்கும் பூர்வபாவத் தொடர்பினால் அப் புத்திரர்களில்லாதவனே யாயினேன்; இனி வனத்திற்சென்று தவஞ்செய்தேனும்

83470

நற்கதியை யடையத்தக்க நெறியைச் சம்பாதித்தல் வேண்டும். ஆதலால், நீங்கள் மனதிற் கவலைகொள்ளாமல் என்னைப்போல இவ் வரசாட்சியைப் பரிபாலனஞ் செய்துவருவீர்களென்று சொல்லித் தனது பொக்கசங்கள் - சேனைகள் - நாடுகள் - நகரங்கள் முதலான யாவையும் மந்திரிகள் வசமாக்கித், தனது மனைவியோடும் புறப்படலு தாயினன். அப்போது தீர்த்தயாத்திரை யாகச் சென்ற சவுனகமுனிவர் தற்செயலாய் அவ் வரசனை நோக்கிவர, அவ் வரசன் இவரைக் கண்டவுடன் அதிக மகிழ்ச்சியோடு மெதிர்கொண் டழைத்து வந்து ஓர் சிம்மாசனத்தி லிருத்தி பூசித்து, பலமுறை பணிந்தெழுந்து கரங்களையுங் கட்டிக்கொண்டு பயபத்தியோடு எதிர்நின்றனன். அவ்வாறு நிற்பவனை சவுனக முனிவர் நோக்கி, அரசனே! நீ வனத்திற் செல்வதற்கன்றோ இச்சைகொண்டனை. அவ்வாறு செல்லவேண்டுவ தில்லை. பழையபடி உனது அரசாட்சியை நடாத்திக்கொண்டிரு; உனக்கு இனி நல்ல புத்திரனுண்டாவ னென்று சொல்லினர். அதை அரசன்கேட்டு மீட்டும் பணிந்தெழுந்து, சுவாமீ! இதுகாறும் யாங்கள் அளவற்ற சாந்திகளையுந், தவந் தானமுதலானவைகளையுஞ் செய்துவந்தும் பிறந்தபிள்ளைகள் ஒன்றேனுஞ் சீவித்திராமல் இறந்துபோய்விட்டன. அடியேங்களும் விருத்தாப்பியராயினோம்; இனி அடியேங்கள் செய்யத்தக்க கருமம் யாதேனுமிருக்கின் அதனை திருவாய் மலர்ந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனன். அதற் கம்முனிவர் அவனைப் பார்த்து, அரசனே! சதாசிவமூர்த்திக் கிடமாயிருக்கின்ற சூரியனுடைய விரதத்தை யனுட்டித்தால் உங்கட்கு உடனே சகல தீவினைகளுநீங்கி நல்லபுத்திரர்களையும் பெறுவீர்கள், அவ் விரதமனுட்டிக்கும் மார்க்கத்தினை சொல்லுவோங் கேட்பீராக. இரதசத்தமிக்கு முன்னதாக அவ் விரதத்தைத் தொடங்கி ஓர் சொர்ணகலசம் நிறுத்தி அதன்மீது ஓர் சொர்ணத்தகட்டில் சூரியனுடைய சக்கரத்தை யெழுதித் தாபித்துவைத்து, சிவந்த சந்தனம்-சிவந்த புட்பம்-சிவந்த வஸ்திரம்-சிவந்த அமுது-சிவந்த பாத்திர முதலானயாவும் சிவந்த நிறமாகச் சேகரித்துக்கொண்டு, சதாசிவமூர்த்தியைத் தியானித்து, அவருக்கு பிரீதியாகப் பூசைசெய்து பன்னிருமுறை வேறுவேறு அருக்கிய பாத்திய ஆசமனுதிகள் கொடுத்து, பன்னிருமுறை பிரதட்சணமும் நமஸ்காரமுஞ் செய்து, பன்னிரு மந்திரங்களையுஞ் செபித்து இவ்வாறு முப்பதுநாள் வரையில் ஐம்புலன்களை யடக்கி உபவாசத்துடனே யிருந்து அனுட்டித்து நித்தசுத்தரான பிராமணர்களைக்கொண்டு இலட்சம் நமஸ்காரங்கள் செய்வித்து, இலட்சம் பிராமணருக்கு அன்னம் [illegible]டுப்பது முறைமையாகும். இவ்வாறு வழுவில்லாமல் முடிக்கக் கடவையென்று சொல்லி அப் பன்னிரண்டு திருமந்திரங்களையும் உபதேசித்தனர். பின்னர் அச் சவுனக முனிவர் கூறியவனைத்தையும் அரசன் பத்தியோடுகேட்டு உட்கொண்டு, தனது மனமகிழ்ச்சியாலுண்டான பேரன்பினால் நவரத்தினங்கள், தனதானியங்கள், வஸ்திராபரணங்கள் முதலானவைகளை சொர்ண பாத்திரங்களில் நிறப்பிக்கொண்டு வந்து, அவரெதிரில் வைத்து, சுவாமீ! இவைகளைத்

தேவரீர் அங்கீகரித் தருளல் வேண்டுமென்று பணிந்து பிரார்த்தித்தான். அவையனைத்தையும் அம்முனிவர் கண்டு, அரசனே! மானுரியும் விபூதி உருத்திராக்கங்களுந் தரித்துக்கொண்டு வனத்திற் சஞ்சரிக்கின்ற பரிசுத்தராகிய யாம் இவைகளை அங்கீகரியோம். யாம் தீர்த்தயாத்திரையாக நடக்கு முன்னிலையில் உன்னைக் கண்டு செல்வோமாயதென்று நினைத்து இங்ஙனம் வந்தோமே யன்றி வேறில்லை. இனி அத் தீர்த்தயாத்திரைக்கு யாம் செல்கின்றோமென் றெழுந்து விடைகொண்டனர்.

இப்பால் அரசனும் அவன் பத்தினியும் மனக்கவலையினின்று நீங்கிப் புனிதராகி ஐம்புலன்களையு மடக்கி அம்முனிவர் கூறிய முறைப்படியே சூரியனுடைய விரதத்தை ஆரம்பித்துச் செய்து வந்தனர். ஆரம்பித்த இருபத்தொன்பது நாள் சூரிய பகவானானவர் அவ்வரசன் மலடனென்பதை யறிந்து அவன் பத்தினியாகிய உக்கிரை யென்பவள் கனவில் அவள் கணவனைப்போல வடிவங் கொண்டு வந்து அவளோடு புணர்ந்து கருப்பந் தரிக்கச் செய்து போயினர். அதை அவ்வுக்கிரை யறியாமல் தனது கணவனே வந்து புணர்ந்து போயினனென்று மனதிலெண்ணி இரவு நீங்கி விடியற்கால மானபின்பு நித்திய விதியை நிறைவேற்றிக் கொண்டு, தனது புருஷனைப் பணிந்து எதிர்நின்று சுவாமீ! காமமானது கடலைப்போலப் பெருகுமேனும் ஓர்விரதத்தைத் தொடங்கி அனுஷ்டிக்கின்றோர்கள் பெண்டிர்களுடன் கூடிச்சுகித்தால் உடனே அவ்விரதம் ஆலைவாயிற் பட்ட கரும்பினைப்போல நசிவுறுதோ வென்று சிரித்துக் கூறினள். நடந்த காரியங்க ளொன்று மறியாத அரசன் தனது பத்தினியைப் பார்த்துப் பெண்ணே! என்னை இப்படி எள்ளிச் சொல்லுவதற்குக் காரணமென்ன, நடந்த வுண்மையைச் சொல்லுக வென்று கேட்டான். அதற்கு வுக்கிரை தேவரீர் இராத்திரி என்னோடு கூடினீரோ அதைத்தான் சொல்லுகின்றேனென்று புன்னகையோடு கூறினள். அதை அரசன் தனக்குள் சிந்தித்து பெண்ணே! நமக்கு நல்ல புதல்வனைக் கொடுக்கும் படியாகப் பகவானே எனது வடிவங்கொண்டு வந்து உன்னுடன் கூடிப்போனதா யிருக்க வேண்டும்; அதற்கு எவ்வளவேனும் ஐயமில்லை; உனது வயிற்றிற் கருவுண்டா யது; இனி உனது மனக் கவலையை விட்டு நீ விரும்பிய பதார்த்தங்களை நுகர்ந்து சந்தோஷமாயிருக்கக் கடவை யென்று சொல்லி அன்றையதினம் பூசை முதலானவைகளை முறைமைப்படி செய்து விரதத்தை நிறைவேற்றி மறுநாள் தனது இஷ்ட ஜன பந்துக்களோடு மிருந்து போசனஞ் செய்து பெரு மகிழ்ச்சியை யடைந்தனன்.

பின்னர் அவன் பத்தினி வயிற்றிற் றங்கிய கருவானது பூரித்து வளர்ந்து வருவதினால் அவள் குழலிற் குதித்தவள் போலாகிச் சரீரத்திற் றோன்றிய வெப்பத்தைச் சகிக்க மாட்டாதவளாய்க் குளிர்ந்து பரிமளிக்கின்ற சந்தனம் பனிநீர் முதலானவைகளைப் பூசிக்கொண்டும், நிலாமுற்றங்களிலும் நதிகள்

சூழ்ந்த பூஞ்சோலைகளிலும் உலாவிக் கொண்டும், பொழுது போக்கி யிருந்தனள். அவ்வாறிருக்கும்போது பத்தாந் திங்களிற் றனது பாங்கியர்களோடு அச் சோலைகளினின்று நீங்கிச் சிந்து நதிக்கரையி லுலாவிக் கொண்டிருந்தனள். அச்சமயத்தில் அவள் கருப்ப வாதனை கொண்டு தேவர்கட் கெல்லாம் இடரைப் பயப்பவள்போல ஒரு புதல்வனைப் பயந்தனள். அப்புதல்வன் பிறக்கும்போதே சிவந்த சடைகளும், மூன்று கண்களு முடையவனாய் இரண்டு கரங்களிலுஞ் சூலாயுதமுஞ் சக்கரமுந் தரித்துக் கொண்டு மிகுந்த [illegible]யை வீசுகின்ற சரீரத்தோடுங் கடலோசையுங் கண்டு நடுங்கத் த[illegible] பெருங்குரலோடு மிருந்தனன். அத்தன்மைத்தான புதல்வனை உக்கிரை பார்த்துப் பயந்து மூர்ச்சையாயினள். அவளருகிருந்த பாங்கிய ரெல்லாம் நடுங்கி [illegible]ப்போயினர்கள். பின்னர் வருணனானவன் அந்தணனைப்போல வடிவங்கொ[illegible] வந்து உக்கிரையை மூர்ச்சை தெளிவித்துக் குழந்தையைத் தனது கரத்திலேந்தி, அவளையுங் கூட அழைத்துக் கொண்டு சென்று இராசனெதிரில் வைத்து, இப்புதல்வன் சிந்து வென்கிற நதிக்கரையிற் பிறந்தவனாதலால் இவனுக்குச் சிந்து வென்றே நாமகரணஞ் செய்ய வேண்டுமெனச் சொல்லிப் போயினன். அதற்கு அரசன் மனமகிழ்ந்து புதல்வனுக்குச் சாதக கன்மாதிகளை நிறைவேற்றிச் சிந்துவென்று நாமகரணந் தரித்துத், தேவர்கள் முனிவர்கட் கெல்லாம் அளவற்ற தானாதிகளை நடாத்தினன்.

பின்னர் சிந்துவானவன் நாளுக்குநாள் வளர் பிறையைப்போல வளர்ந்து சோலைகளிலும் நதிகளிலும் விளையாடும்போது நிலத்தினின்றுந் துள்ளி ஆகாயத்திற் பாய்வான். சந்திரனைப் பிடித்துப் பிழிந்து அமுதபானஞ் செய்வான். தேவேந்திரனுடைய அயிராவதத்தைப் பிடித்து முகத்தி லறைவான். அதன்மீதேறித் திக்குகள் தோறும் நடாத்துவான். அதினின்று மிழிந்து மீட்டுந் துரத்தி ஓடச்செய்வான். சமுத்திரங்களிற் பாய்ந்து அலைகளைக் கலக்குவான். அட்ட கஜங்களையும் வாரி அட்ட குலாசலங்கண்மீது மெறிவான். பர்வதங்க ளெல்லாம் நடுங்கும்படி அவைகளி னடிவாரங்களைப்பிடித்தசைத்துக்குலுக்குவான். இவ்வாறு அளவற்ற குறும்புகளோடு விளையாடும் அச்சிறுவனுடைய செயலை அசுரர் குருவாகிய சுக்கிர னறிந்து இனி இவனால் அவுணர் குலம் விருத்தியடையு மென்று தன் மனதிற் குறித்தவனாய், அதிக விசுவாசத்துடன் அப் புதல்வ னிடத்தில்வந்து எக்காலத்தும் அழியாத வல்லபம் முதலானவைகளைத் தரத்தக்க மந்திரிகளை அவனுக் குபதேசித்து, அப்பா! நீ இனி சிவபிரானுடைய திருவடிகளைத் தியானஞ் செய்து மேலான தவங்களை நிறைவேற்றி அவரிடத்தில் அளவற்ற வரங்களைப் பெற்று, அவ் வரங்களின் மகிமையால் தேவர்களை யெல்லாம் அடக்கி, அசுரகுலங்கள் தழைத்தோங்கும்படியாகப் பாதுகாத்து, மூவுலகத்தாரும் உனக்குப் பணிசெய்யும் படியான தலைமைபெற்று வாழ்ந்திருக்கக் கடவையென்று ஆசீர்வதித்துச் சென்றனன். இப்பால் ஸ்கான

ஞ்செய்ய நீரைத் தேடிச்செல்ல தற்செயலாய் ஓர்நதி தன்னிடத்தில் வந்து செய்யக் கைகூடினதுபோல, வலுவில் மேலான உபதேசங்களைப் பெற்ற அச் சிறுவனானவன் மிகுந்த அன்போடுஞ் சுக்கிரனிடத்தில் அனுக்கிரகம் பெற்ற பின்பு வனத்திற் சென்று வலக்காற் பெருவிரலை நிலத்தில் ஊன்றி, இடக்காலை அவ் வலக்கால் முழந்தாளின்மீது மடக்கிவைத்து, மார்புக்குச் சரியாக இரு கரங்[illegible]யுங் கூப்பி, ஐம்புலன்களையு மடக்கிச், சிவபிரானை தியானித்துச் சூரி யனை [illegible]க்க வண்ணமே இரண்டாயிரம் வருடம் அரியதவஞ் செய்தான்; அத் [illegible]க்கினியானது அண்டங்கள் முழுவதும் போய்த் தகித்தது. அக்காலத் தில் சிவ[illegible]பிரான் [illegible]ருவை தாங்கி அவனெதிரில் மான்-மழு-சதுர்ப்புசம்-காள கண்டம்-[illegible]திரம் முதலிய அங்கம் தோன்றும்படி நின்றருளினர். அவ ரைக் கண்ட[illegible]ன் பணிந்தெழுந்து அளவற்ற தோத்திரங்களைச் செய்தனன். அதற்குச் சிவபிரான் மனமகிழ்ந்து உனக்கு வேண்டிய வரங்களைக் கேளென் று திருவாய் மலர்ந்தருளினர்.

அ[illegible]பே[illegible]து[illegible]னவன் மீட்டும் பணிந்தெழுந்து, ஓ கிருபாமூர்த்தியே! அடி[illegible]னுடைய சரீரம் எண்பத்துநான்கு நூறாயிரம் யோனி பேதங்களி [illegible], நாசமில்லாமல் நெடுநாளிருக்கவும், மூன்று லோகங்களையும் ஒரே குடைநிழலி லாண்டுகொள்ளவும், பிரமன் முதலிய தேவர்களும் அசுரர்களும் பூவுலகின்கணுள்ள அரசர்களும் என்னை வணங்கி யானிட்ட பணிகளைச் செய் துக்கொண்டிருக்கவும், தேவரீரிடத்தில் எக்காலத்து மிடைவிடாத பத்தியை யான் புரியவும், வரங் கொடுத்தருளவேண்டு மென்று பிரார்த்தித்தான். அவ னைச் சிவபிரான் பார்த்தருளி, ஓ சிந்துவே! அகில காரணராகிய கணேச மூர் த்தி அவதாரஞ் செய்தாலன்றி உன்னைப் பகைத்து யாவருங் கொல்பவ ரில்லை. மற்றைய வரங்களை யெல்லாம் நீ வேண்டிய வண்ணமே யளித்தோ மென்று திருவாய் மலர்ந்து எழுந்தருளினர். பின்னர் சிந்து வானவன் மீட்டுங் கண்டக நகரத்திற்கு வந்து சேர்ந்தான்.

இம் மேலாகிய வரத்தினைப் பெற்று வந்த சிந்துவை அவன் தந்தையாகிய சக்கிரபாணி ராசன் கண்டு, மிகுந்த ஆனந்தத்தோடும் அவனை ஆலிங்கனஞ் செய்து, தனது அரசுரிமையை அவனிடத்தி லொப்புவித்தனன். இப்பால் சிந்து ராசன் மித்திர னென்றுங் கவுத்துவ னென்றும் பெயரினையுடைய இருவரைத் தனக்கு மந்திரிகளாக்கிச் சகல லோகங்களையும் வெல்லுமாறு படை யெடு த்து, வணங்காத அரசர்களிடத்தில் உயிர்வாங்கி, வணங்கினோ ரிடத்திற் பகுதி வாங்கிப், பூவுலக முழுவதுந் தனது ஆக்கினை சக்கரத்தை நிறுத்திக், கதம்பா சுரன்—சம்பாசுரன்—கனலாசுரன்—கோலாசுரன்—என்னும் நால்வரையுந் தனது நால்வகைச் சேனைகட்குந் தலைவராக்கி, அவ்வவர்கட்கு நடத்தவேண்டிய சிறப் புக்களையும் நடாத்தித், தனக்கு அடங்காது எதிர்த்து வந்த சும்பாசுரன்—நிசும் பாசுரன் — காலாசுரன் — பிரகண்டாசுரன் — விருத்திராசுரன்—முதலானவர்க

ளோடு நெடுநாள் யுத்தஞ் செய்து ஒடுக்கிப், பின்னரவர்கள் வணங்கிவர அவர் களையும் வேண்டிய வரிசைகளோடு அழைத்துக் கொண்டு சென்று சண்டாசுர னுடனே அளவற்ற போர்களைச் செய்து அவனைக் கொன்று, அவன் புத்திர னாகிய பிரபலாசுரனுக்குப் பட்டங் கட்டிப், பின்னுமனேக அதிகார முத லானவைகளையுந் தந்து, இவ்வாறு அவுண ராசர்களை யெல்லாம் வென்று, பின்னர் சொர்க்க லோகத்திற் சென்றனன். அவன் வரவைத் தேவதூது வர்க ளறிந்தோடி, முப்பத்து முக்கோடி தேவர்களும் புடை சூழும்படியாக இரத்தின சிங்காதனத்திற் கொலுவீற்றிருக்கின்ற தேவேந்திரனைப் பணிந்து, ஆண்டவனே ! திரிமூர்த்திகளுடைய பராக்கிரமங்களைச் சிறிது மதியாத சிந்துராசன் அவுண சேனைகளோடு இங்கு வந்திருக்கின்றனனென்று அறிவித் தார்கள். அதைக் கேட்டவுடன் தேவேந்திரன், ஆயிரங்கண்களுஞ் சிவந்து உள்ளே கோபாக்கினி மூள தனது வச்சிராயுதத்தையேந்தி, அயிராவதத்தின்மீ தாரோகணித்து, தேவ சேனைகள் தன்னைப் புடை சூழ்ந்து வர சிந்து ராசனு டைய சேனைகளுக் கெதிரே சென்றான். அப்போது இருவருடைய சேனைக ளும் வேறு வேறாக அணிவகுத்து இரத வீரர்களோடு இரத வீரர்களும், யானை வீரர்களோடு யானை வீரர்களும், குதிரை வீரர்களோடு குதிரை வீரர்க ளும், படை வீரர்களோடு படைவீரர்களுங் கலந்து போர்செய்தார்கள். வாளா யுதத்தோடு குதிரையின் மீதேறி யிருக்கின்ற சிந்துராசனோடு இந்திர னெதிர்த் துத் தனது வச்சிரா யுதத்தினால் அவன் சிரத்தின் மீது தாக்கினான். உடனே சிந்துராசன் அவ்வச்சிராயுதந் தூசாகும்படி விழிகளி லனற்பொறி யெழு ம்ப உறுத்துப் பார்த்துத் தனது குதிரையை முடுக்கி அயிராவதத்தின் மத்த கம் பிளந்து இரத்த மொழுகும்படியாகத் தனது கையாலதனைக் குத்தி அதன்மீ திருந்த இந்திரனைக் காலைப் பற்றி யிழுத்து நிலத்திலே அறையும்படி யாக மேலாகத் தூக்கிச் சுழற்றினான். அச்சமயத்தில் தேவேந்திரனானவன் குக்குமதேக மெடுத்து அவ்விடத்தினின்றுமோடி வைகுந்தத்திற் சென்று விஷ்ணுவைச் சரணடைந் திருந்தனன். அதற்குமேல் தனக்கு யாவரு மெதிரில் லாத சிந்துராசன் தெய்வலோகத்தையுந் தன்வச மாக்கிச், சிலகாலம் அவ்விடத் திற்றானே யிருந்து அரசு செலுத்தி சம்மன்-நிசம்பன்-முதலாயுள்ள அவுண ராசர்களைச் சில சேனைகளோடும் அவ்விடத்தில் நிறுத்திப், பின்னர் அச்சுவர் க்க லோகத்தை விட்டு நாகலோகத்திற் சென்று அங்கரசாள்கின்ற நாகராசர்க ளையும் வணக்குவித்து, மீட்டும் பூலோகத்திற்கு வந்து, சகல லோகங்கட்கும் இராசதானியாகிய தனது கண்டக நகரத்தை யடைந்து, சொர்ணத்தாற் செய்து நவரத்தினங்கள் பதித்திருக்கின்ற சிம்மாதனத்தில் ஏகசக்ராதி பதியாய்க் கொலுவிருந்து சகல லோகத் தரசர்களும் வணங்கும்படி சுத்தவீரர்களுடனே உல்லாச காலக்ஷேபமாய் அரசு செலுத்தி, எல்லாப் போக பாக்கியங்களை யுங் குறைவற வநுபவித்து வாழ்ந்திருந்தனன். இவ்வாறு சிந்துராசன் சகல லோகங்களிலுஞ் சென்றுவந்து திக்கு விசயத்தோடு பூலோகத்தில் வாழ்ந்திருக்

இன்ற காலையில், ஓர் நாள் தம்மைச் சரணடைந்த இந்திரனுக்காக விண்டு வானவர் படையெடுத்து, தமது கருட வாகனத்தின்மீ தேறிச் செலுத்தி சொர்க்க லோகத்தை வந்து வளைந்துக் கொண்டு சாதலைத் துணிந்து போராடவல்ல அவுண வீரர்களோடு யுத்தஞ் செய்வதாயினர். அப்போது சம்பாசுரனோடு-அக்கினியும், காலாசுரனோடு-இயமனும், கமலாசுரனோடு-நிருதியும், பிரகண்டாசுரனோடு-வருணனும், நிசும்பாசுரனோடு-வாயுவும், பிரபலாசுரனோடு-குபேரனும், கதம்பாசுரனோடு - மன்மதனும், சண்டாசுரனோடு - விஞ்சையர்களும், கோலாசுரனோடு-அச்சுவினிகளும், பவுமாசுரனோடு-காந்தருவர்களும் வேறு வேறாக நெருங்கி யுத்தஞ் செய்தார்கள். ஏனைய அசுர வீரர்களை யெல்லாம் அங்காரகன் முதலிய தேவர்களெதிர்த்துப் போராடினார்கள். இவ்வாறு அவுணவீரர்களுந் தேவவீரர்களும் ஒருவரோடொருவர் கைகலந்து வேலாயுதங்களை யெறிந்தும், வாளாயுதங்களாற் அழாவியும், தண்டாயுதங்களால் தாக்கியும், குந்தங்களினாற் குத்தியும், சக்கரங்களை விடுத்தும், கணைகளைத்தொடுத்தும், பாசங்களால் இறுகக் கட்டியும், அளவற்ற பெருங்கோபத்தோடு இருவகுப்பினரும் இடைவிடாமல் வெகுகாலம் வரையில் யுத்தஞ்செய்தார்கள். இக்காரணத்தைச் சிலதூதர்களோடி சிந்துராசனுக் கறிவிக்க, அதைஅவன்கேட்டமாத்திரத்தில் மனங்கொதித் தெழுந்து முன்னர் தேவர்களைத் துன்பஞ்செய்யாமல் தயவோடு விடுத்துவந்த குற்றத்தினாலல்லவா இக்காரணம் உண்டாயது. இனி அவர்களையெல்லாம்பிடித்துக்கொடியசிறையி லிடுவேனென்று தீர்மானஞ்செய்து, பூவுலகத்திலிருந்த தனது சேனைகளோடும் ஆகாயத்திற் பாய்ந்து தேவர்களோடுஞ் சமர்செய்து வருந்துகின்ற அவுணவீரர்களையுஞ் சேனைகளையும் பார்த்து, இதுகாறும் நீங்கள் செய்த யுத்தம்போதும். இனி நிறுத்துங்கள் என்று கையமர்த்திக் கருடவாகனத்தின் மீதுவந்து நிற்கின்ற விண்டுவை நோக்கி அறிவற்றவனே! நீ யுத்தஞ்செய்து வெல்லத்தக்க ஆண்மை யுடையவனாயின் அவ்வாண்மையை என்னோடு செய்து காட்டாமல் யானில்லாத வேளையில் இவர்களோடு நீடித்து யுத்தம் செய்வதும் வீரந்தானோ? திரிகாலங்களையு மறியத்தக்க ஞானமும், யாவரையும் இரட்சிக்கும்படியான தொழிலையும் உடைய நீ என்னோடு பகைத்து யுத்தஞ் செய்தால் நீங்காத துன்பத்தை அநுபவிக்கவேண்டி யிருக்குமென்பதைத் தெரிந்துகொள்ளாமற் போயினையே! இப்போதேனும் உனக்கு யுத்தஞ்செய்து வெல்லத்தக்க பராக்கிரம மிருந்தால் உனது சகல சேனைகளோடும் ஏகநாயகனா யிருக்கின்ற என்னொருவனுடன் யுத்தஞ் செய்யக் கடவையென்று சொன்னான். இவ்வாறு சிந்துராசன் சொல்லி முடியுமுன்னர் எதிர்த்தெழுந்த விண்டுவினோடு எல்லாத் தேவர்களும் ஒன்றாகக்கூடி அவன்மீது அளவற்ற அஸ்திரங்களைப் பிரயோகித்தார்கள். அதன்மீது சிந்துராசனவன் தனது கரத்திலிருந்த தண்டாயுதத்தினால் தேவசேனைகளெல்லாஞ் சின்னாபின்னப்பட மோதி, இந்திரன் முதலிய எண்மரும் மூர்ச்சையாகும்படி கொடுமையோடுந் தாக்கி, விண்டு ஏறியிருந்த கருடனுடைய வொரு

பக்கத்துச் சிறகை யறுத்து பூமியில் விழத்தள்ளினான். அப்போது விண்டு மிகுந்த கோபத்தோ டெழுந்து தமது கரத்திலிருந்த தண்டாயுதத்தினால் அவன் சிரத்திற் புடைத்தார். உடனே அத் தண்டாயுதமானது முறிந்து நொறுங்கிப்போயது. பின்னர் விண்டுவானவர் தமது சக்ராயுதத்தைப் பிரயோகித்தார். அதைச் சிந்துராசன்கண்டு தானுந் தனது சக்ராயுதத்தைப் பிரயோகித்தான். அவ்விரண்டு சக்கராயுதங்களும் ஒன்றையொன் றெதிர்த்துப் பிரளயாக்கினி போலவும், ஆலகால விடம்போலவுஞ், சொலித்துக் கொண்டு சொர்க்கலோகமுதல் எல்லா லோகங்களினுஞ் சென்று தகித்தன. அவ்வற்புதத்தை இருவரும் பார்த்து உடனே அவ்வவர்களுடைய சக்கராயுதங்களை அவ்வவர்கள் ஆக்ருஷ்ணம் பண்ணிக் கொண்டார்கள். அப்போது விண்டுவானவர் சிறிது நிதானித்து நமது அளவற்ற படைகளுள்ளும் சக்கரப் படை மேலானதாயிருக்க அதற்கு மேலானதாக அவனிடத்தில் ஒரு சக்கரமிருக்கின்றது அதுவோ சிவபிரானுடைய சூலாயுதத்திற் கிணையாகச் சமர்செய்ய வல்லது. அதுவுமன்றி, அச் சூலாயுதத்திற்கு மிணையாக வேறொரு சூலாயுதம் அவன்கையில் வைத்திருக்கின்றான். ஆதலால் இவனை யுத்தஞ்செய்து வெல்லுவது மிகவுமரிது. இவனுக்கு நம்போலிகளால் இறுதியில்லை. இவனை உபாயங்களினாலே சாந்தப்படுத்தி நாம் தப்பித்துக்கொண்டு போவதே காரியமன்றி வேறொன்றைச் சிந்திப்பது பழுதாகுமென்று தமக்குள் நிச்சயித்து, மிகுந்த காதலோடும் இதங்காட்டுவார்போல அவனைப் பார்த்து, ஓ வீராதி வீரனே! புருடர்களுடைய ஆண்மைகளெல்லாம் ஓர் நொடிப்போதில் மாய்ந்து சிந்தும்படி செய்யத்தக்க பராக்கிரமம் உன்னிடத்தி லிருப்பதால் உனக்குச் சிந்துவென்கின்ற பெயர் மிகவுஞ் சிறப்புற் றிருக்கின்றது; உனக்கு எந்தவுலகங்களிலும் எதிரிகளில்லை. உனது பராக்கிரமத்திற்கு யாம் மெச்சினோம். உனக்கு வேண்டிய வரங்களைக்கேள் தருகிறோமென்று சொல்லினர்.

அதைச் சிந்துராசன் கேட்டு விண்டுவினுடைய கருத்து இன்னதென்று தனக்குள் தெரிந்து கொண்டு, அவர்கூறிய மறுபொருளான வார்த்தைக்குச் சரியாகத் தானுமோர் கபடயுக்திகொண்டு, ஓ விண்டுவே! நீ எனக்கு வரந்தருவது மெய்யேயாயின் கொடு. அஃது யாதோவென்று மலைக்க வேண்டுவதில்லை. உன்னையான் எளிதான வரமே கேட்கின்றேன். அஃது யாதெனில்: நீ எல்லாத் தேவர்களோடும் நமது கண்டகநகரத்தில் வந்து நாமிட்ட பணிகளை யாவரோடும் நீசெய்திருக்கும்படி வரங்கொடுக்க வேண்டும்; இவ் வரங்கொடாமற் போவாயேல் இந் நிமிடத்தில் உன்னை யுத்தமுகத்தில்வென்று அவ்வாறே செய்விப்பேனென்று சொன்னான். சிவபிரானைப் போலத் திரிநேத்திரமும் சடைமுடியும் சூலாயுதமும் பெற்றிருக்கின்ற சிந்துராசன்சொன்ன சொற்களை விண்டு கேட்டவுடன் மாழ்கினவராய், பின்னர் ஒருவாறுதேறி இவன் இனிவலியச் செய்விக்கத்தக்க காரியத்தை நாமே ஒப்பிச்செய்வது மிகவுமான்பாகும்; அதனால் நாம் கொடுத்த வரத்துக்கும் பெருமை யுண்டாகு மென்று

நினைத்து அந்தோ! என்செய்வார், அவ்வாறே தந்தோமென்று சொல்லினர். அச்சொல் முடியுமுன்னமே சிந்துராசனானவன் அவுணர் கூட்டங்களை ஏவி, விண்டு இந்திரன் முதலான சகல தேவர்களையும் வளைத்துக் காவலிட்டுப், பிரமனையும் ஆள்விட்டுப் பிடித்துவந்து யுத்தமுகத்தில் நின்ற தேவர்களல்லாமல், அந்தந்த லோகங்களி லிருக்கின்ற ஏனைய தேவர்களையும் பிடித்த பிடியிற் கொண்டுவருமாறு சில அவுணர்களை ஏவி, வைகுந்தம் முதலிய தேவலோகங்களி லெல்லாம் சம்பாசுரன்-நிசம்பாசுரன் - விருத்திராசுரன்-சம்பராசுரன் முதலான அவுணர்களை யிருத்திப், பின்னர் எல்லாத் தேவர்களோடும் அவ்விடத்தினின்று மகன்று, இரணபேரி-சயபேரி முதலியவைகள் முழங்கும்படியாகப் பூலோகத்தி லிழிந்து, தனது கண்டகநகர முழுவதும் அத் தேவர்களைச் சிறையில் வைத்து, அவர்கள் தப்பியோடிப்போகாத வண்ணம் அவுணர்களை நாற்றிசைகளினுங் காவலிருத்தி அவ்வவர்கள் அன்போடு அநுட்டித்து வருகின்ற மந்திரங்களை யெல்லாம் அவ்வவற்றின் வடிவங்களோடு களைந்து சிந்துநதியிற் போட்டுவிடச்செய்து, எவ்விடங்களில் யாவரேனும் அவ்வவர்களிஷ்ட தேவர்களைப் பூசிப்பார்களாயின் அவர்களை யெல்லாம் பிடித்து வதைசெய்யக் கட்டளையிட்டு, எல்லாத் தேவர்களுந் தன்னைப்போல ஓர் வடிவஞ்செய்து வைத்துப் பூசித்து வருமாறு அமைச்சர்களைக்கூவி எங்கும் பறையறைவிக்கும்படி ஆக்கியாபித்தனன். அவர்களும் அவ்வாறே செய்வித்தார்கள். அதனால் சகல லோகங்களினும் வேதநீதிக ளிறந்தன. யாவரும் சாத்திர விசாரணை யில்லாமல் மாழ்கினர். பெரியோர்களெல்லாங் கடவுளே துணையென்று நம்பி யிருந்த மனக் கவலையோடு மௌனித் திருந்தார்கள். இவ்வாறு தேவர்கள் முதலாயினோரைச் சிறையி லிட்டுத் துன்பஞ் செய்யும் சிந்துராசனானவன் தனது குலத்தி லுதித்த உற்கை யென்பவளை விவாகஞ் செய்து, அவளால் தன்மன் அதன்ம னென்னும் இரண்டு புத்திரர்களைப் பெற்று, அப் புத்திரர்களோடும் பத்தினியோடும் தாய் தந்தை முதலானவர்களோடும் அளவளாவி, அவுணர்களையெல்லாம் மேன்மை பெறச் செய்து, தேவர்களையெல்லாம் துக்க சாகரத்தில் மூழ்குவித்து, சிறிது மிரக்க மில்லாதபடி நாள்தோறுங் கொடுங்கோலையே செலுத்தி நெடுநாள் வாழ்ந்திருந்தனன்.

அவனால் அளவற்றநாள்சிறையிலகப்பட்டு துன்பமனுபவிக்கின்ற தேவர்களெல்லாம் மிகவும் மனம் நொந்து ஓர் நாள் காவலாளர்க ளறியாதவண்ணந் தங்கள் குலக்குருவாகிய பிரகஸ்பதி தேவனை பணிந்து சுவாமி! இச் சிந்துராசன் நமது லோகத்திற் படையெடுத்து வந்தபோது நாம் எவ்வா றடங்கி யிருந்தோமோ அவ்வாறே யிருப்போமாயின் சுகமுற் றிருப்போம்? அச் சுகமில்லாமற்போயினும் இவ்வித ஆபத்துக்களிலேனும் அகப்படாம லிருப்போம். பின்னர் தேவேந்திரனை நம்பியன்றோ இச் சிறைக்குள்ளாயினோம். இனியேனு மிச் சிறையினின்றுந் தப்பி எக்காலத்திற் சுகம்பெறுவோ மென்று துக்கித்தார்கள். அதற்குப் பிரகஸ்பதி தேவர் சிறிது ஆலோசித்துத், தமக்குள் ஓர் நிச்சயஞ்

செய்து ஓ வானவர்களே! நாம் அனைவரும் சுகம்பெறத்தக்க மார்க்கத்தினைத் தேடவேண்டுமாயின் என்றைக்கும் நமது இடையூறுகளை நீக்கி இரட்சித்துவருகின்ற விநாயக மூர்த்தி யுண்டல்லவா? அவரை இப்போதும் இவ் வவுண பாதகர்களை யொடுக்கும்படியாக மனதி லன்போடு தியானித்துப் பூசிப்பீர்களென்று சொன்னார். அவ்வாறே அத்தேவர்களும், பிரகஸ்பதிதேவரும், விண்டுவும், பிரமனும், ஏனைய முனிவர்களும் விநாயக மூர்த்தியினுடைய திருவுருவத்தை நாடோறும் மனதிற் தியானித்து பூசித்துவந்தார்கள். மத்தியில் விநாயகமூர்த்தியினுடைய சதுர்த்தி வர, அப்போதவ் விரதத்தை யாவரும் பத்தியோடு அந்தரங்கமா யனுட்டித்தார்கள். அதற்கு விநாயக மூர்த்தி கிருபை கூர்ந்து பத்துத் திருக்கரங்களும், அக்கரங்கள்தோறும் ஆயுதங்களும் விளங்கும் படியாகச் சித்திபுத்தி சமேதராய், சிங்கவாகன மூர்ந்து, மற்றைய அவயவங்களோடும் அவ்வவர்கள் மனந்தோறும் தரிசனந்தந்து, அன்பர்களே! முன்ன ருங்கட்குத் தீங்குசெய்துவந்த கனன் முதலாயினோருடைய உடல்களைப் பிளந்து எவ்வாறு உங்கட்குச் சுகம் மருவச்செய்தோமோ? அவ்வாறே யாம் உமாதேவியி னிடத்தில் ஆறு கைகளும், வெள்ளை மேனியுமாக அவதரித்து ஓர் பெரிய மயில்வாகனத்தை யூர்ந்து இச்சிந்துவையுஞ் சங்கரித்து உங்களைச் சிறையினின்றும் விடுத்தருளுவோம்; அதுகாறும் நீங்கள் சந்தோஷமுற் றிருங்களென்று திருவாய் மலர்ந்து கரந்தருளினர்.

அதற்குமேல் தேவர்கள் முதலிய யாவரும் விநாயக மூர்த்தி திருவாய் மலர்ந்தருளியதை மனதில் உறுதியாக வைத்துக்கொண்டு அத்தியந்த சந்தோஷத்தைப் பெற்று, அத்தினமே சிறையினின்றும் விடுபட்டு மேலான பாக்கியத்தைப் பெற்றவர்களைப்போல ஆனந்தமாகி நாள்தோறும் விநாயக மூர்த்தியினுடைய திருவடிகளை மனதிற் தியானஞ் செய்துகொண் டிருந்தார்கள்,

மயூரேச ரவதாரம்.

ஓ சவுனகாதி முனிவர்களே! தேவதேவோத்தமராகிய விநாயகமூர்த்தியானவர் உமாதேவியிடத்திற் புத்திரராக அவதரிக்கும்படி இடைவிடாது தீங்குகளைச் செய்துவந்த சிந்துராசனுடைய திறத்தினைச் சொன்னோம். இனி எமதிறைவராகிய விநாயகக் கடவுள் அவதாரஞ் செய்தருளிய சிறப்பினைச் சொல்லுவோங் கேட்பீர்களாக.

முனீந்திரர்களே! சிந்துராசனுடைய கொடுமைக் கஞ்சித் திரிசந்தி க்ஷேத்திரத்தில் வாசஞ்செய்கின்ற கவுதமர் முதலிய முனிவர்கள் தங்கள் உருவங்களை மறைத்துக்கொண்டு சிவபிரானை நோக்கித் தவஞ் செய்தார்கள். அளவற்றநாள் உபவாசத்தோடும் அவர்கள் செய்துவந்த தவத்திற்குச் சிவபிரான் கிருபைகூர்ந்து உமா பரமேஸ்வரி சமேதராய் ரிஷப வாகனத்தின்மீ தெழுந்தருளி

பூதர் முதலாகிய சிவகணங்கள் புடைசூழ அவர்களெதிரிற் பிரத்தியட்சமாயினர். அவர்கள் சிவபிரானைக் கண்டவுடனே எழுந்திருந்து விழிகளில் ஆனந்தவாரிபெருக பலமுறை சாஷ்டாங்கமாகப் பணிந்து, இருகரங்களையுஞ் சிரமேற்கூப்பி வேதாகமங்களினால் அளவற்ற தோத்திரங்களைச் செய்தார்கள். அவைகளைச் சிவபெருமான் கிருபையோடு பார்த்தருளி, உங்கட்கு வேண்டிய வரங்களைக் கேளென்று திருவாய் மலர்ந்தனர். உடனே முனிவர்களெல்லாங் கிருதார்த்தர்களாயினோமென்று மிகுந்த அன்போடு பணிந்து சுவாமீ! கொடியவனான சிந்துராசனால் சகல லோகங்களினும் வேத மார்க்கங்கள் மூழ்கிப்போயின. தேவர்கள் முனிவர்களெல்லாம் அவ்வவர்களுடைய வாழ்வுகளழிந்து அப்பாதகனிட்ட சிறைக்குளானார்கள்; அடியேங்கள் சிலபேர் மாத்திரம் அவன் கையில் அகப்படாமல் வேத மார்க்கத்தை யனுட்டித்து இங்ஙனே யிருக்கின்றோம். அக் கொடியவனை எவ்விதத்திலேனும் நாசஞ்செய்ய வேண்டும். அவனுக்கு நாசகாலம் இப்போதில்லாவிடின் அக்காலம் வருகின்றவரையில் அடியேங்கட்குத் தீங்குநேரவொட்டாமல் காக்கும் பொருட்டுத் தேவரீர் இங்ஙனமெழுந்தருளி யிருத்தல் வேண்டும். தேவரீர் இங்ஙனம் எழுந்தருளி யிருந்தால் எளியேங்கள் அச்சமில்லாமல் சுவாமிகளைப் பூசை செய்துகொண்டு வேதமார்க்கங்களை யனுட்டித்துத் தீவினைகளிற் படாமல் இகத்தில் வாழ்ந்திருப்போம்; இல்லாவிடில் இனி அடியேங்கள் பலவகைத் துன்பங்கட்காளாகுவோமென்று பிரார்த்தித்தார்கள். பக்தருக் கெளியரான பரமேஸ்வரர் அம் முனிவர்களுடைய அபீஷ்டத்தை நிறைவேற்றத் திருவுளங்கொண்டு அவர்கள் உள்ளத்தைப் போலப் பரிசுத்தமாய்த் தெளிந்து தண்ணென்றிருக்கின்ற நீர்வளப்பத்தையும் புட்பங்கள் மலிந்த பலபொழில்களாற் சூழப்பட்டிருக்கின்ற நிலவளப்பத்தையும் பார்த்து அவர்கட்கு மகிழ்வுண்டாகும்படி, அன்பர்களே! சிந்துவைச் சங்கரிக்கின்றவரையில் யாம் உமாதேவியோடும் இப் பூதகணங்களோடும் இங்ஙனே எழுந்தருளி யிருப்போமென்று திருவாய் மலர்ந்தருளினார். அதைக்கேட்ட முனிபுங்கவர்களெல்லாம் மேலான மகிழ்ச்சி பொங்க விருந்தார்கள். பின்னர் கணத்தலைவர்கள் சிவபிரானும் உமாதேவியும் எழுந்தருளி யிருப்பதற்குச் சொர்ணத்தினாலும், நவரத்னங்களினாலும் ஓராலயத்தைக் கயிலாய பர்வதத்திற் கிணையாகச் சமைத்தார்கள். அவ்வாலயத்தில் சிவபிரான் உமாதேவியாரோடு மெழுந்தருளி முனிபுங்கவர்களெல்லாம் பூசிக்கும்படி தமது கிருபா கடாட்சத்தை வைத்திருந்தனர். அக்காலத்தில் சகல வான்மாக்களுக்கும் யோக நிட்டையைத் தெரிவிப்பவர்போலச் சிவபிரான் யோக பாவனையோடு மிருந்தனர். அதை உமாதேவியார் பார்த்துப் பணிந்து, சுவாமீ! பிரமன் விண்டு முதலியோர் நாள்தோறுந் தேவரீரைத் தியானஞ்செய்து நால்வகைப் பொருள்களையும் பெறுகின்றார்கள். இஃது சத்தியமாயிருக்க, தேவரீர் அவர்களைப்போல விழிகளை மூடிக்கொண்டு தியானிக்கப்படுங் கடவுள் வேறென்ன விருக்கின்றது? எவர்கள் எதை விரும்பினும் கொடுக்க வல்லது

சிந்தாமணியேயன்றி அதற்குக் கொடுப்பவர்கள் ஒருவருண்டோ? பிரமன் விண்டு இவ்விருவர்களோடு சகல லோகங்களையுஞ் சங்கரித்து மீட்டும் அவ்விருவர்களுடன் சகல லோகங்களையுஞ் சிருட்டித்துக் காக்கச் செய்கின்ற உருத்திர மூர்த்தி யாகியும், அம்மூவர்களையும் உண்டாக்கி இரட்சிக்கின்ற இறைவராயு மிருக்குந் தேவரீர் யோகநிட்டை செய்வதென்றால் யாரைத் தியானிக்கின்றது? அந்தச் சந்தேகத்தை அடியாட்கு நீக்கியருள வேண்டுமென்று பிரார்த்தித்தனர். இவ்வாறு உமாதேவியார் பணிந்து பிரார்த்தித்ததற்குச் சிவபிரான் கிருபை சுரந்து, பெண்ணே! பிரமன் விண்டு இந்திரன் முதலானவர்களால் நாம் எவ்வாறு தியானிக்கப்படுகின்றோமோ, அவ்வாறே நம்மாற் றியானிக்கப்படும் பொருளும் ஒன்றுண்டு. அதை விவரமாகச் சொல்லுவோம் கேள்.

ஏகமாகியும், அநேகமாகியும், மாயையிற்கலந்து சோகமுதலானவைகளிற் சலிக்காத பேரறிவாகியும், அம் மாயையினாற் றனுகரணாதிகள் நான்கினையு முண்டாக்கி அவைகளை ஆன்மாக்களுக் களித்தும் விகாரங்களிற் படாததாகியும், பந்தம் மோக்கமென்னு மிரண்டினைப் பரப்புவதாகியும், அநாதியாகியும், ஆதியந்த மில்லாததாகியும், அநாதியிற்றானே முத்தியாகியும், அருவமாகியும், உருவமாகியும், அருவுருவமாகியும், இம் மூன்று மற்றதாகியும், மனம் புத்தி சித்தமென்னு மூன்று மில்லாததாகியும், உள்ளதாகியும், நித்தியமாகியும், நின்மலமாகியும், நிர்க்குணமாகியும், நிராமயமாகியும், அத்துவிதமாகியும், ஆனந்தமாகியும் விளங்காநின்ற மேலானபொருளே நாம் தியானிக்கப்படும் பொருள். அந்த வுத்தமப் பொருளுக்கு மேலானபொருள் ஒன்றுமில்லை. அப்பொருள் மனம் வாக்குக் காயங்களினால் அறிதற்கரிதான பொருளாதலால் அஃது நம்மைச் சுதந்தரவடிவாய் எப்பொழுதுங் கொண்டருளி, நம்மைப் பணிகின்றவர்களுடைய பூசனைகளை ஒப்புக்கொண்டு அவர்கட்கு சகல வரங்களையுங் கொடுத்தருளும். இவ்வார்த்தை மகாரகசியமாகும். இதனை யாவர்க்கும் வெளிவிடாமல் உன்மனதிற் சிந்திக்கக் கடவையென்று திருவாய்மலர்ந்தனர்.

அவையனைத்தையும், உமாதேவியார் செவிக்கமுதாகக் கேட்டு மீட்டும் சிவபிரானைப் பணிந்தெழுந்து, சுவாமீ! அத் தன்மைத்தான மேலாகிய பொருளை அடியாட்குத் தெரிவிப்பிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தனர். அதற்குச் சிவபிரான் கிருபைசுரந்து, பெண்ணே! சீவராசிகள் தோறும் பரிபூரணமா யிருக்கின்ற அந்த மேலாகிய பொருள் தேவர்களுடைய சிறையை நீக்கும் பொருட்டு இனி உன்னிடத்தில் ஓர் புத்திரனாக அவதரித்து அளவற்ற திருவிளையாடல்களை நடாத்தித் தீவினைகளைச் செய்து வருகின்ற சிந்துராசனைச் சங்கரிக்கும். அதை உனது கண்ணினாற் காணப்போகின்றனை. அப்பொருள் உன்னிடத்தில் புத்திரனா யவதரிக்கும் படியாக நீசெய்யத்தக்க கருமம் ஒன்றுண்டு. சொல்லுதற்கரிய மந்திரம் ஒன்றுண்டு. அவைகளை யாம் கூறக்கேட்டு அவ்வாறே பன்னிரண்டுவருட மநுட்டி யென்று சொல்லி, அநுட்டிக்கத்தக்க முறைமையையும் மந்திரத்தையும் உபதேசித்தனர்.

பின்னர் உமாதேவியார் அத்திரிசந்தி க்ஷேத்திரத்தில் முன்னரே யெழுந்தருளி யிருக்கும் மயூரேச விநாயகருடைய ஆலயத்திலிருந்து தமது காதலர் உபதேசித்தருளிய ஏகாக்ஷர மந்திரத்தைச் செபஞ் செய்து, பன்னிரண்டு வருடந் தவத்தி லிருந்தனர். அப்பால் பாராதி தத்துவங்களை யெல்லாங் கடந்து எவ்விடத்தும் நீக்கமற நிற்கும் பேரானந்தப் பொருளே ஓர் திருவுருக்கொண்டு உருத்திரமுகம் நடுவும், பிரமமுகம் வலமும், விண்டுமுகம் இடமுமாக மூன்று முகங்களை வாய்ந்து சந்திரனைத் தரித்த சடா மகுடங்களும், ஏழுவிழிகளும், சூலம்-மழு-கபாலம்-உருத்திராக்கமாலிகை-சங்கு-சக்கரம் என்னு மிவைகளைத் தரித்திருக்கின்ற ஆறுகரங்களும், கற்பூரம்போன்ற தவளமேனியுமுடைய விநாயக மூர்த்தியாகி, வெள்ளை ரிஷபவாகனத்தை யூர்ந்து உமாதேவியா ரெதிரிற் பிரத்தியக்ஷமாயினர். உடனே உமாதேவியார் சாஷ்டாங்கமாகப் பணிந்து பலமுறை வேதாகமங்களாற் றுதி செய்தனள், அதன்மீது உமக்கு வேண்டியவரம் யாதென்று விநாயகமூர்த்தி கேட்க, அதற்கு உமாதேவியார் தொழுது சுவாமீ! தேவரீர் எக்காலத்தும் அடியேற்கு தரிசனங் கொடுத்து முற்றிலுங் காத்தருள வேண்டு மென்று பிரார்த்தித்தனர்.

அதற்கு விநாயகமூர்த்தி கிருபைகூர்ந்து, ஓ லோகநாயகியே! நாடோறுங் கொடுமைகளையே நடாத்திவருகின்ற சிந்துவைச் சங்கரிக்கவும், நம்மை வழிபட்ட தேவர்களைச் சிறையினின்று நீக்கி நல்லபதவிகளைக் கொடுக்கவும், யாம் உமக்குப் புத்திரனாக அவதரித்து உம்மிடத்திலேயே வளர்ந்து விளையாடிக்கொண் டிருப்போமென்று திருவாய் மலர்ந்து, தாம் முன்னர் வசித்திருந்த மயூரேசமூர்த்தியிற் கலந்தருளினர். அதற்குமேல் உமாதேவியார் சிவபிரானிடத்திற் சென்று தமக்கு விநாயகமூர்த்தி தரிசனங்கொடுத்த திருவுருவத்தினுடைய சிறப்பையும், அவர் கொடுத்தருளிய வரத்தையும் விவரமாகத் திருவாய் மலர்ந்து, மிக்க பெருவகையுடன் அவரோடு வாழ்ந்திருக்கின்ற காலத்தில், விநாயக மூர்த்திக் குவப்பாகிய சதுர்த்திசேர்ந்த தினத்தில் ஓர் மண்டபத்தை அலங்கரித்து மிருத்திகையினால் விநாயகமூர்த்தியினுடைய திருவுருவத்தைச் சமைத்து வேதாகமமுறைப்படி பூசித்தனர்.

அப்போது அம் மூர்த்தியினின்று ஆச்சரியமாகும்படி விநாயகக் கடவுள் ஓர் பெருஞ்சோதிருபமாய் வெளிப்பட, அச் சோதியை உமாதேவியார் பார்க்க மாட்டாது கண்கள் கூசிப் பயந்தனர். அப்பால் சோதியாயெழுந்தருளிய விநாயகமூர்த்தியானவர் அளவற்ற கண்களும், அளவற்ற வாய்களும், அளவற்ற செவிகளும், அளவற்ற முகங்களும், அளவற்ற கைகளும், அளவற்ற கால்களுமாய் விஸ்வருபங்கொண்டு நின்றனர். அதனை உமாதேவியார் கண்டு பயந்தெழுந்து, ஓ குணக்குன்றமே! தேவரீர் இவ் வுருவத்தோடு மிருந்தால் எளியேற் கிணங்குமோ? சுவாமிகள் அடியேற் கிணங்கும்படியான பாலகன் வடிவை யெடுத்தருளவேண்டு மென்று பிரார்த்தித்தனர். உடனே எனது உள்ளத்தி

லமர்ந்த விநாயக மூர்த்தியானவர் திங்க ளொன்பதுஞ் சென்று பிறந்த பாலகனும், ஆறு கரங்களும், மூன்று விழிகளும் விளங்கும்படி முத்து மாலையைத் தரித்த மார்போடு உமாதேவியா ரெதிரில் அமர்ந்தருளினர்.

பின்னர் குருக்கத்தி நிறம்போலக் கோமள வுருவங் கொண்டு எழுந்தருளிய பால விநாயக மூர்த்தியை உமாதேவியார் ஆனந்தத்தோடு மெடுத்து மடியில் வைத்துத் தமது திருமுலைப்பா லூட்டியருளினர். உடனே ஆகாயத்தில் பஞ்சகருவிகள் முழங்கின. தேவர்கள் புட்பவருடஞ் சொரிந்தார்கள். நாற்றிசைகளினும் மந்தமாருதம் வீசின. தேவர்கட்கெல்லாம் வலது தோள்களும் வலது கண்களும் துடித்தன. சிந்துராச னுடைய கண்டக நகரத்திலே உதிரமழை பெய்தது. அவனரண்மனையினுங் கோபுரத்தினும் பகற்போதில் ஆந்தைகள் கூவின. அவனுடைய இடதுதோளும் இடது கண்ணுந் துடித்தன. இவ்வித வுற்பனங்களுண்டாகலுந் துன்பத்தி லழுந்தி யிருந்த தேவர்களெல்லாம் மனமகிழ்ந்தார்கள். கெட்ட வுற்பனங்களைக்கண்ட சிந்துராசன் உடனே சிலதூதர்களையேவி இவ்வுலகத்தில் ஏதேனும் அதிசய முண்டாயிருக்கில் அதனைத் தெரிந்துவரக் கடவீர்களென்று கட்டளையிட் டனுப்பினான். அங்கங்கே உலர்ந்த விருட்சங்களெல்லாந் தளிர்த்தன. வறந்த பசுக்களெல்லாஞ் சுரந்து கரந்தன. இவை யனைத்தையும் உலகத்தி லுள்ளோர் கண்டு நமக்கெல்லாம் நற்காலம் வந்தாற்போ லிருக்கின்றதென்று மனத்துயர்நீங்கி மிக்க அதிசயத்துடனே மகிழ்ந்திருந்தார்கள். கவுதமர் முதலிய முனிவர்களெல்லாம் வரிசை வரிசையாக வந்து சிவபிரானுடைய திருவடிகளில் வந்தனைசெய்து உமாதேவியார் திருக்கரத்தில் அவதரித்திருக்கின்ற பாலவிநாயக மூர்த்தியைச் சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து அவருக்குக் கணேசனென்று திருநாமஞ் சாத்தித் துதித்தார்கள். இவ்வாறு விண்ணவர்கட் கெல்லாந் தொழுகுலமாகியும், வேதங்களினுடைய பயனாகியும், கருதுவோர்களுடைய இடர்களைப் பொடிபடுத்துங் களைகணாகியும், எனதுள்ளத்தில் நண்ணி எளியேன் புரியும் பணிகளைக் கைக்கொள்ளு மிறைவனாகியுமிருக்கின்ற விநாயகமூர்த்தியானவர் மனிதர்களுடைய மகவைப்போல உமாதேவியாரிடத்திற் குழந்தையாகி வளர்ந்தருளுங் காலத்தில் ஓர்நாள் கிருச்சமத முனிவர் அத்தலத்தில்வந்து விநாயக மூர்த்தியைப் பணிந்தெழுந்து ஓர் பீதாம்பரத்தை அவர் திருமேனியிற் சாத்தித் தமதாசிரமத்திற்குப் போயினர். இவ்வாறு ஆங்காங்கு தவஞ்செய்கின்ற முனிபுங்கவர்களெல்லாம் ஓங்காரப் பொருளா யிருக்கின்ற கணேசமூர்த்தியைக் கண்டு பணிந்து போவதும் வருவதுமா யிருந்தார்கள். அப்போது ஓர்நாள் மரீசிமுனிவர்வந்து தொழுதுபோக அவரை அந்த க்ஷேத்திரத்தி லிருந்த முனிபுங்கவர்களெல்லாஞ் சூழ்ந்து, சுவாமீ! தேவரீர் அடியேங்கட்குத் துன்பம் நேராதபடி ஒருபாயத்தைத் திருவாய்மலர்ந் தருளவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதற்கு மரீசிமுனிவர் அவ் விருடியர்களைப் பார்த்து அன்பர்களே! நீங்கள் ஏன் இவ்வாறு சஞ்சலப்படுகின்றீர்கள்? சகல விக்கினங்களையுந் தீர்க்கத்தக்க விக்கினராசரே இங்கு

உமாதேவியாரிடத்தில் புத்திரரா யவதரித்திருக்க உங்களிடத்தில் துன்பமென்பது நெருங்குமா? நெருங்காதே. ஆயினும் கிரேதாயுகத்தில் பத்துகைகளும், சோதியுருவமும், சிங்கவாகனமும்; திரேதாயுகத்தில் ஆறுகைகளும் வெள்ளைமேனியும் மயில்வாகனமும்; துவாபர யுகத்தில் நாலுகைகளும் சிவந்த மேனியும் பெருச்சாளி வாகனமும்; கலியுகத்தில் இரண்டு கைகளும் மேகநிறமும் குதிரை வாகனமுமாகப் பிரகாசிக்கும்.

கணபதி துணை.

விநாயகக் கவசம்.

ஓ ஓ, மகா தவசிரேஷ்டர்களே! அமிர்துண்ட காரணத்தால் அமரரெனப்பெற்ற தேவர்களும் பகை பிணி யாதிய துக்கவசத்தினரா யிருக்கின்றனர்; நீங்களோ? கேட்டல், தெளிதல், சிந்தித்தல், நிட்டைகூடல் என்னும் சதுட்டயங்களையும் சாதுசங்கம், சாத்திரப்பயிற்சி, ஓவாமுயற்சி யாதிகளையும் நீங்காது இறைவன் திருநெறித்தாகிய சாத்திர ஞானாமிர்தத்தை யுண்டு தேக்கத் திளைத்து யோகீச்சர ரெனப் பெற்றீர்கள். உங்களினு மிக்கா ரெங்கு மில்லை. எல்லாம் வல்ல இறைவனும் அடியார் குறிப்பி னெறியே நடப்பவராயிருக்கின்றனர். ஆதலால் உங்களிற் சிறந்தோ ரில்லை; யில்லை. உங்களை யடைந்த யானும் புனிதனாயினேன். சிவயோக ரறியாச் செயலு முண்டோ? இல்லை. ஆயினும், எனது புண்ணியப்பேற்றாலும், அளவளாவிய எனது பேராசையினாலும், நீங்கள் விரும்புவதனாலும் இதனைச் சொல்லுகின்றேன் அங்ஙனஞ் சிரத்தா பத்தியினராய்த் தெளிவீர்களாக.

சர்வ காரணராயும், சர்வானுக்ரகீராயும், சர்வக்ஞராயும், சர்வாந்தர்யாமியாயும், சர்வதாவரயு மிரானின்றனு பாதோ அச் சாக்ஷாத் விநாயகக் கடவுளுடைய மந்திரம் ஒன் றிருக்கின்றது. அது விநாயக கவசம் என்று சொல்லப்படுவது. அம் மகாமந்திரத்தை முன்னர் அநேக மகத்துக்க ளனுட்டித்ததன்றி பின்னர், காசிபமுனிவர் முக்கல முனிவருக்கும், அவர் மாண்டவிய முனிவருக்கும், அவர் எமக்கும் உபதேசிக்கப்பெற்றது. அங்ஙனம் யாம் முறையாக உங்கட் குபதேசிக்கத் தொடங்கினேன். அதாவது:—

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

வளர்சிகையைப் பராபரமாய் வயங்குவிநா யகர்காக்க வாய்ந்த சென்னி
யளவுபடா வதிகசவுந் தரதேக மதோற்கடர்தா மமர்ந்து காக்க
விளரறநெற் றியையென்றும் விளங்கியகா சிபர்காக்கப் புருவந் தம்மைத்
தளர்வின்மகோ தரர்காக்கத் தடவிழிகள் பாலசந் திரனர் காக்க. (க)

கவினதரங் கசமுகனர் காக்கத்தா லங்கணக் கிரீடர் காக்க
நவில்சிபுகங் கிரிசைசுதர் காக்கநனி வாக்கைவிநா யகர்தாங் காக்க
வவிர்நகைதுன் முகர்காக்க வள்ளெழிற்செஞ் செவிபாச பாணி காக்க
தவிர்தலுறு திளங்கொடிபோல் வளர்மணிநா சியைச்சிந்தி தார்த்தர் காக்க (உ)

காமருபூ முகந்தன்னைக் குணேசர்நனி காக்ககளங் கணேசர் காக்க
வாமமுறு மிருதோளும் வயங்குகந்த பூர்வசர்தா மகிழ்ந்து காக்க
வேமமுறு மணிமுலைவிக் கினவிநா சன்காக்க விதயந் தன்னைத்
தோமகலுங் கணநாதர் காக்கவகட் டினைத்துலங்கே ரம்பர் காக்க. (ங)

பக்கமிரண் டையுந்தரா தரர்காக்கப் பிருட்டத்தைப் பாவ நீக்கும்
விக்கினக ரன்காக்க விளங்கிலிங்கம் வியாளபூ டணர்தாங் காக்க
தக்ககுய்யந் தன்னைவக் கிரதுண்டர் காக்கசக னத்தை யல்ல
லுக்ககண பன்காக்க வூருவைமங் களமூர்த்தி யுவந்து காக்க. (ச)

தாழ்முழந்தாள் மகாபுத்தி காக்கவிரு பதமேக தந்தர் காக்க
வாழ்கரங்கிப் பிரப்பிரசா தனர்காக்க முன்கையை வணங்கு வார்நோ
யாழ்தரச்செய் யாசாபூ ரகர்காக்க விரல்பதும வத்தர் காக்க
கேழ்கிளரு நகங்கள்விநா யகர்காக்கக் கிழக்கினிற்புத் தீசர் காக்க. (ரு)

அக்கினியிற் சித்தீசர் காக்கவுமா புத்திரர்தென் றிசை காக்க
மிக்கநிரு தியிற்கணே சுரர்காக்க விக்கினவர்த் தனர்மேற் கென்னுந்
திக்கதனிற் காக்கவா யுவிற்கசகன் னன்காக்கத் திகழு தீசி
தக்கநிதி பன்காக்க வடகிழக்கி லீசநந் தனரே காக்க. (சு)

ஏகதந்தர் பகன்முழுதுங் காக்கவிர வினுஞ்சந்தி யிரண்டன் மாட்டு
மோகைவிக் கினகிருது காக்கவிராக் கதர்பூத முறுவே தாள
மோகினிபே யிவையாதி யுயிர்த்திறத்தால் வருந்துயரு முடிவி லாத
வேகமுறு பிணிபலவும் விலக்குபுபா சாங்குசர்தாம் விரைந்து காக்க. (எ)

மதிஞானந் தவந்தான மானமொளி புகழ்குலம்வண் சரீர முற்றும்
பதிவான தனந்தானி யங்கிரக மனைவிமைந்தர் பயினட் பாதி
கதியாவுங் கலந்துசர்வா யுதர்காக்க காமர்பவுத் திரர்முன் னான
விதியாருஞ் சுற்றமெலா மயூரேச ரெஞ்ஞான்றும் விரும்பிக் காக்க. (அ)

வென்றிசீ விதங்கபிலர் காக்ககரி யாதியெலாம் விகடர் காக்க
வென்றிவ்வா றிதுதனைமுக் காலமுமோ திடினும்பா லிடையூ றொன்று
மொன்றுறா முனிவரர்கா ளறிமின்கள் யாரொருவ ரோதி னாலு
மன்றவாங் கவர்தேகம் பிணியறவச் சிரதேக மாகி மன்னும். (க)

என்பனவாம்.

இக்கவசத்தை, யாவரேனும் நித்திய கருமங்களை முடித்துப் பரிசுத்தராய்ச் சித்தசாந்தத்தோடு வசதியான ஓரிடத்தி லிருந்துகொண்டு, விநாயகக் கடவுள் திருவுருவங்களை மனதிற் குறித்துத் துதிசெய்துவந்தால் அவர்களைப் பற்றியிருக்கின்ற பிணி, வறுமை, பேய், பூதம், துயரம், கவலை, பகை, பழி, பாவம் முதலிய தீமைக ளெல்லா மொழிந்து ஆயுள், கல்வி, மனைவி, மக்கள், பூமி, பொன், மணி, தானியம், கீர்த்தி, சுகஜீவனம், வாகனம், ஆளுமை, பந்துஜன சேர்க்கை, தேகதிடம், மனோதைரியம், முதலிய போகபாக்கிய சித்திக ளுண்டாகும். அன்றி, முக்காலத்திலும் ஓதினால் யாதொரு இடையூறும் வராது. யாத்திரைவாசிகள் தோத்திரஞ் செய்தால் சகல விக்கினங்களுந் தொலைந்து மேலான பயன்களைப் பெறுவார்கள். சமர்க்களத்திற் றோத்திரஞ் செய்தால் வெற்றி பெறுவார்கள். பிரதிதினம் ஏழுமுறையாக இருபத்தொருநாள் தோத்திரஞ் செய்தால் உச்சாடனம், வித்துவேடணம், ஆக்ருஷ்ணம், தம்பன முதலிய வித்தைக ளெல்லாங் கைகூடும். நித்தம் இருபத்தொரு முறை தோத்திரஞ் செய்தால் கிரகதோஷ முதலானவைகள் நீங்கும். அரசர்களைக் காணும்போது பத்தியோடு மும்முறை தோத்திரஞ்செய்தால் அவ்வரசன் உடனே வசியமாவன். அம்மந்திரத்தைத் தாளிப்பனை யேட்டில் எழுதிப் படித்தாலும், படிப்பித்துக் கேட்டாலும், அன்போடு பூசித்தாலும் சகல யிடர்களுந் தீரும். அன்பு, உறுதி, ஆசாரம் இவைகளில்லாதார் என்ன கொடுத்தாலும் இம்மந்திரத்தை அவர்கட் குபதேசிக்கத் தகாது.

ஆதலால் முனிவர்களே! நீங்கள் இம்மந்திராமிர்தத்தை அனுட்டிப்பீர்களாயின் உங்க ளிஷ்டசித்திகளை எளிதிற் பெற்று சுகிப்பீர்கள். என்று மரீசி முனிவர் திருவாய்மலர்ந்து, தமது ஆசிரமத்திற்குச் சென்றனர். அது முதல் எல்லா முனிவர்களும் அக் கவச மந்திரத்தைச் செபஞ் செய்து வந்தார்கள்.

இவ்வாறாக; முன்னர் சிந்து ராசன் விடுத்த தூதர்கள் வாயுவேக மனோவேகமாய்ச் சென்று பூலோகம் நாகலோகம் தெய்வலோக முதலிய விடங்கள் முழுவதுஞ் சோதித்து, எங்கும் ஓர் புதுமையேனுங் காணாதவர்களாகி மீட்டும் பூலோகத்தை நோக்கி வரும்போது தண்டக வனத்தி லிருக்கின்ற திரிசந்தி க்ஷேத்திரத்தை யணுகி, அங்கு வசித்திருக்கின்ற முனிவர்களுடைய தவப் பெருக்கையும், வேதகோஷ்டங்களையும், உமாதேவியாருடனே சிவபிரானெழுந்தருளி யிருக்கின்ற சிலாக்கியத்தையும், வெற்றி விளங்கும்படியான புத்திரனைப் பெற்ற உமாதேவியாருடைய மனவிருப்பையும், மற்றுமுள்ள செழிப்புகளையுங் கண்டு சிந்து ராசனிடத்திற் சென்று பணிந்து ஆண்டவனே! அடியேங்கள் திரிலோகங்களினுஞ் சென்று சோதித்து வந்தோம். ஒரு அதிசயங்களையுங் காணோம். ஆனால் தண்டக வனத்தில் திரிசந்தி க்ஷேத்திரத்தில் சிவபெருமான் உமாதேவியோடு மெழுந்தருளி யிருக்கின்றனர். அங்கே அளவற்ற முனிவர்

கள் தவஞ் செய்துகொண்டு மிக்கதருக்கோ டிருக்கின்றார்கள். அவர்களுக்குள் எண்பத்தெண்ணாயிர முனிவர்க ளிருக்கின்றனர். அவர்களோ நினைத்த மாத்திரத்தில் மூவுலகங்களையு மழித்து மீட்டும் உண்டாக்கி ரட்சித்தவர்கள். அவர்களுடைய பெருமைகளை ஒருவராற் சொல்லி முடிவனவன்று. அன்றியும் சிவபெருமானே அவர்களிடத்தில் வந்திருப்பாராயின் அவர்கள் மேன்மையை எம்போலிகளாற் சொல்லி முடிவதோ? இதையேயதிசயமாக நினைக்கவேண்டாம். அவ்விடத்திற்றானே மற்றொரு புதுமையைக் கண்டனம். அஃது யாதெனில், உமாதேவியார் செய்த தவத்தினால் சோமவாரமும், விநாயக சதுர்த்தியும், விசாக நட்சத்திரமுங் கூடிய நேற்றைய தினத்தில் சிங்கலக்கினத்தில் ஓர் குழந்தை பிறந்திருக்கின்றது. அக்குழந்தை வெள்ளை மேனியும், ஆறுகைகளும், மூன்று கண்களும், மிகுந்த பராக்கிரமமு முள்ளதாய் முத்து மாலையைத் தரித்த மார்போடு விளங்கி யிருக்கின்றது. முனிவர்களெல்லா மக்குழந்தைக்குக் கணேசனென்று நாமகரணஞ் செய்தார்கள். அதை யாவருங் குழந்தை யென்று எண்ணாமல் நாள்தோறுந் திரிகாலமும் வந்து பணிகின்றனரென்று அறிவித்தார்கள். அவை யனைத்தையுஞ் சிந்துராசன் கேட்டு முன்னஞ் சிவபிரான் சொல்லிய வாக்கின்படி நம்மைக் கொல்லுவதாகக் கணேச மூர்த்தியே இவ்வாறு உமாதேவி யிடத்தில் அவதரித்தனர்போ லிருக்கின்றதே யென்று நினைத்து இதற்கினி யென்ன செய்வோமென்று மனதிற் கவலை கொண்டிருக்கின்ற சமயத்தில், "உன்னை அவனே கொல்லுவான்" என்றொரு அசரீரி உண்டாயது. அதனைக் கேட்டவுடனே சிந்துராசனானவன் புண்ணில் வேல்பாய்ந்தா லென்னக் கோபித்து, இவ்வாறு சொன்னவனார்? அவனை இக்கிமிடத்திற் பிடியுங்கள்; அடியுங்கள்; அவனைக் கண்டதுண்டமாய் வெட்டிப் பருந்துக் கெதிரே யெறியுங்கள்; என்று ஏவலாளர்கட் காக்கியாபித்தான். அவர்கள் நாற்றிசைகளிலும் ஓடிப்பார்த்து கர்த்தனே! அவ்வாறு சொன்னவனை யெங்குங் காண்கிலே மென்று கூறினார்கள். அதற்குமேல் சிந்துராசன் சிறிது மாற்றுதவனுய் விழிகளிரண்டும் அனல் கொப்புளிக்கச் சினந்து எனக்கு மாற்றானாய் வந்த குழந்தையை இன்றே பிடித்துவருவே னென்று ஆக்கிரமித்தெழுந்தான். அதை அமைச்சர்கள்பார்த்து சிந்துராசனைப் பணிந்து அவன் மனஞ்சாந்தமாகத்தக்க நெறியினை யாலோசித்து, ஆண்டவனே! விண்டுவேமுதலிய தேவர்கள்முனிவர்கள் யாவரையும் அகலக்கூடாத சிறையில்வைத்திருக்கின்ற தேவரீர் இன்னுந்தொப்புட்கொடி வாடாத குழந்தையைச் சத்துருவாகக் கருதிப்போவதுந் தகுமா? தருமத்தைப் பாராவிடினும், அதனால் தேவரீரதுபெரும்புகழும் பெருமையும் பிரகாசமுமொருங்கொழிக்குமன்றோ? இதனிமித்தம் நமது படைத்தலைவர்கள் வெளிப்படுவார்களாயின் அஃது இழிவாகுமே. சிவபிரானுடைய புதல்வனை ஒருவராற் கொல்லவோ முடிவதோ? ஆதலால் யுத்தத்தினு மாயையினும் வல்ல சில அசுரர்களை இரகசியமாக அனுப்பி, அவர்களால் அங்கிருப்போர்கள் அறியாவண்ணம் அக்குழந்தையை வதைசெய்வதே

கருமமென்று சொன்னார்கள். அவைகளைச் சிந்துராசன்கேட்டு உடனே போரிலும் மாயையிலும் வல்லவர்களாய்ப் பாதகமனைத்திலும் ஓர் வடிவமாகக்கொண்ட கொள்கையராய்த் திருமான்முதலிய தேவர்களுங் கண்டஞ்சத்தக்க சீர்மையினையுடையவர்களா யிருக்கின்ற சில அசுரர்களைக்கூவி, நீங்கள் எந்த உபாயத்தினாலேனும் எனக்குச் சத்துருவாகிய ஈஸ்வரகுமாரனை வதைசெய்துவரக்கடவீர்களென்றுசொல்லி, அவர்கட் காடையாபரணமுதலிய சிறப்புகளையும் இரதம் கசம் முதலிய படைகளையும் உதவிசெய் தனுப்பினான்.

அவ்வசுரர்க ளதற்கிசைந்து பிரதிதினம் வேறுவேறு முறையாகத் தாங்களே நாசமடையும்படி. கணேசமூர்த்தியி னிடத்திற் போனார்கள். அவர்களுள் கிருத்திராசுரனென்பவன் ஓர் கழுகுருபங்கொண்டு தனது சிறகின்காற்றினால் அநேக பர்வதங்களையும் விருக்ஷங்களையும் நிலத்தில்விழத் தள்ளிப் பெரிய மேகங்களெல்லாஞ் சின்னபின்னப் படும்படி அலைத்துப் பூமியிலுள்ள வலிமையான வஸ்துக்களை யெல்லாம் பொடிபடுத்தி ஆகாயமார்க்கத்திற் பாய்ந்து குருவியானது நெருப்பை மின்மினிப்பூச்சென்று கருதித் தனது கூட்டில் வைக்க எடுத்துக்கொண்டு செல்வதுபோல உமாதேவியார் குளிப்பாட்டி. முன்றிலில் வைத்திருந்த பாலவிநாயக மூர்த்தியின்மீது சரேலென்று பாய்ந்து எடுத்துக்கொண்டு போயினன். அதை முனிவர்களெல்லாங் கண்டு பயந்து நின்றார்கள். கணநாதர்களெல்லாம் விநாயக மூர்த்தியை மீட்டுக்கொண்டு வருமாறு ஆகாயத்திற் பாய்ந்தார்கள். அதற்குள் அவரே தம்மை யெடுத்துச்சென்ற கழுகின் கழுத்தை ஓர்கரத்தாற் பிடித்து நெரித்து மீட்டும் உமாதேவியார் மடியில்வந்தமர்ந்தனர். கழுகுருபங் கொண்டுவந்த கிருத்திராசுரன் தனது சுயரூபத்தோடும் பூமியில் உதிரப்பிரவாக மோடும்படியாக வீழ்ந்திறந்தனன். அவன் வீழ்ந்தபோது பத்துயோசனை விசாலத்திற்கிருந்த மரங் கொடிமுதலானவைகளெல்லாந் தகர்ந்தன. அவன் சரீரத்தினின்றும் பெருகிய உதிரப் பிரவாகத்தில் திரண்ட சிலைகளும் மலைகளும் முழுகிப்போயின. இவ் வதிசயத்தைப் பார்த்திருந்த முனிவர்க ளெல்லாம் மூன்றுநாளைய குழந்தை அதிக மாயையினையுடைய அசுரனைச் சங்கரித்த தல்லவாவென்று ஆச்சரிய மானார்கள். ஏனைய அசுரர்களெல்லாம் பயந்து ஓடிப்போனார்கள்.

அதற்குமேல் இரண்டாந்திங்களில் கேமாசுரனென்றுங் குசலாசுரனென்றும் பன்னிரண்டு யோசனை யுயரமுள்ள இரண்டவுணர்கள் ஆகுவாய் உருவெடுத்துவந்து ஒருவரோ டொருவர் சண்டை செய்துகொண்டு விநாயகமூர்த்தியின்மீது வீழ்ந்தார்கள். உடனே எமதையன் பூனையாகத் திருவுருக்கொண்டு அவ்விரண்டு ஆகுவையுங் கடித்துக் கடித்துக் கொன்று விட்டனர். மூன்றாந் திங்களில் அதிகபராக்கிரமமும் பதினைந்து யோசனை யுயரமுமுள்ள குருராசுரனென்பவன் பூனையுருவங்கொண்டு சுவாமிக் கெதிரில் வந்தனன். அதனைச் சுவாமி யறிந்து தமது நான்குவேதங்களையும் நினைந்தருளினர். உடனே அவ்

வேதங்கள் நாய்வடிவாகவந்து பூனையாக விருக்கின்ற அசுரனை கடித்துக் கொன்று போயின. நான்காந் திங்களில் பலாசுரனென்பவன் ஓர் முனிவர் குமாரனுருக்கொண்டுவந்து நாம் விளையாடலாம் வாவென்று விநாயகமூர்த்தியை யழைத்தான். அவனை சுவாமி விளையாட்டினாலேயே கொன்றுவிட்டனர். அவன் இறந்தபின்பு தனது சுயரூபத்தோடு இருபது யோசனை விசாலத்திற்குப் பூமியில் வீழ்ந்தான். ஐந்தாந்திங்களில் வியோமாசுரனென்பவன் ஆகாயத்தை யளாவிய ஓர்மாமரமாக வுருக்கொண்டு நின்றான். அதிலுள்ள காய்கனிகளைச் சிலமுனிச்சிறார்கள் பறித்துத் தின்று அங்ஙனே மாய்ந்து போனார்கள். அதனால் அவர்களுடைய தாயர்களெல்லா மிகவுந் துக்கித்து வருந்தினார்கள். அவ்வதிசயத்தை விநாயகமூர்த்தி யறிந்து அங்கிபிடத்தில் அம் மாமரத்தருகில் வந்து அதில் தேன்கூடு கட்டியிருக்கின்ற ஓர் பொந்தினைக் கண்டு நுழைந்தார். உடனே அப்பொந்தானது சுவாமியை உள்ளேயடக்கி மூடிக்கொண்டது.

அதைப் பார்த்து முனிவர்களெல்லாம் நடுங்கி, இஃது மாமரமல்ல, ஏதோ ஓர் மாயையென்று பயந்து ஓடினார்கள். அப்போது சுவாமி அம் மரத்தினுள்ளிருந்தவண்ணமே அதை அலைத்துப் பிளந்து, முன்னொருபோது தூணினின்றும் உதித்த நரசிங்கத்தைப்போல வெளிவந்து அதனடியில் இறந்து கிடக்கின்ற முனிச்சிறார்கட்கு உயிர்கொடுத் தெழுப்பினர். பின்னர் யாவரும் ஆனந்தங்கொண்டு, ஆயிரத்தெட்டண்டங்களையும் ஒரேகுடையி லாண்ட சூரபன்மனாகிய மாமரத்தைச் சுப்பிரமணியதேவர் துணித்தெறிவாராயின் அவர்தமையனாகிய இவருக்கு இம்மாமரத்தைத் துணிப்பது அரிதோவென்று துதிசெய்தார்கள். ஆறாந்திங்களில் நாளொன்றற்கு நூறு எருமைகளைத் தின்றுவருவதால் சதமயிட பக்ஷணியென்னும் பெயரினையுடைய ஓர் அசுரமாதானவள் இந்திராணியைப்போல வுருக்கொண்டு உமாதேவியாரிடத்தில் வந்து, தாயே ! யான் புலோமிசை. எனதுகாதலர் அவுணராசனுடைய சிறையிலகப்பட்டு நெடுநாளாக வருந்துகின்றனர். யான் அவர்களினின்றுந் தப்பியோடிவந்து தேவரீரைச் சரணடைந்தேன். இனி யெனக்குத் துன்பமணுகாதபடி தேவரீர் பாதுகாத்தருளவேண்டு மென்று இரந்தாள். அதைக்கருணைநாயகியாகிய உமாதேவியார் உண்மையென்றே கருதி, ஓசசியே! சூரியன் இருளையுண்ணுமாறுபோல இன்னுஞ் சிலநாளையுள் அவுணரையெல்லாம் இவ்வறுபுயராகிய விநாயகமூர்த்தி யுண்டருளித் தேவர்கட்கெல்லாங் கிருபை வழங்குவர். அப்போது இந்திரன் சிறையும் நீங்கும். அதுகாறும் நீ மனக்கவலையை யொழித்து இங்கனே யிருவென்று திருவாய்மலர்ந்து நல்ல போசனமும் ஆடையாபரணாதிகளும் அவளுக்குக் கொடுத்தருளினர். அவ்வாறே அப்பாதகி சிலநாளிருந்து ஓர்நாள் உமாதேவியார் சோர்ந்து நித்திரைசெய்யுஞ் சமயம்பார்த்து விநாயகமூர்த்தியைக்கைக்கொண்டு ஆகாயமார்க்கத்திற் சென்றனள். சுவாமி அவள் ஒக்கலி லிருந்தவண்ணமே அவள் செவியைப் பிடித்திழுத்து, நிலத்திற் சாய்த்து நெருக்கி, மீட்டும் உமா

தேவியாரிடத்தி லெழுந்தருளினர். ஏழாந்திங்களில் கமடாசுர னென்பவன் சுவாமி திருவிளையாடல் செய்யுமிடத்தில் ஆமையுருக் கொண்டு மெல்லமெல்ல ஊர்ந்து வந்தான். அப்போது விநாயக மூர்த்தியானவர் முன்னர் திருப்பாற் கடலை கலக்கிய விண்டுவாகிய ஆமையினுடலை குழப்பி யடக்குந் தமது தாளினால் அவனது வலியெல்லாங் குன்றும்படி துவைத்துக் கொன்றனர். எட்டாந் திங்களில் உமாதேவியார் கணேசமூர்த்தியை யெடுத்துக் கொண்டு சில பாங்கியரோடுஞ் சோலைகளிற் சென்று வசித்திருந்தனர். கணேசமூர்த்தி அச் சோலையிற்றனியே விளையாடல் செய்திருந்தனர். அச்சமயத்தில் வலியில் மகமேருவை நிகர்த்தவனும் வேகத்தில் சூரியனுடைய குதிரைகட்கு ஒப்பானவனுமா யிருக்கின்ற கற்பகாசுரனென்பவன் ஓர் குதிரை யுருவங் கொண்டு சுவாமிக்கெதிரில் வந்தனன். உடனே அக்குதிரையின்மீது சுவாமி ஆரோகணித்து அதனை வாயுவேகத்தினும் விரைவாய்த் திரிலோகங்களினுஞ் செலுத்தி அச் சோலையில் வந்து இறங்கினர். அப்போதக் குதிரையாகிய அவுணனானவன் குடலறுபட்டுக் கடைவாயில் விலாழி வழியும்படியாக ஓர் பர்வதஞ்சென்று கடலில் வீழ்ந்தாற்போலத் தனது இயல்பான வுருவத்தோடு இருபத்தைந்து யோசனை விசாலத்திற்கு விழுந்திறந்தான். ஒன்பதாந் திங்களில் துந்துபிக்குரலுடைமையாற் றுந்துபியென்னும் பெயரினையுடைய ஓரசுரன் விடத்தை நாவற்கனிகளைப்போலச் சமைத்து ஓர் முனிச்சிறுவன்போல் உருவெடுத்துவந்து கணேசமூர்த்தியை யழைத்தான். அதனைக் கணேச மூர்த்தி யறிந்து தமக்கு உமாதேவியார் அமிர்தங் கலந்து செய்து கொடுத்த மோதகத்தோடும் அவனருகிற் சென்று அவன் கொணர்ந்து வந்த நாவற்கனிகளை யெல்லாம் வாங்கித் தலையை அசைத்தசைத்து உண்டருளிய பின்னர் தமது கரத்திலிருந்த மோதகத்தை அவனுக்குக் கொடுத்தார். தீயோர்க்கு நல்லபொருளுங் கெட்டபொருளாகும். என்று மேலோர் சொல்லும் வாக்கியத்தின்படி, அம் மோதகத்தை அப்பாதகன் புசித்தமாத்திரத்தில் அதிற் கலந்திருந்த அமிர்தமே விடமாகி அவனைக் கொன்றது. அவன் கொடுத்த விடமே எமதையனுக் கமிர்தமாயது. பத்தாந் திங்களில் விண்ணை முட்டிய சிரத்தினை யுடையவனாகியும், விண்டுவாதி தேவர்களும் அஞ்சத்தக்க வலியை யுடையவனாகியு மிருந்த அசகாசுர னென்பவன் பூமியைத் தாங்கும் ஆதிசேடனோ வென்று மலைக்கும்படியான ஓர் மலைப்பாம்பாக உருக்கொண்டு உமாதேவியா ரிருக்கின்ற சோலையின்கண் வந்து சில முனிச் சிறார்களோடுஞ் சென்று தனியே விளையாடற்செய்திருக்கின்ற கணேசமூர்த்தியை யெடுத்து இராகு சந்திரனை விழுங்குவதுபோல விழுங்கினன். உடனே இடையிற் சர்ப்பக் கச்சினை வீக்கிய எமது கர்த்தன் உதயகிரியி லெழுந்த இளங்கதிரைப்போல அப் பாம்பின் கட்டைப் பிளந்தெழுந்து திருமேனி முழுவதும் உதிரமாக உமாதேவியா ரிடத்திற் சென்றனர். அவர் தமது பாலகனை சீராட்டி எடுத்துக்கொண்டு மீட்டுந் தமது கோயிலைநோக்கிச் சென்றனர். பின்னர் மலைப்பாம்பாகவந்த அசுரன் தனதுசுயவுருவத்தோடு நூறுயோசனை விசாலம் மலைபோல் விழுந்து இறந்தான். அவனுதரத்தி னின்றும் பெருகிய உதிர வெள்ளமானது ஓர் பெரிய ஆறாகஓடிக் கடலிற் பாய்ந்தது. பதினோராந் திங்களில் முன்போல உமாதேவியார் சிலவிருடியர் பத்தினிகளோடு குளிர்ந்த பொழிலிற் சென்று தமது குழந்தையை விளையாட விட்டிருந்தனர். அப்போது அப் பாலவிநாயகமூர்த்தி அவ்விருடியர் பத்தினிகளிடத்திற் சென்று, ஒருத்தி மடித்தலத்தினின்று மற்றொருத்தி மடித்தலத்தி லேறியும், முத்தங் கொடுக்க வேண்டினோர்க்கு முத்தங் கொடுத்தும், சிலர் மார்பிற்சென்று தழுவியும், சிலர் தோளைப்புல்லி யேறியும், சிலர் ஆபரணங்களை யறுத்தெறிந்தும், சிலரை அடித்தோடி ஓர் மரத்திலே யொளித்துக்கொண்டும், தம்மை யடித்தோடிய பேரை உடனே பிடித்துவந்தும், ஒவ்வொருத்தி விழிகளை மூடிவிட்டும் தமது விழிகளை அவர் மூடிவிட்டால் புன்சிரிப்போடுமோடி மற்றொருத்தியைப் பிடித்துவந்தும், இவ்வாறு பற்பல விளையாடல் செய்திருந்தனர். அப்போது சடலாசுரனென்பவன் எட்டு கால்களையும்-இரண்டு தலைகளையும் - அழலைப்போன்ற விழிகளையும்-பிறைபோல் வளைந்த கோரைப்பற்களையு முடைய சரபப்பட்சியுருவமாய்த் தனது சிறகை விரித்துக்கொண்டு ஆகாயமார்க்கமாகப் பறந்து வந்தனன். அவனது சிறகின்காற்றினால் மலைகளெல்லா முடிசாய்ந்தும், பறவைகளனைத்துஞ் சின்னபின்னமாக முறிந்தும், சமுத்திரங்கள்பொங்கி அணைபுரண்டும் போயின; அதை இருடியர் பத்தினிகள்கண்டு நடுங்கி ஓடிப்போனார்கள். உமாதேவியார் பயந்து சிவபிரானுக் கறிவிக்குமாறு விரைந்து சென்றனர். ஆயினும் முன்னொருபோது நரசிம்மத்தைத் தாக்கிய எண்டோட் சரபத்தினுடைய குமாரராகிய கணேசமூர்த்திமாத்திர மஞ்சாமல் நெடிதுவளர்ந்து அவ்வவுணச் சரபத்தினுடைய கால்களைப் பற்றியிழுத்து ஓர் பெரியபாறையின்மீது மோதிக் கொன்றனர். அதைக்கண்ட முனிவர்களெல்லா மாச்சரியங் கொண்டு இவர் தந்தை முன்னர் சிங்கத்தை வெல்லுவதற்குச் சிம்புளுருக் கொண்டனர். இப்போதிவர் அச் சிம்புளையே கொன்றமையால் இவரைச் சிம்புட் சிம்புளெனச் சொல்லத்தகுமெனத் துதித்துப் பணிந்தார்கள். பன்னிரண்டாந் திங்களில் வீமாசுரனென்பவன் ஓர் விசுவகன்மாவாக வுருவெடுத்துச் சலாசுரன்-சிலாசுரன்-என்னு மிருவரை இரண்டு சிலம்புகளாக்கிக்கொண்டுவந்து கணேசமூர்த்தியினுடைய திருவடிக்கு முன்னேவைத்துப் பணிந்தான். சர்வஞ்ஞமூர்த்தியாகிய எமதையன் அவ் வஞ்சகத்தை யறியாதவர்போலத் தமது மனத்தில் வேறொரெண்ணத்தை வகித்து அவனோடு இனியவார்த்தைகளாடி மகிழ்வித்து அச் சிலம்புகளையெடுத்துத் தமது திருவடிகளி லணிந்துகொண்டு நிருத்தமாடினர்.

இவ்வாறு கணேசமூர்த்தி நிருத்தமாடலும் பூதங்கள் - புவனங்கள்-மலைகள்-கடல்கள்-உயிர்த்தொகைள்-வேதாகம புராணங்கள் முதலானவைகளோடு பிரமர்கள் - விண்டுக்கள் - உருத்திரர்கள் - முப்பத்து முக்கோடி தேவர்கள்-நாற்பத்தெண்ணாயிர முனிவர்கள்-கருடர்-கின்னரர்-கிம்புருடர் - சித்தர்-வித்தி

யாதரர் - பூதர் - பைசாசர் - ஆகாய வாசிகள் - போகபூமியர் முதலாயுள்ள
சகலரும் ஆடினார்கள். சிலம்புகளா யிருந்த இரண்டசுரர்களும் அந் நிருத்தத்
தைச் சகிக்கமாட்டாது தங்களாண்மை யனைத்துங்குன்றி மிகவும் வருந்தினார்
கள். அப்போது கணேச மூர்த்தியானவர் தமது பாதங்களை வீசி உதறினர்.
உடனே அச்சிலம்புகள் சுவாமி பாதங்களினின்று நீங்கி வீமாசுரன் பேரில்
விழுந்து புரட்டிக் கொன்றது. பின்னர் அச்சிலம்புகளாய் வந்த இரண்டசுரர்
களுந் தங்கள் சுயரூபத்தோடு மலைபோல விழுந்திறந்தார்கள். இப்படி அம்
மூவரு மிறந்தமையை முனிவர்கள் கண்டு சந்தோஷித்து வேதச் சிலம்பைத்
திருவடிகளி லணிந்து மேருச்சிலம்பை வில்லாக வளைத்துக் காத்தி லேந்திய
சிவகுமாரனுக்கு இம்மாயைச் சிலம்புகளை மாய்ப்பதோ அரிதென்று பணிந்து
துதிசெய்தார்கள். அப்பனிரண்டாந் திங்களிலேயே மற்றொரு நாள் சமர்த்திற்
பிறந்த ஆவிசனென்னும் பெயரினையுடைய அவுணனானவன் ஓர் மதயானைப்
போல வுருக்கொண்டு திசைகளைக் காவல்கொண்டிருக்கின்ற ஐராவத முதலிய
யானைகளுங் கண்டஞ்சும்படி அட்ட குலாசலங்களையும் பிளந்து சில முனிச்சி
றார்களோடு கணேசமூர்த்தி விளையாடல் செய்திருக்கின்ற வனத்தில் வந்த
னன். அந்த யானையின் வரவைக் கண்டவுடன் முனிச்சிறார்க ளெல்லாம் பயந்
தோடத் தலைப்பட்டனர். அவர்கட்கு முன்னொருபோது உமாதேவியுங் கண்டு
நடுங்கும் படியாக வந்த ஓர் மதயானையைத் தமக்காடையாக உரித்துப் போர்த்
தருளிய சிவபிரான் குமாரராகிய கணேச மூர்த்தி அஞ்சாதீர்களென்று கைய
மர்த்தி, அந்த யானையினெதிரிற் சிங்கவேறு போலப் பாய்ந்து தமது காத்தி
லேந்திய அங்குசப் படையினால் அதன் கவுளிற் புடைத்து மும்மதங்களும்
அருவி போலப் பாயும்படியாக இரண்டு மருப்புகளைக் காத்தாற் பற்றிப் பிடரி
யின் மீதேறி அதனது கழுத்தடியிற் றமது காற்பெரு விரலையூன்றி மேகங்க
ளைப்போலப் பிளிறிட்டோடும் படியாக வலித்து அதனது வலியெல்லாங் குன்
றும்படி அஷ்ட திசைகளினுங் கடாவி மீட்டுந் தாமிருந்த வனத்தில் வந்தமர்ந்
தனர்; உடனே அந்த யானை இடியேற்றினைப் போலக் குரல்காட்டி வீழ்ந்
திறந்தது.

இரண்டா மாண்டில் கூடாசுர னென்பவன் கணேசமூர்த்தி விளையாடல்
செய்திருக்கின்ற வனத்திலுள்ள ஓர்தடாகத்தில் ஆலகாலமு மஞ்சும்படியான
கொடிய விடங்களைக் கலந்து ஆகாயத்தில் தனதுருவை மறைத்துப் பார்த்
திருந்தனன். அப்போது அத்தடாகத்திற்படிந்து வருங்காற்றினால் அவ்வனத்தி
லுள்ள விருக்கங்க ளெல்லாந் தீய்ந்து விளையாடல் செய்திருந்த முனிச்சிறார்க
ளெல்லா மாய்ந்தனர். அதைக் கணேச மூர்த்தி யறிந்து, தமது கிருபா நோக்
கத்தால் அத்தடாகத்தைப் பார்த்தருளினர். உடனே அத்தடாகத்திற் கலந்த
விடமெல்லாம் அமிர்தமாகி அதிற்படிந்து வந்த காற்றினால் விருக்கங்க ளெல்
லாந் தளிர்த்து, முனிச்சிறார்க ளெல்லாந் துயில் விட்டவர்களைப்போல வெழுந்
திருந்தார்கள். பின்னர் காமதகனராகிய சிவபிரானுடைய குமாரர், தமது

நெற்றி விழியினால் ஆகாயத்தைப் பார்த்தனர். உடனே அவ் வாகாயத்தில்
மறைந்திருந்த கூடாசுரன் வெந்து நீறாயினன். மூன்றா மாண்டில் அவ்வனத்
திற்கு இருபது யோசனை தூரத்தி லிருக்கின்ற மற்றொரு வனத்தில் கணேச
மூர்த்தி யானவர் சில முனிச்சிறார்களோடுஞ் சென்று அங்கிருந்த ஓர் தடாகத்
தில் ஸ்நானஞ்செய்து அதிற் படர்ந்திருக்கின்ற புட்பங்களைக் கொய்து விளை
யாடல் செய்திருந்தனர். அப்போது விகிர்தாசுரனென்பவன் மகரமீனாக வுருக்
கொண்டு அத்தடாகத்தில் வந்து அலைத்தனன். அதை முன்னொருபோது கட
லிற் கிடந்த விண்டுவாகிய மகரத்தை வலையிட்டுப் பிடித்த சிவபிரான் குமா
ராகிய கணேசமூர்த்தி யறிந்து உடனே அதனை இறுகப் பிடித்துக் கரையி
லெறிந்தனர். அவ்வவுணன் தனது சுயரூபத்தோடு விழுந்து இறந்தனன். இப்
பால் கணேச மூர்த்தி யானவர், அவ்வனத்தினின்று நீங்கித் தமதாசிரமத்தை
நோக்கி வருகையில் இடும்பாசுர னென்பவன் வழியில் ஓர் பர்வத வுருவங்
கொண்டு ஆகாயத்தை யூடுருவ வளர்ந்து அட்ட திசைகளையும் விழுங்கிப் பர
ந்து நின்றனன். அதைக்கணேசமூர்த்தி கண்டு நெடுமூச் செறிந்தனர். உடனே
அம்மலையானது சண்டமாருதத்தி லகப்பட்ட பஞ்சுபோல பிளந்து பொடியா
கப் பறந்தது. அவ்வற்புதத்தை முனிச்சிறார்கள் கண்டு இவர் தம்பியாகிய சுப்
பிரமணிய தேவர் முன்னொரு போது சகலமாயையினும் வல்ல கிரவுஞ்ச கிரி
யைத் தமது வேலாயுதந்தாத் துளைந்துப் பொடி படுத்தின ரென்றால், இவர்
இம்மலையை வென்றதும் ஓர் வியப்போவென்று சந்தோஷித்தார்கள்.

நாலாமாண்டில், ஓர்நாள் உமாதேவியார் ஸ்நானஞ்செய்து சிவலிங்க
பூசை நடாத்திக்கொண் டிருக்கின்ற சமயத்தில் வீதியில் விளையாடல் செய்தி
ருந்த விநாயக மூர்த்தியானவர் ஓடிவந்து அம்மனிடத்திற் பாலுண்ணுமாறு
அடுத்தனர். அப்போது உமாதேவியார் அவரைச் சிவலிங்கபூசை நிறைவேறு
கின்ற வரையில் நீ அருகில் வாராதே யென்று தடுத்தனர். பின்னர் தடுத்தற்
குரிய தலைமைபெற்ற காரியத்தைத்தாமே அவருக் கறிவிப்பார் போல அவர்
மனதிற் பாவனை செய்திருந்த வடிவமே தாமாகி, ஐந்து முகங்களுங் கால
கண்டமும் பத்து கரங்களும் ஏனைய அவயவங்களுந் தோன்றும்படி சதாசிவ
மூர்த்தி வடிவாக நின்றனர்; அவ்வடிவை உமாதேவியார் கண்டு அன்பு மச்ச
மும் கொண்டு சாஷ்டாங்கமாகப் பணிந்து, சுவாமீ! அடியேன் செய்த பிழை
யைப் பொறுத்தருள வேண்டு மென்று பிரார்த்தித்தனர். அப்போது தமது
தாயினுடைய மனக்குறைவைப் பார்த்து, அன்னையே! இன்று முதல் யான்
வேண்டும்போ தெல்லாந் தடுக்காமல் எனக்குப் பால் கொடுத்து வருகின்றீரா
வென்று புன்னகையோடுங் கேட்டு, மீட்டும் அவர் மடித்தலத்திற் குழந்தை
யாகிப் பாலுண்டிருந்தனர்.

அச்சமயத்தில் கருத்தமாசுர னென்பவன் காருட வித்தையில் வல்ல
வன்போல உருவெடுத்து உமாதேவியா ரெதிரில் வந்து அந்த விளையாடிக்

கொண்டிருந்த முனிச்சிறுவர்களை எல்லாம் எடுத்து விழுங்கியும், மீட்டுமவர்கட்கு வருத்த முண்டாகாதபடிச் சிலரைத் தனது காதுகளினாலும், சிலரை விழிகளினாலும், சிலரை நாசிகளினாலும், வெளிப்படுத்தி, மீளவும் அக்காது-விழி-நாசிகளின்வழியாக உள்ளே புகவிட்டும் பின்னரவர்களை யெல்லாம் வாயின் வழியாக உமிழ்ந்தும், அளவற்ற விந்தைகளை நடாத்தி இவனையும் விழுங்கி யுமிழ்கின்றேன் பாரீர்களென்று சொல்லி உமாதேவியார் மடித்தலத்திற் பாலுண்டிருந்த கணேச மூர்த்தியை யெடுத்து விழுங்கி மீட்டும் உமிழாமல் சரோ சரோவென் றெழுந்தனன். அப்போது எமதையன் உமாதேவியார் திருமுகத்தினின்றுந் தோன்றி அவ்வசுரனைக் கன்னத்திற் புடைத்துக் கொன்றனர். அவ்வற்புதத்தைக் கண்ட முனிவர்களெல்லாம் ஆனந்த மடைந்து அண்டகோடிகளையெல்லாம் தமது அகட்டினுள் அடக்கி ஆதரிக்கவல்லகடவுள், ஓர் தானவனுடைய வயிற்று ளடங்குமோ வென்று துதிசெய்தார்கள். உலகமாதாவாகிய சாக்ஷாத் உமாமகேஸ்வரியும் கவலையை யொழித்து முகமலர்ந்திருந்தனர்.

ஐந்தா மாண்டில், கடகாசுரனென்பவன் ஓர் ஒட்டகமாக உருக்கொண்டு வந்தனன். அதைக் கணேசமூர்த்தி யறிந்து, அவன் ஒரு காதந் தூரத்தில் வரும்போதே வீட்டினின்று சென்று கொன்றனர். மற்றொருநாள் சாயைப் பிடிப்பதில் வல்லவனான சாயாசுர னென்பவன் கணேசமூர்த்தியினுடைய சாயையைப் பற்றவந்தனன். அதை எமது கர்த்தன் அறிந்து அவனை உறுத்துப் பார்த்தனர். உடனே அழலிற்பட்ட பஞ்சுபோல மாய்ந்து சாம்பராயினர். மற்றொருநாள் சஞ்சலாசுர னென்பவன் முனிச்சிறுவர்களோடு தானுமோர் முனிச்சிறுவனாகி, கணேசமூர்த்தியோடு பந்தாட வந்தனன். அதை எமதைய னறிந்து அவ் வாட்டத்திலேயே அவன் வலியனைத்துங் குன்றி தோல்வியுறச் செய்தனர். பின்னரவ்வவுணன் புறங்கொடுத்து ஆகாயத்தி லெழுந்தனன். அவனோடு விநாயகமூர்த்தியு மெழுந்து போராடிக் கொன்றுவிட்டு மீண்டனர். மற்றொருநாள் கணேசமூர்த்தியானவர் முனிவர்களுடைய மாளிகைதோறும் ஏககாலத்திற் சென்று பலகுறும்புகளைச்செய்து விளையாடினர். அதற்கு அம்முனிவர் பத்தினிகள் கோபித்து, பிடித்துக்கொண்டு சென்று உமாதேவியாரிடத்தில் முறையிட்டு அவர்பாலொப்புவித்து மீண்டனர். அவர்கள் மீண்டு தங்கள் மனைகளில் நுழைவதன்முன், மீட்டும் முன்போலவே அவரவர் மனையின்கண் பலகுறும்புகளை நடாத்தி விளையாடல்செய் திருந்தனர். அதை அம்முனிவர் பத்தினிகள் கண்டு அச்சமுற்று ஈதென்ன அற்புதமென்று அதிசயித்து, சுவாமீ! ஏகமாகியும், அனேகமாகியும், எங்குமாகியும், போகமாகியும், யோகமாகியு மிருக்கின்ற புண்ணிய மூர்த்தியாகிய தேவரீருடைய மகத்துவத்தை மோகத்தில் மூழ்கியிருக்கின்ற அடியேங்கள் இன்றறிந்தனம். இனி அடியேங்கள் செய்யும் பூசைகளைக் கைக்கொண்டு காத்தருள வேண்டுமென்று பிரார்த்தித்து, அவ்வவர்கள் மனைதோறும் அவருக்குப் பூசைசெய்து அப்பம்மோதகம் முதலாகிய சிற்றுண்டிகளை வைத்து நிவேதித்தார்கள். அதற்கு ஒப்பற்ற

கணேசமூர்த்தியானவர் மனமகிழ்ந்து இச்சிற்றுண்டிகளை உங்கள் சிறுவர்கட்குக் கொடுமின்கள் அதனால் நமக்குத் திருப்தியாகுமென்று திருவாய் மலர்ந்தனர். அன்றுமுதல் கணேசமூர்த்திக்கு நிவேதித்த சிற்றுண்டிகளைத் தங்கடங்கள் சிறுவர்களுக்குக் கொடுத்து வந்தார்கள். அதுபோலவே இக்காலத்திலும் விநாயகமூர்த்திக்கு நிவேதிக்குஞ் சிற்றுண்டிகளைத் தங்கடங்கள் சிறுவர்கட்குக் கொடுத்து வருகின்றார்கள்.

பரசு, தாமரை, பாசம், அங்குசங்க ளுற்பவம்.

ஆறாமாண்டில் ஓர்விஸ்வகன்மனானவன் பரசு-தாமரைமலர்-பாசம்-அங்குசம் என்னு மிவைகளைச் செய்துகொண்டுவந்து சிவபிரானையும் உமாதேவியாரையும் பணிந்தெழுந்து பின்னரவ்வாயுதங்களைக் கணேச மூர்த்தியினுடைய திருவடிக்கு முன்னேவைத்து வணங்கினான். அவனைக் கணேசமூர்த்தி நோக்கி இவ் வாயுதங்கள் யாதென்று வினவினர். அதற்கவன் பணிந்து, சுவாமீ! அடியேன் புதல்வியாகிய சமுஞையென்பவளைச் சூரியனுக்கு விவாகஞ் செய்து கொடுத்தேன்; அவள் அவனது சரீரவெம்மையை யாற்றமாட்டாது தனது சாயையைத் தன்னைப்போல வடிவாக்கிவைத்து மீட்டு மென்மனையின்கண் வந்திருந்தனள்; அவள்பின்னையே சூரியனுந் தேடிவந்தனன்; அப்போ தவள் பயந்து ஓர்பெண்குதிரையாக உருக்கொண்டு வனத்திற் சென்றனள். அதற்குமேல் எனது மனைக்கண்வந்திருந்த சூரியனுடைய வுருவத்தை ஆயுதத்தினாற் கடைந்தேன். பின்னரவன்சாந்தமாகித் தானுமோ ராண்குதிரையாக வுருக்கொண்டு வனத்திற் பெண்குதிரையாகத் திரிகின்ற தனது பத்தினியைச் சேர்ந்தனன். அப்போது அவர்களிடத்தினின்றும் அசுவினிதேவர்கள் பிறந்தார்கள். பின்னரிருவருந் தங்கடங்கள் சுயவடிவைக்கொண்டு வாழ்ந்திருந்தார்கள். சூரியனைக்கடைந்தபோ துதிர்ந்தபொடிகளால் ஓர் சூலாயுதத்தையும், இவ்வாயுதங்களையுஞ் செய்தேன். சூலாயுதத்தைச் சிவபிரானுக்குக் கொடுத்தேன், மற்ற இந்த நான்கையும் மூலகாரணமாகிய தேவரீருடைய திருவடிக்கண் வைத்தேன். அடியேன் இருதார்த்தனாகுமாறு சுவாமிகள் அவைகளைத் தரித்தருளல் வேண்டுமென்று பிரார்த்தித்தனன். அதன்மீது கணேசமூர்த்தி கிருபைகூர்ந்து, அன்பனே! உலகிலுள்ளவர்கட்கு உபகாரஞ் செய்யும்பொருட்டு இவைகளை யாம் அங்கிகரித்தனமென் றெடுத்துத் தரித்துக்கொண்டு, அவனுக்கு அளவற்ற வரங்களைக் கொடுத்தருளினர். பின்னர் விஸ்வகன்மன் பெருமகிழ்ச்சியோடு சுவாமியிடத்தினின்றும் விடைபெற்றுத் தனது யதாஸ்தானத்தை யடைந்தனன். அத்தினம் விருகாசுரனென்பவன் செந்நாயாக வுருக்கொண்டு கணேசமூர்த்திக் கெதிரேவந்தான். உடனே தாம் தரித்தருளிய ஆயுதங்களைப் பரிட்சிப்பவர் போல அதன்மீது அங்குசத்தை யெறிந்து சங்கரித்தருளினர். ஏழாமாண்டில் காசிப முனிவரும் அவர் பத்தினியாகிய அதிதியும்வந்து, கணேசமூர்த்தியைப் பலமுறை பணிந்து சிறந்த வரங்களைப் பெற்றுச் சென்றனர். அத்தினத்தில் திருநாந்தன் காலனென்னு மிரண்டசுரர்கள் ஆளியாக வுருக்கொண்டு கணேச

மூர்த்திக் கெதிரே வந்தார்கள். அவர்கள் துதிக்கரத்தைச் சுவாமிகள் பிடித்து முன்னும் பின்னுமாக விதிர்த்து ஒன்றோடொன்று முட்டவிட்டு சின்னபின்னப் படுத்தி மாய்த்தருளினர்.

மயூரவாகனோற்பவம்.

கேட்டீர்களோ சவுனகாதி முனிவர்களே! இவ்வாறு தம்மைக் கொல்ல வந்த துட்டர்களை எல்லாந் தாமே கொன்ற விநாயகமூர்த்தியானவர், எட்டாமாண்டில் மயில்வாகனத்தை யூர்ந்தருளிய திருவிளையாடலைச் சொல்லுவோங் கேட்பீர்களாக.

காசிபமுனிவருடைய மனைவிகள் பதின்மூவருள் வினதையென்பவள் மனைக்குக் கத்துருவென்பவள் சென்றாள். முன்னொருபோது இக்கத்துருவென்பவள், வினதையை வஞ்சகத்தினால் கொடியசிறையில் வைத்தவளாதலால், அதை அவ்வினதையானவள் தன்மனதிலெண்ணி அவள்வரவைக்கண்டுங் காணாதவள்போல விருந்தனள். அவள் புதல்வனாகிய சடாயுவென்பவனும் எனது தாயினுடைய உட்கோளை முன்னரே யறிந்திருக்கின்றவனாதலால் அவளுக்கு மாற்றாளாகிய கத்துருவினுடைய கூந்தலையும், மேல்வத்திரத்தையும் பிடித்திழுத்து வீதியிற் றள்ளி எனது தாயை நெடுங்காலங் கொடிய சிறைவைத்திருந்த மகாபாவி! இன்னும் என்செய்வதற்கு இங்கு வந்தனை? போபோ வென்றுத் துரத்திவிட்டான். அதன்மீது கத்துரு வென்பவள் மிகுந்த அவமானத்தால் முகம் வாடித் தனது புத்திரர்களாகிய நாகர்கள் வாழ்கின்ற பாதல லோகத்திற் சென்றனள். அவள் முகவாட்டத்தோடு மிக்க கிலேசத்தினை யடைந்து வருவதை நாகராசனாகிய ஆதிசேடன் பார்த்து, மிகுந்த பயபக்தியுடனே எதிர்சென்று பணிந்து, தாயே! தேவர்கள் அசுரர்கள்முதலான ஆன்மகோடிகளைச் சிருட்டிக்க வல்ல காசிப முனிவருடைய பிரியமுள்ள பத்தினியாகியும், மூவுலகையுந் தாங்கும் அடியேனையுள்ளிட்ட நாகராசர்களைப் பெற்ற தாயாகியு மிருக்கின்ற தேவரீர் மிகுந்த வருத்தத்துடனே முகம் வாடித் தனியா யிங்கு வருவதற்குக் காரணம் யாதென்று கேட்டனன். அதைக் கேட்டலுங் கத்துரு வென்பவள் கலங்கி யழுது, மைந்தனே! யெனது மாற்றாளாகிய வினதையிடத்திற் சென்றேன். அவள் என்னைக் கண்டுங் காணாதவள்போல விருந்தனள். அதன்மீது அவள் புத்திரனான சடாயு வென்பவன், என்னைத் துன்பப்படுத்தினன். தாயென்று சிறிது மறியாமல் என்னைத் துன்பப்படுத்திய சடாயுவை யாவரும் அவமதிக்கும்படி நீ இங்கே சிறையில் வைப்பையாயின் இனி யான் உயிரோடு வாழ்வேன். இல்லையேல், இக்ஷணத்தில் என்னுயிரை மாய்ப்பே னென்று சொல்லினள். அதைக்கேட்ட ஆதிசேடன் அத்தியந்த கோபங்கொண்டு, இக்ஷணத்தில் அச்சடாயுவினுடைய உயிரைவாங்குகின்றேனென்று ஆலகாலத்தைப் போலச் சீறி யெழுந்தான். அப்போது வாசுகி-அனந்தன்-தக்கன்-சங்கபாலன்-குளிகன்-பதுமன்-மகாபதுமன்-கார்க்கோடகன் என்னும் அஷ்ட நாகர்களும்

ஆதிசேடனைப்பணிந்து, கர்த்தனே! தேவரீர்செல்கின்றவேலைக்கு யாங்கள்செல்லவல்லோ மென்று விடைபெற்று, அளவற்றநாகசேனைகளுடன் பலவழியாகப் பூலோகத்தில் வந்து வினதை வசிக்கும் மாளிகையை யடைந்தனர். அதை அவள் புத்திரராகிய சடாயு-சம்பாதி-சேனன் என்னும் மூன்று பட்சிராசர்களுங் கண்டு நாகராசர்களின்மீது பாய்ந்து, அவர்களையெல்லாஞ் சிறகுகளினாலே யடித்தும், மூக்கினாற் கொத்தியும், நகங்களினாற் கீறியும் சின்னபின்னப் படுத்தினர். அப்போது சில நாகர்கள் அஞ்சிப் பிலவழியாகப் பாதலத்திற் கோடிப்போனார்கள். அதை வாசுகி முதலிய எண்மருங் கண்டு, அளவுகடந்த கோபமுற்று அளவற்ற யுத்தங்களைச் செய்து அம்மூன்று பட்சிராசர்களையுங் கைப்பிடியாகப் பிடித்துத், தமது பாதல லோகத்திற் கொண்டுசென்று அவர்களை அகலற்கரிய அருஞ்சிறையில் வைத்துத் துன்பஞ் செய்தார்கள். அதைக் கண்ட கத்துரு வானந்தமாயினள்.

இப்பால் வினதையானவள், மிகுந்த துயரமடைந்து தனது காதலராகிய காசிப முனிவரிடத்திற் சென்று பணிந்தெழுந்து, நடந்த செய்திகளை விபரமாகக்கூறி, சுவாமீ! என தருமைப் புதல்வர்களுடைய சிறையினை விடுவிப்பதற்கு இன்னும் ஓர் பராக்கிரமமுடைய புத்திரன் அடியாட் குண்டாகும்படியாகக் கிருபைசெய்யவேண்டுமெனப்பிரார்த்தித்தனள். அதைக் காசிபமுனிவர் கேட்டு பெண்ணே! நீ யொன்றிற்கு மஞ்சற்க. சிறைபட்டிருக்கின்ற உனது புத்திரர்களை மீட்பதற்கு யாம் உன்னுடனே கூடி உனது வயிற்றில் ஓர் முட்டையை யுண்டாக்குகின்றோம். அம்முட்டை கணேசமூர்த்தியாலன்றி மற்றை யாவராலும் உடைக்க முடிவதன்று. அஃது அக்கணேச மூர்த்தியால் உடைபட்டவுடன் அதினின்றும் ஓர் மயிலுண்டாகும். பின்னர் அம்மயிலின்மீது அக்கணேசமூர்த்தி ஏறிச்செலுத்தி, உனது புத்திரர்களுடைய சிறையை நீக்கியருளுவரென்று சொல்லி, வினதையிடங் கூறினார். உடனே அவளகட்டினின்றும் ஓர் முட்டை வெளிப்பட்டது. அம்முட்டையை வினதையானவள் நாள்தோறும் அன்போடு பாதுகாத்து வந்தனள். இவ்வாறு பாதுகாத்து வருங் காலையில், ஓர்நாள் கணேச மூர்த்தி யானவர் சில முனிச்சிறார்களோடு கூடி வனத்திற் சென்று விளையாடல் செய்திருக்கையில், கறுத்த நிறத்தினை யுடைய கிருஷ்ணாசுர னென்னும் ஓரவுணனானவன், ஒருதலையும் இரண்டு சிறகும் மூன்று முகமும் நான்கு செவியும் ஐந்து மருப்பும் ஆறுதோகையும் ஏழுகண்ணும் எட்டுக்காலும் உடைய ஓர்பட்சிருபங்கொண்டு அவ்வனத்தில்வந்து சற்றே நடக்கிறதும், சற்றே யிருக்கிறதும், சற்றே படுக்கிறதும், சற்றே பயந்தோடுகிறதுமாக உலாவல் செய்திருந்தனன். அதை அங்குவிளையாடிருந்த முனிச்சிறார்கள்கண்டு இதோவொரு அதிசயமானபட்சி உலாவிக்கொண் டிருக்கின்றதென்று கணேசமூர்த்திக் கறிவித்தார்கள். அதைக் கணேசமூர்த்திகண்டு உடனே அதனைப் பிடிக்கப்போயினர். அவரோடு அம்முனிச்சிறார்களுஞ் சென்றார்கள். அப்போது அப்பட்சியாகிய அசுரன் அவர்கையில் அகப்படுவதுபோல

விருப்பதும், நெருங்கநெருங்கத் தூரத்தில் அகல்வதும், சிறப்பதும், போவதுமாக அளவற்ற நாடுகளையும் மலைகளையுங் கடந்து போயினன். பின்னர் கணேசமூர்த்தியும் அவனைவிடாமற் றொடர்ந்து போயினர். இவ்வாறு தொடர்ந்து போகப்போக அவ்வசுரன் தமதுகையி லகப்படாமற் போகலும், கணேசமூர்த்தி அதிக கோபங்கொண்டு பாசத்தை ஏவினர். உடனே அவன் தனது சுயரூபத்தோடும் வீழ்ந்திறந்தனன். முனிச்சிறுர்களெல்லாம் அவனைத் தமது கைகளினாலறைந்தும் கால்களினாலுதைத்தும் அவ்வவர்கள் கோபத்தைத் தணித்துக் கொண்டார்கள்.

இப்பால் அதற்குச் சமீபத்தில் வசித்திருந்த வினதையென்பவள் அச்செய்திகளை யறிந்து கணேசமூர்த்தியே இங்ஙனம் எழுந்தருளின ரென்று தேர்ந்து தான்பயந்த முட்டையைக் கொண்டுவந்து சுவாமிக்கெதிரில் வைத்துப் பணிந்து நின்றனள். சுவாமியும் அவளது அபிப்பிராயத்தை யறிந்து, தமது நகத்தினால் அம்முட்டையைக் கீறினர். உடனே அதினின்றும் ஓர் மயிலானது ஆகாயத்தையளாவிய ஓர்பர்வதத்தைப்போல வெளிப்பட்டது. அதைக் கணேசமூர்த்தி கிருபையோடும் பார்த்தருளி அவுணர்குலங்கள் நாசமடையவும் தேவர்குலங்கள் செழித்தோங்கவுமாக அதன்முதுகி லாரோகணித்து அதன் தாயாகிய வினதையின் முகத்தைப் பார்த்து, ஓ மாதே! உனக்கு வேண்டிய வரங்களைக் கேளென்று திருவாய் மலர்ந்தனர். அதற்கவள் மீட்டும் பணிந்தெழுந்து, சுவாமீ! பாதல லோகத்திற் சிறைப்பட் டிருக்கின்ற அடியாளுடைய மைந்தர்களை விடுவித்துச் சுவாமிகள் திருவடியி லெக்காலத்தும் மாறாத பத்தியை அடியாட்குக் கிருபைசெய்யவேண்டு மென்று பிரார்த்தித்தனள். அதற்குக் கணேசமூர்த்தி அவள் கேட்ட வரங்களை கொடுத்தருளி, சகல முனிவர்களும் புடைசூழ்ந்து துதிக்கும்படியாக அம் மயில்வாகனத்தோடும் தமது ஆசிரமத்திற்கு வந்து சிவபிரானையும் உமாதேவியாரையும் பணிந்து பழயபடி வீற்றிருந்தனர் அன்றுமுதல் யாவரும் கணேசமூர்த்திக்கு மயூரேசரென்னுந் திருநாமஞ் சாத்தித் துதித்தனர். மகாதவராஜ நிதிகளே! அத் திருநாமத்தை யாவரேனுந் துதிசெய்வார்களாயின், சகல விடர்களினின்று நீங்கி மேலான நன்மைகளைப் பெறுவார்களென்பதற்கு சந்தேகமு மில்லை. இது சத்தியமென்று நம்பக்கடவீர்கள்.

மோதிரவுற்பவம்.

இப்பால் ஒன்பதா மாண்டில், ஓர்நாள் முன்போலவே சில முனிச்சிறுர்களோடு தமது மயில்வாகனத்தின் மீதேறி, ஐந்து யோசனை தூரத்திலுள்ள ஓர் வனத்திற் சென்று அங்கு மிகுந்த பரிமளத்தை வீசுகின்ற ஓர் மலர்ப்பொய்கையைக்கண்டு அதில் ஸ்நானஞ் செய்தனர். அப்போது அத்தடாகத்தில் சில நாக கன்னியரோடும் வாசுகியினுடைய புதல்வியானவள் ஸ்நானஞ் செய்ய வந்தனள். அவள் கணேச மூர்த்தியினுடைய திருவுருவைக் கண்டு மோகித்து

உடனே அவரருகில் வந்து பணிந்தெழுந்து, என்னை யாளவல்ல பெருமானே! தேவரீருடைய பிரதாபத்தை அடியாட் குணர்த்த வேண்டு மென்று புன்னகையோடும் பிரார்த்தித்தனள். அதற்குக் கணேசமூர்த்தி யிசைந்து, ஓ நங்காய்! நம்மை யாவரும் மயூரேசரென்று துதித்து வேண்டிய வரங்களைப் பெறுவார்கள். நாம் சிவபிரானுக்கும் உமாதேவியாருக்கும் உகந்த புத்திரனாகு மென்று திருவாய் மலர்ந்தனர். அதன்மீது அவள் சுவாமீ! அடியாள் வாசுகியினுடைய புதல்வி; தேவரீர் அடியாளுடைய மனையிலெழுந்தருளி அடியாள்செய்யும் பணிகளைக் கைக்கொள்ளவேண்டு மென்று பிரார்த்தித்தனள். அப்போது முன்னர் வினதைக்குக் கொடுத்திருந்த வரத்தைக் கணேசமூர்த்தி தமது திருவுள்ளத்தில் நினைத்து, அதை விரைவில் முடிப்பதே கருமமென்று தமக்குள் நிச்சயித்து, அவ்வாறே உனது மனைக்கு வருகின்றோ மென்று திருவாய் மலர்ந்து அவளும் அவளோடு வந்த மற்ற நாககன்னியரும் புடைசூழும்படியாகப் பாதல லோகத்திற் சென்றனர். உடனே அவள் கணேசமூர்த்தியை ஓர் பொற்பீடத் தெழுந்தருளச்செய்து பாக்கியமெல்லா மேவல்செய்ய பத்தியோடு பூசித்து, உயர்ந்த வஸ்திராபரணங்களால் அலங்கரித்து, தேவாமிர்தத்திற் கினையான போசன திரவியங்களைக் கொண்டுவந்து சுவாமிக் கெதிரில் வைத்து நிவேதித்தனள். இவ்வாறு அக்கன்னிகை மிகுந்த பத்தியினாற்றனக்குச் செய்த உபசாரங்களைக் கணேச மூர்த்தி அங்கீகரித்து அவ்விடத்தினின்று நீங்கி வாசுகியிருக்கின்ற சபைக் கெழுந்தருளினர். அப்போது வாசுகி சுவாமி வரவைக் கண்டு எழுந்திராமலும், பணியாமலும், உபசாரஞ்செய்யாமலும் இறுமாப்புற்றிருந்தனன். அதைக் கணேச மூர்த்தி யறிந்து மிகுந்த கோபத்தோடு அவனருகிற் சென்று அவனுடைய சிரோரத்தினத்தைப் பறித்துக் கொண்டனர். உடனே வாசுகி மயங்கிப் பூமியில் வீழ்ந்து மூர்ச்சையாயினன். அவனை புடைசூழ்ந்திருந்த நாகர்களெல்லாம் மனங்கலங்கி நடுங்கினார்கள். பின்னர் கணேசமூர்த்தியானவர் சம்பாதி முதலிய மூன்று பட்சிராசர்களையுஞ் சிறையினின்று நீக்கித் தம்மோடழைத்துச் செல்கின்றபோது வாசுகி மூர்ச்சை தெளிந்து சுவாமியோ டெதிர்க்க வந்தான். அவனை எமதையன் விரலினா லெடுத்து கங்கணமாகத் தரித்துக்கொண்டு பூலோகத்திற்குப் போகும்படித் திருவுளங் கொண்டனர்.

அனாஞானுற்பவம்.

அதற்குள் அங்கு நடந்த அவமானங்க ளனைத்தையும் ஆதிசேடனறிந்து மிகுந்த கோபத்தோடு நாகசேனைகளைக் கூட்டிக் கொண்டு வந்து, கணேசமூர்த்தியுடனே யெதிர்த்து யுத்தஞ் செய்தான். உடனே சுவாமி முன்னர் தாம் பொய்கைக் கரையில் நிறுத்தி வந்த மயிலை நினைத்தருளினர். அக்ஷணத்தில் அந்த மயிலானது தனது சிறகின் காற்றினால் அளவற்ற நாகர்கள் மடியும்படியாகப் பாதலலோகத்தில் வந்து கணேசமூர்த்தி யருகில் நின்றது. அதன்செவி

யில் கணேசமூர்த்தி யானவர் சில மந்திரங்களை யுபதேசஞ் செய்து, ஓ கேகயமே! நீ இந்நிமிடத்தில் நாகசேனைகளையெல்லாம்மாய்த்து, ஆதிசேடனைப் பிடித்தபிடியிற் கொண்டுவரக் கடவை யென்று ஆக்கியாபித்தருளினர். உடனே அம்மயிலானது மிகுந்த கோபாக்கினியை வீசிச்சென்று சில நாகங்களை மூக்கினாற் குத்தியும், சில நாகங்களைச் சிறகினால் மோத்தியும், சில நாகங்களைக் கால் நகங்களினால் தத்தியும், சின்னபின்னப்படக் கொன்று யுத்தஞ்செய்து நேர்ந்த ஆதிசேடன்மீது பாய்ந்து அவன் சரீர நடுவில் வடுப்படக் கொத்திக் கவ்விக் கொண்டு கணேசமூர்த்திக் கெதிரே கொண்டு வந்து விட்டது. உடனே அவ்வாதிசேடனை எமது கர்த்தனெடுத்து அரையில் நாணாகத் தரித்தருளினர். முன்னர் பயந்து ஓடிய நாகர்களெல்லாம் கணேசமூர்த்தியை வந்து பணிந்தனர். பின்னர் கணேசமூர்த்தியானவர் தந்தை யார்ச்சித்ததை மைந்தரு மார்ச்சித்து வருவது தருமமென்பதுபோல, சிவபிரானார்ச்சித்த சர்ப்பாபரணங்களைத் தாமு மார்ச்சிக்கத் திருவுளங் கொண்டவராய்த் தம்மைச் சரண்புகுந்த நாகர்களையெல்லாம் அங்கதம்-குழை-ஆரம் முதலிய வாபரணங்களாகத் தோள்-செவி-மார்பு முதலிய விடங்களி லணிந்தருளி, வாசுகியின் புதல்வுக்கும் ஏனைய நாக கன்னியருக்கும் வேண்டிய வரங்களைத் தந்து, சம்பாதி முதலிய மூன்று பட்சிராசர்களுந் தம்மைப் புடைசூழ்ந்து வரும்படியாக மயில்வாகனத்தைச் செலுத்திக்கொண்டு பூலோகத்தை யடைந்தனர்.

முன்னர் கணேசமூர்த்தி பாதலலோகத்திற் கெழுந்தருளிய போது சுவாமியோடு விளையாடல் செய்திருந்த முனிச்சிறார்கள், பின்னர் சுவாமியைக் காணாதவர்களாகி வனமெங்கணுந் தேடித் திரிந்து கொண்டிருந்தார்கள். அச்சமயத்தில் கோராசுரனென்பவன் கொக்காகவுருக்கொண்டு வந்து அம்முனிச்சிறார்களை யெல்லாங் கணேசமூர்த்தியினுடைய கூட்டாளிகளென் றறிந்து அவர்களையெல்லா மெடுத்து விழுங்கிக் கணேசமூர்த்தியினுடைய வரவுக் கெதிர்பார்த் திருந்தனன். உடனே பாதலலோகத்தினின்றுவரும் எமதையனை நோக்கி அப்பாதகன் தனது வாயைத் திறந்துகொண்டு வந்தனன். உடனே கணேசமூர்த்தியானவர் தமது பாசாயுதத்தினால் அவனை இரண்டுதுண்டாக வெட்டித் தமது கிருபாநோக்கத்தாற் பார்த்தருளினர்; அப்பார்வையால் அவ்வவுணன் வயிற்று ளடங்கியிருந்த முனிச்சிறார்க ளெல்லாம் உயிர்பெற்றுத் துயில்விட் டெழுந்தவர்போல முகமலர்ச்சியோடும் வெளிவந்து கணேசமூர்த்தியினுடைய திருவடிகளிற் பணிந்து, முன்னொருபோது சகல வண்டங்களையுந் துளக்கக்கொத்திய விண்டுவாகிய கொக்கினைச் சினந்த சிவபிரான் குமாரராகிய இவருக்குக் கொக்கினைமாய்த்ததும் ஓர்வெற்றியோவென்று துதி செய்தார்கள். இப்பால் கணேசமூர்த்தியானவர் அம் முனிச்சிறார்களோடும் வனத்தினின்று நீங்கி, சிவபிரானும் உமாதேவியாரு மெழுந்தருளிய திருக்கோயிலை யடைந்து பணிந்திருந்தனர். அதற்குமேல் சம்பாதிமுதலிய மூன்று பட்சிராசர்களும் கணேசமூர்த்தியினிடத்தில் விடைபெற்று தமதுதந்தையாகிய

காசிபமுனிவரையுந் தாயாகிய வினதையையும் பணிந்து கவலையற்றமனதோடு சுகமுற்றிருந்தார்கள்.

பத்தாமாண்டில் காரனன் விகாரனென்னும் இரண்டசுரர்கள், காட்டுபன்றியாகவும் காட்டெருமையாகவும் உருக்கொண்டு கணேசமூர்த்தி விளையாட்டயருமிடத்தில் வந்து ஆர்ப்பரித்தார்கள்; ஆயினும் முன்னொருபோது மூவுலகத்தையுமளந்த விண்டுவாகிய பன்றியைக்கடிந்த சிவபிரானுக்கும், அண்டங்களெல்லாம் நடுங்கும்படிவந்த ஓரவுணனாகிய எருமையை வென்ற உமாதேவியாருக்கும் அருமைப்புதல்வராகிய கணேசமூர்த்தியானவர் இக்காட்டுப் பன்றியுங் காட்டெருமையுமாகவந்த அவுணர்மாயைக் கஞ்சுவரோ? உடனே அவ்விருவர்மீதுந் தமது பாசத்தை விடுத்து மாய்த்து, முன்னர் பிரமனுடைய கமண்டல தீர்த்தத்தினா லுண்டான நதியில் ஸ்நானஞ்செய்தருளினர். அச்சமயத்தில் பராசமுனிவர் வந்து கணேசமூர்த்தியைப் பணிந்தெழுந்து அளவற்ற வரங்களைப் பெற்றுப் போயினர். அத்தினமே சாங்கியமுனிவரும் வந்துபணிந்து தமக்குப் பரமஞானத்தை யுபதேசிக்கும்படி பிரார்த்திக்க, அதற்குக் கர்த்தன் கிருபைகூர்ந்து தமதுமந்திரத்து ளடங்கிய பதிபசுபாசங்களி னுண்மையை அவருக் குபதேசஞ் செய்துகொண்டிருந்தனர். அச்சமயத்தில் ஊர்த்தனென்னும் ஓரவுணன் புலியாக வுருக்கொண்டுவந்து வெளியில் விளையாடல் செய்திருந்த முனிச்சிறார்களை பிடித்துத்தின்று சுவாமியினுடைய சந்நிதியை நோக்கிச்சென்றான். அதை முன்னர் அகிலமுழுவதும் நடுங்கும்படிவந்தபுலியை உகிரினால் கிழித்தருளிய சிவபிரானுடைய குமாரர்கண்டு அவனுடைய நாசியையுஞ் செவிகளையு மறுத்தெறிந்து, பற்களை யுதிர்த்து, இதைப்போய் உன்னை யேவிய தலைவனுக்கு அறிவிக்கக் கடவையென்று விடுத்துத், தாம் மயில்வாகனத்தின்மீ தாரோகணித்து இவ்விடத்திற் புலியினால் இறந்தவர்களையும், எமனையும் இங்ஙனம் கொண்டுவரக் கடவையென்று தமது பாசத்திற் காக்கியாபித்தனுப்பினர். அவ்வாக்கினையைச் சிரமேற்கொண்டு அப் பாசமானது, அதிக வேகத்துடன் சென்று புலியால் விழுங்கப்பட்ட முனிச்சிறார்களையெல்லா மழைத்தும் யமனை இறுகக் கட்டிக்கொண்டும் வந்துவிட்டது. அப்போது யமனானவன் கர்த்தனைப் பலமுறை பணிந்தெழுந்து, சுவாமீ! அடியேன் தேவரீருக்கு யாதொரு அபராதமுஞ் செய்ததில்லை. அந்தக கொடுமையான அசுரனுங் கொல்லப்பட்ட சிறுவர்கள் எனது லோகத்திற்கு வந்தார்கள். எவ்வகைப்பட்ட மேலான தேவர்களாயினும் அவர்களைக் காலமுடிவில் சரீரத்தைவிட்டு நீக்கத் தக்க ஆதிபத்தியம் அடியேனுக்கிருப்பது தேவரீருடைய செயலேயன்றி அடியேற்கோர் சுதந்தரமுண்டோ? ஆதலால் சுவாமிகள் அடியேனைக்கோபியாது அடியேன் அறிவின்மையால் தேவரீருக்கு ஏதேனுங் குற்றமிழைத் திருந்தேனாயின், அதனைப் பொறுத்துக் காத்தருளவேண்டு மென்று வணங்கி யிரந்தனன். அதற்குக் கணேசமூர்த்தி மனமிரங்கி அவனைத் தமது பாசக்கட்டினின் றுநீக்கி, ஓ கூற்றனே! இன்றுமுதல் எமக்கு அடியாருள்ளாரைப் பிடிப்

டையேல் உனது அதிகாரமுஞ் சீரும் உடனே அழிவெய்தும். இதனை யறிந்து நடந்துகொள்ளக் கடவையென்று திருவாய்மலர்ந்து அவனுக்கு விடை கொடுத்தனர். உடனே எமனானவன் இன்று உயிர்தப்பிப் பிழைத்தோம், பிழைத்தோமென்று ஓடித் தனதுலோகத்தை யடைந்தனன். அதற்குமேல் கணேசமூர்த்தியானவர் காந்திய முனிவருக்கு அத்தத்துவப் பொருள்களைப் பூரணமாக வுபதேசித்து அளவற்ற வரங்களோடும் அவருக்கு விடைகொடுத்து தமது அருமைக் குமாரர்களையடைந்து வீற்றிருந்தருளினர்.

இப்பால், முன்னர் மூக்கையுஞ் செவிகளையும் பற்களையு மிழந்த வர்த்தகசனென்னும் அவுணன் மனவருத்தத்துடன் தனதரசனாகிய சிந்துராசனிடத்திற் சென்று, கர்த்தனே! சிவகுமாரனாகிய கணேசனென்பவன் என்னை இவ்வாறு அவமானஞ் செய்தனுப்பினானென்று முறையிட்டான்; அச்சமயத்தில் சிந்துராசனுக் குயிர்த்துணையா யிருக்கும் சிலதூதர்கள் அவனைப் பணிந்தெழுந்து, ஆண்டவனே! தேவரீர் விடுவித்தருளிய அளவற்றபெருந் தினந்தினம் ஒவ்வொருவராய் அனேக மாயைகளைச் செய்து வந்தனர்; அவ்வாறு செய்தும் அக்கணேசனை வெல்லுவதற்குச் சக்தியில்லாமல் அனைவரு மாண்டனர். இனிக் காலதாமதஞ் செய்யாமல் நமது சேனைகளோடுஞ் சென்று அவனை வெல்லுவதே கருமமென்று சொன்னார்கள். அதற்கு சிந்துராசன் மிகுந்த கோபங்கொண்டு தனது சிங்காதனத்தை விட்டு சகல சேனைகளும் யுத்தத்திற் காயத்தமாயிருக்கும்படி உத்தரவு செய்தான். அப்போது அமைச்சர்கள் அவனைப் பணிந்து, ஆண்டவனே! இப்போது நமக்கு என்ன தாழ்ச்சிகள் சேர்ந்தனவென்று சிம்மாதனத்தை விட்டெழுந்தீர்? விண்ணோர் தேவர்கள் தேவரீர் சிறையிற் கட்டுண்டிருக்கின்றனர். மூன்றுலோகங்களுந் தேவரீருடைய ஆணையிலடங்கின. மேலுங் காட்டில் வசிக்கின்ற கணேசனும் நமது காவலைக் கடந்து வந்தவனல்லன்; ஆயினும் முன்னர் நடந்திருக்கின்ற விசேடங்களால் அவனைச் சத்துருவென்றெண்ணி இளமைப் பருவத்திற்றானே அவனைக் கொல்லுவதற்கு அளவற்ற வீரர்களை யனுப்பினோம். அவர்கள் ஒவ்வொருவரும் பூமியையும் ஆகாயத்தையும் வெல்லவல்ல பராக்கிரமும் மகத்துவமு முடையவர்களாயிருந்தும், அவர்களை யெல்லாம் அச்சிறுவன் ஒருவனே தனது கண்ணினாலும், மூக்கினாலும், காலினாலும், கையினாலும், மேலான பலவகைப்பட்ட ஆயுதங்களினாலும் மாய்த்துவிட்டனன். அவனே தான் ஒருவனாகவும் வயதில் அதிக பாலியனாகவும், பராக்கிரமத்திற் சிறந்தவனாகவு மிருக்கின்றான். அப்படிப்பட்டவனை வெல்லுவதற்குத் தக்க வுபாயத்தை யாலோசித்து நடத்தவேண்டும். ஆதலால் கனலாசுர னென்பவன் சகல மாயையினும் வல்லவன். யுத்தத்திற் சாகாவரம் பெற்றவன். தேவரீருக்குச் சமமான புசபல பராக்கிரமத்தையுடையவன். அத்தன்மையானவனைச் சகல சேனைகளோடுங் கூட்டி முன்னர் அனுப்புவித்து, அவன் செய்யும் யுத்தத்தில் எதிரியால் நடக்கும் காரியங்களை யறிந்து, அதற்கு மேலான காரியங்களை யாம் யோசித்து நடத்தவேண்டு மென்

று சொன்னார்கள். அவ்வா றமைச்சர்கள் சொல்லி முடியுமுன் சிந்துராசன் அருகி லிருந்த கனலாசுரனுக்கு இரத கஜ துரக பதாதிகளும், வஸ்திராபரணங்களும் அளவற்றனவாகக் கொடுத்து, ஓ சுத்த வீரனே! சிவகுமாரனாகிய கணேச னென்பவன் வயதிற் சிறியவனாயினும், யுத்தத்திற் பெரியவனாய் நம்மவர்களையெல்லாம் மாய்த்துக்கொண்டு வனத்தில் வசித்திருக்கின்றான். நீ இங்கிமிடத்தில் அவன்மீது படையெடுத்துச் சென்று யுத்தஞ்செய்து ஜெயம்பெற்று வரக்கடவை யென்று சொல்லினன். அதைக்கேட்ட கனலாசுரன், இதுகாறும் என்னை யனுப்பா திருந்த காரண மென்ன? இப்பவுமென்ன, அவனைக் கொல்லவோ? அல்லது கைப்பிடியாகப் பிடித்து வருகவோ? வென்று சொல்லி மிகுந்த குதூகலத்துடனே அரண்மனைக்கு வெளியே வந்தனன். உடனே கவனமாய்ப் பாயவல்ல குதிரைகளைப் பூட்டிய அளவற்ற இரத வீரர்களும், அண்டரண்ட புவனங்களையும் நடுக்கச்செய்யவல்ல அனேக கஜவீரர்களும், வாயுவேகத்திலும் விரைவாகச் செல்லவல்ல எண்ணற்ற துரகவீரர்களும், மிக்க பராக்கிரமத்தோடு நவநவமாய்ப் போர்செய்யவல்ல கணக்கற்ற பதாதிவீரர்களும் நெருங்கினார்கள். கவிகை கொடி பிச்சம் முதலியசின்னங்கள் ஆகாயவெளியை மறைத்தன. இரணபேரி, ஜெயபேரி, வெற்றிசங்கம் முதலிய வாத்தியங்கள் கடலோசையை யடக்கின. இவ்வித ஆடம்பரங்களோடு பன்னிரண்டக்குரோணிச் சேனைகள் புடைசூழ்ந்து வரும்படியாகக் கனலாசுரனானவன் யுத்தசன்னத்தனாய் நவரத்தினத் தேரிலேறித் திரிசக்தி க்ஷேத்திரத்தை யடைந்து, நாற்றிசைகளிலும் தனதுசேனைகளை முத்திக்கையிட்டனன். அதை யங்கிருந்த முனிவர்கள் கண்டு சிங்கவேற்றைக் கண்ட யானைக்கூட்டம்போலப் பயந்தோடிச் சிவபிரானுடைய திருவடிகளிற் சரணடைந்து, சுவாமீ! கமலாசுரனுக்குச் சரியான கனலாசுர னென்பவன் சிந்துராசனுடைய ஏவலாற் படை யெடுத்துவந்திருக்கின்றனன். மூவுலகங்களிலுந் தீங்குசெய்பவன் இவனேயன்றி வேறில்லை. சுவாமிகள் இப்பாதகனை விரைவிற் சங்கரித்து எளியேங்களைக் காத்தருளவேணுமென்று பிரார்த்தித்தார்கள். அவர்களைச் சிவபெருமான் கிருபையோடு பார்த்தருளி, ஓமுனிவர்களே! நீங்களவனைக்குறித்து அஞ்சாதீர்களென்று வையமர்த்தி, மயூரேசனை யழைத்துக் கனலாசுர னென்பவன் யுத்தஞ்செய்ய வந்திருக்கின்றனன். அவனை நீ சென்று சங்கரித்துவருவா யென்றுசொல்லித் தமது கையிலிருந்த சூலாயுதத்தை அவருக்குக் கொடுத்தருளினர். உடனே மயூரேசர் சிவபெருமானையும், உமாதேவியாரையும் பணிந்து, மயில்வாகனத்தின்மீதாரோகணித்து, யுத்தத்திற்கு வேண்டிய நால்வகைப் படைகளையும் மனதினாற் சிருட்டித்து, அவைகள் தம்மைப் புடைசூழ்ந்துவரக் கட்டளையிட்டு, நாற்றிசைகளிலுஞ் சூழ்ந்து முத்திக்கையிட் டிருக்கின்ற அசுர சேனைகட் குள்ளே புகுந்தனர். அப்போது சிவபிரான் உமாதேவியாரோடும் ரிஷபவாகனத்திலேறி பூதகணங்கள் புடைசூழும்படியாக ஆகாயமார்க்கத்தில் வந்து, தமது புதல்வர் செய்யும் யுத்தத்தைப் பார்த்துக்கொண் டிருந்தனர்.

இப்பால் பூதசேனைகளும் அவுணசேனைகளுங் கைகலந்து போர்செய்யும் போது, தேவசேனைகட்கு அதிககோபமுண்டாகி அவுணசேனைகளை யெல்லாம் அதாஅதப்படுத்தினார்கள். அதைக் கனலாசுரன் கண்டு மனந்தாளாமல் தானே மயூரேசருடைய சேனைகளின்மீது பாய்ந்து சிலரை வெட்டியுஞ், சிலரைக் குத்தியும், சிலரை யெறிந்தும், சிலரை மோதியும், சிலரைப் பிடித்தும், சிலரைக் கட்டியும், சிலரைக் கீழே தள்ளியும், சிலரை முறித்தும், சிலரைக் குட்டியும், சிலரைத் தடிகொண் டடித்தும் சின்னபின்னப் படுத்தினன். அப்போது பூதப் படைகளுள் அளவற்றபேர் மாய்ந்துபோனார்கள். அளவற்ற கவந்தங்க ளாடல் செய்தன. எங்கும் அலகைக் குழாங்கள் நெருங்கி வெற்றி பாடின. இரத ஓட்டங்கள் மாறி உதிர ஓட்டங்கள் பெருகின. நாய் நரி கழுகு முதலியன சமர்க்கள மெங்குங் கூடி விசயங் கூறின. இவ்வாறு பூதப்படைகள் மடிந்துகிடப்பதை மயூரேசர் கண்டு, தமது வில்லை வளைத்து அளவற்ற பாணங்களைத் தொடுத்து கனலாசுரனுடைய படைகளையெல்லாம் பொடியாக்கி அவனுடைய தேரை ஒடித்து அவன் கவசத்தையும் அறுத்துத் தள்ளினர். அதன்மேற் கனலாசுரன் ஒரு குதிரையின்மீதேறி மிகுந்தவீராவேசத்துடன் நாகாஸ்திரத்தைப் பிரயோகித்தனன். அதை மயூரேசர்கண்டு தமதுவில்லில் கருடாஸ்திரத்தைத் தொடுத்து அதிக விரைவாகப் பிரயோகித்தனர். அப்பாணம் வெளிப்பட்ட வுடனே கனலாசுரன் விடுத்த நாகாஸ்திரத்தைச் சின்னபின்னப்பட வாட்டி, மேலுமேலும் அப்பாதகன் எடுத்து விடுகின்ற பாணங்களை யெல்லாம் அறுத்து, அவனேறி நடாத்துகின்ற குதிரையைக் கீழே தள்ளி, மீட்டும் மயூரேச ருடைய திருக்கரத்தி லமர்ந்தது. அப்போது கனலாசுரன் திகைத்து, அக்கணேசனை அஸ்திரசஸ்திரங்களால் வெல்வது மிகவு மரிதென்று நினைத்தவனாய், உடனே ஆகாயமார்க்கத்திற் சென்று திரிலோகங்களும் நடுங்கும்படியாக முறைமுறையாய் அளவற்ற மாயைகளைச் செய்திருந்தான். அதை மயூரேச ரறிந்து தமது கரத்திலேந்திய பாசத்தை விடுத்தனர். அப் பாசமானது அளவற்ற மாயவடிவங்களைக்கொண்டுசென்று அவன்செய்துவரும் மாயைகளையெல்லா மழித்தது. பின்னர் கனலாசுரன், வாளாயுதத்தோடு ஏகனாய் வந்து சுவாமியை அழைத்தான். அப்போது சுவாமியும் ஓர் வாளாயுதத்தையேந்தி அவன் வீசுதலையெல்லாம் விலக்கி அவனுடைய தோளி லொன்றை யறுத்துக் கீழே வீழ்த்தினர். உடனே அறுத்த வழியினின்றும் பெருகிய உதிரத்திலே அவனைப்போன்ற அளவற்ற அவுண வீரர்கள் உண்டானார்கள். அதை மயூரேசர் பார்த்து தமது நெற்றி விழியைச் சிறிது விழித்துப் பார்த்தனர். உடனே உதிரத்தினின்றும் உண்டான அவுண வீரர்களெல்லா மெரிந்து நீறானார்கள். அதைக் கனலாசுரன் பார்த்துக் கோபித்து, மயூரேசர்மீது ருத்திராஸ்திரத்தை யெடுத்து மந்திர பூர்வகமாகப் பிரயோகித்தனன். அந்த ருத்திராஸ்திரமானது சகல லோகங்களையு மழித்துக்கொண்டு ஆகாயமார்க்கத்தின்வர, அதை மயூரேசர் கண்டஞ்சாமல் இங்கே வருகவென் றழைத்துத் தமது அம்பறாத்தூணியி லடக்கினர்.

அப்போது கனலாசுரன் ஆலகாலத்தைப் போலச் சீறித் தண்டாயுதமேந்தி யெதிர்க்க வந்தான். அச்சமயத்தில் மயூரேசர் தமது கரத்தி லேந்திய சூலாயுதத்தை நோக்கி நீ இச்சமயத்தில் கனலாசுரனை நீறாக்கி மீளக்கடவை யென்று விடுத்தனர். அவ்வாறே அச்சூலமானது சென்று அவனை நீறாக்கி ஆகாய கங்கையில் ஸ்நானஞ் செய்து மயூரேசருடைய திருக்கரத்தி லமர்ந்தது. உடனே மயூரேசரானவர் வெற்றிமாலை சூடிக்கொண்டு யுத்தத்தில் மடிந்த பூதசேனைகளையெல்லா மெழுப்பித் தமதிருக்கையை யடைந்தனர். அவரைச் சிவபிரான் மகிழ்ச்சியோடு ஆலிங்கனஞ் செய்து, அளவற்ற வரிசைகளை யளித்தனர். முனிவர்களெல்லாஞ் சுவாமியைப் பணிந்தெழுந்து வேண்டிய வரங்களைப் பெற்றுத் துயரமற் றிருந்தார்கள்.

இவ்வாறு மயூரேசர் கனலாசுரனோடு யுத்தஞ்செய்து வெற்றி பெற்று முனிவர்களுடைய துன்பங்களை நீக்கி ஆனந்தமுற் றிருக்க, இவ்விருத்தாந்தங்களை எல்லாஞ் சிலதூதர்கள் வாய்குழற, உடல் வெயர்க்கச் சென்று சிந்துராசனுக்கறிவித்தார்கள். அதைக்கேட்ட மாத்திரத்தில் சிந்துராசன்மரம்போலேபிரமித்து நின்று மனதில் மிகுந்த கிலேசங் கொண்டு இனிமேல் கனலாசுரனுக்கு நிகரான வீரனைக் காணப்போகின்றோமோ வென்று துக்கித்து, இனியென்ன செய்யலாமென் றெண்ணி கணேசனுடைய வல்லமையைப் படையெடுக்காது வண்ணமே அடக்கத்தக்க உபாயம் யாதென்று தனக்குள் ஆராய்ந்து, உலகத்திற் கெல்லாம் உபகாரஞ்செய்து வருகின்ற சகல தேவர்களும் நமது வசமாயிருத்தலால், இனி அவர்கள் செய்கையை நிறுத்திவிடுவோம் அவ்வாறு நிறுத்துவோமாயின் நமதுசத்துரு எவ்வாறு நிர்வகிக்க வல்லனென்று நிச்சயித்து, சூரியனைக்கூவி நீ சத்துரு விருக்கின்ற விடத்தில் உன்னு கிரணங்களைப் பரப்பவேண்டாமென்று திட்டஞ்செய்து, சந்திரனை யழைத்து நீ மயில்வாகனத்தையுடைய கணேசனிருக்கின்ற வனத்திலே உன்னுடைய கிரணங்களை வீசாதிருவென்று உத்தரவுபண்ணி, அக்கினியைநோக்கி நீ சிவபுத்திரனிருக்கின்ற வனத்திலுள்ள உனது சுவாலைகளையெல்லாம் இங்கே வரவழைக்கக் கடவையென்று ஆக்கியாபித்து, இந்திரனைப் பார்த்து நீ கணேசனிருக்கின்ற காட்டிலே மழை பெய்ய வொட்டாமல் மேகங்களை நிறுத்தென்று கட்டளையிட்டு, வருணனைக் கூவி நீ விநாயகனிருக்கின்ற வனத்திலுள்ள தண்ணீரையெல்லாம் வாங்கிக் கொள்ளென்று உத்தரவுசெய்து, வாயுவை யழைத்து நீ உமாபுத்திர னிருக்கின்ற வனத்திலே வீசாமலிருவென்றும் ஆக்கியாபனை செய்தனன். பின்னர் இவர்களெல்லாம் அவனுக்குப் பயந்து அவன் சொன்னவாறெல்லாஞ் செய்து வந்தார்கள். இவ்வாறு சூரியனுஞ் சந்திரனுங் காயாமலும், அக்கினி யில்லாமலும், சலமில்லாமலும் வனத்தில் ஒருகாரியமும் நடவா திருப்பதினால் முனிவர்களெல்லாம் மயூரேசரிடத்தில் வந்து பணிந்தெழுந்து, சுவாமி! சூரியன் முதலிய தேவர்களாற் செய்யுந் தொழில்களில் ஒன்றேனும் நடவாதிருப்பதினால் அடியேங்கள் யாதொரு கருமமுஞ் செய்வதற் கிடமில்லா திருக்கின்றன

வென்று முறையிட்டார்கள். அதை மயூரேசர் கேட்டு, இது சிந்துசெய்த காரியமென்றெண்ணித் தமது மூன்று விழிகளையும் நெறித்துப் பார்த்தருளினர். உடனே வலது விழியினின்று சூரியனும் வாயுவும் மேகமுந் தோன்றின. இடது விழியினின்று அக்கினி முதலானவைகள் தோன்றி எங்கும் பரவியிருந்தன. முனிவர்களெல்லா மானந்தங் கொண்டு நித்திய கன்மாதிகளைக் கிரமப்படி நிறைவேற்றி வந்தார்கள். பின்னர் கணேசமூர்த்தியானவர் சிந்துவோ இவ்வளவு தீங்குகளை நம்மிடத்திற் செய்ய வல்லவனென்று கோபித்து, சிவபிரானையும் உமாதேவியாரையும் பணிந்து எதிரில்நின்றனர். அக்குமரப்பிள்ளைச் சிவபிரானறிந்து முகமலர்ச்சியோடுங் கணேசமூர்த்தியைப் பார்த்து, மைந்தனே! எல்லாத் தீங்குகளையும் இடைவிடாது செய்துவருகின்ற சிந்துவைச் சங்கரித்து தேவர்களுடைய சிறையினை நீக்கி அவரவர்கள் பதவிகளை அவரவர் அடையும்படிச் செய்யென்று உத்தரவு செய்து, அளவற்ற பூதப்படைகளையுங் கணநாதர்களையுந் துணைகூட்டி யனுப்பினார். இப்பால் மயூரேச மூர்த்தியானவர் சுப்பிரமணியர் - வீரபத்திரர் - நந்தி - இலம்பகர்ணன் - இரணியகருப்பன் - அரன்-சோமன் - புட்பதந்தன் - பிரமதன் - பிருங்கி - இரத்தலோசனன் - தாவானலன் - பஞ்சானனன் - சங்கன் - விகடன் - சபலன் - சாமளன்-பூதராசன் முதலான படை வீரர்களையும், எழுகோடி பூத வீரர்களையுந், தந்தை கொடுத்தருளப்பெற்று, மீட்டும் அவர் திருவடிகளில் முறைமைப்படி பணிந்தெழுந்து கோவிலுக்கு வெளியே வந்தனர். உடனே தம்மைச் சுப்பிரமணியர் முதலான வீரர்கள் பூதகணங்களோடும் வந்துபணிந்தார்கள். அவர்கட்கு விநாயகமூர்த்தி தனித்தனி இரதங்களிலேறிவரக்கட்டளையிட்டு, மயில்வாகனத்தோடும் முனிச்சிறுவர்களோடும் மகமேருவையொத்த மற்றொரு இரதத்தில் தாமாரோகணித்தனர். சிலபூதர்கள் வெண்சாமரை வீசினார்கள். சிலபூதர்கள் ஆலவட்டமசைத்தார்கள். சிலபூதர்கள் தவளக்கொடை பிடித்தார்கள். சிலபூதர்கள் கட்டியங் கூறினார்கள். பானுகம்பன் தனது ஆயிரம்வாய்களினும் ஆயிரம் தவளச்சங்கங்களைவைத்து அண்டங்களெல்லா மதிரும்படி முழங்கினன். இவ்விதவைபவங்களோடு அகிலகாரணராகிய விநாயகப்பெருமான் வழிக்கொண்டு கொடித்திரள்களினாலும் வாத்திய வோசைகளினாலும் விமான நடைகளினாலும் அளவற்ற வனங்களுஞ் சமுத்திரங்களும் மலைகளும் ஒன்றாகக்கூடி வருவது போலத் தமது சேனைகளை நடத்திக்கொண்டு சென்றனர். அப்போது சிந்துராசனுடைய ஏவலினால் இலக்கமசுரர்கள் வழியில்வந்தெதிர்த்தார்கள். அவர்களையெல்லாம் முன்னணியிற் செல்கின்ற சிலபூதர்கள் உதைத்தும் அலைத்தும் நெருக்கியுஞ் சென்று கண்டகநகரத்தைச் சமீபித்தனர். உடனே அக் கண்டகநகரத்திற்கு ஒரு யோசனைதூரத்தில் மயூரேசமூர்த்தியானவர் சுப்பிரமணியர் முதலானவர்களோடும் மற்ற பூதப்படைகளோடு மிறங்கித் தருமசாத்திரவிதிப்படி ஒரு தூதனைச் சிந்துராசனிடத்தில் முன்னதாயனுப்பி இனியேனும் தேவர்களுடைய சிறையைநீக்கிக் கிரமத்தோ டிருக்கும்படி சொல்லுவிப்போம். அதற்

கவன் இணங்கானாயின் உடனே யுத்தமுகத்தில் அவனைச் சங்கரிப்போமென்று தமது திருவுள்ளத்தில் நினைந்தருளி, ஆலோசனைகளிற்சிறந்த புட்பதந்தனைக் கூவி, ஓ நிபுணனே! நன்மார்க்கமறிய சிந்துவினிடத்தில் முன்னதாக ஓர் தூதனையனுப்பிப் பார்ப்போம்; அவன் இனியேனும் நன்மார்க்கத்திற்கு வாராவிட்டால் அவனோடு யுத்தஞ்செய்து சங்கரிப்போம்; ஆதலால் இங்கிருக்கின்ற கணநாதர்கட்குள் தூதுபோகத்தக்கவன் யாரென்று வினவினர். அதற்கவன் கணேசமூர்த்தியைப் பணிந்து, சுவாமி! தேவரீர் திருவவதாரஞ் செய்தருளிய நாள்முதலாகத் தினந்தோறுந் தேவரீருடைய திருக்கரத்தினால் அழிந்த அசுரர்கள் ஆயிரத்தினு மதிகமாகவே யிருப்பார்கள். அவர்களல்லாமல் வீரத்திற் சிறந்த கமலாசுரனும் மேலான யுத்தங்களைச் செய்து மாண்டான்; இவையனைத்தையும் அச்சிந்து நாள்தோறு மறிந்திருந்துந் தேவரீருடைய பராக்கிரமத்தைத் தெரிந்துகொண்டவனல்லன். தேவரீர் கிருபையினால் நீதி முறைமைப்படி ஓர் தூதுவிட்டு நன்மார்க்கங்களைப் போதிப்பித்தாலும் அக்கொடியவன் வழிக்கு வருவானல்லன். அதுவுமன்றிப் பராக்கிரமத்திற் குறைந்தவர்கள் தம்மின்வலியாரிடத்தில் யோக்கியரான தூதர்களை யேவி இனிய வார்த்தைகளினாலுந், திரவியங்களினாலுஞ் சிநேகஞ்செய்து கொள்வது முறைமையாகும். பராக்கிரமத்திற் சிறந்தவர்கள் தம்மின் மெலியாரைத் தண்டிப்பதே முறைமையாகும். அவ்வாறிருந்தும் தேவரீர் மிகுந்த கிருபையினால் அப்பாதகனிடத்து ஓர் தூதனை அனுப்பும்பட்சத்தில், அத்தூதனானவன் தனதுசொல்லுக்குஒருவேளை அப்பாதகன் இணங்கி வாரானாயின் உடனே அவனை மேலிட வொட்டாமற் சிறைசெய்து மீட்டு மிக்கணம் வந்து சேரத்தக்கவனாக யிருக்கவேண்டும். இப்போது இங்கிருக்கின்ற வீரர்களுள் மிகுந்த பராக்கிரமசாலியாகிய அச்சிந்துவைக்கொன்று வெற்றிபெற வல்லவர் சுப்பிரமணியதேவர் ஒருவரேயாகும். அவர் தேவரீருக்குத் தம்பியாதலால் அவரைத் தூதனுப்புதல் மரபன்று. வீரபத்திரக் கடவுளை யனுப்பினால் அக்கொடியவனிருக்குமிடத்திற் போகுமுன்னமே எதிர்கண்ட சூரர்களையும் ஊரையுஞ் சுட்டு நீறாக்கித் தமது மனத்தில் நினைத்த வண்ணமெல்லாஞ் செய்துவிடுவர். அப்பால் தேவரீர் நினைத்தருளியபடி முடியாது. அர்த்தலோசனன்-பிரமதன்-பிருங்கி-பூதராசன்-நந்தி என்று சொல்லப்பட்ட இந்த அறுவரும் யுத்தஞ்செய்ய வல்லவர்களே எனினும், தூது செல்வதற்கு இசைந்தவ ரல்லர்; ஆனால் சுவாமிகளுடைய கட்டளையைத் தடுக்கமாட்டாது சென்றாலும், இப்போது கூறிய மிகுந்த பராக்கிரமத்தினை யுடைய இந்த அறுவர்களுக்குள் நந்திதேவர்மாத்திரஞ் சொன்னபடிச்சென்று நல்லபாங்கோடுபேசி மீண்டு வருவர்; பூதராசனோ வென்றால், போனவுடன் பட்டணத்தைச் சுட்டெரித்துப்போடுவன்; அடியேனோவெனில்; அப்பாதகனுடைய சுற்றத்தினரெல்லா மலறும்படி அளவற்ற தீமைகளை நடாத்தி வருவேன்; அர்த்தலோசனனாயின், செய்யத்தகாத காரியங்களாய் ஆண்சிறை பெண்சிறை பிடிப்பான்; பிரமதனோவெனில், அசுரர்களைக் காணுமுன்னமே அவர்களையடித்து

டுத்து விழுங்குவன்; பிருங்கியும் அவ்வாறே அவ்வசுரர்களுடைய குலத்தையெல்லாம் எரித்து நீறுக்குவன்; ஆதலால் நந்திதேவரோ அச்சிந்துவினிடத்திற் போகவும் பேசவுந் திராணியுள்ளவர்; ஒருவேளை சத்துருக்கள் தீங்கு செய்ய நேர்ந்தாலும், அதற்கு இளையாமல் எதிர்த்தவர்களோடு யுத்தஞ் செய்யவும், மாய்க்கவும் வல்லவர் அவரேயாகும் இப்பால் சுவாமிகளுடைய திருவுளம் எவ்வாறோவென்று சொல்லினன். இவையனைத்தையும் மயூரேசர் கேட்டருளி, ஓ புட்பதந்தனே! நீசொன்னதெல்லாந் தக்கதேயென்று சந்தோஷித்து, உடனே நந்திதேவரை யழைத்து ஓ சிலாதன் மைந்தனே! நீ அவுணபாதகனாகிய சிந்துவினிடத்திற் சென்று அடாமூடனே! உனக்குச் சிவபிரானளித்தருளிய வரத்தோடு மிருக்க வேண்டுமாயின் இக்ஷணத்தில் தேவர்களைச் சிறையினின்று விட்டுவிடக் கடவை: அவ்வரத்தையும் உயிரையும் இழக்க வேண்டுமாயின் இப்போதே யுத்தத்திற்கு வரக்கடவையெனச் சொல்லிவாவென் றனுப்பினர்.

இப்பால் விநாயகக்கடவுள் திருவாய்மலர்ந்தருளியதனை நந்திதேவர் மிக்க பயபக்தியோடுங் கேட்டு, மயூரேசரைப் பணிந்தெழுந்து சிவபிரானையும் உமாதேவியாரையு மனதிற் றியானஞ் செய்து, அவ்விடத்தைநீங்கிச் சூக்ஷும ரூபத்தோடுஞ் சிந்துராசனுடைய கொலுச்சபையை நெருங்கி, அங்கு அவனினுந் தாழாமலிருக்குமாறு அவன் சிம்மாதனத்தினும் மேலான பிரகாசத்தோடு ஓர் சிம்மாதனத்தைத் தமது மனதினாற் சிருட்டித்து, அதில் அவன் வீற்றிருக்கின்ற பராக்கிரமத்தினும் அதிகமான பராக்கிரமத்தோடும் தாம்வீற்றிருந்தனர். இவ்வாறு நந்திதேவர் வந்து வீற்றிருப்பதைச் சிந்துராசன் பார்த்து அளவற்ற காவல்களைக் கடந்து நமக்குமுன் சிங்கவேற்றினைப்போல இவன் இங்கு வந்திருப்பது மிகநன்று. மிகநன்றென்று அதிசயித்து, அடங்கற்கரிய கோபத்தோடு நீயார்? எங்ஙனமிருக்கின்றவன்? இங்கு யாதுகாரியமாக வந்தனை? யென்று கேட்டனன். அதற்கு நந்திதேவர் சொல்லுவார்: அரசனே! யாம் அந்தமுமாதியுமில்லாத மயூரேசருடைய தூதன்; நம்மை உலகத்தார் நந்தியென்று சொல்லுவார்கள்; நாம் உன்னிடத்தில்வந்த காரியத்தையும் சொல்லுகின்றோம். ஞாபகமாய்க்கேள்; செல்வமிருக்கின்றவர்களிடத்திற் றெளிவான அறிவிராதென்று சொல்லும் வாக்கியத்தின் பொருளை உன்னிடத்திலும், உனது மந்திரிகளிடத்திலு மிருக்கக் கண்டோம். அஃதெவ்வாறெனில், நீ அருமையாகிய தவங்களைச் செய்து அழியாத வரங்களையும் அளவிடற்கரிய போகபாக்கியங்களையும் பெற்றனை. அவ்வாறுபெற்ற நீ அந்தோ! அவைகட்குரிய வேதமார்க்கங்களில் நின்று அவைகளை யழியாமற் பாதுகாத்து என்றைக்கும் வாழ்ந்திருக்க எண்ணமற் போயினை. நிதானப்படியாயினும், உனது பாக்கியங்களை எல்லாஞ் சந்தோஷத்துடன் உண்டனுபவிக்கின்ற மந்திரிகளென்று சொல்லப்பட்ட பாவிகளும், கொடுங்கோல் செலுத்துகின்ற உன்னை அக்கோணலினின்று நீக்கி நெடுங்காலம் வாழும்படியாக உனக்கிதமான வசனங்களைக் கூறித் தெளிவிக்காமற் போனார்கள். இதனாலும் இவ்வாறே காலங்கழித்து வந்தனை. இறந்த காரிய

மிருக்க இனிமேலாயினுந் தேவர்களையும் முனிவர்களையுஞ் சிறையினின்று நீக்கி, நீதிதப்பாமல் வேதநெறியை யாதரித்துக்கொண்டு இப்போது கிடைத்திருக்கின்ற பாக்கியத்தில் நீடூழி வாழ்ந்திரு. இதை உனக்கறிவிக்குமாறே எமது பெருமான் அனுப்பினர். இக்கருத்து உனக்கில்லாமல் தேவர்களெல்லாம்நகைக்கும்படி மாண்டுபோகக் கருத்திருக்குமாயின், இக்ஷணத்திலேயே நால்வகைப் படைகளோடும் யுத்தத்திற்கு வரக்கடவை. இந்த நகரத்திற் கொருயோசனை தூரத்தில் எமதுகர்த்தர் இத்தினம் வந்திறங்கி யிருக்கின்றனர். நீயும் அங்கு வந்து அவரைக்காணென்று சொல்லினர். இவை யனைத்தையுஞ் சிந்துராசன் கேட்டுக் குலுங்க நகைத்து, அனற்பொறி பறக்கும்படியாகக் கண்களை விழித்துக் கோபித்து, ஓ நந்தியே! சிறுவனாகிய உன்னிறைவன் புத்தியைப்போல இங்குவந்தனை உனது புத்தியும் இனி நடக்கப்போகின்ற கதியினையும் நீயறியாய். அவன் முன்னஞ் சிலஎளியவர்களைக் கொன்றதையே பெரிதாக மதித்து அவ்வாறே மேலான என்னையுங் கொல்லுவனென்று அஞ்சாமல் வந்து சொல்லினை. யானைமுதலிய பலமிருகங்களைக் கொன்று புசிக்கவல்ல சிங்கமாயினும், ஓர்சிம்புள் முன்னே அது யென்னசெய்ய மாட்டும். தேரை முதலானவைகளைச் சமயம் வாய்த்தபோது கொன்றுதின்னவல்ல நாகமாயினும் ஓர் கருடன் முன்னே என்னசெய்யக் கூடும். கையில் வாளேந்தவறியாத சிறுவனைப் பராக்கிரமத்திற் சிறந்தவனென் றெளிதாகப் பேசினை. இவ்வாறு பேசிய உனது ஏளனம் போகும்படிச் செய்வேன். ஆனால் தூதனென் றுன்னைக் கொல்லாமல் விட்டேனென்று சொன்னான். இப்படி அவுணபாதகனாகிய சிந்துராசன் சொல்லிய வார்த்தைகளைக் கேட்டமாத்திரத்தில் நந்திதேவருக் கதிகோபமுண்டாகி, அடாமூடனே! எமதுகர்த்தர் தூதுபோய்ப் பேசிவாவென்றுசொல்லிய கட்டளைக்கடங்கி உன்னைக் கொல்லாமல் விட்டேனேயன்றி, அவனிணங்காவிட்டால் உடனே கொன்றுவிட்டு வரக்கடவையென்று ஒருவார்த்தைசொல்லியிருப்பாராயின் மாறுபட்ட வுன்னையும், இச்சபையி லிருக்கின்றோர்களையும் என்கையினாற் பிசைந்து சந்தனச்சேறாக்கி மார்பிற் பூசிக்கொண்டு உன்னுடைய சேனைகளனைத்தையும் எரித்துச் சாம்பராக்கி விடுவேன். மயூரேசரைச் சிறுபிள்ளையென்றும் வலியற்றவனென்றும் ஏளனமாகப் பிதற்றினை. அவரிட்டருளிய கட்டளையைக்கடவாமல் உன்னிடத்திற்குவந்த எனது வல்லபத்தைப்பார்த்துப் பின்னர் அவருடைய வல்லபத்தையும் நிதானிக்கக் கடவையென்றுசொல்லி ஒரு மூச்சுவிட்டார். அம்மூச்சின் காற்றினால் மண்டபத்தினுடைய உத்திரமானது பிளந்தது. அருகிலிருந்தவர்களெல்லாம் இடியிடித்ததோ வென்று நடுங்கிச் சிலர் வெயர்த்தார்கள். சிலர் விழுந்தார்கள். சிலர் மயங்கினார்கள். சிந்துராசன் பயந்து ஒரு முகூர்த்தகாலம் வரையில் திகைத்து மூர்ச்சித்திருந்தான். அச்சமயத்தில் சகல வத்துக்களையும் ஆக்கவும் அழிக்கவும் வல்ல நந்திதேவரானவர், தாம் வீற்றிருந்த சிம்மாதனத்தை அங்ஙனே மறைந்துபோகச் செய்து சரேலென்று ஆகாயமார்க்கமாகச் சென்று நடந்தசேதிகளையெல்லாம்

மயூரேசருக் கறிவித்தனர். அவை யனைத்தையும் மயூரேசர்கேட்டுப் புன்னகை செய்திருந்தனர். அருகிலிருந்த பூதராசனும் புட்பதந்தனுங் கோடிபூத சேனைகளுடன் சென்று, சிந்துராசனுடைய கோட்டையை நாற்புறமும் வளைத்து, அந்நாற்புறத்தும் நாற்பதுகோடி வீரர்களுடன் காவல்கொண் டிருக்கின்ற சிங்கமுகாசுரன், யாளிமுகாசுரன், புலிமுகாசுரன், கஜமுகாசுரன் முதலானவர்களுடனே யுத்தஞ்செய்து மாய்த்து, ஓர் நிமைப்போதில் மீட்டுந் திரும்பி வந்தனர். முன்னர் நந்திதேவருடைய சுவாசகாற்றினால் மனந்திகைத்து மூர்ச்சித்துக் கிடந்த சிந்துராசனாவன் பின்னர் தெளிந்தெழுந்து, தன்னைப் பணிந்திருக்கின்ற மந்திரியர்-சேனாபதியர்-தூதர்-சாரணர் முதலானவர்கட்கு ஒருதூதன்வந்துபேசி நடத்தியவிதம் இதுவென்றுசொல்லி இனி அரைக்கணத்தில் நமது சத்துருக்களுடைய உயிரைவாங்கினாலன்றி யான் அசனஞ்செய்கின்றதில்லையென்று சபதங்கூறி, இந்நிமிஷத்தில் நமது நால்வகைச் சேனைகளையும் வரவழைக்கக் கடவீர்களென்று ஆக்கியாபித்தான். உடனே வியவர்களோடி வள்ளுவரைக்கொண்டு முரசறைவித்தார்கள். அம்முரசோசை கேட்டமாத்திரத்தில் அவ்வவர்கள் செய்திருந்த கருமங்களை அந்தந்த வண்ணமே விடுத்து நால்வகைப் படைகளோடும் இராசவீதியில் வந்துகூடினார்கள்.

இப்பால் தனக்கு மரணமே யில்லையென்று தீர்மானித்து ஒன்னார்களை ஒருதிரணமாக மதித்திருக்கின்ற சிந்துராசன், பரிசனர் போற்றிவர ஆயுதச்சாலையுள் நுழைந்து, பொன்னுடையை யுடுத்தி, இடையிற் பட்டுக்கச்சையை யிறுக்கி, கூர்மையாய்ச் சொலித்திருக்கும் வச்சிரவாளாயுதத்தை மடியிற் சொருகி, மேகதர்ச்சனையையொப்பக் கலிக்கும் வீரகண்டாமணியைப் பாதத்திற்கட்டி, விசாலமாகிய மார்பினிடத்தில் வயிரங்களினாற் சோதித்திருக்கும் அபேதகவசத்தைப் பிகிந்து, கரசாடுவிரல்சாடு முதலியவைகளை வரிசைபடத் தரித்து, மின்னலையொப்பப் பிரகாசிக்கும் அலகையுடைய கொடியபாணங்கள் நிறைந்திருக்கின்றதுணியை முதுகிலிறுக்கி, தங்கத்தினாற்பிரகாசித்திருக்கின்ற வீரபட்டயத்தை நெற்றியிற்கட்டி, மற்றும் போர்க்கோலத்திற்குரிய சின்னங்களைத்தரித்து, நவரத்நமயமாக விளங்குங் கிரீடத்திற் றும்பைமாலையைச்சுற்றி, மந்தரகிரியைப்போலப் பாரித்து, பொற்கட்டுகள் பிகித்து இருகுதைகளினும் மணிகள் சத்திக்க விளங்கும் வில்லை வணங்கி யெடுத்து, வீரலட்சுமியைத் தொழுதுபோற்றி விடைபெற்றுக்கொண்டு, ஆயுதசாலையைக் கடந்து செயவுற்சாகத்துடன் வெளிவந்தனன்.

அச்சமயத்திற் சிலதூதர்கள் அவனைப் பணிந்து, ஆண்டவனே! முன்னர் தூதாகவந்து சென்றவனைப்போல இரண்டுவீரர்கள்கோடிபூதசேனைகளோடும் வந்து, நமதுகோட்டைக்கு நாற்புறங்களினு மிருந்தகாவலாளர்கள் யாவரையுந் தூளாக்கிப் போயினரென்று சொன்னார்கள். அதைக் கேட்ட மாத்திரத்தில் காய்ந்தபாலானது நெருப்பினாற் சூடேறுந்தோறும் அந்நெருப்பின்மீதே பொ

ங்கிவழுவதுபோலச் சிந்துராசனுக்குக் கோபமேலிட்டுக் கோட்டைமதிற்புறத்தில் முன்போலக் காவல்கொண்டிருக்கும்படி வேறே சிலவீரர்களை யனுப்பித் தனது அரண்மனையினுஞ் சிலவீரர்களைக்காவல்செய்து,வெளியேவந்துசிலவீரர்களுக்குத் தேர்களும்,சிலவீரர்களுக்குப்படைகளும், சிலவீரர்களுக்குக் கிராமங்களும், சில வீரர்களுக்கு வஸ்திராபரணங்களும், சில வீரர்களுக்குக் கௌரவமான பட்டப்பேர்களுங் கொடுத்துத் தானுந்தேரிலேறி, இரணபேரி-ஜயபேரி-வெற்றிசங்கம்-திமிலை-காடிகை-காகளம்-சல்லரி-மல்லரி முதலியவாத்தியங்கள் சத்தசாகரங்களைப்போல முழங்கவும், கொடி-குடை—பிச்சம்-சாமரை-ஆலவட்டம் முதலிய சின்னங்கள் நாற்றிசைகளினும் நெருங்கித் துள்ளவும், மங்கலப்பெண்கள் நடனமாடவுமாக வழிக்கொண்டு தனது தேரைச் சுற்றி சேமத்தேர்களும், அச்சேமத்தேர்களைச்சுற்றி வீரர்களுடைய தேர்களும், அத்தேர்களைச் சுற்றி யானைகளும், அந்த யானைகளைச் சுற்றி குதிரைகளும், அக்குதிரைகளைச் சுற்றி பதாதிகளும், புடைசூழ்ந்து நெருங்கிவரச் சேனைகளை நடாத்திச் சென்றனன். அப்போது அட்டதிசைகளைப் போர்த்து ஆகாயத்தி லெழுந்த தூளிப்படலங்கள் எத்தன்மைத்தா யிருந்ததென்னில்: கொடிய பாதகனாகிய சிந்துவானவன் தனது குலத்தோடும் மயூரேசரால் மரணமெய்தும் காலம் நேரிட்டதென்று பூலோகம் அனைத்தும் தன்னினமாகிய தெய்வலோகத்திற்குச் சென்று அறிவிப்பதுபோ லிருந்தது.

இவ்வாறு சிந்துராசன் படையெடுத்துத் தனது பட்டணத்தினின்றும் வெளிக்கொண்டு வருவதை நாரதமுனிவ ரறிந்து விநாயகமூர்த்தியைப் பணிந்தெழுந்து, சுவாமீ! வீராதிவீரனாகிய சிந்துராசனானவன் சத்தசாகரங்களைப் போலத் தனது சேனைகளைக் கூட்டிக்கொண்டு இதோ யுத்தத்திற்கு வந்துவிட்டனனென்று சொல்லி மீண்டனர். அதைக் கேட்டமாத்திரத்தில் மயூரேசருமெழுந்து, நமது வீரர்களையும் பூதசேனைகளையும் யுத்தத்திற்கு நடக்கும்படி முடுக்கினர். அப்போது நந்திதேவர் மயூரேசரைப் பணிந்தெழுந்து, சுவாமீ! வீரபத்திரரும், அடியேனும், மற்ற யாவரும் அவனோடு யுத்தஞ்செய்து இளைத்துப்போனால், அதற்குமேல் சுப்பிரமணிய தேவரும் தேவரீரும் யுத்தத்திற்குச் செல்லும்படி கிருபைசெய்யவேண்டு மென்று பிரார்த்தித்தனர். அதற்கு மயூரேசர் நந்திதேவரைப் பார்த்து இரண்டாஞ் சம்புவே! எதிர்த்துவருகின்ற சிந்துவோடு யாம் முன்னின்று யுத்தஞ்செய்ய மிகுந்த வாஞ்சையுற்றிருக்கின்றே மாதலால், அப்பராக்கிரமசாலியை யாமே சங்கரிக்கவேண்டும். சுப்பிரமணியர் முதலிய நீங்க ளனைவரும் மற்றவீரர்களோ டெதிர்த்து யுத்தஞ் செய்யக் கடவீர்களென்று தமது மயில்வாகனத்தின்மீ தாரோகணித்தனர்; உடனே முன்னர் கனலாசுரனை சங்கரிப்பதற்குண்டாகிய பூதசேனைகளும் குமாரதேவர் முதலிய வீரர்களும், ஏனைய கணநாதர்களும், எக்காலத்தும் விட்டுப் பிரியாத முனிச்சினர்களும் அவ்வவர்களுடைய இரதங்களி லேறிக்கொண்டுவந்து மயூரேசமூர்த்தியைப் புடைசூழ்ந்தார்கள். அப்போது உய்யவகையறியா

து எக்காலத்துந் தீங்கினையே விளைத்துவருகின்ற சிந்துராசனுடைய கொடுங்கோலின் வெப்பத்தினால் வெதும்பிய லோகங்கள் குளிர்ந்து செழிக்கும்படி உதயங்கொண்டு பிரகாசிக்கின்ற பூரண சந்திரனைப்போல மயூரேசருடைய திருமுடியின்மீது பிரகாசிக்கும்படியாகச் சில பூதகணங்கள் வெண்பட்டுக் குடைபிடித்தார்கள். அளவற்ற சித்திகளுஞ் சேர்ந்து வாசஞ்செய்கின்ற இடம் இதுதானென்று மேலும் கீழுங் குறிப்பினாற் காட்டுவதுபோலச் சில பூதங்கள் வெண்சாமரைகள் வீசினார்கள்; விநாயகப் பெருமானுனவர் திருபாமூர்த்தியாதலால் சத்துருக்களின்மீ துண்டாகிய கோபாக்கினியானது ஒருவேளை தணியவுங் கூடுமென்று அவ்வக்கினி தணியாதிருக்கும்படி அதற்குத் துணையாகக்காற்றினைக் கூட்டுவிப்பதுபோல, சில பூதகணங்கள் ஆலவட்டங்களை யசைத்தார்கள். சத்தியகவசமில்லாதிருப்பதே ஓர் கவசமாகக்கொண்டிருக்கின்ற அவுணராசனாகிய சிந்துராசன் இன்னும் இரண்டொருதினத்தில் மாய்ந்து சகலலோகங்களுஞ் சவுக்கியத்தை யடையுமென்று ஆனந்தத்தினு லெழுந்து துள்ளுவதுபோலச் சில பூதகணங்கள் வெற்றிக்கொடிகளைப் பிடித்தார்கள். முன்னர் மயூரேசமூர்த்தியைச் சிறுபிள்ளையென்று இகழ்ச்சிசெய்த சிந்துராசனே! இப்போதவரைப் பராபரவஸ்துவென்று தெளிந்துகொள்ளும்படியாக மும்மூர்த்திகட்கும் முதல்வனாகிய விநாயகன் வந்தான். கணன் முதலாயினேருடைய உயிரை வாங்கிய கேசவன் வந்தான். சகல உயிர்கட்கும் ஆனந்தத்தை யுண்டாக்கவல்ல கர்த்தன் வந்தான். சிவபெருமானும் உமாதேவியாரு மீன்ற பாலன் வந்தான். என்று சில பூதகணங்கள் கட்டியங்கூறினார்கள். சொர்க்கமத்திய பாதலமென்னும் மூத்தலங்களி லுள்ள சகலரும் இனி அல்லலைவிட்டுச் சுகமுற்றிருங்கள். நம்மையெல்லாம் காத்தாளவல்ல இவ்விநாயகன் வந்தானென்று கூவுவதுபோலச் சிலபூதகணங்கள் பேரிகை முதலான வாத்தியங்களை முழக்கினார்கள். இவ்வித வைபவங்களோடு மயூரேசமூர்த்தி யெழுந்தருளியகாலத்தில் தமது பூதகணங்களுடைய பாதங்களினு லெழுகின்ற தூளியானது ஆகாயத்தி லெழுகின்ற தெவ்வா றிருந்ததென்னில்: பூதலத்திருவா யிருக்கின்ற சிந்துராசனுனவன் எமது கர்த்தருடைய பூதகணங்களினது பாதம்பட்டு வல்வினைகளினின்று நீங்கி வானகதி யடையச் செல்லுமாறுபோலிருந்தது.

இப்பால் இரண்டாயிரம் வெள்ளம் வீரர்களோடும் வந்த சிந்துராசனுடைய அமைச்சனாகிய மித்திரனுடனே சுப்பிரமணியக்கடவுளானவர், தமது சகோதரர்களாகிய நவவீரர்களோடு இலக்கவீரர்களும், கோடி பூதவீரர்களும், புடைசூழச் சென்று யுத்தஞ்செய்தனர். வேறொரு இரண்டாயிரம் வெள்ளம் வீரர்களோடு வந்த சுவுத்துவனென்னும் அமைச்சனுடனே வீரபத்திரக்கடவுளானவர், கோடி பூதவீரர்கள் புடைசூழ்ச்சென்று யுத்தஞ்செய்தனர். மற்றோர் இரண்டாயிர வெள்ளம் வீரர்களோடு வந்த வீராசனுடனே நந்திதேவரானவர் கோடி பூதவீரர்கள் புடைசூழச்சென்று யுத்தஞ்செய்தனர். தனித்தனியே கோடி அசுரவீரர்களோடும் வந்த நுவசன்-ஆகாயன்-நார்த்தன்-சார்த்தூலன்

என்னும் இந்நால்வருடனே புட்பதந்தன்-பூதராசன்-விகடன்-சபலன் என்னுமிந் நால்வரும் முறைமைப்படியே சென்று யுத்தஞ்செய்தார்கள். இவ்வாறே இருதிறப் படைகளினுமுள்ள அளவற்ற வீரர்கள் தத்தம் படைகளோடு வேறுவேறு யுத்தஞ்செய்தார்கள். இரணியகருப்பன்-சாமளன்-இரத்தலோசனன்-சோமன்-பிருங்கி-பிரமதன்-பஞ்சானனன்-இலம்பகர்னன்-அரன்-தாவானலன் முதலான சேனைத்தலைவர்களும், தம்மை விட்டுப் பிரியாத முனிச்சிறார்களும், முன்னர் தமது மனத்தாற் சிருட்டித்த பூதவீரர்களும் புடைசூழ்ந்து செய செயவென்று போற்றிவரும்படியாகச் சகலலோக நாயகராகிய மயூரேசமூர்த்தியானவர், விண்டுவேமுதலிய தேவர்களையெல்லாஞ் சிறையிட்டுத் திரிலோகங்களினுந் தனக்கு நிகரில்லாத மகா பராக்கிரமசாலியாகிய சிந்துராசனுடனே யுத்தஞ்செய்தனர்.

கேட்மர்களோ சவுனகாதி முனிவர்களே! இவ்வாறு இருதிறப் படைகளுள் இரதவீரர்களோடு இரதவீரர்களுங், கஜவீரர்களோடு கஜவீரர்களும், பரிவீரர்களோடு பரிவீரர்களும், படைவீரர்களோடு படைவீரர்களுங் கைகலந்து அமோகமான யுத்தத்தை விளைத்துவருகையில், பூதசேனைகளினும் அவுணசேனைகளினும் சரீரமுற்றுஞ் சல்லடைக் கண்கள்போலத் துளையுண்டும், களைத்தும், இளைத்தும், பதைத்தும், உளைப்புண்டும், சோர்ந்தும், செத்தும் இவ்விதமாகப் படாதபாடுகளைப்பட்டுக் கணக்கிறந்த வீரர்கள் மாண்டனர். அப்போது வேலாயுத மூர்த்தியாகிய சுப்பிரமணியக் கடவுளை யெதிர்த்து நின்ற மித்திரனானவன், தனது சேனைகளோடு நெடுநேரம் போர்விளைத்திருக்கின்ற சமயத்தில் பராக்கிரமசாலிகளாகிய பூதசேனைகட்கும், இலக்கர்கட்கும், நவவீரர்கட்கும் அதிக கோபாவேசமுண்டாகி மித்திரனுடைய நால்வகைச் சேனைகளினும் புகுந்து சிலரையுதைத் துருட்டியும், சிலரைப் பூமியிற் தேய்த்தும், சிலரைக் குடல்சரியமிதித்தும், சிலரைப் பஞ்சுபோலச் சதைத்தும், சிலரைப் பூமியுளடங்கத் தாக்கியும், சிலரைத்திசாதிசைகளி னெற்றியும், சிலரைச் சமுத்திரங்களில் வீசியும், சிலரை வாலவெல்லையிற் கடாவியும், சிலரை மூளைகள் சிதறவுதைத்தும், சிலரைக் கரங்கள் தோள்கள் முதலியவைகள் நுறுங்கச்சாடியும், சிலரை அம்மானையாடியும், சிலரைப் பந்தையொப்பவெறிந்தும் இவ்விதமாகச் சூருவளியை நிகர்த்து, வளைந்துவளைந்து ஒருவரையும் அப்புறம் இப்புறம் அகலவொட்டாமல் குதித்துக் குதித்துக் கடலைக்கலக்கிய மத்துக் கொப்பாக அலைத்து மாய்த்தனர். அதை மித்திரன்கண்டு வடவானலத்தைப்போலக் கொதித்தெழுந்து, பூதசேனைகளினும் இலக்கவீரர் கூட்டத்தினும் புகுந்து சிரங்கள்-கரங்கள்-துடைகள்-புஜங்கள்-மார்புகள்-கபோலங்கள் முதலியவைகளைக் கண்டித்து, மச்சராசிகளைப்போல உதிரவாரியில் மிதந்தும் அமுந்தியும் போகும்படியாகக் கண்டு, அளவற்ற யானைகளையுங் குதிரைகளையுங் கால்வேறு தலைவேறுகத் துண்டித்து, குலாலன் சக்கரம் போலவும், பிரசண்ட மாருதம் போலவு மாறிமாறிக் கரங்களினாலும், பாதங்களினாலும், அளவிறந்தபூதர்களை

மாய்ந்து, அரைக்கணப்போதில் இலக்கவீரர்களெல்லாந் திசாதிசைகளி லோடிப்பதுக்குப்படி முடுக்கினன். இவ்வாறு இலக்கர் அபசயப்பட்டுத் திரும்பியதை சுவவீரர்களி லொருவனாகிய வீரதீரன் கண்டு, வடவாக்கினியைப்போல மண்டியெரிந்து தனதுதேரை விரைவிற்செலுத்திவந்து மித்திரனெதிரில்நிறுத்திச் சகலருந்திடுக்கிட்டுவாடும்படி தனது வில்லைவளைத்துக் குணத்தொனிசெய்து சோனைபெய்பதுவும், நாணும்படிக்கு ஆயிரக்குரூரமாகியகணைகளைக் கரவேகமாகச் சொரிந்து, அவனது வில்லைமுறித்து, வேறொரு கதாயுதத்தையும் காகாவென்றுசுழற்றி அவன்மார்புக்கிலக்காகப் பிரயோகித்தனன். அதை மித்திரன் கண்டு இவன்வலியும்,வீரமும், விற்சாதுரியமும்,கரவேகமும், வித்தையின்பெருக்கும்மிகநன்று. மிகநன்றென்று நகைத்து, மந்தரகிரியை நிகர்த்து விளங்கும் மற்றோர்வில்லைக் கரத்திலெடுத்துத் தேவர்களெல்லாங் கண்டு பிரமிக்கும்படி அளவற்றகணைகளைப் பிரயோகித்து எதிரிவிடுத்தகணைகளையெல்லாம் பொடிபடுத்திமற்றொருகதாயுதத்தைஅதிகவேகமாகச்செலுத்தி அவன்விட்டகதாயுதத்தையும் அவன் பராக்கிரமத்தையும் அழித்து ஆர்ப்பரித்தனன். இவ்விதமாகத் தனது துணைவனுக்கு நேர்ந்த குறையை வீரதிவாகரன் கண்டு, காட்டழலை யொப்பச் சீறித் தேரை துரத்திக்கொண்டுவந்து பகைவ னெதிரில் நிறுத்தி ஒப்பற்ற தனது வில்லை வளைத்து அளவற்ற வாளிகளைத் தூண்டி, அவன் தேரைச் சின்னபின்னப்படமுறித்தனன். உடனேமித்திரன் வேறொரு இரதத்திற் பாய்ந்து விஷச்சுவாலைகள் வீசும்படியான வேலாயுத மொன்றை யெடுத்து அவன் நெற்றிக்கு நேராகப் பிரயோகித்தனன். அவ்வேலாயுதம் வெளிப்பட்டவுடன் இடி மின்னல் அக்கினி முதலானவைகளைப் பெருக்கி அதிக வேகமாய் வந்து வீரதிவாகரன் செலுத்திய பாணங்களையெல்லாம் விழுங்கி, அவன் நெற்றியில் உருவிப் பாய்ந்து, மூர்ச்சிக்கும்படிச் செய்து மீண்டது. அதை வீரராக்கதன்கண்டு ஆலகாலம்போலத் தனது தேரை விரைவிற் செலுத்திவந்து விண்ணுலகமும் மண்ணுலகமும் நடுங்கும்படி அநேக கணைகளைத்தூண்டி, அவன் வில்லை முறித்துச் சரீரமுழுவதுந் துளைபடச் செய்தனன். உடனே மித்திரன் வடவானலத்தைப்போலக் கொதித்தெழுந்து மற்றொரு வில்லினால் அளவற்ற பாணங்களைத் தூண்டி அவனுடைய வில்லையும் இரதத்தையும் பொடிபடக் கண்டித்தெறிந்து, அவன் வேறோ ரிரதத்திற் பாய்வதன்முன் இந்திரனுங் கண்டு நடுங்கத்தக்க ஓர் வச்சிராயுதத்தினை யேவி அவன் பராக்கிரமத்தைப்பறித்தனன். அப்போது வீரபுரந்தரனவன், வாயுவேகத்தினும் முந்தித் தனது தேரைத்துரத்திவந்து நெடிய வில்லை வட்டாகாரமாக வளைத்து கணக்கற்ற கோரமாகிய சிலீமுகங்களைத் தொடுத்துப் பகைவனுடைய இரதத்தையும், புரவிகளையுஞ், சாரதியையுஞ் சின்னபின்னப்படக் கண்டித் தெறிந்தனன். உடனே மித்திரனவன், வேறொரு இரதத்தையுஞ் சாரதியையுங்கொண்டு விரைந்துவந்து தன்னை யெதிர்த்துவருகின்ற சிலீமுகங்களையெல்லா மாற்றி, தனது வில்லில் பத்துபாணங்களைத் தொடுத்துப் பிரயோகித்து வீரபுரந்தரன் பின்னிட்டோடும்படி. அவன் மார்பைத்

துளைத்தனன். அதை வீராந்தகன் கண்டு, மனம் நொந்து அதிக வேகமாகத் தனதுதேரை முடுக்கிக்கொண்டுவந்து ரவுத்திராகாரமாகக் கோபித்துப் பாரித்திராநின்ற தனது வில்லை வளைத்து அண்டகடாகங்களு மதிரக் குணத்தொனி செய்து இரண்டாயிரம் பாணங்களை ஏககாலத்திற் பிரயோகித்து பகைவனுடைய குடை முதலிய சின்னங்களை யறுத்தெறிந்து, சத்தசாகரங்களும் ஏங்கி வாடும்படி சங்காரஞ்செய்தான். உடனே மித்திரனவன் காளகூடத்தைப் போலச் சீறி நாராசங்களை நிகர்த்த நூறு திவ்விய பாணங்களை அவன் புயங்களுக் கிலக்காக விடுத்து அவனது வச்சிர கவசத்தையும் தேரையும் பொடியாகச் செய்தனன். இச்சம்பவத்தை வீரகேசரி கண்டு, மனம் பதைபதைக்கப் பொங்கிச் சத்துருவை இந்நிமிஷத்தில் அடக்கி வாட்டுவே னெனச் சபதம்பேசி தேரைக் கொண்டுவந்து எதிரில் நிறுத்தித் தங்கக் கட்டுகள் பிகிந்து வெற்றிமாலையை யணிந்திருக்கின்ற தனது வில்லை வளைத்து அனந்தமுறை அளவற்ற கணைகளைச் சரமாரியாக மாறிமாறிப் பிரயோகித்துப் பகைவனுடைய இரதத்தையும் வில்லையும் முறிந்தெறிந்தனன். உடனே மித்திரன் வேறொரு இரதத்தையும் வில்லையுங் கொண்டு சர்ப்பத்தைப்போலச் சீறித், திசையானைகள் பயந்தோடக் கர்ச்சித்துப், படைகளிற் சிரேஷ்டமாகிய பிரம்மாஸ்திரத்தைப் பிரயோகித்தனன். அவ்வத்திரம் வெளிப்பட்ட மாத்திரத்தில் வீரகேசரி மறுபாணம்விட்டுத் தடுப்பதன்முன் அவனது புட்பமாலையணிந்த மார்பைப்பிளந்து மீண்டது; இந்த அபாயத்தை வீரமயேந்திரன்கண்டு, கோபித்து தேரைக் குலாலன் சக்கரத்தைப்போலத் திருப்பிக் கோடானுகோடி பாணங்களைப் பிரயோகித்து அவனுடைய விருதுக்கொடியையும் வில்லையு மொடித்தெறிந்துவேறொருவில்லையெடுக்குமுன்னம் அவனுடைய தேரையும் நூறியச்செய்தனன். உடனே மித்திரன் நேரேலென்று வேறொரு இரதத்திற் பாய்ந்து மற்றொருவில்லில் முப்பதுபாணங்களைத் தூண்டி முகத்திற்கிலக்காகப் பத்துபாணங்களும் மார்புக்கிலக்காகப் பத்துபாணங்களும் புயங்களுக்கிலக்காகப் பத்துபாணங்களும் பிரயோகித்து அவனாண்மையைப் போக்கினன். அக்கொடுமையை வீரமாமகேசன்கண்டு கண்களில் அழற்பொறிபறக்கக் கோபித்து அதிக வேகமாய்த் தனது தேரைச்செலுத்தி மகத்துக்களிட்ட சாபத்தினு மதிகவிரைவாக ஐந்து பாணங்களைஏவிப் பகைவனுடைய அம்புபெய் தூணியையும் வில்லையும் அரைக்கணத்திற் பொடிபடுத்தி, உடனே ஓர் சூலத்தையெடுத்து அவனது நெஞ்சில் உருவிப் பாயும்படியாக விடுத்தனன். அப்போது மித்திரனவன், மனம் வாடிக்கச் சர்ப்பத்தைப்போலச் சீறித் தனதுநெஞ்சிற்கு இலக்காகவருஞ் சூலத்தைப் பிடித்து ஓர்கணப்போதில் அவன் மார்புபிளக்கும்படியாகக் குத்தியெறிந்தனன்.

இவ்வித சம்பவங்களை யெல்லாஞ் சுப்பிரமணிய மூர்த்திக்கு அடியவராகிய வீரவாகு தேவர்கண்டு காலாந்தகனைப் போலக் கோபித்து, இவ்வொரு பாதகனால் நம்மவர்கள் பின்னப்படுவது வெகுநேர்த்தி வெகுநேர்த்தி

வெனப் பொங்கிச் சந்திரனை நோக்கிவரும் இராகுவைப்போலத் தமதுதேரை விரைவிற் செலுத்திவந்து மித்திரனெதிரில் நிறுத்தி, அடா அற்பனே! ஏதோ சிலவெற்றியைப் பெற்றனமென்று வீறியிருக்கின்றனை, அதை விட்டுவிடக்கடவை. உனக் கெமனைப்போல வந்தேன்; நிமைப்போதில் உன்று பிராணனை வீரசொர்க்கத்திற் சேர்ப்பேன்; பதனமா யிருக்கக்கடவையென்று எச்சரித்து, மேருவையொத்துப் பாரித்திருக்குந் தமது வில்லையெடுத்து வளைத்து அண்டரண்ட புவனங்களெல்லாஞ் செவிடுபட்டுத் தியங்கவும், சூரியசந்திரா ளீதென்ன உற்பாதமென்று தியங்கியோடவும், தேவர்கள் சரீரமுற்றும் வெயர்த்துக் கிடுகிடென்று நடுங்கவுமாகக் குணத்தொனி செய்து சங்கோப சங்கமாக அளவற்ற திவ்விய பாணங்களைத் தூண்டிப் பகைவனுடைய தேரையும் வில்லையும் மகுடத்தையும் பொடிபடுத்தி, அவன் நெற்றிக்கு இரண்டு பாணங்களும், மார்புக்கு மூன்றுபாணங்களும், புயங்கட்கு நான்குபாணங்களுமாய்ப் பிரயோகித்து ஆர்ப்பரித்தனர். அப்போது மித்திரனுனவன் சிறிது மூர்ச்சித்தெழுந்து இவனை வில்வன்மையினுலும் மற்ற பாணங்களின் முயற்சியினுலும் வெல்வரிதென்று நிதானித்து வேறொரு இரதத்தையும் வில்லையுங் கொண்டு தானரிதிற்பெற்ற மோகனுஸ்திரத்தை யெடுத்து மானதபூசையினுற் சகல வுபசாரங்களையுஞ்செய்து பூட்டி வீரவாகுதேவர் மார்புக்கிலக்காகக் காதளவு மிழுத்துப் பிரயோகித்தான். அப்பாணம் வெளிப்பட்ட மாத்திரத்தில் அதிகமகிமைகளைக் காட்டிப் புகைந்தெரிந்து வந்து வேறுபடையெடுத்து விடுவதன் முன்னர் வீரவாகுதேவர்மீது பாய்ந்து மூர்ச்சிக்கும்படி செய்துமீண்டது.

கேட்டீர்களோ சவுனகாதி முனிவர்களே! இவ்வாறு சிந்துராசனுடைய அமைச்சனுகிய மித்திரனுனவன் மகா பராக்கிரமசாலிகளாகிய இலக்கவீரர்களும், நவவீரர்களும் நிலைகுலைந்து சின்னுபின்னப்பட்டுப் பறக்கும்படி வாட்டித் தனக்கொருவர் நிகரில்லாதபடி வீரபராக்கிரமசாலியாய் இரணக்களமெங்குங் காலாந்தகனைப்போல அட்டகாசஞ்செய்து வலவுந்திரத்தைச் சுப்பிரமணியக்கடவுள்கண்டு, இவன்திறம் வெகுநேர்த்தியா யிருக்கின்றதெனக் கோபநகைசெய்து, பிரமனும் விண்டுவுந் தேடிக்காண்பரிய சுயஞ்சோதிப் படிவத்தைப்பெற்ற மயூரேச மூர்த்தியினுடைய திவ்விய சரணுரவிந்தங்களைப் பத்திவிநயத்துடன் சிந்தித்து, வாழ்த்திக் கொடிய அம்மித்திரனிருக்கு மிடத்திற் றமதுதேரை விரைவிற் றூரத்திவந்து இந்திரனுதிய தேவர்கள் களிக்கவுந், தருமதேவதைகளும் வேதாகமங்களும் வாழ்த்தவும், வீரலட்சுமியும் பத்திரகாளியுங் கொண்டாடவுமாக இடையிடையிற் றங்கக்கட்டுகளைப் பூண்டு மணிகள்கலிக்க, ஜயலட்சுமி தாண்டவஞ் செய்திருக்குந் தமது மேருவை யொத்த தனுவை இருகுதைகளுஞ் சேரவளைத்துப் பிரசண்டமாருதமும் வடவாமுகாக்கினியுந் தியங்கி மயங்கவும், அண்டங்களும் அவற்றிலடங்கிய புவனங்களுந் தத்தளித்துவாடவும், திசையானைகள் துதிக்கரங்களைத்தூக்கி வீறிட்டோடவுமாக டங்காரத்தொனி காட்டினர். அதை மகாசூரனுகிய மித்திரன்கண்டு, இவனை

யனையவர்களைப்போலச் சுலபமாக நினைக்கப்படாதென நிதானித்தவனுய் எப்போதும்பெடாமற் சேமத்தில் வைத்திருந்த ஒப்பற்ற வில்லைத்தாங்கி நாணேற்றி விண்ணவர் மண்ணவர் முதலாயினோர் கலங்கி ஏங்கும்படி குணத்தொனிசெய்து ஆர்ப்பரித்தனன். அப்போது முன்னர் சுப்பிரமணியக் கடவுள்செய்த டங்காரவொசையைக் கேட்டுச் சந்தோஷித்திருந்த தேவர்கள், கொடிய துன்மார்க்கனுகிய மித்திரான்செய்த குணத்தொனியைக் கேட்டமாத்திரத்தில் யாவரும் வாடித் திகைத்தவர்களாய், இன்பதுன்பங்களை ஏககாலத்திற் கண்டனமென்று பேசிக்கொண் டிருந்தனர். பின்னர் சுப்பிரமணியக் கடவுள் தமது வில்லிற் பத்துபாணங்களைத் தொடுத்து மித்திரன்விடுக்கும் பாணங்களையும், இரதம்-கவசம்-வில்-கொடி-குடை-தூணி முதலானவைகளையும் பொடிபடுத்தி, வேறே மூன்று பாணங்களை அவன்நெற்றிக் கிலக்காகப் பிரயோகித்தனர். அக்காலத்தில் மித்திரனென்பவன் பஞ்சேந்திரிய நிலைகள் பேதிக்க மதிமயங்கி மடிந்தவனைப் போலத் தேரினின்றும் வீழ்ந்து நெடுநேரம் மூர்ச்சித்துக் கிடந்து, மீட்டுந் தெளிந்தெழுந்து, அதிக கோபத்தோடு வேறொரு இரதத்திலேறி, மற்றொருவில்லில் அளவற்ற கடூரமாகிய பாணங்களைக் கோடை வருஷத்தைப் போலத் தூண்டிப் பிரயோகித்தான். அதைக் கடம்பமாலையணிந்த வேலாயுதமூர்த்திகண்டு கோடானகோடி குரூரமாகிய பாணங்களை ஏகமுகத்திற் றூண்டி அப் பாதகன்விட்ட பாணங்களை யெல்லாங் கண்டித்து அவனேறி நடாத்தின்ற தேரோடு சேமத்தேர் முதலானவைகளையு மழித்து துவசஞ் செய்தனர். அதற்குமேல் மித்திரனுனவன் கருடனைப்போல ஆகாயத்திற் பறந்து இந்திராஸ்திரம், அக்கினியாஸ்திரம், எமாஸ்திரம், நிருதியாஸ்திரம், வருணஸ்திரம், வாயுவாஸ்திரம், குபேராஸ்திரம், பாசுபதாஸ்திரம் முதலான தெய்வப் படைகளை ஒவ்வொன்றாகத் தூண்டி யார்ப்பரித்தனன். பின்னர் அவைகளெல்லாம் மாலைகளாக என்னை யாளவல்ல குமாரதேவருடைய திருவடிகளில் வீழ்ந்து சரண்புகுந்தன.

இவ்வாறு தான் விடும் தெய்வப்படைகளெல்லாம் அபஜயப்போவதை மித்திரன் கண்டு, இவனை இக்கிஷணத்தில் யமலோகத்திற் கனுப்புகின்றேனென்று ஆக்கிரமித்துத் தனது வாளை யுருவிக்கொண் டோடிவந்து தேர்ப்பாகன்மீது பாய்ந்து வெட்டநேர்ந்தனன். அப்போது சுப்பிரமணியக்கடவுள் புன்னகைகொண்டு, தமதுமருத்துவமுள்ள வச்சிராயுதத்தை யெடுத்துக் கரகரவென்றுச் சுழற்றி அவன் மார்பிற் றக்கினுர். உடனே மித்திரனுனவன் கோடையிடிபோல இரைந்துகொண்டு நிலத்தில் வீழ்ந்து பிராணன் நீங்கி வீரசொர்க்கத்தைச் சேர்ந்தனன்.

அதற்குமேல் கந்தாசுரனென்பவன், மிக்க அகங்காரத்தோடு சுப்பிரமணியக்கடவுளுக் கெதிரேவந்து அவரது சுந்தர வடிவையும், பராக்கிரமத்தையுங் கண்டு இவனை அத்திர சத்திரங்களாற் றொலைத்து வெற்றிபெறுவது மிகவு

மரித்தன்று நினைத்தவனாய், உடனே ஆகாயத்திற் பறந்து அங்கிருந்த வண்ணமே அளவற்ற மாயைகளை நடாத்திவந்தனன். அவை யனைத்தையும் எமதையனாகிய முருகக்கடவுள், பயன்படாதபடி விலக்கித் தமது தேரையும் அவ் வான வீதியிற்செலுத்தி அவன்முடியிற் கைகொண்டமட்டுமெறிந்தனர். உடனே அக் கந்தாசுரன் மூர்ச்சையாகிப் பூமியில் வீழ்ந் திறந்தனன்.

இப்பால், அதைச் சேனான் குரோத னென்னும் இரண் டவுணவீரர்கள் கண்டு, நாலாயிர வெள்ளஞ் சேனைகளோடு பூமி நெளியும்படியாக வந்து இரவுஞ்சகிரியைப் பிளந்த வேலாயுதமூர்த்தியை வளைந்து எங்கு மிருள்மூடும்படியாக அளவற்ற பாணங்களை மழைபோலச் சொரிந்து ஆர்ப்பரித்தார்கள். அதனால் பூதசேனைகளும், இலக்கர்களும், நவவீரர்களும் மனம் புழுங்கி வருந்தினார்கள். அதைப் பிரமனைச் சிறையிட்ட சண்முகப்பெருமான் கண்டு குறுநகை செய்து உடனே தமது வில்லில் நியிலுங் கொடுமைபெற்றிருக்கின்ற அளவற்ற பாணங்களைத் தூண்டி இமைப்போதிற் பகைவர் விடுத்த பாணங்களையெல்லாம் பொடிபடுத்தி நிலத்தில்விழுத் தள்ளி, மீட்டும் வேறே பத்துப் பாணங்களை யெடுத்து ஒருகொடியிற் பிரயோகித்தனர். அத் திவ்வியபாணங்கள் வெளிப்பட்டமாத்திரத்தில் கிடுகிடுத்த தொனிகளுடன் ஆர்ப்பரித்து அனற்பெருக்கை யிறைத்துத் திருதிகென் றெரிந்து ஒவ்வொன்று பத்துநூறு ஆயிரம் பதினாயிரம் ஆறுயிரம் கோடி யென்னும் கணக்கினு மேலாகப் பெருகி, வரிசைவரிசையாக நாற்றிசைகளினும் பாய்ந்து, ஓர் கணப்போதில் அந் நாலாயிர வெள்ளஞ் சேனைகளையும் மாய்த்தன. இச் சம்பவத்தைச் சேனனுங் குரோதனுங் கண்டு வடவைக் கனலும் ஆலகாலமு மொன்றுபட்டுச் சீறியெழுந்ததைப்போல ரவுத்திராகாரமாகக் கோபித்து நாலாயிர வெள்ளஞ் சேனைகளுஞ் சின்னபின்னப்பட வாட்டிய சத்துருவை இந்நிமிடத்திற் கண்ட துண்டமாகக் கொல்லுவோமென்று ஆக்கிரமித் தெழுந்து தங்கள் கரங்களிற் பற்றியிருக்கின்ற விற்களை வளைத்துப் பலவிதபாணகோடிகளையும், பிண்டி-பாலம்-முசலம்-தோமரம்-கப்பணம்-முசுண்டி-எறிவேல்-சக்கரம்-தண்டாயுதம் முதலிய படைகளையும், பர்வதங்கள்மீது மேகங்கள்கவிந்து வருஷிப்பதுபோல ஒன்றனந்தகோடிகளாகச் சொரிந்து சிங்காதஞ்செய்தார்கள். இவ்வாறு அப் பாதகர் விட்ட படைகளுக்கெல்லாம் பிரதியாக வேறுவேறு பாணங்களை யெமது குமாரதேவர் விடுத்து அரைக்கணப்போதில் அத்தனை பாணங்களையும் பொடிபடுத்தி உடனே தமது பாசத்தையெடுத்து அதிக வேகமாகப் பிரயோகித்தனர். அம்மாத்திரத்தில் அப்பாசமானது வானத்தெழுந்து பலகோடி திவ்விய சரங்களைப் படைத்து அனலை யிறைத்துத் திசைகளதிர வார்ப்பரித்துவந்து அப்பாதகர்களுயிரைப் பானஞ்செய்து மீண்டது பூதவீரர்களும் இலக்கவீரர்களும் அளவற்ற மகிழ்ச்சியை யடைந்து சண்முகக் கடவுளைத் துதிசெய்தார்கள். நவவீரர்கள் சத்துருக்களுடைய மனமெல்லாங் கலங்கும்படி வெற்றிச்சங்கம் முழங்கினார்கள். சுப்பிரமணியக் கடவுள் சிந்தாசுரனுடைய அமைச்சனாகிய மித்திரனையும் அவனோடு

வந்த வீரர்களையுங் கொன்றும் கோப மடங்காதவராய் இன்னுமெதிர்ப்பவர் உண்டோவென்று ரணக்களத்திற்றானே எதிர்பார்த்திருந்தனர்.

இவரிவ்வாறாக, மற்றோ ரமைச்சனாகிய கவுந்துவ னென்பவனை எதிர்த்து நின்ற வீரபத்திரக்கடவுளானவர், ஓர் கணப்போதில் அவனுடைய சேனைகளையெல்லாங் கொன்று, எங்கும் பிணமலைபாகக் குவித்து, உதிரவெள்ள மோடும்படியாகச்செய்து ஆர்ப்பரித்தனர். அதைக் கவுந்துவன் கண்டு பிரசண்ட மாருதத்தின்மீது வடிந்தீ யெழுந்து வருவதுபோலத் தனது தேரை விரைவிற் செலுத்திவந்து வில்லை வட்டாகாரமாகவளைத்துப் பூதசேனைகள்மீது அளவற்ற பாணங்களைக் கோடைமழைபோலப் பிரயோகித்தான். அப்போது வீரபத்திரக் கடவுள் தமது வில்லில் அநேக பாணங்களைத் தூண்டிப் பகைவன் விட்ட பாணங்களையெல்லாங் கண்டித்தெறிந்து மற்றொரு பாணத்தினா லவனுடைய தேரை முறித்து நிலத்தில் வீழ்த்தினர். உடனே அவன் மற்றொரு தேரிலேற அதையும் வேறொரு பாணத்தை விடுத்து சின்னபின்னப்பட் டருளச்செய்தனர். பின்னர் கவுந்துவன் அதிக வீராவேசத்துடன் விழிகளி லனற்பொறி பறக்கும்படியாகச் சீறி, ஓர் தண்டாயுதத்தைக் கரகரவென்று சுழற்றி வீசி, வேறொரு இரதத்திற் பாய்ந்து ஆர்ப்பரித்தனன். அதை அண்டர் தருக்கினை யழித்த வீரபத்திரமூர்த்தி கண்டு, மேருகிரியை நிகர்த்த தமதுவில்லில் ஆயிரங்கணைகளைத் தூண்டிப் பகைவன் விட்ட தண்டாயுதத்தைப் பொடிபடுத்தி மீட்டும் நூறு கணைகளைப் பிரயோகித்து அவனேறி நடாத்துகின்ற தேரோடு சேமத்தேர்களும் அச்சுவேறு மச்சுவேறு கொடுங்கைவேறு குத்துக்கால் வேறாகப்போகும்படி வெட்டியெறிந்தனர். உடனே அப்பாதகன், வடவானலத்தைப்போலச் சீறி கொவ்வைக்கனியையும் அரக்கையும்போலச் சிவந்தவிழிகளிலிருந்து தீப்பொறிகளைக் கொட்டி, மீசை துடிக்கக் கோபித்துச் சரேலென்று உடைவாளை யுருவி இடசாரி வலசாரியாகத் திரிந்து வீரபத்திரக் கடவுளுடைய தேரின்மீது பாய்ந்தனன். அதை எமதையன் கண்டு இனி இவனை வைக்கலாகாதென் றெண்ணி விரைவிற் றமதரையிற் சொருகியிருந்த சுரிகையை உறையிலிருந்துருவி அக் கவுந்துவனுடைய கரத்தை வாளுட னற்றுவிழும்படிக்குக் கண்டித்து, அவன் கவுளில் அனற்பொறிபறக்கும்படி புடைத்தனர். உடனே அப்பாதகன் சோர்ந்து மலைபோல மண்ணில்வீழ்ந்து மாய்ந்தனன்.

இப்பால் அதை யவனுக்குத் துணையாகவந்த தமனென்பவன்கண்டு, அக்கினிபோல மனம்வேக உதட்டைக் கடித்துப் பலிக்குழன்று திரியும் பூதர்களையும், படைவீரராகக் கொண்டவன் நம்மவரோடு பகைக்கவு மெளிதாயிற்றோ நல்லகாரியம் இப்போதே இவன்கோபத்தை யடக்கி வாட்டுவேனெனக் கோபித்து, மதயானையையொத்த வலிபெற்றவர்களா யிருக்கின்ற மூவாயிர வெள்ளஞ் சேனைகளைக் கூட்டிக்கொண்டு இரணபேரி ஜயபேரி முதலிய போர்ப்பறைகளை அண்டங்க ளதிரமுழக்கி, வீரபத்திரக்கடவுளை நாற்புறத்தும் வந்து வளைத்துக்

கொண்டனன். அப்போது வீரபத்திரக்கடவுள் சர்வசங்கார உருத்திரனைப் போல ஆர்ப்பரித்து, மான்கூட்டத்தில் புலிபுகுந்தது போலவும், எலிக்கூட்டத்தில் சர்ப்பம் புகுந்தது போலவும், கொக்குக்கூட்டத்தில் இராசாளி புகுந்தது போலவும், தமனென்பவனுடைய சேனாசமுத்திரமத்தியிற் புகுந்து தேர்களையெடுத்துத் தேர்கள்மீது மோதியும் யானைகளையெடுத்து யானைகள்மீது சாடியும் குதிரைகளையெடுத்துக் குதிரைகள்மீ தரைத்தும், ஒவ்வொரு தடவையில் ஆயிரம் பதினாயிரம் ராக்ஷதர்களைச் சேர்த்தெடுத்துக் கசக்கி உதிரமோடப் பிழிந்தும், சிலரைத் திசாதிசைகளி லெறிந்தும், சிலரைக் கடல்களில் வீசியும், சிலரை வானத்தேற்றியும், சிலரைக் கன்னங்கலங்க மோதியும், சிலரை ஒருகாலை மிதித்து மற்றக்காலைக் கரங்களிற் பற்றிப் பனைநாரைப் போலக் கிழித்தெறிந்தும், சிலரைக் கழுத்தை முறித்தும், சிலரைக் கால்களினுஞ் சேர்த்துக் குயவன் மண்ணை மிதிப்பதுபோலத் துவைத்தும், மின்னலைப் போலப் பிரகாசிக்கின்ற பட்டாக்கத்திகளை யுதறிவீசி ஒவ்வொரு தாக்கில் அளவற்ற சிரங்களைக் கண்டித்தும், சிலரைச் சுரிகை கட்டிகளினுங் குடல்கள் வெளிப்பட்டுறையக் குத்தியும், சிலரை வாள்களைக் கொண்டு சின்னபின்னமாக வெட்டியும் ரணபத்திரகாளிகண்டு களிக்கும்படியாகக் கரியதேகத்தைப் படைத்திருக்கின்ற அவுணர்களை யெல்லாம் வாட்டிப் பம்பம்மென்று வெற்றிச்சங்கினை முழக்கிநின்றனர்.

உடனே தமனென்பவன் அதிக வீராவேசத்துடன் தனது தேரை விரைவிற் செலுத்திவந்து கரத்திலேந்திய தனுவை இருகுதைகளு மொன்றுபட வளைத்து அதில் கணக்கிறந்த பாணங்களை அதிகவேகமாகப் பூட்டிப் பிரயோகித்தனன். அவையனைத்தையும் ஓர்நொடிப்போதில் எமது வீரபத்திரக்கடவுள் தமது தண்டாயுதத்தினால் விலக்கி அவனைத் தேரோடு மெடுத்து ஆகாயத்திலெறிந்து அவனுடைய சேமத்தேர்களையும் உடைத்துத்துகள்படுத்தினர். பின்னரப்பாதகன் ஆகாயத்தினின்று பாதலலோகத்தில் வீழ்ந்து மூர்ச்சையாகி மீட்டுந்தெளிந்தெழுந்து, உடனே தூர்வாளை யுருவிக்கொண்டோடிவந்து நீயராக்கிரமசாலியேயானால் என்னோடு வாட்போர்செய்யக் கடவையென்று அட்டகாசஞ் செய்தான். அப்போது வீரபத்திரக்கடவுள், இவன் திறத்தை யறிவோமென்று தமதிடையிற் சொருகியிருந்த வாளையுருவிக் கரத்திலெடுத்துச் சூறுவளியைப் போலவும், திருப்பாற்கடலைக் கடைந்த மந்தரகிரிக் கொப்பாகவுஞ் சுழன்று சுழன்று தமது பாதத்திலணிந்த வீரகண்டாமணி கலீர்கலீரென்று சத்திக்கும்படியாக விளையாடி அவனுடைய தோள்களையுந் தாள்களையும் கண்டதுண்டமாக வெட்டி, அவன்சென்னியானது கடலிற்போய் விழும்படி யறுத்தெறிந்து இன்னும் பகைவனுண்டோவென்று நாற்றிசைகளினுந் தமது விழிகளைப்பரப்பி நகைத்திருந்தனர்.

இப்பால் நந்திதேவரோடு எதிர்த்துநின்ற வீராசனனெனவன், தனது நால்வகைச் சேனைகளோடும் பாரித்தவிற்களை வளைத்துப் பூதசேனைகள்மீது சோனை

மாரியைப்போலப் பாணங்களைப் பிரயோகித்து, எழு-மழு-கப்பணம்-பிண்டிபாலம்-முசலம்-சக்கரம் முதலாகிய படைகளை விடுத்து அகோரமாகிய யுத்தத்தை விளைத்தனன். அதை நந்திதேவர்கண்டு, தமது அரையிலிருக்கும் உறையிற்சொருகி யிருந்த வாளாயுதத்தையுருவிக் கரத்திற் பற்றிக்கொண்டு தம்மை வளைத்துப் பொருதிருக்கின்ற அவுணவீரர்களைச் சங்கரிக்கத் தொடங்கி ஒவ்வொருவீசலில் அளவற்ற சிரங்க ளற்றுவிழவும், கணக்கற்ற கரங்கள் வெட்டுண்டிறையவும், அமோகமாகிய தோள்கள் சரியவும், அநேகங் கால்கள் மார்புகள் வயிறுகள் முதலிய வுறுப்புகளெல்லாந் தரிபட்டும் பிளந்தும் சரிந்தும் சின்னபின்னமாகிப் போகவுஞ்செய்து, சேனாபதியாகவந்த வீராசன்கரத்தை வில்லோடுங் கண்டித்தெறிந்தனர். உடனே அவன் மற்றொருகரத்தில் வாளேந்திவந்து நந்திதேவருடைய இரதத்திற் பாய்ந்து அட்டகாசஞ் செய்தனன்; அவனை இமைப்போதில் நந்திதேவர் தமது வாளாயுதத்தா லிரண்டு துண்டமாகி விழவெட்டி யெறிந்தனர். இம்முறையே புட்பதந்தன், தன்னை யெதிர்த்துவந்த துவசனோடு அளவற்ற யுத்தங்களை விளைத்து அவனை மாய்த்தனன். பூதராசன் ஆகாயனென்பவனை யெதிர்த்துக் கொன்றனன். விகடன் தூர்த்தனென்பவனோடு போராடி அவனைவெட்டினன். சபலன் சார்த்தூலனென்பவனை வதைத்து நாசஞ்செய்தனன். மற்ற அவுணவீரர்களை யெல்லாம் பூதராசன் சூழ்ந்து மடித்தனன்.

கேட்டீர்களோ சவுனகாதி முனிவர்களே! இவ்வாறு சுப்பிரமணியக்கடவுள் முதலான வெண்மரும், தம்மை யெதிர்த்துவந்த மித்திரன் முதலாகிய அவுணவீரர்களைமாய்த்துச் செயவுச்சாகத்துடனிருப்ப; வேதாகமமுதலியவைகளாலுந் தேடிக் காண்பரிய பெருமையினை வாய்ந்த மயூரேசப் பெருமானவர், தம்மை யெதிர்த்துநின்ற சிந்துராசனோடுசெய்த போரின்விதத்தை யென்னொன்று சொல்லுவேன். இரணிய கருப்பன் - சாமனன் - அரன்-சோமன்-அர்த்தலோசனன் - இலம்பகன்னன் - சங்கன் - பிருங்கி-தாவானலன்-பஞ்சானனன் என்னுஞ் சேனைத்தலைவர்கள் எண்மரும், முனிச்சிறார்களும், முன்னே மயூரேசருடைய திருமையா லுண்டான பூதவீரர்களும் தனித்தனியே நால்வகைப் படைகளோடுஞ் சென்று ரவுத்திராகாரமாகக் கோபித்துப் பகைவருடைய நால்வகைச் சேனைகளையும் முறைப்படி யெதிர்த்தனர். அப்போது அவுணவீரர்கள் பாரித்த விற்களை வளைத்துத் தீட்சண்ணிய மான பாணங்களையும், கதை - தோமரம் - பிண்டி - பாலம் - முசலம் - கப்பணம் முதலாகிய படைகளையும், பூதவீரர்கள்மீது பிரயோகித்துப் போராடுகையில் பூதவீரர்கள் மனம்பொறாமல் மண்டியெரிந்து தங்கள் தங்கள் கரங்களில் விளங்கும் விற்களை வளைத்து நாரிகளைப் பிகிந்து விஷத்தை யொத்த தீட்சண்ணிய முள்ள பாணங்களைச் சோனைப் பெய்வதுபோலாகச் சொரிந்து ஆர்ப்பரித்தனர்.

ஓ முனிவர்களே! இவ்விதமாக இருவகைப்பட்ட சதுரங்க சேனைகளும் பின்னிடையாமல், வடவையும் ஆலகாலமும் எதிர்த்துவந்து போராடியதற்கொப்பாக வீராவேசத்துடன் கொடிய போரை விளைத்துவரும்போது பற்களுதிர்ந்தும், மார்பு நெக்குவிட்டும், தொடைமுறிந்தும்போயினர். அனேக இரதங்கள் சின்னாபின்னப்பட்டு நொறுங்கின. அமோகமாகிய யானைகள் துண்டப்பட்டிறந்தன. கணக்கற்ற குதிரைகள் அகப்பட்டுருண்டன. அப்போது உதிரமானது பெருத்துப் பூரணப் பிரவாகமாக இரைச்சலிட்டோடியது. சில வீரர்கள் தமக்கெதிரில் வேல்வரவுமஞ்சாது இடையாநாட்டத்தினரா யிருந்து தம்மைப் பொருதுவரும் பகைவரைத் தாம் பொருது மாய்த்தார்கள். சிலவீரர்கள் தங்கள் கையால் விடும் படைவழக்கத்தைக் கருதுவதன்றித் தங்கள் மெய்யேறும் படைகளைச் சிறிது மறியாதவர்களாய்ப் போர்செய்தார்கள். சிலவீரர்கள் சகல படைகளையு மிழந்து மாளுங்காலத்தும் தங்கள் மெய் புதைந்த படைகளைப்பறித்துஞ் சமர்செய்தார்கள். சிலவீரர்கள் தாங்கள்கொண்ட வஞ்சினத்தை இனிதுமுடித்தார்கள். சிலவீரர்கள் அவ் வஞ்சினம் முடிந்ததென்று மகிழ்ந்து உயிர்விடுத்தார்கள். சிலவீரர்கள் தங்கள் சிரங்கள் மண்ணில் வீழ்ந்துஞ் செஞ்சோற்றுநிலையிற் பிழைத்திலமென் றுடுவார்போலக் கவந்தங்களா யெழுந்தெழுந் தாடினார்கள். சிலவீரர்கள் பகைவர்கள்விடுத்த கணைகளினாலிறந்து சொர்க்கமடைந்து அரம்பையர்களுடைய தனங்களாகிய யானைகளோடுங் கண்களாகிய கணைகளோடும் பொருது சந்தோஷித்தார்கள். சிலவீரர்கள் ஒருவரையொருவர் குந்தத்தினால் மார்பு பிளக்கும்படி குத்திப், பின்னிருவரும் வீரசொர்க்கத்தை யடைந்துமேலான தெய்வமங்கையரோடு குலாவினார்கள். சிலவீரர்கள் பகைவரோடு பொருத இளைப்பினால் சோர்ந்து பிணங்களையே அணைகளாகக் கோலிச் சார்ந்துகொண்டு மற்றையர்செய்யும் போரைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். சில வீரர்கள் தங்கள் காதலியரோடு கலவிசெய்யுங்காலத்தில் அக்காதலியர் கையடிக்குங் காலுதைக்கும் வாய்க்கடிக்கும் எவ்வாறு மகிழ்வார்களோ, அவ்வாறே பகைவர் விடுகின்ற பாணங்கள் தங்கள் மேனியிற் பாயும்பொழுதுஞ் சிறிதேனும் நோதலையறியா திருந்தார்கள். இவ்வாறு சமர்க்களத்தில் இருவகைச் சேனைகளும் வீரசொர்க்கத்தினையே முக்கியமாகக் கருதிப் போராடிக்கொண் டிருக்கையில், என்னை யாட்கொள்ளவல்ல மயூரேசமூர்த்தியினுடைய சேனாதிபதிகளுங் கைகலந்து ஒருவரையொருவர் வெல்லவேண்டுமென்னுஞ் சபதத்தோடு அகோரமாகிய போரை விளைத்து, இரணியகருப்பன் காலாசுரனை மாய்த்தனன். சோமன் பிரசண்டாசுரனை யழித்தனன். இரத்தலோசனன் பிரபலாசுரனைக் கொன்றனன். இலம்பகர்னன் சண்டாசுரனுடைய வுயிரைப் போக்கினன். சங்கன் சங்காசுரனுடைய வாழ்நாளை யழித்தனன். பிருங்கி பௌமாசுரனுடைய ஆவியை யுண்டனன். தாவானலன் முண்டாசுரனை வெட்டி யெறிந்தனன். பஞ்சானனன் கண்டாசுரனுடைய சிரத்தை யறுத்தனன்.

இவ்வாறு மயூரேசருடைய சேனைத்தலைவர்கள், சிந்துராசனுடைய சதுரங்க சேனைகளிற் புகுந்து சிலர் வானத்தை யளாவித் திசைகளிற் கிளைகளைப் பரப்பித் தழைத்தோங்கியிருக்கின்ற மராமரமுதலிய பருத்தவிட்சங்களை வேருடன் பிடுங்கிச் சுழற்றி மோதியும், சிலர் மேருக்குச் சமமாகப் பாரித்திருக்கிற பர்வதங்களைப் பெயர்த்துக் கடாவியும், சிலர் திசை யிறைக்குங் கழு முள்-சக்கரம்—பிண்டி-பாலம்-வேல்-தண்டம் முதலிய ஆயுதங்களைச் செலுத்தியும், சிலர் யானை பணிகளிடத்திற் பாய்ந்து அளவற்றதுதிக்கரங்களை யொன்றாகச் சேர்த்துக் கிறுகிறெனச் சுழற்றிக் குதிரைகள்மீதிற் சாடியும், சிலர் சொர்ணமயமாய் இரத்தினகாந்திகளை வீசிப் பாரித்திருக்கின்ற இரதபந்திகளிற் பாய்ந்து, ஆயிரமாயிரமாக தமது விசாலமாகிய கரங்களினால் வாரி அளவற்ற மதயானைகள் சின்னாபின்னப்பட்டுருள மோதியும், சிலர் கோபாவேசங்களுடன் குதிரைப்பந்திகளிற் புகுந்து அதிக வேகத்தோடும் பாயவல்ல பதினாயிரங் குதிரைகளைச் சேர்த்தெடுத்து ஆயிரங்கோடி சத்தவீரர்களாகிய அவுணர்கள் பூமியி லறைபட்டிறக்க வீசியும், சிலர் சில அவுணவீரர்களைக் குத்திக் கொன்றும், மண்டைகளையுடைத்தும், கால்களை முறித்தும், கரங்களை யொடித்தும், மார்புகள் பிளந்துருகத் தாக்கியும், வாய்பிளக்க வறைந்தும், வாளாயுதங்கொண்டு வெட்டியும், சூலாயுதங்களினாற் குத்தியும், பிண்டி பாலங்களினால் மோதியும், தண்டங்களினால் சாடியும், சக்கரங்களைச் செலுத்திச் சங்கரித்தும் இவ்விதமாகப் பூதவீரர்கள் வீறி அவுணவீரர்களாகிய சதுரங்கசேனைகளை நாசபடுத்தி வருவதையும், முன்னர் தனது சேனாதிபதிகள் மாண்டதையும், அவுணர் பெருமானாகிய சிந்துராசன் கண்டபாத்திரத்தில் விஷப்பற்களையுடைய சர்ப்பத்தைப்போலச் சீறி நல்லகாரியம் நல்லகாரியமென்று *கோபநகைசெய்து அபலராகிய இப்பூதங்கள் சூரமுள்ள நம்மவரை இப்படிக்கும் வாட்டுவரோ? இக்கிமிடத்தில் இவர்கள் விறுப்பை யடக்கிக் கொல்லுவோமென்று காலாந்தகனைப்போலக் கொதித்தெழுந்து தனது வில்லை மண்டலாகாரமாக வளைத்து சகலருந் திடுக்கிடத்தக்கதாகக் குணத்தொனிசெய்து ஒருபுறம் விஷத்தோவைய விட்டிருக்கின்ற கொடிய பாணவருஷங்களைப் பொழிந்தும், ஒருபுறத்தில் கணிச்சி-சக்கரம்-வேல்-சூலம்—முசலம்-கப்பணம்-பிண்டி-பாலம் முதலிய படைகளைக் கடாவியும், ஒருபுறத்தில் பிரமாஸ்திரம் - வருணாஸ்திரம்-குபேராஸ்திரம்-அக்கினியாஸ்திரம் முதலிய தெய்வப் படைகளைப் பிரயோகித்தும். ஒருபுறத்தில் பூதங்கள் வீசுகின்ற விருட்சங்களும் பர்வதங்களும் பொடிபடும்படியாகப் பல கணைகளைத் தூண்டியும், இவ்வாறு சூறாவளியைப்போல நாற்றிசைகளினுஞ் சுழன்று சுழன்று அமோகமாகிய அஸ்திர சஸ்திரங்களானவை வலையை வீசியதைப்போலப் பலதிசையினுஞ் சுற்றிக்கொண்டு பூதவீரர்களுடைய பாரித்த கால்களைக் கண்டித்தும், பருத்திருக்கின்ற தோள்களைச் சிதைத்தும், ஆசானுபாகுவாக நீண்டிருக்கும் கரங்களைத் தறித்தும், சிவந்த மயிரையுடைய சிரங்களை வெட்டியெறித்தும், விசாலமாகிய மார்பைப் பிளந்தும், துவசஞ் செய்தன. அதனால்

பூதவீரர்கள் அல்லோல கல்லோலப்பட்டு மண்டையிறந்தும்; மூளைகள் சிதறியும் விழிகள் தெறித்தும், வஞ்சகம்பேசும் வாய்கள் பிளந்தும், பற்க ளுதிர்ந்தும் அந்திவானத்தையொத்த தலைகள் பறந்தும், வலிய கழுத்துக ளொடிந்தும், புயமலைகள் சரிந்தும், கரங்கள் முறிந்தும், மார்புநெக்குவிட்டும், வயிறு கிழிந்தும், குடல்களறுந்தும், தொடைகள் தகர்ந்தும், கால்கள் தறிந்தும், சரீரமெங்கும் பத்தல்பத்தலாய் வெடித்தும், உறுப்புகளனைத்துஞ், சக்கைச் சக்கையாக வெட்டுண்டும், சதைந்தும், சிதைந்தும், நிலத்திற் புதைந்தும், அலைந்தும், உலைந்தும், களைத்தும், இளைத்தும், அழிந்தும், பதைத்தும், சோர்ந்தும், மூர்ச்சித்தும், துகள்பட்டும், மாண்டும், மயங்கியும் இவ்விதமாகப் படாதபாடுகள் பட்டுமடிந்தனர்.

அதை சிவகாருண்ணியம் பத்திமான்மிய முதலிய நல்லொழுக்கங்களை வாய்ந்த கணநாதர்களுக்குள் பஞ்சானனன்கண்டு, பாபமே உருக்கொண்டிருப்பதைபோலக் கரியதேகங்களைப் படைத்த அவுணர்கட்குத் தலைவனாகிக் கொலைபாதகங்கள் குடிகொண்டிருக்கும் மனத்தினையுடைய சிந்துராசனெதிரிற் றனதுதேரை அதிகவேகமாய்ச் செலுத்திக்கொண்டுவந்து வடவாமுகாக்கினியைப்போலச் சீறிப் பாரித்திராநின்ற தனது வில்லை வளைத்து அண்டங்க ளிரக் குணத்தொனி செய்து சத்தசாகரங்களும் ஒடுங்கி வாடும்படிக்கி ஆர்ப்பரித்துக் குரூரமாகிய ஈராயிரம் பாணங்களைக் கோடைமழைபோலப் பொழிந்து பூதசேனைகள்மீது பகைவன்விட்ட பாணங்களை யெல்லாம் பொடிபடுத்தி, மீட்டுந் தீயையொத்த ஆயிரம்பாணங்களை அவன் சரீரமெங்கும் போர்க்கும்படியாகப் பிரயோகித்தனன். உடனே சிந்துராசனானவன் தனதுவில்லில் ஆயிரம்பாணங்களைத்தூண்டி எதிர்த்துவரும் பாணங்களைச் சின்னபின்னப் படுத்தி, மீட்டும் பத்துபாணங்களால் கணநாதனுடைய தேரைப் பொடிபடுத்தினன். அப்போது பஞ்சானனன் வேறொருதேரிற்பாய்ந்து நூறுபாணங்களால் சிந்துராசனுடைய சாரதியை வெட்டியெறிய, உடனே அவன் வேறொரு சாரதியைத் தனது இரதத்தில் நிறுத்தி ஒரு வச்சிரவாளியை யெடுத்து நெற்றிக் கிலக்காகப் பிரயோகித்தனன். அதுவெளிப்பட்டுக் குறிதப்பாமல் வந்துபாய்தலும், பஞ்சானனன் உதிரப்பிரவாக மோடும்படியாக விழுந்து மடிந்தனன்.

இச்சம்பவத்தைத் தாவானலன்கண்டு, காலாந்தகனைப் போலக் கோபித்துத் தனதுவில்லில் நூறுகணைகளை ஒரேதொகையாகத் தொடுத்துப் பிரயோகித்துச் சிந்துராசனுடைய வில்லைப் பொடிபடுத்தினன். உடனே அவன் வேறொரு வில்லைவளைத்து அளவற்ற கணைகளைத் தூண்டித் தாவானலனுடைய தேரைமுறித்தெறிந்து அவன் வேறொரு இரதத்திற் பாய்வதன்முன் தன்னோடுற்பவித்த சூலாயுதத்தை மார்புக்கிலக்காகப் பிரயோகித்தனன். அவ்விலக்கின்படி அச்சூலாயுதமானது அதிவேகமாய்வந்து மார்பிற்பாய்தலுந், தாவானலன் பதைபதைத்துச் சோர்ந்து பூமியில் வீழ்ந்தனன். அதைப் பிருங்கி கண்டு விழி

களில் அனற்பொறிபறக்கக் கோபித்து ஓர்நொடிப்போதில் ஆயிரங்கணைகளைத் தூண்டிச் சிந்துராசனுடைய கிரீடத்தையும் வில்லையுந்தேரையுங் கீழேவீழ்த்தி அவுணர்களெல்லாங் கலங்கும்படியாகச் சங்காரஞ் செய்தனன். உடனே சிந்துராசன் நாணமுற்று, மனதில் மானம் வாதிக்க வெழுந்து வேறேயொரு தேரையும் வில்லையுங் கொண்டு எதிர்வந்து பிருங்கியினுடைய வில்லை ஒடித்தெறிந்து அவன் மார்புக்கிலக்காகப் பத்துக்கணைகளைப் பிரயோகித்தான். அக்கணைகள் வந்து பாய்தலும் பிருங்கிமூர்ச்சையாகி, மீட்டுந் தெளிந்தெழுந்து மிகவுங் கூர்மையுள்ள நூறுவயிரக்கணைகளை அவன் மார்புக்கு நேராக விடுத்தான். அவைகளவன் சரீரத்திற் பட்டமாத்திரத்தில் முனைகளொடிந்து துகள்பட்டுப் பறந்துபோக, மீட்டும் ஓர் தண்டாயுதத்தை யெடுத்துக் கரவேகமாகச் சுழற்றி வீசினன். அதற்குச் சிந்துராசன், சிறிது முறுவலித்துத் தனது கையிலிருந்த தண்டாயுதத்தினால் பிருங்கிவிடுத்த தண்டாயுதத்தினையும் அவன் வலியையும் மாய்த்து ஆர்ப்பரித்தனன். அப்போது சங்கனென்பவன் ஆலகால விடம்போலக் கொதித்தெழுந்து தனது வில்லில் அளவற்ற கணைகளைப் பிரயோகித்துச் சிந்துராசனுடைய வில்லையும் கவசத்தையும் கொடியையும் பொடிசெய்தனன். உடனே அவுணராசன் வேறொரு வில்லையெடுத்துவளைத்து எட்டுபாணங்களால் சங்கனுடையதேரை ஒடித்தெறிந்தனன். பின்னர் சங்கன் வேறொரு இரதத்திற்பாய்ந்து தனதுவில்லில் பத்துக்கணைகளைத் தூண்டிப் பகைவனுடைய கவிகையைக் கீழேவீழ்த்தி, மீட்டும் ஐம்பதுகணைகளைப் போக்கி அவனுடைய இரதத்தையும் பொடிப்படுத்தினன். சிந்துராசன், உடனே வேறொரு தேரிலேறி ஓர்மழுவாயுதத்தை அதிவேகமாகப் பிரயோகித்தனன். அதைச்சங்கன் தனது கதாயுதத்தினாற் பொடிபடுத்தி, மற்றொரு வயிரவாளியால் அவ்வவுணராசன் கட்டிய நெற்றிப்பட்டத்தை யறுத்தெறிந்தனன். அதனால் சிந்துராசன் நாணங்கொண்டு, ஒள்ளிப் பிசைவான்போல வார்ப்பரித்து ஓர் வேலாயுதத்தை அவன் தோளுக்குக் குறிபார்த்துப் பிரயோகித்தான். அதுவெளிப்பட்டுத் தனது தோளிற் பாய்ந்த மாத்திரத்தில், சங்கனானவன் தனது உடைவாளினால் சிந்துராசனைக் கீழேவிழத்தள்ளி மிகுந்த கோபத்தோடுஞ் சோபித்து நிலத்தில் வீழ்ந்தனன். உடனே அவுணராசன் உய்ந்தோமென் றெழுந்து தனது தேரிற்பாய அதை இலம்பகன்னன்கண்டு இவன்வலியைச் சற்றுநேரத்திற் கலக்கி வாட்டுவேனென்று சபதங்கூறிச் சர்ப்பங்களைப்போல விஷச்சுவாலையை வீசவல்ல கடூரமாகிய பாணங்களை அமோகமாகப் பிரயோகித்தான். அவையனைத்தையும் சிந்துராசன் ஓர்நொடிப்போதிற் றுகள்படுத்தித் தனது வில்லில் ஐந்துபாணங்களைத்தூண்டி இலம்பகன்னனுடைய தேரைச் செலுத்தும் சாரதியின் சரீரத்தைச் சல்லடைக்கண்களாகத் துளைத்து மாய்த்தனன். பின்னர் கணநாதன் வேறொருசாரதியை நிறுத்தி நூறுபாணங்களால் சிந்துராசனுடைய இரதசாரதியைக் கொல்ல, உடனே சிந்துராசன் ரவுத்திராகாரமாகக் கோபித்து வேறொருசாரதியாற் றனது தேரை நடாத்தி நூறு தீட்சண்ணியமுள்ள பாணங்

களால் கணநாதனுடைய வில்லையும் இரதத்தையும் ஒடித்தெறிந்தனன். அதற்கு இலம்பகன்னன் சிறிதுமிளைபாது வேறொரு இரதத்தையும் வில்லையுங்கொண்டு அஷ்டதிசைகளும் நடுங்கும்படியாகத் தனது சக்கராயுதத்தை யெடுத்துக் கரகரவென்று சுழற்றிவீசினன். அது வெளிப்பட்ட மாத்திரத்தில் அவுணர்க ளெல்லாம் அல்லோல கல்லோலப்பட்டுத் திகைக்கும்படியாக வாட்டிச் சிந்து ராஜனுடைய கவசத்தை யறுத்தெறிய, அதனாலவன் மிகுந்த கோபங்கொண்டு கணநாத னேறிநடாத்துந் தேரை முறித்தனன். உடனே இலம்பகன்னன் வேறொரு இரதத்திற்பாய, அதையும் அவ்வாறே முறித்து அவனெடுத்த வில்லையுங் கண்டித் தெறிந்தனன். உடனே இலம்பகன்னனுக்கு அதிக கோபம் பிரவேசித்துக் காளகூட விஷத்தைப்போல வெரித்தோடித் தனது வாளைச் சிந்துராசனுடைய மார்பில் வீசினன். அவனுந் தனது வாளை வீசி இலம்பகர்னனுடைய ஆண்மையை யடக்கினன். கணநாதன்வீசிய வாளானது சிந்துராசனுடைய மார்பிற் றாக்கியமாத்திரத்தில் கூர் மழுங்கித் துகள்பட்டுப் போயது. அவ்வற்புதத்தை அர்த்தலோசனன் கண்டு அவன் பெற்றிருக்கின்ற வரத்தின் முயற்சியையெண்ணி அதிசயித்து, இன்னும் இவன் பராக்கிரமத்தை கண்டறிவோமென்று தனது வில்லைக் குனிய வளைத்து ஆலகாலத்தைப்பொழியும்படியான ஆயிரம் பாணங்களைத் தொடுத்துப் பிரயோகித்து ஓர் கணப்போதிற் சிந்துராசனுடைய தேரையும் வில்லையும் நீறாக்கி, அவன் மற்றொரு தேரையும் வில்லையும் கொள்ளுவதன்முன், மீட்டும் ஆயிரம் பாணங்களைக் கடாவி அவன் வைத்திருந்த சேமத்தேர்களையெல்லாம் பொடிபடுத்தி ஆர்ப்பரித்தான். உடனே சிந்துராசன் அர்த்தலோசனனுடைய தேரிற் பாய்ந்து அதிக கோபத்தோடு நெறநெறவென்று பற்களைக் கடித்துத் தனதுகாலாற் டலங்கொண்டமட்டும் உதைத்துக் கையிற் பிடித்திருக்கின்ற தண்டாயுதத்தினால் அவன் சிரத்தில் மோதி மாய்த்தனன்.

கேட்டீர்களோ சவுனகாதி முனிவர்களே! இவ்வாறு சிந்துராசனென்பவன் பஞ்சானனன் முதலிய கணநாதர்களோடு போராடி வெற்றிகொண்டும் தனக் கிருந்த அளவற்ற இரதங்களும் படைகளும் மாண்டுபோனமையைக் குறித்து மனம் நொந்து, மீட்டுந் தேறி ஓர் குதிரையின்மீது ஆரோகணித்து இன்னும் எதிர்ப்பவருண்டோவென்று நாற்றிசைகளினும் விழிகளைப் பரப்பி அச்சமர்க் களத்திற்றனே யிருக்கும்போது, சிலதூதர்கள் கண்டக நகரத்திற்கோடி அவ னிருக்கிற நிலைமையை அவன் மைந்தர்களுக் கறிவித்தனர். உடனே அவர்கள் விருபாக்கனென்னும் ஓர் சேனாபதியை யனுப்ப, அவன் ஈராயிரவெள்ளஞ் சேனைகளோடு ஆயிரம் இரதங்களும் புடைசூழ வாயுவேகத்தினும் முந்தி வெளிக்கொண்டுவந்து சமர்க்களத்தில் ஏகாங்கியாய்க் குதிரையின்மீ தாரோகணித் திருக்கின்ற சிந்துராசனைப் பணிந்துநின்றனன். அவனைச் சிந்துராசன் பார்த்து ஓ விருபாக்கனே! இந்த அமரின் கட்டத்தை யாமே அளப்போம். நீ அருகிற் சும்மாவிரு வென்று சொல்லினன். அச்சமயத்தில் கணநாதரு ளொருவனா

சோமனென்பவன், தனது தேரைக் கொண்டுவந்து எதிரில் நிறுத்தி வில்லை வட்டாகாரமாக வளைத்துச் சோனைமாரியைப்போல அளவற்ற பாணங்களைப் பிரயோகித்தான். அதை அவுணர்கோனாகிய சிந்துராசன் கண்டு நகைத்துத் தனது வில்லில் ஆயிரங் கணைகளைத் தூண்டிக் கணநாதன்விட்ட பாணங்களை யெல்லாம் பொடிபடுத்தி, மீட்டுங் கூர்மையுள்ள ஐந்து கணைகளை அவன் புயங் களுக் கிலக்காக வேவினன். உடனே சோமன் தனது வீரமனைத்துங் குன்றி வீழ்ந்தனன். அதை அரனென்பவன் கண்டு மனம் பதைபதைக்கப் பொங்கி இப்பாதகனை இந்நிமிடத்தில் வாட்டுவேனெனச் சபதங்கூறிவந்து தனது வில்லில் ஓர் பாணத்தைத் தொடுத்துப் பிரயோகித்துச் சிந்துராசனுடைய பொன் முடியை மண்ணில் வீழ்த்தினன். உடனே அவன் வேறொரு பொன்முடியைத் தரித்து, இரண்டு பாணங்களால் அக் கணநாதனுடைய வில்லையும் இரதசாரதியையும் வீழ்த்தினன். பின்னர் அரனானவன், வேறொரு சாரதியையும் வில்லையுங் கொண்டு அதிவேகத்தோடு ஆறு பாணங்களைத் தூண்டிச் சிந்துராசனுடைய கவசத்தையும் வில்லையும் அறுத்தெறிந்தனன். அதனால் அச் சிந்துராசன் வெகுண்டு, விண்டுவினுடைய சக்கராயுதத்தையும் பின்னிட்டோடச் செய்யவல்ல தனது சக்கராயுதத்தை யேவினன். அதை அரனும் தனது வச்சிராயுதத்தினாற் கண்டித்து, ஓர் தண்டாயுதத்தை அவன் மார்புக்கிலக்காகக் கறகறவென்று சுழற்றி வீசினன். உடனே சிந்துராசன் அதனைத் தனது கதாஸ்தத்தினாற் றூளாக்கித் தைவீகமுள்ள ஓர் வேலாயுதத்தை யெடுத்து அதிகவிரைவோடும் பிரயோகித்தனன். அவ் வேலாயுதம் வெளிப்பட்டமாத்திரத்தில் அனற் சமூகங்களைப் பெருக்கிக்கொண்டுவந்து அரன்விடுகின்ற பாணங்களையெல்லாம் விழுங்கி அவன் மார்பி லுருவிப்போயது. அச்சம்பவத்தைச் சாமளன் கண்டு இவன் மனவுறுதியைச் சற்றுநேரத்திற் கலக்கி வாட்டுகின்றேனென்று ஆக்கிரமித்துத் தனது வில்லை வளைத்து ஒரேமுகத்திற் பதினாயிரங் கணைகளைத் தூண்டி ஆர்ப்பரித்தனன். உடனே அவுணர்பெருமானும் பதினாயிரங் கணைகளைத் தூண்டி அவையனைத்தையும் பொடிபடுத்தி, மீட்டும் நூறு கணைகளைத் தொடுத்து அக் கணநாத னேறி நடாத்துகின்ற இரதத்தையும் சேமத்தேர்களையும் முறித்து வீழ்த்தினன். பின்னர் சாமளன் ஓர்கதாயுதங்கொண்டு சிந்துராசனேறிநடாத்துகின்ற குதிரையின்மீது மோதினன். அதைக்கண்ட சிந்துராசன் மிகுந்த வீராவேசங்கொண்டு, தனது முத்தலைச் சூலத்தால் அவன் நெற்றியிற் குத்தி மாய்த்தனன்.

அக்கொடுமையை இரணியகருப்பன் கண்டு இப்பாதகனால் நம்மவர்கள் மாய்ந்து வெகு சோர்ந்து வெகுசோர்ந்தியெனப் பொங்கித் தனதுவில்லில் ஐந்து பாணங்களைப் பிரயோகித்துச் சிந்துராசனுடைய குதிரையை நிலத்தில் வீழ்த்தினன். உடனே அச் சிந்துராசன் இடியேற்றினைப்போலக் கர்ச்சித் தோடி, இரணியகருப்பனைத் தேரோடுமெடுத்து ஆகாயத்திலெறிந்து, வேறொரு குதிரையிற் றானேறி யார்ப்பரித்தனன். பின்னர் கணநாதன் தனது இரதம்

உடைந்துபோகவும், வேறொரு இரதத்திலேறி அழலைச்சொரியும்படியான பத்து பாணங்களால் பகைவன் விடுகின்ற பாணங்களையெல்லாங் கண்டித்து மற்றொருபாணத்தால் அவன் கையிலேந்திய வில்லையு மொடித்தெறிந்தனன். உடனே சிந்துராசன் வேறொரு வில்லை யெடுத்துக் கணநாதனுடைய இரதசாரதியைக் கீழேதள்ளி எமனுங்கண்டஞ்சத்தக்க ஏழுபாணங்களை அவன் நெற்றிக்கு நேரிற் குறிபார்த்துப் பிரயோகித்தான். அதனால் இரணியகருப்பன் மூர்ச்சித்து, மீட்டுந் தெளிந்து தனது முத்தலைச் சூலத்தை யெடுத்தோடி அவுணர் பெருமானுடைய மார்பி லழுந்தினன். அவன் மார்பிற் பட்டமாத்திரத்தில் முனைமழுங்கிப்போனதைக் கணநாதன்கண்டு வேறொருபடையையெடுக்க, அதற்குமுன்னம் அவுணபாதகனாகிய சிந்துராசன் ஓர் வச்சிராயுதத்தையெடுத்து வீசினன். பின்னர் அவ்வச்சிராயுதந் தாக்கிய வேகத்தால் இரணியகருப்பன் சோர்ந்து மடிந்தான்.

இவ்வாறு சகல மகிமைகளினுஞ் சிறந்த கணநாதர்களெல்லாம் ஒவ்வொருவராய் அவுணராசனோடு யுத்தஞ்செய்து சின்னபின்னப்பட்டதை, என்னையடிமையாகவுடைய மயூரேசமூர்த்திகண்டு இத்தன்மைத்தான மேலானபராக்கிரமசாலியை நாமே யுத்தஞ்செய்து ஆட்கொள்ளவேண்டு மெனத் திருவுளங் கொண்டனர். அக்குறிப்பைச் சாரதியாகிய வாயுதேவனறிந்து சொர்ணமயமாக விளங்கி நவரத்தினங்கள் சொலித்திருக்குந் தைவீகந்தேரை மணிகள் சத்திக்க மனோவேகத்தினும் விரைவாகத் தூரத்திக்கொண்டு வந்து இரணக்களத்திற் சயசாலியா யுலாவிக்கொண்டிருக்கின்ற சிந்துராசனுக்கு நேராக நிறுத்தினன். அப்போது ஆயிரங்கோடி ஞானசூரியர்களும் ஓர்வடிவம்பெற்று உலகங்களிற் பரந்திருக்கின்ற அந்தகாரப் பெருக்கினையும் ஆன்மகோடிகளிடத்திற் செறிந்திருக்கின்ற அஞ்ஞானவிருளையுந் தூரத்துமாறு விசாலமாகிய பரவெளியினின்றுஞ் சமர்க்களத்தி லெழுந்தருளியதைப்போல விளங்கிய மயூரேசமூர்த்தியின் சோதிமயமானவடிவையும், கோராத்நங்களினாற்சமைத்துத் தகத்தகாயமாகச் சொலித்திருக்கின்ற வயிரமுடியின் சுந்தரத்தையும், சகத்திரதளத்தோடுங்கூடிய பொற்றாமரைப் பூத்திருப்பதற் கொப்பாகவிளங்குந் திருமுக மண்டலத்தையும், சூரியகிரணங்களை வீசுகின்ற மகரகுண்டலங்கள் துலங்குஞ் செவிகளின் கோலத்தையும், கிருபைக்கிடமாகிய குளிர்ந்தபார்வையைப்பரப்பும் விழிகளின் குணாதிசயங்களையும், வயிரமலையை யொப்பாகப் பரந்து முப்புரிநூல் முத்துமாலை மோகனமாலை முதலியவைகள் புரளுகின்ற மார்பினது மங்களகரத்தையும், நவரத்நமயமான வாகுவலயங்களைச்சூடிப் பர்வதாகிருதியாகத் திரண்டு காட்டும் புயங்களின் தாட்டிகத்தையும், வயிரமோதிரங்களைத்தரித்திருக்கின்ற விரல்களின் சிங்காரத்தையும், ஆசாநுபாகுவாய் நீண்டிருக்குந் திருக்கரங்களின் விளக்கத்தையும், அவைகளிற் பற்றியிருக்கும் அங்குசம் பாசமுதலாகிய படைகளின் பராக்கிரமத்தையும், அடியார்களுடைய இதைய வோடையில் மலர்ந்து சிவானந்தத் தேனைச் சொரிந்து யாவராலு மெழுதற்கரிய வேதச்

சிலம்புகள் சத்திக்க வியங்குந் தெய்வத்தாமரையை நிகர்த்த திருவடிகளின் மகத்துவத்தையும், மற்றுமுள்ள சிறப்புக்களையும் நேராகத் தரிசித்தனன்.

தவசிரேஷ்டர்களே! முனிவர்கள், ஞானிகள், தேவர்கள் முதலாயினோரும், வேதாதி கலைகளும், மற்றேனைய பகுதிகளும், பலவகை யனேகவகனாலும் இன்னுந் தேடித் தேடியும் அறிதற் கரிய மங்களகுண சம்பன்னராகிய மயூரேசமூர்த்தியை, அண்டங்களையெல்லாஞ்சிறைப்படுத்தி எக்காலத்தும் நிந்தனையே பாராட்டிவருஞ் சிந்துராசன் தனது இருவிழிகளாலுந் தரிசிக்கப்பெற்றனனென்றால், அவன் முன்னஞ் செய்திருக்கின்ற தவங்களின் முயற்சியை யாவரால் கணிக்கக் கூடும். முனிவர்களே! அச் சிந்துராசன் இனி சமர்க்களத்தில் கொடிய போரைச்செய்து மடிந்தா லென்ன? அல்லது கிரமமாகக் காலம்நேர்ந் திறந்தா லென்ன? மேலும் அவனிடத்தில் தமக்கிருக்கின்ற பரிபூரணகடாட்சத்தினால் இரணக்களத்தில் அவனையொரு பொருளாக மதித்துச் சண்டைசெய்யவந்தவர்போலச் சமூகத்தி லெழுந்தருளி அவன் தரிசிக்கும்படியாக தமது அருமைத் திருமேனியை எளிதிற்காட்டி கிருபாநோக்கமும் பாலித்தனரென்றால், தேவதேவோத்தமராகிய விநாயகப்பெருமானுடைய திருவிளையாடலை யாவரா லறிந்து போற்றப்படும்.

இவ்வாறு சிந்துராசன் மயூரேசமூர்த்தியினுடைய சுயம்பிரகாச சொரூபத்தை நேரிற்காணப்பெற்றும், பிராரத்வ வினையின் சம்பந்தப்பட்டவனாகி இதனைப் பேசுவதாயினன். ஓ சிறுவனே! நான்பலகாலு முள்ளமும் உடலும் வருந்த அரிய தவங்களைச்செய்து வரம்பெற்றிருக்கின்ற முயற்சியினால் எக்காலத்துஞ் சலனமற்று இக்காயத்துட னிருக்கவல்லேன். அண்டர்களை யெல்லாஞ் சிறைப்படுத்தினேன். சகல லோகங்களையுஞ் செயித்திருக்கின்றேன். எண்பத்துநான்குலட்சம் சீவராசிகளாலும் மடியாவரம்பெற்றேன். இப்போது நீ உனக்குதவியாகக் கொண்டுவந்த பூதவெள்ளங்களெல்லாம் அக்கினி முன்பட்ட பஞ்சுமலையைப்போலச் சமர்க்களத்திற் கிரையாகப் போனதைக் கண்டனை. உனது சேனாதிபதிகளுங் கொடிய போரைச்செய்து வாடினார்கள். முதலணியில் வில்லாண்மையிற் சிறந்திருந்த மற்றவீரர்களும் என்னுடன் யுத்தங்களைச் செய்து ஒவ்வொருவராய் சின்னபின்னப்பட்டு மாண்டனர்; இவையனைத்தையும் உண்மையாகப் பார்த்திருக் கின்றனை? இப்படிக் கிருக்கப் புறவணியிற் றப்பி மீந்திருந்தபாலனாகிய நீயொருவனோ சகல லோகங்களையும் வென்ற செயசாலியாகிய என்னுடன் சண்டை செய்து வெற்றிபெற விருக்கின்றனை? உன்கருத்திற் கொண்டிருக்குந் தீர்மானத்தைப் பார்க்கு மிடத்தில் வெகுநேர்த்தியா யிருக்கின்றது? தேவாதிதேவனாய், சர்வசங்கார மூர்த்தியாய், சிருட்டி-திதி-சங்காரம்-திரோபவம்-அநுக்கிரக மெனனும் பஞ்சகிருத்தியங்களையும் நடாத்திச் சராசரப் பிரபஞ்சங்களை நடிப்பிக்கும் உனது பிதாவாகிய பரமசிவனும், எனது சிறைக்ககப்பட்டிருக்கின்ற அரிபிரமேந்திராதிதேவர்

களும் என்னுடன் போர்செய்ய நினையாம லிருக்கும்போது, நேற்றுதித்த பாலனாகிய நீயோ சகலரையும் வென்ற ஜயசாலியாகிய என்னுடன் சண்டை செய்யுந் திறமுடையவன்? சகல லோகங்களும் கொண்டாடிப் போற்றுங் கீர்த்திப்பிரதாபத்தைப் படைத்திருக்கின்ற எமது பெருமிதங்களைச் சிறிதும் யோசித்துப்பார்த்தவனல்லை? குழந்தைப்பருவமாதலால் முன்னருஞ் சிலரை வென்றதைப்போல என்னையுஞ் சொற்பமாக நினைத்துப் பாலிய சேட்டையினால் இவ்வரிய போரைச்செய்து முடிக்கலாமெனக் கருதி, ஓர்மயிலின்மீது சிறுபிள்ளை விளையாட்டாக ஏறிவந்தனைபோற் காணுகின்றது? உன்னை இப்போதே ஓரம்பினாற் கொன்றுவிடுவேன். ஆயினும் உனக்குத் தப்பிப்பிழைக்கவேண்டுமென்னுங் கருத்திருக்குமாயின் விட்டுவிடுகின்றேன். நீ இவ்விடத்திலோடி உனது தாய்தந்தையருடைய மனங் குளிரும்படி வாழ்ந்திருவென்று சொன்னான். அவையனைத்தையும் அருளுருவாகவிளங்கும் மயூரேசர் திருச்செவியிலேற்றுப் புன்னகைசெய்து, கொடிய செய்கைகளை நடத்திவரும் கயவனே! நீ வியர்த்தமாகிய வார்த்தைகளைபாடினை. உனது கருத்தின்வண்ணம் முடிவதொன்றேனுமில்லை. வயிரமலைக்கொப்பாகிய உனது மார்பைத் துளைக்கும்படியாய் ஏவப்போகின்ற பாணங்களே அவ்வார்த்தைகட்கு மறுமொழி கூறும். அண்டரண்ட புவனங்களனைத்தினையும் வென்றோம். மிகுந்த வலிமையுடையோம் சகலருங் கொண்டாடுங் கீர்த்தியைப் பெற்றோம். சிறந்த தேவாஸ்திரங்களைச் சம்பாதித்திருக்கின்றோம். அழிவற்ற வச்சிரதேகத்தைப் படைத்திருக்கின்றோம். கணக்கிறந்த வெள்ளஞ் சேனைகளை யுடையோம். அண்டர்களை யெல்லாம் நிகரில்லாமல் வென்று சிறைப்படுத்தினோம். என்கின்ற மமதைகொள்ள வேண்டாம். இவையனைத்தையும் ஓர் நொடிப்போதில் அழித்துவிட வல்லேம். தேவதேவோத்தமராகிய சிவபெருமான் கொடுத்தருளிய வரங்களைப் பாலன் சண்டைசெய்து வெல்லவல்லனோவென்று அகங்கொள்ள வேண்டுவதில்லை. அளவற்ற நாள் அண்டர்களை யெல்லாரை தயைதாட்சண்ணிய மில்லாமல் சிறையில் வைத்துக் கொடுங்கோல் செலுத்திவந்த உனது சவுரியத்தினையும், புயவன்மையையும் உனது விழிக்குப் பாலனாகத் தோற்றுகின்ற யாமேயடக்கி நாசஞ்செய்வோமாதலால், இனி வீண்வார்த்தை பாடாது, உனது பெருமையையும் பராக்கிரமத்தையுங் கைத்திறத்தினாற் காண்பிக்கக் கடவையென்று திருவாய் மலர்ந்தனர். அதைக்கேட்டவுடன், அவுணர் பெருமானாகிய சிந்துராசனுக்கு அதிக கோபம் பிரவேசித்து, வடவைக்கனல்போலச்சீறி, நல்லாரியம் உனது விறுப்பை இச்சிமிடத்தி லடக்கிப் புத்திபண்ணி வைக்கின்றேனென்று உருத்துத் தங்கக்கட்டுகள் பூண்டு மந்தரகிரியைப்போல் விளங்கும் பாரித்த வில்லையெடுத்து நிறுத்தி, இருதுதைகளும் ஒன்றுபடவளைத்து நாணேற்றிச், சத்தலோகங்களும் நடுங்கும் படியாகக் குணத்தொனி செய்து, சோனைமாரியைப்போல அளவற்ற பாணங்களைத் தொடுத்து விட்டனன். அவன் விட்ட பாணவருஷங்களினால் மலைகள் பிளந்தும், வானுலகழிந்தும், சமுத்திரங்கள் கிழிந்தும், திசைக்

கரிகள் சோர்ந்தும், பூமிகள் பிளந்தும் போயின. இவ்வாறு சகலலோகங்களுஞ் சின்னபின்னப் படும்படி, மழைக்காலத்தில் புற்றிலிருந்து புறப்படும் ஈசலைப்போலச் சிந்துராசன் விடுத்த அமோகமாகிய பாணங்களெல்லாம் பிரபஞ்சமெங்கும் பரந்து தகித்தலும், நின்மலமூர்த்தியாகிய விநாயகக் கடவுளானவர் தமது மேருகிரிக்குச் சமதையாக விளங்கும் தனுவை வளைத்து, வாசுகியைப்போல நீண்டிருக்கும் நாரியைமாட்டிச் சர்வசங்காரகாலத்தில் பிரசண்டவாயுவினால் மோதப்பட்ட ஆயிரங்கோடி அண்டங்களும் ஏககாலத்தில் உடைந்தெழும் பேரொலியைப்போலக்குமுறி முழங்கும்படிக்குக் குணத்தொனிசெய்தனர். அவ்வதிர்ச்சியினால் உலகங்களுக்கச்சாணியாக விருக்கின்ற இமயகிரி கிடுகிடென்றசைந்தது, அஷ்டதிசைகளும் நடுக்குற்று, குலகிரிகள்நெக்குவிட்டு, திசையானைகள் வீழ்ந்திட்டு மயங்கி, அண்டகோளகைகளதிர்ந்து, பூமி பாதலம் வரையிற் பத்துநூற்றுவாகப் பிளந்து, அதைச் சுமந்திருக்கின்ற ஆதிசேடனுந் தத்தளித்து ஆயிரம் பணாமகுடங்களைக்கொண்டு தாங்க வருந்தி விடங்களைக் கக்கினன். மற்றுமுள்ள பிராணிகளும் நிலைகலங்கி வாடும்படியாகக் குணத்தொனிகாட்டிய விநாயகப்பெருமான், பின்னர் கோடைகால மேகத்தைப்போலத் தமது வில்லில் கணக்கிறந்த குரூரமாகிய சரங்களைப் பூட்டிச் செலுத்திப் பிறிவருகின்ற பகைவன் கணைகளைக் கண்டித்தெறிந்து, மீட்டும் பத்துகணைகளைத் தூண்டி அவனுடைய நெற்றி மார்பு இரண்டுபுயம் இரண்டுதொடை இரண்டு பாதம் இவைகளைத் துளைத்தனர். உடனே சிந்துராசன், தனது குதிரையை விட்டுத் தேரின்மீது பாய்ந்து மூர்ச்சையானான். அப்போது கண்டகரத்தினின்றும் வந்து அருகிலிருக்கின்ற வீரபராக்கிரமத்தையுடைய விருபாக்கனென்பவன், அதிக கோபங்கொண்டு காளகூடத்தைப்போல மண்டியெழுந்து, கோவ்வைக் கனியையொப்ப விழிகள் சிவந்து, தீப்பொறிகள் குபீல்குபீலெனக் கொட்ட வுருத்துப்பார்த்துப், பற்கள் நெறநெறவெனக் கடித்து, உதட்டை மடக்கி, விடுத்தகாலாக்கினியையொப்பவல்ல கோரமுள்ள பாணங்களை அமோகமாகப் பிரயோகித்தனன். அவைகளின் கொடுமைகளை மயூரேசமூர்த்தியோடு வந்திருக்கின்ற முனிச்சிறார்கள் பார்த்து உடனே அளவற்றகோடி திட்சண்யமான பாணங்களைத் தூண்டிப், பகைவன் விடுத்த பாணங்களையும் அவனைப் புடைசூழ்ந்திருக்கின்ற இரண்டாயிர வெள்ளஞ் சேனைகளையும் மடிச்செய்து, பின்னர் எவரெதிர்ந்து ஓர்கணப்போதில் உனதுயனைத்துநிரைக் கெல்லி வாட்டுகிறோமென்று சபதங்கூறி, தண்டாயுதங்களைக் கிறுகிறுவெனச் சுழற்றி மோதியும், வேலாயுதங்களைக் கடாவியும், சக்கரப்படைகளைச் செலுத்தியும், தோமரங்களையெறிந்தும் இவ்வாறு யாவருந்தனித்தனி வகைவகையாய் அநேகயுத்தங்களைச் செய்து அவனை மாய்த்தனர்.

இப்பால் மிகவும் எளியனாய்த் தனியாய்த் தேரின்மீது மூர்ச்சித்துக்கிடந்த சிந்துராசன், மூர்ச்சை தெளிந்தெழுந்து தனக் குதவியாகவிருந்த விருபாக்கனும் அவன் சேனைகளும் முனிச்சிறார்களால் மடிந்தமையைப் பார்த்து மனம்

னொத்தவனாயினும், சிறிது தேறி விழிகளில் அக்கினிப்பொறிகள் சிந்த உறந்து நாசிகளினும் வாயினும் அனற்சுவாலையெழப் பெருமூச்செறிந்து தனது யாசித்த வில்லில் சூரியாஸ்திரத்தைத் தொடுத்துப் பிரயோகித்தான். உடனே மயூரேச மூர்த்தி தமது சூலாயுதத்தை விடுத்தனர். அது வெளிப்பட்டவுடன் மிகுந்த தீட்சண்ணியத்தைக்காட்டி எங்கும் அனலையிறைத்து ஆர்ப்பரித்துவந்து சிந்துராசன் விடுத்த அஸ்திரத்தைக் கண்டதுண்டப்படுத்தி, அவன் கிரீடத்தைக் கீழே விழத் தள்ளி, அவனது செவிகள் சின்னாபின்னப்பட அறுத்தெறிந்து, மீட்டும் எமது கர்த்தருடைய திருக்கரத்தில் வந்து சேர்ந்தது. பின்னர் சிந்துராசன் மிக்க துன்பத்துடனே நாணமும் அச்சமும் மேலிட்டவனாய், உடனே தனது இரதத்தைவிட்டிறங்கி, ஓர்வஸ்திரத்தால் முக்காடிட்டுக்கொண்டு, யாவரு மறியாதபடி தமது நகரத்தையடைந்து, அரண்மனையினோர் மூலையில் கால்களை மடக்கித் தலைகவிழ்ந்திருந்தனன்.

இவ்வாறு சிந்துராசன் சென்றமையை மயூரேசரறிந்து தமது சேனைகளில் மாய்ந்த பூதர்களையுஞ் சேனைத்தலைவர்களையு மெழுப்பி யழைத்துக்கொண்டு பாசறையி லமர்ந்தருளி யிருந்தனர். சுப்பிரமணியதேவர்முதலான மற்றைத் தலைவர்களும் அவ்வாறே அவ்வவருடைய பாசறைகளில் அமர்ந்திருந்தார்கள். இப்பால் சூரியனானவன், இச்சமர்க்களத்தில் நமது படையானது சிந்துராசனுக்கு உதவிசெய்யாது மாண்டுபோனதால் இனி நாமும் வாழோமென்று அஞ்சி மறைந்தவன்போல மேற்றிசைக் கடலில் மறைந்தனன்.

இப்பால், சமர்க்களத்திற் றோல்வி யடைந்து சென்ற சிந்துராசனுடைய மனதைப்போல எங்கும் இருள் நெருங்கியது; வணங்காரை யெல்லாந் தமது மனக்கருணையினால் வென்று ஆட்கொள்ளவல்ல விநாயக மூர்த்தியினுடைய திருவுளத்தைப் போல ஆகாயத்தில் சந்திரனானவன் சோடச கலைகளோடு முதித்தனன். அப்போது பாசறைகளி லிறங்கி யிருந்த கணநாதர்களெல்லாம் மயூரேச மூர்த்தியை மும்முறை வலம்வந்து பணிந்து, வேதாகமங்களினால் அளவற்ற துதிகளைச் செய்து ஆனந்தக்கூத்தாடினார்கள். அவர்கட்கெல்லாம் எமது கர்த்தன் பேரருள் வழங்கி யிருந்தனர். பிணங்களெல்லாம் மலைமலையாகக் குவிந்திருக்கின்ற சமர்க்களம் முழுவதும் பேய்களோடு நிறைந்தும் பிணங்களையருந்தித் துணங்கை யாடுவதா லுண்டான வோசையும் சோர்ந்து வீழ்ந்தவர்களுடைய உயிரினைக் காக்கும்படியாக அவ்வவர்கள் சுற்றத்தினர் தூப தீபம் மணி முதலியவைகளைக் கொண்டு இணங்குகின்ற வோசையும் பெருத்திருந்தன. கண்டக நகரத்தின் வீடுகளிலும் மாளிகைகளிலு முள்ள மங்கைய ரெல்லாரும் யுத்தஞ் செய்யச் சென்ற அவ்வவர்கள் காதலருடைய மீட்சியைக் காணாது, அழுகின்ற சத்தமே எங்கு மிகுதியா யிருந்தது.

இப்பால் அரண்மனையில் மனமடிந்தோடி சங்கடப் பட்டிருக்கின்ற சிந்துராசனிடத்தில் அவன்பத்தினியாகிய உற்கையென்பவள் சென்று பணிந்தெழுந்

து, எனது பிராண நாயகனே! தேவரீர் அண்டர்களை யெல்லாஞ் சிறைக்கண் வைத்தீர்; சகலலோகங்களையும் ஒரே குடையில் ஆண்டு வருகின்றீர்; அசுரர்களை யெல்லாம் அடிமை கொண்டீர்; பிரமனாதி மூவராலும் அழியா வரம் பெற்றிருக்கின்றீர்; இத்தன்மைத்தான மேலான பராக்கிரமங்களைப் பெற்றிருக்கின்ற தேவரீர் மிகுந்த மனமடிவோடுங் கிலேசமடைந்த காரணம் யாது? அதனை யடியாட்குத் திருவாய் மலர்ந்தருளவேண்டு மென்று கேட்டனள். அதற்குச் சிந்துராசன், சிறிது நிமிர்ந்து தன்கண்ணிலும் அவள் கண்ணிலும் சலமொழுகும்படியாகத் துக்கித்துப் பெருமூச்செறிந்து என் மனதுக்கினிய காதலியே! நீ கூறிய வனைத்தும் உண்மையே யாயினும், என்னை முடிக்கச் சிவபிரானிடத்தினின்றும் ஆறு கரங்களோடு ஓர் புதல்வன் இப் பூவுலகத்திற் பிறந்திருக்கின்றான்; அவன் பிறந்த நாளிற்றானே அவன் எனக்குச் சத்துருவென் றறிந்து, நாள்தோறும் அளவற்ற வீரர்களை யனுப்பினேன்; அவர்களனைவரும் அவன் கரத்தால் மடிந்தார்கள். சகல பராக்கிரமங்களினுஞ் சிறந்த கமலாசுரனைக் கடல்போன்ற சேனைகளைக் கூட்டி யனுப்பினேன்; அவன் அளவற்ற யுத்தங்களைச் செய்துஞ் செயம் பெறாமல் சேனைகளோடும் மாண்டான். சூரியன் சந்திரன் அக்கினி முதலிய தேவர்களை அவனிருக்கின்ற வனத்திற் போகாதபடி ஆஞ்ஞாபித்தேன்; அவன் அதை யறிந்து ஓர் கொடிப்போதில் அவர்களை யெல்லாம் வேறே யுண்டாக்கிக் கொண்டு யுத்தத்திற்கு வந்து தேவர்களை யெல்லாஞ் சிறையினின்றும் விடச்சொல்லிப் பராக்கிரமமுடைய ஓர் தூதனை யனுப்பினான்; அவன் அவ்வாறே யிங்கு வந்து நடத்திச் சென்ற காரியத்தை நீ யறிந்திருக்கின்றனை; பின்னரச் சிவகுமாரனைச் சிறுபிள்ளையென்று எனது பேதைமைப் புத்தியினால் அவனோடு யுத்தஞ்செய்யச் சென்றேன்; அந்த யுத்தத்தில் நமது அமைச்சர்களும் அளவற்ற வீரர்களும் அமோகமாகிய சேனைகளும் மாண்டார்கள்; உடனே நானும் அளவற்ற யுத்தங்களை நடாத்தி அச் சிறுபிள்ளையின் கரத்தால் இரண்டு செவிகளையும் மானத்தையு மிழந்தேன். சிறையிலிருக்கின்ற தேவர்களெல்லாம் நகைத்து எளனஞ் செய்யும்படியாக எனது பெருமைகளனைத்துங் குன்றி வந்தேன்; வயதிற் சிறியவனாயினுஞ் சமர்த்திறத்திற் பெரியவனாக விருக்கின்ற அப்பாலனைச் செயிப்பது மிகவுமரிதாக விருக்கின்றது. இனியென்னசெய்யப் போகின்றேனென்று துயருற்றுச் சொன்னான். அவை யனைத்தையும் அவன் பத்தினியாகிய உற்கை யென்பவள் கேட்டு என்னுயிர்க்குயிரான நாயகனே! யாகமுதலானவைகளைச் செய்து சகல தேவர்கட்குந் திருப்தி செய்து வாழ்கின்ற அரசகுலத்தி லுதித்த இராசாதி ராசனாகிய தேவரீர் இப்போது அத்தேவர்களைப் பூசியாது அவர்க்குத் தீங்கு செய்கின்ற அசுரர்களை யாதரித்தீர்; அன்றி அத்தேவர்களைச் சிறைப்படுத்தினீர்: அத்தீங்கினால் சகல ஆபத்துகளும் வந்து சேர்ந்தன. இனியேனும் அத்தேவர்களை விட்டுவிட்டால் கடைத்தேறலாம்; தேவரீருடைய சித்தம் எவ்வாறோ வென்று சொல்லினள். இவ்வாறு தனது பத்தினியானவள் உரிமை

யோடும் வணங்கிக் கூறிய மொழிகளைத் திடசித்தத்தையுடைய சிந்துராசன் கேட்டுப் பெண்ணே! நீ சொல்லுவதனைத்தும் உண்மையே, ஆயினும் யான் சொல்லுவதையுங்கேள், நமது படைவீரர்களும் அமைச்சர்களும் அளவற்ற சேனைகளும் யுத்தத்தில் மாய்ந்து போனபின்பு தேவர்களைச் சிறையினின்றும் விட்டுவிட்டால் திரிலோகங்களும் நகையாதோ? இத்தனை விபத்துக்களை யடைந்த பின்பு அவர்களைச் சிறையினின்றும் விட்டு யான் உயிரோடு இப்பூவுலகில் வாழ்ந்திருப்பதைப் பார்க்கினும் இன்னும் என்னாற் கூடியவரையில் பெரிதான யுத்தஞ் செய்து மயூரேசனுடைய ஆயுதத்தினா லிறப்பேனாயின் என்றைக்கும் நிலைமையான புகழும் முத்தியுங் கிடைக்கு மாதலால், இப்போது தேவர்களை விடக்கூடாது. நீ உனதிருப்பிடத்திற் செல்லுகவென்று சொல்லினன். அதன் மீது பிராணநாயகி மனமடங்கி அந்தப்புரத்திற் சென்றனள். உடனே இராப்பொழுது நீங்கிற்று. பின்னர் சூரியனானவன், தன்னோடு நித்தலும் பொருதுகின்ற தானவர் குழாத்தைச் சாடியருளவேண்டுமென்று ஞான வித்தகராகிய மயூரேச மூர்த்தியைப் பிரார்த்திக்க வருவான்போலக் கீழ்த்திசைக் கடலில் உதயமாயினன்.

இப்பால்சிந்துராசன், தனது நித்தியநியமங்களை நிறைவேற்றிக் கொண்டு சிங்காதனத்தின்மீது வீற்றிருந்தனன். அப்போது அவன் மைத்துனராகிய கலனென்பவனும் விகலனென்பவனும் வந்து அவனைப் பணிந்து நின்றார்கள். அவர்களைச் சிந்துராசன் பார்த்து நான் யுத்தத்திற்குச் செல்லுகின்றேன். நீங்களிருவரு மிங்ஙன மிருந்து இப்பட்டணத்திற் பூதர்கள் வந்து தீங்கு செய்யவொட்டாமல் காத்துக்கொண் டிருங்களென்று சொல்லினன். அதை அம்மைத்துன ரிருவருங் கேட்டு பணிந்து, அத்தனே! அப்பகைவர்களை யாங்களே சென்று வென்று வருகின்றோம். தேவரீர் உத்தரவு கொடுத்தருளவேண்டுமென்றுகேட்டார்கள். அவ்வாறே சிந்துராசன் உத்தரவு கொடுத்தான். பின்னரவர்கள் நாலாயிரவெள்ளஞ் சேனைகளோடு யுத்தகளத்திற்குச் சென்றார்கள். உடனேஅவ்வரலாற்றை நாரதமுனிவர்விநாயகமூர்த்தியைப்பணிந்தறிவித்தனர். அப்போது அருகில்நின்ற நந்திதேவரும்,புட்பதந்தனும், சுப்பிரமண்ணியமூர்த்தியும், வீரபத்திரக்கடவுளும், விநாயக மூர்த்தியிடத்தில் விடைபெற்று அளவற்ற பூதங்களோடுஞ் சமர்க்களத்திற் சென்றார்கள். பின்னர் இருதிறப்படைகளுங் கைகலந்து நெடுநேரம் போராடுகையில், அளவற்ற சூரியர்கள் அர்த்தராத்திரியிலுதித்து எங்குமிருக்கின்ற இருட்கூட்டங்களை எடுத்தெடுத்து விழுங்குதல்போலச் செம்மேகத்தையொத்த அளவற்ற பூதசேனைகள் கருமேகத்தை நிகர்த்த அவுணசேனைகளிற் பாய்ந்து அநேக இரதங்களையும் யானைகளையுங்குதிரைகளையுஞ் சின்னபின்னப்படுத்திச் செம்பட்ட மயிர்படிந்த சிரங்களைக் கண்டித்தும், மண்டைகளைப் பிளந்தும், கற்கம்பத்தை யொப்பத்திரண்டும் வலிபெற்றிருக்கின்ற புசங்களை யறுத்தும்,விசாலமாகிய இரத்தாபரணங்களை யணிந்திருந்த மார்புகளைச் சேதித்தும், வீரவண்டையங்களணிந்த கால்களை வெட்டித்

தள்ளியும், உரத்துப்பேசும் வாய்களைப் பிளந்தும், உறுத்துப் பார்க்கும் விழிகளைக்கல்லியும், கோபித்துப் பெருமூச்செறியும் மூக்குகளைக் கிள்ளியும், வீரங்கள்பேசிய நாக்களை யரிந்தும், பலகறைகளைப்போலப் பற்களுதிரும் படிக்குத் தாக்கியும்,வீராவேசங்களினாற் முடித்துக்கொண்டிருக்கும் மீசைகளைக்கொளுத்தியும், மோவாய்களைச் சிதைத்தும், வயிரகுண்டலங்கள் தரித்தசெவிகளை யறுத்தும், வீரபட்டங்களைத் தாள்படுத்தியும், இரத்தகசிதமாகச் சொலித்திருக்கின்ற கிரீடங்களை நறுக்கியும், படைகளைச் செலுத்த நீட்டுங் கரங்களை வெட்டியும், பாணங்களை முறித்தும், மற்ற ஆயுதங்களைப் பொடிபொடியாக நாசப்படுத்தியும், யானை புலி கரடி பன்றி மனிதர் தேவர்கள் முதலாயினோரை வாரிவாரிப் பருத்த வாய்களிற்போட்டு விழுங்கி நிறைத்துவைத்திருக்கின்ற தொந்திவயிறுகள்பீறிக் குடல்கள் சர்ப்பங்களைப்போலப் புரளத்தள்ளியும்,இவ்வாறு நாலாயிரவெள்ளஞ் சேனைகளையும் அதாஅதப்படுத்தி மாய்த்தனர்.

அச்சம்பவத்தைக் கலனும் விகலனுங்கண்டு கோபாக்கினியானது மனதை வாட்ட, விழிகளி லனற்பொறிகளைப் பெருக்கிப் பெருமூச்செறிந்து சயவுற்சாகத்தோடு விதியிருக்கின்ற பூதசேனைகளை வாட்டவிரும்பி இருவருஞ் சூறாவளிக் காற்றைப்போலத் தங்களிரதத்தைச் சுழற்றிக் கூர்மையுள்ள கொடிய பாணங்களை அமோகமாகப் பொழிந்தனர். அதனால் சூரியனைச்சூழ்ந்த பனிக்கூட்டத்தைப்போலப் பூதசேனைகள் கலங்கி, சிரமற்றும், மூளையிறைத்தும், தோள்கள் சரிந்தும், மார்புபிளந்தும், கால்களொடிந்தும், மதிமயங்கி வீழ்ந்தும், மூர்ச்சித்தும், குப்புற வீழ்ந்தும், சின்னபின்னப் பட்டுப் போயினர். அதை நந்திதேவர்கண்டு தமதுதேரை விரைவிற் செலுத்திக்கொண்டு சென்று பர்வதாகிருதியாகப் பரித்திருக்கின்ற வில்லில் அநேகஞ் சிலீமுகங்களைத் தொடுத்து அவ்விருவர் விடுகின்ற படைகளை யெல்லாம் பொடிபடுத்தினர். உடனே யமனுங்கண்டு அஞ்சத்தக்க அவ்விருவர்களும் அளவற்ற சரங்களைத் தூண்டி நந்திதேவருடைய வில்லையொடித் தெறிந்தனர். அதனால் நந்திதேவருக்கு அதிககோபமுண்டாகித் தமது கோட்டினால் அவ்விருவர்களுடைய வில்லையும் இரதத்தையும் பொடியாக்கினர். பின்னரவர்கள் நந்திதேவர்மீது பாசத்தை யேவிப் பிணித்துச் சமர்க்களம் நடுவில் நிறுத்தி ஆர்ப்பரித்தார்கள். அதைப் புட்பதந்தன் பார்த்துச் சகியாதவனாய் நந்திதேவரை அப்பாசத்தினின்றும் விடுத்து அப்பாதகருடைய விற்களையும் பொடிபடுத்தி, அவர்கள் மார்புக்கிலக்காக எவ்வெழுபாணங்களைப் பிரயோகித்தான். அதனாலவர்கள் மூர்ச்சையாகி மீட்டுந் தெளிந்தெழுந்து, தங்கள் வச்சிராயுதத்தினால் புட்பதந்தனுடைய ஆற்றலை யடக்கினார்கள். அதை வாட்படையையேந்திய வீரபத்திரக்கடவுள் கண்டு ரவுத்திராகாரமாகக் கோபித்துத் தமது விரல்களைமுடக்கி விகலனுடைய சிரத்திற் குட்டினர். உடனே அவன் சோர்ந்து மூர்ச்சையாகி இறந்தனன். பின்னர் சுப்பிரமணிய மூர்த்தியானவர் கலனென்பவனைப் பிடித்திழுத்து நிலத்திலறைந்தனர். அவனும் அவ்வறையினால் சரீரமெல்லாஞ் சின்னபின்னப்பட

மாண்டனன். அப்போது இரண்டாயிரந் தோளினையுடைய பாநுகம்பன் தனது ஆயிரம் வாய்களினும் ஆயிரவீர சங்கங்கள்வைத்து அண்டங்களதிர முழக்கினன்.

இவ்வாறு அவ்விரண்டுவீரர்களும் மடிந்துபோகவும், இரணபூமியிற் பட்டவர்கள்போக மற்ற அவுணர்களெல்லாம் பிராணபீதியினால்விரைந்து பலதிசைகளினும் ஓடிப் பதுங்கினார்கள். இந்த அபசயத்தை உடனே தூதர்களோடிச் சிந்துராசனுக் கறிவித்தார்கள். அதனாலவன் மிகுந்த கிலேசத்தை யடைந்து இனியென்னசெய்யப்போகின்றோ மென்று பரிபவமுற் றிருந்தனன். அதை அவன் குமாரர்களாகிய தன்மனென்பவனும் அதன்மனென்பவனுந் தெரிந்து வந்து அவன்பாதத்திற் பணிந்தெழுந்து, தந்தையே! எதிர்த்துவந்த சத்துருக்களுக்கு அடியேங்களிருக்கத் தேவரீர் கிலேசமடையவேண்டிய தென்றினுக்கு? எங்கள் மாதுலரைக்கொன்ற கந்தனையும் வீரபத்திரனையுங் கொன்று மயில்மீதிருக்கின்ற அவர்கள் தலைவனையும் இங்கேயிடத்திற் கைப்பிடியாகப் பிடித்துக் கொண்டு வருகின்றோம். அடியேங்கட்கு விரைவில் உத்தரவு கொடுத்தருளவேண்டுமென்று கேட்டார்கள். பராக்கிரமத்திற் சிறந்த தனது புத்திரர்கள் சொன்னதைச் சிந்துராசன் கேட்டுத் துயரத்தினின்று நீங்கி ஒருவாறு மனந்தேறி இதுகாறு மடிந்துபோக மிருந்திருக்கின்ற சேனைகளைக் கூட்டிக்கொண்டுசென்று சயம்பெற்றுவாருங் கடவீர்களென்று உத்திரவுசெய் தனுப்பினன். அவர்களும் மேலான செல்வத்தைப் பெற்றவர்கள்போல மகிழ்ந்து யுத்தஞ்செய்யத் துணிந்து எண்ணாயிரவெள்ளஞ் சேனைகளுடனே யுத்தகளத்திற்குச் சென்றார்கள்.

அப்போது சுப்பிரமணிய மூர்த்திக்கு அருகிலிருந்த நவவீரர்கள், சமுத்திரம்போல ஒங்கிவருகின்ற அவுணசேனைகளைப் பார்த்து ஓர் கணப்போதில் அவர்களை அதஞ்செய்து வருகின்றோமென்று விடைபெற்றுச் சென்று யானைக்கூட்டங்களிற் புகுந்த சிங்கவேறுபோல அவுணசேனைகளிற்புகுந்து அவ்வவர்களுடைய பரிந்துவிற்களில் அமோகமாகிய பாணங்களைப் பிரயோகித்து யாவரையுஞ் சின்னபின்னப்பட வாட்டி நிரைநிரையாக விருக்கின்ற தேர்களிற் பாய்ந்து சொர்ணமயமாக விருக்கின்ற வண்டில் அச்சு மச்சு குத்துக்கால் முதலியவைகளோடு நவரத்நமயமாக விளங்குங் கொடிஞ்சை கொடி கொத்துமணி முதலியவைகளைப் பலதிசைகளினும் பறக்கச்சாடி, அவைகளிற் கட்டியிருந்த புரவிக்கூட்டங்களைக் கண்டதுண்டப்படத் தறித்து, சாரதிகள் கழுத்துகளை யறுத்தெறிந்து, யானையணிகளிற் புகுந்து இருப்புலக்கைகளைப் பற்றிச் சுழற்றித் திரியுந் துதிக்கைகளைப் பனைமரத்தைப்போலக் கண்டித்து, நவரத்தின முகபடாத்தைச் சிதைத்து, மத்தகத்தைப் பிளந்து, மூளைகளையிறைத்து, நீண்டு தொங்கும் உதட்டைச் சரித்து, சொர்ணப்பூண்களைத் தரித்திருக்கிற பருத்த கோடுகளைப் பிறைக்கொப்பாகக் கண்டித்தெறிந்து, பாகர்களைக் கீழேவிழத் தள்ளி, தலைவர்களைச் சின்னபின்னப்படக் கொன்று, தூணையொப்

பவிருக்குங் கால்களைத் தறித்து, கணீல்கணீலென மாறியொலிக்கும் மணிகளைப் பொடியாக்கி, மலையிரியைப்போலக் கதறி வீழும்படிக்கு சமுத்திரபாதியில் வெட்டித்தள்ளி, குதிரைப்பந்திகளிற்றாவிப் பொற்குச்சுகளினால் அலங்கரித்திருக்கும் பிடரிமயிரினையுடைய கண்டத்தை வெட்டி, செவிகளை யரிந்து, இரத்தினமயமாக விளங்குஞ் சேணியைப் பொடிப்படுத்தி, வண்டயங்களைப்பூண்டு அலைகளையொப்பத் தாவுங் கால்களைக் கண்டித்து, அவைகளின்மீதிருந்து போர்செய்யும் வீரர்களைத் தண்டித்து, மிகுந்த பராக்கிரமசாலிகளாய்ப் படையேந்தியிருக்கும் பதாதிவீரர்களைச் சூழ்ந்து கரங்களிற்கொண்ட பாரித்தவிற்களை முறித்து, அம்புக்கூடுகளை அறப்படுத்தி, போர் செய்யவேண்டுமென நினைத்த நெஞ்சைப் பிளந்து, பாணங்களைத் தொட்ட கரங்களைக் கண்டித்து, கிரீடங்களைக் காற்றிற் பறக்கடித்து, விருதுக்கொடிகளை யறுத்து, நுரைகளைப்போல வெளுத்து அலைகளுக்கொப்பாக அசைந்திருந்த வெண்சாமரைகளைச் சிதைத்து, பளபளத்து விளங்கும் வீரபட்டமணிந்த நெற்றியைத் துளைத்து, சித்திரமயமாக விருக்கும் அருகுகளையும் ஆலவட்டங்களையுஞ் சிதறடித்து, படபடத்த தொனிகளுடனே வானத்தை யளாவியிருக்கின்ற துவசங்களைக் கண்டித்து, முத்துக்களினாலும் வெண்பட்டுக்களினாலும் நவரத்தினங்களினாலும் அலங்கரித்து நிழலைப் பரப்பியிருக்கின்ற சந்திரவட்டக் குடைகளைக் காற்றாடிகளைப்போலப் பறக்கச் சாடி, மகரதோரணங்களை வானத்திற்செல்லமோதி, இரணபேரி - ஜயபேரி-வெற்றிச் சங்கம்-எக்காளம்-சின்னம்-குடமுழா முதலிய போர்ப்பறைகளைப் பிளந்து, இவ்விதமான கோலாகலமாகப் போரைச் செய்து, குயவன் திகிரியைப்போல இரணக்கள மெங்குஞ் சூறாவளிக் காற்றினும் முடுகித் திரிந்து கொடிய பாதகனாகிய சிந்துராசனுடைய புத்திரர்களின் இரத கஜ துரக பதாதிகளோடுங் கூடிய எண்ணாயிரவெள்ளஞ் சேனைகளையுஞ் சின்னபின்னப்படுத்தி வெள்ளிடையாக்கினார்கள்.

இவ்வாறு தங்கள் சதுரங்கசேனைகளும் உடைந்துபோன எளிமையைத் தன்மனும் அதன்மனும் பார்த்து அதிக கோபாவேசங்கொண்டு, ஞெரேலென்று தங்கள் தேர்களைமுடுக்கி மந்தரகிரியைப்போலும் பாரித்திராநின்ற தங்கள் விற்களை வளைத்து நாணேற்றி அந்நவவீரர்கள்மீது அமோகமாகிய கொடிய பாணங்களைச் சோனைமழைபோலப் பெய்து ஆர்ப்பரித்தார்கள். அப்போது மேலான பராக்கிரமத்தை யுடைய நவவீரர்களுஞ் சங்கடப்பட்டு, வீரமார்த்தாண்டன் மனஊக்கமற்றுப் பிரமித்துவிட்டனன். வீரராக்கதன் களைத்து விழுந்தனன். வீரமகேந்திரன் கரத்திலேந்திய வில்லோடு மதிமயங்கினின்றனன். வீரமாகேந்திரன் கரத்திலேந்திய வில்லோடு மதிமயங்கி நின்றனன். வீரதீரன் சரீரம் பதைபதைக்க வோடினன். வீரமகேசுரன் சரீரத்திற் பெருகும் உதிரத்தி லழுந்தி அசைவற்றிருந்தனன். வீரகேசரி சோபித்து அடியற்ற மரம்போல விழுந்தனன். வீரபுரந்தரன் எழுந்திருக்கச் சக்தியற்றுக் கிடந்தனன். வீராந்தகன் கண்பஞ்சடைந்து தோற்றமற்றுத் துவழ்ந்திருந்தனன். வீரவாகு

தேவர் சற்றே பின்னிட்டனர். இவ்வாறு சேனைத்தலைவர்கள் ஒன்பதின்மருஞ் சின்னபின்னப்பட்டு வாடி வருந்தி களைத்து மருண்டு திகைத்து சோபித்து ஒளித்துக் கிலேசித்துச் சண்டைகொடுக்க வலியுந்தைரியமுமில்லாமல் நடுநடுங்கிப் போனதைச் சண்முகப் பெருமானாகிய சுப்பிரமணிய மூர்த்தி கண்டு மனம்பொறாமல் அதிக கோபாவேசத்துடன் அவ்விருவர்களுடைய சிகையையும் பிடித்து நிலத்தில் மோதினர். உடனே அவ்விருவர்களும் மாண்டார்கள். பின்னர், சுப்பிரமணியதேவர் நவவீரர்முதலிய சேனைத் தலைவர்களையும்அவுண பாதகரால் மடிந்த பூதவீரர்களையும் எழுப்பி யழைத்துக்கொண்டுசென்று மயூரேச மூர்த்தியினிடத்தில் அமர்ந்திருந்தனர்.

இப்பால் சிந்துராசனென்பவன் புசபலபராக்கிரமத்தினை யுடைய தனது புத்திரர்களிறந்த செய்தியைத் தூதர்களாலறிந்து பேரிகைகர்ச்சனையைக் கேட்ட நாகத்தைப்போலவயர்ந்து வெண்ணெயை யொப்ப உருகி மனமடிந்து அழத்தொடங்கினன். அவன் அழத்தொடங்கலும் அவன்சுற்றத்தினரெல்லாம் அழுதார்கள். அப்போது அவனுடைய புரோகிதனானவன் அரசனுக்குத் தேறுதல் சொல்லத் தொடங்கி, ஓ மண்டலேஸ்வரா! தேவர்களை யெல்லாஞ் சிறையில் வைத்தீர்; திரிமூர்த்திகளாலு மழியாத மேன்மைபெற் றிருக்கின்றீர், இத் தன்மைத்தான பெருமிதங்களையுடைய உமக்கு யாதோ ஒரு காரணத்தால் பகைவந்து கூடினால் அதற்குத் துயரங் கொள்ளலாமா? நித்தியமென்னும் பெருமையினைப் படைத்த வியாசர் முதலிய முனிபுங்கவர்கட்கும், இந்திரன் முதலிய தேவர்கட்கும், யாவரையும் அசித்திய திசையறிந்து கொல்லவல்ல யமதருமராசனுக்கும், பிரமாதி மூவர்கட்கும், அழிவெய்துங் காலம் ஒன்றுண்டா யிருப்பதைக் கேட்டதில்லையோ? ஒருவனுக்கு அனந்தம் பிறப்புண்டாகையால் அவனுக்குத் தாய் தந்தையரும் அனந்தம் பேருளர்; புத்திரர்களும் அநேகருளர்; சுற்றத்தினரும் அவ்வாறே யிருப்பர். ஆதலால் தந்தையார்? தாயார்? புத்திரர்களார்? சுற்றத்தினரார்? ஓர் காற்றின் மோதலினால் அளவற்ற துரும்புகள் ஒரு பக்கத்திற் சேரும்; மற்றொரு காற்றினால் அவைகளனைத்தும் பலதிசைகளிற் பிரிந்துபோம்; பகற்போதிற் பறவைகளெல்லாம் பலபுலங்களிற் சென்று மேயும்; இராக்காலம் வந்தால் யாவும் ஓரிடத்திற் சேரும்; மீட்டும் மறுநாள் காலையில் திக்கொன்றாய்ப் பறந்துபோம்; இது போலன்றோ நமது வாழ்க்கையின் திறம்? இவ்வாறாகிய நமது வாழ்க்கை யழிவுறு மென்று மனதில் நீங்காத் துயரத்தை வைப்பீராகில் உடனே கவலையுண்டாகும். அக்கவலை யுண்டாகுந் தோறும் வலியொடுங்கும். உமது வலியொடுங்குந் தோறுஞ் சத்துருக்களுக்கு வலிமேலிடும். அவர்கட்கு வலிமேலிட்ட மாத்திரத்தில் சகலமான கெடுதிகளுஞ் சம்பவிக்கும். அக்கெடுதிகள் சம்பவிப்பதினால் இதுகாறு மடைந்த கீர்த்திகளனைத்தும் பாழாகப்போம். ஆதலால் சத்துருக்கள் உண்டானபோதே அவர்களைக் களையவேண்டிய மார்க்கத்தினைத் தேடவேண்டுமென்று சொல்லினன்.

புத்தியிற்கூர்ந்த புரோகிதன்சொன்ன தனைத்தையும் சிந்துராசன் மிகுந்த பத்தியோடுங் கேட்டுத் துயரத்தி னின்றும் நீங்கி, தனது சுற்றத்தினரோடு போசனாதிகளை முடித்து விசாலமாகிய ஆயுதசாலையைச் சேர்ந்து பாசுபதமுதலிய திவ்விய பாணங்களையும் பலதேவர்கள் வேண்டிக்கொடுத்த அஸ்திரங்களையுஞ் சேகரித்துக்கொண்டு, கூறிய கணைகளடங்கி யிருக்கின்ற அம்புபெய் தூணியை முதுகிலிறுக்கி, கரங்களில் திவ்வியமாகிய கோதைகளைமாட்டி விரல்கடோறும் பொன்மயமாகிய புட்டில்களைத் தரித்துச், சுந்தர தயிலத்தினால் வாரிச்சேர்த்துக் கட்டியிருக்கின்ற சிகை விளங்குஞ் சிரத்தினிடத்தில் கோடி சூரியப் பிரகாசமாகச் சொலித்திருக்கின்ற வயிரமுடியையணிந்து, அதன்மீது தும்பை மாலையினைச்சூடி, மற்ற போர்க்கோலத்தையும் பூர்த்தியாக முடித்துக் கொண்டு வெளிவந்து மகமேருவோ மந்தரகிரியோவென்னச் சந்தேகிக்கும் உன்னதமுள்ளதாய் நவரத்தின காந்திகளை வீசிப் பார்த்திருக்கும் இரதத்தில் ஆரோகணித்து, இரணபேரி சயபேரி முதலிய வாத்தியங்கள் அண்டங்களதிர முழங்க நாற்புறத்தும் இரத கஜ துரக பதாதிகளாகிய சயினியங்கள் யுகாந்த வெள்ளத்தினை நிகர்த்துப் புடை சூழ்ந்து வரச் சக்கரவாள கிரியைப் போலப் பாரித்து வளைந்திருக்கும் மதில்கள் சூழ்ந்த தனது கோபுரவாயிலைத் தாண்டி ரணபத்திர காளியானவள் குதிகொண்டு நடமாடும் படியான சமர்க்களத்தை யடைந்தனன்.

அவன் வரவை அகில காரணராகிய மயூரேச மூர்த்தி தெரிந்து தாமும் யுத்தத்திற் கெழுந்தருளினர். அப்போது சுப்பிரமணியதேவர் அவரைப் பணிந் தெழுந்து அண்ணலே! தேவரீர் இங்ஙனே யிருந்து அடியேனை யுத்தத்திற்குச் செல்ல விடைகொடுத்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தனர். அவ்வாறே மயூரேச மூர்த்தி விடைகொடுக்கப் பின்னர் வீரபத்திர கடவுள், நந்திதேவர், புட்பதந்தன், பிருங்கி, பூதராசன், இரணிய கருப்பன் முதலிய தலைவர்களோடு அளவற்ற வீரர்களும் பூதசேனைகளும் புடைசூழ்ந்து வரும்படியாகச் சுப்பிரமணிய தேவர், தமது இரதத்தை முடுக்கி யுத்தகளத்திற் சென்றனர். அப்போது அளவற்ற இரதவீரர்கள் புடை சூழும்படியாக வந்து சிந்துராசன் சுப்பிரமணிய தேவரோடும் எதிர்த்தான். கஜவீரர்கள் வீரபத்திரக் கடவுளோடும் நந்தி தேவரோடும் எதிர்த்தார்கள். துரகவீரர்கள் புட்பதந்தனோடும் பிருங்கியோடு மெதிர்த்தார்கள். பதாதி வீரர்கள் பூதராசனோடும் இரணிய கருப்பனோடும் எதிர்த்தார்கள். இவ்வாறு சிந்துராசனுடைய சதுரங்க சேனைகளுந் தனித்தனியே யெதிர்த்து வரவும், பூதராசனும் இரணிய கருப்பனும் பதாதி வீரர்கட்குள்ளே புகுந்து தமது தேர்களை விட்டிறங்கிக் கதை-சக்கரம்-தோமரம்-பிண்டி-பாலம் முதலிய ஆயுதங்களினாலுந் தேவாஸ்திரங்களினாலும் அளவற்ற யுத்தங்களைச் செய்து சின்னபின்னப் படுத்தி யுத்தகளம் முழுவதையும் பிணங்களால் மறைத்து, மீட்டுந் தமது தேர்களிலேறிச் சந்தோஷமுற் றிருந்தார்கள். பிருங்கியும் புட்பதந்தனுந் தங்கள் இரதங்களை விடுத்துக் குதிரை

களின் மீதேறிச் சிந்துராசனுடைய குதிரை வீரர்கட்குள்ளே புகுந்து இடசாரி வலசாரியாகச் சுழன்று, வேலாயுதம் - மழுவாயுதம் - வாளாயுதம் - சூலாயுதம் முதலியவைகளைக் கொண்டு யாவரையுஞ் சங்கரித்து, குதிரைகளை யெல்லாந் திசாதிசைகளில் வீழும்படி யெறிந்து, வெற்றிமாலையோடும் தங்கள் இரதத்தி லேறி இன்னு மெதிர்ப்பவருண்டோ வென்று எதிர்ப் பார்த்திருந்தார்கள். வீரபத்திரக் கடவுளும் நந்திதேவரும் யானை வீரர்கட் குள்ளே புகுந்து சர்வ சங்கார ருத்திரரைப்போல விசுவரூபங் கொண்டு சிலயானைகளைக் காலினு லுதைத்தும், சில யானைகளைக் கையினுற் குத்தியும், சில யானைகளைப் பூமி யிலேயறைந்தும், சிலயானைகளைக் கடல்மலை எண்டிசை ஆகாயமுதலிய விடங்க ளில் வாரிவாரி யெறிந்துஞ், சமர்செய்து அவைகளின் மீதேறி யிருந்த வீரர் களை யெல்லாஞ் சங்கரித்து, மீட்டுந் தங்கள் இரதத்தின் மீதேறி இளைப்பாறி னுர்கள்.

இப்பால் சுப்பிரமணிய தேவர் இலட்சத்தொன்பது வீரர்களோடும் இரத வீரர்கட்குள்ளே புகுந்து அவைகளை யெல்லாம் இமைப்போதில் விண் குடியேற்றி அவர்களேறி யிருந்த தேர்களினுடைய வண்டில் அச்சு மச்சு குத் துக்கால் கொடுங்கை கொடி குடை முதலிய உறுப்புகளை வெவ்வேருகச் சிதைத்துச் சிந்துராசனுடைய இரதத்தையும் முறித்தெறிந்தனர். அதன்மீது சிந்துராசன் மனங்கொதித்து இவனை இமைப்போதிற் பூமியிற் பதரியா யிருக்கும்படி செய்கின்றேனென்று சபதங்கூறி, ஓர்பெரிய தண்டாயுதத்தோடு சண்முகப் பெருமானுடைய இரதத்தின் சிகரத்துக்குச் சரியாக ஆக்கிரமித் தெழும்பி அத்தண்டாயுதத்தைக் கரகரவென்று சுழற்றித் தேரின்மீது மோதி னன். அப்போது முருகக் கடவுள் தமதுவில்லில் பத்துக்கணைகளைத் தொடுத்து அத்தண்டாயுதத்தைப் பொடிபடுத்தி, மீட்டுஞ்சிலகணைகளைப் பிரயோகித்து அவ னுடையகவசம் கிரீடம்வில் அம்புமுதலான யாவையும் தும்சப்படுத்தினர். அத னுல் சிந்துராசன் முகம்வாடி வேனிற்காலத்து ஒதியமரம்போலத் தலை கவிழ்ந்து நின்றனன். அவனை யேமதையனுகிய சுப்பிரமணியக்கடவுள்நோக்கி, அடா மதியற்றவனே! அளவற்ற சேனைத்தலைவர்களும், அமைச்சர்களும், மைத் துனர்களும், புத்திரர்களும் யுத்தகளத்தில் மாண்டார்கள். நீயும் நேற்றைய தினம் பின்னிட்டோடிப்போயினை. இத்தினம் வந்து நிராயுதனுய்த் தனியாய் நிற்கின்றனை. இனியேனும் எம்மைவணங்கிப் பிழைக்கக்கடவை. இனி நடக் கப்போகின்ற கதியைச் சற்றுமறிந்தாயில்லை. தேவர்களுடைய சிறையையும் முனிவர்களுடைய குறையையும் மூவுலகத்திலும் செய்துவருகின்ற கொடுமை யையும் தயைதாட்சண்யமற்ற உனது உயிரையும் இக்கிமிடத்தில் எனதுகை யொன்றினுற் சிதைத்து என்னை யுத்தத்திற்கேவிய மயூரேசமூர்த்திக்கு ஆனந்த முண்டாக்குவேன்; ஆனல், தருமத்தை நினைத்து அவ்வாறு செய்யாமல் விடுத் தேன். நீ இப்போதுசகலசேனைகளும் வாகனங்களும்மற்றும் நிராயுதனுய் ஏனெ ன்பாரொருவருமின்றித் தனியாயிருக்கின்றனை; இன்று உனதுநகரைச்சேர்ந்து

இளைப்பாறி மற்றுமுள்ள அவுணசேனைகளையும் ஆயுதங்களையுங் கொண்டு நாளை யதினம் வாவென்று கிருபையோடுந் திருவாய் மலர்ந்தனர். அவையனைத்தை யுஞ் சிந்துராசன்கேட்டு வெட்கமுற்று, அங்கே நிற்கமனமில்லாமல் நகரத்தை நோக்கிச்சென்று தனதரண்மனையி லிருந்தனன். சுப்பிரமண்ணிய தேவரும் மற்ற வீரர்களுடனேசென்று விநாயகமூர்த்தியைப் பணிந்து களித்திருந்தனர். அப்போது சூரியனுனவன் வேலாயுத மூர்த்தியாகிய சுப்பிரமணியதேவர் முத லாகிய தலைவர்கள் செய்போர் வினைத்திறனுல் அடைந்த இளைப்பை யாற்றிக் கொள்ளுமாறும், அவுணர்களுடையயுத்தத்தாலடைந்த தனதுவெம்மையைநீக் கிக்கொள்ளுமாறு மெண்ணினவன்போல மேற்றிசைக்கடலிற்குளித்து மறைந் தனன். உடனே இருட்கூட்டங்களானவை தமது உபகாரங்கொண்டு சஞ்சரிக் கின்ற அவுணர்கள், பேய்க்கூட்டங்கள் நடமாடுஞ் சமர்க்களத்தில் விழுந்திறந் தமைக்கு மனம்வருந்தி அவர்களை காணும்படியாக ஐங்கரப் பெருமானுக்கஞ் சிப் பையப்பையச் செல்லுமாறுபோல எங்கும்பரவினன். பின்னர் சந்திரனுன வன் வெவ்விதாகியபோரில் வெற்றிகொண்ட தமது சேனைத்தலைவர்கட்கு விநா யகமூர்த்தி வழங்குகின்ற திருவருளைத்தானும் ஏற்கவருவான்போல இருட் கூட்டங்களை யெல்லாஞ் சிதைத்து ஆகாயத்தில் வெளிப்பட்டனன். அப்போது மயூரேசமூர்த்தியானவர் சமர்செய்துவந்த சேனைத்தலைவர்கட் கெல்லாஞ் சந் தோஷ முண்டாக்கித் தமதுபாசறையிற்சென்று அமர்ந்திருந்தனர்.

அரண்மனையைச் சேர்ந்த சிந்துராசன், முன்னுள்போலவே சுற்றத்தார் முதலியோரழும்படித் தானுமழுது, துயருழந்திருந்தனன். இப்பால் சூரிய னுனவன் பராக்கிரமத்திற் சிறந்த சிந்துராசனுக்கு இன்றழிவுகாலம் சேர்ந்த தாதலால் அவனைக் கணேசமூர்த்தி சீறுஞ்சமயத்தில் அவர்விழிகளினின்றுதிக் கும் வெகுளித்தீயக்கு நாம் சகாயப்படுவோமென்றெண்ணி வருவான்போலக் கீழ்த்திசைக் கடலி லுதயமாயினுன். உடனே யாவரும் நித்திய நியமங்களை முடித்துக்கொண்டு சந்தோஷ முற்றிருந்தனர். அப்போது நாரதமுனிவர் வந் து விநாயகமூர்த்தியைப் பேரன்போடும் பணிந்தெழுந்து, இருகரங்களையுஞ் சிரமேற்கூப்பி, இதனை விண்ணப்பஞ்செய்ய லாயினர். தீனராகிய தொண்டர் கட்கமைந்த வினைகளைப்போக்கிப் பாதுகாத்தருளும் பொருட்டு விருதுக்கொடி யை நாட்டியிருக்கும் பக்தவச்சலனே! நொடிக்குமுன்னே சகல லோகங்களை யும் சிருஷ்டிக்கவல்ல நுதல்விழியினைப் படைத்த சுவாமிகள், இச்சிந்துராசனுடு நெடுநாள் தமதருமைத்திருக்கரத்தில் ஆயுதங்களைச் சுமந்து யுத்தஞ்செய்யத் திருவுளங்கொண்டிருப்பதைப் பார்க்கில் ஈதொரு திருவிளையாட்டே யன்றி வேறில்லை. சுவாமிகள் திருமேனியை இடைவிடாது தரிசிப்பதனுலேயே அவனும் மகாதவத்தினை யுடையவனுயினுன். சுவாமிகளவனுடு நின்று யுத்தஞ்செய்ய யாங்கள் சகித்திரேம். சுவாமிகள் அடியேங்கண்மீது கிருபைவைத்து ஓர்கணப் போதி லவனைச் சங்கரித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனர். அதற்கு மயூ ரேசமூர்த்தி புன்னகை செய்து ஓ மகதிமுனிவரே! நேற்றையதினம் அச்சிந்து

வானவன் கமது தம்பிசெய்தபோரில் இளைத்து நாணமுற்றுத் தனது அரண்மனையைச் சேர்ந்தனன். இன்று அவன் சமர்க்களத்தை நோக்கிவருவானாயின் அவ்வாறே முடித்தருளுவோமென்று திருவாய் மலர்ந்தனர். அவ்வாக்கியத்தை அருகிலிருந்த பிருங்கியென்னுங் கணநாதன் கேட்டு விநாயக மூர்த்தியினுடைய திருவடிகளிற் பணிந்தெழுந்து, சுவாமீ! அடியேற்கு உத்தரவு செய்தால் அச்சிந்துவானவன் தனது படைகளோடு யுத்தகளத்திற்கு வரும்படி செய்கின்றேனென்றனன்; அவ்வாறே கணேசமூர்த்தி விடைகொடுக்க, உடனே பிருங்கியானவன் கண்டகிநகரை நோக்கிச் சென்று மண்ணையும் விண்ணையும் இரண்டடியாகவளந்த விஷ்ணுவைப்போல விஸ்வரூபங்கொண்டு நகர்ப்புறத்திற் காவல்கொண்டிருக்கும் அவுணவீரர்களைச் சின்னபின்னப்பட வாட்டி, உள்ளே புகுந்து புஜபலபராக்கிரமசாலிகளாகிய நூறுகோடி மூலப்படைகளையு மெதிர்த்து எத்திசையருங்கொண்டாடித் துதிக்கும்படிக்குக் கோலாகலமாகிய போரைச் செய்து திருப்பாற்கடலைக் கடைந்த மந்தரகிரிக்குச் சமதையாகப் பரித்திராநின்ற பாதங்களைக்கொண்டு சிலரை யுதைத்துருட்டியும், சிலரைப் பூமியிற் றேய்த்தும், சிலரைக் குடல்சரிய மிதித்தும், சிலரைப் பஞ்சுபோலச் சதைத்தும், சிலரைப் பூமியுள்ளடக்கத்தாக்கியும், சிலரைத் திசாதிசைகளி னெறிந்தும், சிலரைச் சமுத்திரங்களில் வீசியும், சிலரை வானவெல்லையிற் கடாவியும், சிலரை மூளைகள் சிதறவுதைத்தும், சிலரைக் கரங்கள் தோள்கள் முதுகுகள் துணுக்கச்சாடியும், இவ்வாறு கால்களாற் சக்கிராகாரமாகச் சுழற்றிச் சின்னபின்னப்பட மாய்த்தும், கோபந்தணியாமல் தனது கரங்களால் சிலரைப்பற்றிக் கழுத்துகளை யொடித்தும், சிலரைப்பற்றி மார்புகளைக் கிழித்தும், சிலரைப் பிளந்தெறிந்தும், சிலரைப் பதைபதைக்கத் தோலையுரித்து வீசியும், சிலரைப் பிசைந்தும், சிலரைக்கசக்கிப்பிழிந்தும், சிலரைவாரிவாரி அண்டகோளகைக்கப்புறத்தில்வீசியும், சிலரைப் பல்லுதிரமோதியும், சிலரைக் காலையுந் தலையையும் வட்டாகாரமாகச்சேர்த்துச் சக்கரங்களைப்போலுருட்டியும், சிலரை அம்மானையாடியும், சிலரைப் பந்தையொப்ப வெறிந்தும், இவ்வாறு சூறாவளியை நிகர்த்து வளைந்து வளைத்து ஒருவரையும் அப்புறமிப்புறம் போகவொட்டாம லலைத்து, நொடிக்குமுன் மூன்றுகோடி மூலப்படைகளையுங் கொன்று சொர்ணமயமாய்ச் சிகரத்திலே கந்தருவிசிபெருமையொப்பப் பரித்து வானத்தையளாவுகின்ற கோபுரத்தை வேருடன் பறித்தெறிந்து, சிந்துராசன் வீற்றிருக்கு மரசவிருக்கைச் சபாமண்டபத்தைத் தூளாக்கி, அவுணராசன் வாசஞ்செய்யு மாளிகையையும், அவன் செல்வப்பெருக்கையு மதப்படுத்தி, அவுணவீரர்கள் வாசமாகாநின்ற மாடமாளிகைகள் உப்பரிகைகள் முதலியவைகளை யிடித்தெறிந்து, அளவற்ற மிருகங்களும் பறவைகளும் உல்லாசமா யுலாவியிருக்கின்ற சோலைகள் தோப்புகள் உய்யானவனங்கள் செய்குன்றுகள் மேடைகள் மாடங்கள் முதலியவைகளைப் பறித்து அஷ்டதிசைகளிலும் வீசி, அளவற்ற சிகரங்களைக் கொண்டு சொலிக்கின்ற சித்திரக்கூடங்களை வாரியெறிந்து இராசவீதி

களிலெறிந்து சக்கிரகாந்தம் இந்திரநீலம் முதலியவைகளாற் சமைத்திருக்கின்ற மேனிலைகள் திண்ணைகள் முதலானவைகளைப் பாதங்களினு லுதைத்துருட்டியும், பசுசாலைகள் நாடகசாலைகள் ஆயுதசாலைகள் கல்விச்சாலைகள் முதலியவிடங்களை இடித்து வீசி, தடாகங்கள் சித்திரக் குளங்கள் ஏரிகள் மடுக்கள் முதலானவைகளை உருத் தோன்றாமற் பாதங்களினாற்கலக்கி, தேர்க்கொட்டாரங்கள் யானைக்கூடங்கள் குதிரைச்சாலைகள் படைவீரர்வீதிகள் முதலானவைகளைத் துகள்படுத்தி, அங்குள்ள இருக்கின்ற இரத கஜ துரக பதாதிகளை வாரிவாரித் திசைகளில்வீசி, பாதலத்திலமிழ்த்தி அண்டமுகட்டை யளாவியிருக்கின்ற கொத்தளங்களைப் பெயர்த்து, பலசஸ்திரங்களும் படைகளும் கருவிகளும் பொருந்தி விளங்கும் மதில்களை வீரவண்டையணிந்த பாதங்களைக்கொண் டுருட்டி, பெரும்புறக்கடலைப்போல் விசாலமா யாழ்ந்திருக்கும் அகழிகளைத் தூர்த்து, சகலலோகங்களுக்கு மதிபனாய்க் கொடுங்கோல்செலுத்திவருஞ் சிந்துராசனுடைய மனைவியை யந்தப்புரத்தினின்று பிடுங்கிக்கொண்டுவந்து அவனெதிரில் நிறுத்தி ஓர் வாளினால் அவளுடைய பரிமளமிருந்த கூந்தலை யறுத்தெறிந்து ஆர்ப்பரித்தனன்.

அந்நிலைமையைச் சேவகருன்னிய மென்ப தெவ்வளவு மில்லாமல் உலகங்களுக்கு யமனைப்போல அரசுசெலுத்திவருஞ் சிந்துராசன் கண்டு அதிக கோபவெப்பத்தினால் தேகமெங்கும் வியர்த்தொழுக, விழிகள் கொவ்வைக் கனியைப்போலச் சிவந்து அக்கினிபொறிகளையிறைக்க, சுவாசம் விடுந்தோறுந் தீயும் புகையும் வெளிப்பட உரப்பிக்கொண்டு வடவையைப்போல மண்டியெதிர்த்து தான் தரித்த வில்லை வட்டாகாரமாகவளைத்து நாணேற்றி நாகாஸ்திர முதலிய தெய்வப்படைகளைப் பூட்டி ஆகர்ணாந்தமாக இழுத்துப் பிரயோகித்தான். அதைப் பிருங்கியென்னுங் கணநாதன் கண்டு திரிபுரங்களை யெரித்த சிவபிரானைப்போலப் புன்னகைசெய்து அவ்வவுணராசன் விட்ட அஸ்திரங்கட்கு மாறாகத் தானுங் கருடாஸ்திரம் முதலிய தெய்வப் படைகளைப் பிரயோகித்து அவைகளைக் கண்டித்தனன். இவ்வாறு பிருங்கி யென்பவன் சிந்துராசனோடு சிறிதுநேரம் யுத்தஞ்செய்திருக்கின்றபோது அவனுடைய கிரீடம் பூமியில் விழும்படியாகத் தனது காலால் அவன்சிரத்திலுதைத்து ஜெயவென்று ஆகாயமார்க்கமாகச்சென்று மயூரேசமூர்த்தி யெழுந்தருளியிருக்கும் பாசறையையடைந்து அவருடைய திருவடிகளிற் பன்முறை பணிந்து களித்திருந்தனன்.

இப்பால் சிந்துராசனானவன், பிருங்கியுதைத்த உதையினாற் கீழேவிழுந்து மூர்ச்சையாகி மீட்டுந் தெளிந்தெழுந்து, சுற்றுமுற்றும் பார்த்துத் தனது நகரமழிந்த செயல்களையும் சமுத்திரம்போ லிருந்த மூலபலமுதலிய சேனைகள் மாண்டகாரணத்தையும் நினைந்து அதிக துக்கசாகரத்திலழுந்தித் தனது மனைவிக்குண்டாகிய கேட்டையும் தனக்குநேர்ந்த அவமானத்தையும் எண்ணியெண்ணி இதனைப் பேசிக்கொள்வதாயினன். சிவந்த சடை முடியையுடைய சிவ

பிராண்பெற்ற சிறுபிள்ளையானவனொருவன் சண்டைதொடுக்க, அதனைக்காக்க வலியில்லாமல் அவன் விட்ட பாணத்தினால் இரண்டு செவிகளையு மிழந்தோம். மறுநாள் அவனுடைய தம்பியாகிய சுப்பிரமணியனால் நமது பெருமை பெற்ற பாணமெல்லாந் தொலைந்தோம், இன்று அவனுடைய சேனைத் தலைவர்களி லொருவனால் நமது நகரத்தையும் மனைவியினது கூந்தலையும் அறுந்தெறியப் பார்த்தோம். அன்றியும் அவனுதைத்த வுதையினால் நமது மகுடஞ் சிதையப் பெற்றுப் பிரேதத்தைப்போலக் கிடந்து வீழ்ந்தோம். இந்த யுத்தம் ஆரம்பித்த நாள்முதல் பெரும்புறக் கடலைப்போல நம்மைச் சூழ்ந்திருந்த இரதகஜ துரகபதாதிகளையும், பராக்கிரமசாலிகளாகிய மூலப்படைகளையும், அதிசூரர்களாகிய சேனைத்தலைவர்களையும் விவேக சாலிகளாகிய அமைச்சர் மைத்துனர் புத்திரர் முதலியோரையும் பறிகொடுத்து இப்போது தனிமையாக யாதொரு சகாயமுமின்றித் தேகவுபாதியால் மிகவும் வருந்தி வாடுகின்றோம். வெகுகாலமாகப் பலரையும் வெற்றிகொண்டு அரசு செலுத்தி வந்த நமது ஆண்மைத்திறம் வெகுகீர்த்தியாக விருக்கின்றது. இன்னமும் நமது வில்வித்தையினால் அரிய பாணங்களைத் தொடுத்துக்கொண்டு செலுத்துவோமாயின் பகைவனது பிராணனைவாங்குவதும் அல்லது அவனுடைய படைகளைவெல்லுவது மிகவும் அரிது. ஆதலால் வீண்போரினைச்செய்வதிற் பிரயோசனமில்லை. இனியாம்பகைவனால் இறத்தலொன்று அல்லது அவனைவெல்லலொன்று. இவ்விரண்டிலொன்றை இத்தினமே முடித்து வரக்கடவோமென்று சபதங்கூறி அதிக கோபந்தோடுந் தனியனாய்ச் சமர்க்களத்தையடைந்து ஓர் தூதனைக்கூவி இன்று செய்யும் யுத்தத்திற்குச் சுப்பிரமணியனுடன் வீரபத்திரன் முதலியதலைவர்களை வேண்டிலேன். மற்றைச்சேனைத்தலைவர்களையும் வேண்டிலேன். மயில்வாகனமூர்த்த விநாயக னொருவருடனே யான் தனியாயுத்தஞ் செய்ய வேண்டி வந்தனன். இதனை அம்மயூரேசனிடத்திற் சென்று அறிவிக்க, அதற்கு வேண்டுவோர் வேண்டப்பட்ட விருப்பொருளை இமைக்குமுன் எண்ணற்றனவாக வளிக்குந் திருவாளர் மூர்த்தியாகிய விநாயகப்பெருமானிசைந்து, தமது மயில்வாகனத்தை விரைவிற்றூண்டிச் சமர்க்களத்தை யடைந்தருளினர். பின்னர் சிந்துராசனானவன் தனக்கடுத்த விபத்துக்களையெல்லாம் நினைந்து நினைந்து அதிக கோபங்கொண்டு தான்பிறந்த போதே உண்டான சக்கரத்தை யெடுத்து தூபதீப நைவேத்திய முதலிய உபசாரங்களை மனப்பூர்வகமாக நிறைவேற்றிச் சகல லோகங்களுங் கலங்கும்படி காகாவென்று சுழற்றி வீசினன். அதுவெளிப்பட்ட மாத்திரத்தில் அளவற்ற மகிமைகளைக் காட்டித் திரிபுவனங்களும் நடுங்கும்படியாக அனலைச்சொரிந்து ஆவ் ஆவென்று அதிக வேகத்தோடு மேலிட்டு வருவதை எமது கர்த்தனறிந்து அதனைச் சிறிதுஞ் சட்டை பண்ணாமல் நகைத்திருந்தனர்.

கேட்டீர்களோ சவுனகாதி முனிவர்களே! நமக்கு எக்காலத்தும் முடிவில்லாதவராகியும் சகல படைகளுக்கும் ஆதாரமாகியும் ஜெயவனது மயில

லொண்ணாத நிமலராகிய யிருக்கின்ற கணேச மூர்த்தியை அச்சக்கரம் என்ன செய்யும், உடனே அஃது கணேச மூர்த்தியை யடைந்து மும்முறை வலம்வந்து அன்பர்கள்செய்யு மருச்சனை மலரைப்போல அவரது திருவடிகளில் வீழ்ந்து அடைக்கலமாயது. அதைத்திரிநேத்திரமும், சடைமுடியையும், மேலானமூதன்மையும்பெற்ற சிந்துராசன்கண்டு நல்லகாரியமெனக் கோபகைகொண்டவனும் மானமும் வீரமும் மனதை வாட்ட வடவையுங் குளிர்ந்து போம்படிச் சீறி, பிறந்தபோதே உண்டான படையாகிய மற்றொரு சூலாயுதத்தை யெடுத்து தூபதீப நைவேத்திய முதலிய உபசாரங்களை மானதபூசையினால் நிறைவேற்றி, இச்சமயத்தில் எனது சத்துருவை வாட்டி என்னைக் காத்து இரட்சிக்க வேண்டுமென்று பிரார்த்தித்து விடுத்தனன். உடனே எமது கர்த்தரும் தமது பாசாயுதத்தை விடுத்தனர். அவ்விரண்டு தெய்வீகப் படைகளும் ஒன்றோடொன்று பல மகிமைகளுடன் வேகமாய்ச்சென் றெதிர்த்து ஓர்புறத்தில் பிரசண்டமாருதத்தையெழுப்பியும், ஓர்புறத்தில் வடவாமுகாக்கினியைக் காட்டியும், ஓர்புறத்தில் ஆலகாலவிடத்தைப் பெருக்கியும், ஓர்புறத்தில் தாபாக்கினியையும் புகைப்படலங்களையும் உண்டுபண்ணியும், ஓர்புறத்தில் உருத்திரர்-வயிரவர்-வீரபத்திரர்-காளி-துர்க்கை முதலானோரைத் தோற்றுவித்தும், ஓர்புறத்தில் பூத பைசாச டாகினி வருக்கங்களைக்கக்கியும், ஓர்புறத்தில் இடி மின்னல் குமுறல்களைப் பெருக்கியும், ஓர்புறத்தில் அக்கினி சிலை விஷம் முதலிய மழைகளைப் பொழிந்தும், ஓர்புறத்தில் யானை புலி சிங்கம் கரடி குதிரை முதலிய முகங்களை வாய்ந்த ஒன்றனந்தமாகப் பெற்றிருக்கின்ற அசுரர்களைச் சிருட்டித்தும், ஓர்புறத்தில் வருணாஸ்திரம் வாயுவாஸ்திரம் குபேராஸ்திரம் நாராயணாஸ்திரம் சரபாஸ்திரம் முதலிய தெய்வப்படைகளை யுண்டாக்கியும், ஓர்புறத்தில் தோமரம்-பிண்டி-பாலம்-கப்பணம்-முசலஞ்-சக்கரம்-எழு-மழு-தண்டம்-கட்டி-வச்சிரம்-எறிவேல்-முசுண்டி முதலிய ஆயுதங்களைப் படைத்தும், இவ்வாறு கொடுமையென்பன அனைத்தையும் பெருக்கிச் சராசரப்பிரபஞ்சங்களனைத்துந் திகைத்து வாடும்படிக்குச் சர்வசங்காரக் கடவுளானவர் இரண்டு உருவைக்கொண்டு திருவிளையாடல் செய்கின்றதைப்போல ஒன்றைக்கொன்று பின்னிடையாமல் விண்ணுலகம் மண்ணுலகம் முதலிய விடங்களிலுலாவி, கறுத்த சலசமிர்த்திபெற்ற கடலினிடத்தும் பெரும்புற வெள்ளத்தும் சக்கரவாளகிரி மீதிலும் அண்டப்பித்திகைச்சாரலிலும் பாதலத்திலுந் திசைகளிலும்பரந்து, அதிக விநோதங்களைச்செய்து அண்டத்துக் கப்புறங்களிலுமோடிக் கொடியபோரை விளைத்து ஆர்ப்பரித்தன.

அப்போது மயூரேசர்விட்ட பாசாயுதமானது மீறி நாம் இச்சூலத்தோடு நீடித்து யுத்தஞ்செய்வது வெகுநேத்தி வெகுநேத்தியென்று கோபித்து, ஓர் நொடிப்போதில் அச்சூலாயுதத்தினைத் துகளாக்கி, சிந்துராசனுடைய மார்பைப் பிளந்து கீழேவீழ்த்தி, தன்னிடத்துஞ் சூலத்தினிடத்தும் உண்டாகிய பாணம் முதலியவைகளைத் திருப்பிக்கொண்டு, தங்கள் கொடுமையினால் மாறுபட்ட

அண்டாண்ட புவனங்க ளனைத்தையும் நிலைப்பிரகாரம் பெறச்செய்து, சத்துருக்களாகிய அவுணபாதகர்களொழிய ஏனைய சீவராசிகளனைத்தையு மெழுப்பி, மீண்டு தன்னைச் செலுத்தியருளிய மயூரேச மூர்த்தியினுடைய திருக்கரத்தில் முன்போலவேசென்று வீற்றிருந்தது. தேவர்கள் புட்பவருடஞ் சொரிந்தார்கள். ஆகாயத்தில் பஞ்சகருவிகளு முழங்கின. முனிவர்களெல்லாம் வேதாகமங்களினாற் றுதிசெய்தார்கள். சண்முகப் பெருமான்முதலிய தலைவர்களெல்லாங் களிப்புற்றுத் தாழ்ந்தார்கள்.

இப்பால் சிந்துராசன் யுத்தகளத்தில் மடிந்தமையைத் தேவர்களைச் சூழ்ந்து காவல்கொண்டிருந்த அவுணர்கள் தெரிந்து திக்காலொருவரா யோடிப் பதுங்கினார்கள். தெய்வலோகத்தை யாண்டுகொண்டிருந்த சம்பாசுரன், நிசும்பாசுரன், விருத்திராசுரன், சம்பாசுரன் முதலாயினோர் தனித்தனியே ஓடி மறைந்தார்கள். அப்போது மயூரேசமூர்த்தியானவர் கிருபைகூர்ந்து அவுணர் காவலினின்றும் விடுபட்டிருக்கின்ற தேவர்களை யழைத்து வருமாறு வீரபத்திரக்கடவுளுக் காக்கியாபித்தனர். அவர் அத்தேவர்களை யெல்லாங் கொண்டுவந்து விநாயகப்பெருமானெதிரில்விட அவர்களெல்லாங் கவலைகளினின்று நீங்கி வேதாகமங்களினால் அளவற்ற துதிகளைச்செய்தார்கள். பின்னர் கணேசமூர்த்தியானவர் அவர்கட்கெல்லாந் தமது கிருபா நோக்கத்தையருளி, இதுகாறும் அவுணபாதகன் சிறைக்கணகப்பட்டு, வாடியிருந்தீர்களோ வென்று உபசரித்து இனி நீங்களனைவரும் பழையபடி சென்று வாழ்வீர்களென்று அவ்வவர்கட்கு வேண்டிய வரங்களையு மளித்தருளி விடை கொடுத்தனர்.

அப்போது சிவபெருமான் உமாதேவியாரோடு இடபவாகனத்தின்மீதெழுந்தருளிப் பூதகணங்களனைத்தும் புடைசூழவந்து மயூரேச மூர்த்தியையும் சண்முகப் பெருமானையும் மிகுந்த காதலோடு ஆலிங்கனஞ்செய்து ஏனைய தலைவர்கட் கெல்லாந் தமது காட்சியை யளித்தனர். உடனே அனைவரும் அவருடைய பாததாமரையைப் பலமுறை வணங்கி அவரிடத்தினின்றும் அனந்த முற்றிருந்தனர். பின்னர் சிவபெருமான் உமாதேவியாரோடுந் தமது திருக்கயிலைக் கெழுந்தருளினர்.

அதற்குமேல் சக்கிரபாணி யென்னுமரசன் தனது குமாரன் மடிந்தமையைக்கேட்டு மிகுந்த துக்கத்தோடுமெழுந்து சமர்க்களத்தை யடைந்து அங்கு வீழ்ந்திருக்கின்ற சிந்துராசன் முதலாயினோனைத் தகனஞ்செய்து அவ்வவர்கட்குரிய கருமங்களை எல்லாம் கிரமப்படி நிறைவேற்றி மயூரேச மூர்த்தியை வந்து பணிந்தனன். அப்போதுவானவர் குழாத்தைக் காத்தற்பொருட்டு வாகைமாலை சூடியிருக்கின்ற உறவுபகையற்ற கணேச மூர்த்தியானவர் அவனைப் பார்த்து, அரசனே! நீ கருதிய வரங்களைக்கேள் தருகின்றோமென்று திருவாய் மலர்ந்தனர். அதனையிராசன்கேட்டு, சுவாமி! அடியேன் தேவரீருடைய திவ்வியசரணாரவிந்தங்களைத்தொழுதும் கண்ணாற்றரிசித்தும் வழுத்தியும் பிழைத்தேன் எனது

மைந்தனே தேவரீரை நிந்தித்தும், பகைத்தும், யுத்தஞ்செய்தும் பேரின்பமான முத்தியையடைந்தனன். ஆதலால் இதைவிடவெனக்கு மேலானவரம் யாதுவேண்டியது. ஆயினும் இத்தேவர்முதலானவர்களோடுந் தேவரீர் எனது மனையின்க ணெழுந்தருளி அடியேன்செய்யும் பூசையினைக் கைக்கொள்ள வேண்டுமென்று பணிந்திரந்தான். அதற்கு மயூரேசமூர்த்தியிசைந்து கிருபை வழங்கித் தமதுதிருக்கூட்டத்தோடு மெழுந்தருளினர். உடனே சக்கிரபாணி மகாராசன் இச்செய்தியைத் தனது நகரத்திலுள்ள பிரமுகாளுக்கறிவிக்க, அவர்கள் அந்நகரமுழுவது மலங்கரித்து, அவ்வவர்களுந்தனித்தனியேகையுறைகளேந்தி யெதிர்வந்து விநாயகமூர்த்தியினுடைய திருவடிகளிற் பணிந்தார்கள். அவர்கட்கெல்லாம் விநாயகமூர்த்தி கிருபைகூர்ந்து கண்டகநகரத்தையடைந்து ஓர்பால் மங்கலவாத்தியங்கள் முழங்க, ஓர்பால் பாவையர் நாட்டியஞ்செய்ய, ஓர்பால் முனிபுங்கவர்கள் துதிக்க ஓர்பால் தேவர்குழாங்கள்வாழ்த்த, இவ்வித வைபவங்களோடு இராசவீதிகளைக்கடந்து, சூரியசந்திரரொளிவீசுமணிகளை வாய்ந்த அரண்மனையிற்பிரவேசித்து, நவரத்தின மயமாயிராநின்ற சிங்காதனத்தி லெழுந்தருளினர். சுப்பிரமண்ணியதேவர் முதலான தலைவர்களெல்லாம் வேறுவேறு தானங்களில் முறைமைப்படி வீற்றிருந்தார்கள். உடனே சக்கிரபாணிமகாராசன், கற்பகாதி மலர்களைக்கொண்டு பரிவார தேவர்களைப் பூசித்து, பின்னர் கணேசமூர்த்தியினுடைய திருவடிகளை அன்போடு பணிந்து ஆராதித்தான். அதற்கு மயூரேசமூர்த்தி கிருபைகூர்ந்து பத்துகரங்களும் அக்கரங்கள்தோறும் பத்துபடைகளும், தேசார்ந்து வனப்பெய்திருக்கின்ற திருவுருவமும் விளங்கச் சித்திபுத்திகள் சமேதராய்ச் சிங்கவாகனமூர்ந்து காட்சி தந்தனர். அக்காட்சியை யாவருங்கண்குளிரத் தரிசித்து அடக்கற்கரிய மகிழ்வோடு அற்புதங்கொண்டு சயசயவென்றுபோற்றி ஆனந்தக்கூத்தாடினார்கள். அப்போது விநாயகமூர்த்தியானவர் சக்கிரபாணி மகாராசனைநோக்கி, அரசனே! உனதுகுமாரன் அளவற்றநாள் கொடுங்கோல் செலுத்திவந்தனன். அதனால் அவனைப் போர்முகத்திலின்றுக் கொன்றனம். இனி உனது செங்கோலினால் உலகத்தைக்காத்து அந்தியகாலத்தில் நமது திருவடிகளில் அமிசப்பொருளுகவென்று திருவாய்மலர்ந்து, எழுந்தருளி சொர்க்கலோகத்தினுஞ்சிறந்த கண்டகநகரத்தைத்துறந்து, தம்மோடு தொடர்ந்துவரும் பிரமுகாளையும் சக்கிரபாணிமகாராசனையும் அங்ஙனேநிறுத்தி, அறமுதலியநாற்பயன்களையுஞ் சிறக்கவளிக்குந் திரிசந்திக்ஷேத்திரத்தையடைந்து வதிந்தருளினர்.

இப்பால் சண்முகப்பெருமான் முதலியவீரர்களும் விண்டுவாதி தேவர்களும், நாரதாதி முனிவர்களுமனமகிழ்ந்து பூரணப்பொருளாகியும், புண்ணியமுதலாகியும், தம்மைப் போற்றுவார்க்கு இடர்கெடுத்தருளுந் தேவதேவோத்தமராகியுமிராநின்ற விநாயகமூர்த்தியைப் பூசித்தார்கள். பின்னர்விண்டுவாதி தேவர்கள், யெமது கர்த்தனிடத்தில் விடைபெற்று அவ்வவர்களுடைய பதவி

களிச்சேர்ந்து ஆனந்தமுற்றிருந்தார்கள். இப்பால் நந்தியாதி கணநாதர்களும்; முருகப் பெருமான்முதலிய சேனைத்தலைவர்களும், கைகடவாது கலந்திருப்பச் சித்திபுத்திகளோடும் அங்ஙனே சிறிதுநாள் வசித்திருந்து, தமது மயில்வாகனத்தைச் சண்முகப்பெருமானுக்கருளி இன்றுமுதல் எவ்வுலகமும் உன்னை மயூரத்துவசனென் றுரைக்கவென்று அநுக்கிரகஞ்செய்து அவரையும்மற்ற வீரர்களையும் தத்தமிருக்கையிற் செல்லுமாறு விடைகொடுத்துத் தமதுபரிசனங்களோடும் முனிச்சிரேஷ்டர்களோடுந் தாமெழுந்தருளி சகலவர்ணமாக்களாலும் பூசிக்கப்படுகின்ற தமதுலோகத்தை யடைந்தருளினர். அது முதல்விநாயகப் பெருமானுடைய திருவுருவைக்கொண்டுசென்ற சக்கிரபாணிமகாராசன் தரும சாத்திரங்களின் முறைமைப்படி தனது அரசாட்சியைச் செலுத்தி வந்தனன். அதனால் சதுர்வேதங்களுந் தழைத்தோங்கின; திரிலோகங்களுந் துன்பமில்லாமல் வாழ்ந்தன; தேவர்கள் அவிர்ப்பாகமுதலியவைகளைப் பெற்றுக் களித்திருந்தார்கள். தேவாலயங்களெல்லாம் பழையபடியோங்கிப் பூசைகொண்டன.

மயூரேச விநாயகர் திருவவதாரப் படலம்

முற்றிற்று.

ஆறாவது

பாலசந்திர விநாயகர்

திருவவதாரப் படலம்.

எம்பிரா னுமையா ளிடத்தவ தரித்திங் கிறைமையுஞ் சிந்து
வைத் தப்பி, யும்பரார் சிறையை நீக்கிய துரைத்தா முயர்தவச்
சௌனக முனிவீர், நம்புமு விரண்டாந் திருவவ தாரம் நலந்தரு
பாலசந் திரனென், றிம்பர்வாழ்த் திசைக்கு மருநெறித் தூய வியா
தெனி யியம்புதுங் கேளீர்.

ஓ சவுனகாதி முனிவர்களே! மூர்த்தி விநாயகமூர்த்தியானவர் மயூரேச அவதாரத்தில் வேதசாஸ்திரங்களைத் தேவர்களிடத்தினின்றுங்கவர்ந்த கமலாசுரனைச் சங்கரித்து, மீட்டும் அவ்வேத சாஸ்திரங்களை அத்தேவர்கட்குத் தந்த திருவிளையாடலும், பின்பு தேவர்களைச்சிறையில்வைத்தசிந்தாசுரனைக்கொன்று மற்றஅவுணர்கள் செய்த மாயையினையொழித்த திருவிளையாடலுஞ் சொன்னோம். அவரே மற்றொருபோது பாலசந்திரர் திருவவதாரங்கொண்டு யமனுடைய வீரியத்தினின்றும் உதித்த அனலாசுரனுயிரை வாட்டுமாறு ஓர்பிராம

ணச்சிறுவனைப்போலத் திருவுருக்கொண்டுசென்று அவ்வசுரனைவிழுங்கித்,தேவர்களைக்காத்தும், பின்னர் அவனைவிழுங்கிய வெப்பத்தை எண்பத்தெண்ணாயிர முனிவர்கள்செய்த மகத்துவமுள்ள தூர்வை யருச்சனையை யேற்று விலக்கியருளிய திருவிளையாடலொன்றுண்டு அதனை முன்னமே உபாசநாகாண்டத்திற் சொல்லியிருக்கின்றோம். இப்பால் தூமகேது திருவவதாரங்கொண்டு செய்தருளிய திருவிளையாடலைச் சொல்லுவோம் கேட்பீர்களாக.

பாலசந்திர விநாயகர் திருவவதாரப் படலம்

முற்றிற்று.

ஏழாவது

தூமகேது விநாயகர்

திருவவதாரப் படலம்.

விண்டிரு மனலா சுரனுயிர் வாட்டி விப்பிரச் சிறுவனைத்
தோன்றி; யறன்மிகு தேவர் பூசைகொண் டருளு மவ்வவ தாரமா
மதனை, யுறமுன முரைத்தா மறிகவின் டேமுன் றுரைத்திடுந் தி
ருவவ தாரம், பிறவிவிட் டோடச் சாற்றுதுங் கேளீர் பெருந்தவச்
சௌனக முனிவீர்.

ஓ சவுனகாதி முனிவர்களே! விந்தியமென்னுந் தேயத்திலே அமோதினியென்னுமோர் நகரமுண்டு. அந்நகரத்தில் தானவர்கட்கெல்லாந் தலைவனும், வானவர்களஞ்சும்படியான ஆண்மையினையுடையவனும், மெய் முடி கேசம் தந்தம் இவைகள் சாமள நிறத்தினனும், அளவற்ற இரத்தினாபரணங்களைத்தரித்த காட்சியினனும், பராக்கிரமத்திற் சிறந்த சதுரங்க சேனைகளை யுடையவனும், சிவபிரானுடைய திருவடித்தாமரைகட்கு இடைவிடாத அன்பினனும், அவனடியார் வேண்டுவனவற்றை யுதவிப் பூசைசெய்கின்ற பத்தியினனும், இருக்கும்போதும், நடக்கும்போதும், நினைக்கும்போதும் எப்போதும் பரமசிவத்தைத் தியானிக்கும் உள்ளத்தினனும், வறியவராய் ஏற்றோருக்கு மாற்றாது கொடுப்பதினால் கற்பகவிருக்ஷத்தை நிகர்த்த கையினனும், எல்லாரும் புண்ணியமே இவனாக உருக்கொண்டுவந்ததென்றுசொல்லும்படியான புகழையுடையவனும், தன்னுயிர்போல் மன்னுயிர்களைக் காத்திரட்சிக்கும் நயமுடையவனும், மகமேருவினை நிகர்த்த செல்வத்தினை யுடையவனும், சகல குணங்களிலும் மேலானவனும் தூமாசுரனென்னும் பெயரினையுடைய ஓர் அரச னிருந்தனன்; அவ்வரசனுக்குந் தனது மனம்போல வழிபடத்தக்க சிந்தாமணி தருமமூர்த்தி

சம்பாதி-விபுலன்-திட்காமன்-புத்திமான்-வித்துருபன்-ஒட்டன் என்னும் பெயரினையுடைய எட்டமைச்சர்களும், சுமதி-சுகரி-சுப்புரு-சுமனோகரி-சுகேத்திரியென்னும் ஐந்து மனைவியர்களும், மகிபாலன்-சுந்தன்-வீரபத்திரன்-தனாதன் என்னும் நான்கு குமாரர்களு மிருந்தார்கள். இந்தக் குமாரர்கட்கும், அமைச்சர்கட்கும், சேனைத்தலைவர்முதலிய மற்றைப் பரிசனங்கட்கும், அத்தூமராசன் தனது மாளிகையைப்போல அழகுபொருந்திய மாளிகை முதலான செல்வங்களைக் கொடுத்து சகல போகங்களையும் தேவேந்திரனைப்போல அநுபவித்துக் குபேரனைப்போல அளவற்ற பாக்கியங்களைப் பெற்று அரசாட்சி செய்துவருகிற நாளையில் ஒருநாள் சந்திரகாந்தக்கல்லாற் சமைத்திருக்கின்ற தனது கொலுச்சபையில் நவரத்தினமயமா யிராநின்ற சிங்காதனத்தின்மீது வீற்றிருந்து மங்கையர்கள் செய்யும் ஆடல்பாடல் முதலியவைகளைக் கண்டுங் கேட்டும் களிப்புற்று அயற்புறத்து மன்னவர்களெல்லாம் அடிவணங்கி திறைதர அவர்கட்குக் கருணைவழங்கியிருக்கின்ற சமயத்தில், நான்கு வேதங்களையுமோதி, ஆறங்கங்களையு முணர்ந்து, மற்றைய நூல்களையெல்லாம் தெளிந்துநிறைந்த உள்ளத்தினராய், கோடி சூரியர்களைப்போலப் பிரகாசிக்குங் கீர்த்தியைப் பெற்றவராய், சந்திர சடாதரமூர்த்திக்கு அன்பினராய், திரிகாலங்களையு மறியவல்ல புண்ணியசீலராயிராநின்ற பிருகுமகாமுனிவர், தமது சிடக்கூட்டங்களோடும் அங்கணம் எழுந்தருளினார். அவரைத் தூமராசன்கண்டு, இத்தபோதனர் நாம்முன்னர் செய்திருக்கின்ற புண்ணியபலத்தினால் வந்தனரென்று மனமகிழ்ந்து, மிகுந்த பத்தியோடெதிர்கொண் டழைத்துவந்து, யோக்கியமான ஆசனத்தி லவரை யெழுந்தருளச்செய்து, அர்க்கியபாத்திய ஆசமனாதிகளைக் கொண்டு பூசித்து பரிமளமிகுந்த புட்பவகைகளினு லருச்சித்து, அளவற்ற தோத்திரங்களைச்செய்து, சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து, இதனைச் சொல்லுவதாயினன்.

சுவாமீ! தேவரீர் இங்ஙன மெழுந்தருளியதால் அடியேனுடைய கோத்திரமுங் குலமுஞ் சுத்த பவித்திரமாயின. அடியேன் சகலவிதத்திலுங் கிருதார்த்தனாயினேன். நினைத்ததெல்லாம் நொடிக்குமுன் உண்டாக்கத்தக்க வல்லபத்தையுடைய தேவரீருக்கு அற்பனேனிடத்தில் பெறத்தக்கது ஏதுமில்லை யாயினும் தேவரீரையொத்தவர்கள் ஓர் காரியத்தைக் குறியாமல் ஓரிடத்திற் செல்லுவதில்லை யாதலால், இங்ஙனந் தேவரீ ரெழுந்தருளிய காரியத்தை அடியேற்குத் தெரிவித்தருளவேண்டு மென்று பிரார்த்தித்தான். அதற்குப் பிருகு மகாமுனிவர் அவனைப் பார்த்து அரசனே! தருமரூபியாய் எப்போதுஞ் சிவபிரானைத் தியானிக்கின்ற உள்ளத்தினை யுடையவனாதலால் உன்னைக் காணவேண்டிப் பரிவோடும் வந்தோமேயன்றி வேறில்லை. அவ்வாறே உன்னைக் கண்டனம். இனி நமதாச்சிரமத்திற்குச் செல்லுகின்றோமென்று சொல்லினர். அதற்குமேல் தூமராசன் முனிபுங்கவரை மீட்டும்பணிந்தெழுந்து இருகரங்களையுங்குவித்து சுவாமீ!

எல்லாவுலகமுந் தாழ்வாகச்சொல்லுகின்ற அசுரகுலத்தி லடியேன் அவதரித்தும் அளவற்ற செல்வமும், சிறந்த அரசாட்சியும், கற்பிற்சிறந்த மனைவியர்களும், பராக்கிரமத்தையுடைய புத்திரர்களும், மேலான போகங்களும், சத்துருக்களுக்கு இடையாத வீரமும், பெரியோர்கள் மதிக்கத்தக்க யோக்கியமும், சிவபத்தியும், சிவனடியார்களிடத்தி லன்பும், மனிதர்களிடத்தில் தாயினுஞ்சிறந்த தயையும், இன்னு மித்தன்மைத்தான நற்குண நற்செய்கைகளெல்லாம் ஒருகாலத்திலும் மாறுபடாது பொருந்தியிருப்பது எந்தவிதத்தினாலோ? அதனை அடியேற்குத் தெரிவித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தான்.

அதற்குப் பிருகு மகாமுனிவர் சந்தோஷித்து அரசனே! நீ முற்சனனத்தில் விருதியென்னும் பெயரினையுடைய ஓரரசனாகப் பிறந்து வேதாகமபுராணங்களை நன்று யுணர்ந்து, அதற்குத் தக்கபடி மநுநீதியின் முறைவழாமல் அரசாட்சிசெய்து, தேவர்கள் முதலாயினோர்க்கு அன்போடு பூசைசெய்து, சத்துருக்களையும் ஒரேகுடை நீழலிலாண்டு, பெரிதான போகபாக்கியங்களை யநுபவித்து, சிவபிரானையும் அவரடியார்களையும் மிக்கவன்போடும் பூசித்து, எல்லாத் தருமங்களையுந் தாழ்வில்லாமல் மென்மேலும் நிறைவேற்றித் திரிகாலசந்தனங்களையுந் தவறாமற்செய்து,அளவற்ற தானங்களை அன்போடியற்றி இகபரமிரண்டு முன்வசமாகத்தக்கதாய் வாழ்ந்திருக்கின்ற நாளையில், தொண்ணூற்றொன்பது யாகங்களை நிறைவேற்றி நூறாவது யாகந்தொடங்கிச் செய்வதாயினை; அதனைத் தேவேந்திரனறிந்து, இந்த நூறுயாகஞ் சரியாகச் செய்து முடிப்பாயின் நீ அவனது அரசுரிமைக்கு வந்துவிடுவாயென்று பயந்து, அந்த யாகத்தை நிறைவேற்றவொட்டாமற் செய்யத்தக்கது எந்த வுபாயத்தினாலென்று ஆலோசித்துக்கொண் டிருந்தனன். அச்சமயத்தில் நாரதமுனிவர் அவனிடத்திற் சென்றனர். அவரை இந்திரன் கண்டவுடனும், இனியாம் எண்ணியகாரியத்தை இலேசாய் முடித்துக் கொள்ளலாமென்று மகிழ்ந்தவனாய், உடனே அவரை யெதிர்கொண் டழைத்துவந்து, ஆசனத்தி லிருக்கச்செய்து, அளவற்ற பூசைகளையுந் தோத்திரங்களையுஞ் செய்து, சுவாமீ! சகல நற்குண நற்செய்கைகளினுஞ் சிறந்த விருதியென்னு மரசன் தொண்ணூற்றொன்பது அசுவமேதயாகஞ் செய்து முடித்து இத்தின மற்றொரு யாகத்தையுஞ் செய்யத் தொடங்கினன். அதைத் தடுப்பதற்கு அடியேனு லாகாமையால் தேவரீர் இருடைசெய்து அதனை நடக்கவொட்டாமற் றடுத்து அடியேற்கு இச்சொர்க்கலோகாதி பத்தியத்தை நிலைபெறச் செய்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தனன்.

ஓ தூமராசனே! நீ எப்பிறப்பிற்செய்த வினையோ சகலமுந்தெரிந்த அம்முனிவர் அதற்கிசைந்து, ஓர் பிராமணராக வடிவங்கொண்டு, தன்னேறித், தலைமெங்கித், தோல்திரைந்து, கைநடுங்கிப், பார்க்கின்றோர்களெல்லாம் மனமிரங்கும் படியாகக் கால்துவண்டு, உடல்சரிந்து, சிவநாம கீர்த்தனைகளைச்

செய்துக்கொண்டு, சகலமுந் துறந்தவனைப்போல உனது யாகசாலைக் குள்ளே வந்தனர். அவ்வாறு வந்தவரை நீ பிராமணரென்றே நினைத்து, அவரை யெதிர்கொண் டழைத்துவந்து, ஓராதனத்தி லிருக்கச் செய்து, அருக்கிய முதலானவைகளைக் கொடுத்து, பிறவித் தரித்திரனுக்குப் பெரும்பொருள் கிடைத்ததுபோல மனமகிழ்ந்து சுவாமீ! தேவரீர் யார்? சுவாமிகள் இங்ஙன மெழுந்தருளிய காரணம் யாது அதனைச் சொல்லவேண்டுமென்று கேட்டனை; அதற்குப் பிராமணராகவந்த நாரதமுனிவர் உன்னைப் பார்த்து, அரசனே! நம்மை யாவருஞ் சிவசன்மனென்று அழைப்பார்கள். யாம் உன்னிடத்தில் ஓர் காரியமாக வந்தனம். அஃது யாதெனில், உனது மனைவியின்மீது நமக்கிச்சையுண்டாயிருக்கின்றமையால் அவளை நமக்குத் தரவேண்டுமென்று கேட்டனர். அப்போது நீமனம்வருந்தி சுவாமீ! சிவபிரான் கிருபையோடுந் திருவாய் மலர்ந்தருளிய வேதாகமங்களில் விதித்தவிதியாதோ அவ்வாறு நடந்து வருவார்களாயின் அவர்கட்கு எக்காலத்தும் புண்ணியமும் புகழு முண்டாகும்; அவைகளில் விலக்கானவைகளை யநுசரித்தால் பாவமும் பழியுஞ் சேரும்; ஒருவனுக்கு ஒருவன் சந்தோஷத்தோடு கொடுக்கும்பொருள் யாதோ? அஃது இம்மை மறுமை இரண்டிற்கும் உதவியாக யிருக்கவேண்டும். அவ்வாறின்றி இருமைக்கு மாகாதபடி கொடுத்தால் பின்னர் கொடுப்போனும் ஏற்போனுங் கொடிய துட்டர்களாகி யெல்லாநரகங்களிலும் வீழ்வார்களாதலால், எனக்குரிய மனையாளொழிய ஏனைய பதார்த்தங்களில் யாதுவேண்டினுந் தருவேனென்று சொல்லினன். அதை பஞ்சவடிவாய்வந்த மறையவர்கேட்டுச் சொல்லுவார்: அரசனே! யாம் இதுகாறும் பிரமசாரிய நிலையிலிருந்தனம். அப்பிரமசாரியம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் எனச்சொல்லுகின்ற நான்கு நிலைகளினும் கிரகஸ்தாசிரம நிலையானது மிகவுஞ் சிறப்புடையதாதலால், அந்நிலையை நமதுள்ளம் விரும்பியது. அவ் விருப்பத்தை நிறைவேற்றத் தக்கவர்கள் உன்னையன்றி வேறொருவரில்லை. இரப்போரிடத்தி லிரக்கமும், அவர்கள் கோரியது எவ்வகைப்பட்ட பதார்த்தங்களே யாயினும் அவைகளை இல்லையென்னாது கொடுக்கத்தக்க ஈகையும், உன்னிடத்தி லுண்டாயிருக்கின்றமையால் யாகஞ் செய்கின்றபோது ஒருவன்வந்து இரப்பானெனில், அவ் விரப்பைநிரப்பி அனுப்புமாறு வேதாகமங்களிற் கூறியிருக்கின்றபடி நீ நிறைவேற்ற வல்லையென்று நல்லகுணத்தையும் அழகையும் வாய்ந்த உனது மனைவியை இச்சித்துக் கேட்டனம். அதற்கு மிகுந்த ஆவலோடும் வந்திருந்த அதிதியானவன் வறியனாயேகும்படி உன்னிடத்தில் இவ்வுலகத்தாரறியவிருக்கின்ற உனது மனைவியைக் கொடுக்கமாட்டாதவகை கண்டிதமாகச் சொல்லி நம்மை வீணே போகும்படி கைவிட்டனை. இஃது உனக்கழகோவென்று சொல்லினர். அதனை நீதடுத்து அந்தணரே! எனது இராச்சியமும் எனக்கோர் மனைவியாதலால் அத்தகைய மனைவியைக் கொடுக்கின்றேன் வாங்கிக்கொள்ளும். அதற்குச் சம்மதி யில்லாவிடின் அளவற்ற கன்னியர்களை வரவழைத்துத்தருகின்றேன்; அவ

ருள் தேவரீருக் கிஷ்டமானவளைக் கைக்கொண்டு கிரகஸ்தாசிரமத்தினை யாதரித்துக் கொள்ளுகவென்று பிரார்த்தித்துக் கூறினை. இவ்வாறு பிரார்த்தித்துக் கூறியும், அதற்கவர் ஒப்புக்கொள்ளாமல் அரசனே! ஒருவனோர் பொருளையிச்சித்தால் அப்போதே அவனிச்சைப்படி அப்பொருள் கிடைக்குமாயின், அஃது தாழ்ந்தபொருளாயினும் உடனே அவனுக்கு வாட்டந்தீர்ந்து மேலான மகிழ்ச்சியைக் கொடுக்கும். அவ்வாறின்றி அப்போதே அவன் இச்சித்ததைப் பார்க்கினுஞ் சிறந்தபொருள் வேறொன்று கிடைத்தாலும் அஃது அவன் வாட்டத்தினைத் தணித்து மகிழ்ச்சியைத் தரமாட்டாது. இதனை நன்றாயறியக்கடவை. இலக்குமி முதலிய தேவமாதர்களினுஞ் சிறந்த அழகினையுங் குணத்தினையும்வாய்ந்த உனது மனையாட்டியை விரும்பிக் குறைகின்ற நமது மனத்திற்கு உனது இராச்சியத்தையுஞ், சிங்காரமுள்ள கன்னியரையும், அளவற்ற திரவியங்களையும், ஏனைய மேலான பதார்த்தங்களையும் கொடுத்தாலும் அவைகள் என்ன திருப்தியினைச் செய்யமாட்டும்: யாம் இச்சித்தபடி கொடுப்பதுண்டாயின் உனது மனைவியைக்கொடு. இல்லையேல் நீயிச்சித்து என்னிடத்திற் கிடைக்கமாட்டாதென்றுசொல்லி நமக்கு விடைகொடு; நாம் வந்தவழியே ஏகித் திரும்பிச் செல்லுகின்றோமென்று விருத்தப் பிராமணர் சொல்லினர். அதற்குநீ அறநெறியைக்கெடுக்கத்தக்கபொருளை யான்கொடேனாயினும், தேவரீர் இங்ஙனமிருந்து போசனஞ்செய்து சிநேகவாற்சல்லியத்தை நடாத்தியெழுந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனை. அப்போது அந்தணனைப்போல வடிவங்கொண்டுவந்து இத்திறத்துடைய கருத்தின்வழியே யிருக்கின்ற நாரதமுனிவர் நகைசெய்து, கண்கள் கொவ்வைக்கனியையொப்பச் சிவந்து, மனதிற் கபடத்தையேவைத்து, உன்னை மிகுந்தகோபத்தோடும் நெறித்துப்பார்த்து, சிறிது மிரக்கமில்லாத அரசனே! வருணாச்சிரமத்தினைப்பார்க்கினும் முத்தியைத்தரத்தக்கது வேறொன்றுமில்லை. அத்தன்மைத்தான வருணாச்சிரமத்தை உறுதியாகப்பிடித்தோர்களுக்கு மற்றொன்றினும் ஆசையிருத்தலாகாது. ஆசையுள்ளவர்களாயின் அவர்கள் அவ்வாச்சிரமத்தை உறுதியாகப் பிடியாரெனச் சொல்லவேண்டும். அப்படியிருக்க, முதல்வருணமான பிரமசாரியத்திருக்கின்ற நமக்கு இரண்டாம்வருணமான கிரகஸ்தாசிரமத்தினைக் கொடாமற்போயினை. நல்ல வருணாச்சிரம நிலைகளில்லாமற் செய்கின்ற தொழில்களனைத்துந் துன்பத்தை விளைக்கத்தக்க இராட்சசத் தொழிலுக்குச் சமானமாகும். அதுபோல நீ மேலான யாகத்தினைச்செய்தும் இராட்சதத்தொழிலை யுடையவனா யிருக்கின்றனை. அதனால், மேல்வரும்பிறவியில் நீ இராட்சசனாகப் பிறக்கக்கடவையென்று சபித்து, மீட்டும் உன்னை உருத்துப்பார்த்து, சிறிதேனுமிரக்கமில்லாமல் யாம் யாசித்ததைத் தராதபிழையினால் நமக்கு அவமானம் உண்டாக்கினையல்லவாவென்று கோபித்து, யாகசாலையிலிருந்த ஓமகுண்ட முதலானவைகளையும் பதார்த்தங்களையு மழித்துச் சின்னபின்னஞ் செய்துப்போயினர். பின்னர் நீநடந்தசெயல்களையெல்லாம் யோசித்து நாரதமுனிவரே தேவேந்

ரனுடைய புணர்ப்பினால் இங்ஙனம்வந்து இவ்வாறு நடாத்திச்சென்றனை ரென்றுதேறி யாகசாலையினின்றும் அரண்மனையிற்சென்று முன்போலவேசிவ பூசை முதலானவைகளைச் செய்துகொண்டு அச்சனனத்தில் காலங்கழித்து, இச்சனனத்தில் நாரதர்கூறிய சாபத்தின்படி தீமைசெய்கின்ற இராட்சச குலத்திற்பிறந்தனை. அவ்வாறு பிறந்தும் முன்செய்திருக்கின்ற நல்வினைகளினாலே சகலநற்குணங்களையும்வாய்ந்து, யோக்கியாயோக்கியங்களையறிந்து, சற்கருமங்களையே நடாத்திவருகின்றனை யென்று சொல்லிவிட் பிருகுமுனிவர் தமதாச்சிரமத்திற் கெழுந்தருளினர். இவையனைத்தையுந் தூமராசன் கேட்டு, தனதுமனத்துள் வைத்துக்கொண்டு, முன்போலவே சகலகருமங்களையும் வழுவின்றி நடாத்திக்கொண்டு வந்தனன்.

மாதவமிக்க சவுனகாதி முனிவர்களே! இவ்வாறு தூமாசுரன் வழுவின்றி வாழ்கின்ற காலத்தில், சகலபுவன கர்த்தாவாகி அடியார்களுடைய துன்பங்களை யொழிக்கவல்ல விநாயகப்பெருமான் தூமகேது திருவவதாரங் கொண்டருளிய திருவிளையாடலைச் சொல்லுவோங் கேட்பீர்களாக. முற்கூறிய தூமாசுரன், அரசியற்றிவருகின்ற மகிபாதினியென்னு நகரத்தில், அரசகுலத்திற் பிறந்தவனும் மேலான செல்வத்தையும் கீர்த்தியையும் பெற்றவனும், வேதாகம நெறிகளிற் றவறுதவனும், பராக்கிரமத்திற் சிறந்தவனும், மாதவராசனென்னும் பெயரினையுடையவனும், ஒருவன் வசித்திருந்தனன். அவனுக்குக் கற்பிற் சிறந்த சுமுதையென்னும் பெயரினையுடைய வோர்மனைவியிருந்தனள் இவ்விருவரும் அன்றிலைப்போல இணைபிரியாது வாழ்ந்துகொண்டு தருமமுதலானவைகளைத் தாழ்வில்லாமற்செய்து தேவர்களைப்போல சகல போகங்களையு மனுபவித்து இல்லறநெறியை இனிதுநடாத்திவருகின்ற காலத்தில் இவர்கட்கு நெடுநாள் ஓர் புத்திரோற்பத்தியு மில்லாமையினாலே மனம்வருந்தி, அந்தணர் பெரியோர் முனிவர்கள் வறியோர் முதலியபேர்கட்கு அநேக திரவியங்களையும் ஆடையாபரணாதிகளையுங் கொடுத்து, அளவற்ற நாள் தவங்களைச் செய்துவந்தனர். அதனாலும் புத்திர வின்மையினால், ஓர்நாள் மாதவராசன் தனது மனைவியைப் பார்த்துக் கோபித்து இதனைப் பேசுவதாயினன். பெண்ணே! இளமை வனப்பு-அணிகலன்-சிருங்காரந்-திரவியம் முதலானவைகள் குறைவற விருந்தும் நம்மை நற்கதியிற் சேர்ப்பிக்கவல்ல ஓர் புதல்வ னில்லாவிடின் அவைகள் என்னபிரயோசனத்திற்காம்? நாள்தோறும் உலகமெல்லாம் உன்னை மலடியென்றுசொல்லவும் நாணமில்லையா? இப்பிரபஞ்சத்தில் நீயுமோர் பெண்பிள்ளையாக என் பிறந்தனையோ? சீ சீ உனது முகத்தைக் காணுந்தோறும் எனது மனமானது அழலாய்க் கொதிக்கின்றதே! இவ்வாறிருப்பதைவிடக் காட்டிலேனுஞ் செல்லலாகாதா? இவ்வித பழிப்பினுக் கிலக்காகிய சரீரத்தினை இக்காட்டினுள் ஏன்வீணிற் சுமந்துகொண்டிருக்கின்றனை? இனி என்கண்முன்னர் வாராதொழிகவென்றுசொல்லிப் பின்னுஞ்சொல்லுவான்: ஐயோ! இவ்வுலகத்திலே யாவருந்தெய்வம் ஒன்றுண்டென்று சொல்லுவார்களே, அத்தெய்வம் என்னி

த்திற்பொய்த்ததோ? பூருவம் என்னபாவஞ் செய்திருக்கின்றேனோ? இப்போது என்னதவங்களைச்செய்தும் என்னதருமங்களை நடாத்தியும் ஓர்புத்திரப்பேறில்லாமற் போனேனேயென்று தனக்குத்தானேசொல்லி வெறுத்துத் துக்கித்தனன்.

இவைகளையெல்லாம் அவன்மனைவியாகிய சுமுதை கேட்டுத்துஞ்சோபித்து பூமியில் மூர்ச்சையாகிவீழ்ந்து, வெகுநேரம் வரையிற் றெளியாமலிருந்து, பின்னர் சிறிதுதெளிந்தெழுந்து, தன்னையீன்ற குரவர்களையுந் தெய்வங்களையும் நொந்து, அதிக துயரத்தையடைந்து, இனிதவஞ்செய்வதே கருமமென்று துணிந்து வனத்திற்சென்றனள். அவ்வனத்தின் அளவற்ற சிங்கங்கள்-புலிகள்-கரடிகள் முதலான துட்டமிருகங்கள் எங்கணுஞ் சஞ்சரித்துக்கொண்டிருக்கவு மஞ்சாது மகாவிஷ்ணுவை மனதில்நினைத்து, ஆகாரம் நித்திரைமுதலானவைகளை நீத்து, வேறொரு சிந்தையுங்கொள்ளாமல் சிலையைப்போல அசைவற்றிருந்து, சரீரமெங்கும் புற்றுகள்வளர்ந்து மூடிக்கொள்ளும்படியாகப் பன்னிரண்டுவருடஞ் சலியாமல் மிக்கவைராக்கியத்தோடு தவஞ்செய்துகொண்டிருந்தனள். அந்தவத்திற்கு எல்லாமூர்த்திகளுந் தாமாகவிருக்கின்ற விநாயகமூர்த்திகிருபைகூர்ந்து அவள்தியானித்தவாறே தமது கரங்களில் சங்கு-சக்கரங்-கோதண்ட முதலானவைகளையேந்தி மகாவிஷ்ணுவைப் போலத் திருவுருக்கொண்டு அவளெதிரிற் பிரத்தியட்சமாயினர். அவரைக்கற்பிற் சிறந்த மேலான தெய்வமே நமக்கு வழிகாட்டுந்துணையென்று தனதுள்ளத்தில் உறு சுமுதைகண்டு நாராயணமூர்த்தி வந்துவிட்டனரென்று ஞெரேலென்றெழுந்து கண்கள் ஆனந்த பாஷ்பஞ்சொரிய, உடலெங்கும் உரோமாஞ்சிதம் பூப்ப, இருகரங்களையுஞ் சிரமேற்கூப்பி, சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து, தனது மனத்திலுள்ள துக்கங்களையெல்லாம் விண்ணப்பஞ் செய்வதாயினள். அடியேனை யாட்கொள்ளுமாறு இருடைசெய் தெழுந்தருளிய கர்த்தனே! சமுசாரமென்னும் பெரிய சமுத்திரத்திலிருக்கின்ற அடியேங்களைக் கதியென்னுங்கரையிற் சேர்ப்பிக்கவல்ல ஓர் புத்திரனில்லாமையால், அடியேனைக் காதலர் பலவாறுசிற அதனால் மிகுந்த மனவருத்தத்தோடு இக்காட்டில் வந்து தேவரீரைத் தியானஞ் செய்துகொண்டு தவத்திலிருக்கின்றேன். இங்கு அளவற்ற மிருகங்கள் சஞ்சரித்துக் கொண்டிருந்தும் இந்நாள் வரையில் அவைகள் என்னைக் கொன்று தின்னாமல் விட்டுவிட்டதை யோசிக்குமிடத்து அடியேனைப் பாவியென்று நினைத்தனபோலும், இருமைக்கடலாக விருக்கின்ற தேவரீர், மனம் உருகி வாடுகின்ற அடியேனை முற்றிலுங் காத்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தனள். அப்போது அரவணைச் செல்வராகவந்த விநாயகமூர்த்தி அச்சுமுதையைப் பார்த்து ஓ மடவாய்! உனக்கு வேண்டிய வரங்களைக்கேள் தருகின்றோமென்று திருவாய் மலர்ந்தனர். அதற்கவள் அவரைப் பணிந்தெழுந்து சுவாமி! தேவரீருக்குச் சமானமான பராக்கிரமத்தினை யுடைய ஓர்புதல்வனை அடியேற்குத் தரல்வேண்டும். இதுவே யான்கேட்டுக்கொள்ளக் கருதிய வர

மாகும். அவ்வரம் அடியேற்குக் கிடைத்தால்மாத்திரம் என்னைக் கோபத்தோ டும் விலக்கிய காதலர்முகத்தின் முன்னஞ்சென்று இனி வாழ்ந்திருப்பேன்; கிடையாவிடில் இங்ஙனே தேவரீர்சந்நிதியில் வுயிரை மாய்த்துக் கொள்ளுவே னென்று விண்ணப்பஞ் செய்துகொண்டனள். இவ்வாறு சுமுதையானவள் மிக்க உறுதியோடுங்கூறிய வசனங்களைச் சுவாமிகேட்டு சந்தோஷங்கொண்டு, அளவற்ற பத்தியை யுடையவளே! உனது கருத்தின்படி நம்மையே நீ புத்திர னாகப் பெறுவையாதலால் இனியொன்றற்கும் அஞ்சலையென்று திருவாய்மலர்ந் து தமதுகரங்களை அவள் சென்னியின்மீதுவைத்து அநுக்கிரகஞ்செய்து காத் தருளினர்.

இப்பால் கிடைத்தற்கரிய வரத்தினைப்பெற்று ஆனந்தமுற்றிருக்கின்ற சுமுதையானவள் அவ்வனத்தை விட்டுத் தனது நகரத்திற்குப் போகும்படி யாகத் திரும்பினள். அப்போது வழிதெரியாமல் விம்மித் துயரமடைந்து (சம்சாரமென்னுங் காட்டில் வாதனையென்னு மிருகங்கள்தாக்கச் சுற்றமென் னுங்கொடிகள் சூழ்புறத்து பிணிக்குமாறு அறிவென்னுங்கண்ணைச் சுவலென்று கருதித்தாவுகின்ற உள்ளமென்னும் ஓர்மானுக்கு அட்டாங்கயோகமே அத னது தாபாக்கினியைத் தணிக்கவல்ல மேகமாகும்; அத்தன்மைத்தான மேகந் தாம்பொழிந்த திவ்விய நீர்த்துமியே) பரவத்துவை மனமுதலாகிய முக்கர ணங்களாலும் அன்னை செல்விக்கனிபோல எளிநிலையடைந்தும், அதனை அக்கருத் தவிருந்தாலு கைவிட்ட பவித்திரியக்காரியாகிய வெனக்கு வழிகாட்டத் தக்கவர் கள் யாவிருக்கின்றார்கள், ஆயினும் நம்பினோரைக் காத்து இரட்சிக்கவல்ல மேலானதெய்வமே நமக்குவழிகாட்டுந் தன்மையென்று தனதுள்ளத்தில் உறுதி யாக நினைந்து அவ்வனத்தைவிட்டு நடந்துகொண்டே யிருந்தனள். அவ்வாறு நடந்துகொண் டிருக்கையில் அவளெண்ணப்படி அந்த மேலான தெய்வமே வழிகாட்டச் சென்றவர்போல அவ்வனத்தையெல்லாங் கடந்துசென்று தனது நகரமானது எதிரிற் றோற்றங்கண்டு அதனைச் சமீபித்தனள். அப்போது அந் நகரத்தார் கண்களுக்குச் சுமுதையினுடைய தேஜசானது அவள்செய்த தவ மகிமையினாலே ஒருசோதி வருகின்றதாய்த்தோற்றி, இதென்ன அற்புதமென் று திகைத்தவராய் பன்னிரண்டு சூரியர்களும் ஒன்றாகக்கூடி வருகின்றார் களோ? அல்லது சந்திரனுடைய காந்தியோ? அதுவுமல்லவெனில், பிரளயாக் கினியின் தேஜசோ? ஒன்றுந் தெரியவில்லையே, இச்சோதி யெவ்வளவு மழுங் காமல் வருகின்றதே யென்றுமயங்கிப், பின்னர் அவள் சமீபித்து வருதலும் அவர்கள் சந்தேகங்களினின்று நீங்கி, முன்னர் வனத்திற்சென்ற சுமுதையே நல்ல வரங்களைப்பெற்று வருகின்றனளென்று தெளிந்து யாவரும் எதிர்கொ ண்டுசென்று சுமுதையைப் பணிந்தெழுந்து, தாயே! தேவரீர் இந்நகரத்தை நோக்கி மீண்டுவந்தது அடியேங்கள்செய்த பூசாபலத்தினாலன்றோ? இனித்தேவ ரீர் எக்காலத்துஞ் சுகமுற்று வாழ்கவென்று அநேக வுபசாரவார்த்தைகளைக் கூறி, அவள் காதலனுடைய க்ஷேமத்தினை யறிவித்து ஆனந்தமுற் றிருந்தனர்.

பின்னர் சுமுதையானவள், அவர்களெல்லாந் தன்னைப் புடைசூழ்ந்து வரும்படியாக அவ்வவர்கட்குத் தக்கபடி மறுமொழிகள்கூறித் தனது நகரத் திற்குச் சமீபமாகவந்தனள். அவள் வரவை மாதவராசனறிந்து அளவற்றநாள் திசைதப்பிக் காணாமலிருந்த கப்பலை மீட்டும் கண்டவனைப்போல ஆனந்தமுற் று தேவர்கட்கும் முனிவர்கட்கும்பூசனைபுரிந்து ஆடையாபரண முதலானவை களைத் தானஞ்செய்து, தனது நகரத்தின்கணுள்ள நாகரிகர்களைக் கூவிச், சது ரங்க சேனைகளோடுந் தனது மனைவியை எதிர்கொண் டழைத்து வருமாறு உத்தரவு செய்தனன். அவ்வுத்தரவை அவர்கள் சிரமேற்கொண்டு அளவற்ற சந்தோஷத்துடனே அவளை எதிர்கொண்டுசென்று நவரத்னமயமாயிருக்கின்ற ஆடையாபரணாதிகளைக் கொடுத்து, அணிந்துகொள்ளச் செய்து, ஓர் சிவிகை யின்மீதேற்றிச் சகல வைபவங்களோடும், அந்நகரத்துக் கோபுரவாயலில் நுழைந்து, இராசவீதிகளை யெல்லாங் கடந்து, அரசனது அரண்மனையிற் கொண்டுபோய் விடுத்து, விடைபெற்று, யாவருந் தந்தமிருக்கையை நோக் கிச் சென்றார்கள். பின்னர் சுமுதையானவள் தனது காதலனைச் சாஷ்டாங்க மாகப் பணிந்தெழுந்து, அவனெதிரில் ஆனந்தவெள்ளம் பெருகநின்று, முன் னர் அவன் தன்னிடத்திற் காட்டிய கோபத்தினால் நகரைவிட்டுச் சென்றது முதல் நடந்தகாரியங்களை யெல்லாம் அவனுக்கு விவரமாகக் கூறினள். அவை யனைத்தையும் மாதவராசன் ஆனந்தத்தோடுங்கேட்டு தனது பத்தினியின் மன மகிழும்படியாகப் பலவித வுபசார வார்த்தைகளைக்கூறி அவளோடு சல்லாப மாய்க்கலந்து சகல போகபாக்கியங்களையுங் குறைவின்றி யநுபவித்து வந் தனன்.

அவ்வாறிருக்குங் காலத்தில் விநாயக மூர்த்தியினுடைய திருவருளால் சுமுதை கருப்பமுற்றனள். அதுமுதல் அவளது திருவயிற் றெழிற்குப் பகை யாகி, நம்மைப் போலத் திருமாலைத் தாங்கிற் றில்லையென்று செம்மாப்புற் றிருந்த மெல்லிய இலையினையுடைய ஆலமரமானது தனது வீரமனைத்து மொழிந்து பழமரமென்னும் பெயரை வகித்தது. புத்திரனுருவங் காண வேண்டி வெயிலோன் சூரியனைநோக்கித் தவஞ்செய்திருந்த அவளது கஞ்சனா ளனைய, இனிமேலும் நமதுகாதலனுடைய புத்திரனை வாட்டவொத்ததன்றென்று கருதினாற்போலக்குழிந்து காட்டி உள்ளிட்டன. விநாயகமூர்த்தி பிரத்தியட்ச மான காலத்தில் அவரைப்பலமுறை துதித்துப் புகழடைந்த அவளது பவ ளத்துண்டத்தைப்பழித்த செவ்வாயைநன்னிய அதரமும் அப்புகழடைந்த தென்று சொல்லும்படி வெளுத்தது. சந்தனம், புட்பம், ஆடை, ஆபரணம் முதலியவைகளைத் தமக்குத்தமது காயமிலாதிருப்பதைக்கருதிப் பயந்து சந்தோஷித்தனபோலும், அவள் கருப்பமுற்றாளென்று யாவருக்குஞ்சாட்சி காட்டுமாறுபோலவும், அவளது முலைக்கண்களானது நீலமணிபோலக் கறுத் தன. அப்பசுங்கனிவித்தது ஆண்டவனுடைய திருவடிகளை நாடினோர்கள் மேலானகதியை யடைவரென்று சான்றோர்கள் சொல்லும் வாக்கியத்திற்

றிய சூரியனுனவன் தன்னைப்போலப் பிரகாசமாய் எங்கும் வீங்கிய கீர்த்தியினை வாய்ந்த தூமராசனுனவன் இன்று அறத்தினின்றும் பிறழ்ந்தனனாதலால், அவனை இனி முற்றக் கெடுப்போமென்று நினைத்து அவனுக் குதவிசெய்வான் போல மேற்றிசைக் கடலில் மறைந்தனன். உடனே பாவங்களென்பன வெல்லாம் அவன் மனத்தையும் நகரத்தையுஞ் சூழ்ந்துகொண்டதுபோல எங்கும் இருள்மூடிக்கொண்டது. பின்னர் குறிஞ்சியுரிப் பொருள்களைக் களவியலிற் கைக்கொள்ளும்படியான கூதிரென்னும் பெரும்பொழுதில் காதலால் காதலிகண்மாட்டு விரைந்துசெல்லுகின்ற சிறுபொழுதாகிய யாமம் வர, அப்போது தூமாசுரனுனவன் கொலுச்சபைக்குவந்து தனது சேனாபதியாகிய வித்துருமனைக் கூவி, ஓ வீராதிவீரனே! உன்னின் மிகுந்த பராக்கிரமசாலிகளும் புத்திமான்களும், நம்மிடத்தில் மிகுந்த பத்தியையுடையவர்களும் எவ்வுலகத்திலுமில்லையாதலால், நீ இவ் விரவிற்றானே சென்று சமுதை, அவள் கணவன், அவள் வயிற்றிலிருக்கின்ற கரு இம் மூன்றையும் ஒருமிக்கக் கொன்று இக்கொடிய காரியத்தை உலகத்தவ ரறியாதவண்ணம் இப்போதே மீட்டுந் திரும்பிவரக் கடவையென்று ஆக்கியாபித்தனன். தலைவராயினோர் தகாதகாரியங்களிலெவற்றிலும் வினைமாக்கள் அவைகட்கு உடன்படவேண்டு மாதலால், அவனாணையை வித்துருமன் தடுப்பதற் கஞ்சி தன்னரசனுடைய மனத்தைப்போல இருண்ட அந் நடு இரவில் பராக்கிரமத்திற் சிறந்த ஐந்நூறு வீரர்களை வரவழைத்து, அவர்களைத் தான் செல்லுமிடத்தில் சிற்சிலராக வரும்படி கட்டளையிட்டு, அந் நகரத்திலுள்ளோர் நித்திரைசெய்யுஞ் சமயத்தில் வெளிக்கொண்டு சமுதையினுடைய அரண்மனையிற் சென்று, அவளும் அவள் கணவனாகிய மாதவராசனும் நித்திரைசெய்திருக்கப் பார்த்து, இதுவே நல்லதருணமென்று நிச்சயித்து, யாவருக்குந் தெரியாதபடி நான்கு வீரரை விடுத்து அரவந் தெரியவொட்டாமல் கதவைப் பெயர்த்து, மெல்லமெல்ல அந்தப்புரத்தில் நுழைந்து அயர்ந்து நித்திரைசெய்திருக்கின்ற சமுதையையும், அவள் கணவனையும், மஞ்சத்தோடே உபாயமா யெடுத்து அந்நகரை யடுத்த ஓர்காட்டினுள் அசையாமற் கொண்டுபோய் ஓரிடத்தில் வைத்து இதனை ஆலோசிப்பதாயினன். ஒழியாத நித்திரையில் மெய்மறந்திருக்கின்றவர்களைக் கொல்லுவது மகாகொடுமை. அதனிலும் பெண்டிரைக் கொல்லுவது பெருங்கொடுமை; அப் பெண்டிரைக் கருப்பத்துடனிருக்கும்போது கொல்லுவது அதனிலும் பெருங்கொடுமை; அந்தோ ஏன் இவ்விதக்கொடுமைகளில் யாம் வீணே அகப்பட்டுக்கொண்டனம். இவற்றினின்று ஒருவாறு தப்பித்துக்கொள்ளுவோமென் றெண்ணமுறுவோமாயின் அவற்றைவிட அரசனுடைய ஆக்கினையை மிகவும் பெரிதாக எண்ணவேண்டியிருக்கின்றது. நாமும் அவ னாக்கினைக் கஞ்சிவந்து சகல காரியங்களுஞ் செய்துவிட்டோம். இனி நீடித்து யோசனைசெய் திருப்பதில் என்னபயன். என்று தனக்குத்தானே மிக்க துயரத்தோடே எண்ணமிட்டுக்கொண் டிருந்தனன். அச்சமயத்தில் சமுதையானவள், நித்திரைநீங்கிக் கண்விழித்து, நாற்றிசைகளி

லுங் காடாகவிருப்பக்கண்டு, ஈதென்ன காரணமென்று பயந்து நடுநடுங்கி அரண்மனையில் நித்திரைசெய்துகொண்டிருந்த நாம் இப்போது காட்டி லிருந்துக் கண்விழித்தோமே இதென்ன சொப்பனமோ? அல்லது உண்மைதானோ? இவ்விரண்டுமன்றி ஓர் மாயையோ? வேறு யாதோ? வொன்றுந் தெரியவில்லையே! சத்தியசந்தனாய், சுத்த வீரராய், பஞ்சேந்திரியங்களையும் வென்றவராய், ஒருவர் பொருண்மீதும் இச்சைகொள்ளாதவராய், தருமாதிகளிற் றவறாதிருக்கின்ற நமது நாயகரையும், அளவற்றநாள் வனத்திலிருந்து அரியதவங்களைச்செய்து நாராயணமூர்த்தியி னிடத்தில் வரம்பெற்று அவ்வரத்தினால் நிறைந்த கருப்பத்தோடு மிருக்கின்ற நம்மையுங் கொல்லும்படியாக யாரோ துட்டர்கள் நம தரண்மனையிற் புகுந்து அயர்ந்து நித்திரைசெய்யுஞ்சமயத்தில் நம்மை இம்மஞ்சத்தோடு மெடுத்துக்கொண்டுவந்து இக்காட்டில் வைத்தார்களே, ஐயையோ! நமது பொல்லாத வினை இவ்வாறு செய்வித்தால் இதற்கு என்னசெய்வோம்! தெய்வமே! என்று பலவாறு எண்ணமிட்டுக்கொண்டு அடக்கற்கரிய துயரத்துடனே தனது நாயகனைத் தட்டி சுவாமீ! விரைவி லெழுந்தருள்க; எழுந்தருள்க. நம்மை யாரோ இக் காட்டிற் கொண்டுவந்து வைத்தார்களே! இதைத் தேவரீர் அறியாமல் நித்திரைசெய்கின்றீரே என்று சொல்லி எழுப்பினள். அதைக் கேட்டலும் மாதவராசன் கண்விழித்து திடீரென்று எழுந்து, மனதில் அச்சங்கொண்டு நாற்றிசைகளையும் பார்த்தான். அப்போது வித்துருமன் அவனெதிரில் வந்து அரசனே யான் தூமாசுரனுடைய சேனாபதி அவன் ஓர்நாள் திக்குவிஜயஞ்செய்யச் செல்லுகின்றபோது ஆகாயவாக்கொன் றுண்டாகி, "ஓ தூமாசுரனே! உன்னைக் கொல்லும்படியாக மாதவராசனிடத்தில் மகா பராக்கிரமசாலியாகிய ஓர் குமாரன் பிறக்கப்போகின்றான்." என்று சொல்லியது. அதனை அவ்வரசன் கேட்டு உடனே உங்களைக் கொல்லும்படியாகத் தீர்மானித்து, அதை நிறைவேற்றும்பொருட்டு என்னையேவினன். அதனிமித்தம் யான் உங்களை இக் காட்டிற் கொண்டுவந்து வைத்தேன். பின்னர் பழியையும் பாவத்தையுஞ் சிறிதுநேர மாலோசித்து ஆலசியமா யிருந்தேனென்று சொல்லினன். அவை யனைத்தையுஞ் சமுதை கேட்டுத், திடுக்கிட்டு மதிமயங்கி விழிகளில் நீரைப்பெருகி மூர்ச்சித்து வீழ்ந்து, மீட்டுந் தெளிந்தெழுந்து, அய்யனே! திருமார்பனே! நாராயணமூர்த்தியே! சகல ஜீவராசிகளையுங் காத்தருளுகின்றாயே! தேவரீருடைய திவ்விய சரணாவிந்தங்களை யடுத்த எளியேங்கட் கிவ்வித ஆபத்து வரலாகுமோ? என்றிவ்வாறு பலமுறை துக்கித்துத் தங்களைக் கொல்லுமாறு கொடியபாதகனாகிய தூமாசுரனா லனுப்பப்பட்ட வித்துருமனைப் பார்த்து, அப்பா உத்தமனே! முன்னொரு காலத்தில் ததீசியென்னும் ஓர் மகாமுனிவர் தேவர்கள் நிமித்தந் தமது உயிரைவிடுக்குமாறிசைந்து தெய்வத் தன்மையை யடைந்திருக்கின்றனர். அதுபோல நல்லோர்கள் பிறருக்கு உபகாரஞ்செய்வதையே பெரிதாக நினைப்பார்கள். நீயும் நல்லவனாகையால், எங்களை நித்திரையிற் கொல்லலாகாதென்று மனமிரங்கி இதுபரியந்தம் ஆலசியந்

செய்திருந்தனை. இனிமேலும் எங்களை வதைசெய்யாமல் முழுதுங் காப்பாற்றி விடுவையாயின், உனக்கு நிகரான நீதிபரர் எவ்வுலகங்களினு மிரார்கள். ஐயோ! ஒருஅபராதமுஞ்செய்யாத எங்களைக் கொல்லும்படியாக மிக்க கீர்த்தியினைவாய்ந்த அரசன் உனக்கு ஆக்கியாபித்தது என்ன அநியாயம்! புத்திரப்பேற்றினை வேண்டிய எனது காதலர் மனங்குளிரும்படியாக அளவற்றநாள் அரிய தவங்களைச்செய்து வயிற்றிற் கருவடைந்திருக்கின்றேன், ஆதலால் எங்களை உயிரோடு விடுவித்து உங்களரசன் சந்தேகமுறாது சந்தோஷமாகும்படி ஏதேனுமோர் யுக்தியினை யோசித்து அவனுக்குத் திருப்திசெய்திடுக. அல்லாவிடில் ஈகையிலாதார் மாட்டுப்புகழ்போல, உன்னை இந்நிமிடத்தில் நாசஞ்செய்து விடுவேனென்று சொல்லினள்.

அவளை வித்துருமன் பார்த்து அம்மா! உன்னுடைய மேலான கற்பினால் என்னைக் கொன்றாலும் எனது குலத்திற்கு ஓர் கெடுதியுமுண்டாகாது. என்னை ஏவிய அரசனுடைய ஆணையைத்தள்ளிச் செல்லுவேனாயின் உடனேயான் என்குலமுதலியவைகளோடு நாசமாய்ப் போகும்படி நேரிடும். ஆதலால், அவனுடைய கட்டளையை யொழித்துச்செல்ல என்னாலாகாதென்று சொல்லினன். அத்தீங்கான வார்த்தையைச் சுமுதைகேட்டு மனங்கலங்கித் தன்னிடத்தில் கிருபை வைத்திருக்கின்ற நாராயண மூர்த்தியைத் தியானித்தனள். உடனே அவருடைய கிருபையினால் அவ்விடத்திற்றானே அளவற்றவீரர்கள் ஆயுதபாணியாராயுண்டாகி, தூமராசனுடைய சேனைகளோடு அநேக யுத்தங்களைச்செய்து வித்துருமனொழிய ஏனைய ஐந்நூறுவீரர்களையும் நாசஞ் செய்தார்கள். அதை அவ்வித்துருமன்கண்டு மோசம் வந்துவிட்டதென்று பயந்து, வாயுவேகத்தினும் விரைவாக வெங்கொடுத்தோடித் தூமராசனைப் பணிந்தெழுந்து கைகூப்பி நின்றனன். அவனை அவ்வரசன் பார்த்து ஓ வீரனே! நமது உத்தரவின்படி நடாத்திவந்தனையோ? அல்லவெனில் சும்மா வந்தனையோ வென்று கேட்டனன். எவ்வகைப்பட்ட சத்துருக்களுக்கும் பின்னிடையாமல் தனது மார்புகொடுத்து மல்லாடி வெற்றிகொள்ளவல்ல வீராதிவீரனாகிய வித்துருமன், அதற்கு முகம்வாடி திக்காக்கிரந்தனாய், ஆண்மையனைத்துங் குன்றித் தூமராசனைப் பார்த்து ஆண்டவனே! தேவரீரிட்டருளிய கட்டளையின்படி அப்போதே தேவர்களு மறியாதவண்ணஞ் சென்று மிக்க வுபாயத்தோடும் உள்ளேபுகுந்து மாதவராசனையும், அவன் பத்தினியையுங் கட்டிலோடே எடுத்துக்கொண்டுபோய் அக்காட்டிலே வைத்தோம். உடனே இராசபத்தினி கண்விழித்து, நாராயண மூர்த்தியைத் தோத்திரஞ் செய்தாள். அம்மாத்திரத்தில் அநேகவீரர்கள் ஆயுதபாணியாராயுண்டாகி நமதுசேனைக ளனைத்தையும் நாசமாக்கினார்கள். அடியேனும் யுத்தஞ்செய்து அவ்விடத்திற்றானே யிறப்பேன். ஆனால் நடந்த செய்திகளைத் தெரிவிப்பதற்கு ஒருவரு மில்லாமையினாலே எனது மானத்தை விடுத்து இங்கு ஓடிவந்தேன். அவர்கட்குத் தெய்வபலன் அதிகமாக விருக்கின்றதென்று சொல்லினன். அதைக்கேட்டவுடனே தூமராசனுக்குக் கோபமுண்டாகி,

குற்றமற்ற அவ்வீரனைத் தனதுவாளினால் வெட்டித்தள்ளி, யாம் உத்தேசித்தனுப்பிய காரியம் நிறைவேற வில்லையென்று மனவாட்டத்துட னிருந்தனன். அப்போது புத்திமானென்னு மமைச்சன் அவனருகில் வந்து கர்த்தனே! இராசீகஞ் செய்கின்றபோர்கள் துயரத்திற் றிடங்கொடுக்கலாகுமோ? துயரமேலிடுந்தோறும் ஆண்மை குன்றிப்போகும். ஆண்மைகுன்றவே சத்துருக்கள் தழைத்து மேலிடுவார்கள். அப்பால் அடலனென்று உலகத்தாரெல்லாஞ் சொல்லுவார்கள். இப் பூவுலகில் தேவரீருடைய செங்கோலினுக் குட்படாத தேயங்கள் எங்குமில்லை; ஆதலால் காட்டில் விடப்பட்டவர்கள் தேவரீர் கையிலகப்பட்டவர்களேயன்றி வேறில்லை. அப்படியிருக்கத் தேவரீர் ஏன் இவ்விதத் துயரத்துளமுந்தி மயங்கவேண்டும். இனி நடத்தவேண்டிய மார்க்கத்தினைச் சிறிது கேட்டருள்க. மாதவராசனையுஞ், சுமுதையையுங் கொல்லக்கருதுவது நன்றல்ல. அஃது பழியையும் பாவத்தையும் உண்டாக்குமாதலாலும், எண்ணியவெண்ணப்படி நிறைவேறாமற் போனபடியினாலும், அவர்களைக் கொல்லுவதைவிட்டுப் பிறக்கப்போகின்ற பிள்ளையைமாத்திரங் கொல்ல வேண்டும். அதற்கு மந்திரம், தந்திரம், யுத்தம், மாயை முதலானவைகளில் சிறந்த வீரர்கள் நால்வரை யாராய்ந்து இப்போதே அவர்களை அக்காட்டிற் செலுத்தி அச்சுமுதையானவள் பிரசவிக்குங்காலத்தை எதிர்பார்த்திருந்து பிரசவித்தவுடன் அக்குழந்தையைக் கொல்லச்சொல்லி உத்தரவுசெய் தனுப்பவேண்டும். அவ்வாறே அவர்கள்செய்து செயங்கொண்டு வருவார்களாயின், பின்னர் நமக்கு எங்குஞ் சத்துருக்க ளில்லை யென்றுசொல்லித் தூமராசனுடைய மனோவியாதியை ஒருவாறாய் நீக்கினன். இவ்வாறு புத்திமான்கூறிய அற்புதத்தினைத் தூமராசன்கேட்டு, அவனையும் மற்ற அமைச்சர்களையும் பார்த்து, எவ்விதத்திலேனும் நீங்களே அதற்குத் தக்கபடி செய்துநிறைவேற்றுங்களென்று உத்தரவு செய்தான். அவ்வாறே அவ்வமைச்சர்கள் நான்கு வீரர்களை நியமித்து அனுப்பினார்கள். அவ் வீரர்கள் நால்வரும் உடனே சுமுதையிருக்கின்ற காட்டினுட் சென்று யாவரும் அறியாதபடி ஓரிடத்தில் மறைவாகப் பதுங்கி அவள் பிரசவிக்குங் காலம் வருமளவுங் காத்து எதிர்பாத்திருந்தார்கள் இவர்கள் சரித்திரம் இவ்வாறாக;

முன்னர் சுமுதையினுடைய ஆபத்தை நீக்கும்படியாக வுண்டான வீரர்கள், பின்னர் தூமராசனுடைய சேனைகளைச் சின்னபின்னப்பட வாட்டிச் சரேலென்று மறைந்துபோனார்கள். அதற்குமேல் சுமுதையானவள், தானுந் தன் தலைவனும் தனியர்களாகி யிருத்தலால், இன்னுந் தூமராசன் படைகளை அனுப்புவானென்றெண்ணி, மிகுந்த மனக்கவலைகொண் டிருந்தனள். மாதவராசனானவன் இன்னும் இராக்காலம் நீங்காமையால் ஒருவேளை 'சிங்கம்-புலி-கரடி-யானை முதலிய மிருகங்கள் வருமென்றெண்ணி அவைகளைச் சங்கரிக்கும்பொருட்டு உறையிற் றங்கிய வாளாயுதத்தைக் கரத்திலேந்தி அவ்விரவு

முழுவதும் அதிக சாக்கிரதையோடி மிருந்தனன். அப்போது மூவுலகையு மீரடியா லளந்த மாதவ மூர்த்தியை மைந்தனுகப்பெற்ற மாதவராசனுஞ் சமுதையும் மயக்கந் தீர்ந்து உய்யும்படியாக எழுந்தவன்போலச் சூரியனானவன் கீழ்த்திசைக் கடலிற் குளித்தெழுந்து உதயகிரியினுச்சியிற் கிரணங்களை எண்டிசையினும் வீசி பிரகாசித்தனன். உடனே அவ்விருவருடைய இமைக்கண்களும் இரிந்தோடியனபோலக் கூதிரா லுண்டான குளிரும், இருளும் எங்குமில்லாதபடி மறைந்தது. பின்னர் சமுதையும் மாதவராசனுஞ் சிறிது மனக்கலக்கந்தீர்ந்தவர்களாய், அவ்விடத்தினின்றுநீங்கி அக்காட்டிற்றானே மற்றோரிடத்திற் சென்று கந்தமூலபலாதிகளைச் சேகரித்துண்டு கொண்டிருந்தனர். இவ்வாறே பிரதிதினம் வேறுவேறிடங்களில் முற்றுந்துறந்த முனிவர்களைப்போலச் சஞ்சரித்துக்கொண்டு எப்போது எமது ஐயனைப் பிரசவிக்கப்போகின்றோமென்று எண்ணமுற் றிருந்தார்கள். பின்னர், சமுதைக்குப் பிரசவகாலம்நெருங்க, முன்னர் அவளுக்கு வரங்கொடுத்தருளிய விநாயகமூர்த்தியானவர், அவளையும் அவள்தலைவனையும் காத்தருளும்பொருட்டுத் திருவுளங்கொண்டு, ஓர் குழந்தைவடிவமாகிச் சிவந்து பிரகாசிக்குந் திருவுருவமும் வெளுத்து அழகுற்றிருக்கின்ற திருமுகமும் சந்திரனைத்தரித்த திருமுடியும், குண்டலமணிந்திருக்கின்ற செவிகளும், மழுப்படை, தாமரைமலர், செபமாலை, மோதகம் என்னுமிவைகளை யேந்திய நான்குதிருக்கரங்களும், சோம சூரியாக்கினியென்று சொல்லும்படியான மூன்றுவிழிகளும், கண்டவர்கள் கடைத்தேறும்படியான ஏனைய அவயவங்களும் பிரகாசிக்கும்படியாக அவர்களெதிரிற் பிரத்தியட்சமாயினர். உடனே சமுதையும் மாதவராசனும் அக்குழந்தையினுடைய திருக்கோலத்தைக் கண்குளிரத்தரிசித்து அன்புபொங்கிய மனத்தினராகி ஆனந்தங்கொண்டு, மனக்கவலைகளினின்றுநீங்கி, மகிழ்ச்சிபெற்று, மறவர்களையன்றி யேனையருஞ் சஞ்சரிக்காத அக்காட்டினுள் சிறுகுழந்தையாகவந்த நீயாரென்று வினவினார்கள். அதற்குக் கணேசமூர்த்தி கிருபைகூர்ந்து பத்தியிற்சிறந்த அச்சமுதையைப்பார்த்து அன்னையே! வளப்பத்தைக்கொண்ட பாலசந்திரனைப்போலப் பத்தசனங்கட்குப் பிரகாசத்தினைப்பெருக்கிக் கவலையென்னுமிருளைக் கடிவதினால் திரிலோகங்களினும் பாலசந்திரனென்று சொல்லத்தக்க விநாயகமூர்த்தியே நாம். முன்னர் நீ புத்திரப்பேறுவேண்டி வனத்தில் அரியதவங்களைச் செய்தபோது நாம் நீ தியானித்திருந்த நாராயணனுகிவந்து உனது கவலையை யொழித்தனம்.

இப்போது தூமனுடைய பயத்தினால் இக்காட்டில் அலைந்துகொண்டிருக்கின்ற உங்கள் துயரத்தை நீக்குமாறு சிறுகுழந்தையாக உன்னிடத்திற்கு வந்தோம். எவ்வெவர்கள் எந்தெந்த தெய்வத்தை வழிபட்டார்களோ அவ்வவர்கட்கு அந்தந்தெய்வமாகி வரங்கொடுத்தருளுகின்ற தலைத்தெய்வம் யாதோ அதுவே நாம். உங்களுக்கும் அவ்வாறே வந்தனம். பாலனாயிதுவாயினும், உங்

களை நமக்குத் தாய்தந்தையாகக் கைக்கொண்டோம்; அஃதேனெனில்: முன்னர் நீ வனத்தில் தவஞ்செய்தபோது விஷ்ணுவினுடைய ரூபங்கொண்டுவந்த நம்மைப்பார்த்து ஏனையோரைப்போல வொரு புத்திரனை யளித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனை. அதற்கு அவ்வாறே வருவோமென்று வரந்தந்தோம். அவ்வரத்தைக் காத்தற்பொருட்டு யாங்களிருவரும் உங்கட்குப் புத்திரராகவேண்டிய முறைமையிருப்பதால் உனது கருப்பத்திற் கருவாய்த்தரிக்கும்படி விஷ்ணுவுக்கு உத்தரவுசெய்தோம். நாம் சுவேச்சையாக உங்கட்குப் புத்திரனுகி வந்தோம். இதனை உண்மையாக நம்பக்கடவை. இனி தூமனுயுத்தத்திற்கு வரவிருக்கின்றனன்; அவனை யாமேசங்கரித்து உனது உதரத்திலிருக்கின்ற கருவையும் உங்களையும் அபாயம் வரவொட்டாமற் காப்பாற்றுவோம். முன்னொருதினம் நடு இரவில் உங்களைக் கொல்லும்படியாக அரசன் மனையினின்று மெடுத்துவந்து இக்காட்டில்வைத்த வித்துருமன் முதலாகிய வீரர்களைக்கொல்லவும், கவலைக்கடலில் மூழ்கியிருந்தவுங்கட்கு யாதொருமோசமும் வாராதபடி காப்பாற்றவும், வந்தவர்கள் எத்தனையரோ அத்தனையரும் நமது கணங்களாகும். அக்கணங்கள் நமது திருவருளினாலே வீரராகவந்து சத்துருக்களை அதஞ்செய்தார்கள்; இதையுந் தெரிந்திருக்கக்கடவை. இனி உனது கருப்பத்திலிருக்கின்ற நாராயணன் வெளியேவளர்ந்து உனக்கும் உன்புருடனுக்குஞ் சந்தோஷம்வரச்செய்து தூமன் ஆள்கின்ற வுலகங்களையெல்லாந்தானாண்டு சகலதிசைகளினுந் தனது செங்கோலைச்செலுத்திவருவான். நீங்களும் அந்தியகாலத்தில் நமதுலகத்தை யடைவீர்கள்.

அன்றியும், நமது பாலசந்திரனென்னுந் திருநாமத்திற்கு உலகத்தார் பாலனும்பருவத்திற் சந்திரனைத்தரித்தவனென்றும், பாலப்பருவத்தினையுடைய சந்திரனைத் தரித்தவனென்றும், ஆன்மாக்களுடைய மலபந்தவிருளைப் பாலசந்திரனைப்போல விலக்கியாட்கொள்ளுஞ் சுபாவத்தை யுடையவனென்றும், உரைசெய்வார்கள். இத்தன்மை மிகுந்ததிருநாமத்தை எவ்வகைப்பட்ட இன்னல்கள்சேர்ந்தாலும் உச்சரிப்பையெனில், அவ்வின்னல்களனைத்தும் பறந்துபோகும்; இதனைச்சத்தியமாக நம்பக்கடவையென்று திருவாய் மலர்ந்தனர். இவையனைத்தையுஞ் சமுதைகேட்டுச் சந்தேகங்கொண்டனள். அப்போது ஒருவரு மறிவிக்காமல் சகலத்தையுந் தாமேயறிந்து கொள்ளத்தக்க பாலசந்திரமூர்த்தியானவர், அதனையறிந்து அக்குழந்தை ரூபத்துடனே வாயினைத்திறந்து தமது பெருந்தகைமையைக் காட்டினார். உடனே சமுதையானவள் திறந்த வாயினிடத்தில் முப்பத்துமுக்கோடிதேவர்கள்-நாற்பத்தெண்ணுயிர முனிவர்கள். வசுக்கள் - மருத்கள்-கருடர்-கின்னரர் கிம்புருடர்-காந்தருவர்-இயக்கர்-விஞ்சையர்-பூதர்-பைசாசர்-உரகர் முதலாகிய உயர்திணையும், கிரகங்கள்-மேலுலகங்கள்-மலைகள்-நதிகள்-காடுகள்-கடல்கள் - மிருகங்கள் - பறவைகள் முதலாகிய அஃறிணையுந் தோற்றக்கண்டு தனது மனத்திற்கொண்ட சந்தேகத்

தினைமாற்றி, சுவாமியைப் பலமுறை வாழ்த்தி, ஆனந்த சாகரத்தில் மூழ்கி, திரிமூர்த்திகளுக்கும் ஏனையதேவர்களுக்கும் முதன்மையாகவிருந்து அநுக்கிரகஞ்செய்யவல்ல மூர்த்தியிவரேயென்று துதிசெய்தனள். உடனே பாலசந்திரமூர்த்தியினுடையதிருவையினால் அச்சமுதையினுடைய தனங்களிற்பவிரதியைப் போலப் பால்சுரந்து பெருகியது. அப்போது சமுதையானவள் அப் பாலசந்திரமூர்த்தியையெடுத்துத் தனது மடியின்மீது வைத்துக்கொண்டு பெருகிவருகின்றபாலை எமதுகர்த்தனுக்கு அன்போடும் ஊட்டினள். இவையனைத்தையும் முன்னர் மாளிகையிலிருந்து மறைந்திருக்கின்ற நான்குவீரர்களுங் கண்டு விநாயக மூர்த்தியினுடைய வல்லபத்தை யறிந்து மனதி லச்சங்கொண்டு அவ்விடத்தினின்று ஓடித் தூமராசனைப் பணிந்தெழுந்து அவனெதிரிற் கைகூப்பிநின்று இதனைச் சொல்லுவாரானார்கள். ஓ இராசாதிராசனே! கேட்டருள்க; சமுதையினுடைய கருப்பத்திலிருக்கின்ற பிள்ளை இன்னும் பிறக்கவில்லை; ஆனால் அவனெதிரில் மனிதனுமில்லாத ஒருமகன் இப்போது பிறந்தான்; அழுதகுரலுக்கே அடியேங்களெல்லோம் நிலத்தில் மூர்ச்சையாகி விழுந்தோம்; சிலநேரத்தின் பின்னர் தெளிந்தெழுந்து அச்செய்தியை யறிவிக்குமாறு தேவரீருடைய திருவடிகளை யடைந்தனமென்று சொன்னார்கள்; முன்னமே துக்கசாகரத்துள் மூழ்கியிருந்த தூமராசன் அதைக் கேட்டவுடனே பின்னுந் துக்கமேலிட்டவனாய்த் தானும் மதிமயங்கி மூர்ச்சித்து வீழ்ந்தனன். அச்சம்பவத்தை அருகிலிருந்த அமைச்சர்கள் கண்டு சிலசைத்தியோபசாரங்களைச் செய்து தெளிவித்தார்கள்.

பின்னர், தூமராசனானவன் தெளிந்தெழுந்து சத்துரு சேரிட்டபோது நாமசப்பட்டிருப்பது அரசர்க்கடுத்த குணமன்றாதலால், இனி விரைவில் அவனைப் போர்முகத்தில் வெல்லவேண்டுமென்று துணிந்து வடவையைப்போலக் கோபித்துக் கொள்ளைக்கனலினும் விழிகள் சிவக்கச்சீறிச் சபையிலிருக்கின்ற சகலரையும் பார்த்து நீங்களனைவரும் சர்வாயுதபாணியராய் உங்கள் வசத்திலிருக்கின்ற சேனாசமுத்திரங்களை யெல்லாங் கூட்டிக்கொண்டு அதிசீக்கிரத்தில்வந்து சேரக்கடவீர்களென்று ஆக்ஞாபித்தனன். உடனே அவ் வாக்கினையை அமைச்சர்கள் சேனாபதியர் புத்திரர்முதலிய யாவருஞ்சிரமேற்கொண்டு பலதிசைகளிலும் நெருங்கியிருக்கின்ற தங்கள் சேனைகட்கு முரசறைவித்தனர். உடனே சர்வசங்கார காலத்தில் சத்தசாகரங்களும் பெரும்புறக்கடலும் பெருக்கெடுத்தெழுவதைப்போலச் சகல சேனைகளும் அதிகஉச்சாகங்களுடன் பேரொலிசெய்து அண்டங்களுங் குலுங்கத்தக்கதாக வார்ப்பரித்துவந்து நெடுநாளில்லாதசண்டை இப்போது கிடைத்ததென்னுங் களிப்போடு தங்கள் தங்கள் தலைவரைச் சேர்ந்தன. பின்னர் தத்தலைவர்கள் வயிரகவசங்களை யணிந்து பாரித்தவிற்களைத் தாங்கித் தேவாஸ்திரங்களைச் சேகரித்து விஷத்துவையவிட்டுக் கூரிய அலகையுடைய பாணங்கள் நிறைந்திருக்குந் தூணிகளை முதுகி

விறுக்கி, முத்தலைச்சூலம்-சக்கரம்-வேல்-தோமரம்-பிண்டிபாலம்-எறி-ஈட்டி-எழு-மழு முதலிய படைகளையு மெடுத்துக்கொண்டு தங்கள் தங்கள் சேனைகளோடு தூமராசனுடைய அரண்மனை வாயிலை நெருங்கினார்கள். உடனே தூமராசன், போர்க்கோலத்திற்குரிய சின்னங்களை யெல்லாந் தரித்துக்கொண்டு நவரத்தினமயமாக விளங்கும் கிரீடத்திற் றும்பைமாலையைச்சூடித் திசைகளிலுங் கடல்களிலும் வானத்திலுந் தாவும் வேகமுள்ளனவாய் இடியை யொப்பக் கனைக்குங் குரலோசையைப்பெற்ற புரவிக் கூட்டங்களும், கன்னமதம்-கபோலமதம்-பீஜமதமெனச் சொல்லாநின்ற மும்மதங்களையும் பெருக்கிப் பர்வதாகிருதியாக வீதிப்பில் இருப்புலக்கைகளைத் துதிக்கைகளிற்பற்றி அண்டங்கள் அதிரச் சுழற்றிவரும் யானையணிகளும், பொன்வண்டில் அச்சு மச்சு குத்துக்கால் கொடிஞ்சிமுதலிய சிங்காரங்களைக்கொண்டு குதிரைகள்-சிங்கங்கள்-புலிகள்-யானைகள் முதலியவைகளை அளவற்றனவாகப் பூண்டு நவரத்தினமயமாய்ப் பிரகாசிக்குந் தேரணிகளும், இமைப்போதில் அண்டங்களனைத்தையும் பிசைந்தாறும் வலிமையுடையவர்களாய்ப் பகைவரில்லாமையாற் புஜங்கள் தினவுண்டு வாடியிருந்த அளவற்ற பதாதியணிகளும், புடைசூழும்படியாகத் தனது கோபுரவாயில்களினின்றும் வெளிக்கொண்டு பொன்மலையைப்போலப் பரித்திருக்கின்ற தனது தேரில் மணிகள் கலகலவென்று சத்திக்கும்படியாக வீரசிங்கத்தைப்போலப் பாய்ந்து, கொடி குடை சாமரை ஆலவட்டம் முதலிய போர்ச்சின்னங்கள் இருமருங்கிலும் நெருங்க, இரணபேரி-சயபேரி - வெற்றிச்சங்கம் முதலிய வாத்தியங்களோடு தனது சேனைத்தலைவர்களும் இரதத்தை முடுக்கிச்சென்று, மாதவராசனிருக்கின்ற நாட்டை வளைத்துக்கொண்டு வேதாகமங்களாலெண்ணியளவிடற்கரிய பாலசந்திரமூர்த்தியைத் தனது மடித்தலத்தில் வைத்துத் திருமுலைப்பா லூட்டியிருக்கின்ற சமுதை யெதிர்ப்படச்சென்று, மணிகள் கவிழ்த்துப் பொற்கட்டுகள் பதித்திருக்கின்ற மந்தரகிரியையொத்த தனது வில்லை இருதுறைகளும் பொருந்தவளைத்து அளவற்ற பாணங்களைச் சோனைமாரியைப்போலக் கரவேகமாகப் பிரயோகித்தனன். அப்பாணங்கள் வெளிப்பட்டமாத்திரத்தில் புகைந்து சீறிக்கொண்டுவந்து பாலசந்திரமூர்த்தியினுடைய திருமேனியிற் கருத்தமேகங்களைப்போலச் சூழ்ந்துகொண்டன. அதைச் சமுதையும் மாதவராசனுங்கண்டு திகைத்து சரீரமுழுவதும் வியர்த்து, மிகவும் பயந்து நடுங்கினார்கள்.

அப்போது பாலசந்திரமூர்த்தியானவர் புன்னகைகொண்டு தமது தாய் தந்தையர் பயந்து நடுங்குவதைப்பார்த்து நீங்கள் யாதொன்றற்கும் அஞ்சாதீர்களென்று திடங்கூறித் தமது திருவாயினின்று கொண்டல் கொண்டலா யெழும்பிவரும்படிப் புகைப்படலங்களை விட்டனர். அப்புகைப்படலங்கள் வெளிப்பட்ட மாத்திரத்தில் ஊழிகாலத்தில் உலகங்களை யழிக்கவெழுகின்ற பிரளயவெள்ளத்தைச் சுவற்றவல்ல மேகங்களைப்போல அட்டதிசைகளையும் இருள்

மயமாக மூடிக்கொண்டன. உடனே பராக்ரமசாலியாகிய தூமராசனும்,சத்
சாகரங்களைப்போலத் திரிலோகங்களும் ஆதிரவந்த அவன்சேனைகளும், ஒரு
வரையொருவர் காணமாட்டாது மயங்கிப் பாதலலோகத்தில் வீழ்ந்து இறந்
போனார்கள். தேவர்களெல்லாஞ் சயசயவென்று கொண்டாடிப் பாரிசாத மு
லிய புட்பங்களை வாரியிறைத்தார்கள். முனிவர்களெல்லாம் பல பூசா திரவிய
களைக்கொண்டு பாலசந்திரமூர்த்தியைப் பூசித்தார்கள். மாதவராசனுஞ் சமு
தையும் பயமன்று ஆனந்தமடைந்தார்கள். பாலசந்திரமூர்த்தியானவர் தூம
ராசனுக்குக் கேடுவருவது காட்டும்படி ஓர் உற்பாதமாய் விளங்கிநின்றதும்
அவனையும் அவன் அமைச்சர் முதலாயினோரையும் அவ்வவர்கள் சேனைகளோ
ஓர்கொடிப்போதில் தூமத்தால் தொலைத்து வெற்றிக்கொடி நாட்டியருளி
னாலும் அவருக்கு அன்றுமுதல் தூமகேதுவென்று மற்றொருதிருநாமம் விள
கியது. பின்னர் பாலசந்திரமூர்த்தியாகவந்த தூமகேதுவென்னும் பெயரினை
தித்தருளிய விநாயகமூர்த்தியானவர் மாதவராசன் முதலியோர் தரிசிக்கும்பட
யாகத் தமது திருவுருவைக்கரந்து,மலபாசங்களையொழித்து, மேலான ஞான
செல்வத்தை யடைந்திருக்கின்ற பெரியோர்களது மனக்கோயிலில் வதிந்த
ளினர். இக்கதையை யன்போடு நினைக்கின்றவர்களும் தீவினைகளினின்று நீங்
பேரானந்த சுகத்தை யநுபவிப்பார்கள்.

இப்பால் மாதவராசனும் சுமுதையும் யதாப்பிரகாரந் தமது பட்டண
தைச் சேர்ந்து முடிவில்லாத பெரும் பாக்கியத்தைப் பெற்று சகல சவுக்கிய
தையும் ஆனந்தத்தையும் அநுபவித்துக்கொண்டிருந்தார்கள். இவ்வாறு சில
லிருந்த பின்பு சுமுதையானவள் மகிமைபொருந்திய புத்திரனை மகிழ்வோடு
பயந்தனள். அதை மாதவராச னறிந்து தனக்குப் புத்திரனுகவந்த மாதவனு
குச் சகல மங்கலத்தோடும் வேதாகம முறைமைப்படி சாதக கன்மாதிகளை
நிறைவேற்றி அளவற்ற தருமாதிகளை நாடோறுஞ் செய்துவந்தனன். சுமுதை
யானவள், தனது தவக்குமாரனைப் பிரதிதினங் குளிப்பாட்டி, தனது முலை
பாலினை அன்போடு மூட்டி, சுவர்ணமயமாகிய சட்டியினையும் அரைவடப
பொற்றண்டை முதலிய ஆபரணங்களையுந் தரித்துச் சோட்டி, பவளக்கால்கள்
வயிரச்சட்டங்கள் நீரத்னப் பலகை முதலியவைகளாற் சோடித்துத் தங்க
சங்கிலிகளிற் றொங்கும் அழகிய தொட்டிலில் வளர்த்தித் தாலாட்டி, நாளுக்கு
நாள் வளர்பிறையைப்போல் வளர்த்துப் பாராட்டிவந்தனள். இவ்வாறு அவ்
குவர்களுந் தம்மைப் பாராட்டிவளர்க்குந்தோறும் அவர்களுக்குப் பிள்ளைக்கலி
தீர்த்தருளிய நாராயணமூர்த்தியானவர், நாளுக்குநாள் சுப்போருடைய உல்
லாசத்தைப்போல வளர்ந்துவந்தனர். இப்பால் மாதவராசன், தனது குமாரனு
குப் பிள்ளைப்பருவம் நீங்கியபின்னர் பட்டாபிஷேகம் முதலியவைகளைச் சிறப்
கச்செய்து தூமராசனுடைய அரசாட்சியை அவர்பால் ஒப்புவித்துத் தனது
பத்தினியுந் தானுஞ் சதாகாலமும் விநாயகமூர்த்தியைத் தியானித்து அந்திய

லத்தில் மோட்ச சாம்பிராச்சியத்தை யடைந்து பேரானந்தத்தை யநுபவித்
தார்கள். முன்னர் உலக மனைத்தையுஞ் சிறுகடரினை வாய்ந்த விளக்கினைப்
போல விருந்து காத்த தூமராசனுடைய அரசாட்சியையெல்லாம் பின்னர்
நாராயணமூர்த்தியானவர் பெருஞ்சுடரினைவாய்ந்த பந்தமாக விளங்கிப் பாது
காத்து புத்திர மித்திர களத்திராதிகளுடனே சகல போக பாக்கியங்களையும்
அநுபவித்து வாழ்ந்திருந்தனர்.

தூமகேது விநாயகர் திருவவதாரப் படலம்

முற்றிற்று.

எட்டாவது

கணேசர்திருவவதாரப் படலம்.

சட்ட வேழெனுந் திருவவ தாரஞ்சாற் றினமே
லெட்ட நாமவ தாரஞ் சரிதமீ திசைக
லொட்டு மார்வமோ டொழுகுதேன் வாரிசந் தன்னை
னட்ட கேன்மையி னறைகுதுஞ் சவுனக முனிவீர்.

ஓ சவுனகாதி முனிவர்களே! விநாயகமூர்த்தியானவர் தூமகேது திருவவ
தாரங்கொண்டு மாதவராசனுக்கும் அவன் மனைவியாகிய சுமுதைக்குந் நீங்கு
செய்ய கோத்த தூமராசனைக்கொன்று, அவ்விருவரைப் பாதுகாத்தருளிய திரு
விளையாடலைச் சொன்னோம். அவரே மற்றொருபோது கணேசமூர்த்தி திருவவ
தாரங்கொண்டு தம்பிடத்தில் அளவற்ற வரங்களைப்பெற்ற பலி யென்னும்
ஓர் தானவனானவன், தனது திரிபுரங்களோடுஞ் சென்று திரிலோகங்களையும்
அழிக்க, அக் கொடுமைக்குத் தேவர்கள் முதலாயினோர் அஞ்ச, அதற்குச் சிவ
பிரான் மனமிரங்கித் தம்மைத் தியானிக்க, அப்போது அவர் திருமுகத்தில்
ஐந்துமுகத்தோடுந் தோன்றி, அவர்க்கு அத்திரிபுரங்களை நீறாக்கவல்ல வரங்
களை யுதவி, யாவருங் கணேசனென்று போற்றும்படியாக விளங்கியருளிய திரு
விளையாடலை முன்னமே உபாசனு காதையிற் சொல்லியிருக்கின்றனம். இப்
பால் கணபதி திருவவதாரங்கொண்டு செய்தருளிய திருவிளையாடலைச் சொல்
லுவோம் கேட்பீர்களாக.

கணேசர் திருவவதாரப் படலம்

முற்றிற்று.

ஒன்பதாவது

கணபதி திருவவதாரப் படலம்.

அன்ப னேயவன் சரித்திர முன்னமே யறைந்தா
மொன்ப தாமவ தாரமென் றறைதரு காதை
யின்ப மார்தர வியாதனுக் கலர்மக னிசைத்தாங்
கன்பி னீரறை குதுமுள மொருமையி னுணர்வீர்.

ஓ சவுனகாதி முனிவர்களே! வெண்டாமரை செந்தாமரை மலர்களை ஆதனமாகக்கொண்ட சரச்சுவதி இலக்குமிகள் மூலமாக எல்லா வுலகங்களையும் படைத்துங்காத்து மிராநின்ற பிரமனும் விட்டுணுவுந் தத்தம்நிலைகளிற் பிறழாத வண்ணம் உயர்ந்தவெண்மை நிறத்தினைக்கொண்டதாய், நால்வகைத்தோற்றம் எழுவகைப்பிறப்பு, எண்பத்துநான்கு நூறாயிரம் யோனிபேதங்களாயுள்ள சீவான்மாக்களெல்லாம், கன்மங்கட்கேற்ற சரீரங்களையெடுத்துத் தாபத்திரையாக்கினிகளாற் றகிக்கப்படுந் துயரங்களினின்று நீங்கி, இளைப்பாறும்படியாக ஆனந்தவிருத்தஞ் செய்தருளுகின்ற எமது சதாசிவமூர்த்தியைத்தாங்குந் தகைமையையுடையதாய், கண்டோர்கட்கெல்லாம் புகலிடமாகி யிருந்து மீட்டும் பிறவிச்சாகரத்தினைக்காணாதபடி மேலாகிய முத்திவீடளிக்க வல்லதாய் சந்திரன் கங்கை விபூதி விடை அயிராவணம் என்னுமிவைகளை வெள்ளிதாகக் கொண்ட சிவபெருமானவர், தமதுதிருமேனியுந் தாமும்வெள்ளிய சாத்விகத்திற்கொண்டருளியதால் அத்தலைவர்நிலையும் படியாகத் தானும் வெள்ளிய நிறத்தினைக் கொண்டதாய், என்ன முதலிய முக்கரணங்களினாலுந் தன்னைவழிபடுந் திருமாலினைத் தாங்குந் திருப்பாற் கடலோடு ஏனைய கடல்களு மேலெழுகின்ற யுகாந்த காலத்தில், அப்பிரளயத்தினுள் யாமடங்குதல் அடாதென்று அதனினு மேலோங்கி யெழுந்து அண்டமுகடு வரையில் அளாவி ஒளிசெய்ய வல்லதாய், தெளிந்த மெய்யடியார்க்குப் பெருமை பொருந்திய போகத்தையுந் திருவருளையும் வழங்குதலன்றி தம்மையும் வழங்கி அருளிச் செய்யவல்ல எமது சிவபெருமானுடைய பெருங்கீர்த்தியென்னுந் திருமேனியானது எக்காலத்தும் அவரைத்தணவாது அழிவற்ற ஆவலோடுஞ் சுமந்து அவரைப் போலவே கெடாத பெருமையைப் பெற்றதுபோல ஊழிகள்தோறு மழியாமல் ஓங்கவல்லதாய், சத்த சாகரங்களும் ஒன்றுடனொன்று கலக்கவருகின்ற யுகாந்தகாலத்தில் தத்தஞ் சுபாவநிலைகளினின்றுமாறித் தமோற்றங் கொள்ளுகின்ற திருமால் கண்டமிடத்தையும் அவனுந்திப் பதுமமாகிய பிரமனிடத்தையுங் கண்டு எமது உருத்திரமூர்த்திக்கு இடையாத்துலமாகி, எக்காலத்தும் உடையாவுறுதியோடு நகைப்பதுபோல என்றும் ஒரேயியல்பாய்ப் பிரகாசிக்கவல்லதாய், நம்மைச் சிவபிரான் திரு

உருவாகக் கொண்ட செயலாலன்றோ? அடுத்தோர்களையும் பெரியாரென்று சொல்லும்படியாக நன்மைகளை விளைக்கின்றோம். இனி அக்கடவுளுக்கு இடமுமாகி அவரைத்தாங்கி நிற்போமாயின் எக்காலத்தும் அழியாநிலைமை பெற்றிருப்போமென்று சாத்விகமானது ஒருருக்கொண்டு உவகிறேம்பும் ஆர்த்தல்போல ஆரவாரிக்கும் அருவியையுடையதாய், மேருவும் மந்திரமும் எமது சிவபிரான் வசிக்கப்பெற்றனவாயினும் அவைகள் ஓராசன் வருந்தியபின்னர் அவன் கருதிவந்த பொருளினைத்தருதலும், அமுதம் வேண்டிய தேவர்கட்குக் கடலைக்கலக்கி நஞ்சினையளித்தலும், இருந்தனவேயென்று எள்ளித் தன்னைக் கருதி வரங்களந்தோர்க்கு வெள்ளியைநிரப்ப வல்லதாய், அகத்தும்புறத்தும் ஒரே தன்மையை யுடைமையினாலும், சிவபெருமானுடைய அருமைத் திருவடிகள் தனது சென்னியில் மருவப்படுகையினாலுந் தெள்ளிய வழிஞர்களா லெடுத்து ஏத்தப்படுகின்ற சிறப்பினாலும், மலபாசங்களைத்துறந்த மெய்ஞ்ஞானியர்களைப் போன்றதாய், ஓர்பால் தாமரைமுதலிய மலர்வருக்கங்களெல்லாமலர்ந்தும் ஓர்பால் வச்சிரமுதலிய மணிவருக்கங்களெல்லாம் குழுக்கொண்டும், ஓர்பால் சிவகங்கைமுதலிய தீர்த்தங்கள்சிறந்தும், ஓர்பால் பலாக்கனிமுதலிய பழவருக்கங்கள் பரவியும் விளங்குவது கயிலையங்கிரி.

அக் கயிலையங் கிரியில் இமாசலராசன் புதல்வியோடு எழுந்தருளிய எமது சிவபெருமானுடைய திருவடிகளைத் திருமால் முதலிய தேவர்கள் வழிபட்டு வைகுந்தமாதி பதவிகளைப் பெறுவார்களாயின், அப் பெருமானுக்கே உறைவிடமா யிருக்கின்ற அதன்பெருமையை உம்பர்களாலுஞ் சொல்லப்படுவனவோ? அக்கிரியின்கணுளவாகிய கொடி மரம் மிருகம் புள்ளினம் முதலியவைகளை யோசிக்கு மிடத்து ஒவ்வொன்றும் கற்பகம் காமதேனு பதுமநிதி சிந்தாமணி முதலியவைகளா யிருப்பதன்றி, அவைதருகின்ற பொருள்களையுந் தருவன. சனகாதியோரும் பெரிய மாதவங்களைச் செய்து எல்லாப் பொருள்களையு மறிந்த யோகியர்க்கல்லது ஏனைய சீவர்கட் கெல்லாம் அக்கயிலாயத்தின்கணுள்ள கொடி முதலானவைகளா யிருக்கத்தக்க வாழ்வு மரிதாகும். அன்றியு மிருவகைப் பற்றுக்களையு மொழித்துச் சிவபெருமானுடைய திருவடிகளிற் பற்றுடையாருக்கே அக்கயிலை யிடங்கொடுப்பதல்லாது, மற்றையர்க்கெல்லா முறவேண்டிய தனித்து அப்பால் முடிக்குவதன்றி, எக்காலத்தும் அன்னவர்க்கு இடமாகும் வகையில்லை. இத்தன்மைத்தாகிய கயிலையங்கிரியில், அடியார்க் கருள்செய்யும்பொருட்டு இமாசலராசன் புதல்வியாகிய உமாதேவியாரோடு சிவபிரானெழுந்தருளி யிருக்கின்றகாலையில், கார்முதலிய இருதுக்களின் காற்றிற்பட்ட இலை பூ வாதியவைகள் சிறந்தன வல்லவென்று கருதினாற்போல, முன்னொருபோது சிவபெருமானுடைய தழல் விழியால் பூளைப் பூவினைப்போலமடிந்து யாவர்க்குங் காமநோயளிப்பவனாகிய மன்மதனுடைய அணிவிழாச்சிறக்கும்படி இளவேனிலானது தனதென்றற் காற்றி

னல் இறந்து கிடக்கின்ற கானகமாதிகளை மிதித்துத் தளிர் முதலானவைகளைத் தத்தம் தன்மைகளிற் குன்றாதபடி நிரப்பியது. அக்காலத்தில் யாவருக்கும் இனிமை செய்வோர்க் குற்ற வறுமையானது நீடியாது நசிப்பன போல, இறந்துபோகிய இருதுக்களினால் இலைமுதலியவைகளைத் தீர்ந்த கொடி மரம் முதலானவைகளெல்லாம் பொருக்கென்று தளிர்த்து, மலர்கனி முதலியனவைகள் தோன்றுகின்றன. மிக்கசாந்தமும் ஈகையுமுடையோரிடத்தில் அடையாதார் ஒருவரு மில்லையென்று சொல்லுவதுபோல, அக்கொடி மரம் முதலியவைகடோறுந் தும்பிவண்டு சுரும்புமுதலிய பலவித பறவைகளும் நெருங்கி யிருக்கின்றன. தன்னைச் சார்ந்த ஓர் பொருளினாலல்லது சுபாவத்தில் தனது குணத்தைக் காட்டாத பூமிக்குச்செய் நன்றியை மதித்தல் போல, அங்குள்ளசோலை முதலானவைகள், மலர் முதலானவைகளை சிந்தி வாசனையூட்டுவதோடும் சிறிதும் சீரில்லாமற் சுருங்கித்தம்மை நெருங்கி யிருக்கின்ற மடு தடாகம் ஆறுமுதலியவைகளினுடைய நிரப்பைத்தாமே நீக்கவெண்ணினாற்போலத் தாழ்ந்த பொழில்களெல்லாம் வைகலும் அவைகளில்தேனைச் சொரிவன. துட்டர்களாயினோர் தமக்கு நன்றி செய்தோரிடத்துங் கட்டமாகிய காரியத்தைச் செய்வதுபோல அத்தடாக முதலியவைகளி னுள்ள மதுரமானநீரினைப் பானஞ்செய்தெழுந்த எட்டியாதிகள் தம்மிற் கைத்திருக்கின்ற காய்முதலியவைகளை அவைகளிற் சொரிவது தம்மை யடைந்தோர்கள் பக்குவர்களாயினும், அபக்குவர்களாயினும் அவர்களை யுயர்த்தவல்ல ஞானசாரியரைப்போல வண்டினங்களானவை எட்டியாதி வருக்கங்களிற் கவர்ந்துவந்த தேனையும் ஏனைய நல்லவிருக்கங்களில் முகர்ந்துவந்ததேனையும் ஒன்றாகக் கூட்டிப் பக்குவப்படுத்துவது கிடைத்தற்கரிய பலநூல்கடோறுமுள்ள பொருள்களையெல்லா மாராய்ந்தெடுத்து யாவரு மினிமையெய்தும்படி தொடுக்கவல்ல நாவலர்களைப்போலத் தேனீக்களானவை, பூக்கடோறுமுள்ள தேன்களையெல்லாஞ் சிறுகச்சிறுக முகந்துபோய் ஓர்பக்கத்தில் சார்ந்து தேங்கும்படி பலகூடுகளைத் தொடுப்பன. இவ்வா றவ்வீக்கூட்டங்கள் மிக்க பிரயாசையோடு தேன்களை யிட்டுவனவாயினும், தேவர்கட் குபயோகிக்கப் படுவனவாயுள்ள மலர்களையும் அவைகள் சிதைக்கின்ற தீங்கினால் அவைகளை யழிப்பதே புகழென்று சிலர் ஆங்காங்கு தொடுத்திருக்கின்ற கூடுகளை யழிப்பார்கள். குற்றஞ் செய்தோரைச் சினந்து பொருள்பறித்தல் வேலேந்து மரசர்க்கு விதியாதல்போல சிலர் விடியுமுன்னமேசென்று மலர்களை ஊறுசெய்கின்ற ஈக்களை யழித்து, அவற்றின் கூடுகளிலிருக்கின்ற தேன்களைக் கைக்கொண்டு செல்லுவார்கள். அங்குள்ள சோலைகளனைத்தும் மேகங்களையொப்ப வீசுகின்ற தேன்மழையினால் மயிற்கூட்டங்கள் அச்சோலைகளைவிட்டு நீங்கினாலன்றி அயர்வுறாது. குயில்களும் அவைகளைவிட்டு நீங்கினாலன்றிக் கூவாது. புறத்தேவரிகளை யுடைய அணிலாதிகள் நல்ல மாங்கனி முதலியவைகளையுண்டு தூயவடியாருடைய குணத்தைத் தெரியப்படுத்தும். மந்திகள் நியனவும் அவையல்லனவுமான கனிகளை

விழைந்து உயர்வுந்தாழ்வுமான உண்டிகளை யருந்துவோருடைய தன்மையை விளக்கும். அங்குள்ள தடாகங்கடோறுந் தமதுகணவனாகிய சூரியனுக்கு ஞாதியாயிருக்கின்ற சந்திரனாலும் பனியினாலும் அழிந்தவைபோக ஏனைய தாமரைகளெல்லாம் வண்டினங்கள் மொய்க்கும்படியாக அலர்வன. ஆம்பல் முதலியவைகள் மலர்ந்திருக்கின்ற தடாகங்களெல்லாந் தெளிந்து மிக்க வனப்போடு சிறப்புற்றன. நீண்ட ஆறுகளெல்லாம் நன்னிய மணல்களைப்பரப்பி அதன்மேல் கருமணல்களை வார்த்து நடுவே புனலொழுகிச் செல்லும்படியாகத் தம்மைவிழைந்த உயிர்கட்கெல்லாம் வெயிலின் வெப்பத்தை நீக்குவ. வரையாது கொடுப்போரிடத்தில் வறுமைவந்தடுப்பினும் அவர்களக்காலத்தும் உள்ளபொருளைக் காவாது வேண்டினோர்க்கு உதவுதல்போல், அங்குள்ள மலைகளெல்லாம் இறந்துபோன கார்காலத்திற் பருகிய புனல்களை அவ்விளவேனிற் காலத்தும் இடைவிடாது பொழிகுவ. இத்தன்மைத்தாகிய இளவேனிற்காலம் வந்தபோது சாம்பசிவ மூர்த்தியானவர் குளிர்ச்சிவேண்டித் தமது தேவியாரோடும் உய்யானவனத்தை யடைந்து அதில் கொன்றை கூவிளம் கோங்கு மந்தாரம் பாடலம் புன்னாகம் சண்பகம் வாழை வகுளம் அசோகு முதலாகிய விருக்கங்கள் மலிந்திருக்கின்ற அலங்காரங்களை யெல்லாம் பார்த்துக்கொண்டே வந்து அங்கிருந்த ஓர் சித்திரமண்டபத்து ளெழுந்தருளினர்.

அப்போது உமாதேவியார் அம் மண்டப சுவர்களி லெழுதியுள்ள சித்திரங்களைப்பார்த்துக்கொண்டேவர, அவைகளில் ஓர்பால் சத்தகோடி மகாமந்திர சொரூபங்களும், அவைகட்கெல்லா முதலில் பிரணவமந்திரசொரூபமும், அதில் ஆண்யானையும் பெண்யானையும் புணர்ச்சி செய்திருக்கும் பாவனையாக வெழுதி யிருப்பதைக்கண்டு, சுவாமி! இதென்னவென்று சிவபிரானைக் கேட்டனர். அதற்கவர் தமது தேவியாரைப் பார்த்து பெண்ணே! யாம் உன்னோடு சம்பந்தமாகி லோகங்கட் குபகாரமாய் நடப்பிக்கத்தக்க கருணாசமாகுமென்று திருவாய்மலர்ந்து புணர்ச்சிசெய்திருக்கின்ற அந்தயானைகளில் ஆண்யானையைப் பார்த்துக்கொண் டிருந்தனர். உமாதேவியார் பெண்யானையைப் பார்த்துக்கொண் டிருந்தனர். இவ்வாறு லோககாரணர்களாகிய இருவரும் அவைகளை அன்போடு பார்த்துக்கொண் டிருந்தலும், அந்த யானைகளினுடைய புணர்ச்சிமுடிவில் பிரணவஸ்வரூபியா யிருக்கின்ற விநாயக மூர்த்தியானவர் ஊழிகாலத்தில் கோடிசூரியர்கள் ஒன்றாய் உதயஞ் செய்ததுபோல அளவற்ற பிரகாசத்தோடும் உதித்தருளி சிவபிரானையும் உமாதேவியாரையும் பணிந்தனர். உடனே அவ்விருவரும் ஆனந்தங்கொண்டு தமக்குப் புத்திரனாகத் திருவவதாரஞ் செய்தருளிய விநாயக மூர்த்தியைப் பரிவோடெடுத்து அணைத்து உச்சிமோந்து உள்ளம் பூரித்துத் தங்கள் மடியின்மீது வைத்துக்கொண்டு சிவபிரான் இதனைத் திருவாய் மலர்ந்தருளுவாராயினர். ஓ குமாரனே! என்னினின்றும் வேறாகாமல் எனக்குப் பிள்ளையாகி யிருக்கின்ற உன்னை யார் வணங்குகின்றார்

களோ அவர்கட்குச் சகல விடையூறுகளையுந் தீர்த்து, அவர்கள் விழைந்த காரியங்களை விரைவில் கைகூடும்படியாக அநுக்கிரகஞ் செய்திடுக; கணங்கட்கெல்லாந் தலைமைபெற்றிருந்து கிருபையை வழங்குக; அதனால் யாவரும் உன்னைக் கணபதியென்று சொல்லுக; உன்னை யாவரும் எக்காரியத்தினு முன்னதாக வணங்குக; அவ்வாறு வணங்காதோர்க்கு இடர்களைப்புரிக; இதுவன்றி அசுரர்கட்கெல்லா மரசனும், யாவரு மஞ்சத்தக்க கோரனும், மிக்க கொடிய செருக்கையுடையவனும், தேவர்கட்கெல்லாந் துன்பத்தை விளைக்கின்றவனும், கஜமுகனென்னும் பெயரை வகித்தவனும், ஒரு அசுரனிருக்கின்றான். அவனை நீ விரைவில் சமர்க்களத்திற் சங்கரித்து விண்டுவே முதலியோர் மூழ்கி யிருக்கின்ற துக்கசாகரத்தைத் தூர்த்து, அவர்களைக் கிருபையோடு காத்தருள்கவென்று திருவாய் மலர்ந்து, உமாதேவியாரோடு அச்சித்திர மண்டபத்தை விடுத்துக் கணபதிப்பெருமானை யழைத்துக்கொண்டுசென்று அவரைத் தமது கைலாய வாயிலின் முகப்பிலிருக்கவைத்து அந்தப்புரத்திற் சென்றருளினர்.

அப்போது நந்திதேவர் முதலிய கணத்தலைவர்களும் விண்டு முதலிய தேவர்களுங் கருணாநிதியா யெழுந்தருளிய கணபதிமூர்த்தியைப் பணிந்தெழுந்து, வேதாகம முதலியவைகளாற் றுதிசெய்து, விடைபெற்று; அவரது பெருங் கருணையினால் அவ்வவர்களுடைய பெரிய அதிகாரங்களைச் செலுத்துவதாகப் போனார்கள். அந்தப்புரத்திற்சென்ற சிவபிரானும் உமாதேவியாரும் சரசசல்லாபத்தோடும் அளவளாவி மகிழ்ச்சியுற் றிருந்தார்கள். இவ்வாறு மகிழ்ச்சி பொங்க சரசசல்லாபத்துடனே அளவளாவி யிருக்கின்ற போது சிவபிரான் உமாதேவியாரைப் பார்த்து, பெண்ணே! நாமிருவருஞ் சூதாடுவோம் அச்சூதில் நீ தோற்பை யாயின் உனது ஆபரணங்களை யெல்லாங் கொடுத்து விடக்கடவை; யாம் தோற்போமாயின் நமது ஆபரணங்களைக் கொடுத்துவிடக் கடவோமென்று திருவாய்மலர்ந்தனர். அதற்கு உமாதேவியார் சம்மதித்து அப்போது சிவபிரானை தரிசனஞ்செய்ய வந்திருந்த தமதுசகோதரனாகிய விண்டுவை நோக்கி, ஓ சேட்டனே! இப்போது யாமிருவரும் ஆடப்போகின்ற சூதுக்கு நீ சாட்சியாயிருக்கவேண்டுமென்று கேட்டனர். அதற்கவர் சம்மதித்திருந்தனர். பின்னர் சுந்தரர் முதலிய பரிசனங்களெல்லாம் அக் குறிப்பினை யறிந்து சூதாடு கருவிகளைக் கொணர்ந்துவந்து சிவபிரானெதிரில் நீட்டினார்கள். அவைகளைச் சிவபிரான் விண்டுவினிடத்திற்றந்து இவைகளைக் கிரமப்படி வைத்திடுகவென்று கட்டளையிட்டனர். அவ்வாறே விண்டு அவைகளையெல்லாங் கிரமப்படி வைத்து அவ்விருவர்களுடைய ஆட்டங்களையும் பார்த்துக்கொண் டிருந்தனர். அவ்வாட்டம் முடிவில் உமாதேவியார் கெலித்தனர். அதைச் சிவபிரான் கண்டு பரியாசத்தினாலோ? மற்றியாதுகாரணத்தினாலோ? உமாதேவியாரைப் பார்த்து பெண்ணே! நமக்குத் தோற்றனை. ஆதலால், உனது ஆபரணங்களையெல்லாங் கழற்றி நம்முன் வைக்கக்கடவையென்று திருவாய்மலர்ந்தனர். அதனைக் கேட்டதும் உமாதேவியார் சிவபிரானைப் பார்த்து நகைத்து, சுவாமீ! அடியாள் கெலித்திருக்கத் தேவரீர் குற்றமற்றவேதங்களைத் திருவாய்மலர்ந்தருளிய வாக்கினால் எற்றினுக்கு இத்தன்மைத்தான பொய்யை நாணமில்லாமற் சொன்னீர்கள்; தேவரீருடைய திருமேனியி லுள்ள ஆபரணங்களை வாங்கி என் முன்னே வைத்தருள்க வென்று கூறினள். அதற்குச் சிவபிரான் புன்னகைகொண்டு பொய்ச்சாட்சி சொல்லும்படியாக விண்டுவுக்குத் தமது புருவத்தை நெரித்துச் சைகைகாட்டி, மீட்டும் உமாதேவியாரை நோக்கி நாமே கெலித்தன மென்று திருவாய்மலர்ந்தனர். அப்போது விண்டுவானவர் என்செய்வார், மேல்வரும் விளைவைச் சிறிது மறிந்துகொள்ளாதவராய், உமாதேவியாரைப் பார்த்து அம்மணி! இப்போது சுவாமிக்கு நீர் தோற்றமையால் உமது ஆபரணங்களை அவருக்குக் கொடுக்கவேண்டாமோ வென்று கூறினர். அதைக் கேட்டதும் உமாதேவியார் கோபித்து, அவ்விண்டுவை உறுத்துப்பார்த்து அறிவற்றவனே! எங்களுடைய கெலிப்பையுந் தோற்பையுங் கண்ணிற்கண்டிருந்தும் என்னலாபத்தை விழைந்து உண்மையைச் சொல்லாமல் பொய்சாட்சி சொல்லினை. நீ இவ்வாறு சொன்னமையால் இனி கண்கெட்ட மலைப்பாம்பாகி துன்பமுறக்கடவையென்றுச் சபித்தனர்.

கேட்பீர்களோ சௌனகாதி முனிவர்களே! சகல லோகங்களையும் அளிக்கவல்ல விண்டுவானவர் சிவபிரானுடைய சார்பைப் பெற்றிருந்தும் ஒரு பொய்ச்சாட்சியினால் சகித்தற்கரிய சாபத்தினைப்பெற்றாரெனில், இவ்வுலகத்தில் பிரதி தினமும் பொய்யையே பெரும்பாலுங் கூறி வாழ்கின்றவர்கள் அடையத்தக்க நரகவேதனையை யாவரால் அளவிடக் கூடும்.

இவ்வாறு உமாதேவியா ரிட்ட சாபத்தைக் கேட்டதும் விண்டுவானவர் நடுநடுங்கிச் சிவபிரானுடைய திருவடிகளில் வீழ்ந்து பணிந்தெழுந்து சுவாமீ! தேவரீருடைய திருப்புருவ நெரிப்பிற்கஞ்சி உரைத்த பிழையைப் பொறுத்து உமாதேவியார் கொடுத்த சாபத்திற்கு ஓர் தீர்வு சொல்லியருளல்வேண்டுமென்றுப் பிரார்த்தித்தனர். அதற்கு அளவற்றகாலம் ஆணவமலத்தி லழுந்தி மறைபட்டிருந்த ஆன்மாக்களை முத்தியில் விடவேண்டுமென்று நினைந்து உடல்போலுந் தமது பெருங்கருணையினாலே திருமேனிகொண்டு அவர்களை அவ்வாணவ இருளினின்று மெடுத்து, அவர்க ளிச்சித்த தநுகரண புவன போகங்களைக் கொடுத்து, அவைகளினிடமாக நல்வினை தீவினைகளை யூட்டி, அவ்விருவினை யொப்பில் மலபரிபாகமுண்டாக்கி, முத்தியிற் சேர்ப்பிக்கவல்ல சர்வஞ்ஞமூர்த்தியாகிய சிவபிரான் கிருபைசாந்து ஓ இலக்குமிகேள்வனே! வடதிசையிற் சென்று நமது திருவடிகளைத் தியானஞ்செய்துகொண்டிரு. இன்னுஞ் சிலதினத்துள் மூவுலகத்தாருக்குந் துன்பஞ்செய்துவருகின்ற கஜமுகாசுரனைக் கணபதிமூர்த்தியானவர் சங்காரஞ்செய்து அவ்வழியே வருவர். அக்கால் அவரை நீபார்த்த போது உனக்குற்ற சாபமானது நீங்குமென்று சிவபிரான் திருவாய்மலர்ந்த

னர். அதை விண்டு கேட்டு மனமகிழ்ந்து, உடனே அவ்வடநிலினை யடைந்து ஓராலமரத்தடியில் ஏழுயோசனை விசாலத் திருக்கின்ற இருண்ட பொந்தினுள் குருட்டு மலைப்பாம்பாகித் தமது பயங்கரமான ரூபத்தை நினைக்குந்தோறும் அருவருப்புற்றவராய் சதா சிவபிரானுடைய திருவடிகளையும், கணபதிமூர்த்தியினுடைய திருவருளையுந் தியானஞ்செய்துகொண்டு தவத்திலிருந்தனர். விண்டுவின் செய லிவ்வாறாக;

இந்திரன்முதலிய தேவர்கள், அசுரர்கள்செய்யுங் கொடுமைக்குப் பயந்து சகல திரவியங்களோடுங் கயிலாயத்தை நோக்கிச் சென்று, முதல் வாய்தலின் முகப்பில் கணத்தலைமைபெற்று வீற்றிருக்கின்ற எமது கர்த்தனைப் பணிந்து புகழ்ந்து இருகரங்களையுஞ் சிரமேற்கூப்பி வேதாகமங்களினால் அளவற்றதோத்திரங்களைச் செய்துநின்றார்கள். அவர்களைக் கணபதிமூர்த்தி கிருபையோடும் பார்த்து அன்பர்களே! உங்களுக்கு வேண்டியவைகளை கேட்பீர்களாக வென்று திருவாய்மலர்ந்தனர். அதற்குமேல் தேவர்கள் ஆனந்தங்கொண்டு அடியேங்களை நாடோறும் வருத்திவருகின்ற கஜமுகாசுரனைத் தேவரீர் சங்காரஞ்செய்து அடியேங்களுடைய துயரத்தை நீக்கியருளல் வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதற்குக் கணேசமூர்த்தி, அவ்வாறே செய்தருளுவமென்று கிருபைவழங்கித் தமது சிம்மாசனத்தை விடுத்து பூதர்கட்கெல்லாந் தலைவனும் மலையைப் போன்று பாரித்துவிளங்குஞ் சரீரத்தினால் அசலனென்னும் பெயரை வகித்திருக்கின்ற ஒருவனைக் கூவி, அவனது சுந்தரத்தி லாரோகணித்தருளினர். உடனே இரணபேரி ஜயபேரி வெற்றிசங்கம் முதலிய வாத்தியங்கள் முழங்கின. கொடி-குடை-சாமரை முதலிய சின்னங்கள் இருமருங்கினும் நெருங்கின. இடியேற்றினையொப்பச் சத்திக்கும் பெருந்தொனியை யுடையவர்களாய், பிரளயாக்கினியைச் சொரிகின்ற கண்களை வாய்ந்தவர்களாய், பருவதங்களையொத்து விளங்கும் புஜங்களில் அளவற்ற ஆயுதங்களை யேந்தினவர்களாய், அநேக பூதவீரர்கள் புடைசூழ்ந்தார்கள். பின்னர் கணேசமூர்த்தியானவர் இவ்வித ஆடம்பரங்களோடு கயிலாயத்தினின்றும் வெளிக்கொண்டு கஜமுகாசுரன் அரசாட்சி செய்துவருகின்ற மதங்கநகரத்தின் சமீபத்தி லமர்ந்தருளினர். யோகியர் தங்கள் தங்கள் ஞானவுணர்ச்சியினு லறிந்தாலல்லது மற்றேனையோரால் அறியவொண்ணாத கணபதிமூர்த்தியானவர் இவ்வாறு யுத்தசன்னத்தராய் வெளிக்கொண்டுவருவதைக் கஜமுகாசுர னறிந்து ஆயிரம்வெள்ளிசேனைகள் தன்னைப் புடைசூழும்படியாக வெளிக்கொண்டு கொடிமுதலிய சின்னங்களோடும் அமரர்களுங்கண்டு நடுங்கத்தக்க ஆயுதங்களோடும் வந்து யுத்தஞ்செய்யத் தொடங்கினன். அப்போது பூதவீரர்கள் தாக்கியதாக்கலிலே அளவற்ற அவுணவீரர்கள் துடைகளறுந்தும், இடைகளொடிந்தும், வாள்கண்முறிந்தும், கால்கள் மடிந்தும், தலைகள்பிளந்தும், கிளைகளிழந்தும், பலதிசைகளினுஞ் சின்னாபின்னப்பட்டு ஓடிமாண்டார்கள். அதைக் கஜமுகாசுரன் கண்டு வடவையைப்

போலக்கோபித்து தனதுவில்லில் அளவற்றபாணங்களைப் பிரயோகித்துச் சமீபத்திலிருந்த பூதவீரர்களையெல்லாங்கொன்று, கணபதிமூர்த்திக்கெதிரேவந்து விண்டுவாதிதேவர்களாலுங் காணுதற்கரிய அவரது திருமேனியைத் தனது தவமுதிர்ச்சியினாற் கண்டு சிறிதும் அஞ்சாதவனாய், இதனைச் சொல்லுவதாயினன். ஓ சிறுபிள்ளாய்! இதுகாறும் என்னோடு பகைத்து யார் உயிரோடிருந்தார்கள். தேவர்கள்செய்த தோத்திரத்திற் குடன்பட்டு நீ ஏன் வீணிலழிவு தேடிக்கொள்ளுகின்றனை? யான் விட்டுவிடுகிறேன்; இனியேனுந்தப்பிப்பிழைத்துக்கொள். இல்லையேல், என்னோடு யுத்தஞ்செய்ய ஆசையிருக்குமாயின் நீ கற்றிருக்கின்ற ஆயுதவல்லபங்களை இப்போதே காட்டு. சிறிதும் எனது பராக்கிரமத்தை யோசியாது எதிர்க்கவந்த உன்னைக் கோரியனுப்பிய தேவர்களையெல்லாம் நாசஞ்செய்து வெற்றிமாலை தரிக்கின்றேன். நான் சிவபிரானு லடைந்திருக்கின்ற வரங்களைச் சிறிது மறிந்தாயில்லையென்று சொல்லினன். அதற்குக் கணேசமூர்த்தி புன்னகைசெய்து, அடா பேதாய்! உனக்கு வரங்கொடுத்தருளிய அச்சிவபிரானுடைய கிருபையினாலேயே உன்னைச்சங்கரித்து தேவர்களையெல்லாம் யதாப்பிரகாரம் சொர்க்கலோகத்தில் நிலைபெற்றிருக்கச் செய்கின்றேன்பார். இதை உண்மையாக நம்பக்கடவை. நீ ஏன் வீணிற்பேசுகின்றாய்? அச்சமின்றி என்னோடு யுத்தஞ்செய்ய வல்லமையிருந்தால் விரைவில் நடத்துகவென்று திருவாய் மலர்ந்தனர். அதை அவுணர்பெருமான் கேட்டுக் கோபித்துத், தனது மேருவையொத்த வில்லை வட்டாகாரமாகவளைத்து, அளவற்ற குரூரமாகிய பாணங்களைக் கோடைமழைபோலப் பொழிந்தான். அவைகளையெல்லாம் எமது கர்த்தர் தமது கதாயுதத்தினால்விலக்கி, அவன்பிடித்திருந்த வில்லைக்கண்டித் தெறிந்தனர். பின்னர் கஜமுகாசுரன் மற்றொருவில்லை யெடுத்துவளைத்து அளவற்றசரங்களை முன்னினும் அதிகமாகத் தொடுத்துவிட்டான். அவைகளையுங் கணபதிமூர்த்தி தமது முசலத்தினால் விலக்கி வில்லையும் பொடிபடுத்தினர். பின்னர் கஜமுகாசுரனானவன் அதிக உக்கிரத்தோடு நெருங்கிவந்து மற்றொருவில்லில் இந்திராஸ்திரம், வருணாஸ்திரம், வாயுவாஸ்திரம், பிரமாஸ்திரம், நரசிம்மாஸ்திரம் முதலிய தேவாஸ்திரங்களை மாறிமாறிப் பிரயோகித்தான். அவையனைத்தும் வெளிப்பட்ட மாத்திரத்தில் அனந்த உற்பாதங்களை விளைத்துக்கொண்டுவந்து எமது கர்த்தருடைய திருவடிகளில் வீழ்ந்துவிட்டன. அதைக் கஜமுகாசுரன்கண்டு ஆச்சரியமுற்று, மீட்டும் ஓர்தண்டாயுதத்தை யேந்திவந்து யுத்தஞ்செய்தான். அந் தண்டாயுதத்தைக் கணபதிமூர்த்தியானவர் தனது கதாயுதத்தினாற் றுகள்படுத்தி அவுணர்பெருமான் மார்பிற் றாக்கினர். உடனே அவன் சிறிதுநேரஞ் சோர்ந்திருந்தனன். அப்போது சுவாமி, தமது மழுவாயுதத்தினால் அவனுடைய சேனைகளையெல்லாஞ் சாம்பலாக்கினர். பின்னர் கஜமுகாசுரன் சோர்வுதீர்ந்து, தனது சேனைகளெல்லாம் அழிந்துவிடுகின்றமையைப் பார்த்து இவன் மேலான பராக்கிரமசாலியே யன்றி சிறுவனல்லனென்று நிச்சயித்தும், மானம் மேலிட்டவனாய், மீட்டும்

அளவற்ற ஆயுதங்களைக்கொண்டு யுத்தஞ் செய்தனன். அவன் பெற்றிருக்கின்ற சிறந்தவரத்தைக் கணபதிமூர்த்தி யாலோசித்து, தமது வலப்புறக் கோட்டின் முனையையொடித்து அவன் மீது விட்டனர். அது வெளிப்பட்ட மாத்திரத்தில் சகல லோகங்களுங் கலங்கும்படியாக வார்ப்பரித்துச்சென்று கஜமுகாசுரனுடைய மார்பைப் பிளந்துபோய்ச் சமுத்திரத்தில் ஸ்நானஞ்செய்து, மீட்டும் சுவாமிகளிடத்தில் வந்து சேர்ந்தது.

கேட்டீர்களோ சவுனகாதி முனிவர்களே! பகைவர் வந்தபோது அவர்களைப் பாதத்தினாலும், உகிரினாலும், கையினாலும், பார்வையினாலும் வென்று வெற்றிகொள்ளவல்ல சிவகுமாரனுக்குத்தமது கொம்பினால் அவ்வவுணனுடைய வுயிரை மாய்த்ததும் ஒரு புகழோ? பின்னர் கணபதிமூர்த்தியானவர் சமுத்திரத்தில் ஸ்நானஞ்செய்துவந்த கொம்பினை ஓராயுதமாகத் தமது திருக்கரத்திலேந்தியருளினர். அப்போது தேவர்கள் புட்பவருடஞ்சொரிந்தார்கள். முனிவர்களெல்லாம் வேதாகமங்களினாற் பலமுறை தோத்திரஞ்செய்து பணிந்தார்கள். முன்னர் எம்பெருமானுடைய கோட்டினாற்பிளக்கப்பட்ட மேருகிரி அடியோடே பெயர்ந்துவிழுந்ததுபோல நிலத்தில் வீழ்ந்த கஜமுகாசுரன், பின்னர் மலைக்கு நிகரான மூடிகமாகி, வட்டமாய்ச் சிவந்து அழலை யுமிழ்கின்ற விழிகளும், திசையானைகளையெல்லாம் விட்டத்தக்க நீண்டவாலும், கடைவாய்க்கு வெளிப்பட்டிருக்கின்ற பருத்த பற்களும், நீண்டு நிமிர்ந்து அழுத்தமுற்றிருக்கின்றமுகமும், சரீரமுழுவதும் நிறைந்திருக்கின்றமயிரும், மலைகளையும் விருக்கங்களையும் உதைத்துச் சாய்க்கவல்ல கால்களும், ஆகாயத்தை யளாவவுயர்ந்து உம்பருலகத்தையு மழிக்கத்தக்க முதுகும் பார்த்தவர்கள் அஞ்சிப் பயங்கொள்ளும்படியான கோரரூபங்கொண்டு சகலலோகங்களையுங் கலக்கி நாசம்பண்ணும்படி நடந்தான். அவ்வுருவத்தைத் தேவர்களு முனிவர்களும் பார்த்துப் பயந்து பலதிசைகளினும் ஓடிப்பதுங்கினார்கள். இத்தன்மைத்தான கொடிய ரூபத்தோடு எதிர்த்து வருகின்ற ஆகுவினுடைய பராக்கிரமத்தை எமது கர்த்தன் கண்டு இமைப்போதில் அதனை அசைவறப் பிடித்து முதுகிலாரோகணித்தருளினர். சுவாமியினுடைய திருமேனி தனது சரீரத்திற்பட்ட மாத்திரத்தில் அவனுடைய அஞ்ஞானவிருள் விலகிப்போய் மெஞ்ஞான ஒளி மிகுந்து மேன்மை பெற்றனன். சித்தர்கள் சாரணர்கள் முனிவர்கள் தேவர்கள் முதலாயினோர், ஆகுவை வாகனமாக வூர்ந்தருளியிருக்கின்ற கணபதி மூர்த்தியைப் பூசித்தார்கள். கஜமுகாசுரன் மார்புபிளக்கப்பட்டு உதிரம் பெருகவிழுந்து பிகளத்தை உலகத்தார் மாரொத்தமயமென்று சொல்லுகின்றார்கள். அவ்விடத்தில் கணேசமூர்த்தியானவர் ஓர் சிவலிங்கப் பிரதிட்டை செய்து பூசித்து அந்தலத்திற்குக் கணபதீச்சரமென்று திருநாமந் தரித்தனர், அளவற்ற சேனைகளோடு கஜமுகாசுரன் யுத்தகளத்தில் இறந்தானென்று அசுரராசனறிந்து, பயந்துதானொரு பட்சிரூபங்கொண்டு மேருமலையி லிருக்கின்ற

ஓர்குகையிலொளித்துக்கொண்டனன். அசுரர்குருவாகிய சுக்கிரனும் ஆகாயமார்க்கமாய் மறைந்துபோயினன். இந்திரன்முதலிய தேவர்களெல்லாங்கணபதிமூர்த்தியினிடத்தில் விடைபெற்றுத்தத்தம்பதிகளை யதாப்பிரகாரமடைந்து வாழ்ந்திருந்தார்கள்.

பின்னர் கணபதிமூர்த்தியானவர் தமது ஆகுவாகனத்தை நடாத்திக் கொண்டு சகலசேனைகளும் புடைசூழ்ந்துவரும்படியாக வடதிசையை நோக்கி யெழுந்தருளினர். அம்மாத்திரத்தில் நெடுநாள் ஓராலமரப்பொந்தில் குருட்டு மலைப்பாம்பாகியிருந்த விண்டுவானவர், அவ்வடிவத்தினின்று நீங்கிப் பழையபடி தெய்வரூபம்பெற்றுக் கணபதிமூர்த்திக்கெதிரில்வந்து பணிந்தெழுந்து இருகரங்களையுஞ் சிரமேற் கூப்பிநின்று ஓ அட்டமூர்த்தமாயிருக்கின்ற அம்பலனே! தேவரீருடைய தரிசனவீட்சண்ணியத்தால் அடியேற்கு உமாதேவியார் கொடுத்தசாபம் ஒன்றேயன்றி அடியேனுடைய மலபந்தங்களும் நீங்கும்படியான பேற்றினை யடைந்தேன். இனி இதைவிட யான் பெறத்தக்க பேறு வேறென்ன விருக்கின்றது? என்று மிக்க மனமகிழ்ச்சியோடும் புகழ்ந்து, புட்பம்முதலிய திரவியங்களாற் பூசனைசெய்து வேதாகமங்களினாற் றோத்திரம்புரிந்து கைதட்டி நிருத்தமாடி, மீட்டும் சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து சுவாமீ! அடியேற்குத் தேவரீர் தரிசனங்கொடுத்தருளிச் சகலநன்மைகளையுங் கிடைக்கச்செய்த இத்தினம் மார்கழிமாதம் சஷ்டியாதலால், வருடந்தோறும் வருகின்ற இத்தினத்தில் யாவரேனுந் தேவரீருக்கு வழிபாடு செய்வார்களாயின், அவர்கள் சகலவரிட்டங்களினின்றுநீங்கி இட்டகாமியார்த்தங்களைப்பெற்றுய்யும்படி அநுக்கிரகஞ்செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தனர்.

அதற்குக் கணேசமூர்த்தி, அவ்வாறே செய்தருளுவமென்று கிருபைசுரந்து அவ்விண்டுவையுந் தம்மோடழைத்துக்கொண்டு சகல சேனைகளோடுங் கயிலாயத்திற்குச் சென்று சிவபிரானையும் உமாதேவியாரையும் பணிந்து விடைபெற்று, தமது யதாஸ்தானமாகிய முதற்கோபுர வாய்தலின் முகப்பிலெழுந்தருளினர். அப்போது விண்டுமுதலாயினோர் கணேசமூர்த்தியைப் பூசனைசெய்து சுவாமீ! அடியேங்கள் இதுகாறும் மிகுந்த கொடுமையான கஜமுகாசுரனுக்குக் குட்டிக்கொள்ளுதல் முதலாகிய வணக்கங்களைச்செய்து அவனுடைய பணிவிடைகளை நடாத்தி வந்தனம். அவ்வணக்கத்தை இன்றுமுதல் அடியேங்கள் தேவரீருக்கெதிரே செய்கின்றனம். அவைகளைத் தேவரீர் வணக்கமாகக் கொண்டருளல் வேண்டும். அவ்வாறு தேவரீருக்கு வணக்கஞ் செய்வோர்கள் யாவராயினும் அவர்கட்கு இஷ்டகாமியார்த்தங்களைக் கிருபைசெய்யவேண்டுமென்று பிரார்த்தித்து, அவ்வாறே தாங்களனைவரும் வணக்கஞ்செய்து சகல வரங்களையும்பெற்று அவ்வவர்களுடைய பதவிகளை யடைந்தார்கள். என்று சூதபுராணிகர்சொல்ல, அவரைச் சவுனகாதி முனிவர்கள் பணிந்தெழுந்து சுவாமீ! கஜமுகாசுரன் யார்? அவன்பெற்றவரங்கள் யாவை? அவைகளையுந் திருவாய் மலர்ந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனர். அதற்குச்

சூதபுராணிகரிசைக்கு, ஓ சவுனகாதி முனிவர்களே! முன்னொரு காலத்தில் தேவேந்திரன் அசுரேந்திரனோடு யுத்தஞ்செய்து அவனைப் பின்னிட் டோடப் பண்ணித் தான் வெற்றிபெற் றிருந்தனன். பின்னாசுரேந்திரன் வலியுற்று தமது குலத்தில் தேவேந்திரனைச் செயிக்கத்தக்க வீரர்கள் ஒருவருமில்லையே யென்று மனந்தளர்ந்து தனது குலக்குருவாகிய சுக்கிரனைப் பணிந்தெழுந்து சுவாமீ! இப்போது எங்கள் குலத்திலிருக்கின்றவர்களுள் தேவேந்திரனைச் செயிக்கவல்ல வீரமுடையவர்கள் ஒருவரு மில்லையே? அந்தோ லவன்வீறி எங்களை வெல்லுகின்றனனே? தேவரீருடைய அருட்கடாட்சத்தால் நிலைபெற்றிருக்கின்ற எங்கள் குலமானது இவ்வாறு நாசமடைவதுமோ? இனியேனும் அவ்வாறாகாமல் செழித்தோங்கும்படி அடியேன் நடக்குங்கொள்ளத் தக்கது யாதேனுமுண்டாயின் அதனைத் தேவரீர் கிருபைகூர்ந்து திருவாய் மலரவேண்டுமென்று பிரார்த்தித்தனன். அதற்குசுக்கிரனானவன் மேல்நடக்கப்போகின்ற காரியத்தைத் தனது ஞானதிருஷ்டியினாலறிந்து, ஓ அசுரேந்திரனே! வசிட்ட முனிவருடைய மரபிலே மாகதனென்னும் ஓர்முனிவர் வனத்திலே முத்தியை வேண்டி அரிய தவஞ்செய்து கொண்டிருக்கின்றனர். அவரை எவ்விதத்திலேனும் வசப்படுத்திக் கூடும்படியாக உனது குலத்தில் ஓர் கன்னிகைக்குத் திட்டஞ்செய்தனுப்புவை. அவள் வயிற்றிலின்று யானைமுகத்துடனே ஒருவனுதிப்பான். அவன் தேவேந்திரனையடக்கி உங்கள் குலத்தைத் தழைத்தோங்கும்படியாகச் செய்வன். ஆதலால் அதனை விரைவில் நடாத்தக்கடவை யென்றுசொல்லி விடைகொடுத்தனன். பின்னர் அசுரேந்திரன் இதுகாறு மடைந்திருந்த துயரங்களை யெல்லாம் இத்தினமே போய்விட்டனவென்று மனமகிழ்ந்து சுக்கிரனைப் பலமுறை துதிசெய்து அவ்விடத்தினின்று நீங்கித் தனது பட்டணத்தை விரைந்தடைந்து, அசுரகுலத்திலுள் அழகிற் சிறந்தவளாயிருக்கின்ற விபுதையென்னும் ஓர் கன்னிகையிடத்திற்சென்று தனது மனக்குறையையுஞ் சுக்கிரன்சொல்லிய சூழ்ச்சியினையும் அறிவித்தான். அதற்கவளிசைந்து அக்கிடத்தில் தவஞ்செய்திருக்கின்ற அம் மாகதமுனிவரிடத்திற் சென்று, அவர்செய்யுந் தவமகிமையைப் பார்த்து, இதற்குமேலே எதிர்வந்தாலும் இவர் சபிப்பவராயிருக்கவில்லையே? வலுவிற்போய்ப் பணியலாமென்றால் சபித்து நாசமாக்குவரே? தவங்கலைந்தபோதுங் கூடத்தக்கவரல்லரே? நமதரசனுடைய இட்டத்தை எவ்விதத்தில் திருப்தி செய்யப்போகின்றேமென்று எண்ணமிட்டு மனங்கலங்கி, மீட்டுந் தெளிந்து எண்ணியகாரியங்களைக் குறைவில்லாமலடையத்தக்கவர்கள் தவத்தர்களேயாதலால், இத்தவசியை வசமாக்குவதற்கு யாம் தவஞ்செய்தே வசமாக்கிக் கொள்ளவேண்டுமென்று தனக்குள் நிச்சயஞ்செய்து கவலைகளினின்றுநீங்கி மாகதமுனிவர் தனக்கு மணாளராக வேண்டுமென்று மனதிற் தியானஞ்செய்துகொண்டு பசிதாகம் முதலியவைகளை யடக்கி ஓர்பார்சத்திலிருந்து தனது அழகுற்ற சரீரமெல்லாம் மழுங்கி வருந்தும்படியாக அளவற்ற காலந் தவஞ்செய்து வந்தனள்.

இவ்வாறு அவள் செய்கின்ற தவமும் பழவினையும் ஒன்றுபட, ஒருநாள் மாகத முனிவர் தமது தவத்தை விடுத்துக் கண்களை விழித்தனர். அப்போது அவ்விடத்தில் ஆணானையும் பெண்ணானையுங்கூடிப் புணர்ச்சிசெய்திருக்க அதை அம்முனிவர் கண்டு காமவிகாரந் தலைக்கொண்டு மன்மதனுடைய சருப்புவில்லுக்கிரையாகி மயங்கினர். அதை விபுதையானவளறிந்து தமதுதவம் ஈடேறியதென்று மனமகிழ்ந்து தானுந்தனது தவத்தைவிட்டெழுந்து நேரேயென்று அம்முனிவர் அருகிற்சென்று வல்லிகொடிபோல நின்றனள். அவளை அம்முனிவர்காணவும் ஓர் சிறியகாட்டினுள் மூண்டிருக்கின்ற கனலோடு காற்றுங்கூடினால் பின்னவ்வழல் யாவையுந்தகிக்க மேலெழுவது போல, அவருக்குள்ளே பற்றியிருந்த காமவிகாரமானது அவரினின்று மீறி மேலோங்கித் துன்பஞ்செய்தது. அதன்பேரில் அம்முனிவர் விபுதையைப் பார்த்து, ஓ பெண்கள் நாயகமே! நீ கன்னிகையா ஒருவனுடைய மனைவியா? நீ என்னிடத்திற்கு வந்தகாரியம்யாது? சொல்லுகவென்றுகேட்டார். அதற்கு விபுதையானவள் அவரைப்பணிந்தெழுந்து சுவாமீ! அடியேன் கன்னிகையே! தேவரீர்க்கு அடியேன் மனையாளாகிப் பணிசெய்யும்படியான நன்மையைக் கோறி அளவற்றநாள் தவஞ்செய்துகொண்டிருக்கிறேன்; இப்போது எனது தவம் நிறைவேறும்படியாகத் தேவரீரும் விழித்தருளியதால் இனி அடியாட்குக் கிருபைபுரியவேண்டுமென்று பிரார்த்தித்தனள். அதற்கம்முனிவர் சந்தோஷித்து பெண்ணே! நாம்செய்த தவப்பயனே இவ்வாறு நம்மிருவோரையும் பொருந்தக் கூட்டிவைத்ததாதலால், இனி நீ உனது சங்கடங்களை யெல்லாம் விடுத்து ஓர்பெண்யானையாக வுருக்கொள்ளுகவென்று சொல்லினர். அவ்வாறே அவள் பெண்யானையாயினள். பின்னர் மாகதமுனிவர் ஆண்யானையாக வுருக்கொண்டு அவளோடு கூடிப்புணர்ந்தனர். அப்போது இரண்டுகொம்பையுடையவனும், நீண்டதுதிக்கரத்தையுடையவனும், மேககர்ச்சனையைப்போன்ற குரலினையுடையவனும், கஜமுகாசுரன் பிறந்தான். ஓர் சிங்கக்குட்டியானது தாய்வயிற்றினின்று குதிக்கும்போதே யானையினுடைய மத்தகத்திற் பாய்ந்து பிளப்பதுபோல அக்கஜமுகாசுரன் தனது தாயுதரத்தினின்றும் உதித்தபோதே சகலலோகங்களையும் வாரியுண்ணத்தக்க தொழிலைக் கைக்கொண்டவனும், ஓர்பட்டாக்கத்தியை வீசிக்கொண்டு பர்வதங்களையெல்லாங் கால்களினால் உதைத்துத் தள்ளியும், கைகளினால் அண்டகடாகங்களைக் குத்திப்பொடியாக்கியும், சத்தசாகரங்களிலும் பாய்ந்து அதனைக்கலக்கியும், பத்துத்திசைகளினும் மோடியார்ப்பரித்தும், எங்குங்காற்றுப்போலப் பறந்து திரிந்துகொண்டிருந்தான். இவனன்றி இன்னுமளவற்ற அனேக அசுரவீரர்கள் விபுதையாகியபெண்யானையினுடைய மயிர்க்கால்களினின்று சர்வாயுதபாணியர்களாயும் அழலைச் சொரியும் விழிகளையுடையவர்களாயும் பிறந்து ஆர்ப்பரித்தார்கள். இத்தன்மைத்தான கோரங்களைப் படைத்தபிள்ளைகளை ஆண்யானையாயிருந்த மாகதமுனிவர் பார்த்துப்பயந்து யாவருநல்லதென்று கூறாதிருப்பார்? கடலானது ஓர்காலத்

தில் யாவரும் அறியும்படியாக விடத்தைக்கக்கியதுபோல நாம்யாவராலும் புகழத்தக்கதாபதனுயிருந்தும் சகலலோகங்கட்கும் அழியாததுயரத்தையுண்டாக்கினேமேயென்று கிலேசித்து மனம்புழுங்கிவாடி தமது புத்தியைத்தாமே தேற்றிக்கொண்டு தம்மைப்பிடியானையாக்கக்கூடிய விபுதையைப்பார்த்து, நீயென்ன குலமென்றுகேட்டுத் தெரிந்துகொண்டு, அவளைத் தனது பதவியைநோக்கிச் செல்லுமாறு விடைகொடுத்துத், தாம்முன்போலவே தவத்திலிருந்தனர். அவ்விபுதையும் தர்வினைத்துவந்தகாரியம் கைகூடியதென்றுஞ் சந்தோஷத்துடன் சென்று தனதிருக்கையை யடைந்தனள். கஜமுகாசுரனும் மற்றவீரர்களும், தேவர்கள்முதலிய சகலசீவராசிகளையுங்கொன்று தின்றுக்கொண்டு சர்வசங்கார காலத்திலெழுகின்ற உருத்திரமூர்த்திபோலுடையனைக்கு இன்பமாற்றினர்கள். அதனுல்சகலலோகங்களிலுள் தருமம்-தானம்-ஈகை-அருள்-சீலம் வேதவொழுக்கம்முதலான எல்லாக்கருமங்களு மழிந்துபோய், இலக்குமியானவள் எவ்வுலகங்களிலும் வசித்தலன்றித் தாமரைப்பூ வொன்றினையே இடமாகக் கொண்டிருந்தனள். இவ்வாறு அப்பாதகர்கள் உலகமனைத்தையுங் கனல்பற்றிய காட்டைப்போல நாசமாக்கிக்கொண்டு இமயகிரியைச்சேர்ந்து அங்கு தவஞ்செய்திருக்கின்ற பெரியோர்களையெல்லாம் உபத்திரஞ்செய்து யாவரும் இதுதானோ பிரளயகாலமென்று சொல்லும்படியாகத் திரிந்துகொண்டிருந்தார்கள். அப்போது சுக்கிரனெனுவன், அவர்கட்குப்பின்னும் மேலான காரியங்களை [illegible]படேசிக்கும்படியாக ஆலோசித்துச் சொல்லுவானுகித் தானும் நாம் பேசுமுன்னமே யென்னசெய்கின்றுனோவென்று பயந்து, கஜமுகாசுரனுக்கெதிரே சென்று மைந்தனே! நாம் உனதுகுலத்திற்கு மந்திரியுங் குருவுமாகும். உனது குலத்தை விருத்திசெய்யவேண்டி இப்போது யாம் உனக்கு மேலான வுறுதியைச்சொல்ல வந்தோமென்றனன். அதைக்கஜமுகாசுரன்கேட்டு அவனைப் பணிந்தெழுந்து, சுவாமீ! இனி எனக்குச் சொல்லவேண்டியது யாதேனுமுண்டாயின் அதனைச்சொல்லி யருளவேண்டுமென்று கேட்டனன். அதற்குமேல் சுக்கிரன் சந்தோஷங்கொண்டு, அன்பனே! யானைமுகத்தோடுங்கூடியவனைக்கும் உனது குலத்திலுதிக்கும் தேவேந்திரன் பகைவனுயிருக்கின்றுன். அவன் உனது வரலாற்றினைக் கேட்டுச் சகலசேனைகளோடும் வெளிப்படுவனுயின் அப்போது நீ அவனை என்னசெய்யமாட்டுவை. நீ யாரிடத்திலும் வரங்கள் முதலானவைகளைப்பெறவில்லை. ஆதலால் வேறொருகாரியத்தில் மனதைச் செலுத்தாமல் இனியேனுஞ் சிவபிரானைநோக்கித் தவஞ்செய். அவருடைய கிருபை உனக்குண்டாயின், அப்போதே எல்லாத் தேவர்களும் உனது ஏவலைக்கேட்பார்கள். நீநினைத்தகாரியங்களெல்லாம் நினைத்தவண்ணமேகைகூடும். இதைச்சத்தியமாகநம்பக்கடவையென்று சொல்லினன். இவ்வாறுஇதமானகாரியங்களைக் கூறியதனால், ஆசிரியனைக் கஜமுகாசுரன்மீட்டும்பணிந்தெழுந்து பலமுறைதுதிசெய்து தவத்தின்மீதுண்டான இச்சையினால்உடனே விடைபெற்றுத் தனது தம்பியர்கள் புடைசூழும்படியாக மகமேருகிரியின் ஓர்பக்கத்திலிருந்து ஆயி

ரம்வருடஞ் சருகுகளைப் பட்சித்துக்கொண்டும், ஆயிரவருடஞ் சலபானஞ் செய்துகொண்டும், ஆயிரவருடம் யோகாமிர்தம் புசித்துக்கொண்டும் இவ்வாறு நாலாயிரவருடம் அகோரமாகிய தவத்தைச்செய்தனன். அத்தவத்திற்குச் சிவபிரான் கிருபைகூர்ந்து அவனெதிரிற் பிரத்தியட்சமாகி உனக்கு வேண்டிய வரங்களைக் கேளென்று திருவாய்மலர்ந்தனர். உடனே கஜமுகாசுரன் பணிந்தெழுந்து ஆனந்தபரவசமுற்று இருகரங்களையுஞ் சிரமேற் கூப்பி, சுவாமீ! விண்டு முதலிய உயர்திணைகளினுலும், யானைமுதலிய அஃறிணைகளினுலும், அத்திரசத்திரங்கள் முதலிய ஆயுதங்களினுலும் அடியேன் எக்காலத்தும் அழிவில்லாமலிருந்து தேவர்கள் முதலாயினோர் இரவும் பகலு மடியேனை யேவல் கேட்டு நடந்துகொள்ளும்படியாய் அரசாட்சி செய்யவேண்டும். ஒருவேளை சுவாமிகளுடைய கிருபையினுல் அடியேற்கு முடிவுநேருமாயின் அப்போது அடியேன் மேன்மைபெற்றிருக்கும்படி வரங் கொடுத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனன் அவ்வாறே சிவபிரான் அவனுக்கு வரங்களைக் கொடுத்தருளி அந்தர்த்தானமாயினர்.

இப்பால் கஜமுகாசுரன் தனது தம்பியரோடு அவ்விடத்தினின்று நீங்கித் தனதிருப்பிடத்திற்கு வந்துவிட்டனன். அப்போது அசுரேந்திரனும் சுக்கிரனும் அவனிடத்தில் வந்து கலந்தார்கள். தேவதச்சனானவன் அவ்விடத்தில் சகலவளங்களோடும் ஓர் நகரமுண்டாக்கி அதற்கு மதங்கநகரமென்று பெயரிட்டுக் கொடுத்தான். அந்நகரத்தில் கஜமுகாசுரனிருந்து திரிலோகங்களினும் கொடுங்கோல்செலுத்தித் தேவர்கள் முதலிய யாவரும் தன்னை வணங்கும்படியாக அரசாட்சி செய்துவந்தனன் சச்சபநிதி-கற்பநிதி-சங்கநிதி-பதுமநிதி-நந்தநிதி-நீலநிதி-மகாநிதி-மகா பதுமநிதி-முகுந்தநிதி என்கின்ற நவநிதிகளும் அரிசந்தனம்-கற்பகம்-சந்தானம்-பாரிசாதம்-மந்தாரம் என்கின்ற பஞ்சதருக்களும், காமதேனு சிந்தாமணி முதலியனவும் அம் மதங்கநகரத்தை யடைந்து பணிசெய்திருந்தன. இந்திரன்முதலிய தேவர்களும் கிரீடாதிபதிகளான இராஜர்களும் மிகுந்த பயபத்தியுடனே தினந்தோறும் வந்து அவனைப் பணிந்து ஏவல்செய்துகொண்டு எல்லா இறுமாப்புகளையு மொழிந்திருந்தார்கள். சுக்கிரனும் அசுரேந்திரனும் அவனுக்கு அமைச்சரானார்கள். பின்னர் கஜமுகாசுரனவன், தனதுகுலத்திலும், தேவர்குலத்திலும், நாகர்குலத்திலும் உள்ளமிக்க அழகான ஸ்திரீகள் அநேகரைக் கலியாணஞ்செய்துகொண்டு சகல போகபாக்கியங்களையுங் குறைவற அனுபவித்துத் திரிலோகங்களினுங் கொடுங்கோல்செலுத்திவருகின்றநாளையில், ஓர்நாள் தன்னைப் பிரதிதினம் பயபத்தியோடு பணியவருகின்ற தேவர்களை அப்பாதகன்பார்த்து, ஓ விண்ணவர்களே, இன்றுமுதலாக நீங்கள் நம்மைப் பணியவருகின்றபோதெல்லாம் இருகரங்களையும் முட்டிபிடித்து மூன்றுதரஞ் சிரசில் குட்டிக்கொண்டு, பின்னர் அக் கரங்களை மாறிச் செவிகளைப் பிடித்துத் தோப்புக்கரணம் போடக்கடவீர்கள். இதுவே நீங்கள் நமக்கு இட்டமாகச் செய்யத்தக்க வணக்கமென்று ஆக்கியாபித்தனன். அன்று

முதல் தேவர்கள் யாவரும் அவ்வாறே செய்துவந்தார்கள். மனதில் எவ்வளவேனும் தயையில்லாமல் தேவர்களை யேவல்செய்வித்துவந்த கஜமுகாசுரனுடைய பிறப்பும், அவனுக்குப் பாக்கியம் வந்த வரலாறும் இவையாகும். இத்தன்மைத்தான கொடும்பாவியை ஓர் நிமைப்போதில்வென்ற கணபதிமூர்த்தியினுடைய திருவவதார மகிமையைக்கூறிய இச்சரித்திரத்தைப் பிரதிதினம் பாராயணஞ்செய்வோர்கள் சகல அரிஷ்டங்களினின்றும் நீங்கி மெய்ஞ்ஞான சுகத்தையடைந்து வாழ்வார்கள்.

கணபதி திருவவதாரப் படலம்

முற்றிற்று.

பத்தாவது

மகோற்கட விநாயகர்

திருவவதாரப் படலம்.

கணபதியென் னுலகேத்துங் கண்ணுதலா ரவதாரங்
குணமுறக்கேட் டனையனதே கோதின்மகோற் கடனென்ன
வணவுறு மையிரண்டா மவதார மிதுவிசைகூர்
குணமலிதெய் வதநெறியிற் கொண்மினோ முனிவீர்காள்.

ஓ சவுனகாதி முனிவர்களே! விநாயகமூர்த்தியானவர், கணபதி திருவவதாரங்கொண்டு தேவர்களை வருத்திய கஜமுகாசுரனைக் கொன்று விண்டுவினுடைய சாபத்தைத் தீர்த்தருளிய திருவிளையாடலைச் சொன்னோம். இப்பால் மகோற்கடாவதாரங்கொண்டு செய்தருளிய திருவிளையாடலைச் சொல்லுவோம் கேட்பீர்களாக.

தாமரைத் தடாகங்களும், குடிவளப்பமும், வயற்செழுமையுஞ் சிறந்து விளங்கியிருக்கின்ற அங்கதேயத்தில், சகலசெல்வங்களையும் பெற்றோங்கிய காத்திரமென்னுமோர் பட்டணமுண்டு. அப்பட்டணத்தில் குடிகொண்டிருக்கின்ற அந்தணர்கட்குள், வேதமுதலிய சாத்திரங்களை யாராய்ந்துணர்ந்த உள்ளத்தினனும், போகபாக்கியங்களில் இச்சைவையாது யாகாதிகளைச் செய்கின்றவனும், இரவுந்திரகேதுவென்னும் பெயரினையுடைய ஓர் அந்தண னிருந்தான். அவனுக்குக் கற்பினும் அழகினும் அருந்ததியையும் இரதியையும் நிகர்த்த சாரதையென்னும் பெயருடைய ஓர் மனைவி யிருந்தனள். இவ்விருவர்களும் உடலுமுயிரும்போல மருவி வாழ்ந்திருக்கின்றநாளையில், அவர்கட்கு இரட்டைப்பிள்ளைகள் பிறந்தார்கள். உடனே தந்தையாகிய இரவுந்திரகேதுவானவன் அவர்

கட்குச் செய்யவேண்டிய கருமங்களைச்செய்து நிறைவேற்றி ஒப்பற்ற கணிதர்களைக் கூவி திதியாதி நிலைகளை யாராய்ந்து, தேவாந்தகனென்றும் நராந்தகனென்றும் நாமகரணஞ் செய்தனன். தாயாகிய சாரதை அவர்களை ஆட்டியும் ஊட்டியும் அன்போடு வளர்த்துவந்தனள்.

இவ்வாறு இருவரையும் சாரதை பாராட்டிவரும்போது, அப்பிள்ளைகள் நாளுக்குநாள் வளர்பிறையைப்போலத் தொட்டிலில் வளர்ந்துகொண்டிருக்குஞ் சமயத்தில் சின்னாள் விண்ணுலகைப் பகைவர்போல மல்லாந்து ஆகாயத்தைப் பார்த்தும், சின்னாள் பாதலத்தைக் கொள்வார்போலக் கவிழ்ந்து நிலம் பார்த்தும், சின்னாள் அறங்களெல்லாந் தழைத்திருக்கும்படியாக வுட்கார்ந்தும், சின்னாள் மறங்களனைத்தும் வீழ்ந்தொங்கும்படியாக வெழுந்தும், சின்னாள் நல்லோர்களுடைய செம்மையெல்லாம் புறங்கொண்டு செல்வதாக நடந்தும், சின்னாள் எங்குஞ் செயிர்விளையாடும்படியாகத் தெருக்களில் விளையாடியு மிருந்தார்கள். இவ்வாறு இவர்கள் மல்லாந்தும், கவிழ்ந்தும், இருந்தும், எழுந்தும், நடந்தும், விளையாடியும் இருக்கின்ற காலத்திற்றானே பாரித்த சரீரத்தையுடையவர்களாகித் தங்களடிகளைப் பெயர்த்துவைக்குந்தோறும் பூமியைத்தாங்குகின்ற ஆதிசேடன் நெளியவும், தாங்கள் குதித்து விளையாடுந்தோறுந் தங்கள் முடிபட்டு உடுக்களுதிரவுமாக விருந்தார்கள். அவர்கட்கு ஐந்தாம்வயதில் இரவுந்திரகேதுவானவன் உபநயனஞ்செய்வித்து வேதாகமாதிகளையும் ஓதுவித்தனன். அவர்களும் அவைகளைத் தெளிவுபெறவோதித் தமது தந்தையினும் பதின்மடங்கு அதிகமானார்கள். அக்காலத்தில் ஓர்நாள் நாரதமுனிவர் அவ்விடத்தில் வர, அவரை இரவுந்திரகேதுவும் சாரதையும் எதிர்கொண் டழைத்துவந்து, ஓர் ஆசனத்திலிருத்திச் சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து, அளவற்ற தோத்திரங்களைச் செய்து, பற்பல உபசாரவார்த்தைகளைப் பேசித் தமது புத்திரர்களாகிய தேவாந்தகனையும் நராந்தகனையும் அழைத்து, அவர்கள் நாரதமுனிவரைப் பணியச்செய்து, சகலவானோர்கட்கும் நன்மையை விளைக்கவெழுந்தருளிய கிருபாநிதியே! இப்புத்திரர்கட்குப் பூரணாயுளுஞ் செல்வமுங் கிடைக்கும்படியாகத் தேவரீருடைய அமிர்தவாக்கினால் ஆசீர்வதிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதற்கு அம்முனிபுங்கவர் கிருபைகூர்ந்து தம்மைப் பணித்திருக்கின்ற பிள்ளைகளிருவரையுந் தமது மடித்தலத்திலெடுத்து வைத்துக்கொண்டு உச்சிமோந்து சரீரமுழுவதுந் தடவிமீட்டுக் கீழேவிடுத்[illegible] அவ்விருவருக்கும் ஸ்நானஞ் செய்வித்து, விதிப்படி தீட்சைபுரிந்து, ப[illegible]ாக்ஷர உபதேசஞ்செய்து, அதைச் செபிக்கவேண்டிய முறைமையினையு[illegible]றி, மைந்தர்களே! இன்றுமுதல் இம்மகாமந்திரத்தைச் செபஞ்செய்து வருவீர்களாயின், உங்கட்குச் சிவபிரானுடைய கிருபையினால் யாதொரு தீங்கும் நேராது. சகல சித்திகளுங் கைகூடும். தேவர்களெல்லாம் உங்களைப்பணிவார்களேயன்றி நீங்கள் அவர்களைப் பணியாதிருக்கத்தக்க யோக்கியம் உங்கட்குண்டாகுமென்று அநுக்கிரகஞ்செய்து போயினர். அதற்குமேல் அப்புத்திரர்கள் சகல செல்வங்களை

யுந் தவஞ்செய்து பெறவேண்டுமென்று ஆலோசித்து, உடனே தாய்தந்தையரைப் பணிந்து விடைபெற்றுப் பலவிருக்ஷங்கள் மலிந்திருக்கின்ற ஓர்வனத்திற்சென்று அவ்வனத்தினடுவில் ஓர்சோலையும் அச்சோலைமத்தியில் ஓர் தடாகமும் அத்தடாகத்தி னருகில் ஓர்சிவாலயமு மிருக்கக்கண்டு, அச்சிவாலயத்தி லெழுந்தருளி யிருக்கின்ற சிவலிங்கத்தைப் பூசைசெய்து ஓர்காற் பெருவிரலை நிலத்திலூன்றிப் பஞ்சேந்திரியங்களையு மடக்கி நான்மருங்கிலும் அக்கினியை வளர்த்து ஆயிரம் வருடம் ஒருபொழுது அன்னமுண்டும், ஆயிரம் வருடம் தண்டுகளைப் புசித்தும், ஆயிரம் வருடம் கிழங்குகளை யருந்தியும், ஆயிரம் வருடம் இலைகளை மெய்த்தும், ஆயிரம் வருடம் கனிகளை நுகர்ந்தும், ஆயிரம் வருடம் காய்களைக்கறித்தும், ஆயிரம்வருடம் சருகுகளை அயின்றும், ஆயிரம் வருடம் சலபானஞ் செய்தும், ஆயிரம் வருடம் வாயுபட்சணஞ் செய்தும், ஆயிரம்வருடம் நிராகாரமாயிருந்தும் இவ்வாறு பதினாயிரவருடம் சூரியனைப் பார்த்துக்கொண்டு அருமையான தவஞ்செய்தார்கள். அத்தவத்திற்கு அருட்கடலாகிய சிவபெருமான் கிருபைசுரந்து அவர்கள் தம்மையெவ்வாறு தியானித்தார்களோ அவ்வாறே நீலகண்டமும் ஐந்துமுகமும் பத்துக்கரங்களும் பதினைந்து விழிகளும் சடைமுடியில் மூன்றாம்பிறைச்சந்திரனும் விளங்கும்படியாக உமாதேவிசமேதராய் இடபவாகனத்தையூர்ந்து அளவற்றசிவகணங்களுந் தேவர்கள் முனிவர்கள் முதலாயினோருஞ் புடைசூழ, அவர்களெதிரே பிரத்தியட்சமாயினர். உடனே அவர்கள் கர்த்தனுடைய திருவுருவங்களைத் தியானித்தவாறே தரிசித்து அடியற்றபனைபோலச் சாஷ்டாங்கமாக விழுந்தெழுந்து பலமுறைவலஞ்செய்து நின்று இருவிழிகளிலும் ஆனந்தபாஷ்பஞ் சொரிந்து உடல்முழுவதும் உரோமாஞ்சிதம்பூத்து கெக்குவிட்டு நெஞ்சமுருகிக் கரங்களைச்சிரமேற்கூட்டி சாமவேதங்களினால் அளவற்ற தோத்திரங்களைச் செய்தார்கள், இவ்வாறு அவர்கள் வரம்பெற்ற அன்போடுசெய்த துதிகட்குச் சிவபிரான் சந்தோஷித்துத் தமது கிருபாநோக்கத்தாலவர்களைப் பார்த்து அன்பர்களே! நீங்கள் கருதியவரங்களைக் கேளுங்களென்று திருவாய் மலர்ந்தனர். அதை அவ்விருவர்களுங்கேட்டு ஆனந்தித்துத்தங்கள் சிடசிந்தத்திலும் ஆலோசித்து சுவாமீ இருவகைப் பொருளிலும் இருவகைத்தணையினும் இருவகைப்படையினும் அடியேங்கள் இறுதியில்லாமலிருக்கவும் பிரமன் விண்டு முதலியதேவர்கள் அடியேங்களிட்ட பணிகளைச்செய்யும்படியான செல்வமும் கிருபை செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதற்குச் சிவபிரான் கிருபையோடும் அவர்களைப்பார்த்து ஓ சிறுவர்களே! விநாயகமூர்த்தியினுடைய திருக்கரத்தாலன்றி ஏனையோரால் உங்கட்கு மரணமில்லையென்று திருவாய்மலர்ந்து அவர்கள்கோரிய மற்றவரங்களையுந் தெய்வப்படையுங் கொடுத்தருளி அந்தர்த்தானமாயினர்.

பின்னர் அவ்விருவர்களும் அளவற்ற மகிழ்ச்சியோடு தங்கள் பட்டணத்திற்குச்சென்று தாய்தந்தையரைப்பணிந்தெழுந்து தாங்கள் பெற்றுவந்த வரங்

களையெல்லாம் அவர்கட்குக்கூறிச் சிலநாள் ஆமோதையுற்றிருந்து அதற்குமேல் திரிலோகங்களையும் ஆளவேண்டுமென்று இச்சைகொண்டு திதிவாரநட்சத்திர யோககரணமுதலியவைகள் சுபமாயிருக்கின்ற ஓர்நாளை ஆராய்ந்து அந்நாளில் நித்தியவிதிகளை முடித்து செய்புங்கன்மவுபம்பார்த்து வேதியர்கட்கு அளவற்ற தானங்களைக்கொடுத்து அவ்விருவர்களில் மூத்தவனான தேவாந்தகனானவன் நராந்தகனையழைத்து தம்பி நீ இப்பூவுலகத்தையும் பாதலலோகத்தையும் உன்வசப்படுத்தி அரசாட்சிசெய்துகொண்டிரு; யான் தெய்வலோகமுழுவதும் வசப்படுத்தித்தேவர்களையெல்லாம் பணிகொள்கின்றே னென்றுசொல்லி அவனிடத்திலுந் தனது தாய்தந்தையரிடத்திலும் விடைபெற்றுச் சிவத்தியானஞ் செய்துகொண்டு ஆகாயமார்க்கமாகச் சொர்க்கலோகத்திற்குச்சென்று அமராவதிபட்டணத்திற்கு வெளியேயிருக்கின்ற கற்பகச்சோலையைக் கையாலுங் காலாலுந்தள்ளியுதைத்து அல்லோல கல்லோலப் படுத்தினன். அதைஅங்கிருந்தோர்களிற் சிலர்பயந்தோடித் தேவேந்திரனைப் பணிந்தெழுந்து, ஆண்டவனே! இதோ ஓரவுணன்வந்து நமது கற்பகவனத்தை யழிக்கின்றா னென்று அறிவித்தார்கள். அதைக்கேட்டதும், இந்திரனுக்கு மிகுந்த கோபமுண்டாகித் தனது சேனைத்தலைவர்களைக்கூவி நமது கற்பகவனத்தை ஓரவுணன்வந்து அழிக்கின்றானும், நீங்களிந்நிமிஷத்தில் அங்குசென்று அவ்வவுணனைக் கைப்பிடியாகப் பிடித்துக்கொண்டுவந்து யானையின்காலில் இடறுவிக்கக் கடவீர்களென்று ஆக்கியாபித்தான். அவர்களும் அதற்குடன்பட்டுத் தங்கள் தங்கள்சேனைகளோடு வெளிக்கொண்டு தேவாந்தகனை வளைத்துச் சமர்செய்தார்கள். அப்போது சிவானுக்கிரகத்தால் மேலானபராக்கிரமத்தினை யடைந்திருக்கின்றதேவாந்தகன், அதிக கோபங்கொண்டு யானைக்கூட்டத்துள் ஓங்கடிச் சிங்கம் புகுந்ததுபோலத் தேவசேனைகளிற்புகுந்து விமானங்களைத்தூக்கி விமானங்கள் மீதெறிந்தும், இரதங்களைத்தூக்கி இரதங்கள்மீதுவீசியும், யானைகளைத்தூக்கி யானைகள்மீதுஎற்றியும், குதிரைகளைத்தூக்கிக் குதிரைகளின்மீது விடுத்தும், பதாதிகளைத்தூக்கிப் பதாதிகள்மீதுதாக்கியும், இவ்வாறு காலாந்தருத்திரனைப்போல நிமைப்போதில் நால்வகைச்சேனைகளையும் அதப்படுத்தி, அச்சேனைகட்குத்தலைவராகவந்த வீரர்களையெல்லாங்காலினுலுதைத்தும், கையினலடித்தும், அனலெழும்பக் கண்களை விழித்தும், பெருமூச்செறிந்தும், ஆர்ப்பரித்தும், நகைத்தும், குதித்தும், தோள்களைத்தட்டியும், உரைவிம்பும், நிமிர்ந்தும், சின்னபின்னப்படுத்தி விட்டனன்.

இச்சம்பவத்தை இந்திரன்கேள்வியுற்று வடவானலத்தைப்போலக் கொதித்தெழுந்து பின்னும் அளவற்ற சேனைகளோடு தனது அயிராவதத்திலேறித் தேவாந்தகனைநோக்கிச் சென்றனன். அத்தேவாந்தகன் இந்திரனையும் அவன் சேனைகளையும் பார்த்தமாத்திரத்தில் ஓர் மங்கையானவள் ஓராடவனைக்கண்டு வலிதிற்கூடவந்தால் அவ்வாடவனுக்கு எவ்வாறு காமக்கனல் அதிகரிக்குமோ அவ்வாறு அவனுக்குக் கோபக்கனலதிகரித்து மந்திரகிரியை யொத்துப்பாரித்

இருக்கின்ற தனது கொமோத்தை இருகைகளும் பொருந்தவளைத்து ஒன்று
பத்து நூறு ஆயிரம் பதினாயிரமென்னுங் கணக்கினுமதிகமாக அளவற்றதிவ்ய
பாணங்களைக் கோடைமழை போலப்பொழிந்து ஓர் கணப்போதில் இந்திர
னுடைய சேனைகளையெல்லாங் கொன்றனன். அதை இந்திரன்பார்த்து ஆல
காலம்போலக்கொதித்து தனது ஐராவதத்தை விரைவில் முடுக்கிச்சென்று
வச்சிராயுதத்தினால் தேவாந்தகனுடைய மார்பில் இடிபோலப் புடைத்தான்.
அப்போதவ்வச்சிராயுதமானது கருங்கற்பாறைமீதறைந்த அல்லிக்கொடியைப்
போலப் பொடிப்பொடியாய்ச் சிதறிப்போய்விட்டது. இவ்வாறு வச்சிராயுதஞ்
சிதறிப்போகதலும், இந்திரனானவன் தனது அயிராவதத்தைக் குனிந்துக் கொம்
பினால் அவன் மார்பைப் பிளக்கும்படியாக முடுக்கினான். அஃது அவ்வாறே
குனிந்து தனதுமார்புக்கு நேராகவருதலும், தேவாந்தகன் ஒரறையினால் அத
னுடைய வீறுப்பையடக்கி, மற்றோரறையினால் இந்திரனுடைய பற்களெல்லாம்
படபடவென்று உதிரும்படியாகக் கன்னத்திலே புடைத்தான்.

உடனே இந்திரன் அவ்வடியைத் தாளமாட்டாமல் கீழே விழுந்து
மூர்ச்சையாகிப் பின்னர் தெளிந்தெழுந்து இனியாம் இங்கு நீடித்திருந்தால்
இப்பாதகன் அரைக்கணத்தில் நம்மைக்கொல்லுவானென்று பயந்து காந்
தோடி மகமேருகிரியிலிருக்கின்ற ஓர்குகையில் ஒளித்துத்தவஞ்செய்து கொண்
டிருந்தான். பின்னர் இச்சம்பவத்தை இந்திராணியும் மற்றத் தேவர்களும்
கேட்டுப்பயந்து அவர்களும் அவ்வாறேசென்று அம்மலைக்குகைகளி லொளித்
துக் கொண்டார்கள். சொர்க்கலோக மனைத்துங் கலங்கின. அதற்குமேல்
தேவாந்தகன் செயபேரிகையறைவித்து இந்திரனுடைய அயிராவதத்திற்றான்
ஆரோகணித்து இராசவீதிகளை வலமாகவந்து சதன்மத்திலிருக்கின்ற சிங்கா
தனத்தில் ஒற்றைக்குடையின் கீழிருந்து இருமருங்கினும் வெண்சாமரைகள்
வீசவும் தேவர்கள்யாவரும் பணிந்து தோத்திரஞ்செய்யவும், அரம்பையர்
நடனமாடவுமான கோலத்துடனே கொலுவிருந்து தேவேந்திரனைப் பார்க்கி
னும் பதின்மடங்கு அதிகமாக யான் உங்களையெல்லாங் காப்பாற்றுகின்றேன்.
என்னைச் சத்துருவென்றெண்ணி நீங்கள் கலியவேண்டாம். யாவரும்பழைய
படி அவ்வவர்கள் யதாஸ்தானத்தையடைந்து களித்திருக்கக் கடவீர்களென்று
சொர்க்கலோகமெங்குங் களிதூங்கும் படியாகச் சொல்லி முரசறைவித்தான்.
அதையாவருந் திண்ணமாகநம்பித் தத்தமிருக்கையை யடைந்தார்கள். பின்னர்
தேவாந்தகனானவன், அவ்வாறடைந்தவர்களிடத்தில் கிருபையும், அடையாத
வர்களிடத்தில் கொடுமையும்வழங்கி முன்னர் யுத்தகளத்தில் உடைந்துசென்ற
தேவசேனைகளையும், மிகவும்வருந்தி வாட்டமுற்றிருக்கின்ற அவ்வவர்கள் மாபி
ளைகளையும், இலவியவர்களைஏவி வரவழைத்து அவர்கட்குப் பலஆதரவுகளையுஞ்
சந்தோஷத்தையுஞ்செய்து தனதருகிற்சூழ்ந்திருக்கின்ற அவுணர்களையுங்காத்து
அவ்வவர்கட்கேற்ற சிலஅதிகாரங்களைக் கொடுத்து சிவபிரான் கொடுத்தருளிய
மெய்யானவரத்தை விளங்கினவனாய்ப், பின்னர் அவ்விடத்தினின்றும் படை

யெடுத்து சத்தியலோகத்தையும் வைகுந்தத்தையும் நோக்கிச் சென்றனன்.
அவன்வரவையும் அவன் பெற்றிருக்கின்றவரங்களையும் பிரமனும் விண்டுவுமறி
ந்து நாம்அவனோடு எதிர்த்து யுத்தஞ்செய்வதில் அனுகூலமில்லையென்று நிச்
சயித்து அவ்விடங்களி னின்றும் ஓடிமறைந்திருந்தார்கள். பின்னர் படை
யெடுத்துவந்த தேவாந்தகன் அவ்விரண்டுலோகங்களினும் உடையவர்களில்லா
மையைக்கண்டு அவ்விடங்களிலிருந்த பாக்கியங்களை யெல்லாங்கைக்கொண்டு
அவ்வுலகங்களை அவுணர்களாற் பாதுகாத்துவரக்கட்டளையிட்டு, மீட்டுஞ் சுவர்
க்க லோகத்திற்குவந்து அதையேதனக்கு உறைவிடமாகக்கொண்டு சகலசந்
தோஷத்துடன் அரசாட்சிநடாத்தி வந்தனன்.

அவன்தம்பியாகிய நராந்தகனும் பூவுலகத்திலிருக்கின்ற அரசர்களில்
எதிர்த்துவாராதவர்களை எமலோகத்திற் சேர்த்துப், பணிந்து வந்தவர்களிடத்
தில் பகுதிவாங்கி ஆதரித்து, எல்லாராச்சியங்களையுந் தன்வசப்படுத்தித் தன்
னோடு சயவுச்சாகத்துடன் குலாவியிருக்கின்ற அவுணர்கட் கெல்லாஞ் சந்தோ
ஷஞ்செய்வித்து, அவர்களையழைத்துக்கொண்டு நாகலோகத்திற்குச்சென்றான்.
அப்போதவ்வவுணர்கள் மாயையினாற் கருடரூபங்கொண்டு அவ்வுலகத்திலிருக்கி
ன்ற நாகர்களையெல்லாம் பிடித்துப் பிடித்து விழுங்கினார்கள். அதை நாகராச
னாகிய ஆதிசேடனறிந்து நாம் இவர்களோடெதிர்த்து யுத்தஞ்செய்வது சரியல்
லவென்று தீர்மானித்துத் தனது நகரத்திலுள்ள நாகரத்தின முதலிய திரவிய
மெல்லா மெடுத்துக்கொண்டுவந்து நராந்தக னெதிரில் வைத்து வணங்கினான்.
அத்திரவியங்களை அப்பாதகன் கைக்கொண்டு, தன்னை வணங்கிய ஆதிசேடன்
மீது சிறிதுங் கிருபைசெய்யாமல் அவனைச் சிறையில் வைத்து அவனுடைய
அரண்மனையினும் மற்றவிடங்களினுமுள்ள பொருள்களையெல்லாங் கொள்ளை
யிட்டு, ஓரவுணனுக்கு அவ்வுலகத்தை யாளும்படியாக அதிகாரங்கொடுத்து,
மீட்டும் பூலோகத்திற்கு வந்து முனிபுங்கவர் முதலியோரைத் தேவர்கட்கு
அவிற்பாகந் தரவொட்டாமல் சிறைப்படுத்தி அரசாட்சிசெய்துவந்தனன். இவ்
விருவர்களுடைய பராக்கிரமத்திற்கு இவர்கள் பிதாவாகிய இரவுத்திரகேது
சந்தோஷித்துத் தனது குலத்தில் அழகிற் சிறந்திருக்கின்ற பெண்களை விவா
கஞ்செய்வித்தனன். பின்னர் அப்பெண்களை அவ்விருவர்களுங் கூடிப் பல கொ
டுமையான புதல்வர்களைப் பெற்றுச் சகல போக பாக்கியங்களையுங் குறைவற
வனுபவித்துக்கொண்டுவந்தார்கள்.

இவ்வாறு இராட்சசகுலம் மேலிட்டு தேவர்குலம் கெட்டுப்போகதலும்,
அதிதியானவள் நாளுக்குநாள் மேலான மகிழ்ச்சிபெற்று வாழ்ந்திருந்தனள்.
திதியானவள் நாளுக்குநாள் குறைந்து மிகவுந் துன்பமடைந்து தனது நாயகரா
கிய காசிபரைப் பணிந்தெழுந்து இதனை முறையிடுவதாயினள். சுவாமி! தேவ
ரீருடைய கிருபையினால் அடியாளின் றனைவந்த சொர்க்காதிபதியாகிய இந்திரன்
முதலாகிய தேவர்களையெல்லாம் தேவாந்தகனென்றும் நராந்தகனென்றுந்

சொல்லாநின்ற இராண்டவுணர்கள் அளவற்ற துன்பங்களைச்செய்து வருத்துகின்றார்கள். அவ்வருத்தத்தை அவ்விந்திரன் முதலாகிய தேவர்கள் சகிக்கமாட்டாது பலதிசைகளிலுமோடிப் பதுங்கியிருக்கின்றார்கள். அவர்கள் அவிப்பாக முதலியவைகளையுங் கொடுக்காதபடி முனிவர்கள் முதலாயினோரைச் சிறைப்படுத்தியிருக்கின்றார்கள். சுவாமிகள் திருவுளத்திற்கு யாவுந் தெரிந்திருக்கலாம். ஆதலால் தேவரீர் அடியாள்மீது கிருபைகூர்ந்து அப்பாதகர்களை யழிக்கத்தக்க ஓர் பராக்கிரமமுள்ளபுத்திரனை இத்தினமே அடியாட்குத் தரல்வேண்டுமென்று பிரார்த்தித்தனள். இவ்வாறு பிரார்த்தித்த அதிதியைக் காசிபர் பார்த்துத் தமக்கு முன்னொருபோது விநாயகமூர்த்தி கொடுத்தருளியிருக்கின்ற வரத்தை யோசித்துப் பெண்ணே! மிக்க பராக்கிரமசாலிகளாகிய தேவாந்தகனும் நராந்தகனும் சிவபிரானை நோக்கித் தவஞ்செய்து ஒருவராலும் அழியாத மேலான வரங்களைப் பெற்றிருக்கின்றார்கள்.

ஆதலால் மலங்களோடுங்கூடிய ஆன்மாக்களைப் புனிதமாகும்படி பஞ்சகிருத்தியங்களை நடாத்துகின்ற கடவுளாய்ப் பரப்பிரமமென்று சொல்லுகின்ற ஓர்பொருளாய் எக்காலத்துந் தனிமுதலாய் மேலான தத்வமூர்த்தியாய் அடுத்தோர்கட்கெல்லாம் ஆனந்தபதவியைக் கொடுக்கத்தக்க பசுபதியாயிருக்கின்ற கர்த்தா யாரோ அவரே அல்லல்மிகுந்த துக்கசாகரத்துள் அழுந்திக்கிடக்கின்ற நம்போலிகட்கு அவற்றினின்று நீக்கி மேலான சுகக்கரையிலேற்றி வேண்டிய வரங்களைக் கொடுத்தருளும்படியாகத் தமது வரம்பெற்ற பெருங்கருணையினால் விநாயகனென்று சொல்லப்படுகின்ற ஓர் பெரிய திருநாமத்தைத் தரித்துக்கொண்டு அற்பவுயிர்களெல்லாம் ஆனந்தத்தை யடையும்படியாய்க் கஜானனமூர்த்தியா யெழுந்தருளியிருக்கின்றார். அத்தன்மைத்தான மேலானமூர்த்தியே நமக்குப் புத்திரனாக அடுத்தாலல்லாமல், உனது சித்தையு ளடங்கியிருக்கின்ற துயரத்தை நீக்கிச் சந்தோஷத்தைக் கொடுப்பவர்களெவ்வுலகினுமில்லை. வேதாகம முதலியவைகளா லளவிடுதற்கரிய அம்மூர்த்தி நமக்குப் புத்திரனாக வரத்தக்க மார்க்கத்தினையுஞ் சொல்லுவோம் கேள். அம்மூர்த்தியானவர் தம்மைத் தியானிக்கப்படுவோர் தியானிக்குமுன்னம் அவர்கள் உள்ளத்தையே கோயிலாகக் கொண்டு வீற்றிருக்கின்ற பெருங்கருணையை யுடையவராதலால், அவருடைய திருவடிகளை மனதில் தியானஞ்செய்து அவரது திருமந்திரத்தையுஞ் செபித்துப் பூசித்தால் உடனே அவர் புத்திரனாக வந்தருளுவர். ஆதலால் இன்றுமுதல் நீ அவ்வாறே செய்துவருக்கடவையென்று சொல்லிப் பிரணவ வல்லபத்தோடு நமோனந்தத்தோடும் பஞ்சாட்சரத்தை யுபதேசஞ்செய்து அதைஅநுட்டிக்கத்தக்க முறைமையினையுங் கூறினர். அவை யனைத்தையும் அதிதியானவள் மிகுந்த பத்தியோடுங் கேட்டு மிக்கபசியடைந்தோர்க்குத் தேவாமிர்தங் கிடைத்ததுபோல மனமகிழ்ந்து முன்னிருந்த துயரங்களை நீக்கித் தனது நாயகரிடத்தில் விடைபெற்று அவ்விடத்தினின்று நீங்கி ஓர் வனத்திற் சென்று ஐம்பொறிகளையு மடக்கி ஆகார முதலியவைகளை நீத்து விநாயகமூர்த்தியினுடைய திருவ

டிகளை மனதிற் றியானித்து அவரது பஞ்சாக்கரமந்திரத்தை அநுட்டிப்போடு செபஞ்செய்துகொண்டு நாடோறும் தவத்தி லிருந்தனள். இவ்வாறு சரீரம் முழுவதும் வாட, நெடுநாள் தவஞ்செய்துகொண் டிருக்கின்ற அதிதியின்மீது விநாயகமூர்த்தி கிருபைகூர்ந்து கோடிசூரியர்களுங் குருடாகும்படியான தேஜோமய செபமாலிகையும் பத்துத்திருக்கரங்களுங்கொண்டு நுதலிற் கஸ்தூரிப் பொட்டும் சடையில் மூன்றாம்பிறைச் சந்திரனும் விளங்கச் சிங்கவாகனத்தின் மீது பிரத்தியட்சமாயினர். உடனே அதிதியானவள் விழித்தெழுந்துதன்பெண்மையினால் சுவாமியினுடைய பிரகாசத்தைப் பார்க்கப் பயந்து, விழித்த விழிகளை மீட்டும் மூடிக்கொண்டு கர்த்தனே தேவரீருடைய பிரகாசத்தைப் பார்க்க அடியேனுடைய விழிகள் கூசுகின்றமையால், சாந்தவுருவோடு காட்சி கொடுத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனள். அதை விநாயகமூர்த்தி கேட்டு உடனே மிகுந்த மனமகிழ்ச்சியோடு சாந்தரூபமாயினர். பின்னர் அத் திருவுருவினுடைய வனப்புகளை அதிதியானவள் தனது கண்குளிரக் கண்டு மிக்க சந்தோஷத்துடன் பணிந்தெழுந்து பலமுறை வலம்வந்து அளவற்ற தோத்திரங்கள் செய்து இருகரங்களையுங் கூப்பி எதிர்நின்று, ஓ தயாநிதியே! முனிவர்களையுந் தேவர்களையும் ஒடுக்கி எக்காலத்தும் இம்சிக்கச்செய்துவரும் அரக்கர்களையுந் தைத்தியர்களையுந் துணைக்கொண்டு தேவாந்தகனென்றும் நராந்தகனென்றும் இரண்டவுணர்கள் அரசாட்சி செய்துவருகின்றார்கள். அவர்களைச் சங்கரித்துத் திரிலோகங்களிலுமுள்ள துன்பங்களை நீக்கும்படியாகத் தேவரீர் ஒருபுத்திரராக அவதரித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனள். அதற்கு முன்னமே அவள் கணவராகிய காசிபருக்கு அருள்செய்திருக்கின்ற விநாயகப் பெருமான், அவ்வாறே வருவோமென்று திருவாய்மலர்ந்து தமது திருவுருவைக் கரந்தருளினர். பின்னர் அதிதியானவள், அவ்வனத்தினின்று நீங்கித் தனது கணவரையடைந்து பணிந்தெழுந்து தனக்கு விநாயகமூர்த்தி கொடுத்தருளிய வரத்தைத் தெரிவித்துப் பிரதிதினம் அளவற்ற மகிழ்ச்சியுடன் விநாயக மூர்த்தியைப் பூஜைசெய்து வந்தனள்.

இவ்வாறு நடந்துவருகின்ற காலையில், உலகங்களில் தருமநெறிகள் தவறிப்போனமையால் பூமிதேவியானவள் [illegible] சகிக்கமாட்டாது தன் [illegible] பப்பட்டு, மகமேருகிரியை யடைந்து [illegible] பிரமதேவனைக் கண்டு பணிந்தெழுந்து, சுவாமி! செய்கின்ற தொழில்கட்குத் [illegible] தருமநெறிகள் வழுவிப் போனமையால் உலகங்களில் துர்ச்சனர்கள் மிகுந்த [illegible] சுமக்கமாட்டேன். தேவரீர் சற்சனர் இனி அடியேன் அத்துர்ச்சனர்களைச் [illegible] எத்தனைப்போதும் [illegible] களையும் அடியேனையுங் காப்பாற்றலீராயின் பாதலத்தில் வீழ்ந்துபோவேனென்று முறையிட்டனள். பின்னை [illegible] அதைப் பிரமன்கேட்டு [illegible] நீ அஞ்சவேண்டாமென்று [illegible] கூறிப் பின்னர், எல்லாத் தேவர்களோடும் விநாயக மூர்த்தியைப் பூசித்துத் தோத்திரஞ் செய்தனன். அப்போது ஆகாயத்தில் "விநாயக மூர்த்தியானவர்

துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனஞ் செய்யும்பொருட்டு காசிபருக்குப் புத்திரராக அவதரிக்கப் போகின்றனர்." என்று ஒருவாக்கு உண்டாயது. அதைப் பிரமன் கேட்டு, மீட்டும் பூமிதேவியைப் பார்த்து, அம்மணீ! இப்போதுண்டாகிய அசரீரிவாக்கை நீயுங்கேட்டனையன்றோ? ஆதலால், இன்னுஞ் சிறிதுகாலம் அத்துஷ்டர்களைச் சுமந்துகொண்டிரு; பின்னர் இவ்வளவு துன்பமும் ஒருமிக்கநீங்கும். இனிமேல் யாவருக்கும் இன்பமுண்டாகுமென்றுசொல்லி அவளுக்கு விடைகொடுத்தனுப்பி முன்போலவே சகலதேவர்களோடும் விநாயகமூர்த்தியினுடைய திருவடிகளை மனதிற் றியானஞ்செய்துகொண்டு தவத்திலிருந்தனன்.

இவ்வாறாக, முன்னர் வரம்பெற்ற நாள்முதல் பிரதிதினமும் விநாயகமூர்த்தியைப் பூசைசெய்யும் நேமத்தினைப் பெற்றிருக்கின்ற அதிதியானவள், ஒருநாள் சுவாமியை மிக்கவுருக்கத்தோடுந் தியானித்துத் தோத்திரஞ் செய்தனள். அப்போது விநாயகக்கடவுள், கிருபைகூர்ந்து அவ்வதிதிக்கெதிரில் ஆயிரம் முடிகளும், ஆயிரம் நெற்றிகளும், ஆயிரம் முகங்களும், ஆயிரஞ் செவிகளும், ஆயிரம் வாய்களும், ஆயிரம் நாசிகளும், ஆயிரந் தோள்களும், ஆயிரங்கைகளும், ஆயிரந்தொடைகளும், ஆயிரம் அடிகளுங்கொண்டு கைகள்தோறும் ஆயுதங்களும், நெற்றிகள்தோறும் கஸ்தூரிப் பொட்டுகளும், மார்பிற் சிந்தாமணி மாலைமுதலிய அளவற்ற ஆபரணங்களையுந் தரித்து, அளவற்றசோதிகள் ஒருமிக்க உதித்தாற்போலச் சிங்காசனத்தின்மீது பிரத்தியட்சமாயினர். உடனே அதிதியானவள் பணிந்தெழுந்து பலமுறை வலம்வந்து இருகைகளையுங்கூப்பி எதிர்நின்று உள்ளமுருகும்படியாக அளவற்ற தோத்திரங்களைச்செய்து அவ்வவர்கள் கோரினபயன்களை அங்கைநெல்லிக்கனிபோல அருளிச் செய்யவல்ல வள்ளலே! முன்னர் அடியேன் துயர்நீங்குமாறு சுவாமிகள் வரங்கொடுத்தபடி இப்போது முடித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனள். அதை விநாயகமூர்த்திகேட்டு, யாம் உனக்கு முன்னர்கொடுத்தவரத்தை முடிக்கும்படியாகவே இப்போதுந் திருக்கோலத்தோடு வந்தனமென்று திருவாய் மலர்ந்தனர். அதற்கு அதிதியானவள் மீட்டுமவரைப் பணிந்தெழுந்து சுவாமீ! இத்தன்மைத்தான பெரியவடிவத்தோடு அடியேற்குப் புத்திரனாகவந்தால், அடியேன் தேவரீரை எவ்வாறு கரத்திலேந்தி எவ்வாறு வளர்க்கவல்லேன். இவ்வடிவம் உலகத்தார்க்கும் இசைவாயிராததால், எல்லாரைப்போலத் தேவரீரை அடியேன் கைகளிலேந்திக்குளிப்பாட்டி முலையூட்டி வளர்க்கும்படியாக மிருதுவான குழந்தைவடிவாகிவந்து துட்டசிந்தையுடைய அசுரகுலம் நாசமாகும்படி வளர்ந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனள். அதற்கு விநாயகமூர்த்தியானவர் அவ்வாறே அதிதியினுடைய ஆசையை நிறைவேற்றும்படியாக திருவுளங்கொண்டு உடனே அன்றுபிறந்த குழந்தையைப்போல வடிவங்கொண்டு தமது பவளம்போன்ற திருவாயினைத்திறந்து அழுதனர். அவ்வழுகையோசை வெளிப்பட்ட மாத்திரத்தில் உலர்ந்திருந்த விருட்சங்களெல்லாந்

தளிர்த்தன. மலடிகளெல்லாங் கருப்பமடைந்தார்கள். எங்குமந்தமாருதம் வீசியது. ஆகாயமெல்லாம் மறுவின்றி விளங்கியது. வேள்வித்தழல்க ளனைத்தும் வலஞ்சுழித்தெழுந்தன. சகல தீர்த்தங்களுந் தெளிவடைந்தன. தேவர்கட்கெல்லாம் வலதுதோளும் வலதுகண்ணுந் துடித்தன. அசுரர்கட்கெல்லாம் இடதுதோளும் இடதுகண்ணுந் துடித்தன. இத்தியாதி உற்பாதங்கள் எங்கணுமுண்டாகும்படி தனக்கெதிரில் வாய்விட்டழுதிருக்கின்ற குழந்தையை எல்லாத் தேவர்கட்குந் தாயென்று சொல்லும்படியான அதிதியானவள் ஒன்பது மாதமுஞ் சுமந்து பெற்றவளைப்போல அதிக ஆசையோடும் மகிழ்ச்சியோடுங் கைகளிலேந்தித் தனது தனங்களிலே விம்மிநின்று சுரந்தபாலை யூட்டினள். அவ்வற்புதத்தை மேலான தவங்களையுடைய காசிபரானவர் அதிக மகிழ்ச்சியோடுங்கண்டு தமது புத்திரர்க்குச் சாதகன்மாதிகளை வேதாகமவிதிப்படி நிறைவேற்றி, மகோற்கடரென்று நாமகரணஞ் செய்தனர். சுவாமியும் நாளுக்குநாள் பாலசந்திரனைப்போல வளர்ந்து வந்தனர்.

இவ்வாறு அரிபிரமேந்திராதியரும் அறிதற்கரிய விநாயகமூர்த்தியானவர் மகோற்கடரென்னுந் திருநாமங்கொண்டு வளர்ந்துவருகின்ற இரண்டாமாதத்தில் இவ்வற்புதசெய்தியை வசிட்டர் வாமதேவர்முதலிய முனிபுங்கவர்கள் நாரதமுனிவர் சொல்லக்கேட்டு அப்போதே பரத்தை யடைந்தவர்போல மேலான மகிழ்ச்சிகொண்டு சுவாமியைத் தரிசிக்கவந்தார்கள். அவர்களைக் காசிபர் எதிர்கொண்டழைத்துவந்து சந்தோஷமாய்க் கலந்து, ஒருவர்க்கொருவர் க்ஷேமாதிசயங்களை விசாரித்துக்கொண்டு பின்னர் யாவரும் வந்து மகோற்கடமூர்த்தியைக் கண்குளிரத் தரிசித்துப் பணிந்திருந்தார்கள். அப்போது வசிட்டமுனிவர் காசிபரைப் பார்த்துத் திரிமூர்த்திகளாலும் பெறுதற்கரிய பேற்றினை எளிதிலடைந்த தவசீலரே! இக்குழந்தையினுடைய வடிவமானது முப்பத்திரண்டு இலக்கணங்களையும் வாய்ந்திருக்கின்றது. ஆதலால், இஃது மலரகிதமான மூர்த்தியேயன்றி மலசகிதமாயிருக்கின்ற நம்மிலொன்றன்று, இத்தன்மைத்தான மேலானமூர்த்தியானது, அசுரர்குலங்களை வேரோடுங்களையவும் தேவர்குலங்களையும் முனிவர்கூட்டங்களையுமாதரித்து, உலகங்களில் வேதாகமநெறிகளை நிலைநிறுத்தவும், தேவரீரும் தேவரீருடைய பத்தினியாருஞ்செய்த தபோபலத்தினால் உங்கட்குப்புத்திரராகத் திருவவதாரஞ் செய்திருக்கின்றது. இப்போது திரிலோகங்களிலுங் கொடுங்கோலைச் செலுத்திவருகின்ற தேவாந்தகனும் நராந்தகனும், இப்புதல்வரைச் சத்துருவென்றறிந்து இவருக்குப்பல விடர்களைப் புரிவார்கள். ஆனால் இவர், உலகங்களிலுள்ள சகலவிடர்களையுந் தீர்த்து ஆதரிக்கவல்ல மூர்த்தியாதலால், ஓர் இடரும் இவரையணுகாது. ஆயினும் லோகசம்ரட்சணை நிமித்தம் நீங்களிருக்கவேண்டிய சாக்கிரதையிற் பிழையாமலிருக்க வேண்டுமென்று சொல்லினர். அதற்குமேல் காசிபரானவர் வந்த முனிவர்கட்கெல்லாம் விருந்தூட்டிச் சந்தோஷமடைந்தனர். பின்னர்

அந்தணர்களெல்லாம் காசிபரிடத்தில் மிக்க அன்போடு விடைபெற்று அவ்வவர்களுடைய ஆசிரமத்தை யடைந்தார்கள்.

இப்பால் மகோற்கடமூர்த்திக்கு வயதொன்றாகுமுன்னமே நராந்தகனிருந்து அரசாட்சி செய்துவருகின்ற பட்டணத்திலே இரத்தமழை பொழிந்து ஆகாயமுழுவதுங்கறுத்து வால்நட்சத்திர முதலிய உற்பாதங்கள் தோன்றி நின்றன. அதன்மீது நராந்தகன் கணிதர்களையழைத்து இப்போது கண்டிருக்கின்ற உற்பாதங்களுக்கு இனி நடக்கப்போகின்றது யாதென்று வினாவினான். அதற்கவர்கள் கணிதசாத்திரங்களிற் சோதித்தறிந்து நராந்தகனைப்பார்த்து, ஓ மன்னர்மன்னவா! தேவரீர் கேட்டவாறே சோதித்தறிந்தனம் ஆயினும் உள்ளகாரியத்தை விளம்புவோமென்றால் தேவரீருக்குக்கோபமுண்டாகுமேயென்று அடியேங்கள் மனம் பயமடைகின்றதென்று சொன்னார்கள். அதை நராந்தகன் கேட்டு கணிதர்களே! நீங்கள் பயப்படவேண்டியதில்லை நடந்திருக்கின்ற உற்பாதங்கட்கு ஏது நீங்கள் சாத்திரங்களில் யாதுகண்டீர்களோ அதனை யொளிக்காமற் சொல்லுங்களென்று பரிவாய்ச் சொல்லினான். அதற்குமேல் அச்சோதிடர்கள் பயமின்றி ஓ ராசாதிராசனே! உள்ளவிதத்தையே யாங்கள் சொல்லக் கேட்டருளுக, அஃது யாதெனில் காசிபமுனிவரும் அதிதியுந் தவஞ்செய்ய அவர்களிடத்தில் நம்மையெல்லாம் பணிசெய்யும்படி ஓர்பிள்ளைபிறந்து வளர்ந்துவருகின்றது இந்த ஏதுதப்பாமல் அறிவுகாட்டு மென்பதற்கு அந்த உற்பாதங்களெல்லாம் இவ்விடத்தில் உண்டாயினவென்று சொன்னார்கள். அதை நராந்தகன்கேட்டு மிகுந்த ஆலோசனைகளிற் றலைப்பட்டவனாகி ஐயோ! இவ்வேதுவுக் கினியென்னசெய்வோம் அக்குழந்தையைச் சென்று கொல்வது நமது பராக்கிரமத்திற்குச் சரியல்லவே, அவ்வாறு செய்வோமாயின் நமது பாக்கியங்களெல்லாம் பாழாகுமேயென்று பலவாறு சிந்தித்து மீட்டும் ஓர் உபாயத்தையெண்ணி விரசையென்னும் பெயரினையுடைய ஓர் அவுணமாதரைக் கூவி நீ இக்கிடத்திற்சென்று நமக்குத்துன்பஞ்செய்ய உதித்திருக்கின்ற குழந்தையைக் கொன்றுவரக் கடவையென்று அனுப்பினான். உடனே அவ்விரசையானவள் கருத்த நிறமும், நெருப்பையொத்த கண்களும் சிவந்தமயிரும் பத்துயோசனைவிசாலம் உயர்ந்திருக்கின்ற சரீரமும், யானைத்தந்தங்களைப் போல நீண்டகோரைப் பற்களும் விளங்கியிருக்கின்ற தனது வடிவத்தை மறைத்து ஓர்பிராமணஸ்திரீயைப்போல வடிவங்கொண்டு காசிபருடைய ஆசிரமத்திற் சென்றனள். அப்போது காசிபர் ஸ்நானஞ்செய்யச் சென்றிருந்தனர். அதிதியானவள் விநாயகபூசைசெய்து கொண்டிருந்தனள். ஏனையசீடர்முதலாயினோர் வேறுவேறு பணிகளின் பிரவேசித்திருந்தார்கள். அச்சமயத்தில் அப்பாதகி உள்ளே நுழைந்து மகோற்கடமூர்த்தி தனியாயிருக்கக்கண்டு அவரையெடுத்து வாயிலிட்டு விழுங்கித்திரும்பினள். அப்போது அவள் வயிற்றினடக்கியமகோற்கடமூர்த்தியானவர் அவ்விருந்தபடியே தமது நுதல்விழியைச் சிறிது திறந்தனர். உடனே அவ்விரசைவயிற்றில் வடவாமுகாக்கினியைப்போல அக்கினியுண்டாகி

அதிகதாகங்கொண்டு அங்கிருக்கின்ற தடாகமுதலியவைகளிலுள்ள சலங்களையெல்லாம் வறண்டுபோகும்படியாகப் பானஞ்செய்தனள். அவ்வாறு பானஞ்செய்தும் அத்தாகந்தணியாமையால் பின்னரவள் ஆகாயகங்கையைப் பானஞ்செய்தனள். அவ்வாறு பானஞ்செய்தும் அத்தாகந்தணியாமையால் பின்னரவள் ஆகாயகங்கையைப் பானஞ்செய்யநினைத்துமேலெழும்பினள். அப்போது கருணாநிதியாகிய மகோற்கடமூர்த்தியானவர் இனி எங்குபோகின்றனையென்று தமது சிறியகாற் பெருவிரலினை ஊன்றினர். அம்மாத்திரத்தில் திரிலோகங்களையும் வாய்மடுக்கவல்ல அப்பாதகியானவள் முன்னொருபோது இராவணனை நெரிக்கப்பட்ட கைலாயவரையானது சிவபிரானுடைய திருவடிகளாலூன்றப் பதைப்பற விருந்தாற்போல அசைவற்றுப் பூமியிலே வீழ்ந்தாள். உடனே இடையிற் சர்ப்பக்கச்சினைவீக்கிய எம்பெருமானானவர், அவளை நிலத்தில் விழவழுத்திய தமதுகாற்பெருவிரல் நகத்தினாலேயே அவள்வயிற்றை உதரப்பிரவாகமுண்டாகும்படியாய்ப்பிளந்து தம்மைவிழுங்கிய மதயானையை வெளிப்படத்தோன்றிய தமது பிதாவைப்போல வெளிக்கொண்டனர். அப்போது முன்னர் பூசைசெய்துகொண்டிருந்த அதிதியானவள், அப்பூசையினை நிறைவேற்றித் தனது புதல்வனை எடுக்கவந்து காணாதவளாகித்தானுந் தனது தலைவரும் மிகுந்த துயரமடைந்து அளவற்றகாடுகளிலும் வெளிகளிலுந் தேடிச்சென்று, பின்னர் அப்பாதகியினுடைய மார்பில் தமது குமாரர் பதிந்திருப்பதைக்கண்டு பயந்து, முன்னும் பின்னும் பார்த்து, மிகுந்த ஆனந்தங்கொண்டு உடனே நின்மலமூர்த்தியாகிய குழந்தையை யெடுத்துச்சென்று திருமேனிமுழுவதுந் தோய்ந்திருக்கின்ற உதிரங்களை யெல்லாங் கழுவிக் குளிப்பாட்டி நீராஞ்சனம் முதலிய சாந்திகளைச்செய்து பாலூட்டினள்.

கேட்டீர்களோ சவுனகாதி முனிவர்களே! விரசையென்னும் அந்நராட்சசியானவள் மிகவுங் கொடுமையை யுடையவளாயினும், சுவாமியைக் கொல்லுமாறு வாய்மடுத்தாளாயினும், அவள் அவருடைய திருவுருவைக் கண்ணாற் காணவுந் தீண்டவுங் கிடைக்கப் பெற்றதினாலே அப்போதே அவள் மலபாசங்களினின்று நீங்கி மோக்ஷசாம்பிராச்சியத்தை யடைந்தனள். இவள் இறந்துபோனமையை நராந்தகன் கேள்விப்பட்டு, மிகவும் ஆச்சரியங் கொண்டு, மீட்டும் மகோற்கடமூர்த்திக்கு இரண்டாவது வயதாகுங்காலத்து, உத்தமனென்றும் துந்துபியென்றும் பெயரினையுடைய இரண்டவுணர்களைக் கூவியனுப்பினான். அவ்விருவர்களுங் கிளிப்பிள்ளை வடிவங்கொண்டு காசிபருடைய ஆசிரமத்தில்வந்து மரங்களின்மீதிருக்கின்றதும், முற்றங்களிலிறங்குகிறதும் வெயிலிற் காயவைத்திருக்கின்ற தானியங்களைக் கொறிக்கின்றதுமாகச் சஞ்சரித்துக் கொண்டிருந்தார்கள். அதை அதிதிமடியின்மீதிருந்து முலைப்பாலுண்டருளுகின்ற மகோற்கடமூர்த்தி கண்டு இக்கபடர்களைக் கொல்லவேண்டுமென்று திருவுளங்கொண்டு, தமது தாயினுடைய முகத்தைப் பார்த்து அம்மா! இக்கிளிப்பிள்ளைகளை யெனக்குப் பிடித்துக்கொடுவென்றுகேட்டனர். அதற்கு அதிதி

யானவள் என்செல்வனே! பறக்கின்றகுருவி யென்கையிலகப்படுமோவென்று மறுத்தனள். உடனே மகோற்கடமூர்த்தியானவர் அதிதியினுடைய மடியினின்றுங் குதித்தெழுந்து ஆகாயத்திலே பருந்து வடிவங்கொண்டு பறந்து தம்மைக் கண்டோடுகின்ற அக்கிள்ளைகளிரண்டையுந் துரத்திப் பிடித்து சிறகுகளையெல்லாம் பறித்தெறிந்து, மூக்கினாலும் கைகளினாலும் உடல்களைப் பிளந்து, பூமியில்விழ உதறித் தாம் முன்போலவே குழந்தைவடிவாகித் தாய்மடியில் வந்து பாலுண்டருளினர். அதை அதிதிகண்டு; இவர் தந்தையாகிய சிவபிரான் முன்னொருபோது கிளிப்பறிபூட்டிய இரதத்தினையுடைய மன்மதனை இமைப்போதில் நீறாக்கினரெனில், இப்போதிவர் இக்கிளிப்பிள்ளைகளைக்கொன்றதோ ஒரு புகழென்று துதிசெய்தனள். காசிபர் அவருக்குப் பூதசாந்திசெய்து சந்தோஷமுற்றிருந்தனர். கிளிப்பிள்ளை வடிவங்கொண்டுவந்த அவ்விரண்டவுணர்களும் மிகவுங் கொடியராய் மறைநெறிகளிற் பிறழ்ந்தவர்களாயிருக்கினும், அவர்கள் எம்பெருமானாற் றாக்கப்பட்டு இறந்தமையால், பழயபந்தங்களையெல்லாம் விடுத்து ஆனந்தசாகரத்திற் படிந்தார்கள்.

இப்பால் மகோற்கடமூர்த்திக்கு மூன்றுவது வயதாகலும் தந்தையாகிய காசிபர் அவருக்குச் சவுளச்சடங்கினை வேதாகமமுறைப்படி நிறைவேற்றினர். பின்னர் ஒருநாள் விதிபாதம்வர, அத்தினத்தில் அதிதியானவள் தனது புத்திரனை யெடுத்துக்கொண்டு அடுத்தூற்போலிருக்கின்ற ஓர்பொழிலினுள்ள தாமரைமுதலியவைகள் மலிந்திருக்கின்ற சோமவதியென்னுந் தடாகத்தைநோக்கிச் சென்று, அத் தடாகக்கரையில் லோகநாயகராகிய மகோற்கட மூர்த்தியை விடுத்து, அத்தீர்த்தத்துளிறங்கி ஸ்நானஞ் செய்துகொண்டிருந்தனள். அப்போது சுவாமியும் அதிதிகாணாதபடி அத்தீர்த்தத்தி லிறங்கினர். மழலைமொழியுங் குறுநடையுமுள்ள அவரைப் பத்துயோசனைப் பிரமாணமான வடிவோடு அத்தடாகத்தி லிருக்கின்ற ஓர்முதலையானது எடுத்துக்கொண்டு போய்விட்டது. அதை அத்தடாகக்கரையி லிருந்தோர்கள் கண்டு பதைபதைத்து ஐயையோவென்று இரங்கி வாடினார்கள். அப்போது அதிதியானவள் அச் சம்பவத்தைக்கேட்டுத் திடுக்குற்று வாயளவுநீர்த்தத்தி லிறங்கிப் பார்த்து அப்பாலிறங்கக்கூடாமல் மயங்கித் துயரமுற்றனள். அந்தவேளையில் சிலமாணாக்கர்கள் தற்செயலாய்வந்து அச் சம்பவத்தினைக் கேட்டு மிக்கதுணிவோடு அத்தீர்த்தத்தி லிறங்கி நீந்திச் சென்றார்கள். அவர்களை அம்முதலையானது நெருக்கவொட்டாமற்சீறிச் சுவாமியை வாயிற்கவ்வியபடி மேலெழும்பி விழிகளில் அனற்பொறிகளையிறைத்து இடம்வலமாகச் சுழன்று திரிந்து, மீட்டும் அடியிற்சென்றொளித்தது. அப்பால் அச்சிடர்கள்மேலேவந்து அதற்கு முன்னமே அத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்துசென்று தமதாசிரமத்தில் செபஞ்செய்து கொண்டிருக்கின்ற காசிபருக்கு அறிவிக்குமாறு விரைந்தோடினர். அச்சமயத்தில் மகோற்கடமூர்த்தியானவர் அம்முதலையின் முதுகி லாரோகணித்து, அத்தடாகத்திலிறங்கியிருக்கின்ற பறவைகளெல்லாம் பறந்தோடவுந், தாமரைமுதலிய புட்ப

விளங்கள் துவளவும், நாற்கரைகளிலும் அலைகள் புரண்டோடவுமாக அல்லோலகல்லோலப்படுத்தி மேலெழும்பி மரக்கலத்தையோட்டி விளையாடுவதுபோலச் சிறிதுநேரம் குறும்பாய் விளையாடல் செய்திருந்தனர். அப்போது அதிதியானவள் தனதுகுமாரனை முன்னர் துன்பத்தோடு பார்த்தகண்ணினால் பின்னர் இன்பத்தோடுபார்த்து இருகரங்களையு மேந்திநின்று, அப்பா என் சாமி! என்கண்மணியே! இத்திருவிளையாடல் போதும்; இவ்விரைவில் அம்முதலையைச் சங்கரித்து வந்தருள்கவென்று வேண்டினள். அவ்வேண்டுகோளுக்கு மகோற்கடமூர்த்தி கிருபைகூர்ந்து தாமேறிநடத்துகின்ற அம்முதலையைக் கரைமீதேற்றினர். அஃது கரைமீதேறிய மாத்திரத்தில் உயிர்விட்டிறந்தது. உடனே அதனுடலினின்று ஓர் திவ்வியபுருடன் வெளிப்பட்டுவந்து மகோற்கடமூர்த்தியைப் பலமுறை பணிந்தெழுந்து இருகரங்களையுஞ் சிரமேற்கூப்பிநின்று இதனைப் பேசுவதாயினன். கர்த்தனே! அடியேன்முன்னர் கந்தருவர்கட்கெல்லாம் அரசன்; அடியேன்பெயரைச் சித்திரனென்று சொல்லுவார்கள். ஒருதினம் அடியேன் ஓர்விவாகத்தை முடிக்கத்தொடங்கினேன். அவ்விவாகத்திற்குப் பிருகுமுனிவர் வந்தனர். அவர்வந்தவேளையில் தேவர் முதலாயினோர் வந்து கூடியிருந்த கலியாணமண்டபத்தில் அக்கலியாணவிவகாரங்களிலே அடியேன் ஞாபகம் வைத்திருந்தமையால், அம்முனிவரை எதிர்கொண்டழைத்துவந்து வந்தனைமுதலிய வழிபாடுகளைச் செய்யாமலிருந்தேன். அதற்கு அம்முனிபுங்கவர் கோபங்கொண்டு நீ விவாகசம்பிரமத்திலமிழ்ந்து வந்தபெரியோர்களுக்கு வணக்கஞ்செய்யாமலிருந்தனை. ஆதலால் இனி நீதடாகத்திலே முதலையாக முழுகிக்கொண்டிருக்கக் கடவையென்று சபித்தனர். பின்னரடியேன் பயந்து அவர் திருவடித்தாமரைகளையே பணிந்தெழுந்து சுவாமி! அடியேன் அறிவின்மையாற் செய்தகுற்றத்தைப் பொறுத்துத் தேவரீரிட்டசாபத்தை நிவர்த்திசெய்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தேன். அதற்கப் புண்ணியமூர்த்தி கிருபைகூர்ந்து, ஓ கந்தருவராசனே! இனி விநாயகக்கடவுள் துஷ்டஜன நிக்கிரகஞ் செய்யும்பொருட்டு காசிபருக்குப் புத்திரராக அவதரிக்கப் போகின்றனர். அம்மேலான கடவுளுடைய திருக்கரம்பட்டமாத்திரத்தில் உன்னை இச்சாபம்விட்டு நீங்குமென்று திருவாய் மலர்ந்தருளினர். அவ்வாறே பாவியான அடியேற்கு இத்தினந் தேவரீருடைய கிருபாகடாட்சங் கிடைத்தது. இதுகாறும் இத்தடாகத்தில் அடியேன் முதலையாகவிருந்து மலர்பறிக்கவும், ஸ்நானஞ் செய்யவும் வருகின்ற பேர்களுக்கெல்லாந் துன்பத்தை விளைத்துக்கொண்டிருந்தேன். இத்தன்மைத்தான கொடியவனை இப்போது கரையேற்றி இன்பத்தைக்கொடுத்ததற்கு என்னகைம்மாறு செய்யவல்லேனென்று துதிசெய்தனன். அச்சமயத்தில் மகோற்கடமூர்த்தியினுடைய கிருபையினால் ஆகாயமார்க்கத்திலிருந்து ஓர் தெய்வவிமானமிறங்கியது. அதை அச்சித்திரன்பார்த்துமீட்டும் மகோற்கடமூர்த்தியைப் பணிந்தெழுந்து ஓ சகலலோக நாயகனே! ஓ தத்துவப்பொருளே! ஓ மூலகாரணக்கடவுளே! அடி

யென் பெல்லாவிதத்திலுங் கடைத்தேறுமாறு கடாட்சம்வைத்தருளிய கிருபா மூர்த்தியே! யென்று அளவற்ற தோத்திரங்களைச்செய்து, சுவாமியினிடத்தில் விடைபெற்று விமானத்தின்மீதேறி ஆகாயமார்க்கமாகச் சென்றனன்.

அதற்குமேல் மகோற்கட மூர்த்திக்கு நாலாவது வயதுவந்தது. அப்போது கயிலாயத்திலே சிவபிரானைத்தரிசித்து யாழ்வாசிக்கச் செல்லுகின்ற ஆகா-ஊகூ-தும்புரு என்னும் மூன்று கந்தருவர்கள் காசிபருடைய ஆசிரமத்திற்கு வந்தார்கள். அவர்களைக்காசிபர் எதிர்கொண்டழைத்துவந்து பல உபசாரங்களைச்செய்து, ஒருவர்க்கொருவர் க்ஷேமலாபங்களை விசாரித்து, பின்னர் நீங்கள் விருந்துண்டு போகவேண்டுமென்று வேண்டினர். அதற்கம்மூவரு மிசைந்து தடாகத்திற்சென்று ஸ்நானஞ்செய்துவந்து புட்பஞ்சந்தனம்முதலிய திரவியங்களைச்சேகரித்து தாங்கள் பிரதிதினம் பூசித்துவருகின்ற விநாயகர், சிவபெருமான், உமாதேவி, விஷ்ணு, சூரியனென்கிற ஐந்துவிக்கிரகங்களையும் ஓர் பொற்பலகையின் மீதிருத்திப் பூசித்துத் தியானஞ்செய்து கொண்டிருந்தார்கள். அவ்வேளையில் சில முனிச்சிறார்களோடும் விளையாடல் செய்திருந்த பராபரப்பொருளாகிய மகோற்கடமூர்த்தியானவர், அவ்விளையாட்டினின்றும் வந்து. அவர்கள்வைத்துப் பூசித்திருந்த ஐந்துமூர்த்திகளையும்பார்த்து, அவைகள் மறைந்துபோகும்படியாக ஓர்திருவிளையாடல் செய்தனர். பின்னரவர்கள் தங்கள் தியானங்களினின்றும் நீங்கி மற்றப்பூசனைகளையும் நிறைவேற்றித் தொடங்கும்போது, தாங்களெதிரில் வைத்திருந்த விக்கிரகங்களைக் காணாதவர்களாகி, மதிமயங்கிக் காசிபரையழைத்து சுவாமீ! அடியேங்கள் ஆன்மார்த்தமாகப் பூசிக்கின்ற ஐந்து விக்கிரகங்களையுந் தியானஞ்செய்கின்றபோது இப்பொற்பீடத்தினின்றும் யாரோ திருடிக்கொண்டு போய்விட்டார்கள். இனி அடியேங்களுயிரை மாய்க்கின்றோமென்று சொன்னார்கள். அதைக் காசிபர் கேட்டவுடன் மிக்கதுயரமடைந்து விருந்தாகவந்தவர்கள் பூசித்துப்போசனஞ் செய்து போவதற்குமுன் அவர்கட்கு இவ்விதத்துன்பமுண்டானது நமது தீவினையேயென்றுமொழிந்து தம்மிடத்தில் பணிசெய்திருக்கின்ற சீடர்களையெல்லாம் கூவி, இவர்கள்பூசித்திருந்த விக்கிரகங்களை யாரேனுமெடுத்திருந்தால் விரைவிற்கொண்டுவந்து கொடுத்துவிடக்கடவீர்கள். கொடாது வைத்திருப்பீர்களாயின் இக்ஷணத்தில் உங்களைநீறாக்கி விடுகின்றேனென்று கோபித்துச்சொல்லினர். அதற்கு அச்சீடர்கள்பயந்து காசிபரைப்பணிந்தெழுந்து சுவாமீ! தேவரீருடைய பெருங்கருணையினால் நன்மையேசெய்து கடைத்தேறவேண்டுமென்று அடுத்திருக்கின்ற அடியேங்கள் அயலாருடைய பொருள்களைத்திருடுவோமோ? ஆனால் தேவரீர் அடியேங்கள்மீது கிருபைசெய்து சுவாமிகளுடைய குமாரரைக் கேட்டருளவேண்டுமென்று சொன்னார்கள். அதற்குக் காசிபரிசைந்து அவரையிங்கனே விரைவில் அழைத்து வாருங்களென்று கட்டளையிட்டனர். உடனே அவர்கள் மகோற்கடமூர்த்தியைத் தேடிச்சென்று எங்குங்காணமல் ஔபாசனஞ்செய்கின்ற ஆசாரவிட்டடியிலே திருமேனிமுழுவதுந் திருவெண்ணீ

றணிந்த கோலத்தோடு விளையாடல் செய்திருக்கக்கண்டு பெரியவேதங்களாலு மறியப்படாத மகோற்கட மூர்த்தியைப் பேரிட்டழைத்து வந்து பிதாவின் முன்னே விட்டார்கள். அப்பிதாவாகிய காசிபரும், உலக முறைமைப்படி கையிலோர் பிரம்பினையேந்தி கோபங்கொண்டவரைப்போல எதிர்நோக்கிப் பிள்ளாய்! இங்குவந்த இம்மூவரும் பூசனைசெய்திருந்த சிவலிங்கமுதலான மூர்த்திகளை நீயேகவர்ந்துகொண்டுபோயினை ஆயினும், அவைகளை எங்கே யொளித்துவைத்தனை; சொல்லுகவென்று கேட்டனர். அதற்கு மகோற்கடப் பிள்ளையார் திருநகைசெய்து தமது வாயினைநன்றாகத் திறந்துகாட்டி அவைகளை இங்கேதான் ஒளித்துவைத்திருக்கின்றேனென்று திருவாய் மலர்ந்தனர். இவ்வாறு திறந்துகாட்டியவாயினின் றுமாமகேஸ்வரருடனே கயிலாயமும், விஷ்ணுவுடனே வைகுந்தமும், பிரமனுடனே சத்தியலோகமும், இந்திரனுடனே அமராபதியும், அவுணர்நாயகர், இயக்கர், மனிதர்என்னுமிவர்களுடனே அவ்வவர்கள் வசிக்கின்ற எண்ணிறந்த பதிகளும், அளவற்ற நதிகளும், அளவற்றவனங்களும், அளவற்ற மலைகளும், அளவற்ற சமுத்திரங்களும், புட்பங்கள்மலிந்த அளவற்ற நந்தனவனங்களும், பறவைகளுலாவுகின்ற அளவற்ற நிலங்களும், பதினாலுலோகங்களும், அஷ்டதிக்குப்பாலர்களும், இன்னும் அளவற்றபதார்த்தங்களும் வெளிப்படக்காசிபமுனிவர் கண்டனர். மனம்நொந்திருந்த ஆகா-ஊகூ-தும்புருவென்னும் மூவரும் அவ்வற்புதத்தைக்கண்டு அளவில்லாத ஆச்சரியமாகி மகோற்கடமூர்த்தியினுடைய திருவடிகளிலே விழுந்து நமஸ்கரித்து பரிமளம்மிகுந்த புட்பமாலைவகைகளைக் கொண்டு பூசித்து நின்றனர். அதற்குக் கருணாமூர்த்தியாகிய மகோற்கடர் மனமகிழ்ந்து அக்கந்தருவர் சந்தோஷிக்கும்படியாக அவர்கள் ஐந்துமூர்த்திகளைத் தமது திருமேனியினின்றும் எடுத்து அவர்கள்கையிற் கொடுத்தருளினர். அதற்குமேல் அம்மூவரும் சுவாமியைநோக்கிக் கர்த்தனே! சகலலோகங்களையுந் திருவாயினின்றுங் காட்டியருளிய தேவரீரை அடியேங்கள் அறிவின்மையினுந் தப்புத்தியினாலே குழந்தையென்று நினைத்தோம். அக்குற்றத்தைத் தேவரீர் பொறுத்தருளவேண்டுமென்று அளவற்ற தோத்திரங்கள்செய்து தத்தம்பூசனைகளைக் குறைவற நிறைவேற்றிப், பழம்நழுவிப் பாலில்வீழ்ந்தா லொத்தபாக்கியமையாராய்க் காசிபரையடைந்து, மிகுந்த பெருவகையோடும் விருந்துண்டு, சிலநேரங் க்ஷேமம்பாராட்டிப், பின்னர் விடைபெற்றுக் கயிலாயகிரிக்குப் போய்விட்டனர்.

அதற்குமேல் சகலலோகநாயகராகிய மகோற்கடமூர்த்திக்கு ஐந்தாவது வயதாக; அப்போது காசிபர் தமது புத்திரர்களாகிய தேவர் இராக்கதர் முதலான யாவரையும் வரவழைத்துப் பிள்ளையாருக்கு வேதாகம விதிப்படி உபநயன கலியாணத்தை முடிப்பதாயினர். அங்குவந்திருந்த முனிவர்கள் யாவரும் பிள்ளையார்மீது மந்திராட்சதையைத் தூவினார்கள். அச்சமயத்தில் காந்தாசுரனால் அனுப்பிய இராக்கதர் மகோற்கடமூர்த்தியைக் கொல்லும்படி

களில் பெரிதான சரீரமும், விண்ணோ ரியோரும் நடுங்கத்தக்க வன்மொழியும், மேலான பராக்கிரமும் உள்ள பிங்களன்-விகிர்தன்-சபலன்-விசாலன்-பிங்காட்சன் என்னும் பெயர்களைப் படைத்த ஐந்துபேர் தங்கள் ரூபத்தை மறைத்து முனிவர்கள்போல விபூதி உருத்திராக்கந்தரித்துக் கைகளிற் றண்டுகமண்டலங்களைத் தாங்கிக்கொண்டுவந்து அட்சதைகளில் அஸ்திரங்களை ஆவாகனஞ்செய்து தாங்களு முனிவர்களைப்போலவே சுவாமியின்மீது அட்சதை தூவினார்கள். அவ்வட்சதைகளில் ஆவாகனஞ்செய்திருந்த தேவாஸ்திரங்களெல்லாம் உடனே தத்தம் ரூபங்களோடு வெளிப்பட்டு சுவாமியின்மீது விழுவதற்கஞ்சி யாவருங் காணும்படியாக அவருடைய திருவடிகளில் வீழ்ந்து பணிந்தன. அப்போது கைதவர்க்குக் கைதவராகிய மகோற்கடமூர்த்தியானவர், அவைகளைத் தமது திருக்கரத்திலேந்தி பொய்வேடங்கொண்டுவந்த அந்த ஐந்து இராக்கதர்கண்மீதும் வேறே ஐந்தரிசிகளையெடுத்துத் தூவினர். உடனே அவ்வைந்தும் அஸ்திரங்களாகப் பாய்ந்து அதிக பராக்கிரமத்தோடு மலைபோலப் பாரித்திருக்கின்ற அவ்வைந்திராக்கதர்களையுஞ் சங்கரித்தன.

அவ்வற்புதத்தைக்கண்ட யாவரும் சுவாமியை வேதாகமங்களினாலே அளவற்ற தோத்திரங்களைச் செய்தனர். அதற்குமேல் உபநயனத்திற்குரிய சடங்குகளெல்லாங் குறைவறச்செய்து நிறைவேறினபின்னர், தேவர்களெல்லா மோரிடத்திற் கூடி சகல புவன கர்த்தாவாகிய மகோற்கடப் பிள்ளையாருக்குக் கிடையாதபொருள் எவ்வுலகங்களினு மில்லையாயினும், யாமெல்லாங் கடைத்தேறும்படியான சில உபசாரங்களைச் செய்வோமென்று ஆலோசித்து யாவருஞ் சிவபெருமானைப் பணிந்து நின்றார்கள். அக்குறிப்பைச் சிவபிரானறிந்து பினாகம்-திரிசூலம்-உடுக்கை-மழு-சடை-மதி என்னு மிவைகளை மகோற்கடப் பிள்ளையாருக்குக் கொடுத்து, சடையில் கங்கையைத் தரித்து, விருபாக்கன்-பரசுபாணி-பாலசந்திரன் என்னும் பெயர்களையுங் கொடுத்தனர். அதற்குமேல் உமாதேவியார், சிங்கவாகனங் கொடுத்து சிங்கவாகன னென்னும் பெயரிட்டு துட்டர்களையெல்லாஞ் சங்கரிக்கக்கடவை. என்று ஆசீர்வாதஞ்செய்து மீட்டுமொரு வாளாயுதத்தைக் கொடுத்து கட்கதரனென்னும் மற்றொரு பெயரையுங் கொடுத்தனர். இப்பால் பிரமன் தனது அடையாளமாக நவரத்னமயமா யிருக்கின்ற ஒரு கமண்டலமும், ஒரு திவ்விய பரிமளத்தோடு மிருக்கின்ற ஒரு தாமரைப்பூவும் மகோற்கட மூர்த்தியினுடைய திருக்கரத்திற்கொடுத்துப் பிரமபதி யென்னும் பெயரிட்டுப் பணிந்தனன். விண்டுவானவர், திவ்வியமான ஓர் பீதாம்பரமும் சக்ராயுதமும் வைத்து விஷ்ணுபதி யென்னும் பெயரிட்டுப் பணிந்தனர். பிரகற்பதிதேவர், ஓர் இரத்தின பாலிகையை வைத்துப் பரதனென்னும் பெயரிட்டுப் பணிந்து காசிபருக்கும் பாரனந்தா னென்னும் ஓர் பெயரிட்டனர். வருணதேவன் ஓர் பாசத்தைவைத்து சர்வப்பிரியதேவ னென்னும் பெயரிட்டுப் பணிந்தனன், சமுத்திரராசன், பிராமணவடிவங்கொண்டுவந்து ஓர் முத்துமாலையை திருவடிக்கீழ் வைத்து மாலாதர னென்னும் பெயரிட்டுப் பணிந்தனன், ஆதி

சேடன், தானே ஒரு படுக்கைமெத்தையாகி மகோற்கட மூர்த்தியைத் தாங்கிப்
பணிராசவாசனென்னும் பெயரிட்டு பணிந்தனன். யமதருமராசன், ஓர்தண்டா
யுதத்தை வைத்து தண்டாதர னென்னும் பெயரிட்டுப் பணிந்தனன். அக்கினிதே
வன், நுதற்கண்ணை மறைத்துவந்த மகோற்கடப் பிள்ளையாருக்கு யாவையும்
நீற்றவல்ல ஓர் சத்தியைக் கொடுத்து தனஞ்செயனென்னும் பெயரிட்டுப் பணிந்
தனன். வாயுதேவன் மிகுத்தவலுமையைக்கொடுத்துப் பிரபஞ்சனென்னுமோர்
பெயரிட்டுப் பணிந்தனன். இவ்வாறு அடைக்கலம்புகுந்த தேவர்களெல்லாம்
மனம் வாக்கு காயமென்னும் மூன்றினோடு படைக்கலமுதலியவைகளைப் பத்தி
பூர்வமாகக் கொடுத்துப்பணிந்துநிற்க, மகோற்கடப்பிள்ளையார் யாவரு மானந்
தமெய்தும்படி அப்படைமுதலியவைகளை மிக்க மகிழ்வோடு மேற்றுக்கொண்
டு அவ்வவர்கட்குச் செய்யத்தக்க அனுக்கிரகங்களையுஞ் செய்தருளினர்.

இப்பால் இந்திரனானவன் மகோற்கடமூர்த்தியினுடைய திருவிளையாட்டி
னாலோ? மற்றெதினாலோ? தான்மாத்திரம் மதிமயக்குற்றவனாய் எல்லாந் தே
வர்கட்கும் அரசனாகவிருக்கின்ற என்னை யாவரும் வணங்கவேண்டுவதேயல்லா
மல் யா னொருவரையும் வணங்கேன். சகல வெள்ளங்களுந் தாழும்படியான
சமுத்திரமானது ஓர் சிறியகுட்டைநீராய் மிச்சிப்பதோ? எல்லாமிருகங்களும்
பணிந்துபோகத்தக்க இராசகண்டீரவமானது அற்பமான புல்லையும் இச்சிக்
குமா? என்றிவ்வாறு மூடத்தனமாகப்பேசி அதிக கர்வத்தோடு நின்றனன்.
அப்படி நிற்பவனைக் காசிபமுனிவர் புத்திரவாஞ்சையினாற் பார்த்து ஓ சுவர்க்க
லோக வரசனே! முன்னர் உனது அரசை நடக்கவொட்டாமற் செய்த சத்ரு
ருக்களுடைய யுத்தத்திலே நீ தோற்று இப்போது யாவு மிழந்திருக்கின்
றனை இனியேனும் உனது போகபாக்கியங்களைப் பெற்று உனது அரசையும்,
வீரத்தையுங் கைப்பற்றுக்கொள்ள நினைந்தாயில்லை; தறுகண்ணர்களாகிய தே
வாந்தகனையும் நராந்தகனையுஞ் சங்கரித்து, மூவுலகங்களையும் பாதுகாத்து, எவ்
கும் வேதாகமநெறிகளை நிலைநாட்டி, உன்னையுங் காத்தருளும்பொருட்டு சர்வ
வல்லமையுள்ள ஈச்சுரனே இங்கு சிறுபிள்ளையாகத் திருவவதாரஞ் செய்திருக்
கின்றதை அறிந்திலையே? அவர் இதுகாறுஞ்செய்தருளிய திருவிளையாடல்களைச்
சிறிதும் அறிந்திலைபோலும்; ஐயோ, எனதையன் திருவவதாரஞ்செய்தருளி
ஓராண் டாவதற்குமுன் விரசையென்னும் அரக்கியைச் சங்கரித்தனர். இரண்
டாவதாண்டில் உதத்தன்-துந்துபி யென்னு மிரண்டசுரர்களைச் சங்கரித்தனர்.
மூன்றாவதாண்டில் சித்திரனென்னுங் கந்தருவனுக்குச் சாபந்தீர்த்தருளினர்.
நான்காமாண்டில் ஆகா முதலிய மூன்று கந்தருவர்கட்கு அவர்கள் பூசித்துவந்
த பஞ்சமூர்த்தங்களை மறைத்து மீட்டுந் தமது திருமேனியின்றுங் கொடுத்த
னர். இப்போது நடந்துவருகிற ஐந்தாமாண்டில் பஞ்சவடிவாய்வந்த ஐந்தசுரர்
களை யாவருங்கண்டதிசயிக்கும்படி சங்கரித்தனர். அவ்வற்புதத்தை நீயும்பார்த்
தனை; தற்காலத்தில் சிறுபிள்ளையா யிருக்கிறவருடைய சிறிய விளையாட்டுகள்
இவ்வாறானால் பிற்காலத்தில் இவர் பெரியவரானபின்பு செய்யப்போகின்ற

பெரிய விளையாட்டுகளை யாவரா லறியக்கூடும். மைந்தனே! இனியேனும் சுகத்தினைப் பெறக்கோரி, நீயும் அவரைப்பத்தியோடு பூசனைசெய்யென்று சொல்லினர். தனது தந்தையாகிய காசிபர் இவ்வளவுகூறியும் இந்திரன் அவைகளை யொப்புக்கொள்ளாமல் சுவாமியைச் சோதிப்பான்போல் வாயுதேவனைக்கூவி, நீஉனது பராக்கிரமத்தோடுஞ்சென்று மகோற்கடமூர்த்தியைஅசைத்துவருவாயென்றேவினன். உடனே வாயுதேவன் சுவாமியினுடைய பெருமையினை யறிந்தானாயினும், அதனை இந்திரனுக்கு மறிவிப்பான்போல மிண்டி மேலெழும்பிச் சண்டமாருதமாய்ச் சுழன்றுதாக்கி, யுகாந்தகாலமோவென்று அஷ்டதிசைகளிலுள்ளோரெல்லாம் நடுங்கும்படி தனது பராக்கிரமமெல்லாந்தோன்ற வீசினன். அவ்வீசலினால் அண்டப்பித்திகை ளிடிந்தன. சமுத்திரங்க ளுடைந்துபோயின. பர்வதங்கள்யாவும் பொடியாயின. மரங்கள்யாவும் முறிபட்டு வீழ்ந்தன. தேவலோகமுழுவதும் பூவுலகம்போலப் புழுதிமூடிக்கொண்டது. அனந்தசிவகோடிகள் இறந்துபோயின. இவ்வாறுமகோற்கடப்பிள்ளைபார்மீது வீசியகாற்றினாலே சகலலோகங்களும் இவ்வண்ணமா யலையும்போது, தேவாந்தகனும் நராந்தகனுங் கோபங்கொண்டு நமக்குப்பயந்து ஒடுங்கிக்கிடந்தவாயுதேவனுக்கு இவ்வளவு அதிகாரங்கொடுத்தவர்கள் யாரென்று ஒற்றர்களைக்கூவி விசாரித்துவரக்கட்டளையிட்டனர். அவர்கள் அக்கட்டளையின்படிசென்று விசாரித்துவருமுன்னம் அக்காரியங்களை முன்னமே அறிந்திருக்கின்ற சிலவொற்றர்கள் அவ்வவுண ராசர்களெதிரில் ஓடிவந்து ஆண்டவர்களே! நமதுபகைவனாகிய காசிபனை வெல்லும்படியாக இந்திரனுடைய உத்தரவின்பேரில் வாயுதேவன் தனது வலியெல்லாங்கொண்டு வீசுகின்றனன். இனி அக்காசிபன் முதலாயினோர் எவ்வாறுவார்களோ அறிந்திலேம். அவன்வீசுகின்ற சண்டவேகத்தினால் தேவர்களெல்லாந்திகைத்து நடுங்குகின்றார்களென்றனர். அதைத் தேவாந்தகனும் நராந்தகனுங்கேட்டுச் சந்தோஷ மடைந்தனர். இவ்வாறு வாயுதேவன் தனது வலியனைத்தையுங்கொண்டு சகல விருட்சங்களும் ஆகாயத்திற் பஞ்சுபோற் பறந்தலைய வீசியும், மகோற்கட மூர்த்தியினுடைய திருமேனியில் ஒரு ரோமமேனும் அசையவில்லை. அதன்மீது இந்திரன் அக்கினிதேவனைக்கூவி, நீயும் வாயுவோடுசென்று உனது வலிமையைக் காட்டக் கடவையென்று கட்டளையிட்டனன். உடனே வாயுதேவனோடு அக்கினிதேவனும், சண்டமாருதமும் வடவாக்கினியுமாகக் கலந்து, சர்வசங்காரகாலத்திற் பஞ்சபூத பௌதிகாத்மகமாயுள்ள சகங்களையெல்லாம் பஸ்பஞ்செய்வதுபோலத் தகித்துவருவதினால், சத்தசமுத்திரங்களுஞ் சலமின்றி வற்றிப்போயின. சகல லோகங்களும் அக்கினிச்சுவாலையால் வாடிப்போயின. இவ்வதிசயத்தை மகோற்கடப் பிள்ளையார்கண்டு சிறிது புன்னகைசெய்தனர். அப்புன்னகையை அக்கினிதேவன்தாளமாட்டாது மூர்ச்சையாயினன். அதற்குமேல் மகோற்கட மூர்த்தியானவர் இந்திரன் கொண்டிருக்கின்றஅறிவின்மையைநீக்கத் திருவுளங்கொண்டு, ஓர்விசுவரூபமெடுத்து அனந்த முடிகளும், அனந்த சிரங்களும், அனந்த முகங்களும்,

அனந்த விழிகளும், அனந்த செவிகளும், அனந்த வாய்களும், அனந்த புயங்களும், அனந்த கரங்களும், அனந்த விரல்களும், அனந்த மார்புகளும், அனந்த வயிறுகளுமாகி ஏனைய அவயவங்களும் அனந்தவனந்தமாய் விளங்கச் சகலருந் தாமாகி நின்றனர். அப்படி நின்றபோது அவருடைய திருவடிகளெல்லாங் கீழேழுலோகங்கட்கு மப்பாற்போயிறங்கின. அவருடைய முடிகளெல்லாம் மேலேழுலோகங்கட் கப்பாற்போய்ப் பாய்ந்தன. அவருடைய செவிகளெல்லாம் அஷ்டகுலாசலங்கட்கு மப்பாற்போய் விளங்கின. அவருடைய மயிர்க்கால்கடோறும் அளவற்ற அண்டங்கள்தொங்கின. அனேகஞ்சூரியர்கள் ஏககாலத்தி லுதயமானதுபோல அவருடைய திருமேனியினில் ஓர்சோதி உண்டாயது. அச்சோதியில் அனந்த விஷ்ணுக்கள், அனந்த பிரமாக்கள், அனந்த இந்திரர்கள், அனந்த தேவர்கள், அனந்த முனிவர்கள், அனந்த விஞ்சையர்கள், மற்றுமுண்டானபேர்களும் அனந்தானந்தமாகத் தனித்தனியேவிளங்கிச் சேவித்திருந்தனர். இவ்வாறு சகலபுவனகர்த்தராகிய மகோற்கடமூர்த்தி யெடுத்திருக்கின்ற விசுவரூபத்தைக் கர்வங்கொண்டிருந்த இந்திரன்பார்த்து மிகவும் பிரமைகொண்டு, சுவாமியினுடைய மயிர்க்கால்களிற் றொங்குகின்ற அளவற்ற அண்டங்களில் ஓரண்டத்துள் நுழைந்து, அதற்குள்ளே ஈரேழுபதினாலுலோகங்களும், விஷ்ணு, பிரமன், இந்திரன் முதலானதேவர்களும், ஏனையசீவராசிகளும், அலைவீசைகள்போலவும் பனங்கொட்டைகள்போலவும் அனேகவனேகமாக விருக்கக்கண்டு தனக்கு நேர்ந்திருந்த மதிமயக்கத்தையுங் கர்வத்தையுமொழித்து கவலையுற்று அங்கிருந்து வெளிவருவதற்கு எத்தனங்கொண்டான். அவ்வாறு வெளிவருவதற்குச் சக்தியில்லாமற்றிகைத்து அங்கிருந்தவண்ணமே மகோற்கட மூர்த்தியினுடைய திருவடிகளை மனதிற்றியானித்து மிகுந்தபத்தியோடு துதிசெய்வனாயினன்.

நினைத்தினம்மை யகமிறைஞ்சத் திகழ்தேவ தேவ நின்னை
யனந்தசத் திமென்னும் விசுவாத்து மாவென்று மனந்தானந்த
மனந்தரூப வடியார்க்கு மாறாத வழக்குபொரு ளன்ன மென்று
மினந்தாய்மை யில்லாத சிறியேனு மெப்பொருளுங் கதிநீதானென்றாய்.

விச்சுவக் கிருதனென்றும் விசுவேசனென்றும் விச்சுவமா யீசனென்றும்
விச்சுவா திகனென்றும் பரேசனென்றும் விச்சுவா தீதனென்றும்
விச்சுவபீசக் கியனென்று விகற்பசக்தி தானந்த சொரூபனென்றும்
முச்சகநா யகனென்று நீசனென்று முனையடியேன் முழுப்பக் கண்டேன்,

சர்வவியா பகனென்றுஞ் சகலத்துக்குஞ் சர்வருக்குங் கருவாவென்றுஞ்
சர்வவித்தை களுக்குமா காமென்றுஞ் சருவான்ம சொரூபனென்றுஞ்
சர்வபொருட் களுக்குமிருப் பிடமென்றுஞ் சருசர்வே சனனென்றுஞ்
சர்வான்ம ஞானத்தி லாடாசனென்றுமுனைச் சரணஞ் சார்ந்தேன்.

ஐந்தொழிற்கா ரணரென்றுங் காரணாதீதரென்று மரன்மால் வேதன்
றந்தலைவ ரென்றுந்தா பரசங்க மத்திலிச்சை தன்னை நாடி
நந்நுற வழங்குமொரு நாதரென்றும் விஞ்ஞான சொரூப ரென்றும்
புந்தியுரை கடந்தபூ ரணரென்று மதிந்துன்னைப் புகழா நின்றேன்.

இவ்வாறு தோத்திரஞ்செய்து, ஓ பராபரவஸ்துவே! முன்னர் அடியே னுடைய பேதைமைப் புத்தியினாற்றேவரீரைச் சிறுபிள்ளையென்று நினைத்த பெருங்குற்றத்தைப் பொறுத்தருளி, அடியேனிடத்தில் தேவரீருடைய திருவருட்பார்வை வழங்கி, அடியேனை வெளியில்விடுத்து, முன்போலத் தேவரீருடைய சாக்ஷாத்தரிசனந் தந்தருளவேண்டுமென்றுபணிந்துபிரார்த்தித்தனன். அதற்கு மகோற்கடப்பிள்ளையார் மகிழ்கூர்ந்து, அவனை வெளியிலேவிடுத்துத், தாம்முன்போலவே பிள்ளைப்பருவத்தினராகி யிருந்தனர். அதற்குமேல் தேவர்கள் புட்பவருடஞ்சொரிய, ஆகாயத்தில் பஞ்சவாத்தியங்களும்முழங்க, தேவரம்பையர் நாட்டியஞ்செய்ய, கந்தருவர்கள் கானம்பாட, முனிவர்கள் வேதமோத, இவ்வித வைபவங்களோடு இந்திரனானவன் மகோற்கட மூர்த்தியை அளவற்ற சிறப்பினோடும் பூசனைசெய்து, சுவாமிக்கு எக்காலத்தும் திருவடிப் பணிசெய்திருப்பதற்கு இரண்டு தெய்வஸ்திரீகளைவைத்து, கற்பகவிருட்சமும் அங்குசமும் வச்சிராயுதமும் பிள்ளையாருடைய திருவடிகளில்வைத்து, விநாயகரென்னுந் திருநாமமிட்டுத் தோத்திரஞ்செய்தனன். மகோற்கடப் பிள்ளையார் மீட்டுந் தேவேந்திரனிடத்தில் கிருபையுற்று, சத்துருக்களுடைய யுத்தத்திற்கு இடையாத பராக்கிரமத்தை அவனுக்கனுக்கிரகஞ்செய்து, அவன் சொன்ன தோத்திரங்களை யாவர் துதிசெய்தாலும் அவர்கட்குச் சகலசம்பத்துகளும் அளிப்போமென்று வரமுங்கொடுத்து விடைகொடுத்தனர். பின்னர் தேவேந்திரன், அவ்விடையை முடிமேற்கொண்டு, மீட்டும் பலமுறைபணிந்தெழுந்துமகமேருகிரியை நோக்கிச்சென்றனன். மற்றைத்தேவர்முதலியயாவரும் சுவாமியைப்பணிந்து விடைபெற்றுத் தத்தமிருக்கையை யடைந்தார்கள்.

அதற்குமேல்மகோற்கடமூர்த்திக்கு ஆறுவதுவயதாகுங்காலத்தில்,தாமே தமது சுயேச்சையினால் சகலலோகங்களிலும் விளையாடும்படித் திருவுளங்கொண்டுஅங்குசம்,பாசம்,பாசம்,கமண்டலம்,தண்டாயுதம்,தாமரைப்பூ,மான்றோல், பீதாம்பரம், முத்துமாலை, மூன்றாம்பிறைச்சந்திரன், கத்தூரிப்பொட்டு, கருப்பையென்னுமிவைகளெல்லாம்பிரகாசிக்கும்படி தரித்துக்கொண்டு,சிங்கவாகனமூர்ந்து, ஒருநாள் விண்டுலோகத்திற்கும், ஒருநாள் பிரமலோகத்திற்கும் ஒருநாள்சொர்க்கலோகத்திற்கும், ஒருநாள் நாகலோகத்திற்கும், ஒருநாள்அஷ்டதிசைகளுக்கும், ஒருநாள் மூவுலகங்களுக்கும், ஒருநாள் வனங்களுக்கும், ஒருநாள் மலைகளுக்கும், ஒருநாள்சமுத்திரங்களுக்கும், ஒருநாள் நிதிகளுக்குமாகச்சென்று விளையாடல் செய்திருக்கின்ற நாட்களில், ஒருநாள் காசிபமுனிவ

ருக்குச்சீடனாய் காந்தகனுக்குப் பிரியவசனங்களைக் கூறிக்கொண்டு காசியிலே அரசாட்சிசெய்பவனாய் ஓரரசனிருந்தான். அவன் தனது புத்திரனுக்கு விவாகஞ்செய்யநினைத்துப் புரோகிதத்தொழிலுக்குக் காசிபரை யழைத்துக்கொண்டு போகும்படி நாடினை சுதாவாய் அவராசிரமத்திற்குவந்து அவரைத் தீர்க்கதண்டஞ்செய்தனன். அவ்வரசனைக் காசிபமுனிவர் புத்திரவாஞ்சையோடும் பரிந்தெடுத்து, ஓராதனத்திலிருக்கச்செய்து, அன்பனே! நீவந்தகாரியம்யாதென்று வினவினார். அதற்குக்காசிராசன் அஞ்சலியஸ்தனாய் சுவாமீ! அடியேன் குமாரனுக்கு விவாகஞ்செய்யுமாறு எத்தனித்திருக்கின்றேன்; அவ்விவாகம் சுவாமிகளெழுந்தருளாது நிறைவேறுவதன்று. அடியேன் சுவாமிகளையழைத்துச்செல்லத்தக்க புனிதனல்லேனாயினும், அக்காரியத்தைவந்து நிறைவேற்றி வைப்பது சுவாமிகளுடைய பெருங்கடமையென்றான். அதற்குக்காசிபர் கிருபையுற்று அரசனே! யாம் சாதுர்மாசிய விரதமாரம்பித்தோமாதலால் யாம் வருவதற்கொவ்வாது. நமது குமாரனாகிய மகோற்கடன் அக்காரியத்தைச் சிறப்பெய்த நடத்த வல்லவனென்றுசொல்லி உடனே மகோற்கடமூர்த்தியை யழைத்து, அப்பனே! இவன் காசிதேசத்தரசன்; இவன் உன்னைப்பணியும்படி வந்தனன். இவனே உனக்குச்சீடனாகும்; ஆதலால் இவன்மனதிற்கு மகிழ்ச்சியுண்டாகும்படி உனது காட்சியைக்கொடுத்து, இவனோடுகூட நகரத்திற்குச்சென்று, இவனுடையபுத்திரனுக்கு விவாகஞ்செய்து முடித்து, மீட்டும் இவ்விடத்திற்கு வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டனர். அதற்கு மகோற்கடமூர்த்தியானவர், இனி வருங்காரியங்களை யாலோசித்து அதற்கிசைந்தனர். பின்னர் காசிராஜன் தனது ஆசிரியரிடத்தில் விருந்துண்டு மிக்கமனமகிழ்ச்சியோடு விடைகொண்டு அவரது பத்தினியாகிய அதிதி யிருக்குமிடத்திற் சென்று பணிந்தனன். அவ்வதிதி அவனைப்பார்த்து அரசனே! இம்மகோற்கடனே சிறுவன்; இவன் ஒன்றையுந் தேறாமல் துடுக்காய்ச் செய்பவனாவன்; நிதிதும் பயமறியாதவன்; இவனால் அனந்த இடையூறுகளும் உற்பாதங்களும் உண்டாகும்; ஆதலால் அவைகட்கெல்லாம் நீ காப்பாற்றி இப்போது நீ எவ்வித வாஞ்சையினாலழைத்துக்கொண்டு போகின்றனையோ அவ்வாஞ்சையோடு மீட்டு மிவ்விடத்திற் கொண்டுவந்து சேர்க்க வேண்டுமென்று கட்டளையிட்டு, சுவாமியைத் தனது கரத்தினாற்பிடித்துவந்து அவ்வரசன்கையி லொப்புவித்தனள்.

கேட்டீர்களோ சவுனகாதி முனிவர்களே! அரிபிரமேந்திராதியராலும் அரியவேதங்களாலு மறிதற்கரிய பராபரவஸ்துவா யிருக்கின்ற மகோற்கடமூர்த்தியை அதிதியானவள் தனது அருமைத்திருக்கரத்தினாற்பிடித்துக் காசிராசனிடத்திலொப்புவிக்க, இனிமூர்த்திவீட்டைத் தனக்குக் காணியாட்சியாகக் கொள்ள வல்லோனாகிய அவ்வரசன் பிருந்தவுவகையோடும் எமது சத்தரைப் பணிந்து கைப்பற்றினனென்றால், இவர்கள் பூர்வத்திற்செய்திருக்கின்ற தவத்தின் பெருமையினை யார் அளவிட்டுரைக்க வல்லவர்கள்.

இப்பால் காசிராசன் மகோற்கட மூர்த்தியைப் பணிந்தெழுந்து, அவரை அளவற்ற தோத்திரங்களோடும் வரிசைகளோடும் இரதத்திலேற்றித் தானு மேறித் தனது காசிநகரை நோக்கிச் செலுத்தினன். அவ்வாறு செலுத்தப் பட்ட இரதமானது கண்டகபர்வதத்திற்குச் சமீபத்தில் வர, அப்பர்வதச் சாரலில் பதினாயிரம் வருடமாய்ப் புகையை ஆகாரமாகப் புசித்துக் கொண்டு இரௌத்திர கேதுவுக்கு இளையவனும், தேவாந்தகனுக்கும் நராந்த கனுக்குந் தகப்பனுமான, தூமாட்சனென்னும் பெயரையுடைய ஓரவுணன் மகாவல்லமையுள்ள ஓராயுதம்பெறவேண்டி சூரியனைநோக்கித் தவஞ்செய்தி ருந்தனன். அவன்றவத்தின் முடிவுநாளும், காசிராசன் அவ்விடத்தைச் சமீ பித்தகாலமும் ஒன்றாய்நேர்ந்தால் அத்தினம் அவ்வேளையில் சூரியனானவன் தனது லோகத்திலிருந்தவண்ணம் அவன் தவத்திற்கிரங்கி ஓராயுத மனுப்பினன். அவ்வாயுதமானது ஆகாயமெல்லாம் அளவற்ற சோதியை வீசிக்கொண்டு பூமியை நோக்கிவர அதைமகோற்கட மூர்த்திபார்த்து அதன்வல்லபத்தை யாமறிவோமென்று நினைத்துச் சரேலென்று இரதத்தினின்றும் ஆகாயத்திற் பாய்ந்து சர்ப்பத்தைக் கருடன் பிடிப்பதுபோல அவ்வாயுதத்தைத் தமது காத் தாற் பற்றி மீட்டும் இரதத்தில் வந்திருந்து சூரியனை நோக்கித் தவஞ்செய்து கொண்டிருக்கின்ற அந்த தூமாசுரன்மீது ஏவினர். அது அவர் திருக்காத்தி னின்றும் வெளிப்பட்டமாத்திரத்தில் அதிக வல்லபத்தோடுசென்று தீயா யினோர் செய்யுந் தவமானது உடனே அவருக்குத் தீமையை விளைக்குமென்று சொல்லும் மேலோர் வாக்கியம்போல, அப் பாதகனுடைய தலையை யறுத்துக் கீழே தள்ளியது. அவனுடைய சரீரமானது ஐந்நூறு யோசனை விசாலத்திற்கு விழுந்தது. இவ்வற்புதத்தைக் காசிராசன் பார்த்து மனதில் அதிசயமும்பயமு முண்டாகி ஐயோ! நமக்கு வல்லமையில்லாததினாலன்றோ நாரதருடைய ஏவற்பணிகளை நடாத்திக்கொண்டு யாவரும் புகழும்படியாக இதுகாறும் ஒரு சங்கடமுமில்லாமல் அரசாட்சிசெய்துவருகின்றோம். நமது குமாரனுக்கு ஒரு விவாகம் நடப்பிக்கவேணுமென்று இத்தினம் இவரை இங்ஙன மழைத்துவந் தோம்; அதனால் நமது சம்பத்துங் குடியுங் குலமும் ஒருங்கே நாசமாகும்படி யாய் நேர்ந்தே; இவரோ புரோகிதருடையகுமாரர்; அவனோ தனது வெற்றி யினால் திரிலோகங்களையு மடக்கி ஆண்டுகொண்டிருக்கின்ற அரசன்; இந்தச் சிறியவருடைய சார்பால் நமக்கு யாது கூடிவரப்போகின்றது. அந்தப் பெரிய வனுடைய சார்பை யிந்தினம் சதமா யிழந்துபோனோமே? ஆஅ, ஆஅ. என் னசெய்தோம்; இனி என்னசெய்யப்போகின்றோம், என்றிவ்வாறு நினையாத தெல்லாம் நினைந்து நினைந்து துயரமுற்றிருந்தனன். அக்குறிப்பினை மகோற் கடமூர்த்தி அறிந்தும் அறியாதவர்போல விருந்தனர். அச்சமயத்தில் இறந்து போன தூமாட்சனுக்குப் பணிசெய்திருந்த மகாபராக்கிரமசாலிகளாகிய சேக னனென்றும் மனுவென்றுஞ் சொல்லாநின்ற அவன் புத்திரர்க ளிருவர் வந்து மகோற்கட மூர்த்தியைப் பார்த்து, ஓ பிள்ளாய்! உனக்கு ஒருபிழையுஞ் செய்

யாமல் அளவற்றகாலமாய் அரிய தவஞ்செய்துகொண்டிருக்கின்ற எங்கள் பிதா வை வீணே கொன்றனையே? அறிவற்றவனே! உனது திருவாகம் அவ்வளவு பெரிதோ? அதை இப்போதே அறிகின்றோம். கர்வங்கொள்ளாதே யென்று சொல்லிப் பயந்திருக்கின்ற காசிராசனைப் பார்த்து, அடா பேதாய், நீ அன்றோ ஆடிக் காற்றிலுலையும் இலவம்பஞ்சுபோல எங்கும் நிலைப்படாமல் துன்பப்பட்டுக்கொண்டிருந்தனை. அப்படியிருந்த உன்னைச் சகல பாக்கியங்களை யும் அனுபவிக்கவைத்து, உனக்கு வேண்டிய உபகாரங்களைச்செய்த எங்கள் பிதாவுக்குப் பிரதியுபகாரம் இச்சிறுவனைக்கொண்டு அவர் உயிரைவாங்கும்படி செய்வித்தனையல்லவா? நன்மைசெய்தோர்க்குத் தீமைசெய்வோர்களுடைய சம் பத்தும் ஆயுளும் நிலைபெறாதென்று பெரியோர்கள் சொல்லும் வாக்கியத்தை உலகத்தா ரறியும்வண்ணம் இப்போதே உன்னிடத்தில் செய்து காட்டுகிறோம் பாரென்றுசொல்லி ஆக்கிரமித்து அவ்வரசன்மேல் விழவந்தார்கள். அப்போ தவ்வரசன் பின்னும்பயந்து நடுக்கமுற்று ஒருவர்க்கொருவர் குறைவற்றபராக் கிரமத்தினையுடைய வீரர்களே! உங்களுக்கு இடையூறுசெய்யும்படி இச்சிறு பிள்ளையை யானழைத்து வந்தவனல்லன்; யானடத்தப்போகின்ற விவாகநிமித் தம் அழைத்துவந்தேன். எவ்வளவும் அச்சமும் பயமுந் தெரியாத மிகவு மிள மையான இச் சிறுவன் செய்த பெரும்பிழையை நீங்கள் பொறுக்கவேண்டும். திரிலோகங்களினுங் கீர்த்திபெற்றிருக்கின்ற நீங்களே எங்கள்மீது கோபித்து உபத்திரவஞ்செய்யத்தொடங்கினால் யாங்கள் என்னசெய்யப்போகின்றோம் என்றிவ்வாறு மனங்கலங்கி நடுங்கிப் பலமுறை தாழ்ந்த வசனங்களாற் பிரார்த் தித்தான். அதை மகோற்கடமூர்த்தி கேட்டு தாமும்பயந்தவர்போல ஒரு திரு விளையாட்டாகக் காசிராசனைப்பார்த்து அரசனே! என்னை எனது தாய்தந்தை யரிடத்தி லிருக்கவொட்டாமற் கொண்டுவந்தனை, வந்தவிடத்தில் சத்துருக்க ளானோர் உபத்திரவஞ் செய்யவந்தால் நீ அவர்களோடெதிர்த்து யுத்தஞ் செய் துக் கொன்று, என்னைக் காப்பாற்றுகிறவகையைத் தேடாமல் அவர்களோடு இ தமான வார்த்தைகளைப் பேசுகின்றாய், அவ்வாறு பேசினும் அவர்கள் மூர்க்கர் களாகையால் உன்னையு மென்னையு மோதாமல் விடார்கள். உன்னிலும் பராக் கிரமமுடைய அரசன் உன்னைக் கோபித்தால் உனது உயிரும் சம்பத்துமே போய்விடும். எனது தந்தையினுடைய மனது சிறிது கோணுமாயின் இப்பிறப் பில் தவம் தானம் சம்பத்து உயிர்முதலானயாவும் நாசப்படுவதன்றி மறுபிறப் பிலும் வாழ்க்கைகெடுத்து எழுபிறவியும் பலதுன்பங்களை விளைக்குமென்று நீ யறிந்தாயில்லை. ஒருவனுக்குத் தவசீலராகிய எனது தந்தையினுடைய கிருபை சிறிதுண்டாயின் மேலான பராக்கிரமசாலிகளாகிய அரசர்களா லுண்டாகு மிடர்கள் அவனுக்குச் சிறிதுமில்லை. சந்திரனிடத்துற்ற முயலைப் பிடிப்பதற்கு சிங்கம் வல்லதோ? என்றிவ்வாறு கிருபாநிதியாகிய மகோற்கடமூர்த்தி திரு வாய்மலர்ந்தனர். இப்பால்காசிராசன் முன்னர் அவ்வவுணர்கள்கூறியவன்மொ ழிகளையும், பின்னர் மகோற்கடமூர்த்தி திருவாய்மலர்ந்தருளிய இன்மொழிகளை

யுங்கேட்டு, இருதலைக்கொள்ளியிலகப்பட்ட எறும்புபோல அவனதுமனம் ஒரு நிலைப்படாமல் அங்குமிங்குமாகச்சுழல, அக்காட்சியை மகோற்கடமூர்த்தியறிந்து, எதிர்த்துவந்த இரண்டவுணர்கள்மீது ஒருபெருமூச்சுவிட்டனர். அப்பெருமூச்சானது முன்னொருபோது நந்திதேவருடையஉயிர்ப்பு கருடனை அந்தரத்திலலையச்செய்ததோ அவ்வாறு அவர்களைக்கொண்டு வாரிக்கொண்டுபோய் நராந்தகனுடைய கொலுச்சபையிலே இரண்டு பர்வதங்களைப்போலப் போட்டது. அப்போது அளவற்ற உத்திரக்களுடைந்துபொடியாயின. வச்சிரத்தூண்களனைத்தும் பிளந்துபோயின. அழகுறச்சமைத்திருந்தமேடைகளெல்லா மிடிபட்டன. எங்கும் புழுதிகளெழும்பி அவனுடையசபையையெல்லாம் மூடிக்கொண்டன. இவ்வித உற்பாதங்களை நராந்தகன் கண்டு பயந்து, ஒஹோவென்று சிம்மாசனத்தினின்றுமிழிந்து அந்தப்புரத்திற்சென்று, ஒளிந்துக்கொண்டு மனங்கலங்கித் தூதர்களை விளிவித்து இவ்வுற்பாதம்யாதுகாரணத்தால் வந்ததோ அதனை அறிந்துவரக்கடவீர்களென்று துரத்தினான்.

உடனே அவர்களும் அவ்வாறேசென்று தெரிந்துகொண்டு, பதைத்தும் வெயர்த்தும் ஓடிவந்து நராந்தகனைப் பணிந்துநின்று ஆண்டவனே, காசி இராசனெனுமவன் தனது புத்திரனுக்கு விவாகஞ்செய்யுநிமித்தம் தன்னுடைய புரோகிதனாகிய காசிபமுனிவரிடத்தில் சென்று அவரிடத்தில் பாலசந்திரனைப்போல வளர்ந்துகொண்டிருந்த மகோற்கடனை அழைத்துக்கொண்டு மீட்டுங் காசிப்பட்டணத்தை நோக்கிச்செல்ல, அம்மார்க்கத்தில் தேவரீருடைய சிறியதந்தையாகிய தூமாட்சர் தவஞ்செய்துகொண்டிருக்க அப்புதுமையை அச்சிறுவன் பார்த்து ஓர்விளையாட்டாக அவரைக்கொன்றனன். அதை அவருக்குப் பணிசெய்திருந்த அவர் புத்திரர்கள்கண்டு உடனே அச்சிறுவனிடத்திலோடித் தங்களுக்குண்டாகிய மனவருத்தத்தினால் அவனைப் பலமுறைவைது எதிர்த்து நின்றனர். அதற்கச்சிறுவன் கோபங்கொண்டானில்லை. அத்திர சத்திரங்களையுந் தொடவில்லை. தனது பெருமூச்சினாலேயே அப்புத்திரர்களிறக்கும்படி செய்து அவர் சரீரங்கள் இச்சபையில் வீழவுந்தள்ளினான். அவர்கள் இங்கே விழுந்ததினாலே சபைமுழுவது மழிந்துபோனதன்றி சபையிலிருந்தவர்களிற் சிலர் துவையலானார்கள், சிலர் தோள்முதலிய அவயவங்களை யிழந்தார்கள். சிலர்தப்பி ஓடிப்போனார்கள். இப்போது அக்காசிராசன் அச்சிறுவனோடு தனது தேரைச் செலுத்திக்கொண்டு அம்மார்க்கமாகப் போகின்றானென்றார்கள். அவையனைத்தையும் நராந்தகன்கேட்டுக் கோபநகைகொண்டு, பெருமூச்செறிந்து இங்கிருந்து வெளிப்படுமுன்னமே தண்ணீரினின்று நீங்கிய முதலையைப்போலக் காசிபனிடத்தினின்று நீங்கிச் செல்லுகின்ற அம்முனிச்சிறுவனைக் கொல்லுகின்றேனென்று வைராக்கியஞ் செய்துகொண்டு கொடுமையிற்சிறந்த இராக்கதர்களில் ஐந்நூறுபேரை யழைத்து நீங்கள் இந்நிமிடத்திற்சென்று காசிபன் மகனையுங் காசிராசனையுங் கைப்பிடியாகப்பிடித்து நமக்குமுன் கொண்டுவந்துவிடக்கடவீர்கள். ஒருவேளை அவர்கள் மறங்கொண்டு போர்செய்வார்களாயின்,

உடனே அவர்களைக் காக்கைக்கும் கழுகுக்கு மிரையாக்கிவாருங்களென்று ஆக்கியாபித்தனன். அம்மாத்திரத்தில் அவர்கள் இதோ முடித்தேமென்று பணிந்தெழுந்து ஓர்நொடிப்போதில் சூரியனை மேகங்கள் சூழ்ந்துகொண்டாற்போலக் காசிராசனுடைய தேரைச்சுற்றிலுஞ் சூழ்ந்து ஆர்ப்பரித்துக்கொண்டு மகோற்கட மூர்த்தியைப் பிடிக்க நெருங்கினார்கள். அப்போது எமதையன் ஓராயுதமேனுங் கைப்பற்றாது மேககர்ச்சனையைப்போல ஒருபேரொலி காட்டினர். அப்பேரொலிக்கு அவ்வீரர்கள் தாளமாட்டாது பேரிகையோசையினைக் கேட்ட அசுணமா எவ்வாறுமயங்கி இறக்குமோ, அவ்வாறு யாவரும் பூமியிலே வீழ்ந்து பதைபதைத்து இறந்துபோனார்கள். காசிராசன் தனது தேரைச் செலுத்திக்கொண்டு போயினன். அவ்வதிசயத்தைக்கண்ட சிலதூதர்கள் விரைந்தோடி நராந்தகனைப் பணிந்தெழுந்து, ஆண்டவனே! முன்னர் தேவரீருடைய கட்டளைப்படி சென்ற வீரர்களெல்லாங் காசிராசனுடைய தேரைச் சூழ்ந்துகொண்டார்கள். அப்போது அவ்விராசனோடிருக்கின்ற அப்பிராமணச் சிறுவன் கோடைகாலத்து இடியைப்போல ஓர் தொனியிட்டு ஆர்ப்பரித்தான்: அத்தொனிக்கு நமது வீரர்கள் தாளமாட்டாமல் சர்ப்பங்களைப்போல பூமியில் விழுந்து இறந்துபோனார்கள், ஆண்டவனே! உருவிலே சிறுவனென்று நினைத்து அந்தத் தெய்வச் சிரேஷ்டனைப் பகைத்தால் சகல துன்பங்களும் வரும். அவனுடைய வலியைக்குறித்து யோசனைசெய்து அவனைப்பூசித்தால் பெருமை பெறலாமென்று சொன்னார்கள். அதைக் கேட்டமாத்திரத்தில் காய்ந்த செம்பூசியைக் காதிலேற்றினாற்போல நராந்தகனுக்குக் கோபமேலிட்டு சரீரமெல்லாமழல்போலச் சிவந்து தனக்கு அழிவுகாலம் நேரிட்டபடியால் அற்புத்தி மேலிட்டவனாகி, மிக்க ஆவேசத்தோடும் அத்தூதர்களைப் பார்த்து அறிவீனர்களே! யுத்தத்தில் எதிர்த்துவாராதவனைத் தெய்வச் சிரேஷ்டனென்று சொன்னீர்கள். உங்களுடைய பேதைமைப் புத்தியினால் உங்களுக்கு நீங்களே பேடியென்று காட்டிக்கொண்டீர்கள். யாங்களோ சிவபிரானைநோக்கி அளவற்ற நாள் தவஞ்செய்து அரியவரங்களைப் பெற்று பிரமன்முதலிய தேவர்களையெல்லாம் ஒருங்கி நமக்கு ஏவலாக்கி வைத்திருக்கின்றோம். எங்களுடைய பராக்கிரமத்தை எவ்வளவும் யோசியாமற் போனீர்கள். அம்முனிப்பயலோ சோற்றையினத்தி லுதித்தவன்; ஒருகல்வியுங் கல்லாதவன்; ஆயுதபரீட்சை நன்றாய்த்தெரியாதவன்; அரியதவங்களைச்செய்து பெரியவரங்களைப் பெறாதவன்; ஓர் சேனையேனு மில்லாதவன், யாது மற்று ஒருவனுமிருக்கின்ற பையனை நீங்கள் மேலான வீரனென்று சொன்னீர்கள். ஓரொலி பூமியைத் தோண்டி மலையைச் சாய்க்குமோ? ஓர்விட்டிற்பூச்சி வடவாமுகாக்கினியை யவிக்குமோ? அதுபோல, ஓர் சிறுபையல் என்னுடனே யுத்தஞ்செய்து கொல்லுவானென்று நீங்கள் அவனை என்னிலுமேலாகச் சொன்னீர்களல்லவா? ஆ, ஆ, ஆ, ஆ! நன்றாயிருக்கின்றது நன்றாயிருக்கின்றது. என்றிவ்வாறு அத்தூதர்கள்மீது தன்னுயிரைப் பாதுகாத்துக் கொள்ளும்வகை யின்னதென்று தெரிந்துக்கொள்ளாத நராந்தகன், கோ

பரவேசங்கொண்டு அவர்களை அந்தக்ஷணமே கொன்றுவிட்டு, வேறே சில அசுரர்களைத் தனது மனதிற்கேற்றபடி ஆராய்ந்துவைத்து, மாயையினும் யுத்தத்திலும்வல்ல சில அவுணர்களை அந்தரங்கத்தில் வரவழைத்து, அவர்கட்கு அளவற்ற வெகுமதிகளைக் கொடுத்து, ஓ! அன்பர்களே! நீங்கள் யாவரும் விரைந்துசென்று காசிராசனையும் காசிபனுடைய மகனையும்பிடித்துக்கொண்டு வாருங்களென்று ஆஞ்ஞாபித்தனன். அவ்வாறே செய்துவருகின்றோமென்று அவ்வீரர்கள் பணிந்து விடைகொண்டார்கள்.

இப்பால் விடைகொண்டு காசிராசனை நோக்கிச் செல்லுகின்ற அவ்வீரர்கள் தங்களுக்குள் யாவரும் ஒருமித்துக்கூடி. மேலான வல்லமையையுடைய மகோற்கடனுக்கெதிரே நாம்போய் வென்றுவருவது மிகவு மரிதாதலால், நாமனைவருந் தனித்தனி வெவ்வேறு மாயவடிவங்களைக் கொண்டுசென்று அவ்விருவரையுங் கொல்லவேண்டும். அல்லது மற்றெந்தவிதத்தாலாவது அவர்களைக் கட்டிப்பிடியாகப் பிடித்து, நமது அரசனெதிரிற் கொண்டுவந்து விடவேண்டும். இந்த இரண்டிலொன்றைச் செய்து நமது ஆண்டகைக்குச் சந்தோஷமுண்டாக்கிவைப்பதே நமக்குரிய பெருங்கடமையென் றிவ்வாறு யாவருந்தீர்மானஞ் செய்துகொண்டு, அதிக வேகத்தோடும் நடந்தார்கள். அதற்குள்ளே காசிராசன் மகோற்கட மூர்த்தியினுடனே அநேகங் காடுகளையும் மலைகளையுங் கடந்து சென்று தனது நகரவெல்லையை யடைந்தனன். அப்போது அரசன் வருகிற செய்தியை அமைச்சர்களும் அங்கநகரவாசிகளும் அறிந்து காசிப்பட்டணம் முழுவதும் அலங்காரஞ் செய்வித்து வீதிகளை யெல்லாம் தேவேந்திர லோகம்போலச் சந்தனம், பனிநீர், நமனியப்பொடி, மலர்கள், இரத்தினங்கள் முதலியவைகளால் அழகுறச்செய்து அளவற்ற வரிசைகளோடு மெதிர்சென்று பணிந்தார்கள். இவ்விதமான பலவகைகளோடு தேவதேவோத்தமராகிய மகோற்கட மூர்த்தியானவர் நகரத்தினுள்ளே பிரவேசிக்குமப்போது அவ்வியலங்களைக்காண வந்த ஸ்திரீகளெல்லாம் மகோற்கடமூர்த்தியினது அற்புதமாகிய ரூபலாவண்ணியங்களை நேத்திரோற்சவமாகக்கண்டு அளவற்ற ஆசைப்பெருக்கென்னுங் கடலில் மூழ்கினார்கள். அவருட்சிலர் பர்வதங்கள்மீதிருக்கும் அரம்பாஸ்திரீகளைப்போல ஆகாயமளாவியோங்கிய உப்பரிகையின்மீதிருந்து தமக்குள்ள புத்திரவாஞ்சையோடு மகோற்கடமூர்த்தியைக்கண்டு தரிசிக்க, உடனே அவர்கள் மனமானது கரைபுரண்டு இரண்டுதனங்களிலும் பால்சுரந்து பாயும்படிநின்றார்கள். சிலர் மேகமுகடுயிற் றவழ்கின்ற சந்திரனைப்போலத் தங்கடங்கள் முகங்களைச் சாளரங்களின் வழியாக நீட்டிக் கொண்டுதொழுது தமது கண்கள்குளிரும்படித் தரிசித்தார்கள். சிலர் வீட்டின்கணுள்ள பாலகர்களைக்கூட்டிக் கொண்டோடி விரைந்துசென்று மகோற்கடமூர்த்தியினுடைய பேரழகைக்கண்டு அக்கின்மேனியே அவர்பால் அர்ப்பணித்தார்கள். சிலர் தாங்கள் எழுதிக் கொண்டிருந்த சித்திரத்தைவிடுத்து மகோற்கடமூர்த்தியைத் தரிசிக்கச்சென்று மீட்டும்வந்து முன்னெழுதிய வுருவத்தை முடிக்கவெண்ணினவர் அவ்வுருவோடு

மகோற்கடமூர்த்தியினுடைய வருகையும் எழுதிமுடித்து ஆச்சரியப்படுவார்கள். சிலர் ஒருகண்ணுக்கு அஞ்சனந்தீட்டி யோடிவந்து கிருபாநிதியாகிய மகோற்கடமூர்த்தியைத் தரிசித்துச்சென்று, மற்றொரு கண்ணுக்கு மஞ்சனந் தீட்ட அப்படித்தீட்டியும் சுவாமியைத் தரிசித்ததனாலுண்டான ஆனந்த பாஷ்பத்தால் முன்தீட்டிய அஞ்சனமழிந்துபோக, ஒருகண் மையினர்களே யானார்கள். சிலர் அண்ணலாராகிய மகோற்கடமூர்த்தியைக் கண்டவுடன் தமது ஆசைப் பெருக்கத்தால அணிகளெல்லாங் கழன்றுவிழ, அவைகளை மீட்டுமெடுத்தணிபவர் தமது மதிமயக்கத்தால் நுதலிலணியும்படியான இரத்தின மாலைகளை முலைகளுக்கும் முலையிலணியும்படியான முத்துமாலைகளை நுதல்களுக்குங் கால்களி லணியும்படியான கிண்கிணிகளைக் கரங்களுக்குங் கரங்களி லணியும்படியான வளைகளைக் கால்களுக்கு மணிவார்கள். இவ்வாறு பேதைமுதல் பெதும்பையீறாயுள்ள எழுவகைப் பருவங்களையுடைய ஸ்திரீகளெல்லாங் கண்கள் கிழிந்தும் வளைகளிழந்துங் குழல்கள் சோர்ந்தும் வார்கள் நெகிழ்ந்தும் மேகலையொழிந்தும் நின்றார்கள். அங்கு வந்திருந்த ஆடவர்களும் இம்மணித் தேரின்மீது வருகின்ற புண்ணியமூர்த்தி முன்னர் திரிபுராதிகளை யெரித்தருளிய சிவபிரானோ? விஷ்ணுவோ? பிரமனோ? அறிகிலேமென்று பேசிக்கொள்ளுவார்கள். இவ்வண்ண மாடவரும் ஸ்திரீகளும் ஆசைக்கடலில் மூழ்கி ஆனந்த மெய்தும்படி எமதையனாகிய மகோற்கடமூர்த்தி யொருவரே புத்திரனாக நினைத்தவர்கட்குப் புத்திரனாகவும், பிதாவாக நினைத்தவர்கட்குப் பிதாவாகவும், தமையனாக நினைத்தவர்கட்குத் தமையனாகவும், தம்பியாக நினைத்தவர்கட்குத் தம்பியாகவும், மருமகனாக நினைத்தவர்கட்கு மருமகனாகவும், மைத்துனனாக நினைத்தவர்கட்கு மைத்துனனாகவும், மாமனாக நினைத்தவர்கட்கு மாமனாகவுந் தரிசனங் கொடுத்ததல்லாமல், மாலாக நினைத்தவர்கட்கு மாலாகவும், பிரமனாக நினைத்தவர்கட்குப் பிரமனாகவும், இந்திரனாக நினைத்தவர்கட்கு இந்திரனாகவும், சிவபிரானாக நினைத்தவர்கட்குச் சிவபிரானாகவுமிருந்து எவ்வெவர் எந்தெந்த தெய்வமாக நினைக்கின்றார்களோ அவ்வவர்கட்கு அந்தந்த தெய்வமாகத் தரிசனந்தந்து யாவருக்கும் பேரானந்தத்தை யளித்துக்கொண்டுச் சென்றனர்.

அச்சமயத்தில் நராந்தகனாலேவிய அவுணவீரர்களில், தந்துரனென்றும் விகண்டனென்றுஞ் சொல்லுகின்ற இரண்டுவீரர்கள் அக்காசிநகரத்துப் புரோகிதனுடைய குமாரர்களைப்போல மாயரூபங்கொண்டு மகோற்கடமூர்த்திக்கெதிரே மிக்க அன்புடன் வருகின்றவர்போல அதிகவேகமாய் வந்தார்கள். அவர்களை சுவாமியும் ஆவலோடு எதிர்கொள்பவர்போல உடனே தேரைவிட்டுக் குதித்து அவர்களருகிற் சென்றனர். அப்போது அப்பாதகர் சுவாமியைத் தழுவநேர்ந்தனர். சுவாமியு மதற்கிசைந்து தாமுமவர்களைத் தழுவுவார்போல இருவரையும் ஒன்றாக இறுகத்தழுவி அவர்களுடைய பராக்கிரமத்தையும், வலிமையையும், வஞ்சனையையும், மாயையினையும், சரீரத்தினையும் ஒருமிக்க வழித்து அனிச்சம்பூவைக் கசக்கியெறிவதுபோலத் தமதுகரத்தினால் அவர்களைக் கசக்கி

யெறிந்து மீட்டுந் தேரின்மீ தாரோகணித்தனர். அவ்வற்புதத்தை யாவருங் கண்டு ஆச்சரிய மடைந்தார்கள். உடனே பதங்கனென்றும் விதுலனென்றுஞ் சொல்லுகின்ற இரண்டவுணர்கள் சண்டமாருதம்போல வுருக்கொண்டு மேகங்களனைத்துங் கீழேயுதிரும்படியாக மிகுந்த ஆரவாரங்களைக் காட்டிக் காசிப் பட்டணத்திலுள்ள மாடமாளிகை கூடகோபுரம் முதலானவைக ளெல்லாம் பெயர்த்திடித்து வீதிகளிலே குப்பல் குப்பலாகத்தள்ளி, சுவாமி ஆரோகணித்திருக்கின்ற இரதத்தையும் பெயர்க்கும்படி மறித்தார்கள். இவ்வாறாகவே அந்நகரத்திலுள்ளவர் என்செய்யவல்லர்; யாவரும் அல்லோல கல்லோலப்பட்டு வருந்தினார்கள். அவ்வஞ்சகத்தை மகோற்கடப் பெருமானறிந்து தமதரைக் கண்ணிறைந்திருக்கின்ற ஆதிசேடனை யெடுத்துவிடுத்தனர், அவ்வாதி சேடன் வெளிப்பட்ட மாத்திரத்தில் தனது ஆயிரம் வாய்களையுந் திறந்து சண்டமாருதத்தையெல்லாஞ் சீறி விழுங்கிவிட்டனன். அதனால் அப்பாதகர் வலியிழந்து தங்கள் சுயரூபத்தோடு சுவாமிக் கெதிரில் நின்றார்கள். உடனே மகோற்கட மூர்த்தி இரதத்தினின்றுங் குதித்து, ஒருகரத்தால் அவர்கள் இரண்டுகையினையும் பிடித்துக் கிறுகிறென்று சுழற்றி நெற்கதிரை மோதுவதுபோலப் பூமியிலறைந்து அப்பட்டணத்திற் கப்பாற்போய் விழும்படியாக எறிந்து, வீதிகளில் அழிந்து கிடக்கின்ற மாடமாளிகைகளையெல்லாம் பார்த்தருளினர். அவைகளனைத்தும் வீதிகளைவிட்டெழும்பி யதாப்பிரகாரந் தத்தம் வடிவங்களைப் பெற்று முன்னிலு மதிகமாக அழகினை யடைந்திருந்தன. இவையனைத்தையுங் காசிராசன் பார்த்து, அச்சோ! நமது அறிவின்மையினாலே முன்னர் இவரைச் சிறு பிள்ளையென்று நினைத்தோமே? ஆ, ஆ! என்னகாரியஞ் செய்தோம்? இதுகாறும் இவர் நடாத்திவந்த காரியங்களைப் பார்த்தால் அற்புதங்களாகவே யிருக்கின்றன. இவர் சகலலோக சரண்ணியராகிய கர்த்தாவேயன்றி வேறல்லவென்று தனக்குள் திடங்கொண்டு மிகுந்த பத்தியோடும் ஆவலோடும் அனந்த முறை வலம்வந்து அஷ்டாங்க பஞ்சாங்கமாக நமஸ்காரஞ் செய்து தனது தேரை விரைவிற் செலுத்திக்கொண்டு தோரணமுதலிய அலங்காரங்களால் நிறைந்த தனது அரண்மனைவாய்தலின் முன்னதாக வந்தனன். அப்போது கூடனென்னும் ஓரவுணன் சுவாமியை உள்ளே நுழையவொட்டாமல் தடுக்கவேண்டுமென்றெண்ணி அவ்வாய்தலில் ஓரடைக்கல்லாக வடிவங்கொண்டிருந்தனன். அக்காரியத்தை மகோற்கடமூர்த்தியறிந்து சமீபத்திலிருக்கின்ற காசிராசனை நோக்கி அரசனே! இவ்விடையூறு நீங்குவதற்குப் பிள்ளையாருக்கு ஆயிரந் தெங்கின்கனி யுடைக்கவேண்டுமென்று திருவாய் மலர்ந்தனர். அதை அருகிருந்தவர்கள் கேட்டு உடனே ஆயிரந் தெங்கின்கனிகளைப் பொதிகளிலேபோட்டுக்கொண்டுவந்து வைத்தார்கள். அவர்களின்மீது மகோற்கடமூர்த்தி மந்திர நீர்தெளித்து அங்கிருந்த குழுக்களைப்பார்த்து நீங்களனைவரும் ஒவ்வொரு கனியையெடுத்து இவ்வடைக் கல்லின்பேரில் அளாகும்படி அறையுங்களென்று கட்டளையிட்டனர். அக்கட்டளையை அங்கிருந்தோர் யாவருஞ் சிரமேற்கொண்டு

ஒவ்வொருவர் ஒவ்வொரு கனியையெடுத்து அப்பாறைமீ தறைந்தார்கள். பின்னர் அவ்வளவும் அத்திரங்களாகி அப்பாறையைப் பொடிப்பொடியாகச் சிதைத்துவிட்டன. அதற்குமேல் பாறைவடிவங் கொண்டிருந்த அப்பாதகன் தனது சுயரூபத்துடனே ஆக்கிரமித்துநின்று அரசன்முதலிய யாவரும் பயந்தோடும்படி அட்டகாசஞ்செய்து ஏககாலத்தில் எல்லாரையு மெடுத்து விழுங்கும்படி யத்தனித்தான். அதனை மகோற்கட மூர்த்தியறிந்து, தமது பரசாயுதத்தை அவன்மீதுவிடுத்து அவனுயிரை மாய்த்தனர். உடனே அவ்வவுணன் ஓர்பர்வதம்போலப் பூமியிலேவிழ, அதை யாவருங்கண்டு நடுக்கமுற்றார்கள். அப்போது மகோற்கட மூர்த்தியானவர் தமது புருவங்களை நெளித்துப் பூமியைப் பார்த்தனர். உடனே பூமியானது பிளந்து அவன் சரீரம் பாதலத்திற்போய் விழும்படி விழுங்கி விட்டது. அவ்வற்புதத்தை யாவருங்கண்டு ஆனந்த மடைந்தார்கள். அதற்குமேல் மகோற்கட மூர்த்தியானவர் இரதத்தினின்று மிறங்கிப் பூமியிலே நின்றனர். அப்போது சுமங்கிலியஸ்திரீகள்வந்து சுவாமிக்கு அரக்குநீர் சுற்றிப்போயினர். அரசனும் சிலையினைச் சுற்றியெறிந்து கண்ணூறுகழித்து கூட்டங் கூட்டமாயிருக்கின்ற சனங்களை விலக்கித் தனது முன்னங்கையை நீட்டினன். அக்கையின்மீது மகோற்கட மூர்த்தியானவர் தமது திருக்கரத்தினை வைத்துக்கொண்டு திருவடிகளிற் பாதுகைசூடி, மெல்லமெல்ல அரமனைக்குள்ளாகச்சென்று சொர்ணத்தாற் சமைத்து நவரத்தினங்களாற் பதித்திருக்கின்ற சபாமண்டபத்தை யடைந்து, நமது அன்பர்களுள்ளம் போன்று சின்னங்களாற் சுமக்கப்பட்டிருக்கின்ற ஆதனத்தின்மீ தெழுந்தருளினர். அப்போது அங்கிருந்தயாவரும் மிகுந்த பக்தியோடு பணிந்தார்கள். ஸ்திரீகள் நாட்டியஞ் செய்தார்கள். சுவாமி தம்மைப் பணிந்தெழுந்தவர்கட்கெல்லாம் அருள் வழங்கினர். பின்னர் அரசன் அங்கிருந்தவர்களை யெல்லாம் விலக்கித் தனது மனைவியர் மக்கள்முதலான யாவரையு மழைத்துச் சுவாமியைப் பணியும்படி செய்து, பின்னர் தானும் சுவாமியுமாகப் போசனஞ்செய்து முடித்து, அந்திக் காலம் வந்தவுடன் சுவாமிக்குப் பள்ளியறை சோடித்து வைத்தனன். அதில் மகோற்கடமூர்த்தி யெழுந்தருளினர். அரசன் சிலகாவலரைக்கூவி அப்பள்ளியறைவாய்தலைக் காத்திருக்கும்படிசெய்து, தானும் நித்திரைசெய்தனன். முன்னர் தேவேந்திரனால் விடுத்த இரண்டு தோழியர்களும் சுவாமிக்கு இராமுழுதுந் திருவடிப்பணி செய்திருந்தார்கள்.

அநாதியிற்றானே ஆணவவிருளில் மறைபட்டிருந்த ஆன்மகோடிகளெல்லாங் கன்மங்கட்கீடான சரீரங்களை யெடுத்து, தாபத்திரயாக்கினிகளாற் றகிக்கப்படுந் துயரங்களினின்றுஞ் சிறிதிளைப்பாறும்படி, சர்வசங்கார காலத்தில் அவைகளைத் தமது கரத்திலொடுக்கிவைத்து மகாசுழுத்தியிலிருக்கும்படி அக்கால முடிவுவரையில் தாமும் பிரமானந்த நித்திரைகொண்டு மீட்டுமவைகட்குத் தனுகரண புவனபோகங்களாற் கன்மங்களைப் புசிப்பித்து அக்கன்மவொப்பில் பாசபந்தங்களைப்போக்கி முத்தியிற் சேர்க்குநிமித்தந் திரிமூர்த்திகள் சொ

ரூபமாகச் சகளங்கொண்டருளிய விநாயக மூர்த்தியானவர், அவ் வான்மாக்கள் நித்தநித்த மனுபவிக்கின்ற அல்லல்களினின்று நீங்கிச் சிறிது சுகத்தை யனுபவிக்கும்படியாக நித்திய சுழுத்தியையுந் தரவெண்ணித் தாமத்திருப்பள்ளியில் அமைத்திருக்கின்ற மலரமளியின்மீது சிவானந்த நித்திரை செய்தருளினர்.

கேட்டீர்களோ சவுனகாதிமுனிவர்களே! காசிராசன் தனது அரண்மனையைச் சேருகின்றவரையில் மகோற்கடமூர்த்தி செய்தருளிய திருவிளையாடல்களிதுவாகும் பின்னர் செய்தருளிய திருவிளையாடல்களையும் பாங்தமாகச் சொல்லுவோங் கேட்பீர்களாக. சர்வான்மாக்களும் நித்தியசுழுத்தியிலிருந்து சிறிது சுகத்தை யனுபவிக்கும்படி சிவானந்த நித்திரைசெய்தருளிய மகோற்கடமூர்த்தியானவர் பின்னரவ்வான்மாக்களெழுந்து வினைப்போகங்களைப் புசிக்குமாறு வைகறைப்போதில் தமது திருவிழியை மலர்த்தி உலகமனைத்தும் உய்யுங்வகையை நாடி நித்திய நியதிகளை நிறைவேற்றும்படி ஒப்பாரு மிக்காரு மில்லாத தாமும் நித்திய நியதிகளை நிறைவேற்றித் தம்மைத் தரிசித்தோரெல்லாஞ் சனனவாதையினின்று மொழியும்படிபாகப் பின்னர் வீதியிலே விளையாடல் செய்கின்ற பிள்ளைகளோடு தாமும் விளையாடல் செய்வாராயினர். இவ்வாறு சகலபுவன கர்த்தாவாகிய விநாயகமூர்த்தியானவர், காசிராசன் கடைத்தேறும்படி அவன் அரண்மனையி லெழுந்தருளி யிருக்கிறரென்று அவ்வரசன் புரோகிதரா யிருக்கின்ற தருமதத்தர் கேள்வியுற்று மிகவும் ஆனந்த பரவசத்தராய் அவ்வரமனைக்கு வந்தனர். அவ் வரவைக் காசிராசனறிந்து அவரை எதிர்கொண் டழைத்துவந்து ஓராதனத்தி லிருத்திப் பூசைசெய்து இருகரங்களையுங் கூப்பி சுவாமீ! தேவரீர் இங்ஙனம் எழுந்தருளுவதான பெரும்பாக்கியமடியேற்குக் கிடைத்தது யாது காரணத்தினுலோ? அதனைத் திருவாய் மலர்ந்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தனன். அதற்கு அந்தப் புரோகிதர் சொல்லுவார்: அரசனே! சகலலோகங்களும் உய்யும்படித் திருவவதாரஞ்செய்தருளிய நமது கர்த்தாவை இந்நகரத்தி லுள்ளோர் யாவரும் சீவன்முத்தியடையும்படியாக நீ யழைத்துவந்தனையன்றே? நான்கு புருஷார்த்தங்களையும் மேலான கீர்த்தியோடு பெற்ற நின்னையொத்தபுனிதர்கள் இவ்வுலகின்கண் யாவரிருக்கின்றார்கள்? இத்தன்மைத்தான மேலான பாக்கியத்தை நீயடைந்திருக்கின்றனை? யாதலால், நமது மனத்தின்கண் ஓரிச்சையுண்டாயது; அஃதியாதெனில்: நமக்கு இரண்டு புத்திரிகள் உற்பவித்திருக்கின்றனர்: அவர்களை உனதுபாக்கியமாய்வந்த மகோற்கடமூர்த்திக்குக் கன்னிகாதானமாக விவாகஞ் செய்விப்பதற்கு ஓரிச்சை கொண்டிருக்கின்றோம். அவ்விச்சையை நீயே நிறைவேற்றிவைக்கவேண்டுமென்று சொல்லினர். அதை அரசன் செவிகுளிரக்கேட்டு, நமது ஆசிரியருடைய குமாரர்க்குச் சரியான சம்பந்தத்திலே விவாகஞ்செய்து முடிக்கவேண்டுவது முறைமையேயாதலால், நேரிட்ட காரியத்தைக் கூட்டிமுடித்துவைப்பதே கருமமென்று துணிந்து, சுவாமி அவ்

வாறே செய்துமுடிப்போமென்று சொல்லினன். அதைத்தருமதத்தர் கேட்டவுடன் அவ்விடத்தினின்று நீங்கி, வீதியில் சிறுபிள்ளைகளோடு விளையாடல் செய்திருக்கின்ற மகோற்கட மூர்த்தியினிடத்தில் வந்து அவரது கரங்களைப் பிடித்துக்கொண்டு கட்டழகினையுடையர்களாய்! நமது தந்தையாகிய காசிபர் எனக்கு மிகவும் அருமைச்சினேகர்; யாங்களிருவரும் உடலில் இரண்டாக விருப்பதேயன்றி உயிரில் ஒன்றுகவே யிருப்போம்; அப்படிப்பட்டவருடைய தவத்தினுலே அவரிடத்தில் அவதாரஞ்செய்த உம்மை முக்கியமாய்க் காணவேண்டியிருந்த ஆவலோடும் வந்தேன். இனி எனதுகிரகம் பவுத்திரமாகும்படி இத்தினமேநீர் அவ்விடத்திற்குவந்து எனது புத்திரிகளிருவோரையும் விவாகஞ்செய்து கொடுக்கப்பெற்று, எனது குலங்களைக் காத்தருளவேண்டுமென்றுசொல்லி, மகோற்கடமூர்த்தியை ஓர் பல்லக்கின்மீதேற்றிச் சகலவைபவங்களோடுந் தமது ஆச்சிரமத்திற்கு அழைத்துக் கொண்டுபோயினர். அப்போது காமனென்றுங் குரோதனென்றுஞ் சொல்லுகின்ற இரண்டசுரர்கள் கழுதைவடிவமெடுத்துக்கொண்டு ஒன்றேடொன்று சண்டைபோடுவதுபோல நான்குதிசைகளிலும் புழுதி மூடிக்கொள்ளும்படி சுவாமிக்கருகே வந்தார்கள். அதை மகோற்கடமூர்த்தியறிந்து, ஓர் திரணமெடுத்து இரண்டாகக்கிள்ளி அந்த இரண்டுகழுதைகளின்மீதும் வீசினர். உடனே அத்துரும்புகள் இரண்டு வேங்கைபாகி அவ்விரண்டு இராட்சசக்கழுதைகளையும் பிடித்து இழுத்துக்கொண்டு வனத்திற்குப் போய்விட்டன. இவ்வாறு மாயாகாரியங்களிலேவல்லவசுரவீரர்களில் அளவற்றபேர் மகோற்கட மூர்த்தியினுடைய வல்லபத்தை அறிந்துகொள்ளாமல் விட்டிற்பூச்சிகள்தாமே விளக்கில்வீழ்ந்து இறக்கின்றாற்போல, நாடோறும் இறந்துவருகின்றதை கேள்வியுற்றிருந்த தருமதத்தர் நேரிற்கண்டவராகி, மகோற்கடமூர்த்தியைச் சாஷ்டாங்கமாகப்பணிந்தெழுந்து இருகரங்களையுஞ் சிரமேற்கூப்பி சுவாமீ! இதுகாறுந்தேவரீர் செய்தருளிய திருவிளையாடல்களையெல்லாம் எனது இரண்டுசெவிகளுங் குளிரும்படிகேட்டு அளவற்ற மகிழ்ச்சி யடைந்திருந்தேன். இப்போது நேரிற்செய்தருளிய திருவிளையாட்டையெனது இரண்டுகண்களுங் குளிரக்கண்டு பேரானந்தக் கடலின் மூழ்கினன். ஓ பராபரப்பொருளாகிய கர்த்தனே! மானைக்காட்டிமானைப் பிடிப்பதுபோல், வேதங்களாலு மறியக்கூடாத தேவரீர், அடியேங்களை யெல்லாம் நற்கதியிலே சேர்ப்பிக்கு நிமித்தம் அடியேங்களைப்போல ரூபங்கொண்டு உண்ணல்-உடுத்தல்-உறங்கல் முதலானவைகளையுஞ் செய்து, விளையாடுகின்றீர். தேவரீருடைய பெருமையை யாவராலறியக்கூடும். என்றிவ்வாறு அளவற்ற தோத்திரங்களைச்சொல்லி அவ்விடத்தினின்றுநீங்கிச் சுவாமியை யழைத்துக்கொண்டு சிறிதுதூரஞ்சென்றனர். மீட்டுங்குண்டனென்னுமோரவுணன் யானைரூபங்கொண்டு மும்மதங்களும் ஒழுகிப்பாயும்படி அதிகவேகத்துடனே சகலருங்கேட்கி ஓடத்தக்கதாகச் சீறிக்கொண்டு தடுக்கவந்த வீரர்களையெல்லாம் அதா அதப்படுத்தி, அடுக்கடுக்கா யிராநின்ற மாடமாளிகைகளை யெல்லா

மிடித்தெறிந்து, தனது பார்வைக்கெதிரே கொண்டுவந்த பிடியானைகளெல்லா முடுக்கி, எங்கும் அல்லோலகல்லோலப் படுத்திக்கொண்டு மகோற்கட மூர்த்திக்கருகில் திருப்பாற்கடலைக் கலக்கிய மந்திரகிரியைப்போல ஆர்ப்பரித்துக் கொண்டுவந்தான். அப்போது தருமதத்தர், பயந்து மெய்ம்மறந்து தமக்குச் சுவாமியின்மீதிருக்கின்ற விழைவினாலே, அவரைத் தோளின்மீதேற்றி, அப்பாலோடிப்போகவேண்டுமென்றுகருதி, மகோற்கடமூர்த்தியையெடுக்கநேர்ந்தனர். உடனே மகோற்கடமூர்த்தியானவர் தம்மை எடுக்கநேர்ந்த தருமதத்தருடைய கரங்களை இம்மென்று தள்ளிப் பயந்து ஓடிவருகின்றவர்களை யெல்லாம் அஞ்சாதீர்களென்று கையமர்த்தி ஒருரேலென்று பல்லக்கினின்றிறங்கி அச்சமற்று வருகின்ற அந்த யானையின் சமீபத்திற்சென்று அதன் மத்தகத்தின்மேல் தமது கரங்கொண்டமட்டு மறைந்து, வாலைப்பிடித்துக் கிறுகிறென்று வட்டமாகச்சுழற்றி, துதிக்கையைப்பிடித்துப் பறபறவென்று முன்னும் பின்னுமாக விழுத்து, பாதங்களினால் என்புகள் முறியும்படியாக வதைத்து, சிறிதுதூரம்போய் அங்கிருந்துவந்து பிடிகொடாதவகை பாய்ந்து, குப்புறக் கீழேவிழத்தள்ளி, அதன் மத்தகத்தை மிதித்தவண்ணம் பிடரியின் மீதேறியுட்கார்ந்து, யாவருங்கண்டு சந்தோஷிக்கும்படியாக அதனை நான்கு வீதிகளினு மோடவிட்டு, உபத்திரவப் படுத்தினர். அவ்வுபத்திரவத்தை அவ்வுணனாகிய யானைசகிக்கமாட்டாமல், பூமியிலே வீழ்ந்திறந்தது. அதற்குமேல் மகோற்கட மூர்த்தியானவர், மீட்டும் பல்லக்கின்மீதாரோகணித்து தருமதத்தருடைய ஆச்சிரமத்தை யடைந்தனர். உடனே தருமதத்தர் சுவாமியை ஓராதனத்திலிருத்தி சந்தனம் புட்பம் முதலிய திரவியங்களைக் கொண்டு பூசைசெய்துகொண்டிருந்தனர், அப்போது முன்னர் இறந்துபோன அமாட்சனுடைய மனைவியாகிய பிரம்பையென்பவள், தனது கணவனுக்கு நேர்ந்தசம்பவத்தைக்கேட்டு மனம்வருந்தி ஒருதீங்குசெய்யாத நமதுபராக்கிரமசாலியாகிய கணவனைக்கொன்ற காதகன் எவனோ? அவனை எவ்வித வுபாயத்தினாலேனும் யாம்கொல்லவேண்டுமென்று வஞ்சினங்கொண்டு தருமதத்தருடைய பந்துவிலுள்ள ஓர் ஸ்திரீயைப்போல ரூபங்கொண்டு விடங்கலந்திருக்கின்ற தயிலத்தைக் கையிலேந்தி வந்து மகோற்கட மூர்த்தியை மிகுந்தபத்தியோடு பணிந்து தோத்திரஞ்செய்து சுவாமி! இத்தயிலம் பரிமளமூட்டப்பட்டிருக்கின்றது ஸ்நானஞ்செய்வதற்கு மகாயோக்கிய முள்ளது. இதைத் தேவரீருக்கென்றே யானருமையாய்ச் செய்துகொண்டு வந்தேன். ஆதலாலிதை சுவாமிகளுடைய திருமேனியிற் பூசப்படி உத்தரவாகவேண்டுமென்று பிரார்த்தித்தனள். அவ்வஞ்சகத்தை மகோற்கடமூர்த்தி யறிந்து ஒப்புக்கொண்டனர். உடனே அப்பாதகி சுவாமியை வேறோராதனத்திலிருக்கவைத்து அவருடைய முடிமுதற் றயிலத்தை விட்டுத்தேய்த்துத் திருமேனி முழுவதும் அத்தயிலத்தையேதடவினள்.

கேட்பீர்களோ சவுனகாதி முனிவர்களே! முன்னொருபோது தேவர்கள் முதலிய யாவரும் பயந்தோடும்படியாகத் திருப்பாற்கடலின்கண்ணுதித்த ஆல

கால விடத்தைச் சிவபிரான் அமுதாகப் புசித்தனரென்றால், அவர்குமாரராகிய மகோற்கடமூர்த்திக்கு இவ்விடத்தயில மென்னசெய்யவல்லது. ஒருத்தர்பாற் கேடுசெய்ய நினைத்தவர்கட்கு அக்கேடு அவர்களைத்தானே பற்றுமென்று பெரியோர்கள் சொல்லும் வாக்கியத்தைப்போல அத்தயிலத்திற்கலந்த விடமெல்லாம் அப்பிரம்பைக்கே நலைகொண்டு இறந்துபோயினள். இவ்வற்புதத்தை அங்கிருந்த யாவருங் கண்டு ஆனந்தமடைந்தார்கள். இப்பால் மகோற்கடமூர்த்தியானவர் ஸ்நானஞ்செய்தனர். உடனே தருமதத்தர் வீடு முழுவதும் அலங்காரஞ்செய்தனர். காசிராசன் தனது சேனாசமுத்திரங்களோடும் வந்துசேர்ந்தனன். மகோற்கடமூர்த்தி வேறோரிடத்திற் சென்று சகல வாபரணங்களையும் தமது திருமேனியி லணிந்துகொண்டனர். தருமதத்தருடைய புத்திரிகளாகிய சித்திபுத்திகளும் சீராடித் திருமணக்கோலங்கொண்டனர். பின்னர் தருமதத்தர் என்பவர் மகோற்கடமூர்த்தியையுஞ் சித்திபுத்திகளையும் கலியாணப்பந்தலி லெழுந்தருள்ச்செய்து முத்திக்களையும் ஓமகுண்டத்தி லெழுப்பி, அக்கினியின் முன்பாக மந்திரங்களால் தமது புத்திரிகளை மகோற்கடமூர்த்திக்குத் தத்தஞ் செய்தனர். முன்னமே தமக்குத் தேவியர்களாயிருந்த சித்திபுத்திகளை மகோற்கடமூர்த்தியானவர் மீட்டும் உலகமெல்லாங் கடைத்தேறுமாறு தருமதத்தரினின்று ஏற்றுக்கொண்டவராய், ஏனைய சடங்குகளையுங் கிரமப்படி செய்துமுடித்திருந்தனர்.

என்று சூதமுனிவர் சொல்லிவரும்போது சவுனகாதி முனிவர்கள் அவரைப் பணிந்தெழுந்து சுவாமீ! அச்சித்திபுத்திகள் யார்? தருமதத்தரென்பவர் யார்? அதனையுந் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்றுபிரார்த்தித்தனர். அதற்குச் சூதபௌராணிக ரிசைந்து ஓ சவுனகாதி முனிவர்களே! சதுர்வேதங்களாலும் இன்னும் அறிதற்கரிய வக்கிரதுண்டமூர்த்தியானவர் காசிபமுனிவருக்குப் புத்திரராக வந்தபோதின்றிச் செய்லின் முன்னமே பிரமதேவனறிந்து அக்காலத்திலும் அவரைத் தரிசிக்கவேண்டுமென்னும் விழைவால் தருமதத்தராக வந்து பிறந்திருந்தனர். பின்னர் அவ் வக்கிரதுண்டமூர்த்திக்கு ஞானசத்தியுங் கிரியாசத்தியுமாகி எக்காலத்தும் பிரிதலில்லாத சித்திபுத்திகளும் முன்போலவே தங்களை சுவாமி விவாகஞ் செய்துகொள்ளும் நிமித்தம் பிரமதேவனாகிய அத்தருமதத்தரிடத்தில் புத்திரிகளாகி முன்வகித்திருந்த திருநாமத்தினையே வகித்து வளர்ந்துகொண்டிருந்தனர். அதனால் மகோற்கடமூர்த்தி அவர்களை யாவரும் உய்யும்படியாக விவாகஞ்செய்துகொண்டனர்.

இப்பால் விவாககாரியங்களையெல்லாம் நிறைவேற்றியருளிய மகோற்கடமூர்த்தியைக் காசிராசன் பணிந்தெழுந்து சுவாமீ! தேவரீர் அடியேனுடைய அரண்மனைக் கெழுந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தான். அதற்குப் பராபர வஸ்துவாகிய மகோற்கடமூர்த்தி யிசைந்து தமது தேவிமார்களோடு சிங்கவாகனத்தி லாரோகணித்தனர். காசிராசன் தனது பட்டத்துயானைமீதேறினன்

அங்கசாத்திலுள்ளோர் யாவரும் பற்பல வரிசைகளோடு நான்குமருங்கினுஞ் சூழ்ந்தனர். மங்கலவாத்தியங்கள் தாம்தாமென முழங்கின. முனிபுங்கவர்கள் யாவரும் வேதாகமங்களாற் றுதிசெய்தார்கள். இவ்வித வைபவங்களோடு எமதையனாகிய மகோற்கடமூர்த்தி தருமதத்தருடைய மனையினின்றும் வெளிக்கொண்டு காசிராசனுடைய அரண்மனையைச் சேர்ந்து, சித்திபுத்திகளை அந்தப்புறத்தி லிருத்தித் தாம் அடியவருள்ளம்போலப் பிரகாசித்துக்கொண் டிருக்கின்ற சபையில் இரத்தினமயமா யோங்கிய சிம்மாதனத்தின்மீது யாவருந் தரிசிக்கும்படியாக வெழுந்தருளியிருந்தனர். அப்போதுகாசிராசன், ஒருபக்கத்திலிருந்து அங்குவந்திருந்த அமைச்சர் முதலிய தனது துணைவர்களைப் பார்த்து; அன்பர்களே! எமது குமாரனுக்கு விவாகஞ்செய்விக்கவேண்டுமென்னுங் கருத்தை ஆசிரியராகிய காசிபமுனிவருக்கு யானறிவிக்க அவர் இப் புண்ணியமூர்த்தியை யனுப்பினர். யான் செய்த தவத்தின்பெருமையை என்னென்று சொல்லுவேன்; அரிபிரமேந்திராதியராலுங் காண்டற்கரிய கருணாநிதியே! இக்காசியிலுள்ளோர் யாவரும் தரிசித்துப் பரிசுத்தராகும்படி வந்திருக்கின்றனரென்று சொல்லினன். அதனைக் கல்வியினுங் கேள்வியினுஞ் சிறந்து, ஆலோசனையினும் புத்தியினும் மிகுந்திருக்கின்ற ஓர் மந்திரி அவ்வரசனைப் பார்த்து ஆண்டவனே! துன்மார்க்கத்திற்சிறந்த தேவாந்தகனுக்கும் நராந்தகனுக்கும் நமது தீவினைகளைப்போக்கத்தக்க இக் கர்த்தாவினாற் பகையாயினேம். அவர்கள் எவ்விதத்தினும் படையெடுத்து இங்கே வருவார்கள். அப்படி அவர்கள்வந்து சுவாமிகளுடைய திருக்கரத்தினால் முத்தியடைந்தபின்பு நமது விவாகத்தை யத்தனித்தால் ஓர் இடையூறில்லாமல் நிறைவேறும். அதற்குமுன் யத்தனஞ்செய்தோமாயின் இடையிடையில் அப்பாதகர்களுடைய சல்லியங்கள் நேரிட்டுக்கொண்டேயிருக்கும். ஆதலால் ஒருபட்சம், அல்லது ஒருமாதமளவும், யாதொன்றுஞ் செய்யாமல் சும்மாயிருக்கவேண்டுமென்றுசொன்னான். அதற்கு அரசன் ஒப்புக்கொண்டனன். சுவாமியும் புன்னகைசெய்து அவ்விரண்டவுணர்களும் இங்ஙனம் விரைந்துவந்து எமது கையினால் மடியாமல் எங்ஙனம் போகவல்லவர்களென்று திருவாய்மலர்ந்தனர். அவ்வாக்கியத்தை அமைச்சர்முதலிய யாவரும் செவிகுளிரக் கேட்டு ஆனந்தபரவசத்தராகி, ஒவ்வொருவராய் சுவாமியைப் பணிந்து விடைபெற்றுத் தத்த மிருக்கையை யடைந்தார்கள். பின்னர் அஸ்தமானகாலம் வந்துவிட்டது. உடனே மகோற்கடமூர்த்தியானவர் உலகத்தாரைப்போலத் தாமும் சந்தியாவந்தனம் முதலியவைகளை நிறைவேற்றிப் போசனஞ்செய்து தமது தேவியாரோடு சப்பிரகூடமஞ்சத்தின்மீது பள்ளிகொண்டருளினர். அவ்விரவில் விதாரணன் - சுவாலாமுகன்-வியாக்கிரமுகன் என்றுசொல்லுகின்ற மூன்றசுரர்கள் அப்பட்டணத்தை யழிக்கும்படிவந்து விதாரணன் பெருங்காற்றாகவும், சுவாலாமுகன் நெருப்பாகவுங் கலந்து அப்பட்டணத்துக் கோபுரவாய்தலைப்பிளந்து உள்ளே நுழைந்தார்கள். வியாக்கிரமுகன் அவ்வாய்தலில் ஓடிவருகின்றவர்களை யெல்லாங் கொல்லும்படியாகத்

தனது மேலுதடு ஆகாயத்தையுங், கீழுதடு பூமியையும்பொருந்தும்படி வாயைத் திறந்துகொண்டிருந்தனன். இவ்வாறு இம்மூவருங் கூடிசெய்துவந்த கொடுமையினாலே மாடமாளிகைக ளெல்லாம் எரிந்தன. பஞ்சலோகங்களெல்லாமொடிந்து உருகிப்போயின. இரத்தினங்களெல்லாம்பொரிந்தன. கற்களெல்லாந் தூம் பொடிப்பொடியாயின. ஆகாயமுழுவதும் புகைப் படலங்கள் மூடிக்கொண்டன. விருட்சங்களனைத்துங் கரிந்தன. அங்கசாத்திலுள்ளோர் யாவரும் நித்திரையினின்றுந் திடுக்கிட்டெழுந்து மனங்கலங்கிப் பலதிசைகளினும் ஓடியொளிக்க இடந்தேடினார்கள். சிலர் எவ்விடங்களினுந் தீப்பட்டெரிவதனாலே தங்க இடமில்லாமல் தத்தளித்தார்கள். சிலர் யானைகளை யவிழ்த்து விட்டார்கள். சிலர் பசுக்களை யவிழ்த்து விட்டார்கள். சிலர் கன்றுகளை யவிழ்த்துத் துரத்தினார்கள். சில விருத்தர்களையும் சிறுபிள்ளைகளையுங் குழந்தைகளையும் ஏந்திக்கொண்டு இவர்களை எங்கேவைத்துக் காப்பாற்றுவோமென்று ஏங்கினார்கள். சிலர் தங்கயிடமில்லாமல் நெருப்புக் கிரையானார்கள். ஒருவாறு தப்பியோடிப் போகின்றவர்களும் வியாக்கிரமுகனுடைய வயிற்றினுக்கிரையானார்கள். இவ்வாறு அம்மூன்றுபாதகர்களால் காசிநகர்முழுவதும் அல்லோலகல்லோலப் பட்டதன்றி நெருப்புச்சுவாலையினாலுண்டாகின்றசத்தமும், யானை குதிரைமுதலானவைகளா லுண்டாகின்ற சத்தமும், சனங்களுடையகூக்குரலினாலுண்டாகின்ற சத்தமும், ஒன்றாகக்கலந்தலினால் வெகுதூரத்திலிருக்கின்றோர்களுங் கேட்டவுடன் நடுங்கிப் பயந்து போயினர். இச்சம்பவத்தை யறிந்த சேவகர்கள் விரைந்தோடி அரசனையெழுப்பி யறிவித்தார்கள். அவ்வரசன் அதைக்கேட்டவுடன்பயந்து மகோற்கடமூர்த்தியிடத்திற்சென் றெழுப்பி யறிவித்தனன். நனவிற்சுழுத்தியோடிருக்கின்ற மகோற்கடமூர்த்தியானவர் ஒன்றுமறியாதவர்போல விரைந்தெழுந்து வெளிக்கொண்டு பயந்திருக்கின்ற அரசனைத் தேற்றிக் கமண்டலத்திலிருந்த சலத்தைத் தமது திருக்கரத்திற் கொண்டுவீசி வடவாமுகாக்கினியையுஞ் சண்டமாருதத்தையுந் தொலைத்து அந்தக்ரூபத்தைக்கொண்டுவந்த இரண்டவுணர்களையுங்கொன்று அப்பட்டணத்தினுடைய வாய்தலின்வழியை யடைத்து வாயைத்திறந்துகொண் டிருக்கின்ற வியாக்கிரமுகனிடத்திற்சென்று தாமும் ஓர் பேருருவைக்கொண்டு அப்பாதகன் பூமியில்வைத்திருக்கின்ற கீழுதட்டின்மீது தமது இரண்டுதிருவடிகளை வைத்து மெரித்து ஆகாயத்தை யளாவிய மேலுதட்டைத் தமது திருக்கரங்களில் பற்றிக்கிழித்து ஓர் பர்வதம்போலப் பூமியிலே விழும்படிக்கொன்று இறந்துபோன வுயிர்களையும் அந்நகரத்தையுந் தமது கிருபா நோக்கத்தாற் பார்த்து முன்னிருந்தபடியே யாவையுமுண்டாக்கி அரண்மனையைச் சேர்ந்தனர். அவ்வற்புதத் திருவிளையாட்டினை அரசன்பார்த்து இருவிழிகளினும் ஆனந்தபாஷ்பஞ் சொரியும்படியாக சுவாமியெதிரில்வந்து பலமுறைப்பணிந்தெழுந்து, வேதாகமங்களினாலே அளவற்ற தோத்திரங்களைச்செய்து, சுவாமி! இத்தினம் தேவரீரிடத்தில் சிருஷ்டி, திதி, சங்காரமென்கிற முத்தொழில்க

ளையுங்கண்டேன். அடியேனுடைய தீவினைகளையெல்லாம் விட்டேன். பிரம விஷ்ணுக்களாலும் அநுபவித்தற்கரிய சுகத்தை யானநுபவித்தேன். என்று பலமுறை துதிசெய்து ஆனந்த பரவசனாகி யிருந்தனன்.

இப்பால் அவ்வுணபாதகர்களுடைய உள்ளக்கறுப்பும் உடற்கறுப்பும் ஒழிந்துபோனமையை மகோற்கடமூர்த்தி பஞ்சவிக்க கறுத்த வான்கறுப்பானது கண்டொழிந்ததுபோல இருளொழிந்தது உடனே அக்காசிப்பட்டணத்திலுடைய நூதனவலங்காரத்தைத் தரிசிக்கவருவான்போலச் சூரியன் கீழ்த்திசைக்கடலி லுதயமாயினன். அதற்குமேல் காசிராசன் காலைக்கடன்களை நிறைவேற்றி அந்தப் புறத்திலிருக்கின்ற தனது பட்டமகிஷியையடைந்து, பெண்ணே! காமெல்லாமுய்யும்படி மகோற்கடரென்னுந் திருநாமத்தோடு அவதரித்தருளிய சுவாமிகள் என்றோடு காசிபருடைய ஆச்சிரமத்தைவிட்டு வருகின்ற மார்க்கத்திலே தூமாட்சனென்பவனைச் சங்கரித்தருளினார். பின்னர் தம்மையெதிர்த்து வந்த அவன்புத்திரர்களிருவோரையும் தமது சுவாசத்தினால் ஓர் நிமைப்போதில் சங்கரித்தருளினார். அதற்குமேல் நராந்தகனுடைய ஏவலினால்வந்த ஐந்நூறு அவுணவீரர்களைத்தமது ஒரேகர்ச்சனையினால் நாசமாக்கினர். இப்பட்டணத்திற்குவந்த பின்புமாயையினால் வடிவங்கொண்டுவந்த அளவற்ற அவுணவீரர்களை மாய்த்தனர். இவைகளையெல்லாம் யாவருஞ்சொல்ல நீ கேட்டிருக்கின்றனையல்லவா? இன்னுமித் தன்மைத்தான உபத்திரவங்கள் எத்தனைவரினும் ஓர் நிமைப்போதில் அவரே நீக்கவல்லவர். நாம்முற்பிறப்பில்யாது தவஞ்செய்திருக்கின்றோமோ அறியோம்? வேதங்களாலும் காணற்கரிய கர்த்தாவே நம்மிடத்தில் வந்திருக்கும்படியான பாக்கியத்தைப் பெற்றிருக்கின்றோம். ஆதலால் இந்தமேலான மூர்த்திக்கு யாம் சதாகாலம் பணிசெய்துகொண்டிருப்போமாயின், தருமமுதலிய நான்குபொருள்களையும் எளிதிற் பெறலாமென்று சொல்லினன். அவையனைத்தையும் இராசபத்தினிகேட்டு ஆனந்தபரவசத்தளாகி சுவாமிக்குத் தனதுகையினால் அன்பே முழுவதும் பரிமளிக்கும்படியாக விருந்துசமைத்தனள். அதை அரசன்கண்டு தனது கையினால் சுவாமிக்குத் தயிலமாட்டி, வாசனையூட்டி யிருக்கின்ற திவ்விய தீர்த்தங்களினால் ஸ்நானஞ் செய்வித்து, திருவொற்றுடைசாத்தி, நூதனமாகச் செய்யப்பட்டிருந்த குழை-அங்கதம்-பொன்முடி-கடகம் முதலிய இரத்தினாபரணங்களையும் பீதாம்பரம்முதலிய வஸ்திரங்களையும் அன்போடு தரித்துத் துதிசெய்தனன். அதற்குமேல் இராசபத்தினிவந்து நீர்க்கதெண்டஞ்செய்து சுவாமீ! தேவரீர் அமுதுசெய்யத் திருவுளங்கொண்டருள வேண்டுமென்றுபிரார்த்தித்தனள். அதற்கு மகோற்கடமூர்த்தி யிசைந்து, அரசனுந்தாமும் போசனஞ்செய்கின்ற விடத்திற்சென்று வெவ்வேறுதனங்களி லிருந்தனர். உடனேஇராசபத்தினியானவள் இருவருக்கும்பரிகலமமைத்து அதில்நால்வகையுண்டிகளையும்பறிமாறினள். பின்னாலிருவரும் சந்தோஷத்தோடு அமுதுசெய்துகொண்டிருக்கையில் அரசன் சுவாமியையும், அவர்பரிகலத்தையும் பார்த்தனன். அப்போது

அவர்மீது தானணிவித்த ஆபரணங்களன்றிப் பின்னுஞ் சிலமேலான ஆபரணங்கள்பிரகாசிக்கவும்,பரிகலத்தில் தனதுபத்தினியிட்டபதார்த்தங்களன்றிஇன்னுஞ் சில இனிமையான பதார்த்தங்கள் விளங்கியிருக்கவுங்கண்டு ஈதென்ன ஆச்சரியமென்றுநினைத்து, ஞேரேவென்றுசுவாமியைத்தொழுதுகர்த்தனே!நானணிந்த ஆபரணங்களும், எனது மனைவிபடைத்த பதார்த்தங்களுந்தவிர இன்னுஞ்சில பதார்த்தங்களும்ஆபரணங்களும் விளங்கிப் பிரகாசிக்கின்றனவே ஈதென்னவற்புதம்? இக்காரியத்தை அடியேற்குஇன்னதெனத் தெரிவித்தருளவேண்டுமென்றுப்பிரார்த்தித்தான். அதற்கு மகோற்கடமூர்த்திபுன்னகைசெய்து அரசனே, நமது திருமேனியில் திவ்வியமான ஆபரணங்கள் பிரகாசிப்பதும், நமது பரிகலத்தில் வேறுவேறான பதார்த்தங்கள் விளங்கியிருப்பதும் உனக்கு விவரமாகச் சொல்லுகின்றோங்கேள்: நமதன்பர்களி லொருவன் தண்டகவனத்திலே வசித்திருக்கின்றனன். அவன்பெயர் புருசுண்டியென்பார்கள். இவனே தேவர்களும் வழிபடத்தக்க யோக்கியதையையுடையவன். அப்படிப்பட்டவனே இத்தினம். நாலங்கினையான விநாயகமூர்த்தியினுடைய சதுர்த்திவிரதமாதலாலே, நம்மை மிகுந்த பத்தியோடு பூசனைசெய்து இவ்வாபரணங்களையும் உணவுகளையும் நமக்கு அற்பிதஞ்செய்தனன். அவன் பத்திபூர்வமாக அற்பிதஞ்செய்த யாவும் இங்கே நமக்கு இஷ்டமாயின. அவனுடைய பெருமைகள் யாவராலுஞ் சொல்லிமுடிவதன்று. நீ கண்ட அதிசயத்திற்கு இதுதான்காரணமென்று திருவாய் மலர்ந்தனர். அவையனைத்தையும் அரசன் செவிகுளிரக்கேட்டு ஆனந்தபரவசனாகி உடனே வாய்பூசிவந்து, கர்த்தனே! அத்தன்மைத்தான மேலான முனிவரை அடியேன் அவசியம் பணியவேண்டும். அவரை இங்ஙனம் அழைத்து அவருடைய திருவடிகட்குச் செய்யத்தக்க பணிவிடைகளை அடியேன் செய்தல்வேண்டும். ஆதலால் சுவாமிகள் அடியேற்குண்டாகிய இச்சையை நிறைவேற்றிவைப்பது பெருங்கடமையென்றுபணிந்து விண்ணப்பஞ்செய்தான். அதற்கு மகோற்கடமூர்த்தி கிருபையுற்று, அரசனே! அவ்வன்பன் இங்கே வரவேண்டுவையேனில், யாம் சொல்வதைக்கேள்: நீ இப்போது தண்டகவனத்திற்சென்று தவசிரேஷ்டனான அவனுடைய மேலான பாதங்களைப் பணிந்து துதிசெய்து இருகரங்களையுஞ் சிரமேற் கூப்பிநின்று உனது அபீஷ்டங்களை அவனிடத்தில் விண்ணப்பஞ்செய்து யாம் விவாக நிமித்தம் உனது கிரகத்தில் வந்திருப்பதையும், உன்னை விட்டு யாம் அழைத்துவரச்சொன்னதையும் விவரமாகச் சொல்லி, அழைத்துவரக்கடவையென்று திருவாய்மலர்ந்தருளினர். அதைக்கேட்டவுடன் அரசன் அளவற்ற மகிழ்வையடைந்து சுவாமி கட்டளையிட்டவண்ணம் அப்போதே பணிந்து விடைபெற்று இரதத்தின்மீதேறி வாயுவேகத்தினால் முந்தி அளவற்ற மலைகளையுங் காடுகளையுங் கடந்து தண்டகவனத்தைச் சேர்ந்து திரிமூர்த்திகளுடைய உலகங்கட்டிணையான ஆச்சிரமத்தையடைந்து தவசிரேஷ்டராகிய புருசுண்டி முனிவரைக்கண்டு அவருடைய பாதபதுமங்களைப் பலமுறை பணிந்தெழுந்து இருகரங்களையும் சிரமேற் கூப்பிநின்று வேதாகமங்களினால்

அளவற்ற தோத்திரங்கள் செய்தனன். அவனை அம்முனிபுங்கவர் பார்த்து அரசனே! நீயார்? இங்குவந்தகாரியமென்னை? சொல்லென்றுகேட்டனர். அதற்கரசன் ஆனந்தமாகி சுவாமீ! அடியேன் காசிதேசத் தரசன்; அடியேனுடைய கிரகத்தில் விநாயகமூர்த்தி யெழுந்தருளி யிருக்கின்றனர். நேற்றையதினம் சுவாமியும் யானும் போசனஞ்செய்துகொண்டிருக்கும்போது தேவரீருடைய பூசாமகத்துவம் சுவாமியினிடத்தில் விளக்கியது. அதன்மீது சுவாமிகள் தேவரீருடையமகிமையினைத் திருவாய்மலர்ந்து, தேவரீரைத்தம்மிடத்திற்குஅழைத்து வரும்படி அடியேற்குக் கட்டளையிட்டனுப்பினர். அதுகாரணமாக அடியேன் இவ்விடத்திற்கு வந்தேன். ஆதலால் தேவரீர் அடியேன்மீது கிருபைசெய்து எழுந்தருளுமென்று பிரார்த்தித்தனன். அவையனைத்தையும் புருசுண்டிகேட்டு அரசனே! விநாயகமூர்த்தி யென்பவர் யார்? அதனை விவரமாகச் சொல்லுக வென்று கேட்டனர். அதற்கரசன் சொல்லுவான்: சுவாமீ! விநாயகமூர்த்தி காசிபமுனிவருக்குப் புத்திரராக அவதரித்திருக்கின்றனர். அவர் அடியேனுடைய புத்திரன் விவாக நிமித்தம் இப்போது எனது கிரகத்தி லெழுந்தருளியிருக்கின்றனரென்றனன். அதற்குமேல் புருசுண்டிமுனிவ ரவனைப் பார்த்து அரசனே! விநாயகமூர்த்தி தேவர்கள் முதலியோராலும் தொழத்தக்க காசிபமுனிவருக்குப் புத்திரராக அவதரித்திருப்பது மெய்யேயானால், அவருடைய மரபு எவ்வகைப்பட்டதென்று கேட்டனர். அதற்கரசன் அவரைப் பணிந்தெழுந்து சுவாமீ! வேதங்களாலும் விஷ்ணு பிரமாதிகளாலும் மனம் வாக்கு காயங்களாலும் ஏனைய அளவைகளினாலும் அவ்விநாயகமூர்த்தியினுடைய இயற்கையைக் காண்பதரிது எங்கும் நிறைபொருளா யிருக்கின்ற அவருடைய இயற்கை அவ்வாறு இருக்கினும், அவருடைய கிருபையினால் அடியேன் அறிந்தமட்டுஞ் சொல்லுகிறேன். பிராக்கிரமிதராயும் பரிபூரணராயும், ஞானம் பத்தி வைராக்கிய சம்பன்னராயும், நிரந்தர சந்தோஷத்தை யடைந்தவராயும், நித்தியதிருப்தி யடைந்தவராயும், சச்சிதானந்த பிரமசொரூபராயும், தேசகாலவஸ்து பரிச்சேதரகிதராயும், சுசாதி விசாதி சுகதபேத ரகிதராயும், சட்பாவ விகாரரகிதராயும், சுத்த புத்த முத்த நித்திய பரமானந்த சொரூபராயும், சர்வ பரிபூரண கருணாசாகரராயும், நிர்வியாச்சிய நிர்லேப நிர்ச்சங்க நிர்வாண நிஷ்காம நிரூப நிரந்தர நிர்வயவ நிர்விசேஷானந்த நிருபத்திரவ நிபத்த நிர்வேத்திய நிர்க்குண நிரஞ்சன நிச்சல நிஷ்ப்ரபஞ்ச சொரூபராயும், அச்சேத்திய அக்கிலேத்திய அசோஷிய அதாகிய அசல அவர்ணிய அநாமய அக்ஷர அப்பிரமேய அசிந்திய அவ்யயமாகிய அக்குரோத அவிதர்க்கிய அகிரிய அநாசிரய அனாதார ஆனந்த அகண்டாகார ஸ்வரூபராயும், விசுவதைஜச பிராஞ்ஞைக் கதிதமான பிரத்தியக்கு சைதன்னியராயும் விராட் டிரணியகர்ப்ப வவ்வியாகிருதங்களை யநின்ற சர்வசாட்சியராகியும், மூலப்பிரகிருதி யகண்டாகார விருத்தியானந்த விருத்தியதிதராயும், நிருத்திருத்தியராயு மிராநின்ற விநாயகக்கடவுள் தமது சுவேச்சையால் துஷ்டசன நிக்கிரக சிஷ்டசன பரிபாலனஞ் செய்யும்பொருட்டு

அதிதியினுடைய புத்திரராகஅவதரித்திருக்கின்றனரென்றுலகத்துக்கள் யாவருஞ் சொல்லக்கேட்டிருக்கின்றேன். அஃதன்றி, அடியேனுடைய கண்களினால் அவர் அளவற்ற அவுணவீரர்களைச் சங்கரித்து, அவர்கள்செய்த இடையூறுகளையெல்லாமொழித்து, சகலஆன்மாக்களையும் பாதுகாக்கக் கண்டிருக்கின்றேன். அந்நிட்கள மூர்த்தியினுடைய பெருமையை யான்கண்டவளவிற் சொன்னேனன்றி, சரியானபடியாவராற் சொல்லக் கூடுமென்றனன். இவையனைத்தையும் புருசுண்டிமுனிவர் ஆனந்தபரவசராய்க்கேட்டு, அரசனே! நீ சொன்னதனைத்தும் உண்மையே உனதுகண்களைச் சிறிதுநேரம் மூடிக்கொண்டிருந்து பின்னர் விழித்திடுகவென்று கூறினர். அவ்வாறே அரசன் கண்ணைமூடிக்கொண்டனன். அப்போது புருசுண்டிமுனிவர் அவ்வரசன் முடியின்மீது தமதுகரத்தை வைத்தவாங்கினர் பின்புஅரசன் கண்களைத்திறந்தனன் திறந்தபோது அவ்வனத்தையும் புருசுண்டிமுனிவரையுங் காணாதவனாகித், தனது காசிப்பட்டணத்தையும் அரண்மனையையுங்கண்டு, அதில்மகோற்கட மூர்த்தி எழுந்தருளியிருக்கப் பார்த்து அளவற்ற ஆச்சரியமும் ஆனந்த பரவசமுங்கொண்டு, மகோற்கடமூர்த்தியினுடைய திருவடிகளைப்பணிந்தெழுந்து தான் தண்டக வனத்திற்குப் போனதுமுதல் நடந்தசங்கதிகளையெல்லாம் விவரமாகச்சொல்லினன். அவையனைத்தையும் மகோற்கடமூர்த்திகேட்டுப் புன்னகைசெய்து, அரசனே! நீ மீளவும் அவனிடத்திற்சென்று கஜானனமூர்த்திஉன்னை யழைத்து வரச் சொன்னாரென்று சொல்லுவையாயின், உடனே வருகுவனென்று திருவாய்மலர்ந்தனர். கருணைக்கடலாகிய மகோற்கடமூர்த்தி இவ்வாறு திருவாய் மலர்ந்தருளலும் அரசனதற்கிசைந்தும் மீட்டும்பணிந்தெழ, அவ்வாறெழுந்தவன் சுவாமியையுங் காசிநகரத்தையுங் காணாது முன்போலத் தண்டகவனத்தையும் புருசுண்டி முனிவரையுங் கண்டு ஆச்சரியமாகி அவருடைய திருவடிகளிற் பணிந்தெழுந்தனன். அப்போது புருசுண்டிமுனிவர் சந்தோஷமுற்று, அரசனே! நீ மீட்டும் வந்தகாரியம் யாதென்றுவினவினர். அதற்கு அரசன்சொல்லுவான்: சுவாமீ பத்தியிற்சிறந்த தேவரீரைக் கஜானனர் அழைத்துவரச்சொன்னாரென்று சொல்லினன். அவ்வசனத்தைக் கேட்ட மாத்திரத்தில், புருசுண்டிமுனிவர் பரவசராகி, உடல்முழுவதும் ரோமாஞ்சிதம்பூத்து விழிகளில் ஆனந்தபாஷ்பஞ்சொரிந்து பூமியிலே வீழ்ந்து புரண்டு பலமுறை விம்மி விம்மி ஓவென்றலறிப் பத்தி மெய்மறந்து நெஞ்சமுருகிப் பத்தியென்னுங் கடலின்மூழ்கிக் கரைகாணமாட்டாதவராகி அரசனையுந் தம்மோடழைத்துக்கொண்டு மத்தியிலொருபாதமும் அவிமுத்தத்திலொருபாதமுமாக வைத்துச்சென்று அவ்வரசனுடைய அரண்மனையை யடைந்தனர். பின்னர் பலஅதிசயங்களை உடனிருந்தறிந்த அரசனானவன், அம்முனிவரைக் கொலுச்சபையிலழைத்துவந்து நவரத்தினமயமாகிய சிம்மாசனத்தி லிருக்கவைத்து, முறைமைப்படி பாதபூசைமுதலியவைகளைச்செய்து, அநேக இரத்தினங்களையும், விசித்திரமான பட்டுக்களையும், அளவற்ற ஆபரணங்களையும், அழகெரிக்

கும்படியான பலவித்திதப் பொருள்களையும், அவர் திருவடிகளில் வைத்துப் பணிந்தனன். அதற்குப் புருசுண்டி முனிவர் சந்தோஷங்கொண்டு அரசனே! கஜானனமூர்த்தி யெங்ஙனமிருக்கின்றனரென்று கேட்டனர். உடனே வீதியில் சிறுபிள்ளைகளோடும் ஆடல்செய்திருந்த மகோற்கடமூர்த்தியானவர், கன்றைத் தேடிவருகின்ற கறவைப்போல எதிரேவந்தனர். வேதங்களாலும் இவ்வுருவன் இவ்வண்ணத்தன் இவனிறைவனென்று காட்டுதற்கரிய மகோற்கடமூர்த்தியை அரசன் தனதுகையினாற்சுட்டி, இவர்தான் கஜானனமூர்த்தியென்று காட்டினன். அவ்வாறுகாட்டலும், புருசுண்டிமுனிவர் சுவாமியைப்பார்த்து முன்னர் தாம் தரிசித்திருக்கின்ற திருமேனியைக்காணாது இரண்டுகரங்களும் மனித முகமும்படைத்து ஏனைய அவயவங்களும் வேறுபட்டிருத்தலைக்கண்டு இவர் தாமோ கஜானனமூர்த்தியென்று மனதிற் சந்தேகங் கொண்டனர். அச்சந்தேகத்தை மகோற்கடமூர்த்தியறிந்து, உடனே முன்னர் அவருக்கு எவ்வாறு தரிசனந் தந்தருளியதோ அவ்வாறே தரிசனந்தந்தருளினர். பின்னர்புருசுண்டி முனிவர்திகைத்து தமதுஅகத்தில் எவ்வாறு எக்காலுந்தரிசித்துக் கொண்டிருக்கின்றாரோ அவ்வாறே புறத்திலும் பத்துகரங்கள், அக்கரங்கள்தோறும் ஆயுதங்கள், சந்திரனைத்தரித்த சடாமகுடம், யானைவதனம், ஒற்றைக்கொம்பு, சிலம்பணிந்த திருவடிகள், இருமருங்கிலுஞ்சித்திபுத்திகள், சிங்கவாகனம் முதலியனவுங்கண்டு அதிசயமாகி, முன்போலவே ஆனந்தபரவசமுற்று மெய்மறந்து பூமியிலேவிழுந்து புரண்டெழுந்து ஆனந்தக்கூத்தாடி பலமுறை வலம்வந்து வேதாகமங்களினால் துதிசெய்து கண்களிலே இடைவிடாமல் ஆனந்தவெள்ளத்தைப் பெருக்கி மனமானது அழலிற்பட்ட மெழுகுபோல வுருகும்படி நின்று ஓவென்றலறிக் கர்த்தனே! ஓ ஆண்டவனே! ஓ கிருபாநிதியே! ஓ பிரமானந்தசொருபனே! தேவரீரை யாரோவென்று நினைத்த அடியேனுடைய குற்றத்தைப் பொறுத்தருளல்வேண்டுமென்று பிரார்த்தித்தனர். அதற்குக்கஜானனமூர்த்தி கிருபைபூத்து, அன்பனே! எவரெவர் எந்தெந்தவடிவமாக நம்மைத் தியானிக்கின்றார்களோ, அவரவர்களுக்கு அந்தந்தவடிவமாகத் தரிசனந் தந்தருளுகின்ற பெருங்கருணையினுடைய யாம் துட்டரைச்சங்கரித்தற்பொருட்டும்; சிட்டரைப்பாதுகாத்தற்பொருட்டும், இப்போது அதிதிக்குப் புத்திரராக அவதரித்து மகோற்கடரென்னுந் திருநாமத்தைவகித்து இங்ஙனமிருக்கின்றோம். நீ நம்மைச் சந்தேகங் கொண்டிருந்தமையால் மூவுலகத்தாரும் காணுதற்கரிய திருவுருவத்தை முன்போல உன்னெதிரிற் காட்டினோம். ஓ பத்தியிற் சிறந்தவனே! உனக்கு வேண்டிய வரங்களைக்கேள் தருகின்றோமென்று திருவாய் மலர்ந்தனர். உடனே புருசுண்டிமுனிவர் பணிந்தெழுந்து, இருகரங்களையுஞ் சிரமேற்கூப்பி! ஓ பரம்பொருளே!. தேவரீரை யான் எக்காலத்தில் எந்தஉருவாய்த் தியானிக்கின்றேனோஅக்காலத்தில் அந்தஉருவாய் அடியேற்குத் தரிசனங் கொடுத்தருளி எப்போதும், தேவரீருடைய திருவடிகளிற் சலியாத பத்தியுங்கொடுத்து அடியேன் தெரியாமையினாற்பிழைசெய்தே

னாயினும் அதனைப் பொறுத்தருளல் வேண்டும். அன்றியும் அடியார்கள் விரும்பிய காரியங்களை யெல்லாம் விக்கினமில்லாமல் நிறைக்கின்ற படியால் தேவரீர் ஆசாபூரக மென்னுமோர் திருநாமத்தையுந் தரித்தருளல் வேண்டும். இவையே யான்தேவரீரிடத்தில் பெற்றுக்கொள்ளவிரும்பிய வரங்களென்று பிரார்த்தித்தருளினர். அதற்குக் கஜானனமூர்த்தி மனமகிழ்ந்து அவர் விழைந்தபடி வரங்கொடுத்தருளி அறுவகைச் சுவையோடுங்கூடிய நாலுவிதவுண்டிகளையும் அம்முனிவருடன் கூடவிருந்து போசனஞ்செய்து தாமுமவருமாகப் பழையபடி சபாமண்டபத்தில்வந்து வீற்றிருந்தனர். பின்னர், அரசன் ஆனந்தக்கடலில் மூழ்கினவனாகி இத்தினம் திரிமூர்த்திகளாலுங் காணுதற்கரிய திவ்விய தரிசனத்தை எளிதிற்கிடைக்கப்பெற்றேம். இதைவிட மேலானபாக்கியம் நமக்கென்ன விருக்கின்றதென்று சுவாமியையும் அம்முனிவரையும் பலமுறை பணிந்தெழுந்து அஞ்சலியஸ்தனாய் நின்றனன். அச்சபையின்கண் வந்திருந்த அங்கநாத்தினரும் அவ்வாறே பணிந்தெழுந்து வேண்டியவரங்களைப் பெற்றுக்கொண்டு தந்தமிருக்கையை யடைந்தார்கள். அதற்குமேல் புருசுண்டிமுனிவர், மகோற்கட மூர்த்தியினிடத்தில் விடைபெற்றுச்சென்று தண்டகவனத்திலிருக்கின்ற தமது ஆச்சிரமத்தை யடைந்து நித்தியானந்த சுகத்துடனே கூடி வாழ்ந்திருந்தனர்.

அந்தினம்போய் மறுதினங்காலையில் அரசனானவன் சகல பரிசனங்களும் புடைசூழ தமது சபாமண்டபத்திற் கொலுவிருந்தனன். அப்போது எல்லா மாயைகளினும் வல்லமேகனென்னும் ஓர்வுணன் சோசியனுருவடிவங்கொண்டு வலதுகையிற் செபமாலிகையும், இடதுகையிற் புத்தகமு மேந்திவந்து அரசனெதிரிற்போய் நின்றனன். அவனுக்கு உடனே அரசன் வணக்கஞ் செய்து ஓராதனத்திலிருத்தி, ஐயா! நீயார்? இங்குவந்தகாரியம் யாது? உமது கையிலிருக்கின்றது என்னபுத்தகமென்று அன்போடு வினவினன். அதற்கு வஞ்சகவடிவங்கொண்டு வந்தசோசியன், தான் கருதிவந்தகாரியஞ் சித்தியாகுமென்று நினைத்தவனாய் அன்னவனே, நாம் கந்தருவலோகத்தி லிருக்கின்ற சோசியன். நமது கையிலிருக்கின்றது சோதிடசாத்திரம். நாம் ஒருபயனைக் குறித்தன்று இங்ஙனம்வந்தது. லோகோபகாரமாகவே இங்ஙனம்வந்தோம். யாவரொருவர் தமக்கு ஈட்டும்பொருளாக இதைத்தேடுவார்களோ அவர்களே உலகங்கட்கெல்லாமிதஞ்செய்வார்கள். அதுபோலப் புவியாளும் மன்னவர்கட்கு இதமின்மையாயின், அவனுடைகையில் அடங்கிய வுலகங்கட்கு மிதமின்மையாமாதலால், உமக்கு இதமான காரியங்களைச் சிலசொல்லுகின்றோம்; அதை நீர் ஊக்கத்தோடும் ஞாபகத்தோடுங் கேட்கவேண்டும். நமக்கு எப்போதுந் திரிகாலக்கியானமுந் தெரிந்துகொண்டேயிருக்கும். அதைநீயறியவேண்டின் முன்னடந்ததும், இப்போது நடக்கின்றதும், இனிநடக்கப்போகின்றதும் யாஞ்சொல்லுகின்றோங் கேள்: ஓ தோன்றலே! நெருப்பை மின்மினிப்பூச்சென்றுகருதி அதனைத் தனதுகூண்டினுள்ளே வைத்துக்கொண்டு நாசமடைகின்ற குருவியைப்

போல நீர் ஓர்பிராமணப் பிள்ளையைக்கொண்டுவந்து இப்பட்டணத்தில் வைத்திருக்கின்றீர். அதனால் அளவற்ற இடையூறுகள் நேர்ந்ததைப் பார்த்திருக்கின்றீர். அப்பிராமணச்சிறுவன் விக்கினராசனாதலாலே அநேகவிக்கினங்கள் அடிக்கடி நேர்ந்துகொண்டே யிருக்கும். ஓர் விக்கினமு மில்லாது வுமக்கு இங்கிருக்கின்றவரையில் வியோமத்தைவிட்டொழியாத காற்றுபோல, விக்கினம் ஒழிகிறதில்லை. நீர் பூர்வத்திற்செய்த நல்வினைப்பயனால் இதுவரையில்வந்த விக்கினங்களனைத்து மொழிந்துபோயின. இனி விளையப்போகின்ற விக்கினங்கள் வெகுவிபரீதங்களை விளைவிக்குமேயன்றி வீணிற்போவதில்லை. ஆதலால், அப்பிராமணச்சிறுவனை விரைவில் இப்பட்டணத்தி னின்றுங் கொண்டுபோய்க் காட்டிற் சேர்த்துவிடுவீராயின் உம்மிடத்திலே நிராதகோபத்தை வைத்திருக்கின்ற நராந்தகனும் முன்போல அன்புவைத்திருப்பன். அப்பால் யாதொன்றிற்கும் பயமில்லை. இஃதன்றி, இன்னமும் ஒன்றுசொல்லக்கேள், அசுத்தன்-அருசன்-கபடன்-அதிசூரன் - தனக்கு மிக்கவன் என்னும் இவ்வைவருக்குள் ஒருவனுடைய சினேகமிருந்தாலும் சத்துருக்களில்லாமலே கேடுவிளையும். இவ்வைவருள் அப்பிராமணச்சிறுவன் உமக்கு மிக்கவன். அன்றியும், அதிசூரன் இவ்விரண்டுமா யிருத்தலினால் நீர் உயிர்தப்பிப் பிழைத்தலரிது பிழைக்கவேண்டுமையாயின் இக்ஷணத்தி லவனுறவை யொழித்தல் வேண்டும். இதுகாறும் உமக்குயாம் உண்மையான காரியங்களைச் சொன்னோமேயன்றி வீணானகாரியங்களைச் சொல்லவில்லை. அறிந்தவர்கள் அறியாதவர்களுக்கு அறிவிக்கவேண்டுவது நீதியாதலால், சகலமும் அறிந்தயாம் நீர் மனதறிந்து மாயாதவண்ணம் லோகோபகாரமாகச் சொன்னோம் என்றனன். அவையனைத்தையும் அரசன் கேட்டு அவன்சொன்னதெல்லாம் வஞ்சமாகுமென்று தனக்குள் நிச்சயித்து மேலுக்கு ஒப்புக்கொண்டவன்போல அப்பாதகனைப் பார்த்து, ஓசோதிடபண்டிதரே! நீர்கூறியதனைத்தும் உண்மையே, அக்காளையை நீரேபிடித்துக்கொண்டுபோய்க் காட்டில் விடுமென்றுசொல்லி அருகிருந்த உழையர்களைக்கூவி இவருக்கு நீங்கள் வீதியில் விளையாடிக்கொண்டிருக்கின்ற மகோற்கடரைக் காண்பித்து அவரை இவர் அழைத்துக்கொண்டு போம்பொழுது யாவரேனுந் தடுத்தால் அவர்களை விலக்கித்தடையில்லாமல் இவர் அழைத்துக்கொண்டுபோம்படி செய்துவரக் கடவீர்களென்று கட்டளையிட்டனன். அக்கட்டளையை உழையர் வாய்புதைத்துக்கேட்டு சோதிடரை யழைத்துக்கொண்டுசென்று குகையிலிருக்கின்ற சிங்கத்தை யானைக்குக் காட்டுமாறுபோலத் திருமேனிமுழுவதும் புழுதிபடும்படியாகவீதியிலே விளையாடல்செய்திருந்த மகோற்கடமூர்த்தியைக்காண்பித்தார்கள். உடனே மகோற்கடமூர்த்தி அச்சோசியரருகில்வந்து அவனுடைய வஞ்சகத்தைத் தாமறிந்துகொண்டு, ஐயா! அரண்மனையில் ஓர்சோசியர் அரசனிடத்தில் வார்த்தையாடிக்கொண்டிருக்கின்றனரென்றுசிலர்சொன்னார்கள். அவர் நீதானோ வென்றுசொல்லித் தமது திருமேனி முழுவதுங் குலுங்க நகைத்துக் கேட்டனர். அவ்வளவில் அவ்வஞ்சகனுடைய மனமான துலங்கி, நான்தானென்

றுசொல்லினன். அதற்குமேல் மகோற்கடமூர்த்தியானவர் இப்பட்டணத்திற்கு என்ன இடுக்கண் சம்பவிக்கவிருக்கின்றது. எனக்கென்ன அபாயம்நேரிடும் அவைகளை உமதுகூர்ந்தபுத்தியினா லாராய்ந்து சொல்லவேண்டுமென்று கேட்டனர், அக்கேள்விக்கு அப்பாதகன்பயந்து மனமும் உடலும்நடுக்குற்றவனாகி, அக்கம்பம் அக்கினிப்பருவத்தாலும் வாதரோகத்தாலும் உண்டானதுபோல வேறுகாட்டிச் சமாளித்துக்கொண்டு சுவாமி கேள்விக்கு உத்தரஞ்சொல்லத் துணிந்து மைந்தனே! இப்பட்டணத்திற்கு யானையினாலும் இருட்டினாலும் சலத்தினாலும் அப்பா நிகழ்தலுமாம். இதுண்மை. ஒருவேளை இம்மூன்றுந் தப்பினால் அளவற்ற அபாயங்கள் ஒருவருக்குந்தெரியாமல்வரும். உனக்குவரவிருக்கின்ற அபாயத்தினையுஞ் சொல்லுகின்றேன் கேள்: முதல் தினத்தில் வீழ்ந்திறந்து போவாய்; அது தப்பினால் விடத்தினாற்சாவாய், அதற்குந்தப்பினால் பின்னர் அநேகஅபாயங்கள்நேரிடும்; இவையனைத்தும் நான்கு தினத்திற்குள் உண்டாகும். அந்த நான்குதினமும் என்பின்னாகக் காட்டிற்கு வந்திருப்பையெனில், இவ்வபாயங்களெல்லாம் உன்னைப்பாதுகாத்து, மீட்டும் இப்பட்டணத்திற்கழைத்துவந்து யிதாப்பிரகாரம் சுகமாயிருக்கவைப்பேன் என்று சொல்லினான். அவையனைத்தையும் மகோற்கடமூர்த்திகேட்டு, ஐயா! நீர் சொன்னதனைத்தும் உண்மையே; நானுமிப்போதே உம்மோடு காட்டிற்கு வருகின்றேனென்றுசொல்லி அவனுக்கு வெகுமானஞ்செய்பவர்போலத் தமது மார்பிலணிந்திருந்த முத்துமாலையைவாங்கி அவ்வஞ்சகனுடைய கழுத்திலே போட்டனர். அம்மாத்திரத்தில் அம்முத்துமாலையினின்றும் அழற்சுவாலை யுண்டாகி அப்பாதகனைச்சுட்டெரித்தது. அவ்வற்புதத்தையாவருங்கண்டு ஆச்சரியமடைந்தார்கள்.

அதற்குமேல் கூபனென்றுங் கந்தனென்றுஞ் சொல்லுகின்ற இரண்டவுணர்கள் ஓர்புறங் கிணறாகவுந் தவளையாகவும் உருவமெடுத்துக்கொண்டிருந்தார்கள். அதை மகோற்கடமூர்த்தியறிந்து அப்பட்டணத்திற்குவெளியில் எங்குந்தென்னைகள் கட்டப்பட்டிருக்கின்ற தோப்புகளில் விளையாடச் செல்லுகின்றவரைப்போலத் தம்மோடிருக்கின்ற சிறுவர்களெல்லாரையும் அழைத்துக்கொண்டுசென்று அக்கிணற்றினருகேபோய் விளையாடிக்கொண்டிருந்து, பின்பு அதனையெட்டிப்பார்த்தனர். மற்றப்பிள்ளைகளும் எட்டிப்பார்த்து இதனாழத்தை யறிவோமென்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டு, ஒவ்வொருவராய் அக்கிணற்றிலேயிறங்கிச் சோதித்து ஒருவராலும் ஆழத்தினளவு காணாமல் மீட்டும்வெளியில்வந்து தனியே நின்றிருக்கின்ற மகோற்கடமூர்த்தியைப்பார்த்து, நீயேதோ திவ்யசாமர்த்தியங்களையெல்லாஞ் செய்கின்றனையே! இக்கிணற்றில் மாத்திரமிறங்கி அதனடியைப்பார்ப்பின் மனமே நின்னையுமெலித்துக்கொண்டு வருவையாயின் நீ யெல்லாவிதத்திலுஞ் சமர்த்தன்தானென்று சொன்னார்கள். அதற்கு மகோற்கடமூர்த்தி புன்னகைகொண்டு தமது இளமைப்பருவத்திற்குத்தக்கபடியே அதற்கிசைந்து, ஆ, ஆ! இதோமனமே அன்

ளிக்கொண்டுவந்தேன் பாருங்களென்று சொல்லி ஒருசேரவென்று பிளந்துக் குள்ளே குனிந்துப் பார்த்தனர். அக்கிளிஞ்சிலில் இரையாயிருந்த அவுணன் விரித்து பெரியகடல்போலே பிளந்திருந்தனன். அதற்குள்ளே தவளையாக அடங்கியிருந்தவன் அவ்வுருவினின்றே பெரியமலைபோல உலாவியிருந்தனன். உள்ளேகுனிந்துப்பார்த்த மகோற்கடமூர்த்தியானவர் விரைவில் அதனுழத்திவளவை பறித்து தண்ணீர்நுரைத்துக் குமிழியெழும்படியாக அடிப் பரப்பினது மனையினுள்ளிருந்தோடு வெளியேவந்து அதனைத்தமது கூட்டாளிப் பிள்ளைகளுக் கெறிவதிந்து எங்கும்பார்த்து ஆரவாரித்திருக்கின்ற சமத்திலே விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது மலைபோலப் பரித்திருந்த மண்டூகமானது மகோற்கடமூர்த்தியினுடைய பாதத்தைப் பிடித்து அழுத்திக் கடித்தது. உடனே சுவாமி அம்மண்டூகத்தினுடைய கால்களிரண்டையும் பிடித்திழுத்துக் கரையிலே யெறிந்தனர். அம்மாத்திரத்தில் இரையாகவிருந்த அவுணனும் தவளையாகவிருந்த அவுணனும் அவ்வுருவங்களினின்று மாறித் தங்கள்சுயரூபங்களைக்கொண்டு பூமியிலே மலைபோலவீழ்ந்து இறந்து போனார்கள். இவ்வற்புதத் திருவிளையாடலை அரசன் முதலாயினோர் கேட்டு ஆனந்தமடைந்தார்கள்.

இவ்வாறு காந்தகனேவிய அவுணவீரர்களை யெல்லாம் தனியாகவுங் கூட்டமாகவுஞ்சென்று மகோற்கடமூர்த்தியால் அழிந்துபோக, அதைநராந்தகன் கேள்வியுற்று மிகுந்தகோபமுங் கவலையுங்கொண்டவனாகி மீட்டுஞ்சிறிது தேறித் தனதுதந்தைக்கு இளையவனாகிய பதுமாசுர னென்பவனுக்குப் புத்திரர்களாகி அம்பாசுரன்-அந்தகாசுரன்-துர்க்காசுரன் என்னும்பெயர்களை யுடைத்திருந்த தனதுதம்பிமார் மூவரையுமழைத்து அவர்கட்கு அளவற்ற வெகுமதிகளைச்செய்து அதற்குப்பின் கல்யாணமுகத்தினுந் தோன்றும்படியாக அவர்களைப் பார்த்து அன்புமிகுந்த இளையோரே! நீங்கள் குழந்தைப்பருவத்துள்ளபோதே தேவர்களெல்லாரும் நடுங்கும்படியாகத் திசையானைகளையெல்லாஞ்சென்று கலக்கினீர்கள். இரண்டுபருவமடைதற்குமுன்பே பாதாளலோக முழுவதுங் கொள்ளையிட்டு அங்குள்ளவர்களை யெல்லாஞ் சிறையில்வைத்தீர்கள். மன்மதபர் மையல்செய்யத் திடமில்லாத பிள்ளைப் பருவத்திலேயே திரிலோகங்களையெல்லாம் வென்று வலம்வந்தீர்கள். இப்போது சகலகலைகளையும் கற்றிருப்பதன்றி, எல்லாவிதத்திலும் பராக்கிரமசாலிகளா யிருக்கின்றீர்கள். உங்களுக்குச் சுயமாக ஒருகாரியம் எந்த உலகங்களிலிருக்கின்றது. தருப்பையும் பாவியையும் உலர்ந்தசமித்துகளையுங் காட்டிப் பொருந்தியவர்கள் ஒன்றாகுஞ் செய்துகொண்டிருக்கின்ற காசிபனுக்கு ஒருமகன் பிறந்திருப்பது உங்களுக்குந் தெரியுமல்லவா? அவனே நம்மவர்களையெல்லாந் துரும்பாகமதித்து அளவற்றபேரை மாய்த்தனன். அவன் இப்போது காசிப்பட்டணத்திலிருக்கின்றான் நீங்கள் விரைவில் அப்பட்டணஞ் சென்று அப்பையனை எவ்விதத்திலேனுங் கொன்றுவாருங் கடவீர்களென்று

கட்டளை யிட்டான். அவ்வார்த்தையைக் கேட்ட மாத்திரத்தில் அம்மூவரும் தலைவணங்கிப் பணிந்தெழுந்து, அண்ணா! தேவரீர் அடியேங்கட்குத் தமையனாக விருப்பதினாலும், எங்களை முற்றிலுங் காப்பாற்றுவதினாலும், கண்ணை இமை காப்பதுபோல எங்களையேநினைத்து எங்களுக்கேற்ற காரியத்தையே கட்டளையிட்டீர்கள். அன்றியுந்தேவரீருக்குச் சிறியதந்தையாகிய எங்கள் பிதாவானவர் தேற்றையதினம் அப்பையனைச் சுழற்காற்றாகச் சென்றழைத்தனர். அதற்கப்பையன் அவரை வீணேகொன்றான். அக்கொடுமையை நினைக்குந்தோறும் உள்ளம்பதைபதைக்கின்றது. ஆதலால் அப்பகையையாங்களே போய் முடித்துவருகின்றோம். இத்தினஞ்சென்றால் வேறுநாளில்லையென்றுசொல்லி ஆக்கிரமித் தெழுந்தார்கள். இவ்வாறு ஆக்கிரமித் தெழுந்த அம்மூவரும் உடனே காசிப்பட்டணத்தை யடைந்து அவருள் அந்தகாசுர னென்பவன் சூரியனுங்கண்டு ஒளிக்கும் படியாக ஓர்நொடிப்போதில் எல்லாவுலகங்களிலும் பகற்போதைமறைத்து இருள்மூடச் செய்தனன். உடுக்களுஞ் சந்திரனுங் காணப்படாத அம்மாயவிருளானது இரவைப்போலிருண்டுபோனதால், கூகைகட்குங் கண்கள் தெரியாமற்போயின. அப்போது பற்பல வியாபாரங்களிலிருந்த யாவரும் இதுவென்றுவந்த அவ்விருளுக்குப் பயந்து சூரியனுக்குஞ் சந்திரனுக்கும் இராகுகேது சேர்ந்ததோ? உமாதேவியார் சிவபிரானுடைய விழிகளை மீட்டுந் தமதுகரத்தினால் மறைத்தாரோ? அல்லவெனில் விந்தபர்வதமானது முன்போல வளர்ந்ததோ? மற்றை யாதுகாரணமோ? கலிப்பகலிலே கல்வியற்றவர்களுடைய மனத்திலிருந்த இருளானது எங்கும் மூடிக்கொண்டதேயென்று நடுங்கித் துயருமுற்றார்கள். அந்தணர்-அரசர்-வைசியர்-சூத்திரரென்னும் நால்வகை வருணத்தார்களுந் தத்தந்தொழில்கள் நடைபெறாமைக்கு வருத்தமுற்றார்கள். மைந்தர்-சோம்பர்-ஏவலாளரென்னும் இவர்கள் மனக்குழப்பமில்லாமல் அவ்விரவைமெச்சி ஆனந்தநித்திரை செய்தார்கள். காமுகராயினோர் மிகுந்த சந்தோஷத்தோடு மங்கையரிடத்திற் பற்பல கலவிகளைச் செய்துகொண்டு இன்பவெள்ளத்தி லழுந்தினார்கள். அவ்விருளுக்குப் பயந்து கலவிக்கிணங்காத சிலஸ்திரீகள் இருதலைப்பவளங்களைத் தங்கள் மனைகளில்வைத்து வருந்தமுற்றிருந்தார்கள். தொழில்மூலமாகச்சென்ற யாவருந் தத்தம்பதிகளை மீட்டும் வந்து சேரமாட்டாமல் எவ்வெவர் எங்கிருந்தார்களோ அவ்வவர் அங்கங்கேயிருந்து கலைபுற்றார்கள். இரைதேடச்சென்ற பறவைகள் முதலிய யாவும் இராக்காலத்தில் வந்து ஒடுங்குகின்ற தத்தம் பொழில்களையுங் குகைகளையுங் காணாமல் வருந்தின. இவ்வாறு சகலசீவான்மாக்களுந் துன்பமடையும்படியாக அந்தகாசுரன் எங்குமிருளாக மூடிக்கொண்டிருக்கத் துர்க்காசுரனென்பவன் தனது மாயையினால் அக்காசிப்பட்டணத்தைச் சுற்றிப் பத்துயோசனைப் பரப்பில் எங்கும் போகவும் வரவும் வழியில்லாமல் மலையாகச்சுற்றி வளைத்துக் கொண்டனன். அம்மலையின்மீது சோதிமரம், சோதிக்கொடி, சோதிப்புல், சோதிமணி என்று இவைகள் அளவற்றனவாய் சோதியே யுருக்கொண்டது

டமாத்திரத்தில் அவள் மீட்டும் மூர்ச்சையாகி வீழ்ந்து பின்னர் தெளிந்தெழுந்து அளவற்ற துக்கசாகரத்தில் மூழ்கினவளாகி, ஐயையோ! மிக்க பராக்கிரமசாலிகளாகிய எனது பிள்ளைகள் இறந்துபோனதல்லாமல் என்பிராணநாயகரும் இறந்து எனதுயிரை வாட்டினரோவென்றுபுலம்பி அழுதுகொண்டிருந்தனள். அச்சமயத்தில் மற்றொரு பரிவார் விரைந்துவந்து அம்மா! உமது குமாரர்கள் காசிராசனிடத்தி லிருக்கின்ற ஓர் பிராமணப்பிள்ளையா லிறந்துபோனார்கள். உமது கணவரும் இன்று மனவற்றப்பெரு மவனுற் றிறந்துபோயின ரென்று சொன்னார்கள். உடனே பிரமரையானவள் அவிந்த கனியிற்பட்ட கடுங்காற்றைப்போல மனந்தளர்ந்து ஆ ஆ ஆ ஆ, நன்றாயிருக்கிறது நன்றாயிருக்கிறது. அவுணருடைய பராக்கிரமமெல்லா மிவ்வாறு நசிக்குமா? ஓர் பிராமணப்பிள்ளையால் நமது கணவரும் பிள்ளைகளும் ஏனைய வீரர்களும் அழிந்தார்களென்றால், இதைவிட அவமானம் நமதுகுலத்திற் கென்னவிருக்கின்றது. இத்தினம் யானேபோய் அப்பிராமணச்சிறுவ னுயிரைவாங்கி மடிக்கின்றேனென் றெழுந்து மேலான கீர்த்தியைப்பெற்ற அதிதியைப்போல வடிவெடுத்து சில அவுணவீரர்கள் சேடராகவும், சில அவுணமாதர்கள் சேடியராகவும் உருக்கொண்டு தான் கொண்ட கோலத்திற்கேற்றபடி புடைசூழ்ந்துவரச்செய்து, கொடிய விடத்தினைக் கலக்கப்பட்டிருக்கின்ற தேவாமிர்தத்திற்கிணையான சிலபண்டங்களை கையில்வைத்து பெரியோர்களுங் கண்டவுடன் வணக்கங்கொள்ளத்தக்க வேடத்தோடு காசிப்பட்டணத்திற்குச் சென்றனள். அப்பட்டணத்திலுள்ள ஆடவரும் ஸ்திரீகளும் அவளைக் கண்டவுடன் அதிதிவந்தனளென நினைத்து ஆனந்தமயமாகி சிலர் புஷ்பங்களைக்கொண்டுவந்து தூவினார்கள். சிலர் பாதத்திற் சலந்தினைவிட்டுப் பூசைசெய்தார்கள். சிலர் பரிமளப்பொடி தூவினார்கள். சிலர் மாலைதரித்தார்கள். சிலர் தாம்பூலங்கொண்டுவந்து கொடுத்தார்கள். சிலர் கனிவருக்கங்களைக் கொண்டுவந்து உபசரித்தார்கள். சிலர் ஆபரணங்களையும் வஸ்திரங்களையுந் தந்தார்கள். சிலர்பொன்னையும் இரத்தினங்களையும் பொழிந்தார்கள் சிலர் என்னகாட்சி கிடைத்ததென்று வியந்தார்கள். சிலர் எமது துன்பமனைத்தும் போயினவென்று நயந்தார்கள் சிலர்சனங்களை விலக்கிக்கொண்டு சென்று அருகிற் கூடினார்கள். சிலர் அவ்வரவை அரசனுக் கறிவிக்குமாறு வோடினார்கள். சிலர் பண்ணோடிசைகூடிப் பாடினார்கள். சிலர் பரதசாஸ்திரப்படி ஆடினார்கள். இவ்வாறு சகலரும் ஆனந்தங்கொண்டு உபசரிக்கும்படியாக வஞ்சவடிவங்கொண்டுவந்த அப்பாதகி நேரேயென்று அரண்மனையிற் சென்று இராஜஸ்திரீகள் வசிக்கின்ற அந்தப்புரத்திற்சென்றவள், உடனே அவ்வந்தப்புரவாயில் காப்பாளர் அரசன்றேவிக்கறிவிக்க, அரசன்றேவி எதிர்கொண்டுசென்று தாயிருஞ் சிறந்தீர் வந்திரோ? வாருமென் றழைத்துவந்து ஓர் தங்கச் சிங்காதனத்தின்மீது இருக்கவைத்து பாதபூசை முதலிய உபசாரங்களைச் செய்து அம்மா, முனிவருடைய துணையில்லாமல் தேவரீர்மாத்திரம் தனியே வருதற்கான காரணம் யாதென்று கேட்டனள். அதற்கு அக்கொடியாள் அவ்வரசன்றேவியைப்

பார்த்து மகளே, அன்பிற் சிறந்த அரிவையர் ஒருகாலத்தும் புருடனைப் பிரிந்திருக்கினுமிருப்பர். தமது புத்திரர்களை ஒருகணமேனும் பிரிந்திருக்கமாட்டார்கள். யானும் எனது மகோற்கடமூர்த்தியைக் காணாதிருக்கமாட்டாமல் முனிபுங்கவரைத் தனியே வனத்தின்கண் விடுத்து வந்தேனென்று சொல்லினள். அதைக் கேட்டவுடன் அரசன்றேவி, ஓர் சேடியைக் கூவி வீதியிலே விளையாடல்செய்கின்ற மகோற்கடமூர்த்தியை யழைத்துவாருமென்று கட்டளையிட்டனள். மற்றொருசேடிக்கு அரசனை யழைத்துவரும்படி ஆக்கியாபித்தனள். அவ்வாறே அவர்கள் அவ்விருவரிடத்திலுஞ் சென் றறிவித்தார்கள். உடனே அரசன் மனமகிழ்ந்து அப்பாதகியிடத்தில் விரைந்துவந்து அவளுடைய பாதங்களிற் பூக்களைச்சொரிந்து பூசைசெய்து இரத்தினங்கள் வஜ்ராபரணங்கள் கனிவர்க்கங்கள் முதலிய கையுறைகளைத்தந்து, அன்னையே! அடியேனையுமோர் பொருளாக நினைத்துத் தேவரீர் இங்ஙனம் எழுந்தருளினீரோ வென்று பல சாந்தமொழிகளினாற் றுதிசெய்து, அனந்தமுறை சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து, தேவரீர் அடியேன்மீதுகிருபைவைத்து சிலநாள் இங்கிருக்கும் எனது குமாரனுடைய விவாகம் நிறைவேறிய மறுநாளைக்கே உம்மையும் மகோற்கடமூர்த்தியையும் அடியே னழைத்துக்கொண்டு சென்று எனது குருசுவாமிகளிடத்தில் வசிக்கும்படி விடுத்து, மீட்டும் இந்நகரத்திற்குத் திரும்புகிறேன். அதுகாறுந் தேவரீர் தயைவைத்திருத்தல் வேண்டுமென்று பிரார்த்தித்தனன். அதனை அப்பாதகி கேட்டு, அரசனே! யானொருகணமேனும் மகோற்கடமூர்த்தியைப் பிரிந்திருக்கேன். என்னை எவ்வாறோ மயக்கி அவரை யழைத்துக்கொண்டுவந்துவிட்டனை. அதுமுதல் கன்றைப் பிரிந்த தலையீற்று பசுவைப்போலத் தயங்கினேன். இனி அரைக்கணமேனும் குழந்தையைப் பிரிந்து எனது முனிபுங்கவருக்குப் பணிசெய்யும்வலியிலேன் அம்முனிபுங்கவரும் அரைநிமிடம் என்னைப் பிரிந்திரார் ஆதலால் இப்போதே மகோற்கடமூர்த்தியை என்னோடுகூட்டி அனுப்பிவிட வேண்டுமென்று கேட்டனள். அச்சமயத்தில் மகோற்கடமூர்த்தி வந்தனர். வந்தவரை அப்பாதகி எனதருமைக்குழந்தாய் வாருமென்று தழுவி விரைவிலெடுத்துத் தனது மடியின்மீது வைத்துக்கொண்டனள். அவள்வஞ்சகத்தை சுவாமியறிந்து அம்மா! எனக்கு என்னகொண்டுவந்தனை யென்று கேட்டனர். உடனே அவ்வஞ்சகி தனதுசேடியர்கரத்திற் கொடுத்து வைத்திருந்த சிற்றுண்டிகளைவாங்கி மகோற்கடமூர்த்தியினுடைய திருக்கரத்திற் கொடுத்தனள். அவையனைத்தையும் எமதையன் விரைந்து வாங்கிவாங்கி வாய்மடுத்தனர். விடங்கலந்திருக்கின்ற அச்சிற்றுண்டிகளைசுவாமி வாங்கிப்புசிக்கப் புசிக்க அவைகளைக்கொடுத்தராக்ஷசிக்கும் அவளுக்குச்சேடராகவுஞ் சேடியராகவும்வந்த அவுணருக்கும் அவுணஸ்திரீகளுக்கும் விடவேகந்தலைக்கேறி இறந்துபோனார்கள். அவ்வற்புதத்தை யாவரும்பார்த்து ஆச்சரியங்கொண்டு பின்னர் அப்பாதகி இன்னாளென்று அறிந்துகொண்டு மகோற்கடமூர்த்தியை அளவற்ற வேதாகமங்களாற் றுதிசெய்தார்கள்.

கேட்பீர்களோ சவுனகாதி முனிவர்களே! இவ்விதமாக அவுணபாதகர்கள்வந்துசெய்த அளவற்ற வஞ்சனைகளையெல்லாம் எமதுமகோற்கடப்பெருமானறிந்து அவைகளையவர்களுயிரோடு நாசமாக்கிய திருவிளையாடல்கள் இன்னுமனந்தமுள. அவைகளை விரிக்கிற்பெருகுமாதலால், இதுகாறுஞ் சொல்லியவளவில் நிறுத்தி மற்றொருபோது அக்காசிப்பட்டணத்திலுள்ள வீடுகள்தோறும் தாமொருவரே ஏககாலத்தில் அநேகராகி விருந்துபுசித்தருளிய திருவிளையாடலைச் சொல்லுவோம் கேட்பீர்களாக.

ஓர்நாள் அக்காசிநகரத்துள்ள யாவரும் அரசனுடைய கொலுச்சபையில் வந்து மிக்கமனவுருக்கத்தோடு மன்னனைப் பணிந்தெழுந்து ஆண்டவனே! சகலலோகங்களுஞ் சுகமடைதற்பொருட்டுத் திருவவதாரஞ் செய்தருளிய மகோற்கடமூர்த்தியைத் தேவரீர் இந்நகரத்துள்ளோர் யாவருங் கிருதார்த்தர்களாகும்படி அழைத்துவந்து வைத்திருக்கின்றீர். அதற்கு யாங்கள்செய்யுங் கைம்மாறு ஒன்றையுங்காணேம். பூபாலகராயினோர் தம்மையடுத்த சனங்கட்குத் துன்பங்களைப் போக்கி இன்பங்களை யூட்டுவிப்பது அவர்களுடைய கடமையென்று சொல்லிய நீதிசாஸ்திரப்படி, தேவரீரும் அக்கடமையை அடியேங்கட்கு எக்காலத்தும் பாராட்டிவருகின்றீர். இவ்வாறு தேவரீர் அளவற்ற சுகங்களை அடியேங்கட்குண்டாக்கிப் பாதுகாத்துவருகின்றீராயினும், அடியேங்கள் தேவரீரிடத்தில் விண்ணப்பஞ்செய்து கொள்வதற்கான ஒருகுறை யிருக்கின்றது. அவ் விண்ணப்பத்திற்குத் தேவரீர் செவிகொடுத்தருளல் வேண்டும். அதாவது: அடியேங்களுடைய வீடும் பாக்கியமும் பயனடையும்படியாக மகோற்கடமூர்த்திக்கு அமுதுசெய்விக்க விருப்பங் கொண்டிருக்கின்றோம். அவ்விருப்பத்தைத் தேவரீர் தயைசெய்து அங்கீகரித்து சுவாமியைஅடியேங்களோடு அனுப்பல் வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதற்கரசனவர்களைப் பார்த்து ஓ பத்தியிற்சிறந்தவர்களே! கிருபைக்கடலாகிய மகோற்கடப் பெருமான் இப்பட்டணத்தில் வசிக்கின்ற நாளெல்லாம், யாமவர் சமீபத்திலிருந்து அமுதூட்டித் திருப்தியடைதலல்லாமல் ஒருநாளாயினும் அந்த மேலானமூர்த்தியை யாம் பிரிந்திருக்க மனமொவ்வோம் அன்றியும் அவருடைய இச்சையின்படியாம் அன்புசெய்து நடந்துகொள்ளுவதேயன்றி நமதிச்சையின்படி அவரை வரச்செய்வது தகுதியன்று அவருடைய குறிப்பு உங்கள்மீதிருந்தாலும் அவர் ஒருவர் நீங்கள்பலர் ஆதலால் அக்கிருபாமூர்த்தி ஒவ்வொருமனைக்கு ஒவ்வொருநாள்வரினும் அநேகவருடஞ்செல்லும் இதனைத் தீர்க்காலோசனை செய்யக்கடவீர்களென்று சொல்லினன் அச்சமயத்தில் மகோற்கடமூர்த்தியும் அங்கணம்வந்து அளவற்ற பேர்களால் சபைநிறைந்திருப்பதைக்கண்டு நீங்கள்யாவரும் இங்கே கூடியிருக்கின்ற காரணம் யாதென்று வினவியருளினர். அத்திருவாசகத்தை அந்நகரத்தார் கேட்டமாத்திரத்தில் உடன்முழுது முரோமாஞ்சிதம்பூத்து அளவற்ற களிப்பின் மூழ்கினவர்களாகி யாவரும் பணிந்தெழுந்து இருகரங்களையுஞ் சிரமேற் கூப்பிநின்று ஓ பரம கருணாநிதியே! ஓ பக்தவத்

சலனே! ஓ தீனசரண்ய மூர்த்தியே! அடியேங்களெல்லாந் தேவரீருக்குத் திருவமுது செய்விக்கவேண்டி எமதாண்டவனாகிய இராசாதி ராசனிடத்தில் விண்ணப்பஞ்செய்துகொண்டோம் அதற்கவர் சம்மதமாகவில்லையென்று யாவரும் ஒரேவிதமாகச் சொன்னார்கள்.

அவர்கள் சொல்லியதை சுவாமி கேட்டு யாவரும் சந்தோஷிக்கும்படி சற்றே நிதானித்து அன்பர்களே, இராசா எப்போதும்போலவே நமக்கு போசனஞ்செய்விக்கட்டும் நீங்கள்யாவரும்போய் உங்களுங்கள்வீடுகள்தோறும் விருந்துசெய்யுங்களென்று திருவாய்மலர்ந்தனர். அத்திருவருளை யாவருஞ் சிரமேற்கொண்டுசென்று அவ்வவர்களுடைய வீடுகளையும் முற்றங்களையும் வீதிகளையும் அலங்காரஞ்செய்து அவ்வவர்கட்குண்டான செல்வத்திற் கேற்றபடி விருந்து சமைத்தார்கள். இவ்வாறு யாவரும் தங்கள் தங்களுடைய வீடுகளில் தனித்தனியாய் அத்தியந்த சந்தோஷத்தோடு விருந்து செய்துகொண்டிருக்கின்றநாளில் அந்நகரத்தில் சுக்கிலனென்னு மோரேழைப்பிராமணர் நித்திய தரித்திராக விருந்தும் அவரும் அவருடைய கற்பிற்சிறந்த வித்துருமையென்கின்ற பத்தினியும் மனமொத்து தினந்தினம் பிச்சையில் தங்களுக்குக் கிடைத்தமட்டும் ஒவ்வோரதிதிக்கு அமுதுசெய்வித்துக்கொண்டு காலந்தள்ளி வருவார்கள். அத்தினமும் பழையபடி சுக்கிலானவர் தமதுகையில் ஓர்தண்டமும் உபாதானப்பாத்திரமு மேந்திக்கொண்டு வீடுகள்தோறும் பிச்சைக்குச் சென்றனர். சென்றவர் அத்தினத்தில் ஒருவீட்டிலேனும் ஓர்பிடியரிசியும் போடப்பெறாதவராகி வீணே பலவீடுகள்தோறும் அலைந்துதிரிந்து மீட்டுந் தமது மனைக்கண்வந்து, தமதுபத்தினியாகிய வித்துருமையைக்கூவிப் பெண்ணே! இதுவரையில்கொஞ்சமாயேனுங் கிடைத்துவந்த [illegible]னம், இத்தினம் கிஞ்சித்தாயினும் இல்லாமற்போயது. ஆகலால் இதுவரையில் கிடைத்துவந்ததில் எஞ்சியிருப்பது புல்லரிசித் தவிடாயினும் அதனைப் பாகமாய்ச் சமைத்துவைக்கக்கடவை. இத்தினம் இந்நகரத்தாரெல்லாம் மகோற்கடமூர்த்திக்கு விருந்துசெய்கிறார்கள். நாமும் அவருக்கு விருந்துசெய்து பிறவித்துன்பத்தை யொழித்துக்கொள்ளுவோமென்றனர். அவையனைத்தையும் வித்துருமைகேட்டு, சுவாமீ! இந்நகரத்திலுள்ளவர்களெல்லாம் செல்வத்தின் மிகுந்தவர்கள்; மகோற்கடமூர்த்தியானவர் இத்தினம் அவர்கள் வீடுகள்தோறுஞ்செய்த அறுசுவையோடுங் கூடிய வுண்டியை உண்ணவிருப்பது நிச்சயமே. அவர் நமது ஏழைக்குடிலுக்கும் எழுந்தருளுவரோ வென்றனள். அதற்குச் சுக்கிலர் அவளைப்பார்த்துப், பெண்ணே! நம்மிடத்திலும் அவரது பெருங்கருணை யிருக்குமாயின் வருவரென்று சொல்லித் தாமவ்விடத்தினின்று நந்தவனத்திற்குச் சென்று வன்னிப்பத்திரமும் அறுகுமெடுத்துவந்து அவற்றில் பழுதில்லாதபடி ஆய்ந்து வைத்து, கங்கையிற்சென்று ஸ்நானம்பண்ணிப் பூசைசெய்துகொண்டிருந்தனர். அவருடைய பத்தினியும் எஞ்சியிருந்த புல்லரிசியையெல்லாமெடுத்து ஆராய்ந்து மிக்க பாகத்தோடு சமைத்துவைத்தனள். இவ்வாறு அந்நகரத்தினரெல்லாம் மகோற்

கடமூர்த்திக்கு விருந்துசெய்கிற சம்பிரமத்திலிருக்க, அதை நாரதமுனிவர் திக்கு சனகர்முதலிய முனிபுங்கவர்கட்கு அறிவித்தனர். உடனே அவர்கள் காசிராசனுடைய அரண்மனையை நோக்கிவந்தார்கள். அம்மாத்திரத்தில் அரசன் விரைந்து எதிர்கொண்டுசென்று அவர்களைப் பத்தியோடழைத்துவந்து தனித்தனி இரத்தினசிங்காதனங்களி லிருக்கவைத்து, பாதபூசைமுதலிய வுபசாரங்களைச்செய்து, கற்பகம்-காமதேனு-சிந்தாமணி-நவநிதி முதலியவைகளை யெல்லாம் அடுத்தவருக்குக் கடைக்கண்பார்வையில் கொடுத்தருளத்தக்க வல்லபமும், மகத்துவமுமுடைய சுவாமிகளெல்லாம் அற்பனாகிய அடியேனிடத்தில் வந்தகாரணம்யாதோ அதனை யான் கடைத்தேறுமாறு திருவாய் மலர்ந்தருளல் வேண்டுமென்று பிரார்த்தித்தனன். அதற்கம்முனி புங்கவர்கள் அவனைப்பார்த்து, ஓ லோகபாலனே! நியாயசமாதிகளாலே பெறத்தக்கபேறாகிய ஓர் நிட்களப்பொருளே! உனதுமனைக்கண் உலகமெல்லாம் உச்சீவித்தற்பொருட்டு சகளமா யெழுந்தருளியிருப்பதாகக் கேள்வியுற்ற யாங்கள், அதனைத் தரிசிக்கவும் அதற்குத் தொண்டுசெய்யும் பேற்றினைப்பெற்ற நின்னைக் காணவும் வந்தோமென்று சொன்னார்கள். அச்சமயத்தில் மகோற்கடமூர்த்தி அங்ஙனமெழுந்தருளினர். உடனே சனகர் முதலாயினோர் சுவாமியைப் பலமுறை பணிந்தெழுந்து வேதாகமங்களினால் அளவற்ற தோத்திரங்களைச்செய்து, அவருடைய கிருபையைப் பெற்றவர்களாகித் தம்பதிகளைச் சேருவதற்கு விண்ணப்பஞ் செய்தார்கள் அதற்கு மகோற்கடமூர்த்தி அம்முனிவர்களைப் பார்த்து அன்பர்களே! இராசனுடைய வீட்டிலே நம்முடனிருந்து விருந்துசாப்பிட்டுப் பின்னருங்கள் பதவிகளைச் சேரலாமென்று திருவாய் மலர்ந்தனர். அதற்கம்முனிவர்கள் மகாபாக்கியமென்று ஆனந்தித்து கங்கையில் ஸ்நானஞ்செய்யச் சென்றார்கள். அந்நகரத்தினரெல்லாந் தங்கடங்கள் மனைகளிலெல்லாப்போசனங்களையுஞ் சமைத்துவைத்தார்கள். அப்போது சுக்கிலனென்கிற ஏழைப்பிராமணனுடைய பத்தியை உலகத்திலுள்ளோர்கட்கு அறிவித்தற்பொருட்டு முன்னதாய் அவனுடைய புற்கூரை வீட்டினுடைய முன்றிலின்கண் எழுந்தருளி நின்றனர். அதைச் சுக்கிலர்கண்டு எனது செல்வம்வந்ததென்று ஆனந்தக்கூத்தாடி, ஓர் கமண்டலத்திற் சலங்கொண்டுவந்து அவரது திருவடிகளில் அபிஷேகித்து, அவ் வபிஷேகித்த சலத்தைத் தமது சிரத்தின்மீது புரோட்சித்துக் கொண்டு, புறவிருளையெல்லாந் தொலைத்து, அகவிருளுந் தொலைவெய்தும்படி உள்ளினுங்கொண்டு சிதலையாற் றின்னப்பட்டிருக்கின்ற வோர்மனையின்மீது, எமது கர்த்தனை யெழுந்தருளச்செய்து, வன்னிப்பத்திரத்தினாலும் அறுகினாலும் திருவடிகள் குளிரும்படியாக மிகுந்தபத்தியோடு அருச்சித்து, வேதாகமங்களினாற் பலமுறை துதிசெய்து, வெகுநாள் பிரிந்ததை கூடாமல் அங்கங்கே சூரியகிரணத்தாற் சுடப்பட்டிருக்கின்ற ஓரரைவீட்டில் சுவாமியை யழைத்துக்கொண்டுபோயிருக்கவைத்தனர். உடனே அவர்பத்தினியாகிய வித்துருமைவந்து சுவாமியைப் பணிந்தெழுந்து, தான் சமைத்துவைத்த புல்லரிசிச் சோற்றையுங் குழம்பை

யும் மோதகம் அப்பம்முதலிய சிற்றுண்டிகளையுமோர்பரிகலத்தில்வைத்து, ஓகிருபாமூர்த்தியே! ஏழை அடியேங்களாற் சமைத்துவைத்த இவ்வுணவையும் தேவரீர் அங்கீகரித்துக் கிருபையோடும் புசித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனள். அவளன்புக்குச் சுவாமி மனமகிழ்ந்து பத்தியோடு பரிமாறிய வுணவுகளையெல்லாங் கிருபையோடு புசித்துக் கைபூசி மற்றோரிடத்தில் ஓர் தருப்பைச் சயனத்தின்மீது எழுந்தருளினர். பின்னர் சுக்கிலன் சுவாமியருகில்வந்து இளைப்பாறுகிறவரையில் தமது கையில் விசிறியேந்திப் பணிசெய்திருந்தனர். இவ்வாறு மிகுந்த அன்போடு பணிசெய்திருக்கின்ற சுக்கிலனை சுவாமிபார்த்து அன்பனே! அதிதிபூசை செய்வாருள், உன்னையொப்பவர் இவ்வுலகின்கண் எவ்விடத்திலுமில்லை. நீபோய் போசனஞ்செய்து உனது மனைவியோடு மிங்ஙனம் வருகவென்று திருவாய் மலர்ந்தனர். அவ்வாறு சுக்கிலர்சென்று சுவாமி புசித்தருளிய பரிகலச்சேடத்தைத் தமது மனைவியோடுண்டு, பின்னர் அவளுடன் மிக்க மனமகிழ்ச்சியோடு சுவாமியிடத்தில் வந்து பணிந்தனர். பணிந்தவர்கள் மீட்டுமெழுவதற்குமுன் சதுர்வேதங்களாலுங் காணுதற்கரிய கர்த்தர், தமது சுயரூபத்தை அவர்கட்குக் கடாட்சிக்கத் திருவுளங்கொண்டு, யானைவதனமும் பத்துக்கரங்களும் விளங்கும்படியாய் ஏனைய அவயவங்களெல்லாம் பிரகாசிக்க இருமருங்கினுஞ் சித்திபுத்திகள்சமேதராய்ச் சிங்கவாகனமூர்ந்து தரிசனந் தந்தனர். அத்தரிசனத்தைக்கண்ட சுக்கிலரும் வித்துருமையும் அளவற்ற களிப்பிலாழ்ந்தவராகி விழிகளில் ஆனந்தபாஷ்பஞ்சொரிந்து, மீட்டும்பலமுறைபணிந்தெழுந்து இருகரங்களையுஞ் சிரமேற் கூட்டி அளவற்ற துதிகளைச் செய்தார்கள். அவர்களை எமதையன் கிருபையோடு பார்த்தருளி, அன்பர்களே! உங்களுக்கு வேண்டியவரங்களைக்கேளுங்களென்று திருவாய் மலர்ந்தனர். அதற்கத் தவசீலர்கள், சுவாமியைத் தொழுதெழுந்து ஓகிருபாமூர்த்தியே! அடியேங்கட்குத் தேவரீருடைய திவ்வியசரணாரவிந்தங்களில் இடைவிடாதபத்தியும், முத்தியுங் கொடுத்தருளல் வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அவ்வாறே அவர்கட்கு சுவாமிவரங்கொடுத்தருளி, இந்திரன்குபேரன் முதலாயினோரும் பொறாமைகொள்ளத்தக்க போகபாக்கியங்களை அவர்கட்குத்தந்து, மீட்டும் மகோற்கடப்பிள்ளையாராகத் திருவுருக்கொண்டு அரசனுடைய மனையின்க ணெழுந்தருளினர். அப்போது முன்னரே ஸ்நானஞ் செய்யச்சென்ற சனகாதி முனிபுங்கவர்கள் தங்கடங்கள் நியமங்களை முடித்துக்கொண்டுவந்தனர். உடனே அரசன் தனது சுற்றத்தினரையெல்லாம் வருவித்து, சுவாமியை அமுதுசெய்வதற் கழைத்தனன். அந்நகரத்தினரும் வொருமிக்கவந்து சுவாமியை யழைத்தார்கள். அவர்களை சுவாமிபார்த்து இலைஇடுங்கள். இதோவந்தனமென்று திருவாய்மலர்ந்தனர். அதைக்கேட்டமாத்திரத்தில் யாவருமனமகிழ்ந்து தத்தம்வீடுகளை நோக்கிச்சென்றார்கள். அவர்கள்சென்றதுமுன்னம் மகோற்கடப்பிள்ளையார் அவ்வவர்கள் வீடுகள்தோறு மெழுந்தருளி யிருந்தனர். அதை அவ்வவர்களுங்கண்டு அந்தோ! பிழைத்தனம் பிழைத்தனமென்று நடுக்குற்றெழுந்து பணிந்து மிக்க

வுள்ளன்போடு சுவாமிக்கு அமுதுபரிமாற ஆரம்பித்தார்கள். அரசனுடைய மனையிலும் எப்போதும்போலத் தாம் சனகாதி முனிவர்களும் அரசனும் அவனுடையபந்துக்களும் தமதுபக்தியிலிருந்துண்ணும்படியாகத் திருவமுதுசெய்தனர். ஏனையர்மனைகளிலும் அந்தவகைகாலத்திற்றானே ஓர்வீட்டில் தயிலமிட்டுக்கொண்டு ஸ்நானஞ்செய்கிறவராயும், ஓர்வீட்டில் சந்தியாவந்தனஞ் செய்கின்றவராகியும், ஓர்வீட்டில் தியானஞ்செய்கின்றவராயும், ஓர்வீட்டில் போசனஞ் செய்கின்றவராயும், ஓர்வீட்டில் சங்கீதங்கேழ்க்கின்றவராயும், ஓர்வீட்டில் நாட்டியம் பார்க்கின்றவராயும் இருந்தனர்.

இவ்வாறு வீடுகள்தோறும் வேறுவேறாக வேண்டியபடி விளையாடல் செய்து, நகரத்தின்கணுள்ள பேர்க்கெல்லாந் தமதுதிருவருளைவழங்கி, அளவற்றபாக்கியங்களையும் அவர்கட்குக்கொடுத்தருளினர். இவ்வற்புதத் திருவிளையாடல்களையெல்லாம் சனகாதிய முனிபுங்கவர்கள்பார்த்துப் பேரானந்தக்கடலிற்றிளைத்தவர்களாகி, அத்தினம்முழுவதும் மங்கனையிருந்து, மறுநாள் முதல் அந்நகரத்தின்கண் சிற்பசாஸ்திரவிதிப்படி ஓராலயஞ்சமைத்து, அவ்வாலயத்தில் மகோற்கட மூர்த்தியினுடைய திருவுருவத்தைப் பிரதிட்டை செய்து, அம்மூர்த்திக்குத் தமது அபிதானத்தால் சனகாதிகணேசரென்று திருநாமந்தரித்து, அவ்வாலயத்தருகில் ஓர்தடாகந்தோண்டுவித்து, அத்தடாகத்திற்குக் கணேசகுண்டமென்று பெயரிட்டு, அதில்தாங்கள் ஸ்நானஞ்செய்து, கணேசமூர்த்திக்கும் அத்தீர்த்தத்தால் அபிடேகமாட்டி, வேதாகமவிதிப்படி பலநாள் பூசித்துவந்தார்கள். அவர்களிடத்தில் மகோற்கடமூர்த்திக்குக் கிருபையுண்டாகி சித்திபுத்திகள் சமேதராய் சிங்கவாகனமூர்ந்து யானைமுகமும் பத்துக்கரங்களும் விளங்கும்படியாக அவர்கட்குக்காட்சி கொடுத்தருளினர். அக்காட்சியைக்கண்டவுடன் அம்முனிபுங்கவர்கள் ஆனந்தக்கடலாடி அளவற்ற துதிகளை அன்போடுசெய்து பணிந்தார்கள். அவர்கட்குளென்னையுமோரடிமையாக வுடைய கணேசமூர்த்தியானவர் தவத்திலும், யோகத்திலும், ஞானத்திலும், நற்குணத்திலும் மேன்மையாகக்கடவீரென்று வரங்கொடுத்தருளி, மீட்டுமுன்போலவே மகோற்கடமூர்த்தியாகத் திருவுருக்கொண்டு விளையாடல்செய்திருந்தனர் பின்னர் சனகாதியமுனிவர் மிகுந்தஅன்பினால் சுவாமியைவிட்டுப் பிரியமாட்டாதவர்களாகி, அந்நகரிற்றானே சிலகாலமிருந்து தாங்கள்பிரதிட்டைசெய்தகணேசமூர்த்தியை, மும்முறையும்பூசித்துத்தங்கட்கள் பதவிகளைநோக்கிச் சென்றார்கள். சனகர்முதலிய நால்வராலும்பூசித்த அம்மூர்த்தியைப் பின்னர் தேவர்கள் முனிவர்கள் முதல்அந்நகரத்திலுள்ளோர் யாவரும்பூசித்துச் சகலதுன்பங்களினின்றுநீங்கி, மகோற்கடமூர்த்தியினுடையகிருபையையும், அளவற்றவரங்களையும் பெற்றுவாழ்ந்திருந்தார்கள்.

கேட்டீர்களோ சவுனகாதி முனிவர்களே! இதுகாறும் தமதுஅறக்கருணையால் அடியார்களுக்குப்பற்பல திருமேனிகளைக்கொண்டு செய்தருளிய திரு

விளையாடல்களைச்சொன்னேம். இப்பால் தமதுமறக்கருணையால் கொடியவனுகிய நராந்தகனோடு யுத்தஞ்செய்த திருவிளையாடலைச் சொல்லுவோங் கேட்பீர்களாக.

பிரமன் விண்டு உருத்திரனென்னும் நாமங்களைப்பெற்ற திரிமூர்த்திசொரூபமாகவிளங்கிச் சராசரப் பிரபஞ்சங்களையெல்லாம் படைத்துங்காத்துஞ் சங்கரித்துமிராநின்ற வேதாகமங்களாலுந் தேடிக் காண்டற்கரிய மூலாதாரக்கடவுளென்னும்மகோற்கடமூர்த்தியானவர், நராந்தகனுலேவப்பட்ட அவுணவீரர்களையெல்லாம் மீட்டுந்திரும்பச்செல்லவிடாமல் சங்கரித்துவந்தபடியால், அப்பாதகன் கோபந்தலைக்கொண்டு, நாமனுப்பியவீரர்கள் மகோற்கடனைக் கொன்றார்களோ? அல்லவெனில், மாண்டார்களோ? இதுகாறும் ஒருவரையேனுந்திரும்பி வரக்காணேமே? இதைவிரைவிலறிந்துக் கொள்ளவேண்டுமென்று தனக்குள் உத்தேசித்து, சூலனென்றுஞ் சகலனென்றுஞ்சொல்லுகின்ற இரண்டு தூதர்களைக்கூவி, நாம்மகோற்கடனைக்கொன்று வரும்படியேவிய தூதர்களில் ஒருவரையேனும் மீண்டுவரக்காணேம். அவர்கள் எங்கு எவ்வாறாயினரோ? அதனை விரைவிலறிந்துவரக் கடவீர்களென்று யேவினன். உடனே அத்தூதர்கள் மானிடவடிவோடு காசிநகரத்துள்வந்து, நராந்தகனுடைய வீரர்களையெல்லாம் மகோற்கடமூர்த்தியானவர் ஒவ்வொரு விளையாட்டினால் நாசஞ்செய்தமையைக்கேட்டுத் திகைத்து, வீதியிலே சிறார்களோடும் விளையாடல் செய்கின்ற மகோற்கடமூர்த்தியையுந்தமதுமலவிருளொழியும்படியாகத்தரிசித்துப், பார்வைக்கெளியனுய்ப் பலசிறார்களோடும் விளையாடுமிவன், நமதுசுத்தவீரர்களையெல்லாங் கொன்றானென்பது என்னஆச்சரியம்? இவனை நாமேபிடித்துக் கொன்று, நம்மையனுப்பிய நராந்தகற்குப் பெருமகிழ்வை யுண்டாக்குவோமென்று நினைத்து, தங்கள் சுயரூபத்தோடு மெழுந்து மகோற்கட மூர்த்தியினுடைய திருக்கரங்களைப்பிடித்தார்கள். அப்போதுசுவாமி, அக்கைகளையுதறிமீட்டுமவர்கள்கைகளைத்தமது திருக்கரத்தாற் பிடித்துக்கொண்டு, தாமுமவர்களைப் போலப் பெரியவுருவமெடுத்து, அவ்விருவரையும் பூமியின்கண் அறையப்போயினர். அதற்குப்பாதகர்கள்பயந்து துதிசெய்து சுவாமீ! அடியேங்கள் நராந்தகனுலேவப்பட்டதூதர்கள். அடியேங்களைத்தேவரீர் கொல்லாதுகாத்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதனைத்திருவுட்கொண்டவியசர்த்தன்கேட்டு, அவர்களைவிலக்கிவிடுத்து இதுகாறும் பற்பலவஞ்சவடிவங்களோடு நம்மிடத்து வந்தவுங்கள் வீரர்களையெல்லாம் கழுகுகட்கும் பருந்துகட்கும் இரையாக்கினேம். இன்னும்வரத்தக்கவர்கள் யாவரேனும் இருக்கின் அவர்களையுங்கொல்லக் காத்திருக்கின்றேம். அறிவென்பது என்னத்தனையுமில்லாத நராந்தகனிடத்தும் தேவாந்தகனிடத்தும் நீங்கள்சென்று இதுகாறு முடிந்ததையும் இனிமுடியப்போகின்றதையுஞ் சொல்லுவீரேல், இதுகாறுமுடிந்தமையை உலக முழுவதுஞ்சொல்லும். இனிமுடிக்கப் போகின்றமையை யாமேசொல்லக் கேண்மின்கள் அவர்க ளிப்போது அனுபவிக்கும் பெருஞ் செல்வத்தினையும் வ

லிய பிராணனையும் இன்னுஞ் சிலகா லனுபவிக்கவேண்டுவார்களாயின் தாங்கள் செலுத்திவருகின்ற கொடுங்கோலைக் கடந்து, உண்மையாகிய வேதநெறிகளை வளர்த்து தேவர்கட்கெல்லாம் அவ்வவர்களுடைய பதவிகளை முன்போல அனுபவிக்கக் கொடுத்து, நீயினியிருவின்றேமுடிக்குதென்று உலகமெலாஞ் சொல்லிச் சந்தோஷமடையும்படியாகச் செங்கோலை நடாத்திவரச்சொன்மின்கள், அச்செல்வத்தினையும் பிராணனையும் போக்கடித்துக்கொள்ளவேண்டுவார்களாயின், இத்தினமே தங்கள்சேனைகளோடு யுத்தத்திற்கு வரச்சொல்லுங்கள் இதைச் சொல்லும் நிமித்தமே உங்களைக் கொல்லாது கிருபையோடு விடுத்தனம். நீங்கள் விரைவிற்சென்று அவர்கட்கு அறிவியுங்களென்று விடைகொடுத்தனுப்பினன்.

உடனே அத்தூதர்களியாவரும், உய்ந்தோமுய்ந்தோமென்றோடி நராந்தகனிடத்திற் சென்று பணிந்தெழுந்து ஆண்டவனே! தேவரீருடைய கட்டளையின்படியேசென்ற நமது வீரர்களெல்லாம் அம்மகோற்கடரை முன்னின்று வெல்லுவது மிகவும் அரிதென்று நினைத்து தனித்தனி வெவ்வேறு மாயாரூபங்களைக்கொண்டுசென்று சகலரும் அக்காசிப்பட்டணத்தில் அச்சிறுவனொருவனு லிறந்தார்கள். அவர்களுட் சிலர்கள் இறந்த விவரங்களையெல்லாங் கேள்வியுற்றவண்ணஞ் சொல்லுகின்றோம்; சுந்தரனென்பவனும், விகண்டனென்பவனும், அப்பட்டணத்துப் புரோகிதர்களாகிப் போயிறந்தார்கள். பதங்கனும், வீதுவனும் காற்றாகச்சென் றிறந்தார்கள். கூடன் கிளியாகி யிறந்தனன். காமனும் குரோதனும் கழுதையாகிச் சென்றிறந்தார்கள். குண்டன் யானைவடிவங்கொண்டிறந்தனன். ரம்பை அச்சிறுவனுக்குத் தனது கையினால் விஷத்தயிலமிட்டிறந்தனள். சுவாலாமுகன் நெருப்பாகி யிறந்தனன். விதாரணன் வாயுவாகியிறந்தனன். வியாக்கிரமுகன் ஓடினவர்களையெல்லாம் விழுங்கியிறந்தனன். மேகன் சோதிடனாகி யிறந்தனன். கூபனுங் கந்தரனுந் தினையுந் துவளையுமாகி யிறந்தார்கள். அந்தகன் துங்கன் அம்பட்டன் என்னும் இவர்கள் இருள் மலை மழையுமாகி யிறந்தனர். பிரமரை அதிதியாகி யிறந்தனள். இவ்வாறு இங்கிருந்துசென்ற மேலான பராக்கிரமத்தினையுடைய நமது வீரர்களெல்லா மிறந்தார்கள். யாங்களும் அச்சிறுவனைப் பிடிக்கச்சேர்ந்தோம் அப்போதச்சிறுவன் எங்கட்குச்செய்ய நேர்ந்த கோலாகலத்திற்கஞ்சி உடனே கீழ்ப்பணிந்தோம். அதற்கவன் எங்களை மாத்திரம் விடுத்து உங்களரசர்கட்குச் செல்வமும் உயிரும் வேண்டுமாகில் அவர்கள் இதுமுதலேனும் செங்கோல்செலுத்துக. இல்லையெனில் இத்தினமே சகல சேனைகளோடும் போர்க்களத்திற்கு வருகவென்றுசொல்லி எங்களைவிடுத்தனன். அச்சிறுவனோவெனில், ஓராயுதமேனுமில்லாதவன். அருகிற் றனக்கொருத் துணையுமில்லாதவன். சிறிதுஞ் சேனையில்லாதவன். பலசிறுவர்களோடு நிலையுமிடத்திற்சென்று விளையாடுந் தகுதியுடையவன். இத்தன்மைத்தானவன் தன்னை யெதிர்க்கின்ற சத்துருக்களை இமைப்போதி லழிக்கின்றான். அவ்வாறழிப்பதிலும் தனக்கோரிளைப்புமில்லாதவனா யிருக்கின்றனன். ஓ சகல புவனேஸ்

வரா! அச்சிறுவனுடைய பராக்கிரமத்தையும் அவன் இதுகாறும் நம்மவரைச் செய்த கொடுமைகளையும் யாமறிந்தவளவிலுங் கேட்டவளவிலுஞ்சொன்னோம் இனித் தேவரீர் சித்த மடியேங்கள் பாக்கியமென்று சொன்னார்கள்.

அவையனைத்தையும் நராந்தகன் கேட்டுத் தனக்கு அருந்துணையாகவிருந்த சுற்றத்தினரும் அசுரர்களும் போய், ஒரு சிறுவனுக்குப் பின்னிட்டிறந்து போனார்களே என்னும் மனவருத்தமானது ஒருபக்கத்திலிருக்க, மானமுங் கோபமும் மேற்பட்டவனாகி, உடனே தனக்கு உரிமைபாராட்டவல்ல மந்திரிகளை யழைத்து இனி நாமே காசிப்பட்டணத்திற்சென்று அச்சிறுவனை யழிக்கவேண்டுமாதலால், இக்கிமிஷத்தில் நமது சேனைகட்கெல்லாம் யுத்தத்திற்காயத்தமாயிருக்கும்படி கட்டளைசெய்வீர்களென்று ஆக்கியாபித்தான். அம்மாத்திரத்தில் அவ்வமைச்சர்களும் புத்தியென்று தொழுது வெளிவந்து சில காரியக்காரர்களை யழைத்து நமது நால்வகைச் சேனைகளும் இமைப்போதில் யுத்தத்தோடு இங்ஙனம் வந்துசேர்வதாக வள்ளுவனைக்கொண்டு எங்கும் முரசறைவிக்கக்கடவீர்களென்று கட்டளையிட்டனர். அக்கட்டளையை யவர்கள் வள்ளுவனுக் கறிவிக்க, அவனும் பேரிகையோடு ஒரானையின்மீதேறி நராந்தகனுடைய சேனைகள் எவ்விடங்களி லிருக்கின்றனவோ அவ்வவ்விடங்களிற் சென்று முறசறைந்தனன். அம்முரசின்றோசையைக்கேட்ட சகலசேனைகளும் உடனே சர்வாயுதபாணியராக நராந்தகனுடைய அரண்மனை வாய்தலில் வந்து நெருங்கினார்கள்.

இப்பால் நராந்தகனானவன், தனது கொலுச்சபையைக் கடந்து ஆயுதசாலையிற் புகுந்து வயிரகவசத்தை யெடுத்து விசாலமாகிய மார்பிலணிந்து, திவ்வியபாணங்கள் நிறைந்திருக்கின்ற அம்புப்பெய்தூணியை முதுகிலிறுக்கி, விரல்கடோறுங் கோதைகளைமாட்டிப் பர்வதாதிறதியாக விளங்குந் தனுசைக் கரத்திற்கொண்டு, தும்பைமாலையைக் கிரீடத்திற் சுற்றித் தண்டாயுதம் வேல் சக்கிரம் முதலிய ஆயுதங்களை யெடுத்துக்கொண்டு வெளிவந்து, அளவற்ற திவ்விய அசுவங்களைப் பூட்டப்பட்டு நவரத்தினமயமாய்ச் சொலித்திருக்கின்ற தனது சொர்ண இரதத்தின்மீது சிங்காசனத்தைப்போலத் தாவியேறி, யாவரும் இந்திரனோ? இவனென்று சந்தேகங்கொள்ளும்படிக்குக் கெம்பீரமாய் வீற்றிருந்தனன். அத்தருணத்தில் தனக்குத் தோழராய்ப் பிராணபதமாக விருக்கின்ற சர்வாயுதபாணியராய்த் தங்கள்தங்கள் வாகனங்கள்மீது ஏறினர். வீராதிவீராகவிருக்கின்ற அளவற்ற சேனைத்தலைவர்கள், பல புரவிகளைப் பூண்டிருக்கின்ற தேர்களிலேறி வில் வாள் வேல் சக்கரம் பிண்டிபாலம் முசலங் கப்பணமாதிய ஆயுதங்களையுங் கொடிய பாணவிதங்களையும் தாங்கினவர்களாய்த் தமது காவலிலிருக்கின்ற சகல சேனைகளையுங் கூட்டிக்கொண்டு சத்தசாகரங்களும்பெருகியதைப்போல ஆரவாரித்து, அத்திரசத்திரங்களை ஏராளமாகத்தாங்கி நமக்குப் போர்கிடைத்ததென்கிற ஜயவுற்சாகத்துடன் வந்து மகாபாதகனாகிய நராந்தகனுடைய இரதத்தைப் புடைசூழ்ந்து நெருங்கினர்.

இப்பால் தங்களரசன் குறிப்பையறிந்த சேனாபதிகளும் தத்தம்படைகளையாண்ட அசுரர் பலவெள்ளக்கணக்கில் கடல்போல்விளங்குஞ் சேனைகளும் அரண்மனைவாய்தலினின்றும் வெளிக்கொண்டு இரணபேரி ஜயபேரி வெற்றிச் சங்கம்-சின்னம்-கோடு-ஆகுளி-காளம்-பறை-குடை-முழா-சல்லரி-மல்லரி முதலிய பொற்பறைகள் கணகணவென்று முழங்கவும், துசபடங்கள் வானத்தை மூடிப் படபடவென்றசையவும், பூரணச் சந்திரனைப்போல முத்துக்களினாற் சோடித்த கணக்கிறந்த தவளக்குடைகள் வான்மறுக்குங் கவிக்கவும், மந்திரகிரியைப்போல விளங்குந்தேர்கள் கெற்கரத்தொனிகளைச் செய்தோடவும், மதயானைகள் வீறிட்டுப் பகைவரைச்சீறிப் பிரசண்டமாருதத்தைப்போல வேகமாய் நடக்கவும், புரவிக்கூட்டங்களானவை நான்குபாதங்களினும், பூண்டிருக்கின்ற பொன்வெண்டயங்கள் கலிக்க, அலைகளுக்குச் சமானமாகத்தாவி, வானவெல்லையினுந் திசைகளினுஞ் சமுத்திரங்களினும்பாய்ந்து, இடிமுழக்கினைப் போலக் கனைத்தோடவும், பிறையையொத்த கோரதந்தங்கள் விளங்க, அரக்கினுஞ் சிவந்த உருண்டகண்களையுருத்தித், தீப்பொறிகள் சிதறப்பார்த்துப், பூமிவெடிக்கும்படியாகக் கால்களைப்பெயர்த்துவைத்து, நடக்கும் ஆலகாலத்தையொத்த அவுணப்படைகள் வீராவேசங்களுடன் சிங்கநாதமும் அட்டகாசங்களைச்செய்து ஆர்ப்பரிக்கவும், சத்தசாகரங்களும் ஏககாலத்தில் ஒன்றாய்க்கூடிமுத்தியடைய வருவதுபோல, அளவற்ற காடுகளையும் மலைகளையுங்கடந்து காசிப்பட்டணத்தை வந்து வளைத்துக்கொண்டு, அப்பட்டணத்து நாற்புறத்துஞ்சூழ்ந்த ஊர்களையெல்லாம் நெருப்பிட்டுக் கொளுத்தியும் கொள்ளையிட்டும் சகலவுயிர்களையுங் கொன்றும் தங்கள்தங்கள் வயிறுநிரம்பத்தின்றும் திரிந்துகொண்டிருந்தார்கள்.

அச்சம்பவத்தையறிந்த சிலதூதர்கள் காசிராசனிடத்திலோடி அறிவித்தார்கள். அதைக்கேட்ட மாத்திரத்தில் அரசனுக்கு அதிககோபமுண்டாகி உடனே அமைச்சர்களைவரவழைத்து நமதுபட்டணத்தின்மீது நராந்தகன்படையெடுத்துவந்தான். நீங்கள்விரைவில் நமதுநால்வகைச்சேனைகளையும் போர்க்கோலத்தோடு வெளிப்படும்படி உத்தரவுசெய்யக் கடவீர்களென்று ஆக்கியாபித்தனன். அதற்கவ்வமைச்சர்கள் அரசனைப்பணிந்தெழுந்து, ஆண்டவனே! பிரகற்பதி தேவருடைய புத்திக்கு மேலான புத்தியையுடைய தேவரீருக்கு மற்றையர் ஆலோசனையைச் சொல்லப்புகுவது அறிவின்மையாயினும், ஒவ்வோர்சமயங்களில் அடியேங்களால் சொல்லப்படுவனவற்றைத் தக்கபடி ஆராய்ந்து சொல்லவேண்டுமென்று நீதிநூல்களிலுள்ளபடியால், அவ்வாறே அடியேங்கள் மனத்திலுண்டாகிய யோசனைகள் சிலவுள. அவைகட்குத் தேவரீர் செவிகொடுத்தருளல் வேண்டும். படையெடுத்து வந்த வேற்றரசர் மெலியர்களாயின் அவர்களையெதிர்த்து யுத்தஞ்செய்தழிக்கவேண்டும். ஒத்த வலியினராயின் அவர்களைக்கூட்டிவந்த துணைகளைப்பேதித்துத் தன்வயப்படுத்திக்கொண்டு பின்னர்வெல்லது மாற்றலினுலவர்களை வெல்லல்வேண்டும். இவ்

விரண்டுமின்றி வலியர்களாயின் அவர்கட்குக் கன்னி-வஸ்திரம் – பொன்முதலியவைகளைக் குறைவறக்கொடுத்தும், உவகைபெற விருந்தூட்டியும், மனமிரங்கும்படித் துதிசெய்தும், சிநேகஞ்செய்து கொள்ளல்வேண்டும். இவையனைத்தும் அரசர்க்குணர்த்தி யிருக்கின்ற நீதிநூல்களினது துணிபு. நாமோ எளியர்கள்; நமக்குப் பகையாகிவந்த நராந்தகனோ மிகவும் வலியன். அவனுடைய சேனைகளெல்லாங் கடல்போலப் பிரகாசிக்கின்றன. நமது சேனைகள் ஓர்சாலிற்றங்கிய நீர்போலிருக்கின்றன. அவனுடைய பராக்கிரமம் சூரியகிரணம்போலச் சகலபுவனங்களினுஞ் சொலிக்கின்றது. நமது பராக்கிரமமோ மின்மினிப் பூச்சியினொளியைப்போல மின்னுகின்றது. அடியேங்கள் சொல்லிய இவ்வாலோசனைகளெல்லாம் அடிகளுடைய திருவுள்ளத்திலுமுண்டு. ஆதலால் மேலான சேனைகளோடும் பராக்கிரமத்தோடும்வந்த அக்கொடியவனாகிய நராந்தகன் நம்மைத் துன்பப்படுத்தாதவிதமாக நாமவனுடைய பாதத்தைச் சரணடைவதே முடிவு. இம்முடிவைத் தீர்க்காலோசனைசெய்து விரைவில் நடந்துகொள்ளவேண்டுவதே நம்போலியர்க்கேற்ற தருமமென்று சொன்னார்கள். இவையனைத்தையும் அருகிற் கேட்டுக்கொண்டிருந்த புரோகிதர் முதலாயினோரும், இப்போது அமைச்சர்களாற் கூறப்பட்ட கருமமே தற்காலத்தில் முடித்துக்கொள்ளவேண்டிய கருமமென்று சொல்லினர். பின்னர் சகலபுவன கர்த்தாவாகிய மகோற்கடமூர்த்தியினுடைய திருவடித்தாமரைகளில்மடைதிறந்தாலொத்த பத்தியை வைத்திருக்கின்ற காசிமகாராசன் புன்னகைசெய்து, மிகநற்ற ஆலோசனைகளை யுணர்ந்தவல்ல மனுநீதிகளில் குறைவற்ற கேள்விகளையுடைய அமைச்சர்களே! நாம் கொடியபாதகனாகிய நராந்தகனுக்கு எளியராமென்பது திண்ணமே. ஆயினும், அநாதிவத்துவாய் ஆதிமத்தியாந்தரகிதராய் சகலபிராணிகளிடத்துங் காரணபூதமாகப் பொருந்தி நடப்பித்துக் களித்திருக்கு மேலவராய் ஒப்பாரு மிக்காருமில்லாத மகோற்கட மூர்த்தியே நம்மையெல்லாம் பாதுகாத் திரட்சிக்கும்பொருட்டு இங்ஙனம் எழுந்தருளி யிருக்கின்றனர். அத்தேவனும் அப்பாதகனுக்கு எளியரோ? இப்போது படையெடுத்து வந்த இவ்வந்தகனையும், இவன் சகோதரனாகிய மற்றோந்தகனையும் இமைப்போதில் சங்கரித்து எல்லாவெற்றிகளும் நம்மைச் சேரும்படியாக ஒன்றான பரமேஸ்வரனே நம்மிடத்தி லெழுந்தருளியிருக்க, நமக்கினி யென்னகுறை நேரவிருக்கின்றது? அன்பர்களே! இனிநீங்கள் யாதொன்றிற்கு மஞ்சாது நமது பராக்கிரமமெல்லாம் பாழாகாதபடி விரைவில் சகலசேனைகளோடும் யுத்தத்திற் சாயத்தமாகக் கடவீர்களென்று ஆக்கியாபித்தனன். அதன்மீது அமைச்சர்களும் மற்றபரிசனங்களும் அரசனைப் பணிந்தெழுந்து ஆண்டவனே! மேலான கடவுள் இங்ஙனமெழுந்தருளி யிருப்பதைச் சிறிதும் யோசியாது அடியேங்களுடைய புத்திமயக்கத்தால் பற்பலகூறினம்; அக்குற்றங்களைத் தேவரீர்பொறுத்தருளல் வேண்டும். இதோ நமது நால்வகைச் சேனைகளையும், ஆயுத்தப்படுத்தினோமென்று சொல்லி, அந்தச்சேனைக ளிருக்குமிடங்கடோறும் வள்ளுவ

னைக்கொண்டு முரசறைவித்தார்கள். அம்முரசின் ஓசையைக்கேட்ட சேனைகளெல்லாம் போர்க்கோலத்தோடும் வெளிக்கொண்டுவந்து அரசனுடையஅரண்மனை தலைவாயலை நெருங்கினார்கள்.

அதற்குமேல் அரசன், மூலகாரணக்கடவுளாகிய கணேசபூசைசெய்து, போசனாதிகளைமுடித்துக்கொண்டு, ஆயுதசாலையுள் நுழைந்து பொன்மலையாகிய மகமேருவின்மீது சந்திரனதுசோடசகலைகள்பரவிக் காட்டுவதுபோல் வயிரக் கலசத்தைச் சொர்ணவடிவைப்பெற்ற மார்பினிடத்திருக்கித் திவ்வியபாணங்கள் நிறைந்திருக்கின்ற அம்புபெய்தூணியை முதுகிற்கட்டி இரத்தினமயமாகிய புட்டில்களை விரல்கடோறுமணிந்து பகைவருயிரை யுண்ணும் யமனை யொத்த பாரித்தவில்லைத் தொழுதெடுத்து இடக்கரத்திற்பற்றிப் பற்பலதேவாஸ்திரங்களை வலக்கரத்திற்றாங்கி நவரத்தினமயமாகச் சோதித்திருக்கின்ற கிரீடத்தின்மீது தாமரைமாலையைச்சூடி தண்டாயுதம்-வேல்-சக்கரம்-முசலம்-பாசம் முதலிய ஆயுதங்களையெடுத்துக் குகையிலிருந்துபுறப்பட்ட இராசகண்டீரவத்தைப்போல வெளிவந்து சத்தசாகரங்களும் பெருக்கெடுத்ததுபோல அதிகவுற்சாகங்களுடன் ஆர்ப்பரித்திருக்கின்ற நால்வகைச் சேனைகளையு மழைத்துக்கொண்டு அரமனைவாய்தலில் வந்திருக்கின்ற சேனாதிபதிகளையெல்லாங் கண்டு, அவ்வவர்கட்கு அளவற்ற கிராமங்கள்-யானைகள்-குதிரைகள்-ஆயுதங்கள்-ஆபரணங்கள்முதலிய வெகுமதிகளைச்செய்து, பொன்வண்டில்-அச்சு-மச்சு-குத்துக்கால்-கொடுங்கை-இடக்கியம்-கொடை முதலிய சிங்காரங்களைக் கொண்டு நவரத்தினமயமாகப் பிரகாசித்திருக்குந் தேரின்மீதாரோகணித்து, விருதுக்கொடிகள்-மகரதோரணங்கள்-துசபடங்கள்-வெண்சாமரைகள்-வெண் பட்டுக்குடைகள்-ஆலவட்டங்கள்-மயிற் பிஞ்சகள்முதலிய சின்னங்களானவை நாற்புறத்தும்விளங்க, தோற்கருவி-துளைக்கருவி - பிடற்றுக்கருவி - கஞ்சக்கருவி-நரம்புக்கருவியென்னும் ஐவகைக்கருவிகளில் பதினெண்வாத்தியங்கள் அண்டங்களதிரமுழங்க, அளவற்றபெரியோர்களும் முனிவர்களும் மங்கலவாழ்த்து சொல்லும்படியாக அரமனைவாயிலைக் கடந்து தனதுபகைவர் வடவையைப்போலச்சீறி யெதிர்பார்த்திருக்கும் இரணகளவெல்லையைச் சேர்ந்து, தனது இட்டதெய்வத்தினை மனதிற்றியானித்து, மதம்பொழிகின்ற யானைகட்குச் சிங்கமானது தனதுவரவைக் காட்டுமாறு கற்சனைபுரிவதுபோலச் சத்துருக்களடங்கும்படியாக வெற்றிச்சங்கினை முழக்கினன். அம்முழக்கினைக் கேட்ட நராந்தகனுந்தனது இட்டதெய்வத்தினைத் தியானித்துவெற்றிச் சங்கினைமுழக்கினன்.

பின்னர் அரசன்தம்பிரான் சேனைகளும், அவுணர் தம்பிரான்சேனைகளும் அதிகவேகத்தோடு ஒன்றோடொன்று நெருங்கி இரதவீரர்களோடு இரதவீரர்களும், யானை வீரர்களோடு யானைவீரர்களுங், குதிரை வீரர்களோடு குதிரைவீரர்களும், பதாதிவீரர்களோடு பதாதிவீரர்களுங், கைகலந்தெதிர்த்து

ஈதுதங்களினம் ஈதுபிறரினமென்று தெரிந்து கொள்ளுவதற் குவமையாக ஆகாயமெங்குந் தூளிபடலங்கள்போர்ப்ப, அத்தூளிபடலங்களை உதிரவெள்ளங்கள்மாய்ப்ப, இவ்விதஆடம்பரங்களோடு இரண்டினங்களுஞ் சமர்புரியுங் காலத்தில், இரதமற்றவர்கள் யானைமீதேறியும், யானையற்றவர்கள் குதிரைமீதேறியும், குதிரையற்றவர்கள் நிலத்தின்மீதிருந்தும், நிலத்திலிருந்தவர்கள் வேறுகதியின்றிமாய்ந்தும், வாளற்றவர்கள் வாளிகளைத்தொடுத்தும், வாளியற்றவர்கள் வேல்களைவிடுத்தும், வேலற்றவர்கள் சூலத்தினைச் செலுத்தியும், சூலமற்றவர்கள் சக்கரத்தைத்தூண்டியும், சக்கரமற்றவர்கள் மழுவையேந்தியும், மழுவற்றவர்கள் எழுவைக்கடாவியும், எழுவற்றவர்கள் கதையையேந்தியும், கதையற்றவர்கள் முசலத்தினையடித்தும், முசலமற்றவர்கள் விசனங்களிலிருந்தும், இவ்வாறு யாவரும் அளவற்றபடைகளை மாறிமாறியெடுத்து யுத்தஞ்செய்தபோது இருவகைச்சேனைகளினுங் கணக்கற்றபேர்மண்டைதிறந்தும், மூளைகள் சிதறியும், விழிதெறித்தும், வாய்கள்பிளந்தும், பற்களுதிர்ந்தும், கழுத்துகளொடிந்தும், புயங்கள்சரிந்தும், கரங்கள்முறிந்தும், வயிறுகிழிந்தும், குடல்களிரைந்தும், தொடைகள்தகர்ந்தும், கால்களொடிந்தும்போயினர். அப்போதவ்வெல்லையெங்கும் பற்பலகோடி கவந்தங்கள் கூத்தாடின; பூதபசாசங்கள் காளிக்கூட்டங்கள் அங்கிருக்கின்ற நிணமாமிசங்களையெல்லாந் தெவிட்டவுண்டு அரசர்பெருமானுடைய வீரத்தினையும் அவுணர்பெருமானுடைய வீரத்தினையும்புகழ்ந்து பாடிக்கொண்டு திரிந்தன; கழுகு-பருந்து-காக்கை முதலியவைகள் நிணங்களையெல்லாந் திருத்தியாகப்புசித்து வானவெல்லையிற் பந்தலிட்டுலாவின; நாய்நரிமுதலியவைகள் பிணங்களைப்பிடுங்கித்தின்று ஊளையிட்டுத் திரிந்தன; அளவற்றவீரர்கள் தங்கள்முடிசிதறிக் கவந்தங்களாகியும்பற்பலவாட் போர்களை விளையாடிச் சொர்க்கம்புகுந்து அங்குஅரம்பையருடைய நடனங்களைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். இவ்விதமாக இருவகைச்சேனைகளினுமுள்ள இரதகஜதுரகபதாதிகள் அளவற்றன மாண்டுந், காசிராசனுடைய அமைச்சர்களுஞ் சேனைத்தலைவர்களும் எவ்வளவேனுமனத்தின்கணச்சமில்லாமல் மிக்கபராக்கிரமத்தோடு அவுணவீரர்களையெல்லாம் இடைவிடாது அதஞ்செய்துகொண்டிருந்தனர். அதனால் அவுணசேனைகள் மிகுதியும் வலியுள்ளனவாயிருந்தும் தயிரியமும் பராக்கிரமமுங் குறைபட்டவர்களாகிக் காசிராசனுடைய சேனைகட்கெதிர்நிற்கமாட்டாது பின்னிட்டோடத் தலைப்பட்டார்கள்.

இப்பால் அதனைநராந்தகன்கண்டு, ஆ ஆ! நமதுசேனைகளுடைய பராக்கிரமமிகநன்று மிகநன்றுயெனக் கோபாக்கைகொண்டு, ஓ அறிவற்றவர்களே! அற்பசேனைகள்செய்யும் போரினுக்கஞ்சி ஏனோடுகின்றீர்கள், நின்மின்கள் நின்மின்களென்றுகையமர்த்திப் பிரளயத்திற்கு நிகரான அளவற்ற ஆயுதங்களை நாற்புரத்தும் வீசிக்கொண்டு அதிகவீராவேசத்துடன் ஓடிவந்து தானேயுத்தஞ் செய்யநேர்ந்தனன். அதனைப் பின்னணியிலிருந்த காசிராசனும் அமைச்சர்களும்பார்த்து நெரேலென்று தங்கள்சேனைகளைமுன்னணியிலேகொண்டுவந்து

திறத்தி அவுணராசன்விடுகின்ற படைகட்கெல்லாம் பிரதியாக வேறுவேறு படைகளைவிடுத்து யுத்தஞ்செய்தார்கள். இவ்வாறுகாசிராசனும், நராந்தகனுங் காலாந்தகரைப்போலச்சீறி ஒருவரையொருவர் வெல்லவேண்டுமென்றுங்கருத்தினால் தமதுவிற்களில் அளவற்ற திவ்வியபாணங்களை ஒருமுனையிற்பூட்டிக் காட்டினிடத்தில் கல்மழை பொழிவதற் கொப்பாக இரதகஜதுரகபதாதிகளின் பெருக்கின்மீது பிரயோகித்தனர்; அம்மாத்திரத்தில் இருவருடைய பாணங்களும் ஒன்றோடொன் றுராய்ந்து நாற்புரங்களினுந் தீக்களை யிறைத்து அதிகவேகத்துடன் ஆலகால விடத்தினைப்போலச் சீறிச்செழித்தோங்கித் தழைத்திருக்கின்ற தோப்புக்களில் சூறைக்காற்று புகுந்தாற் போல இருவகைச்சேனைகளையும் வாட்டிவருகின்றபோது மேருகிரியைப் போலப் பாரித்திருக்கின்ற தேரணிகளெல்லாஞ் சிதைந்து அச்சுமச்சு குத்துக்கால் கொடிக்கை முதலிய உறுப்புகள் பின்னப்பட்டிறைந்தன, தமது கர்ச்சனையினால் திசையானைகளையுங் கலங்கச்செய்யவல்ல யானைப்பந்திகள் முழுவதுங் கலங்கி மத்தகந்துதிக்கை கோடுமுதலிய அவயவங்கள்முறிந்தும் அலைகளைப் போலத் தாவிப்பாயவல்ல புரவிக்கூட்டங்களெல்லா மயங்கிவெண்டயங்கள் கவிக்குங் கால்களும் முகவணிகளுஞ் சிதைந்தும், ஜயவுற்சாகத்தோடும் வீர பராக்கிரமத்தோடும் போராடவல்ல பதாதிகளனைத்தும் நடுங்கிச் சிரம் கரம்-உரம்-கால்-தொடை அங்கங்கள் கண்டதுண்டப்பட்டு மாண்டுபோயின. இவ்விதமாக அவ்விருதிறத்தாருடைய சதுரங்கசேனைகளும் சின்னாபின்னப்பட்டழிகின்றபோது மனிதர்கட்கெல்லாம் யமனென்று சொல்லத்தக்க பெயரினைப் படைத்த அவுணராசனானவன், காசிராசனுடையசேனைகளின்நடுவேதாழிலாட்டோடுச் சுள்ளென்று பிரவேசித்து அவ்வரசனை அவன் புத்திரர்களோடும் அமைச்சர்களோடும் கைப்பிடியாகப் பிடித்துச் சிறையிலிட்டனன். உடனே அவுணபாதகர்கள் ஜயபேரியறைந்தனர். அவ்வோசையை வேறுவேறாய் நின்று யுத்தஞ்செய்கின்ற அவுணராசனுடைய சேனைத்தலைவர்களெல்லாம் கேட்டு நேரேவென்று அவனிடத்தில் வந்து பணிந்தெழுந்தனர். அவர்களை நராந்தகன்பார்த்து ஓ சத்ருவீரர்களே! நாம் வந்தகாரியம் பலித்தது. காசிராசனைச் செயித்தனம். அவன் எமக்குத் தோல்வியடைந்தபோதே அவன்கொண்டிருக்கின்ற பிராமணச்சிறுவனுந் தோல்வியடைந்தவனேயாம். எக்காலத்திலும் அழிவுறாத காசிநகரமும் நமதுவசமாயிற்றென்று சந்தோஷவார்த்தைகளைப்பேசித் தான் சிறையிட்ட அரசன்முதலியோரை அழைத்துக்கொண்டு காசிநகரிற் பிரவேசிப்பதாயினன்.

இச்சம்பவங்களையெல்லாம் அறிந்த சிலதூதர்கள் அவ்வரசன் பத்தினியாகிய அம்பையிடத்தில் விரைந்தோடி அறிவித்தார்கள். அதையவள் கேட்டவுடன் வேடன் செலுத்திய பாணம் பட்டு வாடும் மானைப்போலக் கதறிக் கூந்தலவிழ்த்து நிலத்தில் புரளச் சரீரம் நடுநடுங்கித் துக்கவெப்பத்தினால் விழிகளிலுதிரமான நீர்பெருகித்தோடக் கோடுகோடெனப் புலம்பித் தாமரையிற்பட்ட

சலத்தையொப்ப மனம் நிலைபெறாமல் கலங்கினவளாகி வலையிற்பட்ட மஞ்ஞையை நிகர்த்து வாடிப் பரதவித்துத் திகைப்பட்டு, ஐயையோ! நமது காவலருடைய பராக்கிரமும் புத்திரர்களுடைய ஆண்மையும் அமைச்சருடைய சாமார்த்தியமும், சேனைத்தலைவர்களுடைய வீரமும் ஒன்றுமில்லாமற்போய் இவ்விதவாபத்தும் நேர்ந்ததோ? என்னுடைக் கணவனையும் புத்திரர்களையும் உரிமையிற்சிறந்த ஏனைய துணைவர்களையும் எப்போது இங்கு வந்துகாணப்போகின்றேன்? தெய்வமேயென்றுபுலம்பி தீயிற்பட்ட புகையைப்போலப் பதைபதைத்து வாடுவள், நாற்றிசைகளிலும் விழிகளைச் சுற்றிப்பார்ப்பள், கரங்களைப் பிசைந்துகொண்டு இனி யென்னசெய்வதென்று இயங்குவள், நேர்ந்த வாபத்தைப் பலமுறையென்னுவள், பின்னர் சிறிதுநேரம் அசைவற்றுச் சோர்ந்துகிடப்பள், கரங்களை விரித்து இவ்வளியாய மெங்கேனு முண்டோவென்று தன்னைத்தானூசாவுவள். எனது வாழ்வுக் கழிவுநேர்ந்ததோவென்று பலமுறை வாயிலறைந்துகொள்ளுவள், சரீரம்புழுங்கி வெயர்க்க வருந்துவள், சமுத்திரத்தினலைகளின் பெருக்கடங்கும்படிக்குப் பெருமூச்செறிவள், நிலத்தைக் கரங்களினால் துழாவி மோதுவள், இவ்விதங்களாக அரசன் பத்தினியாகிய அம்பையென்பவள் துக்கசாகரத்துள் மூழ்கி முன்னர் சகலரும் நடுங்கும்படியாகவந்த இடையூறுகளையெல்லாம் நீக்கியருளிய நமதுகர்த்தர் இங்கு இருக்கின்றாரன்றோ? அவர் இப்போதும் எழுந்தருளிப் போர்க்குச்செல்லுவாரெனில், அவ்வவுணர்களைச் சங்கரித்து நமதுயிரைக் காப்பாற்றுவரென்று சிறிதுமனந்தேறி உடனே தன்னிருக்கையை நீங்கிச்சென்று மகோற்கடமூர்த்தியைப் பணிந்தெழுந்தனள். அப்போதவள் வந்து பணிந்தெழுந்த குறிப்பினைத் தாமறிந்துகொண்டு அம்மணீ! நீ அஞ்சவேண்டாம். சத்துருவினுடைய சேனைகளையும் அவனுஞ்சேர்ந்த இடையூறுகளையும் இக்ஷணத்தில் நாசஞ்செய்கின்றோம். நீ பயப்படாமல் அந்தப்புரத்திற்குச் செல்லுகவென்று விடைகொடுத்து, அதிக கோபத்துடனே யுத்தத்திற்கு வெளிக்கொண்டனர்.

அப்போது சுவாமியினுடைய முகத்தினின்றுஞ் சிலவீரர்கள் ஐந்துமுகத்தோடும், சிலவீரர்கள் பத்துமுகத்தோடும், சில வீரர்கள் ஆறுமுகத்தோடும், சிலவீரர்கள் ஆயிரமுகத்தோடும், உண்டாகி அம்முகங்களுக் கிரட்டிப்பான கைகளையும் அக்கைகள்தோறும் படைகளையும், ஆயிரம்யோசனை யுயர்வையும் அவ்வுயர்வுக்கேற்ற மற்ற வுறுப்புக்களையும் பெற்றவர்களாகி எதிரில் நின்றார்கள். அவர்களுள் சுருண்டுநீண்டிருக்கின்றமுகமயிரும், சிவந்த அழற்பிழம்பை வீசவல்ல மூன்று கண்களும், நாற்புறத்தும் நிமிர்ந்தாடும்படியானசடைகளும், அடிவரையில்வீழ்ந்துதொங்குகின்ற தாடியும், சகல பராக்கிரமங்களினுஞ் சிறந்த குரூரனென்னும் பெயரினைப் படைத்த ஓர் வீராதிவீரன் மகோற்கடமூர்த்திக்கெதிர்நின்று பணிந்து சுவாமீ! அடியேனைப் பசியானது மிகவும் வாட்டுகின்றது. விரைவி லெனக்கு ஆகாரங்கொடுத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தான். அதற்கு சுவாமி நராந்தகனுடையசேனைகளைச்சுட்டி. வீரனே! இதோ

எதிரிலிருக்கின்ற சேனைகளையெல்லாம் வாய்மடுத்து, அச்சேனைகட்கு நடுவே யிருக்கின்ற காசிராசனையும் அவன் புத்திரர்களையும் அவன் அமைச்சர்களையும் கொண்டுவேந்துவிடுவாயாக. அப்பாலும் பசி யடங்காதாயின் இன்னு மளவற்ற ஆகாரங்களைக் கொடுக்கின்றோமென்று விடைகொடுத்தனுப்பினர். உடனேயக் குரூரன் புத்தியென்று சந்தோஷித்து வனத்தினைநோக்கிச்செல்லும் வடவைக் கனல்போல நராந்தகனுடைய சேனைக்கெதிரே சென்றான். ஏனைய வீரர்களும் அவனைப் புடைசூழ்ந்து நடந்தனர். இப்பால் குரூரனானவன் சகலரையும் பின்னே நிறுத்தி தானொருவன்மாத்திரம் நராந்தகனுடைய சேனைக்குள் புகுந்து சிலரை ஆரவாரத்தினும் கொன்றும், சிலரை உறுத்த பார்வையிற் கொன்றும், சிலரைக் கைகளால் இழுத்துக் கொன்றும், சிலரைக் கால்களினால் இடறிக் கொன்றும சிலரைப் பூமியி லறைந்து கொன்றும், சிலரைத் தேரின்மீதெறிந்து கொன்றும், சிலரை யானையின்மீது கடாவிக்கொன்றும், சிலரைக் குதிரைமீதறைந்துகொன்றும், கோபமடங்காதவனாய்த் தேர்களையெடுத்துத் தேர்கண்மீதறைந்தும், யானைகளையெடுத்து யானைகள்மீதறைந்தும், குதிரைகளையெடுத்துக் குதிரைகள்மீது சாடியும், பதாதிகளை யெடுத்துப் பதாதிகள்மீது மோதியும், இவ்வாறு நால்வகைச் சேனைகளையுஞ் சின்னாபின்னப்படக்கொன்று அளவற்ற வீரர்களை வாய்மடுத்தும் போதாது இன்னுஞ் சேனைகளுண்டோ வென்று நாற்றிசைகளினும் விழிகளைப்பரப்பிக் குரூரனானவன் அட்டகாசஞ் செய்துக் கொண்டிருந்தனன்.

அச்சம்பவத்தை நராந்தகன் கண்டமாத்திரத்தில் அதிக உக்கிரம் பிரவேசித்து விழிகளில் அனற்பொரிகள் சிதறி ஆலகாலத்தைப்போலச் சீறி அதிவேகத்துடன் அசுராந்தகனாகிய குரூரனெதிரில் தனதுதேரைநடாத்திவந்துஇதோ உன்னாண்மையையடக்கி யமலோகங் குடியேற்றுகின்றேனென்று சபதம்பேசி வில்லையெடுத்துவளைத்து ஊழிகாலத்து மழைபோல அளவற்ற பாணங்களை ஒரேதொடையிற்பூட்டிப் பிரயோகித்தான். அவன்விட்ட பாணங்களெல்லாம் வச்சிரப்பாறையின்மீது விழுந்த மழைத்துளியைப்போலக் குரூரன்மீதுபட்டு உடைந்துங் குறைந்துஞ் சிதைந்தும் பொடிந்தும் மடிந்தும் முறிந்தும்போயின. இவ்வாறு புகழற்றவர்களைப் பொன்னுலகு எவ்வாறு நீக்கிவிடுமோ அவ்வாறு தான்விட்ட பாணங்களெல்லாம் குரூரனிடத்திற்சென்று பயன்படாது போனதை நராந்தகன்கண்டு மனங்கலங்கி வருத்தினவனாய் உடனே தயிரியத்தைவிடாது காட்டழலைப்போலச்சீறி இந்நிமிஷத்தில் இவன் பிராணனை யமலோகங் குடியேற்றுகின்றேனென்றுகோபித்து ஓர்வேலாயுதத்தை யெடுத்துப் பிரயோகித்தனன்: அவ் வேலாயுதமானது திரிலோகங்களையும் ஏககாலத்தில் விழுங்குவதுபோல ஆக்கிரமித்துவர, அதனைக்குரூரன் தடுக்காது அருகேவரப் பார்த்து ஒருபெருமூச்சு விட்டனன். அம்மூச்சியினால் அவ்வேலாயுத மானது சண்டமாருதத்திற்பட்ட இலவம்பஞ்சினைப்போல சின்னாபின்னமாய்ப் பொடிந்து பறந்துபோயது. அதற்குமேல் நராந்தகன் மந்தரகிரியைப்போலப் பாரித்

திருக்கின்ற ஓர்கதாயுதத்தை அதிகவேகமாகப் பிரயோகித்தான்; உடனே அக்கதாயுதம் வெளிப்பட்டுப் பிரசண்டமாருதம்போல் இரணக்களமெங்கும் உலாவிக்கொண்டு குரூரனுடைய மார்புக்குநேராகவர அதை அவன்கண்டமாத்திரத்தில் சர்வசங்கார மூர்த்தியைப்போலப் பொங்கிவிழிகளிற் றீப்பொறிகள் குபீல்குபீலென்றுகொட்ட உருத்துத் தனது மார்பைக்காட்டினன். அப்போதக்கதாயுதமானது அவன்மார்பிற்பட்டு கல்லின்மீதறைந்த காளானைப்போல நுறுங்கிப்போயது. அப்பால் நராந்தகன் ஆலகாலம்போலப்பொங்கி ஓர் முசலாயுதத்தை யெடுத்து இடம் வலமாகச்சுற்றிக் குரூரனுடைய தோளுக்கிலக்காக ஏவினன். அப்போது குரூரனுக்கு அதிககோபம் பிரவேசித்துத் தனது புயங்களை நோக்கிவருகின்ற முசலத்தினைத் தனது கரத்தினாற்பற்றி மீட்டும் நராந்தகனுடைய இரதத்தின்மீதெறிந்தனன். அம்மாத்திரத்தில் நராந்தகனுடையஇரதமானது காதலனைச்சேர்ந்த பாவையர்க்குப் பசலையெவ்வாறு பறக்குமோ அவ்வாறு உடைந்து பொடிபட்டு நுறுங்கிப்போயது. அப்போது நராந்தகன், வேறொருதேறிலேறிச் சூலாயுதத்தை யெடுத்து விட்டனன். அதைக் குரூரன் தனது விரலினாற்றெறிக்க அது பூமியைக் கிழித்துக்கொண்டு பாதலலோகத்திற் சென்றது. அதற்குமேல் நராந்தகன் ஓர் சக்கராயுதத்தை யெடுத்துப் பிரயோகித்தான். அதைக் குரூரனானவன் பூமியில்விழாதபடி தனது கரத்தைநீட்டி ஓர்தொடியைப்போலத் தரித்துக்கொண்டனன். அப்பால் அவுணராசன் சிங்கத்துக்கொப்பாகச்சீறி இனிஇதனிலுஞ் சிறந்தவாயுத மொன்றுமில்லையென்று ஓர்மழுவாயுதத்தை யெடுத்துவிடுத்தனன். அதைப்பூதராசன் ஓர்நிமைப்போதில் தனது கரத்தாற்பற்றி அனிச்சம் பூவினைப்போலக் குழைத்தனன். இவ்வாறு தான் விடுக்கின்ற ஆயுதங்களெல்லாங் குரூரனால் சின்னாபின்னப்பட்டு நாசமடைந்ததை வஞ்சகங்கள் குடிகொண்டிருக்கும் மனத்தினையுடைய நராந்தகன் கண்டு இரவுத்திராகாரமாகக் கோபித்து, வடவாமுகாக்கினி சீறியெழுந்தது போலத் தனதுதேரைச் சூறாவளிக்காற்றினுங் கடுகிச்செலுத்திவந்து உரையிற் சொருகியிருந்த வாளாயுதத்தினாலவனைவெட்டினான். அவ்வாள் அக் குரூரனுடைய மொய்ம்பிற் பட்டமாத்திரத்தில் இரண்டு துண்டங்களாகி நிலத்தில் வீழ உடனே நராந்தகனானவன் மற்றோராயுதத்தினை யெடுக்க நேர்ந்தனன். அதற்குமுன் குரூரனானவன் அப்பாதகனுடையதேரைத் தனதுகாலினாலெட்டி யுதைக்க அவ்வுதை பட்டமாத்திரத்தில் அத்தேரானது நராந்தகனோடு நூறு காததூரம் உருண்டுசென்று அச்சுவேறு மச்சுவேறு கொடுங்கைவேறு குத்துக்கால் வேறாகப்போயது.

உடனே நராந்தகன் பூமியிற்குதித்து ஓர் சிறியசகட்டின்மீது வாயுவேகத்தினுமுந்திவந்து இனி இவனை தேவாஸ்திரங்களினால் வெல்லுவதே காரியமென்று தீர்மானித்து மகமேருவுக்கொப்பாகப் பாரித்திராகின்ற தனதுவில்லையெடுத்துநாட்டி வட்டாகாரமாகவளைத்து நாணேற்றித் திசைகளதிரக் குணத்தொனிசெய்து அதில் வருணாஸ்திரத்தை அபிமந்திரித்துத் தொடுத்து ஆக்ர

ணாந்தபரியந்த மிருத்துப் பிரயோகித்தனன். அதுவெளிப்பட்ட மாத்திரத்தில் அதிகவிரைவோடும் வானத்தெழுந்து அளவற்ற இடிகளையும் மின்னல்களையும் காட்டி அமோகமாகிய நீரைப்பெருக்கி எங்குஞ் சலப்பிரவாகத்தினையுண்டாக்கி ஆவ்வென்று சீறிக்கொண்டுவர, அதைக்குரூரன் தனதுகரத்தைநீட்டிப்பிடித்துத் தண்ணீரைப்போலத் தனது வாயிலிட்டு விழுங்கினன். பின்னர் பகைவன் வாயுவாஸ்திரத்தைப் பிரயோகித்தனன். அவ் வஸ்திரமானது பிரசண்டமாருதத்தைப் பெருக்கிப் பர்வதங்கள் விருட்சங்கள் முதலானவைகளைப் புரட்டிக் கொண்டுவர அதை வீராதிவீரனாகிய குரூரன் கரத்திலேந்தி சர்ப்பத்தைப்போலப் புசித்துவிட்டனன். பின்னர் நராந்தகன் அக்கினியாஸ்திரத்தை யெடுத்துப் பிரயோகித்தனன். அவ்வஸ்திரமானது உடனே அட்டதிசைகளினும் பரவிக் கொடிய வனலைவிரைத்துக் கோடையிடிகளைப்போல விரைந்து வடவைக்குச் சமதையாகச்சீறி மேவிட்டுவர அதன் உக்கிரத்தையும் மகத்துவத்தையுங் குரூரன்கண்டு விழிகளிற் சுவாலைவீசும்படியாகப் பிடித்து வாயிலிட்டுவிழுங்கினன். பின்னர் நராந்தகனானவன் பிரமாஸ்திரத்தை யெடுத்துப் பிரயோகித்தனன். அவ்வஸ்திரம் வெளிப்பட்டமாத்திரத்தில் அளவற்ற கொடியபாணவிதங்களைப் பெருக்கிக் கலகலவென்று நகைத்து விஷங்களைக்கக்கி இடியேற்றினைப்போல முழங்கிக்கொண்டுவந்து தன்னைச்சமீபிக்க அதனை ஓர்நொடிப்போதில் தனது வாயை ஆவென்று திறந்து விழுங்கினன். பின்பு இராட்சதப்பாதகன் மனம் பொறாமல் தான்முன்னாம் அரிய தவங்களைச்செய்து மகாவிஷ்ணுவினிடத்திற் பெற்றுவைத்திருந்த நாராயணாஸ்திரத்தை யெடுத்து மனப்பூர்வமாக தூபதீப நைவேத்தியம்முதலிய பூசைகளைபுரிந்து வணங்கிப்போற்றி ஓ படைகளுக்கரசே! அதோ நிற்கின்ற பூதகணத்தலைவனுடைய சிரத்தைக்கண்டித்து அவன் பிராணனையுங்கொண்டுவரக் கடவையென்றுவேண்டி அதிகவேகத்தோடும் பிரயோகித்துக் களித்துப் பார்த்திருந்தனன். அவ்வஸ்திரமானது வெளிப்பட்டவுடனே தகத்தகாயமாய்ப் பிரகாசித்து அளவிறந்துப் பலகோடி அஸ்திரங்களைப் படைத்துக் கோடையிடிகள்போலக் குமுறி எரிந்து புகைந்துகொண்டு எங்குந் தன்மயமாய் அதிகமகிமைகளைக் காட்டிச்சீறி இரைந்து பகைவனெங்கேயென்று தேடிச் சமீபத்தில்வந்தமாத்திரத்தில் அதையுங்குரூரனானவன் விநாயகமூர்த்தியினுடைய கடாட்சத்தினால் ஓர்கவளமாக விழுங்கினன். அவ்விசயத்தை நராந்தகன்கண்டு பிரமித்துமுன்னம் அளவற்றமகிமைகளையுடைய பலவாயுதங்களைவிடுத்தோம். அவைகளெல்லாம் அவன்மீது குறிதப்பாதுசென்றும் பயன் பெறாமல் நறுங்கிப்போயின. பின்னர் மகாதபோபலங்களினால் கிடைக்கப் பெற்றிருந்த ஒப்பற்றதேவாஸ்திரங்களை விடுத்தோம். அவைகளை யெல்லாம் பதிலுக்கு ஒன்றும்விடாமலே கனிந்தவாழைக்கனியைப்போல உட்கொண்டனன், இனியாம் செய்யவேண்டிய முயற்சிகளென்ன விருக்கின்றது இவன் செய்கைகளைப் பார்க்குமிடத்தில் மகா அற்புதமாகவிருக்கின்றன. ஆயினும் இவனுடையதிறத்தை இன்றுமறிவோமென்று ஆக்கிரமித்துக் கோடையிடி

லைப்போலக்குமுறி அடா பூதப்பயலே! நீயோஎன்னைவெல்லவல்லவன்; இதோ உனதுபிராணனைவாங்கி யமலோகங் குடியேற்றுகின்றேன் பாரென்று வசைமொழிகளைப்பேசித் தனக்குப்பிராணபதமாய் வைத்திருந்த யாவராலுந்தடை செய்தற்கரிய பாசுபதாஸ்திரத்தை யெடுத்துப் பிரயோகிக்க நேர்ந்தனன். அவ்வாறெடுத்துப் பிரயோகிப்பதன் முன்னங்குரூரனானவன், அவ்வசுரபாதகனைச் சகட்டினேறியெடுத்துச் செண்டைப்போல அதிவேகமாய்ச் சுழற்றி ஆகாயத்திலெறிந்து அவன்மீட்டும் பூமியில்விழுவதன்முன் அங்குசிறைக்கணகப்பட்டிருந்த காசிராசனையும், அவன்புத்திரரையும், அமைச்சர்களையும்அழைத்துக்கொண்டுசென்று அவர்களை மகோற்கடமூர்த்தியினுடைய சந்நிதானத்தின் முன்னர் விடுத்துப்பணிந்தனன். உடனே அரசன்முதலாயினோரும் பணிந்தார்கள். அப்போது மகோற்கடமூர்த்தியானவர் குரூரன்முதலாயினோர்க்கு அனுக்கிரகஞ்செய்து இனிநாமே அவுணராசனைச் சங்கரிக்கவேண்டுமெனத்திருவுளங்கொண்டனர். முன்னர் ஆகாயத்தில் எறியப்பட்ட சகடமானது நராந்தகனோடு சத்தலோகங்கள்வரையிற்சென்று அவ்விடத்தினின்றும் பூமியில்வீழ்ந்து நொறுங்கித்தூளாயது. பின்னர் நராந்தகன்சிறிதுநேரம் மூர்ச்சையாகிக்கிடந்து மீட்டுந்தெளிந்தெழுந்து, ஆ-ஆ-ஆ-ஆ! என்னகாரியஞ்செய்தோம். இதுபரியந்தம் மகோற்கடனை உருவத்தினாலும் வயதினாலும் சிறுவனென்றெண்ணி அவனுடையபெருமைகளைமதிக்காமல் மிகவும் இகழ்ச்சியல்லவோசெய்தனம்; அவன் நம்முன்னர் ஒருவனாய் வந்துநின்றான். பின்னர் அவன்தன்னுடைய முகத்தினின்று அளவற்றவீரர்களையுண்டாக்கினான். அவ்வீரர்களுள்ளும் ஒருவனே நம்முடன்வந்தெதிர்த்தான்; எதிர்த்த அவ்வொருவனும் ஓராயுதமேனுங்கையினுந் தொட்டவனல்லன்; தனது ஆரவாரிப்புமுதலிய வேதுக்களினாலேயே நமது கடல்போன்ற சேனைகளையெல்லாங் கலக்கியோட்டினான்; பர்வதங்களையும்பொடிபடுத்தவல்ல நமது ஆயுதங்களையெல்லாந் துகள்படுத்தினான்; அளவற்ற தவங்களினால் கிடைக்கப்பெற்றிருந்த தேவாஸ்திரங்களையெல்லாம் வெல்லக்கட்டியைப் போலப்பிடித்துவிழுங்கிவிட்டனன்; அவனுண்மையையென்னென்றுபேசப்படும். இதுபரியந்தம் அரிபிரமேந்திராதியர்களை சயமடைந்தநமது பராக்கிரமங்களை ஓர்கணப்போதில் பழித்துவிட்டனன். மகோற்கடனுடைய முகத்தினுதித்த அளவற்ற வீரர்களில் ஒருவனே இவ்வகைத்தானவனானால், ஏனைய வீரர்களுடைய திறங்களையாவராற் கணிக்கக்கூடும். இனிமகோற்கடனே சமரில் வந்து யுத்தஞ்செய்யநேர்ந்தால் யாமென்னபாடுபடோம். இனித்தேவர்களுங் கண்டஞ்சத்தக்க மாயவித்தைகளினால் யுத்தஞ்செய்து அச்சிறுவனை அதஞ்செய்யவேண்டுவதேயல்லது மற்றொருவிதத்தினாலவன் மாளத்தக்கவனன்றென்று நிர்மானித்து உடனே அளவற்ற மேகரூபங்களாய் உருக்கொண்டு மின்னல் இடிகளைப்பெருக்கி அண்டங்களதிரக்குமுறி யாவரும்பிரளயகாலம் நேர்ந்ததென்று பிரமிக்கும்படியாக யானைத்துதிக்கைபோல அமோகமாகிய வருஷதாரைகளைப் பொழிந்துநின்றனன்.

அதை மகோற்கடமூர்த்திகண்டு, இவ்வஞ்சகன் செயல் நன்றாயிருப்பதென்று உருத்துத்தமது வில்லில் அதிகமகிமைகளைப்பெற்றிருக்கின்ற நிட்சண்ணியமுள்ள சரங்களைத்தொடுத்து ஓ படைகளே! நீங்கள் பிரசண்டமாருத வடிவந்தினைத்தாங்கி வேகமாய்ப்பாய்ந்து நராந்தகன்கொண்டிருக்கின்ற மேகவுருவங்களை இமைப்போதில் மாற்றிவாக்கடவீர்களென்று ஆக்கியாபித்துப்பிரயோகித்தனர். அத்திவ்வியபாணங்கள் வெளிப்பட்ட மாத்திரத்தில் அதிக வேகங்கொண்டு கடையுகக்காற்றினுமேலிட்டு அண்டகடாகமதிர்ந்து குலகிரிகளுருண்டு மற்றப்புவனகோடிகள் அல்லோலகல்லோலப்பட்டுத் தயங்கும்படி ஆர்ப்பரித்துத்தாவி, விண்-மண்-திசா திசைகள் முதலிய விடங்களில்நிறைந்து உலகமெல்லா மிருளடையும்படி ஆகாயவெளிமுழுவதும் மூடிக்கொண்டிருக்கின்ற மேகங்களையெல்லாம் இமைப்போதில் நாசஞ்செய்து பழையபடி உலகங்கள் களித்திருக்கச்செய்து, உருவநாமக்கிரியைகளற்றுப் பராபரவஸ்துவாக விளங்கும் மகோற்கடப்பெருமானுடைய சந்நிதானத்தையடைந்தன.

அதற்குமேல் நராந்தகன் ஸ்ருஷ்டிசக்தியினாற்கொண்டு பூமிமுதல் அண்டகோளபரியந்தம் கொழுந்துவிட்டெரியச் சுவாலையைவீசிச் சராசரப்பிரபஞ்சங்களையெல்லாங் கொளுத்தியுஞ் சுட்டுஞ் சாம்பராக்கியுங்கரித்தும் எரித்தும் இவ்விதப் பாடுகளைப் படுத்தியிருந்தனன். அதை மகோற்கடமூர்த்திகண்டு கோபித்து, தமது திருக்கரத்திற்பற்றியிருக்கின்ற வில்லையிழுக்கித் தெய்வீகமுள்ள சிலபாணங்களைப் பூட்டி ஓ படைகளே! சாங்காலஞ்சேர்ந்த காரணத்தினால் அவியுஞ்சமயத்துற்ற விளக்கினைப்போல அவுணபாதகன் அதிகவல்லமையைப்பெற்றவனாய்ப் பூமண்டலமும் ஆகாயமுற்றும்நிறைந்த அழலுருவாகியிருக்கின்றனன். நீங்கள் சத்துசாகரப் படிவந்தினைத்தாங்கிப்பெரும் அலைகளின் வலியினால் இமைப்போதில் அதனைக்கரைத்து உருத்தோற்றமழித்துத் திரும்பக் கடவீர்களென்று பிரயோகித்தனர். அச்சிறந்தபாணங்கள் வெளிப்பட்டவுடன் பிரளயவெள்ளத்தினும் பதின்மடங் கதிகரித்துப்பாய்ந்து வானத்தையளாவத் திரைகளைமோதி அண்டங்களதிர முழங்கி அதிவேகங் கொண்டு பாய்ந்து மண்விண்ணெங்கும் அழன்றுநின்ற தீக்களையெல்லாம் அடப்படுத்தித் தமது சாகரவுருவங்களினின்றுமாறிப் பழையபடி செருக்களத்திற் றிருவிளையாடல் செய்திருக்கின்ற எமதிறைவனைச்சேர்ந்தன.

உடனே நராந்தகன் சராசரப் பிரபஞ்சங்களை வாட்டவல்ல பிரசண்டமாருதப்படிவந்தினைத் தாங்கி ஓவென்னுமிரைச்சலைக்காட்டி வீறிமேலிட்டு அண்ட புவனங்களி னடுக்குகள் குலைகுலைந்து தத்தளிக்க மோதியும், திசைத்தலைநின்ற பூதவீரர்கள் பதைபதைத்துக் கைகாலொடிந் தலையத்துக்கதாக மாறியும், திசைகளனைத்துஞ் செவிடுபடக் கலக்கியும், குலகிரிகள் சிறுதேர்களைப்போ லுருளத்தள்ளியும், கடல்களைக் கலக்கியும், இவ்வித உற்பாதங்களைக் காட்டிப் பேரொலிசெய்துகின்றனன். அப்பாதகன்செய்துவருகின்ற அனர்த்தங்களை

லோகநாயகன் கண்டு கோபநகைகொண்டு மன்னுயிர்கள் படுந் துக்க வருத்தந்தினையொழிப்பதாய்த் திருவுளங்கொண்டவராய் அக்கணத்தில் குரூரமாகிய திவ்வியபாணங்களை ஆராய்ந்தெடுத்து தமது ஒப்பற்ற தனுவிற் பூட்டி ஓ கணைகளே! நீங்கள் விசாலமாகிய படங்களைவாய்ந்த பல்லாயிரங்கோடி நாகவினங்களி னுருவங்களைக்கொண்டு தாவி அவுணபாதகன் செய்யும் மாயா வல்லபங்களனைத்தையும் இமைப்போதிலழித்து மீளக்கடவீர்களென்றேவினர். அம்மாத்திரத்தில் அப்பாணங்கள் வீறி வானத்தெழுந்து பற்பல சிரங்களைக்கொண்டிருக்கும் படங்களை விரித்து விஷச்சுவாலை பெருகப் புஸ் புஸ் என்று சீறி மேலிட்டு எங்கணும் பாய்ந்து நார்கட்கெல்லாம் யமனைப்போலச் சகல பிராணிகளையும் அலைந்துத் திரிகின்ற அவுணபாதகனுடைய வாயுவின் பெருக்கனைத்தையும் உண்டு வெற்றியுடன் பழையபடிக்கு மகோற்கடமூர்த்தியினுடைய சந்நிதானத்தையடைந்தன.

இவ்விதங்களாகத் தான் கொள்ளுகின்ற வடிவங்களனைத்தையும் மீறவொட்டாமலடக்கிவருவதை நராந்தகன் நினைத்துநினைந்து மானமும் வயிரமும் மனதைச் சுட்டலைக்க மண்டியெரிந்து இரவுத்திராகாரமாகக் கோபித்து தீயும் புகைப்படலமும் வீசத்தக்கதாகப் பெருமூச்செறிந்து நல்லகாரியம் இச்சிறுவன் சாமார்த்தியங்களை யறிந்திற்போமென்று உறுத்து நூதனமாகிய கோரரூபங்களைக்கொண்டு மகோற்கடமூர்த்தியை வெல்லக்கருதி ஒருபுறத்தில் பல கோடியிராக்கதர் உருவங்களைப்பெற்றுப் பிரளயவெள்ளத்தைப்போல வளைந்துகொண்டு எம்மவரை அதாஹதப்படுத்திய வுன்னைச் சொற்பமாக விடமாட்டோம். பாலகனாக விருந்தபோதிலும் இரங்கோம். எத்தலங்களிலோடி யொளிப்பினும் தொடர்ந்து வாட்டுவோம். சிறைச்சாலையி லடைத்து வருத்துவோமெனப் பல வசைமொழிகளைப்பேசிச் சத்தி சூலம் பிண்டிபாலம் கப்பணங் கணிச்சி சக்கரம் தண்டாயுதம் குந்தம் வளைதடி முதலிய ஆயுதங்களை அமோகமாகச் செலுத்தியும், ஒருபுறத்தில் பூதங்களாகவந்து பர்வதங்களை வீசிக் கர்ச்சித்தும், ஒருபுறத்தில் யமனைப்போல அளவற்ற வுருவங்கொண்டு நின்று ஆவ் ஆவென வாயைத்திறந்து மேலிட்டும், ஒருபுறத்தில் பேய்க்கூட்டங்களாகநின்று விழிகளானவை அனலையொப்பக் காந்தி வாய்களில் அனற்பொறிகளையிறைத்துச் சீறியும், ஒருபுறத்தில் புகைப்படலங்கள்மேலிட பிரளயத் தீயுருக்கொண்டு அதிகஜ்வாலையெழ மண்டியெறிந்து வாட்டியும், ஒருபுறத்தில் பிரசண்டமாருதமாக ஓவென்னுமிரைச்சலைக் காட்டிச் சகலருந்நடுக்கிட்டுவாட மோதியும் ஒருபுறத்தில் சர்வசங்காரகாலத்து சராசரப்பிரபஞ்சங்களை யழிக்கவெழும் பெருவெள்ளத்தைப்போலத் தாவி அலைகளைமோதிப் பூதப்படைகளை வாரியலைத்தும், ஒருபுறத்தில் ஆலகால விஷத்தையொப்பக் கனன்று எதிர்ப்பட்டவனைத்தையுங் கொளுத்தித் திரிந்தும், ஒருபுறத்தில் காளமாநாகங்களி னுருக்கொண்டு விஷச்சுவாலைகளைக் கக்கி மேலிட்டுக் கடிந்து வருத்தியும், ஒருபுறத்தில் மேகசாலங்களாய் மின்னல் இடிகளைப்பெருக்கி அக்கினிகள் முதலிய

மழைகளைப் பொழிந்து சாடியும்,ஒருபுறத்தில் காடாந்தகாரமாகிய இருள்வடிவு
கொண்டு பூதாதியர் திகைக்கும்படிக்கு மூடியும், ஒருபுறத்தில் இடியேற்றி
னைப்போல் அண்டங்கள் திரக் குமுறிக் கலக்கியும், ஒருபுறத்தில் வரைகளாய்
விழுந்துகொன்றும், ஒருபுறத்தில் சதுரங்கசேனைகளி னுருக்கொண்டெதிர்த்து
நம்மவரைக் கொன்ற பழியை வாங்குவோம், குத்துவோம், வெட்டுவோம்,
கொல்லுவோம்உதிரத்தைக் குடிப்போமென்று பலகொடுமைகளைப் பேசித்திரி
ந்தும்,ஒருபுறத்தில் அளவற்றயானைகளாய் மரங்களைப்பெருக்கி வீசிட்டுத்துதிக்
கரங்களில் இருப்புலக்கைகளைக் கொண்டு சுழற்றிச் சாடியும், ஒருபுறத்தில்
அனேக சிங்காசர்களைப்போலக் கர்ச்சித்தலைத்தும், ஒருபுறத்தில் பல சக்கர
வாகப் புள்ளினுருப்பெற்றுப் பெருங்காற்றெழச் சிறகுகளைவீசிப் பூதவீரரைச்
சருகினைப்போலப் பறக்கடித்துமிருந்தனன்.

கேட்டீர்களோ சவுனகாதி முனிவர்களே! ஜயசாலியாகிய நராந்தகன்
முடித்த மாயவித்தைகளின் பெருக்கத்தையும் கொடுமைகளையும் இன்னவித
மென்று விரித்துச்சொல்லவும் போதுமோ? அம்மம்மா! அவன்சாமர்த்தியங்
களுக்கு இவ்வுலகங்களில் ஒருவரையும் ஒப்புசொல்லக்கூடாது. இவ்விதமாக
அப்பாதகன் பற்பல வுருவங்களைத்தாங்கி சொல்லக்கூடாத கொடுமைகளையும்
அனர்த்தங்களையும் விளைத்துவருவதை எமதையன் கண்டு அவனெடுக்கின்ற வுரு
வங்களுக்கெல்லாம் பதிலாகத் தாமும் வேறுவே றுருக்கொண்டு அழித்துவந்த
னர். அப்பால் நராந்தகன், இனி என்னசெய்யவல்லோமென் றெண்ணமுற்று
இச்சிறுவனை நாம் வெல்லுவதரிது. பராக்கிரமத்தினும் வயதினும் நம்மினும்
பெரியவன் ஒருவ னிருக்கின்றான் அவன் வந்தாலன்றி யாமாத்திரமிவனை வாட்
டுதல் கூடாது. என்று நிர்மாணித்து உடனே சில ஒற்றர்களைக்கூவி நடந்தகாரி
யங்க ளனைத்தையுந் தனதுதமையனுக் கறிவித்துவருமாறு விடைகொடுத்தனுப்
பி, அவன் வருமிறவரையில் நாம் சும்மாயிருக்கக்கூடாதென்றெண்ணி மேருகி
ரிக் கிணையான ஓர் வில்லை யெடுத்து வளைத்து அதிற் கோரமான அம்புகளை
அளவற்றகோடிகளாகத் தொடுத்துப் பிரயோகித்தனன். அதை மகோற்கட
மூர்த்தி கண்டு தாமுமோர் மந்திரகிரிக்கு நிகரானவில்லையெடுத்துக் குனித்து
அதில் அவனிலுமேலாக அளவற்றசிலீமுகங்களைத்தொடுத்துப்பிரயோகித்தனர்.
பின்னரவ் விருதிறப் படைகளும் வெளிப்பட்டமாத்திரத்தில் ஒன்றுட னொன்
று உராய்ந்துகொண்டு நாற்றிசைகளினுந் தீப்பொறிகளை யிறைத்து நாகங்களை
யொப்பச் சீறிக்கொண்டு நெடுநேரம் அளவற்ற போர்களைச்செய்து நிற்கையில்
மகோற்கடமூர்த்தியினுடைய பாணங்கள் அவுணராசனுடைய கொடிய கணை
களையெல்லாஞ் சின்னபின்னப்படுத்தி அவனுடைய சரீரத்தைச் சல்லடைக்
கண்களாத் துளைத்து அவனுடைய இரதங்கள், சாரதிகள், பதாகைகள், கு
திரைகள், வில்லுகள், அம்புகள், கிரீடங்கள், ஆபரணங்கள், முதலானவை
களை நாசஞ்செய்து அவன் புயங்க ளிரண்டினையும் அறுத்து ஒரு புயத்தை
அவன் தந்தைக்கு முன்னும், மற்றொரு புயத்தை அவன் தமையன் முன்னும்

கொண்டுபோய்வீசி எம்மை யடிமையாகவுடைய மகோற்கடமூர்த்தியினுடைய
சந்நிதானத்தை யடைந்தன. இவ்விதமாக இரண்டு புயங்களுமற்று நிற்கின்ற
நராந்தகனுடைய கோலத்தை அந்தரவாசிகளாயிருந்த தேவர்கள்கண்டு ஆனந்
தக்களிப்பின் மூழ்கிக் களிமிகுதியினாற் கர்த்தனைப்புகழ்ந்து கற்பகமலர்களை
யிறைத்துக்கொண்டாடினர்.

உடனே அப்பாதகனுக்கு விரதபலத்தினாற் குறைந்தபுயங்கள் எதாட்பிர
காரங்கிளைக்க அதனால் நராந்தகன் முன்னினும் அதிக உக்கிரத்துடன் உளங்
களித்துநிற்ப அதைக்கண்ணுற்றிருந்த தேவராதியர் கண்டு மனந்திடுக்கிட்டுத்
தேகம்வெயர்த்து நடுநடுங்கி இவ்விடத்தில் நிற்போமாயின் இன்னுமிப்பாதக
னென்செய்வனோவென்று மேக்கத்தினாற் பலதிசைகளினும் ஓடத் தலைப்பட்
டனர். இக்காரணங்களைத் தேவதேவோத்தமனாய் சுயஞ்சோதிவடிவாக விள
ங்கு மகோற்கடப்பெருமான்கண்டு நீங்கியபுயங்கள் மீளத்தோற்றுகின்ற அவன்
தவன்மையும் அத்துவத்தைநாசமாக்கவல்ல காரியத்தையுஞ்சிந்தித்துயோசிக்
கின்றபோது அசுரேந்திரனாமவன் நாகசர்ப்பத்தினைப்போலச்சீறி மகோற்கட
மூர்த்தியைப் பார்த்து இதனைப் பேசுவதாயினன். ஓ பாலனே! இவ்விதமாக
நீ அளவற்றகாலம் உனது சுடுசரங்களைக்கொண்டு எனது உறுப்புக்களைக் கண்
டிப்பையாயினும் மீள்மீளக் கிடைத்து யதாப்பிரகாரம் சண்டை கொடுக்குந்
திறத்தைப் படைத்திருக்கின்ற அதிசூரனாகும் என்னுடன் போராடி இரண்டு
கரங்களைப் பெற்றிருக்கின்ற நீபற்பலபாணங்களைச் செலுத்திச் செலுத்திக்
கைகால்களோய்ந்து இளைப்பதன்றி யாதொரு பிரயோசனங்களையும் பெறவறி
யாய் அத்தகைய அபலனாகிய பிள்ளாய் நீயோ எதிர்த்துச் சண்டைகொடுக்க
வல்லை யான்பூருவத்தில் சிவபிரானைக்குறித்து அளவற்ற தவங்களைச் செய்து
பெற்றிருக்கின்ற சிறந்தபேறுகளைக் கேட்டதில்லையோ? உன்தகப்பனை யொத்
தவன் எனது மனவுறுதிக்குமெச்சிப் புகழ்ந்திருக்குங் காரியங்களை எவ்வளவும்
எண்ணிப் பார்த்தவனல்லை. சற்றுங்காரணகாரியங்களைப் பகுத்தறியும் விவே
கம் இன்னமும் விளங்காதபாலனாதலால் போராடி அழிந்துப் போகலாமென
நினைத்துச் சிறுபூதரைக் கூட்டிக்கொண்டு துரிதமாக வந்துவிட்டனை, பிள்ளை
மைப்பருவத்தினால் கொண்டதுணிவு உனது பிராணபரியந்தம் வந்து சேர்ந்து
விட்டது, நீ இன்னும் அளவற்றயுகங்கள் வருந்தித் தலைகீழாய்நின்று பொருத்த
போதினும் யான் பின்னிடையப் பட்டவனன்று. ஆதலால் நீ உத்தேசித்திருக்
கிறபடிக்கு என்னைமுடிக்க உன்னாலொருபோது முடியாது உன்னைப் பெற்றவ
னுமாவதில்லை இக்கியிசத்தி உன்னைப்பற்றிக் கசக்கி, வாயிற் போட்டுக்
கொள்ள வல்லேனாயினுங் குழந்தைப்பருவத்தினால் முன்பின் யோசியாமல் வந்
துவிட்டனை யென்றும் உன்பிதாவானவர் நம்மிடத்திற் பரிபூரண கடாட்சம்
வைத்திருப்பதினாலும் மனம்பொறுத்தேன். இதைக்கருதி இக்கியிசத்திற்பிரா
ணனைத் தப்பித்துக்கொண்டோடுவையாயின் அரிதிற்பெற்ற வுனது தாய்தந்தை
யர்க்குப் பிள்ளையாய் இன்னுஞ் சிலபோது பிழைத்திருப்பை தெரியாமையினால்

நீசெய்திருக்கின்ற குற்றங்களை மன்னித்து விட்டுவிடுகின்றேன் என்றுசொல்லினன். இவ்வார்த்தைகளனைத்தினையுங் கர்த்தன் திருச்செவிகளி லேற்றுக் குறுநகைசெய்து அவுணராசனே ! நீ என்னசெய்யப் போகின்றனை நீ தனித்தபோது விதித்தகாலங்கழிந்து உன்னரிய பிராணனைக் கொண்டுபோகப் பின்புறத்தில் இயமனுங்காத்துத் திரிகின்றனன். விவேகமற்றவனே வீண்வார்த்தைகளைபாடுவதிற் பயனென்னை? இனியோர் கணப்போதினுள் உனது உயிரை வாங்கவிருக்கின்றேன். அதை நீயேகாணவிருக்கின்றனை. உனக்குச் சிவபிரான் கொடுத்த மேலானவரங்களெல்லா முடியுங்காலம் வந்து சேர்ந்ததென்று திருவாய்மலர்ந்து, சிவபிரான்கொடுத்தருளிய பினாகமென்னும் மேருவில்லினை இருகுதைகளும் பொருந்தவளைத்து அண்டங்களதிரக் குணத்தொனி செய்து சிவபிரான் திரிபுரனுடைய வுயிரைவாட்டியபாணத்தை அதிற்றொடுத்து ஓ படைகளுக்கரசே ! மாயவித்தைகளைச்செய்து புவனங்களை வாட்டுகின்ற இக்கொடிய பாதகனுடைய சிரத்தை விடாமற்கண்டித்து நிமைப்போதில் மீளக்கடவையெனப் பணித்து, அளவற்ற வீரர்களையெல்லாம் வென்ற ஜயப்பிரதாபத்தினையுடைய நராந்தகன் சிரத்திரனுக்கிலக்காகப் பிரயோகித்தனர். அத்திவ்வியபாணம் வெளிப்பட்டமாத்திரத்தில் கோடிசூரியப் பிரகாசத்தினைப் பரப்பிப் பிரசண்டமாருதமுமஞ்சப் பாய்ந்து தாபாக்கினியைவீசி விஷங்களைப்பெருக்கிப் பலதேவாஸ்திரங்கள் முதலிய வற்புதங்களைப் படைத்துவிட, நாகத்தினையொப்பச் சீறிச்சென்று அவுணராசனுடைய சிரத்தைக் கண்டித்து, அதனை அவன் தந்தையினுடைய முகத்தின்முன் கொண்டுபோயெறிந்து, மீட்டும் எமது கர்த்தன் திருக்கரத்தி லமர்ந்தது அக்கிஷத்தில் அவனுடைய தபோபலத்தினால் மீட்டும் பழையபடி சிரமுண்டாகப்பெற்று, இரண்டு புயாசலங்களையுந் தட்டித் தேவர்கள் சூரியாதியர்கள் குலைகுலைந்து நடுநடுங்கி வாடத்தக்கதாக ஆர்ப்பரித்தனன்.

அவ்வற்புதத்தை மகோற்கடமூர்த்திக் கருகிருந்து பார்த்துக்கொண்டிருக்கின்ற வீரர்களுங் காசிராசன் முதலானவர்களுங்கண்டு ஐயையோ ! இப்பாதகனுடைய சிரமானது இவ்வளவு அரிதிற்றுணிபட்டுஞ் சிவபெருமானுடைய வரத்தினால் மீட்டும் முளைத்துவிற்குமானால் இவன் எவ்விதத்தில் நாசப்படுவதென்று கலங்கி வாடினார்கள், பின்னர்-ஆக்கவும், காக்கவும், அழிக்கவும் வல்ல எமது மகோற்கட மூர்த்தியானவர் அவன் பெற்றிருக்கின்ற வரத்தின் மகிமையைத் திரிலோகங்களினும் பிரகாசிக்கச் செய்யவேண்டுமென்று திருவுளங்கொண்டவராய், மீட்டும் தமது பினாகத்திற் பாணத்தைத் தொடுத்துப் பிரயோகித்து அவனுடைய சிரமானது சொர்க்கலோகத்தில் அரசியற்றி வருகின்ற அவன் தமையனாகிய தேவாந்தகன் முன்னர் விழும்படி செய்தனர். உடனே அவனுக்கு வேறொரு தலையுண்டாக அதனையும் அவ்வாறே கண்டித்து, அவன் மனைவியர் முன்புவிழும்படி செய்தனர். இவ்வாறு அப்பாதகனுக்கு சிரங்கள் முளைக்குந்தோறும் தாமும் அச்சிரங்களையெல்லாம் இடைவிடாது கண்டித்து பூலோகம்

புவலோகம்-சுவலோகம்-சனலோகம்-தபோலோகம்-மகாலோகம்-சத்தியலோகமென்னு மேழுலகங்களினும், அதலம்-விதலம்-சுதலம்-தராதலம்-இரசாதலம் மகாதலம்-பாதாளம் என்னுங் கீழேழுலகங்களினும், அளவற்ற மலைகளினும், வனங்களினும், நதிகளினும், சமுத்திரங்களினும், ஏனைய விராச்சியங்களினும் பரந்துறும்படியாகவெறிந்து தமது திருக்கரங்களின் பராக்கிரமத்தை யாவருந்தரிசிக்கும்படியாகக்காட்டிப்பின்னர் அவ்வவுணராசன் எவ்விதவுயிர்களினாலும் எத்தன்மைத்தான ஆயுதங்களினாலு மாள்வதிலதென்று தேர்ந்து சகல லோகங்களுந் தம்மிற்காணும்படி சத்தசாகரங்கள், பெரும்புறக்கடல் சூழ்ந்த பூமண்டலங்கள், அதிறுபட்டதிசைகள், தீவுகள், விண்ணுடுகள் எறும்புமுதல் யானையீறாகச்சொல்லாநின்ற எண்பத்துநான்குலட்ச சீவபேதங்கள், முப்பத்துமுக்கோடிதேவர்கள், நாற்பத்தெண்ணாயிரம் இருடிகள், கெருடகாந்தருவர், சித்தவித்தியாதரர் பன்னகர், அவுணர், கின்னரர், கிம்புருடர் ஏகாதசருத்திரர், துவாதசாதித்தர், சூரியசந்திரர் முதலியநவக்கிரகங்கள், இருதுக்கள், காலங்கள் முதலானசமஸ்தமும் ஆதிதேவனாகிய மகோற்கடமூர்த்தியினுடைய திருமேனியிலமைந்ததல்லது வேறொன்றில்லை யெனச்சகலருந்திருட்டாந்தமாகத் தரிசித்துக்கிருதார்த்தராதற்பொருட்டு விசுவரூபத்தைக்கொண்டருளினர். அவ்வற்புதத்தை நராந்தகன் பார்த்து அளவற்ற வேதாகமங்களினாலுந்தேடிக்காண்பரியசுயஞ்சோதிப்படிவத்தினை நேரிற்கண்டும், பிராரத்தவினையின் சம்பந்தப்பட்டவனாய், முன்னம்பாலனாகவிருந்தவிவன் நம்மையெதிர்த்துயுத்தஞ்செய்து வெல்ல நிர்வாகமற்று இப்போது ஓர் மாயத்தினால் ஓர் பெரியரூபங்கண்டு நிற்கின்றனன். இனிநாமும் இவனைப்போலப் பேருருக்கொண்டு வெல்லவேண்டுமென்று யோசித்தவனாய், தானும் உருவத்தில் மாத்திரம் சரியானவனாகி சுவாமியெதிரில் அட்டகாசஞ் செய்து நின்றனன். அக்குறிப்பினை எமதையனறிந்து அவனுடைய மார்பைத் தமது திருவடியின்பெருவிரலின் நகத்தினாற் கிறிப்பிளந்து உயிரை விண்ணுலகேற்றி உடலை பூமியின்மீது தள்ளி அனிச்சப்பூவினைப்போலத் தேய்த்தருளினர்.

இச்சுபகாரத்தைக்கண்ட தேவர்கள் ஆனந்தக்களிப்பின் மூழ்கிப்பஞ்சகற்பகமலர்களை வாரிவாரிச்சொரிந்து வாழ்த்திச் செயங்கொண்டாடினார்கள். சூரன் முதலியவீரர்களுங் காசிராசன் முதலியோருமிக்க மகிழ்ச்சியடைந்தவர்களாகி விசுவரூபங்கொண்டிருக்கின்ற சுவாமியைப்பலமுறைப் பணிந்தெழுந்து கர்த்தனே! இப்பெரிதானதிருமேனியை அடியேங்கள் தரிசிக்கும் வல்லபத்தினையுடையோமல்லோம். சுவாமிகள் சுயரூபத்தினைக்காட்டி ஆட்கொண்டருளல் வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். உடனே அவர்கள் பயம்நீங்கும்படியாக அவ்விசுவரூபத்தினைமாற்றிப் பழையபடி மகோற்கட மூர்த்திப்படிவத் தினைத் தாங்கி சகலசேனைகளும் புடைசூழ்ந்து வரும்படியாகச் சமர்க்களத்தினின்று நீங்கிக் காசிப்பட்டணத்தையடைந்து யதாப்பிரகாரம்அரசனுடைய அரண்மனையின்கணெழுந்தருளியிருந்தனர். அப்போது நரர்கட்கெல்லாம் அந்தகனென்

னும் பெயரினைப்படைத்து சகலவுயிர்களையும்வாட்டிவந்த கொடும்பாதகனாகிய அவுணராசன் மாண்டமையை ஏனையதீபங்களுக்கும்அறிவிக்கச்சொல்லுவான் போலச் சூரியனானவன் மேற்றிசைக்கடலில் அத்தமானமாயினன்.

கேட்டீர்களோ சவுனகாதி முனிவர்களே! இதுபரியந்தம் மகோற்கடமூர்த்தியானவர் நராந்தகனைச்சங்கரித்து முத்திகொடுத்தருளிய திருவிளையாட்டினைச் சொன்னோம். இனி அவன்தமையனாகிய தேவாந்தகனையுஞ் சங்கரித்து முத்திக்கனுப்பிய திருவிளையாடலைப் பாந்தமாகச் சொல்லுவோங் கேட்பீர்களாக.

சொர்க்கலோகத்திலே விண்டுவாதி தேவர்களெல்லாந் தனதாக்கினையின்படி நடக்கும்படியாக அரசியற்றிவந்த தேவாந்தகனானவன், தன்னெதிரில் திடீலென்று வீழ்ந்த தலையினைக்கண்டு "இது நமது தம்பியினுடைய தலையேயென்று தீர்மானித்து தனதுள்ளத்திற் பலவாறான எண்ணங்களையெல்லாமெண்ணிப் பரிதபித்திருக்கின்றசமயத்தில், "அங்கிருந்தசிலர் அத்தேவாந்தகனை வணங்கிநின்று ஆண்டவனே! இத்தன்மைத்தான தலைகள் அளவற்றனவாய் உதிரத்தோடு சகலலோகங்களினும் விழுந்துகொண்டிருக்கின்றனவென்று சொன்னார்கள், அதைக்கேட்டலும் தேவாந்தகன், சிறிதுமனந்தேறி, இவ்வொன்றேயன்றி அனேகந்தலைகளைக் கொண்டதாகச் சொல்லுகின்றமையால், அவன் மாண்டவனல்லன், இவ்வளவிலேனும் அவனோடு யுத்தஞ்செய்யத் தக்கவன் காசிபனுடைய புத்திரனேயன்றி வேறொருவனல்லன். நாமும் இனித் தாமதஞ் செய்யாமல் பூவுலகத்திற்குச் செல்லவேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கையில் முன்னர் நராந்தகனேவிய தூதர்கள் அப்போதுவந்து தேவாந்தகனைப் பணிந்தெழுந்து ஆண்டவனே! காசிராசனானவன் தனதுபுத்திரனுக்கு விவாகஞ்செய்யும் நிமித்தம் காசிபமுனிவனுடைய புத்திரனைப் புரோகிதனாக வழைத்துக்கொண்டுபோனான். போகிறமார்க்கத்திலே தவஞ்செய்துகொண்டிருந்த தேவரீருடைய சிறியதந்தையைக்கொன்றான். அச்சம்பவத்தை அவருடையபிள்ளைகள் இருவோருங்கண்டு எதிர்த்தார்கள். அவர்களையும் அப்போதேகொன்றனன். அதைத்தேவரீருடைய தம்பியார்கேட்டு அவ்வரசனழைத்துவந்த சிறுவனைக்கொன்று வரும்படியாக அவர்கள் தனித்தனியாகவுந் துணையாகவும் அளவற்ற மாயவுருவங்களைக் கொண்டுசென்று அச்சிறுவனுடைய கரத்தினால் மாண்டார்கள். அதன்மீது தேவரீருடைய தம்பியார் சகலசேனைகளோடுஞ் சென்று யுத்தஞ்செய்து கொண்டிருந்தனர். இப்போதவர் அளவற்றயுத்தங்களினால் இளைப்புற்றுத்தேவரீரையல்லாமல் சத்துருவைக்கொல்லுவது மிகவுமரிதென்று நிதானித்து இவ்விடத்திற்கெம்மையனுப்பினரென்று சொன்னார்கள். அவையனைத்தையுந் தேவாந்தகன்கேட்டு, முட்டிற்றுத்திரியும் பிராமணச் சிறுவனுடைய பராக்கிரமம் மிகநன்று எனக்கோபங்கைகொண்டு உடனே அமைச்சர்களைக்கூவி நம்சேனையாவும்யுத்தத்திற்காயத்

தமாகும்படி கட்டளையிடுவீர்களென்று ஆக்ஞாபித்தான். அவ்வேளையில் அவர்கள் தந்தையாகிய இரௌத்திரகேதென்பவன் தன்னெதிரில்வீழ்ந்த தலையைச்சிவிகையின்மீதேற்றிவந்து தேவாந்தகன்முன்னேவைத்து மைந்தனே உனது தம்பி காசிராசனுடன் யுத்தஞ்செய்யச்சென்றனன்; அவன் அவ்விடத்தில் இறந்தாற்போற்றோன்றுகின்றது அவனுடைய தலை நமது முன்னேவந்து வீழ்ந்தது அதையும் இதோகொண்டுவந்திருக்கின்றேன் பாரென்றுகாட்டினன். அதைத்தேவாந்தகன்பார்த்துத்தந்தையே தம்பியினுடையதலை இவ்வொன்றுதானோ? அளவற்ற விடங்களில் அளவற்ற தலைகள் விழுந்துகிடக்கின்றன அதேனெனவில்: அவனுக்குச்சிவபிரான் கொடுத்தருளிய வரத்தினால் தலைகள் அமோகமாக வளர்ந்துகொண்டுவருகின்றன. அவன் இறப்பானென்று தேவரீர் நினைக்கவேண்டுவதில்லை. நானும் அவ்விடத்திற்கு யுத்தஞ்செய்யப்போகவிருக்கின்றேன். தேவரீர்யாதொன்றிற்கும் விசனமுறாமல் இருக்கையைச்சேர்ந்திருக்கலாமென்று விடைகொடுத்தனுப்பி இனிநடக்கப்போகின்ற காரியத்திற்கேற்றபடி அளவற்ற சேனைகளைக் கூட்டிக்கொண்டு அவர்கட்கெல்லாம் அனேகவெகுமதிகளைச்செய்து ஆலயமணியின்றும் வெளிக்கொண்டு பூலோகத்தை நோக்கிச் செல்லுவதாயினன். அப்போது நராந்தகனுடைய இறந்தலையறிந்த சில அவுணதூதர்கள்வாயினும் வயிற்றினும் மறைந்துகொண்டு, கண்களில் நீரைப்பெருகக் கோடுகோடெனப் புலம்பி வாயுவேகத்தினும் மேலிட்டு யுத்தகளத்தைநோக்கி வருகின்ற தேவாந்தகனெதிரிற்சென்று அடியற்றபனையைப்போல அவன்பாதத்தில்விழுந்து வாயெழாமற் சற்றுநேரங்குழறி கடைசியில் இதனை விண்ணப்பஞ்செய்வதாயினர்.

ஆண்டவனே! என்னசொல்லப்போகின்றோம்; காசிபமுனிவன்புத்திரனையழைத்துவந்திருக்கின்ற காசிராசனோடு தேவரீருடையதம்பி அளவற்ற சேனைகளுடன்சென்று போராடினர். அதனால் காசிராசன்முதலியோர்பட்டபாட்டை யாவராலுஞ் சொல்லிமுடியாதென்று. பின்னர் அவனழைத்துவந்தஅப்பிராமணச் சிறுவன் போருக்குவந்து இமைப்போதில் தனது முகத்தினின்றும் அளவற்ற வீரர்களையுண்டாக்கிக் கொடியசமரைவிளைவித்தனன். அதற்கும் அவரஞ்சாது பற்பல மாயவித்தைகளைக் கொண்டுபோராடினர். முடிவில் அச்சிறுவன் ஒரேபாணத்தினால் வெட்டியெறியுந்தோறும் வளர்ந்துவந்த சிரங்களையெல்லாம் பலபுவனங்களினுஞ்செல்ல வீசித் தனதுவிசுவரூபத்தினால் அவரைத் தரையிற்குழையும்படி தேய்த்துக்கொன்றுவிட்டுத் தனது படைத்தலைவர்களெல்லாம் புடைசூழும்படியாகச் சயப்பிரதாபத்துடன் காசிநகரைச்சார்ந்து களித்திருக்கின்றனன் என்று சொல்லினர்.

அச்சொல் தனதுசெவிகளில் விஷத்தைப்போல நுழைந்தமாத்திரத்தில் மனந்திடுக்கிட்டுத் துயரவெப்பமானது தேகத்தைக்கொளுத்த மயிர்க்கால்கடோறும் அழற்சுவாலைவீசித்தகிக்க விழிகளில் நீர்ப்பெருக்குற்று உதிரம்பாயவாய்புலர்ந்து சுவாசமெழுந்தோறும் புகைப்படலமும் வெப்பமும் தோற்றச்

சோர்ந்து பதைபதைத்து வருந்தி அக்கினியை யுண்டவன்போலக் களைத்து விழுந்து, கடகடவெனப்புரண்டு, நிலைதெரியாமல் வழுவிக் குண்டாங்கரணம் போட்டுருண்டு சத்தமேகங்களும் ஒருமித்துக் கர்ச்சிப்பதுபோலக்கதறிக் கரங்களைத்தட்டி நிலத்திலறைந்து திகைத்து மதிமயங்கித் தனக்குக் கிடைத்திருந்த வலியும் வீரமும் மானமும் மற்றுமுள்ள சிறப்புகளையுமிழந்து விசனமென்னும் நீர்ச்சுழியிற்பட்டுத் தியங்கி ஓ என்னையனே! ஓ என்னப்பனே! ஓ என்றுணைத் துணைவனே! தானவர் குலத்தினை விளக்கவந்தத் தலைவனே! உன்னையொத்த வீராதிவீரனைத் தூநரோடிவந்து மாண்டனரென்று சொல்லுவார்களோ? ஆதியில் இந்திரனுகிய தேவர்களையும், பூமண்டலத்தினரையும் புறந்தந்தோடப் போர்முனையில்வென்று தமியேனுக்கு வெற்றியைத் தந்தனையே? அத்தகைய ஜயசாலியாகிய உன்னை இத்தினம்சமர்க்களத்தில் ஓர்பாலன் கொல்லவுமாயிற்றே? நமக்கஞ்சிப் பணிகின்ற யமனும் உன்னரிய பிராணனைப் பயமற்றுக் கொண்டுபோகத் துணிந்தனனோ? சண்டை கிடைத்ததென்று கேட்டவுடன் மகிழ்ந்து புயாசலங்கள் வானத்தளாவப் பூரித்து மேல்நடந்து வாட்டும் வீர பராக்கிரம சம்பன்னனே! சத்துராதிகளென்னும் மதயானைக் கூட்டங்கட்கு வலியசிங்காசனையொத்த கண்ணியனே! உன்னைப் பறிகொடுத்து யாதொரு துணையுமின்றிப் பாதவிக்கின்ற எனது துன்பத்தினை நீக்கித் தயிரியங்களைச் சொல்லித்தேற்ற மனமிரங்காயோ? உன்னைப் பிதாவைப் போலவும், பிள்ளையைப் போலவும், எக்காலத்தும் நம்பியிருக்கின்ற என்னைச் சுத்தமாய் மறந்துவிட்லாகுமோ? உன்னையே பிராணபதமாக நம்பியிருந்தஎன்னைச் சுற்றும்நினையாமல் இப்பூவுலகத்திலுள்ள சம்பத்துக்களை விடுத்து சொற்கலோகபோகத்தி லிச்சைவைத்து அவ்வாழ்வை நீமாத்திரந் தனித்துப்போய் அனுபவிக்கவுங் கற்றனையோ? ஓ துணைவனே! உனது திருமுகப்பொலிவை இனி எக்காலத்திற் காணப்பெறுவேன்? நம்மை யரிதிற்பெற்ற தாய்தந்தையர் இக்காரியத்தை யறிவார்களாயின் என்னபாடு படுவார்களோ? உனது சிரத்தினைக்கொண்டு மதிமயங்கிவந்த தந்தைக்குத்தம்பி யாவராது பிறக்காரென்று பலவுறுதிகளைச் சொல்லி யனுப்பினேனே! ஐயோ! இனி இதைக் கேள்வியுற்றாராயின் தமியேனை எவ்விதங்களில் நிந்திப்பரோ? யாதுந் தோற்றவில்லையே யென்று இவ்விதங்களாகச் சொல்லிப் புலம்புகிற தேவாந்தகனை அருகிருந்த அமைச்சர் முதலாயினோர்தேற்ற,ஒருவாறுதேர்ந்து மானமுங்கோபமும் மனதைவிட்ட நல்லகாரியம் நல்லகாரியமென்று சிரக்கம்பிதஞ்செய்து எனது பிராணனையொத்த அருந்துணைவனைக்கொன்றவீரன்எவனோ அவனைக்கொன்று வெற்றிமாலை சூடாமல் ஏனையமாலைகள் முதலாகிய அலங்காரங்களை மறந்தும் வேண்டேன் அதுபரியந்தம் எவ்வகைப்பட்ட பசிவரினும் உணவுங்கொள்ளேன் என்று சபதங்கூறி மதயானையையொத்த வலிபெற்றவர்களாய் அளவற்ற சிரங்களையுங் கரங்களையு முடையவர்களாய் சிங்கம் கரடி புலி யாளி யானை இத்தகைய மிருகங்களின் முகங்களைப் படைத்தவர்களாய் வீரபராக்கிரமசாலிகளாய் இருட்கூட

டத்தினைச் சிய்க்கவல்ல வில்-வாள்-தோமரம்-பிண்டி-பாலம்-கப்பணம்முசுண்டிமுதலிய ஆயுதசவரட்சணைகளைப் பெற்றவர்களாய் தன்னைப் புடைசூழ்ந்திருந்த நால்வகைச்சேனுசமுத்திரங்களையுங்கூட்டிக்கொண்டு இரணபேரி-சயபேரி-வெற்றிச்சங்கம்-தவுண்டி-மல்லரி-சல்லரி-தக்கைமுதலிய பொற்பறைகள் அண்டங்களதிரமுழங்க துசபடாங்கள் வானத்தையளாவப்படபடென்றசையவெண்சாமரை ஆலவட்டமுதலியஇராசசின்னங்களைப்பலகோடி அவுணவீரர்கள்தாங்கிவர அவுணமுதியோர்கள் பலர்திரண்டு இராசாதிராசனேசயப்பிரதாபத்தைப் பெற்றுவரக் கடவையென்று பலவாழ்த்துகளைப்பேசிப் புஷ்பங்களை யிறைக்க சுமங்கல மங்கையர்கள் பற்பல ஆலங்களைச் சுழற்றிநிற்க பட்டுவர்புகழ வித்துவசனங்கள் பாமாலைசாற்ற இவ்வித சம்பிரமங்களோடு பூலோகத்திலிறங்கி அளவற்ற மகிமைகளோடுஞ் சிறப்புற்றிருக்கின்ற காசிநகரத்தை யடைந்து நராந்தகனும் மகோற்கடனும் யுத்தஞ்செய்த சமர்க்களம் எங்ஙனமென்று விசாரித்து தெரிந்துகொண்டு அங்ஙனந் தனது சேனைகளை யெல்லாம் நிறுத்தித் தானுமிருந்தனன். அப்போது முன்னர் நராந்தகன்செய்த சமர்ச்சுவையினை யறிந்து மேற்றிசைக்கடலில் மறைந்துசென்ற சூரியனானவன் மீட்டுந் தேவாந்தகன்செய்யுஞ் சமர்ச்சுவையினையு மறிவோமென்று வந்தவன்போலக் கீழ்த்திசைக்கடலி லுதயமாயினன்.

இப்பால் நராந்தகன் சகோதரனுகிய தேவாந்தகனுடைய வரலாற்றினை யறிந்த அவ்விடத்திய தூதர்கள் காசிராசனிடத்தி லோடிப் பணிந்தெழுந்து, ஆண்டவனே! தேவாந்தக னானவன் அளவற்ற சேனைகளோடு இப்பட்டணத்திற்கு வெளியில் இறங்கியிருக்கின்றானென்று சொல்லினர். அதை அரசன்கேட்ட மாத்திரத்திற் றடுமாறி மகோற்கட மூர்த்தியிடத்திற் சென்று பணிந்தெழுந்து அளவற்ற தோத்திரங்களைச்செய்து ஓ சகலபுவனுதார கர்த்தனே! நராந்தகனுடைய தமையனுகிய தேவாந்தகன் யுத்தசன்னத்தனாய்ச் சொர்க்கலோகத்தினின்றும் வெளிக்கொண்டு இங்ஙனம் வந்திருக்கின்றனன். அவனையுந் தேவரீர்சங்கரித்து அடியேனைமுற்றினுங் காத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தான். அவனை மகோற்கடமூர்த்தி கிருபையோடும் பார்த்து அரசனே! அஞ்சவேண்டாமென்று திடஞ்சொல்லி அத்தேவாந்தகன்கண்டு நடுங்கத்தக்க ஓர்பெரிய வடிவத்தினைக்கொண்டு, நான்குகரங்களும், அக்கரங்களில் வில்-வாள்-பரசு-பாசம் என்னும் நால்வகை ஆயுதங்கள்விளங்க, சித்திபுத்திகளுடனே, சிங்கவாகனமூர்ந்து, கொடி கொடைமுதலிய சின்னங்களோடு, பற்பல பூதவீரர்கள் புடைசூழும்படி, ஆகாயமார்க்கமாக அப்பட்டணத்தினின்றும் வெளிக்கொண்டு சமர்க்களத்திலிறங்கி அங்குஜயவுற்சாகத்தோடு ஆரம்பித்திருக்கின்ற தேவாந்தகனுடைய சேனுசமுத்திரங்களைக்கண்டு தமதுஇடப்பாகத்திலிருக்கின்ற சித்திதேவியைநோக்கிப் பெண்ணே! இதோ நமக்கெதிரில்நிற்கின்ற பெரிதானசேனைகளை யழிக்கத்தக்க வேறேசிலசேனைகளைச் சிருட்டிக்கக்கடவையென்று திருவாய்மலர்ந்தனர். உடனே சித்திதேவியார் அவ

வாக்கினையைச் சிரமேற்கொண்டு சுவாமியைவலம்வந்து பணிந்து, அணிமா-மகிமா-கரிமா-இலகிமா-பிராத்தி-பிராகாமியம்-ஈசத்துவம்-வசித்துவம் எனச்சொல்லாநின்ற அட்டமாசித்திகளை எண்விதசத்திகளாக்கி, அவ்வவர்கட்கேற்ற நால்வகைச்சேனைகளையும் ஆயுதங்கள்முதலியவைகளோடு உண்டுபண்ணினர்.

அவ்வதிசயத்தைத் தேவாந்தகன்கண்டுதனது சேனைத்தலைவர்களைக்கூவி ஓ வீரர்களே! நாமிங்குவந்தபின்பு பகைவனுடையசேனைமிகவும் அற்பமாக வந்தது. இப்போது அவ்வற்பமும் சத்தசாகரங்களைப்போல அளவற்ற சேனைகளாய் விளங்குகின்றன. இத்தன்மைத்தான மகத்துவத்தினைப்படைத்தசேனைகளோடு நாமெதிர்த்துவென்றோமாயின், நமக்கு அழியாதகீர்த்தியெங்கும் பரவிநிற்கும். ஒருவேளை அழிந்தோமாயினும் அக்கீர்த்திநமக்குக் கிடைப்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. ஆதலால் நமதுசேனைகளை அணிவகுத்துப்பகைவனுடைய சேனைகளைச் சின்னபின்னப்படுத்தக் கடவீர்களென்றுசொல்லி அளவற்ற வெகுமதிகளைச் செய்தனன். அவ்வாறே அப்படைத்தலைவர்கள் சகல சேனைகளையும் அணிவகுத்து யுத்தஞ்செய்வதாயினர். அந்தயுத்தத்தினுடைய திறத்தினைத் திருமான்முதலியதேவர்கள் ஆகாயமார்க்கத்திற்கூடிப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

இப்பால் இருவகைச் சேனைகளினுமுள்ள வீரர்கள், வெற்றிச் சங்கம் முதலியவைகளைமுழக்கித் தமதுமுடிகளிற் றும்பைமாலைகளைச்சூடி. அணிமா சத்தியுடனே கர்த்தமனும், மகிமாவுடனே-ஏக்குமனும், லகிமாவுடனே-தாலசங்கனும், கரிமாவுடனே-தீர்க்கதந்தனும், பிராப்தியுடனே-கண்டனும், பிராகாமியையுடனே-காலாந்தகனும், ஈசத்துவத் துடனே-தூம்சயனனும்-வசித்துவத்துடனே-இரத்தகேசியும், ஏனையசேனைகளுமாகவெதிர்த்துக் காடாந்தகாரமாகிய இருட்கூட்டமும் அதைநாசப்படுத்தவல்ல சூரியனுடைய கிரணசமூகங்களும் ஒன்றுக்கொன்று போருக்கெழுந்தது போல ஒருவரையொருவர் விற்களைவளைத்துக் கொடியதீட்சண்ணியமுள்ள பாணவருஷங்களைப் பொழிந்தும், தோமரம்-பாசம்-சூலம்-குந்தம்-குறுந்தடிமுதலிய ஆயுதங்களை வீசியும், இந்திராஸ்திரம்-வருணாஸ்திரம்-வாயுவாஸ்திரம்-அக்கினியாஸ்திரம் முதலிய தெய்வப் படைகளைப் பிரயோகித்தும் வானளாவிநின்ற பர்வதங்களைப் பிடுங்கி இறுகிறெனச்சுழற்றிப் பந்தைப்போலக்கடாவியும், திசைகளை மூடிக் கிளைகளைவிரித்திருக்கின்ற பாரித்தமரங்களை வேருடன்பிடுங்கிச் சுழற்றிமோதியும், ஒவ்வொருகரத்தில் ஆயிரம்பதினாயிரம் யானைகளைவாரித் தேரணிகள் அறுந்துவிழவீசியும், பலரதங்களைத்தூக்கி அளவற்றகுதிரைப்பந்திகள் நிலத்திலறைபட்டுருளச்சாடியும், கனைக்கின்றகுதிரைகளைத்தூக்கி அளவற்றசேனைகள் சின்னபின்னப்பட்டு மாளத்தாக்கியும், கழுத்துகளை முறித்தும், கரங்களை யொடித்தும், விலாக்களொடியக் குத்தியும், மார்புபிளக்கவறைந்தும், கால்களைத்தட்டியும், விழுந்தாருள உதைத்தும், நிலத்தைநக்கவிக் கொண்டிருக்க

மோதியும், வானத்திற்பறக்கஎற்றியும், திசைகளிற்வீசியும், சமுத்திரத்திற்கு மிளபிடவெறிந்தும், சுள்ளிகளைப்போல வொடித்தும், கோபத்தினால் மேல் விழுந்து ஊட்டியைக்கடித்தும், உதிரத்தைக்குடித்தும், இடித்தும், குத்தியும், மோதியும், தட்டியும், முட்டியும், மொத்தியும், பிசைந்தும், கசக்கியும், திட்டியும், மந்தரம்போன்ற புஜங்களை ஒடித்தும், தலைகளைநெரித்தும், மூளைகளை வாய்வழியிற் கக்க நருக்கியும், கண்மணிகளைப்பிதுக்கி நட்சத்திரவீதிகளி லெறிந்தும், வயிற்றைப்பீறிக் குடர்களைப்பிடுங்கி மாலைகளாகப்போட்டும், வாரி நிலத்திலறைந்தும், வலியகால்களினாலுதைத்தும், சதைத்தும், இவ்விதங்களாக ஒருவர்க்கொருவர் அமோகமாகிய யுத்தத்தைவிளைத்தனர்.

அக்காலத்தில் இருதிறச்சேனைகளினும் அளவற்றபோர்மாண்டு இரணக்களமானது. அலைகளைச்சுருட்டி மோதிக்கொண்டோடவும், மூளைகள் சந்திரகாந்தப்பாறைகளைப்போல இரைந்துகாட்டவும், பிணமலைகள் பெருந்தோங்கவும், பூதபசாசங்கள்-காளிக்கூட்டங்கள்-உதிரமாமிசங்களைத் தெவிட்டவுண்ட வெறியினால் ரணபத்திரகாளியைப்புகழ்ந்து திந்தோமென்றடித்துத் துணங்கைக் கூத்தாடவும், நாய்நரிகள் இங்குமங்கும் ஊளையிட்டோடவும்-கழுகு-பருந்து-காக்கைகள் பசிபற்றுவானவெல்லையிற் கூச்சலிட்டுலாவவுமாகி யிருந்தது.

சேட்டர்களான சவுனகாதி முனிவர்களே! அக்காலத்தில் ரணக்களமிருந்த தோற்றத்தை இன்னதென்று சொல்லவல்லேனோ; இவ்விதமாகச் சித்திதேவியினுடைய சேனைகளும் தேவாந்தகனுடையசேனைகளும் வெஞ்சினமும், வெம்மொழியுங்கூறித் தத்தமிறைவர்களுடைய கண்களில் நீர்பெருகும்படியாகச் சமர்செய்துமாண்டு வீரசொர்க்கத்தினையே முக்கியமாகக் கருதிப் போராடு முன்னிலையில் சித்திதேவியினுடைய சேனைகள் மேலிட்டு வடவாமுகாக்கினியைப்போல மண்டியெதிர்ந்து சத்துருக்களெதிர் வந்த கோடானுகோடி இரதங்களை மெலித்து தன்னுடனொன்றைத் தாக்கிப்பொடியாக்கி யெறிந்தும், மிக்கமதம்பொருந்திய யானைகளின் துதிக்கைகளைப் பற்றி இறுக்கி நெறுநெறெனச் சுழற்றி யானைகளின்மீது மோதிச் சின்னபின்னப் படச் சாய்த்தும், குதிரைப் பந்திகளை வாரி குதிரைப்பந்திகண்மீதெறிந்து துஞ்சப்படக் கொன்றும், சில தேவசேனைகள் பிரசண்ட மாருதத்தைப் போலச் சுழன்று அளவற்ற அவுணவீரர்களைவாரி அவுணசேனைகண்மீது மோதிக் கண்டதுண்டப்படச் சாடியும், மலைகளையொத்த புயங்களைக்கொண்டு தாக்கிப் பல அவுணர்களை உருட்டியும், வலிய கரங்களினால் கோடையிடிகளையொப்பக் குத்திக் கொன்றும், பாதங்களைக் கவ்வி ஒவ்வொருதையிற் கணக்கிறந்த இராட்சதரைத் தரையிற் இடறியும், ஒவ்வோரறையிலும் கோடானுகோடி அவுணவீரர்களை மடித்தும், பல அவுணவீரர்களுடைய சிரங்களானது பெருங் காற்றிற்பட்டுதிராநின்ற தெங்கின் குலைகளைப்போல இரணக்களமெங்கும் புரளும்படிக்கு

மோதியும், இவ்வாறு அமோகமாகவிருக்கின்ற மான்கூட்டங்களிற் சிங்காசர்
கள் பாய்ந்தலைப்பதைப்போல எதிர்த்துவந்த அவுணசேனைகளையெல்லாம் அடிப்
படுத்தி வீறியிருக்கின்ற சமயத்தில், அவுணசேனைகள் மனவூக்கமற்று நிலைக
லங்கித் தத்தளித்து இறந்தவர்கள்போக மற்றையர் பயபீதியினால் தளர்ந்து பி
ன்னிடைவதை வலியும் வீரமும் பெற்று, அணிமாசத்தியோ டெதிர்த்து நின்ற
சுத்தமனென்னும் சேனைத்தலைவன் கண்டமாத்திரத்தில் மண்டியெறிந்து மா
னமும் கோபமும் மனதைவாதிக்கத் தனது தேரை அதிக விரைவோடுத் தூரத்
திக்கொண்டுவந்து, அவுணசேனைகளையெல்லாம் பயப்படாதீரென்று ஆதரித்து
நிறுத்தித், தனது பாரித்த வில்லையெடுத்து சிறந்த நாணேற்றி மணிகள் சத்
திக்கத்தக்கதாகவளைத்து விசைத்தலையமைவிட்டிருக்கின்ற அளவற்ற பாணங்களை
ஒன்றனைத்தமாகப் பிரயோகித் தார்ப்பரித்தனன். அப்பாணங்கள்வெளிப்பட்
டவுடன் வானத்தெழுந்து பற்பல அனற்பொறிகளை யுண்டுபண்ணிக்கொண்டு
அதிக வேகத்தோடுசென்று புத்தினிடத்திற் சர்ப்பங்க ளுழைவதைப்போலப்
புசபலபராக்கிரமசாலிகளாகிய சேனைகளிற் பாய்ந்து உருவிச்செல்ல அக்கொ
டுமைக்குத் தேவசேனைகள் ஆற்றப்படாதவர்களாய்க் கலங்கி வாடிப் பின்னிட
அதை அணிமாதிசத்திகண்டு, தனது தேரை அப்பாதகனருகிற் றூரத்திவந்து
அடா இராட்சசப்பயலே! ஏன் தலைகீழாக விழுகின்றனை? மிஞ்சவேண்டாம்.
இனி உன் சிலம்பமொன்று மிங்ஙனம் நடவாது. உன் பிராணனைக்கொண்டு
போக யமனைப்போல வந்திருக்கின்றேன்; இனி நீபிழைத்து ஊரைப்போவோ
மென்னும் எண்ணத்தை விட்டுவிடக்கடவை யென்று பல வசைமொழிகளைக்
கூறி, வெற்றிமாலையணிந்திருக்குந் தனது தண்டாயுதமொன்றை யெடுத்துக்
கிறுகிறெனச் சுழற்றி அவனுடைய தேரின்மீது கோடையிடியைப்போல மோ
தினள். அப்போதிரதமானது அச்சுவேறு மச்சுவேறாகச் சிதைந்து குதிரைகள்
சின்னபின்னப்பட்டு சாரதி தலையுடைந்து மாண்டதை அவுணவீரன்கண்டு இ
ரவுத்திராகாரமாகக் கோபித்து தனது வில்லிற் கணக்கிறந்த பாணங்களைத்
தொடுத்து அடி பேயே! இச்சிறந்தபாணங்களினால் உனது சிரத்தை வெட்டிப்
பூமியிற்றள்ளிச் சயம்பெறுமற்போவேனாயின் இனி யென் பிராணபரியந்தம்
இவ்வில்லைக் காத்திற் றெடுவதில்லையெனப் பிரதிக்கினைச்செய்துப் பிரயோ
கித்தனன் அப்படைகள் வெளிப்பட்டமாத்திரத்தில் அதிகமகிமைகளைக்காட்டி
அட்டதிசைகளினும் எரிந்து புகைந்துகொண்டு வருவதை அணிமாசத்திகண்டு
அதிக கோபாவேசத்தோடு அப்பாதகனுடைய தேரிற்பாய்ந்து அவன் காத்திற்
கொண்டிருந்த வில்லை யொடித்தெறிந்து அவன் சிகையைப்பிடித்து மேல்தூக்
கிச் சுழல்காற்றினைப்போல வட்டாகாரமாகக் கிறுகிறெனச் சுழற்றி வீசினள்.
உடனே அக்கத்தமன் வீறப்பனைந்து மடங்கிப் பித்தனைப்போல மதிமயங்கிச்
சோர்ந்து பெருங்கூச்சலிட்டுப் பதைபதைத்துத் துடிதுடித்து மாண்டனன்.
இவ்வாறே மகிமாசத்தியானவள் தனது வேலாயுதத்தினால் எக்குமனென்ட
வனைக் கொன்றாள். லகிமாசத்தி தாலசங்கனென்பவனை ஓர் வாளாயுதத்தினால்

வதைத்தனள். கரிமாசத்தி தீர்க்கதந்தனைச் சூலத்தினால் மாய்த்தனள். பிராத்தி
சத்தி கண்டனென்பவனைத் தனதுகையினாற்குத்தி நாசஞ்செய்தனள். ஈசத்து
வசத்தி தற்சயனென்பவனை ஓரம்பினாற் சாய்த்தனள். வசித்துவசத்தி இரத்த
கேசனை ஓர் வச்சிராயுதத்தை விட்டு வதைத்தனள்.

இவர்கள்செய லிவ்வாறாக; பிரகாமியசத்தியோ டெதிர்த்துநின்ற கா
லாந்தகனென்பவன் மகா பராக்கிரமசாலியாய் நெடுநேரஞ் சிறிது மிளையாது
போர்செய்தனவா அவன் வீரத்தினை அச்சத்திகண்டு இவ்வற்பன் நமது படை
களோடு நீடித்து யுத்தஞ்செய்வது வெகுகீர்த்தி வெகுகீர்த்தியெனக்கோப
நகைசெய்து, தனது சேனைகட்குத் தயிரியங்களைச்சொல்லிக் கூட்டிக்கொண்டு
இரதத்தைத் தூரத்திக்கொண்டுபோய் அவுணசேனைகளை நாற்புறத்தும் வளைத்
துத் தங்கத்தகடுகள் பூண்டு இருகுதைகளினும் மணிகள் சத்திக்கும் பாரித்த
வில்லை வட்டாகாரமாகவளைத்துத் திசைகளதிரக் குணத்தொனிசெய்து விசைத்
தலையமைவிட்டிருக்கின்ற திவ்வியபாணங்களை அமோகமாகப் பூட்டிப் பிரயோ
கித்தனள். அப்பாணங்கள் அனலையிறைத்துப் புகைகளைப்பெருக்கி அதிகஉற்பா
தங்களை விளைத்துக்கொண்டு தடைக்கஞ்சாமல்மீறி வேகமாய்ப்பாய்ந்து அவுண
வீரர்களுடைய சரீரங்களிற் சுறுக்கு சுறுக்கென்று தைத்து சல்லடைக்கண்க
ளாகத் துளைத்துவாட்ட, அவ்வுபத்திரவங்களை யவ்வீரர்கள் சகிக்கமாட்டாமல்
தயிரியத்தை விடுவித்துத் தலைவிரிகோலமாய்த் திசைவெங்கணும் பறந்தோடிக்
கத் தொடங்கினர். அதைக் காலாந்தகன் கண்டு, மனம்புழுங்கி நம்மவர்க ளிப்
பாடுபடலேதோவெனச் சீறி கண்களி லனற்பொறிகள் சிதறத்தக்கதாகத் தனது
தேரை விரைவிற்றூரத்திவந்து பிரகாமியசத்தியெதிரில் நிறுத்தி மேருவை
யொத்துப் பாரித்திராநின்ற வில்லை வளைத்துத் திசைகளதிர டங்காரத்தொனி
செய்து அரிய தவங்களினாற்பெற்று யாவராலுந் தடைசெய்வதற்கரிய கொடிய
பாணங்களைத் தேடியெடுத்துப் பூட்டி இவைகளினால் உன்னுடைய பிராணனை
வாங்குகின்றேனென்றுபேசிப் பிரயோகித்தனன். அப்பாணங்கள் வில்லினி
ருந்து வெளிப்பட்டமாத்திரத்தில் குறுகுறென்னுஞ் சத்தத்துடன் அதிக மகி
மைகளைக் காட்டிக்கொண்டுவந்து பிரகாமியசத்தியினுடையதேரையும் வில்லை
யும்பொடிபடுத்தின. அக்கொடுமையா லச்சத்தி நடுங்கிட்டு இந்திரியங்கள் கலங்
கி வாயுலர்ந்து மனம்நடுங்கி சோம்பித்து வில்லையும் பாணங்களையுந் தேரில் நழு
கவிட்டுத் தேகமெங்கணும் வியர்க்கக் கிலேசித்து, யாதொரு செய்கையுமற்றி
ருந்தனள். அச்சம்பவத்தை வசித்துவசத்தியறிந்து இந்த அபலனோ நம்மவட்கு
இவ்வித இடையூறினைச் செய்பவனென்று ஆக்கிரமித்துத் தனது தேரை
மனோவேகத்தினுமுடுக்கித் தூரத்திக்கொண்டுவந்து சண்டமாருதத்தினைப்போல
அவனுடைய தேரிற்பாய்ந்து இமைப்போதில் அவனுடைய கழுத்தைமுறித்துத்
தலையானது கடலிற்போய்விழும்படி யெறிந்தனள். உடனே மூர்ச்சையாகித்
தேரில்விழுந்துகிடந்த பிரகாமிய சத்தியானவள் மூர்ச்சைதெளிந் தெழுந்து
பகைவனெங்கேயென்று தேடினள். அதை மூசலன் பல்லனெனச் சொல்ல

நின்ற இரண்டு அவுணசேனாபதிகள்கண்டு அளவற்ற சேனைகளோடுந் தமது தேரை வாயுவேகத்திலும் விரைவாகத் ஆர்த்திக்கொண்டுவந்து வீதிகளிற் றியெழ உறுத்துப்பார்த்து அடிபேய்களே! சற்றும் எண்ணிக்கை யில்லாமல் எம்மவர்களை இப்படிக்குக் கொல்லத் துணிவீரோ? உங்கள் பிராணனைக் கொண்டுபோகும் யமனைப்போல இங்குவந்திருக்கின்றோம். சற்றுநேரத்தில் உங்களைத் தென்னாட்டிற் குடியேற்றுவோம். இதுவரையில் நீங்களெதிர்த்துப் போராடினவர்களைப்போல எங்களை நினைக்கவேண்டாமென்று இவ்விதம் வீரங் களைப்பேசி வாயுவேகத்திலுமேவிட்டுத் தங்கள்மீதுஉருத்துவருவதை வசித்துவ சத்திகண்டு, இந்திரதனுசையொத்த வில்லைக்கொண்டு இடியையொத்த குணத் தொனியைக்காட்டி மின்னலைப்போன்ற அலகையுடைய சரங்களை சோனைப் பெய்யலுக்குச் சமமாகச் சொரிந்து ஆர்ப்பரித்தனள்.

அப்பாணங்கள் வெளிப்பட்ட மாத்திரத்தில் சாற்றிசைகளிலும் வடவா முகாக்கினிகளைப் பெருக்கிக்கொண்டுசென்று அவ்வவுணர்களுடைய சேனை களிற்பாய்ந்து புகைத்தெரித்துக்கொண்டு ஒருவரையும் அப்புறம் இப்புறம்போக வொட்டாமல் வளைத்துச் சிரமுற்றுந் துளைத்தும், பிளந்தும், கண்டதுண்ட மாக வெட்டியும், கால்களைத்தறித்தும், புசங்களைச் சிதைத்தும், மார்பைப் பிளந் தும், சிரங்களைக் கண்டித்தும், வயிற்றைப்பீறிக் குடர்களை யிறைத்தும், மேரு வைப்போலப் பாரித்திருக்கின்ற தேர்களெல்லாம் அச்சொடிந்து வண்டில்க ளுருண்டு மச்சுகள் நசுங்கிக் கொடிஞ்சிகள் துகள்பட்டுக் கொடை கொடி முதலியவைகள் பறந்துபோகும்படி நாசப்படுத்தியும், நீலகிரியைப்போலக் கறுத்த தேகத்தைப் பெற்றிருக்கின்ற மதயானைகளெல்லாம் வீழ்ந்துக்கலைந்து இரத்தின முகபடாமணிந்த மத்தகங்கள்பிளந்து பனையையொத்த துதிக்கைக் கள் வெட்டுண்டு பிறையை யொப்பவிளங்குந் தந்தங்கள் இறைந்து பாரித்த கால்களற்றுவீழ்ந்தடிக்குத் துஞ்சபட்டுத்தியும், அலைகளைப்போலத்தாவிச் சமர் செய்யவல்ல பஞ்சலட்சணங்களமைந்த குதிரைகளெல்லாம் அல்லோல கல் லோலப்பட்டுப் பின்விவிட்டிருக்கும் பிடரிமயிரையுடைய சிரங்களறுந்து சோர் னவெண்டயங்கள் கலித்துவ கால்கள்தறிந்து சாமரங்களையொத்த வால்கள் பாத்து மாளும்படிக்குச் சாடியும், இவ்விதமாக இரதகசதுரகபதாதிகளாகிய சேனைகளையெல்லாம் அதம் அதப்படுத்தின. அக்காலத்திற்பெருகிய உதிரமான து கடலைப்போல இரைந்து அலைகளைவீசிச் சமுத்திரத்திற் பாய்ந்தது சமர்க் களமுழுவதும் பிணமலைகள்பெருத்து வானத்தையளாவுகின்றன பலகோடி கவந்தங்கள் கூத்தாடின. அவ்வரிய போரிற் பிழைத்திருந்த சில அவுணர்கள் அதிகாயங்களினால் மனம்வருந்தி நிலைபெற்று நிற்கப்படாமையால் திகைத் துத் தங்கள் பிராணனைக் காப்பாற்றிக் கொள்ளும்பொருட்டு மானத்தையும் வீரத்தையும் பறிகொடுத்தோடித் திசைதிசைகளிலும், பூவட்டங்களிலும், பர் வதச்சாரல்களிலும், வனாந்தரங்களிலும், நிவாந்தரங்களிலும் பதுங்கினர். இவ் விதமாக அவுணசேனைகள் வலியிழந்து பின்னிடுவதையும் தேவசேனைகள்

அகோர யுத்தியங்களைச்செய்து சயசாலிகளாய் வீரித்திரிவதையும் அதிசூரர்க ளாகிய முசலனும் பல்லனுங் கண்டு மனம் புழுங்கி நம்மவர்கள் இப்பாடுபடு வதோவெனச்சீறி மந்திரகிரியையொத்துப் பாரித்திருக்கின்ற தங்கள் விற்களை வளைத்துக் குரூரமாகிய அளவற்ற பாணவிதங்களைத் தொடுத்து தமது சேனை களைச் சின்னாபின்னப்படுத்திய வசித்துவசத்தியின்மீது காவேகமாகப்பிரயோ கித்தனர். அம்மாத்திரத்தில் அப்பாணங்கள் திகுதிகென்றெரிந்து வந்து[illegible]ல கொடுமைகளை விளைக்க, அதனைவசித்துவசத்தி சகிக்கமாட்டாது சிறிதுதளர்ந் தனள். அத்தளர்ச்சியை அணிமாசத்தியறிந்துவந்து தனது வில்லில் அளவற்ற பாணங்களையும், சக்கரம்-பிண்டி-பாலம்-தோமரம்-கப்பணம்-முசலம்-சூலம்- தண்டமுதலிய படைகளையுஞ் செலுத்தி ஆர்ப்பரித்தனள். அதற்கு அவ்விரண் டவுணசேனாபதிகளும் இளையாது தாங்களும் பலபாணங்களையும் படைகளை யும் பதிலுக்குப்பதில் பிரயோகித்து அணிமாசத்தி தனது தேரோடு பின்னிட் டோடும்படிசெய்து இரணகளமெங்குஞ் சக்கிராகாரமாயுலாவிக்கொண்டிருந் தனர். அப்போது பிராகசத்தியும் ஈசத்துவசத்தியும், ஈதென்னவிபரீதமென்று திகைத்து தமது இரதங்களைத்தூண்டி ஓடிவந்து அடா அவுணப்பயல்களே! எம்மை நீங்களோ வெல்லவல்லவர்கள்? இதோ வுங்களுயிரை வாங்கி யமலோ கக்குடியேற்றுகின்றோம் பாருங்களென்று வசைமொழிகளைப் பேசிக்கொண்டு தங்கள் விற்களில் தேவாஸ்திரங்களைப்பூட்டி ஓ படைகட்கரசே! அதோ நிற் கின்ற அவுணவீரர்களுடைய சிரங்களைக்கண்டித்து அவர்கள் பிராணனையுண்டு மீண்டுவாக் கடவீர்களென்று சொல்லிப் பிரயோகித்தார்கள். அவர்கள்விடுத்த அவ்விரண்டு அஸ்திரங்களும்வெளிப்பட்டவுடன் தகத்தகாயமாய்ப்பிரகாசித்து அணையிலிரைத்துப் பலகோடிபிரம்மாஸ்திரம்-வருணாஸ்திரம்-வாயுவாஸ்திரம்- குபேராஸ்திரம் முதலியவைகளைப் படைத்துக் குமுறிசொரிந்து புகைகொண்டு எங்குந்தமதுமயமாய் அதிகடினங்களைக் காட்டிச் சீறியிரைந்து காடாந்தகார மாகிய இருட்பெருக்கைப் பிரகாசம்பொருந்திய கிரணங்களையுடைய சூரியனா வன் எங்குமில்லாதபடி மாய்ப்பதுபோல அவுணசேனைகளையெல்லாம் நாசப் படுத்தி இரணகளமத்தியில் மகாபராக்கிரமத்தோடு வீறியிருக்கின்ற அவ் வவுண சேனாபதிகளுடைய மாயங்களையுஞ் சிரங்களையும் கண்டித்தெறிந்து வானகங்கையில்முழுகி மீட்டுந் தம்மைச்செலுத்திய சத்திகளிடத்திற் சென்று சேர்ந்தன.

கேட்பீர்களாக சவுனகாதி முனிவர்களே! எத்தனைபேராலும் சகிக்க வொண்ணாத அவுணசேனைகள் இவ்விதமாக இரைந்து பாந்துபோனதையும் அவர்களைப்போற்றியிருந்த வீரபராக்கிரமசாலிகளாகிய கணக்கிறந்தபடைத்தலை வர்கள் சின்னாபின்னப்பட்டு மாண்டதையும், தேவசேனைகளும் பூதவீரர்களும் சயவுற்சாகங்களுடன் களித்து இரணகள மெங்கும் எதிரின்றித் திரிவதை யும் சகலதேவர்களையும்வென்ற வீராதிவீரனாகிய தேவாந்தகன் கண்டமாத்திரத் தில் வடவாமுகாக்கினியைப்போலக் கொதித்துத் தீப்பொறியெழ நகைத்துக்

கற்பகமலர்களையணிந்த புயாசலங்களையுடைய இந்திரன்முதலியதேவர்கள் தங்கள் பதங்களையிழந்து சின்னபின்னப்பட்டு வாடியோடக் கொடியபோரைச் செய்த செயசாலிகளாகிய நமதுசேனைவீரர்கள், இத்தினம் அபலராகிப் பூதங்களினாலும் படைவீரர்களினாலும் இப்பாடுபடவேதோ? சகலதேவர்களையும் வென்று கீர்த்திப்பிரதாபத்தினைப்பெற்ற எனது கண்காணச்சத்துருக்கள் வலியுள்ளவர்களாய்ப், புசபலபராக்கிரமசாலிகளாகிய இராட்சதவீரர்களை வாட்டிச் ஜயம்பெறுவது வெகுசோர்த்தியாகவிருக்கின்றது? நடந்துபோன காரியங்களை நினைந்துநினைந்து மனம் வருந்துவதினாற் பிரயோசனம் ஒன்றுமில்லை; இனி காலதாமதஞ் செய்யாமல் நானேபோர்முனையில் நடந்து சத்துருக்களை வளைத்துக்கொண்டு கொடியபோரைச்செய்து ஓர்நாழிகைப்போதிற் சின்னபின்னப் படவாட்டிக் கொல்லுகிறேனென்று சபதம்பேசித் தனதுகுலக்குருவாகிய சுக்கிரனை மனதிற்றியானித்தான். உடனே அச்சுக்கிரன் அவனிடத்தில் வந்து அவன்கருத்தின்வண்ணம் இரணக்களத்தில் இறந்துகிடக்கின்ற அவுணசேனைகளையெல்லாம் அவன்யெழுப்பினன், அதைஈசத்துவசத்திகண்டு விழிகளில்வடவாமுகாக்கினி தோன்றும்படியாக ஆலகால விடத்தைப்போலக் கோபித்துத் தனது புருவத்தைநெரித்தனள். அவளுடையகோபத்தினின்று அதிகஇரவுத்திராகாரத்தோடு மற்றொரு சத்திஉற்பவித்து சுக்கிரனிடத்திலோடி அவனையெடுத்துவிழுங்கித் தனதுவயிற்றில் வைத்துக்கொண்டு ஆகாயமார்க்கமாகச் சென்றனள். அவரால் பிழைத்தெழுந்த சேனைகளெல்லாம் ஈசத்துவசத்தியினுடைய கோபாக்கினியினால் மீட்டுமிறந்து போனார்கள். அச்சம்பவத்தைத் தேவாந்தகன்கண்டு கோபமிகுதியினாற் புருவம்நெற்றியிலேற மண்டியெரிந்து வாயுவேகமும் மனோவேகமும் பிற்படத்தக்கதாகத் தனதுதேரை விரைவில் முடுக்கிக்கொண்டுசென்று மகமேருவுக்குச் சமதையாகப்பாரித்துத் தங்கத்தகடுகள் பூண்டிருக்கும் வில்லினையெடுத்து நாணேற்றிச் சர்வசங்கார காலத்தில் தேவாதிதேவனாகிய சிவபிரான் அண்டாண்டபுவன சராசரங்களையொடுக்க நினைத்தபோது ஊழிமேகங்களொன்றுபட்டு வருஷிப்பதைப்போலக் கெலிப்புடன் வீற்றிருக்கின்ற அணிமாமுதலிய எட்டுசத்திகள்மீதும் அவர்களுடைய சேனைகள்மீதும் அடுக்கடுக்காய் அளவற்ற சரவருஷங்களைப் பொழிந்தனன். அப்பாணங்கள் வெளிப்பட்ட மாத்திரத்தில் கோடையிடிகளைப்பெருக்கி, விழிகள்கூசமின்னித், தீயைவீசிப்புகழ்ந்து, பற்பலகொடுமைகளைக் காட்டி அதிக மகிமையுடன் பிரசண்டமாருதத்தைப்போல வேகங்களைக்கொண்டு குமுகுமென்ச்சீறிவர, அதைஜயசாலிகளாகிய பூதசேனைகள் கண்டமாத்திரத்தில் வடவையைப்போலச்சீறிக் குழிப்பட்டிருக்கின்ற விழிகளில் தீப்பொறிகள் சிதறத்தாவி அஷ்டகுலாசலங்களுக்குச் சமதையாகவோங்கியிருக்கின்ற பர்வதங்களைப் பெயர்த்துக்கொண்டு தேவாந்தகனுடைய மார்புக்கிலக்காகக் கிறுகிறெனச் சுழற்றி நின்றிவ்வெனவீசி ஊழிக்காலத்திற் பெருகும் இடிகளைப்போல ஆர்ப்பரித்தனர். அப்பர்வதங்கள் அதிகவேகத்தோடும் திசைகள்தோன்றாதபடி நிறைந்து

குமுறி மேலிட்டுச் சென்று தேவாந்தகனுடைய மார்பிற்போய்த் தாக்கிய மாத்திரத்தில் மலையின்மீதெறிந்த வெள்ளிக் கிண்ணியைப்போலத் தூள்பொடியாகிப் பிரயோசனப்படாமற் போயின. பின்னர் பூதசேனைகள்-கதை-முத்தலைச்சூலம்-சக்கரம்-வேல்-தோமரம்-பிண்டி-பாலம்-எறியீட்டி-எழு-மழு-காலபாசம்முதலிய ஆயுதங்களை ஒன்றனைத்துமாகவீசி யுத்தஞ் செய்தார்கள். அவைகளையெல்லாந் தேவாந்தகனானவன் அளவற்றபாணங்களைத் தூண்டிப் பொடிபடுத்தி மீட்டுங் குரூரமாகிய கோடானுகோடி பாணங்களைக் கரவேகங்கொண்டு செலுத்திப் பூதசேனைகளுடைய சரீரங்களையெல்லாஞ் சல்லடைக் கண்கள்போலாகும்படி துளைத்தனன். அக்கொடுமைக்கு அப்பூதசேனைகள் ஆற்றமாட்டாது மதிமருண்டு வாடியுஞ்சோர்ந்தும் மரணமூர்ச்சையடைந்தும் பங்கப்பட்டும் மானமிழந்தோடியும் இவ்விதமாகத் தாபரித்து எதிர்நின்று போராட வகையில்லாமற் பின்னிட்டனர்.

அச்சம்பவத்தை அணிமாதி அட்டமாசத்திகளுங்கண்டு மனம்பொறாமல் தயிரிய சாலிகளாய்த் தங்களிரதங்களை வாயுவேகத்தினு முந்தித் தூரத்திக்கொண்டுவந்து வானையளாவிநிற்கின்ற பர்வதங்களையும் திசைகள்மூடத்தழைத்திருக்கின்ற மரங்களையும்-தண்டம்-பிண்டி-பாலம்-எழு-மழு முதலிய ஆயுதங்களையும் சோனைமாரியைப்போல அமோகமாய்த் தேவாந்தகன்மீது சொரிந்து அட்டகாசஞ்செய்தார்கள். அச்செய்கைக்கு இராசாதிராசன் நகைத்துப் பிறகத்தையொத்த தனதுவில்லில் அதிகதீட்சணியமுள்ள பாணங்களை அபாரமாகப்பூட்டிப் பிரயோகித்துத் தன்மீதுவீழ்வருகின்ற பர்வதங்கள் முதலானவைகளைத் தூகள்பறக்கத் தாட்டிக்கண்டித்தும், துண்டித்தும், துண்டித்தும், சின்னப்படவெட்டியும், தட்டியும், இடித்தும், பொடித்தும், இவ்விதமாக இமைப்போதில் சூரியன்முன் பனிபோலவிலக்கி ஆர்ப்பரித்துமீட்டும் ஆயிரங்கோடி நாராசங்களைச்செலுத்தி அவர்களேறியிருந்த பாரித்ததேர்களை வண்டில்-அச்சு-மச்சு-குத்துக்கால்-கொடிங்கை-கொடி-கொடை முதலிய உறுப்புகள் வெவ்வேறாகச் சிதைந்துருளும்படிக்குச்சாடி, வேகமுள்ள குதிரைகளைக் கண்டதுண்டப்படுத்திச் சாரதிகளைக் கொன்று, அவர்களைச் சூழ்ந்திருக்கின்ற பூதசேனைகள்மீது பின்னும் அளவற்றகோரமாகிய பாணங்களைப் பிரயோகித்தனன். அவ்வாளிகள் வெளிப்பட்டவுடன் புகைத்துதீயையிறைத்துக் குமுகுமென்றும் ஆவ்வுவென்றும் உரப்பிக்கொண்டு அதிவேகமாகவந்துபாய்ந்து பூதசேனைகளுடையமார்பையுங் கண்டத்தையும் முகத்தையும் புயங்களையுஞ் சல்லடைக் கண்களாகத் துளைத்தும் கண்டித்தும் பிளந்தும் வெட்டியும் இரணக்களமெங்கும் உதிரப்பிரவாகம் பெருக்கெடுத்தோடச்செய்தன. இவ்வாறு தங்கள் இரதங்களும் பூதசேனைகளும் சின்னபின்னப்பட்டுச் சிதறி மயங்கிப்போனதை அட்டமாசத்திகளுள் அணிமாசத்திகண்டு மனங்கொதித்து மானமுங் கோபமும் மனதைவாட்ட வடவாமுகாக்கினியைப் போலக் கோபித்து, அதிக வேகத்தோடும் தேவாந்தகனுடைய இரதத்திற் பாய்ந்து

தனது வாளாயுதத்தைக் கிறுகிறெனச்சுழற்றி அவன்புயத்தின்மீது வீசினள். அப்போதவ் வாளாயுதமானது அவன் புயத்தின்மீது பட்டுத் துணிபட்டுப் போயது. உடனேதேவாந்தகனுனவன் ஊழியனலையொப்பக்கொதித்து உருத்தெழுந்து தானுமோர் வாளாயுதத்தை யெடுத்து அணிமாசத்தியின்மீது வீசினன்; அதனை அவள் தனது கையிறுதப்பரித்து நாற்றிசைகளிலும் வீர்வீரென வீசி அவனுடைய சொர்ணமகுடத்திலிருள்ள இரத்தினங்களெல்லாஞ் சிதறிச் சீரமுழுவதும் வெட்டுண்டு நெற்றியிற் கட்டப்பட்டிருக்கின்ற பட்டமுஞ் சின்னபின்னப்பட்டு நிலத்தில் உதிரும்படியாகச் செய்தனள். உடனே தேவாந்தகனுனவன், மண்டியெரிந்து சர்ப்பத்தைப்போலச்சீறி வேறொருவாளாயுதத்தைக் கரத்திற்கொண்டு அணிமாசத்தியினுடைய நாசியையறுக்கும்படி நேர்ந்தனன். அதனை யச்சத்தியானவள் தனது கையிலிருந்த வாளாயுதத்தினால் துணித்து மீண்டனள். அப்போது தேவாந்தகனுனவன் இரவுத்திராகாரமாகக் கோபித்து, அடிபேயே! எங்கே ஓடுகின்றனை நில்லுநில்லு யான்வைத்திருக்கின்றபடைகளெல்லாம் அற்பமாகிய வோர்வாளாயுதத்தை ஒடித்துவிட்டோமென்று கர்வமடையாதே? முன்பு தேவர்களையெல்லாஞ் சின்னபின்னப்பட வாட்டிச் ஜயம்பெற்றிருக்கின்றநான் இப்போதுனக்கும் உன்னுடன்வந்திருக்கின்ற இப்பெண்பிள்ளைகட்கும் அஞ்சவேயினனென்றெண்ணவேண்டாம்; இதோ உங்களனைவரையு மிமைப்போதில்வாட்டி விண்குடியேற்றுகின்றேனென்று ஆக்கிரமித்து மந்திரகிரியைப்போலவிளங்குந் தனதுவில்லையெடுத்துநாட்டி இருகுதைகளும் ஒன்றுபடவளைத்து நாணேற்றிக் குணத்தொனி செய்தனன்; அத்தொனியைக்கேட்ட மகிமாசத்தியானவள் மண்டியெரிந்து அனலையொப்பச் சொலித்திருக்கும் முன்னைக்கண்களையுடைய அவுணனே! ஏன் இதற்குள் பொரியைப்போலத் துள்ளுகின்றனை? சற்றும் பயமில்லாமல் எங்கள் முன்னம் இவ்வித வார்த்தைகளைப் பேசியபடியால், உனக்கு முடிவுகாலஞ் சமீபித்தது; இனிப் பதனமாய்த் தப்பித்துக்கொள்ளக் கடவையெனச்சொல்லித் தனது கரத்திலேந்தியிருந்த சக்கராயுதத்தைவிடுத்து அவ்வவுணராசனுடைய கொடியினை நிலத்தில் வீழ்த்தினள். உடனே அப்பாதகன் மானமேலிட்டவனுகித் தனது தேரினின்று நிலத்திற் குதித்து அதிக கோபாவேசத்துடன் தண்டாயுதத்தைக் கரவேகமாகச் சுழற்றிக்கொண்டு இடசாரிவலசாரியாகச்சுழன்று தன்னையெதிர்த்துவருகின்ற எட்டுசத்திகளையும் அப்புறமிப்புறம் போகவொட்டாமல் வளைத்துக்கொண்டு ஒவ்வொரு குறிவைத்து மோதியும், அவர்கள் மோதுவதைத் தடுத்தும், ஆட்டுக்கடாவினைப்போலச் சிறிது பின்னிடைந்தும், மீட்டுமவர்களருகிற் சென்று மார்பு-புயம்-தொடைமுதலிய விடங்களில் கோடையிடியைப் போலத் தாக்கியும், இவ்விதமாக இரணக்களமெங்குஞ் சுழற்காற்றினைப்போல வட்டமிட்டு எமனுங்கண்டு நடுங்கும்படிக்குத் தண்டாயுதப்போரினை வரிசைக்கிரமப்படி நடத்தி அகோரயுத்தத்தினைச் செய்தனன். அந்த யுத்தத்திற்கு அவ்வெண்வகைச்சத்திகளும் ஆற்றமாட்டாதவர்களாய்த் திகைத்து, அணிமாசத்தி

புலனைப்பட்டு மயங்கினின்றனள். மகிமாசத்தி காயங்களின் உபத்திரவத்தினால் வருந்தித் தூங்கித்திருந்தனள். கரிமாசத்தி மனவூக்கமற்றுப் பிரமித்து நின்றனள். லகிமாசத்தி மிகவும் வருந்தி ஏங்கினள். பிராத்திசத்தி சரீரம் பதைபதைக்க நின்றனள். பிராகாமியசத்தி எழுந்திருக்கச் சக்தியற்றுக்கிடந்தனள். ஈசத்துவசத்தி துக்கசாகரத்தி லழுந்தினள். வசித்துவசத்தி பலவிதமாகவைது பெருமூச்செறிந்தனள். இவ்வாறு சித்திதேவி படைத்தருளிய அட்டமாசத்திகள் மயங்கியும் தூங்கித்தும் பிரமித்தும், ஏங்கியும், பதைபதைத்தும், சத்தியற்றும், சோபித்தும், பெருமூச்செறிந்தும், படாதபாடுகளைப் பட்டுப் பின்னிட்டதை விநாயகமூர்த்தியினுடைய வலதுபாகத்தி லிருக்கின்ற புத்திதேவியார் கண்டு திடுமுகைத்து ஒருபாதகன் நம்மவரையெல்லாம் இப்பாடு படுத்துவதோவென்ன மனம்வாடிக்கத் திருமேனிமுழுவதும் புழுங்கி மயிர்க்கால்கடோறும் அனல்வீசக் கொதித்து விநாயகமூர்த்தியினுடைய திருவடிகளிற் பணிந்தெழுந்தனர்; உடனே அவரெதிரில் இரண்டு பர்வதங்களைப்போன்ற முலைகளும், மேகமண்டலத்தையளாவிய முகமும், ஆகாயத்தை யளாவிய முடியும், அட்டதிசைகளிலும் பரந்து சிவந்திருக்கின்ற சடைகளும், அழலெழச் சிவந்து காட்டுகின்ற விழிகளும், பற்பல ஆயுதங்களையேந்திய நீண்டகரங்களும், அடியெடுத்துவைக்குந்தோறும் ஆதிசேடனை நெளியச்செய்யவல்ல பருத்தகால்களுமுடைய ஓர்சத்தியானவள் பவுத்தேவியென்னும் பெயரோடுண்டாகித் தன்னைப்படைத்தருளிய புத்திதேவியாரைப் பணிந்தெழுந்தனள். உடனே புத்திதேவியார் அச்சத்தியைப்பார்த்து மகளே! இதோ நம்மெதிரில் வீரபராக்கிரமத்தோடெதிர்க்கின்ற தேவாந்தகனையும் அவனைக் கடல்போலச் சூழ்ந்திருக்கின்ற சேனைகளையுஞ் சின்னபின்னமாக நாசஞ்செய்து பின்னர் இங்ஙன மீளக்கடவையென்று ஆக்ஞாபித்துவிடைகொடுத்தனர். அச்சத்தியும் அதற்கிசைந்து சென்று தேவாந்தகனுடைய சேனாசமுத்திரங்களில் சகல பிராணிகளையும் வாட்டவெழுந்த ஆலகால விடத்தினைப்போலப்பாய்ந்து சிலரைசின்னபின்னப்படவாரிப் பூமியிலறைந்தும், சிலரை ஆகாயவெளியிற்சுழற்றிக் காற்றிற்சருகையொப்பவீசியும், சிலரை விண்டு பிரமனுலகங்களில் அழுவிழச் செலுத்தியும், சிலரைச் சத்தசாகரங்களிலும் பெரும்புறக்கடலிலும் தவளைகளைப்போல மிதக்கும்படிக்குக் கடாவியும், சிலரைத்தூக்கித் தெங்கின்கனியை யொப்பச் சூரியனுடைய ரதத்திலமோதியும், சிலரைத் திசைகடோறும் இறைத்தும், சிலரை அம்மானையையொப்பச் சுலவியெற்றியும், சிலரைச்சரீரம் நொறுங்கும்படியாக அண்டச்சுவரிற் றாக்கியும், சிலரைப் பஞ்சைப்போலெறிந்தும், சிலரை யமலோகஞ் சேர்த்தும், சிலரைப் பொன்னுட்டிற் போக்கியும், சிலரை வடவைக்கனலுக் கிரையாக்கியும், சிலரை வாயுமண்டலத்திற் சக்கிராகாரமாகச் சுழலவீசியும், சிலரைத் தீவாந்தரங்களி லெறிந்தும், சிலரை உலகமெங்கணும் பரப்பியும், சிலரை வலிபாதங்களால் தேய்த்துக் கொன்றும், சிலரைவிரல்களினுலெற்றி மாய்த்தும், சிலரை மண்ணுடன் கலந்துபோக மிதித்தும், சிலரை

உதைத்துருட்டி வதைத்தும், சிலரைப் பருத்த கரங்களினாற் பிசைந்துதியும், சிலரைப் பனைநாரினைப்போலக் கிழித்தெறிந்தும், சிலரைக் கற்பகத்தையொத்த புயங்களினாலிறுக்கி வாட்டியும், சிலரைப் பாயும்வேகத்தினால் மாய்த்தும், சிலரை அதட்டிக் கொன்றும், சிலரை வார்த்தையுரப்பிற் சிதைத்தும், சிலரை வெறித்த பார்வையால் மடித்தும், சிலரை எழுவாயுதத்தினால் வதைத்தும், சிலரை மழுப்படையைக்கொண்டு மாய்த்தும், சிலரைக் கொழுவினாலடக்கியும், சிலரை முத்தலைச் சூலத்தினாற் குத்திக் களத்திற் படுத்தியும், சிலரைத் தண்டாயுதத்தினால் மோதிக் கொன்றும், சிலரை வில்லினாலடித்துத் துகள் படுத்தியும், இவ்விதங்களாக இரணக்களம்முழுவதுஞ் சூறைமாருதம்போலச் சுழன்று சுழன்று தேவாந்தகனுடைய சேனைகளில் ஒருவரையுந் தப்பவிடாமல் நாசஞ்செய்து, பின்னர் அவனையுமெடுத்துத் தனதுபிலத்தையொத்த வாயிற்போட்டு மெல்லமெல்ல உமிழ்நீரைப்போல விழுங்கிக் கொண்டு அவ்விடனின்று நீங்கித் தனது தலைவியாகிய புத்திதேவியைநோக்கிச்சென்றனள்.

அப்போது யாவராலும் அழியா வரம்பெற்றிருக்கின்ற தேவாந்தகனானவன் சூக்குமவடிவோடு அவள் வயிற்றினின்றும் வாயின்வழியாக வெளிப்பட்டு உய்ந்தோம் உய்ந்தோமென்றோடித் தனது தந்தையிருக்கின்ற சாத்திர மென்னும் பட்டணத்தை யடைந்து இளைப்பாறினன். அச்சத்தியுந் தன்னையீன்ற புத்திதேவியாரிடத்தில்வந்து பணிந்தெழுந்து கரங்களைச் சிரமேற் கூப்பிநின்று அளவற்ற துதிகளைச்செய்து அன்னையே! தேவரீரிட்டருளிய கட்டளையின்படியே தேவாந்தகனைப் புடைசூழ்ந்திருந்த சேனைகளையெல்லாம் மாய்த்தேன். அவனையும் எனது வாயிலிட்டு விழுங்கி வயிற்றில் வைத்திருந்தேன். பின்னை அவன் சூக்ஷ்ம வடிவங்கொண்டுவெளிப்பட்டு ஓடிப்போயினன். இனிமேலும் அவன் யுத்தஞ்செய்ய வருவானாயின் தப்பாது கொல்லுவேனென்றுசொல்லி அங்ஙனேயிருந்தனள். முன்னர் சாத்திரநகரைநோக்கிச் சென்ற தேவாந்தகனானவன் அங்குவசித்திருக்கின்ற தனதுதந்தையை யடைந்து பணிந்தெழுந்து தனக்கு நேர்ந்த அபசயங்களைக்கூறி இனி எனதுசத்துருவை இமைப்போதில் வெல்லத்தக்க உபாயத்தினை எனக் கருளல்வேண்டுமென்று பிரலாபித்துக் கேட்டுக்கொண்டனன்.

சகல மந்திரங்களிலும் வல்ல இரவுத்திரகேதுவானவன், தமதுகுமாரன் சொல்லிய விசனத்தையுங் கேட்டு அவனுக்கு வெற்றியைத்தரவல்ல ஓர் மந்திரத்தைத் தனக்குள் ஆராய்ந்து அதனைச் சாஸ்திரவிதிப்படி அதனதுபீஜத்தோடும் அனுட்டிக்கத்தக்க முறைமையோடும் அவனுக் குபதேசித்து, மைந்தனே! ஒரு வேள்விமுன்னிலையில் இம்மகாமந்திரத்தைச் செபஞ்செய்து வருவையாயின் அவ்வேள்விக்குண்டத்தினின்று சகலமானபேரும் நகைக்கும்படியாக வோர்குதிரையுண்டாகும். அக்குதிரையின்மீது நீ யேறிக்கொண்டு யுத்தஞ் செய்வையாயின் உடனே ஜயமடைவை யென்று சொல்லினன். அக்காரணத்தைச் சூரிய

னானவன் கண்டு பயந்து மறைந்தவன்போலத் தனது கிரணங்களனைத்தையும் ஒடுக்கிக்கொண்டுசென்று மேற்றிசைக்கடலிற் குளித்தனன். உடனே அவுணபாதகர்களுடைய மனம்போல எங்கு மிருள்மூடிக்கொண்டது. அன்றிரவிற்றானே தேவாந்தகனானவன் ஆறுகோணமாக ஓர் ஓமகுண்டஞ் சமைத்து அதில் சாத்திரமுறைமைப்படி தீயினைவளர்த்து அவ்வோமத்திற்கு வேண்டியபொருள்களனைத்தையுந் தனித்தனியே அதிற்சொரிந்து தனது தந்தையா லுபதேசிக்கப்பெற்ற மந்திரத்தை அனந்தமுறை கணித்திருந்தனன். அப்போது அவ்வோமகுண்டத்தினின்று மைநாகபர்வதம்போல மகாபராக்கிரமத்தோடுஓர்கறுத்த குதிரையானது உலகமெல்லாம் நடுக்கும்படியாக உண்டாயது. அதனோடு அண்டங்களையெல்லாங் கைகளினாற் றட்டிப் பெயர்க்கவல்ல வலியும் வீரமு முள்ள அளவற்ற சூரர்கள் ஆயுதபாணியரா யுண்டானார்கள். அவ்வற்புதத்தைத் தேவாந்தகன் பார்த்து நாமுய்யத்தக்க மார்க்கம் இதைவிட வேறென்னவிருக்கின்றதென்று சந்தோஷித்து அவ்வேள்வியைப் பூர்ணாகுதிசெய்து நிறைவேற்றினன். உடனே தனது ஒற்றை வண்டிலைப் பூண்ட தேரில் ஏழு பச்சைக் குதிரைகளைப் பூட்டி நடத்துகின்ற சூரியனானவன் அவ் வேள்விக்குண்டத்தினின்றும் உதித்த குதிரையைக் காணுதற்கு வருவான்போலக் கீழ்த்திசைக் கடலில் உதயமாயினன்.

இப்பால் தேவாந்தகனானவன், நித்தியவிதிகளை முடித்துக்கொண்டு அறுவகைச்சுவையோடு பிராமணபோசனஞ் செய்வித்து சொர்க்க மத்திய பாதாளங்கள், திசைகள், தீபாந்தரங்கள் முதலிய விடங்களில் தான்வைத்திருந்த அளவற்ற மூலப்படைகளை ஏககாலத்தில் வரவழைத்து அவர்கட்கெல்லாங் கரி, பரி, தேர், படைக்கலம் முதலிய சிறப்புகளைக்கொடுத்து ஓமகுண்டத்தினின்று முதித்த குதிரையின்மீது ஆரோகணித்து அக்குதிரையோடு முதித்த வீரர்களும், தன்னைப் புடைசூழ்ந்துவரும்படியாக அந்நகரத்தினின்றும் வெளிக்கொண்டு முன்போலவே யுத்தகளத்தை யடைந்தனன். மகோற்கடமூர்த்தியும் முன்னைய நாள் அத்தமனகாலத்தில் யுத்தகளத்தைவிட்டு அரசனுடைய அரண்மனையின் கண்படுத்திருந்து அத்தினக்காலையில் நித்தியவிதிகளை முடித்துக்கொண்டு யுத்தகளத்தையடைந்தனர். ஓர்பால் முன்னர் நராந்தகனுடைய யுத்தத்திலுண்டான குரூரனும், ஓர்பால் அணிமாதி அட்டமாசத்திகளும், ஓர்பால் புத்திதேவியா லுண்டான பௌத்தேவியும், ஓர்பால்சித்திதேவியா லுண்டான சேனைகளும் ஓர்பால் மகோற்கடமூர்த்தியா லுண்டான பூதவீரர்களும், தனித்தனியே அணிவகுத்து நின்றார்கள். தேவாந்தகனும் தனது சேனைகளையெல்லாம் அணிவகுத்துநின்றனன்.

கேட்டீர்களோ சவுனகாதிமுனிவர்களே! இவ்வாறு இரணபேரி, ஜயபேரி, வெற்றிச்சங்கம், தவண்டை, மல்லரி, சல்லரி, ஆகுளி, சின்னம், எக்காளை, தம்பட்டைமுதலிய போர்ப்பறைகள் கோடைகால இடிகளுக்கொப்பாகக் கலை

கனென் றதிரத்தக்கதாய்ப் புறப்பட்டுவந்த இருவகைச் சேனைகளினும் உள்ள
இரத கஜ துரக பதாதிகளின்பெருக்கை என்னென்றுசொல்லுவேன்? பொன்
மயமாகிய வண்டில் அச்சு மச்சு முதலிய சிறப்புகளைப்பெற்ற தேரணிகள்
இவ்வளவெனக் கணிக்கப்படுவனவோ? சித்திரமுகபடாம் பிரகாசிக்கப் பிறை
யை திகர்த்துக் காட்டுங் கோடுகளில் வயிரப்பூண்களைத்தரித்து இருப்புலக்கை
களைத் துதிக்கரங்களிலேந்தி நீலகிரியையொத்த பாரித்ததேகங்களுடன் மேகங்
களுமஞ்சி யோட வீறிட்டுச்செல்லும் யானைக்கூட்டங்களை ஒருவராலுங் கணிக்
கப்படாது. இரத்தினவெண்டயங்கள் கால்களிற் சத்திக்க அலைகளைப்போலப்
பாயும் வேகமுள்ள புரவிப்பந்திகள் அளவிடப்படுவனவோ? வில் வாள் வேல்
தண்டம் சூலம் சக்கரம் தோமரம் பிண்டி பாலம் முசலம் கப்பணம் முதலிய
பற்பல படைகளைத்தாங்கி வீராவேசத்துடன் வடவையும் ஆலகாலமும்பலவுருக்
கொண் டெழுவதைப்போற் கொக்கரித்துச் சீறிவரும் படைவீரர்களின் பெருக்
கைப் பிரமனாலும் நிதானிக்கப்படாது. இத்தகைய சதுரங்கசேனைகளினும்
பெருத்துண்டான பலவாத்திய வதிர்ச்சியும் ரதங்களோடு தேற்காரத்தொனியும்
மதயானைகள் வீறிடுமொலியும் புரவிப்பந்திகளின் கனைப்பிரைச்சையும்படை
வீரர்களுடைய ஆரவாரங்களும் ஏகமாயோங்கிப் பிரளய காலத்தைப்போல்
மண்விண் திசைகளெங்கணுஞ் செவிடுபடமுழங்கின. ஆகாயத்தை யளாவிச்
செல்லும் இரதபந்திகளின்மீது நாட்டியகொடிகளும், யானைகளின்மீது விளங்
குஞ் சண்டாக்களும், படைவீரர்கள் தாங்கியிருக்கின்ற வெற்றித்துவசங்களும்,
வானவெல்லையைமூடிப் படபடென்றசைந்தன. இவ்வித ஆடம்பரங்களுடன்
சமர்க்களமுழுவதும் ஊசிநாட்ட விடமில்லாமல் நிறைந்திருக்கின்ற இருதிறச்
சேனைகளு மனவெழுச்சியுடன் போரைக்குறித்துமேலிட்டு இரதவீரர்களோடு
இரதவீரர்கள் கைகலந்து கெற்கரத்தொனிகளைச் செய்தோடும்பொன்வண்டில்
களை யுருட்டி அச்சுக்களை முறித்து மச்சுக்களைத் தூள்படுத்திக் குத்துக்கால்
களை நறுக்கிப் பலகொத்துமணிகள் கலகலவென்றசையக் கொடுங்கைகளைச்
சிதைத்துச் சொர்ணகலசங்களை நிலத்திலுருட்டிச் சாரதிகளைமாய்த்துப் பூட்டி
யிருக்கின்ற புரவிப்பந்திகள், சிங்கநிரைகள், புலிக்கூட்டங்கள், முதலியவை
களைக் களத்திற்கிடத்திச் சிறகற்றபர்வதங்களுக்கொப்பாக அளவற்ற இரதங்
களை இரணக்களம்முழுவதுங் குவித்தும், யானைவீரர்கள்மேலிட்டு இருபுறங்
களினுமாறியொலிக்கும் பருத்தமணிகளைக் கலகலவென் றசைந்தாடத் தாக்கி
இரத்தினமயமாகிய சித்திரமுகபடாம்போர்த்திருக்கும்மத்தகத்தைச்சதைத்து
இருப்புலக்கைகளைப் பனையையொத்தசையும் பருத்ததுதிக்கரங்களைச் சர்ப்பங்
களைப்போலச் சமர்பூமியெங்கணும் புரளத்தரித்து, நட்சத்திரராசிகளுக் கொப்
பாக முத்துக்கள் திசைதோறு மிறையும்படிக்குத் தவளநிறம்பெற்ற வலிய
தந்தங்களைப்பிளந்து, சிறியவிழிகளைக்கல்லியெறிந்து மேகங்களுமஞ்ச வீறிடுந்
தொனியைப்பெற்ற பருத்தகழுத்துக்களைவெட்டி, உரலைப்போன்ற பாரித்த
கால்களைத்தகர்த்து, அசைவுபெற்றிருக்கும் வால்களைத் துண்டித்து, நீலகிரிக்

கொப்பாகவிளங்குங் கரியவுடல்களை இருகூறுக்கிக், காளமேகங்கள் வழுவி
யதுக்கொப்பாக அளவற்றயானைகளை யுத்தகளமுழுவதும் வீறிட்டுவிழத்தள்ளி
யும், குதிரைவீரர்களோடு குதிரைவீரர்கள்மலைந்து சத்துருக்கள் திடுக்கிடும்
படிக்குப் பிடரிமயிர்களலையக் கனைக்குங் குரலோசையினை வாய்ந்த கழுத்துக
ளைத் துதித்துக் கடிவாளங்களை நறுக்கி நவரத்தினசெதமாகவிருக்கின்ற சேணங்க
ளைச் சிதைத்துச் சாமரையையொத்த நீண்ட வால்களைக் காற்றிற் பறக்க
வெட்டியெறிந்து, வெண்டயங் கலகலவெனப் பாயுங் கால்களை முறித்துங் கட
லினிடத்தெழும் அலைகள் மறிவதைப்போலப் போர்க்களமெங்கணும் அளவற்ற
குதிரைகளை மாய்த்தும், படைவீரர்களோடு படைவீரர்கள் முனைந்து சிரங்க
ளிற் கவித்திருக்கின்ற வயிரமுடிகளைச் சிதைத்து, வீரபட்டங்களைத் தூள்செய்
து முத்தாரங்களை தாங்கிக் கலகலவென்று மோசையெழு வசனிக்குங் கழுத்துக
ளை யறுத்து கொடுமைகளைப்பேசும் வாய்களைப் பிளந்து பற்களை யுதிர்த்துத் தி
னை யறிந்து கொடுமைகளைப்பேசும் வாய்களைப் பிளந்து பற்களை யுதிர்த்துத் தி
யெழ உறுத்துப்பார்க்குங் கண்களைக் கல்லி மணிகளிட்டிழைத்திருக்கும் வாகு
வலயங்களைப் பொடியாக்கிப் பர்வதாகிருதியாக ஓங்கித்திரண்டிருக்கும் புயங்
களைச் சரித்து வயிரகவசங்களைத் தூள்செய்து விசாலமாகிய மார்பைப்பிளந்து
விற்களையும் டாணைக்களையுங் கொண்டிருக்கும் கரங்களைக்கண்டித்து வீரவெண்
டயங்களை நறுக்கி ரிஷபத்திலைப்போலக் கெம்பீரமாக நடக்கும் கால்களைத்
துண்டித்து முதுகுகளில் இறுக்கியிருக்கும் அம்புபெய்குறைகளை அறுத்தெறிந்
து அவைகளி லடங்கியிருந்தபலபடைகளைத் தூள்படுத்திச் சண்டமாருதத்தின்
மோதலிற்பட்ட மரங்களைப்போல யுத்தகளமுழுவது மளவற்றபதாதிவீரர்களை
சின்னாபின்னப்பட வாட்டியும் இவ்வாறு வீராதிவீரர்களாய் புசபலபராக்கிரம
சாலிகளாயிராநின்ற இருதிறப் படைகளினுமுள்ள நால்வகைச் சேனைகளுங்
கலந்து போராடுகையில் அவுணசேனைகள் மனவெழுச்சியுடன் மேலிட்டிருப்ப
தைத் தேவசேனைகள்கண்டு வடவாமுகாக்கினியைப்போலச் சீறி இப்பாதகர்க
ளுடைய வலியை அடக்கவேணுமென்று கெக்கலிகொட்டி மரங்கள் பர்வதங்
கள் ஏனைய படைகள் முதலானவைகளைக்கொண்டு தாக்கியபோது அவுண சே
னைகளும் தீரமாகிக் கொதித்து மின்னலைப்போலப் பளபளத்துவிளங்கும் வா
ளாயுதங்களை வீசி வெட்டியும் கூரிய வேல்களினாற் குத்தியும் பருத்த தண்டாயு
தங்களைக் கறகறெனச் சுழற்றி மோதியும், தங்கத்தகடுகள் பதித்திருக்கின்ற நீ
ண்ட விற்களைவளைத்து நாணேற்றிக் குணத்தொனிகொண்டு விடத்தொகையை
விட்டிருக்கின்ற கொடிய பாணவருஷங்களைப் பொழிந்தும், கப்பணங் கழு
முள் பிண்டி பாலம் சக்கரம் சூலம் முதலியபடைகளை நுன்றவந்தமாகக் கடா
வியும் வாட்போர்புரிந்தனர். அக்காலையிலமரர்களுந் தேவபடைகள் சிறிதுமஞ்சாமல்
திடசித்தராய் வடவையைப்போற் பொங்கி வானத்தை யளாவித் திசைகளை மூ
டித் தழைத்திருக்கின்ற மராமரங்களைச்சக்ராகாரமாகச்சுழற்றிக் கைக்கொண்
டமட்டும் மோதியும், பருத்தமலைகளைச் சென்னைபொப்பக் கடாவியும், இருப்
புலக்கைகளினாற் சாடியும், தண்டாயுதங்களைக்கொண்டு மோதியும், வினாதடிக

ளை வீசியும் அளவற்ற யுத்தங்களைச் செய்தனர். இவ்விதமாக சூரசாலிகளாகிய தேவசேனைகளும் அவுணசேனைகளும் பின்னிடையாமல் ஒருவரையொருவர் வெல்லவேண்டுமென்கின்ற ஆவேசத்தினால் கைகலந்து போராடு முன்னிலையில் இருதிறச் சேனைகளினும் அளவற்றபேர் சின்னபின்னப்பட்டு இரணக்களமெங்கணும் மலைகளைப்போலவிழுந்து குவிந்தார்கள். அப்போது அச்சமர்க்களத்தினுண்டான உதிரவெள்ளமானது ததும்பிக்கொண்டோடியும், கடலிற்பாய்ந்து அக்கடலினுடைய கருநீரையெல்லாஞ் செந்நீராக்கியது. அப்பிரவாகத்தில் காக்கை கழுகு பருந்து முதலியவைகள் மூழ்கிக் களித்து வானத்தெழுந்து சிறகுகளை புலர்த்தி வட்டமிட்டன. நாய் நரி முதலிய மிருகங்கள் மாமிசங்களையும் மூளைகளையும் பிடுங்கி வாரிவாரித் தின்று ஊளையிட்டன. பலகோடி கவந்தங்கள் நாடகரைப்போல நடித்தன. பூதபசாசங்கள் காளிக்கூட்டங்கள் பசிதணிந்து கரங்களைக் கோர்த்துக்கொண்டு பறைசற்றியும், வெறியாடலைச்செய்தும் தித்தோமென நடித்தும் படைவீரர்களுடைய புஜத்தைப் புகழ்ந்தும், பாடியுங் கொண்டாடின.

இவ்வாறு யுத்தகளமானது பொலிவுறும்படி இருதிறச் சேனைகளும்பின்னிடையாமல் அமோகமாகிய போரை விளைத்துவரும்போது முன்னர்மகோற்கடமூர்த்தியா லுண்டான குரூரனனவன் தனதுசேனைகளில் அளவற்றபேர் மாண்டிருப்பதைக்கண்டு தனதுதேரை மனோவேகத்தினும் விரைவாகத் தூர்த்திக்கொண்டுவந்து தேவாந்தகனெதிரில் நிறுத்தி, அடா ராட்சசப்பயலே! நேற்றையதினம் ஓர் பெண்பூதஞ்செய்த போரினுக்கஞ்சிப் பின்னிட்டோடிப்போன நீ இத்தினம் மகாபராக்கிரமசாலியா யுத்தகளத்தில்வந்து சண்டைகொடுக்க நேர்ந்தனை. இத்தினம் நீ எவ்விதத்திலும் ஊரைப்போய் சேருவோமென்னும் எண்ணத்தை விட்டுவிடக்கடவை. இதோசற்றுநேரத்தில் உனதுயிரையமலோகத்திற் குடியேற்றுவன் பயந்தோடினும் விடமாட்டேனென்று அதிககோபங்கொண்டவனாய்த் தன்கரத்தில் மேருகிரியைப்போல விளங்கும் வில்லைநிறுத்தி நாரியைப்பிடித்து ஒருதரம் டங்காரவோசையைக் காட்டினன். அவ்வோசையந் திகிரியினால் அண்டங்களனைத்தும் அல்லோல கல்லோலப்பட்டு அவற்றுட்பட்ட பிராணிகள் பொறிகலங்கித் திப்பிரமைகொண்டு நின்ற நின்ற விடங்களிற் சோர்ந்து கிடந்தன. இவ்விதமாகக் குரூரனனவன் பலவகைகளைக்கூறி நாணொலியைக் காட்டியமாத்திரத்தில் தேவாந்தகனானவன் கோபமிகுதியினால் வடவையைப்போலச்சீறி, அடா பூதப்பயலே! சற்றும் பயமில்லாமல் இவ்வார்த்தைகளை என்முன்னம்பேசினை உனக்கும் உன்னைச் சேர்ந்தவர்கட்கும் முடிவுகாலஞ் சமீபித்தது பதனமாய்த் தப்பித்துக்கொள்ளக் கடவையெனச் சொல்லித் தனதுகரத்தில் மந்தரகிரியைப்போல விளங்கும் பாரித்த வில்லை காட்டி நாணைநிட்டுக் குணத்தொனி காட்டினன். அத்தொனியினால் அந்தரவாசிகளும் மற்றையருந் திகிற்பட்டு மிகவும்வாடி மயங்கினர். இப்பால் குரூரனனவன் தேவாந்தகனுடைய செய்கைக்குமெச்சிச் சிரக்கம்பிதஞ் செய்தவ

னாய்த் தனது கரத்திற்பிடித்த வில்லென்னுமேகமானது கணைகளென்னுமழைத்தாரவைப் பெய்ததுபோல அதிககுரூரங்களையும் கொடுமைகளையும் பெற்றிருக்கின்ற வயிரவாளிகளை அமோகமாகச்செலுத்தி ஆர்ப்பரித்தனன். அவைகள் வெளிப்பட்டவுடன் புகைத்தெரித்து அனலைவீசி எங்கும்பரந்து அதிவேகமாக வரும்போது தேவாந்தகன் தன்வில்லில் அளவற்ற பாணங்களைப் பூட்டிப் பெரும்புறக்கடலின்மீது சோனைமாரி பெய்வதற் கொப்பாகப் பிரயோகித்துச் சிங்காரஞ் செய்தனன். அப்பாணங்கள் வெளிப்பட்டமாத்திரத்தில் ஒன்றனந்தமாகப்பெருகித் தீயையும் புகைப்படலங்களையும்வீசிச் சிடசிடென்றுங் குமுகுமுறென்றும் இரைச்சலிட்டுக்கொண்டு மேலிட்டுச் சர்ப்பங்களைப்போலச் சீறி உறுத்துப் பாய்ந்து பூமண்டலம் வானவெல்லை அஷ்டதிசைகள் மற்றைப் புவனங்க ளெங்கணும்நெருங்கி ஆரவாரித்திருக்கின்ற கணக்கிறந்த பூதவெள்ளங்களையும் தேரணிகளையும் யானைக்கூட்டங்களையும் புரவிப்பெருக்கையும் வளைந்துகொண்டு தாக்குகின்றபோது தேவசேனைகளினுடைய தேரணிகளினது உருளை-அச்சு-மச்சு-குத்துக்கால்-கொடுங்கை முதலானவைகள் வெவ்வேறாகப் பின்னப்பட்டுக் குவிந்தும் மதயானைக்கூட்டங்கள் பனையைப்போன்றவையுந் துதிக்கைவேறு, பிறையையொத்த தந்தங்கள்வேறு, மத்தளத்தை நிகர்த்த மத்தகம்வேறு, உரலினைப்பொருவுங் கால்வேறாகக் கண்டிக்கப்பட்டு மலைகளாகச் சோர்ந்தும் குதிரைப்பந்திகள் சவரியினைப்போன்றவையும்பிடரிமயிரினைவாய்ந்த கழுத்துகள் துணிபட்டுக் கடிவாளம் பொடிபட்டு அலைகளைப்போன்றவுங் கால்கள் ஊறுபட்டு சாமரையைப்போன்றவையும் வால்கள்தெறிபட்டுரணக்களமெங்கும் நிறைந்தும் மகாபராக்கிரமசாலிகளாய்ப் பலபடைகளை யேந்திச் சண்டைசெய்கின்ற பதாதிவீரர்கள் நவரத்தின கிரீடங்களைத் தாங்கிய சிரங்கள் வெட்டுண்டு வரைகளையொத்த தோள்கள் சரிந்து மார்புபிளந்து வயிறுபீறுண்டு குடல்கள் சிதைந்து கால்களற்று ரணக்களமுழுவதுங் குன்றுகளைப் போலக் குவிந்தும் இவ்விதமாகச் சூறாவளிக் காற்றினாலடிக்கப்பட்ட மேகங்களைப்போலக் குரூரனுடைய நால்வகைச்சேனைகளும் சராசரங்களுலைவிய சரங்களினுற் சின்னபின்னப்பட்டு மாளும்போது சித்திதேவியாலுண்டான அணிமாதி அட்டமாசத்திகளும் இளைத்தவர்களாகி புத்திதேவிபடைத்த பவுத்ததேவியும் அக்கொடுமைகளும் இளைத்தவர்களாகி கஞ்சி வருந்தினன் மகோற்கட மூர்த்தியாலுண்டான பூதகணங்களெல்லாம் பயந்து திக்கொருவரா யோடத்தலைப்பட்டனர். இவ்வாறு தேவசேனைகளையெல்லாம் அதம்படுத்திய தேவாந்தகன் அதிக உற்சாகத்துடன் ரணக்களமெங்கும் உலவிவருவதையும் தனது சேனைகள் பின்னிடுவதையுங் குரூரன் கண்டு நீங்கள் ஒன்றற்கு மஞ்சவேண்டுவதில்லையெனக் கையமர்த்தி நிறுத்தித் தனதுதேரை அவுணராசனெதிரிற் றூர்த்திவந்து காளகூடத்தைப்போல மண்டியெரிந்து கொவ்வைக்கனியையொப்ப விழிகள் சிவந்து தீப்பொறிகள் குபீல் குபீலெனக்கொட்ட உறுத்துப்பார்த்து பற்களை நெறநெறெனக்கடித்து உதட்டையதுக்கி மயிர்க்கால்கடோறும் அனலெழும்படியாகச் சர்ப்பத்தைப்போலச்

சிறி நல்லகாரியம் சற்றும் எண்ணிக்கையில்லாமல் நம்மவரை வருத்திய உன்னுணவத்தை இமைப்பொழுதிடைக்கு வாட்டுகின்றேனெனக் கோபித்துச் சொர்க்கம் மத்தியம் பாதலம் கடல்கள் மலைகள் திசைகள் நிவாசங்கள் முதலானவைகளெல்லாங் கலங்கித் திப்பிரமை கொள்ளும்படியாகத் தனது வில்லில் மழைபெய்யு மேகத்தைப்போல அளவற்ற பாணங்களை ஒரு தொடையிற் பூட்டிப் பிரயோகித்துச் சக்கரவாள வெல்லையிலும் அவைகளிடையிற்பட்ட தீவுகளெல்லாம் நிறைந்திருக்கின்ற கணக்கிறந்த அவுணவெள்ளங்களையும் புரவிப் பெருக்கையும் யானைக்கூட்டங்களையும் தேர்களையும் துஞ்சப் பண்ணினன். அக்காலத்தில் அவுணராசன் வடவையைப்போற்சீறித் தனது வில்லில் அளவற்ற கொடிய பாணங்களைப் பிரயோகித்துச் சிக்காதஞ் செய்தனன். அவைகள் வெளிப்பட்டவுடன் புகைந்தெரிந்து அனற்பொறிகளையிறைத்து அதிவேகங்கொண்டோடக் குருரனனவன் தனது வில்லில் அளவற்ற நிட்சணியமுள்ள சரங்களைப் பூட்டிப் பிரயோகித்துச் சுராந்தகனேவிய பாணங்களின் வீறுட்டையடக்கி மற்றொருசரத்தினால் அவன் கையிலிருந்த வில்லைப் பொடிபடுத்தினன். உடனே தேவாந்தகன் மற்றொரு வில்லையெடுத்து அதில் கணக்கிறந்த பாணங்களைக் குருரனுடைய உடல்முழுவதுந் தைக்கும்படியாகப் பிரயோகித்தான். அம்மாத்திரத்தில் குருரனனவன் கோபங்கைசெய்து நல்லது உன்வீறுப்பை இதோ அழிக்கின்றேனென்று தீயினுங்கொடுமையுற்ற பலபாணங்களினால் தன்மேல்வருகின்ற கணைகளைத் துகள்படுத்தி வடவைத்தீயும் ஆலகாலமுமஞ்சும்படியான வேறேழ் பாணங்களினால் அப்பாதகனுடைய கழுத்தணிகளையும் இரத்தினகிரீடத்தையுஞ் செவிகளிலணிந்த குண்டலங்களையும் பொடிப்படுத்தினன். இப்பால் தேவாந்தகனனவன், அளவற்ற தவங்களினால் பலதேவர்களிடத்திலின்றும் பெற்றிருந்த மணிமுடி முதலானவைகள்சின்னபின்னப்பட்டுப் போகவும் சிவரத்தினத்தையிழந்த நாகம்போல மதிமயங்கி மானமுங் கோபமும் மனதை வாட்ட ஒரோவென்று தனது வில்லை இருகுதைக்கு மொன்றுபட வளைத்து இனி இவனைத் தெய்வப்படைகளினால் வெல்லுவேனெனத் தீர்மானித்துத் திரிலோகங்களுந் திகைத்து வாடும்படிக்கு வியாக்கிராஸ்திரத்தையெடுத்துப் பூட்டித் தனது மனதினால் சோடச வுபசாரங்களையுஞ்செய்து பிரயோகித்தனன். அவ்வஸ்திரம் வெளிப்பட்டமாத்திரத்தில் வலிய கால்களையும் வச்சிரத்தையொத்துக்காட்டும் நீண்ட பற்களையும் பெற்றிருக்கின்ற பல்லாயிரங்கோடி வியாக்கிரங்களி னுருக்கொண்டு உலகங்களெங்கும் நிறைந்து பெருமுச்சுக்களைவிட்டு அண்டகோளகையு மதிர்ந்து நிமிடாய்க்கும்படிக்குக் கர்ச்சித்து பிறையைப்போல வளைந்திருக்கும் கூரிய கரங்களினால் அளவற்ற பூதர்களை வாரிவாரி வயிற்றைப் பீறி அதாகதப்படுத்துவதைக் குருரன்கண்டு, விரைவில் தனது வில்லில் கஜாஸ்திரத்தைப்பூட்டிப் பிரயோகித்தனன். அவ்வஸ்திரம் ஒன்று அளவற்ற கஜங்களாய் மதங்களைப்பெருக்கி வீறிட்டுத் துதிக்கைகளில் இரும்புலக்கைகளைக்கொண்டு சுழற்றிப் பிளந்துவாரங்களை நிகர்த்த வாய்களைத் திறந்து

கருமா றலையில்விளக்குந் துருத்திக்கொப்பாக விஷச்சுவாலைபெருகப் புஸ்புஸ் என்று பெருமூச்சுகளைவிட்டு மைநாகபர்வதங்கள் அளவற்ற உருவினைக்கொண்டு வந்ததைப்போலமேலிட்டு, ஆலகாலவிஷமு மஞ்சச்சீறி, அஷ்டதிசைகளைத் தாங்கும் ஐராவதமுதலிய யானைகளைப் பிடித்துத்தள்ளிப், பூமிக் கச்சாணியாகப் பாதலம்வரையிற்போய் வானம்வரையி லுயர்ந்திராநின்ற மகமேருவைக் குலுங்கத்தாக்கிக், கால்களினால் பெயர்த்து, விழிகளில் வடவாமுகாக்கினியை வீசிச், செவிகளினசைவினால் சண்டமாருதத்தைப் பெருக்கிப், பிலத்திலிருக்கின்ற சேடனுதி இராசராசர்கள் திகைத்தேங்கும்படிக்குப் பூமியைக் கால்களினாற்றாக்கி, அண்டகோளகை நெக்குவிட் டதிரும்படியாகப் பிறையை யொத்த கோடுகளினால் முட்டி, சொர்க்க மத்திய பாதல மெங்கும் நடுநடுங்கக் கூவிவிட்டு, அவுணபாதகனேவிய அத்திரத்தின் வலியை யொடுக்கிப், பின்னர் அவனையுங் கொல்லுவதாக ஆக்கிரமித்துச் சென்றது.

அப்போது தேவாந்தகனனவன், காலாந்தகனைப்போலக்கொதித்துத் தானரிதிற்பெற்றிருந்த சிம்மாஸ்திரத்தைச் சோடச உபசாரங்களுடன் வழிபட்டுப்பிரயோகித்தனன். அவ்வஸ்திரமானது வெளிப்பட்டவுடன் அளவற்ற நாரசிங்கவடிவங்களைக்கொண்டு, நெருங்கி நீண்டிருக்கும் சிவந்தமயிர்களைச் சிலிர்த்து, வடவையைப்போலச்சீறிக் கொக்கரித்து, விழிகளில் அனற்சமுகங்களைவீசி நாசிகளிற் பிரசண்டமாருதத்தைப் பெருக்கி, உலகங்களனைத்துந் திடுக்கிட்டு நடுக்கும்படிக்கு ஆர்ப்பாட்டங்களைச்செய்துகொண்டு சென்று, குருரன் விட்ட கஜாஸ்திரத்தைத் துகள்படுத்திப், பின்னர் அவனையும் பாய்ந்து கொல்லுமாறு சீறிச்சென்றது. அப்போது குருரனனவன் நல்லகாரியம் நல்லகாரியமென்று நகைத்துச் சரபாஸ்திரத்தை விதிப்படி பூசித்துப் பிரயோகித்தனன். அத் திவ்வியாஸ்திரம் வானத்தெழுந்து சீறிக் கணக்கிறந்த சரப சார்த்தூலவுருக்களைக் காட்டி வடவைக்கனலும் ஆலகாலமும் நடுங்கி அஞ்சக் கொதித்து அதிவேகத்துடன்சென்று அவுணராசன் சிம்மாஸ்திரத்தை நாசமாக்கி, அங்குள்ள அவுணசேனைகளையெல்லாம் அதாகதப்படுத்திக்கொண் டிருந்தது. அக்கொடுமையைத் தேவாந்தகன் கண்டு, தான்செலுத்திய தேவப்படைகளனைத்தும் பிரயோசனப்படாமற் பின்னிட்டதையும் பகைவன்படை வீறிட்டிருப்பதையும், சிந்தித்து இப்படை முற்காலத்தில் விண்டுவானவர் நாரசிங்கவடிவைக்கொண்டு உலகங்கள் தத்தளிக்கச்சீறிய கொடுமையை யடக்கப் பரமசிவகடாட்சத்தினால் வீரபத்திரக்கடவுள் திருவவதாரத்தினைக்கொண்ட தெய்வப்படையாதலால் இதனை வேறொன்றினால் வெல்லுவதரிது. நாமும் அந்தச் சிறந்த படையைக்கொண்டே நடைசெய்யவேண்டுமென யோசித்துத் தானும் சரபாஸ்திரத்தையெடுத்து சாஸ்திரவிதிப்படி பூசித்துப் பிரயோகித்தனன். அப்படையும் முன்னர் குருரன்விட்ட படையைப்போல அளவற்ற மகிமைகளைக்காட்டி யெழுந்து அவுணசேனைகளெல்லாஞ் சின்னபின்னப்பட வாட்டிக்கொண்டிருக்கின்ற சரபாஸ்திரத்துட னெதிர்த்துச் சராசரப் பிரபஞ்சங்களனைத்தும் அல்லோலகல்லோலப்

பட்டு வாடியொடுங்கும்படிக்கு ஒன்றுக்கொன்று பின்னிடையாமல் அகோர யுத்தங்களைச் செய்துகொண்டிருக்கும்போது, பிரமன்முதலியதேவர்கள் மானிடர் பாதலவாசிகள் முதலாயினோர் கரங்களைக்கூப்பிப் பத்திவிசுவாசங்களுடன் துதித்து ஓ படைகளுக் கரசாகவிருக்கின்ற சரபாஸ்திரங்களே! எறும்புமுதல் யானையீறாகச் சொல்லாநின்ற சகல பிராணிகளும் வாடிப் பின்னப்படவொட்டாமல் இரட்சிக்கவேண்டும். உங்களால் நேர்ந்திருக்கின்ற வருத்தங்களுக்குத் தாபரிக்கவொட்டாமல் சகல பிராணிகளும் சோருகின்றன. இதனைத் திருவுளத்திற்கொண்டு கிருபையுற்றுப் பாதுகாக்கவேண்டுமென்று பலவிதங்களினால் போற்றுவதை அவ்வஸ்திரங்களறிந்து மன்னுயிர்களுக்கிரங்கி உடனே தங்கள் செய்கைகளை யுள்ளடக்கிக்கொண்டு கோபந்தணிந்து தங்களை விடுத்தவர்களிடத்திற்போய்ச் சேர்ந்தன. பின்னர் குரூரனனவன் அவற்றின் செய்கைகளைக்கண்டதிசயித்து, அரையிலிருக்கும் உறையிற்சொருகியவாளாயுதத்தைக் கரத்திலேந்தி ஏறேலென்று தேரைவிட்டு நிலத்திற் பாய்ந்தனன். அம்மாத்திரத்தில் தேவாந்தகனனவன் மனந்தளர்ந்து ஏதோ இவன் இடலென்று ஓர் வாளைக்கொண்டு நம்மோடு வாட்போர்செய்யவருகிறான். இனியிவனை வாட்போரிலும்வெல்லுவதரிது. இனி யென்னசெய்வோமென்று யோசித்துத் தனது மனத்தில் ஓர் துணிவைக்கொண்டு ஆகாயத்தில் உருத்தோற்றுதபடி மறைந்து பூர்வத்தில் தனது தவமுயற்சியினால் பெற்றுவைத்திருந்த மோகனாஸ்திரத்தைக் கரத்திலெடுத்துத் தாபநீபனைவேத்தியவிதிகளை யானதபூசையில் நிரப்பி மந்திரத்தையுச்சரித்து ஓ தேவதாஸ்திரமே! நீ இக்கிமிஷத்தில் துரிதமாகச்சென்று நமக்குச் சென்மவயிரிகளாகத் தோன்றி வருத்துகின்ற தேவசேனைகள் பூதவீரர்கள் முதலாயினோருடைய அறிவைப்போக்கி வாட்டித் திரும்பக்கடவை யென்று போற்றிச் செலுத்திக் குரூரன் முன்னே ஓர் கந்தருவாஸ்திரத்தை யெடுத்துவிட்டனன்.

கேட்டீர்களோ சவுனகாதி முனிவர்களே! தேவாந்தகனென்னும் மகா கொடும்பாதகன் முதலியேவிய மோகனாஸ்திரமென்னும் படையோ எத்தகை வீரபராக்கிரம சாலிகளின்மீதிற் செலுத்தப்படினும் நெருக்கியவுடன் அவர்கள் பஞ்சேந்திரிய நிலைகளைப்பேதித்து அறிவையழித்துப் பிரேதத்தைப் போலச் சோபித்துக் கிடக்கச்செய்யவல்லது. அத்தகைய சிறப்புள்ள வெற்றிப் படையானது வெளிப்பட்ட மாத்திரத்தில் உக்கிராகாரமாகக் கோபித்துக் கிரணங்களைப்பரப்பி உலகங்களை மகிழச்செய்துலவுஞ் சூரியனொளியை யடக்கிக் காடாந்தகாரமாகிய இருளைப்பெருக்கிப் பூமியிலிருக்கின்ற பல்லுயிர்களும் கடுகடுத்துத் தெளிவில்லாமல் அந்தகரைப்போல மயங்கிவாடித் தத்தளிக்கத் தக்க தாகச்சூழ்ந்து கைத்துக்கொண்டுவர அதன்மகிமைகளையும் வலியையும் தேவசேனைகளும் பூதப்படைகளுங் கண்டவுடன் துக்கசாகரத்தி லமுழ்ந்திப் பயப் பிராந்திகொண்டு மனந்திடுக்கிட்டுவாடி மூர்ச்சித்தனர். அவர்களுக்குத் தலைவராகவிருந்த வீரர்களும் பித்தரைப்போல மதிமயங்கித் தேரைவிட்டு நிலத்தில்

வீழ்ந்து சோர்ந்தனர். அணிமாதி அட்டமாசத்திகளுந் தங்கள்மீது வீறிவருகின்ற படைவன் பாணத்தைத்தடுக்க வகையற்றவர்களாய்க் கரத்திற் பற்றியிருந்த விற்களையும் பாணங்களையுஞ் சோரவிட்டுக் களைத்து விழுந்தனர். குரூரனனவன் "இந்தப் படையை எந்த உபாயத்தினால் வெல்லலாகுமென்று யோசித்து யாதுந்தோன்றாம லிருந்தனன். அதற்குள் தேவாந்தகன் இரண்டாவதேவிய கந்தருவாஸ்திரமானது அளவற்ற கந்தருவர்களுடைய வடிவங்களைக் கொண்டு சிலது பேரியாழ்-சகோடயாழ்-மகரயாழ்-செங்கோட்டியாழென்னும் பலயாழ்களை வாசித்துக்கொண்டும், சிலது தோற்கருவி-துளைக்கருவி-நரம்புக் கருவி-கஞ்சக்கருவி - மிடற்றுக்கருவி யென்னும் பலவாத்தியங்களைச் செய்துகொண்டும், சிலது பயிரவி-தேவக்கிரியை-மேகவிரஞ்சி-குறிஞ்சி-பூபாளம்முதலிய பலசங்கீதங்களைப் பாடிக்கொண்டும், சிலது பாவம்-அராகம்-தாளம் என்னு மூன்றுமடங்கி பரதசாத்திர விதிப்படி அங்கம்-உபாங்கம் - பிரத்தியாங்கம்-அலர்முக ராகம்-கரப்பிரசாரம்-சிரகாகனமம்-கரகேத்திரம்-கரகரணம்-தானகம்-சத்தசாரி-தேசிசாரி-நியாயம்-விருத்தி - பிரவிசாரம்-பூமண்டலம்-ஆகாய மண்டலம்-சத்தக்கரணம்-உற்புலிதகரணம் - அங்ககாரம் - இரேசிதம் ஆகிய இருபதுபேதமும், இவற்றுள் எண்வகை நிருத்தமும், இரேகாதி அங்கம்பதினாறும், நால்வகைக் கரணமும், இருவகைக் கரமும், நால்வகைபுரிகை முதலாகிய பதினாறும், மடிப்புவகை இருபத்தெட்டும், பூசாரிகள் பதினாறும், முப்பத்திரண்டு தேசிசாரிகளும், முப்பத்தைந்து ககனசாரிகளும், பதினாறு பாடபேதங்களும், பத்தொன்பது படகபேதங்களும், இருபத்தெட்டு பாடவகைகளும், பஞ்சதாளமும் சத்ததாளமும் நவதாளமும் தசதாளப் பிரமாணமும் சேதக்கட்டளை இருபத்தெட்டும் சாரளைமுதலிய கட்டளை முப்பத்தைந்தும் பிறவும் நன்றாகவறிந்து நடனமாடிக்கொண்டும், இவ்வாறு ஒவ்வொன்றும் ஒவ்வொரு விநோதசாலங்களைக்கொண்டு குரூரனெதிரிற்சென்று ஆரவாரித்திருந்தன.

அப்போது குரூரனனவன் வாட்போருக்கஞ்சி மறைந்துபோன தேவாந்தகன் மீட்டும் வருவானாயின் அவன் வலியையடக்கி வாட்டுவோமென்று எண்ணிக் கந்தருவர்கள் செய்யும் ஆடல்களைக் கண்களிக்கப் பார்த்தும் பாடுகின்ற சங்கீதங்களைச் செவிகுளிரக்கேட்டும் வேடிக்கையா யானந்தமுற்றிருந்தனன். அக்காரணத்தை ஆகாயத்தில் மறைந்திருக்கின்ற தேவாந்தகன்கண்டு நமக்குச் சயகாலம் உண்டாயிற்றென்று களித்து விரைவில் யாவருமறியாதபடி யுத்தகளத்திற்குவந்து வேதாகமவிதிப்படி ஓர் திரிகோணகுண்டத்தை யமைத்து, அதில் ஓமாக்கினியை மந்திரபூர்வகமாக உண்டாக்கி, ஆயிரம் அவுணர்களைப் பலியிட்டு, அவர்கள் மாமிசங்களையும் உதிரங்களையும் ஆயிரமாயிரங் குடங்களில் நிரப்பி, ஆகுதிகொடுத்துப், பஞ்சமுத்திரையென்னு மாதனத்தி லிருந்து, அதிக உக்கிரமாக ஓர்யாகஞ்செய்து முடித்தனன். அப்போதந்த யாககுண்டத்தி னின்றும் ஓர் பெரிய பெண்பூதமானது உலகமெல்லாம் நடுங்கும்படி

ஆகாயத்தையளாவிய பெரிய உருவத்தோடு வட்டமாய்ப்பருத்திருக்கின்ற கண்களும், கோரைப்பற்களும், மலைகளுக்கு நிகரான ஸ்தனங்களும், நீண்ட மயிர்களும், பிலத்துவாரங்களையொத்த பெரியவாயும், வடவாமுகாக்கினியை வீசவல்ல பெருமூச்சும், ஆலகாலமும் அஞ்சும்படியான கோபமுங்கொண்டு உற்பத்தியாகித் தன்னைவருவித்த தேவாந்தகனைப் பார்த்து, ஓ இராசாதிராசனே! என்னைப் பசியானது ஊழிக்காலத்திலெழும் வடவைபைப்போல வாட்டுகின்றது, அப்பசி என்னைவிட்டு நீங்கத்தக்க மார்க்கத்தினை விரைவில்யோசித்து முடிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டது. அதற்குத் தேவாந்தகன் சந்தோஷித்து மகோற்கடமூர்த்தியினுடைய சேனையைக்காட்டி, ஓ பாரிடமே! இதோ நிற்கின்ற சேனைகளையெல்லாம் உனது பசிதீரத்தின்னக்கடவையென்று சொல்லினன். அப்பாதகன் அச்சொல்லை முடிக்குமுன்னம் அப்பூதமானது மோகனாஸ்திரத்தினால் மயங்கி மூர்ச்சையாகிக் கிடக்கின்ற சேனைகளையெல்லாம் எடுத்து வாயிலிட்டுக்கொள்ளும்படியாக விரைந்து ஆக்கிரமித்துவர அக்கொடுமையையும் முன்னர் யுத்தகளத்தில் நடந்தசெயல்களையு மறிந்திருக்கின்ற மகோற்கடமூர்த்தியானவர் அவுணபாதகனுடைய மோகனாஸ்திரத்தின்வலியை யடக்கவேண்டுமெனத் திருவுளங்கொண்டு உடனே ஞானப்படையை யெடுத்து வில்லிற்பூட்டிப் பிரயோகித்தனர். அப்படை வெளிப்பட்ட மாத்திரத்தில் இருளை வாட்டுஞ் சூரியனைப்போலச் சொலித்துச் சீறிப்பாய்ந்து தேவாந்தகன் செலுத்தியிருக்கின்ற மோகனப்படையை அடிப்படுத்தியது. தேவசேனைகளும் பூதவெள்ளங்களு மடைந்திருக்கின்ற மயக்கங்களெல்லாம் சூரியனைக்கண்ட பனிப்படலத்தைப்போலப் பறந்துபோயின. குரூரனெதிரிலாடல்பாடல்செய்திருந்த கந்தருவப் படையானது விலகிப் போய்விட்டது. இப்பால் குரூரனானவன் தேவாந்தகன்செய்த வஞ்சகங்களையெல்லாந் தெரிந்துகொண்டு இப்பாதகன் நம்மவரைமோகனப்படையினால் வாட்டியதல்லாமல் நம்மையுங்கந்தருவப்படையினால் மயக்கினனேயென்று கோபநகைசெய்து முன்னங் கரத்திலேந்தியிருந்த வாளினால் அப்பாதகனை வெட்ட வோங்கிச்சென்றனன். அதற்குள் புத்திதேவியாலுண்டான பௌத்தேவியானவள் அவனை நிறுத்தி, தேவாந்தகனேவிய பூதத்தை வாவென்றழைத்து யுத்தஞ்செய்வதாயினள். பின்னர் இரண்டு சண்டமாருதங்கள் ஒன்றோடொன் றெதிர்ப்பதுபோல அவ்விரண்டுபூதங்களு மொன்றோடொன் றெதிர்த்து விழிகளில் வடவைக் கனலெழக் கோபித்துக் கரங்களைப் பிசைந்துகொண்டு பூமிபெயர்க்கும்படிக்குப் பாதங்களைப் பெயர்த்து முன்னடிவைத்தும் பின்னடிவாங்கிப் பாய்ந்தும் புஜங்களைத் தட்டியும், ஒருவரையொருவர் உருத்துப் பார்த்தும் வீரங்களைப்பேசியும், கரங்களைப் பிடித்து மாங்கிக்கொண்டு முகத்திலும் புயத்திலும் மார்பிலும் மற்ற உறுப்புகளிலும் குதிகொண்டுகுத்தியும், அதைத்தடுத்து மீளத்தாக்கியும், கற்பகத்தையொப்ப வலிய புயங்களினால் விடுத்தும், கால்களைப் பின்னித்தட்டியும், உதிரம் பீறிட்டோட நெற்றியினால் தலையினால் குட்டியும் கன்னம்பிளக்கவறைந்தும் இடசாரி வல

சாரியாகத் திரிந்தும் இவ்விதங்களில் இருவரும் அண்டங்களையெல்லாஞ் சுற்றியும் அலைகடலெல்லாஞ் சுழன்று பூவட்டமெங்கணுஞ் சுலாவியும் உரகர்வாழ்கின்ற பாதலங்களிற்சென்று குலாவியும், ஒருவர்க்கொருவர் பின்னிடையாமல் மற்போரைச்செய்துகொண்டு வரும்போது, பவுத்தேவியானவள் அதிகநேரத்தோடு பேலிட்டுக் கோடையிடிகளைப்போலக் கரங்களினாலும், புஜங்களினாலும் இடைவிடாதுதாக்க, அத்தாக்கலைத் தேவாந்தகனுடைய பூதமானது தாளமாட்டாது வலிகுன்றிக்கைகால்சோர்ந்து இரத்தவெள்ளம் பெருக்கெடுத்தோடும்படியாகச்சோர்ந்து நிலத்தில்வீழ்ந்தது. உடனே பவுத்தேவியானவள் அவனுடைய வொருகாலைத்தன்னொரு காலினால்மிதித்துப் பனைநாரைப்போலக் கிழித்து ஒருகீற்றினைக்கீழ்த்திசைக்கடலினுமெறிந்து யுத்தகளத்தினின்றும் நீங்கித் தன்னையீன்ற புத்திதேவியினிடத்திற்சென்று சேர்ந்தனள்.

இப்பால் தனதுபூதம் நாசப்பட்டதைத் தேவாந்தகன்கண்டு இரவுத்திராகாரமாகக் கோபித்துத் தனதுதேரை இரணக்களமெங்கணுஞ் சக்கிராகாரமாகச்சுழற்றித் தேவசேனைகள்மீதும், பூதகணங்கள்மீதும், அளவற்றபாணங்களைச் சோனைமாரியைப்போலப் பிரயோகித்தனன். அதைக்கணேசகுமாரனாகிய குரூரன்கண்டு, அடா கள்வனே! முன்னம் வாட்போருக் கஞ்சியொளித்தனை? மீட்டும்வெட்கமில்லாமல் சண்டைசெய்யவந்தனை? இனிவ்விதத்தாற் றப்பிப்போக விருக்கின்றனை? இதோ உன்னுயிரைவாங்கி வீரசொர்க்கத்திற் குடியேற்றுகிறேனென்று சீறித்தனதுவில்லில் சங்கோபசங்கமாகச் சரவருஷங்களைச் சொரிந்தனன். அக்காலத்தில்தேவாந்தகனானவன் கணக்கிறந்த கொடிய பாணவகைகளைக் கோடைகாலத்து மழைத்திவலைகளைப்போல ஒன்றன்பி னொன்றாகச்செலுத்திக் குரூரன்விட்ட கணைகளையெல்லாம் பொடியாக்கி அவனுடையதேரையும் நுறுங்கிவிழச்செய்தனன். அதனால் குரூரனுக்கு அதிககோபப்பிரவேசித்து உடனே மற்றொருதேரிலேறி அவுணராசன் செலுத்திய பாணங்களுக்கொப்பாகத்தானும் அளவற்றபாணங்களைச் செலுத்தினன். இவ்விருவீரர்களுஞ்செலுத்திய பாணகோடிகளின் கொடுமைகளைத்தேவர்கள் முதலாயினோர் ஆற்றமாட்டாதுதிகைத்து மிகவும்வாடிப்பதுங்கினர். பூதப்படைகளும் அவுணப்படைகளுங் கைகாலடப்படாமல் கண்டதுண்டமாக வெட்டுண்டும், மாண்டும், சோர்ந்தும், பலதிசைகளிலுமிறைந்தும், இவ்விதமாக இரணக்களத்தில் ஒருவருந்தோற்றப்படாமல் மறைந்தனர். அணிமாதி அட்டமாசத்திகளும் ஏனையசேனைத்தலைவர்களும் பலகாயங்களைப்பட்டு வருந்திதிகைத்துப் படாதபாடுகளைப்பட்டு நின்றனர். இவ்வாறு வடவையும் ஆலகாலமும் பகைத்துப் பொருவதைப்போல இருதிறத்தரும்போராடித் தங்கள்தேர்களை கொடிப்போதில் அனந்தமுறைச் சக்கிராகாரமாகவும், வட்டமையாகவும், இடசாரிவலசாரியாகச் சுழற்றித்தூரத்தியும், சூரியசந்திரர்கள் தங்கள்கதிகள்தப்பிச்செல்ல அளவற்றசாவருஷங்களைத் தாண்டியும், இரணக்களத்தில் ஒதுங்கிப்பதுங்கியிருந்த சேனைகளைப் பொடிபடவாட்டியும், யானைப்பந்திகளைக் கண்ட

துண்டப்பட வெட்டிக்குவித்தும், குதிரைப்பெருக்கைச் சிதைத்துக்கிடத்தியும், அவுணவீரரை மடக்கிக்கொண்டு சின்னபின்னப்படக் கண்டித்தும், பூதவெள்ளத்தையலைத்துச் சிரம்-கரம்-உரம்-பதம்முதலிய உறுப்புக்களை வெவ்வேறாக வெட்டி யெறிந்தும், தங்களிரதங்களை மேலுலகமேழினுஞ் செலுத்தி வான வெல்லை யெங்கணும்பவனிவந்தும், பூலோகமுழுவதும் உலாவியும், சத்தசாகரங்களிற்சென்றுசுழன்றும் சக்கிரவாளகிரிக்கு அப்புறத்திற்பாய்ந்தும், பாதலலோகங்களைக் கலக்கியும், சத்தியலோகம் வைகுந்தம் முதலிய வைப்புக்களிற் சென்று உலாவியும், மீட்டுஞ்சமர்க்களத்தையடைந்து பலவீரங்களைப் பேசியும், இரதமோடும் வேகத்தினால் ஒருவரையொருவர் முட்டியும், தெற்கரத்தொனிகளைச் செய்தோமேவண்டில்களை இடிகளையொப்பத்தாக்கியும், விண்ணவர்கள் திகைத்து மயங்கும்படிக்கு கூணைப்போதில் அஷ்டதிசைகளிற் பாய்ந்தும், மீண்டும் இடையிடையில் சக்கரம்-பாசம்-தண்டம் சூலம்முதலிய படைகளை எறிந்தும், ஒருவரையொருவர் சீறிப்பார்த்து நீயெவ்வளவு உன்சாமர்த்திய மெவ்வளவு உன்னைநொடிப்போதில்வாட்டி நிலத்திற்றள்ளுகின்றேனென்றும், கொடிய சபதங்களைப்பாடியும், தங்கள்விற்சாதுரியங்களையும் கரவேகசரவேகங்களையும் சாகசங்களையும் நிதானித்துப்புகழ்ந்து விடாகங்களைப்போலச்சீறியும், அண்டங்களதிரநகைத்தும், பாதலவாசிகள் நடுங்கக்கர்ச்சித்தும், சிங்கநாதங்களைச்செய்தும், பர்வதாகிருதியாகப் பருத்திக்கும் புயங்களைத்தட்டியும், மீசைகளைமுறுக்கியும், இந்தயுத்தம் வெகுநேர்த்தியாக விருக்கின்றதென்று களித்தும், அடிக்கடிசயத்தைக்குறித்து வெற்றிச்சங்கங்களைப் பொம்பொம்மென் றூதியும், இப்படிக்கு வீராதி வீராகிய அவ்விருவருங் கொடிய சித்திரப்போரைச் செய்துவரும்போது பூமண்டல வெல்லையில் வாசஞ்செய்பவரும் விண்ணகத்திற் சஞ்சரிப்பவரும் அவர்கள்செய்கைகளைப் பார்த்து அற்புதங்கொண்டவர்களாய் இந்தச்சூரரைப்போலச் சண்டைகொடுத்தவரை இதற்கு முன்னம் யாவரையுங்கண்டிலம். கேட்டதுமில்லை. இக்காலத்திலுந் தெரிந்ததுமில்லை. பிற்காலத்திலுங்கிடைக்கமாட்டாது. புசபலபராக்கிரமசாலிகளாகிய இவர்கள் சவுரியத்திற்கிணையெடுத்துக்காட்ட யாவருமில்லையெனக் கொண்டாடினர். அப்போது சூரனானவன்மேலிட்டுத் தேவாந்தகனுடைய தேரிற்பாய்ந்து வச்சிராயுதத்தினைக் கிறுகிறெனச்சுழற்றி விசாலமாய் வயிரத்தினைப்போல உறுதிபெற்றிருக்கின்ற மார்புநெக்குவிட்டு உதிரம்பெருகும்படிக்குக் கோடையிடியைப்போலத் தாக்கிமீண்டனன். அத்தாக்கலினால் தேவாந்தகன் சோர்ந்து மூர்ச்சித்து மீட்டுந்தெளிந்தெழுந்து ஓர் தண்டாயுதத்தை யெடுத்துக்கொண்டுவந்து வயிரக்குன்றினைப் போலப் பாரித்திராநின்ற சூரனுடைய தோளின்மீது எமனுங்கண்டு அஞ்சும்படிக்கு மோதினன். அம்மோதலைச் சூரன் சகிக்கமாட்டாது பெருமூச்செறிந்து மூர்ச்சித்துத் தேரிற்பாய்ந்தனன்.

பின்னர் தேவாந்தகன் அவன்தெளிந்து எழுந்திருப்பதற்குமுன் மற்றத் தேவசேனைகள் பூதவெள்ளங்கள் மத்தியிற் றனதுதேரை முடுக்கிவந்து தனது

வில்லில் கணக்கிறந்த திவ்வியாஸ்திரங்களைப் பிரயோகித்துச் சிங்காதஞ்செய்தனன். அவ்வஸ்திரங்கள் ஒன்றனந்தமாகப் பெருகிச் சிலது அளற்படிவமாய்த் திசையிறைத்தோடியும், சிலது ஆலகாலவிடத்தையொப்பமன்றி எரிந்து நகைத்தும், சிலது காடாந்தகாரமாகமூடிப் பூதர்களைத் திசைதெரியாம லலைத்தும், சிலது காலாந்தக்கரை நிகர்த்துச் சீறிப்பாய்ந்தும், சிலதுஅனலைக்கக்கிக் கொடிய சர்ப்பத்தைப்போல வீறிக்கொண்டு தாவியும், சிலது சூரியகிரணங்களுக்குச் சமதையாகச் சொலித்து மேவிட்டும், சிலது மின்னலைப் பரப்பிக்கொண்டோடியும், சிலது கோடையிடிகளைப் பெருக்கி யுலாவியும், சிலது சக்கரத்துக்குச் சமதையாகச் சுழன்றும், சிலது வச்சிராயுதங்களைப்போலத் தாக்கியும், சிலது இந்திரதனுசுக்கொப்பாகப் பற்பலமான மோகங்களைப் பெருக்கி அதாஅதஞ்செய்தும், சிலது சூலங்களுக்கொப்பாகப் பாய்ந்தும், சிலது பிரசண்ட வாயுவைப்போல வேகங்கொண்டுலாவியும், சிலது சூறுவளிக்காற்றினுக்கொப்பாக எதிர்த்தவர்களைப் புரட்டியும், சிலது வாளாயுதங்களைப்போலச் சங்கரித்துத் திரிந்தும், சிலது பாரித்ததண்டாயுதங்களாய் வாட்டியும், சிலதுவேலை நிகர்த்துத் தும்சஞ்செய்தும், சிலது சிங்கம்புலியாகிய கொடியமிருகங்களுக் கொப்பாகக் கர்சித்துக் கொன்றும், இவ்வாறு அவுணபாதகன்விட்ட பாணங்களெல்லாம் மகோற்கடமூர்த்தியினுடைய சேனாசமுத்திரத்திற் புகுந்து ஒருவரையும் அப்புறமிப்புறம் போகவிடாமல் அல்லோல கல்லோலப் படுத்தும்போது அந்தரவாசிகளாய்ச் சமர்க்களத்தில் நடக்கும் விநோதங்களைப் பார்த்துக்கொண்டிருந்த விண்டுவாதி தேவர்கள், திப்பிரமைகொண்டு இன்னுமிப்பாதகன் என்ன செய்ய விருக்கின்றனனோவென்றவருந்தி காலாதிகளிற் பிராணனைக்கொண்டு போகுங் கூற்றுவனைக்கண்ட மன்னுயிரைப்போல நடுநடுங்கிக் குலைகுலைந்து மதிமயங்கி எங்கணும் நிற்கவும் பயந்து தலைதலை சிதறியோடி ஞானநாயகராகிய மகோற்கடமூர்த்தியைக் குறித்துப்புலம்பி முறையிடுவதாயினர்.

தீனராகிய தொண்டர்களுக் குற்றவினைகளைப் போக்கிட பாதுகாத்தருளும்பொருட்டு விருதுக்கொடியை நாட்டியிருக்கும் பக்தவச்சலனே! தமது வழியடிமைகளாக விருக்கின்ற அடியேங்களை வாட்டியலைக்குஞ் சத்துருக்களை இடியேற்றினை யொப்பவலைக்குந் தீனசரண்ணியனே! அடுத்தோர்களுக்கு அஞ்ஞான விருளைப்போக்கிப் பேரானந்தத்தைப் பெறச்செய்யவல்ல பரஞ்சுடரின்மூலமே! வேதாகமங்கள் முதலியவற்றினால் எண்ணியளவிடுதற்கரிய கர்த்தனே! திரிமூர்த்திகளில் முதன்மைபெற்றிருக்கின்ற சிவபிரான் பெற்றருளிய கடவுளே! பாமாலைகளினாற் புகழவல்ல தொண்டருக் கெளிமையான ஞானநாயகனே! என்றிவ்வாறு அனந்தமுறை துதிசெய்து, ஓ ஓ சகலபுவனாதாரக் கர்த்தனே! ஓஓ சச்சிதானந்தப்பொருளே! ஓஓ பரப்பிரமசொரூபியே! அடியேங்கள் முறையிடுந் துக்கவருத்தங்களைத் திருச்செவிகளிலேற்றுப் பாதுகாத்து இரட்சிக்கவேண்டும். சுவாமிகள் காலதாமதஞ்செய்தால் சர்வசங்காரகாலத்தைப்போல நாசமடைவோம், ஓ தீனதயாளுவே! கொடியரிற் கொடியனாகிய

இத்தேவாந்தகன் செய்யுஞ்செய்கைகள் தேவரீர் திருவிழிகளிற் காணப்படவில்லையோ? இன்னமுஞ் சற்றுநேரந் தேவரீர் பராமுகமா யிருந்தால் அக்கள்வன் பிரபஞ்சங்களனைத்தையும் நிமைப்போதிற் சுவீகாரஞ்செய்து போடுவதற்கைய மில்லை. மேலும், என்னென்ன அனர்த்தங்களைச் செய்வனோ தோற்றவில்லை. ஓ எமது குலதெய்வமே! விரைவில் கிருபையுற்றுத் தேவாந்தகனாகிய இப்பாதகனைக்கொன்று மன்னுயிர்கள்படும் வருத்தங்களை நீக்கியாளவேண்டுமென்று பலவாகத் துதித்துவேண்டினர்.

அவ்வேண்டுகோளை எமதுகர்த்தன் திருச்செவிகளிலேற்றுத் தேவாந்தகனாகிய உலக உபத்திரவங்களைத் தவிர்த்து நிலைபெறச்செய்யத் திருவுளங்கொண்டவராய்ச் சாரதியாகிய வாயுதேவனைப்பார்த்து நமதுதேரை விரைவில் தேவாந்தகனெதிரிற் கொண்டுபோகக் கடவையென்று திருவாய் மலர்ந்தனர். அவ்வாக்கியம் இந்திரன்முதலாகிய தேவர்களுடையசெவிகளில் அமுதத்தினைப் போல நுழைந்தமாத்திரத்தில் சந்தோஷசாகரத்தில் மூழ்கித் தேகபரவசத்தராய் ஆனந்தக்கூத்தாடி செயமுண்டாகக் கடவதென்று வாழ்த்தினார்கள். அப்போது வாயுதேவன் புரவிகளைதட்டி நவரத்தினமயமாகிய தேரை மணிகள்சத்திக்க வாயுவேகத்தினுங் கடுகித் தூண்டிக்கொண்டுபோய் இரணகளத்திற் சயசாலியா யுலாவிக்கொண்டிருக்கின்ற தேவாந்தகனுடைய தேருக்குநேராக நிறுத்தினான். அப்போது அண்டாண்ட புவனங்களையெல்லாம் வென்று சகலலோகங்களினுந் தனது அரசாட்சியினைச் செலுத்தி நீடித்திருக்கும் ஆயுளையும் வயிரதேகத்தினையும் பெற்றிருக்கின்ற அமரர்கட்கெல்லாம் எமனென்று சொல்லும்படியான இராசாதிராசனாகிய தேவாந்தகனானவன் தனக்கெதிரில்வந்த நவரத்தின மயமாகிய தேரினிடத்தில் பரிசுத்தமனத்தினையுடைய ஞானவான்கள் கருத்திலுக்குமெட்டாத நின்மலக்கடவுளாகிய மகோற்கடமூர்த்தியினது சூரியனொளியினு மேலிட்டுக்காட்டுஞ் சுயஞ்சோதி வடிவத்தினைநேரிற்கண்டு, அதுபரியந்தஞ் செய்திருந்த கொடியவினைக ளனைத்தினையும் போக்கப்பெற்றவனுப்பச் சிறிது நிதானித்துச் சர்வசங்கார மூர்த்தியாகிய சிவபிரானளித்தகுமாரன் இவனேயாகுமென்று நிச்சயித்து, சுத்தவீரனாதலாற் கோபாக்கினிமனதைவாட்ட எமதுகர்த்தனைப் பார்த்து, ஓ பாலனே! மேலான தவங்களைப்பெற்றிருந்த எனது தம்பியைக் கொன்றனை? அதனால் யாவராலும் வெல்லுதற்கரியவெனக்கு நீ மாறுபட்டனை? பிரமன்-விண்டு-உருத்திரன் முதலிய தேவர்களெல்லாம் ஒன்றாகக்கூடி என்னுடன் அளவற்றகாலம் யுத்தஞ்செய்தாலும் அதிவீரனாகிய என்னை ஒருக்காலத்திலும் வெல்லமாட்டார்கள். உனக்குதவியாகக் கூட்டிக்கொண்டுவந்த வீரர்களெல்லாம் அக்கினிமுன்பட்ட பஞ்சுமலையைப்போலச் சமர்க்களத்துக் கிரையாகப் போனதைக் கண்டனை? அந்த வீரரைப்போல நீயுமடிந்து போவையேயன்றி வெற்றிபெறப் போகின்றதில்லை. இனியேனுஞ் சாகாமற் பிழைத்திருக்க மனமுண்டாயின் நான் சொல்லுவதைக்கேள்? உன்னை இப்போதே உயிருடன் விடுகின்றேன் நீயேனை

ஆயுதங்களை எடுத் தெனக்குத் தொந்தரை கொடுக்காமல் என்னை யடுத்து வாழ்ந்துக்கொண் டிருவென்று தனது பிரதாபங்களையும், வீரத்தன்மையையும் செயப்பெருக்குகளையும் அவுணபாதகன் விரித்து விரித்துச் சொல்ல, அவையனைத்தையும் அருவுருவாகவிளங்கும் மகோற்கடப்பெருமான் கேட்டுப் புன்னகைசெய்து, ஓ அவுணராசனே! விண்ணுலகமுழுதும் துன்பத்தைவிளைத்துக்கொண்டிருந்த அற்பபுத்தியினையுடைய நீயும், மண்ணுலகம் முழுதும் கொடுங்கோலைச்செலுத்தி ஆண்டுவந்த உனது தம்பியும் தாய்வயிற்றிற் கருப்பமான நாள்முதற்கொண்டு நேற்றையவரையில் சகோதரரென்று சொல்லும்படியாக வாழ்ந்தீர்கள். அத்தன்மைத்தான உங்களிருவரில் ஒருவனைச் சொர்க்கலோகத்தில் தேவனாகயிருக்கவைத்தோ; அவனுக்குச் சகோதரனைப் பிரிந்தோமென்னும் வருத்தமிருக்குமல்லவா? ஆதலால் அவனுக்கு அவ்விடத்திலும் நீயே சகோதரனாயிருக்கும்படியாகவும், யுத்தகளத்தில் மாண்டு அங்கு சென்றிருக்கின்ற உனது சேனைகளும் உன்னையே அரசாட்சிக்கொள்ளும்படியாகவும், இப்போதே தேவனாக்கி அங்கன மனுப்புகின்றோம் அஞ்சவேண்டாமென்று திருவாய்மலர்ந்தனர்.

அவையனைத்தையுந் தேவாந்தகன் கேட்டு, அதிககோபங்கொண்டு கொவ்வைக்கனியையொப்ப விழிகள்சிவந்து அழற்சுவாலையெழப் பெருமூச்செறிந்து, வடவையைப்போலச்சீறி மந்தரகிரிக்குச் சமதையாகப் பாரித்து நீண்டிருக்கும் வில்லைக் கரத்திலேந்தி இருமுனைகளும் ஒன்றுபட வளைத்து நாணேற்றி அதில் விஷங்களைக் கக்கவல்ல தீட்சண்ணியமுள்ள பாணவருஷங்களை அபரிமிதமாகப் பூட்டி மகோற்கடமூர்த்தியின்மீதும் அவர் ஆரோகணித்திருக்கின்ற இரதத்தின்மீதும் உதயகிரியைப் பனிப்படலம் மூடியதைப்போலச் சொரிந்து சிங்கத்தையொப்பக் கர்ச்சித்தனன். அதனை மகோற்கடமூர்த்தி கண்டு இவன் வில்வித்தை வெகுநேர்த்தி, வெகுநேர்த்தி யென்று நகைத்து மகமேருவென்னும் பிநாகமாகிய வில்லைத் தமது கரத்திலெடுத்து வளைத்து அதிலே கணைகிறந்த பாணங்களைந் தொடுத்து விடுத்துத் திசையிறைத்துக் குமுறிக்கொண்டு மேலிட்டுவருகின்ற அவுணன் படைகளையெல்லாஞ் சின்னபின்னப்பட வாட்டிப் பின்னர் இரண்டு கணையினால் அவனுடைய தூணியையும் வில்லையும் பொடிப்படுத்தினர். உடனே தேவாந்தகன் வேறொரு வில்லை யேந்திவந்து சுவாமியினுடைய தேரின்மீது மிகவுந் தீட்சண்ணியமுள்ள ஆயிரம் பாணங்களை பிரயோகித்தான். அப்போது எமதையனும் அத்தொகைப் பாணங்களினால் அவையனைத்தையும் தூள்படுத்தி வேறே மூன்றுபாணத்தினால் அப்பாதகனுடைய தேரையும், தேர்ப்பாகனையுங், குதிரைகளையுந் துணித்து நாசமாக்கினர். அதற்குச் சற்று மிளையாது உடனே மற்றொருதேரில்வந்து தனதுவில்லில் பதினாயிரங் கணைகளை ஒரேதொடையிற் பூட்டிப் பிரயோகித்தனன். அக்கணைகளுக்கு மாறாக மகோற்கடமூர்த்தியானவர் பற்பல வாளிகளைத் தூண்டி அதஞ்செய்து, பின்னுஞ்சில கணைகளினால் அவனுடைய கிரீடத்தையும் வில்லையுந் தேரையுஞ் சேமத்

தேர்களையும் பொடிபடுத்தினர். பின்னர் தேவாந்தகனுனவன் முன்னர் தனது தந்தையுபதேசித்த மந்திரத்தின்படி ஓமகுண்டத்தினின்றும் உதித்த குதிரையின்பேரில் ஏறிக்கொண்டுவந்து ஓர் வாளாயுதத்தைக் கறகறவென்று சுழற்றி மகோற்கடமூர்த்தியினுடைய மார்பின்மீது வீசினன். உடனே எமதையனுனவர் தமது மழுவாயுதத்தினுல் அவன் வாளையும் அவனேறியிருந்த குதிரையையுஞ் சின்னபின்னமாக நிலத்தில் வீழ்த்தினர். இப்பால் தேவாந்தகன் பாதசாரியாய் நின்று மானமானது மனதை வாதிக்க இரவுத்திராகாரமாகக் கோபித்து இப்பாலன் எந்தபாணங்களினுலும் சளைப்பட்டவனன்று ஆதலால் தேவாஸ்திரங்களைச்செலுத்தி வாட்டிச் செயப்பிரதாபத்தைப் பெறக்கடவேனெனத் துணிவுகொண்டவனுய், அம்புபெய் தூணியிலிருந்த வருணாஸ்திரம், வாயுவாஸ்திரம், கருடாஸ்திரம், எமாஸ்திரம், நாராயணுஸ்திரம் என்னும் ஐவிதப் படைகளையுமெடுத்துத் தூபதீபனைவேத்தியம் முதலிய உபசாரங்களை மானதபூசையினுல் நிறைவேற்றி வில்லிற்பூட்டி மேகங்கள்போய்ச் சமுத்திரங்களைப்போல ஆரவாரித்திருக்கின்ற தேவசேனைகளையும் பூதவெள்ளங்களையும் அதட்பரித்துவதன்றி, அவைகட்குத் தலைவராகவிருக்கின்ற வீரர்களையும் சிவகுமாரனையும் நாசப்படுத்தி மீளக்கடவீர்களென்று மந்திரபூர்வகமாகப் பிரயோகித்தனன். அதை எமதையன்கண்டு, அவைகட்கு மாருக அக்கினியாஸ்திரம், நாகாஸ்திரம், சிகுபாஸ்திரம், பிரமாஸ்திரம், சரபாஸ்திரம் என்னும் ஐவகைப் படைகளைப் போக்கினர். பின்னர் அவுணர்பெருமான்விட்ட அத்திரங்களும், தேவர்பெருமான்விட்ட அத்திரங்களும் வெளிப்பட்டமாத்திரத்தில் ஒவ்வொன்று அளவற்ற வடிவங்களைக்கொண்டு வருணாஸ்திரம் சர்வசங்கார காலத்தில் உலகங்களையழிக்கச் சமுத்திரங்களையு முடைத்துக்கொண்டெழும் பெரும்புறக்கடலைப்போலச் சலப்பெருக்கை யுண்டுபண்ணி அலைகளைப்பெருக்கி அதிகவேகமாய்ப் புரண்டுவர, அக்கினியாஸ்திரமானது ஊழிகாலத்தெழும் வடவாமுகாக்கினியைப்போல அனந்தவாலைகளைவீசி உலகங்களை மூடியிருந்த சலப்பெருக்கை நிமைப்போதில் வாளவுண்டது. வாயுவாஸ்திரம் யுகாந்தகாலத்தெழும் பிரசண்டமாருதத்தைப் பெருக்கிச் சூறாவளியைப்போல வேகங்கொண்டு வீசியது. நாகாஸ்திரமானது விசாலமாகிய படங்களை விரித்துக்கொண்டுவந்து சூரியனுந் தியங்கி வாடத்தக்கதாகவேவிட்டு வாயுவின் பெருக்கைத் துங்கிரசித்தது; கருடாஸ்திரம் விசாலமாகிய சிவந்த சிறகுகளை விரித்துக்கொண்டு நாகாஸ்திரத்தினுலுண்டான சர்ப்பக்கூட்டங்களை மடக்கிக் கூரிய கொக்கங்களினுல் பிளந்தும், மூக்கினுல் கொத்தியும், சிறகடியினுல் மாய்த்தும் அதம்பமித்தியது. ஸிகுபாஸ்திரமானது அண்டகோளகையு மதிர்ந்து இடிபடாய்க்கும்படிக்குச் சீறிவந்து கருடாஸ்திரத்தினுடைய வலிமையும் செய்கைகளையும் நிலைகோத்தி வழுத்தியது. எமாஸ்திரம் அதிக மகிமைகளைக் காட்டி ஆர்ப்பாட்டங்களைச்செய்துகொண்டு நந்திப்படையுடனெதிர்க்க, பிரமாஸ்திரமானது வடவையைப்போலச் சீறிக் கொக்கரித்துக் கனக்கிரந்த திவ்விய பாணகோடிகளைப்

படைத்து நந்திப்படையோ டெதிர்த்துநின்ற எமாஸ்திரத்தை நாசப்படுத்தியது. நாரசிங்கவடிவைக்கொண்டிருக்கின்ற நாராயணுஸ்திரமானது அளவற்ற மாயைகளைவிரித்து எங்கும் இருளின்பெருக்கை நிரப்பி அதிக உச்சாகத்துடன் சற்பத்தைப்போலச் சீறிவந்து நந்திப்படையுடனெதிர்த்து யுத்தஞ்செய்ய வீரபத்திரவடிவங்கொண்டிருக்கின்ற சரபாஸ்திரமானது வடவைக்கனலும் ஆலகாலமும் நடுங்கி அஞ்சக்கொதித்து அதிகவேகமாய்வந்து நந்திப்படையுடனே போராடுகின்ற நாராயணுஸ்திரத்தை மடக்கிக்கொண்டு அதனீ வீறுப்பையெல்லாமடக்கித் தூரத்திவிட்டது. இவ்வாறு தெய்வப்படைகள் பத்தும் ஒன்றை யொன்றெதிர்த்துப் போராடுகின்ற சிங்காரங்களைத் தேவாந்தகன் கண்டு அப்போரில்தனதுபடைகள் பின்னிட்டதையும், மகோற்கடமூர்த்தியினுடையபடைகள் வீறியிருப்பதையும் நினைத்துநினைத்து மனம்வருந்தி, மீட்டுந் தைரியங்கொண்டு எந்தப்படையழியினும் பரமசிவகடாட்சத்தினுல் பெற்றிருக்கின்ற இப்படையழியுமோவென்றுயோசித்து நிமைப்போதில் சராசரப்பிரபஞ்சங்களையும்வாட்டிச் சாம்பராக்கவல்ல உருத்திரமூர்த்திவடிவாகிய பாசுபதாஸ்திரத்தையெடுத்துத் திருமஞ்சனதூபதீபமுதலிய சோடசஉபசாரங்களையும் மானதபூசையினுல்முடித்து பக்திபூர்வமாகத் துதித்துவாழ்த்தி வில்லிற்பூட்டி, அட்டகாசமாக வளையவலித்துப் பிரயோகித்தனன்.

இவ்வாறு தமது பிதாவினுல் அனுக்கிரகிக்கப்பெற்ற படையினைப் பகைவன் செலுத்தக்கண்ட மகோற்கடமூர்த்தியானவர் உடனே தாமும் தம்மிடத்திருந்த பாசுபதாஸ்திரத்தினை யெடுத்துப் பிரயோகித்தனர். பின்னர் அவ்விரண்டு தெய்வீகப்படைகளும்வீறி வானத்தெழுந்து லோகநாயகனுகிய உருத்திரவடிவங்களைக்காட்டி ஒருபுறத்தில் பிரசண்டமாருதத்தை யெழுப்பியும், ஒருபுறத்தில் வடவாமுகாக்கினியைக் காட்டியும், ஒருபுறத்தில் ஆலகால விடத்தைப் பெருக்கியும், ஒருபுறத்தில் வயிரவர்களைச் சிருட்டித்தும், ஒருபுறத்தில் பத்திரகாளிகளை யுண்டுபண்ணியும், ஒருபுறத்தில் வீரபத்திரர்களை வெளியிட்டும், ஒருபுறத்தில் துர்க்காதேவிகளை வரவழைத்தும், ஒருபுறத்தில் சண்டிகளைத் தோற்றக் காட்டியும், ஒருபுறத்தில் பூதபசாசு டாகினி வருக்கங்களைக் கக்கியும், ஒருபுறத்தில் எமகாலிங்கிலியரைச் சிருட்டித்தும், ஒருபுறத்தில் காடாந்தகாரமாகிய இருளைப்பெருக்கியும், ஒருபுறத்தில் அக்கினிமழையைப் பொழிந்தும், ஒருபுறத்தில் இடிமின்னல் குமுறல்களை யுண்டாக்கியும், ஒருபுறத்தில் அவுணர்களைப் படைத்தும், ஒருபுறத்தில் அதிக வீரபராக்கிரமத்தோடுகூடிய பூதங்களைச் சிருட்டித்தும், ஒருபுறத்தில் சடாமுனிக்கூட்டங்களை யுண்டாக்கியும், ஒருபுறத்தில் சக்கரம் தண்டம் முசண்டிமுதலிய படைகளைப் படைத்தும், ஒருபுறத்தில் அக்கினியாஸ்திரம் நாகாஸ்திரம் பிரம்மாஸ்திரம் முதலிய தெய்வப்படைகளைக்கக்கியும், ஒருபுறத்தில் எமதண்டம் காலபாசம் முதலியவைகளையுண்டாக்கியும், இவ்வாறு அவ்விரண்டு பாசுபதாஸ்திரங்களும் பற்பல காட்சிகளைக்காட்டி மண்விண்ணெவ்விடங்களினுமுலவி, அல்லோலகல்

லேலப் பிடித்தபோது பூதவெள்ளங்களும் தேவசேனைகளும் பஞ்சேந்திரியங்களும் நிலைபிறழ்ந்து கைகால்களிளைத்துச்சோர்ந்தனர். அணிமாதி அட்டமாசித்திகள் மதிமருண்டோடினர். குருநாதியவீரர்கள் பயப்பிராந்தியினால் திகைத்து மகோற்கடமூர்த்தி யருகிற்சென்றதுழ்ந்தனர். அவுணபாதர்களனைவருங் குலைகுலைந்து நடுநடுங்கிச் சின்னபின்னப்பட்டுச் சோர்ந்தனர். வானத்தையளாவிநின்றதோரணிகள் பொடிப்பொடியாய்க் குவிந்தன. மதயானைக் கூட்டங்கள் வெறியடங்கி வீரிட்டோலமிட்டன. புரவிப்பந்திகள் வாயுவைப்போலத் திசைகெட்டோடின. பதினாலுலகங்களில் வாசஞ்செய்கின்ற பிராணிகளனைத்தும் பயப்பிராந்திகொண்டு இதுதானோ பிரளயகாலமெனத் துக்கசாகரத்திற்சேர்ந்தனர். இவ்விதமாய்ச் சராசரப்பிரபஞ்சங்களனைத்துந் திகைத்து வாடும்படிக்குச் சங்காரக்கடவுளானவர் இரண்டுருவைக்கொண்டு விளையாடுவதைப்போல இரண்டு பாசுபதாஸ்திரங்களுஞ்சேர்ந்து ஒன்றாய்க்கொண்டு பின்னிடையாமல் கிலகோரம் விசேஷப்போரைக்காட்டித் தங்களிடத்துண்டாகிய பாணகோடிகள் முதலியவற்றைத் திருப்பிக்கொண்டு தங்கள்கொடுமையினால் மாறுபட்ட அண்டங்கள்-புவனங்கள்-விண்-மண்-பாதலம் முதலிய விடங்களையதாட்பிரகாரம் நிலைபெறச்செய்து தங்களைச்செலுத்திய தலைவர்கள் கரத்தில்வந்து சேர்ந்தன.

அதனைக்கண்ட தேவர்களெல்லாரும் சந்தோஷப்பெருக்கினால் கரங்களைக் கொட்டி நகைத்து பாசுபதாஸ்திரத்தினால் பாதகன் செயம்பெறுங்காரணத்தினால் அவனுக்கு நாசகாலம் வந்துவிட்டதென்பதற் கையமில்லையெனக் களித்தனர். அப்போது தேவாந்தகன் தனது பாணம் வியர்த்தமாகத் திரும்பியதையும், சமுத்திரம்போலத் தன்னைச் சூழ்ந்திருந்த சதுரங்கசேனைகள் மாய்ந்ததையுங் கண்டு திகைத்துக் கணப்போதில் சராசரப்பிரபஞ்சங்களைத் தகித்துச் சாம்பராக்கவல்ல பாசுபதாஸ்திரத்தை விடுத்தனன். அஃது பகைவனை வென்று வெற்றிபெறாமல் அபலமாகத் திரும்பிவிட்டது. இனி செலுத்துவதற்கு அதனினுஞ் சிறந்த பாண மென்னவிருக்கின்றது. இனிமாய்கைப்பெருக்கினாலல்லது இப்பாலனைச் செயிக்கவொண்ணாதென்று நிதானித்து விரைவில் சுக்கிரன்தனக் குபதேசித்திருந்த மோகமந்திரத்தைச் செபித்து அதன் மூலத்தினால் அளவற்ற மாயப்போர்களைவிளைத்து ஆரவாரித்தனன். அம்மாயங்களையெல்லாம் நிமைப்போதில் எமதாண்டவன் ஞானப்படையினைச் செலுத்தி மாய்த்தனர். இவ்வாறு தேவாந்தகனுடைய பராக்கிரமத்தை விண்மொழி சகலருங்கண்டு பிரமிக்கும்படி கொடிப்போதில் சகல லோகங்களையும் நிறுக்கவல்ல எமதையன் அவனெதிர் ஒருநாள்முழுவதும் யுத்தஞ்செய்து மறுநாள் விடியற்காலையில் அவன் முன்னைத் தவமுயற்சியினாற் சிவபிரானிடத்திற் பெற்றிருக்கின்ற வரங்களை யோசித்து உடனே சகலரானும் போற்றப்படுகின்ற யானைமுகத்தினைக்கொண்டு தமது தந்தங்களி லொன்றை யொடித்தனர். அச்செயலைத் தேவாந்தகன் கண்டு தனக்குச் சிவபிரான் திருவாய் மலர்ந்திருக்கின்ற முடிவினைக் கருதி

லென்னி யனைசமூர்த்தி யொடித்துக் கையில்வைத்திருக்கின்ற கொம்பினைப் பறித்து முறித்தெறியும்படிக்கு மேலிட்டு ஓடிவந்து தேரின்மீது பாய்ந்தனன். அப்போது சுவாமி அக்கொம்பினால் அவன் சிரத்திற் குத்தினர், உடனே அவன் சிரமானது ஆயிரம் பத்தலாகப் பிளந்து அவனுயிரானது சோதிருபமாக யாவருங் காணவெளிக் கொண்டுவந்து விநாயகப் பெருமானுடைய திருவடிகளில் ஐக்கியமாயது.

கேட்மின்களோ சவுனகாதி முனிவர்களே! இவ்விதமாகத் தேவாந்தகன் மாண்டுபோனதைத்தெரிந்த பூதசேனாதிபதியாகிய பானுகம்பன் அதிகமான உற்சாகத்துடனே வானத்தையளாவப் புயங்கள்பூரித்துக் கர்த்தன் குணாதிசயங்களையும் வெற்றிப்பாட்டினையும் ஆனந்தபரவசனாய்க் கொண்டாடி. போற்றித் தேவர்கள் கரங்களைக்கொட்டி வாழ்த்தெடுப்பத் தனதுசரீரமுள்ள ஆயிரம் வாய்கள்தோறுந் தவளநிறம்பெற்றிருக்கின்ற உன்னதமுள்ள வரிமுகச்சங்கங்களைச் சேர்த்து உலகங்களனைத்துஞ் செவிடுபட்டுத் திகைத்து மதிமருண்டு வாடிச் சோரும்படிக்குப்பேரொலியெழப் பொம்பொம்மென்றாதினன். மகாவிக்நேசுவரானவர் மனமகிழ்ந்தவராய்ப் பவழத்தைப்பழித்து விளங்கும் தமது சிவந்த அதரத்தில் பாஞ்சசன்னியமென்னுஞ் சங்கினைவைத்து முழக்கினர். இந்திரனுக்குண்டாகிய சந்தோஷத்தின்பெருக்கை இப்படிப்பட்டதென்று என் போலியர்களாற் சொல்லப்படுமோ? பிரமன் முதலியஎனையதேவர்கள் நகைமுகராய் ஆனந்தக் கூத்தாடி, எமது ஐயன்பெருமைகளைப் பலமுறைகொண்டாடிப்போற்றி மகரந்தங்களை இறைத்துத்தேனைப்பெருக்கித் திசாதிசைகளிற் பரிமளித்திருக்கும் பஞ்சகற்பக மலர்களைவாரிவாரிச்சோனைப் பெய்யலையொப்பக் கர்த்தனெழுந்தருளியிருக்கின்ற திருத்தேரின்மீது சொரிந்தனர். கருடகாந்தருவர் ஆகாயத்தில் தோற்கருவி-துளைக்கருவி-முதலிய வாத்தியங்களை அளவற்ற களியாடல்களோடுமுழக்கி ஆனந்தித்தனர். மூன்றுலோகங்களிலுமுள்ள பிராணிகள் முன்னரவனாலுண்டான துன்பங்களையெல்லாம் போக்கிச் சந்தோஷசாகரத்திலாழ்ந்திருந்தனர். சகலலோகங்களிலுந் தருமதேவதையானவள் குதிகொண்டு விளையாடினள்.

இப்பால் என்னை யடிமையாகவுடைய விநாயகப்பெருமானானவர் அப்போது கொண்டிருக்கின்ற யானைவதனத்தினைமாற்றி முன்போலவே மகோற்கட வடிவங்கொண்டருளினர். உடனேகாசிராசனுந் தேவர்கள்முனிவர்கள் முதலாயினோரும் புத்தமுதத்தைத்தெவிட்ட உண்டவர்களைப்போலமனமகிழ்ச்சி பெற்றவர்களாய்த் தேகபரவசப்பட்டு சத்தசாகரங்களு மொலித்தெழுமாறுபோல ஆனந்தக்கூத்தாடி விழிகளிற்போதநீரைப்பெருக்கி உடன்முழுவதும் உரோமாஞ்சிதம்பூத்து, வேதவாக்கியங்களினாற் பலமுறைதுதித்து, சந்தனம் புட்பம் தூபதீபம்முதலிய உபசாரங்களை ஆகமவிதிப்படிநிறைவேற்றித் தம இடத்திற் கடாக்ஷித்திருக்கின்ற திருவருளின் பெருக்கை நினைந்துநினைந்து

களிமிகுதியினாற் செயசெயவெனப் போற்றிக் கொண்டாடினர். இப்பால் மகோற்கட மூர்த்தியானவர்செயபேரி வெற்றிச்சங்கம்முதலியவைகள் அண்டங்களதிர முழங்க, பூதவீரர்கள்யாவரும் ஐயன்கிருபைப்பெருக்கின் காரணங்களையும் வீரபராக்கிரம செயப்பிரதாபத்தையும் மங்களகரமாகிய குணசம்பத்துகளையுங் கொண்டாடிப் புடைசூழ்ந்துவர, சித்திபுத்திகள்சமேதராய்ச் சிங்கவாகனமூர்ந்து எழுந்தருளி அணிமாதி அட்டமாசத்திகளும் பவுத்தேவியென்கின்ற பெண்பூதமும் குருரன்முதலியவீரர்களும் அதிகமனவெழுச்சியுடன்ஆரவாரித்து இருமருங்கினும்நெருங்கிக், காசிப்பட்டணத்தில்வந்து அரசனுடைய*அரமனைக்குள்ளேநுழைந்து கொலுச்சபையில் நவரத்தினகசிதமாய் விளங்காநின்ற சிங்காதனத்தில் வீற்றருளினர்.

கேட்டீர்களோ சவுனகாதி முனிவர்களே! மகோற்கட மூர்த்தியானவர் மகாவரப்பிரசாதியாகிய தேவாந்தகனைச் சங்காரஞ்செய்தருளியவிதம் இது. இனிக்காசிராசனுடைய குமாரனுக்கு விவாகஞ்செய்துமுடித்து மீட்டுங்காசிப முனிவரிடத்திற்சென்று அவ்விடத்தினின்றுந்தமது லோகத்திற் கெழுந்தருளி காசிராசனுக்கு முத்தியைக்கொடுத்தருளிய விதத்தையுந் தொகுத்துச்சொல்லுகின்றேம் கேட்பீராக. இப்பால் கொலுச்சபையிலெழுந்தருளி யிருக்கின்ற மகோற்கடமூர்த்தியைக் காசிராசன்பணிந்தெழுந்து இருகரங்களையுஞ்சிரமேற் கூப்பிநின்று, ஓ பக்தவச்சலனே! ஓ பரஞ்சுடரே! ஓ தீனதயாளுவே! தேவரீர்செய்தருளிய யுத்தவலங்காரங்களைத் தரிசிக்கவந்த தேவர்கள்முதலிய யாவரும் இனித்தேவரீருடைய கிருபையினால் நடத்தப்போகின்ற விவாகமகோற்சவத்திற்கு இங்ஙனே இருந்துபோகும்படியாக சுவாமிகள் அனுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தனன். சுவாமியுமதற்கிசைந்து யாவரும் விவாகத்திற் கிருந்துபோகும்படி கட்டளையிட்டருளினர். அதற்குமேல் காசிராசன் சுவாமியிடத்தில் விடைபெற்றுச் சென்று சகலதேயங்கட்கும் கலியாணப் பத்திரிக்கையனுப்பவும், விவாகத்திற்குவேண்டிய பதார்த்தங்களைச் சேகரிக்கவும் மந்திரிகட்கு உத்தரவுபண்ணி, அங்கிருக்கின்றதேவர்கள் முதலாயினோர்க்குத்தக்கபடி உபசாரங்களைச்செய்து அவ்வவர்கட்கு வேண்டுங்காரியங்களில் ஒருதாழ்வுமில்லாதபடி நடாத்திவந்தனன். விவாகப்பத்திரிகையைப் பார்த்த பறதேயத்தரசர்களும் பந்துசனங்களும் மற்றுமுள்ள நகரவாசிகளுந் தங்கடங்கள் பரிவாரங்களோடுஞ் சுற்றத்தினரோடும்வந்து காசிராசனுடைய அரண்மனையைச்சேர்ந்தனர். விவாகத்திற்குவேண்டிய காரியங்களையெல்லாம் அமைச்சர்கள் கிரமப்படிசெய்து நிறைவேற்றிவைத்தார்கள்.

இப்பால் சகலலோகநாயகராகிய மகோற்கடமூர்த்தியானவர் புரோகிதரால் நல்லமுகூர்த்தங்களைப் பார்த்து அங்குரார்ப்பணம்முதலிய கிரியைகளைச் செய்துவைத்து இராசபுத்திரனையும் மாகததேசத்துஇராசன் புத்திரியையும் விவாக மண்டபத்திலிருக்கவைத்து ஐந்துநாள்வரையில் நவக்கிரகமுதலியவை

களை வேதாகமமுறைமைப்படி நிறைவேற்றி அதற்குமேல் அங்குவந்திருந்த பிரமனாதியதேவர்கள் முனிவர்கள் முதலாயினோரை அவ்வவர்கள் யதாஸ்தானத்திற்குப் போகும்படி விடைகொடுத்து யுத்தகளத்தில் ஈசத்துவசத்தியா னுண்டான மற்றொருசத்தியை வரவழைத்து அவள்முன்னரெடுத்து விழுங்கியிருந்த சக்கிரங்களையுமிழச்செய்து, அச்சக்கிரங்களைப்பழையபடி ஆகாயத்திற் சஞ்சரிக்கும்படி விடுத்தருளினர். பின்னர் சுவாமியினிடத்தினின்றும் 'விடைபெற்றுச்செல்லுகின்ற தேவர்கள்முதலாயினோரைக் காசிராசன்பணிந்துநிற்க அவர்கள் அக்காசிராசனைப் பார்த்து, ஓ தவசீலனாகிய இராசாதிராசனே! கரைகாணாத துக்கசாகரத்துள்மூழ்கி ஓராதரவுமில்லாமல்மயங்கியிருந்த எங்களுக்குத் தக்கபடி பேரின்பம் கிடைக்கும்படியாக ஞானவான்களாலுங் காண்டற்கரிய வொண்ணாத பரப்பிரம வஸ்துவை இங்ஙனமழைத்துவந்து அவுணர்களையெல்லாந் தொலைத்து எங்களுடைய சத்துருக்களையுந் துன்பங்களையும் போக்கினை. சற்குணசீலியாகிய உனக்குயாங்கள் என்னகைம்மாறு செய்யப்போகின்றனம். நீதிரிகரணத்தாலும் ஒன்றான கர்த்தாவை வழிபட்ட காரணத்தினால் உன்னைத்தரிசித்த பேர்கள் தர்மார்த்த காமமோட்சமென்கின்ற நால்வகைப் புருஷார்த்தங்களையு மெளிதி லடைவார்களெனில், நீ இவ்வுலகத்தில் விரும்பத்தக்க காரியம் ஒன்றுமில்லை. ஆயினும் உன்மீது எங்கட் குண்டாயிருக்கின்ற பிரீதியினாலே யாங்கள் கொடுக்கின்ற வரங்களையும் ஒப்புக்கொள்ளவேண்டுமென்று சொல்லி அவ்வவர்கள் தங்களாற்றலுக் கேற்றவரங்களைத் தனித்தனி கொடுத்துத் தத்தம்பதிகளை நோக்கிச் சென்றார்கள். பின்னர் மகோற்கட மூர்த்தியானவர் காசிராசனை நோக்கி, அரசனே! இன்றைய தினம் அஸ்தமயனத்திற்கு முன்னே நாமும் நமது தாய்தந்தையரிடத்திற் செல்லவேண்டுமாதலால் விரைவில் இரதத்தைத் தருவிக்கக் கடவையென்று சொல்லினர். அச்சொல்லைக் கேட்டமாத்திரத்தில் அரசன் ஆவைப்பிரிந்த கன்றுபோல விம்மிவிம்மியழுது அறிவழிந்து மூர்ச்சையாகிவீழ்ந்து மீட்டுந் தெளிந்தெழுந்து, சுவாமியை யழைத்துக்கொண்டு வந்தபோது மீட்டும் விரைவிற் கொண்டுவந்து விடும்படி அதிதியாகிய தாயினால் சொல்லப்பட்டதை நினைந்து சிறிது துயரத்தினின்றும் நீங்கிச் சித்திபுத்திகள் முதலான சத்திகட்குங் குருரன்முதலிய வீரர்கட்கும் மகோற்கடமூர்த்திக்குந்தக்கபடி வெவ்வேறு இரதங்களைச் சோடித்துக் கொண்டுவரும்படி அமைச்சருக்காக்கியாபித்தனன். அவர்களவ்வாறே இரதங்களை அரண்மனைவாயிலிற் கொண்டுவந்து நிறுத்த மகோற்கடமூர்த்தியானவர் சிரோரத்தினங்களினாற் சோடித்திருக்கின்ற சிங்காதனத்தைவிட்டிறங்கி அரசன், அமைச்சர், சேனைத்தலைவர் முதலாயினோர் புடைசூழ்ந்துபோற்றிவர, வெண்சாமரைகள்-ஆலவட்டங்கள்-குடைகள்-கொடிச்சீலைகள் முதலிய சின்னங்களைப் பலரேந்திச்செல்ல, திருச்சின்னம் பிள்ளாங்குழல் முதலியவைகளைப் பலர்வாசிக்க, அருகில் நிவேட்டிகளைப் பலரேந்திநடக்க, பட்டேர்புகழ, வித்துவசனங்கள் கொண்டாட, கட்டியக்காரர் எச்சரிக்கைசொல்ல,

தேவமங்கையர்கள் நடிக்க, சுமங்கலிகள் ஆலாங்களைச் சுழற்றிவர, இவ்வித வைபவங்களோடு சித்திதேவி புத்திதேவி முதலாயினோருடன் கொலுச்சபையினின்றும் வெளிக்கொண்டு அவ்வவர்களை வேறுவேறு இரதங்களி லேறிவரக் கட்டளையிட்டு, நவரத்தினமயமாயிராநின்ற மற்றொருதேரில், அரசன் சாரதியாக விருக்கும்படி தாமாரோகணித்து, சயபேரி வெற்றிச்சங்கம் குடமுழா முதலிய வாத்தியங்கள் அண்டங்களதிர முழங்கும்படிக்கு உட்கோட்டையைக் கடந்து வெளிக்கோட்டையில் வரும்போது அக்குவசிக்கின்றவர்க ளெல்லோரும் மெலிந்த உள்ளத்தோடு மெய்யன்புநன்னா ஓடிவந்து மகோற்கடமூர்த்தியினுடைய தேரைப் புடைசூழ்ந்து சுவாமியினுடைய பிரிவையாற்றமாட்டாதவர்களாய் விழிகளில் நீரருவிபாயும்படியாகத் துக்கித்து நின்றார்கள். அவர்களை மகோற்கடமூர்த்தி தேற்றி, ஓ பத்திமையிற் சிறந்தவர்களே ! நம்மைக்கணபதி மூர்த்தமாகப் பொன்முதலியவைகளினாலே சமைத்து உங்கள் மனைகடோறும் வைத்துப்பூசித்து எல்லாக் கிலேசங்களையும் நீக்கிக்கொள்ளக் கடவீர்களென்று அனுக்கிரகஞ் செய்தருளினர். அவ்வனுக்கிரகத்தை யாவருஞ் சிரமேற்கொண்டு வீட்டுக்குத் திரும்பிவிட்டார்கள். உடனே முன்னர் சுவாமியோடு பிரதிதினம் விளையாடல் செய்திருந்த சிறுவர்கள் யாவரும் ஓடிவந்து கர்த்தரைப் பணிந்தெழுந்து நடுநடுங்கிக் கிலேசித்து விழிகளில் நீரருவியைப்பெருக்கி, ஓ கருணைக் கடலே ! ஓ எங்கள் கண்மணியே ! ஓ பெருஞ்செல்வமே ! ஆன்மகோடிகட்கு மலவிருணீக்கி முத்தியைத்தரவல்ல பராபரமாயிருக்கின்ற தேவரீர் அப்பெருமைக்கேற்றபடியிராமல் அடியேங்கள் சிறுமைக்கேற்றபடி இப்பூவுலகத்தில் ஓர்பாலனாக அவதரித்து விளையாடுகின்றவனைப்போன்றும், விளையாடல் காட்டுகின்றவனைப்போன்றும், தோழனைப்போன்றும், தோழனல்லாதவனைப்போன்றும், கொடுப்பவன்போன்றும், கொடுப்பதை யேற்பவன்போன்றும், அடிப்பவன்போன்றும், அடிப்படுகின்றவன்போன்று மிருக்கின்ற அடியேங்களிலொருவராகிப் போசனாதிகளை யுண்டும், ஆடையாதிகளை யுடுத்தும், ஆபரணாதிகளை யணிந்தும், எல்லாவிளையாடல்களையும் இதுகாறு மெங்களோடுங் கூடவிருந்து விளையாடிக்கொண்டிருந்த தேவரீர் இத்தினம் அடியேங்களை விட்டுப்பிரிந்து போகும்படி நினைத்தபடியால், நீர்வற்றிய குளத்தில் மீன்குட்டிகள் பதைத்து இறக்குமாறுபோல இனியடியேங்களிறந்துபோவது சித்தம். அல்லாவிடில் தேவரீரோடுகூட வந்துவிடுகின்றோம். சுவாமிகளைப்பிரிந்து ஓர் கணப்போதும் உயிர்வைத்திரோம். என்று இவ்வாறு பலமுறை விம்மிவிம்மி அழுது குறையுற்றார்கள். அவர்களை மகோற்கடமூர்த்தி கருணையோடும் பார்த்தருளி, ஓ அன்பிற் சிறந்தவர்களே ! யாம் உங்களைவிட்டுப் பிரியோம். எக்காலத்தும் உங்களுடைய குடும்பத்தில்வசித்திருப்போம். உங்கட்கு யாதேனுந் துன்பம் நேருமாயின் அப்போதே நம்மைநினையின்கள்; அத்துன்பங்களை யாமே நிவர்த்திசெய்தருள்வோம். என்றிவ்வாறு பலதேறுதல்சொல்லி அவர்களை யனுப்பிவிட்டனர்.

இப்பால் காசிராசன்தேரை விரைவிற்றூண்டி அக்கரமுழுவதுந்தாண்டி அளவற்ற நாடுகளையும் காடுகளையுங்கடந்து காசிபமுனிவருடைய ஆச்சிரமத்திற்குச் சமீபமாகச் செலுத்திக்கொண்டு வந்தனன். அவ்வரவைக் காசிபமுனிவரும் அவர்பத்தினியாகிய அதிதியுமறிந்து எதிர்கொண்டனர். உடனேமகோற்கடமூர்த்தியானவர் நமது தாய்தந்தையர் வந்தார்களென்று ஆனந்தமுற்று நேரேயென்று தேரைவிட்டிறங்கி அவர்கள் எதிரிற் சென்றனர். அப்போது தந்தையாகிய காசிபமுனிவர் அத்தியந்த சந்தோஷத்தோடு சுவாமியை அணைத்துக்கொண்டனர். அதிதியாகியதாயும் சுவாமியைத்தழுவி ஆனந்த முற்றனள். அருகிலிருந்த மற்றமுனிவர்கள்முதலாயினோர் சுவாமியைப் பலமுறைவந்தித்து உபசரித்தார்கள். அவ்வவர்கட்குத் தக்கபடி சுவாமியும் பற்பல உபசாரங்களைச் சொல்லியருளினர். பின்னர் காசிராசனானவன் காசிபமுனிவரையும் அவர் பத்தினியையும் பணிந்தெழுந்து கைகூப்பிநின்று, என்னையாளுடையவர்களே! உங்களுடைய கிருபாகடாட்சத்தினால் பூமிபாரம் நீங்கி விவாகமும் நிறைவேறியது முன்னர் நீங்கள் உத்தரவுசெய்தபடி சுவாமியை விரைவில் அழைத்து வாராமலிருந்ததற்குக் காரணம் யாதெனில், இவ்விடத்தினின்று வெளிக்கொண்ட அத்தினமே தமக்கெதிரில் ஆயுதபாணியராய்வந்த அளவற்ற அவுணர்களைக் கொன்றனர். அதற்கடுத்த மூன்றுநாள் யாவரும் ஆனந்த மெய்தும்படி சித்திபுத்திகளை விவாகஞ் செய்தருளினர். ஐந்தாநாள் மூன்று அவுணர்களைச் சங்கரித்தனர். ஆறுநாள் சோதிடனாகவந்த ஓரவுணனை மாய்த்தனர். ஏழாநாள் மீனமாகவுந் தவளையாகவும் வந்த இரண்டவுணரை நாசஞ் செய்தனர். எட்டாநாள் அம்பாசுரன் முதலாயினோரை அதஞ்செய்தனர். ஒன்பதாநாள் அம்பாசுரனுடைய தாயைக் கொன்றனர். பத்தாம்நாள் நமது பட்டணத்தி லுள்ளோராற் செய்யப்பட்ட விருந்தை நுகர்ந்தருளினர். பதினோராம் நாள் நராந்தகனைச் சொர்க்கலோகத்திற்கனுப்பினர். அப்பால் இரண்டுநாள் அவன் தமையனாகிய தேவாந்தகனுடனே அளவற்ற யுத்தங்களைச் செய்து பதினாலாம்நாள் உதயத்தில் அவனையுஞ் சொர்க்கலோகத்திற்கனுப்பினர். அதற்குமேல் ஐந்துநாள்வரையில் எனது குமாரனுக்கு விவாகஞ் செய்வித்தருளினர். இருபதாம்நாளாகிய இத்தினம் உங்களிடத்தில் யதாப்பிரகாரம் வந்துசேர்ந்தனர். என்று அவ்விடத்தினின்று புறப்பட்டநாள்முதல் பிரதிதினம் மகோற்கடசுவாமிகள் நடத்திய திருவிளையாடல்களையெல்லாம் பாக்தமாகச் சொல்லினன். அவ்வற்புதத் திருவிளையாடல்களையெல்லாம் காசிபமுனிவரும் அதிதியும் செவிக்கமுதாகக்கேட்டுச் சந்தோஷித்து காசிராசனையும், மகோற்கடமூர்த்தி முதலானோரையும் ஆச்சிரமத்திற் கழைத்துக்கொண்டுசென்று விருந்திட்டனர். அத்தினமெல்லாம் யாவரும் ஒருவரோடொருவர் அளவளாவியிருந்து மறுதினங் காலையில் காசிராசனானவன் மகோற்கடப்பெருமானை முதலாயினோரை அனேகவித பத்தியோடும் பணிந்து துதிசெய்து அளவற்ற வரங்களைப்பெற்று சுவாமியினுடைய திருவடிகளில் மனதை நிறுத்தி அரிதில்

இவ்விடத்தினின்று நீங்கிக் காசிநகரைவந்துசேர்ந்தனன். அப்பால் சிலநாள்க
ளுக்குப்பின் மகோற்கடமூர்த்தியானவர் காசியமுனிவரையும் அதிதியையும்
திருவடியோடு பார்த்து, தூயவர்களே! நீங்கள் அளவற்றநாள் அரியதவங்களைச்
செய்து நம்மைத் தரிசித்துப் பிரார்த்தித்தபடி யாம் உங்களிடத்தில் புத்திரனு
க அவதரித்துத் துட்டர்களையெல்லாஞ் சங்கரித்துச் சிட்டர்களையெல்லாம் பாது
காத்துத் தேவர்கட்குச் சொர்க்கலோக முதலானவைகளைக் கொடுத்து எங்கும்
வேதாகமநெறிகளைப் பரவச்செய்தோம். இனிநமதுலகத்திற்குச் செல்லவேண்
டுமென்று திருவாய்மலர்ந்தனர். அதைக் கேட்டவுடன் முனிவரும் அதிதியும்
ஓர் முகூர்த்தகாலம்வரையில் பொறிகலங்கிநின்று விழிகளில் அருவிபாய எம
து கர்த்தனைப் பார்த்து, எங்கள்குலதெய்வமே! எக்காலத்தில் தேவரீருடைய
திருவுருவைக்கண்டு தரிசிக்கப்போகின்றோமென்று புலம்பினார்கள். அவர்களை
மகோற்கடமூர்த்திபார்த்து அன்பர்களே! நாம் உமாதேவியிடத்தில் குழந்தை
யாக அவதரிக்கப்போகின்றனம். அப்போது நீங்கள் நம்மைக் காணலாம் கிலே
சப்பட வேண்டாமென்று தேற்றி, சித்திபுத்தி முதலான தமது பரிசனங்க
ளோடும் மறைந்து ஆனந்த புவனமென்கின்ற தமது லோகத்தை யடைந்தரு
ளினர். அதற்குமேல் காசியமுனிவரும் அவர்பத்தினியும் ஓர் ஆலயஞ்சமைத்து
மகோற்கடமூர்த்தியைப்போல சொர்ணத்தினாலே ஒருருவஞ் செய்துவைத்துப்
பிரதிதினம் வேதாகமமுறைமைப்படிப் பூசைசெய்துவந்தார்கள். அவ்வாறே
உலகின்கணுள்ள மற்றையருந் தங்கடங்கள் வீடுகள்தோறும் விநாயக மூர்த்தி
யைப்போல ஒருருவஞ் சமைத்துவைத்து நாளதுவரையில் சகலபாக்கியங்களையு
மனுபவித்துவருகின்றார்கள்.

காசிராசன் தனது நகரஞ் சேர்ந்தபின்னர், சகலலோகநாயகராகிய கர்த்
தாவே தனது ஆசிரியருடைய புத்திரராகித் தனது புத்திரனுடைய விவாகத்தி
னிமித்தம் அரண்மனையில்வந்திருந்து உண்ணல் உடுத்தல் முதலானவைகளைச்
செய்து அளவற்ற அற்புதத் திருவிளையாடல்களை நடாத்தியிருந்த செயல்களை
யெல்லாம் நினைந்துநினைந்து மற்றொருகாரியத்திலும் மனதைச் செலுத்தாமல்
தவத்திற்சிறந்த அரிய பெரியோர்களுடைய சொப்பனத்துங் காண்டற் கருமை
யா யிருக்கின்ற வஸ்துவை நனவில் நோக்கக்கண்டு தரிசிக்கும்படி எளிதிற் கி
டைத்திருந்தும் பாவியேன் கைநழுவவிட்டேனே? சூரியனாகிய விண்மணியை
யிழந்த வுலகமும், கண்மணியை யிழந்த விழிகளும், தன்மணியையிழந்த நாக
மும், உள்மணியையிழந்து வாடுகின்ற என்னோடு மொப்பாகா. என் றிவ்வாறு
பலமுறை தனக்குத்தானே சொல்லிக்கொண்டு கற்போன்ற நெஞ்சை யுடையவர்
களும் கண்டவுடன் கரையும்படியாக உள்ளுக்குள்ளே அனலிற்பட்ட மெழுகு
போல உருகி விழிகளில் நீர்ப்பசுமையற்று நெடுகவேங்கியேங்கி மகோற்கட
மூர்த்தியினுடைய ஆலயத்தில் அடிக்கடி அன்பாய்ச் செல்லுவதும், அங்கு
செய்யத்தக்க கருமங்க ளின்னவையெனத் தெரியாமல் மதிமயங்கி வாடுவ
துமாக விருந்தனன். அவ்வா றிருக்குங்காலையில், ஒருநாள் முத்கலமுனிவர்

தற்செயலா யங்கெழுந்தருளினர். அப்போது எல்லாவடிவங்களையும் மகோற்க
டமூர்த்தியினுடைய வடிவமாக நினைந்துநினைந்து தாபரித்திருக்கின்ற காசிரா
சன் அம்முனிவரையும் மகோற்கட மூர்த்தியாகவே நினைத்து மிக்க பத்தி
யோடு மெதிர்கொண்டு பணிந்து பலமுறை துதிசெய்து, சுவாமீ! அடியேனு
டைய நாதராகிய மகோற்கடமூர்த்தியினுடைய திருவடிகளை எக்காலத்திற் கா
ணப்பெறுவேனென்று கேட்டனன். அதற்கம்முனிவர் சந்தோஷங்கொண்டு
அரசனே! ஐயாயிரவருடஞ் சென்றபின் அக்கருத்தாவினுடைய திருவடிகளைக்
காணப்பெறுவை. அதுபரியந்தம் இங்கே உனதரசாட்சியினைச் செலுத்திக்கொ
ண்டிரு. முடிவிலவ் விநாயகக்கடவு ளுன்னிடத்திற்கு ஓர் விமானமனுப்புவர்.
இஃதுண்மையென்று சொல்லிப்போயினர். பின்னை ராசனானவன் மனந்தேறி
மழைத்துளிக் கெதிர்பார்த்திருக்கின்ற சாதகப்பட்சியைப்போல விநாயமூர்த்
தியினுடைய திருவடிகளைத் தியானஞ்செய்து சுவாமியினுடைய திருவுருவத்தை
பூசித்துக்கொண்டுவந்தனன். இவ்வாறு ஐயாயிர வருடஞ்சென்றபின்னர் சிறை
யினின்று வெளிப்பட்டவர்போல அரசன் மேலான மகிழ்ச்சிகொண்டு தனது
அரசுரிமையைப் புத்திரனிடத்திலொப்புவித்து விநாயகமூர்த்தியினுடைய திரு
வருளுக் கெதிர்பார்த்திருந்தனன். அப்போது தம்மை விழைந்தோர்கள் ஆண்
பாலராயினும் பெண்பாலராயினும் அவர்கள் இதயகமலத்தில் சதாகாலமும்
வாசஞ்செய்தருளுகின்ற விநாயகக்கடவுள் ஓர் தெய்வவிமானமனுப்பினர். அவ்
வற்புதத்தைக் காசிராசன் கண்டு ஆனந்தபரவசனாகி, ஆடிப்பாடிக் கரையற்ற
களிப்பினால் கரங்களைக்கொட்டி, அனந்தமுறை வலம்வந்து பூமியில் அடியற்ற
மரம்போல வீழ்ந்து பணிந்தெழுந்து சுவாமியினுடையபேரருளை வியந்துவியந்
துதிசெய்து அளவற்ற மேலான சந்தோஷசாகரத்தோடும் அவ்விமானத்தின்மீ
தாரோகணித்தனன். அம்மாத்திரத்தில் அவ்விமானமானது மேலெழுந்து
குய்யகர் உலகம் முதலிய சகல உலகங்களையுந் தாண்டி, அண்டப்பித்திலே பிர
காசித்திருக்கின்ற கந்தருவலோகங் கவுரிலோகம் முதலியவைகளைக் கடந்து சி
வலோகம்போய்ச் சேர்ந்தது. உடனே அரசனானவன் விமானத்தினின்று மிறங்
கி அங்கே நவரத்தினமயமா யிராநின்ற ஆலயத்தில் அளவற்ற சிவகணங்கள்
புடைசூழும்படியாகச்சிம்மாதனத்திலெழுந்தருளியிருக்கின்றவிநாயகமூர்த்தியி
னுடைய திருமுன்னர் சென்று அனந்தமுறை பணிந்தெழுந்து நாத்தழும்
பேறும்படிவாழ்த்தி அடியேனைப்புன்மையினின்று நீக்கிப்புரந்தருளவேண்டும்
இறைவனேயென்று பிரார்த்தித்தனன். அப்போது அணுவை மேருவாக்குவது
போல அடுத்தவர்களுடைய மலபாசங்களை நீக்கித் தன்மயமாக்கவல்ல விநாயகக்
கடவுளானவர் உடனே அவ்வரசனுக்குமேலான அறிவைக்கொடுத்துத் தமது
சமீபத்திலிருக்கும்படியான காட்சியையு மளித்தருளினர்.

கேட்பவர்களோ சவுனகாதி முனிவர்களே! இவ்வாறு காசிராசனானவன்
விநாயகமூர்த்தியினுடைய பெருங்கருணையினால் அகண்டாகாரபரிபூரணசோதி
மயமாகிய பேரின்பமுத்தியையடைந்து பிரமானந்தசாகரத்தின் மூழ்கியிருக்

தனனென்றால், அவன்செய்திருக்கின்ற தவத்தின் பெருமையை யாவர்உரை செய்யவல்லவர்களென்று சூதபுராணிகர்கூற சவுனகாதிமுனிவர்கள் அவரைப் பணிந்தெழுந்து, சுவாமி! முன்னர்விநாயகக்கடவுள் தமது ஆனந்தபுவனமென்கின்ற லோகத்திற் கெழுந்தருளினரென்று திருவாய்மலர்ந்த தேவரீர் மீட்டும் அக்கடவுளுடைய வனுக்கிரகத்தினால் காசிராசன் சிவலோகமடைந்து விநாயகமூர்த்தியினுடைய சாமீபமுத்தியை யடைந்தானென்றது அடியேங்களுடைய மனத்திற் சந்தேகத்தினை யுண்டாக்கியது. ஆதலால் சுவாமிகள் அச்சந்தேகத்தை நிவர்த்திசெய்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதற்குச்சூதபுராணிகர் நல்ல கேழ்வியை யேவினீர்களென்று சந்தோஷித்து, ஓ அருந்தவர்களே! சிவலோகத்திலெழுந்தருளி யிருக்கின்ற சிவபிரானொருவரே சிருட்டியாதி முத்தொழில்கட்கும் பிரமன்முதலியமூன்று மூர்த்திகளானதுபோலத் தம்மை விழைந்தோர்க்குச் சகலவிக்கினங்களையுநீக்கி வேண்டியவரங்களையளித்துத் தேவர்மக்கள் முதலியயாவரும் வழிபடத்தக்கதெய்வமாகி எல்லாக்கடவுளர்க்கு முன்னதாகப் பூசைகொண்டு தம்மோடொப்பாருமிக்காரு மில்லாத பெருமைதோன்றும்படியாக விநாயகமூர்த்தியென்னுந் திருநாமத்தினைத்தரித்தருளி சகலவான்மகோடிகட்கும் இம்மையிலே போகபாக்கியங்களையும் மறுமையில் மோட்சசாம்பிராச்சியத்தினையும் எளிதில் அருள்செய்யும்படி வேறேயொருதிருவுருவங்கொண்டருளினர். ஆதலால் சிவபிரானென்னுந் திருமேனிக்கும் விநாயகமூர்த்தியென்னுந் திருமேனிக்குஞ் சிறிதேபேதமாகும். ஆயினும் அவ்விரண்டு திருவுருவங்களிலு முள்ள வஸ்து ஒன்றாகவேயிருக்கும். அவ்வுருவங்களிலும் ஐந்துமுகங்களும் பத்துக்கரங்களும் பதினைந்துவிழிகளும் சந்திரனைத்தரித்த சடைமுடியும் சர்ப்பாபரணமும் ஆக்கல்முதலிய முத்தொழில்களும் பூதகணங்களும் கொன்றை வன்னி அறுகுமுதலியவைகளை யணிந்திருக்கின்ற சிறப்பும் பேதமில்லாமல் ஒத்திருக்கின்றதைக் கண்டிருக்கின்றீர்கள். அத்திருவுருவங்களிலுள்ள வத்துவும் ஒன்றாதலாலே அம்மூர்த்திகள் வசிக்கின்ற உலகமும் ஒன்றாகவேயிருக்கின்றது. அவ்வுலகமே ஆனந்தபுவனமென்றும் நிஜாலோகமென்றும் சிவலோகமென்றும் வயங்கப்பட்டிருக்கின்றது. அதனால் முத்திவனத்தை யளிக்கத்தக்க கணேசமூர்த்திவாழ்கின்ற உலகமும் அதுவேயாகும். அக் கணேசமூர்த்தியினுடைய திருவடிகளில் அன்புவைத்த மெய்யடியார்கள் நித்தமனமகிழ்வோடு வாசஞ்செய்கின்ற உலகமும் அதுவேயாம். ஆதலால் சிவபிரான் விநாயகக்கடவுளென்னு மிரண்டு திருமேனிகட்கும் அத்திருமேனியிலிருக்கின்ற இரண்டுவஸ்துக்களும் அவர்கள்வசிக்கின்ற உலகங்கட்குஞ்சற்றும் பேதமில்லையென் றறியக்கடவீர்கள்.

மகோற்கட விநாயகர் திருவவதாரப் படலம்

முற்றிற்று.

பதினோராவது,

உடுண்டி விநாயகர்

திருவவதாரப் படலம்.

ஆதலான் மலேவே யில்லே யறமகோற் கடர்தஞ் செய்கை
யோதின மவரோ மீள வுமையிடத் தோற்றி நம்மை
மேதக வருளு டுண்டி விநாயக னுன வாறுங்
காதலி னறைவா மின்பக் கடலுளீ ரினிது கேண்மின்.

ஓ சவுனகாதி முனிவர்களே! விநாயகமூர்த்தி மகோற்கடர் திருவவதாரங்கொண்டு நராந்தகனையுந் தேவாந்தகனையும் நாசஞ்செய்து காசிராசனுக்கு முத்தியளித்த திருவிளையாடலைச் சொன்னோம், இப்பால் உடுண்டி விநாயகர் திருவவதாரங்கொண்டு செய்தருளிய திருவிளையாடலைச் சொல்லுவோங் கேட்பீர்களாக.

இப்பூவுலகத்திற் சகலாதும் புகழத்தக்க கைவர்த்தமென்னுந் தேயத்திலே நசபடங்கள்முதலிய சிறப்புக்களைவாய்ந்த பன்மகமென்று மோர்பட்டனமுண்டு, அப்பட்டணத்தில் பிரமசாரனென்று மோர் அசுரன் சிவபெருமானுடைய திருவடித்தாமரைகளைக்கருதி அளவற்றகாலந் தவஞ்செய்தனன். அந்தவத்திற்குச் சிவபெருமான் கிருபைகூர்ந்து பிரத்தியட்சமாக, உடனே அவ்வசுரன் கொம்மென றெழுந்திருந்து வேதாகமங்களினால் பலமுறை துதிசெய்து நின்றனன். அப்போது சிவபிரான் நீகருதியவரம் யாதென்று கேட்டருள, அதற்கவ்வசுரன் மீட்டுந் தொழுதெழுந்து, ஓ தீனதயாளுவே! எனதுகையை யாவர்முடியில் வைத்தாலும் அவர்கள் உடனேவெந்து சாம்பராகும்படியான வரத்தினைக் கொடுத்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தான். அதற்குக் கர்த்தன் புன்னகைசெய்து அவனிச்சையின்படி கொடுத்தருளினர். அப்பொழுதே அப்பாதகன் அவ்வரத்தைச் சோதிப்பவனுமித் தனதுகையை சுவாமியினுடைய திருமுடியின்மீது வைக்கயத்தனித்தனன். அதை சுவாமியறிந்து தாம்கொடுத்தருளிய வரத்தைத் தாமேயழிப்பது தகுதியல்லவென்று கருதி அப்பாதகன் கண்ணுக்குத் தோற்றாதபடி வியாபகராயினர். அப்போதவ்வசுரன் எதிர்நின்ற திருவுருவைக் காணுதவனுகி சொர்க்காதி புவனங்களினுந் திசைகள்-தீபங்கள்-வரைகள்-வனாந்தரங்கள் முதலிய இடங்களிலுந் தேடித்திரிந்தனன். அச்செய்தியை விஷ்ணு அறிந்து விஸ்வரூபியாயிருக்கின்ற சிவபிரானை இக்கொடியவன் காணவல்லனோ? இவன் பெற்றிருக்கின்ற வரத்தினால் இனித் திரிலோகங்களையும் கெடுக்கத் துணிகுவன். இவனை நாம் ஒருபாயத்தினு லழித்துவிடவேண்டுமென்று தீர்மானித்து கோடிசூரியப்பிரகாசமாய் இலக்கணத்திற்கு மேற்பட்ட வடிவுடன், மோகினிரூபமெடுத்து மாய்கைக்காசியான பார்வதி கண்டாலும் மயங்கத்தக்க நடைகொடை பாவனைகளைப் பெற்று, எண்ணிறந்த மன்மதர்கள்

ஏககாலத்தில் பஞ்சபுட்பபாணங்களைக் கரவேகமாகப் பிரயோகிப்பதுபோலத் தெளிந்த நீலமணிபோலக்கறுத்து, வெண்மையொளிகொண்டு, கடையிற்செவ்வரிபரந்து, நெருங்கிய கருமைவாய்ந்த மெல்லிய உரோமங்களைப் பொருந்தி, நீண்டுவிளங்குகின்ற விழிமலர்களை நாற்றிசைகளினுஞ் சுழற்றிப் பார்த்து,மேகசாலங்களைப்போன்று கண்டவர் வியப்பெய்த நீண்டு, பரிமளித்து நெய்த்து இருண்டு தாழ்ந்து பூங்கொத்துகளைப் பொருந்தி விளங்குகின்ற கூந்தலை இருமருங்கினுந் துள்ளும்படியாக அலைத்து, புடைபரந்து மேலெழுந்து நீலமணி கோர்த்ததற்கொப்பான ரோமகம்வாய்த்து இடைதோன்றாமல் நெருங்கி, மார்பினிடமுழுவதும் நிறைந்து தடையின்றிப் பருத்துப் பூரித்துத் தம்முளிரண்டு மொத்து இடையினைவருத்தி நிமிர்ந்திருக்கின்ற தனங்களில் ஒன்றை வெளிப்படுத்தி செம்பஞ்சூட்டிய பாதங்களிலணிந்த சிலம்புகளுங் கரங்களி லமைந்த வளையல்களுங் கலிக்க, அன்னத்தைப்போல மெல்லென நடந்து, அரும்புகின்ற புன்முறுவலை விளைத்துக் கிளியைநிகர்த்துக் கொஞ்சிவசனித்துப் பிரமசுரனெதிரிற்சென்றனள்.

அம்மாத்திரத்தில் அவ்வசுரன் அனலிற்பட்ட மெழுகைப்போல மனங்கரைந்து விரகாக்கினிமேலிட்டு உள்ளத்தையும் உடலையும் வாட்டச் சோர்ந்து வெம்பி காமவெள்ளம்பெருகவருந்தி யானையுண்ட விளாங்கனியைப்போல வுள்ளுடைந்து சிவகடாட்சத்தினால்வந்த மோகினியின் இலக்கணவடிவைப் பதாதிகேசபரியந்தம் நோக்கிநோக்கித்தரித்திருக்கப்படாமல் மெல்லமெல்லநெருங்கிக் கூரியவேலைப்போலவிளங்கிக் காதளவுமோடிச் செவ்வரிபரந்து மைதிமிர்ந்து பாலையொப்பவெளுத்து விடத்தினுங்கறுத்து மான்பார்வையினைப் பழித்த நேத்திரங்களைப் படைத்திருக்கும் பெண்கள் சிகாமணியே ! உமது திருநாமம் யாது? நீர் இருக்குமிடம் பூவுலகமோ? பொன்னகரோ? பிரமனுலகோ? மன்மதன்பதியோ? வைகுந்தநாடோ? சற்றே திருவாய்மலர்ந்தோதும் பெண்ணே கண்ணே ! எனது தவப்பேற்றினால் இங்ஙனமெழுந்தருளினீர்? உமது சுந்தர வடிவையும் நிலையையுங் கண்டமாத்திரத்தில் மனந்தாளவில்லை. செல்வப் பெருக்கினையுடைய பொன்னகரத்தினும், சமுத்திரஞ் சூழ்ந்த பூமண்டலப்பரப்பினும், ஆதிசேடனை யொத்தவன்வாழும் பாதலத்தினும், அதிக சுந்தரவதிகளாகிய பெண்களனைவருக்கும் நாயகமாகப்புகழவல்ல சர்வமங்கள ரூபலாவண்ணியமுள்ள உமது பெருமைகளை யாவராற் புகழப்படும்? கறுத்து நீண்டிருக்குங் கூந்தலைவாய்ந்தபாவாய் ? உமது மங்களகரமாகிய தோற்றம் எதிர்ப்பட்டமாத்திரத்தில் இத்தலத்தைக்கடந் தப்புறம்போகச் சம்மதப்படாமல் மதிமயங்கிவருந்துகின்ற எனதுமனங்களிக்கத்தக்கதாகப் பவழத்தையொத்துக் கேகயத்தைப் பழித்துவிளக்குந் திருவாயைவிண்டு ஓர்வார்த்தையாடீரோ? அல்லது தமது அருள்நோக்கத்தைச் செலுத்தி எனது விண்ணப்பத்தினைச் செவிகொடுத்துவினவி மறுமொழியாட மனமிரங்கீராயின் யானென்னசெய்வேன்? எனது மனமுந்தேகமும் பூரித்துக் களிக்கும்படிக்கு கைமுகத்தையாயினுங் காட்ட

வொண்ணுதோ? அஃதில்லாமற்போயினும் சேற்கெண்டையைப்போலப் பிறழுந் திருநோக்கத்தினைக் குளிர்ச்சியாகச் செலுத்தநினையீரோ? உமது தரிசனை கிடைத்தமாத்திரத்தில் மனநிலைகலங்கிப் பொறிகள் மயங்கிக் காமக்கவலையிற்பட்டுழலுந்தமியேன் இனிகளித்துப் பிழைக்கும் மார்க்கமொன்றைக்காட்டாமலுஞ், சற்றுமென்னிடத் தன்பைச்செலுத்தாமலும், இரக்கமற்று இவ்வாறேஇருப்பீராயின் சத்தியமாகச் சொல்லுவேன் எக்காலத்தினுந் தீராதபழிபாதகம் உம்மைச்சேருவதற் கையமில்லை. பராமுகமாயிராமற் றுரிதமா யடியேன்பேரிற் கிருபைசெய்து உமதிணைக்கத்தைக் கடாட்சிக்கவேண்டும்; நீரிட்டபணிகளைச்செய்யக் காத்திருக்கின்றேன்; நீர் விரும்பிய வனைத்தையும் இன்னிமிடத்திற் றரவல்லேன்; காமநோயினும் பிராணனை யிழப்பதற்கு முன்னந் தயைசெய்து அதற்குரிய வின்பரசத்தைக் கடாக்ஷித்துப் பாதுகாப்பதன்றி, இனியான் மன்மதசரங்கட் கிரையாகாமல் உமது கடகசங்கணங்களணிந்த திருக்கரத்தினாற் பிடித்தணைத்து ஆதரிக்கவேண்டுமென்று வெளுத்தபற்களைத் திறந்து கரங்களைநீட்டிப் பற்பலவிதங்களாகக் கெஞ்சிக்கெஞ்சி இரந்து அக்கினியிற்பட்ட காந்தண்மலரையொத்து மெய்கருகி விரகாக்கினியினால் இறந்தவனைப்போல அறிவழிந்து பின்பற்றித் தொடர்ந்தும் நின்றும் விழுந்தும் இவ்விதங்களாக அலைந்துழன்றனன்.

இவையனைத்தையும் விண்டோவாகிய மோகினிகேட்டுப் புன்னகையோடு சிலதூரம் வீணைவாசித்தும், சிலதூரம் சங்கீதங்களைப் பாராட்டியும், சிலதூரம் சாஹித்தியங்களை விரித்தும், சிலதூரம் பரதவிதிப்படி நடித்தும், அன்னத்தைப்போல மெல்லமெல்ல நடந்தனள். இவ்வாறு புன்னகைமாத்திர மரும்பி மறுமொழியாடாமற் செல்லுகின்ற மோகினியினுடைய குறிப்பைப்பிரமாசுரன் கண்டு நோக்கரும்பையொப்பக் குருத்துப், பொற்குடத்தைப் பழித்து விம்மித் ததும்பித் தேமல்பரந்திருக்குந் தனபாரங்களைப் படைத்த பெண்ணமுதே! உமது மங்களகரமாகிய வடிவின்பொலிவையுங் குறைநிசயங்களையுங் கண்டபோதே மன்மதசரங்கட்கிரையாகி விரகாக்கினியைத் தாபரிக்க மாட்டாமல் மிகவும் வருந்தி துலைதூரத்தி லிருந்து உம்மையே நாடிவருகின்றேன்; இனித் தேவரீர் செந்தாமரை மலரையொத்த திருவடிகளல்லது வேறுகதியில்லை. எக்காலத்தினும் உம்மைப் பிரியவறியேன். சற்றும் இடைவிடாமற் கலந்து குலவியிருக்க விரும்பினேன். மாவடுவைப்போலப் பரந்தோடி யிருக்கும் விழிகளையுடைய வனிதாரத்தினமே ! நினைந்தியான் நம்மைவிட்டுப் போகவுந் துணிவனோ? அப்படிக்குச் செய்யவெத்தனட்படினும் மனமொருமித்து நிற்குமோ? உடலைப் பிரிந்து உயிர் தாபரித்திருக்க வல்லதோ? இக் காரணங்களை விரித்து விரித்துப் பேசவும் வேண்டுமோ? மின்னலை யொப்பக் காட்டிமறையும் மெல்லிய இடையையுடைய பேதாய் ! மைதிமிர்ந்து வேலைப்போலக் காட்டுந் தேவரீர் கூறிய கண்களின் சுழல்வலையிற் பட்டு வாடி வருந்தித் திகைத்தவதிடுகின்ற அடியேனுக்குத் தமது பூர்ண கிருபாநோக்கக் கடை

பையாவது காட்டலாகுமோ? இதையன்றி இனியான்பிழைக்கும் மார்க்கம் வேறுண்டோ? இவ்வபாயகாலத்திற் சிறிதுதயைசெய்து தேவரீருடைய திருக்கரத்தினால் அடியேனையணைத்து ஊசலாடி இவ்வுயிரைக்காக்கக்கடவீர். கண்ணாடியொன்றேயன்றி மற்றவைகட்கொப்பாகாது வட்டமாய்விளங்கும் அழகிய கபோலங்களையுடைய நங்காய்! அடியேன் பிறந்தபோதே தேவரீர்களித்து நீராடுவதற்கு யோக்கியமானசுனையாகவாவது கொங்கைகளினிடத்திற் பூசும் பரிமளமிகுந்த சாந்தமாகவாவது கழுத்து நீண்டிருக்குங்கூந்தலிற்சொருகவல்ல சுகந்தகந்தங்களைவீசும் புதியமலராகவாவது உருப்பெற்றுத்தம்மைச் சேர்ந்து மகிழ்ச்சிபெற்றிருக்கும் பாக்கியத்தைப் பெறாமற் போயினேன். இப்போது விரகாக்கினிமேலிட்டுத் தேகத்தையும் மனத்தையுஞ் சுட்டுக் கொளுத்தவதினால் மிகவும்வாடுகின்றனன். தமதுகிருபைக்குப்பாத்திரனாதற்பொருட்டு இனியான்செய்து கொள்ளவேண்டுங் கடமையாதோ ஒன்றுந் தோற்றவில்லை. அதைத்தயைசெய்து காட்டுவீராயின் தேவரீருடைய மனோபீஷ்டப்படிக்குக் காத்திருக்கின்றனன். ஓ என்னுடைக்கண்மணியே! எனது மனங்களிப்பெய்த விளங்கி அடியேன்பின்பற்றி வருவீராயின் இவ்விடத்தில் பொன்னுலகவாழ்வைப்பெற்றிருக்கும் அரம்பாஸ்திரிகளனைவரும்வணங்கி வேண்டியதொண்டுகளைச்செய்து போற்றிவரும்படியாக வைப்பதன்றித் தெய்வலோக முற்றினும் நீரேயனுபவித்துக் களித்திருக்கவைப்பேன். தேவரீர்மனதில் விருப்புற்றவைகளைத் திருவாய்மலர்ந்து சொல்லுவீராயின் அவைகள் எத்தகையவாயினும் ஓர் நொடிப்பொழுதிற் தேடித்தரவல்லேன்; என்று இவ்விதங்களில் பற்பல இன்சொற்களைப்பேசிக் காமலாகிரியினாலுண்டாகும் வருத்தங்களைக்காட்டிக் கெஞ்சித் தொடர்கின்றபோது மோகினியானவள் சிறிதுமனமிரங்கினவள்போல நின்று ஓ அரசனே! யாங்காட்டியதுஞ் செய்கின்றபெண்; நீரோ வீரத்தோடு சகலரையுஞ்சயிக்கவல்லவீரர்; யான் ஒன்றினுங்காட்டமில்லாமல் என்னிச்சையாற்செல்கின்றபோது என்னிடத்தில் நீர்காமலாகிரியினால் உளம்மயங்கிக்கருத்தழிந்து பித்தனையொப்பப்பேசிக் கலவியையிச்சித்து வழக்காடுவதுநியாயமோ? ஆயினும்பரதசாத்திரத்திற் கூறியமுறைமைப்படி எனக்கெதிர்நின்று யான் செய்யும் விஷயத்தைப்போல காட்டியதுஞ்செய்யவல்லவர் யாரோ அவர்களையான் சேர்வதல்லது எனதுமனம்வாடியகாலத்தும் மற்றொருவரையான் சேரேன்; இதுவே எனதுபிரதிக்கினையென்று சொல்லினள். இவ்வாறு விஷ்ணுவாகிய மோகினிசொன்ன வஞ்சகத்தைப்பிரமாசுரன்கேட்டுச்சிறிதும் அதனை அறிந்து கொள்ளாதவனாகி மேகத்தைநிகர்த்த கரியகூந்தலையுடைய மின்னே! என்னுயிரே! நீர்எவ்வண்ணம் அபிநயம் பிடிக்கின்றீரோ அவ்வண்ணமே யானும் உமக்கெதிர்நின்று பிடிக்கின்றேன்; அதன்பின்னேனுந் திறந்தபவளத்துண்டுபோற் சிவந்து விளங்குகின்ற நமது செவ்விதழூறலைக் கிருபை செய்ய வேண்டுவீரோ வென்றுகேட்டனன். அதற்குமோகினியானவள் அவ்வாறே ஆகுகவென்றுசொல்லித் தனதுகரங்களைக்கூப்பிக்கொண்டு அவ்வசுரனுக்கெதி

ரில்நின்றனள். அவனுந்தனது கரங்களைக்கூப்பிக்கொண்டு அம்மோகினிக்கெதிரில்நின்றனன். பின்னர் மோகினியானவள் தனதுகரங்களிலொன்றைப் பிடித்துத் தன்தலைமீதுவைத்தனள். அப்போது அவ்வசுரன்தான் பெற்றிருக்கின்ற வரத்தினை மறந்தவனாகித்தானும் அவ்வாறேதனதுகையைப்பிடித்துத் தன்தலைமீது வைத்துக்கொண்டனன். அவ்விடத்தில் முன்னர் சிவபெருமானுடைய நகையால் திரிபுரத்தார் எவ்வாறழிந்தார்களோ அவ்வாறுபிரமசுரன் வெந்து சாம்பராயினன். மோகினிவடிவங்கொண்டுவந்த விஷ்ணுவானவர் சந்தோஷசாகரத்திலமிழ்ந்தினர்.

கேட்டீர்களோ சவுனகாதி முனிவர்களே! கிடைத்தற்கரிய மேலான வரத்தைத் துட்டர்களாயினோர் தேவர்களிடத்திற் பெற்றவர்களாயினும் அவ்வரத்தினாற் றீமையடைவரென்று பெரியோர்சொல்லுவார்கள் அதுபோலவே உலகத்தையெல்லாம் நீறாக்கவல்ல வரத்தினைப்பெற்றஇவ்வசுரபாதகன்தானே அவ்வரத்தின்பயனை யடைந்தவனாயினன். பின்னர் விஷ்ணுவானவர் அம்மோகினிவடிவோடு பஸ்மகமென்கின்ற அவ்விடத்திற்றானே வதிந்திருந்தனர். அதுமுதல் அத்தலத்தையாவரும் [illegible]யென்று வழங்குவார்கள். இவ்வாறு பிரமசுரனுக்கு நேர்ந்தசம்பவத்தினை அவன்குமாரனான துராசதனென்பவனறிந்து தங்கள் குலகுருவாகிய சுக்கிரனிடத்திற்சென்று பணிந்தெழுந்து கண்களில் நீரைச்சொரிந்து தனதுதந்தைக்குநேர்ந்த கொடுமைகளைச் சொல்லித்துக்கித்து சுவாமி! எனதுதந்தையை நீறாக்கியவிஷ்ணுமுதலிய எல்லாத் தேவர்களையும்அடக்கி அவர்கட்கெல்லாம்யானேதலைவனாகி திரிலோகங்களையுஞ் சயப்பிரதாபத்துட னாளும்படியாகத் தேவரீர் கிருபைசெய்யவேண்டுமென்று பிரார்த்தித்தான். அதற்குச்சுக்கிரன் மனதிரங்கி நீ பயப்படவேண்டாமென்று பலதேறுதல்களைச்சொல்லித் தீக்ஷைசெய்து, சிவபெருமானுடைய பஞ்சாக்கரத்தை யுபதேசித்து, நீ இம்மந்திரத்தினால் பெரியதவங்களைச்செய்து அரிய வரங்களைப்பெறுதியென்று விடைகொடுத்தனன். அம்மாத்திரத்தில் துராசதன் அமுதுண்டவனை யொப்பக்களிப்பெய்தி மிக்கஇறுமாப்புடனே வனஞ்சென்று தனதுஒற்றைக் காலங்குட்டவிரலை நிலத்திலூன்றி வெய்யல்-பனி-மழை-குளிர்முதலானவைகட் கஞ்சாது சரீரம்முழுவதும் புற்றுக்கள் மூடிக்கொள்ளவும், அப்புற்றுக்களினின்று செடிகள்முளைக்கவுமாக மெய்மறந்து, இடைவிடாமல் பஞ்சாக்கரத்தைச் செபஞ்செய்துகொண்டு ஆயிரவருடம் வரையில் நிராகாரமாயிருந்து அரியதவத்தினைச் செய்தனன். அந்தவத்திற்குச் சிவபெருமான் மனதிரங்கி உமாதேவியாரோடு இடபவாகனத்தின் மீதெழுந்தருளி அவனெதிரில்வந்து அத்துராசதன்மீது மூடிக்கொண்டிருக்கின்ற புற்றுக்களையுஞ் செடிகளையுஞ்சீய்க்கும்படி தமதுபூதகணங்கட்காக்கியாபிக்க அவ்வாறே அவர்கள்சீய்த்துச் சுருதிகளாலுமறிதற்கரிய சுவாமிவந்தாரென்று தெரிவிக்க, உடனே துராசதன்பதறியெழுந்து பலமுறைசாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து இருகரங்களையுஞ் சிரமேற்கூப்பி விழிகளில் ஆனந்தபாஷ்பஞ்

சொரிந்து உடன்முழுவதும் உரோமாஞ்சிதம்பூத்து மொழிதடுமாறி மனமு
ருகி வேதாகமங்களினால் அளவற்ற துதிகளைச்செய்து நின்றனன். அந்துதி
யனைத்தையுஞ் சிவபிரான்கேட்டு சந்தோஷித்து உனக்குவேண்டிய வரங்க
ளைக் கேளென்று திருவாய் மலர்ந்தனர். அப்போது துராசதன் மீட்டும்
பணிந்தெழுந்து ஒவித்தியப்பொருளா யிருக்கின்ற கர்த்தனே! தேவரீராக தே
வரீரது சத்தியாக, நம்மிருவராற் றரப்பட்ட தனயராக, அரவணையிற்றுயில்
கின்ற விண்டுவாக, பதுமபீடத்தனாகிய பிரமனாக, பின்னும் வெவ்வேறா யிருக்
கின்ற பலவகைப்பட்ட தேவர்களாக, உரகர்களாக, தானவர்களாக, நரகர்களா
க, மனிதர்களாக, நாற்கான் மிருகம் முதலிய பல உயிர்களாக, இந்த எண்பத்
துநான்கு நூறாயிரமென்னும் தோற்றங்களல்லாமல் இனி வேறே தோற்றம்
யாதேனு முண்டாகுமெனில் அதனாலாக, இவ்வகைப்பட்ட நீங்கள் யாவரும்
பலமுறை என்னைக் கொல்லும்படி முயன்றீர்களாயினும், யான் இறக்காம லி
ருக்கவுந் தேவர்கள்முதலிய சகலரும், என தேவலுக்கிசையும்படி திரிலோகங்
களையும் யா னரசாண்டிருக்கவும், அவ்வாறு அரசாளுங்காலத்திலும், செல்வச்
செருக்கி லழுந்தாமல் தேவரீருடைய திருவடிகளில் குறையாத பத்திவைத்தி
ருக்கவும், கிருபைசெய்யவேண்டுமென்று பிரார்த்தித்தான். அவையனைத்தை
யுஞ் சிவபிரான் கேட்டருளி தேஜோன்மயமாய் எங்கும் போக்குவரத் தில்லா
மல் நிறைந்திருக்கின்ற நமது சத்தியே உமையினிடத்தில் விநாயகராக வந்து
உனது சிரத்திற் றூளைவைத்து அடக்குவது தவிர ஏனைய வரங்க ளனைத்தையுந்
தந்தோமென்று திருவாய்மலர்ந்து அந்தர்த்தானமாயினர்.

இப்பால் துராசதனனவன் விண்டுவாதிய தேவர்கள் கவலைகொள்ளும்
படியாக சிவபெருமானிடத்தில் சகல வரங்களையும் பெற்றுக் கர்த்த னெழுந்த
ருளிய திசையைநோக்கிப் பலமுறை பணிந்தெழுந்து மிகுந்த இறுமாப்புடன்
முகுந்தையென்னும் பட்டணத்திற்போய்ச் சேர்ந்தனன், இவ னிவ்வாறு பல
வரங்கள் பெற்றுவந்தமையை இராக்கதர்களறிந்து உடனே அவனை யாவரும்
பணிந்து கூடினார்கள். பின்னர் துராசதனனவன் அவ்விராக்கதர்களும் நால்
வகைச் சேனைகளும் புடைசூழும்படி யுத்தசன்னத்தனாய்ச் சகல ஆயுதங்களையும்
தரித்துக்கொண்டு பூவுலகத்தைநோக்கிச் சென்றனன். அதுகண்ட அரசர்கள்
யாவரும் உடனே வெளிக்கொண்டுவந்து சிலர் பல போர்களைப்புரிந்து மானத்
தினு லிறந்தார்கள். சிலர் அப்போரிற் றோற்றுத் திசைதிசைகளில் மறைந்தார்
கள். சிலர் அவனைப் பணிந்து பகுதிசெலுத்துவதானார்கள். சிலர் அவனுக்கு ஏ
வல்களைச் செய்யவல்ல சேவகர்களானார்கள். இவ்வாறு இத்துராசதன் பூவுல
கத் தரசர்களையெல்லாம் வென்றபின்பு பொன்னுலகைநோக்கிச் சென்றனன்.
அச்சம்பவத்தைத் தேவேந்திரனறிந்து உடனே தனது சுற்றத்தினரோடு வெ
ளிப்பட்டுக் காசிநகரைச் சேர்ந்தனன். அதையறிந்த துராசதன் அவ்வுலகத்தை
ஓரரக்கனால் ஆளும்படிசெய்து சத்தியலோகத்திற்குட் போயினன். அங்கர
சாள்கின்ற பிரமனனவன் பயந்து தானும் அவ்வாறே காசிநகரைச் சேர்ந்த

னன். அதுகண்ட துராசதன் அவ்விடத்திலும் ஓரிராக்கதனை அரசாளவைத்து
வைகுந்தலோகத்தை யடைந்தனன். அவ் வைகுந்தவாசியாகிய விண்டுவும் அவ்
வாறே காசிதேயத்தைச் சேர்ந்தனர். பின்னர் துராசதன் அவ்விடத்திலும் ஓர
ரக்கனை யாளவைத்து இவ்வாறே மற்ற லோகங்களையுங் கைக்கொண்டு அவ்
வாங்கு ஒவ்வோரரக்கனை அரசாளவைத்து தான் பூவுலகத்துள்ள முகுந்தை
யென்னும் பட்டணத்தில்வந்து திரிலோகங்களுந் தனது ஆக்கினையின்படி நடந்
துகொள்ளக் கொடுங்கோலைச் செலுத்தித் தன்னின்மிக்கார் எவ்வுலகங்களினு
மில்லையென்னு மிறுமாப்புடனே அரசாட்சிசெய்துவந்தனன். இவ்வா றிருக்
கும் நாளையில் ஒருநாள் அத் துராசதனனவன் சகல பரிசனங்களுந் தன்னைப்
புடைசூழும்படியாகக் கொலுவிருக்கின்றபோது மூவுலகங்களும் நமது ஆக்கி
னைக்குள்ளாயின. ஆகவே இனி நமக்கடங்காததொன்றுமில்லையென்று சொல்
லினன். அதை அருகிருந்த அமைச்சர்கள்கேட்டு ஆண்டவனே! பிரமன் விண்
டு உருத்திரன் முதலாயுள்ள தேவர்களும், முனிவர்களும், சித்தர்களுந் தத்தமி
ருக்கையைக் கடந்து இப்போது காசிநகரை யடைந்திருக்கின்றார்கள். அக் காசி
யை வென்றாலன்றோ திரிலோகங்களுந் தேவரீருடைய குடைக்கு ளடங்குமென்
றனர். அதைத்துராசதன் கேட்டமாத்திரத்தில் இதுவோ நமக்கரிதென்று புன்
னகைசெய்து இங்கிமிடத்தில் சகலசேனைகளோடும் வெளிப்படக்கடவீர்களென்
று ஆக்கியாபித்தனன், அவ்வாக்கினையைக் கேட்ட யாவரும் ஒரேலென்று
யுத்தசன்னத்தராய் சமுத்திரம்போல வந்துநெருங்கினார்கள். உடனே துராச
தனனவன் அச்சேனைக ளனைத்தையும் நடத்திக்கொண்டுசென்று காசி நகரைச்
சேர்ந்தனன். அக் கொடியவன் வரவைத் தேவர்முதலாயினோர்க ளறிந்து காசி
நகரை யாள்கின்ற விசுவநாதமூர்த்தியை யடைந்து சரண்புகுந்தார்கள். அப்
போது விசுவநாதர் அவனுக்குத் தாங்கொடுத்தருளிய வரங்களை நினைத்து அவ
னையடக்கத்தக்கநாள் இன்னும் வாவில்லையென்று நிதானித்து மிக்கசோர்வோ
டுஞ் சரண்புகுந்திருக்கின்ற தேவர்கள் முதலாயினோர்க்குத்தக்கபடிதயைவார்த்
தைகளைக்கூறி அவர்களோடு தாமும் அக்காசிநகரத்தினின்றும் வெளிக்கொண்
டு கேதாரமென்னுந் தலத்தை யடைந்தனர்.

பின்னர் துராசதனனவன், காசிநகரத்துள் நுழைந்து தேவர்கள் முதலா
யினோரும் மாயமாய் மறைந்துபோன செய்தியையறிந்து நகைத்து மிகுந்த சந்
தோஷத்துடன் அளவற்றநாள் அக் காசிநகரிற்றானே இருந்து திரிலோகங்களி
னுந் தனது ஆக்ஞாசக்கரத்தைச் செலுத்திவந்தனன். இவ்வா றெண்ணிறந்த
நாள் அத்துராசதன் சகலலோகங்களினுங் கொடுங்கோலைச் செலுத்திவருவத
னால் தேவர்கட்கு அவிற்பாகமும், ஸ்திரீபோகமுங் கிடையாமல் மனம்நொந்து
யாவரும் பிரமனிடத்திற்சென்று பணிந்து இதனைச் சொல்லுவதானார்கள். ஓ
வாணிகேள்வரே! நம்மையெல்லாம் எங்கும் நிலைபெறவொட்டாமல் துன்பிருத்
தியஞ்செய்துவருகின்ற துராசதன் எப்போது நாசமடைவன்? இவனை யடக்கி
நாசஞ்செய்யவல்லவர் யாவர்? இவனுக்கு இத்தன்மைத்தான சிறந்தவரங்கள்

கிடைத்தது யாவரால்? இவை யனைத்தையு மடியேங்கட்குத் தேவரீர் திருவாய் மலர்ந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதற்குப் பிரமன் சொல்லுவான்: ஓ மித்திரரே! இராசதம் தாமதம் சாத்மீக மென்னும் முக்குணங்கட்கும் பிரமன் விண்டு உருத்திரன் என்னும் மூன்றுமூர்த்திகளாக விருப்பதன்றி அம்முக்குணங்களைத்தாந்தாமே ஆண்டருளுவதால் குணேசனென்றும், அக்குண விகாரங்களிற் பொருந்தமில்லா திருப்பதினும் குணரகிதனென்றும் அக்குணங்களைக் கடந்திருப்பதினும் குணாதீதனென்றும் சகலலோகங்களினும் பரிபூரணமாயிருத்தலால் விசுவவியாபியென்றும் அவ்விசுவத்தை யாண்டு அழியாவலந் தோன்றலால் விசுவகர்த்தனென்றும் அவ்விசுவத்தைப் பிரளயகாலத்தில் சங்கரிப்பதால் விசுவசங்காரியென்றும், மேலானதென்றும், சொல்லத்தக்க யாவற்றுள்ளும் மேலாயிருத்தலினும் பராபரனென்றுஞ் சொல்லுகின்ற சிவபிரான் ஒருவருண்டு, அச்சிவபிரானுடைய தேசோன்மயமாகிய ஓர்சத்தியே உமாதேவியாருடைய திருமுகமண்டலத்தில் விநாயகமூர்த்தியென்னுந் திருநாமத்துடனே அவதரிக்கும். அக்காலமே அந்நூராசதன் நாசமாகுங்காலம் அவனுக்கு மேலானவரங்களைக் கொடுத்தவர் இவ்விசுவநாதரேயாம். இனி அப்பாதகனுடைய நிலைகளனைத்தையுங் கலக்கி நிறுதிசெய்யவல்லவர் முன்சொன்ன விநாயக மூர்த்தியேயாதலால், அம்மூர்த்தி திருவவதாரஞ் செய்தருளும்படி விரைவில் உமாதேவியாரை மிக்க மனவுறுதியோடு துதிசெய்வீர்களாக வென்றனன்: அவையனைத்தையுந் தேவர்கள்செவிகுளிரக்கேட்டு கவலைக்கடலினின்றுங் கரையேறினவர்களாய் யாவரும் உமாதேவியாருடைய சன்னிதானத்திற் சென்று துதிசெய்வதானார்கள்.

ஒருத்தியாகியுலகனைத்து மோம்புமருளேயுலகத்தில்
வருத்தமகற்றப்பலவுருவாய் வயங்காநின்றசத்தியே
கருத்தையகன்றவுருவாளே கடவுண்முனிவர்முதலோர்செய்
பெருத்தவழிபாட்டினுக்கிரங்கும் பேரானந்தப்பெண்ணமுதே.

குணமேசொரூபமானவளே குணத்தையாளுங்கோமளமே
குணகாரணமேகுணாதீதங் கொம்பேவேதந்துதிப்பவளே
தனைவா தவனிதரிப்பவளே தருநாயகசங்கமந்தனுக்கு
நிவாரதாரமானவளே நிதேதவசொரூபியே.

அடியார்பிழையபறுத்தவர்கட் கடக்கில்பொருளுங்கொடுப்பவளே
கொடியர்சுகத்தைக்குமைத்தவர்க்குங் கோதில்கருணைசுரப்பவளே
பிடியால்வருந்துமெமைப்புரப்ப வேண்டும்வேண்டுமெக்காது
முடியாமுதல்வீ அடியேமை முழுத்தவருள்செய்தளித்தருளே.

இவ்வாறு துதிசெய்து நிற்கின்றதேவர்களெதிரில் உமாதேவியார் தமது சோடசகலைகளால் நிறைந்தபிஷ்களங்க பூர்ணசந்திரபிம்பம்போன்ற முகாரவிந்தமும், நீலரத்தினம்போலும் வண்டுகளுக்குநிகராகிய அழகிய அஞ்சனக்க

ளால் நிறைந்த திருவிழிகளும், பிரவாளரத்தினங்களுக்கு நிகர்த்தஅதரோஷ்டங்களும், கஜராசதுதிக்கையைப் போன்ற நீண்ட பாகுக்களும், செங்காந்தளுக்கொப்பாகிய அஸ்தங்களும், நூதனமாகத்தளிர்த்துச் சோபித்துக்கொண்டிராநின்ற பல்லவங்களையொத்த பதங்களும், மதித்தமத்தேபத்தின் மஸ்தகத்தைநிகர்த்த குசகும்பங்களும், மிருகராசனிடைக்குச் சமானமாகியசிற்றிடையும், விளங்கும்படியாகத்தெரிசனந்தந்து, ஓ விபுதர்களே! உங்களுக்கு வேண்டியவரம்யாதென்று திருவாய்மலர்ந்தனள். அப்போது தேவர்கள் உய்ந்தோம் உய்ந்தோமென்று ஆனந்த பரவசத்தராடி மீட்டும் வேதாகமங்களால் பலமுறை துதிசெய்து அசுரராசதன் செய்துவருகின்ற கொடுமைகளையும், அவனால் தாங்களனுபவித்து வருகின்ற துன்பங்களையும், விபரமாகச்சொல்லி ஓ சகலபுவனேஸ்வரி இனித்தேவரீரேயாகிய அடியேங்கண்மீது கிருபைசெய்துஎல்லாத் துன்பங்களையுநீக்கிச் சுகத்தைக் கொடுத்தருளவேண்டும். இதுவே யாங்கள் கருதிய வரமென்று பிரார்த்தித்தார்கள். இவ்வாறு அவுணபாதகனுடைய கொடுமைகளையும், அவனால் தாங்களடைந்திருக்கின்ற இடுக்கண்களையும், உமாதேவியார் கேட்டமாத்திரத்தில் மனங்கோபித்து விழிகள் செந்தாமரைக் காடுபோற்சிவப்பக் கோபங் கொண்டனர். அம்மாத்திரத்தில் தேவியாருடைய முகத்திலிருந்து கோடிசூரியர்கள் ஏககாலத்தி லுதயஞ்செய்ததுபோல அளவற்றபிரகாசங்களையுடைய திருமேனியும், சந்திரனைத்தரித்த சடாமகுடமும், துதிக்கரங்களோடு கூடிய ஐந்துமுகங்களும், பத்துக்கைகளும், அக்கைகள்தோறும் படைகளும், கஸ்தூரிப்பொட்டிட்டநெற்றியும், பூணூலணிந்த மார்பும், அளவற்றநாகாபரணங்களும், பற்பல இரத்தினாபரணங்களும், துஷ்டசனர்களைச் சங்கரிக்கும்படியான இரவுத்திரமும், சிஷ்டசனர்களைப் பரிபாலிக்கத்தக்க கருணையும், விளங்கும் படியாக என்னுண்ணமாயும், ஏகவஸ்துவாயுமிராநின்ற விநாயகமூர்த்தி திருவவதாரஞ் செய்தனர்.

அப்போது உமாதேவியார் கோபமாறி ஆனந்தங்கொண்டு விநாயகமூர்த்திக்கு வக்கிரதுண்டரென்று திருநாமந்தரித்து யாவரும் வியப்பெய்தும்படியாகப் பூசனைபுரிந்து வேதாகமங்களால் பலமுறை துதிசெய்து சிங்கவாகனங் கொடுத்து சுவாமி! இராக்கதர்களால் துன்புற்று வருந்துகின்ற தேவர்களைக் காப்பாற்றவேண்டுமென்று பிரார்த்தித்தனர். விண்டுமுதலிய எல்லாத்தேவர்களும் வக்கிரதுண்டமூர்த்தியைப் பணிந்து துதிசெய்து ஓ விக்கினராசனே! பத்தர்கட்குரியவரா யிருக்கின்ற வித்தகரே! மனுநிகள்கடந்தவரே! புண்ணிய முதல்வரே! பூரணரே! எமதுகர்த்தாவாகிய தேவரீர் பாதபதுமங்களைத் தரிசித்துத்துதிசெய்ய அடியேங்கட்கு கிடைத்தபோதே பெரிதானபேறுகள் பெற்றோம் சுதந்தரத்திரர்களாயினோம், எம்மையடைந்திருந்த துன்பங்களைந்தும் நீங்கின. நாங்கள்வகித்திருந்த பதவிகளை மீட்டுங் கிடைக்கப் பெற்றனம் என்றுசொன்னார்கள். இப்பால் வக்கிரதுண்டமூர்த்தி தேவர்களுடைய குறிப்பைத் தெரிந்துகொண்டு உமாதேவியாருடைய திருவடிகட்கு வந்தனைபுரிந்து

யாவருஞ் சயசயவென்று துதிசெய்யும்படியாகச் சிங்கவாகனத்தி லாரோகணித்து அளவற்ற பூதசேனைகளோடுங் காசிநகரை நோக்கி எழுந்தருளினர். அவர்பின்னர் விசுவநாதரும் உமாதேவியாரும் விண்டுபிரமனுதியதேவர்களும் முனிவர்கள் முதலிய சகலருங் காசிப்பட்டணத்திற் சென்றார்கள். முன்னர் துராகதனுடைய கொடுமைக்கு ஆற்றுதோடிய விசுவநாதர்முதலிய சகலரும் விநாயகமூர்த்தியை முன்னிட்டுக்கொண்டு வந்ததை அவுணராசன் கேட்டுக் கோபங்கொண்டு தனதுசேனைகளனைத்தையும் வெளிப்படும்படி முரசறைவித்தான். அம்மாத்திரத்தில் மழையொலியைக்கேட்ட பயிர்களைப்போல அவனது நால்வகைச்சேனைகளும் உவகைகொண்டு பூமிதேவிபொறுப்பதரிதென வந்து பணியும்படி சக்கிரவாளகிரியைச்சூழ்ந்த பெரும்புறக்கடல்போலத் தன்னைப் புடைசூழ உடனே தான் சகலவாயுதங்களையுஞ் சேகரித்துக்கொண்டு இரதத்திலேறி அச்சேனைப்பெருக்கோடுங் காசிநகரத்திற்கு வெளியேவந்தனன்.

இப்பால் துராசதனோடுவந்த அவுணசேனைகளுடனே பூதசேனைகள் எதிர்த்துவிசையலட்சுமிகுதிகொள்ளும்படியாக அளவற்றயுத்தங்களைச்செய்தார்கள். அப்போது யுத்தகளமுழுவதும் பிணங்கள் மலைமலையாகக் குவிந்தன. ஆகாயமுழுவதுங் கழுகுகளும் பருந்துகளும் பந்தலிட்டுலாவின. எங்கும் உதிரவெள்ளம்பெருத்து இறைச்சலிட்டது. அந்த யுத்தத்திலே பூதசேனைகள்மீறி அவுணசேனைகட்கு வலிகுன்றியது. அதைத் துராசதன் பார்த்து கோபத்தீயினனாய், பூதசேனைகள்மீது பாய்ந்து, வில்லைவளைத்து ஒவ்வொரு தொடையில் ஆயிரமாயிரமாக அளவற்றபாணங்களைப் பிரயோகித்தான். அதனால் வீறியிருந்த பூதசேனைகட்கு வலிகுன்றியது. குடை கொடிமுதலிய சின்னங்கள் அறுபட்டன. இரதகசதுரகமுதலியவைகள் சின்னபின்னமாயின. இவ்வாறு பூதசேனைகள் தமது படைகளும் நடைகளுமற்றுப் பூமியில் வீழவும், துராசதனனவன் சயமடைந்தவனாகக்கருதி, மீட்டும் அதிவேகத்தோடு தனது இரதத்தைச் செலுத்திக்கொண்டுசென்று வக்கிரதுண்ட மூர்த்தியை எதிர்க்க வந்தனன்; அப்போது சுவாமி அத்துராசதனைப் பார்த்து, ஓ அவுணராசனே! அரியதவங்களினால் சிவபிரானிடத்தில் மேலானவரங்களைப் பெற்றிருக்கின்றனை? அவைகளைப் பின்னர் காப்பாற்றிக்கொள்ளும்வகையை நாடாமல் வீணே ஒழிக்கும்வகை தேடினை? இனியேனும் அவ்வரங்களை யொழித்துக்கொள்ளலாம் சுகமடையவேண்டிய மார்க்கத்தைச் சொல்லுகின்றோம் நினைவாய்க் கேட்பையாக. சொர்க்கலோகத்தை முன்போலத்தேவர்கள் ஆளும்படி விடுத்து, நீ நம்மைச் சரணடைந்து சன்மார்க்கத்தி லிருக்கக்கடவை. அவ்வாறிருப்பையாகில் இன்னு மளவற்றகாலம் எல்லாப் போகபாக்கியங்களையு மனுபவித்துக்கொண்டு அதனால் விளைகின்ற ஆனந்தக்கடலில் விளையாடிக்கொண்டிருக்கலாம்; இல்லையேல் இப்போது தேவர்களெல்லாம் உன்னால் எவ்வளவு துன்பமனுபவிக்கின்றார்களோ அவ்வளவு துன்பமும் இனி நம்மால் உன்னைவந்து சூழ்ந்துகொள்ளும். என்று திருவாய் மலர்ந்தனர். இவையனைத்துங் காய்ந்தஊசிகாதில்நுழைந்ததுபோல

அவன்செவியிற் பட்டமாத்திரத்தில் அதிககோபங்கொண்டு ஆஅ - ஆஅ-பிள்ளாய்! நீசொன்னவார்த்தைகள் மிகவழகாயிருந்தன, பராக்கிரமத்திற் சிறந்த விண்டுவேமுதலியோர் என்கண்ணுக்கு முன்னர் நிற்கப்பயந்து ஓடிப்போயினர். பெரியோர்களிடத்திற் பழக்கமில்லாத பாலகனுதலினால் இளங்கன்று போல சிறிது மச்சமில்லாமல் என்னிடத்தில் இவ்விதவார்த்தைகளைக் கூறினை? அளவற்ற தவங்களைச்செய்து சிவபிரானிடத்தில் மேலான வரங்களைப் பெற்றிருக்கின்ற என்னைவெல்லுவது உன்னாலேலாது; இனி தப்பிப்பிழைக்க வேண்டுவையேல் உன்னைவிடுகின்றேன்; இப்போதே பின்பாராமற் சென்று உனது தாய்தந்தையரிடத்திற் சேரக்கடவையென்று சொல்லினன். அதை சகலலோகநாயகராகிய கர்த்தன் கேட்டமாத்திரத்தில் கோபநகைசெய்து, மீட்டு மவனைப் பார்த்து அடாபேதாய்! சிவபிரானிடத்தில் அரியவரங்களைப்பெற்றிருக்கின்றோமென்று கர்வப்படவேண்டாம், அவர் கொடுக்கின்ற வரத்தினாலேயே கெட்டுப்போனவர்களனேகருண்டு அவர்களுள் நீயுமொருவனாயினை என்றுசொல்லித் தமதுசிங்கவாகனத்தை அவனுடையதேருக்கு நேராகச்செலுத்திக் கரத்திலிருந்த மழுவாயுதத்தினால் அவன்மார்பிற் றாக்கினர். அத்தாக்கலினால் அவன் சரீரத்திற்கோ ரூனமுமில்லாமற் போனதினால் துராசதன் இடியேற்றினைப் போலக் கர்ச்சித்துச்சீறிச் சுவாமியின்மீது தனது வாளாயுதத்தைச் சுழற்றி வீசினன். அவ்வாளைச் சுவாமி தமது மழுவாயுதத்தினால் விலக்கி, அவன் நெற்றியில் தமது கரத்தினாற் குத்தித்திரும்பினர். அக்குத்தினால் அவனது நெற்றி பிளந்து உதிரவெள்ளம் பெருகியது. அப்போது துராசதனனவன் மூர்ச்சையாகிச் சற்றுநேரம் உயிர்நீக்கினவனைப்போலிருந்து மீட்டுந் தெளிந்தெழுந்து யுத்தஞ்செய்ய வலியற்றுநாணித் தனதிருக்கையை நோக்கிச்சென்று ஆயாசந் தீர்த்துக்கொண்டிருந்தனன்.

யுத்தகளத்தி லிறந்துகிடக்கின்ற பூதர்களை யெல்லாம் சுவாமியெழுப்பிக் கொண்டு தமது பாசறையிற் சேர்த்தருளினர். அப்போது இருளைநீக்கி உலகத்தை விளக்கவல்ல சூரியனனவன் மேற்றிசைக்கடலிற் குளித்தனன். உடனே விண்ணவரைக் காக்கவந்த விநாயக மூர்த்தியினுடைய கிருபையைப்போல சோடசகலைகளோடு நிறைந்த சந்திரனனவன் உதயமாயினன். உலகத்துள்ள சராசரங்களெல்லாம் அவ்வெண்ணிலவில் மூழ்கித் திருமேனி முழுவதுந் திருவெண்ணீற்றினையணிந்த தொண்டர்கட் கொப்பாயின. இப்பால் துராசதனனவன் தனது மந்திரிகளை யருகிலழைத்துவைத்து யானைமுகத்தோடு யுத்தஞ்செய்யவந்த ஓர் சிறந்தபுருடனைச் சிறுவனென்றெண்ணினேன்; பின்னரவனைக் கலந்துபார்க்குமளவில் அவனுக்குநிகராயினோர் ஒருவருமில்லை? வலியிற்பெரியவனாயினுஞ் சேனையிற் சிறிதேயுடையவனா யிருக்கின்றனன்; யாமோ வலியினுஞ் சேனையினும் அவனினு மிகுந்தேயிருக்கின்றோம்; ஒருவேளை யவனுக்கு யாம் தோல்வியடையவுங்கூடும்; ஆதலால் இனி நமக்குள்ள எல்லாச் சேனைகளையுங் கூட்டிக்கொண்டு நாளையதினம் யுத்தத்திற்குப் போகவேண்டுமென்று

சொல்லினன். உடனே அமைச்சர்கள் அவ்வாறே செய்யக்கடவமென் றெழுந்து, திரிலோகங்களினும் அட்டதிசைகளினுமுள்ள சகலசேனைகளும் வந்துசேரும்படி எங்குந் தூதர்களை யனுப்பினார்கள். அத்தூதர்களால் எங்குமுள்ள எல்லாச்சேனைகளும்வந்து துராசதனுடைய அரண்மனைவாய்தலை நெருங்கின. அப்போது யுத்தவலங்காரத்தைக் காணவருவான்போலச் சூரியனானவன் கீழ்த்திசைக்கடலி லுதயமாயினன்.

இப்பால் துராசதனானவன் நித்தியவிதிகளை நிறைவேற்றிக்கொண்டுகூலிப்படை, நாட்டுப்படை, காட்டுப்படை, துணைப்படை, கைப்படை, மூலப்படை என்னு மறுவகைப் படைகளும், மந்திரியர், கருமாதிகாரர், சுற்றத்தார், கடைகாப்பாளர், நகரமாக்கள், படைத்தலைவர், இவுளிமறவர், யானைவீரர் என்னுமெண்வகைத் துணைவர்களுஞ், தக்கமுறைமைப்படித் தன்னைப் புடைசூழ்ந்துவரச்சென்று யுத்தகளத்தை யடுத்தனன். விநாயகமூர்த்தியும் பூதவீரர்களுடனேவந்து சேர்ந்தனர். இப்பால் துராசதனேவந்த பெருஞ்சேனைகளைச் சுவாமிபார்த்து இவையனைத்தையும் ஓர்கணப்போதில் யாமே வெல்லுதுமென்று கருதி, தம்மைச் சூழ்ந்துவந்த தேவர்களும் பூதர்களு மருட்கை யடையும்படி சிலவடிவம் சிங்கவாகனத்துடனே பத்துகைகளும், சிலவடிவம் மயில்வாகனத்துடனே ஆறுகைகளும், சிலவடிவம் பெருச்சாளி வாகனத்துடனே நாலுகைகளும், சிலவடிவம் மான்வாகனத்துடனே இரண்டுகைகளும், இவ்வாறு பற்பலவாகனங்களிற் பற்பல வடிவங்களாக ஐம்பத்தாறு பேதமாகத் திருவுருக்கொண்டு துராசதனுடைய சேனாசமுத்திரத்திற் புகுந்து சமர்விளையாட்டினைச்செய்தனர். அப்போது அச்சேனைவீரர்களில் அளவற்றபேர் வீரசொர்க்கத்தை யடைந்தார்கள். அளவற்றபேர் சோர்ந்துவிழுந்தார்கள். அளவற்றபேர் பாதலலோகத்தில் மறைந்தார்கள். அளவற்றபேர் திசாதிசைகளி லோடிப்பதுங்கினார்கள். இவ்விதமாகத் தனது சேனைகளனைத்தும் அழிகின்றதைத் துராசதன்பார்த்து நம்மவரும் இப்பாடுபடுவதோவென்று கோபித்து, அக்கினியாஸ்திரத்தையெடுத்துப் பிரயோகித்தனன். அவ்வத்திரமானது எங்கு மனற்சுவாலைகளை வீசிக்கொண்டு பூதசேனைக ளெல்லாம் நடுங்கும்படி ஆக்ரமித்துவர அதை சுவாமி பார்த்து நகைத்துப் பற்சனியாஸ்திரத்தை யெடுத்துவிடுத்தனர். அம்மாத்திரத்தில் அவ்வத்திரமானது அளவற்ற மின்னல்களையும் இடிகளையும் பெருக்கிச் சத்தமேகங்களுங் கலந்து வருஷிப்பதுபோல மழைகளைச் சொரிந்து அக்கினியாஸ்திரத்தினுடைய வலியை யடக்கியது. அதைக்கண்ட துராசதன் வாயுவாஸ்திரத்தையெடுத்து விடுத்தனன். அவ்வஸ்திரமானது பற்சனியஸ்திரத்தாலுண்டான மேகங்களையெல்லாஞ் சின்னபின்னப்படுத்தி எங்கும் பிரசண்டமாருதத்தைப் பெருக்கிக்கொண்டுவர, அதை சுவாமிகண்டு பர்வதாஸ்திரத்தை யெடுத்துப் பிரயோகம்பண்ணினர். அப்பர்வதாஸ்திரம் வெளிப்பட்டமாத்திரத்தில் மந்தரம் இமயம் முதலிய அளவற்ற பர்வதங்களை யுண்டாக்கி பூமிதொட்டு ஆகாயவரையில் முட்டி வாயுவாஸ்திரத்தின் வலியைத் தொலைத்துப் பின்ன

ரவுணராசனானவன் இனியிவனை உருத்திரப்படையினால் வெல்லுவோமெனக் கருதி அதனைச் சோடசவுபசாரங்களோடு பூசித்துப் பிரயோகித்தனன். அப்படை வெளிவந்தமாத்திரத்தில் வீறி வானத்தெழுந்து பர்வதாஸ்திரத்தினுடைய வீறுப்பினை யடக்கிப் பூதவீரர்களுடைய சமூகத்திற் புகுந்து சின்னபின்னமாக்கியது. உடனே சுவாமியுந் தம்மிடத்திருந்த உருத்திரப்படையினை விடுத்தனர். பின்னர் இரண்டு உருத்திரப்படைகளுங்கூடி அளவற்ற போர்களை விளைத்தன. அதனால் அண்டவடுக்குகளெல்லாங் குலைந்தன. சத்தசாகரங்களும் வற்றிப்போயின. பூதலத்திலுள்ள சராசரங்களெல்லாம் நீறாயின. இப்பால் அவ்வத்திரங்களிரண்டும் ஒன்றோடொன்று நெடுநேரம் யுத்தஞ்செய்து சமர்க்களத்திலிறந்து கிடக்கின்ற சேனைகளையெல்லாம் விரைவி லெழுப்பித் தம்மையேவிய தலைவர்களிடஞ் சென்று சேர்ந்தன.

பின்னர் அவுணராசனானவன், அரிய தவத்தினாற்கிடைத்திருந்த உருத்திரப்படையும் வெற்றிபெறாமற்றிரும்பியதை யெண்ணியெண்ணி யேக்கமுற்று மானமுங் கோபமும் மேலிட்டவனாகித் தன்னுருவத்தை மறைத்துப் பற்பல மாயைகளை விளைத்தனன். அவன் மாயைகளையெல்லாம் ஞானசொரூபியாகிய எமது கர்த்தன் ஓர் நொடிப்போதி லொழித்தருளினர். இவ்வாறு துராசதனானவன் அநேக அஸ்திரங்களை மாறிமாறிவிடுத்தும் அளவற்ற மாயைகளைச் செய்தும் பயன்பெறாமற்போனதினால், மனம்நொந்து இப்பாலினிய வக்ரதுண்டனை வெல்ல வொன்றினுங் கூடாது ஆதலால் இனி யாம் தப்பி மறைந்துபோவதே உத்தமமென்று நிர்மாணித்தான். அதை சுவாமியறிந்து அவனுக்குச் சிவபிரான் கொடுத்தருளிய வரத்தையும் யோசித்து அண்டமுகட்டை யளாவத்தக்கதாக ஓர் பெருருவோடு மவனெதிரில்வந்து அவனுச்சியில் ஒருபாதத்தையூன்றி மற்றொருபாதத்தைக் காசித்தலத்தில்வைத்து ஓ அவுணராசனே, நீ சிவபெருமானிடத்தில் அழியாவரம் பெற்றிருப்பதினால் இக் காசிப்பட்டணத்து மேற்றிசை வாயிலில் எக்காலத்தும் நமது பாதத்தின்கீழிருந்து இவ்விடத்தில் பழிபாதகங்களைச் செய்துவருகின்ற துட்டர்களை யடக்கிக்கொண்டிருக்கக்கடவை யென்று அநுக்கிரகஞ்செய்தனர். மேலான தவங்களைச்செய்து அரியவரங்களைப்பெற்றிருக்கின்ற துராசதனானவன் தனது சிரத்தில் விநாயகமூர்த்தியினுடைய திருவடியை வைக்கப்பெற்றதினால் உடனே சகல மாயாபாசங்களினின்றும் நீங்கி மெய்ஞ்ஞான செல்வத்தைப் பெற்று நித்தியானந்த சொரூபனாகி அவ்வவர்கள் செய்துவருகின்ற தீமைகளையெல்லாம் நிவர்த்திசெய்துகொண் டிருந்தனன். தேவர்கள் கற்பகமலர்களைச் சொரிந்தார்கள். ஆகாயத்தில் பஞ்சவாத்தியங்களு முழங்கின. முனிவர்கள் வேதாகமங்களினுந் துதிசெய்தார்கள். மற்றுமுள்ள மெய்யடியார்களெல்லாம் விநாயகமூர்த்தியை அளவற்ற துதிகளினுங் கொண்டாடி ஆனந்தமெய்தினர். சிவபிரான் முன்போலவே உமாதேவியாரோடு காசிநகரத்துளிராநின்ற திருக்கோயிலில் எழுந்தருளி பிரமனாதியர் புடைசூழ்ந்து வணங்கும்படி வீற்றிருந்தனர். திரிலோகங்களினு முண்டாயிருந்த எல்லாத்

திக்குகளு மொழிந்தன. எக்கும்வேதாகமவிதிகள் தழைத்தோங்கின. ஆங்காங்கு யாகாதிகிரியைகள் நிறைவேறின. இந்திரன்முதலிய தேவர்கட்கு இடைவிடாது அவிர்ப்பாகங்கிடைத்துவந்தன. வன்னி மந்தாரை அறுகு இவைகளினால் தேவர்கள் முனிவர்கள் முதலிய யாவரும் விநாயகமூர்த்தியை வழிபட்டு அவரது பெருங்கருணையினாற் றங்கள் பதிகளை யதாப்பிரகாரமடைந்து ஆனந்தமெய்தினார்கள். தருமமுதலிய நான்குபொருளையுமெளிதிற்றரவல்ல எமது கர்த்தனுக்குச் சகலரும் உடுண்டிவிநாயகனென்னுந் திருநாமத்தைச் சாற்றித் துதிசெய்தார்கள். அதுமுதல் அக்காசிநகரமும் உடுண்டிநகரமென்னும் மற்றொரு பெயரையும் வகித்திருக்கின்றது. இஃதன்றி விசுவநாதமூர்த்தி சந்நிதிக் கெதிரே ஐந்துமுகத்தோடுகூடிய வக்கிரதுண்டமூர்த்தி யமர்ந்தருளினர். கோயிலுக்குச் சத்தாவரணமாக ஊர்சுற்றிலும் மற்ற ஐம்பத்தாறு மூர்த்திகளும் வதிந்தருளினர். ஆக ஐம்பத்தாறுமூர்த்திகளையும் நாளதுவரையில் தேவர்கள் முதலிய சகல வான்மாக்களும் பூசித்துப் பெறத்தக்கபேற்றினை யடைந்துவருகின்றார்கள். இந்த ஐம்பத்தாறுமூர்த்திகளில் ஒருமூர்த்தியை விதிவிலக்கென்றுந் தேறாத பெண்கள் பூசித்தாலும் அவர்கள் சகல துன்பங்களினின்றும் எளிதில் நீங்கி எல்லாப் போகபாக்கியங்களையும், குறைவறப்பெற்று சுகமாக வாழ்ந்திருப்பார்கள்.

கேட்டீர்களோ சவுனகாதி முனிவர்களே! தூரசதனுடைய ஆண்மையை யடக்கும்படி உடுண்டிவிநாயகர் திருவவதாரங்கொண்டருளிய அவரே மற்றொருபோது திவோதாசனென்னுமோரரசனிடத்திற்சென்றவர் திருவிளையாடலுண்டு அதனையும் பாந்தமாகச் சொல்லுகின்றோம் கேட்பீர்களாக. பூர்வத்திலேபாத்மமெனச் சொல்லும் ஓர் கற்பமிருந்தது. அக்கற்பத்தில் சுவாயம்புமநுவென்னுமோர் சக்ரவர்த்தி யிருந்தனன். அவன் இறந்துபோயினபின் அறுபதினாயிரவருடமழைபொழியாமல் சகலதேசங்களுங் காடாகியழிந்தன. இவ்வாறழிந்துபோகவும் பிரமனானவன்மனமிரங்கி இனிஇவ்வுலகங்களைப்பாதுகாக்க ஓரரசனை நியமிப்பானுகிப் பூவுலகமுழுவதுந் தேடிச்சென்றனன். அவ்வாறுசெல்லுகையில் காசிநகரத்தில் அரசகுலத்தினனான இரிபுஞ்சயனென்னு மொருவன் அரியதவத்தினைச்செய்து கொண்டிருக்கக்கண்டு அவனருகிற்சென்று அவன் செய்ததவத்தைப்புகழ்ந்து அரசனே! பூமியில் அரசாட்சிசெய்வாரன்றிச் சகல தேசங்களுங்காடாயின. எல்லாப்பொருள்களு மழிந்துபோயின ஆதலால்நீ உனது செங்கோலைக்கொண்டு அரசாட்சி செய்யவேண்டும் உனக்கு ஆதிசேடன் தனது புத்திரியாகிய அங்கமோகினியை விவாகஞ் செய்துகொடுப்பன் தேவர்கள் கற்பகவிருட்சத்திலிருந்து அனேக ஆடையாபரணாதிகளைக் கொடுப்பார்கள். அப்போது நீ சகல போகபாக்கியங்களையுங் குறைவின்றி யனுபவித்திருக்கக்கூடும் உன்னையாவருந் திவோதாசனென்று அருமைப்பெயரிட் டழைப்பார்கள் என்று பற்பல சந்தோஷவார்த்தைகளைக்கூறி அப்போதே அவனுக்கு அரசாட்சிக்குரிய கிரீடத்தினையுந் தரித்தனன். அதற்கு இரிபுஞ்சயன் பிரமனைப்

பணிந்தெழுந்து சுவாமி! தேவர்கள் காசிநகரத்தை விடுத்து அப்பாற் போனாலன்றி யான் உலகஅரசாட்சியினுக் குடன்படேனென்று சொல்லினன். அதற்குப் பிரமன் அவ்வாறே செய்குதுமென்று ஒப்புக்கொண்டு வழக்கப்படி விசுவநாதமூர்த்தியைத் தரிசிப்பதற்கு அவரது சந்நிதானத்திற்குச் சென்றனன். அப்போது சிவபிரான் அளவற்றநாளாய்த் தவஞ்செய்துகொண்டிருக்கின்ற மந்திரகிரிக்கு அனுக்கிரகஞ்செய்யும்படி உமாதேவியாரோடு இடபவாகனத்தின்மீதெழுந்தருளி விநாயகர்-சுப்பிரமணியர்-நந்திகேஸ்வரர் முதலிய தலைவர்கள் பிரமன் விஷ்ணுமுதலியதேவர்கள் பிருங்கிமுதலிய கணநாதர்கள் இந்திரன் முதலிய திக்குப்பாலகர்கள் மாதேவர்முதலிய பதினோருருத்திரர்கள் அமரர் முதலிய பதினென்கணத்தார்கள் முப்பத்துமுக்கோடி தேவர்கள் எண்பத்தெண்ணாயிரம் இருடிகள் புடைசூழ்ந்துவரவும் இடக்கை-உடுக்கை-உறுமிமுதலிய தம்பட்டைவாத்தியங்களையும் கொடி-குடை-சாமரை ஆலவட்டமுதலியசின்னங்களையும் பூதகணங்களேந்தி இருமருங்கினு மாரவாரித்து நடக்கவும் இவ்விதவைபவத்தோடு அம்மந்திரகிரிக்கு நேராகச் சென்றனர். அப்போது அம்மந்திரகிரியும் அதனருகிற் றவஞ்செய்துகொண்டிருந்த மரீசிமுனியும் சுவாமியை எதிர்கொண்டுபணிந்து துதிசெய்தார்கள். அவ்விருவரில் சிவபிரான் மரீசிமுனியைப் பார்த்து உனக்குவேண்டிய வரத்தினைக் கேளென்று திருவாய் மலர்ந்தனர். அதற்கம்முனிவர் சுவாமீ! அடியேற்குத் தேவரீருடைய திருவடிகளில் இடைவிடாத பத்தியும் சிவலோகவாசமுந் தரவேண்டுமென்று பிரார்த்தித்தனர். உடனே பரமசிவகடாட்சத்தால் அவரெண்ணத்தின்படி ஓர் விமானம்வர அதில் அம்முனிவர் ஆரோகணித்துச் சிவலோகம்போய்ச் சேர்ந்து வாழ்ந்திருந்தனர்.

இப்பால் சிவபிரான் மந்திரகிரியைப்பார்த்து உனக்குவேண்டிய வரம் யாதென்று கேட்டனர். அதற்கு மந்திரகிரியானது மீட்டும்பணிந் தெழுந்து சுவாமீ! எல்லாத்தலங்களினுஞ்சிறந்த காசித்தலத்திலே சுவாமிகள் எவ்வாறு வாசஞ்செய்கின்றதோ அவ்வாறே குசத்தீவிலிருக்கின்ற அடியேனிடத்திலு மெழுந்தருளி சகலருக்கும்வேண்டியவரங்களை யனுக்கிரகஞ்செய்து கொண்டு அடியேற்குப்பெருமையையும் மகிமையையுங் கிருபைசெய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தது. அத்தருணத்தில்பிரமனும் சுவாமியைப்பணிந்தெழுந்து கர்த்தனே! உலகத்தில்அரசாட்சி செய்பவரில்லாமல் அறுபதினாயிரவருடம் மழையில்லாமல்சகலதேசங்களுங்காடாயின. அதில்எவ்விதத்திலேனும் உலகத்திற்கு ஓரரசனை நியமிக்கவேண்டுமென்று கருதிச்செல்கின்ற அடியேன்காசித்தலத்தில் அரியதவத்தினைச்செய்துகொண்டிருந்த இரிபுஞ்சயனென்னுமோரரசனைக் கண்டு அரசாட்சிசெய்யவைத்தேன் அவனோகாசித்தலத்தில் தேவர்களுடைய சஞ்சாரமில்லையாகில் இவ்வரசாட்சிக் குடன்படுவேனென்றனன். அதற்கடியேன் அவ்வாறே செய்குதுமென்றுசொல்லி சுவாமிகளிடத்தில் விண்ணப்பஞ்செய்து கொள்ளவந்தனன். இவ்வுலகம் விர்த்தியடையுமாறும் காசித்தலத்தில்

தேவர்களுடைய சஞ்சாரமொழியுமாறும் சுவாமிகள் மந்திரகிரிக்கு அவ்வரத்தினைக் கொடுத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தான். அதற்குமேல் சிவபிரான்மந்திரகிரிசெய்த அரியதவத்தினையும் பிரமதேவனுடைய விண்ணப்பத்தையுநிதானித்து அவ்வாறேமந்திரகிரிக்கு வரங்கொடுத்தருளி தம்மோடுவந்த தேவர்களுடன் அக்கிரியிற்றானே எழுந்தருளியிருந்தனர். அன்றுமுதல் காசித்தலத்தில் தேவர்களுடைய சஞ்சாரமில்லாதிருந்தது. திவோதாசனும் அக்காசித்தலத்திற்றானேயிருந்து ஆதிசேடன்புத்திரியாகிய அனங்கமோகினியென்பவளை விவாகஞ்செய்து தேவர்கள்தந்த கற்பகவிருட்சத்தினுடைய ஆபரணாதிகளைத்தரித்துக்கொண்டு தனதுகீர்த்தியானது எண்டிசைகளிலும் பரவும்படியாகநீதிவழுவாமல் செங்கோல்செலுத்தித் தவந்தானமுதலிய எல்லாத்தன்மங்களையும் அரசாட்சிசெய்துவந்தனன்.

அவன்செய்துவந்த அரசாட்சியினால் திங்கடோறு மும்மாரிபெய்தன எங்கும் பயிர்வர்க்கங்கள் செழித்தன. ஊர்கடோறும் குடிகள் தழைத்தோங்கின. யாகாதிகிரியைகள் குறைவின்றி நடந்துவந்தன. தேவர்கட்குச் சதாகாலமும் அவிர்ப்பாகமுங் கிடைத்து வந்தது, எல்லாவான்மாக்களும் ஆனந்தமயமாகியிருந்தார்கள். மிகுமழை-மழையின்மை - மிகுகாற்று - தன்னரசு-வேற்றரசு-துன்மரணம்-பாவவினை-கள்வர்-தரித்திரர்-பிணியாளர்-விதவையர்-மலடர் முதலிய குற்றங்களனைத்தும் பெயரில்லாமலொழிந்தன. நாளுக்குநாள் தகுதியான காரியங்களே தழைத்தோங்கின. இதல்லாமல் திவோதாசனானவன் கங்கையில்வந்து ஸ்நானஞ் செய்தபேர்களை யழைத்து உடனே ஸ்நானஞ் செய்வித்தல் கோவிலிலிருக்கின்ற விசுவநாதர் உடண்டி விநாயகர் – சுப்பிரமணியர்-திருமால் - வயிரவர் - தண்டபாணி முதலிய மூர்த்திகளைத் தொழாதிருக்கின்றோரை யழைத்துப் பத்தியாய்த் தொழச்செய்வித்தல் முதலிய நன்மார்க்கங்களையுங் கடைப்பிடித்தனன், இவ்வாறு திவோதாசனானவன் அளவற்றநாள் தனது செங்கோன் முறைமையில் வழுவாதபடி அரசாட்சி செய்துவந்தும் தேவர்கள் காசியிற் சஞ்சார மில்லாதிருப்பதைக் குறித்து மனந் தளர்வுற்று இயாவருக்குங் குலக்குருவாகிய பிரகஸ்பதி தேவரிடத்திற் சென்று பணிந் தெழுந்து சுவாமி ! இனி அடியேங்கள் காசித் தலத்தில் எவ்வாறு சஞ்சரித்திருக்கக்கூடுமென்று கேட்டார்கள். அதற்குப் பிரகஸ்பதிதேவராலோசித்து அன்பர்களே! அவ்விடத்தில் நடந்துவருகின்ற நன்மார்க்கங்கள் தழைக்குமாயின் உடனே எல்லா மாறுபாடுகளும் நடக்கும். அப்பால் தடையின்றிப் போகக்கூடுமென்று சொல்லினர். அதைத் தேவேந்திரன் கேட்டு உடனே அக்கினிதேவனைக்கூவி நீ இன்றுமுதல் காசியில் அக்கினி யில்லாதபடி செய்யவேண்டுமென்று சொல்லினன். அவ்வாறே யவன்செய்ய, அதனால்வேள்வியாதிய கிரியைகள் நடத்துவதற்கு வழியில்லாமல் முனிவர்களெல்லாம் திரண்டோடித் திவோதாசனிடத்தில் முறையிட்டார்கள். செங்கோன் முறையிற் றவறாத திவோதாசன் அதைக்கேட்டமாத்திரத்தில் மனந்தளர்ந்து தேவர்க

ளெல்லாங் கூடிச்செய்தசூழ்ச்சியாகுமென்று நீர்மானித்து, ஓ அருந்தவர்களே! இவ்வக்கினியொன்றேயல்லாமல் மழையையுங் காற்றையும், சூரிய சந்திரனையும் அவ்வாறே வசிக்கவொட்டாமற் செய்யினும் செய்யட்டும் நானே யாவுமாயிருந்து தருமநெறிகெடாதவகை செய்விக்கின்றேன் நீங்க ளிருக்கையிற்சேருங்களென்றனன். அதுகேட்ட முனிவர்களெல்லாங் களிகொண்டு நடந்தார்கள். பின்னர் திவோதாசனானவன் தானே அக்கினியாயும் மேகமாயும் காற்றாகியும் சூரியசந்திரனாகியு மிருந்து அவைகளினின்று தானும் வேறாகி அரசாட்சி செய்துவந்தனன்.

கேட்டீர்களோ சவுனகாதி முனிவர்களே ! செங்கோன்முறைமையிற்றவறாத ஓரரசனிருப்பானாயின் இப்பூமிதேவிக்குக் கிடைத்தற்கரியபொருள் என்னவிருக்கின்றது. இப்பால் திவோதாசனானவன், உலகம்முழுவது மளிக்கவல்லஅரசனும் அவ்வுலகத்திற்கு வேண்டும்பொருள்களை விளைப்பவனுந்தானேயாகியிருந்ததும் தேவர்களெல்லாம் வெட்கித்தலைகவிழ்ந்தார்கள். காசித்தலத்திலுள்ள எல்லாஉயிர்களுங் களிப்படைந்தன. இவ்வாறு எண்பதினாயிரவருடங் கடந்தபின்னர் விசுவநாதமூர்த்தி மந்திரகிரியை வெறுத்தவராய்க் காசித்தலத்தைநினைத்து தேவர்களைக்கூவி இனியாம் காசித்தலத்தில்வசிக்கும்படி எண்ணினோம்; ஆதலால் நீங்களவ்விடஞ்சென்று திவோதாசன் செங்கோல் முறைமையிற்றவறும்படி செய்யுங்களென்று கட்டளையிட்டருளினர். அக்கட்டளையைத் தேவர்கள் சிரமேற் கொண்டு யாவருந் தனித்தனி வேறுவேறுருவங்களையடைந்துசென்று தம்மாற்கூடிய முயற்சிகளைச்செய்தார்கள். அவ்வாறு செய்தும் திவோதாசன் தருமநெறியிற் கெடாதிருப்பக்கண்டு மனந்தளர்ந்து சிவபிரான் பணித்தருளிய கட்டளையை முடித்திலோமே! அந்தோ! இதென்ன பாவமென்றுதுக்கித்து அப்பிழைநீங்குமாறு யாவருந்தங்களபிமானத்தால் சிவலிங்கப்பிரதிட்டைசெய்து பூசித்தார்கள். அக்காரணத்தைச் சிவபிரானறிந்து யோகினிகளைவிடுத்தனர்; அவர்களும் அத்தேவர்கள்போலாயினர்; பின்னர் சூரியனையேவினர் அவனும் அவ்வாறேயாயினன்; அதன்பின் பிரமனைவிடுத்தனர் அவனும் அவ்வாறேயாயினன்; அப்பால் கணநாதர்களையெல்லாம் விடுத்தனர் அவர்களும் அவ்வாறே தம்மாற்கூடிய உபாயங்களைச்செய்துங் காரியம்நிறைவேறாமற் கவலைகொண்டு முன்சென்றவர்களைப்போலே தாமுந்தவத்திலிறங்கினார்கள். இவ்வாறு தம்மாலேவப் பட்டவர்களெல்லாம் மீட்டுந்திரும்பாமற்றவஞ் செய்திருப்பதைச் சிவபிரானறிந்து இக்காரியத்தை முடிக்கவல்லவர் விநாயகமூர்த்தியேயென்று தமக்குள்நிச்சயித்து உடனே உடண்டி விநாயகரிடத்தில் தமதெண்ணத்தை யறிவித்தனர். அதற்கு எமது கர்த்தனிசைந்து இலக்கணவடிவின்மேற்பட்ட பொலிவினைவாய்ந்த ஓர்பாலசோதிடராய்த் திருவுருக்கொண்டு கரகமலத்தில் ஓர்புத்தகத்தினைத்தாங்கி திரிகாலவர்த்தமானங்களையுமறிந்து சொல்லவல்லவராய்க் காசிநகரத்துட்சென்று அவ்வவர்களுடைய நித்திரையில் சிலபயங்கரமான சொப்பனங்களையுண்டாக்கியும், அக்கனவைப்பக

லில் அவர்களிடத்தோறுஞ்சென்று தாம்சோதிடத்தினாலறிந்து சொல்பவர்போல ஒன்றினும்பிழையாமற் சொல்லியும், இக்கனவினால் இன்னபயன்கூடுமென்றுஉரைத்தும், அவ்வாறே பலிக்கும்படி செய்வித்தும் அந்நகரத்திற் சில உற்பாதங்களை யுண்டாக்கி இன்னஉற்பாதத்தால் இன்னகெடுதி நேருமென்று போதித்தும், ஆகாயத்திலிருக்கின்றகோள்களை மாறுபடுத்தி அதையாவருக்குங்காட்டி இன்னமாறுபாட்டினால் இன்னதாழ்வுகள் நேருமென்றுசாற்றியும், இக்கனவுகளினாலும் உற்பாதங்களினாலும் கோள்களுடைய மாறுபாடுகளினாலும் இந்நகரம் உண்மையாய்அழிந்துவிடும். ஆதலால்நீங்களனைவரும் தப்பிப்பிழைக்கவேண்டுவீரேல் இப்போது வேறுதேசங்களிற்சென்று வாழக்கடவீரென்று அஞ்சுவித்து, அந்நிமிடத்தில் அவர்களை அந்நகரத்தினின்றும் ஓடச்செய்தும் அஞ்சிஓடிப்போனவர்கள்போக நின்றவர்கள் இனிநமக்கு என்ன தீங்கு விளையவிருக்கின்றதோ வென்றுபயந்து செய்யத்தக்க நற்கருமங்களில் மனதைச்செலுத்தாமல் மாறுபடும்படிநடாத்தியும், இவ்வாறு நகரத்தினரையெல்லாம் பயந்தோடவும் முறைமைதப்பவுஞ் செய்தபின்னர், திவோதாசனுடைய அரமனையின் அந்தப்புரத்தில்நுழைந்து அங்குவசித்திருக்கின்ற இராசஸ்திரீகளிடத்திற் றனித்தனிசென்று அவர்கட்கு முன்னடந்ததையும், இப்போது நடக்கின்றதையும், இனிநடக்கப் போகின்றதையும், உள்ளதுள்ளபடியேசொல்லியருளினர். அவர்களுள்லீலாவதியென்பவள் சோடசஉபசாரங்களோடும்பூசித்து நிறுத்திக்கொண்டு அப்போதே ஓர்தூதுவனைக்கூவி வேதவாக்கியம்போலே யாவையும் உள்ளபடியறிந்து சொல்லவல்ல ஓர்சோதிடர் இங்ஙனம் வந்திருக்கின்றாரென்று அரசனுக்கறிவிப்பாயென வாக்கியாபித்தனள். அவனவ்வாறேசென்றுஅறிவிக்க, அரசன்அவனைப்பார்த்து அச்சோதிடரை இங்ஙனமழைத்து வாருங்களென்று கட்டளையிட்டனன். அக்கட்டளையைக்கேட்டமாத்திரத்தில் எமதுகர்த்தராகிய சோதிடர் அரசன்கொலுச்சபையிற்சென்று கண்டவுடன் அவன்மனமுழுவதுங்குழையும்படி பிரபஞ்சமாயையைநீத்த துறவினரைப்போலக் குளிர்ந்தமுகத்துடனே அவனெதிரில் நின்றனர். திவோதாசன் சுவாமியின்வரவைக் கண்டமாத்திரத்தில் எதிர்கொண்டழைத்து வந்து ஓராதனத்திலிருத்தி மிக்கபேருவகையோடும் பணிந்து துதிசெய்து சுவாமீ! இதுகாறும் இவ்வுலகத்தைப் பஞ்சேந்திரியம்போலப் பாதுகாத்து அரசாட்சிசெய்து வந்தேன்; அவ்வரசாட்சியில் அடியேற்கிப்போது வெறுப்புண்டாயிற்று. ஆதலால் இவ்வாட்சி என்னை விட்டொழியுமோ அல்லது முன்போலவே இருக்குமோவென்று மனதிற் சிறிதுஞ் சபடமில்லாமற் கேட்டனன். அதற்கு வேதநெறியிற் பிழையாத மெய்யடியார்கட்கு நற்கருமங்களையே சாற்றவல்ல பெருங்கருணைவாய்ந்த விநாயக மூர்த்தியானவர் தாமே உத்தரங்கூறுது அரசனே! இத்தினத்திற்குப் பதினேழாம்நாள் ஓர் அந்தணர்வருவர் அவரே நீகேட்டகேள்விக்கு மறுமொழி கூறுவர். அவர்சொல்வதை நீயன்போடுகேட்டு நடந்துகொள்ளுகவென்று சொல்லினர்.

அவ்வாக்கியத்தை அரசன் செவிக்கினிமையாகக் கொண்டு சுவாமிக்கு விடைகொடுத்தனுப்பி அந்தப்புரத்திற் சென்றனன். இப்பால் உடுண்டி விநாயகர் காசிநகரத்திற்சென்று நடாத்திய திருவிளையாட்டினையும், திவோதாசனுக்கு ஓரந்தணன் வருவானென்று உணர்த்திவந்த காரியத்தையும், சிவபெருமானுணர்ந்து விண்டுவை அந்தணராகப்போகும்படி உத்தரவுசெய்தருளினர். உடனே விண்டுவானவர் பவுத்தனாகவும் இலக்குமி கவுந்தியாகவும் உருக்கொண்டு இருவருங் காசிநகரத்திற்சென்று பவுத்தனாகிய விண்டுவானவர் ஆடவர் கூட்டத்துட்புகுந்து நம்மைப்போல உயிர்வைத்திருக்கின்ற பசுக்களையும், ஆடுகளையுங் கொலைசெய்து வேள்வி நடத்துகின்றீர்களன்றோ? அவ்வேள்விகளினால் வரும் புண்ணியமானது அக்கொலையினால்நேரும் பாவத்திற் கெதிர்நிற்கவல்லதோ கொலையானது இம்மையிற் சகல புண்ணியங்களையுங் கெடுப்பதன்றி மறுமையில் நரகத்தினையும் விளைக்குமென்று அறியீர்களோ? பாவகருமங்களைப் புண்ணியகருமங்களென்றெண்ணி நடத்துவோர்க்கு அருள் எங்ஙனங் கிடைக்கும்? அந்தோ கொலையே சகலபாவங்கட்குந் தாய்தந்தையாக சகல சாத்திரங்களும் முறையிடுகின்றனவே? என இவ்வாறு பசுத்தம்ப முதலியவைகளைச் செய்து யாகாதிகிரியைகளை நடத்திவருகின்றவர்களுடைய மனமெல்லாம் மாறுபடும்படியாகப் போதித்து, அவர்கள் செய்துவருகின்ற மற்றெல்லாக் கருமங்களினும் பலகுற்றங்களைக் காட்டிவந்தனர். கவுந்தியாகிய இலக்குமியானவள் மங்கையர் கூட்டத்துட்புகுந்து பிரமன்புத்திரர்களாகிய காசிபர் மரீசி தக்கன்முதலாயினோர் ஒருவருக்கொருவர் சகோதரர்களாயிருந்தும் தக்கனுடைய புத்திரிகளை மற்றையர் விவாகஞ்செய்து தேவர்கள்முதலிய சகலரையும்பெற்று மேன்மையடைந்தார்கள். அவர்களே அவ்வாறாக நீங்கள் வெவ்வேறு முறைகளைவைத்துக்கொண்டு இன்பமனுபவிக்கின்றீர்கள்? முறைமைபாராட்டியனுபவிப்பதினாலுண்டாகு மின்பமும் ஓரின்பமோ? உயர்மக்களாயினோர்ஒருகாலத்தும் ஒருபொருளால் ஐம்புலனுநுகர்தற் சிறப்புடைத்தாய் இன்பத்தைக் காத்தற்பொருட்டு முறைநீப்பரேயன்றி பல்காலத்து பலபொருளால் பலதுன்பங்களையும் விளைப்பதாகிய முறைகாத்தற்பொருட்டு இன்பத்தை நீக்குவரோ? ஐயோ இதென்னபாவம் நினைத்தவர்களுடனே கூடியனுபவிக்கின்ற இன்பமே யின்பம். நினையாதவர்களிடத்தில் முறைமைபாராட்டிக் கூடுவதினால் பலதுன்பமே. என இவ்வாறு அக்கினிசாட்சியாய் விவாகஞ்செய்த கணவர்களையேயன்றி ஏனையோரை எள்ளத்தனையும் நினையாத மங்கையரெல்லாங் கற்பு நிலைமையினின்று கலையும்படியாகப் போதித்தனள். இவ்விருவர்களுடைய போதனையினாற் காசிநகரத்திலுள்ள ஆடவர்களும், ஸ்திரீகளுந் தத்தம்நெறிகளிற்பிறழ்ந்து பிரஷ்டத்துவ மடைந்தார்கள். இவ்வாறு பதினாறுநாள் சென்றபின்னர், பதினேழாம்நாள்காலையில் திவோதாசனெழுந்து இத்தினம் ஓரந்தணர்வருவாரென்று சோதிடர் சொல்லிப்போயினரேயெனத் தனதுமனதில் நினைத்தனன். அப்போதே அவ்வந்தணராகிய விண்டுவானவர் அரசனெதிரிற்போய் நின்

[illegible] அனைக்கண்டவுடன் அரசனவ்வன் ஆசனங் கொடுத்திருக்கச்செய்து [illegible] பணிந்தெழுந்து இருகரங்களைபுங்கூப்பி எதிர்நின்று சுவாமீ! [illegible] வென்று யானறிந்து கொண்டேன்; தேவரீருடைய வஞ்சகத் [illegible] இப்மேலான காஙகரத்திறுள்ளோர் மாறுபட்டு நெறிபிறழ்ந் [illegible] மதித்தேன்; இவையனைத்தும் தேவர்களாற்செய்த சூட்சியென் [illegible] கொண்டேன்; எனது அஞ்ஞானமுழுவதும் தொலையும்படி இருபை [illegible] உடண்டிவிநாயகருடைய வல்லபத்தையுங் கண் [illegible]; முற்காலத்தில் அளவற்றபேர் தேவர்கட்கெல்லாம் பலதுன்பங் [illegible] னர். அதுபோலே யானும் எனது அறிவின்மையினால் [illegible] புறப்படுத்தினேன்; இனியேனு மத்தேவர்களைப் புறப் [illegible] யொழிந்து சிறந்த பேரின்பத்தை யானடையுமாக் [illegible] அருளவேண்டுமென்று பிரார்த்தித்தான். அவையனை [illegible] இவனெண்பதினாயிரம் வருடம் நீதியிற் றவறாதபடி [illegible] இவ்விடத்தில் உண்மையையே பேசவே [illegible] தமதுசொரூபத்தை அவனுக்குக்காட்டி அரசனே! இக் [illegible] மூர்த்திக்குக் கொடுத்துவையாயின் அளவற்ற புண் [illegible] பெரும்பேறுகிடைக்குமோ அப்பேறு உனக்குக் [illegible], தமதிருப்பிடஞ்சென்று தமதூர்தியாகிய கரு [illegible] நடத்திய காரியங்களை யெல்லாம் [illegible] விசுவநாதமூர்த்திக்கு அறிவித்து வரும்படி ஏவினர். [illegible] போனவார்த்தையினை நினைந்து மன [illegible] விசுவநாதமூர்த்திக்கே விடுத்துத் தனதாசுரிமையைத் [illegible] தனது பொக்கசத்திலுள்ள பொருள் [illegible] விசுவநாதமூர்த்திக்கு யாவரும் வியக்கத்தக்க ஓர் கோயி [illegible] அதில் [illegible] பிரதிட்டைசெய்து பூசித்து வந் [illegible] சிவபிரான் அவ்வரசனை அச்சிவலிங் [illegible] அருளினர். முன்னர் விண்மேல் விடப்பட்ட [illegible] விரைவாக மந்திரகிரியிற் சென்று விசுவ [illegible] தாமனுப்பிய உடுண்டி விநாயகரா [illegible] நடத்திய காரியங்களை யெல்லாம் விவரமாகச் [illegible] விசுவநாதமூர்த்தி கேட்டு சந்தோஷமாகச் [illegible] காசித்தலத்தை யடைந்தனர். உடனே [illegible] முதலாயினோர் சிவபிரானை எதிர்கொண்டு சென்று [illegible] சிவபிரான் தம்மோடழைத்துக்கொண்டு [illegible] சயசயவென்று போற்றும்படி [illegible] வீற்றிருந்தருளினர். உடனே அக்காசத் [illegible] விசுவநாதமூர்த்தியும் விசாலாட்சியம்ம

னும் முகமலர்ந்து இப்மேன்மையான காசிநகரவாழ்க்கைப் உம்மாலன்றோ கிடைக்கப்பெற்றோமென்றுசொல்லித் துண்டிராசனை மிக்கப்பெருவகையோடு மணைத்து உச்சிமோந்து தமக்கெதிர்நிற்கின்ற விண்டுவின்மீது திருபாலோக்கத் தைக் கடாட்சித்தருளினர். அப்பால் மாசிமாதம் அமரபட்சத்து அங்காரகசது ர்த்தி வர அங்ஙனில் சந்திரோதயகாலத்தில் தேவர்கள் முனிவர்கள் முதலாயி னோரோடு சிவபிரான் துண்டிவிநாயகனைப் பூசித்து அக்காசித்தலத்தில் எக்கா லமும் பிரியா திருக்கத்தக்க வாழ்க்கையைப் பெற்றனர்.

உடுண்டி விநாயகர் திருவவதாரப் படலம்

முற்றிற்று.

பன்னிரண்டாவது

வல்லபை விநாயகர்

திருவவதாரப் படலம்.

பதினொன்றான வவ்தாரம் பகர்ந்தாமினிபனி ரண்டெனத்,
துதிசெ யவதா ரமும்புகல்வாந் தொடுத்த விரைவாற் சேவெனறு,
பொதிசெ யிதழி னமுதுகுத்துப் பொறிவண் டூது மலர்க்கமலத்,
ததிபன் வியாத முனிவனுக்கங் கருள்செய் தாங்குள் ளுறக்கேளீர்.

ஓ சவுனகாதி முனிவர்களே ! விநாயகமூர்த்தி உடுண்டிவிநாயகர் திருவ வதாரங்கொண்டு அரசனை வென்று காசிநகரைக் காத்தருளிய திருவிளையா டலைச் சொன்னோம், இப்பால் வல்லபை விநாயகர் திருவவதாரங்கொண்டு செ ய்தருளிய திருவிளையாடலைச் சொல்லுவோம் கேட்பீர்களாக.

முன்னொருகாலத்தில் பிரமதேவரானவர் தமது சத்தியலோகத்தில் மரீசி முதலிய சிறுவர்களும் தேவர்கள் முனிவர்கள் முதலாயினோரும் பரிசுத்தமன த்தினராய்ப் புடைசூழ்ந்திருக்கும்படி சிங்காதனத்தில் வீற்றிருக்கின்றபோது ஒருநாள் தமது புத்திரருட் சிறந்த மரீசி யென்பவர் அவரைப் பணிந்தெழுந்து சிருட்டி திதி சங்கார மென்னும் முத்தொழில்களையுமுடைத்திவரும் மும்மூர்த்தி களுள் தலைவராய், அம்மூர்த்திகட்கு முத்தொழில்களைச் செய்வித்தவராய் ஞா னமே வடிவாகவுடையவராய், சத்தியமான வேதப்பொருள்களில் வல்லவராய் சகலலோகங்கட்குமீசராய், எல்லாப்பொருள்களுக்குங் கர்த்தாவாய், சருவவியா பியாய், சேவசாட்சியாய் இன்னுமிவ்வகைப்பட்ட குணஇசயங்களையுடைய முதல் வர் யாரோ அவரை அடியேங்கட்குத் தேவரீர் திருவாய்மலர்ந்தருளவேண்டும்

என்று பிரார்த்தித்தனர். அதற்குப் பிரமதேவன் தம்மோ டொப்பாரு மிக்காருமில்லாத விநாயகமூர்த்தியைத் தியானஞ்செய்து தமக்குள் வஸ்துநிச்சயந் தெரிந்துகொண்டு ஆனந்தபரவசத்தராய் விழிகளில் போதநீரைப்பெருக்கி நாத்தழும்பேறும்படி வேதங்களினாற் றுதிசெய்து மிக்க மனவுருக்கத்தோடு மரீசிமுனிவரைப்பார்த்து மைந்தனே! முன்னொருகாலத்தில் மூலவர்ணவத்தின் செருக்கினால் யானும் விண்டுவும் தனித்தனிப் பிரமம் யானென்று தருக்கி யுத்தஞ் செய்தனம். அப்போது பூவுலகத்தில் எங்க ளிருவரின் மத்தியில் கொழுந்துவிட்டெரிகின்ற அக்கினிரூபமாய் அண்டகோடிகள் முழுவதும் நீண்ட சோதி தோன்றியது. அவ்வாறு நின்ற சோதியெவரோ அவரே ஆகாயமத்தியகர், அவரே சர்வேசர், அவரே கணேசர், அவரே மூவருள்ளும் முதன்மையாய் நீ வினவிய குணங்களனைத்தும் பொருந்திநின்றவர் என்று சொல்லினன். அதற்கு மரீசி முனிவர் மீட்டும் தொழுதெழுந்து சுவாமீ! சகலவுயிர்களையும் ஆக்கல் அழித்தலாதி தொழில்களைப்பெற்று வாழ்கின்ற உங்களைப்போல அந்த அரசனும் அழித்தற்றொழிலைப்பெற்று இருப்பதால் அவர் உம்மூவருளொருவராயிருக்கவேண்டுமேயன்றி உம்மிருவருக்கும் மேலானவராய் முதன்மைபெற்றிருப்பது எங்ஙகாரணத்தாலென்று வினவினன், அதற்குப்பிரமன் புன்னகைகொண்டு மைந்தனே! ஆதியில் என்னையும் விண்டுவையுஞ் சிருட்டித்து எங்கட்கு ஆக்கவுமளிக்கவுமான வல்லபமுங் கொடுத்து, எங்க ளிதயத்தின்கண்ணு மிருந்து எங்களின் முன்னிலையில் அவ்விரண்டு தொழில்களையும் நடாத்துகின்றார். மேலும் மோகிதராகிய எங்களை இவ்வாறு சிருட்டித்துக் காத்தபின்பு எங்களைச் சங்காரமுஞ் செய்கின்றனர். அன்றியும் ஆதியில் வேதாகமகலைகள் யாவையுமுண்டாக்கி எங்கட் கோதுவித்தவரும் அவரே. பூவில் மணமும், அழலில் வெப்பமும், எள்ளில் நெய்யும், மணியிற் பிரகாசமும், விறகிற் றீயும் போல ஆன்மாக்கள்தோறும் நிறைந்திருக்கின்றவரும், அவர் ஒருவரே. அவருடைய சங்காரத்தி லழியப்பட்ட எங்களை மீட்டுந் தமது பெருங்கருணையினால் சிருட்டித்துங் காத்துமெல்லாச் சுகங்களையுங் கொடுத்தருளுகின்றனர். ஆதலால் சங்கார கர்த்தன் அவ்வொருவரே எங்கட்கு முதல்வனென் றறியக்கடவையென்றனன். அப்பால் மரீசிமுனிவர் மீட்டும் பிரமதேவனைப்பார்த்து அத்தனே! தேவரீர் கூறியதனைத்தும் உண்மையே. எல்லாம் பிரமமயமென்று தம்மையொத்த மேலோர்கள் சொல்லியிருக்க சங்காரகர்த்தராகிய உருத்திரமூர்த்தியால் சகல வேதாகம புராணங்க ளுண்டானதன்றி அவைகளை யெங்கட் குபதேசித்ததுவும் அவரேயென்று தேவரீர் எவ்வாறு சொல்லக்கூடும். அச்சந்தேகத்தினை அடியேற்கு நிவர்த்திசெய்தருளவேண்டும் என்று கேட்டனன். அதற்குப் பிரமதேவன் சந்தோஷங்கொண்டு முன்னர் தாம்மகேச்சுரரால் உபதேசிக்கப்பெற்ற ஓர் அநுபூதியை அம் மரீசிமுனிக்குச் சொல்வதாயினர்.

மாயையைத் தொழில்செய் இயக்கிட வந்த மாயையிற் கலந்துநிற் றலினால்
மாயையைக் கடந்த வவர்தமை மாயா சுருபியென் றனைவருங் குதல்போ

லாயவெப் பொருளும் விரவிநிற் றலினு லொருகு மொற்றுமை நோக்கி
மேயகல் லுபசா ரத்தினு லெவையு மேதகு பிரமமென் றதுவே.

தங்குமொற் றுமையாற் சொன்னதே யன்றிச் சகலமும் பிரமமே வாகா
மங்குத லின்றிச் சகலமும் பிரம மயமெனுஞ் சுருதியி னருத்த
மெங்கணு மெந்தப் பொருளினு மிறைவ ரியைந்துடன் மன்னுகின்றாரென்
றங்கவர் தம்மை யுரைத்ததே யாகு மதுவன்றி யொன்றன்ற தன்றே.

அன்னதா கையினாற் பிறப்பிறப் பின்றி யகிலவா திக்கமாய் விபுவா
யன்னிய மின்றிச் சகலவான்மாவி னந்தரி யாமியாயிருக்கு
முன்னரு மீசர் யாவரோ வவரே முழுதருள் கணேசரன்னவரே
மன்னிய சகத்துக் கொருபெருங் கத்தர் மற்றுவே றொருவரு மலரே.

அவன்பரஞ்சோதி தத்துவாதீத னருவின னனகற் குணத்தோன்
சிவன்பரத் தினுக்கும் பரன்வெகுரூபி திகழ்பர தத்துவனீசன்
றவறினிற் குணத்தன் சர்வகல்யாணந் தமக்குமோர் காரண னென்ன
வெவர்களுந் துதிக்கப் படுவரக் கணேச ரெங்களைத் தினம்புரக்கின்றார்.

வெளியென வவர்தா மனைத்தையும் பொதிந்து விளங்குகின் றாரவருள்ளே
வெளியிடை யனைத்துங் கிடப்பனபோல விரவின வாருயி ரனைத்து
மொளியுறு ஞானத் தரவுரி வுரித்தாங் குறுசமு சாரத்தி நீங்கிக்
களிபெறு மித்த வியல்பறிந்தவரே கவிமுடைக் கழலிணை யடைவார்.

இத்தகு கவியின் மகத்துவ மென்று லியம்பிட முடியுமோ முடியா
வுத்தமவேத மானதியாதோ ரிடத்துப சாரமா வெனையும்
வைத்தகே மியையுஞ் சொல்வதோ வந்த வைப்பினு மிதார்த்தமே யாகத்
தத்துவாதீத ஞானதேவேசன் றன்னையே சொல்வது கண்டாய்.

அன்னியமான பாவனைதன்னு லரிமுதற் றேவரைக் குறித்து
மன்னிய முனிவர் தங்களைக் குறித்தும் வகுத்திடுங் கருமங்க ளெல்லாம்
பன்னரு மேகபாவதனையதனும் பரவுந்தேவேசர்தம் பாங்காத்
துன்னுவ தலது வேறொரு பாலுந் துன்னுறா தெனச்சொலுஞ் சுருதி.

எங்கள்பா லிருந்து தனுகர ணங்க ளியக்கியொற் றித்துநிற்கையினு
லெங்களை யாளுஞ் சம்புவினுடைய வெழிற்படைப் பாதிக டமையு
மிங்குவேட் டவர்கட் கருள்வரமாதி யியல்புறு மருளையுஞ் சுருதி
யெங்களுக் கியல்பா யுள்ளனவாக வியம்பிடு முகமனு யொருசார்.

மயக்கினுற் சிவனே டொப்பவெங் களையும் வைத்தெவ னுரைக்கின்று னவனே
சயக்கொடும் பாவி யாய்நரகத்திற் றழ்குவன் யாவனெங்களையு
மியக்குமீச் சுரனே டொப்பமேலாக வியம்புகின் றனந்தப் பாவி
பயக்குமெத் துயர்க்கு மாகரமான புகையெனப் பாவியா நின்றேம்.

அதிகபுண் ணியங்க ளியற்றினோ[illegible]கின்ப மருள்சிவ னுங்கணேச்சுரரே
பதியவ ருள்சேர் காங்களே பசுக்கள் பன்னிய விதற்கொரு சான்று
முதிர்கட லுலகில் விதியினு லெம்மான் முற்றிய பூசனை கொண்டு
கதிகொடுத் தனேகங் கணேசமூர்த் திகடாங் கவின்றிருக்கின்றன காணுய்.

அத்தமூர்த் திகளே புத்திமுத்திகளை யாதரித் திரந்தவர்க் கெல்லாஞ்
சித்துமா மழைபோல் வழங்குகின் றனவச் செய்கையான் மரீசியே நீயும்
பந்தம்வீ டிரண்டுந் தமக்குருக் கணேசர் பதங்களே சரணமா வடைதி
யிந்தவா றெனக்கு மயேச்சுரர் தம்மா லியம்பிடப் பட்டது கண்டாய்.

இவ்வாறு பிரமநிச்சயத்தையும், வேதாகம புராணங்களுண்டான காரணத்தையும், அப்பிரமமே துஷ்டசன நிக்கிரகஞ் சிஷ்டஜன பரிபாலனஞ் செய்யும்பொருட்டு கணேசமூர்த்தியாகத் திருவவதாரங்கொண் டெழுந்தருளியதையும், விவரமாக உபதேசித்து மைந்தனே! அளவளாவிய மோகவுள்ளத்தினுய் கணேசருக்குமேலான மூர்த்தியுண்டென்று சிறிதும் நினையற்க வென்று சொல்லினன். இவையனைத்தையும் மரீசிமுனிவர் கேட்டு சந்தேகங்களினின்று நீங்கித் தெளிவெய்தி, முன்னொருபோது அப் பிரமனுடைய சிருட்டியா லுண்டான மானதசரசு என்னுந் தடாகக்கரையிற்சென்று மேலான செல்வத்தைப் பெறவேண்டுமென்று கணேசமூர்த்தியை மனதிற்றியானித்து மழை பனி வெய்யலாதிகட் கிளையாது இருபத்தோராயிரவருடம் நிராகாரமாகயிருந்து அரிய தவத்தினைச்செய்தனன். அத்தவத்திற்குக் கணேசமூர்த்தி மனமிரங்கி நவரத்தின ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்ற மூடிகவாகனத்தின்மீது மழுவாயுதத்தினைத் தாங்கிய திருக்கரத்தோடு தரிசனந்தந்தனர். உடனே மரீசிமுனிவர் திகைத்தெழுந்து அனந்தமுறைச் சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து வேதாகமங்களினுற் றுதிசெய்துநின்றனர். அதற்கு விநாயகமூர்த்தி கிருபைசெய்து அன்பனே! உனக்கு வேண்டிய வரங்களைக் கேளென்று திருவாய்மலர்ந்தனர். அதைக்கேட்டமாத்திரத்தில் மரீசிமுனிவர் ஆனந்தபரவசத்தராகி ஆடிப்பாடி அனந்தமுறை வலம்வந்து தமதுள்ளத்தில் விழைந்த வரங்களில் ஒன்றையும் விடாமற் கேட்பதாயினர்.

தேவதேவ மாதேவ தேவ ரருச்சித் திடும்பாத
யாவ ராகச் சரணடையி னவர்க்கே கருணை செயுந்தலைவ
பூவனரியா தியாதுறக்கம் பூவந் தாம்பா தலந்தமக்குங்
காவல்புரியு மதிகாரங் கடையேன் றனக்குத் தரல்வேண்டும்.

யாங்குள் ளவரு மெனதாணை யிகவா தியற்றி வரல்வேண்டும்
யாங்கு மடியேற் குனதருளா லிரும்பூ சனையு முறல்வேண்டும்
யாங்கு மெனையே யிமையவர்க ளெண்ணி யெனைச்சார்ந்திடல்வேண்டும்
யாங்கு மடியேற் கோரிடரு மெய்தா திருத்தல் வேண்டுமே.

வேதபாரா யணராகி மிகுசற் குணரா யுழிவிளரா
யேத மேதும் புரியாரா யிலங்கா நிற்கு மைந்தர்பலர்
நாத னாயேற் குறல்வேண்டும் நம்பா வடியே னினையன்றி
காத லால்வே றொருதெய்வங் கருதா திருத்தல் வேண்டுமே.

வள்ள லெனுமெம் பெருமானின் வாம பாகத் திருக்கின்ற
தெள்ளு மருளிச் சுரியான சிவையே யெனக்குப் புத்திரியாய்
நள்ள வேண்டு மவடன்னை நாயேன் வதுவை செய்தளிப்பக்
கொள்ள வேண்டும் நீயென்னைக் குறையா தளிக்க வேண்டுமே.

இவ்வாறு மரீசிமுனிவர் கேட்டவரங்களை யெல்லாம் விநாயகமூர்த்திகொடுத்தருளி அந்தர்த்தானமாயினர். இப்பால் அம்முனிவர் அமுதாண்டவரையொப்பக் களித்து தமது தந்தையாகிய பிரமதேவனை நினைத்தனர். அக்குறிப்பினைப் பிரமதேவனறிந்து அப்புத்திரன்கொண்டிருக்கின்ற கோட்பாட்டினைச் சிதாவித்து ஐயையோ! வேதங்களாலும் அளவிடற்கரிய மேலானமூர்த்தியை அரியதவத்தினுல் தரிசிக்கப்பெற்றும் சற்றேனுமுத்தியின்கண் விருப்பம்வையாது மோகத்தைவிருத்தியாக்கவல்லபோகத்தைவினைவிழைந்தனன். அவனுடைய கன்மானுபவத்தையறிந்தே விநாயகமூர்த்தியும் அவன்விரும்பிய வரங்களைக்கொடுத்தருளினார். இனியவன் அவையனைத்தையும் அநுபவித்தே தீரவேண்டும். முத்தியும் அக்கடவுளனுக்கிரகந்தா லல்லது அவனுக்குக் கைகூடாது. என்றுபலவாறு தமக்குள்ளெண்ணிக்கொண்டு அம்மரீசிமுனிவரிடத்திற் சென்றனன். உடனே அம்முனிவர் பிரமதேவனைப்பணிந்தெழுந்து அன்னையோன் வாசஞ்செய்வதற்கு ஓர் திவ்விய நகரத்தினைச் சிருட்டித்துக்கொடுக்கவேண்டுமென்று கேட்டனன். அதற்குப்பணிந்தகுமாரனை ஆசிர்வதித்துத் திரிலோகத்தினுமில்லாத ஓர்நகரத்தினைச்சிருட்டித்து அதற்குப்பிரமநகரமென்று பெயரிட்டுக்கொடுத்தனன். அந்நகரத்தில் மரீசிமுனிவர்பிரவேசித்து நவரத்தினமயமாய் கோடிசூரியோதயம் போலவிளங்குஞ் சபாமண்டபத்தில் கொலுவிருந்து பிரகற்பதி பகவானைச் சேர்ந்த அளவற்றதேவர்களும் சுக்கிரபகவானைச்சேர்ந்த எண்ணற்ற இராக்கதர்களும் சூரியன்முதலியகோள்களும் இந்திரன்முதலிய திசைக்காவலர்களும் மற்றுமுள்ள சகலரும்வந்துபணிந்து புடைசூழும்படியாக அரசாட்சிசெய்து வந்தனர். அப்போது பிரமதேவன் தேவவல்லியென்னும் ஓர்கன்னிகையைச் சிருட்டித்துக் கொடுக்க அவளைமரீசிமுனிவர் வேதாகமவிதிப்படி விவாகஞ்செய்து மேலானஆயிரம்பிள்ளைகளையும் பெண்களையும்பெற்று சகலபோகபாக்கியங்களையுங் குறைவறப்பெற்று வாழ்ந்திருந்தனன்.

கேட்பவர்களோ சவுனகாதி முனிவர்களே! இனிமரீசிமுனிவருக்கு விநாயகமூர்த்தி கொடுத்தருளிய வரத்தினுல், உமாதேவியார் வல்லபையாகத் திருவுருக்கொண்டதும், அவ்வல்லபையை எமதுகர்த்தன் கணேசமூர்த்தியாகத் திருவுருக்கொண்டு வந்து விவாகஞ்செய்தருளியதுஞ் சொல்லுவோம் கேட்பீர்களாக.

இவ்வாறு மரீசிமுனிவர் அரசாட்சிசெய்துவருகின்ற காலத்தில் ஒருநாள் கைலாயத்தில் விண்ணோரியதேவர்கள் புடைசூழ்ந்துவணங்கும்படியாகச் சிவபிரான் திருவோலக்கமண்டபத்தில் வீற்றிருக்கின்றபோது உமாதேவியார் சிவபிரானைப்பணிந்தெழுந்து ஓ சகலதேவர்கட்கு மேலானகடவுளே! ஓ அடியார்கட்கருள்செய்யவல்லவள்ளலே! ஓ எங்கும்வியாபியாயிருக்கின்றசோதியே! ஓ சுருபானந்தரே! இவ்வுலகங்களிலுள்ள சராசரங்களினிலைமையை அடியாட்குத் தெரிவித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனள். அதற்குச்சிவபிரான்கிருபை சுரந்து பெண்ணே! நிமித்தம் துணைஉபாதான மெனச்சொல்லுகின்ற மூன்று காரணத்தினால் உலகங்காரியப்படுகின்றது அக்காரணம்மூன்றுமின்றிக் காரியமானஉலகமில்லை; இவற்றுள்நிமித்தகாரணம்யாம், துணைக்காரணம்நமதுசத்தி உபாதான காரணம்மாமாயை. இம்மூன்றினுள் துணைக்காரணமாகிற சத்தி நீயேயென்றறியக் கடவையென்றனர். அதைக்கேட்டஉமாதேவியார் தருக்கிநின்று சுவாமீ! சத்தியானேயாகில் எவ்விதத்தில் யோசிக்கினுந் தேவரீர்க்கு உடலும்உருவமும் யானன்றிவேறில்லை. எனதசைவினாலன்றோ சகலலோகங்களுமசைகின்றதென்றனர். இவ்வாறு உமாதேவியார் தருக்கிக்கூறிய வார்த்தையினைச் சிவபிரான் கேட்டுக் கோபங்கொண்டு, பெண்ணே! நமதுபெருமையை எவ்வளவும் ஒருவரால் காணுதற்கருமையாயிருக்க, நீ சிறிதும்நாணமில்லாமல் நமக்குமுன்னே உன்னை நீயேபுகழ்ந்துகொண்டனை. சிருட்டிமுதலிய முத்தொழில்களும் சூரியனுக்குமுன் கமலப்போலப்பூத்து நின்றொழிதல் நம்மாலன்றி மற்றொருவராலாவதில்லையென்பதை இப்போதே தெரியச்செய்கின்றோம்பாரென்று உலகங்களிலுள்ள சத்திகளையெல்லாம் ஒடுக்கிக்கொண்டனர். அம்மாத்திரத்தில் சூரியன்-சந்திரன்-அக்கினியென்னும் முச்சுடர்களும் இல்லாமற்போயின. அதனால் இரவும்பகலுமில்லாமல் எத்தொழில்களுமற்று சர்வசங்காரகாலம் போலாயது. அச்செயலை உமாதேவியாரறிந்து இனியாம் யாதுசெய்யக் கடவோமென்று பயந்துநடுங்கி, தாம்கொண்டிருந்த கருத்தினையெல்லாமொழித்து, சிவபிரானுடைய வல்லபமின்றி ஒன்றும்நிலவுத்லில்லையெனத் தமக்குள்நிச்சயித்து அவரதுதிருவடிகளில் அனந்தமுறை தொழுதெழுந்து இருகாங்களையுங்கூட்பிநின்று துதிசெய்வதாயினர்.

சயதேவ தேவ சயபத்தர் நேச சயவெங்கு நின்ற நிலைவ
சயவா ரணங்கண் முறையிட்டு மின்று மறியாமை நின்ற சரண
சயகா ரணர்க்கு மறையோர்க்கும் யார்க்குந் தனுவாதி நல்கு மிறைவ
சயபோத வின்று னியல்புள்ள வாறு தமியே னுணர்ந்து தொழுதேன்.

வித்தின்றி நாறு வளரப் பணித்து விமலந் தடைந்த வுயிரின்
சொத்தின்றி யேனை வினையிற் படர்ந்து குழையாவி யாவு மலமார்
பித்தின்றி யைந்து தொழிலானு முத்தி பெறவாகி நின்ற பெரும
தத்தின்றி யின்று னியல்புள்ள வாறு தடியே னுணர்ந்து தொழுதேன்.

அனியாய மான வினையின் சுகங்க ளடைதோறு மார றுகர்வுற்
றினியேது வேறு கதியென்று தம்மு ளிறுமாந் திருக்கு மவரை
துனியாறு மும்மை யுருவா யிருந்து துரிசிற் பிரித்து மருவும்
தனியீச வின்று னியல்புள்ள வாறு தமியே னுணர்ந்து தொழுதேன்.

இவ்வாறு உமாதேவியார் துதிசெய்து கர்த்தனே! தேவரீரையன்றி ஓரணுவும் அசையாதென்பதை யறிந்தனன். அடியாள் அறிவின்மையினால் செய்த அபராதத்தினைப்பொறுத்துக் காப்பதன்றி பழையபடி உலகத்தையெல்லாம் உண்டாக்கியருளவேண்டுமென்று பிரார்த்தித்தனர். அதற்குச் சிவபிரான் மனமிரங்கி முன்னர் பதினொருகோடி உருத்திரர்களுண்டாகும்படி நினைத்தருளினர். அம்மாத்திரத்தில் அவர்களெல்லாம் நித்திரையினின்று நீங்கினவர்களைப்போல பொள்ளென் றெழுந்தார்கள். எழுந்தபதினொருகோடி யுருத்திரர்களும் ஏகசித்தர்களாய்ச் சிவபெருமானுடைய திருவடிகளை மனதிற்றியானித்து நடந்த காரியங்களனைத்தும் கர்த்தனது திருவிளையாட்டென்றறிந்து உறங்கியிருக்கின்ற ஆன்மகோடிகட்கெல்லாம் அறிவையுண்டாக்கும்பொருட்டுத் திருவிடைமருதூரென்னுந் தலத்தினைச் சார்ந்து சிவாத்திரியாகிய அவ்விரவில் நாலுகாலமும் வேதாகமவிதிப்படி பூசைசெய்தார்கள். அப்பூசனைக்குச் சிவபிரான் கிருபை சுரந்து அவர்களெதிரிற் பிரத்தியட்சமாயினர், உடனே அவ்வுருத்திரர்களெல்லாந் திகைத்தெழுந்து அனந்தமுறைத் தீர்க்கதண்டஞ்செய்து கரங்களைச் சிரமேற்கூப்பிநின்று துதிசெய்வதானார்கள்.

போற்றி விச்சுவ ரூபனு யிருந்தபூ ரணனே
போற்றி யாவையும் படைத்தளித் தழிக்கும்புண் ணியனே
போற்றி யெவ்வகைப் பொருளுக்குஞ் சுந்தரப் பொருளே
போற்றி யெற்றைக்கும் பொன்றுறுந் தனுவுடை முதலே.

வீர போற்றிமும் மலத்தையும் வேரொடுங் களையுஞ்
சூர போற்றிதுட் டரையடுஞ் சூலங்கை யேந்துந்
தீர போற்றிநற் றிருவிடை மருதெனச் சிறந்த
வூர போற்றியெம் முளத்தம ரொருவனே போற்றி.

இவ்வாறு யாவருந் துதிசெய்து ஓ சர்வேசனே! சகல லோகங்களையும் பழையபடி யுண்டாக்கியருளவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதற்குச் சிவபிரான் மனமகிழ்ந்து அவ்வாறே சகல லோகங்களு முண்டாகுகவென்று அநுக்கிரகஞ் செய்து அன்பர்களே! உங்களுக்குவேண்டிய வரங்களைக் கேண்மின்களென்று திருவாய்மலர்ந்தனர். உடனே அப்பதினொருகோடி உருத்திரர்களும் மறுபடியும் பணிந்தெழுந்து, ஓ பக்தவச்சலனே! யாமெல்லாம் இவ்விரவில் தேவரீரை வேதாகம விதிப்படி எவ்வாறு நாற்காலமும் பூசித்தோமோ அவ்வாறே இனி யாவரும் பூசிக்கவேண்டும். இச்சிவராத்திரியால் அடியேங்கட் குண்டாகிய புண்ணிய மெவ்வளவோ அவ்வளவும் அவ்வன்பினர்க்கும் உண்டாகவே

ண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதுவும் சிவபிரான் கொடுத்தருளி அந்தர்த்தானமாயினர். இவ்வாறு அவர்கள் வேட்டவரங்களைச் சிவபிரான் கொடுத்து மறையும் முன்னமே அவரது பெருங்கருணையினால் விண்டுமுதலாயினோர் அறிவுடையவர்களாயெழுந்தார்கள். சூரியனாதி முச்சுடர்களும் உலகத்திற் பிரகாசித்தன. இப்பால் அறிவுடையவர்களாயெழுந்த தேர்கள் முனிவர்கள் முதலாயினோர் இவையனைத்தும் சிவபெருமானுடைய திருவிளையாட்டென்றறிந்து யாவரும் அத்திருவிடைமருதூரிற்றானே சென்று எமது கர்த்தனை வேதாகம முறைமைப்படி வழிபட்டுப் பின்னர் யாவருங் கயிலாயவரைக்குச் சென்று சிவபிரானை அனந்தமுறைப் பணிந்து துதிசெய்து ஓ தீனசரண்யராகிய கிருபாநுவே! யாங்களனைவரும் அளவற்றநாள் இருளிற் கிடந்து நித்திரைசெய்திருந்தும், பின்னர் சுவாமிகளுடைய கிருபையினால் அந்நித்திரையினீங்கி அறிவுற்றெழுந்தும், சுவாமிகளுடைய திருவிளையாட்டாயினும் நித்திரையிலிருந்த அந்நாளெல்லாம் யாங்கள் நித்திய கன்மாதிகளினின்று நீங்கியகுற்றம் நீங்குமாறு ஓர் பிராயச்சித்தந் தயைசெய்யவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதற்குப் பக்கபாதமென்பதோர் சிறிதுமில்லாத எமது கர்த்தனானவர் சந்தோஷித்து ஓ தேவர்களே! இக்குற்றம் பார்ப்பதியினுடைய தருக்கினாலுண்டானதால் நீங்கள் செய்துகொள்ளவேண்டிய பிராயச்சித்தமொன்றுமில்லை. இன்றுமுதல் நீங்கள் யாரும் விசனமில்லாமல் சகல கருமங்களையும் வேதாகமமுறைமைப்படி செய்துகொள்ளலாமென விடைகொடுத்தனர். அதை அவர்களனைவருங் கேட்டு மனமகிழ்ந்து தத்தம் பதிகளை நோக்கிச்சென்று எல்லாக் கருமங்களையும் வழுவின்றி நடத்திச் சுகமுற்றார்கள்.

இப்பால் உமாதேவியார் பரமேஸ்வரருடைய திருவுளக்குறிப்பினை யுணர்ந்து மிக்க பயபக்தியுடனே கர்த்தனைப் பணிந்தெழுந்து சுவாமீ! அடியாள்பொருட்டுத் தேவரீர் சகலலோகங்களையும் இருளில் ஒடுக்கிவைத்தபடியால் அப்பாவமென்னைவிட் டொழியுமாறு யான் செய்துகொள்ளவேண்டிய பிராயச்சித்தம் யாதோ அதனைத் தேவரீர் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தனர். அதற்குச் சிவபெருமான் புன்னகைசெய்து மிக்கமனமகிழ்ச்சியோடு உமாதேவியாரைப் பார்த்து, பெண்ணே! நீ நமக்குமுன்னிருந்து உன்னை நீயே உயர்த்திப்பேசினை? அப்பெரும்பிழையினால் உலகத்தில் இருள்மூடிக்கொண்டது. அதனால் சகல வான்மாக்களுந் தத்தங்கருமங்களினின்று நீங்கும்படியான குற்றம்விளைந்தது. நீ சகல வான்மாக்களுக்குந் தாயாதலால் இவ்வுலகில் குழந்தைக்கு வியாதிநேர்ந்தால் அவ்வியாதி நீங்கும்படி அக்குழந்தையையீன்ற தாய் மருந்தருந்துவதுபோல நீயே பிராயச்சித்தஞ் செய்துகொள்ளவேண்டுமென்று திருவாய்மலர்ந்தனர். அதற்கு உமாதேவியார் மனமிசைந்து மீட்டுந் தொழுதெழுந்து சுவாமீ, அடியாளே பிராயச்சித்தஞ் செய்துகொள்ளவேணுமென்று திருவாய்மலர்ந்தருளியதால், அப் பிராயச்சித்தம் யாது? அதனை யியற்றுந் தலம் எது? அவைகளையும் அடியாட்குக் கிருபைசெய்யவேண்டுமென்று பிரார்த்தித்த

னர். அதற்குக் கர்த்தன் உமாதேவியாரைப் பார்த்து பெண்ணே, பூவுலகத்தில் மிகவுஞ் சிறப்புற்றதாய் தருமஸ்வரூபமாய் யமனோடு முற்பவித்த காலத்திலே யமுனையென்னும் பெயரை வகித்ததாய் அடுத்தோர்கட்கு நற்கதியைத் தரவல்லதாய் ஓர் நதியுண்டு அந்நதியில் ஓர் தாமரைப்பூவிலே நீ சங்குவடிவங்கொண்டு சிலகாலளவாயில் நமது திருவடிகளைச் சந்தோஷமாய்த் தியானஞ்செய்துகொண்டிரு. அதற்குமேல் மரீசிமுனிவன் அந்நதிக்கு வரநேரும். அப்போதவன் நீ சங்குவடிவோடிருக்கின்ற கமலத்தைக் கண்டு ஆச்சரியமாகி அருகில் வருவான் அச்சமயத்தில் நீயோர் கன்னிகையாகுக. பின்னரவன் உன்னை மகளாகக்கொண்டுபோய் வளர்ப்பான், அக்காலத்தில் நீ நமதுருவைத் தியானித்து ஏகாக்ஷர மந்திரத்தை இடைவிடாது செபஞ்செய்துகொண்டிருக்கக்கடவை. உனக்குப் பன்னிரண்டாவது வயதாகுங் காலத்தில் நாம் அவ்விடத்தில் எழுந்தருளி உன்னை விவாகஞ்செய்துகொண்டு உனது குறையை முடிப்போமென்று திருவாய்மலர்ந்தனர். அம்மாத்திரத்தில் உமாதேவியார் சிவபிரானிடத்தினின்றும் விடைபெற்றுச்சென்று யமுனாநதி தீரத்தை யடைந்து அந்நதியிற் பூத்திருக்கின்ற அளவற்றகமலங்களுள் ஒருகமலத்தினுடைய மத்தியில் சங்குவடிவாகித் தமது இருதயகமலத்தில் சிவபெருமானுடைய திருவடிகளைத் தியானஞ்செய்து கொண்டிருந்தனர். உமாதேவியார் வாசஞ்செய்யப்பெற்ற மேன்மையையடைந்த அக்கமலமானது ஏனையகமலங்களினுஞ் சிறந்ததாய்த் தேவர்களுங்கண்டு வியப்பெய்தும் நிலைமையிலிருந்தது.

கேட்டீர்களோ சவுனகாதி முனிவர்களே! தம்மையடைந்த சகலான்மாக்களையும் ஆணவவிருளினின்று நீக்கிப் பரிபாகஞ்செய்யவல்ல சங்கரியே இவ்வாறு சங்குருவாகி யிருந்தமையாலல்லவா அச்சங்கும் தன்னையடுத்த எவ்வகைப்பட்ட நீரையினும் அதனைப் பரிசுத்தமான தீர்த்தமாக்குகின்றது. மேலும் அவ்வெமுனை நதியையடுத்த பலகால்களிற் பூத்தகமலங்களெல்லாங் குவிதலும் மலர்ந்து மிருப்பதினால் பாவஞ்செய்தோர்களுடைய செல்வத்தைப் போன்றன. அவ்வெமுனையிற்பூத்த கமலங்களெல்லாம் அவ்வாறின்றி எக்காலத்தும் ஒரே தன்மையாய் மலர்ந்திருப்பதினால் புண்ணியஞ் செய்தோர்களுடைய செல்வத்தைப் போன்றன. அக்கமலங்கள் தமக்குப் பகையாகியபனியினால் கருகுதலில்லாமல் மிக்கமேன்மையை யடைந்திருக்கின்றகாட்சி எதுபோது மிருந்ததெனில்: எம்மைப்போல உமாதேவியாரைச் சார்ந்தார்க்கெல்லாம் மலப்பகையினாலுண்டாகுந் துன்பஞ்சாராதென்னும் உண்மைப்பயனைத் தெரிவித்தல்போல விருந்தது. உமாதேவியாரை வழிபட்ட மெய்யன்பனே! ஞானசுகத்தைப் பெறுவதன்றி அவனைப் புடைசூழ்ந்தோர்களும் அப்பேற்றினைப் பெறுவரென்பதற்கு அவரைத்தாங்கிய மலரேயன்றி ஏனையமலர்களும் வாட்டம் நீங்கியிருப்பதே சாட்சியாகும். அன்றியும், உமாதேவியாரை உள்ளத்தேந்திய ஞானவான்களே உறங்குதலும் விழித்தலுமற்று மேலானபயனைப் பெறுவார்களாயின், அவரைத் தாங்கப்பெற்ற அக்கஞ்சம் கூம்புதலும் மலர்தலுமில்லாது

மிக்கமேன்மை யடைந்திருப்பது ஓர்வியப்போ? மேலும் எமதன்னையின் சார்பையடைந்த தூயவர்கள் பஞ்சேந்திரியங்களினால் அலைப்புணர்க ளென்பதுபோல, அக்கஞ்சமும் பொறிவண்டு தேன்வண்டு பொன்வண்டு கரிவண்டு முதலியவைகளால் ஊறுபாடில்லாத உயர்வினை யடைந்தது. இவ்வாறு அளவற்ற மகிமைகள் விளங்கும்படி லோகநாயகியாகிய உமாதேவியார் அக்கமலத்தில் சங்கவுருவாய்த் தங்கியிருக்கின்றகாலத்தில் தைமாதத்திலே மகநட்சத்திரம்வர, அப் புண்ணியகாலத்தில் அளவற்றபேர் அவ்வெமுனையில் ஸ்நானஞ்செய்யச் சென்றார்கள். அவர்களோடு மரீசிமுனியும் தமது மனைவியாகிய தேவவல்லியோடு அந்நதிதீரத்தில்வந்து சாஷ்டாங்கமாக வணங்கித் துதிசெய்து, சங்கற்பஞ்சொல்லித் தீர்த்தமாடி, திருவெண்ணீறு உருத்திராட்சமுதலிய சிவசின்னங்களை யணிந்து, விதிப்படி தருப்பணமாதிகளை நடாத்திச் செபஞ்செய்யுங் காலத்தில் தமது நல்ல ஊழின்வசத்தால் அந்நதியினுடைய அலங்காரங்களைப் பார்த்தனர். அப்போது அதிலுள்ளகமலங்கள் பனிக்குச் சற்றும் வாடாமலிருப்பதையும் ஓர் கமலமாத்திரம் ஏனையகமலங்களினுஞ் சிறந்து விளங்கியிருப்பதையும் அக்கமலமத்தியில் ஓர்தைவிகமுள்ள சங்கம் வசித்திருப்பதையும்பார்த்து ஆச்சரியமாகி அச்சங்கினை யெடுக்கும்படி அதனருகிற் சென்றனர். அவ்வேளையில் சங்கவடிவாயிருந்த உமாதேவியார் தாமொரு திருமேனி கொள்வதும் அத்திருமேனியோடு சிலகாற்பயில்வதும் பின்னர் விடுப்பதும் தமதிச்சையின் வழியேயல்லது வேறில்லையென்னுங் கருத்தை யாவரும் உணர அறிவிப்பார்போல மறைந்தனர்.

கேட்டீர்களோ சவுனகாதி முனிவர்களே! தாம்விழைந்தவழியல்லது தம்மைப்பெற முயன்றோர்கள் விழைந்தவழி தம்மைக்கொடாத ஓர் தலைமையைத் தெரிவிப்பார்போல லோகநாயகி மறைதலும், மரீசிமுனி மதிமருண்டனர். அப்போது மூர்த்திதலந் தீர்த்தமென்னு மிம்மூன்றினியல்பை யறியாது அவைகளை யடுத்தோர்களும் உடனே பார்த்தும் வாய்ந்துந் தோய்ந்தும் பயன்பெறுவதுபோல அச்சங்கினுடைய இயல்பை யறியாதடுத்த மரீசிமுனிவர் பின்னரச்சங்கம் பெண்குழந்தை வடிவாகி யிருக்கக்கண்டனர். இவ்வாறு விண்டுவே முதலாய் சகலவான்மாக்களையும் பெற்றெடுத்து வளர்க்கவல்ல தாயாகிய உமாதேவியார் அளவற்ற சுந்தரத்தோடு ஓர்பெண்குழந்தை வடிவாகலும், அதை மரீசிமுனிவர்கண்டு தமக்குமுன் சிவபிரான் கொடுத்தருளிய வரத்தினை நினைந்து எல்லாத்தீவினைத் தொடர்புகளையும்நீக்கி மேலான கதியினைக் கொடுத்தற்பொருட்டு அரிபிரமேந்திராதியாலு மறிதற்கரிய மகேஸ்வரியே நமது நிமித்தம் இவ்வாறு குழந்தையாக அவதரித்தனரென் றுணர்ந்து மிக்க மனமகிழ்ச்சியோடும் அக்குழந்தையைக் கரத்திலேந்திக் கரையேறிவந்து தமது பத்தினியாகிய தேவவல்லியைப் பார்த்து பெண்ணே! இக்குழந்தையை இருவினைத் தொடர்பினால் ஆணவவிருளிற் கட்டுண்டுவருகின்ற ஏனைய குழவிகளைப்போல நினையற்க இஃது சகலலோகங்களையுந் தனது பஞ்சகிருத்தியத்தினாலாட்டி

மேலானபேற்றினைக் கொடுக்கத்தக்க குழவியாகும். இதனை இன்றுமுதல் அன்பாய்ப்பாராட்டிப் பால்கொடுத்து வளர்த்துக்கொள்ளுகவென்றுசொல்லி அவள் கையிற் கொடுத்தனர். இவ்வாறு கர்த்தனை யொருக்காலும் விட்டுப் பிரியாத தேவியை தேவவல்லி கரத்திலேந்திய மாத்திரத்தில் தனது குசங்களில் மிகுதியான பால்சுரக்க, அதனை லோகநாயகிக்கு உண்ணக்கொடுத்தனர். லோகநாயகியும் தமதன்பர்கொடுக்கும் உடல்பொருளாவியைப்போல எல்லாஉலகங்களுங் குளிரும்படி அத்திருமுலைப்பாலை உண்டருளினர். இப்பால் அகளவடிவாயிருக்கின்ற மகேஸ்வரியைச் சகளவாக்கிக் கொடுத்த அவ்வெமுனையை மரீசிமுனியும் அவர் பத்தினியும் பணிந்தெழுந்து சகல பரிசனங்களுந் தம்மைப்புடைசூழ்ந்துவரும்படி அந்நதிக்கரையினின்று நீங்கித் தமது பிரமநகரத்தினைச்சேர்ந்தனர். அந்நகரமும் அக்குழந்தையினுடைய ஒளிவையும் குணாதிசயங்களையுங்கண்டு ஆச்சரியமாகி இக்குழந்தை நமக்கு சகல புருஷார்த்தங்களையுங் கொடுத்து பிரமாதி சர்வலோகேசர்களும் அடைதற்கரிய விலக்ஷணக்ஞான பத்திகளை யுண்டாக்கி அநாதி பிரகிருதி சம்பந்தமான இவ்வுலக சம்சாரபந்தநிவாரணங்களைச் செய்து மஹோத்தம பரமகதியையும் அருளும்படி அவதரித்ததென்று துதிசெய்து முடிவற்ற பிரமானந்தக் கடலில் மூழ்கியது. இப்பால் நாமரூபக்கிரியா சொரூபமாயிருக்கின்ற உலகங்கட்கு அவைகளை யொழிக்கும்படி நாமரூபக் கிரியாசொரூபமா யெழுந்தருளிய எமதன்னைக்கு வல்லபையென்று ஓர்திருநாமஞ் சாற்றித் துதித்தனர். அதுமுதல் லோகமாதாவாகியஉமாதேவியார் சகலலோகங்களையுஞ் சூத்திரதாரியைப்போல ஆட்டுவித்தாலல்லது தாமேஆடாதென்னுங் கருத்தினால், அவ்விளமைப்பருவத்திற்குரிய எல்லாத்திருவிளையாடல்களையும் யாவருங்களிகொள்ளும்படி விளையாடியருளினர். இவ்வாறு விளையாடிவருங்காலத்தில் வல்லபைதேவியாருக்கு ஐந்தாவது பருவம்ஆக, அப்பருவத்தில்தாம் ஒருகாலத்தும்பிரிதலில்லாதசிவபிரானுடைய வாமபாகத்தினையடையக்கருதித், தமதுகுரவரிடத்திற்சென்று யான் இதுமுதல் சிவபிரானைக்கருதித் தவஞ்செய்யவேண்டுமாதலால், விரைவில் ஓர்தவச்சாலையையுண்டாக்கித் தரவேண்டுமென்று கேட்டருளினர். அவர்களவ்வாறே ஓர் தவச்சாலையினை யுண்டாக்கிக்கொடுத்துப் பணிசெய்வதற்குப் பாங்கியரை நியமித்து விருத்தரையும் பேடிகளையுஞ்சுற்றிலுங் காவலிருக்கவைத்து, எல்லாக் காரியங்களையுங் குறைவறநடாத்தினார்கள். பின்னர், வல்லபைதேவியார் அத்தவச்சாலையை யடைந்து சுற்றிலும் அளவற்றமுனிவர்கள் தவஞ்செய்யும்படியாகத்தமதுமனதில் சிவபெருமானுடைய திருவடிகளைத்தியானித்துஇரவும்பகலும் ஏகாக்கரமனுவைச் செபஞ்செய்துகொண்டு ஆகாரநித்திரை யில்லாமல் அரியதவத்தினைச் செய்துவந்தனர். அவரதுதவவலிமையைத் தாயாகியதேவவல்லிகண்டு ஆச்சரியமாகித் தனது கணவராகிய மரீசிமுனிவரைப் பணிந்தெழுந்துசுவாமீ! நமதுஅருமைத்திருமகளானவல்லபை இவ்விளமைப்பருவத்தில் ஆகாரமுதலியவைகளைநீத்துத் தவஞ்செய்யவேண்டியவாறை எவ்விதத்தா

லுண்டாயிற்றென்று கேட்டனர். அதற்குமரீசிமுனிவர் புன்னகை செய்து பெண்ணே! எமதுகுழந்தையாகிய வல்லபையினுடைய பெருமையையாவராலும் அறிந்துசொல்லுவதற் கரிதாகும். ஆயினும்ஒருவாறு அறிந்தவரையிற் சொல்லுகின்றேங்கேள்.

சகலலோகேஸ்வராகிய சதாசிவமூர்த்தியினுடைய வாமபாகத்தில் மலரில் மணம்போலவும், சூரியனிடத்தில்ஒளிபோலவும், உடலில் உயிர்போலவும் எக்காலத்தும் பிரிதலில்லாமல்வசித்திருந்து அவரால் சிருட்டி-திதி-சங்காரம் திரோபவம்—அநுக்கிரகமென்னு மைந்தொழிலையும் ஆன்மாக்களுடைய இச்சையின்படிநடப்பித்து இருவினையொப்பு மலபரிபாகமுண்டானவர்களைமுத்தியிற்சேர்க்கவல்ல உமாதேவியாரே வல்லபையென் றறியக்கடவை. இத்தன்மைத்தான பெருமையினையுடைய உமாதேவியார்முன்னர் யான்செய்த அரிய தவத்திற்கிரங்கி யநுக்கிரகத்தினால் இப்பூவுலகத்தில் நமக்கோர்குழந்தையாகிவந்து மீட்டுந்தமநாயகருடைய வாமபாகத்தினையடையக்கருதித் தவஞ்செய்கின்றனர். இனிஅவரை ஏனையமக்களைப்போல நினையற்கவென்று சொல்லினர். இவையனைத்தையுந் தேவவல்லிகேட்டமாத்திரத்தில் புளகாங்கிதமுற் றப்பிரம்மானந்தக் கடலின்மூழ்கினள்.

கேட்டீர்களோ சவுனகாதி முனிவர்களே! இவ்வாறு தாய்தந்தையர் தமது அருமைப்பெருமைகளைப் பாராட்டித் துதிசெய்துவந்தபடி வல்லபைத்தேவியார் பன்னிரண்டு வயதாகும்வரையில் தவஞ்செய்துவரலும் எமதுகர்த்தர்மனந்தரித்திருப்பரோ உடனேபகீரதியைத்தரித்த சடைமுடிமுதலிய கோலங்களைமறைத்து விபூதிஉருத்திராக்கமணிந்து ஓர்பிராமணவடிவங் கொண்டு அத்தவச்சாலையருகிலெழுந்தருளினர்; அதைவாயில் காப்பாளர்களறிந்து வல்லபைத் தேவியாரிடத்திற்சென்று ஓர்சிவபத்தர்வாயிற்றலில் வந்திருக்கின்றனரென்று அறிவித்தார். உடனே வல்லபைத்தேவியார் அவரைஎதிர்கொண்டு பணிந்து தமதுதவச்சாலையுள் அழைத்துக்கொண்டுசென்று ஓராதனத்திலிருக்கச்செய்து அருக்கியபாத்தியாதிகளைக்கொடுத்து பூசித்துகுளிர்ந்த இன்முகத்தோடு அஞ்சலிபந்தராய் எதிர்நின்று சுவாமீ! தேவரீர் இங்ஙனமெழுந்தருளிவந்தகாரணத்தைத் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தனர். அதற்குமாறு வேடங்கொண்டுவந்த எமதுகர்த்தர் புன்னகைசெய்து ஓ பெண்கன்னிகையே! உம்மைவிவாகஞ் செய்யுமிச்சையினால் இங்ஙனம்வந்தேன்; அக்காரியத்தை அன்புகூர்ந்து நிறைவேற்றுவீராயின் எல்லாப்பயன்களையும் பெற்றவனாவேனென்றனர். ஒப்புற்றவர்கூறிய இவ்வாக்கியமானது வல்லபையாருடைய திருச்செவிகளிலேறிய மாத்திரத்தால் காய்ந்தவூசி காதிற்பாய்ந்தாலொத்து, சிவசிவாவென்று இருசெவிகளையும் பொத்திக்கொண்டு, ஆ-ஆ-இவ்வந்தணன் என்னவார்த்தையைச்சொல்லினனென்று கிலேசித்து புருவங்களை நெரித்து இருவிழிகளுஞ்சிவந்து உதடுகள்துடிக்கும்படி அவரைப்பார்த்து, அறிவற்றவனே! சகலலோகங்களையும் படைத்தளித்தழிக்கின்ற கருத்தனுமாகிய எவ்

வெவ்வரங்களைவேண்டித் தவஞ்செய்யினும் அவ்வவர்க்கு அவ்வவ்வரங்களை வரையாதளிக்கின்ற வள்ளலாயிருக்கின்ற எனதுக்குமெய்ப்பன்பை யுடையவனென்று நிச்சயத்தையறியாமல் இவ்விதவார்த்தையினைப் பேசினையன்றோ? அப்பராபரப்பொருளாகிய பகவானையல்லது கனவின்கண்ணும் மற்றொருவரைக் குறியேனென்றுசொல்லினர்; அதற்குஎமதுகர்த்தருங் கோபங்கொண்டவரைப்போலப்பார்த்து பின்னலையொப்பக்காட்டி மறையுமெல்லியஇடையினையுடைய நங்காய்! பெண்களாயினோர் எல்லாக்கலைஞானங்களையுங் குறைவறக் கற்றோர்களாயினும், அவர்களறிவுபேதமைப்பாலதேயெனப் பெரியோர்கூறுவர், நீகூறியவார்த்தையும் அதுபோலவேயிருக்கின்றது, உனதுஎண்ணம்நிலைபெறுமென்று நினையற்க; உனக்குஆத்துலைவர் வேறுவரென்னுங்கருத்தை விட்டுவிடக் கடவையென்று சொல்லினர். இவ்வார்த்தைகளைக் கேட்டமாத்திரத்தில் வல்லபையார்க்கு முன்னினும் அதிககோபமுண்டாகி ஓ போதமற்றவனே! நெருப்பையுங் குளிர்விக்கத்தக்க உக்கிரமாகிய தவஞ்சன்'ஆளவற்றனவாகச்செய்வேன். அதற்கும் எமதுகர்த்தன் மனமிரங்கினாராயின் உண்மையாய் எனது சரீரத்தை ஒழித்துவிடத்துணிவேன் நீ யெனக்கு புத்திசொல்ல வந்ததுபோதும் போவென்றுசொல்லினர்; அதற்கும் அவ்வந்தணர் அப்பாற்செல்லாது பித்தனைப்போல அங்ஙனே யிருந்தனர்; அதனால் வல்லபையார் தாமே அப்பாற் செல்லுவதற்கு அடியெடுத்தனர்; உடனே அந்தணராகவந்த எமதுகர்த்தன் அவ்வுருவத்தினின்று மாறித் தமது நிஜரூபத்தோடு அனந்தகோடி சூரியர்கள் உதயஞ்செய்தாலொத்த பிரகாசத்தினோடு பத்துக்கைகளும் அளவற்ற ஆபரணங்களும் விளங்கும்படி மயில்வாகனத்தின் மீது மூலகாரணக்கடவுளாகிய கணேசமூர்த்தி வடிவங்கொண்டு தரிசனந்தந்தனர். அத்தரிசனங் கண்ட மாத்திரத்தில் வல்லபையார் கோபத்தினின்றுமாறி அன்பும் நாணமும் அச்சமுங்கொண்டு சுவாமியைப் பலமுறைப் பணிந்தெழுந்து இருகரங்களையுங்கூப்பி வலம்வந்து மிக்கபெருவகையோடுமெதிர்நின்று ஆண்டவனே! அடியேன் அறிவின்மையினாற்செய்த பிழைகளைப்பொறுத்துத் தேவரீருடைய திருவடிகளில் நீங்காதபத்தியைக் கிருபைசெய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தனர். அதற்குக் கணேசமூர்த்தி மனமிரங்கி, ஓ வல்லபையே! நீசெய்த மேலானதவத்திற்கு யாம்மனமுவந்து வந்தனம். உனக்கு வேண்டிய வரங்களைக்கேளென்று திருவாய் மலர்ந்தனர். அப்போது வல்லபையார், மீட்டும் பணிந்தெழுந்து சுவாமீ! தேவரீருடைய வாமபாகத்தில் எக்காலத்தும் பிரியாமலிருக்க வரந்தரவேண்டுமென்று பிரார்த்தித்தனர். அதற்கு எமதுகர்த்தன் அவ்வாறே தந்தனமென்று திருவாய்மலர்ந்தனர்.

இவர்களிவ்வாறாக இதற்கு முன்னமே சிலதூதர்கள் மரீசிமுனிவரிடஞ்சென்று, சுவாமீ! வல்லபையாருடைய தவச்சாலையிலே ஓரந்தணர்வந்து வார்த்தையாடுகின்றனரென்று அறிவித்தார்கள். அதை மரீசிமுனிவர் கேட்டமாத்திரத்தில் அவ்வந்தணர் கணேசமூர்த்தியேயென்று தமக்குள் நிச்சயித்து அவ்

விருவருக்கும் விவாகஞ்செய்து முடிக்கத் தமது மனதிலெண்ணி அவ்விவாகத்திற்கு வேண்டுங்காரியங்களை விரைவில் முடிக்கும்படி காரியக்காரர்களுக் காக்கியாபித்து தேவர்கள் முனிவர்கள்முதலிய சகலருக்கும் திருமணப் பத்திரிகையனுப்பி வரவழைத்து அவ்வவர்கட்குத்தக்கபடி விசாரணைசெய்து எங்கெங்கும் பூரணகும்பந் தூபதீபமுதலிய மங்கலப்பொருள்களை நிரப்பி, ஆகாயமுகட்டையளாவிய பந்தர்கடோறும் பற்பலகொடிகளைநீட்டி, பெருத்த குலைவாழைமரங்களை ஆங்காங்குநாட்டி, நவரத்தினமயமாகிய தோரணங்களை நிரைநிரையாகக் கட்டி, அந்நகரமெங்கும் கோடணை புரியும்படியாக எல்லாக் காரியங்களையுங் குறைவறநடப்பித்து, தேவர்களும் இதற்குமுன் கண்டறியோமென்று அற்புதங்கொள்ளும்படி கலியாணமண்டபத்தினைச் சோடித்து, அக்கலியாணத்திற்கு வேண்டிய பொருள்களை யெல்லாம் ஆங்காங்கு விதிப்படி யமைத்து வைத்து, முனிவர்கள் முதலாயினோர் தம்மைப் புடைசூழ்ந்துவரும்படி வல்லபையாருடைய தவச்சாலையை யடைந்து, வேதங்களாலு மறிதற்கரிய கணேசமூர்த்தியைக் கண்டு பணிந்தெழுந்து, தமதுபுத்திரியையும் சுவாமியையும் அரண்மனைக்கு அழைத்துவந்து, அரம்பையரால் நாட்டியஞ் செய்திருக்கின்ற விவாகமண்டபத்தில் சுவாமியை யிருத்தித், தமது புத்திரியை மணக்கோலஞ்செய்விக்கும்படி அந்தப்புரத்திற் கனுப்பினர். உடனே தெய்வமங்கையரெல்லாம் வல்லபையாரைப் பணிந்தெழுந்து அவர் தரித்திருந்த மரவுரிமுதலிய தவவேடத்தினை மாற்றிச், சுகந்த பரிமளமிகுந்த தயிலாதிகளைச் சடைபற்றியிருக்கின்ற கூந்தலிற் றிமிர்ந்து, சுத்தோதகங்களினால் முழுக்காட்டி, அகில்-சந்தனத்தூபங்களினால் ஈரத்தினைப் புலர்த்தி, விலையுயர்ந்த பட்டாடையினைத் தரித்து, கூந்தலினிடத்தில் பரிமளமிகுந்த புட்பங்களைச்சூட்டி, முத்துமாலை-சரப்பளி முதலிய ஆபரணங்களைத் தரித்து, பூரணச்சந்திரனைப் பழிக்கும் முகாரவிந்தத்தில் திலதப்பொட்டிட்டு மற்றுமுள்ள யெல்லாக்கோலங்களையுங் குறைவரநடாத்தி, பல மங்கலவாத்தியங்களோடு விவாகமண்டபத்தி லெழுந்தருளியிருக்கின்ற கணேசமூர்த்தியினுடையபக்கலில் எழுந்தருளச் செய்தார்கள். விண்டுமுதலிய தேவர்களெல்லாம் கற்பகவிருட்சத்தினுடைய மலர்களால் கணேசமூர்த்தியினுடைய திருவடிகளை யருச்சித்து, மிக்க மனமகிழ்ச்சியோடு இருமருங்கினுங் கைகட்டி நின்று, துதிசெய்தார்கள். இலக்குமி முதலிய தெய்வமங்கையரெல்லாம் வல்லபைத்தேவியாருடைய திருவடிகளிற்றாழ்ந்து பரிமளமிகுந்த புட்பங்களைத் திருவடிகளிற் சொரிந்து அளவற்ற மகிழ்ச்சியோடும் இருமருங்கினும் நெருங்கினார்கள். கின்னரர் சங்கீத சாகித்தியங்களை வீணைமுதலியவைகளில் ஏந்தி வாசித்தார்கள். அரம்பையர் பரதசாத்திரவிதிப்படி நிருத்தஞ் செய்தார்கள். சில தேவர்கள் தோற்கருவிமுதலிய பஞ்சவாத்தியங்களையும் ஊழிகாலத்து மேகத்தினை யொப்ப முழக்கினார்கள். இவ்வாறு அக்கலியாண மண்டபமானது சகல வைபவங்களோடும் பொலிவுற்றிருக்கின்றபோது, குறித்திருந்த சுபமுகூர்த்த காலம் வாய்ப்ப அவ்வேளையில் தேவவல்லியானவள் நறுமணமூட்டப்பட்டிருக்

கின்ற பூரணகும்போதகத்தினைக் கரத்திலேந்திவந்து வார்க்க, மரீசிமுனிவர் கணேசமூர்த்தியினுடைய திருவடிகளை அபிஷேகஞ்செய்து, வல்லபையினுடைய திருக்கரங்களைப் பிடித்துக் கணேசமூர்த்தியினுடைய திருக்கரத்தில்வைத்து, தாராதத்தஞ் செய்துவணங்கினன். யாவராலுங் கணித்தற்கரிய கணேசமூர்த்தியானவர் மனமகிழ்ந்து ஏற்றுக்கொண்டனர். அக்கலியாண மகோற்சவத்தைத் தரிசிக்கவந்த யாவருங்கிருதார்த்தரானார்கள். பிரமனானவன் ஓமகுண்டத்தைச் சேர்த்து முத்தீக்களையும் மந்திரபூர்வகமாக வமைத்தனன். விண்டு முதலிய ஏனையதேவர்கள் வேதபாராயணஞ் செய்தார்கள். அவ்வவர்கட்கும் எமது கர்த்தரானவர் தமது கிருபாநோக்கத்தினை வழங்கியிருந்தனர்.

அச்சமயத்தில் விண்டுவும் இலக்குமியும் தமது புத்திரிகளாகிய மோதை-பிரமோதை-சுமனை-சுந்தரி-மனோரமை-மங்கலை-கேசினி-காந்தை-சாருகாசை-சுமத்திமை-நந்தினி-காமதை என்னும் பெயரினையுடைய தமது புத்திரிகள் பன்னிருவரையும் கணேசமூர்த்திக் கெதிரில் அழைத்துவந்து சுவாமீ! அடியேங்கள் அருமையாக வளர்த்தெடுத்த இம்மங்கையரைத் தேவரீர் அங்கீகரித்து எம்மையாட்கொள்ள வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதற்குக் கணேசமூர்த்தி அருள்வழங்கி அப்பன்னிருவரையும் ஏற்றுக்கொண்டு அவ்விண்டுவைக் கிருபையோடும் பார்த்து ஓ சர்ப்பசயனனே! நீ பல அவதாரங்களைக்கொண்டு திரிலோகங்களையு மிரட்சித்துவரக் கடவையென்று அருள்செய்து இன்னுமுனக்கு வேண்டியவரங்களைக்கேள் தருவோமென்று திருவாய் மலர்ந்தனர். அதற்கு விண்டுவானவர் மீட்டும் பணிந்தெழுந்து சுவாமீ! மலபாசங்களிற் சிக்கித் தேவரீருடைய திருவடிகளைக் காணாமல் இளைத்தஅடியேனுக்குத் தேவரீருடைய நின்மல ஞானத்தைக்காட்டி வேதங்களாலு மறியக்கூடாத விசுவரூபத்தினையும் அனுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தனர். அவ்வாறே செய்வோமென்று கணேசமூர்த்தியானவர் விண்டுவுக்குத் தீக்கைசெய்து தமது உண்மைஞானத்தினை உபதேசித்து அண்டாண்ட புவனங்களை யெல்லாம் விளக்கவல்ல தமது விசுவரூபத்தினைக் காட்சித் தருளினர். தவத்திற் சிறந்த மரீசிமுனிவர் முதலிய சகலரும் வெவ்வேறு வரங்களைப் பெற்று ஆனந்தமடைந்தார்கள். இப்பால் கணேசமூர்த்தியானவர் வல்லபைத்தேவியாரையும் விண்டுவினுடைய புத்திரிகள் பன்னிருவரையும் தமதுமருங்கி லிருக்கவைத்துக்கொண்டு பல மங்கலவரிசைகளோடு தமது லோகமாகிய மணித்தீபத்தினையடைந்து வதிந்தருளினர். ஏனைய தேவர்கள் முனிவர்கள் முதலாயினோர் வல்லபேசுரரைப் பணிந்து துதிசெய்து விடைபெற்று அவ்வவர்களுடைய பதிகளைச் சேர்ந்து வாழ்ந்திருந்தார்கள். அவ்விவாக மகோற்சவத்தினைத் தெரிசித்தபேர்களெல்லாம் சகலபோகபாக்கியங்களையுங் குறைவறப்பெற்று வாழ்ந்திருந்து அந்தியகாலத்தில் தீவினைகளினின்று நீங்கிப் பரிபூரண சுகத்தை யடைந்தார்கள். வேதசாத்திரங்களினாலும் மற்றெவ்வகைப்பட்ட பிரமாணங்களினாலும், அறிதற்கரிய கருத்தாவாகி துஷ்டசன நிக்கிரகஞ் சிஷ்டசன பரிபாலனஞ் செய்யும்

பொருட்டு பற்பல அவதாரங்களைக்கொண்டு திருவிளையாடல் செய்தருளிய விநாயகமூர்த்தியினுடைய சரித்திரமானது தேவர்களாலும் முனிவர்களாலும் பாராயணம்பண்ணத்தக்கதாயும் எக்காலத்தும் வேதமுடியி லிருக்கத்தக்கதாயும் பாவபந்தங்களை விலக்கத்தக்கதாயு மிருக்கின்றது.

கேட்டீர்களோ சவுனகாதி முனிவர்களே! சிவபிரான் சுப்பிரமணியக் கடவுளுக்கு உபதேசித்தருளிய பன்னிரண்டாவது அவதாரத்தினுடைய சரித்திரங்க ளிவையாகும். இவைகளை யாவரேனும் இட்டசித்திபெறக் கோறுகின்றவர்கள் பாராயணம்பண்ணக் கடவார்களென்று சூதபுராணிகர் சொல்லிமுடித்தனர். அவரைச் சவுனகாதிமுனிவர்கள் தொழுதெழுந்து சுவாமீ! விண்டுவுக்கு வல்லபைக்கணேச ருபதேசித்தருளிய யோகஞான தத்துவங்களையும், அவர்க்குத் தரிசனங்கொடுத்தருளிய விசுவரூபத்தினையும் அடியேங்கட்கு விபரமாகத் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதற்குச் சூதபுராணிகர் இசைந்து சொல்லத்தொடங்கினர்.

வல்லபை விநாயகர் திருவவதாரப் படலம்

முற்றிற்று.

பதின்மூன்றாவது

வியாசமகாமுனிவர்
உபதேசம்பெறுபடலம்.

இன்னண மலரின் மேலோ னியம்பலும் வியாத னென்பான்
றுன்னிய வன்பின் மீட்டுந் தொழுதரி யோக ஞானந்
தன்னைவல் லபைக ணேசர் சாற்றிடப் பெற்று னென்றாய்
அன்னதுந் தமியேன் றேற வருளென வருள்வான் வேதன்.

ஓ சவுனகாதி முனிவர்களே! இதுவரையினும் விநாயக பிரபாவ முடிந்ததன்றோ? இனி உங்கள் அருந்தவங் கூட்டுவித்ததுபோலும், அவ்விநாயகக் கடவுள் விண்டுவுக்கு உபதேசித்தருளிய உபதேசத்தினை விரும்பினீர்கள்; யானும் அதனாற் கிருதார்த்தனாயினேன். ஓ அரிய தபோநிதிகளே! எமது கருணைக்கடலாகிய கணேசப்பெருமானிடத்தில் விண்டு உபதேசிக்கப் பெற்றபடி பிரமதேவனுக் குபதேசிக்க, அப்பிரமதேவன் எமது ஆசிரியராகிய மகாமகத்துவமிக்க வேதவியாசமுனிவருக்குப் பரந்தமாக உபதேசித்திருக்கின்றனர். அதனை அவ்

வாறே உங்களுக்குச் சொல்லி வருகின்றோம் சித்தசாந்தமாகச் தெளிவுடைக் கேட்பீர்களாக.

காண்டல்கருதலுரை களினுங் கருதுமேனையளவையினுள்
மாண்டமனமா திகண்மூன்றுன் மறையோன்றிருமாலாதியரால்
வேண்டுமளவுமுபன்றுலு மெய்ம்மைசிறிதுமறியவுறாப்
பூண்டகருணைவிநாயகர்தம் பொருவில் ஞானம் புகலக்கேள். (௧)

உருவமருவமுபையமென வுரைக்கப்படுமூவர்கடமக்குங்
கருவிகரண முதற்பலவுங் கண்டுபுரந்துதுடைத்துமறைத்
தருளுமுதலாயவருளமு மறியாப்பொருளாய்த் தனதருளான்
மருவுமொளியாயெங்குநிறை வாய்மையெதுவோ வதுபிரமம். (௨)

அந்தப்பிரமமெரியிரும்பை யடுத்தாங்கறிவைத்தொடர்ந்துருக்கொண்
டிந்தவுலகில்விநாயகனென் றிணையில்பெயர்தனுண்மையினைப்
பந்தமகன்றோர்தெரிந்துகொளப் பரிந்துவிளையாட்டயர்ந்திருந்து
முந்துவலத்தானொருவருமம் முதல்வரியற்கையுணர்ந்திலரால். (௩)

இருளுமொளிரவிருண்டமல மென்றுமறியாமையைக்கெடுத்து
மருவியிருந்தலார்சனன மரணமானபிரபாக
மொருவர்தமக்குமொழியாதவ் வொருவரானவிநாயகனு
ரருளின்வழியேயுபர்போக மடையினலதுமுனிவரனே. (௪)

ஒன்றேயானபொருளின்கண் யோமென்னுங்கருத்தில்லை
யொன்றேடொன்றுசேர்ந்துழியே யோகமென்னுங்கருத்துளதா
மொன்றேடொன்றுசேர்ந்தவற்றி னெழிந்துசில்லாதவையாகா
தொன்றுநின்றசம்பந்தம் யோகமென்பருணர்ந்தோரே. (௫)

அந்தயோகம்நான்காகு மவைதாமகமேயகம்புறமே
வந்தபுறமேபுறப்புறமே வகுத்தவிவையாமிவையெட்டாம்
பந்தமொடுமுத்தியினுறழப் பகர்துமிவற்றின்முறையானே
சிந்தைமயக்கமறத்தவங்கள் செய்துமுடித்தமாதவனே. (௬)

உயிர்தான்மூலமலத்தினொடு மருவுபந்தமலமாகுஞ்
செயிர்சேர்மாயைகன்மமொடுசேர்ந்தபந்தமகப்புறமாம்
பயிலாநின்றதனுகரணப்பந்தம்புறமாம்புறப்புறமா
மயர்சேர்புவனபோகத்தின்மருவாநின்றபந்தமே. (௭)

அதனாற்கணேசர்திருவருளாலடையும்யோகமாவதுதான்
மதமார்மூலமலத்தினொடுமருவுபந்தமன்றுபல
விதமார்மாயைகன்மமொடுமேவுபந்தமென்றேனை
யிதமாரிரண்டுபந்தமு மன்றினுமிவற்றள்ளிருந்துரைப்பாம். (௮)

வேறு.

இருமுதுகுரவர்பாக்கிரீட்டும்பவினைகடம்மாற்
கருவெவனஞ்சுறுஞ்சம்பந்தங்காணுறும்யோகமன்று
மருமலர்க்குழலினர்தன்மூன்றும்யோகமன்று
வொருமையின்மாதராசையோர்க்கும்யோகமன்று. (௯)

என்வகைச்செல்வம்வெவ்வேறெய்தலும்யோகமன்று
முண்ணுறுமவைபோராக்குனுகலும்யோகமன்று
மின்னியபிணிகளாதிச்செயிர்களும்யோகமன்று
மண்முதலுலகமாளும்வாழ்க்கையும்யோகமன்று. (௧௦)

பொறிகளைம்புலனிற்சென்றுபுல்லலும்யோகமன்று
பறிமனமொன்றிற்சென்றுபற்றலும்யோகமன்று
குறியொடுமொருவனப்புக்கொள்வதும்யோகமன்று
செறிதருசித்தியெட்டுஞ்சிவணலும்யோகமன்று. (௧௧)

பிறவியான்முறைமையெய்தும்பெற்றியும்யோகமன்று
மருவறுவருணச்செய்கைமருவலும்யோகமன்று
நெறியினச்சிரமநான்கினிற்றலும்யோகமன்று
பெறுமதக்கடவுளார்வம்பேணலும்யோகமன்று. (௧௨)

வேறு.

மாணுபிராணயாமப்பிரதியாத மந்திரமாகியசத்தலோகயோகம்
பேணலுறுமுயர்யோகமன்றுவிண்ணிற் பிறக்குபலவுலகத்தும்பெட்டபோகங்
காணுறுபந்தமும்யோகமன்றுதிங்கட் கவுளகன்றகடவுண்முதற்கடவுளாதிப்
பூணலுறுதெய்வமும்யோகமன்று புகரில்பதமுத்திகளும்யோகமன்று. ௧௩

ஆக்கன் முதலைந்தொழிலும் புரியாநின்ற வதிகாரபந்தமுமல் யோகமன்று,
போக்கறவிவ்வாறுலகிற்பலவேறாகப் புணர்தருசம்பந்தமெலாம் யோகமன்று,
பாக்கியமாகியதவஞ்செய் முனிவரேறே பந்தமுறுசம்பந்த நான்குஞ் சொற்று,
மேக்குயர் விண்ணவராலுமறிய வொண்ணு வீடுறுசம்பந்தமொரு நான்குஞ்
சொல்வாம். ௧௪

பக்குவம்புண் ணியமூல பாகஞ்சத்தி பதிதலிரு வினையொப்புப் பயின்ற
காலைத், தொக்கமலபந்தமெலாங்கழித்தவான்மாச் சுத்தமாய்ச் சுத்தவவத்தை
யினிற்சொன்ன, பத்துவிதப்புண்ணியமும்புரிந்துமேலாம் பரத்தினொடுமொன்
றாகாதிரண்டுமாகா, தத்துவித மாயேகமாகியின்பாயபாவமாரிலையகச் சம்பந்த
மாகும். ௧௫

அருணிலையேமுத்தியெனவழுந்திநிற்ற லகப்புறச்சம்பந்தமருளுபசாரத்தை,
மருளறக்கண் டிடல்புறச்சம் பந்தமந்த வாய்மையருட் டொழிலினைத்தான்

செய்யவெண்ணல்,பொருவில்பர நாளென்றேமருளாற்காண்டல் புறப்புறச்சம்
பந்தமிவை நான்கினுள்ளு, மிருளறுமா தவவகச்சம் பந்தமொன்றே யிதனையி
லுயர் யோகமென வியம்புநூலே. ௧௬

வேறு.

சிறந்தயோகநான்குள்ளுஞ் சிறந்தயோகந்தனைப்பெற்றோர்
பிறந்துபிறந்தும்வருகின்ற பெரியசமுசாரத்தடையார்
மறந்துநினைந்தும்வினைமீட்டி மாயாயோகந்தனைநாகா
ரிறந்தவெனவியம்பென்னு மிருளிற்படார்களொருகாலும். ௧௭

உலகினுறங்கியுலகிறந்த வொருவான்பொருளில்விழித்தந்த
வலகில்பரமானந்தமய மானவமுதப்பெருங்கடலிற்
கலவிமுழுகித்திளைப்பார்கள் கருணைநிறைந்தவுளத்தினராய்
நிலவுமுலகமொருமூன்று நெடிதுபரிபாலனஞ்செய்வார். ௧௮

பிழைதீர்தாங்கள்பெறும்பேறு பிறருக்குபதேசித்திடுவார்
விழையார்விழையப்படும்பொருளை வெறார்கள்வெறுக்கப்படும்பொருளைத்
தழைகாமியமுன்றையுமில்லார் தனுவின்மிக்குமபிமானத்தம்
பழையோன்மணியம்புதுமணியம் பாற்றியாங்குத்தானுகரார். ௧௯

வேறு.

சகலமுஞ்சொரூபமாகையாற் சகலபூதமுஞ்சொரூபமேயாக
விகலறக்காண்பார்சிவன்முத்தர்களா; யிருப்பாகளுலகினுள்ளவர்க்குப்
புகலனுக்கிரகப்பொருட்டுலகத்திற் புரையறச்சரிப்பர்காமாதி
திகழுமிந்திரியம்வென்றவரோடுஞ் செப்பொணு[illegible]வேகாண்பார். ௨௰

தக்கயோகத்தால்வசிகரமாய்த் தவ்விடத்துமர்சேர்[illegible]தை
மிக்கபாவனைகள்கடந்தபாவனையால் [illegible]ழுருக்கும்
பொக்கமிலுளத்தையுடைய[illegible]றும புரைபடார்வெறுந்தின்படார்கள்
பக்குறபசு[illegible]பாலடிபட்டிழுக்கு[illegible]பட்டார்பசுத்தமிக்குடையார். ௨௧

உள்ளஆழ்வினைகளொழிதற்காறு முதிதருமுடலிடைவந்து
கள்ளிருவினையின்பயங்களைத்தமக்கு கல்லனதியனபுரிவோர்
கொள்ளவேதாங்கள்பிரமமொன்றனையே குறிப்புறக்குறித்திருப்பார்க
டெள்ளியவிவரையித்தகுயோகச்செய்தியரேயறிவாரே. (௨௨)

அறிவித்தாலீறியுமர்ருயிர்க்கறிவியாகியவாணவமருணாற்
பிறிவித்தானந்தம்பெறுக்கியொன்றுமிப்பிரமமாகியவிநாயகனே
நிறுவித்தாரணியீறனைாதாதிநிலைபெறுதத்துவமவற்றூர்
செறிவித்தாருயிர்க்குத்தனுகாணுதிசெயிரிலைந்தொழில்புரிகின்றான். (௨௩)

கரிசிலைந்தொழில்செய்காரணர்தமக்குங்காரணன்மாயையிற்பலவாய்
விரிதருமுலகில்வியாபியாய்நின்றும்விசாரமாதிகடனக்கில்லான்

றெரிசதாசிவனே நிகழ்பராசத்திசிந்தாமுகவன் மால்கதிரோன்
றரியவைவர்களாய்ப்பூசைகொள்கின்றுறுயிர்க்கெலாம்நாயக னவனே. (௨௪)

பேறிழவின்பம்பிணிவளர்மூப்புப்பேறுறச்சாதலென் றுரைக்கு
மாறினுமோவாதுயிர்களையெல்லாமமைவுறச்செலுத்தியுந்தனக்குக்
கூறியவிருப்புவெறுப்பினையல்லான்கூடியெவ்வுயிரையுமயக்கும்
வீறியமாயைமயக்கமுமில்லான்விளங்கியவனுநியேயமலன். (௨௫)

படைகளாற்பிளக்கப்படானழல்முற்றப்படான்சலாலனைத்திடப்படான்மிக்
கடைவளிபுனைக்கப்படான்வெளிபோர்லவைலமுமிறப்பினுமிறவான்
றடைபறவொன்றுவின்னதென்றறியாத்தத்துவன்றருபிரமாண
மிடைவினுறியாவப்பிரமேயன்விளக்குமெஞ்ஞானிபர்க்கறிவோன். (௨௬)

இத்தகுபெருமானிணையடிகிழமிவிரண்டறக்கலக்குநானறலே
யுத்தமயோகமென்றமுனுரைத்தயோகமேயோகமவ்வியோகச்
சித்தபோகிபரோயோகியரவர்குடெளிந்தவேதாந்தமேமுதலாப்
பெத்தசாத்திரத்தினிரதயோறுகர்வார்விளங்கியகேட்டலாதிகளால். (௨௭)

பிறங்குமெய்ஞ்ஞானயோகியராமிப்பெற்றியரொன்றமெவ்விடத்து
முறங்கியமகன்கைப்பொருளெனத்தந்தமுறுவருணத்துயர்நிலையி
னறங்கிளர்தன்மந்தாங்களேயொழியினல்லதையகற்றுதல்செய்யார்
மறங்கிளர்மலங்கள்பிறர்க்கறச்செய்வார்வறிதுமியானெனதெனப்புரியார். (௨௮)

இதுதெரியாதமூடர்கண்மூனியேயிறப்பொடுபிறப்பினைவிளைத்து
முதுதுயர்படுக்குங்கன்மமேவிழைந்துமுற்றுறப்புரிந்துவிண்ணுநிக்
கதுவுபுன்போகஞ்சத்தியமென்றுகளித்திலிதார்ந்துணர்வழிந்து
பதியெனும்பிரமத்தியல்பறியாதுபவந்தொறும்பலமுறைச்சுழல்வார். (௨௯)

ஆதலிற்பிரமத்தியல்பினையறியவாதரித்தவர்கடத்தமது
மேதகுமொழுக்கம்புரிந்திறைவனுக்குவியந்தகக்கொடுத்திடினதுதா
ஞெதருஞ்சித்தசுத்தியைச்செய்தே யுயர்தருஞானத்திறுக்குரிய
வேதுவைத்தோற்றப்பிறப்பிறப்பினைப்பின் னெய்துறாவர்கண்மாதவனே. ()

அத்தகீகருமமாற்றசமூனியே யறைவருணாச்சிரமத்தி
னத்தமினனத்தனையொருகாறு நன்னூதலின்றிவையகத்தோர்
மத்தமாகியபுல்லறிவினைவிடுத்து வழிகடர்துய்த்திடும்பொருட்டே
யித்தயோகத்தையெய்தவல்லாதா ரியற்றிடும்யோகமுமிசைப்பாம். (௩௧)

வேறு.

அட்டமூர்த்தமா யடங்கியவகிலத்துமொன்று
மொட்டிலின்றருள் பிரமத்தையுள்ளவாறுணர்ந்து
மூட்டில்லையகத் துறவொழின்மொழிபிரமத்திற்
பட்டவெய்த்தொழி லெனவறைப்பார்தறும்யோகம். (௩௨)

இந்தயோகத்தையுடையவனின்னலிற்சுகத்தில்
வந்தவோகையின்வெருளியின்வறுமையின்வாழ்வி
னந்தவான்பொருளிழவினினவிடிணியடைவி
னந்தமேவரும்போகத்தினடைவினிலிறப்பில். ௩௩

சாரிலாபத்திலாபத்திற் சயத்தபசயத்திற்
சேருமானத்திலமானத்திற்றெருளின்வன்மருளில்
கூரும்யோகத்தின்வியோகத்திற்கோதினிற்குணத்தி
லாருமின்னனபோல்வனவனையவற்றுள்ளும். ௩௪

மில்குபுத்திரர்சத்துருமித்திரர்பந்து
புல்குறத்திரும்பசுமனைமுதற்பொருளிடத்தும்
பில்குசெங்கதிர்ச்சூரியன்சந்திரன்பெருநீர்
மல்குசெங்கனல்சிவன்சத்திமாயவன்பிரமன். ௩௫

இந்திரன்முதற்றேவர்களியக்கர்கந்திருவர்
சிந்துமாநதிதீர்த்தங்கேத்திரஞ்செறிமனுட
ரிந்தநல்லிடத்தினுஞ்சமபுத்திவைத்தென்று
மந்தவத்துவைக்காண்குவாகத்தினும்புறத்தும். ௩௭

வருணமாச்சிரமத்தினைவழுவறப்புரிந்து
கருணைநாயகனுகியகணேசர்பாலந்தப்
பொருணிலாவுகன்மங்களைப்புகன்றினிதளித்தே
மருணிலாவுமஞ்ஞானத்தின்வந்துறாரவரோ. ௩௭

பாவபுண்ணியப்பயத்தினைப்பரமனுக்களித்தத்
தேவனற்பதங்கருதியசெல்வரோபொறியின்
மேவலற்றுளடங்குமாகியவினைநீங்கித்
தாவிலின்பமாகியதனிப்பரத்தினைச்சார்வார். ௩௮

உள்ளமைம்பொறிவழிவிடையத்திடையுறுங்காற்
றெள்ளுகின்றநற்றெய்வவாக்கியமெனஞானத்
தெள்ளலின்றிநின்றிடவயிராக்கியமீண்டு
நள்ளவன்னதுபிரமத்திற்றிறபுத்திநன்றும். ௩௯

இட்டமானவைபோற்றனக்கயிதமேயீட்டி
நட்டமேயுறுமுலகத்துப்பொருள்களினசையை
விட்டுமேதகுபிரமத்தின்விரவியொன்றாகப்
பட்டதாகியபுத்தியேநிறபுந்திபார்க்கில். ௪௰

அனையதாகலின்வீட்டினையாதரித்தவர்கள்
வினையெலாந்தரும்விடையத்தின்மேவியபொறியை

வெனையுறுவதைமீட்டிரும்பிரமமெய்ஞ்ஞான்ற
நினைதல்வேண்டுமெய்த்தவத்திடைநின்றமாமுனியே. ௪௧

மீட்டிடாததன்மனத்தினைவிழைபொறிவழியே
யீட்டமாகியவிடையத்தினெய்துறவிடுப்பி
னூட்டமாய்நிலமுந்திகொடியங்கழுந்தீற்
கோட்டமேயுரிகாமமூறய்க்குரோதமுமாமே. ௪௨

அதுவுண்டாகவுஞ்ஞானமுண்டாந்தனுலே
பதியதாகியபிரமத்திற்படர்நினைவிற்கு
மிதுவுண்டாகவேபிரமமெய்ஞ்ஞானமின்றுமி
வதியஞ்ஞானியாய்முன்புபோற்பிறப்பிடைவருவான். ௪௩

அன்னதாகையான்மனம்பொறிவழிவிடாதடக்கி
யென்னையாளுடைக்கணேசனிற்செலுத்தென்றுந்
தன்னதார்வமெலாந்தரிப்பித்தரவேண்டி
மின்னதாம்வழிபாட்டினுவிருந்தனர்மே. ௪௪

நதியெலாங்கடலடைவதுபோலகாமேவுறும்
பதியின்காட்டுறுகாமங்களினைச்சேறுடியுமாய்த்து
மதியதேதிறபுத்தியானெனுதெறுமயுக்க
விதியிலாதமெய்ஞ்ஞானியேவீட்டினையடைவான். ௪௫

பொருவின்மாதவனேயிதுவேபுணர்பிரம
சொரூபமாகியபுத்தியச்சொரூபமெய்யின்றேன்
கருமம்யாதுமில்லாமலேயிருப்பன்மன்கரும
மருவியின்றியுஞ்சுதந்தரன்பிரமத்தைமருவான். ௪௬

மருவுமிந்தியவகுப்பினுன்மாதவமுனியே
கருமயோகத்தைக்கரிசறச்செய்ததன்பயனே
யொருவுமார்வத்தையுடையவனேபரன்கமலத்
தருவமெல்லிலைநீரினெட்டான்விளையவனே. ௪௭

அறிவதாய்கமதறிவுறப்பிரழுந்தையவாவி
னெறியினற்பலகருமமுமிகற்பலன்குறியா
துறுதியாற்செயல் கருமயோகங்களிவ்வியோகம்
பிறிவில்சாங்கிய யோகத்தைக்காட்டுபெயரும். ௪௮

வேறு.

தழைதருவேதாயோகஞ் சாங்கியயோகமென்ன
விழைவனவிரண்டினுள்ளும் விளங்கியவேதாவென்னும்
பிழையறுகருமயோகம் பிறங்குசாங்கியயோகத்துக்
கிழைவளரேதுவற்றுஞ் சாங்கியயோகமெல்லாம். ௪௯

சாங்கியயோகத்தன்றுற் றனைமறந்திறக்குங்காறு
நீக்குறுன்கருமயோகநெறியினையுணர்ந்தோன்கன்மம்
நீங்கியபயனைநாடிவிளைப்பவன்றிருடனந்தத்
தூங்கலேகொடியபாவிதொன்மைதோதகிரால். ௫௰

மல்கியவுயிர்கட்கெல்லாமகிழ்விவானவராலாய
நல்கியதேவர்க்கின்பமாயநெச்சங்கடம்மா
லொல்கியவெச்சம்வேதத்துதித்தனவுயர்ந்தவேத
நல்கிடப்பட்டதென்றுநசித்திடாப்பிரமத்தானே. ௫௧

ஆகையாலனையதாகியகம்புறமாஞ்சொரூபத்
தேகமாய்விரவித்துய்க்குமின்படமேயின்பமாகும்
போகமானவைகளெல்லாம்புல்லுறுத்துன்பமாகு
மோகையான்மகார்களாடலுயர்ந்தவர்க்கிழிந்தவாபோல். ௫௨

வேறு.

உலகர்போகத்தையொழிக்கியானெனதெனுஞ்செருக்கும்
விலகிமேதகுபிரமத்தின்விரவியொன்றுகிக்
குலவுமானந்தக்கடலிடைக்குளித்தவர்தம்மை
யலகுகாண்பரிதாங்கடலயிரலகிடினும். ௫௩

மடமையாற்றனைப்பிரமமென்றெண்ணுறுமதியோ
னுடன்விராவியபிரமத்தினுண்மையையுணரான்
கடவுளாம்பிரமத்தினுட்டனதியல்கண்டோ
னடலையாகியவெனதுயவொன்பதுவிற்றுன். ௫௪

கன்மயோகமும்வியோகமுங்கனைத்தனவற்று
ளன்மையாவதுவியோகமேசவிற்றியயோகம்
வன்மையாகியபந்தமேவளர்ப்பதுவியோகத்
தன்மையானவிஞ்ஞானமேதருவதுமுனியே. ௫௫

மதியின்யாதனின்யாதனின்மெழுவினுனதனி
னதனினேதலைபடைதானருஞ்சுகமுறுவான்
மதியின்யாதனின்யாதனின்மருவினுனதனி
னதனினேதலைமருவுவனடைகுவன்றுன்பம். ௫௬

சுருதிகண்மங்கட்டோகுத்திமிருதிகண்மங்க
ளொருவுறுச்சமதமங்களாலுயற்றியப்பயனை
மருவுறுதல்வியோகத்தின்வளரும்விஞ்ஞானங்
குருவின்சீரருளால்வருங்கோதறுமுனியே. ௫௭

குருவினுன்மலத்துமித்துவிஞ்ஞானக்கூடாது
கருமம்யாவையும்பயன்றனைக்கருதியேபுரிவார்

பொருவிலாதவிண்ணவர்களாய்ப்போகங்களுகர்ந்து
மருவுபூமியின்மறுவலும்வருவர்நற்சார்பின். ௫௮

கன்மகன்றுசெய்ததன்பயன்கருதுவதொழிந்து
கன்மநிட்டையையுடையராய்க்கிரிசெலாமறக்குந்
தன்மைமல்கியதவநிட்டையுடையராய்த்தவறு
நன்மைமல்கியஞானநிட்டையைநணுகுவரால். ௫௯

ஞானநிட்டையையுடையவர்ஞானமேவடிவ
மானமெய்ப்பெரும்பிரமமேயாவர்பின்பிறவார்
வானமுட்டியதவத்தினோய்வழங்கும்யோகத்தை
யீனம்விட்டுயர்பிரமமாயிருந்தனைகேண்மோ. ௬௰

அறியுநீரதொன்றேயதுபிரமமேயதனை
யறியுஞானமேஞானமாமருந்தவமுனியே
செறிசராசரமாகியதிரளெலாமதுவே
பிறிதறுவுயிர்ப்பேதமும்பேசியவதுவே. ௬௧

மண்ணிற்கந்தமுநீரினிற்சுவையும்வைதழலி
னண்ணுருபமும்வளியினிற்பரிசமுநவைதீர்
விண்ணிற்சத்தமும்வேறுமவ்வவற்றினீங்காத
வுண்மையாக்குணமனைத்துமப்பிரமமேயுரவோய். ௬௨

இனையதாகியபிரமத்தையிறந்துயிர்போங்கா
லினையின்வேறுறுநிலையதுவாகவேநிற்பர்
வினையின்மீட்டுறார் விண்டுவைவேதனையாதி
தனைவிராவினோர் தாங்களுமீள்குவர்சரதம். ௬௩

தெய்வம்யாதினைச்சேர்ந்தவர்போற்றினுமந்தத்
தெய்வமாயிருந்தவர்க்கருள்வரங்களைச்செறிக்குந்
தெய்வந்தேர்வுறும் பிரமமாகியவிநாயகனே
தெய்வம்யாவையும் வழிபடுந்தேவனுமவனே. ௬௪

வேறு.

காலம்பிரமபாவனையேகருதல்கருசிலுபாசனையென்
றோதுமிவற்றினொடுங்கருமமாக்கல்வேண்டுமறிவுடையோர்
காலமிரண்டக்கினிசோதிமயமாக்கதிரோன்கதியொன்று
சாலவமிழ்தச்சோதிமயந்தானுந்திங்கட்கதியொன்று. ௬௫

வெண்மைகருமைப்பக்கமெனவிளங்குமிவற்றுளடங்கியிடும்
வண்மைவளர்க்கும்பலகாலவகுப்பும்பிரமபாவனைதான்
றிண்மையுலகில்வேறின்றிச்செறிந்தோன்றும்பிரமத்தி
னுண்மையுணர்தல்கருதல்சதசத்தையுள்ளபடிமதித்தல். ௬௬

இருவேறுகுருமுபாசனைதானெழிலார்புறப்பூசனைசாலக்
கருதாநிற்குமகப்பூசையெனவேகரைந்தபுறப்பூசை
மருவார்மலர்மஞ்சனந்தூபமணிதீபாதித்திரவியங்கொண்
டுருகாநின்றவன்பினொடுமொருகோட்டினையருச்சித்தல். ௬௭

அகமாகப்பூசனைபூதசுத்திபிராணாகருடனஞ்செய்
திகலார்புத்திவியாபாரமிறந்துத்திறபத்தியிற்குருவின்
முகனுல்வருமந்திரங்கணித்துமுதல்வனுருவந்தியானித்து
மிகமாமறையின்றோத்திரங்கள்விளம்பிவணங்கிவழிபடலாம். ௬௮

புறப்பூசனையத்திறப்பூசைபொருவிலகப்பூசனைநிறமாஞ்
சிறப்பார்முனிவேயாதலினற்சிறந்ததாகுமகப்பூசை
மறப்பேசினைப்பேயிவையொழித்துவாழவேண்டிற்காலமுத
னறப்பூதலத்திற்கருமங்களுநற்றம்பயனைக்கருதாதே. ௬௯

எச்சமழலோடதிமனுநெய்யீண்டிமவசதியானமுடம்
றச்சிலறுந்தோத்திரநீதிதுடங்கும்பத்தியுபாசனைக
ளச்சுஞ்சகலதிரவியங்கணவில்காரணங்கள்சநசந்து
வெச்சென்மரணமயிர்தமிவையெல்லாவிளாவும்விநாயகனே. ௭௰

அந்தவிறைவன்றிருவுருவிலாற்றுஞ்சரப்பூசனையாக
வெந்தைவடிவுள்ளகந்திருத்தியபற்றட்சரப்பூசனையாக
சிந்தைவிழைவிற்புரிகின்றோன்றிகழ்சண்டாளவிழிகுலத்தில்
வந்தபிறப்புள்ளவனேனுமறையோர்குலத்திலுயர்ந்தவனாம். ௭௧

பிறப்பினுயர்ந்தபிராமணனாய்ப்பெரிதுமறைகள்பயின்றுணர்ந்தும்
சிறப்பவிருந்தானுமிடினுந்தேவதேவன்றிருவடியி
லிறப்பவழிபாடியற்றானிழிசண்டாளகுணத்தோரு
ளறப்புத்தியையில்லாவிழிந்தோனவனாவனிதுமெய்யே. ௭௨

வேறு.

சேத்திரசேத்திரக்கினனென்றிவற்றையாய்ந்த செம்மையினை விநாயகனுக் குரியனுவன், சேத்திரமாவதுபூதமைந்துதன் மாத்திரையைந்துகன்மவிந்திரிய மைந்து, வாய்ந்திடுஞானேந்திரியமைந்தாங்காரமனம்புத்திசேதனமென்றிவை யென்மூன்று, மேத்தியசேத் திரக்கினன்று னிவற்றையாய்ந்த வியல்பினனு மென்றறிக முனிவரரே. ௭௩

தத்துவகாரணமான பிரகிருதிமாயைத் தான்மூன்றுமவைதை வியாசுரிராட் சசியே, முத்திரமாகியவிவைதாஞ்சகலவுயிர்மாட்டுமியங்குவனவிவற்றினிடைப் பலஞ்சின்னமிரண்டும், பத்திபுரிவியாதமுனிவே நினக்குத்தொகுத்துப் பகரு தங்கேடைவியெனப்பகர் குணந்தான்பரமா, முத்தியினுக்கேதுவெனவிருக்கு மொழிந்தவைநா மூடம்வளர்பந்தத்துக்கேதுவாயிருக்கும். ௭௪

பலனுரைத்தாயினித்தைவிசின்னமுறைத்திடக்கேள் பரன்மனையைவிழைபா மைகோளுரையாடாமை, குலவுமுயிர்கொல்லாமைவெகுளாமை நன்றிகொல் லாமை கருணையுட னிருத்தனெறி யொழுக, விலகுமுடற் காந்தியுடையம்பொ றுமை சிலமினியமொழிகொடைதவந்தானங்களுறுவாய்மை,மலர்தலைவையகம் பெறினுமேவுநிலைபிழையாமனவன்மையெவர்களுக்கும்வணக்கமுறன்முதலாம். ௭௬

ஆசுரியின் சின்னங்க ளரவமிகு வார்த்தை யறைதல்பிடித் ததநீத தாயினுஞ் சாதித்து, மாசுடமேபிமானமஞ்ஞானங்கெறுவம் வளர்கோபமாதிகளாமிராட் சசிக்குச்சின்ன, கேசமொடுமேனஞ்சென்ற வழிச்சேரன் மோகஙிட்டுரே மகங்கா ரந் தனைமதித்துத்தருக்க, நேசிகனந்துணர்தேவர் வேதசாத்திரங்க டெளிந்த பெரியோர்சிந்தை யெவர்க்கும்பகையாதல். ௭௭

தன்குருவை விடுத்தேனையோனைவழிபடுதல் சாதுக்கள்வாக்கியத்தின் விசு வாசமின்மை, நன்குதருமாசாரமின்மைபாசண்டர் கவிற்றுநவைவாக்கியத்தின் விசுவாசமுண்மை, கன்மமியற்றுமை வழிபடற்குரிய பெரியோர் கழல்கள் வணங்காமை யுயிர்க்கொலையாவிசாரம், வன்மையொடும் புரிகத்தனுகுதலா திகளா மாதவனேஇனித்தவங்கள் மூன்றுகும்வகுக்கின். ௭௮

அன்னவைதாங்காயிகமேவாசகமானதமே யாமென்பாவற்றினுட்காயிகதவந் தானித்த, மன்னியிடுஞ் சுதன்ம பரிபாலனஞ் செய்திடுதல் வாசகமாத் தவம் பிரியவசன மேயுரைத்து, நன்மைதரும் வேதசாத்திரத்தை விரையாது நவை யறப் பாராயணஞ்செய்திடுவது மானதந்தான், றன்னியவந்தக்கரணச்சுத்திய தாய்ப்புலனிற் றன்னுமற்பொரிபைந்து மடக்குவதாமுனியே. ௭௯

அனைமூன்றுந்தைவிமுதன்மூன்றுனுமும்மூன்று மவற்றுட்சாத்துவித மாந் தவநற்கன்ம, நவையில்பயன்கருதாது செய்வதிராசதமாய் நன்னுதவம்புக ழொன்றே நாடியிருங்கன்மர், தவற்றவேபிறரறியப் பிரகாசமாகத்தான்புரிதல் தாமதமாந்தவம்பிறரைவருத்திக், கவலையுறத்திடுந் தவமாமாதலினும் பின்னர் களைந்துவிரண்டினுஞ் சனனமரணங்கதுவுறுமே. ௮௰

ளிர்தானமூன்றுருங்கேடின்மறைவிநிவாக்கியப் பிரமாணங்களினுற் பாத் திரத்திற்றேசம், வளர்காலமறிந்துசிரத்தையிற் பிறர்க்குந்தோன்று மரமினி ரும்பொருள்கொடுத்தெவ் வளவுகொடுத்தோமென், றளவெண்ணிழக்குறை யுறு தல்சாத்துவிதத்தானமுபகாரம்புரிந்தவர்கட் குபகாரம்புரிதல், தளரா துவரும் பயனைக்குறித் தொருவர்க்களித்தல் தகவுருத்தத்தொடும் புரிதலிராசதமாந்தா னம். ௮௰

காலமொடுதேசங்க ளின்றியபாத்திரத்திற் காமர்பொருள்பிறரறியக் கொடுத் தளித்தேனென்று, சாலவெடுத்துரைத்துரைத்துத் தன்னைமேம்படுத்தற் றுமத மாந்தானமினி ஞானமூன்றுருஞ், சிலமுனியேயழிதன் மாலையவாய்ச்சித்தாய்ச் செறிபலபூதங்களினும் பிரமத்தையொன்றாய்க், கோலமுறுநித்தியமாய்க்காண லுறுஞானங் கோதற்றசாத்துவித ஞானமெனக்கூறும். (௮௧)

பற்பலபூதங்களினும் பிரமத்தைவேறாய்ப் பார்த்தலிராசதஞானம் பரப்பிர மத்தனை, யுற்பவமாதிகளுடைய் வுலககாரணமா யுன்னுமற்சத்தியமாய் சுத் தாகமன்ற, வற்பவிடையங்களினு ளொன்றுகவெண்ணு மஞ்ஞானந்தாமதஞா னங்கன்மமூன்று, பொற்புறுநித்தியகன்ம மாதியனுறு புத்திசெய்ாதியற்று வது சாத்துவிதகன்மம். ௮௨

மிக்கிலேசத்திற்பயன் விழைவுதன்றுல் வெம்பகையாலாரவா ரத்தினுற்பிற வாற், றக்கருமம்புரித லிராசதகன்மங்கள் சார்பயனைட்பெறவிழைந்துஞ் ஞா னத்தாற்றனக்கே, பொக்கமுறச்செய்துகொளுங் கன்மங்களனைத்தும் புரை படுதாமதகன்ம மிவ்வாறுகுலத்தா, லொக்கவனந்தம்பலனைக் குறித்திடைவிடா ம லூக்கமொடுபுரிகின்ற விராக்கதகன்மத்தோர். ௮௩

இருபத்தெண்கோடிநர கத்தினும்வீழ்ந்தின்னலெய்தியபின் கனபுவியிற்பிற வியில்வந்திடுங்காற், குருடுமுதலியவங்க வீனராய்ச்சாதிகுல வீனராய்க்குறள ராய்ப் பிறந்துகணேசர், மருமலர்ச்சேவடிப்பத்தி ஈனராய்மோகவலையினராய் மூடராய் வழுவினராய்மீட்டுங், கருதரியபாவங்கள் பலபுரிந்தாளுங் கடும்பி ணுடு முண்டுடுத்துக் களித்துமிகத்தருக்கி. ௮௪

சுனேகத்தா நானேபோத்தா வீச்சுரனுநானே நானேசாத்த னறிந்தவனு னே, என்றுனுதமொழிந்துபெரு நரகத்தின்மீட்டு மழுந்துவர்க ளிவ்விப்பத்தி மூன்றிராக்கதமே, தானுருங்கன்மமா சுரிகன்மமொழிந்து தைவிவெறுங் கன் மந்தை யாசிரித்துக்கணேசர், வரனேப்பத்திமைபுரிதல் சாத்துவிதப்பத்தி மற் றையதேவரைப்பணியும் வந்தனையுமதுவே. ௮௫

இயக்காரக்கரைகுறித்துப் பத்தியினுல்வழிபாடி யற்றிலிராசதபத்தி யிதுபவ த்தைக்கொடுக்கு, நயக்குமறைவிலக்கியகன் மங்களெலாம்புரிந்து நன்றுகத்தன துடலே புரந்துயிருக்குமிராம், வியக்குமருட்கணேசரையென் றுநினைக்கைபூதம் வேதாளமிவைகுறித்துக் கொலையாதிபுரிந்து, முயக்கமுறும்பத்திதா மதபத்தி யிதுவே மூட்டுவதாமிருபத்தெண் கோடிநரகமுமே. ௮௬

மொழிந்ததவமாதிகளைப் புரிந்திடுங்கர்த்தர்களு மூவரகங்காரத்தை விட்டவ ன்சாத்துவிதத், திழைந்தபெருங்கத்தன் சுகதுக்கத்தை யுளவுறுமிரும்பலத்தி றுசையைவைத் தவனிராசதனே, கழிந்தவறிவினனுகிப் பிறர்செல்வஞ்சாலக் கண்டழுக்காறுடையவன்று மாதகத்தன்முனியே, யழிந்துவிடுஞ்சுகமூன்று துக் கமூன்றுகு மவற்றினையுமொருங்குதொகுத் தறைகுதுரன்றறிமோ. ௮௭

சாத்துவிதசுகதுக்க மாவனதாந்தொடக்கந் தனில்விடமாய்த்துக்கத்தைத்த ணப்பித்தந்தத்தி, லேத்தவுறுமமுதமா மிவைவிரதமாதி யியற்றலுறுஞ்சன் மாற்கத்தாமிராசதத்தின், பூத்தலுறுஞ்சுகதுக்கந் துடக்கத்திலமிழ்தாய்ப்பொ ல்லாததுன்பத்தை வளர்த்தேயந்தத்தி, னீந்தலருங்கொடுங்காலகோடிவிடமாகு நிலைவிடையபோகங்களா லாகுமிவையே. ௮௮

கடையானதாமதத்தாஞ் சகதுக்கந்தொடக்குங் கோலமுநலந்தமுறுங் காறுஞ் சுகம்போன்று, துலையாதபெருந்துக்க மூயவிளைப்பிமிவைதாந் துன்மார்க்கந் தாம்பிறவில் விழைதன்முதற்றெருற்றிலர், லுடைவாருமாதலினுற் சாத்துவிதமுடையவன்பின் னேவிநாயகனுர் சொற்[illegible]ததைநடைவான், விடையாதசாத்துவித மேவாதாரெல்லாமிக்[illegible]ரகிளின்உ மேவுவர்பூதவனே. ௮௯

வேறு.

இன்னணந்திரு[illegible]ளம்பிரானுரைத்தலோடுங்
கன்னியந்துளவ[illegible]சாதலினெழுந்துதாழ்ந்து
பொன்னவிர்கொன்றை[illegible] புண்ணியாவடியேனின்பா
லின்னுமொன்றிரக்கலுற்றே னிரங்கெனவிளகிவிள்வான். ௯௰

மறைமுதலளவைதம்மால் வகுத்திதுவென்றுகாணு
நிறையுநினுண்மைஞான நிரம்பியகருணைதன்னுற்
குறைவறவுணர்ந்தாயேன் குடங்கையாமலகமென்னக்
கறையறமுழுதுந்தேர்ந்தேன் காதரமுழுதுந்தீர்ந்தேன். ௯௧

இனியொருகுறைவுமில்லே னுமினுமெம்பிரானே
முனிவருட்டீர்த்திவாய்ந்த முதன்மைசேர்வீணையங்கைப்
புனிதன்முன்னொருநாளென்பாற் பொற்புறவந்துளானின்
றனிவரும்விசுவருபஞ் சொற்றனன்சிறிதுகேட்டேன். ௯௨

அதுதனைக்கண்ணுற்காண வடியனேற்கினிதுகாட்டா
இதுபொழுதருளாயாயி னெளியனேனுய்யேனென்று
கதுமெனமீட்டுந்தாழ்ந்தான் கணேசனுர்கருணைகூர்ந்து
மதுமழைபொழிந்தாலென்ன வாய்மலர்ந்தருளிச்செய்வார். ௯௩

கற்பனைகடந்தகந்தங் காமருவிசுவருப
மற்புதமாகுமந்த வற்புதந்தன்னைச்செந்தீ
விற்பொலியூனக்கண்ணால் விண்டுவேகாணொணுது
நற்பரஞானக்கண்ணுற் றெளிந்தவர்காணினல்லால். ௯௪

ஞானவாள்விழியையின்பா னல்குதுங்காண்டியென்று
ஞானவாள்விழியைச்சால நல்கினர்நவைதீர்ந்த
ஞானவாள்விழியைக்கொண்டே நாரணனின்றுபார்த்தான்
ஞானநாயகனுர்கொண்ட நயத்தகுவிசுவருபம். ௯௫

முடித்தலையெங்குஞ்சேர்ந்த முகமலரெங்குமின்ன
விடித்தருள்விழிகளெங்கு மிருஞ்செவியெங்குமாய்தம்
பிடித்தகைத்தலங்களெங்கும் பிறங்கியவான்களெங்கு
மடித்தலமெங்குமேனை யவையவமனைத்துமெங்கும். ௯௬

கொண்டருளுறவிற்சாலக் குழுமியவுரோமந்தோறு
மண்டமுமண்டந்தோறு மமரர்களாதியாக
விண்டிடுஞ்சருக்கமூவேழ் விதங்களுநேரேகாணக்
கண்டுபேரின்பவெள்ளக் கடலிடைபடிந்தான்மாயன். ௯௭

விம்மிதம்விளையாநிற்கும் விழுமியவுருமஞ்சாலச்
செம்மலாரருளப்பெற்றேன் சிறியனேனெந்தாவென்று
கைம்மலர்முடியிலேறக் கட்புனலிழியவுள்ளங்
கொம்மெனவுருகிநைந்து குழையநின்றிதனைச்சொன்னுன். ௯௮

கனைத்துவண்டுளருங்கொன்றைக் கண்ணியாநினதுவாக்கா
லனைத்துருப்புருவமென்றே யறைந்தனையதற்கோர்சான்று
வெனைத்துநின்னுருவமான வியற்கையென்விழியிற்காட்டி
வினைத்தொடக்கறுத்தாய்நாயே னென்னெனவிளம்புகேனே. ௯௯

அந்தனேயிந்தகாட்சி யறிந்தவருளரோவென்று
நந்தினன்வினவினின்று நாதனாருளிச்செய்வார்
பத்தியையுடையராகிப் பயின்றமெய்யோகஞ்சான்ற
உத்தமச்சனகாதி யுறுதவரனேகர்மாயோய். ௱

நம்முடைஞானக்கண்ணு னமதருளுருவங்கண்டு
மும்மலமிரியல்போக முத்தமுயின்பம்பெற்று
ரம்பையொருகத்தினம்மை யருமகவாகப்பெற்ற
மம்மர்தீர்தவத்தானல்ல வரேணியனென்னுமன்னன். ௱௧

நமதருட்கீதைகேட்டு நமதுருக்காட்டக்கண்டு
விமலத்தையடைந்தானந்த வெள்ளத்துட்டோய்ந்துவாழ்ந்தான்
சமதமமுடையார்க்கிந்தச் சாத்திரஞ்சாற்றுகென்ன
வமலனாருளிச்செய்தா ராழியான்றெளியமாதோ. ௱௨

அத்தகுகணேசர்கீதை யாழியானுணர்ந்துநன்மை
மெத்தரிபம்மனன்பால் விழைவொடுங்கொடுத்தானந்த
வுத்தமன்மனுவுக்கீந்தா னுவனிடைமுனிவர்பல்லோர்
பத்தியிற்கேட்டுப்பாரம் பரையினால்விளக்கினாரே. ௱௩

இயம்பியகணேசர்கீதை யிமுதையர்கேட்டாராயின்
பயந்தருபாவமுற்றும் பாற்றிவான்கதியைச்சார்வர்
நயந்தருசன்மார்க்கத்தார் நன்றுறக்கேட்டாராயிற்
சயம்புவாயகணேசர் தாளிணைநீழல்சார்வார். ௱௪

ஓ சவுனகாதிமுனிவர்களே! விண்டுவுக்கு வல்லபைக்கணேசர் உபதேசி
தருளிய யோகஞானமும், அக்கடவுள் அவருக்குக் கடாட்சித்தருளிய விசு
ரூபத்தின் விபரமும் அவற்றைப் பிரமன் வேதவியாச முனிவருக்கு உபதேசி
த்ததும் இதுவாகும். இம்மேலான ஞானத்தினை நீங்கள் யாவரும் வழிப
பிரம்மானந்த சுகத்தை யடைவீர்களென்று சூதபுராணிகர் சொல்லியருளின
அவரை நைமிசமுனிவர்களெல்லாம் அத்தியந்த சந்தோடத்தோடு வண
வாழ்த்தினவர்களாய் சுவாமீ! தேவீர் அடியேங்கள்செய்த தவமுயற்சியி
இங்ஙனமெழுந்தருளி பதினென் புராணங்களினு முதன்மையாக விளங்
விநாயகமகத்துவத்தை அடியேங்கட்கு எளிதில் போதையாகும்படி தெரு
னீர். அவைகளை யடியேங்கள்கேட்டுக் களிப்படைந்ததன்றி முத்திவீட்டிற்
பாத்திரராயினோம். மேலும் இவ்வரிய மானிடதேக மெடுத்ததற்குப்
வேண்டும் பலன்களையெல்லாம் அருந்தெய்தினோம்; இத்தகைய மேம்
டைக் கிடைக்கச்செய்த தேவீர்க்கு நாயினேங்களால் முடிக்குங் கைம்
றேதேனு முண்டோவென்று பலபலஸ்தோத்திரங்களிற்போற்றி, அன்றுமுதல்
விநிகாசத்தைப் பிரதிதினம் பாராயணஞ்செய்து வாழ்ந்திருந்தார்கள்.

83470

வாழி விருத்தம்.

திங்களையணிந்தவைங்கரச் செம்மல்பொற்சரணம்போற்றி
பங்கின்வீற்றிருந்தசித்தி புத்திதம்பதங்கள்போற்றி
யங்கவர்க்கன்புசெய்யு மடியவரடிகள்போற்றி
நங்குருநமச்சிவாய னன்னபாதங்கள்போற்றி.

அருள்பொழிகணேசன்செய்ய வடிமலர்வாழ்கவன்னான்
பொருவிலிப்புராணமோங்கிப் பொலிகவீதுணர்ந்தெல்லோரு
மருவுகபயன்களுன்கு மன்னுகவுலகமெல்லாந்
திருவொடுசிறக்கவெங்குஞ் செயிரிலாச்சைவமென்றும்.

இலீலாகாண்டம்

முற்றிற்று.

விநாயகபுராணம் சம்பூர்ணம்.

சுபம்! சுபம்! சுபம்.